... வயிற்றுவலிக்கு வெடியுப்புச் செந்தூரம்.
... பல்நோய்கட்குச் செந்தூரம்.
524 [illegible]நோய்கட்கு மஹமூ[illegible]யாச் செந்தூரம்.
பல[illegible]ய்கட்குக் குப்பி[illegible] செந்தூரம்.
525 பலநோ[illegible]கட்குப் [illegible]ஞ்சபா[illegible]னச் செந்தூரம்.
526 கொடிய நோய்கட்குச் செந்தூரம்.
... பல நோ[illegible]கட்கு இரசச் செந்தூரம்.
527 மற்றொரு செந்தூரம்.
... மூலரோகங்க[illegible]குக் கிஷ்ட[illegible]ன அபரக்குச் செந்தூரம்.
... நீரிழிவுகட்கு [illegible]அபரக்குச்செந்தூரம்.
528 நீரிழிவுக்கு [illegible]ன்னபே[illegible]ச்செந்தூரம்.
... பலநோய்கட்கு இரசச்செந்தூரம்.
... மற்றொரு இரசச்செந்தூரம்.
529 பலநோய்கட்கு மற்றொரு செந்தூரம்.

பக்கம்
... சுரம் காசங்கட்குத்தாளகச் செந்தூரம்.
530 வெட்டைமேகத்துக்கு கருவங்கச்செந்தூரம்.
... நீரிழிவுக்கு மற்றொரு செந்தூரம்.
... பாண்டுக்கும் தாதுக்கும் அயச்செந்தூரம்
531 மேக வியாதிகட்கு மற்றொருசெந்தூரம்.
... இன்னமொருவகை செந்தூரம்.
... நாகச்செந்தூரம்.
532 பெரும்பாட்டுக்குச்செந்தூரம்.
... மற்றொரு செந்தூரம்.
533 வாதரோகத்துக்கு லிங்கச்செந்தூரம்.
... மற்றொரு லிங்கச் செந்தூரம்.
... கொடியவியாதிகட்கு அயகாந்தச்செந்தூரம்.
534 பித்தசோகைக்குக் காந்தச்செந்தூரம்.
... பலவிதநோய்கட்குச் செந்தூரம்.
... சகல நோய்கட்கும் பஞ்சலோகச்செந்தூரம்.
535 பல நோய்கட்கு லிங்கச்செந்தூரம்.
... கல்லடைப்புக்கு சிறுநீருப்பு.

ஐந்தாம் பாபு (64) பசுல்.

536 வயிற்றுளைவு நீரிழிவுக்கு அபியூன்பற்பம்
... லிங்கப்பற்பம்.
... மேகவியாதிகட்கு வெள்ளியப்பற்பம்
537 மற்றொருவெள்ளீயப்பஸ்பம்.
... மேகத்திற்கு லிங்கப்பஸ்பம்.
538 காரீயப்பஸ்பம்
... வங்கப்பஸ்பம்.
539 தாம்பூரப்பஸ்பம்.
... மற்றொருமுறைப்பஸ்பம்
... இன்னமொரு முறைபஸ்பம்.
540 மற்றொருவிதப் பற்பம்
... இதுவுமது
... மற்றொருவகை தாம்பூரப் பற்பம்
441 மேகவாய்வுக்கு வெள்ளிப்பற்பம்.
... மூலக் கிறுணிக்குத் தங்கப் பற்பம்

பக்கம்
... மற்றொரு பற்பம்.
542 மேகவாதமாதியவைக்குக் கற்பூர சலாத்துப் பற்பம்
... மேற்படி மற்றொருமுறைப் பற்பம்
... மூலக்கிறுணிக்கு ஆமையோட்டுப் பற்பம்
543 உஷ்டண ரோகத்துக்குப் பகளபற்பம்.
... இளைப்பு மேகங்கட்கு மற்றொரு பற்பம்
... பலநோய்கட்கு மற்றொரு பற்பம்
544 பலநோய்கட்கு மான்கொம்பு பற்பம்.
... மேற்படி மற்றொரு பற்பம்.
... பன்னோய்கட்கு லிங்கப் பற்பம்
... மேற்படி மற்றொரு பற்பம்
545 துருசுப் பற்பம்
... மற்றொரு பற்பம
546 சூதகத்துக்குப் பற்பம்
... மூலக்கிறுணிகட்குக் கிஷ்டண அபரக்குப் பற்பம்
... தந்தநோய்கட்கு கல் நாறு நீற்குமுறை.
547 மேற்படி மற்றொரு முறை
... கெந்தகப்பற்பம்
... தாளகப்பற்பம்
548 மற்றொருதாளகப்பற்பம்
... காசத்துக்குத் தாளகப்பற்பம்.
549 மேற்படி இன்னமொரு பற்பம்.
... [illegible]லுக்கு மேற்படி பற்பம்
... மற்றொரு பற்பம்.
550 ஜுரம் வாதமாதியவைகளுக்குப் பற்பம்
... காசங்கட்குச் செவ்வீரப் பற்பம்
... சகல காசத்துக்கும் வீரப்பற்பம்.
551 மேற்படி நோய்க்கு மற்றொரு பற்பம்
552 சீனிக்காரப் பற்பம்
... மேற்படி மற்றொரு பற்பம்
... அயப் பற்பம்
553 தாளகப் பற்பம்.
... உரோமப் பற்பம்.

பக்கம்
... இரசப் பற்பம்.
554 மேகருஜைகட்கு இரசச் சுன்னம்.
... இரசப் பற்பம்.
555 ஜுரங்கட்குப் பாசாணச் சுன்னம்.
... வாய்வுகட்கு லிங்கப் பற்பம்.
... வெண் குஷ்டத்திற்குப் பற்பம்.
... நீர்க்கடுப்புக்குப் பொரிகாரப் பற்பம்.
556 கொடிய வியாதிகட்குப் பதங்கம்.
... வங்கச்சுன்னம்.
557 வெடியுப்புச் சுன்னம்.
... பவுந்திரத்துக்கு மற்றொரு பற்பம்.
... குன்மத்திற்குக் கரியுப்புப் பற்பம்.
558 வயிற்றுவலிக்கு வெடியுப்புச் சுன்னம்.
... மூலவட்டப்பெண்ணும் வெடியுப்புச் சுன்னம்.
559 வாய்வு, கபநோய்களுக்குக் கற்பூரச் சுன்னம்.
... சாம்புருணிப் பதங்கம்.

ஆறாம்பாபு (16) பசுல்.

560 ஜாதிலிங்கக் கட்டு.
... மேற்படி மற்றொரு கட்டு.
... மற்றொரு கட்டு.
... மற்றொரு உயர்ந்த கட்டு.
561 சகல வியாதிக்கும் லிங்கக்கட்டு.
562 ஜன்னி சுரமியாவுக்கும் லிங்கக்கட்டு.
... கபம் காசத்துக்குத் தாளகக்கட்டு.
... வயிறிளகலாக்கும் கற்பூரக்கட்டு.
... வெடியுப்புக் கட்டு.
563 வயிற்றுவலிக்குக் கரியுப்புக் கட்டு.
... கரியுப்புக் கட்டு.
... இந்திரியக்கட்டுக்கு இரசக்கட்டு.
564 மற்றொரு இரசக்கட்டு.
... மற்றொரு முறை.
... பரீட்சித்தமற்றொருமுறை.

பக்கம்
565 இரசத்துக்குக் குருமுடிக்கும் விபரம்.

ஏழாம்பாபு (10) பசுல்.

566 முகவாதம் ஜனியாவுக்குங் கற்பூரக்குளிகை
... சிசுகட்குப் பச்சைகற்பூரக்குளிகை.
... சுரக்கோடாரிக் குளிகை.
... சிசுகட்கு மாந்தக்குளிகை,
567 மேற்படிசேட்டும் ரோகமியாவுக்குங்கோரோசனைக் குளிகை,
568 மேற்படி, வாதபித்தசிலேற்பன சுரங்கட்குக் கோரோசனைக் குளிகை,
... ஜனிகட்கு மற்றொருகுளிகை
569 வாதங்கட்கு வாதராசசுதன்குளிகை.
... சிறுபிள்ளைகட்குச் சுரமாத்திரை.
570 ஜனி, பிசாசுகட்குப் புகைத்திரி.

எட்டாம் பாபு (21) பசுல்,

... பிரசவஸ்திரிகட்குத் திரிக்கடுகுமெழு
... வாய்வுகட்குச் சாம்புருணிலிங்கமெழு.
571 வாய்வுவெட்டைகட்கு வீரமெழு
572 மற்றொருவகை வீரமெழு,
... மற்றொருமெழு.
... சகலவியாதிகட்குக்கைகண்டமெழு
573 மருந்தினாலானவாய்க் கட்டுக்குப் பரிகாரம்.
... வலரசமெடுக்கும் விபரம்.
574 வாய்வுகள் நீர்குத்துகட்குப்பூரமெழு
... பறங்கிபோன்ற நோய்கட்குமிருதார் சிங்கிமெழு
575 கால்கைகுத்தல் வாதநோய்கட்குக் கெந்தகமெழு.
... மற்றொருகெந்தகமெழு.
576 குஷ்டரோகங்கட்குக்கெந்தகமெழு.
... சகலநோய்களுக்குப் பஞ்சரசமெழு
... மற்றொரு மெழு
577 சூதகம் வயிற்று குல்லைவைகட்கு லிங்கமெழு
578 வாய்வு ரோகங்கட்கு லிங்கமெழு
... குட்டரோகங்கட்குத் தாம்பூர மெழு
... பிரவாத விசுவுமுதல்வனவியாதிகட்குச் சண்டமாருத மெழு.
579 மேகநீராலான சகல ரணங்கட்குமோர் மெழு

பக்கம்

... மேகவூறல்கட்குக் கெந்தக ரசாயனம்

ஒன்பதாம்பாபு (6) பசுல்.

580 பித்தசோகை வகைகட்குக் கிசாளம்
... வாதபித்த சிலேட்டும சுரங்கட்கு கிசாளம்.
581 பித்த காங்கை பெரிவுக்குச் சருபத்து
... சளிக்கட்டுக்கு.
... நாவரட்சிக்குக் கியாளம்
... ஊதுகாமாலைக்குக் கியாழம்

பத்தாம்பாபு (10) பசுல்.

582 மேகவாய்வு புண்ணாதியவைகட்குக் கோழிச் சூரணம்
583 சகல வியாதிகட்குத் தாளிச்சப் பத்திரிச் சூரணம்.
சகல நோய்கட்கும் இக்மானுல் ஹக்கீமவர்களின் சீசர்கள் முப்பத்திமூவரு மொன்று கூடி முடித்த சூரணம்
... ஸ்தூல [illegible]க்குச் சூரணம்
584 நோயற்றுக் கெர்ப்பமுண்டாக வல்லாரைச் சூரணம்
... பித்தகாந்தல் சோகைக்குச் சூரணம்
585 மேகத்திற்குச் சூரணம்
... அரையாப்பு சூலைகட்குச் சேங்கொட்டை வல்லாரி
... மற்றொருவகை வல்லாரி
586 பல்நோய்கட்கு மேற்படிவல்லாரி.

பதினொன்றாம்பாபு. (26) பசுல்.

587 வயிற்றுவலி, குன்மமியாவுக் குங்கைகண்ட சருபத்து
... குன்மநோய்க்கரிய முறை.
... வாய்விலான, கைகால் முடக்குக்கு அவிழ்தம்.
... ஆந்திர வாய்வுபோன்ற வியாதிகட்கு விசேஷமுறை
588 வயிற்றுப் பொருமலுக்குலேகியம்.
... குன்மம் வயிற்றுவலிகட்கு லேகியம்
... மேற்படி மற்றொருமுறை.
589 மூலக்கிராணி, மூலக்கடுப்பு வயிற்றுளை வாதிய நோய்கட்கு லேகியம்.
... கிராணி, கழிச்சல்களுக்கு லேகியம்.
... மேற்படி மற்றொரு லேகியம்.
590 மூலவாய்வுகட்கு அவிழ்தம்.

பக்கம்

... மூலக்கழிச்சல் போன்றவைகட்கு கைகண்ட அவிழ்தம்.
... மேற்படி நோய்கட்கு மற்றொருமுறை
591 வயிற்றுளைவுக் கோரரியமுறை.
... வயிற்றுத்தொக்கம், மருந்தீடுகட்கு அவிழ்தம்.
... வயிற்றுப் பொருமலுக்கு அவிழ்தம்.
592 வாய்வு. கைகால் குத்தல் எரிவாதியவைகட்கு மருந்து
... வாய்வுகட்கு இன்னுமொரு பரிகாரம்.
... மேற்படி மற்றொருபாகம்.
... மற்றொரு பரிகாரம்.
... மேற்படி லேகியம்.
... வாய்வு குடைச்சலாதியவைகட் கவிழ்தம்.
... சகல வாய்வுகட்கு மற்றொருமுறை.
594 குடல் வாய்வு பொருமல்கட்கு அவிழ்தம்.
... வயிற்றிலுள்ள கட்டிவீழ்க மருந்து.
... வயிற்றுளைச்சலுக்கு அவிழ்தம்.

பனிரேண்டாம்பாபு. (12) பசுல்.

595 விரைவாய்வு பாரீச வாய்வுகட்குப் பரிகாரம்.
... பாரீசவாய்வு போன்றவைகட்கு மற்றொரு பரிகாரம்.
... மேற்படி மற்றொரு பரிகாரம்.
596 விரைவீக்கத்துக்குப் பரிகாரம்.
... விரை வாய்வுக்கு லேகியம்.
... அண்டவாய்வுக்குப் பரிகாரம்.
597 பாரிசவாய்வுக்கோர் நல்லபரிகாரம்.
... திரேகக்காந்தலுக்குப் பாகம்.
... புளவை, கட்டு, சிலந்திபோன்றவையா லுண்டான காந்தலுக்குப் பரிகாரம்.
... கைகாலிலுண்டாகும் பித்தக்காந்தலுக்கு லேகியம்.
598 பாரீசவாய்வு வாதமிவைகட்குப் பூச்சுமருந்து
... திரேகவெரிவுக்கு அவிழ்தம்.

பதிமூன்றாம்பாபு. (16) பசுல்.

... சூடுவெட்டை, வெள்ளைபெரும் பாடுகளுக்கு (16) பதினாறுபசலிலடக்கிய பரிகாரம்.

பக்கம்

பதினான்காம்பாபு. (31) பசுல்.

602 தாதுவிர்த்திக்குக் கோதம்பு ஹல்வா.
... மேற்படி லேகியம்.
... மேற்படி பரீட்சித்த மற்றொரு லேகியம்.
603 வீரியவிர்த்திக் கனுகூலமான லேகியம்.
... மேற்படி மற்றொரு முறை.
604 காமரூபி லேகியம்.
605 தாதுஸ்தம்பன லேகியம்.
... மேற்படி லேகியம்.
... மேற்படி மற்றொரு லேகியம்.
606 மேற்படி இன்னமொரு லேகியம்.
... மேற்படி சிட்டுக்குருவி லேகியம்.
... மேற்படி மற்றொருலேகியம்.
607 மேற்பீடி லேகியம்.
608 மேற்படி மற்றொரு முறை.
... மேற்படி இன்னமொரு முறை.
... மற்றொரு முறை.
609 மேற்படி இன்னமொரு முறை.
... இதுவுமது.
... தாது கட்டுப்பட லேகியம்.
610 சகல வாய்வுகளைப் போக்கி வீரியவிர்த்திக்கு முறை.
611 மேற்படி மற்றொரு முறை.
... மேற்படி இன்னமொரு முறை.
... இதுவுமது
612 இந்திரியஸ்தம் பனக்குளிகை
... மேற்படி மற்றொரு முறை.
613 தாதஸ்தம்பன லேகியம்.
... மேற்படி மற்றொரு லேகியம்.
... ஆண்மை யெழுச்சிக்குரிய பரிகாரம்.
... பல பிரயோஜன சேங்கொட்டை லேகியம்.
... தாதுவிர்த்திக்குரிய லேகியம்.
... மேற்படி பலமுறைகள்

பக்கம்

பதினைந்தாம்பாபு. (11) பசுல்.

... கெர்ப்பப் பையிலுண்டான புழுவைக்கொன்று கருதரிக்கப் பரிகாரம்.
615 இதுவுமது
... மேற்படி தைலம்.
616 பிரசவமாக அவிழ்தம்.
... சூதகத்துக்கு லேகியம்.
... சூதக்கட்டுக் கவிழ்தம்.
617 உதிரச்சிக்கலுக் கவிழ்தம்.
... வழக்கம்போல் மாதவிடைவருக அவிழ்தம்.
... மாதவிடை காலந்தவறி வருவதற்கு
618 பிள்ளைப்பேறு இலேசாக அவிழ்தம்
... பக்குவமடையாத பெண்களுக் கவிழ்தம்

பதினாறாம்பாபு. (11) பசுல்

... முன்துவாரத்தின் புண்கட்குக்களிம்பு.
619 முன்துவாரம் விலாசமான தற்கவிழ்தம்.
... இனிப்பு நீருக்குஅவிழ்தம்.
... நீர், வலம் அடைப்புக்குப் பரிகாரம்.
620 மூலமுளைக்கவிழ்தம்.
... பவுந்திரத்துக்குப் பரிகாரம்.
... மேற்படி மற்றொரு நல்லமுறை.
... பவுந்திரமாதிய புண்கட்குக் களிம்பு.
621 மேற்படி மற்றொருமுறை.
... மேற்படி இன்னமொருமுறை.
... நீரிழிவுக்கு அவிழ்தம்.

பதினேழாம்பாபு. (11) பசுல்.

இராஜபுளவைக்குத் தைலம்.
புளவைகட்கு மேற்பத்து போடும்வகை.
622 கண்டமாலை கன்னபுத்து இராஜபுளவைபோன்ற நோய்கட்கு
623 சூலைவலி அஜீரணத்தாலான வலிகளுக்குப் பரிகாரம். [புகை
... சூலைகட்கு அண்டபற்பம்.

பக்கம்
624 கட்டுசிலந்திகளுக்குப் பரிகாரம்.
624 இரணம் புண்யாவுக்குங் களிம்பு.
... ஆறுதபுண், உடையாதகட்டுகட்குச் சேர்வை.
625 கால்கைவெடிப்பு, பிளப்பு கட்குப்பரிகாரம்.
... மேகரணமியாவுக்குங் களிம்பு;
... தேம்பல், புண்போன்றவைகட்குப் பரிகாரம்.

பதினெட்டாம்பாபு. (7) பகுல்.

626 குதிரைவலி, காக்கைவலிப்பாதியவைகட்குப் பரிகாரம்.
... மேற்படிவலிகள் முயல்வலிகட்குப் பரிகாரம்.
... காக்கைவலிக்கு நல்லவோரவிழ்தம்.
627 கைகால்வழங்காத பச்சைபிள்ளை வாதத்துக்கு.
... தீராத இடுப்புவலிக்கு.
628 நாவரட்சிக்கவிழ்தம்.
... வாதப்பிடிப்புக்குப் பூச்சுமருந்து.

பத்தொன்பதாம் பாபு (8) பகுல்.

629 சுரம் ஓங்கரிப்புக்கு
... புகைச்சல் ஒழியாத வாந்தி, வெள்ளோக்காளம் மனக்கு மட்டுதல்கட்கு
630 தீராத இருமலுடனே போக காசத்திற்குத் தாளகபற்பம்.
... இரத்த காசத்துக்கு
... இரத்த பிரமேகத்துக்கு
631 இருமல்- புகைச்சல்களுக்குப் பற்று
... புகைச்சலுக்கு அவிழ்தம்.

இருபதாம்பாபு (12) பகுல்.

... கண்ணோய்க்குப் பரீட்சித்த குளிகை.
... மேற்படி மற்றொருமுறை.
... கண்ணோய்கட்குப் பலவிதமுறைகள்.
632 மேற்படி அனுபோக, மை.
633 இதுவுமது.
... இன்னமொருவகை.
... மற்றொரு லிங்கத்தூள்.

பக்கம்
634 கண் சிவப்புக்குப்பற்று.
... மேற்படி, மை.
635 மேற்படி மற்றொரு, மை.
... கண் மங்கலுக்குப்பற்று.
... மற்றொருவகை.

இருபத்தொன்றாம்பாபு. (12) பகுல்.

636 சகலவிஷங்கட்குப் பிரதான குழம்பு.
... தேள் பாம்புபோன்ற விசத்துக்குப் பரீட்சித்த குழம்பு.
... மற்றொரு விஷ, மை.
... விஷத்துக்குக் கண்ணிலிடும் "மை."
... சகலவிஷங்களுக்கு முதற்றரமான குழம்பு.
638 எலி கடிவிஷ மியாவுக்குங்கை கண்டமருந்து.
... நாய் கடிவிஷத்துக்கு மருந்து.
... எலி, பெருச்சாளி கடிவிஷத்துக்கு அவிழ்தம்.
639 அரணை கடிக்கு மருந்து.
... சடைமண்டலம் அரணை கடிக்கவிழ்தம்.
... மற்றொருமுறை.
... விஷம்போதைக்கேடு, சன்னி, பிசாசுபோன்றவைகட்குநசியம்.

இருபத்திரண்டாம்பாபு (56) பகுல்.

640 வாதம்வலிப்பு இசிவு ஜன்னிவகைகளுக்கு வேப்பெண்ணெய்நெய்.
... மேகவிராஜகேசரியெண்ணெய்.
641 குடுவெட்டையாதியவைகட்குத் தைலம்.
... பலநோய்க்குக். கெந்தகத்தைலம்.
642 வாதம்வலிப்பு முடக்குமுதலியவைக்குத்தைலம்.
... வெண்குஷ்டத்திற்குத் தைலம்.
643 சிறுபிள்ளை, தோசநிவர்த்தி வேப்பெண்ணெய்த்தைலம்.
... உரோமவளர்ச்சிக்குத்தைலம்.
... மற்றொரு சம்பங்கி யெண்ணெய்.
... காதில்சீழ் ஊனம் வடிதலுக்கெண்ணெய்.
644 பலநோய்களுக்குக் கொடிவேலித்தைலம்.
... சிறுபிள்ளைகள் இருமல் இளைப்புகளுக்குப் புளியமடல்தைலம்.
645 முகவாதத்துக்கொத்தனம்.

பக்கம்
... கிரந்தி அரையாப்பு, கரப்பன், கட்டு இவைகட்கு மிருதாருசிங்
... நீரடைப்பு, கடுப்பு, கல்லடைப்பு ஆதியவைகட் [கித்தைலம்
குப் பரீட்சித்த "தைலம்"
646 வலிப்பு இசுவு போன்றவைக்குத்தைலம்.
... இரணங்கட்குப் பூசுந்தைலம்.
647 சகலவியாதிக்கு விஷமுட்டித்தைலம்.
... பித்தவெட்டை, மயக்கம், மஞ்சட்காமாலை போன்றவைகட்கு
க்கீழ்க்காய் நெல்லித்தைலம்.
648 பித்தவகைக்கு நெல்லிக்காய்த்தைலம்.
... மண்டைகாதிரைச்சல், ஊளைகட்குத்தைலம்.
... காச்சல்கட்டிக்கு சீராசெங் கிளனீர்த்தைலம்
646 மண்டை நோய்களுக்குச் சாம்புருணித்தைலம்.
649 இரத்தபீனி சத்துக்குத்தைலம்.
650 சிர[illegible]யாவுக்குமுக் கூட்டெண்ணெய்
... பலநோய்களுக்குக்கெந்தகநெய்.
651 விடாச்சுரத்துக்கு விருகக் கிழங்குத்தைலம்.
... பித்தவிரிவுக்குத் தவளைநெய்
... பலநோய்களுக்குக் கெந்தகநெய்.
652 மேகங்களுக்கு மேகாதித்தைலம்,
... மேகநீருக்குத் தைலம்.
653 சிறு பிள்ளைகட்குத் தைலம்.
... கூந்தல் வளர்ச்சித் தைலம்.
654 நேத்திர நோய்கட்கும் சிரநோய்கட்குந் தைலம்,
... குஷ்டகோடாரித் தைலம்.
... இரத்த வெட்டைமூலம் வெள்ளையாவுக்குந் தைலம்.
655 மூலத்திற்குக் கோழிமுட்டைத் தைலம்.
... முட்டைத் தைலமிறக்கும் பிரமாணம்.
... வெள்ளை குஷ்டத்துக்குத் தைலம்.
656 குஷ்டத்திற்கு அரிதாரத் தைலம்.
... மேற்படி நோய்கட்குத் தைலம்.
657 மேற்படி தாளகத்தைலம்.
... வரட்சி, தாகமாதியவைகட்குத் தைலம்.
... மேகங்கட்குப் பரீட்சித் தைலம்.

பக்கம்.
... கால்ருநோய்த் தைலம்.
658 வாதரோகத் தைலம்.
... கால் வேர்வை எரிவுக்குத் தைலம்.
... இரத்த மேகத்துக்குச் சந்தனத்தைலம்.
659 பலநோய்களுக்குத் தாளகத் தைலம்.
... காலரிப்பு காந்தல்களுக்குத் தைலம்.
... காங்கைவாத மிவைகட்குத் தைலம்.
660 வாதமியாவுக்கு மெழுகுத் தைலம்,
... கொடியநோய்களுக்குச் சீனிக்கோட்டுத்தைலம்,
661 கண்ணோய்களுக்குத் தைலம்.
662 சிரங்கு மேகநீருக்குத்தைலம்.
... தைலமிறக்கும் பாங்கு.

இருபத்திமூன்றும்பாடு (24) பகல்.

663 கஸ்தூரி செய்யுமுறை.
... பெரும்வியாதிக்கு மருந்து.
... காச்சல் சுரத்துக்கவிழ்தம்.
... முழங்கால் இடுப்புவலிக்கவிழ்தம்.
664 மண்டைபிடிக்கவிழ்தம்.
... பித்தகுடோரிப்பற்று.
... இதுவுமது.
... புத்திகெட்டபேர்ன பித்தவெறிக்கு
665 கைகாலுளைச்சல் கூச்சமியாவுக்கும்.
... இதுவுமது.
... விஷபாண்டு வீக்கங்கட்கு.
666 கபாலபிடி குத்தலாதியவைகட்கு.
... குளவிவண்டு கொட்டாதிருக்க.
... மஞ்சட்காமாலை மண்டையிடிக்கு.
... பாலரின் தொக்கம் சீசியாவுக்கும்.

சிரங்குவகைகட்கு.
பல்வலிக்குப் பரிகாரம்.
ஜலதோஷ மியாவுக்கும்.
மண்டைபிடி விஷமாதியவைகட்கு.
பித்தமயக்கம் புகைச்சல் நீங்க.
நீரிழிவுக்கு.
நரைபேதலிக்க.
இலைகளிற் சாறுறச்செய்தெடுக்க.
பலவிதமுறைகள்.

நூலிநுட்பிரிவு விஷய அட்டவணை.

முற்றிற்று.

فيما لابد للمسلمين مجموعة با وفر الوجيز على قواعد اللقمان، يديهيا
مني عدم الاهلية لهذا الترجمان، والتمسك على اجابة اخواني الرضيع
من البان العلوم لاعتراض الجهلان. فاجبت مشمرا اذيالي، مع كثرة
اشغالي من تدريس العلم لاطفالي، بعون الله الملك المنان وبمنة مولانا
محمد سيد ولد عدنان، ملتقطا من الكتب المرسوم في العنوان المعتبر
عند ائمة العلماء التكلان، وسميته **بنجاة الانام، في نيل
المرام**، راجيا من المنتفع به ان يدعو لي ولا ولي الانصاف من الانام
الى الملك العلام، بل العفو وحسن الختام، والنجاة يوم الندام والدخول
في دار السلام، **فالمسؤول** من كل عالم سليم القلب القمقام، نقي اللسان
من دنس لاعتراض ذوى الافهام، اذا اطلعوا على عثرة مني ان يصلحوها
بعد التأمل بالمكرمة، ويدعوا الله لي بالمغفرة فاني ابتهل الى الله تعالى ان
يجعلها مقبولة عنده وعند رسوله، وان يسعف هذا العبد في الدارين
ببلوغ سوله، متوسلا بشرف نبيه الحليم، عليه وعلى اله واصحابه اكمل الصلاة
والتسليم، انه ارحم رحيم واكرم كريم. وهو الموفق
للاتمام، والمحسن لنا الختام، وهذا اوان
الشروع في المرام

خطبة

بسم الله الرحمن الرحيم

الحمد لله مبدع الاشياء والانسان، ومنعمه بخلاصة حقائقها بالاحسان، ومقرّره مزاج الصحّة والسقم بعدالة الاوزان، ومزكيه باشرف الاعضاء و البيان، واشهد ان لا اله الا الله وحده لا شريك له الذي لا يقدر لاحصاء كنه ذاته ذوو الاذهان، واشهد ان سيدنا محمّدا عبده ورسوله المخصوص باكمل الايات والبرهان، واصلي واسلم ما دامت الصلوة عليه وعلى المقرون في كل زمان واوان، اما بعد فيقول العبد الذليل، غريق الخطاء العليل متوسل البرء بشفاعة الكفيل، عديم الفهم العاصي، لمالك ازمة النواصي المرتجي عفو ربه الباري، من ما هن تلامذة مولينا واستادنا الاعلى المتناسل بزراعة سيدنا المصطفى مولانا الاواب، مولوي عبد الوهاب، مد ظله العلاء لتفوز به الشرفا، ضاعف الله جلاله، وادام في العزّ اقباله، فانه شريف منزلته وعلى مرتبته، مشهور عند اهل الخيرات، صاحب باقيات الصالحات، وقد خصه الله التعالى بمكارم الاخلاق السّنيات، المسمى محمد ابراهيم بن حسن لبيه العالم صاحب بن شيخ لبيه العالم صاحب بن نينا محمد لبيه الحنفي القادري ناظر المدرسة منبع الحسنات المدكلتوري، ومدرسة الاندية المسلميّة لسنقافوري، مولدا ووطنا المدكلتوري، ضلعا واقليما المدهري الان ارامناذ فريقي لاحفهم الله بالستر الجميل، واللطف الكميل، التمس مني بعض الاملاء الطالبين، جعلهم الله وسائر الاحباب من الفائزين، ان اضع كتابا محوية في امور الدنيويين والاخرويين، مؤلفة باللسان الاروي لمن لم يعرف لسان العرابيين، من فنون الطب مع تسميتها

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

நூன்முகம்.

ஒப்பற்றவனும், சுயம்பிரகாசவதீதக் கர்த்தாவுமாகிய அல்லா ஹுத்த ஆலாவினால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்ற, வஸ்துக்களியாவற்றையுமதிற்பிரதானமாய் இன்ஸானையுநூதனமாய் வெளிப்படுத்தி அந்தஇன்ஸானுக்கு எஞ்ஞான்றுமுபகரணமாயிருக்கும்வாறுமற்றையவஸ்துக்களிலமைந்திருக்கின்ற "ஹக்கிகத்து" குலாஸா, என்னும், அந்தரங்கமாகிய பலன்களைக்கொண்டு சுகண்டியாக்கிவைத்தும் "நிறை" என்ற நீதியால்வியாதி, அதுசுஸ்தப்படலெனுந்தன்சுபாவகுணத்தில் அவனைத்தரிப்பாடாக்கிவைத்தும், சிறந்த அவயவங்களானும் இல்முகளாலும் அவனைச்சங்கையாக்கிவைத்தும், ஆட்சிசெய்துவருகின்ற ஹக்குஸுபுஹானஹுவத்தஆலா அவனொருவனுக்கே புகழியாவுமுரியனவாயிருக்கும்.

இன்னுமியான்; பிசகறவறிந்துவிண்ணப்பஞ்செய்கின்றேன் சகலவணக்கங்கட்குமுரியவனாகிய அல்லாஹுஸுபுஹானஹுவத்த ஆலா ஒருவனைதவிர வேறில்லை. அவனிணையன்றித்தனித்தவன், "அவனின்குன்ஹுதாத்தை" எத்தகைய அறிவுடையவர்களுஞ்சூழ்ந்தறிவதற்குத்திராணிபெறார்களென்று.

இன்னும் விண்ணப்பஞ் செய்கின்றேன்? திடனுகநமதுநாயகர் முஹம்மது மு[illegible]தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனின் அடி[illegible]ராயும், நிரப்பமான ஆபத்துகள் அத்தாட்சிகளைக் கொண்டுசொந்தமாய் அனுப்பப்பட்ட திருத்தூதராயுமிருக்குமென்று.

இன்னமும்? அந்நாயகம், றஹ்மத்துல் ஆலமீன்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்அவர்கண்மீதும் அவர்களையுடையவர் கண்மீதும் ஸலவாத்தும்ஸலாமும் ஓதப்பட்டனவாக இருக்குங்காலமடங்கலினும்! நான்ஸலவாத்தும், ஸலாமுஞ்சொல்லுகின்றவனாயிருக்கின்றேன்.

“ இந்தஹம்துஸ்ஸலவாத்துக்குப்பின்னர் ; நமது இரட்சகர் ஷபீஉல் முதுனிபீன் சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களது “ஷீன்” எனும்அரியபயிரைப்பரவச்செய்துகொண்டிருக்கும்மகிமைபொருந்தியநமதுமவுலானாஉஸ்தாதுனா, மவுலானல்அவ்வாபு, மௌலவி அப்துல்வஹ்ஹாபு, வேலூரீய்யா? அவர்களுக்கு;அல்லாஹுத்தஆலாஅவர்களின்வனுப்பத்தையதிகமாக்கியும் முன்னைக்கிய காலத்தை மாட்சியில் நேமமாக்கியும் சிறப்புடையவர்கள்ஜெயம்பெறுவதற்குஅவர்களின் ஜீவநிழலைநீளமாக்கியும் வைப்பானாகவும். திடனாக, அவர்களின் பதவியுயர்த்தி யானதாயும், நன்மையுடையவர்களிடம் “பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்தை” யுரியவர்களெனும்பிரபல்லியமானவர்களாயு மிருக்கும்.

இன்னும் அவர்களைசர்வபரிபூரணனாகிய “ றப்பில் ஆலமீன் ” நற்குணங்களைக் கொண்டு சொந்தப் படுத்திக் கொண்டாமே அந்நாதாவினது சிஷர்களில் மிக்கத்தழுமையானவனும், நோயாகியபாவமென்னுங்கடலிற்றாழ்ந்தவனும் “பிணையாகிறவரின்” ஷபாஅத்தால்? சுவ்தமாக்குவிப்பதை, சுபாரீஸ் தேடியவனும்” பஃம்மு“வெனும்அறிவிழந்தவனும், முன்னெற்றியெனும் மூக்கணைகயிறுடையஎஜமானுக்குமாறுசெய்தவனும், யாவையுஞ்சிருஷ்டித்தாட்சிபுரிகின்ற, தன், றப்பினுடைய பொறுக்குதலைஆதரவுவைத்தவனும், மதுரைஜில்லா, முதுகுளத்தூர்தாலுக்கா” மௌலவி “ கீ. ஹஸன் லெப்பை ஆலிம் சாஹிபு” அவர்களின் குமாரனும்;அந்நகரிய“மன்பஉல் ஹஸனாத்து ” எனும் மதுரஸாவுக்கும், சிங்கப்பூர் “ இந்தியமுஸ்லிமிய்யா”எனும், மதுரஸாவுக்கும்,சாவிர்முதர்றிஸ் ஆகியவனுமாகிய **முஹம்மது இபுறாஹீம்சாஹிபு** எனப்பெயரிடப்பட்ட அடிமை சொல்கின்றேன் அவைவற்றையும் அல்லாஹுத்தஆலா நிரப்பமாகிய உட்கிருபையாலும் அழகாகிய திரையாலும் பொதிந்துக் கொள்வானாகவும் ஆமீன். பின்னர் ; இல்மைத்தேடிய கனவான்களிற்சிலர் அறபியபாஷையறியாத முஸ்லிம்களுக்குஅறிவிளனும்தமிழ்ப்பாஷையால் துன்யாஆகிரமாகிய இருவுலகத்தின் “இல்யாதியவைகளில்” ஆவசியகமாயுள்ளனவாகிய “ இல்முல் அபுதானில் அக்மானி” “ இல்முல் அதியானில்உலமாயி” இவ்விருவகைஇல்முகளையும் நிரப்பமான வட்டுருக்கமாய்ச்சேகரித்துக் கோர்வை செய்யப்பட்டவோர் கித்தாபை

எங்கணுமே,வெளிப்படுத்தவேண்டுமென்றும் பலகாலும்என்னிடஞ் சொல்லிவந்தனர்களன்றியு மதன்விடயத்தில்பிடர், பிடியாயுஞ்சாதித்துநின்றார்கள். ஆனால் ; யான்பாரதூரமாகிய இம்மகாமுக்குரிய பாத்தியமிழந்திருப்பதுவும், இல்மையறியாதவர்களின்வாதாட்டசாதனைகட்கு இல்மு எனும்பால்குடிசோதரர்களால் ஜவாபையூன்றுதல்பிடித்திருப்பதுவும் யாவர்கட்கும் மறைவற்றிருக்க, என்னிடந் தேடியதாலே, அதிகமனக்கவலையும், இறையவன்இல்லை? பாலர்கட்குப்புகட்டி வருகின்றஷுகுல்களும்; மிகுத்திருப்பதுடன் நன்கொடையளிக்கும்நாயனின் உதவியைக்கொண்டும், அதுநான்கிளைஞரில் நாயகரான நமது எஜமான் “ முஹம்மதுநபி” அவர்களின்அழகிய உபகாரத்தின்பொருட்டைக்கொண்டும், இம்முகவுரையிற் சுட்டியிருக்கின்ற, தவக்கலுடைய உலமாக்கள்இமாமுகளிடம்உறுதியாக்கப்பட்ட அறபியக்கிரந்தங்களினின்றும் பொருக்கி யெடுத்தவனாயும், இக்கித்தாபால்பலனடையும் பலரினும் ; எனக்கும் இன்ஸாபுடையவென்சோதரர்கட்கும், அடக்கியரசாட்சிபுரிகின்ற அல்லாஹுத்தஆலா அளவில்லிரக்கம்அழகாரும் மன்னிப்பையும்? மறுமைநாளில் ஈடேற்றமாகி, சுவர்க்கம்புகுதுவதையும்பற்றி? துஆ கேட்பதை ஆதரவுவைத்தவனாய்.“ **நஜாத்துல்அநாம் பீநைலில்மறாம்** ” எனப்பெயர்சூட்டிச் சாதித்துநின்ற அக்கனவான்களுக்கு ஜவாபு கொடுத்தேன். ஆகையால்? வாசமமைந்த “ கல்புதுகை” சலாமத்தாகியும்,தற்கமென்னும் அசுசியந்தானஅழுக்கைவிட்டுநாவுறுப்பரவாகியும், சிறந்தவிளக்கமுமுள்ளஉலமாக்களிடங்கேட்டுக் கொள்ளுவதாவன.

இக்கித்தாபில் என்னால்விசயமான தவறுதலில் உதயமானால்? கீழ்க்கர்ட்டிருக்கு[illegible]கித்தாபுகளில்ஆராய்ச்சிசெய்தபின்னுந்தவறுதல் வெளியானல் ; ச[illegible]கையெனுங் கொடையாலதைத்திருத்தல் செய்து, இணக்கமாக்கி,எ[illegible] குற்றத்தைப்பொறுத்துக்கொள்ளும்படிக்கு அல்லாஹுத்தஆலா[illegible]டந் துஆ கேட்பதாகவிருக்கும். திடனாக ; நான் அல்லாஹுத்தஆலா விடத்திலும் அவன்றசூலிடத்திலும், இக்கித்தாபு ஒப்புக்கொள்ளப்பட்டதாகிவிடுவதையும் இருஉலகிலும் இவ்வடிமையின்ஹாஜத்தை நிறைவேற்றிவைப்பதையும், நமது நாயகத்தின்அமர்க்கையாகியசிறப்பின்பொருட்டைக்கொண்டு, சுபாரீஸ் தேடியவனும்“அல்லாஹுத்தஆலா” விடம்சாளயப்பாட்டுடன் கேட்

டுக்கொள்கின்றேன். அவன்நபியின் பேரிலும் அவர்களை யுடையவர்கள்தோழமார்கள் பேரிலும், சலவாத்து ஸலாமில் மிகநிரப்பமாகிய ஷ்வயுண்டாவனவாகவும் கிடைக ; அவன் கிருபையாளர்கட்கெல்லாம் மிக்ககிருபையாளனும் கொடையாளர்கட்கெல்லாம்மிக்கக்கொடையாளனுமிருக்கும். அவனுயிருக்கும் ; இக்கித்தாபு நிரம்பப்பாவதற்கு நல்லுதவிகட்டளையிடுவனும் நம் ஒடுக்கத்தையழகாக்கிவைப்பதுமே.எனினும்;இதுவாகிறதுகாட்டத்தில்ஆரம்பிக்கும்வேளையாயிருக்கும் நீயறிந்துக்கொள்.

இக்கித்தாபிலுள்ள அருந்தாபத்திகளைப் பொறுக்கி எடுத்தஅசல்நூல்களாகிய அறபியக்கிரந்தங்களின், நாமங்களாவன.

—:():—

இமாமுல்ஆலிமு;முஹம்மதுடையமகனுராகிய "ஜக்கரிய்யா றஹிமஹுல்லாஹு அவர்களுக்குரிய" அஜாயிபுல்மக்லூக்காத்து வகறயிபுல் மௌஜூதாத்து, தமீறிக்கிளையிலுள்ள அல்லாமத்து, "ஷெய்கு கமாலுத்தீன் இமாம் அவர்களுக்குரிய" ஹயாத்துல்ஹயவானில்குபுறு "தைநபிக்கிளையிலுள்ள" ஷெய்கு அஹ்மது இமாம் அவர்களுக்குரிய "முஜர்றபாத்து, ஸைனுசிக்கிளையிலுள்ள" யூஸுபு அவர்கள் குமாரர், ஷெய்குஅபீ அப்தில்லாஹி றஹிமஹுல்லாஹு அவர்களுக்குரிய, ஸநூஸி; அஷ்றக்கித்கிளையிலுள்ள "அப்துர்றஹ்மானிஅபீபக்கரு அவர்கள் குமாரர்' அல்லாமத்து இபுறாஹீம் அவர்களுக்குரிய, தஸ்ஹீலுல்மனாபிகு, திருசிக்கிளையிலுள்ள அஹ்மது அவர்கள் குமாரர் அபீ அப்தில்லாஹி முஹம்மதுமுஹம்மத்திக் இமாம் அவர்களுக்குரிய, திப்பின்நபவி, அல்லாமத்து ஜலாலுத்தீனுஸ்ஸுயூத்திய்யு இமாம் அவர்களுக்குரிய, கித்தாபுர்றஹ்மா பித்திப்பி. கஜீனத்துல்அஸ்றார், ஷம்ஸுல்அன்வார் றத்துல்முக்த்தார், ஆலங்கீரியா, இஆனத்துத்தாலிபீன், ஷருவானி, அலத்துஹபூ, பதாயிஉஸ்ஸுஹூறு, ஆகிறுஅபுவாபில் புத்தூஹாத்துல் மக்கிய்யா, கன்ஜுல் உலூம், மஜ்மூஆ பவாயிது, மஃனியயத்துல்மஆனி.இன்னும்இது போல்வன முஃத்தபறுகியபற்பல கித்தாபுகளினின்றும்வட்டுருக்கமாய்த்தெரிந்தெடுத்தவைகளும், சிறப்போங்கும் "மக்கத்துல் முஅல்லமா, மதீனத்துல் முனவ்வறு முதலிய தேயங்களிலுள்ள" ஹக்கமாக்களில்

தெரிந்தெடுத்தவைகளும்அனுபரீட்சையால்சித்திபெற்றவைகளுமாகிய அனேகஇல்முகளை ! தீன்துன்யா இருவகை நோய்களைநிவர்த்திசெய்து. அதில் ஸ்தூலங்களில் லேற்படும் பலபலவியாதிகளை அந்தந்த தேயங்களிலும், பற்பல ஊர்விளை, பறவிளை மூலிகை மஃதன், உலோகம், கற்சரம் ஆகியவகைகளாலும்; அஸ்மாக்களாலும்உபயோகப்படுத்தித்தங்கள் தாங்களே "அல்லாஹுத்த ஆலாவின்" கலையாலியால் சுவஸ்தப்படுத்திக்கொள்ளுவதற்குள துவானவிளக்கத்துடன் செந்தமிழ்நடையில்மொழிப்பெயர்ப்பித்தும் ஒவ்வொருவிடயங்களிலும்,பந்தியு, தஜ்றிபா வெனும் ஸனது, ஆதரவு, ஆகமம், உவமைகளாகியவைகளைச்சேர்ப்பித்தால்கித்தாபுவிரிந்துப்பார்க்கசடைவுண்டாகுமென்பதைப் பயந்துஅவ்வாறுசேரிடாமல் ! முதல்பாகத்தில், மார்க்கவித்யானபல இல்முகளும் சகலவஸ்துக்களின் தஃறீபு.— அடையாளங்கள்குணகுணங்களும் ; இரண்டாம் பாகத்தில் ; மனிதவுறுப்புகள்ஒழுங்கின்படி, அவ்வுறுப்புகளிலுண்டாகும்வியாதிகளும் அதற்கானபக்குவங்கள் சிகிச்சைகளும் ; மூன்றாம்பாகத்தில் ; சகலவியாதிகட்கும் அனுபோகபரீட்சையால் சித்திபெற்ற அரியஅவிழ்த முறைகளும் வைபாகம் செய்பாக வொழுங்குகளும், மிக்கத் தெளிவாய் விளக்கியுங்குறித்த மூன்றுபாகத்திலேயேஅடக்கி முடிவடைந்திருக்கின்றது. வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

"வல்லாஹுல் முவப்பிக்கு."

பிஸ்மில்லாஹி.

இஃது.

நஜாத்துல் அநாம், பீநைலில்மறாம்.

முகத்திமா

எனும்,

முன்னறிவிப்பு.

ஒன்றாவது பகல்

ஆலத்தில் அடியார்களுக்குப்பலன் கொடாதவைகளியாதொன்றுமில்லை அவைத்தீங்காயினுஞ் சரி, என்பதை விபரித்தல்.

—:0:—

அஜாயிபுல்மக்லூக்காத்தென்னும் கித்தாபில்,வருகின்றதாவன:— அல்லாஹுஸுப்ஹானஹுவத்தஆலாவின்; மலகூத்தியத்தாகிய ஆலத்தில் அணுமுதல்கற்பிக்கப்பட்டுள்ளனவாகியவஸ்துக்களடங்கலினுஞ் சூழ்ந்தறியத்தகுதியின்றிய "ஹிக்மத்துகள்" ஒழிவதன்றி குல்லியத்தாகிய அடையவளைந்த சீர்திருத்தத்தை அல்லாஹுத்தஆலாத்தன்படைப்புகளிற் பாதுகாத்துவருகின்றானென்பது யாவருகட்குமறைந்ததன்று. அஃதாவது; மழையெனும்," றஹ்மத்தையுலகில்;வருஷிக்கச்செய்வதால் "அல்லாஹுஸுப்ஹானஹுவத்தஆலா" அதில்; அவனறிந்த "ஹிக்மத்துக்களில்" அஸ்திவாரம்பலமிழந்து நிலைகுலைந்துள்ளகட்டிடங்கள் பாழாகுங்கெடுதிகளுண்டாயிருந்தாலும்; திடனுக? அம்மழையினால் தேசவிருத்திகளும், அடியார்களின்பரிபாலனங்களுமுண்டாயிருக்கின்றன.

இரண்டாவது பகல்

விஷஜெந்துக்களினும்பலனுண்டுமென்பதற்கத்தாட்சி.

கடித்து, கொட்டி, வாதனைபடுத்தும் விஷங்களைவைத்துள்ள, வண்டு,ஈ,மூட்டை,கொசு,முதலியபுழுப்பூச்சிகளை அளிகி; சலித்துக்

கெட்டுப்போன வஸ்துக்களினின்றும், மாமிசங்களிலமைந்து, மறைந்திருந்து வெளிப்படுங்கழிவுகளென்ற அசுசியாய்த் தள்ளப்பட்டுப்போன வஸ்துக்களினின்றுஞ் சிருஷ்டித்து, அவ்வசுசியாய்த் தள்ளப்பட்டகழிவுகட்கு (அசல்) ஆதியாகவிருந்த மாமிசவாடைகள் தெளிவாகவும், புத்தூண்டு ஹயவான் உயிர்ப்பிராணிகளாதியவைகட்கு, ஹலாக்கைவருந்துங்காலவிரோத முஸீபத்துகளுண்டாகுவதற்குக்காரணமாகியகெடுதிகள், நேரிடாதிருக்கவும், அல்லாஹுத்தஆலா அவைகளைச் சிருஷ்டித்திருப்பதற்குஇதன்பின்வருமாறுநாம்பார்த்தறிவதுவேபோதியதிருஷ்டாந்தமாயிருக்கும். அஃதாவது; கொல்லன்; தட்டான் கடைகளில்அச்செந்துக்களைக்காண்பதைப்பார்க்கினும், தேன்முதலியமதுரமானவஸ்துக்கள், கனிவர்க்கங்கள், மாமிசங்கள் விற்பனைசெய்யுங்கடைகளில் மிகபார்ப்பதினால், அப்புழுப் பூச்சிகளின், உற்பத்தி அவ்வஸ்துக்களினாலென்றறிவதிலுந் துர்நாற்றங்கள்நீங்குவதை அறிந்துக்கொள்வதிலும், மனதுக்குத்திருப்திகரமானத்திருஷ்டாந்தத்தை மிக்க சுளுவிலறியலாம். ஆகையால், மேற்கூறிய அஸலிய்யத்தான, சிருஷ்டிகளிலுள்ள, நாற்றமானக்கழிவுகணீங்கிஅதன்வாடைகள் தெளிந்து, முஸீபத்துகளைவிட்டும் யாவும் ஸலாமத்தாகுவதற்கு "இலாஹிய்யத்தான" ஹிக்மத்து, மேற்கூறிய ஜெந்துக்களை அக்கழிவுகளினின்றும் படைப்புண்டாகத்தேடி, அச்செந்துக்களிற் சிறியதைப்பெரியதுக்கு, ஊணாகக்கற்பித்திருக்கின்றான். அங்ஙனமில்லாதிருக்கில், அவைகளால் பூமிநிரம்பிவிடும். ஆனதால், ஆலத்தில், அற்பளவும் அவனறிந்த அகமிய்யப்பலனை; விட்டும்நீங்காமலிருக்கின்ற ஹிக்மத்தையறியாத சிலர் இப்புழுப்பூச்சிகளின், நோவினைமிகுத்திருப்பதால் அவைகளில்யாதுபலனுண்டாயிருக்கின்றனவென்றுசொல்லுவார்கள்.

மூன்றாவது பசுல்

விஷஜெந்துகளுக்குமாற்று? அதன்மாமிசமென்றல்.

உயிர்ப்பிராணிகள், ஹலாக்காவதற்கு ஒருவிதக்காரணமாய்ப் படைக்கப்பட்டிருக்கின்ற விஷஜெந்துக்களடங்கலிலும்? அதன் மாமிசத்தைப்பே அதன்விஷ [illegible] ட்டி விலக்குவதற்கு ஹேதுவான,

---

அவிழ்தமாகக்கற்பித்துவைத்திருப்பதுவும், மேற்கூறியபிரயோசனங்களிலுமிக்கஆச்சரியமேயாம். திட்டுகை, முன்னுள்ளபண்டிதர்கள், பாம்பின் தசையில், அதன் நஞ்சுக்கு ஈடுகொடுக்கும்படியானதத்துவமுண்டென்பதைப் பரீட்சித்து, அதன்தசையை "விஷமை" யாதிய அவிழ்தங்களிற், சேர்ப்பித்துபயோகித்துவந்திருப்பதுவுமொரத்தாட்சியாம். இன்னும்நாளிதுவரையில் நம்தேசங்களிற், பூமியுட்பொந்தடித்துக்கொண்டிருக்கும்; குளிப்பாம்பு, வாலால்குத்தப்பட்டவனுக்குக் குஷ்டரோகம்போலுண்டாகியபோது அவ்வகையான பாம்பைப் பிடித்து அதன்வாலைத்தறித்து, வெற்றிலை போன்றவைகளில்வைத்துதின்றபின், அவ்விஷத்தாலுண்டாயினவியாதிமாறிப்போவதும் மேற்கூறியதற்குப் போதிய அத்தாட்சியாம். இன்னுந்தேள் கொட்டப்பட்டவன் அக்கடிவாயில் அத்தேளின் மாமிசப்பசக்கைப் பூசினால், அப்பொழுதே அந்நொம்பலம் நீங்கி சுகந்தமடைவான்.

நான்காவது பசுல்

அல்லாஹுசுபுஹானஹுவத்தஆலாவின் செயலடங்கலுந்தீங்கின்றி நலவுடன், நீதியானதாயிருக்குமென்று, உறுதிதரும் ஆகமங்கள்.

அல்லாஹுசுபுஹானஹுவத்தஆலா; குர்ஆன்ஷரீபுபதினைந்தாவது ஜுஜ்வுஇருபதாவது, ருகூவில்நபிகிலுறு, நபிமூஸா அலைஹிஸ்ஸலாமிவ்விருவர்கட்கிடையில்நடைபெற்ற ஆகமங்களைநமக்கறிவித்தது அவன்செயலடங்கலும் நீதியென்று உறுதிதருவதாகியஅவன் ஹிக்மத்தினின்று முன்னதாயிருக்கும். அவ்வாகமங்கள் தவீலாவ, தரிப்பட்டோயாவர்களுஞ்சுமான்கொண்டதிலுள்ளதானதால்இக்கித்தாபுவிரிவாகிவிடுமென்று விபரிக்கப்படவில்லை. தப்ஸீருகளிற் பார்த்துணரவும். (ஹிக்காயத்து) நபிமூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஓர்மலையினடிவாரத்திலுள்ள ஊற்றுக்கண்ணில் நின்றும், ஒலித்தோடும் நீரினால், வுலூ, செய்துக்கொண்டு, தொழுவதற்காக, அம்மலையின் உச்சத்திற்கு ஏறிப்போகின்றசமையத்தில் ஓர் வாலிபன் அவ்விடம் வந்துத் தண்ணீர் குடித்துத் தன் வசமிருந்த பணப்பையை, மறதியாகஅவ்விடத்தில் வைத்துவிட்டுப் போய் விட்டான். அவன் போனபின் ஓர் இடையன் அங்ஙனம்வந்துத்தன்தாகவிடாயைத்தீர்த்துக் கொண்டு போகும் பொழுது அப்பணப்பையைக்கண்டெடுத்

துக் கொண்டான். அவன் போனபின், கனதிப்பாடும்லுடுந்தஞ் தளர்ச்சியுமுடைய விருத்தலையாகிய வோர் கிழவன் அங்கண் வந்துத்தன் முதுகின்பேரிலிருந்த விறகுச்சுமையை இறக்கி வைத்துவிட்டு ஆயாசக்களைதீர்த்து, சுகமடையமல்சாய்ந்துப்படுத்துக்கொண்ட நேரத்துள், முன் பணப்பையையிழந்தவாலிபன் மீண்டுவந்துத்தன் பணப்பையைத்தேடிப்பார்த்ததிற்காணப்படாமையால் அவ்விறகுதலையனை நோக்கிப்பணப்பையைக் கேட்டு வம்பித்து அடித்து நீங்காமல் கொலைசெய்ததாலே, அக்கிழவனிறந்து போயினன். இச்சம்பவங்களியாவையும் பார்த்துக்கொண்டிருந்த, நபிமூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹு சுபுஹானஹூவத்தஆலாவை, நோக்கி, நாயனே! இச்சம்பவங்களின் நீதியெவ்வண்ணமா மெனக் கேட்டதற்கு உடனே, அல்லாஹு சுபுஹானஹூவத்தஆலா அவர்களுக்குவஹீ, அறிவித்தான் ? சத்தியமாக, கொலையுண்டு பட்ட கிழவன் பணமிழந்தவாலிபனின் தகப்பனைக் கொலை செய்திருந்தான். அன்றியும் அப்பையிலிருந்தபண முழுவதும், அவ்விடையனின் தகப்பனுக்குப்பாத்தியமுள்ள கடன்பொருள். அக்கடன்; பணமிழந்தஅவ்வாலிபனின் தகப்பன் பேரிலுண்டாயிருந்தது, இச்சமயங், கடனுக்குக்கடனும், பழிக்குப் பழியுங்கொடுத்து தீர்ந்தன. ஆனதால்நாயன் பூராயமுள்ள நீதியுடையோனென்றறிவித்தான்.

ஐந்தாவது பசல்.

வஸ்துக்களில் அமைந்துள்ள, காஸியத்து, அற்புதமன்று, சிலதில்மட்டும், பலனிழந்து விடுவதற்குரிய காரணம்.

வஸ்துக்களிலமைந்துள்ள; குணநலங்களானவைகள்; அறியப்பட்டவழக்கம், காணப்பட்ட அத்தாட்சிகளைவிட்டுந்தூரமாயினும், அல்லாஹுத்தஆலாவின், குதுறத்துடன், யாதொன்றையும்ஒப்பமாய்க்காணப்படாததால், இக்கித்தாபிலமைந்துள்ளவைகளடங்கலினுங்கட்டுப்படுத்தக்கூடாத அல்லாஹுத்தஆலாவின் செயலின் ஆச்சரியங்களைச்சோதித்தறிவதற்கு; வயதுபோதாதுஎனினும்; சில

தில்நாம், பிரவேசிப்பதானால்முற்றிலும், நாட்டம்விட்டொழியாத அற்புதங்களையும்பலன்களையுந்தெளிவாகக்காணலாம், ஆனதால், விசுவாசத்தைக்கைக்கொண்டுசோதிப்பதற்காயத்தமாகுவதில்; ஒருவிடுத்தம், அல்லதுமறுவிடுத்தத்திலுள் அவைகள்சித்தி பெறுவிட்டால் மருளுதல், பழிக்குதல்சடையுதல், இவைகளைப்பற்றிஅச்சமூட்டுகின்றேன். நிற்க அவைகள்; சித்திபெறுமற்போவதற்குக்காரணமாவன ஒருவாறு அதற்குரிய, ஷருத்துகளிழந்தும்; அல்லது, அதற்குமாற்றமான வஸ்துக்கள், கலந்து மிருக்கக்கூடு மென்பதற்கு அத்தாட்சியாவது; இரும்பை இழுத்துக்கொள்ளசக்தியுடையஊசிக்காந்தமே திருப்திகரமான திருஷ்டாந்தமாயிருக்கின்றது, எவ்விதமானால் அக்காந்தத்திற்கு, ஈருள்ளியின்வாடையேற்பட்டால்அக்காந்தத்தின்பலனிழந்து அயத்தைப்பற்றுமற்போம் அக்காந்தத்தை, சிறுக்காயென்றகாடியிற் கழுகினால்முன்போல தன்பலன்மீண்டு அயத்தைப்பற்ற வேறுவுள்ளசக்தியுண்டாகும். ஆதலால்பரீட்சித்து, நேர்படாதவஸ்துவின் “காஸியத்தை” ப்பற்றிஆட்சேபனை செய்யாமல்அதன்அந்தரங்கம் வெளியாகும்வரையில் அதன்காரியானுபவத்தை விசாரிப்பதளவில் முக்கியப்பிரயாசையெடுத்துக்காரியத்தை; அறிந்துக்கொள்வாயாக.

ஆறாவது பசல்.

வேண்டுகோள்

திடனாக இதினின்றுமியாதொன்றையுமெனதுகற்பனையாக வெழுதப்படவில்லை. கித்தாபுகளில்தெரிந்தெடுத்தபடியே, எழுதப்பட்டிருக்கின்றன. பொருத்தமென்னும் பார்வையால், பார்த்தால் ஐபுகள், மழுங்கிவிடும், சண்டையென்னும்பார்வையால் பார்த்தால் திங்கு, ஐபுகள், மிகுந்தமாய்வெளியாய்விடும்.

பைத்து.

“பகுல்துலஹும்லாதன்ஸவுல்பதுலபைனக்கும்”
“பலேஸத்தரா ஐனுல் கறீமி ஸிவல்ஹஸனி”
“இன்தஜித்து ஐபன் பஸத்தல் கிலலா”
ஜல்ல மன் லாஐப பீஹி வஅலா”

எஃனி உங்களுக்கிடையிலுள்ளவரிசையைமறக்காதீர்களென, நான், அவர்களுக்குச் சொன்னேன். ஏனெனில்; அழகாக்கிவைப்பதல்

லாத்தனைச், சங்கைவான்களின்கண்கள், பாராத்ததால்; ஐபுகளைக் கண்டால்திருத்திக்கொள்; தன்னில் "ஐபு" இல்லாதவன்; நுட்பமும் மேன்மைப்பாடும் பொருந்தியவொருவனாயிருக்கும்.

ஏழாவது பசுல்.

வைத்தியஞ்செய்வதற்கு; தலீலும் ஹதீதின்மூலமாயுள்ள ஏவல் வரிசைகளும் விபரித்தல்.

திடனாக வைத்தியமாகிறது, பலனுந் தருதியும், நுட்பமும் சிறப்பும், பெருமையும், உயர்த்தியாகிய வரிசையுங்கீர்த்தியுமுடையவனந்ததும், பிரபல்லியமாகியதுமன்றி, அதன் அசல் மார்க்கத்திலுள்ளதும்அதன் சிஹ்ஹத்தைக்கொண்டுவேதமும் ஹதீதும்சாட்சி கூறுவதின்பேரில் உம்மத்துமார்களடங்கலும் ஒர்மித்து வொப்புக்கொண்டதுமான இல்மாயிருக்கும். நமது வேதம் 8வதுஜுஜ்உ 10வதுறுகூகில்; அல்லாஹு¯த்தஆலா திருவுளம்பற்றியிருக்கின்றான்.

ஆயத்து. وكلوا واشربوا ولاتسرفوا انه لايحب المسرفين

எஃனீ நீங்கள் தின்னுங்கள் குடியுங்கள் கடப்புச்செய்யாதிர்கள் கடப்புச்செய்தவர்களை அவன் உவக்கமாட்டானென்று. இன்னும்நபிகணாயகந்திருவுளமானார்கள்; அல்இல்மு, இல்மானி, இல்முல் அப்தானி, வஇல்முல்அத்யானி. (எஃனீ) இல்முகளடங்கலும் இரண்டுவகையாயிருக்கும்; அஃதாவன; சரீரத்திலுள்ள இல்முகளும் மார்க்கத்திலுள்ள இல்முகளுமாம். இன்னுந்திருவுளமானார்கள் இல்மாகிறது தீனுக்கும், துனியாவுக்கு மிரண்டு வகையாயிருக்குமென்று. (எஃனீ) தீனுடைய இல்மாகிறது, பிக்ஹு¯, துனியாவுடைய இல்மாகிறது, வைத்தியம், இன்னுந் திருவுளமானார்கள். இரண்டுகூட்டத்தார்கள் சகலமனிதர்கட்கும் ஆவசியகமானவர்கள் (எஃனீ) சரீரத்துக்குவைத்தியர்களும் மார்க்கத்துக்கு, உலமாக்களுமாம். இன்னும் வருகின்றன; திடனாக நபிசல்லல்லாஹு¯ அலைஹிவஸல்லமவர்கள், மருந்துசெய்துக்கொண்டார்களென்றும், செய்யும்படி ஏவியிருக்கின்றார்களென்றும். நிறக்க நபிகணாயகத்திற்குப்பின் அஸ்ஹாபுகளும் வைத்தியத்தின்பேரிற்றறிபாடாயிருந்தார்களென்றும்வருகின்றது. இன்னும் நபிகணாயகந்திருவுளமானார்கள். அல்லாஹு¯த்தஆலாவின் அடியார்களே! வைத்தியஞ் செய்துக்கொள்ளுங்கள்; திடனாகயாதொரு வியாதியையுஞ் சற்பிக்கப்

படவில்லை, அதைச்சுகப்படுத்தும்; அவிழ்தங்களைக்கற்பித்தேயொழிய எனினும்விருத்தாப்பியத்தைவருத்தும்வியாதியன்றியே என்று. இன்னுந்திடனாகத்தரிப்பாடாகிவிட்டது; அல்லாஹு¯த்தஆலா சகலவஸ்துக்களிலும் பற்பலபலனுதிய வைகளையமைத்திருக்கின்றான். அவைகளைநிராகரித்தவன் காபராயிருக்குமென்றும், வைத்தியத்தில் யாதொரு பிரயோசனமுமில்லையென்று சாதிப்பவன் திடனாக; அல்லாஹு¯த்தஆலாவுடையசொல்லையும் அவன்றசூலுடையசொல்லையும் அங்கீகரிக்காதவனாவானென்றும். ஆகையால்; ஹக்குடையசொல்லைப்பற்றிப்பிடித்துக்கொள்வது; மறுக்கப்படாதசத்தியமென்பதுவெளிப்படையே. இன்னும், முஹ்யித்தீனுபுனுஅறபீ றலியல்லாஹு¯த்தஆலாஅன்ஹு¯மா, புதூஹாத்துல் மக்கிய்யாவெனுங்கிரந்தத்திற்சொல்லுகின்றார்கள்; இபாதத்தென்னும்வணக்கம்; இரண்டுபிளப்பு, அதாவன:— இரண்டுபங்காயிருக்கும். அதில்மனிதர்கள், மருந்தினால்; சரீரங்களைச் சுஸ்தப்படுத்திக்கொள்வது முக்கியமானமுதல் பங்காயிருப்பதுமன்றியும்; இரண்டாவதுபங்காகிய மற்றயஇபாதத்துகளடங்கலுக்கு மிதுவஸீலா, வெனும்; உதவிக்கருவியாயுமிருக்குமென்று. ஏனெனில்? வைத்தியஞ் செய்தலைக் கொண்டு தங்கடங்களைப்போக்கி, ஷிபா, வென்னும், நல்லபலனைக் கொண்டுவருவதற்கும், விதித்தபடி அமல்களைநிறைவேற்றிக்கொள்வதற்கும், காரணமாயிருப்பதைநாடப்படும்; எவ்விதமானால், சூட்டைவிலக்கி, குளிரை இழுத்துவரவும், மிஜாசுகளைச் சம்பாதித்துக்கொள்ளவுங்காரணங்களுண்டாயிருக்கின்றனபோல்.

எட்டாவது பசுல்,

வைத்தியஞ்செய்வது அல்லாஹு¯த்தஆலாவின்கற்பனையைநிராகரித்தலாமோ என்றவினாவுக்கு; விடை.

—:o:—

நீ, அறிந்துக்கொள். அல்லாஹு¯சுப்ஹானஹு¯வதஆலாவின் கற்பனைக்குப்பொருந்தியிருப்பதுவேண்டுமாயிருக்கின்றபோது; வைத்தியஞ்செய்துக்கொள்வதினால், அவன்பொருத்தத்தைவிட்டும், புறக்கணித்தலாகுமன்றோ? என்றகேள்விக்கு ஜவாபாகிறது.

அல்லாஹு¯த்தஆலா ஒவ்வொருவிஷயங்கட்குமுக்கியகாரணமாய்க்கற்பித்திருக்கின்றகட்டளைகளைச்செய்து அவன்பிரியத்தளவிற்சேருகிறது அவன்கற்பனையைப்பொருந்திக்கொண்டதில்லன்றமா

யிருக்கும். ஏனெனில்; அல்லாஹுத்தஆலா, கற்பித்ததிலுள்ள தண்ணீர்தாகத்தைப்பொருந்திக்கொண்டவனைப்பினைத்துத்தாகம்வந்தநேரத்தில்தண்ணீரைநாடாமலிருந்தால்; அத்தாசமுடையவன்; கற்பனையைப்பொருந்திக்கொண்டவனையறியப்படமாட்டான். இன்னும் அல்லாஹுத்தஆலா, தண்ணீரைக்கொண்டு, தாகத்தைநிவர்த்தி செய்துக்கொள்ளும்படிக் கேவியிருக்கின்றான். இன்னும்; குர்ஆன், ஆயத்துகளைக் கொண்டோதிமந்திரிப்பது, கற்பனையை நிராகரித்ததாயறியப்படுமோ? என்றுகேட்கப்பட்டதற்கு நபிநாயகந்திருவுளமானார்கள், மந்திரிப்பதுவுங்கற்பனையில்நின்றுமாயிருப்பதால், நிராகரித்ததாயறியப்படமாட்டாதென்று. வல்லாஹு அஃலம்பிஸ்ஸவாப்.

ஒன்பதாவது பகல்.

உயிர்ப்பிராணிகளில், ஹலால்ஹறாமை விபரித்தல்

—:0:—

“மீன்” அல்லாத நீர்வாசிகளும், விட்டில், எனும் வெட்டுக்கிளி அல்லாத, குளவி, ஈ, சிலந்திப்பூச்சி, வண்டு, தேள், இவைபோலுள்ள, இரத்தமில்லாததரைவாசிகளும் ஷாபிஇய்யி, மதுஹபின்படி ஹலாலாகிய, உடும்பைத்தவிர, பாம்பு, பல்லி, மற்றையபுழுப்பூச்சி, எலி, நரிப்பெருச்சாளி, அணில், கீரிப்பிள்ளை இவைபோலுற்றவோடுகின்ற இரத்தமில்லாத, தரைவாசிகளும், இன்னுமோடுகின்ற இரத்தமுள்ளதரைவாசிகளில், நாய், புலி, வீட்டுப்பூனை, இவைபோலுற்றமருகுதலானஐவாய்மிருகங்களும், ஹனபீமதுஹபையல்லாதவரிடம்ஹலாலாகியமுள்ளம்பன்றியைத்தவிர, வரிப்புலி, ஓநாய், சிறுபுலி, கொடிப்புலிகுறிநரி, காட்டுப்பூனை, புனுகுப்பூனை, பெண்கீரிப்பிள்ளை, கரடி, குரங்கு, இவைபோலுற்ற வீரப்பல்லுள்ளவெருட்சிமிருகங்களும், பெரியஇராஜாளி, வல்வத்தான்; சிறியராஜாளி, பருந்து, செம்பருந்து, கழுகு, கழுப்பருந்து, இவைபோலுற்ற நகத்தால் வேட்டையழிக்கின்ற வெருட்சிப்பறவைகளும் மதுஹபின்ஒர்மித்த சொல்லின்படித்தின்னுவதுஹறாம்.

இங்ஙனமே, கோழி, வாத்து, போலுற்றநகத்தால்வேட்டையழிக்காத மருகுதலானபறவைகளும், புறா, அடைக்குளங்குருவி, கொக்கு, பயிற்காகம், இவைபோலுற்ற வெருட்சிப்பறவைகளும், ஒட்டகை, மாடு, ஆடு, போலுற்ற மருகுதலான்மிருகங்களும் மான்,

மரை, காட்டுமாடு, காட்டுக்கழுதை, காட்டுவொட்டகை, போலுற்ற வெருட்சிமிருகங்களும், மீன்வகையடங்கலும், ஒருவகைவிட்டிலும் அறுத்துத்தின்னஹலாலாயிருக்ககூடியவஸ்துக்களுள் “கிலாபாக” இருக்கின்ற, அபம், விதைக்கொட்டை, கபுலை, இரத்தம், பித்து, பீப்பை, கோசம், இவைபோலுற்றவைகளைத்தவிர, மற்றயமாமிசங்களும் மதுஹபின் ஒர்மித்தசொல்லின்படித்தின்னுவது ஹலாலென்பதில் சந்தேகமில்லை. (ஆலங்கிரிய்யா) மேற்கூறிய ஏழுவஸ்துக்களும் ஹனபீமதுஹபின்படி தின்னுவதுஹறாம், ஒருசொற்படிமக்ருஹென்றும் வருகிறது.

பத்தாவது பகல்.

உயிர்ப்பிராணிகளின், தோலி, தசை, தரிப்புண்டவுறுப்புகள், இரத்தம், உயிர்விடுதிவிடாதரோமம், எலும்பாதியவைகளின் ஹுக்முகள்.

மனிதனின்தோலிசங்கையுள்ளதாயிருப்பதாலும், ஹின்ஜீரின் தோலிஐமினன்றுகண்டிப்பானநஜீஸாயிருப்பதாலும். அவைஇரண்டுந்தவிர, மற்றையபாடம் படுத்துதலை ஏற்றுக்கொள்ளுந் தோலியடங்கலும், பாடம்பண்ணப்பட்டது, துப்புரவாகிவிடுவதுபோல் ஹலாலாக்கப்பட்டவஸ்துக்களிலும், ஹறுமாக்கப்பட்டவஸ்துக்களிலும், ஹின்ஜீரும், மனிதனுந்தவிர; ஷறாஹின்படி தபஹு, எஃனீ, அறுக்கப்பட்டாலும் ஆக இவ்விரண்டுவகையிலும், ஹலாலாக்கப்பட்டவஸ்துக்களின் மாம்சமுந்தோலியுந்துப்புரவாகும் ஹறுமாக்கப்பட்டவஸ்துக்களில்; தோலிமட்டில், துப்புரவாகும், அத்துப்புரவாகிய வஸ்துடன் தொழுவதும், வுளு, செய்வதும், அறுக்கப்பட்டவஸ்துக்களில்ஹலாலுடையமாமிசத்தைத்தின்னு[illegible]மாகும், ஷறாஹின்படி அறுக்கப்படாமல் செத்தவஸ்துக்களின் தோலியானாலும், ஹறுமாக்கப்பட்டவஸ்துகளின் தோலியானாலும் பாடம்படுத்தப்பட்ட பின்னர் பரிமாறுதலாகும், தின்னுவதுஆகாது. பன்றியின் ஒவ்வொரு அணுக்களடங்கலும் உயிருடனும், செத்தபின்னுந்தூய்தாகமாட்டாது. தங்கடத்துக்காக அதன்ரோமத்தைமட்டிலும் பரிமாறுதலாகும். மனிதன் தோலிபாடஞ் செய்யப்பட்டுத்தூய்தானாலும் அவனின் ஒவ்வொரு அணுக்களும் உயிருடனும் இறந்தபின்னும் அவைகளைப்பரி

மாறிப்பலனடைவது சங்கைக்காக ஹறாமாகும்; கை, காது, மூக்கு, போலொத்த உயிர் விடுதி விடும், அதாவன, இரத்தவோட்ட முள்ள உறுப்புகளில் உயிருள்ளவனிலநின்றும், தறிக்கப்பட்டவைகள் நஜீஸாகும். அவ்வுறுப்புள்ளவன் ஹக்கில் நஜீஸல்ல. மற்றைய உயிருள்ள மிருகங்களில் தறிக்கப்பட்ட உறுப்புகளுக்குச்செத்ததின் ஹுக்மாகும். மனிதனின் எலும்பை, மாவுடன் அரைக்கப்பட்டதானால் தின்னுவது ஹறாம். இன்னும் உயிர்ப்பிராணிகளில், சிறுநீர்ப்பை, பெருங்குடல், மணிக்குடல், நாய்த்தொலி, யானைத்தொலி, போற்கொற்ற ஐன்நஜீஸல்லாத்ததும் பாடஞ்செய்யப்பட்டால் துப்புரவாகும்.

பாடத்தை ஒப்புக்கொள்ளாத்ததும், இரத்தமுள்ள சிறியபாம்பு, எலி, இவைகளின் தொலிகளும் அறுத்தாலும் அறுக்கப்படாவிட்டாலும் துப்புரவாகமாட்டா, இரத்த மில்லாதவைகள் எவ்விதமானாலும் துப்புரவாகும்.

பாம்பின் சட்டை சிறிதானாலும் பெரிதானாலும் உயிர்தங்குந்தானமல்லாத்ததால் துப்புரவாகவிருக்கும் இதுபோலவே உயிர்ப்பிராணிகளின் உரோமம், என்பு, பல்லு, சவ்வு, குளம்பு, கொம்பு, இறகு, சொண்டு, நகம், கோரோசனை, மடுக்குழியின்பால், எவ்விதமான கஸ்தூரி, அதன்பை, ஜவ்வாது, அம்பர், மீன் இரத்தம் இன்னும் உயிர் விடுதிவிடாதவஸ்து அதாவது, அதைத் தறித்தால் நொம்பலமுண்டாகாத்ததுகளும், ஹலால், ஹறாமான வஸ்துக்களில், உயிருள்ளபோதும் உயிர்துறந்தபின்னும் மனிதனுட்பட அவைகளினின்றுந் தனியே பிரியப்பட்ட வஸ்துக்களுந் தறிக்கப்பட்ட வஸ்துக்களும், மாமிசச்சத்தின்றியிருந்தால் துப்புரவாகும் உயிர்விடுதிவிடும் வஸ்துவானால் நஜீஸாகும்.

இதுபோலவே.

பிடுங்கப்பட்டவஸ்துக்களின் தலைப்பில்மாமிசச்சத்திருந்தால்நஜீஸாகும், மனிதனின்உரோமம், என்பு, பல்லு, வகையறுக் கள்போற்கொத்தஉயிர்விடுதிவிடாத உறுப்புகளும், மேற்கூறியதுள்ளடங்கி விட்டதால், அவன், பல்லும், அவனல்லாதவன் பல்லும், உயிருள்ளவன் பல்லும், உயிர்போனவன் பல்லும், ஒருதிருகத்திடை யுமதற்கதிகமானதும், சுமந்துக்கொள்வதும், பல்நீங்கிய இடத்திற்பற்கட்டிக்கொள்வது மொன்றுதான்,

தீர்மானம்.

—:0:—

தின்னஹலாலான வஸ்துக்கள் அறுக்கப்பட்டிருந்தால, அதன மாமிசமுந்தொலியுந் துப்புரவாகும், தின்னப்படாத வஸ்துக்களில் ஐன் ; நஜீசானவைஅறுப்பதைக்கொண்டியாதொன்றுந்துப்புரவாகமாட்டாது. ஐன்நஜீஸல்லாத்த, தின்னப்படாத வஸ்துக்கள், தபஹு, செய்யப்பட்டாலும், பாடத்தைஒப்புக்கொள்ளாத்ததின் தொலிதுப்புரவாகமாட்டாது. பாடத்தை ஒப்புக்கொள்ளுந்தொலிமட்டுந்துப்புரவாகும். ஐன்நஜீஸானபன்றிக்கும், சங்கையான மனிதனுக்கும், தபஹு அறுப்பதுவின்“ஹுக்மு”விசயமாகமாட்டாது. ஷஹீதானவர்கள்பேரில், தப ஹு விசயமாகிவிட்டதால், அவர்கள்மட்டுந்துப்புரவு.

பதினோராவது பகுல்.

உயிர்ப்பிராணிகளின், நஜீஸுகள்விபரமாதியவைகளைக்கூறல்.

மனிதர்களில்; நபிகளுயகம்சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைத்தவிர மற்றவர்களில் நின்றுந்திண்ணமாய் அல்லது மெதுவாய், வெளிப்பட்டு,வளுவு அல்லதுமுழுக்கை விதியாக்கும்வஸ்துக்களும், தின்னப்படாத சிறிய வஸ்துகளின்சிறுநீரும், கொடியநஜீஸாயிருக்கும் வெளவால், எலி, பூனை, இவைகளின் சிறுநீரும், ஷஹீதானவரின் இரத்தமும்; அறுக்கப்பட்டவஸ்துக்களின்மாமிசம், நரம்பு, ஈரல், ஈற்குத்தி, கல்பு, இவைகளிலுள்ள இரத்தமும், வழிந்தோடாத இரத்தமும், மீன், பேன், செல், மூட்டை, கொசு, இவைகளின் இரத்தமும், பொறுக்கப்பட்டுத் துப்புரவைக்கண்டிருக்கின்றவைகளுமதன்கதர் அதாவது, அளவையுந்தவிரமற்ற அதிகமானவைக்கொடியநஜீஸாயிருக்கும். மற்றைய உயிர்ப்பிராணிகளினின்றும் வெளிப்படுகின்ற இரத்தமும், கள், சாராயம்போல்வனக்குடி வஸ்துக்களும், வாத்து, கோழி, போல்வனவாகிய பட்சிகளில் ஆகாயமன்றி ; எச்சமிடுகின்ற பறவைகளின் எச்சங்களும் விட்டை, புழுக்கை, சாணமுதலியவைகளும் கொடியநஜீசாயிருக்கும். மேற்குறிக்கப்பட்டவஸ்துக்களல்லாத்தவைகளிற்சிலது இலேசாகிய நஜீசாக வுமிருக்கும்.

பனிரண்டாவது பகுல்.

எச்சில்வேர்வை, வகையறுவைக்கூறுதல்.

மனிதர்களிற்; சிறுதொடக்குபெருந்தொடக்குடையவர்கள், தின்னஆமாக்கப்பட்டவஸ்துக்களில்குதிரையுட்படமிருகங்கள், இன்னும்,இரத்தமில்லாத சிறிய உயிர்ப்பிராணிகள், துப்புரவுள்ளவாயால் தின்று, குடித்து, எச்சில் படுத்தி மீதியாயிருக்கின்ற, தீன்வஸ்துக்களியாவும் மேற்கூறப்பட்ட மிருகங்களின் வேர்வைகளுந்துப்புரவாயிருக்கும். காட்டுப்பூனையுட்படநாய், பன்றி,வெருட்சி மிருகம். குடிகாரன் ,எலியைத்தின்றிருந்த பூனை முதலியவைகள் எச்சில்படுத்தப்பட்ட,தீன்பதார்த்தங்கள், நஜீசாகும்.

அவிழ்த்து விடப்பட்ட பூனை நஜீசைத்தின்றத கோழி ஒட்டகை, மாடு, ஆடு, சொண்டில் துப்புரவைக்காணப்படாத பறவைகள் வீட்டில் குடியுள்ள ஜெந்துக்களாதியவைகளுடையஎச்சில்பட்டது, மக்றூஹு. கழுதை, கோவேறுகழுதை,எச்சில்படுத்தப்பட்டது, மக்றூஹு, என்பதில், கிலாபு, அதாவது, சந்தேகம், மேற்கூறியவைகளில் அதுஅதுகளின், வேர்வை, எச்சிலைப் போலேயாயிருக்கும்.

பதிமூன்றவது பகுல்.

பத்வாவுக்கேற்பட்ட பலதிரட்டு மஸ்அலாக்களைக் கூறுதல்.

—:0:—

உயிர்ப்பிராணிகளின்பால்; அதனதன்மாமிசத்தைப்போலாயிருக்கும்.எனினும்பெண்பிள்ளைகளின்பால் ; பிள்ளைகள்பால்குடிக்கும் வரையிலும் தங்கட்டத்துக்காக ஆமாக்கிவைக்கப்பட்டிருக்கின்றது. அதன்பின்ஹறும். ஷாபிஈ மத்ஹபினிடம் கிலாபுண்டும், ஆனதால் பெண்களின்பால். ஹறுமென்றுப்பதில்,தாயானாலும் பெண்ஜாதியானாலும் ; மற்றவளானாலும், சரிதான். (ஹிதாயா)

கழுதைப்பாலும்,மாமிசமும்,வியாதியஸ்தனுக்கும் அவைஅல்லாதவனுக்கும், மருந்துக்காகவுபயோகித்தால் மக்றூஹுடன் ஆகும் பகரமிழந்தவிடத்தில் ஹறுமாக்கப்பட்ட வஸ்துக்களைக்கொண்டு மருந்துசெய்வதும்;பெண்பிள்ளையின் பாலை நசியம், புளிவதும், வியாதியுள்ளவன்குடிப்பதும்மக்றூஹுடன் ஆகும்.

வியாதியின்றி ; பாலிஹானவன் அப்பாலைக்குடிப்பதில்,கிலாபுண்டு,வியாதியுள்ளவனுக்கு,வைத்தியன்;கள்,குடிக்கும்படிக்கேவினால் அதனால்,ஷிபா,சுகத்தைத்திட்டமாயறியப்பட்டும்,பகரமாகமற்றொரு மருந்து இல்லாவிடில், ஆகுமென்று, பல்குஇராச்சியஇமாமுகளும் ஆகாதென்று,பகீஹு அப்துல்மலிக்குஇமாமவர்களும்சொல்லியிருக்கின்றார்கள்.கள்ளைக்கொண்டுக்காயங்கட்கு மருந்து செய்வதும் அல்லதுமிருகங்களின்முதுகு பிற்றட்டு வகையறுப்புண்களுக்கு மருந்துசெய்வதும், திம்மிக்காபருக்குக்குடிப்பாட்டுவதும், பிள்ளைகட்கு மருந்துக்காகப்புகட்டுவதும்ஆகாது,அதன்பாவம்,புகட்டினவன்பேரிலாம். வியாதிகளுக்காக, இரத்தம்,சிறுநீரைக் குடிக்கிறதிலும் செத்தவிடக்கைத்தின்னுவதிலும், ஷிபா, வென்னும் சுகம் உண்டென்று இஸ்லாமாகிய வைத்தியன் சொல்லி அதற்குப்பகரமாகிய மற்றவைகளைக்காணப்படாவிட்டால் ஆகும்.வியாதி சீக்கிரம் சுஸ்தமாகுமென்று சொன்னாலும் அதற்கு மற்ற வஸ்துகளைப்பகரமாய்க் காணப்படாவிட்டாலும் கள்ளில்கொஞ்சத்தைக்குடிப்பதிலும், ஆகும்ஆகாதென்றுங் கிலாபுண்டு.பாம்பு,முள்ளெலிகளைச்சேர்ப்பித்த;மருந்தை;பண்டிதன் தின்னும்படிக்கேவினால்;தின்னுவதுஆகாது.எனினும், புறுவின்எச்சத்தை; தின்னுவது ஆகும்.

மாலில் நின்றும்,காயங்களுக்கு,களிசெய்துக்கட்டுவதும், பாலரின்வியாதிக்காக அவர்கள் சீரத்தில் சூடுபோடுவதும், முகத்தில் சூடுபோடுவதும், மக்றூஹுடன் ஆகும்.

அடையாளங்கட்காகமிருகங்களிற்சூடுபோடுவதும்“குருஆன்” ஆயத்துகளைக்கொண்டு நோய்கட்கு மந்திரிப்பதும், எழுதிக்கட்டுவதும்,கரைத்துக்குடிப்பதும், இரத்தங்கொண்டெழுதுவதும், செத்தவஸ்த்துக்கள்தோலியில்எழுதுவதும், வஜ்பனம்விக்இங்கொண்டுஅபாயம்நேரிட்டபொழுது, கள்ளால், சாராளமாக்குவதும்,வம்பிக்குதலைலகப்பட்டவன்“குபிர்”வார்த்தையை மொழிந்தாலும் வாங்கியகடன்கொடாமல்வம்புத்தனஞ்செய்பவனுத்திரவன்றி,யவன்பொருளையெடுப்பதும் நாசஞ்செய்வதும்,கண்திஷ்டிக்காக, பானத, முச்சந்தி மண் செத்தைகளைக்கொண்டுதலைச்சுற்றி,கரித்துவிடுவதும்,வெள்ளாண்மைகளில்திஷ்டியுண்டாகாதிருக்க பாண்டங்களைக்கவிழ்த்து வைப்பதும்,ஜமானைப்பயந்ததுக்காக,நத்பாவைக் கெற்பத்திற்றரிப்பதைவிட்டுநீக்குவதும் படைகோலம் கிரப்பமாகாதபிள்ளையை விழத்தாட்டுவதும், பயகாளு

ஜிமாஃ; உள்ளநேரமன்றி-தல்வீது,துஆக்களைக்கட்டிக்கொள்வதும் தங்கடத்துக்காக;அன்னியப்புருடர்கள் உயிருள்ள; அல்லது மரணமாகிய அன்னிய ;ஸ்திரிகளின் பேரில்திரைபோட்டுக்கொண்டு அவர்களைத்தொட்டுப்பிடிப்பதும், ஆகும். (ஆலங்கீரிய்யா)

இன்னும்;பித்துஹறுமாக்கப்பட்டநஜீஸாயிருப்பதால்,வயிற்றைப்பிளந்துபித்தை நீக்கப்படாத-சிறிய மீனடங்கலும் ஹறும்.தின்னப்படாது.ஆனதால், மீன்கொழுப்பை அதன்பித்துடன் உருக்கிய எண்ணெய் நஜீசாகிவிட்டதால் உபயோகிக்கப்படாது, அப்பித்தை விலக்கி, கொழுப்பைமட்டும், உருக்கப்பட்டதானால் ஆகும். இன்னும்; தண்ணீரின்சூட்டினால்,அல்லதுகுளிரினால், மரணித்தமீன்;முஹம்மதுறஹிமஹுல்லாஹு அவர்களின்,பலமானசொற்படி தின்னலாம்.

இன்னும், விட்டிலைத்தவிர, தேன்குளவி,ஈ,இவைபோல்,இரத்தமில்லாத்ததடங்கலையும் தின்னுவது,மக்றூஹ.தேனடையிலுள்ள, புழுவில்; உயிர் ஊதப்படாதிருப்பதைத்தின்னுவது குற்றமல்ல.இதுபோலவேமற்றையகாய்,கனி,சிருக்கா, தண்ணீராதியவைகளிலுள்ள புழுக்களும்;குற்றமல்ல. (றத்துல்முஹ்தார்)

இன்னும்;பறக்கும்வஸ்துக்கள்,கொதித்துக்கொண்டிருக்கும் பாண்டத்தில்விழுந்துமரணமாகிவிட்டால் அப்பாண்டத்திலுள்ளவஸ்துகெட்டுப்போம்,கொதியடங்கியப்பின் விழுந்தால் அதைநீக்கி அதன் இரசத்தையிறுத்தபின் அப்பாண்டத்திலசமையலானதை கழுவித்தின்னப்படும். கள்,சாராயம், போலொற்றது, விழுந்தால், கழுவதினால் துப்புரவாகாது.நஜீஸாகிவிடும்.(காஸீகான்)

இன்னும்;மனிதர்மலம்,தனியாய்விற்பனைசெய்வதுஒருசொற்படி,மக்றூஹ அம்மலம்,சாம்பல்;அல்லது மண்ணுடன் கலந்திருந்தால்,ஆகும்.

இன்னும்;சாணம்,விட்டையை,விற்பனைசெய்வது ஹனபீ“மதுஹபின்படி” ஆகும்.மற்றஇமாம்களிடம்,மனிதன் மலத்தைப்போல. கடின,நஜீஸாயிருப்பதால்,பலனைப்பெறக்கூடாது(றம்ஜுல்ஹகாயிகு);

இன்னும்;எரு,விராட்டி, விட்டை, புழுக்கைகளாகிய ;வைகளால், அடுப்பெரித்துச்சமைத்த,வஜீபனம்,மக்றூஹ,அதில்தண்ணீரைத்தெளித்தால் அம்மக்றூஹ நீங்கிவிடும்மென்று,ஆலங்கீரிய்யாவில், வருகின்றது. இன்னும்;தபஹு அதாவது கோழி,ஆடு,முதலியவைகளை அறுக்கின்றவன்;கடைசியிலுள்ள (ஹேய்)அன்றிஅல்லா,என்றுசொல்லி

ஹலால் செய்பவனின், நாட்டம்; திக்ராகயிருந்தால்,அறுபட்டது, ஹலால்.இல்லாவிட்டால்,ஹறும்.இரத்தத்தில்;புரண்ட, ஆட்டுத்தலையைச்சுட்டு;அதன்இரத்தம்,நீங்கியபின்,சமைத்தது ஆகும்.சுட்டுக்கரிப்பதுதண்ணீர்கொண்டு கழுகின்றதைப்போலாயிருக்கும். (துர்றுல் முஹ்த்தாறு.)

இன்னும்;அறுபட்ட உயிர்ப்பிராணியின் உயிர்அடங்கி,மவுத்தாகுமுன் அதில்நின்றும் அறுத்த உறுப்புகள்;ஹலாலானதாயிருக்கும். (சிராஜ்)இன்னும்;குண்டு,ரவையால்,வேட்டையாடப்பட்ட வஸ்துகள் ஹலாலானதாகவிருக்கும்.இன்னும்;மரணித்ததில்நின்றுமுள்ள,ஒட்டகை,ஆடு,போலொத்தவைகளின், மடுக்குளியிலுள்ளபாலைக்குடிப்பதும் செத்தகோழியில்;தொலிதின்னமாய், அல்லது மெதுவாயிருக்க,வெளிவந்தமுட்டையைத்தின்னுவதும் ஆகும்.

இன்னும்;மழைக்காலமாதியவைகளிற்;பூமியில் முளைப்பித்த; குடைக்காளான்,மொட்டுக்காளான்,வகைகளில்நஞ்சுஅன்றேல்;மஸ்துவருத்துதலில்லாவிட்டால்;புகஹாக்களின் சட்டப்படித்தின்னுவது ஆகும்.(வல்லாஹு, அஃலம்,பிஸ்ஸவாப்.)

இன்னும். அகலத்தால்நான்குவிரல்;அளவு;பட்டு, நூலுள்ளவஸ்திரத்தைதவிர,அதற்கதிகமான,பட்டுகளுள்ளதைஅணிவது ஆண்களுக்கு ஹறும்.அதில்,பாலிகானவன் பேரில் ஹறுமானவஸ்துகளடங்கலும் அவன்,த[illegible] சிறியபிள்ளைகளுக்குச் செய்துவைக்கின்றதும், ஹறும் ஆனதால், த[illegible]பிள்ளைக்கு, கள்ளைக்குடிப்பிப்பதும் பட்டையுடுத்துவதும்,கைகாலுக்கு,மருதோன்றிச்சாயம்வைப்பதும்கிபுலாவுக்குமுன்னோக்கி அல்லதுபின்னோக்கி, ஜலபாதை, மலபாதைக்குவைப்பதும் ஆகாது (அஷ்பாஹ[illegible]ன்ன[illegible]யிரு).

இன்னும்,பொன்,வெள்ளியினுலுள்ள, நாற்காலியில்,உட்காருகிறதும்,அதுபோலுள்ள் கண்ணாடியிற்,பார்ப்பதும்,பொன்,வெள்ளியினாலாகிய,எழுதுகோலாலெழுதுவதும்,ஆண்களுக்கும்,பெண்களுக்கும் மக்றூஹ் (சிருஜீ),

இன்னும்; அறுக்கப்பட்ட, ஹலாலான உயிர்ப்பிராணி, வயற்றினுள்ளிருக்குமதன்குட்டி, உயிருடனிருக்க, எடுத்து அறுத்தாலொழிய “அபூஹனீபா றஹி மஹுல்லாஹு” இடம்அக்குட்டி ஹலாலாகாது.அவர்களிரண்டு சீஷர்களிடமும், மற்றைய,மூன்று இமாம்களிடமுமிதில், கிலாபுண்டும். (றம்ஜுல்ஹக்காயிக்கு). ஐன்,

நஜீஸன்றேல், சகல உயிர்ப்பிராணிகளில், நின்றும்பிரிந்த, கொம்பு, கொளம்பு,சவ்வு,பஞ்ஜுமுடி,நகம்,ரோமம்,இரகு,என்பு,இவைகளைக்கொண்டு,பலன்,பெருவதும். அறுக்கும்,உயிர்ப்பிராணிகளில்,அறுப்பு நரம்பில்,கொஞ்சம்,தவரிவிட்டதால் 1,2 நாள்வரைஜீவித்திருக்கயிடமாகிலதை, மறுபடியுமறுப்பதும். காபர் வேட்டையாடிய, மீனைத்தின்னுவதும். இரந்துபோன, இன்ஸானை குளிப்பாட்டியபின், அவன் நெற்றியில்,முபஸ்மலாவும்,நெஞ்சில்,தஹ்லீல்கலிமாவும்,முகிய,வலது கை, தஸ்பீஹுவிரலில், சாயமன்றியே, ஆணுக்குஆணும், பெண்ணுக்கு பெண்ணுமாயெழுதுகிறதும். ஆகும், மெஷி-கபனில், சூரத்து, யாஸீன், கஹ்பு, போன்றவைகளை, மையால்' எழுதுதல்ஆகாது! நஜீஸுடனிருக்கும், மையத்தினிடமும், மற்றைய நஜீஸுள்ளயிடங்களிலும், அசுசியஸ்தலங்களிலும் "குருஆனை" ஓதுகிறதும். மவுத்தடைந்த 1-3-10-வதுநாள்களையே, குறிப்பாக்கி, பாத்திஹா, ஓதுகிறதும். மக்ருஹு.

இன்னும்; புத்து, சாமிகளுக்கு படைத்து, பூசையாகிய எவ்வகை, வஸ்துக்களையும், வாங்கி, பலன்அடைவதும். ஆண், பெண் தன்பற்களை, பேதகப்படுத்தி, கருப்பு,சிகப்பு,போன்ற, பற்காவியணிந்துகொள்வதும். சிறந்த முஸ்லிமானவனை, பறப்பயல், பள்ளப்பயல் போன்ற,பழிப்பான மொழிகளால், யேசுவதும். ஷெய்த்தான், புத்து வகையறு,நாமங்கள் அல்லது அருத்தம், அறியப்படாத, வார்த்தைகளமைந்துள்ள, மந்தரங்களால், மந்திரிப்பதும். யேழைகளுக்கு சில வளிப்பதன்றேல், அவுலியாக்கள், ஆம்வாத்துகள், அடக்கமாகிய தருகாக்களுக்கு, மாற்கவில்க்கலான வைகளால்,நேற்சை,செய்வதும். புக்கஹாக்கள் சொற்படி ஹறும்-

(ஷாமீ, ஹம்மாதீ, ஆலம்கீரிய்யா, றப்ஜுல்ஹகாயிக்கு, சிருஜீ.)

பதினாலாவது பசுல்.

ஹறுமாக்கப்பட்டவைகளையுமதனால் அவிழ்தஞ்செய்வதின் ஹுக்கும்களையும் விபரித்தல்.

:o:

வியாதிகள்; மார்க்கவிலக்கலானவஸ்துக்களை, ஆமாக்கிவைக்கும்என்ற சட்டத்திட்டத்தின் படிக்கு ஹறுமாக்கப்பட்ட வஸ்துக்களைக்கொண்டு;அவிழ்தங்கள்செய்வதற்கும்,மற்றையபுணக்கங்களுக்கும், முஃத்தபருகிய மஸ்அலாவாகிறது :—

கல்,மண்,நஞ்சுள்ளதும், இவைகள்போல, சரீரம்,அல்லது,புத்தியைத்தங்கடப்படுத்திவைக்கின்ற"ஜமாதாத்து"களடங்கலும்,ஹறுமாயிருக்கும். அவைகள்,கொஞ்சமாயிருந்தாலும்சரி,எனினும்;அவைகளில்,தங்கடப்படுத்தாத ஜமாதாத்துகள் ஆகுமாயிருக்கும்.

இன்னும்,மிகுதிஅபியூன்,கஞ்சா,பஞ்ஜி,மதனகாமப்பூஇவைகளைப்போல் மஸ்தை வருத்தும்,வஸ்துடங்கலும் ஹறுமாயிருக்கும்: (பதஹுல்முஈன்)

பொன்,வெள்ளியைப்பொடியாக்கி,அல்லது,பஸ்பமாக்கித் தனித்தனியாய்த் தின்னுவதும், மற்றைய,மருந்துகளுடன் சேர்ப்பித்து;அவிழ்தஞ்செய்து தின்னுவதும் அதனால், பிரயோசனமுண்டாயினும்.உண்டாகாதிடினும்;ஆகும். புத்தியை, அல்லது;சரீரத்தைத்தங்கடப்படுத்தாத கல்,கரடைத்தின்பது,ஹறுமல்ல.

பின்பு;அறிந்துக்கொள்,பிரயோஜனமன்றிப்பொருளைப்பழுதாக்குவது, ஹறுமாயிருந்தாலும், மேற்கூறிய,பொன், வெள்ளியில் மருந்து செய்கின்றநாட்டமிருந்தால், ஆகும்.இன்னும்;இமாம்களால், கலப்பறுதலாகச்சொல்லப்பட்டிருக்கின்றதாவன:—

சிறுமாவிலும், அதல்லாததிலும், முத்துகளைக்கொண்டு, மருந்து, செய்வது, ஆகுமாயிருக்கும். சிலவேளை அம்முத்தினாலான மருந்துகள், பொன்னுடையவிலைக்குமதிகமாகிவிடவும்போதும்,என்று (ஷறுவானீ அ[illegible]துஹபா)

இன்னும்;சிறுபிள்ளையின் சிறுநீர் பட்டதும் அல்லது,நஜீசால் கனைந்ததுமான சாத்துண்டால்துடைத்து அல்லதுநஜீசுள்ள தண்ணீரைத்தெளித்த அடுப்பில்,அல்லதுஓட்டில்;சுடப்பட்ட ரொட்டியிலும், "நஜீஸ்"புரண்ட மண்ணால்செய்துசுடப்பட்ட கூசாவிலும் நஜீஸின்குணமில்லாவிட்டால் துப்புரவாகிவிடுவதுபோல், நஜீசான ,எண்ணெய், சவுக்காரமாகிவிட்டாலும்,சவுக்காரங்காச்சும் சட்டியில்,மனிதன்அல்லது,நாய்போல்வன மிருகங்கள், விழுந்து சவுக்காரமாகிவிட்டாலும்,கிணற்றில்,சிட்டுக்குருவி,விழுந்து,களிமண்ணாகிவிட்டாலும்,முந்திரிப்பாணியில்,எலி,அல்லது அதன்புழுக்கை,மூத்திரம்,விழுந்துசேர்ந்துப்பாகாகிவிட்டாலும்,கள், சிருக்காவாகிவிட்டாலும், அளத்தில், விழுந்த கழுதை,உப்பாகிவிட்டாலும், நஜீஸ்.சாம்பலாகி அல்லது அவர்மண்ணாகிவிட்டாலும் துப்புரவாகும்.இவ்விதமே ஒவ்வொருவஸ்துக்களடங்கலும்;அதனதன்,ஹக்கீகத்தைவிட்டும்,வேறுஹக்கீகத்துளவிற்,பேதக

“ஜாலீ[illegible]வென்றஹக்கீம்சொன்னர். ஓர்மனிதன்மந்திரித்துத் தண்ணீர்ச்சிப்பியிலுற்றதான்றேள்வகையருக்கள் சாவதைக்கண்டு அம்மாந்திரீகனைப்பரீட்சிக்கவேண்டுமென்றுமற்றொருவன்கருதி, அவனுக்குவிருந்தளித்துவேண்டிக்கொண்ட நிமுத்தம் அம்மாந்திரீகன்மறுமுறையுமந்திரித்து அவ்வாறு செய்ததில், தேளாதியவைகள்சாகாதிருப்பதைக்கண்டு, வழிபணிப்பதற்குமுன்வருங்குவளைநீர்தான் தேளாதியவைகட்கு நஞ்சாயிருக்கின்றதென்றறிந்தானென்று. நோன்பாளியின் குவளை எனும் எச்சில் ஊசிக்காந்தத்தின் சக்தியைகெடுக்கும் சிறுபருவத்தில் துவர்க்கமாய்விழுகும்பல்லைப்பூமியில் விழாமலெடுத்து, வெள்ளிப்பூண்கட்டி, யணிந்துக்கொண்டவள் கெற்பமாகாள். மர்தத்துவர்க்கத்தில்வரும்; சனிவாரத்தனில்வியாதியால் விழுகின்றபல்

லைக்கரட்டைவிட்டு சயனிப்பவன் தலைக்குக்கீழாலை வைத்தாலவை நிவர்த்தியாகும், சிறுபிள்ளையின்பல்லை "நுணுக்கி" பொடிசெய்துவிஷக்கடிவாயில்வைத்தால்விஷந்தீரும் (மையத்து) இறந்தவனின்பல்லை பல்வலியுள்ளவன்கட்டிக்கொண்டாலவை நீங்கும். முன்றக்காச்சலுள்ளவன்கட்டிக்கொண்டாலுமச்சுரநீங்கும். சூலைவியாதியுள்ளவன் தன்காலிற்கட்டிக்கொண்டாலவை நிவர்த்தியாம். அதைப்பொடித்துப்போதையானவன்மூக்கினுள்செலுத்தினலப்போதமேடு நீங்கும். தூக்கம்வராதவன்மூக்கில், மையத்தான, இஸ்திரியின் என்பைத்தூள்செய்துச்செலுத்தினல், நித்திரைவரும், அதில்இஸ்திரிகட்குப்புருடர்களின்எலும்பாகும் வலிப்புள்ளவனுக்குமனிதனின் என்பைச்சுட்டுக்கரித்துக்குடிப்பாட்டினலவை நீங்குமென்று "ஜாலீனூஸ்" ஹக்கீம்பரீட்சித்திருப்பதாய்சொல்லுகின்றார். பிள்ளைபிறந்தவுடன், தறிக்கப்பட்டதொப்புள் துண்டில்கொஞ்சமெடுத்து மரகதத்துக்குக்கீழ்வைத்துக்கட்டியமோதிரத்தையணிந்திருப்பவன் குன்மவியாதியைவிட்டும் அச்சந்தீருவான். "கத்ரு" செய்யப்பட்ட துண்டுதொலியையுலர்த்திப்பொடித்துகஸ்தூரிகலந்துகுஷ்டரோக ஆரம்பத்திற்குடித்தாலவைநீங்கும். விரைக்கொட்டையைக்குச்சியிற்கொழுகிவாச்பயிரின்மத்திபத் திலூன்றிவைத்தால்வெட்டுக்கிளி முடுகாது நாய், அல்லது பூனை, யதைத்தின்றால்பைத்தியமுண்டாகும். அதையுலர்த்திப்பொடித்துமாலைக்கண்ணனுக்கு, மையிட்டாலதுநீங்கும். "களந்தறு" அல்லதுஅறுத்தகமடங்கலைப்புங்கரித்து, அதையறியாதவனுக்குக்குடிப்பித்தால்திகப்பிரியநேசம்வைப்பான். இரத்தத்தைத்தண்ணீருடன்கலந்துவிஷந்தீண்டப்பட்டவிடத்திற்பூசினலவைநீங்கும். சின்னிமூக்குடைந்துஇரத்தமோடியவன் அந்தஇரத்தத்தினலேயேஅவன் பெயரை ஓர்துண்டிலெழுதி, தன்கண்ணிற்கிடையில்வைத்தாலவை நிவர்த்தியாகும் "ஹைளு" இரத்தத்தைவெறிநாயின்கடிவாய், படர்தாமரைபத்து வெண்குஷ்டமாதியவைகளிற் பூசினலவைகணிவர்த்தியாகும். கண்பட்டையிற்பூசினல் கண்வலியையடக்கும். கன்னியழியாதவளின் "ஹைளு" இரத்தம்; கண்வெள்ளைக்குப்பலன்கொடுக்கும். கன்னியழிந்தவள் இரத்தத்தை ஸ்தன்னியத்தில்பூசினலவைப்பருக்காது. படர்தாமரை, பத்துபுள்ளி, தேமல்வெண்குஷ்டமிவைகளிற் பூசினலவைகணீங்கும். வெள்ளீர்ப்புரையிலிருக்கும்போதுண்டாகும் வியர்வையைக் கட்டுகளிற் பூசினலவைப்பழுக்கும். வலிப்புள்ளவனின்வேர்வையை; பால்கட்டிய; ஸ்தன்னியத்திற்பூசினலதுநிவர்த்தியாகும். பெண்களின்வேர்வையைச்சொறிசிரங்குக்குப்பூசினல்பலன்கொடுக்கும். பெண்களின்பாலைத்தேனுடன்குடித்தால்கல்லடைப்புநீங்கும். அப்பாலைக்குங்குமம். கொளுஞ்சிப்பழச்சாறுடன்கலந்து செவிக்குள் கொஞ்சங்கொஞ்சமாயூத்தினல்காதுவலிநீங்கும். சிறுநீரைகொதிக்கவைத்துசூலையிற்பூசினலவ்வைநீங்கும். அதைக்குடிப்பித்தால்பாம்பு விஷந்தீரும். "பாலிகு"வயதானற்றதசிறியவளின்சிறுநீரைச்செம்புப்பாத்திரத்தில்தேனுடன்காய்ச்சிக்கண்ணில் இடையிலுண்டான வெள்ளையிற்குப்பூசப்பலன்கொடுக்கும் இருபதுவயது ஆகாதவன்சிறுநீரை வெண்குஷ்டமுடையவன்குடித்தால் அதுதீரும். அந்நீரை, சீயுள்ள சிரங்கு, புண் ஆகியவைகளிற்பூசினல்லவைகள்தீரும். அதைமுந்திரிச்சாம்பலுடன்சீயுள்ளபுண்களிற்பூசினலதுதீரும். குடித்தால்விஷத்தையும் சால்குலைவலியையும்போக்கும். பிறந்தபிள்ளையின்காட்டுப்பீ; மலத்தைதக்கண்ணில்தேய்ப்பதால்வெள்ளையைப்போக்கும் (தி.ஆ.) அம்மலத்துடன்கள்ளின்சிறக்காவைச்சேர்த்து, கடினமானகுன்மவியாதியுள்ளவனுக்குக்குடிப்பித்தாலதைநீக்கும் (றதில்) வென்ற "சப்புவினின் றினவன் மேற்கூறியமலத்தைக்குடித்து அதிகமாய்வியர்க்கும்வனாய் வெள்ளீர்ப்புரையிலிருந்தால் "மௌத்தை" க்கார்க்கும். குழந்தமலத்தைக்குழவிக்கூட்டுடன்கரித்துசொறியுள்ளவன்மூன்றுநாள் வெள்ளீர்ப்புரையிலிருந்துதேய்த்துவந்தாலதை நிவர்த்தியாக்கும் அவ்விதமேகண்சொறியும்போகும் (தி..ஆ) அம்மலத்தையுலர்த்திப்பொடித்துத்தேனுடன்குழைத்துத்தொண்டைபடிவானிற்பூசிவர அவைநீங்கும். இந்தப்புண்பட்டவன் அதைக்குடித்தால்பலனடைவான் வயிற்றின்கீரைப்பூச்சியையுலர்த்திப்பொடித்துக் கண்ணில்தேய்த்து வந்தாலதிலுள்ள வெள்ளையைப்போக்கும். மனிதனிலுற்பத்தியாகும் கல்லைச்சிறுமாக்கல்லுடனரைத்துக்கண்ணில், தேய்த்து வந்தாலதிலுள்ள வெள்ளையைப்போக்கும். "வல்லாஹுஅஃலமுபிஸ்ஸவாப்."

(முதலாம்பாபு முற்றிற்று.)

* * *

இரண்டாம் பாபு

—— :o: ——

ஜின் இபுலீஸ் ஷெய்த்தான் ஆதியனவைகளைக்கூறல்.

ஒன்றாவது பசல்.

ஜின்னை விபரித்தல்.

—— :o: ——

ஜின் "என்பது, பலவிதக் (கோலம்.) உருவங்களெடுக்குஞ் சக்தியுடையதும் நெருப்பின்சத்தினால் சிருஷ்டிக்கப்பட்டதுமானவோர் "உயிர்ப்பிராணி."

நெருப்பினதுவொளியால் மலக்குகளையும், அதன்பொறியால் ஜின்களையும் அதன்புகையால், ஷெய்த்தான்களையுஞ்சிருஷ்டிக்கப்பட்டனவென்று, சிலர்சொல்லிருக்கின்றார்கள்.

இரண்டாம் பசல்.

இபுலீஸை விபரித்தல்.

—— :o: ——

ஆதமலைஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாமவர்கட்கு முன்னர், பூலோகத்தில், மிருந்தபேர்மத்துடனுஞ்சுகந்தியுடனும்வசித்த (ஜின்கள்) அதி அக்கிரமங்கள்செய்கிறவர்களாயிருந்தமித்தமவர்களை யமைதிசெய்தற்காக அல்லாஹுதஆலா; சிலமலக்குகளை அனுப்பிவைத்திருந்தான் அவர்கள் அஜ்ஜின்கூட்டத்தவரிற்சிலரைத் தொந்தரித்து தீவுகளுக்கு வோட்டிவிட்டார்கள் சிலரைச்சிறைப்பிடித்தார்கள் சிறைப்பட்ட; ஜின்களில் "அஜாஜீல்" என்றஜின்னும் அகப்பட்டிருந்தான். அந்தக்காலம்கீர்த்திருந்தமையினாலே அம்மலக்குகளுடன் ஒற்றுமையாயிருந்தும், ஆதமலைஹிஸ்ஸலாமவர்கட்கு "ஸஜ்தா" செய்தமலக்குகளுக்கிணங்கியிராமையால் "அவ்அஜாஜீல்" லஃனத்துடன்முனியப்பட்டான்.

மூன்றாவதுபசல்.

அஜாஜீல் என்னும் இபுலீஸின்வேண்டுகோளுக்குரிய விடையை விபரித்தல்.

—— :o: ——

அஜாஜீல் லஃனத்துச்செய்யப்பட்டபொழுது அன்னவன்கேட்டுக்கொண்டதற்காக அல்லாஹுதஆலா திருவுளம்பற்றினான். அதாவது அஜாஜீலே யுனக்குரியவிருப்பிடம், இஸ்லான்குளிக்குந்தலம் நின்மஜ்லீஸ்கடைத்தெருவும், முச்சந்தியும். வஜீபனம், என் திருநாமம் பகராதுட்கொள்ளும்வஸ்துக்கள். குடிப்பு, மஸ்துடையவஸ்துக்கள். இன்னாரி, ஒப்பாரிகூறியழைத்தல். வேதம், பாடல்கள். எழுத்து; பச்சைகுத்தல், சித்திரமெழுதல். உபதேசம் பொய். நீ வேட்டையாடும் பூங்காவனம், மாதர்கள் என்று, இபுலீஸ்கேட்டுக்கொண்ட ஒவ்வொருவினவுக்குந் தனித்தனியாகவே விடைபகர்ந்தான்.

நான்காவது பசல்.

இபுலீஸுடையசிலருபாடங்களாகிய ஆகமங்களை விபரித்தல்

—— :o: ——

பனீ இஸ்ராயீல்களிலிருள்ளவோர்வாலிபஸ்திரியை, ஷெய்த்தான் பிடித்து அவளின் (அக்கல்) அறிவைக்கெடுத்து ஆட்டவைத்துக்கொண்டிருந்தது. அந்த ஷெய்த்தான்-மற்றொருவேஷரூபமெடுத்து அப்பெண்ணையுடையவர்களிடத்திற்சென்று அவர்களையும்மருட்டிவசப்படுத்தி, பனீ இஸ்ராயீல்களில், அல்லாஹுதஆலாவினிடம்அவர் (துஆ) கபூல்செய்யப்படுமேயந்தகைய "ஆபித்து ஒருவர் பருஸீஸாவென்ற நாமமுடையவரிருக்கின்றார் அவரிடம் அப்பெண்ணைக்கொடுபோனால் அவள்சுகமடைவாளென்று போதித்தான். அவ்வாறேஅந்தஆபிதிடங்கொடுபோகப்பட்டு அவளின்வியாதியை நிவர்த்திக்கும்மாறு மிக்கதாழ்மையோடுவேண்டிக்கொண்டமித்தம் அவருமங்கீகரிக்கப்பட்டவுடனே அப்பெண்ணைத் தனியாகவிட்டுவிட்டு அப்பெண்ணையுடையவர்கள்பிரிந்து போயினர்கள். பின்னர் அவ் இபுலீஸ்பருஸீஸாவென்பவரைக்கலைத்து அவரை (ஜின்) விலாக்கி அப்பெண் கெற்பமானபின்னர் அப்பெண்ணுடையவர்கள் வந்துபார்த்தாலப்பெண்கெற்பமாயிருப்பதாலேயு

மக்குமானபங்கநேரிடுமாகையால் அப்பெண்ணைக்கொலைசெய்துப் புதைத்துவிட்டு மரணமடைந்தாளென்றுச்சொல்லுமென்று போதித்துஅவ்வாறுசெய்துமுடிந்தபின்னர் அஷ்ஷெய்தான் அப்பெண்ணுடையவர்களிடமடைந்து, பருஸீஸாநடத்திவிட்ட சகலகாரியங்களையும் வெளிப்படுத்தினதி: அன்னவர்கள்பருஸீசாவைக்கொலைசெய்யவெத்தனித்தவுடன்ஷெய்த்தான்மறுத்தும் அந்தஆபிதிடஞ்சென்று, ஆபிதே! இதுமட்டுநடந்தகாரியங்கள்முற்றுமென்னாலேநடைபெற்றதாயிருப்பதால்இச்சமயமெனக்குவழிப்பட்டுஇரண்டு"ஸஜிதா"செய்விப்பீராணல், தற்போதுமக்குநேர்ந்துள்ள ஆபத்தினின்றும்மை இரட்சிக்கவெனக்குத்[தந்திரமுண்டுமென்றதாலே. ஆபிதுவழிப்பட்டு "ஸஜிதா" செய்துகுப்ரில்கொல்லப்பட்டார். அல்லாஹுத்தஆலாநம்மனைவர்களையுங்காத்துக்கொள்வாணுகவும்ஆமீன்.

இச்சமாசாரத்தைப்பற்றி அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கின்றான், **28**வது ஜுஜுவு, **5**வது ஐன் (ஆயத்து).

كمثل الشيطان اذقال للانسان اكفر

فلما كفر قال اني بربى منك اني اخاف الله رب العالمين*

எஃனீ.—ஒரு இன்ஸானுக்கு நீகாபிராகுவெனப்போதித் அவன் காபிரானவுடன்நான் அல்லாஹுத்தஆலாவைப்பயப்படுகின்றேன் எனக்கூறி,நின்னைவிட்டுநானீங்கிக்கொண்டேன் என்றுஷெய்த்தானைப்போலென்று.

ஐந்தாவதுபசுல்

ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களைகடவுளென்றுவொப்புக்கொள்ளச்செய்தகுபாடத்தை விபரித்தல்.

—:0:—

ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களை; உலகத்தைவிட்டுயர்த்தப்பட்டபின்னர்மனிதர்களைவணக்கத்தளவிலழைப்பதுடன் தனி, தனி, கட்டடங்களிலிருந்துவணங்கிக்கொண்டிருந்த; சகாபியவர்களின்சிஷர்களில் வயதால் குறைந்த "மறுகஸ்" இடத்தில், கையிற் பந்தம்பிடித்தவனாஷெய்த்தான்சென்று, நான்; உங்களிடம்மஸீஹா, தன்னாலனுப்பிவைக்கப்பட்ட; தூதன் உங்களியாவர்கட்குமென்னகேடு! நான்சுவ்ட

ரோகங்களை அகப்படுத்தியும், இறந்தவர்களைஹயாத்தாக்கியும் வைத்தேன் இவ்வாறாகிய அரியகாரியாலுபாகத்தைச்செய்வித்தற்குரியவன் ஆண்டவனென்று தெளிவாயறிந்திருந்தும் என்னை அடிமைதனத்தவிற்சேர்ப்பித்ததெயாது காரணமென மயங்குற சொல்லுகின்றார் என்று இபுலீஸ் சொல்லவும். அம்மற்கஸ் அச்சிஷ்யர்களில்திகவனைக்கமுள்ள;முஹம்லினிடஞ்சென்றுஷெய்த்தானிடங்கேட்டதையறிவித்து அவ்விருவரும் நடுவயதுடைய சிஸன் "மன்றூகிடஞ்சென்று, ஆலோசித்து, சந்தேகித்து, அம்மூவரும் மிகுந்தவயதுள்ளசிசன் "யூக்கூஸ்" இடத்திற்சென்று, காரியத்தை யறிவித்ததில் அன்னவர்களியாவரும் ஒரமித்தாலோசனைசெய்ததில், ஈஸா மூன்று, கடவுளிலொருவரெனத்தீர்மானித்து. நேர்வழிக்கெட்டதுடன், மனிதர்களையுமதனளவிலேயழைத்துநேர்வழிகெடுத்துவிட்டதாம்; இபுலீஸின்குபாடமாயிருக்கும்.

ஆறாவது பசுல்.

ஓர் ஆபிதைஷெய்த்தான்வழிகேட்டிலாக்கியதைவிபரித்தல்

—:0:—

அல்லாஹுத்தஆலாவுக்குப்பகரமாய்நினைத்து வணங்கப்பட்டுக்கொண்டிருந்த வோர்விருட்சத்தைத்தறிப்பதற்கு ஆயத்தமாகிய வோராபிதை; ஷெய்த்தான் எதிர்த்துச் சமர்புரிந்ததில், தோர்வையடைந்ததால் அவரைப்பொருளுதவிசெய்து வருவதாய் மருட்டிவாக்களித்து; தப்பித்துக்கொண்டு, அவ்வாறு சிலதினங்களிற் செய்திருந்துக்கொண்டதாலே; அவ்வாபிதுக்கு அகங்காரமுண்டுபட்டு, அவ்விருட்சத்தைவெட்டுவதற்கு ஆயுதங்களோடு போகையில், ஷெய்த்தான் மறுத்தவரை எதிர்த்து சமராடியதில் ஆபிதுபொருளிழந்ததற்காகவேயன்றி, அல்லாஹுத்தஆலாவுக்காகச் செய்தவரல்லாததினால் ஊர்க்குருவிக்கொப்பா யொடுங்கச்செய்து ஷெய்த்தான் மேவிட்டுவெற்றியடைந்தான் இதுவும்ஷெய்த்தானின்குபாடமேயாம்.

ஏழாவது பசுல்

மௌத்தானவர்களைப்போல் ஷெய்த்தான் கோலமெடுப்பதை விபரித்தல்

—:0:—

"நயி"பட்டத்தைப்பற்றிவழக்குரைத்த (முறதகு)வென்பவனைஅவன்குமுக்குக்கட்டக்களுடன்' (கிசறு) உடையமகன்படையெடுத்து

வெட்டிச்சிதறிப்போடச்செய்தனர். சிதறியகூட்டத்தில்(மவுத்து)இறந்தவர்களைப் படைக்கஞ்செய்து; முடிவில், அவர்களைப்போலவே வடிவெடுத்து மனிதர்களிடம்வந்து அவர்களிடம்பிரயாணத்தைப்பற்றிச்சொல்லிக்கொள்ளுதற்காகவும் தன்னென்றும் முறுதக்குடையமார்க்கம் உண்மையுடையதெனவும் பகர்ந்துபோனதும்; இமைரென்று மரணமடைந்தவன்பேரில் வரவேண்டியகடன் பொருளைப்பற்றி அவ்வாறு இறந்தவனென்றுவந்து தான் அவன் வடிவமெடுத்துவருவான் கேட்டறிந்துக்கொள்ளலாமென்று கடனுடையவன் வழிபார்த்திருந்துக் கேட்பதுவுஞ் ஷெய்த்தானின்குபாடேயாம்.

எட்டாவது பகல்.

இபுலீஸ்; பிசாசு கொள்ளிப் பிசாசு மோகனி குறளி வகையறுக்களான பற்பலகோல மெடுத்துவருவதையு மதன் குபாடத்தையும் விபரித்தல்.

—:o:—

காடு, வனங்களிலும், ஒழிந்தவிடங்களிலும் இரவையில் மனிதன், மிருகம், முதல்வன வடிவெடுத்துவந்து, வழிப்பிரயாணிகளை வழிமருட்டல் செய்வதும் ஷெய்த்தானயிருக்கும். வானுலகத்தின் அகமியங்களை யறிதற்கு நாடி; களவாகச்செல்லும்ஷெய்த்தான்பேரில், நரக நெருப்பின் கடாஇண்டாகிய நட்சத்திரங்களையவன்பேரிலெறிந்து விழுந்து கரிந்துகடலிலுங்கரையிலும்விழுவதில்; கடலில்விழுந்தவன் முதலையாகவும், கரையில்விழுந்தவன் கொள்ளிப் பிசாசுமாகி விடுவதும் மற்றொருவகை:—மனிதர்களுடன் இரவுகாலத்தில்: முளைக் கொட்டுகொட்டி ஜவியுடன் பூனை விளையாடுவதுபோல் விளையாடலும், அதை, ஓநாய்வேட்டையாடற்கெத்தனித்தநேரத்தில், மனிதனைப் போற்சப்ததமிட்டு என்னை, ஓநாய் தின்னாமல் காப்பாத்துபவனுக்கு என்னிடம் நூறுதங்கக்காசிருக்கின்றன என்றழைப்பதும் பெண்ரூபமெடுத்துக்கூப்பிடலும் மனிதர்கட்குள்வழிப்பட்டு அவர்கள்நாடிக் கேட்பதுகளைக்கொடுவந்துக்கொடுத்து ஊழியபணிவிடைகள் செய்வதும். வெண்மை, கருப்பு, மஞ்சள், சிகப்பாதிய பற்பலநிறங்களையும் குதிரை, கோவேறுகழுதை, மற்றைய ஐவாய் மிருகங்கள், அம்பிக்கை

விரப்பல்குளம்பு, கொம்பு, ஆதியபற்பலகோலங்கள்குணங்களாதிய வடிவுள்ளவகைகளாவதும் ஷெய்த்தானயிருக்கும்.

ஆடி. அலைந்து அன்றேல் அடக்கமாய் மனிதர்களைப்பிடித்து வாதனைப்படுத்திக்கொண்டிருக்கும் ஜின், பேய் பிசாசுகளாதியவைகளை யடக்கிப்போக்குவதும் அதற்குவிலக்கிட்டுக்காத்து; தலைக்காக்கிப்பரிகாரஞ் செய்வதும்; அவ்வண்ணஞ் செய்கிறவன் தன்னைக் கட்டிக்கொள்வதும் அவைகளுண்டுமில்லையென்று அந்நோயுடையவர்களைச் சோதிப்பதையும் இதனடியில்வருமாறு பற்றிக்கொள்க.

ஒன்பதாவதுபகல்.

மாந்திரீகன் தன்னைக் கட்டிக்கொள்வதை விபரித்தல்

—:o:—

தன்னைக்கட்டிக்கொள்ள நாடுபவன், ஆயத்துல்குருசியிலிருந்தடைய தக்லீனை, தன்வசத்திலிருந்துக்கொண்டவனாய் அதிபதிக்காலும் ஆயத்தையோதிக்கொள்வான் **28**வது ஜுஜ்உ **17**வது றுகூஃ (ஆயத்து) ومن يتق الله يجعل له مخرجا என்னும் ஆயத்தை (கத்று) வரை ஆரம்பசக்தின்(மக்றிப்)படிக்கத்திய ஒதுக்காபோதவேண்டும் இதுபோலவேமற்றைய ஆயத்து இம்முறைப்படியோதல்வேண்டும்.

பத்தாவதுபகல்.

இன்னநோயென்று சோதித்தலை விபரித்தல்.

—:o:—

முன்னே சொன்னதைதம்பியில், வருகின்றதாவன.—ஒருவனிலுண்டாயிருக்கின்ற வியாதியை, கண்திருஷ்டி, ஜின், பிசாசு வகையறுக்கள் அதல்லாததவகையென்றறிய நாடினால், அந்நோயுடையவனின்காலடியளவையெடுத்து அதனுக்கமாய்க்கணக்கிட்டுக்கொண்டபின் அந்த அளவின்பேரில் ஒன்றாயிடுத்து (ஐம்பத்து) என்றகுறாவைமுகிய வோதியபின் இரெழுதிய "இல்லை" மூன்றுவிடுத்து மோதி அவ்வடியளவை இரண்டாம்முறை கணக்கிடவும் குறைந்தால்பரிகாரஞ்செய்யவும் (அதாவது) **14**வது ஜுஜுஉ **16**வது ஸூறா (ஆயத்து) واذاقرات القرآن என்றஆயத்தை (தபுறு) வரையிலும்மோதி **18**வது ஜுஜ்உ 6வது ஸூறா ஆயத்து) افحسبتم انما خلقناكم என்றஆயத்தையோதிக்

கம்வணரயிலு மோதி, 27வது ஜுஜுவு 12வது ஜுன். (ஆயத்து) يا معشر الجن والانس என்றஆயத்தை (பலாத்தன் தவிறான்)வரையிலும் முஅவ்வதத்தைனி, பாத்திஹா இந்த மூன்றுசூராவையு மொடுக்கம் வரையிலுமெழுதி மேற்கூறிய அடியாளவையுடையவனைச் சுமந்துக் கொள்ளச்செய்யவும்.

அவ்வடியாளவுகிகளமாயிருந்தால், இதஷ்ஹம்ஸுகுல்கிரத்து என்றசூராவைமுற்றிலும், அத்துடன் கண்திஷ்டிக்குளமுதுகிறசூரா, அஸ்மாக்களையுஞ்சேர்ப்பித்தெழுதி, சுமந்துக்கொள்ளச் செய்யவும்

அவ்வடியளவுமுன்போலவே இருந்தால் ஷிபாவுக்குள்ள ஆயத்துக்களையும், 28வது ஜுஜுவு 6வது ஜுன். (ஆயத்து) لو انزلنا هذا القرآن என்றஆயத்துகளை க்கடைசிவரையிலெழுதிசுமந்துக் கொள்ளச்செய்யவும்.

மற்றொருவிதம்.—முன்கணக்கிட்ட அடியாளவின்பேரில், பாத்திஹா, ஹம்மஜத்து இந்தஇரண்டுசூராக்களையுமுங்கிய ஓதியபின்னர்கணக்கிட்டுமேற்கூறியவிபரப்படியறிந்துக்கொள்ளவும் ஆஹில்அந்நோயுடையவனிடம் உனக்கு 'ஜின்' பிசாச அல்லது கண்திஷ்டிகளுண்டென்றுசொல்லப்படாது சொல்கின்றது? ஹறாம். மேற்கூறிய, (இஸ்மு)இதுவாயிருக்கும்; அக்ஸம்த்து, அலைக்கி யாமைமூனுயா அபாதாஹ, அன்தன்ஜுல அலாஹாதல்அதாரி, வத்துபின மாபிலா ஹிபிஹி,இன்கான.மினல்ஜின்னி, பதுள்ளிறஜுஹு வஇஷ்கானமினல் இன்ஸி, பதவ்னில்ஹூ வஇன்கான, மின்ல்லா ஹிபஅப்கிஹி,அலா ஹாஹிஹி,பிஹக்கி, ஹாதிஹிஸ்ஸுராத்திக்க ஷரீபத்தி அல்வஹா, அல்வஹா, அல் அஜல், அல் அஜல், அஸ்ஸாஅத்த, அஸ்ஸாஅத்த.

பத்தொன்றாவதுபாகம்.

ஷெய்த்தானை விலங்கிட்டடக்குவதை விபரித்தல்.

—:o:—

ஜின் பிசாசு யாதியவைகளைத்தளையிட்டு அடக்கநாடினால் அதுபிடித்திருப்பவனின் கைவிரல்களில் ஜுலாலத்துடைய சொல்லை அதாவது (لله) அல்லாஹு என்ற அறபிய அட்சரத்தைஎழுதினால் அது தளையிலகப்படும் அதைக்கரித்துவிடநாடினால், அவனுடைய தும்பிவள்ளைப் புடவைத்துண்டில் மேற்கூறிய இஸ்மின் அட்சரங்களையெழுதி

ஞுருஅருகில்; நெருப்பேற்றிக்கரித்து அவனை முகரும்படிக்குச்செய்தாலது கரிந்துவிடும். அதைக்கொல்ல நாடினாலும்கரித்துவிடநாடினாலும் வாய்திறந்து பேசுதற்குநாடினாலு மிவ்வாறே செய்கில் நாடியதுண்டாகும் (தி.ஆ.).

இன்னும் (அல்லாஹு) என்னும் இஸ்மைஓர்புதியபாத்திரத்திலுள் இடமுள்ளமட்டும்மடக்கி மடக்கிஎழுதி அதைக்கரைத்து ஜின் பிசாசு, பிடிக்கப்பட்டு மெய்யுலாந்து மதி மருண்டிருக்கும் அவன்பேரில் தெளித்தால் அந்தஷெய்த்தான் கரிந்துவிடுவான்.

“பவுனீ இமாம்” அருட்செய்தார்கள்.-முப்பத்திநான்குவருடத்துடர்பிடியாய் ஷெய்த்தான் பிடிக்கப்பட்டு; பண்டிதர்களுஞ் சத்திபெறுமற்போய் மதிமருண்டு கிடந்தவோர்பிசாசுபிடித்தவனின் (பிதா) தகப்பனிடமிவ்வாறுசெய்யும்படியாக நாவேவினதில், அவனைமூன்றுநாளிருத்தாட்டிவைத்து மேற்படி இஸ்மைஎழுதிக்கரைத்துத்தெளித்து வந்ததில் அந்தஷெய்த்தான் விலகினதுமன்றி மறுபடியுமீளவேயில்லை.

மேலும்இந்த(இஸ்மு) சகலஇக்கட்டுகள் வியாதிகட்கும் தக்க பலனைக்கொடுக்கும். சஜ்ஜாலீ இமாம்சொன்னார்கள், பசுறுதேசத்தில் ஈத்தம்பழவியாபாரஞ் செய்தற்குப்போனவோர்பெரியவர், இருப்பிடங்கிடைக்காமல், திரிந்தலைந்து, குடிபிடிக்கி, நூலாம்பாடை செறிந்திருந்தவோர் பாழ்வீட்டைக்கண்டு அவ்வீட்டையுடையவரிடம் வாடகைக்குக்கேட்டதற்கு, அவர்இதைவிட்டுமுமதுசுபுசை பேணிக்கொள்ளும் அதில்;வலுப்பமாகிய(இப்றீத்து) ஜின்,வாசஞ்செய்வதால் தங்கினவரடங்கலையுங்;ஹலாக்காக்கிவிடுகின்றான் என்று சொல்லவும் அப்பெரியவர் அவ்விடமே தனக்குவேண்டுமென்றும் அந்தஜின்னையென்னோடு விட்டுவிடுமென்றும் நானதன்பேரில்; றஹ்மானிடத்தில் உதவிதேடிக்கொள்ளுவேனென்றுஞ் சொல்லினார். அதன்பிறகு அவ்வீட்டை வாடகைக்குப்பிடித்துக்குடியேறின இரவு, இருண்டவிரண்டுகண்ணும் நெருப்புக்கத்தன்மையாய்ப் பிரகாசமும், மிகக்கருத்த சரீரமுமுடையதாயோர் உருவம் அவரைமுடுகவும் அங்ஙனமவரிந்த ஆயத்துக்களையோதினார்களாம். அதாவது:—

அல்லாஹுலாஇலாஹ, இல்லாஹுவல்; ஹையுல்கையூம் என்ற ஆயத்தையொடுக்கம் வரையிலோதவே, அதுவுங்கூடவே ஓதிவந்து; வலாயஊதுஹூஹிப்ளுஹுமா வஹுவல், அலிய்யுல்

அலீம். என்றோதும்போது அந்த(ஜின்) யாதொன்றுஞ் சொல்ல ாம
விருப்பதைக்கண்டு அதைமே அவர்மடக்கிமடக்கி வோதவும் அ ந்த
இருள்போய்விட்டதின்பின் அவ்வீட்டினோர்மூலையிற்படுத்துநித்தி ரை,
செய்துக்காலையில்விழித்து அவ்விடத்திற்பார்க்க,கரிந்துபோனசா ம்ப
வின்திருஷ்டாந்தத்தைக்கண்டேனெனச்சொன்னாரென்று.

இன்னும்" அபீஹுறைறு றலியல்லாஹுஅன்ஹு" அவர் கள்
நமது; நபிகளாயகத்தைத் தொட்டுஞ் சொல்லிருக்கின்ற (ஹதீது ம்)
இதைப்பெலமாக்குகின்றது. அதைவிபரித்தால் கித்தாபுவிரிய ம்.
இன்னும்;மதிமயங்கியவன் தலையின்பேரில்,பதினொருவிடுத்தம்,ஆ பத்
துல் குருஸிய்யை ஓதினவுடனே தெளிவடைவான். அவன்சரீரத் தில்
ஷெய்த்தானுண்டாயிருந்தால் கரிந்துபோய்விடுவான். ஒருவன்பே திற்
றரிபட்டிருக்கும்"ஜின்னை" க்கரித்துவிடநாடினால் அவனுடைய; வல
துசெவியில்வழுவிடுத்தம்(அதான்)எனும்;பாங்குசொல்லி "ஸூர, ந்து
பாத்திஹா,,ஸூரத்துமுஅவ்வதத்தைன்,ஆயத்துல் குருஸிய்யி,ஸூ ரத்
துஸ்ஸாபாத்து;இவைகள்முற்றினும் ஸூரத்துல்ஹஷ்ருடையகடை சி
யும், ஸூரத்துத்தாரிக்கும் ஓதினால் நிட்டைகை அந்த(ஜின்)நெருப் பில்
கரிந்தபாவனையாய்க் கரிந்துப் போய்விடுவான். இதைசஹீஹா ாய்
பலதரமுஞ் சோதிக்கப்பட்டு அமல்செய்யப்பட்டது, ஆகை ால்
அவையடங்கல்பேரினும்" அல்லாஹுத்தஆலா,, ஷாஹிதானவரா யி
ருக்கும்(தி.ஆ.) முஜர்றபாத்துதைரபி.

இன்னும் "ஆயத்துல் குருஸிய்யை" எழுதிசுமந்துக்கொ ண்
டவன் ஷெய்த்தானாதியவைகளைவிட்டு மச்சந்திரப்படுவான். ஷெய் த்தா
னைவசப்படுத்தநாடினால்;ஷெய்த்தான்பிடித்தவன் முகத்தைப்பார்த் து
(கத்தி) கொண்டு, சைக்கினை செய்தவண்ணம் அறபிய அட் சரத்
தால், காபு, ஹா, யா, ஐன், சாது, இவைகளை யெழுதி, சாது,என் ற
கடைசி அட்சரத்தால், அந்நோய்யுள்ளவன் திரேகத்தை ஆக்கி ர
மால், சைக்கினையுடன் சுற்றிப்போகையில் யெற்புறத்தில் மூ ன்று
சுற்றுமுடிச்சுபோட்டு கீழ்புறம்கொண்டுவந்து(வாளை)க்கொண் டு மூ
டித்து அக்கத்தியை மட்டையுள்ள தேங்காய், சுரைக்காய், ஆல் ஆ
பூமியிற்குத்திப்பிடித்துக்கொண்டால் ஷெய்த்தான் வழிப்படுவான்.

இன்னும் ஷெய்த்தான் நம்முடைய சொற்கேட்டு அடங்கா விட்
டால், வாழைத்தோகையின் மட்டையை நெருப்பில் வாட்டி

ரு ஜாஜாவு, 4-வது ஐன். (ஆயத்து) ஸனஸ்துறிஜ்ஹாம் என்ற ஆயத்தை (மந்தின்) வரையிலும், ஹாமீது;முஹம்மது மஹ்மூது,ஹமீது,என்றும் அம்மட்டையிலெழுதி அந்நோயுள்ளவன்முகத்துக்கு நேரில்வைதமுறுக்கினால்ஷெய்த்தான் பிடித்தவனும்முறிந்தடங்குவான்.

பனிரண்டாவதுபகல்.

ஷெய்த்தான்,கபீஸுபேய்பிசாசு,ஆதியவைகளைவிபரித்தல்

—:0:—

நமது; நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்;துனியாவிலியாதொரு இன்ஸானும்பிறக்கப்படுகிறதில்லைமூன்றுபெயர்களாகவேயொழிய்வென்று.விபரம்.--இன்ஸான்; அவனில் சாட்டப்பட்ட மலக்கு, ஷெய்த்தான், ஆகமூன்று. ஷறறுஹு பிக்ஹால் அக்பர்.இந்த; மலக்கும், ஷெய்த்தானும்,இன்ஸானுக்குப் பிராயமெற்றியவுடன், மலக்கு நல்லநடக்கைகளையும், ஷெய்த்தான்,கெட்டநடக்கைகளையு முதிப்புண்டாக்குவார்.சீதேவிதன்மை முந்தப்பட்டவனாயிருந்தால், மலக்குக்கு ஆஸ்பதமாய், நல்நடக்கைகளைக்கைகொண்டும், மூதேவிதனமுந்தப்பட்டவனாயிருந்தால் ஷெய்த்தானுக்காஸ்பதம்சிம்மாசனமாய்க் கெட்டகிரிகைகளைக்கைக்கொண்டும் (கபுறு) லடக்கப்படும் வரையிலிருப்பான். அதில்; ஷெய்த்தானையுடையவனாயிருந்தால் அவன்கபுறிலடக்கப்பட்டபின்னர், அன்னவனின் ஒவ்வொரு உறுப்புகளினு முதயமாகிப்பார்க்கும் மலக்குகளின் வற்புறுத்தலால்,அவ்ஷெய்த்தான்,(அம்மையத்து,)இறந்தவன்வடிவெடுத்துக்(கபுறை)விட்டும்வெளிப்பட்டு,அவனைப்போலவே அவயமிட்டலைந்தும் அவிங்கோலமாய்த்திரிவது வைத்தான்(கபீது) கவுஸ், பேய், பிசாசுவெனக்கூறப்படும்.*அதில் அவன் வம்பனாயிருந்து மையத்தாகில் (கபீது) அங்ஙனையில்லாதவனாயிருந்தால், பிசாசென்ற சொல்லுண்டாகும்.

அவன்; துனியாவிலிருக்கும்போது,மார்க்கநெறியுடைய மூமின்களை மாறுபங்கமாக்குங் கோலமணிந்தவனாகில், மையத்தானபின்னர் (கபுறில்) நடைபெறும்(அதாபுக்கு) அறிகுறியாக; துனியாவில்யாவர்களும்றிய" அல்லாஹுத்தஆலா,,இக்கோலத்திலாக்குவித்தான் எனவுஞ் சொல்லப்படுகிறது.

அவன் மலக்கையுடையவனாயிருந்தால், கபுறிலடக்கப்பட்டபின்னர்; விலாயத்து கஷ்பு, கறாமாத்து, கருண்டாவன வன்றியும், அல்லாஹுத்தஆலாவிடங்கேட்குந்(துஆ)க்களுக்கு; சபாரிஸ்(வஸீலா)வாக இருந்து, அத்"துஆ"வை ஒப்புக்கொள்ளச்செய்தலாகிய (கறாமாத்து)கள் துனியாவில் வெளியாகும்.

அவன்; துனியாவிலிருக்கையில், மார்க்கம், தக்வா,வறஉ, இவைகளைப்பேணி,சாதித்தும் அதனதன், நிலை, தவறுமனின்றும் கல்குகளை; ஹக்களவிற்சேர்த்தும் ஹக்கைத்தேடியவனாகவு மிருந்ததால் அவன் மவுத்தையடைந்து;கபுறிலடக்கப்பட்டதின் பின்னர். ஹக்களவிற் சேர்ந்தானென்பதற்கறிகுறியாக, துனியாவில்;அல்லாஹுத்தஆலா இக்கோலம் இக்கிரிகைகளையுடந்தையாக்கிவைத்தான்.

பதிமூன்றாவதுபகல்.

"இபுலீசைத்தரிப்படுத்திருப்பதில்" சிலஅற்புதவினாக்கள்.

—:0:—

வினா.—அல்லாஹுத்தஆலா எல்லா;நபிமார்களின்பகைவர்களையும் (ஹலாக்காக்குவித்து) நமது பிதா ஆதம்அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களின் பகைவனாகிய இபுலீசைமட்டுந் தரிப்படுத்திருப்பதின்காரணமியாது!

விடை.—அல்லாஹுத்தஆலாதிடனாக (கல்குகளை) ச்சோதிப்பதற்காகவே இபுலீசைத்தரிப்படுத்திருக்கின்றான்.

நமது நபிநாயகந்திருவருட் செய்திருக்கின்றார்கள். " கல்குகள் " செய்யும்;பாவங்கள்; குற்றப்பாடுகளை, அல்லாஹுத்தஆலா, பொறுத்துக்கொள்ளலை நாடாதிருப்பானாகில்; இபுலீசைசிருஷ்டிக்கவேமாட்டானென்று.

இன்னும்;இபுலீசு துனியாவில் தரிப்பட்டிருக்கின்றது; மூமீன்;கட்கு,,றஹுமத்தாகவும்,, காபிரீன்கட்கு வாதனையாகவுமிருக்கும். மூமீன்கள்;இபுலீசுக்குமாற்றஞ்செய்வதாலவர்களை ஹக்குசுபுஹானஹுவதஆலாஉகந்திருப்பான்.மேலும்இபுலீசு;கியாமநாள் வரைக்குந் தரிப்பட்டிருப்பதற்குவாக்குபெற்றிருக்கின்றான்.

லுக்மானுல்ஹக்கீம்அவர்கள், தங்கள்புதல்வருக்குப் போதித்த அறிவோபதேசமாவது; தங்கமும், பொன்னும் நெருப்பைக்கொண்டு சோதிக்கப்படும்,மூமீனானோர்களை(பலாய்)எனும்;இபுலீசைக்கொண்டு சோதிக்கப்படுமென்று.

இன்னும்:அகிர்க்கட்டை,சந்தனக்கட்டைவாடை'வாசத்தை-நெருப்பைக்கொண்டன்றி அறியமாட்டாதே,அதுபோலவேயாம்.

பதினான்காவதுபகல்.

கட்டளையின் ஹிக்மத்துகளையறிந்துக்கொள்ளற்கியல்பான ஓரழகிய ஹிக்காயத்து.

—:0:—

ஒருதினத்தில் "ஆரிபீன்களிலொருவர்" அல்லாஹுத்தஆலாவை முனாஜாத்து செய்துக்கொண்டிருக்கும்பொழுது;அல்லாஹுத்தஆலா இடத்தில் தனித்த சிலவார்த்தைகள்பேசதற்காரம்பமானார்.

எந்நாயனே! நீதான் சிருஷ்டித்தாய், கற்பித்தாய், நிர்மாணித்தாய், நாடினாய்; நின்னையல்லாமல் மற்றொரு நாயனை யானறியேன் என்றுசொன்ன, அட்சணமே அசரீரியானவோர்சப்தம்வந்தது; நீர் சொல்லியவைகள்(தௌஹீது)என்பதின் பதார்த்தம் ஒழுக்கம்;அடிமைகளின்(அதப்பு)ஒழுக்கமெங்கேயென்று;அதற்கு ஆரிபுசொன்னார், எந்நாயனே! நான்தான் பாவம்குற்றம்,மாற்றம், தவறுதலாகியவைகளைச்செய்தேன்.என்க; மறுத்துமோர்அசரீரியானசப்தம்வந்தது ஆரிபேநான்,மறைத்து,பொறுத்து,மன்னித்துக்கொண்டேன்.நீ,யறிந்துக்கொள்.—திடனாக நான்நின்னில், உட்கிருபையாகி,நின்னைப்பாதுகாத்துக்கொண்டேன் நின்னை பாவத்தைவிட்டு நிவர்த்திபுரிந்ததெல்லாம் நின்னை இரட்சித்துக்கொள்கின்றதற்காகவே; எனினும், நீபாவத்தைவிட்டுவிலக்கிக்கொள்கிறதளவில்;நாம்தேவையாகியல்ல ஆகையால் நின்முறுக்கிபாலை நின்னைவிட்டு மறையாதவனளவிலாக்கிக்கொள். நீ, அவனன்றியே (நிஃமத்தை)ப்பெற்றுக்கொள்ளாதவனுக்கு நன்றியையும், நீ, அவனன்றியே நன்மையைக்காணாதவனுக்கு வணக்கத்தையும், நீ, அவனைவிட்டும் பிறக்கணித்ததின்பேரில் அழுகையையுமுடந்தையாக்கிக்கொண்டு நின்ஹாஜத்தைத்தேடுகிறதில், தழுமை பெறுங்கையை அவனளவிலுயர்த்திக்கொள். என்று.

பதினைந்தாம் பகல்.

ஷெய்த்தானிலமைந்துள்ள பலன்களைப்பற்றிய ஆச்சரிய ஆகமம்.

—:0:—

முஹ்யித்தீனிபுனு அறபி அவர்கள் தங்கள்; ஆகிறல் புத்

ஹாத்தின் வஸிய்யத்தில் அருட்செய்திருக்கின்றார்கள்.

முந்திய நபிமார்களின் காலத்தில், தன்னளவில் வஹீவரக்கூடியவொருவர்.- அல்லாஹுத்தஆலாவின் வேதக்கட்டளை (தக்லீபெ)னுஞ் சோதனையின் அந்தரங்கத்தைப்பற்றி ஆலோசித்ததில் அதன் அகமியப்பொருளின் ஹிக்மத்துந் தனக்கு வெளியாகாமலிருந்ததால் அவர்; மறுதரமும் ஆலோசித்ததில்; அல்லாஹுத்தஆலா யாவர்களையும் வணங்கும்படிக்கருள்செய்திருப்பதால் நாமும் கல்வத்தென்னுமொழிந்த விடத்திற்றரிப்பட்டு முனாஜாத்துசெய்யவேண்டுமென்று நிச்சயித்து அவ்வாறே கல்வத்திலிருந்து, நாவு, கல்பு; இருதயத்தால் (றஹ்மானை) மன்றாடித்தழுமையாக (முனாஜாத்து) செய்தார்.

என்னரிய நாயனே! என் ஏவுதலன்றியே என்னைசிருஷ்டித்தாய் என்னின் உசாவுதலன்றியே என்னைமரணிக்கச் செய்வாய் எனக்கு சம்மதமும் பொருத்தமுங்கொடுக்கின்றதன்றி, எனக்கு ஏவுதல் விலக்குதல் செய்தாய், என்னில் படுதடி ஆசையையும்வழிகெடுக்கும்ஷெய்தானையுஞ் சாட்டி என்னபுசிலுளைப்பட்ட சரீரவிச்சையைச் சேர்ப்பித்து, இரண்டுவிழிகட்கிடையில் துனியாவை யலங்கரித்து, பின்பு எனக்கு வற்புறுத்துதல் (அதாபு)வேதனையைக் கொண்டச்சம்மூட்டி வெருட்கிகொள்ளும்படிக்கு விலக்கி நீ திருவுளமானாய் (இஸ்,நக்கிம், கமா அமர்த்து)என்னை.— நானேவல்செய்தபடிக்குச்சரியாய் நடந்து படுதடியாசையைத்தொடராதே உன்னைவழிகேட்டிலாக்கிவிடும் உனக்கு ஷெய்தான் முடுகுவதைப்பயந்துக்கொள். துனியாவொன்னைமருட்டிவிடவேண்டாம் சரீர இச்சையைத் தவிழ்ந்துக்கொள் உன்னை தழுமையிலாக்கவேண்டாம். உனக்குவஸிய்யத்துசெய்கிறேன். உன் கூட்டம், உறவினர்களென்னும்பாலகருடன் சேர்ந்துக்கொள் ஹலாலானவழியில் துனியாவைத்தேடிக்கொள் 'தேடாவிடில்கேள்விக்குட்படுவாய் அதைத்தேடும் விதமன்றித் தேடுகிலும் கேள்விக்குட்படுவாய் அதினின்று முன்பாகத்தைமறந்துவிடாதே நீ, உபகாரஞ்செய் அல்லாஹுத்தஆலா உனக்குபகாரஞ் செய்தல்போல, பூலோகத்தில்கெடுதியைத்தேடாதே. ஆகிரத்தைவிட்டும் பிறக்கணிக்காதே இருலோகத்திலு நஷ்டமடைவாய் என்று, நீ சொன்னாய் ஆகையால் ஒன்றுக்கொன்றுவிதர்ப்பமான இட்டோட்டு, இடைஞ்சலானகருமத்திலகப்பட்டுவிட்டேன்; நானறியேன் எவ்வண்ணமான "அமல்" செய்

து சேட்டற்றமாகுவேனென்று. இனி ஏதுசெய்குவேன் என்கருமத்தில் நானே தட்டுக்கெட்டுத்தந்திரங்களைவிட்டுத்தவறிவிட்டேன். ஆகையால், என், நாயனே! என்னை எத்திக்கொண்டு, என்கையைப்பிடித்து, சேட்டத்தமாகும் வழியைக்காண்பிப்பாயாக இல்லாவிட்டால் ஹலாக்காயிவிடுவேனென்றார். உடனே, அவரளவில், "அல்லாஹுத்தஆலா" வஹீயறிவித்தான் என்னுடைய அப்தே! எனக்கு நீ, உபகாரஞ்செய்வதில் நானுன்னை ஏவவுமில்லை உன்னுடைய உபகாரமெனக்குத்தீங்காய், சம்பவிப்பதைப் பற்றி விலக்கவுமில்லை ஆனால், உனக்கு, ஒரு (தப்பு) உண்டும். அவனுன்னைப் படைப்பித்து, உனக்கிரணை முதலியவளித்து வளர்ந்து உன்னுடனிருந்து, உன்னைப் பாதுகாத்துப்பேணிவருகின்றவனாகிய, நீ வணங்கப்பட்ட எஜமான், ஒருவனுனக்குண்டுமென்று நீயறிந்துக்கொள்வதற்காகவே நானேவுதல்செய்தது. இன்னு நானுன்னை ஏவுதல்செய்தவை யடங்கலிலும், என், "இநாயத்து" (ஹிதாயத்து,) எனுமுபகாரத்தால் இலேசுபடுத்துவதில், நீ, ஹாஜத்தாயிருக்கின்றாய். விலக்கல் அடங்கலிலுமென்பாதுகாப்பு எனுங்காரமானத்தனவில் தேவையாயும், துனியா, ஆகிரத்துடையகரும மடங்கலிலும், இரவு, பகல், உன்காலம், ஹால், உசும்புதல், ஒடுங்குதல் அடங்கலிலும் என்னிடம் ஹாஜத்தாகியும், இரகசியம் பரகசியத்திலும் நின்னுடைய எத்தகையான கருமமுமென்னில்மறைந்ததன்று என்றறிந்து, நானுனக்கு முக்கியமானதேவையென வெளியாகி, நீ யறிந்துக் கொள்வதற்காகவே, ஏவல் விலக்கை ஏற்படுத்தினேன். அவ்வண்ணம் நீயறியப்பட்டால், என்னில் பிணக்கம் மறதியாகியவைகளைவிட்டு, நானல்லாத்தவைகளிற் பார்க்காகுவதை யிழந்து எப்பொழுது என் (திக்று)ல் ஆகி முஷாஹிதா, முறாக்கிபா விற்றரிப்பட்டு நீளங்கிருந்தாலும் நான்உன்னுடனிருக்கின்றேன், நீ, என்னைப் பாராதிருக்கினும் நானுன்னைப் பார்த்துக்கொண்டிருக்கின்றேனென்று, நீயறிந்து, என்னுடையகல்புகளில் என்னுடன் நீசேர்ந்துக்கொள்வாய். இவைகளடங்கலையும் விளங்கி, நக்கின்கொண்டால் நான்கூறியவைகளினுள்ள ஹக்கீக்கத்து எனும் அந்தரங்கத்தை வர்ணித்ததின் ஸிர்றுஹத்து, உண்மை உனக்குவெளியாகி, யாவையுமின் முதுகுக்குப் பின்விட்டு மூர்த்தனித்தவனாய், என்னிடமுன்னோக்கிவிடுவாய் அன்னேரமுன்னை

எனக்குமூபிருதலாக்கி என்னளவிற்சேர்த்து, என்னிடங்(தறஜா)வி உயர்ந்து என் அவுலியா அஸ்பியாக்களிலாகி, எனதருகில் மலக்குடன் அச்சமகன்று இன்புற்றுணுழிணுழிகாலஞ் சந்தோஷத்தரிப்பாட்டிலாக்கிக்கொள்வேன் நீஎன்னிடங்கேட்டதின் சந்தேகத்தை இழந்து நினக்குநான் முன்செய்த(நிஃமத்து)களையூகித்துப்பார். நீ வஸ்துஎன்றுக்குறிப்பிடாமலிருக்கும்பொழுது அற்புதமாய்ச் சிருஷ்டித்து ஐயறிவு; அழகியவடிவு, உறுப்பு; அறிவென்ற இல்மு, விளக்கம் கல்குகள் வசப்படுதலாகியவைகளை யுனக்கு (இன்னும்)செய்து; நீவழிதவறுதிருக்க, வேதக்கட்டளையையுமறிவித்தேன். பின்பு, நீ, என்னில், கெட்டவெண்ணங்கொண்டு, ஹக்கல்லாததைச் சந்தேகிக்கின்றாய். என் அப்தே? என்கட்டளையைசெய்விக்கினைக்குத்தங்கடமேற்பட்டபொழுது, என்அருகைச்சமக்கின்ற மலக்குகள் சொல்லியதுபோல ;லாஹெளல, வலாகுவ்வத்த, இல்லாபில்லாஹில், அலிய்யில், அளீம் என்றும், முஸீபத்து பிடித்தபொழுது என் அஸ்பியாக்கள் சொல்லிக்கொண்டதுபோல;இன்னா லில்லாஹிவ இன்னாஇலைஹி, றாஜிஊன். என்றும், பாவத்திற் சறுகிவிட்டபொழுது என் ஆதமும் அவர்பீபியுஞ் சொல்லியதுபோல;றப்பனா,லலம்னா,அன்புஸனா,வஇல்லம்தக்பிர்லனா, வதர்ஹம்னா,லநக்கூனன்ன,மினல்காஸிறீன்.என்றும்,துக்கம்துன்பமாதியவைகளுண்டாகி நேர்வழிக்குள்ளசவாபைநாடினால்;என்கலீல்இபுறாஹீம்சொல்லியதுபோல; அல்லதீ,கலக்கனீ,பஹுவ,எஹ்தீன், வல்லதீ,ஹுவயுத்கிமுனீ,வயுஸ்கீன்,வஇதாமறிழ்த்து,பஹுவ,எஷ்பீன் 'வல்லதீ, யுமீத்துனீ, தும்ம,யுஹ்யீன், வல்லதீ, அத்மஉ, அன்எக்பிறலீ, கத்தீஅத்தீ, எவ்மத்தீன், றப்பி,ஹப்லீ, ஹுக்மன்,வஅல்ஹிக்னீ, பிஸ்ஸாலிஹீன், வஜ்அல்லீ; லிஸான், சித்கின், பில்ஆகிறீன். வஜ்அல்னீ, மின்வறதத்திஜன்னத்தின் நஈம் வக்பிர்லி அபீ, இன்னஹுகானமினல் லால்லீன், வலாதுக்ஜினீ, எவ்மயுப்அதூன், எவ்மலா, என்பஉ, மாலுன்,வலாபனூன், இல்லாமன், அத்தல்லாஹ, பிகல்பின்ஸலீம்"என்றும்; ஆபத்துகளேரிட்டபொழுது, என் "எஃ'கூபு சொல்லியதுபோல" இன்னமா, அஷ்கூபத்தீ, வஹுஸ்னீ இலல்லாஹி .வஅஃலமு, மினல்லாஹி, மாலாதஃலமூன்". என்றும் தவறுதல் நடந்துவிட்டபொழுது "என்கலீம், மூஸா சொல்லியது

போல" ஹாதா, மின்அமலிஷ்ஷைத்தானி, இன்னஹு, அதுவ்வுன், முழில்லுன்முபீன் என்றும், பாவஞ்செய்வதில், தவறுதலேற்பட்டபொழுது, நான் என் நேர்வழியை யுகிப்பாக்கி வைத்தவர்கள் சொல்லியதுபோல், வமாஉபர்ரிஉ, நப்ஸீ இன்னன்நப்ஸ, லஅம்மாறத்துன், பிஸ்ஸூயி, இல்லாமாறஹிம, றப்பீ, இன்னறப்பி, கபூருன், றஹீமுன்" என்றும், பலாயினால் சோதிக்கப்பட்டபொழுது, என்கலீபா" தாவூது, சொல்லியதுபோல "இதஸ்தக்பற, றப்பஹு, வகர்ரறாக்கிஅன், வஅநாபு" என்றும். பாவிகளில் என்றைக்கும் நீ எத்திக்கொள்ளாதபொழுது, என், றூஹு; ஈஸா சொல்லியதுபோல "இந்து அத்திபுஹும், பஇன்னஹும், இபாதுக்க, வஇன்தக்பிர்லஹும், பஇன்னக்க, அன்தல், அஸீஸுல் ஹக்கீம்" என்றும், என்னிடம் பிழைபொறுத்தல், மன்னித்தல், இவைகளைத் தேடியபொழுது, என் ஹபீபு முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், அவர்களும் அவர்களின் அன்சாரீன்களும் ஓதியதுபோல "றப்பனா, லாத்து ஆகித்னா, இன்னஸீனா அவ்அக்தஉனா, றப்பனா, வலாத்தஹ்மில், அலைனா, இஸ்றன், கமாஹமல்த்தஹு, அலல்லதீன, மின்கப்லினா, றப்பனா, வலாத்து ஹம்மில்னா, மாலாதாக்கத்தலனா, பிஹி, வஃபுஅன்னா, வக்பிர்லனா, வர்ஹம்னா, அந்த, மௌலானா, பன்சுர்னா, அலல்கவ்மில் காபிரீன்" என்றும், நின் ஒடுக்கமெவ்வாறு, முடிவடையுமென்றறியப் படாத்ததாலே, ஒடுக்கத்தின், கருமத்தைப்பயந்தபொழுது, என், அஸ்பியாக்கள், சொல்லியதுபோல " றப்பனா, லாதுஸிக்குலூபனா, பஃத, இத்ஹதைத்தனா, வஹப்லனா, மின்லதுன்க, றஹ்மத்தன், இன்னக்க, அன்தல், வஹ்ஹாபு, றப்பனா, இன்னக்க, ஜாமிஉன்னாஸி, லீஎவ்மின், லாறைபபீஹி, இன்னல்லாஹ, லாயுக்லிபுல் மீஆத," என்றும் ஓதிக்கொள்ளென்றான். வல்லாஹுல் முவப்பிக்கு" இன்னும் சுலூக்குடைய இல்முகளிற், சிலவற்றை, ஐந்தாவது பாபில், விபரிக்கப்படும், இன்ஷா அல்லாஹுத்தஆலா.

இரண்டாம் பாபு முற்றிற்று.

மூன்றாம் பாபு.

மலக்குகளின் ஹக்கீக்கத்தாதியவைகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

மலக்குகளின் தஃரீபெனுங் குறிப்பை விவரித்தல்.

மலக்குகளாகிறவர்கள்;—ஆசையைத் தேடுவதைவிட்டும், கோபத்தின் வெருட்சியைவிட்டுந், தூய்தான வோர் உயிர்ப்பிராணி இன்னும், பார்வையையும் அக்லையு முடையவர்கள். அன்றியும் அல்லாஹுத்தஆலாவின், ஹுக்முகட்கு, மாற்றஞ் செய்வதன்றி, கடமைகளை, நிறைவேற்றுபவர்கள். படைப்புகளின் சீர்திருத்தங்கட்குப்போதிய பிரயோஜனகரமாகப், பல கோலத்தின் சிருட்டிக்கப்பட்டவர்கள். படைப்புகளில் யாதொரு அணுவுமவர்களைவிட்டு நீங்காதவர்கள். அல்லாஹுத்தஆலாவையன்றி, அன்னோர்களின் வகுப்பு, பிரிவு, ஆதியவைகளை எவருமறியப்படமாட்டார்கள். ஆனால்; சிற்சிலவகுப்பை மட்டும் நாம், மார்க்க நிபந்தனையாலறியப்பட்டிருக்கின்றோம். இன்னும், அவர்கள்; (பஸீத்தாகிய) ஜௌஹறெனும் "ஒளியானவர்கள் அவர்களின் ஜீவனம் தஸ்பீஹு" குடிப்பு "தக்தீஸ்" மருகுதலாகிய துணை, திக்று. மனமகிழ்ச்சி; வணக்கம் (இபாத்து) ஆகையால், அவர்களை அல்லாஹுத்தஆலா, தன் குத்றத்தைக் கொண்டு, சிருட்டித் திருப்பதினாலே நிரப்பமும், ஆலத்தின், இணக்கமும், மலக்குகளைக் கொண்டாயிருக்கின்றன,

* * *

இரண்டாவது பசுல்.

மலக்குகளின், வகுப்பை விபரித்தல்.

நமது "ஷறஹு" மார்க்கம், அறிவித்தபடி, மலக்குகளில் பதவியா லுயர்த்தியானவர்களும், தஸ்பீஹு "தஹ்மீது" நீங்குதலன்றி, மூமின்கட்குப் பிழைபொறுக்குதல், தேடுகின்றவர்களும், அறு[illegible] சுமப்பவர்களுமாயிருக்கும்.

இன்னும் "பலக்கு" எனும் வானங்களைத் திருப்பி நட்சத்திரங்கள் அதன் கீழுள்ள "உன்ஸுறென்ற பஞ்சபூதங்களானவைகளை, புசுப்புவதற்காகச் சாட்டப்பட்டிருப்பவர்கள் "றூஹுல்அமீன்" என்ற மலக்கவரின், ஒவ்வொரு மூச்சும் உயிர்ப்பிராணிகட்கு ஹயாத்தாய் விடுகின்றது.

* * *

மூன்றாவது பசுல்.

மலக்குகளில்; நால்வர்களை விபரித்தால்.

ஒன்றாவது.—கற்பனையை ஏற்றிவைக்கின்றவரும், ஸ்தூலங்களில் "றூஹை" ஊதுகின்றவரும், "சூர்" என்னுங் குழலை வாயில் வைத்தவராய், கட்டளையை வழிபார்த்திருந்து, கட்டளையானவுடன் ஊதி, "படைப்பு" சிருஷ்டிகளைப் "பனா" வாக்குபவரும் வலுப்பமுள்ள சரீரத்தையுடையவரும், அறுஷை, தோள்ப் புயத்திலேந்தியவருமாகிய (இஸ்றாபீல்) எனும் மலக்கு, "அல்லாஹுத்தஆலா" தன் அடிமைகளிலொன்றை நாடினால்; "கலத்தை" லௌஹுல் மஹ்பூலில், எழுதும்படிக்குச்செய்து, அந்த லௌஹென்னும் பலகையை இந்த மலக்கினுடைய கண்ணுக்கிடையிலாக்கி, அவரதை யறிந்து, "மீக்காயீல்" எனு மலக்கினிட மேற்றிவைக்கு, அவரின் தொண்டூழியர்களினால் ஆலமடங்கலினும் உற்பத்தியாவனவற்றிற்கு "உயிர்" விட்டு அதனால்; "மஃதன்" ஆகிய கற்கூறு, புற்பூண்டு உயிர்ப்பிராணிகளாயுண்டாகின்றன.

இரண்டாவது.—அல்லாஹுத்தஆலாவின் "காஜின்" எனும் "வஹியில்" விசுவாசியானவர். அவ்"வஹியை" இறக்கிவைக்கின்ற "சப்தத்" தொனியால் மயங்குதலுண்டுபட்ட மலக்குகளடங்கலுக்கும், "ஹக்கை" வெளிப்படுத்திவைப்பதினால் அம்மலக்குகள், ஹக்கைக்கொண்டு சுபசோபனங்கூறுந் தகுதியையுடைய "றூஹுல் அமீன்" றூஹுல் குதுஸு நாமூஸுல் அக்பர் "தாஊஸுல் மலாயிக்கத்து" என்ற திருநாமங்களைத் தரிக்கப் பெற்றவரும், வலுப்பமுள்ள கோபமுடையவரும், மலக்குகளில் மிக்க வரிசையுந் தத்துவமும் பொருந்தியவருமாகிய ஜிப்றயீல் எனுமலக்கு அவரின் தொண்டூழியவர்கள், கோபமுடைய தத்துவத்தையும், தீங்கு [illegible]வினைகளையும், தட்டிக்கொள்ளுதற்கு கார்மானத்தையுமுண்டாக்குகின்றவர்களாயிருக்கும்.

மூன்றாவது:—சரீரங்களுக்கு 'ரிஸ்கையும், நப்ஸுகளுக்கு 'மஃரிபாவென்ற, ஹிக்மத்தையுஞ் சாட்டுதல் செய்பவர் பண்டைகோலத்தின் வலுப்பத்திற்கு, அவரின் சமீபத்தில் அனைத்தும் அணுபோலாகிவிட

வும், அவரின் 'ஒளியில்' கல்குகளியாவுங் கரிந்துபோய் விடவுங்கூடிய தகுதியையுமுடைய (மீக்காயீல்) எனும் மலக்கு அவரின் தொண்டூழியவர்கள் ஆலமடங்கலிலும், நகர்தல் 'உசும்புதல்' என்னும் தத்துவத்தைச் செய்பவர்களாயிருக்கும்.

நான்காவது:—ஸ்தூலத்தைவிட்டும் (உயிர்) ஆவியைப்பிரித்து உசும்புதலை யொடுக்குந்தகுதியுடையவர். லௌஹை முன்னோக்குந் திறமையுடையவர். கல்குகளடங்கலும் அவர் கண்ணுக்குமுன்னால் தோற்றும் நோக்கமுடையவர். கல்குகளின் ரிஸ்கு முடிவாகுமுன்னர் றூஹை, கைப்பற்றாத, நேர்மையுடையவர். அவரின் "அஸலிய்யத்தாகிய" ரூபத்தைக் காண்பதற்கு இச்சித்து, வேண்டிக்கொண்டிருந்த சுலைமான் "நபி அவர்கட்கு, அவர்களின் கட்டில்காலுக்குக் கீழ் மறைந்திருந்து, திடீரெனத் தன் சுயசுரூபத்துடன் வெளிப்பட்டவுடன்" சுலைமான் நபி "அவர்கள் மயங்கி பிரமித்ததை. அல்லாஹுத்தஆலா" இடத்தி லறிவித்ததற்கு அவனின் கட்டளையின்பேரில், அவர், தன் கரத்தைநபி அவர்களின் மார்பில் வைத்தபின்னர் தெளிவுற்று, தைரியமுண்டாகி, அவரின் வதுப்பமான, ஸ்தூலத்தைத் தெரிந்து, நேசம்வைக்கப்பட்டவருமான, தௌஹீது உடையவர்களின் "றூஹை" வலதுகரத்தாலும், காபிர்களின் "றூஹை" அக்காபிர்களுக்கு, அமளியை வருத்துமாகிய, கொடூர ரூபமணிந்தவராய் இடதுகரத்தாலுங்கைப்பற்றுகிற இஸ்றாயீல் எனுமலக்கு,

"ஹிக்காயத்து"—வஹ்பு, றலியல்லாஹு அன்ஹு விளக்கஞ் செய்தார்கள். வம்பர்களினின்று மொருவனின் "றூஹை" மலக்குல் மவுத்து, கைப்பற்றிய பின்னர், நீர். றூஹை "கைப்பற்றியவர்களில் மிக்க, இரக்கம் வைத்ததுயார்பேரிலாயிருக்குமென்று" மலக்குகள் கேட்டதற்கு, மலக்குல் மவுத்து சொன்னதாவது; ஒரு வனாந்திரமான காட்டிலுள்ள ஓர் பெண்ணின் "றூஹைக் கைப்பற்றுதற்கு ஏவல் வந்தபொழுது நான் அங்கு சென்ற சமயத்தில் அவள் பிரசவமாயிருந்ததால், அவளுக்காகவும், அவளின் "சிசு" அக்காட்டில் தனித்திருக்குமாறு நேர்ந்ததற்காகவும் நான் இரக்கமானேன் என்றார், அதற்கு மலக்குகள், தற்பொழுது நீர், கைப்பற்றிவந்த "வம்புடைய" றூஹு "அப்பாலகனின்" றூஹா "யிருக்குமென்று சொன்னவுடன்" மலக்குல் மவுத்து "தன்னடிமைகளி லுன்கிருபையுடைய ஒருநாயகனை நான் துய்தாக்கி வைக்கின்றேனென்றார், என்று. "மவுத்தின் அடையாளங்களிற்

த்" இரண்டாம்பாகம் இரண்டாவது பாபில் வரும் "இன்ஷா அல்லா ஹுத்தஆலா.

—(*)—

நான்காவது பகல்.

மலக்குகளிற் சில வகுப்பாரை விபரித்தல்.

—()—

அல்லாஹுத்தஆலாவை யன்றிமற்ற எவ்வஸ்துக்களின் பார்வை யிழந்து" றஹ்மானின், றுபூபிய்யத்தாகிய ஜலாலத்தில் "தஸ்பீஹில் முழுகினவர்களாகிய கர்றூபிய்யூன்" என்ற மலக்குகள், கண்ணின் இமைமூடி முழிக்குமந்த நேரமாவது மாறுசெய்யாமல் ஆதநபி அவர்களையும் இபுலீசல்லனையு மறியாத மலக்குகளுண்டுமென்று ஹதீதுகள் வந்திருக்கின்றன, இன்னும் ஏழுவானங்களிலும் பற்பல ரூபங்களால் மட்டிடுதற்கியலா வண்ணமாய் மலக்குகளைச் சிருஷ்டித்தும், ஏழுவானத்திற்கு மேலாயுள்ள திரையில் படைக்கப்பட்ட மலக்குகளுமிருந்திருப்பதால் அவர்களிற் சிலரைச் சிலரறியாமற் பற்பல பாஷைகளால் தஸ்பீஹு செய்கின்றவர்களாயிருக்கின்றார்கள்.

இன்னும் நம்முடைய, வலது இடது புறமிருந்து முறைவண்ணமாய் வந்து "அமல்களை, கணக்கெடுக்கும்" (கிறுமுல்காத்திபீன், என்ற இரண்டு மலக்குகள் இன்னுமிவர்கள்; நம்மின் மவுததுக்குப்பின், நம்முடைய, கபுறிலிருந்து "தஸ்பீஹு" செய்து, அதை நமக்காக கியாம நாள் வரையு மெழுதிக்கொண்டிருப்பவர்கள்.

இன்னும், நம்முடைய அமல்களையும், றூஹுகளையும், ஹக்குசுபுஹான ஹுவத்தஆலாவினிடமுயர்த்தி, பறக்கத்துகளைக்கொண்டிறங்கப்பட்ட (முஅக்கிபாத்து) என்ற மலக்குகளுமிருக்கின்றார்கள்.

இன்னும் நமது நபிகணாயகந் திருவுளம் பற்றினார்கள் உயிர் துறந்தபின் மையித்தை அடக்கஞ்செய்து விட்டுப்போகின்றவர்களின் காலடி. பின் சப்தத்தை அந்தக் கபுறுடையவன் கேட்டுக்கொண்டிருக்குந் தருணத்திலவனிடமிரண்டு மலக்குகள் விசயமாய் அவனை யுட்கார்ந்திருக்குமாறு செய்து முஹம்மது நபி அவர்களில் நீ யென்ன சொல்லுகிறாயென்று கேட்பார்கள் முமீனானவன் "அஷ்ஹது அன்னஹு அப்துல்லாஹி, வறசூலுஹு" என்று சொன்னவுடன் "நரகத்தில், உனக்குள்ள ஸ்தானத்தைச் சொர்க்கத்திற் பகரமாக்கியதைப்பார்; என்றவு

டன் அவன் நரகம், சுவர்க்கமிரண்டையும் பார்ப்பான் முனபிக்கு, காபிர்கள், அக்கேள்விக்கு, நானறியேன் மனிதர்கள் சொன்னதைச் சொன்னேன் என்றுளறுவான். அப்பொழுது, நீ, ஓதிப்படித்துணரவில்லையாவென்று கூறி "இரும்புத்தடியாலடிப்பார்கள். அவ்வசத்தமிடுவான் மனு, ஜின்னைத்தவிர மற்றையோர்கட்கு அத்தொனி, கேட்குமென்றார்கள் இவர்கள்" முன்கர். நக்கீர். என்ற மலக்குகள் கடுங்கோபமும் கனத்த சத்தமுமுடையவர்களாய் "கபுறில் விசயமாய்" அல்லாஹுத் தஆலாவையும் அவனது நபியையுங் கேட்பார்கள்.

ஐந்தாவது பசல்.

அல்லாஹுத் தஆலாவின் "திக்றை" தேடுகின்ற மலக்குகளை விபரித்தல்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளம்பற்றினார்கள். மனிதர்களின் அமல்களை எழுதுகின்ற மலக்குகளைத் தவிர பூலோகத்திற்குப் போகவும் வரவுமாயிருக்கின்ற மலக்குகள் ஸையாஹீன் என்ற நாமத்தையுடையவர்கள் அல்லாஹுத் தஆலாவுக்குண்டாயிருக்கின்றார்கள். அவர்கள் அல்லாஹுத் தஆலாவை "திக்று" செய்கின்ற கூட்டங்களைக் கண்ணுற்றவுடன், அவர்களிலொருவருக்கொருவர், நாங்கள் தேடித்திரிந்த, எங்களின் கூட்டத்திற்குப் போகுவோம் வாருங்களென்று அழைத்துக்கொண்டு திக்று செய்யும் அக்கூட்டத்தினிடத்து வந்து சேர்வார்கள், அவர்கள் முன் வானம்வரையிற் சூழ்ந்திருந்து, அக்கூட்டத்தார் பிரிந்தபின்னர் அல்லாஹுத் தஆலாவினிடத்து செல்கின்ற இம்மலக்குகளை நோக்கி மலக்குகளே! என்னுடைய அடியார்கள் என்னகருமம் செய்தவளவில் விட்டுவிட்டு வந்தீர்கள் என்று அல்லாஹுத் தஆலா கேட்பான். அதற்கு அம்மலக்குகள் நின்னைப் புகழ்ந்து, தூய்தாக்கி வைத்தவர்களாக விட்டுவந்தோமென்று சொன்னவுடன், அல்லாஹுத் தஆலா, அவர்களென்னைப் பார்த்தார்களோவென்று கேட்பான். மலக்குகள் பார்க்கவில்லையென்று சொல்லுவார்கள். அவர்களென்னைப்பார்த்தால் எவ்விதமாவார்களென்று கேட்பான். இதினுங் கடிசாக திக்றில் மூழ்கிவிடுவார்களென்பார்கள். எதைவிட்டுங் கார்மானந் தேடினார்களென்று கேட்பான். நரகத்தைவிட்டு

மென்பார்கள். அந்த நரகத்தைக் கண்ணுற்றார்களோவெனக் கேட்பான். இல்லையென்று சொல்வார்கள். கண்டாலெவ்வண்ணமெனக் கேட்பான். இதினுங் கடிசாக வெருண்டு கார்மானந் தேடுவார்களென்பார்கள். என்னிடமெதைத் தேடினார்களெனக் கேட்பான். சுவர்க்கத்தைத் தேடினார்களென்று சொல்லுவார்கள். அதைக் கண்டார்களோவென்று கேட்பான். இல்லையென்று சொல்லுவார்கள். கண்டாலெவ்விதமெனக் கேட்பான். இதினுங்கடிசான அபேட்சையுடன் தேடுவார்களென்று சொல்லுவார்கள். உங்களனைவோர்களையும் ஷாஹிதாக்கிவைக்கின்றேன். திட்டமாக அவர்களின் குற்றமடங்கலையு மன்னித்துக்கொண்டேன் என்பான். அப்பொழுது அவர்களில், திக்று செய்யாதவர்களிருக்கின்றார்களே யென்று சொல்வார்கள். அவர்களை யடுத்திருந்தவர்கள் மூதேவி யாகமாட்டார்களென்று அல்லாஹுத் தஆலா திருவுளமாவான் என்று.

ஆறுவது பசல்.

ஹாறூத்து மாறூத் தென்ற மலக்குகளை விபரித்தல்.

இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு "ரிவாயத்துச் செய்தார்கள்"—ஆதமலைஹிஸ்ஸலாமவர்கள், தன் உடை, களைந்தவர்களாக" சுவர்க்கம் விட்டுப் பிரிந்த பின்னர், மலக்குகளின் கூட்டத்தில், நடக்குகிறவர்களாயிருந்த தன் எஜமானின் அறுதிமானத்தை முறித்ததின் பேரில் இவரை வற்புறுத்தினார்கள். எந்நாயனின் மலக்குகளே! என்னை வற்புறுத்தாமல் என்பேரி லிரக்கம் வையுங்கள். என்னில்நடந்தது, என் நாயனின் கற்பனையாகிவிட்டதென்று ஆதமலைஹிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள். அவரை வற்புறுத்தினவர்களி லுள்ளவர்கள் தான் (ஹாறூத்து மாறூத்) தென்ற இரண்டு மலக்குகளும். ஆதலால்; அவர்களிருவரும், மாறு செய்து, வானத்தளவில் ஏறுவதைவிட்டும் விலக்கப்படும் வரையில் அல்லாஹுத்தஆலாவால் சோதிக்கப்பட்டார்கள்.

இதுரீஸ்:—அலைகிஸ்ஸலாமுடைய காலத்தில் அவ்விருவரு முலகத்தில் வந்து நடந்தவைகளைக் கூறி, றஹ்மான்பொறுத்துக்கொள்ளுதற்கு "துஆ" கேட்க ஏவி, "துஆ"கேட்டதில்; அவ்விருவர்களுக்கும் வேதனை முடிவாயிருப்பதையறிந்த பின் அவ்விருவரையும் (பாபல்) கலமென்ற

பூமியளவி லிழுக்கப்பட்டு துனியா ஆகிறம் இரண்டு "அதாபில்" ஒன்றைத் தெரிந்துக்கொள்ளுதற்கு ஏவினதில், துனியாவுடைய "அதாபைத்" தெரிந்துக்கொண்டதால் கியாமநாள் வரையில் "பாபல்" பூமியின் கிணற்றில், தலைகீழாய், சங்கிலியாற், கொழுகி, அதாபு, செய்யப்படுகிறார்கள்.

இபுனு உமறு றலியல்லாஹு அன்ஹுமா நபிகளுயத்தைத்தொட்டும் "ரிவாயத்து" செய்தார்கள் துனியாவையுடையவர்கள் மீது, மலக்குகளுதயமாகி அல்லாஹுத்தஆலாவுக்கு மாறுசெய்கிறதாய்க்கண்டு, எங்களின் ஆண்டவனே! உன்னுடைய "அலமத்து" வலுப்பத்தை இக்கூட்டங்கள்; நன்றிபறிகிறதை எந்த வஸ்து, சுருக்கமாக்கி வைத்துவிட்டது; என்று கேட்டதற்கு; அல்லாஹுத்தஆலா திருவுளமானான். அவர்களின் துடைநடையாதிபவைகளில் நீங்களாகிவிட்டால் நீங்களுமெனக்கு மாறுசெய்வீர்களென்று சொன்னதற்கு நாங்களெப்பொழுதும் வணக்கத்தின் பேரில் தரிப்பட்டிருப்போம் என்று; மறுமொழி கொடுத்ததாலே அம்மலக்குகளிலிருவரைத் தெரிந்தெடுக்கும் மாறுத்திரவுசெய்தான். அவர்கள் (ஹாறூத்து மாறூத்து) என்ற இருவரைத் தெரிந்தெடுத்தார்கள். பின்பு அவ்விருவர்களையு மிப்பூமிமண்டலத்திலிறக்கி, ஆதமுடைய மக்களைப்போல், இச்சைகளை அவர்களிற் சேர்ப்பிக்கப்பட்டு பாவத்தில் விஷயமாகும் வரையிற் காக்கப்படாமல், பின்பு; துனியா; ஆகிறத்தின் (அதாபு)க்கிடையயிற் பொருத்தங் கேட்டதில்; அவர்களிலாலோசித்து, ஒருவருக்கொருவர் சொன்னார்கள்; துனியாவின், அதாபுக்கு முடிவுண்டும்; ஆகிறத்தின், அதாபுக்குமுடிவின்றிஊழி ஊழிகாலந் தரிபாடாகுமென்றதால்; துனியாவின், அதாபைத் தெரிந்துக்கொண்டார்கள். இவர்களைத் தான் "அல்லாஹுத்தஆலா" திருவுளமானான் ஒன்றுவது, ஜுஸ்உ, பனிரண்டாவது, றுகூவில் (வமா உன்ஸில அலல் மலக்கைனி) என்ற (ஆயத்து) எஃனீ.—பாபல்பூமியிலுள்ள "ஹாறூத்து, மாறூத்து" என்ற இரண்டு மலக்குகளிலும் இறக்கிவைக்கப்பட்டதையுமென்று.

இன்னும், "கஃபுறலியல்லாஹு அன்ஹு" சொன்னார்கள்.—அவர்களிருவரு மிப்பூமியிலிறங்கிய நாள் நிரப்பமாகுமுன்னர், ஹறுமாக்கப்பட்டதைச் செய்துவிட்டார்களென்று. ஆகையால்; உண்டாவனவை யடங்கலின் ஹாலுகளிலியாதொன்றுமில்லை; அவைகளைக்கொண்டு மலக்குகளைச் சாட்டுதல் செய்வதன்று. "வல்லாஹு முவப்பிக்கு"

மூன்றும்பாடமுற்றிற்று.

நான்காம் பாபு,

ஈமான் இஸ்லாம், தவுஹீது, ஆகிய அமலிய்யத்தான இல்முகளைக் கூறுதல்.

——(*)——

ஒன்றுவது பசுல்.

ஈமானின் ஹக்கீகத்தை விபரித்தல்.

——(:0:)——

"அபூஹனீபா:—றஹிமஹுல்லாஹுத்தஆலா" அவர்களிடமும், "இல்முல்கலாமை"யுடையவர்களிடமும், ஈமானென்கிறது "கல்பினாலுண்மையாக்கித் தரிப்படுத்தலும், நாவினால் விண்ணப்பஞ் செய்தலுமாயிருக்கும். அஃதாவது:— அல்லாஹுத்தஆலாவின், வஹ்தானியத்துஎனும்ஓர்மை அவன் சிபாத்துஎனும், வருணிப்புகள், அவன் புறத்திலிருந்து வந்த வேதம், றசூல், மலக்கு இன்னமு மிவைகளல்லாதனவைகளைக்கொண்டு, ஓர்மை விண்ணப்பஞ் செய்து தரிப்படுத்துவதா யிருக்கும் ஆகையால்; அந்நாதாக்களிடத்து, ஈமானின் ஹக்கீகத்தென்னும், றுக்னுகளிரண்டாயிருக்கும். ஷாபிஈ, றலியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் சூபியாக்களிடமும் மேற்சுட்டிய இரண்டு "றுக்னுகளுடன் றுக்னுகளைக் கொண்டு; அமல்'செய்வதும்; ஆகமூன்றாயிருக்கும், இவ்விருசொற்படி உறுதியாகின்ற "ஈமான்" "மத்பூஃ" மக்பூல், மக்கூம், மறுதூத், மவ்கூப், "எனும்ஐந்து வகைகளாயிருக்கும்".

முதலாவது:—மலக்குகளின்; ஈமான். இரண்டாவது:—நபிமார்களின்; ஈமான். மூன்றாவது:—மூமீன்களின்; ஈமான். நான்காவது:—பித் அத்துடையவர்களின்; ஈமான். ஐந்தாவது:—முனாபிக்கின்களின்; ஈமான்.

——:(:):——

இரண்டாவது பசுல்:

ஈமானின் பங்குகளை விபரித்தல்

——:(0):——

ஈமான்கொண்டவர்களின்; ஈமான் (தஹ்க்கீக்கி, தக்லீதீ, இஸ்தித்லாலீ) என்ற மூன்று பங்காயிருக்கும்.

ஈமான் தஹ்க்கீக்கியாவது:—அல்லாஹுத்தஆலாவுடைய 'வஹ்தானிய்யத்திலும், அவன் 'அஹ்திய்யத்து, மார்க்கத்தில் ஈமான்கொள்

வதற்குக் கடமையாயிருப்பதிலும், உண்மைபடுத்துவதில், அவன் கல்பு கொளுகிக்கொள்வதாயிருக்கும். எவ்வாறெனில்; அவன் கல்பு கொளுகியதில், ஓர் ஆலிம், அவன் கொளுகுதலுக்கு மாற்றஞ்செய்வதாலே கல்பில், எவ்விதமான பேதகம், சந்தேகம், இடையூறுமுதல் வனக்குறிப்புகளையும் அவன் கண்டுக்கொள்ளமாட்டானே, அத்தகைய சாதனையான கொளுகுதலாயிருக்கும். அது உண்டாகுவது "உபூதிய்யத்தாகிய" வடிவில், றுபூபிய்யத்தாகிய 'நூறு' வெளியானவிடத்திற்றான்.

ஈமான் தக்லீதி:—யாவது; அல்லாஹுத் தஆலாவுடைய "வஹ்தானிய்யத்தைக்கொண்டும், ஈமான்கொள்கின்ற விஷயத்தில், விதியானவையடங்கலையுங் கொண்டு அவனிடம் அத்தாட்சியாகிய ஆதாரவுகளன்றி, அவன் ஊரிலுள்ள 'உலமாக்களின் சொல்லைக்கொண்டு விண்ணப்பஞ் செய்வதாயும், அவன் மாதாபிதாக்களைத் தொடர்ந்தவனையும் 'இஃத்திகாது' நிண்ணயங் கொள்வதாயிருக்கும்.

மிகுத்த வேளைகளில், இந்த 'ஈமானை' ஊன்றுதல், பிடித்தல் கூடாது. இது, சந்தேகப்படுத்துபவரின் சந்தேகத்தின் சிக்குண்டு சறுகிவிடுமானதாலும், அற்பசந்தேகத்தினால் பேதகமாவதாலும் ஷைத்தானின் கலக்கமென்ற சூறாவளிக்காற்று வீசிய இடத்திலும் மவுத்தின், சக்றாத்து வருத்தத்தால் அறிவுகெட்டு பெலவீனமான வேளையிலும் அவன் கல்பைவிட்டும், அந்த ஈமானைக் கழட்டிவிடுவதைப் பயப்படப்படும். அவன் நாவில் அதனடையாளம் நடைபெறாது, முக்கியமதைக் காத்துக்கொள்ளற்கு தக்வா வேண்டுமாயிருக்கும். அவனந்த ஈமானைக் காத்துக்கொள்ளாவிடில் அதன் பயனும், பணரும், நிரப்பமாவதன்றி, குறித்த ஆபத்துகளேரிடும். ஒடுக்க முடிவாகும் வேளையிலுண்டாகுங் கெடுதிகளைவிட்டும் வலுப்பமாகிய, அல்லாஹுத் தஆலாவிடத்தில் கார்மானந் தேடுகின்றோம்.

ஈமான் இஸ்தித்லாலீ:—யாவது; செய்யப்பட்டுண்டானதால், செய்தவனையும்; அடையாளத்தால், அடையாளமிட்டவனையும்; திருஷ்டாந்தமென்னும் (தலீலால்) தேடுகின்றது. எங்ஙனமெனில்; அடையாளமிடுகுவதன்றி, அடையாளம் அக்லாலும் நக்லென்னுந் (தலீலாலும்) விலக்காயிருக்கும்|ஒட்டகை (விட்டை) ஒட்டகையின் மீதும்,பாதத்தின் அடி, நடையின் மீதும், அறிவிப்பதுபோல; வானமும், பூமியும், அதைச் செய்த, தகுதிவான் மீது, அறிவிப்பதுபோலேயாம் இதனால், (தலீல்)

தேடியவன் "அல்லாஹுத்தஆலாவின்; வஹ்தானிய்யத்தின் மீது, மார்க்கமாக்கப்பட்ட; நக்லிய்யத்தாகிய அத்தாட்சிகளில் கெட்டியானதும் பிசகற்றதுமான தலீலைத்தன் (நப்ஸில்) பெற்றுக்கொள்ளுவான். அவன்; ஹயாத்திலும், மவுத்திலும் அவனைவிட்டு மந்த ஈமானின் (இஃதிகாது) நீங்காமலிருக்கும் அவன் இஃதிக்காதுக்கு, இடையூறானவைகளவனில் ஈமானை நீக்கிவைப்பதற்குக் குறுக்கிட்டாலொழிய அந்நேரத்தில் மீளவுமவன்பேரிலும் பயப்படப்படும், ஆகையால் இடனாக; ஈமானாகிறது, விளக்குக்கொப்பாகவும், ஏவல் விலகல்களுக்குட்படுவது; அவ்விளக்கைப் பேணிக்காப்பதற்கு ஒப்பாகவுமிருக்கும். ஆனதால் "தன் (கல்பில்) ஈமான்" என்ற; விளக்கை யேற்றி, அவ்விளக்கை, ஏவல், விலகல் என்ற "சாத்தியத்தால், அலங்கரித்துக் கார்மானத்திலாக்கிக்கொண்டவனின் பயம்" ; அவ்விளக்கு நூர்ந்துபோவதில், அந்த விளக்கை ஏற்றி யதைக்கார்மானஞ் செய்துக்கொள்ளாதவனின் பயத்தைவிடச்சொற்பமாயிருக்கும்.

ஆகையால்; றசூல்மார்களை அனுப்பிவைத்ததில்; மேன்மையாகிய தேட்டமும், வேதங்களை இறக்கிவைத்ததில்; கிட்சையாகிய நாட்டமும்; தன் அடிமைகள், தங்கள் (கல்பு) என்னுங் கண்ணறடிக்குள். ஈமானென்னும் விளக்கையேற்றி அவர்களின் (கல்புடைய வொளிவால் ஆதாரமற்றலெனும்(பாத்திலை)விட்டும் ஆதாரமாகிய(ஹக்கைப்)பிரித்தறிந்து,பெரும்பாவமென்னுஞ் சுழல்காற்றையுங் குபிறென்னுங் கோடையிடியையும் விட்டு,மவுத்தளவினு மவர்கள் காத்துக்கொள்கிறதுமாயிருக்கும் நான்காவது ஜுஸுவு, இரண்டாவது- றுகூகில்;அல்லாஹுத் தஆலா திருவுளமாகியதுபோல (ஆயத்து) மஃனீ:—நீங்கள் இஸ்லாமானவர்களாகவே, யொழிய மவுத்தாக வேண்டாம், என்றும். பத்தாவது, ஜுஸுவு, பதினொன்றாவது றுகூகில். (ஆயத்து) எஃனீ:—தங்களின் வாய்களைக்கொண்டு அல்லாஹுத்தஆலாவின் "நூறை" அமர்த்திவிட நாடுகிறார்கள். அல்லாஹுத் ஆலா; தன் "நூறை" நிரப்பமாக்குவதைத் தவிர. விலக்குகிறான்; அதைக் காபிரீன்கள் பொருத்தங் கெட்டாலுஞ், சரிதான் என்று. அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றியதுபோல. ஆகையால் "இலாஹிய்யத்தாகிய" நூறை "தூர்த்து விடுவதை விட்டும்; றஹ்மானிடத்தில் கார்மானம் தேடுகின்றோம்".

—(:-:)—

மூன்றாவது பசுல்.

ஈமான் கொண்ட விஷயத்தில் மனுக்கள் நான்கு பங்காகுவனவற்றை விபரித்தல்.

——(::)——

திடனாக மனிதர்களடங்கலும், ஈமானுடைய பாபில் நான்கு பங்காயிருக்கும். அவர்களிற் சிலர் தங்களின் (கல்பு) இருதயங்களில் ஈமான் என்னும் விளக்கையேற்றி; ஏவல்விலகல், கட்குவழிபட்டு, அவ்விளக்கைப் பேணிக் கார்த்துக் கொண்டவர்களாய்த் தரிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் அவர்களிற் சிலர்; அவ்விளக்கையேற்றிப் பேணிக்கொள்ளற் கியலாதவர்களாகி விட்டார்கள்: அவர்களின் "ஹால்" வலுப்பமான சங்கடத்திலேயாயிருக்கும். இன்னும் அவர்களிற் சிலர் அவ்விளக்கையேற்றி "நார்த்துவிட்டு" "முறுதத்தாகி" மார்க்கத்தை விட்டுங்கடந்தவர்களாகிறார்கள். "நாஊது பில்லாஹி மின்ஹா".

இன்னும் அவர்களிற் சிலர்; அவ்விளக்கைவிட்டும், பிறக்கணித்து 'குபுற்' தன் சுபாவக்குணமென்னும் இருளில் தரிப்பட்டிருக்கின்றார்கள். ஷெய்த்தானவர்களைச்சூழ்ந்து, மேலிட்டுவிட்டான். ஆனதால்? சீமானை தங்கரீகப்படுத்திக்கொள்ளும் கபூல் ஒப்புக்கொள்ளலை இழந்திருப்பதாலே; பேறுகெட்டுப்போகின்ற 'மைதானில்' தட்டழிகிறவர்களாய்த் தரிபட்டிருக்கின்றார்கள். "மிஷ்காத்துல் கஸ்ஸாலிய்யி"

——:(:):——

நான்காவது பசுல்.

ஈமானின் ஷறுத்துகளை விபரித்தல்.

——:(*):——

நீ, அறிந்துக்கொள்:—ஈமானின் ஷறுத்தும், அது விதியாகுங் காரணமுமாகின்றது; "ஷெய்கு அபூமன்சூறுலமாத்துரீதி" அவர்களிடம் ஒருவனில்; விபரித்தறியும் 'அக்லென்னும்' அறிவுண்டாயிருக்கின்றதாம். புலூகு எனும் பருவத்தை எற்றிக்கொள்ளும் வயதுக்குச் சம்மந்தமில்லை.

'அஷ் அரிய்யாக்களிடம்' 'புலூகு' எனும் பருவவயதை யெற்றுவதுடன், விபரித்தறியும் அக்லுண்டாயிருப்பதுமாம்.

இமாமுல் அஃலம்; அபூஹனீபா றஹிமஹுமுல்லாஹுத் தஆலா அவர்கள் சொன்னார்கள். திடனாக அல்லாஹுத் தஆலாவையறியும்

'மஃரிபா' வாகிறது, விளக்கமுடைய சிறிய வயதுடையவன்பேரிலும் பறலு கடமையாயிருக்குமென்று இச்சொல்லின்பேரில் ஹனபீ உலமாக்களும் இறாக்குதேயத்து 'மஷாயிகுகளில், மிகுத்தவர்களுந் தரிபட்டிருக்கின்றார்கள். ஏனெனில், திடனாக பாலிகு ஆனவன்பேரில் 'ஈமானை' வாஜிபாக்குகின்றவை யெல்லாம் "அக்லை" நோட்டமிடுவது கொண்டாயிருக்கும். குறித்த சிறியவனில், அறிவைக் காண்கப்பட்டபொழுதே அவன்பேரில் "அல்லாஹுத் தஆலா"வை அறியும் மஃரிபா விதியாகி விட்டது. "பறாயிதுத்தியானீ அக்காயிது"

——:(o):——

ஐந்தாவது பசுல்.

தௌஹீது கலிமாவின், வரிசையை விபரித்தல்.

——:(:):——

"ஹதீதுகள்"— ஈமானில் அதிக வரிசையாகிறது, நீ, எங்கிருந்தாலுந் திடனாக "அல்லாஹுத்தஆலா' உன்னுடனிருக்கின்றானென்று, நீ யறிகிறதாயிருக்கும். என்று இன்னும் ஒருவன், அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு என்று சொன்னால்; அல்லாஹுத்தஆலா அவன்பேரில் நரகத்தை "ஹறாமாக்கிவைப்பான்" அதாவது அதனால், வேதனைசெய்யான் என்று.

இன்னும் எனக்கு முன்னுள்ள நபிமார்களும் நானுஞ்சொல்லி வந்ததில் மிகவரிசையுடையதாகிறது "ஷஹாதத்து அன்லா இலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவாயிருக்குமென்று.

இன்னும் மறுமைநாளில் "மீஸான்" எனுந் தராசினிடத்து, ஒருவனைக் கொணர்ந்து நிறுத்தி அவனுக்குரிய தொண்ணூற்றொன்பது கணக்குச்சீட்டுகளை, வெளிப்படுத்தப்படும் அச்சீட்டுகளிலொவ்வொன்றும். கண்ணாலளவிடுந் தூரத்து நீளங்கொண்டதாயிருக்கும் அச்சீட்டுகளிலவன் செய்த பாவதோஷங்களையேவரையப்பட்டிருக்கும் அச்சீட்டுக்களியாவையு மொருதட்டில், வைத்து, பின்பு அனுபோலே ஒருதுண்டுச்சீட்டு வெளியாக்கப்படும்;அதில் "ஷஹாதத்து அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வறசூலுஹு" எனுங் கலிமாவரையப்பட்டிருக்கும் அதை மற்றொரு தட்டிலும் வைத்தவுடனே அவன்பாவதோஷமடங்கியசீட்டடங்கலையுமிகைத்துப் பளுவாகிவிடும், "தன்பீஹுல்காபிலீன்" இன்னும் அல்லாஹுத்த

ஆலாவை யாதொருவஸ்துவைக்கொண்டும் இணைப்படுத்தாதவனாய் என் உம்மத்துகளினின்று மொருவன் மவுத்தாகிவிட்டானேயானா லவன் சுவர்க்கம் புகுதுவான். அவன் ஸினா, களவு, முதல்வனவைகள் செய்திருந்தாலுஞ் சரி என்று நபிகணாயகந் திருவருட் செய்திருக்கின்றார்கள். ஆகையாலிந்த ஹதீதில் பெரும்பாவமுடையவர்கள் மூமினாயிருக்கும் சுவர்க்கம் புகுதுவார்கள் எனுந் (தலீல்) உண்டு. இதுவே; சுன்னத்து ஜமா அத்துகளின் கொள்கை.

ஆறாவது பசுல்.

தஹிய்யத்துல் கல்பியின் ஆகமத்தை விபரித்தல்.

அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹுமா, அவர்களைத் தொட்டுஞ் சொல்லப்பட்டது திட்டமாக "தஹிய்யத்துல் கல்பீ" யாகிறவர் அறபிகளினின்றுங் காபறாகிய இராஜனாயிருந்தார். றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள், அவர் இஸ்லாமாவதையுகந் திருந்தார்கள். ஏனென்றால்; அவர் கைக்குங்கீழில் எழு நூறு பெயர்களுண்டாயிருந்தனர்கள், அவர்களனைவருமிவர் இஸ்லாமானதைக் கொண்டு இஸ்லாமானார்கள் ஆனதாலன்னவர் இஸ்லாமாகிய காரியானுபாகத்தைப் பற்றிக் கொஞ்சம் விளக்குவோமாக.

நபிகணாயகம் அவர்கள் 'தஹிய்யத்து' இஸ்லாமாவதை நாடிய போது பஜ்று தொழுது முடிந்தபின்னர் "அல்லாஹுத் தஆலா" வஹீ யறிவித்தான். முஹம்மதே! திட்டமாக, ஈமானென்னும் நூறு 'ஒளியை' தஹிய்யத்தின் கல்பில் புகட்டிவிட்டேன். தற்பொழுது அவர் உமதிடத்தில் வருவார் என்று அங்ஙனமே அவரும் வந்து 'மஸ்ஜிதில்' நுழைந்தபோது நபிகணாயகந் தங்களின் முதுகின்பேரிலிருந்த பரிவட்டம் உத்தரீயத்தை எடுத்துப் பூமியில் விரித்து அதிலவரை யுட்காரும்படிக்குச் சைக்கினை புரிந்தார்கள். இவ்வாறு நபிகணாயகஞ் செய்திட்ட அரிய சங்கையைக் கண்ணுற்று அழுதவராய்ச் சிறப்பாகிய அப்பரிவட்டத்தை இருகரத்தாலு மெடுத்துயர்த்தி முத்தியிட்டுக்கொண்டு "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுன்றசூலுல்லாஹி" என்னுந் திருக்கலிமாச் சொன்னபின்னர் அழுகையில் மிகுத்திட்டார். அப்பொழுது நபிகணாயகமவர்கள் 'தஹிய்யத்தே! யாதுகாரணம்பற்றி அழுகிறீரென்று

வினவியபொழுது "அல்லாஹுத் தஆலாவின் றசூலே! திட்டமாக நான் பெரும்பாவங்கள் செய்தவனா யிருக்கின்றேனாகையா லதற்குரிய தெண்டகுற்ற மியாதென்று உங்கள் றப்பிடங்கேளுங்கள். என் நபுசை வெட்டும்படிக்கு ஏவினால் அதை ஒப்புக்கொண்டு அவ்வாறு செய்கிறேன். என் பொருட்கள் சதக்கா ஈகை கொடுக்கும்படிக்கு ஏவினால் அவ்வாறு செய்கிறேன் என்றும் அழுதவாரகவே சொல்லினார். அங்ஙனம் நபிகணாயகம், நீர்செய்த பாவங்களியாதென்று உசாவியபொழுது நாயகமே! நான் அறபிய இராஜாக்களிலுள்ளவனாகையால்; எனக்கு பெண்பிள்ளைகளும் அவர்களுக்கு புருடர்களு முண்டாயிருப்பனவற்றை யான் வெட்கமடைந்து, எனக்குப் பிறந்த பெண்மக்களில் எழுபது பெயரை என் கையால் கொலைசெய்துவிட்டேனென்று சொன்னவுடன், நாயகம், கைசேதமானார்கள். அத்தருணமே ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்களிறங்கித்திருவாய்மலர்ந்தருளினார்கள்:—முஹம்மதே! தாங்கள் தஹிய்யத்துக்குத் தெரியப்படுத்துங்கள்; என் றப்பு சொல்கின்றான். என் ஷிறப்பு வல்லபத்தின்பேரில் சத்தியமாக "லாஇலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுன் றசூலுல்லாஹி" என்று நீர்சொல்லியபொழுதே உம்மில்; அறுபது வருடத்திலும் விஷயமான பாவதோஷங்களையும் பொறுத்துக்கொண்டேன். நின் பெண்மக்களை நீரே கொலைசெய்த விஷயத்தை நான் எவ்வண்ணம் பொறுக்காமலிருப்பேன், மேலும் அவர்கள் [illegible]னக்குடையவர்களா யிருக்கும்பொழுது:—என்று அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கின்றான். வணக்கத்தால் என்னை நினைத்துக்கொள்ளுங்கள். தவாபால் உங்களை நான் நினைத்துக்கொள்கிறேனென்று. அல்லாஹுத் தஆலா உங்களை நினைப்பது; அவனை நீங்கள் நினைப்பதைப் பார்க்கிலு மிகப் பாரதூரமானதாயிருக்கும். இன்னும் நீங்கள் தௌபாவினால் என்னை நினைத்தால், மன்னித்துக்கொள்கிறதளவில் நானுங்களை நினைப்பேன். துஆ கேட்கின்றதால் என்னை நினைத்தால்; ஜவாபு கொடுக்கின்றதளவில் நானுங்களை நினைப்பேன். இக்லாஸ் கலப்பறுதலான அமலால் என்னை யாதித்தால்; கலாஸு நிவர்த்தியால் நானுங்களை யாதிப்பேன். உங்களின் வீடுகளி லென்னைக் கருதினால், நான் உங்களின் மண்ணறையிற் கருதுவேன். ஒழிந்தவிடங்களிலென்னை நினைத்தால்; பலாய்களில் நானுங்களை நினைப்பேன். கல்வத்து சில்லாக்களில் என்னை நினைத்தால்; காடுகளில் நானுங்களை நினைப்பேன் என்று

சொன்னான், என முடித்தார்கள். இவ்வண்ணம் கஸ்ஸாலி இமாம் அவர்களுக்குரிய மிஸ்காத்தில் வருகின்றது.

——:():——

ஏழாவது பசல்.

கலிமாவின் பிரயோஜனத்தை விபரித்தல்.

——:(··):——

பக்கீஹு அபுல்லைது "அனஸிப்னு மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள்; நபிகணாயகமவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்தார்கள் "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்றசூலுல்லாஹி "எனும் கலிமாவாகிறது; சொர்க்கத்திற்கு முதலாயிருக்கும். மற்றொரு" ஹதீதின்படி "சுவர்க்கத்தின் திறவுகோலாயிருக்கும் வாய்ல்களைத் திறக்குந்திறவுகோலுக்கு" நாவு ஆவசியகமுமன்றி அது அதன் நாக்கினின்று முள்ளதாயிருக்கும்; பொய், புறம்பேசுதலாதிய விடயங்களை விட்டுந் துப்புரவாகிய "திக்றுடைய" நாவும். சதிமோசம், ஹசதுகுபாடம் முதல்வன விடயங்களை விட்டுந் துப்புரவாகிய, உள்ளச்சமுள்ள "கல்பும்," சந்தேகம், ஹறாமை விட்டுந் துப்புரவாகிய வயிறும், பாவம் மாறுசெய்தல் முதல்வனவைகளை விட்டுந் துப்புரமாகிய "கிதுமத்தும்," பணிவிடையைக் கொண்டு பாக்குபூண்ட உறுப்புகளும் "கலிமா"வென்னுந் திறவுகோலுக்கு நாவுகளாயிருக்கும். "தன்பீஹுல்காபிலீன்" (ஹதீது):—லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்றசூலுல்லாஹி" என்ற கலிமாவுக்குமுன், யாதொரு "அமலும் முந்தப்படாது. அது யாதொரு பாவதோஷத்தையும் விடப்படாது. அது யாதொருவன் அக்கலிமாவைக் கலப்பறுதலாகச் சொல்லுகிறதில்லை; அவனுக்கு "அறுஷிற்குச் செல்லும்வரை வானலோகத்தின்; வாயல்களைத்திறக்கப்படுமேயொழிய ஆனால்; அவன் பெரும்பாவத்தைத் தவிழ்த்துக் கொண்டவனாய் அக்கலிமாவைச்சொன்னவுடன் குறித்தவாயல்களைத் திறக்கப்படுமென்று ஜாமிஉல் சகீரில் வருகின்றது.

——:(:):——

எட்டாவது பசல்.

தௌஹீதை விபரித்தல்.

——:(··):——

நீயறிந்துக்கொள்:— தி—ணுக "தௌஹீதாகிறது" ஹக்கீகீ றஸ்மீ—என இருவகையாயிருக்கும் தௌஹீது றஸ்மீ என்பது; முனா

பிக்கு, பாஸிகுகளின், தௌஹீதைப்போலாகுமாகையால் இதைப் பாராட்டுதல் கூடாது. யாதொரு ஒப்புகைமையன்றி சிறப்புற்றது; தௌஹீது ஹக்கீக்கீ. அதாவது; தன் தாத்தின்பேரில்அல்லாஹுத்த ஆலா "தௌஹீதாயிருப்பதுமன்றி" அது மலக்குகளின், தௌஹீதும் இல்முடையவர்களின் தௌஹீதுமாயிருக்கும் ஆகையால் "இஸ்லாமின் கலிமாவைக்கொண்டு, தௌஹீது ஹக்கீக்கியை நாடப்பட்டால்; நிகர்" எனும் நிறையில் சம்பந்தப்படாது. அது ஒப்புகமைபற்றிருப்பதால் எவ்வித நிறையாலு மளவிடுவதற் கியலாது. இதுதான் அல்லாஹுத்த ஆலாவைத் தொட்டுமுள்ள சஹீஹான, ஹதீது. அதாவது; அல்லாஹுத்த ஆலா திருவுளமாயிருக்கின்றான். ஏழுவானமும்; என்னைத்தவிர மற்றைய பரிபாலனக்கர்த்தர்களையும் ஓர்தட்டில் வைத்து லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை ஓர்தட்டிலும் வைத்தால் "கலிமா" உடைய தட்டு பளுவாகுமென்று. அதனாலறியப்பட்டதாவது; கலிமா "நிறையாலளவிடப் படுவதை" ஹக்கீக்கத்தில் விலக்கப்படுவது ஒப்புகமை இழந்திருப்பதுவாம். 25-வது ஜுஸுவு 3-வது றுகூகில்(ஆயத்து) எஃனீ:—அவனைப்போலியாதொருவஸ்துவுமில்லை, என்று அல்லாஹுத்தஆலா திருவுளம்பற்றிருப்பதுபோல. ஒப்புகமை இழந்திருப்பதுதான், நிறையை விலக்குகிறது. நீயறிந்துக்கொள்:—அதுவாகிறது" தௌஹீதுடைய கலிமாவாயிருக்கும் தௌஹீதாகிறது; அதற்கியாதொன்று நிகரிடப்படாததாயிருக்கும். ஏனெனில்; அதற்கியாதவதொன்றும் நிகராகும் விஷயத்தில் அல்லாஹுத்த ஆலா ஒருவனாயிரான். இரண்டு அல்லது அதற்கதிமாயிருப்பான், ஆனால்; அவ்விடத்தில் அக்கலிமாவுக்கு நிகரானதும, ஒப்பானதுமேயொழிய, அதை நிறுக்கமாட்டாது. எனினும் அவ்விடத்திலதற் கொப்புகமையானவைகளில்லை. அதுதான் ஓர் விலக்கல்* "லா இலாஹ இல்லல்லாஹு எனும் கலிமாவை, மீஸான் நிறையிற் புகுத்தி வைப்பதை விலக்கப்பட்டதே" அந்த விலக்கலாயிருக்கும்.

——()——

ஒன்பதாவது பசல்.

தௌஹீதும், ஷிறுக்கும், ஒன்றுசேரா தென்பதை விவரித்தல்.

——:(*):——

கிடனைக.உலமாக்கள்; இஃதிக்காதுவைத்திருக்கின்றார்கள், உண்மையாக, தௌஹீதுக்கு, எதிரான ஷிறுக்காகின்றது; ஓரடிமையில் "தௌஹீது உண்டாயிருப்பதுடன்; ஷிறுக்கைக்கொண்டுஞ் சொல்லுண்டாக்குவது (சஹீஹா) ஞாயமாகாதென்று. அதற்குக் காரணம், கிடனைக, இன்ஸான்; ஒருவிதம் முஷ்ரிக்கு. அல்லது முவஹ்ஹிது. எனு மிரண்டிலொன்றாயிருப்பான். அவ்விதமானால், தௌஹீதை "ஷிறுக்கேயொழிய நிறையாக்காது. அது இரண்டும் ஒருமீஸானில் சேர்கப்படாததாகவிருக்கின்ற ஹாலில். இன்னும், நம்மிடத்தில் அது ஒரு மீஸானில் நிறையப்படாமற்போனது, அதை விளங்கி உறுதிகொள்பவருக்கு; அல்லாஹுத் தஆலாவைத் தொட்டும் சஹீஹாகிய "ஹதீது வந்திருப்பதற்காகவே. அந்த "ஹதீது:—வானம் பூமி அடங்கலும்மோர் தட்டிலும் லாஇலாஹ இல்லல்லாஹு "ஓர் தட்டிலும் நிறுத்தால் கலிமா முறுகிவிடுமென்ற (ஹதீது) முந்திவிட்டது. ஆகையால்; உள் விளங்கி அறியும் புத்திமான்களுக்கு இந்த சைக்கினையே போதும். என்னும் அவ்விரண்டிலும் பரிபாலனஞ் செய்பவர்களென்னைத்தவிர இல்லை யென்று அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கின்றான். ஆகையால், அவ்விரண்டிலும் "அல்லாஹ்" அல்லாத பரிபாலனஞ் செய்பவர் இல்லாததாக இருக்கின்ற ஹாலில்; ஆனதாலிச் சைக்கினையை விளங்கிக் கொள்ளவும்.

——(*)——

பத்தாவது பசுல்.

மீஸானில் "கலிமா" பளுவாகும் பயானை விவரித்தல்.

——(:*:)——

"ஷுக்கு" மென்னும்; ஷறஹையுடைய, உலமாக்களின் அடைவினந்த நாவில் அதாவது ஓர் மிதந்த சொல்லில் (என்னைத்தவிர) என்று அல்லாஹ் "சொல்லியதில் அவனல்லாததாகிறது, முஷ்ரிக்குகள் தடபித்திக்கொள்ளுகின்ற ஷிறுக்கென்று நாடுகிறார்கள். கல்குகளில் அவனுக்கு இணையுண்டாயிருக்குமானால், நிறையில் அவ்விணையை லாஇலாஹ இல்லல்லாஹு" தான் முறுகிவிடும். ஏனென்றால் கிடனைக "ஹாலுக்கனடங்களிலும் "லாஇலாஹ இல்லல்லாஹு" மிகவும் பெலமாயிருக்கின்றது. அதாவது இணை வைப்பவன்; தான் வைக்கும் இணையின் பாகத்தைப் பார்க்கினும், அல்லாஹுத் தஆலாவின் பாகத்தை மூர்க்கமாக்கிவைக்கின்றான். ஏனென்றால்; அல்லாஹுத் தஆலாவின் ஹக்கில், கிடனைக முஷ்ரிக்கீன்கள் சொன்னார்களென்று அல்லாஹுத் தஆலாவே; திருவுளமாயிருக்கின்றான். "ஆயத்தின் மஅனா" அர்த்தமாவது:—அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் எங்களை அவர்கள் முடுகுதலாக்கிவைப்பதற்காகவே யொழிய, அவர்களை நாங்கள் வணங்கவில்லை யென்று கூறத்து "ஜுமரில்" சொல்கிறான். 23-வது ஜுஸுவு 15-வது லைன். ஆயத்து ஆகையால் "தௌஹீதின் தட்டன்றி, 'உஜூது, உள்ளமை, எனுந்தட்டுயர்ந்துவிடுமானால் அதில் "லாஇலாஹ இல்லல்லாஹு" நுழைந்துவிடும். அதுவும்; வகுப்பமாகிய "தௌஹீதின்" தட்டு, நிறையில் நுழைந்ததாக இருக்கின்ற 'ஹாலில், அவ்விதமான தௌஹீதானது முஷ்ரிக்கீன்களின் தௌஹீதாயிருக்குமே அதை "லாஇலாஹ இல்லல்லாஹு" நிறுத்து அதற்கிது பளுவாகிடும். ஏனெனில்; அல்லாஹ் 'அல்லாதபரிபாலிப்பவன் அறவே இல்லையோ, அப்பொழுது அவனல்லாத்ததும் "பளுவாகா" மூக்கமாகமாட்டாதுதானே. இப்போது சொல்லிவந்ததின் திட்சை 'அல்லாஹ்தான்' அவ்விதமானால் 'பளு' மூர்க்கமாவதெங்கேயிருக்கின்றது. இரண்டு கட்டிஅ மவ்விடத்தில் ஒன்றேயொழிய இல்லை. நீ அறிந்துக்கொள், பட்டோலையையுடையவர்களின் தட்டம்:—"லாஇலாஹ இல்லல்லாஹு" எனுந் திருக்கலிமா வுண்டாயிருப்பதினின்முள்ள, ஓர் துண்டைக்கொண்டல்லாமல் அது பளுவாகமாட்டாது. அது எப்போற்கொற்ற "கலிமாவானால்; அதைச் சொல்லுமிடத்து மலக்குகளால் எழுதப்பட்டதே அதுதான் மொழிந்தலால் படைக்கப்பட்டு, எழுதப்பட்ட "லாஇலாஹ இல்லல்லாஹு" வாயிருக்கும். அவ்வாறு, படைக்கப்பட்டெழுதியதை, ஒவ்வொருவரின் மீஸானில் வைத்தால் 'தௌஹீதைக் கொண்டு மொழிந்தவர்களியாவரும் நரகம் புகுதார்கள். அதன் வரிசையை மவ்க்கிபு எனும் மகுஷற் முத்தவெளியையுடையவர்களுக் கறிவிக்க "அல்லாஹுத் தஆலா" நாடியதெல்லாம்; பட்டோலையுடையவர்களிற்றான், "வல்லாஹு அஃலம், பிஸ்ஸவாபு."

அக்கலிமாவைக்கொண்டு "தௌஹீது றஸ்மியை" நாடப்பட்டால் அதற்கு, இணை துணையாதியவைகளைக் காண்கப்படும், ஆகையால் "அக்கலிமாவை நிறைக்குச் சம்மந்தமாக்குவிக்கும், தொண்ணூற்றொன்பது பட்டோலையுடைய தட்டை, மலக்காலெழுதப்பட்ட ஒரு துண்டுக்கடுதமுள்ளதட்டு "பளுவு" மூர்க்கமாக்குவிக்குமென்ற "ஹதீதினால்" ஸைக்

கிளைசெய்யப்பட்டிருப்பது போல்' குறித்த சைக்கிளையால் விளங்கப்படுவது; ஷரீஅத்தென்னு நிறையில் அக்கலிமா'' நுளைந்ததற்குக்காரணமாகின்றது மாற்றம் இணைகளுண்டாயிருப்பனவாயிருக்கும். அதுவே, பட்டோலையிலெழுதப்பட்ட தீமைகள். அதை நிறுக்கப்படுவதினால் "மவக்கிபு" எனும் மகுஷற், முத்தவெளியையுடையவர்கள்; பட்டோலையுடையவர்களில் அக்கலிமாவின் வரிசையை அறிவதற்காகவேயாம்அவ்விதமாக நிறுக்கப்படுவது' முவஹ்ஹிதின் "களில்" அல்லாஹ் நாடியவர்களடங்கலும் நரகத்திற் புகுந்த, பின்னர் "மவுக்கிபில்" சொற்களாதிகளைத் தவிர மற்றவர்களில்லாமற் போனதின் பின்னால் நிறுக்கப்படும், ஏனென்றால்; யார்பேரில் நரகம், புகுதுவதை "அல்லாஹுத்தஆலா" கற்பனை செய்திருக்கின்றானோ அன்னவனுக்கு அவன் "தௌஹீதுத்துண்டுக்கடிதத்தை" மீஸானில் வைக்கப்படமாட்டாது நரகம் புகுதவேண்டிய முவஹ்ஹிதீன்கள் புகுந்தபின்னர்! "ஷபாஅத்தால்' அல்லது "இரபத்தால்" வெளிப்பிறப்படுவார்கள், ஏனென்றால், நரகக்கற்பனையையுடையவர்களுக்குரிய கலிமாத் துண்டுக்கடித்ததை நிறுத்தாலவர்கள் நரகம் புகுதமாட்டார்கள். அது அவன் கற்பினைக்கு மாற்றமாயிருக்கும். "பட்டோலையுடையவர் கட்கு' கலிமாவெனும் "தௌஹீதுத்' துண்டுக்கடிதத்தை வைத்து நிறுப்பது "இலாஹிய்யத்தாகிய றஹ்மானின், சொந்தமாயிருக்கும், அல்லாஹுத் தஆலா" தன் "றஹ்மத்தலவில்" தானடியவர்களைச் சொந்தப்படுத்திக்கொள்ளுவானென்று, திருவுளம் பற்றியிருப்பதுபோல்.

—:(o):—

பதினொன்றாம் பசுல்.

கலிமா "வின் அகமியம்," எனும் அந்தரங்கப் பொருளை விவரித்தல்.

—:(:):—

ஷெய்கு அபுல் காசிம், அவர்களருட்செய்திருக்கின்றார்கள்:— "கலிமா" என்ற சொல் (கலாம்) அதன் துவர்க்கம் "நபீ" அதாவது "இல்லை" என்ற அருத்தமுடையதாயிருந்தாலும் அவன் கருத்து;— இதுபாத்து அதாவது, இருக்கின்றது, என்பதாயிருக்கும். அதைத்திட்டப்படுத்துதலின், முடிவானது, நின்னைத்தவிரஎனக்குச் சோதரன் உபகாரி, இல்லையென்று சொல்கின்றவனின் சொல்லானது நீ எனக்குச் சோதரனும் உபகாரனுமிருக்குமென்று சொல்கின்றவனின்சொல்லைப் பார்க்கினும், திட்டமாயுறுதியானதாயிருக்கும். ஆகையால் யாதொருவன் "லாஇலாஹ" என்னுஞ் சொல்லால் "கல்குகளின்" ஐன் "அதாவது குறிப்பைத் தன் அறிவன்றி ஹுக்மால் நபீச்செய்தால், அதாவது, இல்லாமையாக்கினால்; திடனைக அறிவாலும் ஹுக்குமாலும் "ஹக்கைத்" தரிபடுத்திவிட்டான். இன்னும் "இல்லல்லாஹு" எனும் (கலாம்) வார்த்தையாகின்றது; நாமமடங்கலிலும் மொரு குறிப்பாகவே யொழியயில்லை. அதுவே "அல்லாஹு" வென்னும் பெயரிடப்பட்ட (முஸம்மா) அவன் வசமாயிருக்கும்; உயர்கிறது தாழ்கிறது, எனும் மீஸான் ஆகையால் "லாஇலாஹ" வெனும் வார்த்தையால்; தன்னை "நபீ" செய்தவன்; இல்லல்லாஹு எனும் வார்த்தையால் அவன் எஜமான் உண்டாயிருப்பதைத் தரிபடுத்திவிட்டான். ஆனதால் உன் குறிப்பை "இல்மு" அறிவென்னும் பார்வையால் பாராமல் "ஹுக்மால்" "நபீச்" செய்து; "ஹக்கை" இல்மாலும், ஹுக்மாலுந் தரிபடுத்திக்கொள். இன்னும் "இலாஹு" எனும் நாயனாகிறவன் "யாருக்கு' நாமமடங்கலுமுண்டாயிருக்கின்றனவோ "அவனாயிருக்கும்" அது ஒரு குறிப்பிற்கே யொழிய உண்டாயிருக்கவில்லை அது தாம்; அல்லாஹு என்ற நாமம் சொல்லப்பட்டதுவும், வானம் பூமியைப் பரிபாலனஞ் செய்யப்பட்டதுவுமாம். அவனைத்தகைமை யுடையவனாகில் அதன்வசத்தில், தாழ்த்துகிறது உயர்கிறதுமான "மீஸானின்" நிறை; தரிபட்டிருக்கின்றதே அவனாயிருக்கும். ஆகையால், இந்த "திக்றை" பற்றிப் பிடித்துக்கொள், இவ்வண்ணம், ஆகிறுஅபுவாபில் புத்தூஹாத்தின் வசிய்யத்தில் வருகின்றது.

பனிரண்டாவது பசுல்.

தௌஹீது கலிமாவை விபரித்தல்

—(*)—

லாஇலாஹ இல்லல்லாஹு "இன்னும்" லாஇலாஹ இல்லல்லாஹு இவ்விரண்டினின்று மொவ்வொன்றும் (புறுக்கான்வேதத்தில்) வந்திருப்பதாலவை "தௌஹீது, கலிமாவாயிருக்கும். "லா இலாஹ இல்லாறஹுமானு" தௌஹீது கலிமாவன்று ஆனாலதை, தௌஹீதாக்கிக்கொள்வதால், எற்றமுண்டாயிருந்தாலும் "அது தௌஹீது" என்று பிரபயல்மாகவில்லை.

நீ யறிந்துக்கொள்:—திடனாக "அல்லாஹுத்தஆலா" வாகிறவன் அடையவளைத்தலில் வைக்கமாட்டான். சகல வஸ்துக்களில் வரிசையானதாயும், பிரயோஜன காத்தாலடையவளைந்ததாயுமுள்ளதைத் தவிர ஏனென்றால்; அதற்கு மிகுத்த ("லித்து") இடையூறுகளேற்படும். ஆகையாலவ்விடத்தில் ஒவ்வொரு ("லித்து") இடையூறுகளுக்கோடாகுந்தத்துவ மவசியம் வேண்டும் அதுதான் "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுன் றசூலுல்லாஹி" என்ற "கலிமா" வாகவிருக்கும். இதுவே தாற்பரியமாக, இது "திக்று" களில் மிகுந்தவரிசையுடையதாக வெடுக்கப்பட்டது. திடனாக, இதனால் "திக்று" செய்வது "அல்லாஹுத்தஆலாவை அறிந்த" ஆரிபீன்களிடத்தில் "அல்லாஹு அல்லாஹு. அல்லாஹு" இன்னும், ஹூ—ஹூ— எனுங்கலிமாவினால் திக்றுசெய்வதைப் பார்க்கிலுமிகவரிசையுடையதாயிருக்கும் ஏனென்றால்; அதாகிறது; நபீ "இதுபார்த்து" இரண்டுக்கிடையிற் சேர்ந்ததாயும் (மஃரிபா) என்னும் "இல்மு" இவைகளதிகமாவதிற் பொதிந்ததாயுமிருக்கும். ஆகையால் அடையவளைத்தலிற் றரிபாடான இந்த "திக்றை" பற்றிப் பூண்டுகொள். இது பலமான "திக்றாயிருக்கும்" இதற்குப்பிரகாசிக்கும் ஒளியும் கூட்டுறவாக்கிவைக்கும் பதவியுமுண்டும். அதைக்கொண்டே துனியா; ஆகிறத்தின் இடேற்றமுமாம்.

அலிய்யு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்; நபிகணாயகமவர்களிடங் கேட்டதாயருட்செய்திருக்கின்றார்கள். "மலக்குகளின் நாயகர்; ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் திருவாய்மலர்ந்தருளினார்கள். லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுன் றசூலுல்லாஹி" எனுங் கலிமாவைப் பார்க்கிலும் வலுப்பமாகிய கலிமாவைக்கொண்டு நான்; பூமிமுகத்திலிறங்கவில்லை. அக்கலிமாவைக் கொண்டே வானம், பூமி, மலை, மரம், கரை, கடல் ஆகிய சராசரங்களுந் தரிபாடாயினவென்று.

நீ, அறிந்துக்கொள்:—அது"இக்லாஸுடைய"'கலிமாவாயும், இஸ்லாமுடைய 'கலிமாவாயும், வணக்கத்துடைய 'கலிமா' வாயும், 'தக்வா' வுடைய, கலிமாவாயும், நஜாத்துடைய 'கலிமா'வாயும், மேலாம்பரத்துடைய 'கலிமா'வாயுமிருக்கும். அதைமட்டும் மீஸானென்ற ஒரு தட்டிலும் வைக்கப்பட்டால் அவைகளியாவையும் பார்க்கிலுங் 'கலிமா' பளுவாயிடும். இன்னும் தௌஹீதாகிறது; நபிநாயகத்திற்கு "ரிஸாலத்தைக்கொண்டு "ஷஹாதத்து' 'சொல்லுவதன்றிப் பலன் கொடாது.

திடனாக; "லாஇலாஹ இல்லல்லாஹு"வென்று, எழுதினாலும், சொன்னாலும், அதையே போதுமாக்கிக்கொள்ளப்படும். எனினும்;" முஹம்மதுன் றசூலுல்லாஹி" எனுங் 'கலிமா' குறித்த 'ஷஹாதத்துக்' கலிமாவைச் சார்ந்திருப்பது வாஜிபு என்று பிரபல்யமாயிருப்பதாலே அத்துடன் இதை 'தக்யீ' திடப்படும். அதாவது; அத்துடனிதுவுஞ் சேர்ந்திருக்கின்றதாக நாடிக்கொள்ளல்வேண்டும், அவ்வண்ணம் நாடாதிருந்தால்; நம்முடைய 'தௌஹீது' எனுமிது, நஸாறாக்களின் 'தௌஹீதுக்' கொப்பாய்விடும். ஆகையால் குறித்த 'தௌஹீதுக் 'கலிமா' வாகிறதிற் சிலதைச் சொல்வதால் அடங்கலையு நாடிக்கொள்கின்ற 'சட்டம்' நிபந்தனைப்படிக்காயிருக்கும்.

அக்கலிமா, இரண்டு ஷஹாதத்துக்குங் குறிப்புள்ளதான அடையாளமாகவிருக்கும். ஆகையினாலேயே புத்திமான்கள் இரவுபகல் முற்றிலும் அக்கலிமாவைக்கொண்டு பாக்குடையவர்களாயிருக்கின்றார்கள். சிலர்களதற்கு 'தரீக்கா' வெனும்; வழிகளை யுண்டாக்கியிருக்கினுஞ்சரி. காலபட்டங்களிலும் 'திக்றில்' பாக்காருவ தவசியமாகும்.

நான்காவது பாபு முற்றிற்று.

ஐந்தாவது பாபு.

கலிமாவால் அமல்செய்யும் தரீக்காக்களில் முக்கியமானவைகளை விபரித்தல்.

ஒன்றாவது பசுல்.

நிரப்பமாகிய "முறுஷிது" வஸ்தாதுவுடைய அடையாளங்களை விபரித்தல்.

ஷெய்குஸ்ஸுஹறவர்திய்யு "தங்களின் வசியத்தில் அருட்செய்திருக்கின்றார்கள். அல்லாஹுத்தஆலா அந்நாதா அவர்களின் "ஸிர்றை" துய்தாக்கி வைப்பானாகவும்.

துற்குணங்களை விட்டு முன்னைப் பேணிக்காத்து (ஹக்கின்)பாதையளவில்; நேர்வழிகாட்டுகின்ற ஷெய்குக்குரிய ஷறுத்துகளாவன.

இருலோகத்திற்கும் நாயகரான நமது நபிகணாயகமவர்களளவில் "ஸில்ஸிலா" வாகிய முரீது வழியாற் றொடராய்த் தொடர்ந்தும் அகப்பாவையுமுடையஷெய்கை, தொடர்ந்தவராயும், ஆலிமாயும்துன்யாவின் பெருந்தன்மை, உகப்பு, இவைகளைவிட்டும் பிறக்கணித்தவராயும், ஊண், நித்திரை, பேச்சு இவைகள்சிறுத்து, தொழுகை, சதக்கா, நோன்பு இவைகள் மிகுத்து, சபூர், சுக்கூர், தவக்கல், எக்கீன், சகாவத்து, உள்ளதைப்போதுமாக்கிக்கொள்ளல், அமர்த்தி, தாட்சி, வெட்கம், விசுவாசம், உண்மையை நிறைவேற்றல், கனதிப்பாடு, ஒடுங்குதல், இவைகள் போன்ற நற்குணங்களினால் வர்ணிக்கப்பட்டவராயுமிருத்தல்வேண்டும். இத்தகையானவர், நபிகணாயகத்தின் அனந்தரக்காரர்களினின்று மோரனந்தரக்காரராயுந் தொடர்வதற் கிணக்கமானவராயுமிருக்கும் ஆனால் இத்தகுதியுடையவரைப் பெற்றுக்கொள்ளல் சிவந்தமாணிக்கத்திலும் அற்புதம். அங்ஙனம் பெற்றுக்கொண்டாலவரை விட்டும் பிரியாமல் உபகாரம், பொருளுதவி, தலைமைத்தனம், முதல்வனவகைகளா லவருக்கு நீ; தொண்டூழியனாகி அவரின் (கல்பு) நாட்டம்; வேலை, நடக்கையாதியவைகளைப்பேணிக்கொள், 11-வதுஜுஸுவு 4-வதுலைன். ஆயத்துஎஃனீ உண்மையாளர்களுடனாயிருந்துக்கொள்ளுங்கள். என்று; அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றியதிற்காகவும், "அல்லாஹுத் தஆலா" உடனே அல்லது, "அல்லாகுத் தஆலா" வினுடனிருக்கின்றவனுடனே நீயாகிக் கொள். அவ்வண்ணம் நீயாகியிருந்தால்? "அல்லாஹுத் தஆலா" அளவில் அவனுன்னைச் சேர்த்துவைப்பான், என்று. இன்னும் தன் கவுமுகளிலுள்ள "செய்கு" தன், உம்மத்திலுள்ள நபியைப் போலென்றும் "ஹதீது" வந்திருப்பதற்காகவும்; "ஷெய்கை" பேணிக்கொள்வாயாக.

* * *

இரண்டாவது பசுல்.

பறுலு வகையறுக்களால் "அமல்" செய்யும். ஒழுங்குகளை விபரித்தல்.

* * *

"தன்பீஹுன்" உணருறுத்தல்:—பறுலுகள்; நிரப்பமாகும் வாறு காரியானு போகத்தை நிறைவேற்றுதல் செய்து, பின்னர்- வாஜிபு, சுன்னத்து, முதல்வன "நபில்"களை நிறைவேற்றியதிற் பேணிவருவதில், முக்கியப்பிரமான மாவெடுத்து நடத்திவருவதா வசியமாயிருக்கும்.

மிகுத்தவர்கள் "பறுலு"களின் விடயத்திற் பொடுபோக்காயும் "நபில்" களில் தரிபட்டவர்களாயு மிருப்பது, தவறு. ஹிக்கமில் அத்தாயிய்யாவில், வருகின்றதாவது; நலவான (நபில்(க்களளவில் விரைந்து"பறுலு வாஜிபுகளின் (ஹக்கு) பாத்தியங்களைத் தரிபடுத்துவதைவிட்டும் நீங்கி அசட்டையாகுவது; கொடிய படுதடி "ஆசையைத் தொடர்ந்ததின் அறிகுறியாயிருக்கும் இதுவே மிகுந்தவர்களின் "ஹால்" செயல்களாகி யிருக்கின்றன. அதில்; அல்லாஹுத் தஆலா" கார்த்துக்கொண்டவா கனே யொழிய. இன்னும், மிகவாக, நபில்களைக் கைக்கொண்டும், ஒரு "பறுலை"யாவது; அவன் பிரமானத்துடன் நடத்திவரப்படாத வனைச மடையர்களை யறியவருகின்றன. நமது நபிகணாயகம் ஜீவித்திருந்தகாலமெல்லாம், "ஹுக்மு"களியாவுந் தங்களின் உம்மத்துகளிற் றரிபடுதற்காக, ஒவ்வொன்றையுந் தரிபாடாக்கிவந்தும் அவர்களுக்குப் பின்னா அதைக்கொண்டு சிலரல்லாது (அமல்) செய்யப்படவில்லை. எனினுமதற்கு மாற்றஞ் செய்யப்படுகின்றது. ஆதலால், இக்கெட்டபலாயைப்போட்டிடல் பல்லோர்கட்குமுரிய வுரியகடமையா யிருக்கும்.

* * *

மூன்றாவது பசுல்:

இன்ஸான் வந்தவரலாற்றை விபரித்தல்.

* * *

திடனாக "நீ, துனியாவுக்கு; பரதேசி, அல்லது; வழிப்பிரயாணியாக விருப்பதால்" நின் (நபுஸை) அடக்கஞ்செய்யப்பட்ட (கபுறு)டையவர் களின்றாமோ யெண்ணிக்கொள் "என்று நபிகணாயகந் திருவுளமா யிருக்கிறதாக், "ஹாக்கிமும்; அஹ்மதும், "உமறு றலியல்லாஹு அன்ஹு' அவர்கள், தங்களின் மகனாரைத் தொட்டு மருட்செய்திருக்கின்ற இந்த "ஹதீதினால், விளங்கப்படுகிறதாவது; "துனியாவிற்கு" மூமினானவர்கள் "வர்த்தகவியாபாரமுள்ள முசாபிறைப்போலாயிருக்கும் அவர்களெவ்வித வியாபாரிகளானால்; ஆஹானிப்பத்' தான (ஆலத்தை) விட்டு இந்த; துனியாவில் "அல்லாஹுத் தஆலாவை யறிந்துக்கொள்ளும் "இருபானிலும்" அவனை மருகுதலுள்ள துணையாக்கிக்கொள்வதிலும், அவனளவில் முடுகுதலாக்கிவைக்கும் (சபபு)காரமாதியவிடயங்களிலும், வியாபாரஞ் செய்வதற்கு வந்தவன் இன்னுமவனைவிட்டும் (மஃதிறு) வென்னும், சூரியனஸ்தமாவதும், நேர்வழியின் பாதையை விட்

டுந் தறிபட்டுப்போவதும், துய்தான பாகத்தளவிற் சேர்வதைவிட்டுந் தறிபட்டுப்போவதும், உண்டாகா திருப்பனவற்றிற்காக, இந்தத் (துனியா)வின் சித்திரங்கள் அலங்காரங்களளவிற்றிரும்பிப் பார்ப்பதை நாடான்; என்று. ஆகையாலிந்த "ஹதீதின்" அந்தரங்கத்தைத் தெளிவாய் விளங்கி யறிந்த "மூமின்" இந்தத் (துனியா)வில் பரதேசி, அல்லது (முசாபிறு) யாசகியைப்போல் ஜீவனித்து, விரைவில், தன் நாட்டத்தைப் பெற்றுக்கொண்டு வந்த வழியிற் செல்லுவான். மேலுமவன் "லாஹூத்தென்னும்" (ஆலத்தின்) பரதேசிகளினின்று முள்ள பரதேசியாயிருக்கின்ற "ஹாலில்" அவ்வண்ணஞ் செய்துக்கொள்ளாமலிருப்பதற்கென்ன முகாந்தரமிருக்கின்றதென்று "ஷெய்கு அக்பர் (நகல்) செய்தார்கள்; அல்லாஹுத் தஆலா அவர்களின் ஸிர்றைத் துய்தாக்கிவைப்பானாகவும்.

——:():——

நான்காவது பசல்.

சுலூக்கென்ற "இபாதத்தில்" முரீதின் விளக்கத்தை விபரித்தல்.

இன்ஸானில்; அல்லாஹுத் தஆலாவுடைய அரசாட்சியாகிய ஆராய்ச்சியை முன்னற் கூறுவாம்.

ஷெய்கு இமாமுல் முஹக்கிகு முகியித்தீன் அபூ அப்துல்லாஹி முஹம்மதிப்னு அலிய்யுல் அறபிய்யு, றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "இன்ஸானிய்யத்தான" மம்லக்கத்தில் "இலாஹிய்யத்தான" ஆராய்ச்சியை அருட்செய்திருக்கின்றார்கள் அதாவது:—அக்கலை, நன்கொடையாக்கி, அற்புதமாயுண்டாக்கி (நக்லென்னும்) வரம்பை நாட்டி, நேர்வழியாக்கிய அல்லாஹுத் தஆலாவுக்காயிருக்கும் புகழுடங்கலும். அவனுக்காயிருக்கும், இஹ்ஸான் எனும் வணக்கம் அவனில் நின்றுமாயிருக்கும் "தத்துவம்" அவனைத்தவிர வேறொரு நாயனுக்குமில்லை; வலுப்பமாகிய அறுஷையுடையவன். ஒரு "நபி"யினால் நேர்வழியென்னுங் கொடியை நிலைநிறுத்தி; தான் நாடியவர்களை, நேர்வழியிலும்; தான். நாடியவர்களை, வழிகேட்டிலுமாக்கிவைக்கும் "ஒளி"யால் அந்நபியை யனுப்பினான். அவர்பேரிலும், அப்புரவாகிய அவர்கிளைஞர்கள், அமலால் அவரைத் தொடர்ந்தவர்கள்பேரிலுங் "கியாம" பரியந்தம் சலவாத்தும் ஸலாமு முண்டாவனவாக.

சங்கையாகிய வலியே "மேலாம் பரமாகிய சிறப்பையுடையவனில் செல்வதிலும், சேர்வதிலும் அவனை விட்டும் பிரிந்திடுவதன்றி அவனின் (கல்குகள்) அளவில் மீளுகிறதிலும்; இவ்வகையான காரியத்தில், காத்துக்கொள்ளப்பட்டதெளிவெனும்" சபிய்யே! திடனாக, "உஜூது" எனும், உள்ளமையில் "அல்லாஹுத் தஆலா" அவன் சிபாத்தும், செயலுமன்றி, யாதொன்றுமின்று ஆகையால் சமுஸ்தமும் அவனாலவனினின்றும் அவனளவிலாயிருக்கும். அனு நேரமாவது இந்த ஆலத்தை விட்டு மவன் மறைந்தால் அட்சணமே, ஒரே விடுத்தத்தில் கோர்வை குலைந்து அழிந்து "பனாவாகிவிடும். ஆனதால் அவனின் (பக்கா) வெனும் தரிபாடாகிறது அதனளவில் அவனே நோட்டமிட்டு, அவனை பேணிக் காத்துக் கொள்கிறது கொண்டாயிருக்கும். ஆனால் அவனை எத்திக்கொள்வதுகள் பலவீனமாகி விடுகிற புறத்தால் தன் ஒளியால், தான் வெளியானது கடுசாகிவிட்டது. ஆனதாற்றான், அதற்கு(ஹிஜாபு) எஃனி, திரையென்பது பெயரிடப்பட்டது.

——:(:):——

ஐந்தாவது பசல்.

அல்லாஹுத்தஆலா அளவிற்செல்லும் "தரீக்காக்களின்" ஹக்கீகத்தும்; அதிற்றரிக்கும் "உக்கூபு" எனும் எழு தங்குமிடங்களையும் விபரித்தல்.

——:(··):——

ஷெய்கு முஹம்மதிப்னு அலிய்யுல் அறபிய்யு "றலியல்லாஹு அன்ஹு" அவர்கள் திருவருட்செய்திருக்கின்றார்கள். நான்; உனக்கு விளங்கப்படுத்துவதில், முதலாவது அல்லாஹுத்த ஆலா அளவில், சுலூக்கெனும் வணக்கவழியாற் சென்று, பின் அவன் முஷாஹிதாவில், அவன் சமீபத்திற்றரித்து, "உக்கூபா" கிய பின், அவனைவிட்டும் அவனின்செயல்கள் (ஹலுறத்து) சமுகமீண்டு அதில்; ஹலாக்காகும் விதங்களையும் விபரிக்கின்றனவாயிருக்கும்.

சகோதரனே நீ அறிந்துக்கொள்.—இப்பாதைகள் பலபிரிவுகளாயிருக்கின்றன. எனினும், ஹக்கின்பாதையொன்றாயிருக்குமதில் நடப்பவர்கள் பலராயிருக்கும். ஹக்கின் பாதையொன்றாயிருப்பதுடன், அதில் நடப்பவர்கள், "ஹால்களின் பேதகத்தாலும்" அதினுடைய "றாஹான்" பெலமாவதாலும், பெலவீனமாவதாலும் அப்பாதைகளின் வகைகளும்

பேதகமாகின்றன. "சுலூக்"குடையவர்களிற் சிலர்கட்கு இந்தவர்ணிப்புகளிற் சிலதுண்டாயிருப்பதால் அந்த "ரூஹானீ" சிறப்புடையதாயும், அதற்கு மற்ற இடையூறுகளேற்படாத்தவனாயுமாய் விடுகிறான். இப்பொழுது நமது பேரில், எனக்கு; வெளிப்படுத்தற்குக் குறிப்புள்ளவைகளில் முதன்மையானது, தங்குமிடங்களை விளக்குவதாயிருக்கும். அவைகள் மிகுதமாகிவிட்டாலுமவைகள் ஏழளவில் மீளும்.

தங்குமிடங்களாவன.

மவுத்தினான் "எனுந்தங்குமிடங்களில்; முதலாவது தானமாவது.—" 9-வது ஜுஸுவு 12-வது ஐன். ஆயத்து, எஃனீ நானுங்களின் நாயனல்லவா "எனுந்தானம். அதைவிட்டும் நாம் பிரிந்துவிட்டோம். இரண்டாவது; தாய்மார்களின் கெற்பக்குவளறை. மூன்றாவது, நாமிப்பொழுதிருக்குந் (துனியா). நான்காவது; சிறியபெரிய இரண்டும்; மவுத்துக்குப்பின் நாம் செல்கின்ற (பற்ஸகு) எனும் மண்ணறை. ஐந்தாவது (சாஹிறு) எனும் புவியிலெழும்பி (ஹாபிறு) எனும் ஸ்தலத்தளவிற் செல்கின்றதானம். ஆறாவது, சொற்கம், நாகம். ஏழாவது, ஹக்கின் பார்வையைத்தவிர, மற்றொரு சுகமு மேவே இல்லாத சுவர்க்கத்தின் வெளியிலுள்ள மேடை அதாவது "ஹதீதில் வந்திருப்பது போல் திடனாக அல்லாஹுத்த ஆலாவுக்கு ஒரு சுவர்க்கமுண்டும். அதில்யாதொரு சுகண்டியும் (ஹூறுல்ஈன்) எனும் சுகவாசிகளும், மாளிகைகளுமில்லை" அல்லாஹுத் தஆலா" வெளியாவதைத்தவிர. என்று. இன்னுமித்தங்குமிடங்களினின்றும், ஒவ்வொன்றிற்கும் பலஸ்தானங்களுண்டு. அவைமிகுத்திருப்பதாலதை நிறைவேற்றுவது; மனிதனின் தத்துவத்தினாலாகியாத வேரிருப்பிடத்திலமைந்த பல இருப்பிடங்களாயிருக்கும்.

நீ அறிந்துக்கொள்:—திடனாக மனிதர்களாகிறது அவர்களை "அல்லாஹுத்த ஆலா" இல்லாமையில் நின்றுமுண்டென்கிறத் தளவிற் சிருட்டித்து, வெளிப்படுத்தியதுமுதல், பிரயாணிகளாகவே நீங்காமலிருக்கின்றார்கள். அவர்கள் பிரயாணத்தைவிட்டுந் தரிபடுவதின்று. சுவர்க்கம், அல்லது நரகத்திலே ஒழிய. சுவர்க்கம், நரகம், ஒவ்வொன்றும் அதையுடையவர்களின் தரப்படிக்காயிருக்கும். இன்னுமிவைபோலுள்ளவிஷயங்கள், 1-வது பாபு-5-வது பசலில் முந்திவிட்டது.

* * *

ஆறாவது பசுல்.

சுட்டிய ஏழுதானங்களிலுஞ் செல்லுகின்றவனின் "ஹால்களை விபரித்தில்.

(*)

புத்திமான்களொவ்வொருவர்பேரிலும் விதியானதாவது; அவனறிந்துச்கொள்வதாயிருக்கும். இவ்வழிப்பிரயாணமாவது; கஷ்டம், நிருபாகத்தின் கிட்டுமை வருத்தம், பலாய், வலுப்பமான அமளி, சங்கடமாதியவைகளடையுகிறதின் பேரிலெடுக்கப்பட்டன. அதில் ஷஹவானிய்யத்தாகிய சுகம், கார்மானம் அல்லது இன்பமாதியவைகளறவேயுண்டாகாத ("மஹாலா")யிருக்கும், ஏனெனில்; தண்ணீர்களாவது,விகற்பமாகவிருப்பதால், இவ்வழிப்பிரயாணி ஒவ்வொரு ஆலத்திலும் தன்னிருப்பிடத்திற் கொளுகுவதுகொண்டு அதை இணக்கமாக்குவதில் தேள்வையானவன். ஒருவனின் ("ஹால்") இவ்விதமானல் அவனுக்குசுகண்டியை எங்ஙனம் விளங்கப்படும். இச்சொல்லை நாம் கொண்டு வந்த தெல்லாம் இந்த "முஷாஹிதா' வின் இன்ப சுகத்தை அதன், தானமன்றி விரைந்து தேடுபவனுக்குணவு வருத்துவதற்காகத்தான்; ஆகையாலதை அதன் தானத்தளவிற் பிற்படுத்தி வைப்பதுனக்கவசியமாம். அந்தத்தானமாகிறது அதில்; அமல் "இல்லாத கடைசிவீடு. திடனாக அவ்வீடாகிறது, உன்முஷாஹிதாவின் காலம். அல்லாஹுத்த ஆலா" இல்லாமல் சந்தித்துக்கொள்ளுவாயே, அவ்வித அமலுடையவனாக நீ அக்காலத்திலாயிருந்தாலது; உனக்கு ஏற்றமாகிவிடும், ஏனெனில்; நீ, தன் நாயனைத் தேடும், உன் றூஹானிய்யத்தில் அழகு வடிவான நற்கருமத்தினாலும், தன் சுவர்க்கத்தைத் தேடும் உன் சுபுஸானிய்யத்திலும் அழகுவடிவான நற்கருமத்தை யதிகப்படுத்திக்கொண்டதால் அந்த ஏற்றமுண்டாகும். திடனாக இந்த இன்ஸானிய்யத்தாகிய நுட்பம், நலவிடமாகிய, அதன்; இல்முடைய ரூபத்திலும்; இந்த ஸ்தூலம், அந்நலவிடமாகிய அதன் அமலின் ரூபத்திலெழுப்பப்படும். இதுபோலவே கடைசி மூச்சுவரையில் கணக்கிட்டு எழுப்பப்படும். (மவுத்தினுல் மஆரிஜு, இருத்திக்காவு)எஃனீ பதவியாற்படி யேறியுயர்கிற இந்தத் "தக்லீ," பெனும் வேதகட்டளைக்குரிய ஆலத்தைவிட்டும்; நீ பிரிந்தியானால், நீ, நட்டி விளைத்த வித்தின் கனியைக்கொய்துகொள்வாய் இதை; நீ விளங்கிக்கொண்டால்; நீயறிந்துக்கொள் உன் (கல்பு) நாட்டத்தில் அவனல்லாதவனுக்கு; றப்பானிய்

யத்தெனும்; நாயகத்தனத்தின் பாத்தியமுண்டாயிருக்கின்ற வேளையில் “ஹக்குத்த ஆலாவின் பணிவிடை கிதுமத்தும், அவனில், மருகுதலையும் நீ நாடினால், அது உனக்கு சஹீஹாய்” கைகூடாது. திடனாக எவனின் அதிகாரமுன்பேரில் “ஹுக்குமு” செய்கின்றதோ, நீ அவனுக்காயிருக்கும். இது சந்தேகமின்று.

ஏழாவது பசுல்.

கல்வத்து அவசியமென்பதை விபரித்தல்.

மனிதர்களைவிட்டு நீங்கிக்கொள்வதற்கும், கூட்டங்களைவிட்டுப்பிரிந்துக்கொள்வதற்கும் தனித்த ‘ஸ்தலம்’ கல்வத்தைத் தெரிந்துக்கொள்வதுனக் காவசியகமாகும். திடனாக; பயிரங்கத்திலும், அந்தரங்கத்திலும் ஹக்குத் தஆலாவுக்கு; நீ முடுகுவது கல்குகளுக்கு நீ, தூரப்படுகின்ற தரப்படியாயிருக்கும். ஆதலால் உன்பேரில் துவர்க்கமாய் கடமையாவது, உன் தக்குவா அதாவது; உன் வணக்கத்தை நிலைநிறுத்தாட்டுவாயே அத்தகைய ‘இல்மையும்’ முக்கியமாயுன்பேரில் கடமையான இல்மையும் தேடுவதாயிருக்கும். இதற்கு; நீ யதிகப்படுத்தாதே. இன்னும், சுலூக்குடைய ‘பாபில்’ முதன்மையாகிறது, அதனால் அமல் செய்வதும், பின்பு வரஃ. எஃனீ பேணுதல், பின்பு ஸுஜூது. எஃனீ வெறுக்குதல் பின்பு தவக்குல் எஃனீ பாஞ்சாட்டுதல் இந்தக் ‘தவக்குலுடைய’ ஹால்களினின்றும் முந்திய ஹாலில், நான்கு, கறாமத்துகள் உனக்குண்டாகும். அவைகள்தான்; தவக்குலுடைய முந்திய தறஜா பதவியில் உனக்கு தவக்குலுண்டான தின்பேரில் அறிகுறியாகும். அவைகளாவன:—பூமி சுருங்குதலும், தண்ணீரில் நடப்பதும், காற்றிற் செல்லுவதும், உண்டாகின்ற உஜுபு எனும் கவுனில் தின்னுவதுமாம். இவைகள்தான் இந்த பாபின் ஹக்கீகத்தான அந்தரங்கம் இதற்குப் பின்னால் மவுத்துவரையில் தநஜ்ஜுலாத்து எஃனீ—ஓரிடமிருந்து, மறுவிடம் விடுதிவிடல் கறாமாத்து அஹுவாலுகள் அற்புதமானக் கிரிகைகளாக நடைபெறல், மக்காமாத்து மேன்மையான பதவிகள் மறுத்தபாக்களாகிய வகைகளைப் பூண்டுக்கொள்ளுவாய். உன்னுடைய வஹுமு எனும் விளக்கத்தினதிகாரியினின்றும் உன் குவ்வத்து தத்துவமும், உன் மக்தூராகிய தரிபடுதல் இன்னவிடத்தி லிருக்கின்றனவென்று நீயறியும் வரையில், உன் கல்வத்தில் நுழையாதே. உன் ‘வஹுமு’ உன்பேரில், ஹுக்மு செய்தால்; அல்லாஹுத் தஆலாவை அறிந்து விபரிக்கின்ற ஷெய்குடைய கையிற் செல்கின்றதைத்தவிர கல்வத்தில்செல்லுகிறதற்குப் பாதையில்லை. உன் வஹுமு எனும் அறிவு உன்பேரில் ஹுக்முசெய்யாமல் உன் அதிகார சுல்தானுக்குத் தாழாலே யாகிவிட்டால் மற்றையவைகளைப் பாராட்டாமல்; கல்வத்தை எடுத்துக்கொள்.

எட்டாவது பசுல்.

ரியாலத்து எனும் நடைபழக்கத்தை விபரித்தல்.

‘கல்வத்துக்கு முன் ‘ரியாலத்து’ எனும் நடைபழக்க முனக்காவசியகமாம். குணங்களை யுசுப்பி நோவினைகளைப் பொருந்திக்கொள்ளுதற்கு ‘ரியாலத்து’ எனப்பெயர். திடனாக எந்தமனிதனுக்கும் இந்த ரியாலத்துக்குமுன், ஜெயமுந்திவிட்டால் அது அற்புதமெனத் தீர்மானமேயொழிய, எப்பொழுது மவனிலுண்டாவது முறையல்ல. ஆகையால் மனிதர்களைக் கலந்துறவாடியிருப்பதைப் பயந்துகொள். திடனாக மனிதர்களைவிட்டு நீங்கியிருப்பதின் கருத்தாவது; அவர்களையு மவர்கள், நிருபாகத்தையும் விட்டொழிவதற்காகவேயன்றி அவர்களின் ரூபத்தை விடுவதற்கன்று. ஆனதால் அவர்களினின்று மியாதொருவஸ்துவு முன் கல்பில் உண்டாகாதிருக்கின்றதுவே நாட்டம். ஏனெனில்; திடனாக ஒருவன், மனிதர்களைவிட்டு நீங்கி, தன்மட்டில் தனித்து, தன் கல்பை விட்டு, கல்குகளின் வாசலை அடைக்கவில்லையானால் அவனவர்களைவிட்டும் நீங்கினவனன்று.

ஒன்பதாவது பசுல்.

கல்வத்தில், நுழைந்துவிட்டவன் ஹால்களை விபரித்தல்.

உன் வீட்டின் வாசலை யடைக்கப்பட்டதானால், உன் கல்பின்வாசலை யடைத்துக்கொண்டு ‘திக்று’டைய வகைகளில் எதைக்கொண்டாவது உன் காலிக்குடைய ‘திக்றில்’ பராக்காகுவாய். அத்திக்றுகளில் மேன்மையுடையதாவது அல்லாஹ், அல்லாஹ், அல்லாஹ் என்ற உன் சொல்

லாயிருக்கும். இதைப்பார்க்கினு மியாதொன்றையும், நீ அதிகமாக்குதலை விட்டொழிவாய். பிக்று எனும் ஆலோசனையைவிட் டுன்னைப் பாக்கு பூட்டுகிற கெட்ட ஆசாட்டங்கள் குறுக்கிடுவதைவிட்டும், பேணிக்கொள்வாய். இன்னும் உன் வஜீபனத்திலும் பேணிக்கொள்வாய். அது நெய் சத்துள்ளதாயிருப்பதில் பேணுதலில் தெண்டிப்பெடுத்துக் கொள்ளுவாய். அதில்; அது உயிருடையதல்லாததாக விருக்கவேண்டுமிதுதாம் அழகு. மேலும் வயிறு நிரம்புகிறதையும் கடப்பான பசியையும் பயந்துகொள். தன், சுபாவத்தின் சரீரநிலைமை, நீதி, நிலையுள்ள நோத்தில் இந்த 'தரீக்கா'வெனும் வழியைப்பற்றி பூண்டுக்கொள். வாட்சி அதிகப்பட்டால்; பல ஆசாட்டங்களை வருத்தும்.

——:*:——

பத்தாவது பசுல்.

'கல்வத்து' எனும் முஷாஹிதாவில், மலக்கு அல்லது ஷைத்தானால் தோற்றமாகும் (வாரீதாத்து) என்ற ஞானோதயங்களைப் பகுத்தறிதலைவிபரித்தல்.

——:——

'மலக்கு' அளவிற் சேர்ந்த வாரீதாத்து உதயமாகிவந்த, அற்புத காட்சிகட்கும், ஷைத்தான் அளவிற் சேர்ந்த வாரீதாத்துக்குமிடையே வேற்றுமையாகின்றவைகளாவன:—'வாரீதாத்து'கள் முடிவாகும்நேரம் உன் நப்சில் பெற்றுக்கொள்கின்றாயே, அதைக்கொண்டு பிரித்தறிந்துக் கொள். அது மலக்குடையதாயிருக்குமானால்; அதற்குப்பின்; குளிரும் இன்பமும்பிரசன்னமாகும், நொன்பலத்தைக்காண்கமாட்டாய். உனக்கு, கோலமும் பேதகமாகமாட்டாது.உன்க்கு பரிசுத்தமாகிய இல்மும்வெளியாகும். அது; ஷைத்தானுடையதாயிருந்தால், அதற்குப்பின் உறுப்புகளில் காந்தல், நொன்பலம், வருத்தம், கெடுதியான பிக்று யோசனையால் தட்டழியுமானவைகளுண்டாகும். ஆகையால் ஊன்கல்பைவிட்டும் அந்தத் தோற்றமாகிய வாரீதாத்தை அல்லாஹுத் தஆலா பிரித்து, அவனின் 'றஹ்மத்து' தெரிசனையாகும் வரையில் திக்று செய்தவனை நீங்காமலாயிருந்துக்கொள். அதுதான் தேடப்பட்டது. இதை இலேசாகக்கருதி, என்ன இது என்று நீ சொல்வதைப் பயந்துக்கொள்.

——:(o):——

பதினொன்றாவது பசுல்.

கல்வத்திற் புகுதுவதற்காவசியக அதபுகளை விபரித்தல்.

——(:(o):)——

உன் கல்வத்தென்னும் "சில்லாவில்" நீ புகுதும்போது திடனாக அல்லாஹுத்த ஆலாவைத் தவிர யாதொன்றுமில்லை யென்ற நின் தீர்மானம் முடிவாயிருக்கவேண்டும். உன் கல்வத்தில் உனக்கு முன் வெளிவந்த கோலமடங்கலும் நான்தான். அல்லாஹு என்றுனக்கறிவிக்கும். உடனே சுபுஹானல்லாஹி எஃனீ அல்லல்லாஹுத் தஆலாவைத், துய்தாக்குகிறேன் என்று நீ சொல் (திக்றை) விட்டும் பாக்கொழியாமலிரு. இதுதான் (அக்து வாஹிது) என்ற முதன்மையான முடிவு.

இரண்டாவது (அக்தாகிறது) உன் கல்வத்திலவனில் நின்றும் அவனைத்தவிர நீயாதொன்றையுந் தேடாமலும் (ஹிம்மத்து) எஃனீ:—நாட்டத்தை அவனல்லாத்ததளவிற்கொண்டு கொளுகாமலுமிருப்பாய். இந்த (கௌன் எனு முண்டாகிய இடத்தில் உண்டானவைகளடங்கலும், உனக்கிடையிற், குறுக்கிட்டாலும், அதில் நீ, தரிபடாமல், அவனை "அதபுடன்" பிடித்துக்கொள். அதாவது; அவனைத்தேடுகிறதில், மிக்க சாக்காதையாயிருந்துகொள். திடனாக, அவனுன்னைச் சோதிப்பான். எவ்வேளையிலாவது, நீ, யாதுமொருவஸ்துவுடனே, தரிபட்டால் அவனுனக்குத் தவறிப்போவான். நீ அவனை "ஹாஸிலாக்கிக் கொண்டாயானால் சகலவஸ்துவு முனக்கு; ஹாஸிலாகும்" இதை நீ விளங்கி கொண்டால்; இடைநடுவிலுன்பேரில் எதுவுமொருவகையான வஸ்துகளைக் குறுக்கிட்டு வைப்பதோடு "அல்லாஹுத் தஆலா" உன்னைச் சோதிப்பான்.

——(*)——

பனிரண்டாவது பசுல்

வெளியாகும் கஷ்புகளை விபரித்தல்.

——(:o:)——(:o:)——

இந்த தரீக்காவின்படிக்கு, நீ அமல் செய்துக்கொண்டுவருகையில் உன்பேரில் ஜெயம், திறபிடியாகுவதில்; முதன்மையாவது; இப்பொழுதுனக்குச் சொல்லப்போகின்றனே அதுவாயிருக்கும். அதாவது:— உன்னைவிட்டும், மறைந்த (ஆலமுல்ஹிஸ்ஸு) எஃனீ, காணப்பட்ட ஆலம்

வெளியாகின்றதாயிருக்கும். ஆகையால், கல்குகள், தங்கடங்களிருப்பிடங்களிலே செய்கின்ற செயல்களைவிட்டும் மறைக்கக்கூடிய இருள், சுவர், தடுப்பு ஆதியவைகளுனக்குத் திரையாகித்தடுக்கப்படமாட்டாது. ஆனாலவைகளை, அல்லாஹுத்த ஆலா உனக்கு வெளியாக்கிவைத்தால் அவர்களுடைய (சிர்று) இரகசியத்தையும், நீ அதை வெளிப்படுத்தாமற் பேணிக்கொள்வதின்பேரில் (வாஜிபு) அதாவது இவன்; ஸினாச் செய்கிறவன், இவன் கள்குடிக்கிறவன் என்று வெளிப்படுத்தலாயிருக்கும். அப்படியானால், திடனாக உன்னில் ஷெய்த்தானுழைந்து விடுவான். (உத்தாறு) எஃனீ:—ஐபுகளைமறைத்துக்கொள்கிறவனென்ற நாமத்தைத் தரிபடுத்திக்கொள். மேலுமந்த மனிதன் உன்னிடம் வந்தால் மறைவாக அவனை அதை விட்டும் விலக்கி வஸீயத்துச் செய்; நீ சக்திபெற்றமட்டும். இந்த கஷ்பை மறைத்துக்கொண்டு (திக்றில்) பாக்கொழியாதிரு.

பதிமூன்றாவது பசுல்.

வெளிப்பார்வையால் அல்லது உதிப்பினால்வெளியாகின்ற இரண்டு கஷ்புக்குமிடையில் வேற்றுமையை விபரித்தல்.

“ஹிஸ்ஸிய்யத்து” எனும் வெளிப்பார்வையால் நிலைபெற்ற (கஷ்பு) கியாலிய்யத்தெனும் உதிப்பினால் நிலைபெற்ற கஷ்பு இவ்விரண்டுக்கும், மத்திபத்திலுணர்ச்சிதரும் வேற்றுமையை விபரிக்கப்படுகின்றது. அதாவது; உன் “கஷ்பில்” ஒருநல் தூலத்தின் வடிவு அல்லது,கல்குகளின் கிரிகையினின்றுமோர் கிரிகையைக் காணப்படுமேல், தன் கண்ணை மூடிக்கொள். அப்பொழுதும் அந்த“கஷ்பு”தரிபாடாயிருந்தால்;அஃது கியாலி ஊசாட்டம் அல்லது,உதிப்பினுள்ளது. உன்னைவிட்டு மறைந்துவிட்டால், அதுதான் மேற்சுட்டிய“இதுறாக்கத்து”எனுந் “தோற்றமென்ற”கஷ்பு.

நீ அந்த கஷ்பில் நின்றும் அவனைப் பார்த்த விடத்திற் கொளுகிக் கொள்வாயே அவ்விதமான இதுறாக்கத்து பின்பு; அதைவிட்டுந் திரும்பி “திக்றில்” “பராக்காகுவாயானால்” ஹிஸ்ஸிய்யத்தாகிய கஷ்பை விட்டும் கியாலிய்யத்தாகிய கஷ்பளவிற்றிரும்பிவிடுவாய் அப்பொழுது ஹிஸ்ஸிய்யத்தாகிய வடிவில் அஹதிய்யத்தாகிய மஅனாக்கள்;அதாவது;—புத்தியினாலறியக்கூடிய அருபிகள் உன்பேரிலிறங்கும் நீ அறிந்துகொள்.

அதை; நபி” அன்றேல்; சித்தீக்கீன்களில் அல்லாஹுத் தஆலா நாடியவர்களன்றி யாருமறியார்கள். ஆனதாலதைவிட்டு நீ பராக்கொழிவாய் உனக்குக் குடிப்புகளைக்கொண்டு வரப்பட்டதானால், தண்ணீர் அல்லது பாலைக்குடித்துக்கொள். கள்ளை பயந்துகொள். கியாலிய்யத்தாகிய ஆலம், உன்னைவிட்டு நீங்கி “மாதா” எனும்அஸ்லைவிட்டுந் தனித்தமஅனவிய்யி எனும் அருபியாகிய ஆலமுனக்கு வெளியாகும் வரையில் திக்றில்பராக்காக இரு.

பதினான்காவது பசுல்

முஷாஹிதா “வின், சொக்குதலும், படைக்கப்பட்ட”தின் மம்லக்கத்தை வெளிப்படுத்தி, சோதிக்குதலும் விபரித்தல்.

மேற்சுட்டியவைகளுனக்கு வெளியாகி “அவன் திக்றை” விட்டு முன்னைத் தேவையற்றிருக்கச்செய்ததானால் அதுவே (“முஷாஹிதா”) என்ற “காட்சி” அல்லது (“நவுமத்து”) என்ற சிற்றுறக்கம். இவ்விரண்டிற்கு மத்திபத்தில் விபரிக்கும் “வஸீலா” வர்கின்றது; இ[illegible]பந்தரிப்பதாயிருக்கும் (மம்லக்கத்து) எனும்பாத்திபமான பதவிகளைக்கொண்டுன்னைச் சோதிப்பதின் வழியால் வெளியாகுவதிற்றேற்றப்படுங்காட்சிகளை விபரிக்கப்படும், பின்பு:—“மம்லக்கத்து” எனும், உயர்ந்ததாகிய பதவிகளையுன்பேரிற் சோதனை நடைபெறுதற்பொருட்டு, திடனாக “அல்லாஹுத் தஆலா” எடுத்துக்காட்டுவான். அத்தருணத்தில் தாவர்ககமாய் (“மஃதனிய்யா”) வாகிய கற்களின் இரகசியங்கள் வெளியாகி அதில் ஒவ்வொரு கல்லின், நலமிடரும் வெளியாகும். அதினின்று நீ இன்புறுவாயானால் அதை இழக்கப்பட்டுவெருட்டப்படும்.பின்பு“அதன்”(“ஹிபுலு”) எஃனீ—யாபுகத்தையுன்னைவிட்டு முரியம்படும். நீ நஷ்டமடைவாய்.அவ்வாசையை விட்டு நீ தேவையற்று (“திக்றில்”) பராக்கன்றி மேற்சுட்டிய பாகத்தைவிட்டு மொதுங்கிக்கொள்வாயானால்; அந்த (“நமத்து”) வகையை யுன்னைவிட்டு விலக்கப்பட்டு; புற்பூண்டு (“நமாதாத்து”) களையுனக்குத் தோற்றவாக்கப்பட்டு அவ்வொவ்வொன்றுந் தன்னிலமைந்திருக்கின்ற நலமிடரைக்கொண்டுன்னை யமைக்கும் அத்துடனுன்(“ஹுக்முகள்” தீர்மானம் முன்ஹுக்முகளைப் போலாயிருக்கும் (“இதுறாக்

காத்து’) என்ற தோற்றாவுகளில்; முந்தியதின் இடத்தில் உன் வஜீபனம்; சூடும் சீதளமும் “மிகுத்ததாக விருக்கவேண்டும்” அத்துடன் நீ, தரிபடாவிட்டால், உனக்குயிர்ப்பிராணிகளைத் தோற்தாவாக்கப்பட்டு, அவைகளுன்பேரில் “சலாம்சொல்லித் தன்னிலமைந்திருக்கின்ற நலமிடரை யறிவித்தல்செய்யும். ஒவ்வொரு ஆலங்களின் அதனதன்” தஸ்பீஹு “தம்ஜீஹு”களையுமுனக்கறிவித்தல் செய்யும் அவ்விடத்தில் ஒரு (“நுக்தா”) எஃனீ—நுணுக்கமுண்டு. அஃதாவது திக்றில் “நின்றும், நீ, எந்த” திக்றை “க்கொண்டு பாக்காக்கப்பட்டிருக்கின்றுயோ” அதில்; நீ நோட்டமிடு கின்றதாயிருக்கும். நீ பாக்காகவிருக்கின்ற “திக்று” கொண்டே மேற் சுட்டிய ஆலமடங்கலும் பாக்காக விருப்பதாய்க் காண்கப்படுவாயானால்; உன்னுடைய “கஷ்பு” கியாலிய்யா யிருக்கும். அது (“ஹக்கீக்கீ”) யல்ல எஃனீ—உண்மையானதல்ல, அவைகளியாவும் இவ்வுள்ளமையில் உனக்குத்தரிபடாக்கப்பட்ட “ஹாலுகளாயிருக்கும்” அதே ஆலத்தில், அதுகளின் திக்றுகள் பலவகைகளாகிய (தநவ்வுஆத்து) தரிசனையானால், அது தான் “சஹீஹான” கஷ்பு, பின்னர்; உயிருள்ளவைகளில் “சபயிய்த்”தாகிய “ஹயாத்து” ஊறும் அதாவது உயிர் (நடக்கும்ஆலம்சரியானுல் ஹயாத்து) எனும் ஆலம் வெளியாகும், அதாவது—தாத்தியபத்தாகிய ஸ்தூலங்களின், தரத்துக்குத்தக்கப்படி, ஒவ்வொரு சரீரங்களிலுங்குணைகுணங்களில் நின்றுந் தொடுக்கப்பட்டிருப்பவைகளையும், மேற்குறித்த “சரியான் என்ற” ஊறுதலில் (இபாதாத்து) வணக்கங்களில் அவ்வண்ணமாய் நுழைகின்ற தென்பதையுமுனக்கு வெளியாக்கப்படும், இத்துடன் நீ தரிபடாவிட்டால்பிரகாசித்துத்தோற்றாவாகின்ற வொளிகளை யுனக்கு வெளியாக்கப்பட்டு பயங்காட்டக்கப்பட்டவைகளைக்கொண் டுன்னை யழைக்கப்பட்டு, „ஹாலுகள் உன்பேரில்பலவகைகளாகி யுனக்கு விடுதிவிடுங்கோலங்களை அதிற்பார்க்கப்படுமே; அவ்வகையான (“தௌலாபு”) எனுஞ்சுற்றுத் திரையையும். திண்ணமானது, நுட்பமாகும் விதமும், நுட்பமானது, திண்ணமாகும் விதமுமிவைகளல்லாதனவைகளுமுனக்கு முன், நிலை; நிறுத்தப்படும் அத்துடன் நீ தரிபடாவிட்டால்;கங்கிகள் பாந்து அதைவிட்டுமறைத்துக்கொள்வதைத்தேடப்படுமாகிய ஒளியை யினக்கு வெளியாக்கப்படும்,அச்சமயம் நீ பயங்காமின்றி (‘,திக்றின்’) பேரில், நேமமாய், நிலைபெற்றுக்கொள். உனக்கு ஆபத்துகள் முடுகா, அத்துடன் நீ தரிபடாவிட்டால்;பிரகாச முதயமாகு மொளிவுகழும், அடையவனைந்தசேர்மானங்களின் உருவங்களும், உனக்கு தோற்றாவாக்கப்படும், இன்னும், லாகிறுபாத்தினில் விகற்பமான விதங்களிலும்; யாருமதையறியார்களே’ அவ்விதக் கமால் எனு நிரப்பத்தில் நேமமாய்த்தரித்திருக்கின்ற’ ஒழுங்குகளையும் நீ பார்த்துக்கொள்வாய் எனுல் வெளியாயிருக்கின்ற நிதானத்தால் குறைவாயிருப்பவையாவும் (பாத்தின்) மறைவாயிருக்கின்ற நிதானத்தால். அதற்கு மாற்றமான இட்டோட்டமாக விருக்கும்” இட்டோட்டாகிய (தாத்து) உருவமொன்றுதான் அவ்விடத்திற்குறைத்தலில்லை இன்னும் :“அல்லாஹுத்த ஆலா” வில் நின்றுமுள்ள “இலாஹிய்யத்தான ’இல்முகளையும் தங்கரீகமெனும், கைப்பொருள் “எவ்வஸ்துக்களையு,, மெடுத்துக்கொள்ளுமொழுங்குகள், கொண்ட; கபுலு, பஸ்து, வகையறுக்களில் மேற்கூறிய “இலாஹிய்யத்தான,, இல்முகளைச் சந்திப்பவனுயிருப்பதில் ஆவசியகமானவைகளையும் நீ சந்தித்துக் கற்றுக்கொள்கிற பாங்குகளையும்; இன்னுங்கரித்து விடுமாகிய (ஹலாக்கை) விட்டு; “கல்புகள் பேணிக்கார்க்கப்படும் விதங்களையும் நீ பார்த்துக்கொள்வாய்.

———:*:———

பதினைந்தாவது பசுல்.

தரீக்காக்கள் ஒன்ருக இருப்பதுவும் அதில் பிரசன்னமாகுங் காட்சிகளும் விபரித்தல்.

திடனுக ‘தரீக்காக்கள்’ எனும் வழிகள் ஒரேவட்டமாயிருக்கும். அவ்விடத்தில் தவறுதலுள்ள வழிகளில்லை. அதைக் கித்தாபில் விபரித்தலுக்கு இணக்கமில்லாதனவாகிய் மேற்சுட்டியவைகளில் அல்லாத்தவைகளையும் அந்த தவுலாபு எனுஞ் சுற்றுத்திரையிற் பார்த்துக்கொள்வாய். குறித்தவைகளுடன், நீ தரிபடாவிட்டால் நலுறு எனும், நோட்டமிடும்; இல்முகளின் மறுத்தபாக்களும் ‘சாலிமா’கிய ஆலோசனைகளும், விளக்கங்களினிடையில் வருகின்ற தவறுகளின் கோலங்களும், “இல்மெனும்,, அறிவு: வஹ்மென்னும், ஊசாட்டம் இவ்விரண்டிற்கிடையிலுள்ள வேற்றுமையும்; ஆலம் அறுவாஹ், ஆலம் ‘அஜீசாம், இவ்விரண்டிற்கிடையிலுண்டாகியவைகளின் உற்பவத்தியும், அதன் காரணமும், “ஆலம்கிநாயா” அதாவது; உபகாரத்துடைய ஆலத்தில், இலாஹிய்யத்தாகிய சிர்றின், சரியானும் அதாவது, அந்தரங்கமூர்ந்து நடைபெறுவதாம். இன்னும், ‘முஜாஹிதா’ இன்னுமதல்லாத்தவைகளைத்தொட்டு

முண்டாக்கிக்கொள்கிறதை விட்டவர்களின் காரணமும், விரித்து கூற நீளமாகக்கூடிய அவையல்லாத்தவைகளுமுனக்கு .வெளியாக்கப்படும். இவைகளுடன் நீ தரிபடாவிட்டால், சுரூபம் அழகாகிய வடிவமாக்கும்; ஆலமும், துய்தாக்கப்பட்ட சுரூபங்களினின்றுஞ் சொல்லுவதில் விஷயமாகியிருப்பது ஆவசியகமானதும், கோலம் கோர்வையால் வளருகின்ற, நபுசுகளும், மேற்சுட்டியவைகளால் வருணிக்கப்பட்டவர்களிலே 'றஹ்மத்து' என்ற அமலைவிட்டு, உறுப்புகள்; சோர்வுதலாகின்றவைகளின் 'சரியான்' எனுமூர்தலும் உனக்கு வெளியாக்கிவைக்கப்படும். இதைச் சமுகத்தில் அறிவால் விளங்கிய ஷாஅறுக்களுக்கும், இதற்குமுன்னுள்ளனவற்றில், எதிர்மொழியாக்கிக்கொண்ட 'குத்பாக்'களுக்கு முபாரகமுண்டு. இத்துடன் நீ தரிப்படாவிட்டால், குத்துபிய்யத்தாகிய பதவிகளையும், இதற்குமுன், நீ முஷாஹிதா செய்ததிலாகிய பதவிகளையுந் தோற்றவாக்கப்படும். அதுவாகிறது; 'ஆலம் எஸாரில்' நின்றுமுள்ளதாயிருக்கும். இந்தத் தானமானதுதான் கல்பு இந்த ஆலமுனக்கு வெளியாகிவிட்டால் முன்அக்கிஸாகும் அதாவது ஒரு கோலத்தினின்று மற்றொரு கோலத்திற் புரண்டுவரும் மாற்றங்களையும் நேமமானதின் நேமத்தையும் ஊழ்பதியாகுவதுத் தரிப்பட்டிருப்பதையும், உண்டாக்கப்பட்டவைகளின் ஒழுங்குகளையும், அதன் உள்ளமை பூர்த்து நடப்பதையுமுனக்கு வெளியாக்கப்படும். இன்னும், இலாஹிய்யத்தாகிய 'ஹுக்மு' அதைப் பேணுந்தத்துவம் அதையுரியவர்களளவில் அதை எற்றிவைக்கும் அபிமான முதலியவைகளைக் கொடுக்கப்படுவாய். இன்னும் கஷ்பு ஸிர்று இரகசியத்தின்பேரில்; பயம், மௌனம், சைக்கினையாதியவைகளையுங் கொடுக்கப்படுவாய். இத்துடன் நீ தரிப்படாவிட்டால், நாணம், கோபம் சாதனையுடைய ஆலம் வெளியாக்கப்படும் இந்த ஆலத்தில், லாஹிறுக்கு மாற்றமானவைகளையும், ஷூரத்துகட்கு விதற்பமானவைகளையும், இதல்லாத்தவைகளையும், 'முஷாஹிதா' செய்துகொள்வாய். இத்துடன் நீ தரிப்படாவிட்டால் ரோசமென்னும் வீரதத்துவ ஆலம் வெளியாக்கப்படும். இன்னும் விதங்களிலதிகரிப்பதின் 'ஹக்கு' வெளியாகுதல் சாலிமாகிய, நிறைவேற்றுதல், நேர்வழிகள், இரங்கப்பட்ட மார்க்கங்கள் வெளியாக்கப்படும். இன்னும் துய்தாக்கப்பட்ட மஃரிபாக்களின் கட்டழகைக்கொண்டு 'அல்லாஹுத் தஆலா அலங்கரித்து வைத்திருக்கின்ற அந்த ஆலத்தைக் காண்கப்படுவாய். அதில்; யாதொரு, மக்காமையுமுனக்கு வெளியாக்கப்படுகிறதில்லை. அவனு

னக்கு வலுப்பம், கனதி, சிறப்பு ஆகியவைகளால் நேரிட்டொழிய. இன்னும் இலாஹிய்யத்தான சமுகமென்னுந் தன்னுடைய பதவியின் மக்காமை உனக்குத் தோற்றமாக்கிவைத்து, தன் தாத்தைக்கொண்டு உன்னை; இஷ்க்கென்னு மோகம், இச்சையிலாக்கிவைப்பான். அத்துடன் நீ தரிப்படாவிட்டால், அந்தரங்கங்களின் மூடல்கள், குபாடம்நற்கருமங்களிற் றரிப்படுதல், ஒடுங்குதல், கனதிபாடு, இன்னுமிவைகள்போலுற்ற 'ஆலம்' வெளியாக்கப்படும். இத்துடன் நீ தரிப்படாவிட்டால் ஏலாமையாகுதல், திறக்குறைத்தல்; கட்டழியுதல் இவ்விதமான 'ஆலங்களும்' அமல்களின் கஜானுக்களும், உனக்கு வெளியாக்கப்படும். இந்த கஜானுத்தான் 'இல்லிய்யூன்' என்றது. இத்துடன் நீ தரிப்படாவிட்டால் 'ஜின்னன் என்ற, சுவனலோகத்தையும் அதன் பதவிகளையும், அதிற் சிலதுட்சிலது களடங்கியிருப்பதையும் அதன் சுகண்டிகளின் விதங்களையும், நீ, கிட்டுமையான பாதையிற் றரிபட்டிருக்கின்ற ஹாலில் உனக்குவெளியாக்கப்படும். பின்பு உனக்கருகில் நரகலோகத்தையும் அதன் தட்டுகள் பதவிகளையும், அதிற் சிலதுட்சிலது ளடங்கியிருப்பதையும் அதன் பாதனையின் பாகங்களையும் வெளியாக்கப்படும். இன்னுமிந்த இரண்டு வீட்டில் ஒவ்வொன்றடங்கலிலுஞ் சேர்த்துவைக்கும் அமல்களையும் வெளியாக்கப்படும். இத்துடன் நீ தரிப்படாவிட்டால் அல்லாஹுத் தஆலாவை 'முஷாஹிதா' செய்கிற முஷாஹிதாக்களில் நின்றுமுள்ள மஷ்ஹதுகளில்; ஹலாக்காக்கிவைப்பதைத் தேடுகின்ற, றாஹுகளை வெளியாக்கப்படும். அவர்களதில், தட்டழிந்து மதிமயங்கியிருப்பார்கள். படுதடி எனுங் கொடிய ஆசையையுடைய அதிகாரமவர்களை மிகைத்துவிட்டன. ஆகையாலவர்களின் ஹால், உன்னை அழைக்கும். இந்த 'றூஹின்' அழைப்புக்கு; நீ தரிப்படாவிட்டால், உன்னைத்ததவிர நீ பார்க்கமாட்டாயே அத்தகைய ஒளியை உனக்கு வெளியாக்கப்படும். அதில், வலுப்பமாகிய ஆசையும், கடினமான மோகமு முன்னைத்தொட்டுவிடும். இன்னுமதில்; நீ, இதற்குமுன் அல்லாஹுத் தஆலாவைக்கொண்டு அறிந்திராத இன்பத்தைப் பெற்றுக்கொள்ளுவாய். நீ பார்த்தவைகளியாவும் உன் பார்வைக்குச் சிறிதாயும், இலேசாயுமாகிவிடும். நீ அதனளவில் விளக்கினது சுடர் சாடுவதுபோற் சாடினவனாக இருக்கின்ற ஹாலில், இத்துடன் நீ தரிப்படாவிட்டால், ஆதமுடைய மக்களின் சுரூபத்தில், சில ரூபங்களை யுனக்கு வெளியாக்கப்படும். இன்னுஞ் சில திரைகளை யுயர்த்தவும், சில திரைகளை மறைக்கவும் படும்.

இன்னும் நீ அறிவாயே அவ்வித "தஸ்பீஹு" அவர்களுக்குச் சொந்தமாயுண்டு நீ, அதைக்கேட்டால் திடுக்கிட்டு; பயப்படாமலிரு. அவர்களுக்கிடையில், உன் சூறத்தையும் பின்னால் காணப்படுவாய் இன்னுமந்த சூறத்தில், நீயுண்டாயிருக்கின்ற வேளையையு மறிவாய் அத்துடன் நீ தரிப்படாவிட்டால் றஹ்மானளவிற் சேர்க்கப்பட்ட ஆசனமெனும் "சரீர்" உனக்கு வெளியாகும் எவ்வஸ்துக்களு மதன் பேரிற்றான்; தரிப்பாடாயிருக்கும் அவ்வஸ்தடங்கலிலும் நீ பார்த்தால் நீ எதில், உதயமானாயோ அவையினத்தையு மதற்கதிகமானவைகளையும் அந்த வஸ்துக்களிற்காணப்படுவாய். யாதொரு பார்வையும் இல்மும் அந்தவஸ்துக்களில் அவனை, அவைகள் முஷாஹீதா செய்ததாகவேயொழிய தரிப்படமாட்டாய். ஒவ்வொரு வஸ்துக்களடங்கலிலும் உன் பார்வையைத் தேடிக்கொள் அதில் அது, உன்பேரில் விசயமானால் உன் தீட்சைமுடிவையும் உன் பதவியையும், உன் பார்வையின் முடிவையும், ஒருவனாகிய உன் "றப்பு" விலாயத்து மஅறிபா வினின்று முன்பாகமுமுனக்குச் சொந்தமாக்கப்பட்ட சூறத்து எங்கிருக்கின்றதென்றும் நீ அறிந்துகொள்வாய். அத்துடன் நீ தரிப்படாவிட்டால்; மறைந்திருக்கும் ஒவ்வொரு வஸ்துக்கள் முற்றின், திரைகளை நீக்கி அந்தவஸ்துக்களையும் தன் குறிப்புகளையு முனக்கு வெளியாக்கப்பட்டு அதன் குணங்களையுங் விடயங்களையும், நீ யறிந்து அதன் தகுதியை நீ முஷாஹிதாச் செய்து, அதற்கு இடுகுறிப்பெயரிட்டு, "நானியத்தாகிய இராஜரீகத்தில், அதின் முடலைக்கொண்டு நீ வரிசைபடுத்துவாய், இத்துடன் நீ தரிப்படாவிட்டால் உசும்புதலுக்குரித் துள்ளவனை, உனக்கு வெளியாக்கப்படும்,

பதினாறாவது பகல்.

முஷாஹிதாவில் தன்னை மறந்து அழிந்து மவுத்தாகி மறுபடியு மீளுதலை விபரித்தல்.

மேற் சுட்டியமுறைகளுடன் நீ, தரிப்படாவிட்டால், நீ யழிந்து; பின்பு மவுத்தாகி; பின்பு பனாவாகி, பின்பு நீ இழந்து அழியும் அடையாளம் "ஆதாருகள்" அதன் சகோதாமாயுன்னில், தீர்மானமாகும்வரையில் உன் "நமூனா" அடங்கலுமழிந்து, பின்பு நீ சமுகமாகி, தப்ரிபட்டு பின்பு நீ ஒன்று சேர்ந்து (காயிபு) அதாவது—மறைந்துவிடுவாய் "அவ்

வேளையில்; நீ (ஹாஸில்) செய்துகொண்டபட்டம்" பரிசையுன் பேரிற் சூட்டப்படும். திடனாக அது பலவகைகளாயிருக்கும். பின்பு; நீ புகுந்த தானத்தில் வந்து வெளிப்பார்வையாற் கட்டுண்ட,இப்பூலோகம் நீ வருகும் வரையில்; அல்லது நீ "காயிபு" மறைவமனவிடத்திற் றரிபாடாயிருக்கின்ற "இந்த" தரீக்காவுக்கு நேர்பாடாய் நடந்தவரானவரின் பேணுதலை, நீ அங்கிகரித்துக்கொள்ளும் வரையில், நின்பார்வைக்குத்தோற்றாவாகியவைகளின் "சூறத்து" வடிவுகள் விதப்பமானதாய்க் காண்பாய்.

பதினேழாவது பகல்.

"நபி"மார்களுக்கு அனந்தரமாவதை விபரித்தல்.

இந்த " தரீக்காவில்" நடந்தவர்களினின்றுஞ்சிலர்; தன் பாஷை அன்றி மற்றொரு பாஷையால் "முனாஜாத்து" மன்றாடுகிறார்கள். ஒரு பாஷையைக்கொண்டு மன்றாடுபவரெவரும், அதுஎவ்விதமான பாஷையானாலும், அவனப்பாஷைக்குரிய "நபிக்கு" வாரிசாகவிருக்கும், இந்தக் கருத்துத்தான் இன்னான் "மூசா" அலைவிற்சேர்ந்தவன், அன்றேல்"ஈசவீ; அன்றேல்" இபுறாஹீமீ: இதுரீஸீ "எனத்" தரீக்கா, உடையவர்கள் சொல்லுதலை, நீர்கேட்பதாகும்- இன்னுமவர்களிற் சிலர், இரண்டு, மூன்று, நான்கு, அதற்கதிகமாகிய பாஷைகளால் மன்றாடுகிறார்கள். அவர்களில் ("காமில்") என்ற நிரப்பமுடையவர்கள் பாஷையடங்கலைக் கொண்டு மன்றாடியவர்களாயிருக்கும், அவர்கள்தான் சொந்தமாக்கப்பட்ட முஹம்மதிய்யர்கள். ஆனபோதே ஒரு 'தீட்சை' நிலமையை விட்டும் மீளாமலிருப்பவன்; அதில் வாக்கிபு தரிப்பட்டவனாயிருக்கும். திடனாக அம்மகாமில், ஹலாக்கைத் தேடியவர்களுமிருக்கின்றார்கள். உண்மையாயிவன் வெருட்சியுடையவர்களில் மிக மேலாம்பாமானவனாகவிருக்கும். நீ அறிந்துக்கொள்:—வெருட்சியுடையவர்க ளிரண்டு வகுப்பாயிருக்கும். தன்னைமட்டும் பேணிக்கொள்பவரும், இன்னு மற்றொருவர், நேர்வழிகாட்டுகின்ற நாவால்; கல்க்குகளிற் செல்லுவார். அவர் தான் அனந்தரங்கொள்ளப்பட்ட "ஆலிம்."

பதினெட்டாவது பகல்.

'நபி' தன்மை விலாயத்துகளை விபரித்தல்,

நீ அறிந்துக்கொள்.—நுபுவத்தும், விலாயத்தும், மூன்று வஸ்துகளிலாயிருக்கும். முதலாவது; இல்மு அதையுடையவனைச் சூட்டப்படுவான். இரண்டாவது; ஹிக்மத்தெனுஞ் செயல். அதாவது; சாமன்றி, செய்யப்படாத்ததாயும், அல்லது, அதிற் சடலத்திற்குத் தத்துவமில்லாத்ததாயும், நடந்தேறிய வளமைச்செயல். மூன்றாவது; 'ஹிஸ்ஸு' எனும் பார்வையில் கிபாலிய்யத்து எனு மூசாட்டமாகிய ஆத் னைப் பார்ப்பது. நபியும், வலியும், ஜமானுக்கு முன்னோக்குந் தன்மையில் பிரிந்துவிடுவார்கள். திடனாக வலியுடைய எதிர்நோக்கம், நபியுடைய முன்னோக்கமல்லாத்ததாயிருக்கும். நீ சந்தேகிக்காதே அவுலியாக்கள் மஆரிஜு, மறுத்தபாக்கள் பதவிகள்; நபிமார்களின் மஆரிஜு பதவியின் வழியிற்றானென்று நபிமார்கள் ஏற்றமாகும்படி வரிசை, 'அஸ்லிய்யத்தான' நூறைக்கொண்டும் வலிமார்களின்படி வரிசை, அந்த 'நூறில்நின்றும் வழியுரதினாலேயாயிருக்கும். நீ அறிந்துக்கொள் அல்லாஹுத் தஆலாவுக்குள்ள வலிமாரனைவோரும், அவரெந்த 'நபியின் மார்க்கத்திலிருந்தனரோ' அந்த நபியின் றூஹானிய்யத்தின் வாஸ்தா எஃனீ உதவியினால் தன் விலாயத்தை எடுத்துக்கொள்ளுவார். இதை விளாக்குவது; இக்கித்தாபு இடங்கொடாத நுட்பமான அந்தரங்கமாக இருப்பதாலே துலக்கவில்லை.

ஆனால்; நமதுநபிகணாயகம், முஹம்மதுஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் உம்மத்துகளின்றுமுள்ள; அவுலியாக்கள் சலவாதது, ஸலாமுக்குப் பொருந்திய; நபிகளடங்கலின் (மக்காமாத்து) பதவிகளைச் சேகரித்துக் கொண்டவர்களாயிருக்கும். இவர்களிலொருவர் நபிமூசா அலைஹிஸ்ஸலாமவர்களை அனந்தரமாக்கிக்கொண்டார். ஆகிலும், முஹம்மது நபியின் "நூறில்" நின்றுமல்லாமல், மூசாநபியின் நூறில் நின்றுமல்ல. ஆனதால் முஹம்மது நபியின், சமுகத்தில் அவர்கள் (ஹாலும்) நபிமூசா அவர்களின (ஹாலும்) ஒன்றாயிருக்கும் சிலவேளை ஒரு "வலி" தன் மௌனத்தினிடத்து, நபிமூஸா, அல்லது நபிஈசா அலைஹிமஸ்ஸலாம் அன்னவர்களை நோட்டமிட்டுக்கொண்டு "அவரை" (திக்று) செய்வார் அவ்வேளையில் அவர்; யகூதி, நஸாறாவாகிவிட்டாரென அறிவுகெட்ட மூடர்கள் மதிப்பார்கள் தன் மௌனத்தினிடத்து அந்த நபிகளைச்சொன்னதெல்லாம் "தன்" (மஃறிபா)வின் தத்துவத்தினால்தான்.

* * *

பத்தோன்பதாவது பசுல்.

குத்துபிய்யத்தின் "ஹக்கீகத்தை" விபரித்தல்.

திடனாக "குத்துபிய்யத்தா[illegible]து,—முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் "கல்பி"லாயிருக்கும். ஷெய்கு முஹியித்தீனிபுனு அலிய்யு அவர்களருட்செய்திருக்கின்றார்கள்.—நான் முதன்மையாகச் சந்தித்த ஷெய்கை ஈசாநபி அவர்களின் "கல்பி"லும், மற்றொருவரை, மூசாநபி அவர்களின் "கல்பி'லும், சிலரை "இபுறாஹீம்நபி" அவர்களின் "கல்பி"லுஞ் சந்தித்தேன். ஆனால், நான் சொல்லிவந்தனவற்றை நம்முடைய "அஸ்ஹாபிகளன்றி யாருமறியார்கள் திடனாக "முஹம்மதுநபி" அவர்கள், 'மற்றைய நபிமார்கள் றசூல்மார்கள் பல்லோர்கட்கும், ஸ்தூலத்துடன் அனுப்பிவைக்கப்பட்டு, அந்நாயகத்தை நாம் தொடர்ந்து அவர்களை "முஷாஹிதா" செய்த நபிகளனைவரும் அல்லது அவர்கட்குப்பின்னிறங்கிய றசூல் களனைவரும் "ஹுக்மில்" அந்நாயகத்துடன் சேரும் வரையில்; ஆலமுல் அறுவாஹில், மக்காமாத்து பதவிகளைக்கொடுத்தார்கள். ஆகையால் முந்திய நபிமார்களின் அவுலியாக்கள்; தங்கள் நபிகளைத்தொட்டும், அந்நபிமார்கள் நமது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைத்தொட்டு மெடுத்தார்கள். ஆனதால் முஹம்மதிய்யத்தாகிய விலாயத்தில் மற்றைய நபிமார்களுங் கூட்டாகிவிட்டார்கள்.

இருபதாவது பசுல்.

நபிகணாயகத்தின் "உம்மத்து" மற்றைய நபிமார்களுக்கொப்பாகுவதை விபரித்தல்.

இதைப்பற்றி "ஹதீதில்" வந்துவிட்டது. இந்த "உம்மத்திலுள்ள உலமாக்கள் "பனீஇஸ்றாயீல்களின்" நபிமார்களைப் போலென்று, நம்முடைய "ஹக்கில்" அல்லாஹுத் தஆலா "திருவுளம்பற்றியிருக்கின்றான். மற்றைய மனிதர்களனைவர்பேரிலும், நீங்கள் சாட்சியாகுவதற்கென்று, றசூல்மார்கள் ஹக்கில் ஒவ்வொரு உம்மத்துகள்பேரிலும் ஒரு சாட்சியை யனுப்பிவைப்போமென்று.

ஆகையால் நாமும், மற்றைய நபிமார்களும், அவர்களைத்தொடர்ந்த "உம்மத்துகளின்பேரிற் சாட்சியாக விருக்கும். ஆனதால்; முஹம்ம

திய்யத்தாகிய; குல்லிய்யத்தின் விலாயத்தை அனந்தரமாக்கிக் கொள்ளுகின்ற "கல்வத்தில்" "தகுறிய்யத்தை" செலவு செய்துக்கொள்ளவும், இன்னும், ஒவ்வொரு மூச்சடங்களிலும் "வகுல்றப்பீ,.ஸித்னீ இல்மன், மாதாமல் பலக்கு, பிநப்ஸிஹீ' என்று சொன்னவனை நீங்காமலிருந்துக் கொள்ளவும். இன்னுமிவைபோற் காற்றவைகட்கு அமல் செய்பவர்கள் அமல் செய்யவும். இவை பேற்கொற்றவையில் மூச்சுவிடுபவர்கள் மூச்சுவிடவும் என்ற வேதவாக்கியத்தின் கருத்துப்போலவே; தான் மூச்சுவிடும்வேளைகளாயிருப்பதைத் தேண்டித்துக்கொள்ளவும்.

——(:0:)——

இருபத்தோன்றாம் பசல்.

காத்திமா.

நீ அறிந்துக்கொள்.—"கல்பு" தெளிவாகிறது; "திக்றின்" வழியைக்கொண்டன்றி நிரப்பமாவதன்று. ஏனென்றால்; நபிகணாயகந் திருவுளமானார்கள். திடனாக, இரும்பில், "துரு" பிடிப்பது போல, கல்பிலுந் துருபிடிக்கும். அதை விளக்கித் துலக்கப்படுத்தல், "அல்லாஹுத் தஆலாவின் திக்று"யிருக்குமென்று.

பின்பு; திக்றுசெய்வது; நாவினால் அல்லது "கல்பினாலாயிருக்கும். நாவின் (திக்று) கல்பின்" திக்றை யுண்டாக்கிக்கொள்வதற்கும், கல்பின் (திக்று) முறாக்கிபாவை யுண்டாக்கிக்கொள்வதற்குமாயிருக்கும். "கல்பைத் தெளிவாக்கி வைப்பதில் மிக்க முடுகுதலுள்ளது காதிரிய்யா, அல்லது நக்ஷபந்திய்யாத் தரீக்கின் திக்றைக்கொண்டு பராக்காகுவதாயிருக்கும். அதாவது; தாத்தின் திருநாமத்தால்; அல்லது, நபீ, இது பாத்தால் "திக்று" செய்வதாயிருக்கும். "தாத்தின் திருநாமத்தால்" திக்று செய்யும் பாங்காவது, திக்று செய்கிறவன், "தன் கல்பு"டைய நாவால் "அல்லாஹ் "என்ற" கலிமா"வை மொழிவதாயிருக்கும். ஏனெனில்; திடனாக, கல்பாவது; அடங்கலும், நாவாகவும், செவியாகவும், பார்வையாகவுமாயிருக்கும்.

நபீ "இதுபாத்தால்," திக்றுசெய்யும், பாங்காவன—"திக்று" செய்கிறவன்; தன்கல்புடைய நாவினால் "லாஇலாஹ"எனுங்கலிமாவைக் கொண்டு "அல்லாஹ்" அல்லாதன வற்றில் "கல்பு" கொளுகுதல்களை "நபீ" அதாவது நிவர்த்திசெய்து, பின் இல்லல்லாஹ் எனுங் கலிமா

வால் அதில் "ஹக்குடைய" வஹ்தானிய்யத்தின்" உள்ளமையைத் தரிபடுத்தியவனாக, மொழிவதாயிருக்கும். இவ்விரண்டு நாமத்தையுமிவ்வாறு "திக்று" செய்தால் கல்பினது தெளிவு, கூர்மையுண்டாகி 'அல்லாஹுத்' தஆலாவை அறிந்தவனாயுமவனிற் சேர்ந்தவனாயுமாகி விடுவான் ஆனதால்; பறுலு "[illegible]குப்பின்னால், மற்றைய வணக்கங்களடங்கலைப்பார்க்கிலும்" திக்ரிய்யத்தாகிய "வலீபா" எனும் வழக்கத்தைக் காலமடங்கலிலும், முற்படுத்திக்கொள்வாயாக.

முறாக்கிபா "என்பது அகப்பார்வையால் வலுப்பத்துடன் நியமமாய்" ஹக்கு சுபுஹானஹு வத்த ஆலாவின் சமுகத்தைப் பார்ப்பதாகவிருக்கும் ஒருவன், முறாக்கிபாவின் பதவியை எற்றிவிட்டாலவனுக்கு இலாஹிய்யத்தான; உள்ளமையை ஒன்றுபடுத்தல், தரிபாடாகி நியமமான அடிமைத்தனந், திட்டமாகும் அந்த முறாக்கிபாவில் நியமமாய்த் தரிபட்டிருந்தால் அகப்பார்வையிலவனுக்கு ("கஷ்புகள்") அதாவது "இலாஹிய்யத்தாகிய', தாத்தின்" ஓர்மை, உள்ளமையினொளிகள் வஸ்துக்களியாவையுஞ் சூழ்ந்துவிட்டன. அவன் தன் சிபத்து, திருநாமத்தால், தன்படைப்புகளில் வெளியாகின்றான் என்று தோற்றாவாவது கொண்டு 'முஷாஹிதா" எனும் பதவியிலுயர்வான்.

இவ்வணக்கம் ஹாஸிலாவதற்கு நியமமாயோதி வருகின்ற (துஆ) இதை முக்கியமாய் தொழுகைகளுக்குப் பின்னாலோதிவரவேண்டியது.

"துஆ" இஃது

அல்லாஹும்ம, இன்னீ, அஸ் அலுக்க, மினன் நிஃமத்தி, தமாமஹா, வமினல், இஸ்மத்தி, தவாமஹா, வமினர் றஹ்மத்தி,ஷாமுலஹா, வமினல் ஆபியத்தி ஹாஸிலஹா, வமினல் அய்ஷி அர்கதஹா, வமினல் உமரீ அஸ் அதஹா, வமினல் இஹ்ஸானி; அதம்மஹா, வமினல் இன் ஆமி, அ அம்மஹா, வமினல் பலுலி. அஃதபஹா,வமினல் லுத்பி, அக்றபஹா; வமினல் அமலி, அஸ்லஹஹா, வமினல் இல்மி, அன்பஅஹா, வமினர்ரிஸ்கி அவுஸஃஹா; அல்லாஹும்ம, குன்லனா, வலாதகுன் அலைனா, அல்லாஹும்மக்திம் பிஸ்ஸ ஆதத்தி ஆஜாலனா வஹக்கிக், பிஸ்ஸியாதத்தி, அஃமாலனா, வக்றுன் பில் ஆபியத்தி, குதுவ்வனா, வஆஸாலனா, வஜ் அல், இலா றஹ்மத்திக, மஸீறனா; வஆமாலனா, வஸ்புப், ஸஜால, அபுவிக்க, அலா துனூபினா, வமுன்ன, அலைனா, பிஇஸ்லாஹி உயூபினா, வஜ் அலித்தக்வா, ஸாதனா, வபீ தீனிக்க; இஜ்திஹா

துனா, வஅலைக்க, தவக்குலுனா, வஇஃத்திமாதுனா, இலாஹனா. தப்பித்னா, அலானஹ்ஜில், இஸ்த்திகாமா,வஅஇத்னா, மின்மூஜிபா தின்னதாமதி, யவுமல் கியாமா, வகப்பிப், அன்னா. திக்கலல் அவ்ஸாரி, வற்ஸூக்னா. ஈ ஷத்தல், அப்றார், வக்பினா, வஸ்ரிப், அன்னா. ஷர்றல் அஷ்றார், வஃத்திக், ரிக்காபனா, வரிக்காப, ஆபாஇனா; வஉம்மஹாத்தினா, மினன் நார். வத்தைனி, வல்மலாவிம், யாஅஸீஸூ, யாகப்பாறு யாக்கரீமு, யாஸத்தாறு யாஹலீமு, யாஜப்பாறு, பிறஹ்மத்திக்க, யா அற்ஹ்மர் றாஹிமீன். வசல்லல்லாஹூ வஸல்லம, அலா கைரி, கல்க்கிஹி, முஹம்மதின் வஆலிஹி, வசஹ்பிஹி அஜ்ம ஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

ஐந்தாம்பாபு முற்றிற்று.

ஆறாம் பாபு.

(ஸூஹ்து)எனும் வெறுப்பாதியவைகட் குறித்துள்ளவைகளையும், அமல்செய்ய உபகரண நுட்பங்களையுங்கூறல்.

ஒன்றாவது பசுல்.

காபருகள்பேரில்; துன்யா முன்னோக்கக் கூடிய ஹிக்மத்தையுணர்வதில், ஊணர்ச்சி பூட்டுதலாகிய தலீலும், ஹதீதும்.

(25) வது ஜூஸூவு (19) வது, றுகூகில்; "அல்லாஹூத்தஆலா" திருவுளம் பற்றியிருக்கின்ற ஆயத்தின் தாத்பரியமாவது:— (மஃனா) அவர்களிற் சிலர் சிலரைவசப்படுத்திக் கொள்வதற்காக, அவர்களிற் சிலரை, சிலரைக்காண்கப் பதவிகளில் உயர்த்தியாக்குவித்தோம். மனிதரடங்கலும் ஒரே கூட்டமாய், ஓர் மித்துவிடுவார்களென்பதுண்டாயிரா விட்டால்" றஹ்மானுக்கு மாற்றஞ்செய்யுங்காபரீன்களின்மேல் வீடுகளையும்,அதற்கேகிப்போம்(சீடி)ஏணிப்பளுக்களையும்,அவ்வீட்டுக்குரிய நிலை, பலகைகளையும், அதிலவர்கள் சாய்ந்துக்கொள்ளும் நாற்காலி, கட்டில் களையும், வெள்ளியாயும்; அதிற் பரிமாறும் தளவட சாமான்களைத் தங்கமாயும் நாமாக்கிவிடுவோம் இவைகள் முழுதும் இப்புவியினது அற்பசுகம் "தக்வா" உடையவர்கட்கு உமது நாயனிடத்து,"ஆகிறு" எனும் சுவனலோகமுண்டாயிருக்கின்றது. என்று.

இன்னும், "ஹதீதுல் குதுஸிய்யில்" திருவுளம்பற்றியிருக்கின்றான். மூமினாகிய என்தடிமை திடுக்கிடுதலுண்டாகாவிடில், யாதொன்றையும் முறையிடக்கூடாத குறைவற்ற வாழ்க்கை எனும் " ஜீறு, சட்டையைக் காபிரீன்களுக்கு உடையாக்குவித்து "துன்யாவை" அவர்கள் பேரில் ஒலித்துவிடுவேன். என்று. இன்னும் "இபுனு அப்பாஸ் றலியல்லாஹூ அன்ஹூமா" அருட்செய்தார்கள். இந்த ஹதீதுக்கு, ஒப்பானதாயிருக்கும்: முற்கூறிய ஆயத்து" என்று

இரண்டாவது பசுல்.

காபருகளில "துன்யா" எதிர்நோக்குமாகிய தலீலின் தபுஸீர்களின் விபரம்.

மேற் கூறிய "ஆயத்தின் தாத்பரியத்தில்" ஹஸன்றலியல்லாஹூ அன்ஹூ அருட்செய்தார்கள், மனிதரடங்கலும் காபராகி "துன்யா" அளவில் அவர்கள் திரும்பி விடுதலுண்டாகி விடுவதுண்டாகா விடில், காபிரீன்களுக்கு ";அல்லாஹூத்தஆலா" சொல்லிய தடங்கலையுங் கொடுத்து விடுவான். அவர்களில் துன்யாவுஞ் சாய்ந்துவிடும். அதை அவன் செய்யவில்லை. செய்துவிட்டால்," ஹாலுகள் எவ்விதமாகும்? ஏனெனில் அல்லாஹூத் தஆலா, கார்த்துகொண்டவர்களைத் தவிர மனிதர்கள் துன்யாவை உகந்து அதையே குறிபார்த்து; சிந்தைநோக்கி யிருப்பதாலே; நாம் யாருக்குப் பொருளை யதிகமாய்க்கொடுத்திருக்குறோமோ, அன்னவர்கள்பேரில் தான் நமது பிரியமுண்டாயிற்றென்று அன்னவர்கள் உறுதி கொள்வதினால் குபிர் எனும் வழிகேட்டில் ஓர் மித்து விடுகின்றனர். அல்லாதுவிட்டால் நாம் கூறியபடி செய்துவிடுவோம், நமது நாயனிடம் தக்வா உடையவர்களுக்கு, சுவனலோகமுண்டும். அவர்கட்கு அதில்; காபரீன்கள் எவருங் கூட்டாக மாட்டார்கள் என்று.

இன்னும், நபிகனாயகந்திருவருட்புரிந்தார்கள், திடனாக, "அல்லாஹூத் தஆலா" உங்களின் குணங்களைப் பங்காக்கிவைத்ததுபோல்,

உங்களின், இரணங்களையும் பங்காக்கிவைத்தான். "தான்" உவக்கப்பட்டவனுக்கும், உவக்கப்படாதவனுக்கும் துன்யாவைக்கொடுப்பான். தீன் எனும் பரிசுத்த மார்க்கத்தைத் தான், உவந்தவர்கட்கல்லாது கொடுக்கப்படமாட்டான். எவனுக்குத் "தீனை"க்கொடுக்கப்பட்டதோ அவனையவன் உவந்திருக்கின்றான், "துன்யா" அல்லாஹுத்தஆலாவினிடம், ஓர் கொசுவின் சிறகிற்கு நிகராகுமாகிலதினின்றுங்காபிரீன்களுக்கு,ஒரு முணர்ஜலமாவது புகட்டான். என்று. இன்னும் உமறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "கிஸ்றா, கைஸர், அரசர்களின்" தௌலத்து சுக வாழ்வைப்பற்றிப் பேசியபொழுது; அவர்கட்கு துன்யாவும், நமக்கு, ஆகிறமும் உண்டாயிருக்கின்றதை நீர் பொருந்திக்கொள்ளவில்லையா? என்றும், துன்யா மூமின்களுக்குச் சிறைச்சாலையாயும், காபிரீன்களுக்குப் பூங்காவனமாயு மிருக்குமென்றும் "தன்" அடிமைகளில், "தான்," காத்துக்கொள்ள நாடியவரைத் துன்யாவை விட்டுங் காத்துக்கொள்ளுவான்., உங்களில் ஒருவன் நோய் வாய்ப்பட்டானாகில் அவன் ஜலம் பரிமாறுவதை விட்டுங் காத்துக்கொள்ளல்போல என்று திருமொழி பகர்ந்தார்கள்

இன்னும், சிலரைச் சிலரைப் பார்க்கினு முயர்த்தியாக்குவித்தோம் என்ற ஆயத்தின் தாத்பரியத்தில் "கதிபு" என்பவர்கள் அருளினார்கள் "ஆலத்தின் உள்ளமை கோர்வை யாவதற்காக, தலைமை தனத்திலும் பொருளிலும் செல்வாக்கிலும், தகுதிவலுப்பத்திலும், சிலரைச் சிலரைப் பார்க்கினு முயர்த்தியாக்குவித்தோம். திடனாக உண்டாகுவதின்கோர்வை உண்டாக்கப்பட்டவைகளின் கூட்டுறவு சேர்மானம் உதவியினாலேயாயிருக்கும். ஆகையால்; அவர்களின் செயல்களையும், மஃரிபாக்களையும் பங்காக்கி வைப்பதற்காக, அவர்கட்கிடையில் நம்முடைய ஏற்றவாட்டமானது, சடலத்திலும், தத்துவத்திலும், நாட்டத்திலுமாம். ஒவ்வொரு வாடங்களும், எதுக்காகப் படைக்கப்பட்டனவோ அதிற் செல்பவராயும் எதை எடுக்கத் தங்கரிகமாக்கப்பட்டனவோ, அதைக் கொய்துக் கொள்பவராயுமிருக்கும். சீமான், ஏழை, என்பதில் எவரும் அவரவர் தகுதியைக் கடந்து தன் பதவிக்குமேல் உயர்தரத் தகுதியைப் பெறார். ஏனெனில்; அவர்களிற் சிலரைக் சிலர் வசப்படுத்திக் கொள்வதற்காகவென்றும்; அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கின்றபடியால் எஃனீ அவர்களிற் சிலரைச் சிலர் தொண்டூழியராயாக்கிக்கொள்ளுதற்கு. ஆன

தாலே, சீமான்கள் பொருட்களினால் ஏழைகளை வேலைவாங்கும் பாகத்தினால் வசப்படுத்திக்கொள்கின்றார்கள். அதிற் சிலர் சிலரின் நிருபாகத்திற்குக் காரணராக, இவனது பொருளாலும் இவனது கிரிகையாலும், ஆலத்தின் நிலைமை கோர்வையாகிக்கொண்டு வருகின்றது. அங்ஙனம் நிருபாகமென்னும் கட்டளை, சமமாய் நடைபெறும் பட்சத்தில்நிருபாகங்கள் ஹலாக்காய் விடுமென்றார்கள்.

இன்னும் மேற்கூறிய ஆயத்தின் தாத்பரியத்தில்; அலாவுத்தீனுல் காஜினீ என்பவர்கள் அருட்செய்தார்கள். அடிமைகளுக் கிடையில் நாம் தான் இந்த ஏற்றவாட்டத்தை யமைத்தோம்,இவனை, சீமானையும், எழியவனையும், அரசனையும், அடிமையாயும், சுத்தவீரனையும் அசுத்தவீரனையும், ஆக்குவித்தோம். பின்னர், நம்முடைய படைப்புகளில், எவரும் நம்முடைய தீர்மானத்தைப் பேதகப்படுத்தவும், நம்முடைய கற்பனையை விட்டொழியவும் சக்திபெறார்கள் ஹாலுகளனைத்திலும் அவர்களனைவரையும் நாம் சமமாக்கிவைத்தால், ஒருவன் மற்றொருவனுக்குப் பணியவும், ஒருவன் ஒருவனைவசப்படுத்திக்கொள்ளவு மாட்டார்கள் அங்ஙனமது, ஆலம்பாழாகி "துன்யா" வின் ஹாலுகள் கெடுவதளவில் வருத்தும், ஆகையால், அவர்களிற் சிலர் சிலரைத் தொண்டூழியாக்கிக்கொள்வதற்காகவே அப்படிச் செய்தோம். ஆனதால் சீமான்கள்தனது பொருளைக் கொண்டு வேலைவாங்கும் பாகத்தினால் ஏழைகளை வசப்படுத்திக் கொள்கின்றார்கள். அது அவர்களின் நிருபாகத்திற்குக் காரணமாகி ஆலத்தின் சீர் திருத்தத்தின் நிலைமைகள்கோர்வையாகிக் கொண்டு வருகின்றன.

இன்னும் காபிரீன்கள் விஸ்தீரணமான வாழ்க்கையிலிருக்க மூமினானவர்கள் கண்ணூற்றுக் குபுரில் அபேட்சித்து,ஒன்று கூடி அனைவரும் காபிராகிவிடுகின்ற இயல்பில்லாவிட்டால் சுகிக்கப் பலனாகிய மிகுத்த காரணங்களை காபிரீன்களுக்கு நாம் கொடுத்து அவர்களின் வீட்டினது மேல்மாளிகைகளை வெள்ளியாதியவுலோகங்களாயாக்கிவிடுவோம்.இவையடங்கலும் அற்பசுகம், அனுவிலழிந்துப்போம். துன்யாவின்உவப்பைப் பயந்து, எஜமானின் உவப்பில் முன்னோக்கியவர்களுக்கு அந்த எஜமானாகிய அல்லாஹுத் தஆலாவினிடம், "ஆகிறு" என்ற கைலாசம், காலாகாலமுந் தரிப்பாடாயிருக்கின்றதென்பதாம், என்று-

இன்னும் சொல்லப் படுகின்றது, அவர்களிற் சிலர் சிலரைத் தன் பொருளால் பாத்தியப்படுத்திக் கொள்கின்றார்கள். அக்காபிரீன்கள்

சேகரித்துப் பாத்தியப்படுத்திக்கொண்டபொருளைப் பார்க்கிலும் உமது "றப்பின்" றஹ்மத்து எனும் சுவனலோகம், மூமின் கட்டு மிக்க நலமாயிருக்கும். ஏனெனில் "துன்யா" தரிகொண்டு நீங்குவதான "ஹலாக்கிலும், மேற்கூறிய "றஹ்மத்து" காலா காலமுந் தரிப்பாட்டுடையதாயிருப்பதால் என்று.

இன்னும் "பக்காக" சொன்னார்கள். கியாமத்தின் சமீபமாகிய தஜ்ஜாலின் காலமல்லாது, மூதேவித்தன, மன்மந்த வம்பர்களடைந்துள்ள பொன் வெள்ளிகளினுமுள்ள மேல் மாளிகை மற்ற அலங்காரக் கட்டிடங்களாதியவைகள் மனிதர்களியாவரும் குபுரில் ஒன்று சேர்வதற்கு ஹேதுவான (பித்னா) அதாவது மூதேவித்தன மன்மந்த வம்பர்களடைந்துள்ள; பொன், வெள்ளி, உலோகங்களிலுள்ள, மேல்மாளிகை அலங்காரக்கட்டிடமாதியவைகள் வெளியாகி விடுவதாய்க் கூறப்படாது ஏனெனில் அக்காலத்தில் "ஹக்கின்" தரிப்பாட்டிலுள்ளவர்கள் சொற்பம் "அல்லாஹ்" எனச் சொல்பவன் புவியிலிருக்கக் கியாமநாளுண்டாகமாட்டாதென்று வந்திருப்பதுபோல அவ்வண்ணமுண்டாயிருப்பவர்களில் "குபுரின்" வழியும் அனுகாதென்பது திண்ணம், ஏனென்றால் அரசர்களின் வாக்கியம் அந்தரங்கத்தை விட்டொழியாதென்பதுமறைவதன்று என்றால் அரசர்கட்கெல்லாம் அரசனாகிய அல்லாஹுத் தஆலாவின் திருவசனமெவ்வாறு என்று.

மூன்றாவது பசுல்.

இஸ்லாமி லனைவோரும் ஒற்றுமையாகும்வாறு வாழ்க்கையை, ஏனதிகமாக்கவில்லை எனும் வினாவும், விடையும்.

வினா. குபுரின்பேரில் மனிதரனைவரு மொற்றுமை யாகுமாகிய கெடுதிகளுண்டாவதற்கு ஹேதுவாயிருப்பதால், காபிரீன்கட்குக் கடப்பான வாழ்க்கையைக் கொடாவிட்டாலும் இஸ்லாமார்க்கத்தில் அனைவரும் ஒற்றுமையாகுவதற்காக முஸ்லீம்கட்கு ஏன் வாழ்க்கையை யதிகப்படுத்த வில்லை.

விடை. அவ்வாறு அவர்கட்கு அதிகமாக்குவித்தால்; இஸ்லாமாயினும் தீன் மார்க்கத்திலாகுவது "துன்யா" வுக்காக வென்பதை

வருத்துங்கெடுதிகளுண்டாய்விடும். துன்யாவைப்பெற்றுக் கொள்ளற்காக (தீன் மார்க்கத்திலாவது முனாபிக்கீன்களின் மார்க்கமாயிருக்கும்: ஆனதால் ஆராய்ச்சி செய்யப்பட்ட ஹிக்மத்து) இருவகுப்பாரிலும்: சீமானும், ஏழைகளுமுண்டாகி, சீமான்களைப் பார்க்கிலும், ஏழைகள் மிகைப்பாகி விட்டார்கள்.

இன்னும் "தபுஸீர் றூஹுல் பயானில்", வருகின்றது. நான், நாடினால்: என், நாயனிடங்கேட்டு, "கிஸ்றா, கைஸர், இராஜாங்கத்தைப்போல் பெற்றுக்கொள்ளுவேனென்று, நமது நபிகணாயகந் திருவுளம் பற்றியிருப்பதோடு" அல்லாஹுத்தஆலா, தனது நபி அவர்கட்குமிடிமை தனத்தைத் தெரிந்தெடுத்தும் அவர்களுமதையே, தன்நபுசுக்குத்தெரிந்தெடுத்துக்கொண்டதின் (ஹிக்மத்து) எவ்வண்ணமென்று கேட்கப்பட்டால் ஜவாபதிகம்.

நான்காவது பசுல்.

நபிகணாயகம் ஏழை (மிடிமைத்) தனத்தை எடுத்துக்கொண்ட "ஹிக்மத்து"

(1) வது, சீமானாகவிருந்தால்; "துன்யாவின்" அபேட்சையாலே, மனிதரடங்கலுமவர்களை நாடிவிடுவார்கள். ஆதலால், அவர்களைத் தேடுபவர்களடங்கலும் (தீனை) நாடி, என்று. கல்புகளியாவருமறிந்துக்கொள்ளும் வரையில் அவர்கட்கு "அல்லாஹுத் தஆலா" மிடிமையைத் தெரிந்துக்கொண்டான்.

(2) வது சீமான்கள், தனது ஐசுவரியத்தால், மனத்திருப்தியடைவதுபோல, ஏழைகள் தனது, மிடிமையால், மனத்திருப்தியடையும் வரையில்; ஏழைகளின் கல்பை நோட்டமிட்டு "அல்லாஹுத் தஆலா" தன், நபி அவர்கட்கு மிடிமையைத் தெரிந்துக்கொண்டான்.

(3) வது, "துன்யா" தாழ்மைத்தனமானதென்று நபி அவர்களின் மிடிமை, அதற்கறிகுறியாயிருக்குமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னும் நபிகணாயகம், திருவுளமாயிருப்பது போல (அதாவது) "அல்லாஹுத்தஆலாவினிடம் (துன்யா) கொசுவினது வோர் இறகுக்கு நிகராயிருக்கும் பட்சத்தில், காபிரீன்களுக்கு அதினின்றுமோர்மிடர் தண்ணீராவது புகட்டவேமாட்டான். என்று. "அல்லாஹுத்தஆலாவினி

டம்” துன்யா தாழ்மையாயிருப்பதின் கருத்தாவது; அது, தன்னை நாடப்பட்டதாய், அதை அவன் படைக்கவில்லை. எதை நாடப்பட்டதாயிருக்கின்றதோ, அதனளவிற் சேர்ப்பிக்கும் வழியாகத்” துன்யாவை, சிருட்டிக்கப்பட்டதே யல்லாது; தரிப்பாடுடைய வீடாயும், கூலிகொடுக்கும் வீடாயுமதைச் சிருட்டிக்கவில்லை, யாத்திரைக்குரிய வீடாயும்” “பலாய்” எனுஞ் சோதனைக்குரிய வீடாயுமே கற்பித்தான். அதை மூடர்களும், காபரீன்களும் சொந்தப்படுத்திக்கொள்கிறார்கள் நபிமார்களும், அவுலியாக்களும், அப்தாலுக்களு மதைவிட்டும் பிறக்கணித்து, அதையுமதையுடையவர்களையும், முனிகின்றார்கள். அதைவிட்டு பிரயாணிப்பதற்கான “ஸவாதா” எனும், வழி நடைக்காகுமாகிய சாமான்களைத் தேடுவதன்றி, அதில்; புத்திமான்கள் பொருந்திக்கொள்ளார்கள், நபிகணாயகத்தின் எளிமைத்தனம்; அவர்கட்குக் கற்பிக்கப்பட்டதன்று. தாங்களே, தங்களுக்குத் தெரிந்தெடுத்துக்கொண்டதென்று, சிறப்பாகிய அவர்களின் “ஹாலுகள்” மீதுதயமானவ ரீனவர்களிடத்திலும் அறியப்பட்டும் பிரபல்லியமாயுமிருப்பது வெளிப்படை. ஏனெனில் வனுப்பமாகிய இராஜாங்கமடங்கலையுங் கைப்பற்றி, மிகுத்த கொள்ளை வாழ்க்கைப்பொருள் கட்கு அதிகாரியாகிய, (துன்யா)-அடியோடு அவர்கள் மீது முன்னோக்கியபோது, அவர்களதைத் தங்கள் நபுசுக்குத்தங்கரிகப்படுத்தாமற் பலருக்குமதைப் பங்கிட்டுக்கொடுத்து விட்டு, எழைத்தன்மை; சாலிஹீன்களின் அடையாளமாகையாலதைத் தெரிந்தெடுத்துக்கொண்டனர்கள்.

ஐந்தாவது பசுல்.

“காத்திமா முடிவு”

மேற்கூறிய “ஆயத்துகளிலும்,” கிஸ்று, கைஸர், ஹக்கில், நமது நபிகணாயகம் “உமறு றலியல்லாஹு அன்ஹு அவர்கட்குத் திருவுளம் பற்றிய” ஹதீதிலும், இன்னுமிவைபோன்ற “ஹதீது” “தலீல்” ஆகியவைகளிலும் நீ ஆராய்ச்சி செய்வாயாகில்; காபரீன்கள் மீது” துன்யா முன்னோக்கிய (ஹிக்மத்து)களின் அகமியமாவது.

திடனாக, “அல்லாஹுத்தஆலா” ஆகிறத்தில் அவர்கள் மீது, நியாயமான வேதனையைக் கட்டளையிட்டும், ஆகிறத்தில் சுகண்டியான

நிஃமத்தைத், “சுவனலோகத்தில், பொன், வெள்ளி, யாலுள்ள மாடமாளிகை, கோடகோபுரங்களாதியவைகளைக் கண்கள் பார்த்தறியவும், செவிகள் கேட்டறியவும், கவ்புகள் ஊசாடியறியவு மியலாத பற்பல, அலங்காரங்களை“மூமின், முத்தக்கீன்களைக் கொண்டு சொந்தப்படுத்தப் பட்டதாய்க்கற்பித்தபொழுது, காபிரீன்களுக்குத் (துன்யா) வின் அலங்காரமாகிய, அதன் பொன், வெள்ளி, களில் மிகுத்ததை; அவர்கள், வீடும் அதற்கேகிப்போம் எணிகள் நிலைக்க தவுகளை, வெள்ளியாலும், மற்றவைகளைப் பொன்னாலும் மாக்கிக்கொள்ளும் வாறும் துன்யாவி லவர்கள் உண்டுசுகித்து அதிலவர்களின் பாத்தியானுகூலம் நிரப்பமாகும் ஹாவில் எடுத்துக்கொள்ளும் வரையிற் செய்துவைப்பது “அல்லாஹுத் தஆலாவின்” வரிசையாகிய நீதத்தில் நின்றுமாய் விட்டதென் றறிந்துக்கொள்வாய். மனிதரடங்கலும் காபறாகாமலிருக்க நாடியதாலும், “துன்யா” தூஷணிக்கப் பட்டதாலும், அவ்வண்ணம் அவன்செய்யவில்லை யென்பதையு மறிந்துக்கொள்வாய்.

ஆறுவது பசுல்.

பாவிகளின் இருநிலைமையைக் கூறல்.

நீ, அறிந்துகொள்; ஈமான் கொண்டவர்களிலுள்ள பாசிக்காகிய, பாவிகள் “தக்வா”வை விடுவதில், காபிரீன்களுடன் ஒற்றுமையானதாலே அவர்கட்கு “பித்னா வாகிய துன்யாவினதுபாகத்திற் சிலதுண்டாகி, “தக்வா” உடையவர்களைக் காண்க, மிக முன்னோக்கிவிட்டாலும், “அல்லாஹுத்தஆலா” தவுபாவாலுண்டாகிய’ தன் உட்கிருபையாலவர்களை யெற்றிக்கொள்ளாவிட்டாலவர்களின் “பாசிக்குத்” தனமவர்களைக்கு பிரளவிழுத்து விடுவதைப் பயப்படப்படும்.

இன்னும் அவர்கள், “முத்தக்கீன்களைப் போல் ஷிறுக்கைப்பயந்து கொள்வதாலே சொற்கவாதியாகிய ஆகிறத்துடைய முத்தக்கீன்கட்கு ஒற்றுமையாகுவதால் “அல்லாஹுத்தஆலா”வினது மன்னிப்பு அன்றேல்; பாவஞ் செய்ததினால், “அதாபைக்” கொண்டு அவர்களைத் தூய்தாக்கிவைத்தபின்னர் முத்தக்கீன்களைப் பார்க்கினும் சொற்பமானபாகம் ஆகிறத்திலவர்கட்குண்டாகும்.

ஏழாவது பசுல்.

"தக்வா" உடையோர் சீமானாயும், பாசிக்கு, காபற் ஏழையாயு மிருப்பதைப் பற்றிய வினாவும் விடையும்.

(சுவால்) தக்வாவுடைய மிஸ்கீன்கள் சீமானாயும் காபர்கள், பாஸிக்குகள், ஏழைகளாயும் நாம் பார்ப்பதின் ஹிக்மத்து எவ்வாறு.

(ஜவாபு) அஃது அல்லாஹுத்தஆலாவின் வரிசை. "தான் நாடியவர்கட்குக் கொடுப்பான்" அதையவர்கள் மார்க்கவழியாற் செலவு செய்வார்கள். மேலும், துன்யாவில் அவர்கள்பேரில் "அல்லாஹுத்தஆலா" இன் ஆம் "கொடைகொடுத்தது. அவனது அதிகவரிசையினின்றுமாயிருக்கும் ஏனெனில்; இருவுலகின்; இரண்டு "ஹாலிலும், திடனாக அவர்களை அவன் சீதேவியாக்குவித் திருப்பதால்.

இன்னும், துன்யாவினின்று மவர்கட்குக் கொடுத்த நலவு; சொற்கத்திலவர்கட்குத் தங்கரீக மாக்கப்பட்ட பாகத்தைக் குறைத்துவிடமாட்டாது. அது எதுபோலே யானால், ஈருலகினு நஷ்டமடைந்து, உயிர், மரணம், இரண்டு" ஹாலிலும் அதிகத் தீங்கடைந்த; மிகுத்தகாபர்களை நாம் காண்கின்றோம். அவர்கள் துன்யாவில் அதிகமிடிமையடைந்து ஆகிறத்தில், கடினமான வேதனையடைவது போலவேயாம்" அல்லாஹுத்த ஆலா" தான் நாடியவண்ணம், தன், அடிமைகளிற் செய்து முடிப்பான்.

மனிதர்கட்கு, துன்யாவின் அபேட்சை யதிகமாய் "ஹவா,' வென்னும் ஆசைபலவாறாகுவதை "அல்லாஹுத்தஆலா அறிந்திருப்பதால்; அதைப்பற்றி" குறுஆன் "சரீயில், மிகுத்தவிடத்திற் பழித்துமதைப்பற்றி அச்சம்பூட்டியும் அதை வெறுப்பதையுமபேட்சையாக்குவித்தான், அங்ஙனமே "நபிகணாயகம் அவர்களும் ஆகிறத்தை அபேட்சையாக்குவதிலும், தன்பார்வை வெறுப்பாக்குவதிலும், தங்களின்" ஹதீதுகளில் "தெண்டிப்பைச் சுருக்கிக்கொள்ளவேயில்லை. அவ்வாறே" அஸ்ஹாபுகளும் அவர்கட்குப் பின்னுள்ளவர்களுமாகி விட்டார்கள்.

இதை நீ அறிந்துக்கொள்வாயானால்; காபருகளின் வாழ்க்கை (ஐசுவரியத்தில்) நீ, திகைப்படையாமல், அவர்களின் ஒடுக்கம், தீங்காயிருப்பதை யூகித்து, மூமினானவன் மிடிமையை நீ பாராட்டுதல் செய்ய

மாட்டாய் வலுப்பமாகிய அவனுடைய (தறஜா) வெனும்பாகம்; ஆகிறத்தில் அவனுக்குத் தங்கரீகப்பட்டிருப்பதாலே.

வல்ஹம்து லில்லாஹி, ஹதானாலில் ஈமான். வநஸ் அலுஹு, ஹுஸ்நல்காத்திமா. தன் பீஹுல் அபுக்காறு.

எட்டாவது பசுல்.

அமல்களை ஆராய்ச்சிசெய்தற்கு ஆவசியகமாயுள்ள ஹாத்தமுல் அஸம்முக்குரிய ஆகமம்.

திடனாக, "ஹாத்தமுல் அஸம்மு எனும் புஜர்க்கானவர்கள்! ஷக்கீக்குல் பல்கிய்யி றஹ்மத்துல்லாஹி அலைஹிமா" அவர்களின் சீஷர்களிலொருவர். அவர்கள் ஒருநாள் தினம், குரு, சீஷனை நோக்கி, ஹாத்தமே? எனது சஹ்பத்தெனுஞ் சேர்மானத்தில், எவ்வளவு காலந் தரிப்பட்டிருந்தீர் என வினவியதற்கு, சீஷர், முப்பத்திமூன்று வருடமென்று விடையளித்தார்கள். அங்ஙனம், ஷக்கீக்கு, நீர் ஹாஸில் செய்துக்கொண்ட இல்மினால் என்னினின்றுமெடுத்துக்கொண்ட பிரயோசன மியாதென்றுசாவினார். அதற்கு, ஹாத்தம் எட்டு மஸ்அலாக்களைப் பலனாக்கிக்கொண்டேனென்றார். அதற்கு 'ஷக்கீக்கு' இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி ராஜிஊன். ஹாத்தமே! நுமக்கு அறிவென்ற இல்மை புகட்டுவதில், நும்முடன் என் வயதைப் போக்கியதில், நீர், என்னிடமருளிய எட்டு மஸ்அலாக்களையன்றிப் பெற்றுக்கொள்ளவில்லையாவென்றார்.

சீஷர்:—என்னரிய குருவே, என்னில் மெய்யைத்தேடினால் நான் கூறியவையன்றிப் பெற்றுக்கொள்ளவேயில்லை மேலும் நான்பொய்சொல்வதை யுவக்கவுமில்லை. என்றார்.

குரு:—எனதினிய சீஷரே! நீர் கூறிய எட்டு பலன்களையும் நான் கேட்கும்வாறு விபரமாய்க் கூறுகவென்றார்.

சீஷர்:—ஒன்றாவது, இச்சிருட்டிப் பொருள்களில் நான் ஆராயுதல் செய்ததில், ஒவ்வொருவரும் தனக்கு வந்த வஸ்தையே தெரிந்துக்கொண்டதாயும், அதிற் சிலர், மரணமடையும் வரையில், சிலர் 'புதைகுழி' என்ற 'கபுர்'வரையில், தானுவக்கப்பட்டதிலுறவாடிச் சேர்ந்திருந்தபின்னர். அவனை அவைகள்; பயணமனுப்பிவிட்டு

அவனுடன் கபுரில் புகுதாமல் நீங்கிப்போய்விடுவதை யான் கண்ணுற்று, 'கபுரில்' எனக்கு மருகுதலான துணையாய் ஆகும். 'மஹ்றூபு' எனும் சிநேகிதனைப் பெற்றுக்கொள்ள யான் அபேட்சித்து ஆராய்ச்சி செய்ததில் 'சாலிஹாகிய' அமல் அல்லாத்ததை நான் கண்டுக்கொள்ளாத்ததால் அதையே யான் தெரிந்தெடுத்துக் 'கபுரில்' மருகுதலான துணைக்கருவியாயிருக்கும் மாறு தெரிந்தெடுத்துக்கொண்டேன்.

குரு:—ஹாத்தமே! அழகாக்கிக்கொண்டீர். இரண்டாவதைக் கூறுமென்றார்.

சீஷர்:—இச்சிருட்டிகளில் யான் நோட்டமிட்டதில் ஒவ்வொருவரடங்கலும் தன் நபுசுக்கும் படுதடி ஆசைக்கும்ஐக்கியமாகிச்சிறைப்படுத்தப்பட்டவர்களாய்க் கண்டு "வ அம்மாமன் கால. மக்காமறப்பிஹி" எஃனீ:—நீ, அறிந்துக்கொள்: தன் எஜமான் சந்நிதானத்தில் தரிப்படுவதைப் பயந்துதன் நபுசுக்கு, படுதடி ஆசைநேரிடாமல் விலக்கிக்கொண்டவர்கள், ஒதுங்குந்தானம் உறுதியாய் "சுவனலோகமாயிருக்கும், என்ற, அல்லாஹுத்த ஆலாவின் திருவசனத்தை ஆராய்ச்சிசெய்வித்து" குருஆன் "உண்மையானதெனத் திட்டமாயறிந்துத் தீமையை ஏவும்படியாகிய" நபுசு "அம்மாறு"வுக்கு மாற்றம் புரிந்து அமல் செய்வதின் தெண்டிப்பில் இடைகட்டி, என் "நபுசு" ஹக்குத்த ஆலாவின் வழிபாட்டுக்குக் கீழ்ப்பணியும் வரையில், அதன்மேலெண்ணமாதியஹாஜத்துகளை அதற்குயான் கொடுக்கவில்லை.

குரு:—என தினிமையான சீஷனே! உம்மில் அல்லாஹுத்தஆலா, பறக்கத்தென்ற அரிய போர்வையைப் போர்த்திவிட்டான். மூன்றுவதுகருமமென்னை

சீஷர்:—யான், இந்தகல்குகளில் ஆராய்ச்சிசெய்து, அவ்வொருவரடங்கலுமிந்த துனியாவின். குப்பைக்கூளங்களாகியவதிற் சிலதையெடுத்துக்கொள்ளற்கு முயற்சித்து,கஷ்டத்தின்மீது ஹாஸிலாகிக் கிடைத்தவற்றைக் காப்பாத்திக்கொண்டு, சந்துஷ்டியடைந்திருப்பதைக்கண்டு மாஇந்தக்கும் யென்பது, வமா, இந்தல்லாஹி பாக்கின் எஃனீ— உங்களிடத்திலுள்ள வையடங்கலும் பறு அழிவதாயிருக்கும் அல்லாஹுத்தஆலாவினிடத்திலுள்ளவை யடங்கலும்

தரிப்பாடானவைகளாயிருக்கும், என்ற,சருவரட்சகனின் அரியவசனத்தில் நோட்டமிட்டதினால் துன்யா வில், எனக்குண்டாயிருந்த பொருளடங்கலையும் புக்கரு ஏழைகளுக்கு, ஈகையாக்கிவிட்டு, எனக்காக அல்லாஹுத்த ஆலாவிடம் அமானிதப்பொருளாயும், எனக்கு ஆகிறத்துக்குத் தங்கரீகமாகிய ஜவாதாவாகவுமாக்கிக் கொண்டேன்.

குரு:—மகனே! மிக்க அழகான காரியத்தைச்செய்துக்கொண்டீர் எனினும்; நான்காவது கருமமியாது?

சீஷர்,—இந்த ஆலத்தில் யான் ஆராயுதல்செய்ததில் "இன்ஸானின் சிறப்பும் கீர்த்தியும், குடல்வாய் ஜனங்களாதிய உறமுறையினர்" பல்குவதினால் எனச் சிலரெண்ணி, பெருமையடிப்பவராயும்; பொருட்களும், பெண்டீர் பிள்ளைகளும் அதிகரிப்பதினால், கீர்த்தியும் மாட்சியுமுண்டுமெனச் சிலரெண்ணி. எக்காளமடைபவராயும், கோபம், நகைப்பு அடிதடி, கொலை ஆதிய துற்கிருத்தியங்களால், சிறப்பும், மதிப்புமுண்டுமெனச் சிலரெண்ணி, அகங்காரமேட்டுமையடைபவராயும் கண்டு. இன்ன அக்றமக்கும், இந்தல்லாஹி, அத்காக்கும் எஃனீ.—அல்லாஹுத்த ஆலாவினிடமுங்களில்மிக்க சிறப்பானவன் தக்வா வென்ற பயமிகுத்தவன் என்ற" சர்வபரிபூரணனின் திருவசனத்தைத் தியானித்து "குருஆன்" உண்மை, என்றும், கல்க்குகளின் எண்ணங்கள் தவறுஎன்றும் அறிந்து அல்லாஹுத்த ஆலாவினிடம் சங்கை பொருந்திய கூட்டத்தவர்களினின்றுமாகும் வரையில் தக்வா வையே தெரிந்தெடுத்துக்கொண்டேன்,

குரு:—மகனே! மகாமகிமையை யடைந்தீர் ஐந்தாவதென்னை?

சீஷர்:—இந்த கல்க்குகள், பொருள், தலைமைத்தனமாதியவைகளை, உவக்குகின்ற விசேஷத்தினால், சிலர். சிலரைக், கோபம், ஹஸது, முதல் வனவைகள்விளையுமாகியகாரியங்கள் செய்தற்குக்கண்டு நஹ்னு,கஸம்னு, பைனஹும், மாஷத்தஹும், பில்ஹயாத்திததுன்யா எஃனீ இவ்வுலகத்தில்; அவரவர்களின் நிருபாகங்களை அவரவர்கட்கிடையில் நாமே, பங்காக்கிவைத்தோம். என்ற அல்லாஹுத்தஆலாவினது அரியபெரிய திருவசனத்தை ஆலோசனை செய்து, குறித்தபிரிவினைகள் பூர்வீகத்திற்றானே தரிப்பட்டிருப்ப

தாலே அதில் ஒருவருக்கும் இக்தியாரெனும் தெரிவுதலில்லை, எனவறிந்து; பின்னர் எதுவிடயத்திலும் ஹஸது நினையாமல் அல்லாஹுத் தஆலாவின் பிரிவினையளவிற் பொருந்தி துன்யாவாதிகளுடன் இணக்கம் பெற்றுக்கொண்டேன்.

குரு:—அறிவுடைய மகனே! அழகான கருமத்தில் நிலைபெற்றீர். ஆறுவதென்னை.?

சிஷர்:—இன்னு மிப்பூவுலகத்திற்றனே நோட்டமிட்டு; நபுஸானிய்யத்தான பலன் ஷெய்த்தானிய்யத்தான கலக்கம், ஆதிய காரணத்தினால், பகை, குரோதம், அழிச்சாட்டியமாதியவைகளால் தற்கங்கள் பண்ணிக்கொள்ளலைக் கண்டு இன்னஷ்ஷெய்த்தான அதுவ்வுன், லக்கும், பத்தகிதூஹு அதுவ்வா எம்னீ:— உறுதியாக, ஷெய்த்தானனவன் உங்களுக்குப் பகையன். அவனை; பகையனுக்கிக்கொள்ளுங்கள். என்ற, அல்லாஹுத் தஆலாவினது, அழகிய வசனத்தை ஆராய்ந்து 'குருஆன்' உறுதியானது ஷெய்த்தானுமவனையுடையவர்களுமே யல்லாது மூமினனவர்கட்குப் பகைவராகமாட்டார்கள் என்றறிந்து அல்லாஹுத் தஆலாவின் ஏவலுக்கு வழிப்பட்டு அவனின் வலுப்பத்தை முறுக்கிபா பின்றொடர்ந்து, கல்குகளியாரையும் பகைமைப்படுத்தாமல், ஷெய்த்தானையே பகையனுக் அலம் அஃஹது, இலைக்கும், யாபனீ ஆதம, அன்லா, தஃபுதூஷ் ஷெய்த்தான இன்னஹூ, லக்கும் அதுவ்வுன்முபீன் வஅனிஃபுதூனீ ஹாதா சிறாத்துன்முஸ்தக்கீம். எம்னீ:—ஆதமுடைய மக்களே! ஷெய்தானுக்கு வழிப்படாதீர்கள். உண்மையாக அவன் உங்களுக்கு நிச்சயமான பகையன் எனக்கு வழிப்பட்டு வணங்குங்கள். இதுவே நேர்மையான பாதையென்று உங்களள்வில் நாம் அறுதிமானஞ் செய்யவில்லையா? என்ற; அல்லாஹுத் தஆலாவினது அரிய வசனத்திற்றன் நேர்மையான வழி உண்டென அறிந்தேன்.

குரு:—என்னரிய மகனே! மகா மகிமையுள்ள காரியத்திலுறவாடி ஜயமடைந்தீர். ஏழாவதென்னை.?

சிஷர்:—இந்த ஆலத்தில் நான் நோட்டமிட்டதில்; ஒவ்வொருவாடங்கலும் 'உணு'வென்னும் வஜீபனத்தைச் சேகரமாக்கிக்கொள்வதில், தனக்குரிய தைரியத்தின் தீர்ச்சையை செல்படியாக்கி, தன்நபுசை

சறுகுதலாக்கிக்கொள்கின்ற காரணத்தால் சந்தேகம், ஹறுமதியவைகளில் விஷயமாயிருப்பதைக்கண்டு வமாமின் தாப்பத்தின், பில்அற்லி, இல்லா அலல்லாஹி, றிஸ்க்குஹா எம்னீ:—இவ்வுலகத்தில் யாதொரு உயிர்ப்பிராணியுமில்லை. அதற்குரிய இரணம்; அல்லாஹுத் தஆலாவின்மீ துண்டாயிருந்தேயொழிய வஅன்லைலை, லில்இன்ஸானி இல்லாமாஸஆ. எம்னீ:—இன்ஸானுக்கு அவனவன் செய்த முயற்சியேயொழிய வேறில்லை யென்றுள்ள அல்லாஹுத் தஆலாவினது திருவசனத்தை ஆராய்ந்து, நாமும் இவ்வுலகத்தினது உயிர்ப்பிராணிகளில்; ஒரு பிராணியாயிருக்கின்றேம். நம்முடைய இரணம் அல்லாஹுத் தஆலாவினிடத்து பிணையாக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், ஆகிறத்தைத் தேடுவதில், நாம் முயற்சி செய்க, சாட்டுதல் செய்யப்பட்டவன் எனத் தீர்மானித்து யாவற்றையுஞ் சிருட்டித்த 'அல்லாஹுத் தஆலா'வைக்கொண்டே பாரக்காகிவிட்டேன்.

குரு:—மகனே! மகா மாட்சிமையுடைய அரிய கருமத்திலுறவாடி ஊசாடி உண்மையை அடைந்தீர். எட்டாவதென்னை.?

சிஷர்:—இச்சிருட்டிகளிற் சிலர், தன் பொருளின்மேலும், சிலர் தன் இராஜரீகத்தின்மேலும், சிலர் தன் தொழில்களின்மேலும், சிலர் தன்போல்வன 'மக்லூக்காகிய' படைப்புகளின்மேலும், ஊன்றுதலுதவி தேடுவதைத் தியானித்து வமன் யத்தவக்கல், அலல்லாஹி, பஹுவ, ஹஸ்புஹு. எம்னீ:—அல்லாஹுத் தஆலாவின்பேரில் தவக்கல் எனும் பாருசாட்டுதலாகிய ஊன்றுதலுடையவர்கட்கு 'அவனே' அவர்கட்குப் போதுமானவனாயிருக்கும், என்ற அல்லாஹுத் தஆலாவினது திருவசனத்தில், நான் மேலெண்ணம் வைத்து அல்லாஹுத் தஆலா அளவில் 'தவக்கல்' வைத்தேன். ஆனதால் அவனே எனக்கும் போதுமானவனாயும், காரியஸ்தர்களில் மிக்கநலமானவனுயுமிருக்குமென்று முடித்தார்கள்.

குரு:—ஹாத்தமே? அல்லாஹுத் தஆலா உமக்கு நல்லுதவி யருட்புரிவானாக. உறுதியாய், நான் தவுறாத்து, இன்ஜில், ஜபூர், புருக்கான் இந்நான்கு வேதங்களையு மாராய்ந்துணர்ந்தேன். அவையடங்கலும், இந்த எட்டு மஸ்அலாக்களின் பலன்களைவிட்டு நீங்கப்பட்டதாய்க் காண்கவேயில்லை. இவைகட்போல் 'அமல்' செய்பவன்

அந்நான்கு வேதங்களிலுள்ளனவைக ளடங்கலைக்கொண்டும் அமல் செய்தவனைப்போலா யிருக்கும் என்று முடித்தார்கள்.

இந்த ஆகமத்தால் உனக்கு அறியப்பட்டதாவது; தசவ்வுபு வகைகள்போன்ற இல்முகளில் அதிகமாவசியகமாய், நீ தேள்வையாகமாட்டாய், என்பதுனக் கறியப்பட்ட அறிகுறியாய்விட்டதென்பது வெளிப்படையேயாம். ஆகையாலினி நாம் விபரித்தற்கு உடன்பட்ட விஷயத்திற் செல்லுவோமாக.

“வல்லாஹுல் முவட்டிக்கு, குலாஸத்துத்
தஸானீபு, வில்இமாமில் கஜ்ஜாலிய்யி”

ஆறும்பாபு முற்றிற்று.

ஏழாம் “பாபு”

நாற்கால் “விலங்கினங்களையும், அதன்பலனாகிய வைகளையுங் கூறல்”

(ஒன்றுவது பசுல்.)

“ஒட்டகம்”

இன்ஸானுக்குப்பின், படைகோலத்தில், ஆச்சரியமும் கனமானவைகளைச் சுமப்பதில்: தத்துவமும், வலுவுள்ளசடலமும், வழிப்படுதலும், அதிகப்பலனுடையதும் மருகுதலும், துன்பம், தாகம், பசி, யாதியவைகளில் பொறுதியும், தழுமையும், விரிந்தவாயும் கூரியபற்களும் எகிர்பெலமும், பெரியக்குடலும், மிக அசைபோடுதலும் நீண்டகளுத்தும் நீண்டகாலு முள்ளமிருகம்.

“பிரயோஜனங்கள்”

ஒட்டகத்துக்குப் பித்தின்றி, அதைப்போல் “ஷீஆபு” எனும்வாய் நீருள்ளவோர் தொலி, அதன், ஈரல்குலையுடனிருக்கின்றது. அந்நீரைப் பிடரியில் பூசினால், தொண்டைப்படுவன் என்ற நோயைக்கண்டிக்கும், அதில் ஒரு“கீறுத்து” என்ற நிறையும், சமனிடைகஸ்தூரியுஞ் சேர்த்து “நசியம்பிழிந்தால் வலிப்பாதிய நோய்களைச் சுஸ்தப்படுத்தும்.” ஈரலைத் தின்று வருவதினால், கண்ணில், நீர்வடி தலை நிறுத்தும். அதன் கொழுப்பிருக்குமிடத்தில் பாம்புகள் தரிப்படா. திமில்தசையையுருக்கி, மூலத்திற்பூசினால் வலியடங்கும்; கல்லுள்ள கழலைக்கட்டி, அதன் குடலுடனிருக்கும் அதைச்சிருக்காவுடனரைத்தால் வெளுக்கும். அதுகொல்லக்கூடிய நஞ்சடங்கலுக்கும்பலன் கொடுக்கும். எலும்பை யரைத்து, எண்ணையுடன் கலந்து. வலிப்புள்ளவனின் தலையிற் பூசினால் நிவர்த்தியாம். ரோமத்தை இடது தொடையிற் கட்டினால் நீரொழுக்கை நிறுத்தும். படுக்கையில் “மோளும்பாலகர் தொடையில் கட்டினால் அதைச் சாந்தப்படுத்தும். மெல்லிய ரோமங்களைக்கரித்து இரத்தம்வடிகின்ற” காயங்களிலும், சின்னிமூக்கில் நின்று மிரத்தமோடுதலிலுந் தூவினால் அதை நிருத்தும். பால், நஞ்சடங்கலுக்கும் பலன்கொடுக்கும். அப்பாலை கொப்பளிப்பதினால் சொற்றைப்பல்லுக்குப் பலன்கொடுக்கும். சிறுநீரை உறையும்வரையில் காய்ச்சி, “பவுந்திரத்தில்” பூசினலதை சுஸ்தப்படுத்தும். அந்நீரைக் குடிப்பதினால் முகத்திலுள்ளமஞ்சணிப்பைமாற்றி“ஜிமாஃசெய்வதற்குப்பலன் கொடுக்கும்” “விட்டை சின்னிமூக்கைத்தறிக்கும். அம்மைத்தழும்பைமாற்றும்” அரும்பாரை “யுள்ளிகளைப் போக்கும். ஒட்டகை விழுந்துபுரண்ட கல்லை வைத்த பாத்திரத்தில் வஜிபனிப்பவர்கள், அக்கல்லு அப்பாத்திரத்திலிருக்குமளவும் அவ்வொஜீபனத்தினின் பத்தை யடையார்கள். அக்கல்லை மோகங்கடிசானவர்கள் பேரில் கட்டினலம்மோக நிவர்த்தியாம்.

ஒட்டகத்தைப் பாம்புகடித்தால் அது; நண்டைப்பொசித்து அதன் விஷயத்தை மாற்றிக்கொள்ளும் “இதனால்; நண்டு? பாம்பு விஷத்துக்குப்பலன் கொடுக்குமென்று “இபுனுசைனா” அருட்செய்திருக்கின்றார்கள்.

(இரண்டாவது பசுல்.)

“மரை” மலை “வெள்ளாடுமிதுவாம்”

பாம்பைத்தின்பதில், காட்டுமாட்டுக் கொப்பாயும், வேடனைப் பயந்து நீண்டமலையுச்சத்தில் நின்றும் கொம்பின் பேரில் தலைக்கீழாய்ப் பாய்கின்றதையும், கொம்பிலுள்ள முடிச்சின் எண்ணிக்கைபடி வயதுள்ளதாயும், தன்னைத் தீண்டிய பாம்பின் விஷத்தைநண்டைத் தின்றுநிவர்த்திசெய்துக்கொள்வதாயும், கடற்கரையோரஞ் சென்று மீன்வேட்டையாடுவதாயுமுன்ள மிருகம்.

பிரயோஜனங்கள்

அதன், ஈரமானகொம்பில் ஒருகளஞ்சி, யிடை, கஸ்தூரியுடன் சேர்த்துத் தண்ணீரில், கலந்து வெறும்வயற்றில் அருந்தினால் பலவித வலிப்புள்ள நோய்கஞுக்குப்பலன் கொடுக்கும். அக்கொம்பை அரைத்து வெண்குஷ்டம், பத்து, இவைகளிற் பூசினால் பலன்கொடுக்கும். அதை முட்டம்போட்டால் பாம்புகள் வெருளும். அதைப்பிரசுவமாகிறவள் கொழுகிக்கொண்டால் அட்சணமே பிரசுவமாவாள். அதன்பித்தைக்கண்ணில் தேய்த்தால், கண்மறைவு நீங்கும், மேலும் நஞ்சடங்கலுக்குந்தக்க அவிழ்தமாகும். அதன் ஈரல்குலையை சூட்டுலர்த்திப்பொடித்து, கண்ணிலிட்டால் கண்மறைவு நிவர்த்தியாம். அதன் மாமிசம், முறைக்காச்சலை வருத்தும். தேள், குளவி, கடிவாயில், ரப்த்தால் விஷநீங்கும். அதன் கொழுப்பின்வாடையால்தேள்க்கள் சாகும். அதன்கோசத்தை அரைத்து, நீரில் கலந்துக்குடித்தால், பாம்புகடிவிசந்தீரும். தாதுவிர்த்தியை யதிகப்படுத்தும் அதன் விரைக்கொட்டையை யுலர்த்திப்பொடித்து நீரில் கலந்துக்குடித்தால், பொறுதிசெய்யப்படாத அதிமோகத்தை விளைவிக்கும். அதன்தொலியில்“சுப்பரு”செய்தால் அதனருகில், பாம்பு,எலியாதியவிஷ ஜெந்துக்கள் முடுகா. அதன் கொம்புடன் வாலைக்கரித்து எண்ணெயில் குழப்பி உள்ளங்காலில் பூசிக்கொண்டவன் வருத்தமன்றி அதிசந்தோஷகாணத்தோடு நடப்பான். அதன் “ரோமத்தைமூட்டம் போட்டால், புழுப்பூச்சிகள் வெருளும். அதன்வாலின் ரோமங்கொடிய நஞ்சு. அதையுட்கொண்டால் துக்கமுண்டாகும். அதன்சிறு நீரைத்தேனுடன் உட்கொண்டால் குன்மநோயை அட்சணமே கண்டிக்கும். அதன் புளுக்கையை ஓடுகின்ற உதிரத்தில் உதிர்த்தினால் உடனே நிறுத்தும்.

(மூன்றாவது பசுல்)

“நரி”

காய், கனிகளில், முக்கியம் “முந்திரிக்கனியைக்” கெடுப்பதிலும், பார்வையால் உச்சத்திலிருக்கின்ற கோழி எதிரில் விழுமாறு செய்வதிலும், தந்திரமாய் மீனை வேட்டையாடுவதிலுமுள்ள மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் நாக்கை வைத்துள்ள வீட்டுடையவர்களுக் கிடையில் வழக்குண்டாகும். அதன் பித்தை “அரை’ திருஹத்து, சுடுதண்ணீரில்கலந்து

வெறும் வயிற்றிலருந்தினால் ஈரல் குலைவலியைத்தணிக்கும், அதன்மாமிசம், பைத்தியத்துக்கும் மாதக்கடைசியிலுண்டாகின்ற வலிப்புகளுக்கும் பலன் கொடுக்கும். அதன் ஈரல் குலையில் களஞ்சி இடைவலிப்புள்ளவனுக்குண்ண கொடுப்பதால் பலன் கொடுக்கும், அதன் எலும்பின் மூளையைப் பொரிகாரத்துடன் கலந்து வெண்குஷ்டத்தில் கட்டினால் அல்லாஹுத்தஆலாவின் உத்திரவுகொண்டு அது நிவர்த்தியாகும்.

(நான்காம் பசுல்)

“புலி”

விரைந்துபார்ப்பதிற் கடுசா[illegible]ய தத்துவத்தையும், அமளிவருத்துவதையும், தான்வேட்டையல்லாத்ததைத் தின்னாத்ததாயும், இராகமான தொனிகளையுகந்ததாயும், இரவிற்காணப்படும் வெளிச்சத்தால் கோபமடங்கப்படுவதாயும் தனக்குத் தழுமைத்தனத்தை நாடாத்ததாயும் தன் வியாதிகட்கு மருந்தாகக் குரங்கையருந்துவதாயும் நீங்காத ஜுரமுடையதாயும் வெள்ளைச்சாவலாலும் வெண்டய சப்தத்தாலும் வெருளுவதாயும் பசிவேளையில் சீர்போடாத்ததாயும், எறும்பினால், துன்பவாதனையடைவதாயுமுள்ள துஷ்டமிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் பல்லை வைத்துக்கொண்டால் பல்வலி நீங்கும் பாலகனில் கட்டினால், லெகுவாய்ப்பல்முளைக்கும் அதன் பித்தையுட்கொள்ள திறமையுண்டாகும், ரோமங்களுதிர்கின்றதையும், வலிப்புள்ள நோய்களை[illegible]ம் போக்கும். கண்ணில் தேய்ப்பதினால் இரத்தமோடலை நிறுத்தும். [illegible]ண்டமாலை என்ற வியாதி மேல்பூசினால் வேருடன் களையும், அதன் கொழுப்பை[illegible]சினால் மூலரோகங்களும் வீக்கங்களுந்தீரும். (திரூ) முகத்திலும், சரீரத்திலும் பூசிக்கொண்டால் துஷ்டமிருகங்கள் முடுகா, வீட்டில் வைத்திருப்பதால் எலி, தேள், வெருளும் பாத்திரத்திற்றடவினால் அதில் யாதொரு மிருகமும் நீரருந்தாது. இரண்டுகண்ணிற் கிடையிலுள்ள கொழுப்பையுருக்கி முகத்தில் தடவிக்கொண்டவனைப்பார்த்தவன் திடுக்கமடைவான். அதன் மாமிசம், பக்கவாத நோய்களுக்கும் சோர்ந்த உருப்புகளுக்கும் பலன் கொடுக்கும். அதன் இரத்தத்தைப் பெருங்காயத்துடன்மத்தித்து வெண்குஷ்டத்திற் பூசிவரத்தீரும். அதன்

விரைக்கொட்டையைத் தின்றவள் கெர்ப்பமாகாள். தின்ற, ஆண்பிள்ளைக்குத் தத்துவங் குறையும். அதன் விரல்களையணைந்தவனிட மிருகங்கள் முடுகாது. அவ்விரல் விழுந்த நீரைக் குடித்தமிருக மெலிவுறும். அதன் தொலியை,முறைக்காச்சல் வந்திருக்குஞ் சமையத்தில் வேர்க்கும் வரையில் போர்த்திக்கொண்டால் அந்நோய் நீங்கும். நேமமாய்த் தொலிமே லுட்கார்ந்திருந்துவந்தால் மூலரோகங்கள் நீங்கும். அத் தொலியால் செய்யப்பட்ட (கோட்டின்) தம்பட்டத்தின் சப்தங்கேட்க, குதிரை வெருளும் அதன் நெற்றித்தொலியை, நெற்றியில் தலைப்பாவின் கீழ் வைத்துக்கொண்டவனைக்கண்டவர்கள் திடுக்கமடைவார்கள். அதன் ரோமங்களைக் கரிக்குமிடத்தைவிட்டு மிருகங்கள் வெருளும், கள்ளில் போட்டுவைத்து, குடித்தவன், கள்குடியை வெறுப்பதுமன்றிப் பின்னுமதில் மீளான்.

——(:0):——

ஐந்தாவது பசல்.

முஸல்.

மிகுத்த பிள்ளைகள் பெருவதாயும் வருடந்தோறும் ஆண்பெண்ணையும், பெண் ஆணையும் மாறிவருவதாயும் மாதவிடையுள்ளதாயும், காலைக் காண்க, கைகட்டையாயும் நித்திரையில் கண், எறிச் சொருகியதாயும், தன் வியாதிகட்குப் பச்சைக்கரும்பை யவிழ்தமாய்ப் பொசிப்பதாயுமுள்ள மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் தலைமூளையைத் தின்றும், தன்னபிமானத்துள் வைத்துக் கொண்டவனைப் புணர்ந்தவள் கெற்பமாவாள். பாலகனின் பல்லில் தேய்த்தால் நோவின்றி விரைவில் பற்கள் முளைக்கும். அதன் சொத்த பல்லை வைத்தாலும் பாலகர்கட்குப் பல் முளைப்பிக்கும். அதன் பித்தையுட்கொண்டால் நித்திரையதிகரிக்கும். அதற்கு, சிறுக்காவைக்குடிக்க அந்நித்திரை மாறும். அதன் இரத்தத்தைக் குடித்தவள் எப்பொழுதும் கெர்ப்பமாகாள். கண்ணில் தேய்த்தால், ரோமம் முளையாது. கறுமேகம், கறும்பத்து, முகக்கறுப்பு இவைகட்குப் பூசுவதால் பலன் கொடுக்கும். அம்முஸலை நீரில் வேகவைத்து அந்நீரில் சூலைவலி, கை கால் வலியுள்ளவள் உட்கார்ந்திருந்தால் நல்ல பலனையடைவாள். அதன்

கோரோசனையைத் தின்றாலும், அல்லது தண்ணீரில் பாலில் குழைத்து குன்மநோயுடையவர்க் குடித்தாலுடனே நீங்கும். சிறுக்கா (காடி) யுடன் கலந்துட்கொண்டால் நஞ்சடங்களுக்கு மவிழ்தமாகும். வலிப்புகளையுமடக்கும். அதன் காலை; மூளிகளில் வலியுள்ளவனுக்கு, வலதுக்கு வலதும், இடதுக்கு இடதுகாலிலுங் கட்டினாலதுநீங்கும். அதன் 'அபத்தை' யுட்கொண்டவளைப் புணர்ச்சிசெய்தால் கெர்ப்பமாவாள். அதன் கணைக்கால் பரண்டைக்காலைக் கட்டிக்கொண்டால் கண் திஷ்டி, ஷிஹர் விலகும். அதை அதன் மலத்துடன் கட்டிக்கொண்டவள் கெர்ப்பமாவாள். அதன் ரோமத்தைப் புகைபிடித்தால் 'நுரையீரல்' வலியை விலக்கும். அதைப் புண்ணுடன் சேர்ப்பித்தால் இரத்தமோட்டலை நிறுத்தும்.

——(*)——

(ஆருவது பசல்.)

"கீரிப்பிள்ளை"

——()——

நீண்டதும்; நுட்பமானதும், எலி, பாம்பு; முதலை இவைகளைப் பகைத்துத் திறத்தக்கூடியதும் நகை இரத்தினமாதியவைகளை யுகந்து களவுசெய்வதும், பாம்பைக்கொலை செய்ய நாடினால் "சதாபு" இலையைத்தின்று அந்த வாடையால் பாம்பு பெலவீனமானபின் கடிக்கின்றதும் கோழி முட்டையைத்தின்பதால் தன்வியாதிகளைச் சுஸ்தமாக்கிக் கொள்வது முள்ளமிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் தலைமூளையைக்கண்ணில் தேய்ப்பதால் இருள் நீங்கும். அதன் மாமிசத்தை மூளிகளிலுள்ள வலிகட்குக் கட்டினாலவை நீங்கும். சூப்புடன் சேர்த்துட்கொள்ள அவ்வலிகள் நீங்கும் அதன் கொழுப்பை பல்வலிக்கு [illegible]சினாலவைநீங்கும். அதன் பிடரி இரத்தத்தைக் கண்டமாலையிற் பூசினாலவை நீங்கும். அதன் இரத்தத்தை "எலி" இரத்தத்துடன் சேர்த்து வீட்டில் தெளித்தால் அவ்வீட்டுடையவர்களுக்கிடையில் வழக்குண்டாகும். அதை எலியுடன்சேர்த்து புதைத்தாலும் வழக்குண்டாகும். அதன் பரண்டைக்காலை, சேர்க்கைசெய்யும் பொழுது வைத்துக்கொண்டவள் கெர்ப்பமாகாள். அதன் விரைக்கொட்டையு மவ்விதமே. அதன் மலத்தைக் காயங்களிற் சேர்ப்பித்தால் தன்கெட்ட இரத்தத்தைத்தறிக்கும்.

(ஏழாவது பசுல்.)

கோவேறுகழுதை.

——(:)——

குதிரையும், கழுதையும் புணர்ந்துண்டாவதினாலே அவ்விரண்டின் குணகுணங்கள், கோலங்களுள்ள மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் காதழுக்கையுட் கொண்டவள் கெர்ப்பமாகாள். அதன் மூளையைத்தின்றவன் சுகாதீனமிழந்து தூக்கம்பிடித்தவனைப் போலாவான். கெர்ப்பஸ்திரிகள் தின்றால் கெட்டபிள்ளைகளைப் பெறுவாள் அதன் தாமரங்காயைத்தின்றவள் கெர்ப்பமாகாள் அதன் குளம்பின் நகத்தின் சாம்பலைத்தின்றவளுங் கெர்ப்பமாகாள். அச்சாம்பலை "ஆச" எண்ணெயுடன் கலந்து, மொட்டைத்தலையில் தேய்த்து வருகமயிர் முளைக்கும். அதன் விரைக்கொட்டையைப்பட்டு துண்டில் பொதிந்து மிருகங்களிற் கட்டினாலவைகள் வருத்தமின்றிப் பெலமாய் நடக்கும். அதன் சிறுநீரைக்குடித்தால் வயிற்றில் மரித்தபிள்ளை வெளியாகும். பிரசவவாதனையுடையாள் விரைவில் பிள்ளைபெறுவாள். அதன்(லத்தி)மலத்தைமுகர்ந்து, அதில் உமிழ்ந்து வழிகளிலெறிந்தாலதை மிதித்தவனுக்கு "சனி" தடிமல் "உண்டாகி, எறிந்தவனுக்கு நீங்கும்; அதன் பின்புரத்தில் காணப்படும், ஈயைப்பிடித்துலர்த்தி மூலநோயுள்ளவன் புகைபிடித்தாலதை நிவர்த்தியாகும் அதன் நெற்றித்தோலைக் கரித்தவிடத்தில் யாதொருகருமமு முடிவுபெறாது.

——(:(0):)——

(எட்டாவது பசுல்.)

பசு மாடு.

◆

கடின்பெலமும் அதிகப்பலனுடையதாயும் மனிதனில் மருகுதலாவதாயும், வாயின்மேற் புரஞ்சட்டிப் பல்லில்லாத்ததாயும் விரைவில்பெலமிழந்து கிழடாவதாயும் கொம்பில் எண்ணெய்ப்பூசினால் சீர்போடாத்ததாயும், அதற்குக் கொடியவியாதிகளுண்டானால், அதன் கொம்பில், தந்தம், ஆமையோடு இவைகளைச்சேர்ப்பித்தா லவ்வியாதி நீங்குவதாயுமுள்ளமிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் கொம்பைக்கரித்து ஔஜீபனத்துடனுட் கொள்ளநாலாமுறை காச்சல் நீங்கும்(தி.ஆ) குடிப்புடன் சேர்த்து குடித்தால் தாதுவிர்த்தியதிகமாகும். கோசம் பெலனுமுண்டாகும். விந்துறலதினப்படும், சின்னிமூக்குடைந்தவன் மூக்கிலூதினால் இரத்தமோடலைநிறுத்தும் "சிறுக்கா" காடியுடன் சேர்த்து சூரியபுடத்தில் வைத்து வெண் குஷ்டத்திற் பூசினாலதை நிவர்த்திசெய்யும். அதன் பச்சைமூளையை எண்ணெயுடன் சேர்ப்பித்து வலியுள்ள காதில் ஊற்றினாலவை நீங்கும் காராங்காளை நாக்கையுலர்த்திப்பொடித்துப் புளித்தக்கொளிஞ்சிப்பழச்சாருடன் மத்தித்துக் களஞ்சி இடை "நக்கி" யுட்கொண்டுவந்தவனைப் போர் சண்டையில் யாருமிகைக்கார்கள். அதன் பித்தை "ஜர்ஜீர்" விதையுடனும் முள்ளங்கிவிதையுடனும் அதன் நீருடனும் நெருப்பில், நன்றாய் கொதிக்க வைத்து முகக்கறுப்பு, பத்து இதுகளில் பூசினாலதை நிவர்த்திசெய்யும் காளைமாட்டின் பித்தை மரங்களிற் பூசினாலவைகளில் புழுவுண்டாகாது. அதை எலி, புளுக்கையுடன் கலந்து குன்ம வலியுடையவனணைந்துக் கொண்டாலுடனே பலங்கொடுக்கும். காராம்பசுவின் பித்தைக்கண்ணில் தேய்த்தால் கண் மறைவு நீங்கும் கூர்மையுண்டாகும். மோதிரத்தின் சித்திரங்களை வாசிப்பான். ஆச்சரியத்தை நாடினால். பாத்திரத்தினுள்ளில். காளையின் கொழுப்பை பூசி வாய்விளம்புவரையில் பூமியில் புதைத்து வைத்தாலதில் "செல்" கள் சேர்ந்து விடும். காளையின் மாங்காயைக் கண்டமாலை யுடையவன் கொழுகிக்கொண்டாலது நீங்கும். எருதின் விரக்கொட்டையை யுலர்த்திப் பொடித்துக்குடிப்புடன் சேர்த்துக்குடித்தால் விந்தூரலதிகரித்துத் தாது புஷ்டியைக் கொடுக்கும். ஜிமாக்குதவியாயிருக்கும், அதன் கோசத்தை யுலர்த்திப் பொடித்து இலேசாய் வேகவைத்த முட்டையுடன் சேர்த்துட் கொண்டால் ஆச்ச[illegible]ன தாதுவிர்த்தியை யுண்டாக்கும் அதன் பாண்டை[illegible]காலைக்கரித்துப் பல்லில் தேய்த்தால் அழுக்கைபோக்கி வெண்மையாக்குவிக்கும். அதன்பால், மஞ்சணிப்பை மாற்றும். தேள்கடிவாயிலதன், நெய்யைப் பழகினாலுடனே பலன்கொடுக்கும். இரத்தத்தை வீக்கத்தில் பூசினால் சரீரவலிகளையடக்கும் (தி.ஆ.) பழமையான நெய், காயங்களுக்குப் பலன் கொடுக்கும். இரத்தத்தை வீக்கங்களில் பூசினாலதைச் சுஸ்தப்படுத்தும் (தி. ஆ.) காளையின் சிறுநீரை, மனிதன் சிறு நீருடன் கலந்து இரண்டு கால்; கை, விரல்களில் பூசினால் நாலாமுறை காச்சல் நீங்கும்.

காளையின் சாணியை ஈத்தப் பழச் சார்க் "காடி"யுடன் கலந்து பெ மாகிய கட்டு "சிலந்தி"களின் பூசினுலுங் கட்டினுலுமதை யுடைக்கு (தி.அ.) அதன் "எரு" விட்டையை "சிறுக்கா" காடியுடனும் பன் ருடனுங் கலந்து குழவிக்கடிவாயில் கட்டினுலதன்விஷமடங்கும். அதை அரும் பாரையில் பூசினுலதைக் களையும்.

ஒன்பதாவது பகல்.

காட்டுமாடு.

ஆவாரமும், வனுவும் கிளைகளையுமுடைய கொம்புடையதும் ஒவ்வொரு வருடங்களிலும் அக்கொம்பின்; பணாதிகமாவதும், இராகமான தொனிகளின் பிரியுள்ளதும் பாம்புகளைத் தின்னுவதினுலதன் வியா களைப் போக்கிக் கொள்வதும், பாம்புகளைக் கொல்லுவதிலும், தொ களை யறிதற்குக் காதை யுயர்த்துவதிலு முள்ள மிருகங்கள்.

பிரயோஜனங்கள்.

அதன் மூளையை தின்னுவது, பக்கவாத நோய்களுக்குப்பலன் கொடுக்கும். அதன் கொம்பின் பணில் ஒரு துண்டைவைத்துக்கொண்டவனைக்கண்டால் துஷ்ட மிருகங்கள் வெருளும். வீட்டில் மூட்ட போட்டால் பாம்புகள் வெருளும். அதன்சாம்பலைச் சொத்தைப் லில் வைத்தாலதன் வலியடங்கும். அதன் கண்ணீர் கருசடங்களுக்கு மகிழ்தமாம். அதன் இரத்தம் குன்மவலிக்கும் நீர் கடுப்புக்கும் பலன் கொடுக்கும். அதன் தோலினை வீட்டில் புதைத்தால் பாம்புகள் வெ ருளும். அதன் ரோமத்தை வீட்டில் புதைத்தால் எலிகள் வெருளும் பாம்பு, வண்டு, இவைகளின் கார்மானத்துக்காக "வவ்வால்", தன் டில் அதன் ரோமத்தை வைத்துக்கொள்ளும். அதன் [illegible] கொடுங்கையிற் கட்டிக் கொண்டவன் புழுப் பூச்சிகளடங்கலை விட் மசாந்திருவான் அதன் குளம்பை வீட்டில் புதைத்தால் பாம்பு வெருளும்.

பத்தாவது பகல்.

குழிநரி.

உபாயதந்திரமும் ஆச்சரியமான குபாடமும் வருடாந்தோறும் மயிர் உதிர்வதும், பசிவந்தநேரத்தில் மரணமானதுபோற் கிடக்கையில் அங்கு விசயமாகும் பறவைகளை நாடியமட்டும் பட்சித்துக் கொள்ளுந் தந்திரமும் நாயனிடத்தில் தன் தந்திரஞ் செல்லாமல் விரண்டோடலும், முள்ளெலியின் பேரில் மோண்டு பிடிக்கின்றதிற்கும், வெங்காயந்தின்பதினுலதன் வியாதிகளை சுஸ்தப்படுத்திக்கொள்வதும் மெல்லிய பஞ்சு போன்ற ரோமங்களை வாயில் வைத்துக்கொண்டு, தண்ணீரில் கொஞ்சங் கொஞ்சமா யிரங்கித் தன்சரீரத்திலுள்ள பேன்முழுமையும் வாயிலுள்ள ரோமத்தில் வந்தவுடன் அதைத் தண்ணீரில் விட்டுவிட்டுத் தண்ணீருள் முங்கி மறுவிடத்தில் வெளிப்படுவது முள்ள மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் தலையைப் புறாக்கூட்டில் வைத்தால் வெருளும். அதன்வீரப் பல்லைப் பாலர்கட்குக் கட்டினுல் கெட்டவாடை, நித்திரையின் திடுக்கமிவைக ணீங்கிக் குணமுகாகும், அதைப் பல்வலியுள்ளவனுக்கு வலதுக்கு வலதுபக்கமும் இடதுக்கு இடதுபக்கமுங் கட்டினுல் தீரும். அதன் பித்தை வலிப்புள்ளவன் மூக்கி லூதினுல் அம்மாதத்தில் அவ்வலிப்புவாராது, கண்ணில் தேய்த்தால் நீர் வடிதலை நிறுத்தும். அதன் மாமிசத்தைக் கடினவியாதிகட்கும், குஷ்டம், பக்கவாதமிவைகட்கும் நேமமாகத் தின்று வந்தால், பலனைக் கொடுக்கும். அதன் கொழுப்பை யுருக்கி; சூலைவலியுள்ளவனுக்குப் பூசினுல் பலன் கொடுக்கும், மாதுளங் கொம்பில் பூசி வீட்டில் வைத்தால் செல்கள் மிகவாகும். அதன் வீரக் கொட்டையைப் பாலன் சிறுபிள்ளைகட்குக் கட்டினுல், லெகுவாய் பல் முளைக்கும். அதன் கோசத்தைப் பொட்டு வலியுள்ளவன்கட்டிக்கொண்டாலது நீங்கும். அதன் தொலிவயரோட்டக்காரனுக்குப் பலன் கொடுக்கும் அதன் இரத்தத்தைப் பாலகனின் தலையில் பூசினுல் அழகாக ரோமங்கள் முளைக்குமாப்போல் மொட்டைதலையிலும் முளைக்கும். அதன் வாலை வைத்துக்கொண்டவனிட மெவனுடைய தந்திரமுஞ் செல்லுபடியாகாது எவ்விதமான மிருகங்கடித்துக் கொழுகிக்கொண்டால்; சிறிய வாயுள்ள கூசாபோன்ற வோர் பாத்திரத்தில் குழிநரியின் மெல்லியப் பஞ்சு முடி ரோமத்தை யிட்டு மூட்டம்போட்டு நோயாளி அப்பாத்திரத்தின் வாயின்பேரில் தன் வாயை வைத்துப் புகையதனளவில் தாவினுடனே விட்டுவிடும், புணர்ச்சி செய்யுமிடத்தில் குழிநரி மலத்தைப் பரிமாறி வருவதினுல் கெர்ப்பங்களுக் குதவியாகும்.

பதினொன்றாவது பசல்.

எருமை மாடு.

வலுவாகிய சரீரமும், தன் தலை மூளையிலுள்ள புழுநோயமையுசம் புதனினால் தூக்கமிழந்ததும் சில வேளையில் கண்ணை மூடிக்கொண்டிருப்பதும் துஷ்டமிருகங்களை மிகைக்கக் கூடியதும், முதலையைக் கொல்லக் கூடியதும் புலியை எதிர்க்கக்கூடியதும், தன் தாயோடு புணர்ச்சி செய்யாததுமாயுள்ளமிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் 'தலை மூளையிலுள்ள' புழுவை யணைத்துக்கொண்டவன் அது இருக்குமளவுங் கண்ணுறங்கான். அதன் மாமிசம் பேனையுண்டாக்கும். அதன் கொழுப்பை 'உந்நாணி' உப்புடன் உருக்கி, முகக்கறுப்பு, பத்து, சொறி, வெண்குஷ்டமிவைகட்குப் பூசினால் பலன் கொடுக்கும்.

பன்னிரண்டாவது பசல்.

"கழுதை."

தோசத்தால் தடித்த உறுப்பும், தந்நாவைக் குடிப்பதும் நடந்த பாதையை மறக்கப்படாததும், காதைக் கட்டப்பட்டால் சத்தமிடாததும், ஆடு, நாய் இவைகளுடனெதிர்ப்பதுபோல புலியுடனெதிர்ப்பதும், சப்தத்தால் நாயுடைய முதுகை நொப்பவைப்படுத்துவதும், தாகமுள்ள பன்றி தன் முதுகிலிருக்கத் தண்ணீர்குடிக்காவிட்டால் மரணமாவதுமுள்ள மிருகம்.

பிரயோசனங்கள்.

அதன் மூளையைக் குடித்தால் மறதியுண்டாம் கெர்ப்பஸ்திரி குடித்தால் வயிற்றிலுள்ள சிசு மடமையடையும். முழிப்புடையவன் தலைக்குகீழ் அதன்பல்லை வைத்தால் நித்திரைசெய்வான். அதன் ஈரல்குலையையுலர்த்தி கட்டினால் முறைக்காச்சல் நீங்கும். அதன் பல்குத்தியை 'ஸ்தனனியத்தில்' பூசினால் பால் சுரக்கும். குளம்பை அரைத்து வலிப்புடையானின் நெற்றியில் பூசிவந்தால் அவை நீங்கும். அதை எண்ணெயுடன் கலந்து கண்டமாலையில் பூசினாலவை நீங்கும். குளம்பையரைத்து

வெண்குஷ்டத்தில் பூசினாலவைகணீங்கும். பிள்ளை பேறுள்ளவள் அக்குளம்பை மூட்டம் போட்டுக்கொண்டால் பிள்ளை உயிராயிருந்தாலும் மரணித்திருந்தாலும் விரைவில் வெளியாகும். அதைச்சுட்டு ஜாதிக்காயெண்ணெயுடன் கலந்து பவுந்திரத்தில் பூசினாலவை நீங்கும். புணர்ச்சி செய்துக்கொண்டிருக்கும் ஆண்கழுதை வாலின் ரோமத்தை மூன்று பிடியளவு பிடுங்கிக் கெண்டைக்காலிற் கட்டிக்கொண்டால் தாதுவிர்த்தியுண்டாம். அதன் மாமிசம் நஞ்சினது தீதுகளைக்காக்கும். குஷ்டநோய்கட்கு பலன் கொடுக்கும். அதன் இரத்தத்தை மூலத்தில் பூசிவந்தால் அம்மூலம் விழுந்துவிடும். அதன் தோலினை உரித்தவுடன் சவுக்கினாலடிபட்டவன் போர்த்திக்கொண்டு சயனித்தால் வருத்தமகலும், மிகுதமாயழுகும் பாலகனுக்குப் பாலைக் குடிப்பித்தாலவைநீங்கும். அதன் நெற்றித்தோலினை வலிப்புள்ளவன் கட்டிக்கொண்டால் அது நீங்கும். அதன் வால் முடி விழுந்திருந்த மதுபானத்தை யருந்தியவர்களுக்கிடையில் வழக்குண்டாம். அதன் விட்டையைப் பிழிந்துக் குடித்தால் கல்லடைப்பு நிவர்த்தியாம். 'ஜாஹிலு' சொன்னார், அது சொத்தைப்பல்லுக்கு மருந்தாகுமென்று.

பதிமூன்றாவது பசல்.

"காட்டுக் கழுதை."

ஒன்றுக்கொன்று வொப்பு மிகுதமாயும், ஒன்றைவிட்டொன்று பிரியாததாயும், அழகுடையதாயும், நடை கடுசாயுமுள்ள மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் மூளையைச் சம்பங்கி யெண்ணெயுடன் அரைத்து, படர்தாமரை பத்துகளிற் பூசினாலவைகணீங்கும். 'கஸ்ஸா' கீரையுடன் தின்றவனுக்குக் காருக்கோட்டி நிவர்த்தியாம். விரிப்பில் மோள்கிறவனுக்குப் பலனாகும். அதன் பித்து கண்ணிலுள்ள தசையைக்களையும். அதன் மாமிசம், பன்னீரெண்ணெயுடன் சூலையிற்பூசினால் பலன்செய்யும். அதன் கொழுப்பை முகக்கருப்பு, பத்து இவைகளில் பூசினால் அவைகணீங்கும். அதன் குளம்பை மாதத் தொவர்க்கத்தில் மோதிரஞ்செய்து அணிந்துக்கொண்டவனுக்குப் பைத்தியம் வலிப்புகணீங்கும். அதைக் கரித்து கண்ணில் பூசினால் இருளைப் போக்கும். அதன் விட்டையை

யடுப்பிற் கரித்து எரித்துச் சுடப்பட்ட ரொட்டிகள் துண்டுதுண்டாகிவிடும். அதை, கோழிமுட்டை வெள்ளைக்கருவுடன் கலந்துருஞ்சினால் சின்னிமூக்குடைதலுக்குப் பலன் செய்யும்.

பதிநான்காவது பசுல்

“பன்றி.”

தூஷணிப்பானதும் போகமீறும்பொழுது களிமண்ணிற் புரண்டுக் கொண்டுக் கொடிய சண்டைபோட்டுக்கொள்கிறதும், புணர்ச்சியி லதிக நேரந் தரிக்குகிறதும், யானைபோல் தந்தமுடையதும், தாழ்ப்பந்தில் புதைக்கப்பட்ட கொளுஞ்சிப்பழம் போன்றதைக் கிளரியெடுக்கும்வரையில் விடாத்ததும், குட்டி மிகுத்ததும் பாம்புபோற்கொத்த நஞ்சுள்ள மிருகங்களை யுகந்து தின்னுகிறதும், தன்னை நோவிக்கின்றவனைவிட்டு நீங்கிப் பின் மீண்டுவந்தவனை நோவிக்கின்றதும் மூன்று நாள் பசித்திருந்து இரண்டு நாள் தின்பதினால் கொழுப்பதும் நண்டை தின்று வியாதியை நிவர்த்தி பண்ணிக்கொள்வதும் கழுதை முதுகின்பேரில், பெலமாய்க் கட்டப்பட்டுள்ள பன்றி, கழுதை மோள்வதினால் மாணிப்பதும் அதன் சப்தத்தால் யானைவெருளுகிறதுமுள்ள கெட்டமிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் “தந்தத்தை” வைத்துக்கொண்டவனுக்கு மனிதரிடத்தில் சங்கையுண்டாம். கண்திஷ்டி யுண்டாகாது. ஒருவாரம் எண்ணெயில் போட்டுவைத்து அந்த யெண்ணெயைத்தலையில் தேய்த்தால் முடியை நிகளமுக்கி நரையை பிற்படுத்தும், அதன் பித்தைபுலர்த்திப்பொடித்து மூலத்தில் பொதிந்தாலம்மூலம் விளும். அதை நாள் பட்டமூத்திரத்துடன் குடித்தால் வலிப்பு நீங்கும், அதன் மாமிசம் விஷஜெந்துக்களின் விஷங்கட்குப்பலன் கொடுக்கும். மெலிந்த இராஜாளிக்குக்கொடுத்தால் விரைவில்கொழுக்கும் கொழுப்பை விம்மிய உருப்புகளில் தேய்த்தால் மெல்லினமாக்கும் மூலத்தில் பூசினாலவைநீங்கும் அதைப்புருஎச்சத்துடனுங் (குத்தாபு) விரையுடனுங்கலந்து கண்டமாலை, பெலமானகட்டுகளினுங்கட்டினால் பழுக்கவைத்து அதிலுள்ளசீசலமாதியவைகளை வெளிப்படுத்தும். அதன் எலும்பை மனிதன் என்புடன் சேர்த்தால் ஒழுங்காய் கோணலன்றி விரைவில் ஒடி என்பு சேர்ந்துக்கொள்ளும் திண்ணமான

புடவைத்துண்டில் பொதிந்து முறைகாச்சலுடையவனணிந்துக்கொண்டாலவை நீங்கும். அதைக்கரித்துப் பொடித்து பவுந்திரத்தில் பொதிந்தாலவை நீங்கும். அதன் தோலியை வீட்டில் வைத்திருந்தால்மூட்டைபூச்சிவெருளும், பாண்டைக்காலைச் சாம்பல் வெளுக்கும் வரையில்கரித்து குன்மவலிப்புள்ளவனுக்கும் நீளித்த வயிற்று வலிப்புள்ளவனுக்குங் குடிப்பித்தாலவைகணீங்கும் அது வெண் குஷ்டத்துக்கும் பலனாம். அதன் சிறு நீரைக்கள்ளுடன் சேர்த்து குடித்தால் கல்லடைப்பு நிவர்த்தியாம். அதன் மலத்தை” துப்பாஹ் மரத்தில்பொதிந்தால் அதன் காயைச் சிகப்பாக்கு விக்கும் பெண்பிள்ளை சுமந்துக்கொண்டால் நஞ்சுகொடி விழும். நிபாசுவருத்தமுநீங்கும், ஈப்புலிக்கும் பலனாகும்.

(பதினைந்தாவது பசுல்.)

“கரடி”

கொழுத்த சரீரமுள்ளதும் ஒழிந்திருப்பதையுகந்ததும், நீண்டகாலம் பொந்துள்ளிருப்பதும் தன் கால், கையை சுவைத்துத்தன் பசியைப் போக்கிக்கொள்கிறதும், மாட்டுடன் மல்லாடி மிகைத்துக்கொள்கிறதும், எறும்புக்குப் பயந்துத் தன் குட்டியை இடம் விட்டு இடம் பேத்திப் படுத்துகிறதும், தன் குட்டியைமறந்து பிறக்குட்டிகளுக்குப் பால் கொடுக்குகிறதும் புலிக்குப் பயந்ததுமான மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் தந்தத்தைப்பாலிலிட்டு பாலகனுக்குப் புகட்டினால் விரைவில் பல்முளைக்கும் அதன் இரண்டு கண்ணையும் இறந்த புடவையிற் பொதிந்து முறைகாச்சலுள்ளவனுக்குக் கட்டினால் நிவர்த்தியாம். அதன் பித்தை” கண்ணில் தீட்டினால் கண்ணிருளைப்போக்கும். அதன் கொழுப்பை வெண்குஷ்டத்தில் பூசினாலவை நீங்கும் குளிர்ச்சியினாலுண்டாகிய, கை, கால், உதடு, வெடிப்புகட்குப் பூசினால் பலன்கொடுக்கும் முளி, சவ்வுகளை மிருதுவாக்கி வைக்கும். அதன் இரத்தத்தை, கொத்தமல்லிச்சாருடன் கலந்து, முடிமுளைக்க நாட்டமில்லாதவிடத்தில் பூசினால் முளையாது. கண்ரோமத்தை பிடுங்கியதின் பிறகு அவ்விடத்தில் தேய்த்தால் முளையாது. அதன் தோலியைக் கெட்டகுணமுள்ள பாலகன் பேரிற் கட்டினாலதைப்போக்கும்.

(பதினாறுவது: பசுல்.)

ஓநாய்.

கெடுதிகள் மிகுத்ததும், கொள்ளை, சல்லியம் பெருமை தந்திரம், பொறுதி இவைகளுள்ளதும், குறிப்புத்தவறுதலும பயமில்லாத்ததும் ஊளைசத்தத்தாலத னினங்களை யொன்று சேர்க்கிறதும் தன்னினத்தில் காயம்பட்டதைப் பலதுங் கூடிக்கொன்றுத்தின்று விடுகிறது., வியாதியுண்டானால் பொசிப்பதை பயந்துத் தனித்திருப்பதும். மனிதன்; கையில் கம்பைக்கண்டால் வெருளுகிறதும், ஊளைசத்தத்தால் நாயையே மாற்றியழைத்துவிட்டு ஊளையிடாத மறுபக்கம்போய், ஆட்டை இளுக்குகிறதும், மனிதனின் வாடையைக் கண்டாலவனைத் தின்னாற்குகந்த மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன்தலையைப் புறக்கூட்டில் வைத்தால்அதைவாதனைசெய்யும் ஜெந்துக்களும் வெருகு முடுகாது. ஆட்டுமந்தையில் புதைத்தால் ஆடுகள் வியாதிபிடித்து சாகும். அதன் வீரப்பல்லை வைத்துக்கொண்டவனுக்கு கள்ளினுடைய போதையன்று வெருட்சிகொள்ளான். அப்பல்லைக்கொளுகிய குதிரை மற்ற குதிரைக்கு முந்திவிடும். அதன் வலதுகண்ணை வைத்துக்கொண்டால் கோழை நீங்கி இரவில் திடுக்கமடையான். அதன் இடதுகண்ணை வைத்துக்கொண்டவனை நித்திரை மிகைக்காது. அதன் பித்தை, புருவத்துக்கிடையிற் பூசிக்கொண்டால் மனிதர்களுக்கிடையில் சங்கையாவான். வலது தொடையில் கட்டிக்கொண்டால் தாதுவிர்த்தியதிகமாம். ஒரு மஞ்சாடி இடை கஸ்தூரியுடன் குடித்தால் மாதத்துவர்க்கத்தில் வரும் வலிப்பு நீங்கும். 'மலடி' சுமந்துக்கொண்டால் அல்லாஹுத் தஆலாவின் உத்திரவுகொண்டு கெர்ப்பமாவாள். கண்ணில் விட்டால் நீர் வடியுதல் மங்கலிவைகளைப்போக்கும். அதன் இரத்தத்தை சாதிக்கா யெண்ணையுடன் கலந்து காதில் விட்டால் இரைச்சல் நீங்கும். அதைக் குடித்தவளெஞ்ஞான்றுங் கெர்ப்பமாகாள். அதன் விரைக்கொட்டையைச் சுட்டுதின்றால் தாதை விர்த்திபண்ணும். அதன் என்பைப் பொடித்து ஆட்டுக்குடிலின் சூழால் தூவினால் ஓநாய் முடுகாது. அதன் கொண்டைக்கால் என்பைக் கரித்த புகையால் எலிகள் வெருளும். அதன் பாண்டைக்காலைக் கட்டிக்கொண்டவன் நடப்பதினால் தோய்வடையான். குணங் கெடுதியான பாலகனின்பேரில் கட்டினால் குணமழகாகுவான். அதன் வலதுபாண்டைக்காலை யணைந்தவன் ஆண்பிள்ளைகளுடன் வழக்கில் ஜெயமடைவான். இடது பாண்டைக் காலையணைந்தவன் பெண்களில் ஜெயமடைவான். அதன் தொலிமேலிருந்துவந்தால் குன்மநோய் நீங்கும். அதன்வாலை புதைத்தவிடத்திற்கு ஈக்கள் முடுகா. அதன் மூத்திரத்தில் மோண்டவள் எக்காலமுங் கெர்ப்பமாகாள். அதன் மலத்தைக் குடித்தாலுங் கொழுகிக்கொண்டாலும் அப்பொழுதே குன்மவலி நீங்குமென்று "பலீனாஸு" சொன்னார்கள்.

——:(o):——

பதினேழாவது பசுல்.

"பூனை."

'நூஹு' அலைஹிஸ்ஸலாமுடைய கப்பலில் எலிக்களாலுண்டாயின துன்பத்தை விலக்குவதற்காக அல்லாஹுத் தஆலா சிருஷ்டித்தான். நூஹுநபி புலியின் நெற்றியைத்தடவ துன்பலுண்டாகி யதன் வழியா யிரண்டு பூனைப் புலிக்கொப்பாய் வெளியாயின. அது தாழ்ச்சி, மருகுதல்; தூய்மையுள்ளதாயும், அழுக்குண்டுபட்டால தன் உமிழ்நீரால் சீரமுக மிவைகளைத் துடைக்கிறதாயும், புணர்ச்சியாலுண்டுபட்ட துன்பத்தினால் 'நத்பாவை' கழட்டும்வரையில் சத்தமிடுவதாயும், குட்டிபோட்டவுடன் யாதொன்றும் அகப்படாவிட்டால் பசியின் கொடுமையால், தன் குட்டியைத் தின்றுவிடுவதாயும், தன் மலத்தின் வாடையால் எலிகள் வெருளாதிருக்க அதை மோந்துபார்த்து மூடுவதாயும், உச்சமான முகட்டில் எலியைப் பார்த்தவுடன் மல்லார்ந்து படுத்துக்கொண்டுத் தன் கை காலை யுசுப்புதலினால் திடுக்கங்கொண்டு முகட்டிலுள்ள 'எலி' விழும். அவ்வெலியைப் பிடித்து மிகுந்தநேரம் விளையாடிவிட்டும், பிடித்தும், குதித்தும், இன்புற்றுத் தின்றுவிடுவதாயும் யானை வெருளுவதாயுமுள்ள மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் இரண்டுகண்ணையு முலர்த்திப் புகைபிடித்துக்கொண்டவனுக்கு நாடியவைகள் கிட்டும்படியான வசியமுண்டாகும். அதன்வீரப் பல்லை யணைந்தவன் இரவில்யாதொன்றுக்கும் பயப்படான். அதன்

தாமரங்காயை, அதன் தொலிக்குள்ளிட்டுக் கட்டியவனைத் துணைப் பகைஞர்கள் மிகையார்கள். அதன் பித்தை கண்ணில் தேய்த்துக்கொண்டவன் இரவைப் பகலைப்போற் பார்ப்பான். அதில் அரை திர்கமிதையை சம்பங்கி எண்ணெயுடன் கலந்து நசியம்பிடித்தால் பக்கவாத நோய்க்குப் பலன் கொடுக்கும். கரும்பூனையின் 'பற்குத்திவை' பெரும்பாட்டுடையவருக்குக் கட்டினால் இரத்தமறிப்பிடும். அது கட்டப்பட்டதாயிருக்கும் வரையில் 'ஹைலை' காணாள். அதன் இரத்தத்தைக் குடித்தால், குஷ்டரோகங்கட்குப் பலன் கொடுக்கும். கரும்பூனை இரத்தத்தைக் குடித்தவனைப் பெண்களுகப்புவார்கள். அதன் மாமிசத்தைத் தின்றவன் பேரில் "சூனியம்" குணஞ்செய்யாது, (பலியாது.) அதின் மலத்தினால் எலிகள் வெருளும். அதை "அசு" எண்ணெயுடன் உருக்கி சரீரத்தில் பூசினால் காச்சல் நீங்குவதுமன்றி மறுந்தும் வரமாட்டாது. அதைத் தண்ணீரிலுருக்கி சூலையில் பூசினால் வலிதணிக்கும்.

—(:o):—

பதினெட்டாவது பகல்.

"காட்டுப் பூனை"

—:(:)—

இது வீட்டுப்பூனையின் கோலத்திலிருந்தாலும் நல்ல பருப்பமாகியதும், பகைமிகுந்ததும் தன்னையும், தன் வகைகளையும் பகற் காலங்களிற் பேணுவதில் கட்டமானதும், இரவுகாலத்தில் நித்திரையன்றிக் காவல் காத்துக்கொள்வதுமாகிய மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் தலை மூளை, மாங்காய் வலிக்கு ஆச்சரியத்தைக்கொடுக்கும். அதை தண்ணீருடன் கலந்து நெருப்பிற் சுடவைத்து வெந்நீர் புரையிலிருந்து வெறு வயிற்றில் குடித்தால் நீர்க்கடுப்பைத் தணிக்கும். மூட்டும் போட்டுக் கொண்டால் கெர்ப்பத்திலுள்ள மணியை வெளிப்படுத்தும்.

—(*)—

பத்தொன்பதாவது பகல்.

செம்மறியாடு.

—:(:)—

"துவ்வையாடும் அதன் வகையாடும்," பழக்கத்து செய்யப்பட்ட வருடத்திலொரு விடுத்தம் ஈனக்கூடிய "பானை, எருமை, ஒட்டகை"

இவைகட்கு அஞ்சாததாயும், ஓநாய்க்கடங்கியதாயும் பிள்ளைக்குந் தாயுக்குமதிகத்தெரிவதனுள்ளதாயும், மெல்லிய தோலியுள்ளதாயும், வெள்ளாட்டுக்கு மாற்றமாய்; வாய் வைத்துக் கடித்து மேய்ந்த புற்பூண்டுகள் மறுபடி துளிர் விட்டு வளரும்படி யானதாயுமுள்ள மிருகம்

பிரயோஜனங்கள்.

கடாய், கொம்பை மாத்தின் தாழால் புதைத்தால் அது காய்க்கக் கூடிய பருவத்துக்குமுன்னர் கெர்ப்பமாகிவிடும். ஆட்டின் பித்தை தேனுடன் கண்ணில் தேய்த்தால் நீர் வடிதலையும் வெள்ளையையு மாச்சரியம் பட நீக்குவிக்கும், அதன்மூளை மடமையை வருத்தும் வலிப்புள்ளவர்கள் தின்றால் வலிப்பதிகமாம். பெண்ணாட்டின் மெல்லிய ரோமத்தை அபத்தில் பொதிந்துக் கொண்டவள் கெப்பம்விழும், தேனுள்ள பாத்திரத்தை வெளுமையான மெல்லிய ரோமத்தைக் கொண்டு மூடினால் எறும்பு முடுகாது.

—(::)—

இருபதாவது பகல்.

முள்ளம்பன்றி.

—:(;):—

பகமை குறைந்ததும் பார்வைக்குப் பழிப்பாகியதும் புதைக்குழியைத் தோண்டி விடக்கை வெளிப்படுத்திச் செட்டமாமிசத்தைதின்னுகிறதும் முசலைப்போல் வருடத்தில் ஆண் பெண்ணையும் பெண் ஆணையு மாறிக்கொள்கிறதும், அதனிமலின் பயத்தால் நாய்க்குத் தத்துவநீங்கி நடக்கத் திராணி யற்றுப்போகிறதும், பகமையுள்ள, நாயைத் தின்று வியாதியைப் போக்கிக் கொள்கிறதும் ஓநாயுடன் நேசித்து; பிள்ளை பெறக்கூடியது முள்ள மிருகம்,

பிரயோஜனங்கள்.

அதன் தலையைப் புறாக்கூட்டில் வைத்தால் புறாக்கள் சேகரமாகும், அதன் நாக்கை வைத்துக்கொண்டால் நாய் குலைக்காது வழக்கை வெல்லுவான். விருந்தளிக்கும் வீட்டு வாசலில் வைத்தால் கெடுதி தணிங்கி யதிகசந்தோஷமுண்டாம். அதன் வீரப்பல்லைபணிந்தவன் யாதொன்றையு மறகான் அதன் பித்தைக் கண்ணில் தேய்த்தால் நீர் வடிதலை விலக்கி பார்வையைக் கூர்மையாக்கும் அதை ஊர்க்குருவி இரத்தத்துடன் கலந்து கண்ணில் தேய்த்தால் நீர் வடிதலைப் போக்கும். அதன்

தாமரங்காயைப் பாலகன் மேனில் கட்டினால் கூர்மையுடன் விரைவாகக் கற்றுக்கொள்வான். அதன் மூளையை புருவத்தில் பூசிக்கொண்டால் மனிதர்களு கப்புறுவார்கள். சாய்க்குப்பூசினால் சைத்தியமாகும். அதன் வலது காதைக் கட்டிக்கொண்டால் அரசர்களிடத்தில் நன்னடத்தை சித்தியாகும் அதன் கொடுக்கை அல்லது கொண்டைக்காலைக்கட்டிக்கொண்டவனுக்குப் பின்னை பேறு இல்லையாகும். அதன் சிறகை மரத்தில் கொழுகினால், அதைக் கெடுக்கும் பறவைகள் முடுகா, அதன் கோசத்தையுலர்த்திப் பொடித்து இரண்டு மஞ்சாடி இடை அருந்தினவனுக்குப் போக சக்தியதிகரித்து இருபது பெண்களுடன் புணர்கிறவனுஞ் சடையாண்கெட்ட செயலுள்ளவன் அதைக் குடித்தால் அச்செயல்விட்டு நீக்கி மறுத்து மனையில் மீளான். அதன் அபத்தையுந் தொப்புள் தொலியையும் கட்டிக்கொண்டவனைப் பெண்கள் மிகவுமுகப்புறுவார்கள் கட்டிக்கொண்டவனை ஆண்கள் மிகவு முகப்புறுவார்கள். அபத்தை காச்சல் ஜுர வியாதியுள்ளவன் கட்டிக்கொண்டாலது நீங்கும் அதன் தொலியால் பண்ணப்பட்ட கூரில் குத்திய வித்துக்களை விதைப்பித்தாலவைகளுக்குமுன் விட்டில் வகையறாக்கள் முடுகா, அதன் தொலியைத் தண்ணீரில் சேர்ப்பித்துக் குடித்தால் வெறி நாய்க் கடியை மாற்றும். வீட்டு வாயலில் புதைத்தால் அங்கு நாய் நுழையாது. முனல் பிடரியில் கட்டிவிட்டால் அதற்கு நாய்கள் வெருளும் அத்தொலியை புரித்துடன் ஒரு ஊரின் கோட்டையைச்சுற்றி அக்கோட்டைவாயலில் கொழுவினதற்கு வெளியிலுள்ள ஆபத்துகள் அக்கோட்டையுடையவர்களை யடையாது. அதன் மூக்கைக்கரித்து எண்ணெயுடனரைத்துப் பிரியுள்ளவனுக்குப் பூசினு லப்பிரிய நீங்கும். அதன் புழுக்கையை ஆக எண்ணெயுடன் கலந்துத் தலையில் தேய்த்தால் முடியழகாய் முளைக்கும்.

* * *

இருபத்தொன்றுவது பசுல்

மான்.

* * *

கடின வெருட்சியுடையதாயும், அச்சமதிகப்பட்டதாயிருப்பதினால் தன் குணை இருப்பிடத்தில் பிற்புறம் புகுவதாயும் பேய் குட்டிக்காயை மதுவாய்த் தின்பதாயும் உடல் சீரா இன்பதாயுருத்துவதாயுமுள்ள மிருகம்,

பிரயோஜனங்கள்.

அதன் கொம்பை இடித்துப் புகைத்தால் புழுப்பூச்சிகள் வெருட்சிக்கொள்ளும் அதன் நாவை, நிழலிலுலர்த்தி, பேன் "குறியில் தடுப்புள்ளவனுக்குக் கொடுத்தாலதை நிவர்த்திசெய்யும்" அதன் "பித்தை" வலிப்புள்ள காதிலுழிக்கினலவை நீங்கும், அதன் புழுக்கையும், அதன் தொலியுங்கரித்து சிறுபிள்ளைகட்கு ஒஜீபனத்துடன் சேர்த்துக்கொடுத்தால், ஞாபகக் கூர்மை, நாகரீகமிவைகளுண்டாம். அதன் கஸ்தூரி, தலைமூளையைத் திறப்படுத்தி ஜலதோசத்தை நிவர்த்திசெய்யும் கண் வெள்ளையை நீக்கும் கல்பைப்பலப்படுத்தும், நெஞ்சு துடிப்பைமாற்றும் நஞ்சடங்களுக்குமவிழ்தமாகும் ஆனல்; முகத்தில் மஞ்சணிப்பை வருத்தும், வஜீபனத்தோடு பரிமாறினல் வாய் நாற்றத்தையும் வருத்தும்.

* * *

இருபத்திரண்டாம் பசுல்.

"குதிரை"

* * *

கோலம் வடிவாயும், குணங்கூர்மையாயும், நடை மிகுத்ததாயும், நிரமழகாயும், நாட்டப்படி வாதிப்படுவதில் விசுவதிப்புள்ளதாயும், அன்னியருக்கிடங்கொடாததாயும், ஏறியிருக்கும் வரையில் எருநீர்விடாத்ததாயுமுள்ள அழகாகிய மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் பல்லை "பாலகனில் கட்டினல் நோவின்றி பல்முளைக்கும். கெறட்டைவிடுபவரின் தலைக்குக்கீழ் வைத்தாலது நீங்கும். அதன் மாமிசம் காற்றைக்கண்டிக்கும் அதன் வால் முடியைவீட்டு வாசலில் அகலத்தில் நீட்டிவைத்தால் கொசு புகுதாது, அதன் குளம்பைப் புகைபிடித்தால் வயற்றில் மரணமடைந்த சிசுவையும் நஞ்சுக்கொடியையும் வெளிப்படுத்தும் வீட்டில் புதைத்தால் எலி வெருளும், அக்குளம்பில் தண்ணீர்வைத்து, குஞ்சுகளுக்குக் குடிக்கவைத்தால் "இராஜாளி" வைரியெனுந்துஷ்டபறவைகள் முடுகா. அதன் வேர்வையை சிறு பிள்ளைகளின் வயிற்றிலும், கமுக்கட்டிலும் பூசினல் மயிர் முளையாது. பிள்ளைபேறுவருத்தமுடையவருக்குக் தாமாலே அதன் "லெத்தி"யை மூட்டமிட்டால் இலேசுபடும். அதன் உலர்ந்த "லெத்தி" யைக்காயங்களிலுதிர்த்தினல் இரத்தமோட்டலை நிறுத்தும்.

(இருபத்திமூன்றாம் பசுல்)

கொடிப்புலி

———:———

கொடிய கோபம், கிட்டுமையான தொண்டை, தூரமாய்ப்பாய்தல் நித்திரை மிகுதல் மனிதர்களுடன் மருகுதலாகும் மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் மாமிசம் புத்தியைக் கூர்மையாக்கும். சரீரவலுவையுண்டாக்கும், அதன் இரத்தைத்தைக் குடித்தால் கோழை மடமை யதிகரிக்கும். அதன் விரல்களை வைத்தவிடத்தில் எலிகள் வாரா. வெருளும்.

——(*)——

(இருபத்திநான்காம் பசுல்)

யானை.

——(:0:)——

சிறப்பாகியதும், திடுக்கத்தை வருத்தும் சரீரவலுப்பத்தையும், நுட்பமானதும் முன்னூறுபற்களையுடையதும் நீண்டதும் பிக்கையுள்ளதும், ஈ மூட்டை, இவைகள் வாயில்புகுதுவதினால் ஹலாக்கைவருத்தும் அதைவிலக்கிக்கொள்ள விரிந்த காதும், பரண்டை, தோள் தொடையன்றி முளிகளில்லாத்ததும், பாம்பைப்பயந்துகாலினால் நசுக்குகிறதும், நெய்யும், சுடுதண்ணீரும் தோளில் தேய்க்கப்படுவதாலதன் துன்பத்தைப் போக்கிகொள்வதும், செத்த பாம்பைத் தின்று வியாதியைத் தீர்த்துக்கொள்வதும் "விலா" வென்ற ஒருபக்கமாய்ச் சாய்ந்துவிழுந்துவிட்டால், தானே எழுந்திருக்க சக்தியில்லாத்ததும், மரங்களைப் பிடுங்குகின்ற வலுவையும் நானூறு வயதுள்ளதும், "ஹலைது" அதிகமுமாகிய மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் "காதழுக்கைகுடித்தவன் தொடர்ச்சியாய் ஏழுநாளுறங்குவான், அதன்பித்தை வெண்குஷ்டத்தில் பூசிவந்தாலவை நிவர்த்தியாம், அதன் என்பை, பாலகனின் பிடரியில் கட்டினால் வலிப்பை விலக்கும் அதையரைத்துத் தேனில் கலந்து முகக்கருப்பில் பூசினாலவை நீங்கும். அதன் தந்தத்தைமரத்தில் கட்டினால் அவ்வருடத்திலது காய்க்காது. மூட்டைபூச்சிகள் சாகமுட்டம் போட்டாலவைகள் சாகும், அதன் தந்தத்தின் தூ[illegible]ரமைப்பட்ட காயத்தில் தூவினாலது சுஸ்தமாக்கு

மூக்கினுதினால் சின்னிமூக்குடைந்த இரத்தத்தை நிறுத்தும் பெண்பிள்ளை தின்றால் கெர்ப்பமாவாள். அதன் தோலித்துண்டைக் குளிர்காய்ச்சலுடையவனுக்குக் கட்டினாலவை நீங்கும். அதைப்புகைபிடித்தால் மூலம் விழும். அதில் சயனித்தால் பக்கவாதம் நீங்கும். அதன் சிறுநீரைத்தெழித்தவிடத்தில் எலிவராது, மடிகுடித்தால் கெர்ப்பமாகுவாள். அதன்மலத்தைபிழிந்துக்குடித்தவள் கெர்ப்பமாகாள். குன்மமுடையவன் குடித்தாலவை மீளாது. மூட்டம் போட்டால் காச்சல் ஜ்வர நோய்களகலும்.

——(:-:)——

(இருபத்தைந்தாம் பசல்)

குரங்கு.

பழிப்பானவடிவமும், பல்பளப்பு, கூர்மை, விரைந்த விளக்கம், தொழிலைபறிவதில், குட்டியில்மிகுத்தல் குட்டியைச்சுமந்துக் கொள்ளல் புணர்ச்சியை மிகவுநாடல், மனிதர்கட்கும் பிரியத்தை வருத்துமாயுள்ளமிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் கண்ணைக்கட்டிக்கொண்டவனைப் பலரும்பரிகாசம் பண்ணுவார்கள். அதன் பல்லைக்கட்டிக்கொண்டவனை நித்திரை மிகையாது இரவிலூர்ந்திருக்கிறான்: அதை அரைத்து கண்ணில் தேய்த்தால் வெள்ளையைப்போக்கும் அதன் மாமிசத்தைத்தின்றால் குஷ்டவியாதிகட்குப் பலன்கொடுக்கும். குஷ்டநோயதிகப்பட்ட புலிகள் குரங்கைத் தின்று அந்நோயைநிவர்த்திசெய்துக் கொள்வதை திருஷ்டாந்தமாய்ப் பரிட்சிக்கப்பட்டிருக்கின்றன. அதன் இரத்ததைக்குடித்தவன், அறவேபேசுதற்குரிய திராணியற்று ஊமையாகிய மனிதர்களிடையிற் பழிப்படைவான் அதன் தோலைக்கொழுகிவைத்த மரத்துக்கு சீதளிப்பின் தங்கடங்கள் விலகும். அதில் செய்த பாத்திரத்தில் வித்துக்களைப்போட்டுத் தீட்டிதுப்பரவுசெய்து விதைத்தபயிருக்கு வெட்டுக்கிளி முதலியவைகளடையாது.

——:(:):——

(இருபத்தாறாம் பசல்)

"நாய்"

——:——

கடினமானபழக்கமும்,பசி,முழிப்பு நேமமும், விசுவாசம்,பணிவிடை, காக்குதல், வேட்டையாடுவதில் கூர்மை, கள்ளனையறிவது, குலைத்து வருநேரத்தில் உட்காராவிடிலவனை விடாத்தது கோடைகாலத்தின் சூடு அதிகமாவதால் நாக்கு நீண்டு இளைப்புமிகுத்து எச்சி நஞ்சாகுவதுடன் கண் சிவந்து, தலைகவிழ்ந்து, பிடரி கோணி சோர்ந்தவாலைத் தொடைக்கிடையிலாக்கி மஸ்தரைப்போல் வலமிடஞ் சாடிசறுகி தன் இனத்தை விட்டு நீங்கும் இவ்விதசெயலுள்ள நாய் கடித்தவன் அந்நாயைப்போல் குலைத்து அவன் சிறுநீர்சிதறி நாய்வடிவைத் தான் குடிக்கின்ற தண்ணீரில்கண்டுத் தாகத்தால் ஹலாக்காகும்வரையில் குடியாமல் விலகிக்கொள்வதை வருத்துகிறதுமானதும், ஆணையின் கோசத்துவாரம் விம்மியதுடன் மணி வெளியாகாமல் அதிக நேரம் சேர்க்கையில் கட்டுவிடப்படாத மிருகம்.

பிரயோஜனங்கள்.

இறந்துப்போன "கருநாயின்" இரண்டு கண்ணையும்கட்டிச் சுவரின் கீழ் புதைத்தாலது நாசமாம். அதை வைத்துக்கொண்டவன்பேரில் நாய் குலையாது. அதன் வீரப்பல்லை வெறியுடையவனுக்குக் கட்டினாலவை நீங்கும். பாலகனுக்குக் கட்டினால் வலியன்றிப் பல்முளைக்கும். தூக்கத்தில் புலம்பலுள்ளவனுக்கு பலன் கொடுக்கும். மனிதனைக் கடித்த பேநாயின் வீரப்பல்லைத் தொலியில் பொதிந்து மனிதனின் கொடுங்கையில் கட்டினால் பேனாய்க் கடிவிஷம் நீங்கும். கருநாயின் நாக்கை வைத்துக்கொண்டவன்பேரில் நாய்கள் குலையா. "இவ்விதமே; கள்ளர்களின் செயல்" அதன் பித்தைக் கண்ணில் தேய்த்தால் கண்ணிருள் நீங்கும், அதன் ஈரல் குலையைச் சுட்டுத்தின்றால் பேனாய்க் கடிக்குப் பலன் கொடுக்கும், செத்த நாய் கொழுப்பைக் கண்டமாலையில் பூசத் தீரும் ஷெடி வியாதி தொண்டையிலிருந்தால் மூக்கியமாய்த் தீரும் அதன் மூளையு மிவ்விதமே பலன் கொடுக்கும். அதன் கோசத்தை யுலர்த்திப் பொடித்து வைத்துக்கொண்டவனுக்கு ஜிமாஃ மிகுக்கும் அதன் ரோமத்தைக் கட்டிக்கொண்டவனுக்கு வலிப்பு இலேசாகும். அதன் சிறுநீரை அருமபாரையில் பூசினாலதைத் தறிக்கும். அதன் காதிலுள்ள உண்ணியை யுட்கொண்டாலுடனே குன்ம வலிநிவர்த்தியாகும். மாமிசமன்றி எலும்பைத் தின்றுவருகின்ற நாயினுடையவெளுமையான மலம் தொண்டைநோய்க்கும் பிடுவனுக்கும்பலன்கொடுக்கும். கருநாயின் மலத்தை [illegible]கொண்டவள் பிள்ளையைக் காய்விழுத்தாட்டுவதை

விட்டும் அச்சந்தீருவாள் நாய்மேலெறிந்த கல்லை நாய் கடித்துதானால் அக்கல்லைக் கள்ளில் போட்டுக் குடித்தவன் அதன் பின் அதனளவில் மீளான்.

இருபத்தேழாம் பகல்.

வெள்ளாடும் பள்ளையாடும் ஒருவகையாம்.

மடமை மிகுத்தலும் நாற்றமிகைத்ததும் பாலதிகரித்ததும் தொலித் தடிப்புள்ளதும் வால் கொழுப்பு மிகுத்ததுமுள்ள மிருகம்,

பிரயோஜனங்கள்.

வெளுத்த ஆட்டின் கொம்பைப் பொடித்துத் துண்டில் முடிந்து சயனிப்பவன் தலைக்குக் கீழ் வைத்தாலது இருக்கும் வரையில் உணர்வு பெறான் கடாயின் பித்தைக் காளைமாட்டின் பித்துடன் கலந்துத் திரியிலூட்டிக் காதில் வைத்தால் இரைச்சல் நீங்கும். நீர் வடிதலை நிறுத்தும் நிமை, மயிரைப் பிடுங்கிவிட்டு யதில் கடாயின் பித்தைத் தேய்த்தால் முடி முளைப்பதை விலக்கும் கண்ணில் தேய்த்தால் மங்கல் நீங்கும் அதில் வளர்ந்த தசையைக் களையும். வீக்கம், மொத்தி முறடுகளில் பூசினால் பலன் கொடுக்கும். கடாயின் தாடிமயிரைக் கட்டிக்கொண்டால் நாலா முறை காச்சலும் பொட்டுவலியும் நீங்கும் ஆட்டினீரல் குலையைக் சுட்டு அதின் இரத்தத்தைக் கண்ணில் தேய்த்தால் மங்கல், மாசுகளைப் போக்கும். ஆட்டினீரல் குலையை சுமந்துக் கொண்டவளுக்கு மோக விச்சையடங்கும் அதனீரல் குலையை, ஈரல் குலை வலியுள்ளவன் தன் கையால் தரித்து தானிருக்கும் வீட்டில கொழுகிவைத்தால் அதுவுலரவுலா இவன் வலியுமடங்கும். ஆட்டுக்கு நாற்பதுநாள் மாப்பாத்திரத்தில் தண்ணீர் குடிக்கவைத்து அதை யறுத்து அதனீரல் குலையை ஈரல் குலை வலியுள்ளவன் தின்றாலது நீங்கும். அதன் மாமிசம், துக்கம்,மறதி,வசுவாசு இவைகளை வருத்தும். கடாயின் இரத்தம் காந்தக் கல்லில் நுணுக்கும். அவ்விதமே அதன்பேரில் அறுக்கப்படும் கல்லடங்கலையு நுணுக்கும். ஆட்டிரத்தத்திற் சுருக்குக் கொடுத்த ஊசியால் காதைப் பொத்து துளைத்தாலதன் தொலி சேர்ந்துக்கொள்ளும், ஆட்டை யுரித்து அத்தொலியைச் சூட்டுடன், பாம்பு முதலிய விஷஜெந்துக்களின் கடிவாயிலும் சவக்கடிப்பட்டவன்பேரிலும் வைத்தால் நல்லசுகத்தையடைவான்

கடாயின் வாய் நீர், தாதை யெழுப்பும் ஆட்டின் பாலைச் சர்க்கரையுடன் குடித்தால் வயிற்றோட்டம்வயிற்றளைத்தலைப் போக்கும் (தி.ஆ.) பெண்கட்கு முக்கியமாம். மறதி, துக்கம், வசுவாசு இவைகட்கு முக்கிய மருந்தாயிருக்கும் பல்லின் எகிர் சோர்வுதலாகும் பார்வை குறைவுண்டாகும், தாதுபுஷ்டியை யுண்டாக்கும்; அதன் சிறு நீரை வற்றகாய்ச்சி யுறைந்தபின் அதனிடைக்கிடை சக்கரை கலந்து சொறி சிரங்கில் பூசி வெண்ணீரில் குளிக்க நீங்கும். அதன்புளுக்கையை மிருதமா, யழும் பிள்ளைகள் தலைக்குங் கீழ் வைத்தா லவைநீங்கும் ஆட்டின் புளுக்கை, கண்டமாலைக்குப் பலன் செய்யும் (தி.ஆ.) புளுக்கையைப் பஞ்சுமுடிவுடன் சுமந்துக்கொண்டால், கெர்ப்பத்தில் நின்று இரத்தம் விழுவதை நிறுத்தும் வெள்ளாட்டின் புளுக்கையும், செம்மறியாட்டு புளுக்கையும், சிருக்காவுடனுங் கூட்டி மெழுகு பன்னீர் யெண்ணெயுடன் சேர்த்து நெருப்பால் கரிக்கப்பட்ட வுறுப்புகளில் வைத்தால் பலன் கொடுக்கும், காய்ந்த புளுக்கை சரீரத்தில் நெருப்பு சுட்ட புண்களுக்குப் பலன் கொடுக்கும்.

இருபத்தேட்டாம் பசுல்.

சிறுபுலி.

அடக்கியாளுதல், வம்பு, தத்துவம், வீரியம், பாய்தலால் உயிர்ப் பிராணிகளை மிகைக்குதல் யாருக்கு மஞ்சாதல். அழகிய வடிவும் கிட்டுமையான குணமும், அறவே யொழுக்கமில்லாதல் தன்னை மதிப்பு, புலிக்கு மாற்றமான, வாய்நாற்றம் வயிறு நிரம்பினால் மூன்று நாளுறங்குவதும் மலைப்பாம்பினோடு நேசிப்பதும், வியாதிக்கு அவிழ்தமாக எலியைத் தின்பதும். புலிக்கு மாற்றமாய்ப் பசியில்லாதிருக்கிலும் கண்டதுக் கெல்லாங் குறுக்கிடுகிறது முள்ள மிருகம்.

பிரயோஜனங்கள்.

அதன் தலையைப் புதைத்த இடத்தில் எலிகள் சேகரமாகும் அதன் பித்தைக் கண்ணில் தேய்த்தால் பார்வை துலக்கமாம். நீர்வடிதலையு நிறுத்தும். அதன் கொழுப்பையுருக்கி நாட்பட்ட புண்ணிற் பூசினால் பலன் செய்யும். இரைச்சியில் ஐந்து திர்கத்திடை தின்றால் பாம்பு, மலைப்பாம்புவிஷயங்களையு நிவர்த்தியாக்கும். அதன் கோசத்

தைச்சமைத்து தின்றால் நீர்கடுப்பு வயிற்றுநோ யாதியவைகளுக்குப் பலன் கொடுக்கும். அதன் தொலியிலுட்கார்ந்துவந்தால் மூலரோகத்தைப் போக்கும். அதைத் தன்னுடன் சுமந்துக்கொண்டால் மனிதர்களுக்கிடையில் மதிப்பையுண்டாக்கும்.

வல்லாஹு அஃலம்.

ஏழாம்பாபு முற்றிற்று.

எட்டாம் பாபு.

பறவைகளையுமதன் பலனாதியவைகளையுங் கூறல்.

ஒன்றாவது பசுல்.

“தாரா.”

தண்ணீரில் நீஞ்சுவதையுகந்ததும் முட்டையிட்டு வெளிப்பட்டவுடன் நீய்ந்துவதி லாவசியகமாயுள்ளதும், குஞ்சுகளைப் பெண் தாராவே வளர்ப்பதும் ஆணைவிட்டுப் பிரியாவாழ்க்கை கொண்டதும் பாதுகாப்பதும், பத்தொன்பதாம் நாளில் குஞ்சு பொறிப்பதும், தவறினால் மாதக்கடைசியில் வெளிப்பிறப்படுவதுமாயுமுள்ள பறவை.

பிரயோசனங்கள்.

அதன் வயிற்றிலுள்ள கல்லைத் தின்றால் வயிற்றோட்ட நிற்கும். அதன் நாக்கைத்தின்றால் நீர்கடுப்பை நீக்கும். அதன் மூளையைத் தலையில் கட்டினால் பொட்டுவலிக்குப் பலன் கொடுக்கும். அதன் பித்தை பன்பலஜு” எண்ணெயுடன் உருக்கி மூக்கில் பிழிந்தால் கடினவியாதியாதியவைகட்குப் பலன் கொடுக்கும். அதன் கொழுப்பு, குளிரினாலுண்டான பிளப்புக்கும், முடியுதிர்தலுள்ள வியாதிகட்கும் பலன் கொடுக்கும். நிறத்தைத் தெளிவாக்கிவைக்கும் அதன் மூளைக்கொழுப்பிக்கும், சப்தத்தை தெளிவாக்கும், தாதையதிகரிக்கச்செய்யும். அதன் இடது கண்ணை, வலது பக்கத்தில் கட்டினால் நாலாமுறை காச்சல் விலகும். உறுப்புகளிலுள்ள வலிகளடங்கும். அதன் என்பைக் கரித்துப் பொடித்து, பழமையான அடிபட்ட காயங்களில் தூவினால் நல்ல பலனைக் கொடுக்கும். அதன் முட்டை, தாதுவிர்த்தியை யுண்டுபண்ணும்,

அதன் எச்சத்தை யுலர்த்திப் பொடித்துத் தின்றால் வரட்சியான இருமலுக்குப் பலன்கொடுக்கும்.

—:():—

இரண்டாவது பசுல்.

"கொண்டலாத்தி"கொண்டையாலாத்தி.

—:():—

சிறுத்த சரீரமும் விரைந்த வுசும்புதலும், நாவு, நாகரீகமான இராகம்பாடலும், குளிர்காலத்தில் வெளிப்பிறப்படுவதும், தன் சரீர சூட்டின் கடப்பினால் தண்ணீரைவிட்டு நீங்குவதற்குப் பொறுதி பெறாத்ததும், தன் சிறிய உருவைக் காற்றுக் கொண்டுபோய்விடுமெனப் பயந் அக்காலத்தில் அறவே கூட்டைவிட்டு வெளிப்படாத்ததும், பூங்காவனமன்றி சுகித்திராததுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் மாமிசத்தை நண்டு கண்ணுடன் ஒட்டகை தொலியிற் பொதிந்துக் கொடுங்கையிற் கட்டிக்கொண்டவனுக்கு, அது இருக்குமளவு மவனைத் தூக்கமிகைக்காது.

—:():—

மூன்றாவது பசுல்:

"வல்வத்தான்."

—:():—

அழகிய கோலமும், உறுப்பினால் சிறிய உறுப்புகளையுடைய ஊர்க்குருவிபோற்கொற்றதை வேட்டையழிக்கும் பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் உச்சிமூளையில் ஒரு திர்கத்திடை பன்னீருடன் கலந்து குடித்தால், கரும பித்தத்தால் குறுக்கிட்ட நெஞ்சு துடிப்புக்குப் பலன் கொடுக்கும். அதன் பித்தைக் கண்ணில் தேய்ப்பதால் கண்ணிருணீங்கும்.

—:():—

நான்காவது பசுல்.

"பெரிய இராஜாளி."

—:():—

பருப்பத்தால் பார்வைக்குக் கடுசாயும், கோலத்தில் கிட்டுமையாயும், பருந்துடன் புணர்ந்து சுகிக்கின்றதாயும், பலநிறமுள்ளதாயும் பறவைகளை வேட்டையழிக்கிறதாயுமுள்ள பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் பித்தை கண்ணில் தீட்டினால்; கண்ணிற்கிடையில், ஈக்கள் பறப்பனபோல் அன்றேல் புகைபோல நீர்வடியுதல்போல, தோற்றப்படுமானக் கண்ணோயைவிட்டும் அச்சந்தீருவான். ஒருவித்திடை நசியம் பிழிந்தால் முகவாதத்துக்கு நல்ல பலனைக்கொடுக்கும். "இபுனுசைனா" சொன்னார்கள் எவ்விதமான பறவைகளின் பித்துகளையுங் கண்ணோய்கட்குத் தேய்ப்பதினால் பலனைக்கொடுக்குமென்று. அதைக்கரித்து நெருப்புசுட்ட விடத்தில் தூவினால் நல்லபலனைக்கொடுக்கும். அதன் நிகத்தைக்கொழுகி வைக்கமரங்களிடத்து பறவைகளும்அதன் தங்கடங்களுமணுகா.

—:():—

ஐந்தாம் பசுல்.

கிளிப்பிள்ளை.

—:():—

நிறத்தில், கோலத்தில், மிகவடிவாயும், மிகுத்த பசுமையாயும், சிகப்பு, மஞ்சள், வெண்மை, யாவை நிறங்களை சுறுக்கமாயும் அகண்டு சொண்டும் அகண்டநாவும், மனிதர் பேசுவதையுணர்ந்து அதனருத்தமறியாமல் அழகிய அட்சரத்தொனிகொண்டு மொழிவதாயும், தன்கூண்டில் தனக்கெதிரிலுள்ள கண்ணாடியில் தன் சுரூபத்தைக்கண்டு அது, தன்னையல்லாத அன்னிய பறவையென்றுமதிப்பதாயும், மனிதனினின்றும் பிறப்படும் வார்த்தையைத் தனக்கெதிரிலுள்ள பறவையினின்றும் பிறப்படும் வார்த்தையென்று கிருகித்து அவ்வார்த்தைப்போல மடக்கி மடக்கிப்பேசுதற்குபடித்துக்கொள்வதாயும் தண்ணீர் குடியாத்ததாயும், குடித்தால் ஹலாக்கையடைவதாயுமுள்ள பறவை.

பிரயோஜனங்கள்

அதன் நாக்கைதின்றவன், விரைவிற் பேசுதற்கறிவது மன்றி நாகரீகமாகப் பேசவுமிடம் பெறுவான். அதன் பித்தை தின்றால் தன் நாக்கைகனதிபாடாக்குவிக்கும் அதன் இரத்தத்தை யுலர்த்திப்பொடித்து

இருநேசர்களுக் கிடையில் தூவினாலவ்விருவருக்கிடையிற் பகைமையுண்டாகும்.

ஆறாம்பசுல்

“ஆந்தை”

யாவர்கட்கு மறியப்பட்டதும், பார்வை பெலவீனத்தால் பகலில் வெளிப்பிறப்படாததும், தனித்திருப்பதை யுகந்ததும், மனிதர்கள் துற்பறவையாய்ப் பாவிப்பதும் அதன் சப்தத்தால், பாம்பு வகையறாக்கள் வெருட்சிகொள்வதும். மெலிந்த பூனைகளை வேட்டை யழிக்குகிறதும், காகத்தை பகைத்துப் பகலில் மறைந்திருப்பதும், இரவிலெவ்விதப்பறவைகளும் எதிரி பொருத்ததும்; பகலிற் பலபறவைகளுங்கூடி யதனிரகைப்பிடுங்கி விடுவதும் இதற்காக வேடனதைக்கட்டி வைத்து வேட்டையாடுகிறதுமாயுமுள்ளபறவை.

பிரயோஜனங்கள்

அதன் பித்தைக்கண்ணில் தேய்த்தால் கண்ணிருணீங்கும். அதன் இரண்டு கண்ணிலொன்று விழிப்புடையதாயும், மற்றொன்று தூக்கமுடையதாயுமிருக்கும். அதில்; தண்ணீரில் வைத்தால் தாழ்வது தூக்கமுடைய “கண்”ணென்றறிந்து; அந்தக்கண்ணை நாடியவனின் தலையணிக்குக்கீழ்வைத்தால் அது இருக்குமளவுமவன் முளிப்பாகான் அதில், “மிதந்தது”முளிப்புடைய கண்ணென்றறிந்து அதைமோதிரக்கிண்ணிக்குக்கீழ் வைத்துக்கட்டியணைந்தவனுக்கு நித்திரைமிகைக்காது. இரண்டு கண்ணையுங் கஸ்தூரியுடன் கலந்து அணைந்துக்கொண்டவனின் வாடையைமுகர்ந்தவன் கடுமையான விடாப்பிரிய நேசம்வைப்பான் அதன்தாமரக்காயைச் சுட்டுத்தின்றால் குன்மம், பக்கவாதநோய்கள் தீரும். அதன் ஈரல்குலை, மரணிக்கக்கூடிய குன்மவியாதியை வருத்தும். அதற்கவிழ்தமேயில்லை. அல்லாஹுத்தஆலா இரட்சிப்பானாகவும். அதன்மாமிசம் ஒக்காளத்தைவருத்தும். அதை யுலர்த்தி வஜீபனத்துடன்சேர்த்துக் கூட்டமானவர் கட்கிடையில் வைத்தால். வழக்குண்டாகும். அதன் ஈரமான இரத்தத்தை மோக மிகுத்தவன் முகத்திற் பூசினாற் மோகநிவர்த்தியாம். அதன் “இரைப்பெட்டி, அதின் ஈரல்குலையைப்போல் குணந்தரும். அதன்[illegible]ன்பை, கள்குடி தோழர்களுக்கிடையில், மூட்டமிட்டாலக்குடியை முனிந்தவர்களாய்ப் பிரிவார்கள். ரோமத்தை முளைக்க வைக்கிறதும், முளைக்காதிருக்கிறதுமான இரண்டு முட்டைகளிடும் அதைத்தண்ணீரால் கழுகிப்பிழிந்தால் முளைக்கின்றது, கருப்பாளிலும், முளைக்காதிருக்கின்றது, மஞ்சளாளிலுஞ்சாரும். அறிந்துக்கொள்ளவும்

ஏழாவது பசுல்

“தூக்கணாங்குருவி”

மரத்தின் நாரில்நின்றுங்கயருபோல் திரித்து“கொட்டான்பெட்டி” கோலத்திற்செய்து, அதைக்கட்டகூடிய கயற்றை நீளத்தில்விட்டு மரத்தின் கொம்பினது தாழால்கட்டித்தூக்கி அதில் முட்டையிடும் பறவை.

பிரயோஜனங்கள்.

பித்தானைக்கத்திகொண்டறுத்து, மதிமயக்கத்தில் புலம்புகிறவனுக்குத் தின்னக்கொடுத்தால் [illegible]ஸ்தப்படுவான் பித்தை, சர்க்கரையுடன்சேர்த்து பாலகருக்குத் தின்னக்கொடுத்தால் குணமழகாகும்-எலும்பை இனம்பிறையில் பாலர்பேரிற்கட்டிவைத்தால் மனிதர்கட்கிடையில் கனப்படுத்தப்படுவான்.

எட்டாவது பசுல்.

கானாங்கோழி.

பூங்காவனத்தில் அழகான சப்தங்கொண்டு கூவும். தெளிவான தென்காற்று வீசப்பட்டால் கொழுக்கும், வாடைகாற்று வீசப்பட்டால் மெலியும். இளகலான பூமியில், மண்ணைப் பறித்து முட்டையிடும்.

பிரயோஜனங்கள்.

முஸீபத்துண்டாகுந் தருணம் வாய்க்குமானால் அவ்வினங்களியாவுமொன்று சேர்ந்து கூவும், அதை விட்டும் அல்லாஹுத் தஆலா காப்பானாகவும்

ஒன்பதாவது பசுல்.

செங்கால் நாரை.

பறவைகளிற் பதட்டமிருந்ததும் மனக்குழப்பத்தால் தன் முட்டையை விட்டு, பிற பறவையின் முட்டையை அடைகாக்குகிறதும் வல்லவத்தானுக் கிடங்கொடாம லுயரப் பறந்து, சமையம்பார்த்திறங்கி யதன்பேரி லெச்சத்தைக் கழிந்தும் பலதுங்கூடி யதனிரகைப் பிடுங்கி ஹலாக் காக்கும் பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் இரைப்பெட்டியை யுலர்த்திப் பொடித்து உந்து ராணியுப்பும், சுட்டரொட்டியுஞ் சமனிடையாய்ச் சேர்ப்பித்துக் கலந்து, கண்ணிலிட்டால், வெள்ளையைப் போக்கும். முட்டைக் கெட்டியான சாயம், வெண்மையான பஞ்சு முடியால் சோதித்துக் கொள்ளவும் மலம்; பத்துகள், புள்ளிகட்கு பலன் கொடுக்கும் இரைப்பெட்டியிலுள்ள கல்லைக் கட்டிக்கொண்டவன். அது இருக்குமளவும். காராக்கோட்டியாகான். வயிற்றோட்டமுண்டாயிருந்தா லவற்றைத் தரித்துவிடும்.

பத்தாவது பசுல்.

பருந்து.

தனுமையான குணமும் மிருக்க பறவைகளிடத்து பறவையில் மிகைப் படையாத்ததும்,வருடத் தொருமுறை ஆண். பெண்ணாய்,பெண் ஆணுருவமாவதும் முட்டையைக் காகம் களவெடுத்து தன் முட்டையை அக்கூட்டி லிட்டுப்போய்விட்டக்கூட்டில் பெடை பருந்து அடைகாத்து, குஞ்சுபொரித்தவுடன் ஆண் பருந்து ஆச்சரியப்பட்டு, ஓயாமல் பெண் பருந்தை வாதனை செய்துக் கொன்றுவிடுவதும் தன்னிறகையே பொசித்துத் தனக்குண்டுபட்ட வியாதியைச் சுஸ்தப்படுத்திக் கொள்வதும் சிவந்த நிறமான வஸ்துக்களை மாமிசமென்றெண்ணிப் பறித்துக் கொள்ளுகிறதுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் பித்தை யுலர்த்திப் பொடித்து "பாம்புப்" புடையில் தூவினாலது மானமாகும். தேள்கடிக்கு கடித்தவிடத்திற்றடவ பலன் கொடுக்கும். இரத்தத்தை யுட்கொள்ளில், கொடிய நஞ்சுவிஷத்திற்குப் பலன் கொடுக்கும். எலும்பைக் கரித்துப் பொடித்து, கட்டு, சிலந்தி, காயங்களிற் கட்டினால் அதைப் பழுக்கச் செய்யும்,

பதினொன்றாவது பசுல்.

புறா.

எவ்வளவு தூரத்திற் பறந்துவிட்டாலும். தன் இருப்பிடத்தைத் தவறவிடாத்ததும், விளக்கங்கடுசானதும், சோடு மனிதரைப்போல் முத்தமிட்டு விளையாடுவதும்; சீக்கிரத்தில் ஆணுக்குப், பெண்வழிபடாத்ததும், கருதரித்தவுடன் பெண்ணாணுமொன்று சேர்ந்து கூடுகட்டி அதில் முட்டையிட்டபின் ஆணும் பெண்ணும் முறை வண்ணமா யடைகாப்பதில் பெண் அதிகமாயும். குஞ்சுக்கிரைகொடுப்பதில் ஆணதிகமாயும்.— வெட்டுக்கிளியைத்தின்று நோயைப் போக்கிக்கொள்வதும் பறவையிலதிக விரைவுள்ளதும், புணர்ச்சி நேரம் எதிரிலிருக்கின்ற புறாவைப்போற் குஞ்சு பொரிக்கின்றதும் வேட்டையாடும் துஷ்ட பறவைகட்கு மிகவாயஞ்சுதலுள்ளதுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் மாமிசத்தைத் தின்றால் ஆயாசமுண்டாம். வெள்ளை பெண் புறா. பித்தைக் கண்ணிற் றேய்த்தால். சொற்பமங்கலைப்போக்கும், இரத்தத்தைப் பூசினால், முகக்கறுப்பு, புள்ளிகளைக் களையும், ஆண் புறா இரத்தத்தைக் காயங்களிற் பூசினா லுடனே சுஸ்தமாகும். அடிபட்ட இடத்திற் பூசினால் இரத்தக்கட்டுண்டாகாமலிணக்கப்படுத்தி வலியையுங் கண்டிக்கும். கண்ணிற் றேய்த்தால் மங்கலைப் போக்கும். மாமிசத்தை வளமையுரத் தின்றுவந்தால் மடமை தனத்தைப் போக்கிப் புத்திக் கூர்மையை யுண்டாக்கும், எலும்பைக் கரித்துப் பொடித்து, வெட்டு காயத்திற் றூவினாலதன் பிளப்பை யொன்று சேர்த்து றஹ்மானினுதவியால் சுஸ்தப் படுத்தும். எச்சத்தை, பிரசவ வேதனையுடையவள் சுமந்துக் கொண்டால் இலேசு பெறுவாள். செம்புறாவின் மலம்; நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, கட்டு, குன்மவலியாதியவைகட்குப் பலன்கொடுக்கும் (ஹா-மக்னு) உப்புத்திரி செய்யு மருந்துகளிற் சேர்கப்படும்.

பனிரெண்டாவது பசுல்.

பழந்தின்னி வெளவால்.

தானம் விட்டுத் தானம் போகிறதும், தன் இனங்களொன்றுகூடி மயிருடன் களிமண்ணைக் கலந்து கெட்டியாய்க் கூடுகட்டி, வாயினால் தண்ணீர் கொண்டுவந்து அக்கூட்டை வழுவழுப்பாய் மெழுகித்தரிப்படலும், பாம்பு, கொசு; ஈ, வகைபறுக்களைத் தட்டிக்கொள்ள சதாபு இலையைக் கூட்டில் வைத்துக் கொள்ளுவதுமான பறவை

பிரயோஜனகங்ள்.

அக்கூட்டின் மண்ணைத் தண்ணீரிற்போட்டு, பிரசவக்காரிக்குக் கொடுத்தால் இலேசாகும். தலைமயிரை தலைகாணிக்குத் தாழாமலே வைத்துக்கொண்டால் அது இருக்குமளவுமுறங்கான். உச்சி மூளையைக் கண்ணிற் றேய்த்தால் கண்ணிருள் நீங்கும். பன்னீரெண்ணெயிற் கலந்துத் தலையிற் றேய்த்தால் பேன் பற்றாது. கண்ணைத் துணியிற் பொதிந்து நாற்காலி காலிற் கட்டி யதிலிருந்தவன் முளிப்பாயிருப்பான். தாமரக் காயை யுலர்த்திப் பொடித்து முந்திரிப்பாணியிற் கலந்து குடித்தால்; ஜிமாகுக்கு வலுப்பமான உதவியுண்டாகும். மாமிசம் பார்வையைக் கூர்மையாக்கும். இரத்தத்தைக் குடித்தவள் ஆசை நீங்கி அறவே ஆணை நினையாள். எச்சத்தைக் கட்டுசிலந்திகளிற் கட்டினா லதைப்பழுக்கச் செய்யும் அதன் கூட்டில் சிகப்பு நிறத்திலும் வெண்மைநிறத்திலுமிரண்டு கல்லுண்டும். சிகப்பைக் கட்டிக்கொண்டவன் நித்திரையிற் றிடுக்கமடையான். வெண்மையைக் கட்டிக்கொண்டவனுக்கு வலிப்பு நீங்கும். அதன் குஞ்சின்பேரில் குங்குமப்பூவைத் தடவியதின் கூட்டில் விட்டால் மஞ்சணிறத்தைப் பார்த்தவுடன் தன் குஞ்சுக்கு மஞ்சள் காமாலையுண்டாயிற்றதென்றெண்ணி 'சநாது' என்ற கல்லைக்கொடுவந்து அதனால் குஞ்சைத் தேய்த்துங் கல்லைக்கூட்டில் வைத்துக்கொள்ளும் அக்கல்லு மஞ்சள் காமாலையைத் தட்டுவதற்கதிக வனுகூலமாகும்.

பதிமூன்றாவது பசுல்.

சின்ன வெளவால்.

சூரியச் சுடருக்கஞ்சிப்பார்வை யிழந்ததும், வெளிச்சம் இருளுக்குமிடையில் வெளிப்படுகிறதும், எலிக்கொப்பானதும் இரகின் தொலி மெல்லினமானதும், இருபல்லு, இருகாது, இருமுலையுடையதும், ஈ முட்டை, கொசு போன்றதை நாடுவதும், குஞ்சை வாயில் வைத்துக் கொண்டு பறப்பதும், பால் கொடுப்பதும், மாத்திலிருக்கு மாதுளங்கனியைத் துளையிட்டுத் தின்று தொலியைக் கூடாக்கிக்கொள்வதும் தலபு இலையைக்கண்டால் வெருட்சிகொள்ளுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் தலையைப் புறாக்கூட்டில் வைத்தால் மருகுதலுண்டாகும். தலைகாணிக்குத் தாழாமலே வைத்தால் உறங்கான். உச்சி மூளையைக் கண்ணிற் றேய்த்தால் நீர்வடிதலை மாற்றும். தாமரங்காயை மோகவிச்சையுடையவனிற் கட்டினாலது அவ்விச்சையை யடக்கும். இரத்தத்தைக் கண்ணிற்றேய்த்தால் கண்மங்கலைப் போக்கும். கழுக்கூடு அடிவயிற்று ரோமங்களைப் பிடுங்கியபின்னர் இரத்தத்தைப் பூசினால் மயிர் முளையாது. எச்சத்தைக் கண்ணிற்றேய்த்தால், பூவையும் வெள்ளையும் போக்கும். எரும்புப்புத்தில் வைத்தாலது வெருளும். முடி முளையா திருக்க நாடியவிடத்தில், பொன்னரிதாரம் சுண்ணாம்பு வெளவால் மலம் ஒன்றுகூடிய தண்ணீரால் பூசினால் நீண்டகாலத்திற்குப் பின்னையன்றி முடிமுளையாது. அவ்வாறு பல விடுத்தங்களிற் செய்தா லறவே முளையாது.

'பலினாசு' சொன்னார், வத்வாத்தென்ற வெளவால், தண்ணீரில் அழுந்தி யுயிரிழந்தபின்னர் அத்தண்ணீரைக் குடித்தவன் உறங்கவே மாட்டானென்று.

வெளவால் கழுத்தில், எவனுடைய ரோமத்தைக் கட்டிவிடப்பட்டதோ, அவன் அது சாகும்வரையில் அல்லது அம்மயிரை எடுக்கும்வரையிற் சுகமாய் தூங்கமாட்டான். அதன் தலையைத் தலைகாணிக்குள் வைத்து அதில் தலைவைத்து படுத்தவன் உறங்குவான். உச்சிமூளையைத் தேனுடன் கண்ணிற்றேய்த்தால் நீர்வடிதலை விலக்கும். பன்னீரெண்ணெயுடன் கலந்து நரம்புவியாதிக்குப் பூசினால் பலன் தரும்.

பதினாலாவது பசுல்.

கோழி.

சிலவேளை போர்புரிவதிலும், சப்தத்திலுஞ் சாவலுக்கொப்பாகியதும், சிலவேளை விளையாட்டிற் பூமியில் முட்டையிடுவதும், சாவல் புணர்ச்சியன்றி, வடகாற்றினால் தின்ன மதாரமும் குஞ்சு பொறிக்கு

மியபற்றதுமாகிய முட்டைகளிடுவதும் அக்காற்றினால், முட்டை கரு, மிகவாக முதுகினிற் சேரக்கூடியதும், அச்சமையம் ஒரு முறையாவது சாவல் புணர்ச்சியுண்டாகுவதால் எல்லா முட்டையு மிணக்கமாய்விடுவதும், வடகாற்றினாலும் இடி சப்தத்தினாலும், "அடை" யிலிருக்கும் முட்டைகள் முழுதுங் கெட்டுப்போவதும், வயதானால் சிறுத்தமுட்டையிடுவதும், நெருக்கமாயுள்ள ஈத்தமரங்கெற்பமாகாத்ததுபோல கொழுத்தால் முட்டை யிடாத்ததுமான பறவை.

பிரயோஜனங்கள்.

வெள்ளைக் கோழியை, தொலிகளைந்த ஒருபிடி எள்ளும், பத்து வெண்காயமுஞ் சேர்த்து, குழைய வேகவைத்து, மாமிசத்தைத் தின்று அதன் சால்னாவையுங் குடித்தால் தாதைக் கெட்டிப்படுத்தும். மாமிசத்தை நேமமாய்த் தின்றுவந்தால், மூலம், சூலை ரோகத்தைவருத்தும். கொழுப்பை முகத்திலுள்ள செம்புள்ளியிற் பூசினால் பலன் கொடுக்கும். குளிரினாற் காலிலுண்டான பித்தவெரிப், பித்தவெடிப்புகட்குப் பலன் கொடுக்கும். பித்தை, கண்ணிற் றேய்த்தால் நீர்வடிதலை மாற்றும். இரைப்பெட்டியைச் சுட்டு, விரிப்பில் மோள்கிறவனுக்குக் கொடுத்தாலவை நீங்கும். மூன்றுமுட்டையை; சிறுக்காவில் மூன்றுநாள், புளிக்கவைத்தும் வெயிலினால் சுண்ட தின்பின், படர்தாமரை, பத்துகளிற்பூசினாலவைநீங்கும். அன்றவேக்காடுள்ளமுட்டை, இந்திரியவிளைவையும் ஆசையுமதிகப்படுத்தும். முட்டையை மழைகாலத்தில் வைக்கோலினுள்ளும் கோடைகாலத்தில் உமி,தவுட்டிலும்வைத்தால்,கெடாமல் மிகுத்தநாளைக்கிருக்கும் "முட்டையிலெடுக்கும்" எண்ணெய்" சூலை வியாதிக்குப் பலன்கொடுக்கும். மலத்தைச்சிறுகாவுடன் அல்லது. முந்திரிப்பாணியுடன் சேர்த்து குடித்தால், குன்மம், கல்லடைப்புகட்குப்பலன் கொடுக்கும். கருங்கோழி "மலத்தை" ஜனமிகுத்தவர் வீட்டு வாயலிற்புதைத்தால், தீங்கும் வழக்குமுண்டாம். இரைப்பெட்டியிலுள்ள கல்லை "வலிப்பு" ரோகமுள்ளவனுக்குக்கட்ட; அவ்வலிப்பையு மதன் வலியையும் போக்கும். மேலும் தாதுவிர்த்தி, கண்திஷ்டிக்குப்பலன் கொடுப்பது மன்றி, பாலகனின் தலைக்குக் கீழ்வைத்தால், நித்திரையில்திடுக்கிடான்.

பதினைந்தாவது பசுல்.

சாவல்

ஆசைமிகுத்து, அகப்பெருமை யடித்து, பஜ்ருதய மறிந்து அவயயிட்டுக்கூவுகிறதும், அக்கூவல் சப்தத்தில்முனிப்படைவனுக்குச்சோம்பேறி நீங்குவதும், வெண்சாவலுக்குப் புலிவெருளலும், அவைகளிற் போரிடுஞ்சாவல் மிக நலவுள்ளதும், செவந்தகொண்டை, தடித்தபிடரி, சிறிய கண்; கருப்பு நிறக்கண், நிகங் கூர்மை, உயர்ந்த சப்தம், இவைகள் போர். புரியுஞ்சாவலினடையாளமும் தன்னைப் பார்க்கிலுங்கோழியைத் தெரிந்துகொண்டு, தன் சொண்டினால் இரை எடுத்துக்கொடுத்து அத்துடன் போரிட்டு விளையாடுவதும் கோழிகட்கு வரும் பகமையைத் தானே தட்டி இரவு காலங்களிலவைகள் சேகாயா யடைந்த பின், அவ்வாசலிலிருந்து அக்கோழிகளைக் காத்துகொள்கிறதும், வயதில் ஒரு சிறிய முட்டையிடுவதும் வெண்சாவலிருக்குமிடத்தில் "பறக்கத்துண்டாவதும்" ஷெய்த்தான் புகுதாததுமான பறவை.

பிரயோஜனங்கள்

கொண்டையை, யுலர்த்தி, பொடித்து, விரிப்பில், மோளுகிறவருக்குக்கொடுத்தாலது நீங்கும். வெண்சாவல்,அல்லது, செஞ்சாவல்,கொண்டையைப்பு கைபிடித்தால், பைத்தியத்துக்கு நல்ல பலனைக்கொடுக்கும் பித்தை "கண்ணிற் றேய்த்தால், மங்கல், இருள் இவைகளைப்போக்கும் வெண்சாவல்" பித்தை, சால்னாவுடன் வெறும்வயிற்றிற்குடித்தால் மறதி நீங்கி மறந்தது நினைப்புண்டாகும். சாவல், பித்தை; வெள்ளிப்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு நேமமாய் கண்ணில்தேய்த்து வந்தால் வெள்ளையைப்போக்கும், இரகெள்ளைக் குளிர்காச்சலுள்ளவனுக்குக் கட்டினால் பலன்கொடுக்கும். மேலும் குதிரை ஏற்றமுடையவன் இடுப்பிற் கட்டிக்கொண்டால் வருத்தமடையான், இரத்தத்தைக்கண்ணிற் றேய்த்தால் வெள்ளையை நீக்கும். மேலும் தேனுடன் கலந்து, நெருப்பிற் சுட வைத்து, கோசத்திற்பூசினால், தாதையும், இன்பத்தையும் பெலப்படுத்தும். போர்புரியுஞ் சமயத்தில் வெளிப்படு மிரத்தத்தை ஒஜீபனத்திலிட்டு, ஒரு கூட்டமானவர்கள்; தின்றால் அவர்களுக்கு இடையில் வழக்குண்டாகும். மாமிசத்தை யுலர்த்திப்பொடித்து, மாசாக்காய் சம்மாக்கு, இவைகள் சமமாய், கலந்தரைத்துக்கடலை பிரமாணம் உண்டைசெய்து, வயற்றோட்டமுள்ளவனுக்குக் கொடுத்தாலுடனே நிவர்த்தியாம் வயற்றில் வான நிறத்திலும், வைர நிறத்திலுமுண்டாயிருக்கின்ற "கல்லை" பைத்தியமுடையவன் பேரிற்கட்டினால் சுஸ்தமாகும். அதல்லாதவன் பேரில் கட்டினால் மோக ஆசை அதிகமாகும். இரைக்கொட்டையைப்

போர்புரியுஞ் சாவலுக்குக்கட்டினால் அதை எச்சாவலுமிகைக்கா (வெல்லாது.)

பதினாறாவது பசுல்

கவுதாரி

பறக்கத்து "பெற்றதும்; மிகப்பலுவுதலும், முதுகு வளர்ந்ததும், வசந்த காலத்திற் சந்தோஷமாய் வசிக்கின்றதும்; சப்தம், வார்த்தை "வஜனிலுள்ளதும், வாட்சிகாலத்தில் பறக்க சக்தியற்றுத் தோட்டங்களன்றி வீடுகளிற் புணர்ச்சி செய்யாததும், இராஜாளிக்டெங்கொடாததுமானபறவை.

பிரயோஜனங்கள்

அதன் மாமிசத்தைத்தின்று அந்த ("சால்னைவை) ஆணத்தை நக்கினால், தாதுவிர்த்தி, தத்துவம், இந்திரியவிளைவு, அதிகமாகும், நேமமாய்த்தின்றுவந்தால் உச்சிமூளையும் விளக்கமு மதிகமுண்டாகும்.

பதினேழாவது பசுல்.

வெள்ளைக்கழுகு.

கோலத்திற்கழுகுக்கொப்பானதும், உயர்ந்தமலைகளில் முட்டையிடுவதும், பிணங்களைத் தின்பதற்கிச்சித்து ("படைகளுடன்") சமாடுங்கூட்டங்களைத்தொடர்வதும், மிருகங்களின் குட்டி, மலம், குடல்இவைகளை யருந்துவதற்கிச்சித்து, ஹாஜிகளுக்கும்: ஆடுமாடு, ஒட்டகைக்கூட்டங்கள், கிடைகட்குப்பின், தொடர்வதுமானபறவை.

பிரயோஜனங்கள்.

அதன் பித்தை, எண்ணெய்யுடன் காதில் உளுக்கினால் காதிரைச்சலைக்கண்டிக்கும். பித்தை, கண்ணில் தேய்த்தால் வெள்ளையைப்போக்கும் இரத்தத்தைக் குடித்தால் நாலாமுறைகாச்சலைப்போக்கும். சம்பங்கி எண்ணெயுடன் கலந்து முகத்திற்பூசிக்கொண்டால் இராஜசமுகத்தில் மதிப்புண்டாகும் வலது இறகெலும்பைக்கரித்துக் குடிப்பாட்டியவனைக்குடித்தவனாகப்புவைப்பான். இடது இறகெலும்புக்குக்கோபமதிகமாகும்.மலத்தைசுமந்துகொண்டவள் பிள்ளையைவிழுத்தாட்டுவாள்,

பதினெட்டாவது பசுல்.

காகம்.

அதிகக்கருப்பாயும், ஆயிர வருடத்தைக் காண்க ஜீவித்திருப்பதாயும், தன் பிள்ளையைத் தவா விடாமற் பாதுகாத்தலுமுள்ள பறவை.

பிரயோஜனங்கள்.

காகத்தை சுட்டு எண்ணெயுடனரைத்து முடி முளைக்க நாடிய இடத்திற் றடவ முளைக்கும். நாக்கையுலர்த்தி,தாகமுடையவன் தின்றால் தீரும். தாமரைக்காயை யுலர்த்திப் பொடித்துத் தண்ணீரில் சேர்த்துக் குடிக்கும் வழிப்பிரயாணி தாகிக்கான் பித்தை; சாவல் பித்துடன்கலந்து கண்ணில் தேய்த்தா லிருள் நீங்கும், ரோமத்திற் பூசினால் கறுப்பாக்கி வைக்கும். கொழுப்பும், குடலையுந்தின்றால் துவர்க்கமாய் வடியும் நீரைப் போக்கும். கொழுப்பை பன்னீரெண்ணெயுடன் கலந்து முகத்திற் பூசினால் இராஜ சமுகத்தில் நாடியது கிடைக்கும். இரத்தத்தை யுலர்த்திப் பொடித்து, மூலத்திலுதிர்த்தால் விணக்கமாக்குவிக்கும். பொன்னரிதாரம், சுண்ணாம்பு இவைகளை யுட்கொண்டவனுக்கு, முட்டையைக் குடிப்பித்தா லதன் வீரை யடக்கும். முட்டையைத் தின்றபின், பொன்னரிதாரம் அல்லது, சுண்ணாம்பைப் பரிமாறினாலறிவு நீங்காது. அதைக் கள்ளிலூற்றிக் குடித்தவன் கள்குடிப்பதில் மீளான். மலத்தை சிறுக்காவுடன் கலந்து ஈரல் குலை வியாதியுள்ளவன் அந்தத்தலத்திற் பூசினால் பலன் கொடுக்கும். தொண்டை கட்டுள்ளவனுக்கு அதில் கட்டினாலது நிவர்த்தியாம்.

பத்தொன்பதாவது பசுல்.

பொடிச்சிட்டுக் குருவி.

வசந்த காலத்தையும், நல்ல காற்றையு நாடுகிறதும், ஹிந்துதேயத்திலிருந்து வருவதாயு முள்ள பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் குஞ்சை எடுத்து, குங்குமப்பூவினா லதிற் பூசி இருந்தவிடத்தில் வைத்துவிட்டால், அதன் தாய்வந்து பார்த்து பிள்ளைக்கு வியாதியுண்டாய்விட்டதாய் மதித்து, அவிழ்தம் செய்யுதற்கு மஞ்சள்

நிறக் கல்லைக்கொண்டு வரும் அக்கல்லைப் பொடித்து மஞ்சள் காமாலை யுள்ளவனருந்தினா லுடனே யது மாறும். மாமிசம் பார்வை துலக்கத் தையதிகப்படுத்தும். அதை யுலர்த்திப் பொடித்துத் தொண்டை[illegible] யுடையவனுக்கு வெறும் வயற்றில் கொடுத்தா லுடனே சுஸ்தமாகும். அரிசி, வித்துகளைத் தின்று கழித்தப் பொடிச் சிட்டுக்குருவியின் மலத்தைப் புள்ளி, பத்துகளிற் பூசினால் பலன் கொடுக்கும்.

இருபதாவது பசுல்.

பச்சைப் புறா.

நிறம் பசுமையாயும் சொண்டுசிகப்பாயும், சிலது மஞ்சணிப்பாயும், தேன் குழவியைப் பகைத்துத் தின்னுவதாயும், தின்னப்படாதத்தைக் கொல்லுவதாயுமுள்ள பறவை.

பிரயோஜனங்கள்.

மாற்றுக்குறைந்த பொன்னையுருக்கி அதன் பித்திற் (சாய்த்தால்) ஊத்தினால்; அதை செவந்த நிறமாக்கி மாற்றையு மதிகப்படுத்தும். அதைக் குழிநரி, பித்தில் சாய்த்தால் மாற்று குறைந்து நஷ்டமுண்டாவதுபோல இதில் மாற்றதிகமாய் இலாபத்தையுண்டாக்கும்.

இருபத்தோன்றாவது பசுல்.

மயில்.

அழகு, வடிவுள்ளதும், அதிக துலக்கமானதும், இறகின் மத்திபத்தில் பொன்போல் வட்டமுள்ளதும், பச்சைசெகப்பு, பலநிறங்களுடையதும், அதுபோல் முட்டையிடுவதும் ஆச்சரிய வடிவுடையதும் இருபத்தைந்து வயதுடையதும், இடையிற் பற்பல நிறமுண்டாகுவதுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் மூளையைக் குன்ம வலிக்கும், குடல் வலிக்கும், சதாபு இலை (தேனுடன் சேர்த்துக்கொடுக்கப் பலன் கொடுக்கும். இரத்தத்தைக் குடித்தவனுக்கு மயக்கமுண்டாகும். பித்தை, ஒரு மஞ்சாடி இடை, "சிக்கன்ஜபீ" னுடன் குடித்தால் வயிற்றோட்டத்திற்குப்பலன் கொடுப்

பதோடு நாவின் தடிப்பையும் மாற்றும், மாமிசம், தாதை அதிகப்படுத்தும் முழந்தாள் வலிக்கும் பலன் கொடுக்கும் (தி-ஆ.) கொழுப்பை. குளிர்ச்சியாயிட்ட உறுப்புகளிற் பூசினால் பலன் கொடுக்கும் (தி-ஆ.) என்பை வைத்துக்கொண்டால் தீங்காகிய கண் திஷ்டிக்குக் காரமானமாம். நிகத்தைப்பிரசவமாகிறவள் தொடையிற் கட்டிக்கொண்டா லுடனே பிரசவமாவாள். அதன்மலத்தை மூட்டம்போட்ட விடத்திலு மயிலிருக்குமிடத்திலும் பாம்பு முதலிய விஷஜெந்துக்கள் விஷபாகா.

இருபத்திரண்டாவது பசுல்.

ஊர்க்குருவி

வேட்டையாடுதலின் நிகமற்றதாயும், பரிமாறுமிடங்களிற் கூடு கட்டுகிறதாயும், வித்து, வெட்டங்கிளி, ஈசல்களைத் தின்னுகிறதாயும், பாம்பை, பகைக்கிறதாயும் கழுதையின் சத்தத்தால் முட்டைகெடுவதாயும் அதிகப்புணர்ச்சியால் வயதுகட்டையாவதுமுள்ளபறவை.

பிரயோஜனங்கள்

இரத்தத்தை, பருப்பு மாவுடன் கலந்து, கோசத்திற் பூசி; பூமியிற் பாதம்படாமலிருப்பானாகில், இன்பத்திற் கடப்பானஆச்சரியமும் ஆசை மிகைப்பும் காணுவான் மாமிசம், தாதையு சுப்பும் வாய்வு அதிகரிக்கும் முட்டையைக்குடித்தால் "ஜிமாகு" மிகுக்கும், மூன்றுநாள் புடக்களத்திற்புதைத்து வைத்தெடுத்துப் பவுந்திரத்திற் பூசினால் செவ்வையான பலனைக்கொடுக்கும்; மலத்தைக்கண்ணிற் றேய்த்தால் மங்கலை நீக்கும் அதைக் கள்ளிலிட்டு குடித்தவன், அடித்து மோதிவிழுந்து மையத்தைப்போலாவான்.

இருபத்திமூன்றாவது பசுல்.

பிணந்தின்னி கழுகு.

பறவைகளையும் சிறியமிருகங்களையும், வேட்டையாடுகின்ற உயிர்ப் பிராணிகளின் ஈரலை பட்சித்து வியாதியை சுஸ்தப்படுத்திக்கொள்ளுகின்ற "ஓநாயை" நிகத்தாற் பி[illegible]ந்துவிடுகிறதும், பிணத்தை பட்சித்தலுக்கு ஆவல்கொண்டு, "படைக[illegible]" சுமாடுங் கூ[illegible]ங்களைப் பின்பற்று

கிறதும், குஞ்சு பொறிப்பதில் அபேட்சையற்றதும் அறுதலிதனத்தாலிரண்டு முட்டையையிட்டுங் குஞ்சுபொறித்து, மற்றதை யெறிந்துவிடுவதும், கிழடாகி பறக்கச் சக்தியற்றபோது, குஞ்சுகள் இரை கொ[illegible]கிறதும், வயது மிகுத்த வழிநடை நீண்டதும் எமனில் காலை பசிக்கும். இறக்கில் மாலை பசிக்கும் போய் மேய்கின்ற தராணியுள்ளதும், மாமட்டையில்லாத மலையுச்சத்திற் கூடுகட்டி முட்டையிடுவதுமுள்ள பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் பித்தைக் கண்ணிற்றேய்த்தால் இருளைநீக்கும். பால் கட்டுபட்ட ஸ்தன்னியத்திற் பூசினவுடனே வலியடங்கி, முலைக்கண்திறந்து, பாலதிகஞ் சுரக்கும். இரத்தத்தை மஞ்சள்கடுக்காயுடன் கலந்தரைத்து கண்ணிற்றேய்த்தால் கண்ணிலுள்ள சிரங்கு நீங்கும். மற்றைய சிரங்குகட்குபயோகப்படுத்தினாலும் பலன் கொடுக்கும். கொழுப்பை; எண்ணையுடன் கலந்துருக்கி, சூலை நோயுள்ள காலிற் பூசினாலும் மூளிவலிகட்குப் பூசினாலும் பலன் கொடுக்கும். கொழுப்பை, கத்தாளை; தேன், இவைகலந்து மூன்றுவிடுத்தம் பவுந்திரத்தில் வைத்தால் மிக்க இணக்கமாம். அதன் கூட்டில் சத்தங்கொட்டைக் கொப்பாயும், உசப்பலில் சத்தமும் உடைத்தால் ஒன்றுமில்லாததாயுமுள்ள கல்லுண்டு. அதன் கூட்டை நாடிப்போனவனை; இந்தக் கல்லைத்தான் நாடிவருகின்றானென்றெண்ணி, யக்கல்லா லவன்பேரிலெறியும். அக்கல்லை, பிரசவஸ்திரியின்பேரில் கட்டினாலவள் வருத்தமின்றி விரைவில் பிள்ளை பெறுவாள். நாவின்கீழ் வைத்துக்கொண்டவன் வழக்கில் மிகைப்படைதலுமன்றி நாடியபலனிலுஞ் சித்தியடைவான்.

(*)

இருபத்திநான்காவது பசல்.

செம்புகம்.

(:o:)

விலையுயர்ந்த இரத்தின நகைகளை மோசவிதமாயெடுத்து வே[illegible]ங்களிலெறிகிறதும், இருள்களிலும் மோடுகளிலும் கூடுகட்டி, தன் முட்டையை; வெளவால் நாடாதிருக்க அக்கூட்டில் ‘தலபு’ இலையைக் கொடுவந்து வைக்கின்றதும், புத்தியீனத்தால், மிகுந்தவேலைகளில் கூட்டையுங் குஞ்சையும் மறந்துவிடுகிறதும், மிகுந்த சதிமோசமுள்ளதென்றறியப்பட்டதுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் உச்சி மூளையை (காலியத்) வுடன் கலந்துநசியம்பிழிந்தால் முகவாதம், பக்கவாதமகலும் இரத்தத்தை யுலர்த்தி, பன்னீர் கலந்து குடித்தவன், திரவிய சம்பன்னனாவான். இரத்தத்தைச் சூட்டுடன், அம்பு, முள், தைத்துள்ள இடத்தில் பூசினால் இலேசாய் வெளிப்படும். கொழுப்பை, சர்க்கரையுடன் கலந்து பாலகர்கட்குக்கொடுத்தால், யாபுகவிர்த்தியும் நாகரிகமுமுண்டாகும். இறகைக்கரித்து, எரும்பு புத்துகளிற்றூவினால் அவைகள் வெருட்சியடையும். தலைமூளையை வென்னீர் புரையைவிட்டு வெளியானவுடன் இரண்டுமூன்று விடுத்தங் கண்ணிற்றேய்த்தால் வெள்ளையடங்கலையு மாற்றும்.

(:*:)

இருபத்தைந்தாவது பசல்.

காட்டுக் காகம்.

* * *

வழிநடை மிகுத்ததும், தூரங்களிற் சுற்றித்திரிவதும் விடிவேறானவுடன் பறக்குந் தவர்க்கத்திலேயே விரைந்து பறக்கிறதும், வஸ்துக்களைத் தங்கரீகப்படுத்திப் புதைத்து வைத்துக்கொள்கிறதும், கானகத்தில் ஒட்டகை, குதிரை, மனிதன் ஆகிய சிறிய பெரிய ஹயவான்களிடத்திற் பலதுங் கூடி, கண்ணைக்கழைய நாடுகிறதும், கொடிய பசியுள்ள நேரத்தில், அடித்துத் துரத்தினும் அகன்றுபோகாத்தலும், ஆமை, முதுகிற்சொண்டால் கொத்தி தின்னுவதும், ஒட்டகை முதுகில் காய்ப்புண்டு கெட்ட மாமிசத்தைக் கொத்தி தின்னுகிறதும், குஞ்சு பொறித்தவுடன், அருவருப்பான கோலம், நாற்றம், பெரியதலை, நீண்ட சொண்டு சிறிய சடலம், இறகன்றி வெண்மையாகவிருப்பதால், அதன் தாய், கண்டு விறண்டோடியபின்னர், அல்லாஹுத் தஆலா அதற்கிரையாக, ஈக்களையனுப்ப, அதை அக்குஞ்சு பட்சித்து இறகு முளைத்து, கருநிற வடிவும் வந்தபின் தாய் மீண்டு அக்குஞ்சுள்ள இடத்துக்கு வருகிறதும், வியாதிவாய்ப்பட்டபொழுது மனிதன் மலத்தை தின்னுகிறதும், “கிளி” யைப்போல பேச்சுப்படித்துக்கொள்கிறதுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதை யுலர்த்திப் பொடித்துட்கொண்டவன் தாகிக்கமாட்டான். பித்தை, கள்ளிலிட்டு, குடித்தால் மயக்கமுண்டாகும். பற்குத்தியைக்

கட்டிக்கொண்டால் ஆசை மீறும். பயிர்க்காகத்தின் தலையை வேக வைத்துத் தின்றால் பொட்டுவலி தீரும். இரத்தத்தை; சுண்ணாம்புடன் கலந்து, கள்ளுடன் சேர்த்துக்குடித்தவனதை முனிந்து மறுத்தும் மீளான். மலத்தை மெல்லிய வஸ்துவிற் பொதிந்து இரும்பலுள்ளவனளவிற் கட்டினாலவை நிவர்த்தியாம்.

இருபத்தாறாவது பசுல்.

காடை.

அதன் சப்தத்தைக்கொண்டு பறக்கத்தை நாடப்பட்டதும், காடுகளிற் சென்று முட்டையிட்டு, அதைவிட்டுமறைந்து, சிலகாலஞ்சென்று மறகாமல் முட்டை இட்ட இடத்தைப் பெற்றுக்கொள்கிறதும், இரவுகாலத்தி லுறக்கமற்றிருப்பதும், ஆச்சரியமாகக் கூவப்பட்ட தென்றறியப்பட்டதுமான பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் இரத்தத்தைச் சரீரத்திற் பூசினால் முடி யுதிருதலுள்ள வியாதிக்குப் பலன் கொடுக்கும். மாமிசம் (சத்தி) வாந்தி, குத்தல், நெஞ்சடைப்புகட்குப் பலன் கொடுக்கும். என்பைக்கரித்து, எண்ணெயுடன், குழப்பி, முடி முளைக்க நாடியஇடத்திற் பூசினால் மிகவாய் முளைக்கும் அதனுள்ளிலுள்ளதைக் கமைந்து போன என்பில் பூசினால் அதன் தானத்தளவில் மீண்டுக் கொள்ளும். பித்தை கண்ணில் தேய்த்தாலதிலுள்ள மாசுமங்கல் தீரும்

இருபத்தேழாவது பசுல்.

கொக்கு.

ஒன்றைவிட்டொன்று பிரியாமல் ஒன்றுசேர்ந்து ஏகமாய்ப் பற[illegible]கையிற் பின் தொடர்வதற்கு முறை யேற்படுத்திக்கொள்வதும், ஒன்றை தலைமையாக்கி மற்றவைகளதைப் பின்பற்றி பறப்பதும், அவ்விதமே, இரவுகாலங்களில், பாதுகாக்குமுறை யேற்படுத்தியதில் முதன்மையானது, தூக்கமிகைப்பாகுவதைப் பயந்து ஒற்றைகாலில் நின்று தன் கூட்டங்களைச் சுற்றிப் பாதுகாப்பதும், அத்தருணங்களிற் பகையைக் கண்டால், அபயசத்தமிட்டு, தன் இனங்களை, "யுசார்"படுத்துகிறதும். பூமி சுரியவாங்குமெனப் பயந்து, தண்ணீரில் மெள்ளன நடக்குகிறதுமான தென்றறியப் பட்ட பறவை.

பிரயோஜனங்கள்.

அதன் கண்ணை யரைத்துக் கண்ணில் தீட்டினால் நித்திரை செய்யான். பித்தை: கண்ணில் தேய்த்தால் நீர் வடிதலைமாற்றும். மாமிசமும், கொழுப்பும், ஒன்றாய்ச் "சமைத்த சால்னாவைக் காதினுள், உளிக்கினால் காதிரைச்சலைப்போக்கும். மூளையையுருக்கி, காடியுடன்வென்னீர்ப்புனையிலிருந்து ஈரல் குலைவலி யுள்ளவன் குடித்தால் பலன் கொடுக்கும். இரப்பையை யுலர்த்திப் பொடித்து" இரண்டு திருஹத்திடை "கொண்டைக் கடலை" தண்ணீருடன் சேர்த்துட்கொள்ள மாங்காய் வலிக்கும், நீர்ப்பை வலிக்கும் பலன் கொடுக்கும்.

இருபத்தெட்டாவது பசுல்.

கழுகு.

பறவைகளடங்கலுக்கு நாயகத்தனமுடையதும் பொழுது உதயத்துக்கும் அஸ்தமித்தலுக்கு மிடையில் ஒரேநாளிற்பறந்துவிடலாமென்று மதிக்கத் தக்க பறவையுள்ளதும், யானைக்குட்டியைத் தூக்குமென்னு மதிப்புடைய சடலமுடையதும், நானூறு காதத்துக்கப்புறமுள்ள விடக்குநாற்றத்தையறியும் தத்துவமுடையதும், உசம்புதற்குத் தகுதி நீங்கும் வரையில் விடக்கை பட்சிப்பதும உயர்ந்த தானங்களில் முட்டை இட்டு அடைகாக்காமல், சூரிய சூட்டில் வைத்துவிடுவதும் வெளவாலுக் கஞ்சி "தலபு" இலையைத் தன் கூட்டில் வைத்துக்கொள்கிறதும் நல்ல வாசத்தைக்கொண்டால், ஹலாக்கையும் தன் சோடு இழந்தால் சவிப்[illegible]யும், துர் நாற்றத்தில் ஆனந்தமும், பிணத்தை பட்சிக்க. ஆசைகொண்டு படை சமராங்கூட்டத்தைப் பின் பற்றிப் போவதும், மனிதனின் மாமிசத்தைத் தின்றா, தனக்குண்டான வியாதியைச் சுஸ்தப்படுத்திக் கொள்வதும் கண் வெளிச்ச மாறினால்; மனிதனின் பித்தைத் தேய்த்து துலக்கிக்கொள்வதும், ஆயிரவருடம் ஜீவித்திருப்பதுமான பறவை.

பிரயோசனங்கள்.

அதன் பித்தை, காதில் உளுக்கினால் இரச்சலைப் போக்கும். கண்ணிலதை ஏழுநாள் தொடர்ச்சியாய்த் தேய்த்து வருக, கண்ணிருள் மங்கல் நீர் வடிதல் இவைகளைமாற்றும். கொழுப்பைத்தேனுடன் கலந்து, கண்ணில் தேய்த்தால், கண் வலி தீரும். சமைத்த மாமிசத்தை. வறசு உப்பு சீரகம், தேன், இவைகளுடன் கலந்து, சகலவிசங்கட்குமுட்கொள்ளத் தீரும். கொழுப்பை யுருக்கி, இரவுபகலாயுந் தொடர்ச்சியாயுங் காதில் "உளுக்கி" ஊத்திவரக் காதிரைச்சலைப் போக்கும்.

* * *

இருபத்தோன்பதாவது பசுல்.

தீவிழுங்கி.

கழுத்து; ஒட்டகைபோலும், இறக்கை. சிறகு; பறவைபோலும், தான் தின்னுங் கற்கள் இரைப்பெட்டியில் நீராய்விடுவதும், தீங்கன்றி, எவ்வித நெருப்புக் கங்கிகளையுந் தின்பதும், ஈ, எரும்பைப் பயந்து முட்டையை பூமியில் மறைப்பதும், நடக்கும்பொழுது சிறகை, கால்வரையிற் சோர விடுகிறதும், காற்றுக்குப் பயந்ததும் சிவந்த நிறமுள்ளதும், என்பில் மூளை இல்லாததும், இருபது முட்டைக்குமேலிட்டு, ஒரு பங்கைப் பூமியிற் புதைத்தும், ஒருபங்கைப் பொழுதின் சூடுபடச்செய்தும், மற்றொரு பங்கை அடைகாப்பதும்: குஞ்சுபொறித்தவுடன் சூரியப்புடத்திலிருந்த முட்டையைத் தான் கொத்திதின்றுவிட்டு, பூமியிலுள்ள முட்டையை வெளிப்படுத்தி அதிற்றுவாரமிட்டு, அதிற் சேரும், ஈ, எரும்பீ, முட்டைகளைத் தன் குஞ்சுக் கிரைக்கொடுப்பதுமான பறவை.

பிரயோஜனங்கள்

அதன் பித்தை; கண்ணில் தேய்த்தால் கண்ணிருணீங்கும் "இரைச்சி" மாமிசத்தை நேமமாய்த்தின்று வருகிற கெட்டவாடையை மாற்றும். அரும்பாறை, சிரங்குகளையும் போக்கும், கொழுப்பைப் பூசினால் வீக்கங்களகலும். முட்டைத்தொலியை; சமையல் செய்யும்,மாமிசங்களுடன்பாத்திரத்திலிட்டு வேகவைத்தால், அம்மாமிச மிகக்குழைவாகவேகும்.

முப்பதாவது பசுல்.

கொண்டைக் குருவி

தன்குஞ்சை, மனிதன் மலத்திற் புரட்டிவிடுவதால் நாற்றசரீரமுள்ளதும், வசந்தகாலத்தில், வாயைத்திறந்திருப்பதால் தன்தொண்டையில் ஈ, நுழைந்து பறப்பதும், அதிருக்குமிடத்தில் (கறையான்புற்று) வன்மீசம், காணப்படர்த்ததும் மலைத்தேனைத் தின்று வியாதியைப் போக்கிக்கொள்வதும், தண்ணீர், சமுகத்திலிருப்பதையுந் தூரத்திலிருப்பதையும் "நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அறிவித்தல் செய்ததுமானபறவை.

பிரயோஜனங்கள்

அதன் இரைப்பையைக் கட்டிக்கொண்டவன் தலை வலிதீரும், கண்ணையுலர்த்தி, எண்ணெயிற் போட்டுவைத்து அந்த எண்ணெயை முகத்திற் பூசிக்கொண்டால்; கண்டவருகப்பு வைப்பார்கள், கண்ணை தலைக்குக் கீழ்வைத்து படுத்தவன், அது இருக்குமளவும் சயனிக்கான் கண்ணைக் கட்டிக்கொண்டவன் மறந்தவைகளை யாபகமடைவான்; குஷ்டரோகமுடையவன் தன் பிடரியில், கண்ணைக்கட்டிக்கொண்டால் நல்ல சுகமடைவான்; நாக்கைவைத்துக்கொண்டவனை அதுமிருக்குமளவும் பகையர் மிகைக்கார்கள். நாக்கையு மிரண்டுகண்ணையுஞ் சேர்த்துக்கட்டிக்கொண்டவனுக்கு மறதியைற்றட்டப்படும் அதையுட்கொண்டவனுக்கு, அறிவு, விளக்கம்; கூர்மைபுத்தி, யாதியவைகளதிகமுண்டாகும், தாமாக்காயைக் கட்டிக்கொண்டவனுக்கு" காதுவிர்த்தியாம், அதைச்சுட்டுப்பொடித்து, சீர்க்கரையுடன் சேர்ப்பித்து, ரொட்டியின் பேரில் வைத்து ஒன்றாய்த் தின்ற இருவர்களுக்கிடையிற் கடினபிரிய நேசமுண்டாகும், பித்தை; முகவாதத்துக்கு இருளுள்ள வோர் தலத்திலிருந்துக்கொண்டு நசியம் பிழிந்தால் நல்ல சுகமுண்டாகும். வலதுசிறகை: தூங்குகிறவன் தலைக்குக்கீழ் வைத்தாலவனுக்குத் தூக்கமதிகமாகும். அதனளவில், வருத்தத்தினால், பிடுங்கப்பட்டுள்ள; மனிதனின் பல்லையுஞ் சேர்ப்பித்துவைத்தாலவன் தூக்க நீளமாகும் சிறகை, புறாக்கூட்டில் மூட்டம்போட்டால் அக்கூட்டைவிட்டு வெருளும் சிறகை: காதில்வைத்துக்கொண்டு வழக்குச்செய்பவன் மிகைப்படைவான் மாமிசத்தை நிழலிலுலர்த்தி "உப்புக் கண்டம்" போட்டுலர்த்திப் பொடித்துமாவுடன் கலந்து, களிக்கிண்டித்

தானுடியவனுக்கு உண்ணக் கொடுத்தானுண்டவன் மிகைப்பாகிய நட்புவைப்பான். எலும்பை? மூட்டம்போட்ட புகையால் அவ்விடத்திலுள்ள, கறையான் எறும்பு, தேள், ஆதிய விஷஜெந்துக்களியாவும் மரணமடைந்து போவதன்றியும் நீண்டகாலமட்டும், காணவும்படாது.நகத்தைக்கரித்துப் பொடித்துத் தண்ணீரிலிட்டு அத்தண்ணீரைக் குடித்து, புருஷனோடு விடுகூடிய, இஸ்திரி; அல்லாஹுத்தஆலாவின் கிருபாகடாட்சத்தின் பொருட்டு கெற்பமாகுவாள். ஆமீன்.

எட்டாம் பாபு முற்றிற்று,

ஒன்பதாம் பாபு.

ஊர்வின ஜெந்துக்களைக் கூறல்.

(ஒன்றாவது பசுல்.)

கறையான்.

வெண்மையாகிய சிறிய சரீரமும் எறும்புக் கத்தமானதும், தன் பகையனைப்பயந்து, கோட்டைக்கொப்பாய் "புற்றுசெய்துக்கொள்வதும், ஒருவருடத்திற்குப்பின் இருசிறகுமுளைத்து, ஈசலாய் பறக்குகிறதும் நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களின்" மௌத்தை ஷெய்தானுக்கு வெளிப்படுத்தினதும், தன் புத்து, பாழானால் பலதுங்கூடிக் கட்டிவைக்குகிறதும், கற்களைத் தறிப்பதற்கியன்ற கூர்மையுள்ள இரண்டுவுதட்டையுடையதும், அதற்குஞ்சிறிதான சடலமுள்ள எறும்புகளதற்குப் பின்னால் வந்துக் கவ்வித்தன் கூட்டளவிற் சுமந்து செல்லக்கூடியதும், நேரிலதுகள் வந்தால் எதிர்த்து ஈடுகொடுத்துத் தாக்குகிறதற்கிடங்கொடாததும், அதிகமான தேயங்களிலதனால் பெருத்த நாசங்களுண்டானதாலே அல்லாஹுத்தஆலா" அதற்கெதிரி (சத்துருவாய்) நாசப்படுத்த எறும்பைச்சாட்டியிருக்கின்றதுமான சிறிய புழு.

பிரயோஜனங்கள்.

எறும்புக்கொட்பாகிய பலனை யுடையது; ஈசலும் அப்படியேயாம். இன்ஷா அல்லாஹ் பின்னால் வரும்.

—:*:—

இரண்டாவது பசுல்.

மண்ணுள்ளிப் பாம்பு.

—:():—

பாம்புகளிற் கெடுதியானதும், வால்; (கட்டை) சிறியதும் நீண்டகண்ணு, (வெட்டுக்கிளி) வெட்டங்கிளியைப்போற் கண்முளி, பிதுங்கியிருப்பதும், அதைபிடுங்கப்பட்டால் மறுபடியுண்டாவதும், அறவே கண்ணைமூடி இராததும, குளிர்ச்சியான நாலுமாதங்களிலும்; மண்ணில் மறைந்திருப்பதும், அதன்பின் வெளிப்படுகிறதும், (ராஜியாஞ்சி) எனும் பூண்டில் தேய்த்து, கண்ணிருளைப் போக்கித்துலக்கமடைவதும் வால் அல்லது, வீரப்பல்லை, தறிக்கப்பட்டால் மூன்றுநாளில் மறுத்துண்டாகுவதும், அறுக்கப்பட்டால் மூன்றுநாள்மட்டு முசும்பலடங்காததும், மனிதனையும், மாட்டையும் மிக்க பகைத்து, அம்மாமிசங்களை இன்பமாய்த் தின்பதும் "ஜெய்த்தூன் இலை" யைத்தின்று, தன் வியாதியை நிவிர்த்தி செய்துக்கொள்வதும், பால் கொடுத்துக்கொண்டிருக்கும் ஒட்டகை, உதட்டிற் கடித்தால் தாய்க்குமுன் பால் குடித்த குட்டி மரணிக்கச்செய்யும் விஷமுள்ளதுமானபுழு.

பிரயோஜனங்கள்.

அதன் இரத்தத்தை கண்ணில் தேய்த்தால் பார்வையைக் கூர்மையாக்கி, இருளைக் கண்டிக்கும். கொழுப்பை; உருக்கிக்கண்ணில் தேய்த்தால் நீர்வடிதலை மாற்றும் கழுக்கட்டு ரோமம்பிடுங்கிய இடத்தில் தேய்த்தால் அறவே முளையாது. தாமரக்காயை யுலர்த்தி சுமந்தவனுக்கு வஞ்சனை சூனியம் முடிகாது. நான்காமுறைக் காச்சலைப் போக்கும். மாமிசத்தைத் தின்றால் கடினவியாதிகட்குக் கார்மானமாகவிருக்கும். மேலும் சவ்வைப் பெலப்படுத்தும், நரைப்பைபிற்படுத்தும் ஜிமாவுடைய சஹ்வத்தை யுசப்பும். தலையையும் வாலையுங் கட்டுத்தின்றால், உறுப்புகள் குறைந்துவருகிற வியாதிகட்கும், மாமிசம் குஷ்டரோகத்துக்கும் பலன் கொடுக்கும் (தி.ஆ). எண்ணையில் சமைத்த மாமிசங்களைச் சரீரத்திற் பூசினால் முடி; ரோமம்முளையாது. பாம்பு வகைகளின் விசங்களுக்குத் தகிகப்பலனைக் கொடுக்கும். தலையையும் தோலையுங் கட்டி சுமந்துக்கொண்டவர் பிள்ளையை விழுக்காட்டுகிற கோயில் அச்சந்திருவாள். தொலியைக் கரித்த; சாம்பல் முடியுதிரும் வியாதிக்கனுகூலமான பலனளிக்கும். அதைப்பிளந்து அதன் கடிவாயில் வைத்தானுடனே அவ்வலியடங்கும்.

மூன்றாவது பகல்.

மலைப்பாம்பு.

வலுப்பமான சடலமும் பயத்தைவருத்தும் ரூபமும் மூன்று முழத்தினின்றும் முப்பது முழம் நீளமுடையதும் பல வர்ணமுடையதும், பெரிய கண்ணும், தாடிக்குக் கீழ் ரோமமும், மிகுந்த வீரப்பற்களும், மஞ்சள் கருப்புநிற முகமும், கடிக்குதல் கடுசான வாயும் கண்ணைமூடும் புருவமும், உயிர்ப்பிராணிகளை விழுங்கி அதன் என்புகளை பாரிய மரத்தைச்சுற்றி, நொறுக்கிக்கொள்கிறதாயும், தண்ணீரிலும், தரையிலும் மலையிலும் ஜீவித்து சுகம்பெறுவதாயுமுள்ள புழு.

பிரயோஜனங்கள்.

அதன் தாமரைக்காயைத் தின்றால் அதிக தத்துவமுண்டாம். உயிர்ப்பிராணிகளடங்கலும் வசப்படும். தொலியை ஆசையுண்டானவன் சுமந்துகொண்டால் அது நீங்கும். உயிர்ப்பிராணிகளும் வசப்படும் தலையைப் புதைத்த இடத்திற்கு கலவுகள் முன்னேக்கும்.

நான்காவது பகல்.

வெட்டுக்கிளி - வெட்டங்கிளி - விட்டில்

பறவையுள்ளதும் குளிரால் துன்பமடைவதும், வசந்தகாலங்களில் வான் பயிர்களை மேய்வதும், இளகலுள்ள பூமியைத் தேடித்தெரிந்து, தன் வாலால் குழிதோண்டி, ஒன்றன்றியே நூறு முட்டைகளிட்டு அதிற் புதைத்து, பறந்து, மாறிவரும் வசந்தகாலத்திற் புதைத்த முட்டைகளை வெளிப்படுத்த சிறிய ஈப்போலவைகள் வெளிப்பட்டுப் பயிர்களைத்தின்று சீரவலு வுண்டுபட்டு, மறுவிடம் பேந்து, முன்போலவே மறுவருஷங்களிலும் அவ்வாறுசெய் துற்பத்தியாகிவருவதும், அவைகளை ஓரிடத்திற் சுட்டுக்கரித்தால் மற்றவைகள் கரித்த வாசனையாலறிந்து, மறுவிடம் பேந்து அங்ஙனம் மரணமாய்விடுவதுமான புழு.

பிரயோஜனங்கள்.

அதின் நீண்ட காலுள்ளதை; நான்கா முறைகாச்சலுடையவன் தன் பிடரியிற் சுமக்க அது நிவர்த்தியாம். அதை மூட்டம்போட்டால்,

மூலரோகத்துக்கும் நீர்க்கடுப்புக்கும் பலன் கொடுக்கும். அதன் சாம்பல் பவுந்திர ரோகங்களுக்குப் பிரயோஜனமாம். அதன்கால்கள் அரும்பாரையைக் களையும்.

ஐந்தாவது பகல்.

பாம்பு.

வலுப்பமான படைப்பும், கொடிதான தத்துவமும், கொஞ்சப்பகமையும், நீண்டவயதும் பற்பல வகைகளானதும; மனிதர் ரோமத்தினுற்பத்திக் கிடமுள்ளதும் ஆயிரவயதும், அவ்வவ்வருடங்களிற் சட்டை கழட்டலும், பிடரியில் தன்வயதைக் குறிப்பிக்கும் புள்ளியுண்டாயிருப்பதும்; "விலா" என்பதின் கணக்கின்படி முப்பதுமுட்டை யிடுவதும், அம்முட்டைகள் எறும்பு மூட்டைப்பூச்சிகளால் கெட்டு சொற்பமே பலனுக்கு வருவதும்,தேள் கடித்தால் உப்பில்விழுந்து புரண்டு பிறப்பட்டாலன்றி மரணமடைவதுமான புழு.

பிரயோஜனங்கள்.

உயிருள்ள பாம்பினது வீரப்பல்லைக் களைந்துக் கட்டிக்கொண்டால் நான்காமுறைக்காச்சல் போம். தத்துவத்தைப் பிலப்படுத்தும். 'இபுனுசைனா' சொன்னார்:—ஐயறிவையும், வாலிபப் பிராயத்தையுங் கார்த்து குஷ்டம், முடியுதிரும் வியாதிகட்கு "பாம்பு" பலனாகுமென்று. "பக்ருத்து" சொன்னார். பாம்பு மாமிசம் கொடியவியாதிகளடங்கலுக்குங் கூர்மானமாமென்று. கொழுப்பையுருக்கி, உப்புடன், மூலத்திற்றேய்த்தால் நல்லபலனைக் கொடுக்கும். சட்டையை, (சிறுக்கா) காடியிற் சமைத்து வாய் கொப்பளித்தலால், பல்வலிக்குப் பலன் கொடுக்கும்.

அதை; செம்புபாண்டத்திலிட்டுக் கரித்துப்பொடித்[illegible]த்தேய்த்தால்; கண்ணோபடங்களுக்கும் பலனளிக்கும். மஞ்சணிப்புள்ள "கண்ணை"க் கருப்பாக்கும்; அந்த சாம்பலில் ஒருகாசு இடை தின்றால், ஒருவருடம் வரையிலும், இரண்டுக[illegible] இடை தின்றால் இரண்டு வருடம்வரையிலும், கண்ணோய்களுண்டாகா. சட்டையைப் பிரசவவாதனையிலுள்ளவள் கட்டிக்கொண்டாலுடனே பிரசவமாவாள். தொலி; கரித்தசாம்பலைக்கண்ணில் தேய்த்தாலிருளைப்போக்கும். பாம்பு (சால்னா) "[illegible]மைத்த குழம்பு"பார்

வையைப் பிலப்படுத்தும் முட்டையை அரைத்துப்பூசினால் வியாதிகளுக்குப்பலன் கொடுக்கும்.

ஆறாவது பசுல்.

பீவண்டு, சாணிவண்டு.

நாற்றமுள்ள விட்டை,மலமாதியவைகளிலுண்டாகுவதும் கருப்பாகிய, சிறியபூச்சியானதும் சாணங்களில் உற்பத்தியாகின்ற "ஜ‾ஃலு" எனும் பூச்சியும் ஒருவகையாம். இதை மல்லாத்தினால் மையத்துபோற்கிடக்கும், விட்டை, மலம், ஆதியவைகளிற் போட்டால் மீண்டுமுன்போலாகுவதுமானவண்டு.

பிரயோஜனங்கள்.

பீவண்டை "எண்ணெயிற் கொதிக்கவைத்து மூலத்திற் பூசினால் பலன்கொடுக்கும் (போக்கும்) அதைஇரண்டாய்ப்பிளந்து அதன் ஈரப்பசக்கில், சுறுமாக்கோலை மூழ்த்தி, அக்கோலைக்கண்ணில் தேய்த்தால் கண்வலி, மங்கல்கள் சீக்கிரம் நீங்கும் (தி- ஆ) அதை எண்ணெயிலெரித்துக்காதில் ஒழுக்கினால் காதிரைச்சல் நீங்கும். ஒட்டகை அதைத்தின்றால் மரணமாகும் அதைப்பாம்பின் வயிற்றிலுங்காணப்படும்

ஆகமம்.

ஓர் மனிதன், பீவண்டைப்பார்த்து; அல்லாஹு‾த்தஆலா, இதை; கோலமழகானதாயும், வாடை; நாற்றமானதாயும், பிரயோஜனகரமற்றதாயுமேதுக்காக சிருட்டித்தானென மிகவா யோசித்து, மயங்கி சிலதினத்துள்; அல்லாஹு‾த்தஆலா "பண்டிதர்களாலும் பரிகாரஞ்செய்து சக்தியற்றுப்போன வோர் (சிலந்தி) எனுங்கட்டு வியாதியைக்கொண்டு அம்மனிதனைச் சோதித்தான், அம்மனிதன் வயித்தியர்களால் அவிழ்தப்பிரயோகஞ்செய்துங் காரியஞ்சித்திபெறாத மனக்கவலையில் மூழ்கியநேரத்தில், வழிப்பிரயாணியாகச் செல்லுமோர் வைத்தியனின் சப்தத்தைக் கேட்டு அவனை யழைக்கவும்; அங்கிருந்த பலரும் போதிய வைத்தியர்கள் மாட்டாரங்கியாகிப் போன அக்கொடிய வியாதிக்கு இவ்வழிப்பிரயாணியாலாவதென்ன வென்று வற்புறுத்திபோதித்தும் அச்சொற்களை அங்கீகரிக்காமல் அவ்வழிப்பிரயாணியைப் பரிகாரஞ்செய்யுமாறு வேண்டிக்கொண்டதாலே அப்பிரயாணி சம்மதித்து, பீ வண்டைக் கொடு

D-51

வருமாறுத்திரவுசெய்தான் இச்சொல்லைக் காது தாழ்த்தியவர்கள் நகைத்து: பீவண்டினாலுமவிழ்தஞ்செய்வதுண்டோவென்று சொல்ல அவ்வியாதிஸ்தன், தான்,பீவண்டைக்கண்டு ஆச்சிரியமடைந்தவையைநினைத்து அப்பிராணியின் விருப்பத்தின்படிக்கே பீவண்டைக் கொடுவாருங்களென்றுத்திரவுசெய்தான். அங்ஙனம், அவ்வண்டு வந்தவுடனதைக் கரித்து. சாம்பலாக்கி அச்சிலந்திக்கட்டின் பேரில் தூவினான். அல்லாஹு‾த்தஆலாவின் உத்திரவுகொண்டு அவ்வியாதி சுஸ்தமானபின், அங்குகூடியவர்களுக்குச் சொன்னான், அல்லாஹு‾த்தஆலா சிருஷ்டித்த வஸ்துகளில் மிக்கத் தூஷணிக்கப்பட்ட வஸ்துவில் மிக்கச் சிறந்ததாகிய அவிழ்தங்களைக் கற்பித்திருக்கின்றான். அதை எனக்கறியப்படுத்தும் பொருட்டுக்காகவே இவ்வியாதியைக் கொண்டுமென்னைச்சோதித்தான் என்று சொல்லி "ஷு‾க்குறு" செய்தான். இவ்விதமே கண்ணோய்க்கு போராகம் முண்டும் வல்லாஹு ‾ல் முவப்பிக்கு.

ஏழாவது பசுல்.

ஈப்புலி

புலி "என்ற நாமம் பூண்டதும்,' நூலாம்பாடை "என்ற சிலந்திப்பூச்சிக்கொப்பானதும், ஈக்களை வேட்டையாடுவதாயும், அதில் மிருத்தவகையுள்ளதாயும், அதன் தீங்குபட்டணமாக்கப்பட்டதாயும்,பெரியதலையும், பெருப்பமான இரண்டு வயிறுள்ளதும், அதுகொட்டப்பட்டவனுக்கதிக வலியையும், மஞ்சணிறமும், கோசம் விம்முத்தமாகி நாட்டமன்றி ஆசையுண்டாகி "மணி" கழன்றுவிடுகிறதும், பொட்டுவலி கடினமும், புலப்பம், எச்சு, உண்டாகுவதையும் வருத்தக்கூடிய பூச்சி.

பிரயோஜனங்கள்

பண்டிதர்களடங்கலுமோர் மித்து கூறினார்கள். அது கொட்டப்பட்டவன், விஷத்துக்கு மனிதனின்மலத்தைக்குடிப்பதால் தீருமென்று

எட்டாவது பசுல்.

ஈ.

வகைமிருத்ததும், கழுதை, நாய், புலி, மாடு, ஆதிய வஸ்துக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதப்பாயுண்டாகிறதும், அவைகளுக்கேற்பட்டதன்றி மற்றொன்றில் சேராமல் "மாட்டு ஈ" என்பதுபோல அது அதுக்குரிய பேர்கொண்டு அறியப்படுகின்ற துர்வஸ்துக்களினின்றுமுற்பத்தியாகிறதும், கிஷ்டமுழி சிறுத்திருப்பதால் அதில் புழுதிபோலொற்றது சேராமல்தட்டி விலக்குகிறதில்லைமையன்றி, அதற்குப்பகாமாய் "இருகாமுண்டாகி அதனால் என்றுந்தன் முகத்தைத் துடைத்துக் கொண்டிருக்கின்றதும், தும்பிக்கையுண்டாகி இரத்தத்தைச் சுவைக்க நாடினால் நீட்டுதலும், தாகந்தீர்ந்தால் சுருக்கிக்கொள்கிறதும் சவ்வின் உப்பு சத்தால் சப்தநடப்பதற்குப் பகாமாய் சப்த நடையுமுள்ள வழியுள்ளதும், முளிகளில்லாதனவற்றால் நடக்கத்தாரணி யற்றதும், மஞ் மட்டைவஸ்துக்களில் விசயமாகுவதும் நஞ்சா திருப்பதற்கு காலுகளினருகு சாசரப்புள்ளதாய் படைக்கப் பட்டதும். மூட்டை பூச்சுகளை வேட்டைபாடுவதும், அவ்விதமில்லாவிட்டால், மனிதர்களதில்சுடு கொடுக்காணின்ற காயங்களிலுட்கார்ந்து, பீயைப் பீச்சி அதில் புழு உண்டாகுவதும் மிருகங்களின் வாயுக்கெட்டாத விடங்களிலுள்ள காயங்களில்; ஈ விசயமானால் ஹலாக்கை வருத்துகிற, ஊர்க்குருவி, எச்சத்தைப் போல் வெண்மையான வஸ்துவில் பீச்சுவது கருப்பாயும் கருப்பில் வெண்மையாயும் இரண்டு நிறமுள்ள எச்சமுடையதாயும், காயம் ரணங்களைக் கண்டாலதை விட்டு விலகாத்ததாயுமுள்ள பூச்சி.

பிரயோஜனங்கள்.

நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள்:—உங்களில் ஒருவனின் வஜீபனபாத்திரத்தில் ஈ விசயமானால் அதை அதில் மூழ்க்கி எடுக்கவும். திடனாக அதினுடைய இரண்டிலொரு சிறகில் வியாதியு மற்றொன்றில் மருந்து மிருக்கிறதென்று. தலையை முண்டத்தை விட்டு நீங்கப்பட்டதை, குளவி கொட்டுவாயில் தேய்த்தால்வலியடங்கும் (தி.ஆ.) ஈயைக் கரித்துப் பொடித்து தேனுடன் கலந்து முடியுதிரும் வியாதிக்குப் பூசினால் முளைக்கும், அதை யுலர்த்தி சுறுமாவுடனரைத்துக் கண்ணில் தேய்த்தால் கண்வலியடங்குவதுடன் கண்ணொளியை யதிகப் படுத்தும். இமையினருகில் ரோமத்தை முளைப்பிக்கும். (தி.ஆ.) அதைச் சுட்டுத் தின்றால் கல்லடைப்பு நீங்கும். அதைப்பிடித்து தேள்கடிவாயில் வைத்தால் வலி கடுப்புகளை நீக்கும்.

ஒன்பதாவது பசல்.

குளவி.

மிருத்த வேளை தேன் குளவிக்கொப்பாயும், மழைகாலத்தில், தன் கூட்டில் புகுந்து காற்று நிதானமாகும் வரையில் வெளிப்படாததாயும்; ஈயை, பட்சிக்கிறதாயும், தன் கூட்டை (கூடு) முடுகினவனை, எல்லாமொன்று சேர்ந்து கொட்டுகிறதும், தன்கூட்டை நாடாதவனை முடுகாததும், எண்ணெயிலிட்டால் மரணமாய் விப்பதாயும் அதன்பேரில் (காடி) சிருக்காவைத் தெளித்தால் உசும்புதலுண்டாகுவதுமானதும் (தி.ஆ.) தண்ணீரில் விழுந்து அதன் உறுப்புகள் சேதமன்றி மரணம் பாவித்திருப்பதின் பேரில் சாம்பலைத்தூவினால் உயிராகுவதுமாயுமுள்ள பூச்சி.

பிரயோஜனங்கள்.

ஈயின் வகையிலுள்ளதாகையால் முந்திவிட்டது.

பத்தாவது பசல்.

சிறியபல்லி.

தலை சிறுத்ததும் வால் நீண்டதும். தீங்கை யுடையதும், அது, தண்ணீரைக் குடித்ததில் எச்சில் உமிழ்ந்ததை அனுபோகித்தவனுக்கு கெட்ட பொருத்தக் கேடுகளுண்டாகிறதும், அது விழுந்தபுரண்ட உப்பை பரிமாறுபவனுக்கு வெள்ளை எனும் ரோகவுற்பத்தியாவதும். குங்குமப்பூ விருக்குமிடத்திற் புகுதாததுமான பூச்சி.

பிரயோஜனங்கள்.

அதை நான்காமுறை காச்சலுடையவனுக்கு கட்டினால் சுஸ்தமாம். கட்டிக்கொண்டவள் கெர்ப்பமாகாள். அதை யடித்துக் கொன்று பாம்புக் கூட்டத்திற் போட்டாலவைகள் வெருளும். அதை அரைத்து; அம்புமுள்ளுள்ள இடத்திற் றடவினால் அம்முள்ளை வெளிப்படுத்தும் அதைப் பிடித்து. அதுபோல் கூரிட்டு எழும்பிய அரும்பாரையில் கட்டினாலதை [illegible] அதை யுலர்த்திப் பொடித்து எண்ணெயிற்குழப்பி, வள்வள்ப்புள்ள தலையில் பூசினால் முடி முளைப்பிக்கும். இரத்தம் முடியுதிரும் வியாதிக்கும் ரோமமுளைக்காத விடத்திலும் பூசினால் பலன் கொடுக்கும் ஈறல் குலை பல் வியாதியை(வலியை) அடக்கும். கொழுப்பை

தேன்கடிவாயில் வைத்தால் நல்ல [illegible]னை கொடுக்கும் (தீ.ஆ.)தோலியை விஷவாய்வில் வைத்தாலதைப் போக்கும்.

பதினொன்றாவது பசுல்.

ஆமை.

கடலிலுங் கரையிலு முள்ள அறியப்பட்ட ஊர்வினை,

பிரயோஜனங்கள்.

வெள்ளாண்மை, தோட்டம், பயிர்களில்; சீதளம் குளிர்ச்சியைப் பயந்தபொழுது ஆமையைப்பிடித்து மல்லாத்தி போட்டுவிட்டால் அச் சீதளக்குளிர்ச்சிகள்ப்பயிராதியவைகளைத்தங்கடஞ் செய்யாது. கரையில் வசிக்கும் பெரிய ஆமையைக் குடலெடுத்துக் குடலிருந்த இடத்தில் கத்தாளையை வைத்து வலிப்புள்ளவனுக்குக் கட்டினாலது நீங்கும் (வியாதி) வருத்தமுள்ள வுறுப்புகளில் ஆமையின் அதுபோற்கொற்ற உறுப்பைக் கட்டினால் அந் நொம்பலமடங்கும். பித்[illegible]த வலிப்புள்ளவனுக்கு ஈசியம் பிழிந்தாலும் உருஞ்சினாலு மது நிவர்த்தியாம். தொண்டைநோய்களுக்குப் பூசினாலும் விஷக்கடிவாயில்வைத்தாலும் பலன்கொடுக்கும். அதன் ஓட்டில் மூடிசெய்து எதுவொருவஸ்துவு மதனால் முடியெரித்தால் கொதிப்புண்டாகாது அதற்குக் கீழ் எவ்வளவு விறகுவிட்டெரித்தாலும் பொங்கிவழியாது. சூலை யுள்ளவனுக் கதன் காலைக்கட்டினால் சுகமடைவான். அதிலிடதுகாலுக் கிடதுகாலும் வலதுகாலுக்கு வலதுகாலுமாம் முட்டை சிறிய பிள்ளைகளின் இருமலுக்கும் வலிப்புக்கும் பலன் கொடுக்கும்,

பன்னிரண்டாவது பசுல்.

உடும்பு.

மறதி மிகுத்திருந்தாலு மதின் விளக்கந் சிறப்பாயிருப்பதால் கெட்டியான பூமியில் வலுப்பமாகியப் படலக்கல் ஊர்ந்தூரும் கனவாய் போல் கொத்ததுள்ளஇடங்களில் வீடுகட்டிக்கொள்கிறதும், பூமியிற் குழி தோண்டி புழுமுட்டைப் பருப்பத்தில் எண்பதுமுட்டை வரையிலிட்டுப் புதைத்துவிட்டு நாற்பது நாளைக்குப் பின் அவ்விடம் வந்து புறப்படுங் குஞ்சுகளிற் கட்டளையு[illegible]மட்டுந் தின்றுவிடுகிறதும். பசிக்குக் காற்றைக் குடிக்கின்றதுமான உயிர்ப்பிராணி. மேலு மதைத் தேள் கொட்டிவிட்டால் எலிக்காது என்ற பூண்டைத்தின்று விசத்தைத் தட்டிக்கொள்ளும்.

பிரயோஜனங்கள்.

மனிதனின் இரண்டு காலுக்குமிடையில் உடும்பு நுழைந்தால் அவன் பெண்களோடு சையோகித்த[illegible]க்குத் தத்துவம்பெறான். மேலு மவன் உரல் கொள்ளுவான். வலது கண்ணை சதாபுஇலை நீருடன் குடித்தவனுக்கு மணி இந்திரிய ஆஸ்பதக்குறைவுண்டாகும். தாமரைக்காயை தின்றவனுக்கு சலிப்பும் நெஞ்சு துடிப்பும் போம். பல்குத்தியைத் தின்றவனுக்குப் பல்குத்தியினுண்டான வியாதி நீங்குவதுடன் எஞ்ஞான்றும் அந்நோயை விட்டு மச்சந் தீருவான். இரத்தத்தை, பொரி காரத்துடன் முகக்கறுப்பிற் பூசினாலவை நிவர்த்தியாக்கி முகத்தைத் தெளிவாக்கிவைக்கும். மாமிசம் நீண்டநாள்ப்பட்ட வியாதிகட்குப் பலன் கொடுக்குமன்றியும் பார்வையைக் கூர்மையாக்கி சரீரத்தைப் பெலமாக்கி, தாதுவிர்த்திக்குதவியாகும். கொழுப்பை யுருக்கி கோசத்திற் பூசினால். தாது விர்த்தியை யதிகப்படுத்தி ஆசையைப் பெலப்படுத்தும். தாகவரட்சியை மாற்றும். விரக்கொட்டையைச் சுமந்துக்கொண்டவன் பேரில டிமைகளுகப்பாயிருப்பார்கள். பாண்டைக் காலை; முகத்திற் கட்டப்பட்டிருக்கின்ற "குதிரையை" எந்த குதிரையு நடை, ஓட்டத்தில் மிகைப்புறாது. அதன்தொலியால்உறைசெய்து அதனுள்ளிலிருக்கும் வாள் கத்தியை யணிந்தவனுக்கு வீரத்தத்துவமதிகமாம். அதன் தொலியில் தேன்வைத்துக்குடித்துவந்தால் மோக இச்சையதிகரித்து அளவற்றசந்தோசத்தை வருத்தும் "புளுக்கையை: வெண்குட்டம், வெள்ளை முகக் கறுப்பு, பத்து இவைகளுக்குப் பூசினால் பலன் கொடுக்கும். கண்ணில் தேய்த்தால் வெள்ளை, நீர் வடிதல்களை மாற்றும். முதுகுவலிக்குப் பூசினாலது நீங்கும்.

பதிமூன்றாவது பசுல்

தேள் நட்டுவாக்காலியும் ஒருவகையாம்

புழுப்பூச்சிகளில் மிக்ககெட்டதும், தனக்கு நேரிட்ட வஸ்துக்களைத் தீண்டுவதும் (கோட்டுவதும்) வயிற்றில் விழியுடையதும், முதுகி

னால் குட்டி வெளியாகி, தான் மரணமாகிறதும், யாதொருவஸ்துவைத் தீண்டினால் விரைந்து மறைந்து விடுவதும் இதனால் தீண்டப்பட்டபாம்பு அத்தேளைத் தேடித்தின்னாமலிருந்தால் மரணமடைவதும், பல நிறமுடையதுமான உயிர்ப்பிராணி.

பிரயோஜனங்கள்.

தேள் கடித்தவிடத்தில்; தேளைப்பிளந்து சாப்பசக்கைக்கடிவாயில் தடவினாலுடனே அவ்விச நீங்கும். தேளைக்கலயத்திலிட்டு சீலைமண்செய்துணர்த்தி அடுப்பேற்றியது சாம்பலாகும் வரையிலெரித்து எடுத்து கல்லடைப்புள்ளவனுக்கு குடிக்கின்ற வஸ்துடன் சேர்த்து கொடுக்க சுஸ்தமாம். பாண்டகாச்சலுள்ளவனைக் கொட்டினாலது நீங்கும் பக்கவாதமுள்ளவனைக் கொட்டினாலது நிவர்த்தியாம். அதைக்கரித்து மூட்டம்போட்டஇடத்தைவிட்டு மற்றையதேள்கள் மரணமாம். அல்லது வெருளும். அதன் வயிற்றைப் பிளந்துக்கடிவாயில் வைத்தாலுடனே சுகப்படும். கறுப்பு பெரிய தேளையுலர்த்தி (சிருக்கா) காடியுடன் சேர்த்து வெண்குஷ்டத்திற் பூசினால் பலன் கொடுக்கும். அதன் சாம்பலை எண்ணெயுடன் உருக்கிப் பூசினாலவ்விடத்தில் முடி முளைக்கும்.

———(:o:)———

பதினான்காவது பசுல்.

நூலாம்பாடை பூச்சி.

———(:(o):)———

நபி சல்லல்லாகு அலைஹிவஸல்லம் அவர்களின் பொதும்பிலும், அப்துல்லாஹ் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பொதும்பிலும், ஜெய்திபுனு அலிய்யு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்பேரிலும் நூலை இழைத்ததும், நெய்தல் எனும் ஒவ்வொருவகை யடங்கலுக்கு மாச்சரிய செயலுள்ளதும், சிலது கால்நீண்டும், சுவரு, மரக்கட்கிடையில்எச்சிலால் நூல்; கயிற்றை, கண்ணிபோலநெய்து, அதிற் பட்டுக்கொள்ளும் ஈ, மூட்டை, கொசு, வகைகளைப் பட்சிக்கின்றதும், சிலது கால்கட்டையுடன் மூலைகளிற் பதுங்கி, ஈ பறந்து வந்தவுடன். புலியைப் போற் பாய்ந்து பிடித்துப் பட்சித்தலால், "பகுது" என்று பெயருடையதும், சிலது, ஆறுகண்ணுடன் பூமியிற் பதுங்கிருந்து, ஈயைக் கண்டவுடனே சிங்கம்போற் பாய்ந்து, தவறாமற் பிடித்து பட்சிப்பதும், சிலது மனிதன்பேரில் நடந்து எச்சிலையுமிழ்ந்தால் அம்மனிதன் மரணத்

திற் கேதுவாவதும். இதுதான் "ற[illegible]லா" என்ற சப்புலி, என்ற பசல் முன் கூறப்பட்டிருப்பதாயுஞ் சிலது மெல்லிய நெசவு பின்னல்களாய்ச் செய்து, அதிலிருந்துக்கொண்டு அதில் விசயமான வஸ்துவை, சுவைத்தும் தங்கரீகப்படுத்திவைப்பதானது, பலவகைகளான பூச்சி.

பிரயோஜனங்கள்.

அதை; கறுப்பு துணியிற்பொதிந்து, காச்சலுடையவன் சுமந்தால் அது நிவர்த்தியாம். நீர் தோஷத்தாலுண்டான ஜுரத்துடையவனுக்கு, அதையரைத்து, குடிப்பித்தாலுடனே சுகப்படும். இது அடங்கலும் சோதிக்கப்பட்டது. அதன் காலை இராவுகாலத்தில் ஜுரம் வீசுபவனுக்குக் கட்டினால் பலன் கொடுக்கும். நூலாம்பாடையை; இரத்தமோடுமிடத்தில் வைக்க நிற்கும். அதைப் புகைத்தால் வீட்டிலுள்ள மூட்டைப்பூச்சிகள் வெருளும்.

———:(*):———

பதினைந்தாவது பசுல்.

எலி.

மூதேவிதனம், கெடுதி, தந்திரமிருத்தலும், எரிந்துக்கொண்டிருக்கின்ற விளக்கின் திரியை இழுத்துக்கொண்டு சென்ற இடங்களைக் கரிக்கின்றதும், கணக்குப்புத்தகம், இல்முடைய நூல், பத்திரம், ஆபரணாதியாதியவைகளைக் கடித்து நாசப்படுத்துதலும், இளகலானவஸ்துக்களைத் தின்று, அதில், புழுக்கையை இடுகிறதும், வாய் சிறிதான பாத்திரத்திலுள்ள எண்ணெயை வாலாலெடுத்தும் வாலுக்கெட்டாவிடில் அப்பாத்திரத்தினுள்ளிற் கற்களைப் போட்டு எண்ணெயுயர்ந்தவுடன் அடங்கலையும் நக்குதலும் முட்டையை நான்கு காலாலும்பற்றிப் பிடித்துக்கொண்ட எலியின் வாலை மற்றொரு எலி இழுத்துப்போவதும், ஒரு எலி முதுகின் பேரில் தேங்காயைச் சுமந்தி மற்றொரு எலி அத்தேங்காயைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, வாலாலதைப் பெலப்படுத்தியதாய்த் தன்னிடத்துக்குக் கொண்டுபோகிறதும், தண்ணீருள்ள பாத்திரத்தில் விழுந்ததால், வெளியேறத் தாராணியற்றிருக்கும் எலியை மற்றொரு எலி; தன் கையால்; அப்பாத்திரத்தின் வாயருகிற் பிடித்ததாய்த் தன் வாலை அந்த எலிக்கு நீட்டியதை பிடித்துக்கொண்டதின்பின்னர் இழுத்து தனிசெய்கிறதும், நாணயங்களையுகந்து ஒவ்வொன்றுயெடுத்து வெளிப்படுத்தித்

தன்வீட்டிற் கொடுவந்து வைத்தபின், மறுபடியு மீளவெடுத்தவிடத்திற் கொடுபோவதுமாய் விளையாடுகின்றதும், பலவிதகுணம், பலவித நிறங்களையுமுள்ள "ஹயவான்."

பிரயோசனங்கள்.

அதைப்பிளந்து; அம்பு, முள், தைத்துள்ள இடத்திற் கட்டினால் அதை வெளிப்படுத்தும். அதை நக்கரித்து அரைத்து எண்ணெயுடன் குழைப்பி, வளவளப்புள்ள இடத்திற் பூசினால் மயிர் முளைக்கும். தலையை மொத்தநூல் துணியிற் பொதிந்து தலைவலிக்குக் கட்டினால் பலன் கொடுப்பதுடன் வலியையும் போக்கும். கண்ணை; தொப்பியில் வைத்தணிந்து நடந்தால் நடை இலேசாகும். யாதொருவிடத்தில் நுழைந்தாலிவனில் மிருத்தவர்கள் பாராக்காருவார்கள். முறைகாச்சலுடையவன்பேரில் கட்டினாலது நிவர்த்தியாம். இரத்தத்தை கண்ணிமைரோமம் பிடுங்கப்பட்டதின்பின் பூசினால் முடிமுளையாது. கொழுப்பையுருக்கி, பன்னீரெண்ணெயிற் கலந்து முகக்கறுப்புக்குப் பூசினாலதைப் போக்கும். மாமிசத்தைச் சுட்டு, பாலகருக்குத் தின்ன கொடுத்தால் வாணிவடிதலை மாற்றும். விதைக்கொட்டையைக் கட்டிக்கொண்டிருப்பவன் அது இருக்குமளவுங் கெர்ப்பமாகான். வாலை; வலிப்புள்ளவனுக்குக் கட்டினாலவை நீங்கும். தொலியில், வைக்கோல்போலுள்ளவைகளைச் செலுத்தி வீட்டில் வைத்தால், எலிகள் அவ்விடத்தைவிட்டும் வெருளும். புழுக்கையை எண்ணெயிலிட்டு, தலையில் தேய்த்துவந்தால் முடியுதிரும் வியாதியை மாற்றும். புழுக்கையை, பேய்கும்மட்டிக்காய், பொரிகாரம், சிவந்தசர்க்கரை இவைகள் சமவிடையாய்ச்சேர்த்து, அருந்தி வந்தவனுக்குடனே குன்மவலியை மாற்றும். புழுக்கையைத் தேனுடன், குதிரைக்கண்ணிலுள்ள 'பூவில்' பூசினால் சுத்தமாய் நீக்கும். அதை; பாலகனுக்குக் குடிப்பித்தால் கல்லடைப்பு தீரும். சிறு நீர் அடைப்புள்ளவன்; குடித்தால், சிறுநீர் சரளமாய்ப்பிரியும். புழுக்கையைக் கண்ணில் தேய்த்தால் கண்வெள்ளையைப்போக்கும். எலி தின்னப்பட்ட வஸ்து மறதியை வருத்துமென்று’ நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருவுளமுண்டாயிருக்கின்றது. "வல்லாஹு அஃலம்."

பதினாறாவது பகல்.

ஈசல்.

மெல்லிய இறகுள்ளதும், விளக்கில்விழுந்து கரிந்துப்போவதும், "காரணமாவது;" அதன் பார்வைப் பெலக்கேட்டினால் விளக்கைக்கண்டவுடன், தானிருளுள்ள விடத்திலிருப்பதுபோலும், விளக்கு அவ்விடத்திலின்றும் வெளிச்சமுள்ள இடத்திற்குப் போகக்கூடிய ஜன்னல் வழியென்றெண்ணி, ஓயாது வீட்டுக்கு வெளியிலுள்ள வெளிச்சத்தைநாடி; தன்னை அஜ்ஜன்னலில் விளுக்காட்டு போது விலகிவிட்டால் ஜன்னலுக்கு நேர்படவில்லையென்றெண்ணி மாறிமாறி வந்து விழுந்து, கரிந்து போகின்ற பூச்சி.

பிரயோஜனங்கள்.

கறையானின் பலனைப்போலாம். (அது முந்திவிட்டது.)

பதினேழாவது பகல்.

பேன்.

அழுக்கினாலும், வேர்வையாலும், உற்பத்தியாகி, பின் முட்டையிட்டு, அம்முட்டைகள்; போக்குகிறதற்குக் கஷ்டமாகிய சேர்மானமாய் மிகுத்து, அதுக்கு; "ஈர்" என்று பெயருண்டாகி, கறுத்த ரோமத்தில் கறுப்பாயும், வெண்மையில் வெண்மையாயும், செகப்பில் செகப்பாயும், சிலவேளை, சிவலையில் கருப்பும், சிகப்புமாய், தலையில் மஞ்சணிறம் சிறிதுமாய்ப் புழுக்கப்படும் புழு.

பிரயோஜனங்கள்.

கெற்பமுள்ளவள் வயற்றிலிருக்கும் சிசு, "ஆண்பெண் என்று தெரிந்துக்கொள்ளற்கு நாடினால், அவளுடைய பாலைப்பீச்சி அதில் ஒருபேனையிட்டு பார்க்க, அப்பாலைவிட்டுமப்பேன் வெளியேறுதற்கு சக்திபெறுவிட்டால் வயிற்றிலுள்ளது ஆண் என்றும், வெளிப்படசக்தியுண்டுபட்டால் பெண் என்றுமறியப்படும் (தி-ஜு) ஆண்பிள்ளையின் பால் திண்ணமாயும், பெண்பிள்ளையின் பால் (நீர்வடிவு) இளகலாயுமிருப்பதாலே, அப்பேன். வெளிப்புறப்படுவதை விலக்கவில்லை என்றறிந்துக் கொள்ளவும். (மீஜு)

* * *

பதினெட்டாவது பசுல்.

முள்ளெலி.

தன்முதுகின்பேரி லுள்ள முட்கள்; தனக்காயுதமாயும் தன்உறுப்புகள் வெளிப்படாத பக்கத்திற் பந்துபோற் சுருண்டுக்கொள்வதாயும், காற்றையுகர்ந்துதன் வீட்டுக்கு வடபுறம் தென்புறம், வாசல்வைத்துக்கொண்டு,பாம்பைப்பகைத்து, பிடரியில்கடித்துக் கொள்கிறதாயும்,தவறினால் வாயில் கடித்து சுருண்டு கொண்டு பாம்புக்கு முதுகைக்கொடுத்து அப்பாம்பு,அதின்பேரிலடித்து மரணமாகும் வரையில், வாலை சுவைத்து விழுங்குகிறதாயும். முந்திரிப்பழத்திற் புறண்டுத் தன் முள்ளில் பழத்தைச்சுமத்தி சுமந்துக்கொண்டுபோய்த் தன்குட்டிகளுக்குக் கொடுப்பதாயும், நாடிய வஸ்தில் தவறாமல் முள்ளால் புரளுகிறதாயுமுள்ள புழு, பசுவுக்கு, எருமை; இனமாவதுபோல அதிலொருவகை, "துல்துல்" என்று பெயருள்ள பெரிய சடலமுள்ள வகையுமுண்டு.

பிரயோஜனங்கள்.

அதன் இடதுகண்ணை, எண்ணெயிற் கொதிக்கவைத்து குச்சியால், காதில் ஒழுக்கினால் இரைச்சலைப்போக்கும், பித்தை ரோமம் பிடுங்கிய விடத்திற் பூசினால் முடிமுளையாது, கெந்தத்துடன் கலந்துபடர் தாமரையிற்பூசினாலது நீங்கும். பல்குத்தியைச்சுட்டு பல்குத்திவலியுள்ளவன் தின்றால், தின்ற அளவுப்படி வலியுமடங்கும். மாங்காயை யுலர்த்திப் பொடித்து, கொதிக்கவைத்து, தெளிவிறுத்து, கருங்கடலை தண்ணீருடன் கலந்து குடித்தால் நீர்க்கட்டுக்குப்பலன் கொடுக்கும், இரத்தத்தை வெறிநாய்கடிவாயில் பூச சுஸ்தமாம். மேலும் ஹலாக்கைவிட்டும் அச்சந்திருவான், இன்னும், வீக்கம், சுரப்பு, யானைக்கால், குஷ்டம் விரிப்பில் மோளல், விசசெந்துக்கள் கடிவிசம், வெண்குட்டம், பத்துபடர் தாமரை, வகைகளடங்கலுக்கும் பலன்கொடுக்கும். தொலியைக்கரித்து, மண்ணெண்ணெயிற் கலந்து பூசினால் முடியுதிரும் வியாதியைக்கண்டிக்கும் விரைகொட்டை "அது, துல்துலாக இருந்தால் எடுத்து,கனியவேக வைத்து, நுரைநீக்கிய தேனுடன் கலந்து, தின்றால் தாதை அதிகரிக்கும், ஜிமாகுக்குதவியாகும், வலதுகை நகத்தைமுன் [illegible] யுடையவர் தாழால் மூட்டமிட்டால் அது நிவர்த்தியாம். முள்ளெலியைக்கரித்து; சாம்பலைப்பவுந்திரத்திற் பொதிந்தாலது நீங்கும்.

* * *

பத்தொன்பதாவது பசுல்.

தேன்குளவி.

அற்புதமானபடைப்பும், பயத்தை வருத்துமழகியகோலமும் மெல்லியகுறுக்கும், நான்குபக்கமும் பின்பக்கங்கொடுக்கும், முன்பக்கம் படர்ந்தலை வட்டமும், நடுவில் நான்குகாலும், இரண்டுகரமும், அரசனுள்ளதும் அவன் சொற்படிநடப்பதும். ஆச்சரியவிளக்கமும் மழுங்கிய அறையகூடுள்ளதும், அக்கூட்டில் புஷ்பங்களைக்கிருகித்து சேர்ந்த; தேனை யுடையதும்அதன்மேல், மெழுகுடையதும், அதனிடையில்முட்டையிட்டுக்குஞ்சு பொரிப்பதும் அக்குஞ்சு வாலிபத்தில் வெண்மைநிறமும்,நடுவயதில்மஞ்சணிறமும்,கிழடில் சிகப்பு நிறமுடையதும்.அதிற்றேனுள்ளதும், அதின்தேன்; மனிதர்கட்கு சுஸ்தப்படுகிற, ஷிபாவைக் கொடுக்கக்கூடியதாயுமுள்ளவண்டு.

பிரயோஜனங்கள்.

அழுகிக்கெட்டுப்போகக்கூடிய வஸ்துக்களைத் தேனிற் போட்டு முங்கவைத்தால் அதுகெடாமல் மற்ற, நாளும் முன்னிருந்ததுபோலவே தரிபட்டிருக்கும், தண்ணீரும் புகையும் படாமலுள்ளதேனை; கஸ்தூரியுடன் கலந்து, கண்ணில்தேய்த்தால்நீர்வடிதலையுமாற்றும்அதைப் புனைந்துக்கொண்டால், பேனும் ஈரும் மாளும் அதை நக்கினால் (உட்கொண்டால்) வெறிநாய் கடிக்கு அவிழ்தமாம். அதைச்சமைத்துவிட்டால் கொல்லக்கூடிய நஞ்சுகளுக்கு (மாற்றுபலன்) கொடுக்கும், தேனில் ஒருவகை நஞ்சுள்ளதுமுண்டு; அதை முகர்ந்தால்மயக்கமுண்டாம். உட்கொண்டால் எவ்விதமாகுமோ அல்லாஹுத்தஆலா "காத்துக்கொள்ளுவானாகவும்.

* * *

இருபதாவது பசுல்.

எறும்பு.

ஒருவருடம் ஜீவித்திருப்பதுடன் வஜீபனங்களைச்சேர்மானித்தலில் மிக்க அபேட்சையுடையதும், அதற்குப்பெரிய வஸ்துக்களை,தன்னினங்களுடன்கூடி யதைப்பிரித்துங் கிருகித்தும் தன்னிருப்பிடத்திற் சேர்ப்பதும், முளைப்பதைப்பயந்து வித்துக்களை இருதுண்டாக்கியும், பாதிமல்

விப்புமுளைக்குமெனக்கருதி நாலுதுண்டாக்கியும், பயறு, கோதம்பு, மொச்சை, கனின்தொலியைப்பிரித்து, ஈரமுலர்ந்துமடிக்காமலிருக்க வெயிலிலுலர்த்தி, மேகத்தைக்கண்டால் தன்னிருப்பிடத்திற்குக் கொடு போய்த் தங்கரீகப்படுத்துதலுள்ளதுமான பிராணி.

பிரயோஜனங்கள்.

அதைச்சுட்டுக்கரித்த இடங்களிலுள்ள தன்னினங்கள் மரணமாம் அல்லது வெருளும். எறும்பு ஊறலாககாகும் வேளைவந்தால் அதற் கிருசிறகு முளைத்து பறக்கும் "ஊக்குருவி" சுட்டுகளதைப் பட்சிக்கும். எறும்பு முட்டையில் அரைநிறுத்திடையுட்கொண்டவன், தன் பின்றுவாரத்தின் சுதந்தரமற்றுப் போவான் தன்னை மிகத்தடக்கமுடியாத குசுபறியும் அதை; அரைத்துத் தண்ணீரிற் கலந்து சரீரத்தில் பூசினால் முடிமுளையாது. அதைச் சிறிது கூட்டங்கட் கிடையிற்றூவினால் தனி தனியாய்ப்பிரிந்து விடுவார்கள்.

——:(:):——

இருபத்தோன்றுவது பசுல்

வறல்.

பல்லி வெள்ளைப்பல்லியின், கோலத்தைப்பார்க்கிலும்வலுப்பமாகியதும், வால்; நீண்டு, தலை சிறுத்து, நடை விரைந்து, உசும்புதல் மறைந்ததும், உடும்பு, பாம்பைப் பகைப்பதும் . அதுகளி னிருப்பிடத்திற் சென்று பட்சிப்பதும், முக்கியமாய்ப் பாம்பைக்கொன்று தின்பதும் தனக்கு ஈடாகப் பொந்து செய்துக்கொள்ளாமல் மற்றைய உயிர்ப் பிராணிகளின் பொந்தில் நுழைந்துக்கொள்ளையாடுவதும், எதிலுடைய பொந்தில் நுழைந்தாலு மதுகள் வெருட்சி கொள்வதும், பாம்புமுக்கியமாய் மற்றையவஸ்துக்களின் பொந்துகளிற் சென்று கொள்ளையாடுவதை போல, இது பாம்பு, பொந்திற்சென்று;கொள்ளையடித்து,குடியிருந்துக் கொள்ளுகிறதுமான புழு.

பிரயோஜனங்கள்.

அதன் கொழுப்பும், மாமிசமும், பெண்களைச் சதைபிடியாய்க் கொழுக்கவைக்கும். உறுப்புகளில்; முறிவுபட்டுள்ள எலும்பு, முள் இவைகளை வெளியாக்குந் தத்துமதிலுண்டு. தொலியைக் கரித்து, சாம்பலை எண்ணைக் கடுடனே குழைத்து சோர்வுதலுள்ள உறுப்பிற் பூசினால்

ளைப் போக்கும். மலத்தை பூசினால் மூக்கறுப்பு புள்ளி, பத்துகள் நீங்கும். கண்ணிற் தீட்டினால் வெள்ளைப்படைப்போக்கும். அரும்பாணையக்களையும்.

"வல்லாஹுல் முவப்பிக்கு லிஸ்ஸவாபி"

(ஒன்பதாம் பாபு முற்றிற்று.)

——):*:(——

பத்தாம் பாபு.

நீர்வாழும் ஜெந்துக்களை கூறல்.

——:(:):——

ஒன்றுவது பசுல்.

கடல் முசல்.

——.——

தலை; முசல் தலைபோலும்; உடல் மீன்போலுமுள்ளவுயிர்ப்பிராணி.

பிரயோஜனங்கள்.

அதனுடைய "ஜனனவுறுக் கிடையில்" உசாரன் இலைபோல், உண்டு அது; மூக்கறுப்பு, புள்ளியைமாற்றும். தலையை; கரித்து,காடிக் கொழுப்புடன் பூசினால் முடியுதிர்ந்த இடத்தில் முளைக்கும்.

——(::)——

இரண்டாவது பசல்.

தண்ணீர் மனிதன் (கடல் மனிதன்.)

——(:*:)——

இன்ஸானுக் கொப்பாயிருந்தாலும், அவனுக்கு வாலுண்டும்,

பிரயோஜனங்கள்.

ஓர் அரசனிடத்தில், "தண்ணீர்மனிதன்" அகப்பட்டு அவன் பாஷையை அறிவதற்காக, அவனுக்கொரு பெண்ணை விவாகஞ் செய்து வைத்து, பின்னர், அவனுக்குக்குழந்தைப் பிறந்து, மாதா, பிதாவின் பாஷையை விளங்கிக்கொண்ட பிள்ளையிடம் உன் தகப்பன் என்ன சொல்கின்றான் என்று விசாரித்தபொழுது, அக்குழந்தை; என்தகப்பன் சகல பிராணிகட்கும் பிற்புறம் வாலுண்டாயிருக்க இந்தக் கூட்டங்கட்கு மட்டும், முகத்தில் வாலுண்டான காரணமென்னவென்று, தங்களின், தாடிகளைக் கண்ணுற்று ஆச்சரியப்படுகிறானென்று கூறினான்.

(மூன்றாவது பகல்)

தண்ணீர் மாடு.

——(*)——

கரையிலும் மேயும்.

பிரயோஜனங்கள்.

அதன் (விட்டை) சாணியை அம்பரென்று சிலர் சொன்னார்கள். மேலும்; மூளையையும், ஐயறிவையும் கல்பையும் பெலப்படுத்தும். சிலர்; அம்பராகிறது, கீல், மண்ணெண்ணெயைப்போல, கடலில் விளையும் பூண்டென்றார்கள்.

——:(o:)——

(நான்காம் பகல்)

மேற்படி முதலை.

——:*:——

உடும்பின் வடிவும், அகலவாயும்; அறுபதுபல்லும்; கீழ் நாடியில் நாற்பது பல்லும், ஒவ்வொரு பல்லுக்கிடையில் நாற்சவுக்கத்தில் நச்சு பல்லும், நீண்ட நாவும் இரும்புக் கிடங்கொடாத ஆமை முதுகும், நாலு காலும், நீளவால் இரண்டு முளமுள்ளதும், தலை எட்டு முளமும், கீழ் அலகன்றி மேல் அலகு உசும்பலும், புரளற்குத்தாணியற்றதும், பார்க்க அருவருப்புள்ளதும், மிகுந்த பகைமையுடையதும், மனிதரை, ஆட்டை, விழுங்குவதும், ஒட்டகை, குதிரைகளைக் கொல்லுவதும், தண்ணீருளாழ்ந்துவந்து பாயுவதும், பறவைபோல் முட்டையிடுவதும், அம்முட்டை கஸ்தூரி வாடையோலிருப்பதும், பின் துவாரமன்றி, வாயினால் மலத்தைக் கக்கலும், பல்லுக்கிடையில் மாமிசம் புகுந்து, அது புழுகாய்ச் சொரிதலும்; பொழுது. சூரியனுக் கெதிரில், வாயைத்திறந்து வந்த பறவைகள் உள்ளினுழைந்து, வள்ளிசாய் அப்புழுவைப் பொறுக்கி வரும் சமையத்தில் பொறுக்கிய பறவை உள்ளிலிருக்க வாயை மூடுவதும் வாயினுள்ளடங்கிய பறவை அதன் முட்களால் ஆளக்குத்தி அலகைத் திறந்துடனே வெளியாகுதலுமுள்ள பிராணி,

பிரயோஜனங்கள்.

அதன் கண்ணை; கண்வலியுள்ளவன், வலதுக்கு வலக்கண்ணும், இடதுக்கு இடக்கண்ணுமாய்க் கட்டவாதனையகலும். வலதுபல்லைக் கட்டிக் கொண்டவனுக்குத் தாதுவிர்த்தியுண்டா[illegible]தும். ரோமஞ் சிறு சிறுப்புள்ளவன்; அதன் இடது அலகின் முந்தியபல்லைக் கட்டிக்கொண்டாலுடனே சுகப்படும். பித்தை கண்ணில்தேய்த்தால் வெள்ளையைமாற்றும் கொழுப்பை அது கடிவாயில் கட்டினாலுடனே குணப்படும். ஈரல் குலையைக் கொண்டு எண்ணெய் பூசினால் வலிப்புகளகலும். மலத்தைக் கண்ணிற் றேய்க்க வெள்ளையைக் கலையும். தோலியை; சண்டைக்கடாய் நெற்றியிற் கட்டினால் பாய்ச்சலியாது மெதிரிடாது.

——

ஐந்தாம் பகல்.

மார் மாஹி.

——:(:)——

பாம்பு, மீன். இவ்விரண்டாலுற்பத்தியாவது. "ஜிர்தானை" எம்னீ:- கொழுத்த வெருகு பூனையைத் தின்னும் பிராணி,

பிரயோஜனங்கள்.

அதன் பித்தை; வெறிகொண்ட குதிரைக்கு நசியம்பிளியத் தீரும். மாமிசம், சப்தத்தை கூர்மைப்படுத்தும். நுரையீரல்; நரம்புகட்குப் பலனாகும். தாதுவிர்த்திக்கு முக்கியவுதவியாம். அதைக்கட்டினால்; மாமிசத்துள் மறைந்திருக்கின்ற வஸ்துக்களையும், முள்ளையும்வெளிப்படுத்தும்.

——:(:)——

ஆறாவது பகல்.

ஜா[illegible]ல்கா.

——

மார்மாஹிக் கொப்பானதும், காலைநேர மம்மலில் இரை பொறுக்க வெளிவருவதுமானபிராணி.

பிரயோஜனங்கள்.

அதை அறுத்தால்; இரத்தம்வாராது. என்பு மிகவு மெதுவானது, "இறைச்சி" மாமிசத்துடன் தின்னப்படும். பெண்கள் தின்றால் கொழுப்பார்கள். இதற் குரிய நல்ல அவிழ்தம்.

——:(:)——

(ஏழாவது பகல்.)

நண்டு.

——

தலையன்றி, பிடரியில் கண்ணும், நெஞ்சில் வாயும், எட்டுக்காலும், அதனிரண்டி லொருபாகத்தில் நடக்குதலும் வருடத்தி லேழு விடுத்தம் தோலி விழுத்தாட்டுதலும், அதன் புடைக்கு; தண்ணீர், வருட்சி, இவ்விரண்டிற்கு மிரண்டு வாசலுடையதும், தோலிகழண்டு பெலமற்றநேரத்தில் தண்ணீரில்வருவதும், அதன் பின் நோவினை செய்யும் வஸ்துக்கள் நுழையாதிருக்கவும், காற்றதிகமாய் வீசி, தன் சடலம் முன்போலே பெலமாகுவதற்காகவும், தண்ணீர் வாசலையடைத்து, வரட்சி, வாசலைத் திறந்துக் கொள்கிறதும், சடலம் பெலமானவுடன் வாசலை மாற்றி, தண்ணீர் வாசலால் வெளிப்பட்டு மேய்வதுமான பிராணி.

பிரயோஜனங்கள்.

அது புடையில்; முதுகின்பேரில் மல்லார்ந்து மரணமாய்க் கிடந்ததைக்கண்ட வூருடையவர்கள்; இடையூறான கெடுதிகளைவிட்டு மச்சந்தீர்வார்கள். மரத்திற் கொழுகிவைத்தால், காய்அதிகமாயுதிராது. காயங்களில் வைத்தால், முள், அம்பு, இவைகளில் முறிந்துள்ள “நுனி” வெளிவரும். பாம்பு தேள் விசங்கட்குப் பிரயோஜனமாம். கரித்து உட்கொண்டால் நாய்க்கடிக்குப் பலனாகும், கண்ணில் தேய்த்தால்; நீர் வடிதலை மாற்றும், வெள்ளையும் போக்கும் கரித்துப் பூசினால், பல்லைக் களையும், சாம்பலை; அம்பு, முள், உள்ள இட்டிற்றடவினாலதை வெளிப்படுத்தும். மாமிசத்தை; கழுதைப்பாலுட னருந்தினால் பொறுதிபெருதுள்ள நோயுள்ளவர்கட்கு இணக்கமாம் தேள் சப்புவி, விஷத்துக்கும் பலனாம், கண்ணை; சயனிப்பவன் பேரில் கட்டினால் நல்ல கனவுகள் காண்பான். மேலுங் கண் வலியையும் போக்கும். இருகண்ணையும்; மரத்திற் கொழுகிவைத்தால் காய்களுதிராது. நாலாமுறைக்காய்ச்சலுடையவனுக்குங் கீழாலே, அதன் முள்ளை மடக்கி, மடக்கி, ஏழுதடவை முட்டம்போட்டாலவை நீங்கும், காலை, காபூர், அன்பர் இவைகளுடன் சேர்ப்பித்து கண்டமாலை யுடையவன்பேரில் கட்டினாலதை தட்டும். அதல்லாத்தவனுக்குக் கட்டில்: அது இருக்குமளவும் வாராது.

எட்டாவது பசுல்.

கடல் நண்டு.

ஒருதலையுடன், ஐந்து பாம்புபோல கோ[illegible]மாச்சரியமான பிராணி.

பிரயோஜனங்கள்.

அதை; என்புடன் கரித்துப் பொடித்து, படர்தாமரை, பத்து, புள்ளி, பல்லுகளில் வைத்தாலவைகளைக்களையச்செய்யும். மிருகங்களின் கண்ணிலதை யூதினால் குறுக்கிட்ட வெள்ளையைப்போக்கும். அதை சுறுமாவுடன் கண்ணில் தேய்த்தால், பூவைப்போக்கும்.

ஒன்பதாவது பசுல்.

“ஸகன் கூரென்ற” தண்ணீர் வறள்.

முதலை; கரையிற் போடுங் குட்டிகளில், தண்ணீரை நாடிச் சென்றது முதலை “என்றும், கரையை நாடிச்சென்றது; “ஸகன்கூர் என்ற,” வறள், என்றுஞ் சிலர் சொன்னார்கள்.

பிரயோஜனங்கள்.

அது, கடிவாயில் மனிதன் எச்சிலைப் பூசத்தீரும். அதில்; அது தண்ணீரளவில் மீனாக மீளுமுன் கடித்தாலது மரணமாகும். மீண்டபின் கடித்தால் கடிபட்ட மனிதன் மரணமாவான். அதற்கு, உடும்பைப்போலிரண்டு கோசமுண்டும். மாமிசத்தை; தின்றால், தாதுவின் தத்துவத்தையுணர்த்தும். அதன், கொழுப்பு; கஸ்ஸாக்கீரை சாலனு, அல்லது பருப்பு சாலனுவைக் குடித்தாலல்லாது அடக்கமுடியாத “தாது”விர்த்தியையுண்டாக்கும். முதுகின் மத்திபத்திலுள்ள விலாவின் முள்ளைத் தன்விலாவில் கட்டிக்கொண்டவனுக்குந் தாதுவிர்த்தியை யதிகப்படுத்தும். அதில் பெரியவஸ்துக் கதிகபலனுண்டும்.

பத்தாவது பசுல்.

ஆமை.

கரையிலுங் கடலிலுமுள்ளது சிலது; கடல்; திட்டைப்போற் பெரிதாகவிருக்கும். சில, கடல் யாத்திரிகள், கடலின் மத்திபத்தில், பசுமையாகிய; நீற்பூண்டு செடி உயர்ந்ததாய்க் காணப்பட்டதால் தீவு என்றிறங்கி, அடுப்பு பறித்து சமைத்துக்கொண்டிருக்குந் தருணத்தில், அத்தீவு; துளும்புவதைக்கண்டுமாலிமீ; நீங்கள் யாவர்களுந் தங்களிருப்பி

டத்திற்குச் சேருங்கள். இது தீவு அன்று இட்டுக்கொப்பாகிய சடல முள்ள ஆமை, நீண்டகாலமாய்த் தரிபட்டிருப்பதாலே அதன் முதுகில், மண்ணளறுகடிரண்டு அதில், புற்பூண்டுகள் முளைத்திருக்கின்றன. அது, புரண்டால் ஹலாக்கை வருத்துமென்று சொன்னவுடன் சகலரு மிருப்பிடஞ் சேர்ந்தார்களாம்.

பிரயோஜனங்கள்.

அதன் கண்ணை; கண்வலியுடையவன் சுமந்தாலது நீங்கும். இரத்தத்தை, கழுக்கூடு அடிவயிறு, ரோமம் பிடிங்கியபின் அவ்விடத்தில் இரண்டு மூன்றுதடவை பூசினால் ரோமம் முளையாது. இப்பலன்; ஆண் பிள்ளைகளைக்காண்க, பெண்பிள்ளைகளுக்கு மிகப் பலன் கொடுக்கும். கடல்ஆமைப்பித்து; இதைக்காண்க, நல்ல பலனைக்கொடுக்கும். துணி போக்கிய தேனுடன் கலந்து, கண்ணில் தேய்த்தால் நீர்வடிதலைமாற்றி, வெள்ளை, கலங்கல், மாசி, இவைகளைமாற்றும். குடித்தால் தொண்டை படுவனுக்கிணக்கமாகும். வலிப்புள்ளவன் மூக்கில் வைத்தாலவனுக்குப் பலன் கொடுக்கும். அதன் முட்டையின் மஞ்சள் கருவில் மூன்று களஞ்சி இடையைக் கறந்தபாலுடன் குடித்தால் கடுசாகிய இரும்பலுக்குப் பலன் கொடுக்கும். மேலும் சில பிரயோஜனங்கள், எட்டாவது பாபு; பதினொன்றாவது பசுலில் காண்க.

பதினொன்றாவது பசுல்.

மீன்.

ஒவ்வொன்றுக்குந் தனிதனிப்பெயரும், பெரிது, சிறிதும் எத்திக் கொள்ளக்கூடாததும், முட்டையிடுகிறதுமாகிய அனேக வகைகளுமுண்டு.

பிரயோஜனங்கள்.

அதன் பித்தை; மதிமறந்த போதையுடையவன் முகந்தாலவனளவில் 'அக்கல்' அறிவு மீண்டுவரும். மஸ்து நீங்கும். மாமிசம்; கண்ணில் நீர் வடிதலுக்குப் பலன் கொடுக்கும். தேனுடன் தின்றால் பார்வையைக் கூர்மையாக்கும். காதுவிர்த்தியை யதிகரிக்கச்செய்து சரீரத்தை வளர்க்கும் பித்தை யுட்கொண்டால், தொண்டைவியாதியைப் போக்கும். அவ்விதமே, அதை; சர்க்கரையுடன் தொண்டையிலூறினாலும் பலன் கொடுக்கும். வல்லாஹு அஃலம்.

பனிரண்டாவது பசுல்.

தவளை.

கரையிலுங் கடலிலுமுள்ளதும், நீர்ச்சையாய் வெளியாகியதும் இரண்டு கண்ணையுடையதும், கேட்குதல் திரமும், பார்க்குதல் கூர்மையுமுள்ள பிராணி.

பிரயோஜனங்கள்.

நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினார்கள். தவளையைக் கொலைசெய்யாதீர்கள். அது நிடனாக, "இபுறாஹீமலைஹிஸ்ஸலாமவர்கள், நெருப்பைச் சமீபித்தபொழுது, தன் வாயால் நீரைக்கொடுவந்து, அந்நெருப்பில் தெளித்ததென்று உமறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வர் அப்துல்லாஹி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள், தவளையைக் கொல்லாதீர்கள். அதன் சப்தம்; தஸ்பீஹாயிருக்குமென்று 'ஷெய்குர் ரயீசு' அவர்கள் சொன்னார்கள். எவ்வருடத்தில் வழக்கத்துக்கு மாற்றமாய் தவளை மிகுத்ததோ அதன்பின் முஸீபதுண்டாகுமென்று தவளை இரவுகாலங்களில் மிகுதமாய் சப்தமிடும். பகற்காலங்களில் சப்தமிடாது, கள்ளிற் போட்டால் மரணமாகும். தண்ணீரில்போட்டா லுயிர் மீளும். கீழ் நாடி; தண்ணீரிலிருந்தாலொழிய சப்தம் போடாது. கரையிலுள்ள பச்சைத் தவளை நஞ்சு, அதையுட்கொண்டவனுக்குக் குணங்கெட்டுவிடும் வயிறாதி சக்தியுண்டாகும். அரும்பாறைகளில் வைத்தாலதைக் களையும். வயிற்றைப்பிளந்து பாம்பு கடிவாயில் வைக்க நல்லபலனைக்கொடுக்கும். கடலிலும், கரையிலுமுள்ள பச்சைத் தவளையை யுட்கொண்டால் நிறஞ்சோர்ந்து பேதலிப்புற்று; பார்வை குன்றி, வாய்வீச்சமெடுத்து தலைமயக்கமுண்டாகி புத்தி கெட்டுப்போம். இதுகளைவிட்டும் சலாமத்தானால் பற்கள்விழும். தவளையைத் தலையினின்றும் அடிவயிறுவரையிலு மிரண்டுபிளப்பாகப் பிளக்கப்படும்பொழுது, பார்த்துக்கொண்டிருந்த பெண்பிள்ளைக்கு "சஹ்வத்து" முறிந்து, மோகமிகுத்து ஆண் பிள்ளையளவில் நாடுதல் மிகுத்துவிடும். தவளையை நாலாமுறைக் காச்சலுடையவன்பேரில் கட்டினால் அது நீங்கும். நாவை, ரொட்டியில் வைத்து, களவில்; சந்தேகிக்கப்பட்டவர்கட்கு தின்னக்கொடுத்தால் கள்ளன் சொல்லிவிடுவான். தூங்குகிறவன்பேரில் வைத்தால் விழிப்

பில் செய்தவைகளைக் கொண்டும் பேசுவான். நித்திரை செய்தவனாகவே. அதன் அருகுகளை மூங்கில் நெருப்பில் கரித்து அச்சாம்பலைப் பூசினால் முடிமுளைக்குமிடத்திலுமுளையாது இரத்தத்தை; ரோமம்பிடுங்கிய விடத்தில் பூசினால் முளையாது. முகத்தில்பூசிக்கொண்டவர்களைக் கண்டவர்களுகப்பார்கள் கொழுப்பை; ஏகிரில் வைத்தால் வலியன்றிப் பல்லைவிழுங்காட்டும். தண்ணீர்தடாகங்களில் மிருத்திருக்குந் தவளை சப்தம், தங்கடமாயிருந்தால் அதை விலக்கநாடுகில்; அது இருக்குந்தடாகத்திலோ ருபாத்திரத்தைத் தலைக்கீழாய்க் கவிழ்த்தி வைத்தால் சப்திக்காது.

——:():——

பதிமூன்றுவது பசுல்.

அட்டை

நிறங்கறுப்பாயும்,சின்னிவிரல் பருப்பமாயும் தண்ணீரிற்காணப்படுவதாயும் வைத்தியர்கள் அவிழ்தமாய்ப் பாவிக்ககூடியதுமான பிராணி.

பிரயோஜனங்கள்.

அதை; குறிப்பிட்டவோர் தானத்தின் இரத்தத்தைவெளிப்படுத்துவதற்கு வைத்தியர்கள் நாடினால் களிமண்ணில் அட்டையைக்கொடுவந்து, நாடிய உறுப்புக்கு முடுகவைத்தவுடன் அது கொழுகிக்கொண்டு இரத்தத்தைச்சுவைத்து இழுத்தபின்;உறுப்பைவிட்டுமதைவிழுத்தாட்ட நாடினாலதன் பேரில்உப்புத்தண்ணீரைத்தெழிப்பார்களுடனே விழுந்துவிடும் சிலவேளை குடிக்குந் தண்ணீரிலிருந்து தொண்டையிற் கொழுகிக்கொள்ளும் அதற்கு, குழிநரியின் ரோமத்தை மூட்டம்போட்டபுகையதற்குநேர்ப்பட்டாலுடனே விழுந்துவிடும். அட்டையை வீட்டில்மூட்டம்போட்டால்; செள், மூட்டை கொசு, இவையல்லாத்த வைகளும் "ஹலாக்கு" மரணமாம் அட்டையைசாகும் வரையில், "சீசா" புட்டியிற் போட்டு வைத்திருந்து. பின்பு; அதை அரைத்து,ரோமம்பிடுங்கியவிடத்தில் பூசினால் எக்காலமும் முடிமுளையாது.

——:(·).——

பதிநான்காவது பசுல்.

நத்தை.

சுப்பியுள்ளதும்; ஹிந்துதேயத்தில் "நாகிறீனை" முளைப்பிக்குங் கிடைதண்ணீரிற் காண்கக்கூடியதும் ஆச்சரியமாய்ச்சுப்பியை இருப்பிடமாய்க்கொண்டதுமான பிராணி

பிரயோஜனகள்

அதன் சுப்பிவீட்டைவிட்டும் வெளிப்பட்டால் மெல்லிய தொலியும் தலையும், காதிரண்டும், கண்ணிரண்டும் வாயுமுண்டு, தன் சுப்பியினுள் மறைந்துக்கொண்டால் இன்சான்; அதை; சுப்பியென்றே மதிப்பான். வெளிப்பட்டால், பூமியிலூர்ந்து செல்லும் அப்பொழுது தன்னிரும்பிடமென்னுஞ் சுப்பியையுங்கொண்டு செல்லும் கோடை, காலத்தில் தண்ணீர்வத்திவிட்டாலதை சேகரிக்கப்படும். அதன் வாடை அத்தறைப்போலாயிருக்கும் அதைப்புகைபிடித்தால் வலிப்புகட்குப் பலன் கொடுக்கும், அதைக்கரித்த சாம்பல், பற்களைக்களையச்செய்யும் அதை, நெருப்புக்காயங்களிலுதிர்த்தி அது லரும் வரையில் விட்டுவிட்டால் நல்லபலனைக் கொடுக்கும்.

——:*:——

பதினைந்தாவது பசுல்.

தண்ணீர்க் குதிரை.

——:():——

கரையிலுள்ள குதிரைபோலிருந்தாலும், கொண்டையும் வாலும் பெரியதாயும், நிறமழகாயும், காட்டுமாட்டுக்குளம்பைப்போலதன் குளம்பு; பிளக்கப்பட்டதாயும் கரைகுதிரைக்குத் தாழ்ந்த சரீரமும், கழுதைக்குப் பெரிதாயும் கரையிலுள்ள குதிரையைச் சிலவேளைப் புணரக்கூடியதாயுமுள்ள பிராணி.

பிரயோஜனங்கள்.

பல்லை வயிற்று வலியுள்ளவனுக்குக் கட்டினுடனே போக்கும் விரைக்கொட்டையை யுலர்த்திப்பொடித்துட் கொள்ளில் சகலவிஷஜெந்துக்களின் விஷங்கட்டும்பலனும். தொலியை; ஒருவூரின் (மத்தியமான) நடுவிற்புதைத்து வைத்தால், அவ்வூருக்கியாதொரு ஆபத்து பணுகாது அதைக்கரித்து வீக்கங்களில், சுரப்புகளிலுபயோகித்தாலதை யொடுக்கும்.

——:(0):——

பதினாறாவது பசல்

கதது

இதன் விலாவென்பை; மனிதர்கள் ஆறருவிகளைக்கடந்து செல்வதற்குப் பாலமாக்கிக்கொள்ளற்குப் போதிய அளவும் பருப்பமுமுள்ள மீன்.

பிரயோஜனங்கள்.

அதன் கொழுப்பை வெண்குஷ்டத்திற்பூசினால் அல்லாஹுத்த ஆலாவினுதவியால் சுகப்படுத்தும்.

பதினேழாவது பசல்.

தண்ணீர் முள்ளெலி.

அதன் முற்புறம் கரையிலுள்ள முள்ளெலிக் கொப்பாயும், பிற்புறம் மீனுக்கொப்பாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்

அதன் மாமிசம் மதுரமாக விருப்பதுடன் சிறுநீரைப்பிரிக்கும். அதன்தொலியைப்பூசினால் சொறிசிரங்குக்குப்பலனும். அதன் சப்தத்திக்குத் துஷ்டமிருகங்கள் வெருளும். புழுப்பூச்சிகள் சாகும்.

பதினெட்டாவது பசல்.

தண்ணீர் நாய்.

அதன் கையிரண்டும் கட்டையாயும், காலிரண்டு நெட்டையாயும், முதலை; மண்ணென்றெண்ணிக்கொள்வதற்காகத் தன் காத்தில், களிமண்ணைப் பூசிமுதலைவாயிற் புகுத்தி, அதன் குடலைத் தறித்து தின்னுமாகிய பிரபல்யமாய் விளங்கப்பட்ட பிராணி.

பிரயோஜனங்கள்.

அதன் கொழுப்பை, வைத்திருப்பவன் முதலையைவிட்டும் அச்சந்திருவான். அதன் கண்ணின் நீரை; கண்ணில் தேய்த்தால் இருளைக் கண்டிக்கும். கடலை பிரமாணம் அளவுள்ள அதன் பித்து, கொல்லும் நஞ்சாம்.

அதன் விதைக்கொட்டையில், விசமடங்கலுக்குஞ் சோதிக்கப் பட்ட பலனுண்டாயிருக்கின்றது. ஒரு வித்திடையுட்கொண்டால் ‘‘உம்முஸ்ஸிபியான்” எனுங் காற்றினால் வசியமான வியாதிக்குப் பலனாகும், தொலியைச்; செருப்புத்தைத்து சூலையாதியுள்ளவன் அணிந்துக்கொண்டால் அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு நீங்கும். ‘‘வல்லாஹுல்முவப்பிக்குஸ்ஸவாபி.

பத்தாம்பாபுமுற்றிற்று.

பதினொன்றாம்பாபு.

காஹுன்றி உயரும் விருக்ஷங்களைக் கூறல்.

ஒன்றாவது பசல்.

துரிஞ்சு, நாரத்தை. எலுமிச்சை, கொடிமாதுளை மரம்.

சூடதிகமுள்ள தேசத்து, சுவை: இலை சாம்பலை; அம்மரத்தின் தூரில் கொட்டிவைத்தால் பிஞ்சுகளுதிராமல் காய்கள் மிகுத்துவும், மரத்தின்பேரில் சுண்ணாம்பைப்பூசினால் நீளித்திருக்கும்.

பிரயோஜனங்கள்

அதன் இலையை மெல்லுதலால், வாய் நாற்றமும், வெங்காய நாற்றமும் போம். அதன் காயைக் கோதம்பில் புதைத்துவைத்தால் நீண்ட நாளைக்குக் கெடாமலிருக்கும் (தி.ஆ.) அதன் தொலி; வாயில் நல்ல வாசத்தை யுண்டாக்குவதுடன் பக்கவாதத்துக்கும் பலன் கொடுக்கும் தொலியின் சாற்றைக் குடித்தால்; மலைப்பாம்பு விஷத்துக்குப் பலனும் தொலியின் சாம்பலை படர்தாமரை, புத்து, வெள்ளைகளில் பூசப்பலனும். தொலியை, ‘‘பிடவை” உடுபிடவைகளில் வைத்தால் அந்துகள் அறுகாது. அதன் வாடை கெட்டகாற்று, பேதி, காலத்துங் கிணக்கமாம். அதன் கொழுப்பென்னும்; சுளைகட்கிடையிலும், தொலிக்குக் கீழினுமுள்ள தொலி குன்மரோகத்தை வருத்தும் அதன் சுளை; கண்பார்வையை விளக்கும். முகக்கருப்பைப் போக்கும் நரம்புவலிகளை யடக்கும். அதன் வித்தை, அரைத்து, தேள் கடிவாயில் வைத்தால் விஷத்தை மாற்றும். அதைப் பொட்டணமாய்க் கட்டித் தொப்புளில் வைத்தாக்

கொண்டவள் கெற்பமாகாள். அதன் சுனைநீர்; ரெட்டியை வெண்மையாக்கும், சாயத்தாலெழுதிய எழுத்தைப் போக்கும்.

இரண்டாவது பசல்.

ஒருவகை ஓடைமரம்.

இதற்கு, மிகுதி முட்களுள்ள காட்டு மரம் என்று பெயர்.

பிரயோஜனங்கள்.

புகை பிடித்தால் சரீரத்தின் வாடையை நல்ல மணமாக்கும் வெங்காய வாடையை மாற்றும்,

மூன்றாவது பசல்:

கடுக்காய் மரம்.

அதன் இலையைப் பாம்பின்பேரில் வைத்தாலது நகராது. நஞ்சகட்டும், சில் கடி விஷங்கட்டும் இரத்தத்தைத் துவட்டவும் பலன் செய்யும். அம்மரத்தின் சூர்ம்பலை வெட்டங்கிளிபுடையில் தூவினாலதுகள் சிலது சிலதைக் கொன்றுவிடும்.

நான்காவது பசல்.

சீமை இலந்தை மரம்.

இம்மரம் பிரத்தியட்சமா யறியப்பட்டது.

பிரயோஜனங்கள்.

அதன் இலையின் சாற்; நஞ்சடங்கலுக்கும் பலனாம். பூ; மூளையை ஆச்சரியப்படக் கெட்டிப்படுத்தும். அதன் பழத்தை நேமமாய்த்தின்று வந்தால் சவ்வுகளின் வலியை யுண்டுபடுத்தும். பழச்சாற்றை; சூலையில் பூசினால் வருத்தத்தையடக்கும் நஞ்சுகட்டுப் பலனாயிருக்கும். அதைத் தின்னுவதும் முகருவ்வுங் கல்லைப் பெலப்படுத்தும். அப்பழத்தை; அத்தி இலை, அல்லது ஜாதிக்காயிலையிற் பொதிந்து, களிமண்ணிற் புதைத்து வைத்தால் கெட்டுபோகாமலதிக நாளைக்கிருக்கும். (தி-ஆ)

ஐந்தாவது பசல்.

அத்தி மரம்.

அதை ஒருநாள் உப்பிலும், மற்றொருநாள் மாட்டுச் சாணியிலும் வைத்தெடுத்து, முளைக்கச்செய்தாலதன்காய் மதுரமாயிருக்கும். ஜெய்த்தூன் தண்ணீரையூற்றினால் காய்களுதிரா.

பிரயோஜனங்கள்.

அம்மரத்தி னடிக்கிளையிலையைக் [illegible]டுவாயில் வைத்தால் விஷங்களேரு. கொழுந்தை (இறைச்சி) மாமிசங்களிற் சேர்த்து வேகவைத்தால், கனிவாகவேகும். கொழுந்துச்சாற்றை; சொத்தை பல்லில் வைத்தால் பலனைக் கொடுக்கும். அதன், கொம்பு, கிளைகளின் சாம்பலைத் தோட்டத்திற் றூவினாலதிலுள்ள புழுக்கள் ஹலாக்காகும்(தி-ஆ) இலைச்சாற்றைப் பூசினால் கெட்ட அடையாளங்களையும், காயைத்தின்றால், மூலம், சூலை, வியாதிகளையும் போக்கும். நேமமாய்த் தின்றுவந்தால் கெட்ட நிறத்தை இணக்கமாக்கி, விரைவில் சரீரத்தைக் கொழுக்கவைக்கும் வலிப்பைப்போக்கும். அதை; அரும்பாரை, பத்து புள்ளி இவைகளிற்கட்டினால் அவைகளைக் கனிந்துவிடும். அதன் பாலை; கட்டு சிலந்திகளிற் றடவினாலதைப் பழுக்கச்செய்யும் (தி-ஆ) அரும்பாரைகளையும், காயங்களிலுள்ள கெட்ட மாமிசங்களையு நலவாக்கும். பாலை; தேனுடன் கலந்து கண்ணிலிட மங்கலைப்போக்கும். வஜீபனத்தினைசையைத் தறிக்கும் தேள் விஷத்துக்குப் பலனாகும் (தி-ஆ) விறகை; புகைத்தால், மூட்டைமையான் வெருளும்.

ஆறாவது பசல்

பெரிய அத்திமரம்.

சுட்டிய அத்திமரத்தைப்போற் பெரிதாக இருந்தாலும், இலை; தூத்து மரத்தின் இலைபோலும்; காய் மரத்தின் தூரிலுங்காய்க்கும்.

பிரயோஜனங்கள்.

அதன் இலைச்சாற்றைப் பூசினால் கெட்ட அடையாளங்களையும், கண்டமாலையிற் கட்டினலதையும் போக்கும்,. காய்; காயங்களையும் வீக்கங்களையும் விசங்களையும்; தின்றாலும் பூசினாலும் போக்கும்.

ஏழாவது பகல்.

ஜாதிக்காய் மரம்.

குளிருள்ள ஊர்களில் முளைக்கும்.

பிரயோஜனங்கள்.

அதன் தொலியைக் கையாலுரிக்காதினால்; அதை சிறுபிள்ளையின் சிறுநீரில், இந்நாளூறப்போட்டு வைத்தெடுத்து முளைக்கப்போட்டு, அதன்பேரில் சாம்பலைப்போட்டு; அல்லது ஒருஜாதிக்காயை, முளை, சேதப்படாமல் தொலியை நீக்கிப்பின் (கடுதாசி) தாள், அல்லது துணி, முந்திரிஇலை, அல்லது, தலபு இலை, இதுகளிலொன்றிற் பொதிந்து முளைக்கப்போட்டு அதன் பேரிற் சாம்பலைத் தூவிவைத்தால், அது, தான்போல் மெல்லிய தொலியுள்ள காய்க்காய்க்கும். அம்மரத்தை "புன்தக்கு" மரத்துடன் ஒட்டவைத்தாலதன் காய்; ஆச்சரியமாயிருக்கும். பச்சை ஜாதிக்காயைக் கட்டினால், அடிபட்ட தடிப்பு, அடையாளங்களை நீக்கும் அதன்பருப்பு; நாவைத்தடிப்பாக்கும். அதிகமாய் தின்றால், கிருமி, கீரைப்பூச்சிகளைப்போக்கும், ஜாதிக்காயைப் பொடித்து வீச்சமுள்ளபாண்டத்திற் போட்டாலவ்வீச்சத்தைப் போக்கிவைக்கும் அதை எண்ணெயிற்போட்டு வைத்தால் ஒருவருடமானாலும் பேதகமாகாது. ஜாதிக்காய் தொலியைக்கரித்து, காயங்களிலுதிர்த்திறலைகையுலர்த்தும் தொலியுடன் கரிக்கப்பட்டது, ரோமத்தைக்கறுப்பாக்கும்.

எட்டாவது பகல்.

“ஆமணக்கு,” முத்துக்கொட்டை மரம்.

காய், நெத்தாகி முகிழலர்ந்துவிட்டாலதன் வித்துகளாடிக் கொம்பைவிட்டுங்கழிந்துவிடும் அக்காயின்பேரில், ஈட்டிபோல், முட்களிருக்கும்.

பிரயோஜனங்கள்.

அதன்வித்தில் “பத்து” வித்தைத் தொலி நீக்கித்தின்றால், குன்மம், முகவாதம், பக்கவாதம், சொர்வுதல், இவைகட்குப்பலன்கொடுக்கும் அதன் எண்ணெயைச் சாவல்தலையில் தடவினாலறவே சப்தமிடாது.

ஒன்பதாவது பகல்.

கோவை.

பலராலுமறியப்பட்ட பிரா[illegible].

பிரயோஜனங்கள்.

அதனிலை; வெங்காய நாற்றத்தைப்போக்கும். அதைக்கொப்புளிற் பூசினால் வயிற்றிலுள்ள கிருமிகளைக்கொல்லும்.

பத்தாவது பகல்.

தலபு மரம்

பொந்து, புரை விழுங்காலம்வரையில், அதாவது அதிக காலஞ் ஜீவித்திருக்கும், அதன் இலையைவிட்டும் பீவண்டுகள் வெருளும அதைப் பயந்ததுகள் அந்த இலையைத் தன்னிருப்பிடத்தில் வைத்துக்கொள்ளக் கூடிய வலுப்பமாகியமரம்.

பிரயோஜனங்கள்.

குளித்தபின் அதன் இலையை அவித்துக்கண்ணில்கட்டிக் கொண்டால் நீர்வடிதலைமாற்றும் அதன் தொலியைசிறுக்கா “காடியுடனவித்து நெருப்புச்சுட்டஇடத்திற் போட்டப்பலன் கொடுக்கும் பல்வலிக்கும் பலனாகும் அதன்” காய்க்கு “ஜவ்ஜு ஸர்வு” என்று பெயர்சொல்லப்படும். அதன் இதழ்சனை முற்றிலுங்கட்டினால் சில் விசமடங்களுக்கும் பலன் கொடுக்கும்.

பதினொன்றாவது பகல்.

மாதுளை மரம்

சூடானபூமிகளில்திறமாயுண்டாகிறதும், அதற்குச்சூழாலே ஆஸ்மாத்தையூணிவைத்தால், காய் மிகவாய்க் காய்ப்பதும், அதற்குத் தாழாலே உப்புடன் சத்தங்கொட்டையைப் புதைத்தால் கெட்டுப்போகிறதும், ஊன்றுங் கன்றின் அடித்தூரைப் பிளந்து அதனுள்[illegible] முற்றுமெடுத்துவிட்டு இருபிளப்பையுஞ் சேர்த்து புல்லால்கட்டி யூன்றி வைத்தமரம், கொட்டை இல்லாமல் காய்; காய்ப்பதும், வெந்நீர்புரைச் சாம்பலைத் தண்ணீருடன் அதன் தூரடியிலூற்றினால். சுளை [illegible]திக சிவட்

பாகிறதும் அதன் வேருகளைக் கிளரி, பன்றியின் மலத்தைப்பூசி, மனிதனின் சிறுநீரைத் தெளித்து மண்ணை மூடிவிட்டால், காய் மதுரமாகிறதும் சுளை, எண்ணிக்கைபடிக்குக் காய்க்கிறதும், அது இரட்டையானால் காய் இரட்டையாயும் ஒற்றையானால் ஒற்றையாயுங் காய்க்கின்ற மரம்.

பிரயோசனங்கள்.

அதன், கொப்பு 'கிளைக்கு; புழுப்பூச்சிகள் மிக வெருள்வதும் பறவைகள்; தன் குஞ்சுக்கருகில் புழுப்பூச்சிகள் வாராதிருக்க அம்மரத்துக் குச்சிகளைத் தன் கூடுகளில் வைத்திருப்பதும், அக்கொம்புகளைப்புகைத்தால் புழுப்பூச்சி, பாம்புகள் வெருள்வதும், அதனாலடிபட்ட காயம்; வெட்டு, இதுகட்கு குதிரைமாமிசமதில் வைப்பதன்றியுணாறுது. அதன் பூவுக்கு 'ஜுல்நார்' என்று சொல்லப்படும். அது வெண்மையாயும் சிகப்பாயுமிருக்கும். இரத்தமான எகிரைப் பெலப்படுத்தி, அசைந்த பற்களைக் கெட்டிபடுத்தி, வெளிப்படு மிரத்தத்தை நிறுத்தும். இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளிப்படுத்தினார்கள். "சொற்கத்தின் தண்ணீரதி லுண்டாயிருப்பதினாலே யுயர்த்தியாகிவிட்டதென்று அலிய்யு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருட்செய்தார்கள். அதை; உள்தொலி, சக்கை, சுளையுடன் தின்னுங்கள்; அது குடலைத் துப்புரவாக்கும். கல்லை யொளிவாக்கும் நாற்பதுநாள்மட்டும் வசவாசென்ற "ஷைத்தானை" ஊனமையாக்குமென்று. அதை; சேதப்படுத்தாமல் பறித்துக்காய்ச்சப்பட்ட, எண்ணெயில் அதன் காம்பை மூழ்கவிட்டெடுத்துக் குளிர்ந்தவீட்டில் வைத்தாலும்; அல்லது அது அதின் மரத்திலிருக்க அதற்குப் புழுப்பூச்சிகளண்டாது அதன்பேரில் இலை, தழை கடுதாசு, வகையறுக்களைச்சுற்றி வைத்தாலுங் கனிந்ததாகவே மிகுந்த நாளைக்கிருக்கும் (தி-ஆ) புழுப்பூச்சிகளிற்சிலது அதன் விரகுக்கு விலகுவதுபோல காய், தொலிகட்கும் விலகும்.

பனிரண்டாவது பசுல்.

ஜெய்த்தூனெண்ணை மரம்.

* * *

குர்ஆன் ஷரீபில்; அல்லாஹுத் தஆலா பிரமாணமாயருளப்பட்டதாகிய பறக்கத்துச் செய்யப்பட்ட பலன் மிகுத்தமரம். நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள். ஆதமலைஹிஸ்ஸலாமவர்கள் தங்கள் சரீரவருத்தத்தை முன்னிட்டு "ஹக்கு சுபுஹானஹு வத்தஆலா" இடம் முறைப்பாடு,செய்தபொழுது, ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'ஜெய்த்தூன்' கன்றைக் கொடுவந்து கொடுத்து ஏவினார்கள். இதை நட்டிவைத்து, காய்த்தபின்னர்; காயைப் பறித்து அதன் சத்தைப்பிழிந்துக்கொள்ளும். திடனாக, அந்த எண்ணெயில், மவுத்தைதவிர சகலவியாதிகளுஞ் சொஸ்தமாகுமென்று. அம்மரம்; தண்ணீரில்லாமல் நீண்டகாலஞ் ஜீவித்திருப்பதும் அதன் கொப்புக்கும் எண்ணெய்க்கும் புகை இல்லாதிருப்பதும் ஆச்சரியமாகிய மரம்.

பிரயோஜனங்கள்.

ஜெய்த்தூன்மரத்தின் வேரை; தேள்கொட்டியவன்பேரில் கட்டினாலுடனே தீரும். அதன் பச்சை இலையைத் தண்ணீரில் வேகவைத்து வீட்டில் தெளித்தால், ஈக்கள் வெருளும். அதன் இலைச்சாம்பல் "தூத்தியா" இலைக்கு நிகராகும். இலையை, காடியுடன் சமைத்து வாய்கொப்பளிக்க பல்வலி தீரும். தேனுடன் சமைத்தால் சொற்றைப் பல்லுக்குப் பலனாகும். அதன் பிசின், மூலத்திற் கட்டினால் பலன்கொடுக்கும், அதைத்தண்ணீரில் போட்டு, அந்த தண்ணீரில் நனைத்த ரொட்டியை எலிக்குக் கொடுத்தால் சாகும். கரை ஜெய்தூன் பிசின் சொறி, புள்ளி கட்கும், சொற்றைப்பல்லுக்கும் பலனாகும். அதிலதைப் பொதிந்து வைக்கவும்.

நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளம்பற்றினார்கள். ஜெய்தூன் எண்ணெயைப்பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். அதுவானது, பித்தத்தையும், குவாலையும் போக்கும், சவ்வைப் பெலப்படுத்தும், அசதி, வருத்தத்தைப்போக்கும், குணத்தை அழகாக்கும். நபுசை மணமாக்கும். துக்கத்தைப் போக்குமென்று. கரையிலுள்ள ஜெய்தூனெண்ணெய், பொட்டுவலிக்கும் இரத்தம் பிறப்படாத எகிர் காயத்துக்கும்வாய் கொப்பளித்தால் பலன் கொடுக்கும். அசைவுள்ள பற்களைக் கெட்டிபடுத்தும். அதன் கொட்டையை, எகிர்வலிக்கும், நுரையீரல் வலி கட்கும் புகைபிடிக்கப் பலனுண்டாம்.

* * *

பதிமூன்றாவது பசுல்.

சேபுமரம்.

நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களால் புகழப்பட்டதும், "தாத்தி"யாவின் குணங்களுள்ளதும் அதன் காயைக் கத்தியினால் தறித்தால் அதன் நீர்கள் வடிந்துலிர்வதும், அன்றேல், மாற்றமாயுமிருக்கு மரம்.

பிரயோஜனங்கள்

அதன் பூ மூளையையுங் கல்பையும் பெலப்படுத்தும், காய் கல்பையும், குடலையும் பிலமாக்கும், தாகத்தை அடக்கும் நிறத்தையும் பிள்ளையையுந் தெளிவாக்கும். கெற்ப இஸ்திரி தின்றுவந்தாலும் முக்கியமாய் மூன்றாவது மாதத்தில் தின்றால், பிள்ளையை வடிவாக்கும். மார்பில் பால் கட்டிக்கொண்டால் அதைத் தேனுடன் சமைத்து மார்பில் வைத்தால் அவை சுகமாகும். வீக்கம் சுரப்புகணீங்கும். அது இருக்குமிடத்திலுள்ள முந்திரி முதலாகிய எவ்வகை பழங்களுங்கெட்டுப் போம். அதை மரத்தின் தூளில் புதைத்துவைத்தால்மிகுந்தநாளைக் கிருக்கும்.

——:(:):——

பதினான்காவது பகல்.

நேர்வாளம்.

——:():——

அதன் இலை விரல்போல் நீளத்தில் சிறிய மீனுக்கொப்பாயும், காய் பெரிய பறவைபோலும், உள்ளில், கறுப்பாய் மூன்றுகொட்டையும், அதன் பெயர் "ஹப்புல் முலூக்" கென்றும் மாஹூதானா என்றும் சொல்லப்பட்ட மரம்.

பிரயோஜனங்கள்.

மூளிகள் வலி, சூலைவலி, நரம்புவலி, இவைகள் தீரும், இலையை முதிர்ந்த சாவலுடன் சமைத்துட்கொள்ள, குன்மத்துக்குப் பலனாம்,

——(:o:)——

பதினைந்தாவது பகல்.

சந்தன மரம்.

——(*)——

ஹிந்து தேசத்தில் அறியப்பட்ட சிகப்பு, வெள்ளை நிறமுள்ள மரம்.

பிரயோஜனங்கள்.

செகப்பு சந்தனக்கட்டையை உரைத்துப்பூசினால் செகப்புண்டான வியாதியும், பொட்டுவெலியுந்தீரும். (தீ.ஆ.) வெள்ளை சந்தனக்கட்டையை உரைத்துப் பூசினாலும் குடித்தாலும்; பொட்டுவெலியும்: நெஞ்சு அடிப்பும் தீரும், அதன் வாடைவாசமானதாயிருக்கும்.

——(:(o):)——

பதினாறாவது பகல்.

மாசக்காய்.

———

மலங் கட்டிஉள்ளதும், ஒருவருடத்தில் கடுக்காயும் மறுவருடத்தில் மாசக்காயுமாய்க் காய்க்கின்றமரம்.

பிரயோஜனங்கள்.

அதன் காயை, புள்ளிபத்துகளிற் பூசினாலதைப்போக்கும். எகிர்; முரசில் வளர்ந்து கெட்டுப்போயிருக்கின்ற சப்பசக்கைமாற்றும். பூச்சி புள்ள பற்கட்குப் பலனாகும். கைப்புள்ளகாயங்களிலுதிர்த்தினால்பலனாம். அதன் நீர் ரோமத்தைக் கறுக்கவைக்கும்.

———

பதினேழாவது பகல்.

சீர்மை இலந்தைமரம்.

——:(:):——

பிரத்தியட்சமாய் விளங்கப்பட்ட மரம்.

பிரயோசனங்கள்.

இலையைக் கண்ணில் கட்டினால் சூட்டினுண்டான கண்வலிக்குப் பலனாகும். அதன் காய் இரத்தத்தை யடக்கித் திண்ணப்படுத்தும். பூசினால் நிறத்தை தெளிவாக்கும்.

———

பதினெட்டாவது பகல்.

ஷாதுச்சலீபு என்னு மரம்.

——:():——

அரம் தேசத்திலும் ஹிந்துதேசத்திலு முண்டு.

பிரயோஜனங்கள்.

அதன் கொம்பு; கரும்புள்ளிக்கும், சூலை வலிக்கும், வலிப்புகட்கு மனுகூலமாம்,, அதன் காய்; பைத்தியமுள்ளவனுக்கு மூட்டம்போட்டால் பலனாகும்.

பத்தோன்பதாவது பசுல்.

பிஸ்தாவென்ற பஸ்தக்கு மரம்.

அதன் பச்சைமரம்எண்ணெயுடையதாகையால்நெருப்பிலெரியும்.

பிரயோஜனங்கள்.

அதன் காய் சில் விஷத்துக்கும் சீதள இரும்பலுக்கும், தாதுவிர்த்திக்கும் பலன் கொடுக்கும். எண்ணெயைக் கண்ணிற் பூசிவந்தால் இரத்த மற்று வெளுப்புக்கண்ட கண்ணுக்குப் பிரயோஜனகரமாம்.

இருபதாவது பசுல்.

பில் பில் மரம்.

மலையாளதேயத்தின் கண், தண்ணீர்த் தடாகங்களில் முளைக்கப்படுகின்ற உயர்ந்த மரம். அதன் காய்க்குலையில் வெயிற்படாமல்தன் இலைகள் மூடிக்கொள்ளும். நிழலானாலதுவும், வெளியிற் காணும், துவர்க்கமாய், காய்க்குகிறது, தாரபில்பிலாக விருக்கும். பின்புவிதைவெளியாகும் அதுதாம் வரிசையானது.

பிரயோஜனங்கள்.

நீ அறிந்துக்கொள்:—தாரபில் பிலாகிறது, அதைத் தின்றால், சில விஷத்துக்குப் பலனாம். எண்ணெயுடன் பூசினாலும் பலனாகும், தாதை விர்த்தியாக்கும். பள்ளையாட்டின் ஈரல் குலையுடன் சுட்டுத்தின்றால் மங்கல் நீங்கும் பில்பிலாகிறது, பொரிகாரத்துடன், படர்தாமரை. பத்துகளிற் பூசினால் சுஸ்தப்படுத்தும். மண்ணெண்ணெயுடன் கண்டமாலையிற் பூசினா லனுகூலந் தரும் இந்திரியத்தைக் கெட்டிபடுத்தி சிறுநீரைப் பிரிக்கும் கண்ணிருளைப்போக்கும். ஜிமாகுக்குப் பின் சுமந்துக்கொண்டவளுக்குக் கெர்ப்பத்தை விலக்கும் பில்பில். மிாகு. இது அறியப்பட்ட

கெட்டியான வஸ்து. பனிரெண்டாம்பாபு, முப்பத்தோன்பதாவது பசுலில் பின்வரும். இன்ஷா அல்லாஹு தஆலா.

இருபத்தோராம் பசுல்

கராம்புமரம்.

இது ஹிந்துதேயத் தீவுகளில் முளைப்பது, காய், மல்லிகைப்பூபோலும், நிறங்கடுசாகிய கறுப்பாயுமிருக்கும், மற்றையதேயங்களிலது விளையாதிருப்பதற்காக அத்தேயத்தாரதை அவித்து வெளிப்படுத்துவார்கள்.

பிரயோஜனங்கள்

அதன் காய்! வாய் வாடையை மணமாக்கும், பார்வையைக்கூர்மையாக்கும், கண்மங்கலுக்கும்; [illegible]க்காளத்துக்கும்பலன்கொடுக்கும். அதன் வாடை, கரும்பித்த மிகைத்ததால் குளிர்படுத்திய மூளையையும், கல்லையும் பிலப்படுத்திச் சந்தோஷத்தையுண்டாக்கும்.

இருபத்திரண்டாம் பசுல்.

கரும்பு மூங்கில் கழிகள்.

யாவர்கட்குந் தெரிந்திருக்கினும், அதன்வகை மிகுத்ததும், கழிகளிற் பிரயோஜனமிகுத்ததும். அதில், சர்க்கரை "கழி" கரும்பு. அதுகளிலழகானது; மிஸ்றில் காணப்படும்.

பிரயோஜனங்கள்.

இரும்பல் கட்கும், நெஞ்சுவலிக்கும், சிறுநீரைப்பிரிக்கவும் நெஞ்சிலுள்ள கசடுகளைமாற்றித் தெளிவாக்கவும்பிரயோஜனமாம் :"பன்திய்யி" என்ற கரும்பால் பாம்பையடித்தால் போகத்தாணி யன்றிக்கிடக்கும். பச்சைக்கரும்பை; இடித்து உப்பு மிகுந்து சமையலாகிட்ட வஸ்தளவில் வைத்தால்அவ்வுப்பைமாற்றும். கருப்பின்வேருக்கிழுக்குந்தத்துவமுண்டாயிருப்பதாலே; அதையிடித்து, இரும்பாணியுள்ள உறுப்பிற் பொதிந்து கட்டினாலதையிழுத்து வெளிப்படுத்தும்; மூங்கில் கழி, ஹிந்துதேசத்தில் முளைக்கும். அதில் [illegible]ம்புகள் செய்யப்படும், கோணலும் முளிகளுநேராகுவதற்கு அதைநெருப்பில் வாட்டப்படும். அதன்சாம்பல் நெஞ்

சுதுடிப்புக்கும், கண்; சூட்டினாலுண்டானசுரப்புக்கும், கல்புபெலத்துக்குக்காச்சலுக்கு மனுகூலமாகும்.

இருபத்திமூன்றும் பகல்

காபூர்.

ஹிந்திதேயத்திலுண்டாவதும், அதில் கழுகுகள் குடியிருக்கின்றதும். வருடத்தில் சில வேளையைத்தவிர மனிதர்கள்போகவியலாததும், வெண்மையான நிறமுடையதும், மிருத்தவர்கட்கு நிழல் கொடுக்கத் தக்கபணர்களையுடையதும் வெயில்காலத்திலதின் தூரில் துளைபோடப்பட்டு அதினின்றும் வழிந்துவரும் பிசின், காபூராகியமாம்.

பிரயோஜனங்கள்.

காபூராகிறது, நரையைத் திரிக்கும், சூடாகியபொட்டு வலிக்குப் பலனாகும், முழிப்பையும் பார்வையும் பெலமாக்கும்.

இருபத்திநான்காம் பகல்

கொய்யாமரம்,

[illegible]ருமறியப்பட்டமரம்

பிரயோஜனங்கள்.

கொய்யாக்காய் கெடாமலதிக நாளைக்குத்தரிபட்டிருக்க நாடினால்; மரத்திலிருக்குங்காயைப் பறித்து உப்புள்ளபாத்திரத்தில் வைத்தாலும்; காயின் தலையில், தாரைப்பூசித் தூக்கிவைத்தாலும், தாருபூசியகாய்களைக் கலயத்தில் வைத்து அது அதன்மரத்திலிருக்குமாப்போல், அதன் தலையைப்பூமியளவிலாக்கி வைத்தாலுங்கெட்டுபோகாமலதிக நாளைக்குத்தரிபட்டிருக்கும். அதன்பூ, மூளையைப்பெலப்படுத்துவதில் ஆச்சரியமானகுணத்தைத்தரும். காய், பித்தத்தைபடக்கும். குன்மத்தைவருத்தும்.

இருபத்தைந்தாவது பகல்

கொடி முந்திரிப்பழம்

- 2-85

பலன்களாலும், உற்பத்தியாலுஞ் சிறந்தமரம். காய்ப்பதற்குரிய பருவம் முடிகியிருக்கும் மரத்தில் "பதியன் எடுத்து ஊனி" வைத்தாலதேவருடத்தில் பெரிய குலைசாய்க்கும். பலன்மிகுத்து, தூர் உரத்து, விரைவில் காய்ப்பதற்கு நாடினால் வயது செல்லாதபருவமுள்ள மரத்தில் கிளைவெட்டியெடுத்து சந்திரவட்டஞ்சேருமுன், ஊனி, அந்தக்கொப்பின் தலப்பில்மாட்டுச்சாணியைப்பூசி, அதை, ஊனிய இடத்தில் உரம் போட்டு, தூர்கெட்டியாவதற்கு, "புனாத்து, நான்முவா" வையும் சீக்கிரம் வளர்வதற்கு, மொச்சைக்கொட்டையையும் போட்டால் ஆச்சரியமாயும், மற்றை மரங்கட்கு விகற்பமாயுமுண்டாகும், கறுப்புப்பழமுள்ள மரத்தின் பதியனும், வெள்ளைப்பழமரத்தின் பதியனும், செகப்புப் பழமரத்தின் பதியனுமெடுத்து அதுதூர் தொலி விசயமாகாத புறம்; அதாவது சேதமாகாமற்பிளந்து அதுகளையொன்றோடொன்றாய்ச் சேர்த்து ஊனிவைத்தால் பழம், கறுப்பு, சிகப்பு, வெள்ளை, இந்த மூன்று நிறங்களுள்ள பழங்களை ஒரே மரத்திற் காணப்படும். காயின் வெள்ளை நிறங் கறுப்பாகிட நாடினால் அம்மரத்தின் சூழாலே, நோண்டிக் கறுத்த மண்ணெண்ணையை அதினூற்றினாலது கறுப்பாய்விடும். தவளை இரத்தம், அல்லது, ஒநாய் இரத்தங்கொண்டு பூசிய,வெட்டுக்கத்தியாலே அதன்கிளை முடிச்சுகளைத்தறித்தால் அதற்குப் புழுப்பூச்சிகளண்டாது. அதன் சமீபத்தில் விட்டை, விராட்டியை மூட்டம்போட்டால் சீதளம் அண்டாது.

பிரயோஜனங்கள்

அம்மரத்தின் கொப்பைத் தறித்ததினின்றும் வடியும் நீரை சேகரித்து, கள்குடியால் விருப்பி மூங்கிய குடிப்புள்ளவனுக்குஅவனுக்குத் தெரியாமலதைக் குடிப்பித்தால் கள்ளாவில் முனிந்து விலகுவான் கள் குடியால் ஒருநாழிகையுஞ் "சபூர்" பொறுதிசெய்ய இயலாதவனுக்குக் குடிப்பித்தாலுமவ்வாறே விலகுவான் அந்நீர்,சொறிசிரங்கு பத்துபுண்களுக்குப் பலனாகும் அதன் இலையைமென்று வந்தால் சோர்ந்த எகிரைப் பெலப்படுத்தும். அதை மசிய இடித்துக்கட்டினால் பொட்டு வலியைவிலக்கும். பழத்தைப் பறித்தவுடன் தின்றால் வயிற்றைக்குழப்பும். "ஜிமாகின்" ஆசையைப் பெலமாக்கி, இந்திரியத்தின் ஆஸ்பதத்தையும் பத்தியங்கி சரீரத்துக்குக் கொழுக்கவைக்கும். அதை புகைத்தால் [illegible] பூச்சிகள், பாம்பு முதல்வன விஷஜெந்துகட்குப் பலனாகும். அதைத் (சிறுக்கா) காடியுடன் தின்றுவருவதுமூலம், புள்ளிகட்குக் கெட்டியான பலனைக் கொடுக்கும். (அஸீழ்தமாகும்.)

“கள் உற்பத்தியான காரணம்.”

ஜம்ஷீது இராஜன் வேட்டையாடுதற்குச் சென்றிருந்த காலத்தில், ஒரு மலையின்கண், கொடி முந்திரிக்குலையின் பெருப்பம், வடிவுகளைக் கண்டு ஆச்சரியமாய் அதைப் பறித்தபின்னர், மலைகளில் நஞ்சுள்ள வஸ்துக்களுண்டாயிருக்கின்றனவென்று நாம் கேள்விப்பட்டிருப்பதாலே, இதைக் கொலைசெய்ததால் தூக்குதற் குட்பட்டவனுக்குக் கொடுத்து பரீட்சித்தபின் நாமதைப் போசிக்கவேண்டுமாகையா லிதைப்பிழிந்து பத்திரப்படுத்திக்கொள்ளுங்களென்றுத்திரவுசெய்து, அவ்வாறு செய்யப்பட்டபின்னர், தன்னிருப்பிடம் வந்ததின்பிறகு, நாடியபடி கொலைஞனுக்கு முன் பிழிந்து தங்கரீகப்படுத்தியபின் வீறுடன் புளித்துக் கள்ளாகி இருக்கின்ற அச்சாற்றை, அவன் பொருந்துவதன்றி, வன்பித்துக் குடிப்பிக்கப்பட்டு அதில் நஞ்சு வெளியாகாததால் மறுபடியும் மடக்கி மடக்கிக் குடிப்பித்தபின் அவன் சுகமாக அதிக நித்திரை செய்து விழித்து இன்னுங் கொடுங்களென்று கேட்டவனுக் கவ்வாறு பல விடுத்தங்களாய்க் கொடுத்ததிலும் நலவல்லாத்ததைக் காணப்படாத்ததாலும் அவனல்லாதவனுக்குங் கொடுத்தும் அதனாலவன் சந்தோஷம் எக்களிப்பை வெளிப்படுத்தியபின் “அச்சாற்றை” அரசனுங் குடித்துணர்ந்த தன் பிரயோஜனத்தை யடைந்தபின் அப்பழமதிகமா யுண்டாகுவதற்காக எல்லாதேயங்களிலும் உண்டாக்குப்படிக்கு ஆக்ஞாபித்தார்.

நீ அறிந்துக்கொள் “சிறுக்கா” காடி நல்ல சால்னு, நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லந் திருவுளமானார்கள்:—அதை; இரத்தக் கசிவுள்ள இடத்தில் ஊற்றினால் அதைக்கண்டிக்கும். சொறி, சிரங்கு புள்ளிகட்கும், நெருப்புச் சூடுபட்டதுக்கும் பலனாகும். தலையிற்றடவினால் சூடான பொட்டுவலிக்கும், வாய் கொப்பளித்தால் அசைவுகண்ட பற்கட்கும் பலனாகும் ஆசையை வெளியாக்கும். “சத்தி” வாந்தியை விலக்கும். “ஜபீபு” என்னும் அதில் பிழிந்த தண்ணீராகிறது; நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கட்கு, ஹதியாவாக வந்த வஜீபனங்களிலொன்றாயிருக்கும். அதைப்பற்றி நாயகந் திருவுளமானார்கள், அந்த ‘ஜபீபு’ என்ற தண்ணீராவது (சாரம்) வஜீபனங்களில் மிக்க நலவானது. சவ்வைப் பெலப்படுத்தும் கோபத்தையடக்கும். ‘றப்பை’ ஹக்கைப் பொருத்தமாக்கும். வாயினது வாடையை யழகாக்கும். குவாளியைப் போக்கும் நிறத்தைத் தெளிவாக்கும் என்று.

இருபத்தாறுவது பசல்.

லுபான், குந்துருமரம்.

இரண்டு முழத்துக்குமேல் வளராததும், முட்களுள்ளதும், தூணை யறுக்கப் பால்வடிந்து, அதுபிசினாவதும், ஆஸ் இலைபோல் இலையுள்ளதும், மலைகளில் முளைக்கப்படுவதும், அதன் பிசினுக்கு, குந்துருவென்றும் லுபான் என்றும், அறபு குமஞ்சாஞ் என்றும், பெயர் சொல்லப்படுகின்ற மரம்.

பிரயோஜனங்கள்

அதைத் தின்றுவந்தால் கல்பு கூர்மையாம். ஞாபக விர்த்தியுண்டாகும். புதிய காயங்களை வளருத்துக் கிடங்கொடாம லதன் வாயைச் சுருக்கி யுலர்ந்து காயச்செய்யும். அதை வாத்துக்கொழுப்புடன் புள்ளி, பத்துகளில் வைக்க நீங்கும் புத்தியைப் பெலப்படுத்தி, சென்னி மூக்கை நிறுத்தும்.

இருபத்தியேழாவது பசல்

பாதாமரம்.

அதன் கொட்டையைத் தேனிலூறப்போட்டு, பின் முளைக்கவைத்துக் காய்த்தால், கொட்டை மதுரமாயிருக்கும். தொலியை நகத்தாலரிக்க நாடினாலதன் பருப்பைத், தாள் அல்லது இலையில் வைத்து. ஜாதிக்காயைப்பற்றிச் சொல்லியிருக்கின்ற பாகப்படி செய்யவேண்டும். அதன்கிளைகளின்மத்தியத்தில், கழுதைத் தலையைக்கட்டிவைத்தாலதில் நின்றுமியாதொன்று முதிராது.

பிரயோஜனங்கள்.

அதில்; மதுரமானது இருமல்கட்குப் பலனாகும். நெஞ்சை, வெடிப்பான தப்புரவாக்கும். அத்திக்காயுடன் உபயோகித்தலா லதிகப் பலனுண்டாம். அதன் கொழுப்பு; வெறிநாய்க் கடிவிஷத்துக்குப் பலனாகும். பார்வையைக் கெட்டிபடுத்தும், குன்மரோகத்துக்கும் பலனாகும். அதில் கசப்பானதைச் சமைத்து, புள்ளி, பத்துகளில் வைக்கப் பலனாகும். குன்மரோகத்துக்கும் பிரயோஜனமாம். தேனுடன் கலந்து தின்றால் மிக நலம், குடியில் போதைக் கேடுண்டாகாதிருக்க நாடினால்,

287

வெறும் வயிற்றிற் குடிப்புக்கு முன் அஞ்சு; பின் ஏழுமாய்த்தின்றால், குடியினாலாகும் போதைக்கேட்டை மாற்றும். மேலுஞ்சொறிகட்கும் பிரயோஜனமாம்.

இருபத்தியெட்டாவது பசுல்.

எலுமிச்சை மரம்.

காங்கையுள்ள பூமிகளிலுண்டாகும். அதன் பிரயோஜனங்கள் முன் கூறப்பட்டிருக்கின்ற “உத்ருஜ்” என்ற மரத்தினது, போலுள்ளனவாகையா லிங்ஙனம் விரித்து கூறப்படவில்லை. மேலுமிதன் தண்ணீருக்காச்சரியமான சிலபலன்களுண்டு.

பிரயோஜனங்கள்.

அது சகலவகைப் பாம்பு விசங்களைப்போக்கும். அதைத்தின்று, அதன்நீரை, விஷக்கடிவாயிற் பூசகிவர்த்தியாம்.

இருபத்தோன்பதாவது பசுல்.

மிஷ்மிஷ்

அலிப்பு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருட்செய்தார்கள். பட்டுப்போனமரம் ஒரு நபி அவர்களின் காரணச்சக்தியால் ஒரே “சாஅத்தில்” துளிர்த்து காய்த்து, அதன்சுளை, இதழ், கொழுப்பு, நரம்புகட் கழிவில்லாமல் தின்னுவதற்குவசதியாயும் மஞ்சணிறத்துடனும் ஆச்சரியமாய்த்தழைத்தமரம்.

பிரயோஜனங்கள்.

ஈமானை நாடித் தின்றால் மதுரமானதாயும், குபிரை நாடித் தின்றால் கசப்பானதாயும் அதன் கொட்டை வெளியாகிவிட்டது. அதன் இலையை மெல்லவினால் பல்லழுக்கை மாற்றும். அதில் மதுரம், அல்லது புளிப்புள்ள, காயைத் தின்றவுடனே ஜுரமுண்டாகும், அதைத்தண்ணீரிற் புளிக்கவைத்துத்தின்றால் அஜ்ஜுரத்தைமாற்றும் “அம்மரத்தை நட்டிக்கொண்டிருப்பவனிடமோர் வைத்தியன் சென்று நீ யாதுசெய்கிறாயென் றுசாவியதற்கு, அவன்; உனக்குமெனக்கும் வேலைசெய்கின்றேன் அதாவது; மனிதர்களிலுதத்தின்று வைத்தியனளவில் தேவையாவார்

களென்று கூறினன். அதன் கொட்டையின் எண்ணெய் மூலவியாதிக்குப்பிரயோஜனகரமாம் அதில் கசப்பானபருப்பின் எண்ணெய்; கசந்தபாதாம்பருப்பின் எண்ணெய்க்குள்ளபலனும்,மருத்துஞ்சொல்வதனாலவசியமாம்.

முப்பதாவது பசுல்

வாழைமரம்.

சீதளத்தில்” முளைக்குமாம்,நீளுகளில நிகமுண்டாகும்“இலை;முன்று முளநீளத்திலும் அகலம்; இரண்டு முழத்திலுந்தொடராயிருக்கும்.(நடுத்தரவுயரமுள்ள மனிதனுயரம்) அதன் கன்றுகளைச் சுற்றிலேமுளைத்திருக்கும். தார் “விட்டபின்னர் தறிக்கப்படும். பின்னால்அக்கன்றுகள் வளர்ந்து, தாரைப்போலவே தறிக்கப்பட்டாலும் மாறிமாறி யுற்பத்தியாகும். ஒரே விடுத்தமே குலைசாய்க்கும். காய்; முந்திரிக்காய்க்குச் சமமாயிருந்தாலும் இதில் மதுரமும், கனிவும் தாதுவிர்த்தியுமுண்டு.

பிரயோஜனங்கள்.

சிறுநீரைப்பிரிக்கும், தாதுவிர்த்தியை யுண்டாக்கும் அதை மிருதமாய் பொசித்தால் (“சத்து”) [illegible]டைப்பை [illegible]ருத்தும்.

முப்பத்தோன்றுவது பசுல்.

நாரஞ்சுமரம்.

அம்மரத்துக்குக் கீழாலே, “நர்ஜிசு” மரத்தைமுளைப்பித்தால்நாரஞ்சின் புளிப்பு மாறி மதுரமாகும்.

பிரயோஜனங்கள்.

அதன் இலையை மெல்லுவதால் “வாயிலுள்ள துர்நாற்றத்தை மாற்றிமணமாக்கும், மேலும் வெங்காயம் பூண்டாதியவைகளின் வாடையும் போக்கும், அதன் பூ உத்ருஜு “காய்க்கொப்பானதாயிருக்கும்” அதன் பலன்முந்திச் சொல்லப்பட்டுப் போனதாலிங்ஙனம் விபரிக்கப்படவில்லை. அதன் வித்து; வாய் வாடையை வாசமாக்கும் உலர்த்திமுட்டம் போட்டால் எறும்புகள் வெருளும்.

முப்பத்திரண்டாவது பசுல்.

தென்னைமரம்.

அதன்காய்க்கு; "ஜாதிக்காய் ஹிந்திய்யி" எனச்சொல்லப்படும், காயில் நாருண்டும். அந்நாரைக் கயிறுதிரித்து, கப்பல்களிற்பரிமாறுவார்கள். அக்கயிறு, கெட்டுபோகாமல், கடல் நீரில் மிகவீடு கொடுக்கும்.

பிரயோஜனங்கள்.

அதன்பால், பச்சையில் வெண்ணெயைப்போலதிக மதுரமுள்ளது. நாட்சென்றுலர்ந்தகாய்; கீரைப்பூச்சி, கிருமி இவைகளை விட்டுச் சரீரத்தைத் துப்புரவுப்படுத்தும், அதை; தின்பதினால், "நத்பா" இந்திரியத்தின் ஆஸ்பதத்தைப் பெலப்படுத்தி, தாதுவிர்த்தியை யதிகப்படுத்தும், சர்க்கரையுடன் தின்பதினால் முக்கியபலனைக் கொடுக்கும், அதன் எண்ணெய் நாட்சென்ற மூலத்தாக்கதிற்நபம்.

முப்பத்திமூன்றாவது பசுல்.

இலந்தை மரம்.

இதன் கொட்டையைப் பன்னீராலேச் சாற்றிற் சிலநாளூறவைத்துப் பின்பு முளைப்பித்தால், காய்களும், இலைகளும் பன்னீர்வாசமாயிருக்கும் தேனிலும், பாலிலும், ஊறப்போட்டெடுத்து, முளைப்பித்தால், காய், மதுரமாயும் வாசமாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்.

அதன்இலை; தலை, கழுகப்படுகிற "சித்று" என்ற இலையாகவிருக்கும், ரோமத்தைப் பெலப்படுத்தும் உதிர்வதை விலக்கும் நீளமாய் வளரச்செய்யும், காய்; மதுரமாயும், புளிப்பாயுமிருக்கும், அதில் உலர்ந்தது வாட்சியையும் குடல் பெலவீனத்தாலுண்டான வயிற்றோட்டத்தையும் மாற்றும் கொட்டையுடனிடித்துப்பூசினால்.

முப்பத்திநான்காவது பசுல்.

ஈந்தமரம்,

2-91

இது, ஆதமலை ஹிஸ்ஸலாமவர்களைப் படைத்து மிஞ்சின மண்ணினால் படைக்கப்பட்டதும், பறக்கத்துச்செய்யப்பட்டதும், நபிசல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், தங்கள் மாமிக்குச் சங்கை செய்யுங்களென்றருளியதும், இஸ்லாமல்லாத தேசங்களிற் காணப்படாததும், அதன் நிலை: பெருப்பமாயும் ஆண் பெண், சேர்க்கையும்; தலை; தறிபட்டால் ஹலாக்கையும் பாளையில் நத்பாவின் வாடையும், அதன்மேரில் நஞ்சுக்கொடிபோலே மையும், உச்சியின் மூளைபோல் குருத்தும், அதில் தங்கடமேற்பட்டால் ஹலாக்கும், கிளைகளாதிய உறுப்பிலொன்று தறிபட்டால் மீளப்படாததும், ரோமம்போல் தொகையும், ஆண் பெண் மருகுதல் இவைகளடங்கலாலும் இன்ஸானுக்கொப்பாகிய மாம்.

பிரயோஜனங்கள்.

காய்க்காத மரத்தின் தூரில் ஆயுதத்தினாலடிக்கும்போது ஒருவன் காய்க்குமென்று தடுத்தால், மறுவருடங் காய்க்கும். இக்குணம்மற்றைய மரங்கட்குமுண்டு, அதன்காயாகிறது; "அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹு அவர்களருட்செய்தார்கள்; நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள திருவுளம்பற்றியதாவது; "அஜ்வத்து" என்னும் கெட்டியான ஈத்தம்பழமாகிறது. சொற்கத்திலுள்ளதாயிருக்கும், நஞ்சடங்கலையுந் சுஸ்தமாக்குந் தகுதியுடையதுமென்று. பிள்ளை பெற்ற நிபாஸ் இரத்தமுள்ளவளுக்கு மிக்க பலனை யளிப்பதுமன்றி நத்பாவையு மதிகப்படுத்தும்.

முப்பத்தைந்தாவது பசுல்.

பன்னீர் மரம்.

யாவர்கட்கும் வெளிப்படையா யறியப்பட்ட மரம். அதனிலைகள் சீக்கிரமாய் வெளியாக நாடினால் குடுள்ள தண்ணீரை யதிற்பாய்ச்சவும். அதன் தூருள்ளில் வெங்காயத்தை வைத்து முளைப்பித்தால் வாடையதிகமாம்.

பிரயோஜனங்கள்.

அதன் கொம்புக்கு; பாம்பு வெருளும். அம்மரத்தடியில் பாம்பு கடித்தாலவனுக்கு விசமேயில்லை, அதன் "பூ" நிறம், கோலம் மற்றைய பூக்களைப் பார்க்கினு மிக்க அழகாயிருக்கும். அதனால் வேர்வை நாற்றம்

நீங்கும். பெண்டுகளதை முக்கியமாய் வெந்நீர் புரையில் பரிமாறல்வேண்டும். அதை அரைத்துக் கட்டினால் அரும்பாரை, முள், சலாகை, இவைகளைக் களையும் பொட்டுவலியைப் போக்கும். அதன் சாறு; கண் வலிக்கும் இரத்த வரட்சிக்கும் பலனாகும், போதை யுள்ளவன் முகத்திற் பன்னீரைத் தெளித்தா லப்போதையைக் களையும். அதன், எண்ணெயைப் பூனை மூக்கில் பூசினால் வியாதியடையும்.

முப்பத்தாறாவது பகல்.

மல்லிகைமீரம் செடி, கொடி.

——:():——

பகிரங்கமா யறியப்பட்டதும். அதன் பூ நிறம், மஞ்சள் வெண்மை மற்றதாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்

பச்சையும் உலர்ந்ததும், மூக்கறுப்பு, பத்து, இதுகளைப்போக்கும், அதிகமாய் முகர்ந்தால், முகத்தில் மஞ்சணிப்பை வருத்தும். பொட்டுவலியை யுண்டாக்கும். ஆனால் நீர் தடுமலினுண்டான பொட்டுவலியை மாற்றும் முகவாதம், பக்கவாதம், சோர்வுதல், நரம்பு, வியாதிகளைப் போக்கும், அதன் எண்ணெய், சிறு நீர்க் கட்டுக்குப் பலனாகும்.

வல்லாஹுல் முவப்பிக்கு

பதினொன்றாம்பாபு முற்றிற்று.

——:——

பனிரெண்டாம் பாபு.

காலூன்றியுயராத செடி, கொடி, ஆதிய புற்பூண்டுகளைக் கூறுதல்.

——:():——

ஒன்றாவது பகல்.

"எலிக்காதென்ற" பூண்டு.

இது, சிறிய இலையும், மெல்லிய கொப்பையும், பூமியிற்படர்தலும் பலநிறமுள்ள பூக்களையுமுடைய, பலவகைப் பூண்டு.

பிரயோஜனங்கள்.

இதன் இலை, முள், சலாகை. இதுகளை வெளிப்படுத்தும். காயம் புண்களைச் சேர்த்துக் காயவைக்கும் முகவாதத்துக்கு நசியம் பிழியவும் வலிப்புகட்குக் குடிப்பிக்கவுஞ் செய்தால் பலன் கொடுக்கும்.

இரண்டாவது பகல்.

ஆதர்யூன் பூண்டு.

இது; சிவந்த பூவும், இதை யகலத்திற் கிழித்தால் மத்தியத்தில் கறுப்புமுள்ளது.

பிரயோஜனங்கள்.

"காடி" யுடனரைத்துத் தேய்த்தால் முடியுதிரும், வியாதிக்கும்; அதன் சாம்பல்; நரம்பு வியாதிக்கும் நஞ்சடங்கலுக்கும் பலனளிப்பதன்றி, தேள் கடிக்கும் முக்கிய பலனாகும்.

மூன்றாவது பகல்.

மெத்லைப் புல்.

வாசமான பூண்டு.

பிரயோஜனங்கள்.

சிரங்குகட்குங் குடல் வலிவுக்கும் சிறு நீர், மாதவிடை பிரியவும், கல்லடைப்பு, பல்வலிக்கும் பலனும்,

நான்காவது பகல்.

அறுஞ்ஜா.

வெளிப்படையா யாவராலுமறியப்பட்ட பூண்டு.

பிரயோஜனங்கள்.

தேமமாய், முகப்பளபளப்பையும்சரீரவளர்ச்சியையு மின்பத்தையுங் கொடுக்கும். அதன் தோல் நஞ்சாகும் காய்ச்சிக் குடித்தால் வயிற்றலைவு நிற்கும்.

——(*):——

ஐந்தாவது பசுல்.

எலி வெங்காயம்.

பிரபல்யமாயறியப்பட்டதிலுள்ள பூண்டு.

பிரயோஜனங்கள்.

அதைப் பூசினால் அரும்பாரையைக் களையும். வலிப்புகட்குப்பலன் கொடுக்கும், நரம்புவியாதி, பக்கவாதத்திற்கு பலன்செய்யும். எகிறும், அசைந்தபல்லும் வலுக்கும் அன்றியும் வாய் நாற்றத்தைப் போக்குவதுடன் வாந்தியை நிறுத்தும்.

ஆறுவது பசுல்.

உஷ்ணான்.

இதற்கு "ஹாக்ளு" என்று பெயர். இதைக்கொண்டுதலை கழுவப்படும். இதிற் பலவகைகளுண்டு அதில்; வெண்மையானது மிக நலம். அதற்கு "ஹிர்துல் அஸ்பீர்" என்று பெயர்.

பிரயோஜனங்கள்.

அதிலொரு "திருஹத்திடை" யிட்டுக்கொள்ளச் சிறுநீரையும் மாதவிடையும் பிரிக்கும். மூன்று திருஹத்திடையிட்டுக்கொண்டால், வயிற்றிலுள்ள சிசுவை விழக்காட்டும் பத்து திருஹத்திடை கொல்லும். அதில் பச்சைநிறமுள்ளதைப் புகைத்தால், புழுபூச்சிகள் வெருளும்.

ஏழாவது பசுல்.

புல்லுருவி.

மரங்கள்ட்கள் முந்திரிகைமரங்களில் முளைத்திருக்கின்றபுல் இலைகளிராது. இன்பம்; கசப்பாயும், வெண்மையான சிறியபூவுமுண்டு.

பிரயோஜனங்கள்.

(சிறுக்கா) காடியுடன் குடித்தால், ஏப்பம் விக்கல் இவைகளைப் போக்கும். அதன் சாறு; சிறுநீர் மாதவிடையைப் பிரிக்கும். அன்றியும், வயிற்றுவலிக்கும், காச்சலுக்கும் நெஞ்சுத்துடிப்புக்கும் பலனாகும்.

* * *

எட்டாவது பசுல்.

கத்திரிச்செடி.

அதன்காய்; சிகப்பும் புளிப்பு மிகுதமுள்ளதும், உருண்டை வடிவுக்கு முடுகிய வேர்வகை, கத்திரிக்காய், அதை, "தக்காளிக்காய்" எனச்சொல்லப்படும்.

பிரயோஜனங்கள்.

பேதைக் குணத்தையும், கெட்ட ஆசாட்டத்தையும் வருத்தும். அதைப்பிளந்து நிழலிலுலர்த்தி,மாட்டுக்கொழுப்புடனரைத்து,வாலிபஸ்திரீகளின் ஸ்தன்னியத்திற் பூசினால் சரிந்துவிடாமல் நிலைநிற்கச் செய்யும். என்றும், அக்காய்கெடாமலிருக்க நாடினால், உருகியகொழுப்பில் புகுத்திவைத்தால் அதிகநாள் கெடாமலிருக்கும்.

ஒன்பதாவது பசுல்.

மொச்சைக்கொட்டை.

பொரிகாரத்தண்ணீரிற்போட்டு வைத்து, பின், முளைக்கப்போட்டாலதி சீக்கிரத்தில் முளையெழும்பும்.

பிரயோஜனங்கள்.

அதன் கொடியைப் பார்க்கிறதினாலே தூக்கம் சலிப்பை வருத்தும் ஈயப்பாத்திரத்திலதை யரைத்து "வெயில்" சூரியபுடத்தில் வைத்தால்; கெட்டியான (மை) சாயம்போலாகும், அதைக்குடித்தால், கண்ணிருளையுங்கெட்டவுதிப்பையும் வருத்தும், கொட்டையை, அதிகமாய்த்தின்பதினால் "அக்கல்" அறிவு கெடும் வெங்காயவாடையைத் தறிக்கும். இரண்டாய்ப் பிளந்து பொடித்து இரத்தக் கசிவுதலில் வைத்தாலதைமாற்றும். கோழிக்குத் தின்னக்கொடுத்தால் முட்டையிடுவதைவிலக்கும். கொட்டையைத் தொலியுடனரைத்துப்பூசினால், படர்தாமரை, புள்ளி. பத்து முகக்கறுப்பையும் போக்கி நிறத்தை யழகாக்கும்; சிசுக்களுக்கு, அடிவயிற்றில் தொலியைக்கட்டினால் முடிமுளையாது. வல்லாஹு அஃலம்

பத்தாவது பசுல்

வெங்காயம்

வெண்மையானதற்கு வெள்வெங்காயமென்றும், செகப்புக்குச்செகப்பென்றுஞ் சொல்லப்படும். எனினும் வெள்ளை வெங்காயம் பெரிது "வெள்ளைப்பூண்டு என்பது "தவ்ம்" என்றுபெயர் பின்னால் வரும். இன்ஷா அல்லாஹுத் தஆலா.

பிரயோஜனங்கள்.

வெங்காயவிரையைத் தொலிநீக்கிப் பூமியிலதற்கிணக்கமான ஆழத்தில்; அதிகஆழத்தில்ஊன்றினால் காய்அழகாயும் அதிகமாயுங்காய்க்கும், பயிர்ச்செய்வதும், பறிப்பதும்'துறைய்பா'என்ற நட்சத்திரம் பாடுசாயும் நேரமானது இன்பமாயிருக்கும். அதன்சாற்றை;தேனுடன்கண்ணில்தேய்த்தால் பார்வையின் பெலவீனத்தை நீக்கி, கூர்மையாக்கும், மிகுதமாய்த் தின்றால் புத்தியைக் கெடுக்கும்; ஒருதேசம்விட்டு மறுதேசம் போனவுடன் வெங்காயத்தைத்தின்றால், அத்தேசத்தின் நீரின் கெடுதலை விட்டுங்கார்க்கும் அதைக் கத்தி நுனிபால் குத்தி வைத்திருந்து கொஞ்சநேரஞ் சென்று அறுத்தா லதன் வாடை நோவிக்காது. மேலும் நஞ்சினது வீறலையுந் தட்டுமென்பதில் சக்கில்லை (தி.ஆ.) வெறிநாய் கடிக்குப்பூசப் பலனுண்டாம் தின்றால் இரத்தத்தைவெளியில் இழுத்து நிறத்தைசிகப்பாக்கும். தாதை யுசுப்பும் நஞ்சுவாடையின் தீங்கைத்தட்டும் அதன் சாற்றைக் கண்ணினில் விட்டால் நீர் வடிதலை மாற்றிப் பார்வையைத் துலக்கும். அதன் விரையைக் கண்ணில் தேய்த்தால்வெள்ளையைப் போக்கும் படர்தாமரை; பத்து, இதுகளில் தேய்த்தால்வைகளைப் களையும், முடிவுநிரும் வியாதிகட்குப் பூசப்பலனாகும். அதை உப்புடன் அருப்பாரையில்தேய்த்தா லதைக்களையும்.

பதினொன்றாவது பசுல்.

பெரிய கும்மட்டிக் கொடி.

அதன் காய்க்கு வத்தகைக்கா யென்றும், கர்பூஜ், என்றும் பெயர்.

பிரயோஜனங்கள்.

அதன் விரையை; பாலிலும் தேனிலும் போட்டூறவைத்து, முளைப்பித்தால், காய் மதுரமாயிருக்கும், அதன் தோட்டத்தில், மாதவிடையுடையவள் நடந்தால் பேதகப்படும்,விரையை, எண்ணெய்ப்பாத்திரத்திலிட்டு அல்லது, எண்ணெய்த் துணியில் முடிந்து வைத்திருந்து முளைப்பித்தால்வத்தகைக்காயும்,வெள்ளரிக்காயுங்கசப்பாய்விடும். விரையைப் பன்னீர் பூ மத்தியில் வைத்திருந்து, முளைப்பித்தா லதன் வாசமுண்டாகும் அத்தோட்டத்தின் மத்தியத்தில் கழுதைத் தலையை வைத்தால், மிகுந்த ஆபத்துகள் தட்டுண்டுபோவதுடன் விரைவில் முளைத்து காய்க்கும். காயுள்ள விடமிருக்கும் குழைத்தமாவுக்கு புளிப்பு ஏறாது. அதன் வாடைக்கு அமிழ்தம்போல் தத்துவமுண்டாம். காய், வஜீபனம் தீன், குடிப்பு; கனி, பதார்த்தம்.

அடக்கமாயிருக்குங் குடலைத் துப்புரவாக்கும், வஜீபனத்தை மிக விரும்பச்செய்யும். நிறத்தைத் தெளிவாக்கி, "நுத்பா" இந்திரியவிளைவையதிகப்படுத்திப் பெலத்தையுமளிக்கும். அதன் விரை; புள்ளி, பத்து, முகக்கருப்பு, ஆதியவைகட்குப் பிரயோஜனமாகும். தொலியை; நெற்றியிற் கட்டுதலால் கண்ணில் நீர் வடிதலை மாற்றும். சதையைத் தின்றால், மாங்காய் வலிக்கும் நீரடைப்புக்கும் பலனாகும். அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருட் செய்தார்கள்:—கனிகளில் நபிகணாயகமவர்கட்கு மிகவுவப்பானது, வத்தகைக்காய் என்று, நபிகணாயகந் திருவுளமானார்கள்:—வத்தகைக்காயைக் கடித்து தின்னுங்கள்; அதன் சாற்றில் றஹ்மத்துடைய இன்பமும், சுவர்க்கத்துடைய இன்பமும் உண்டு, மேலுமதில் ஒருதுண்டைத் தின்றவனுக்கு ஆயிரநன்மையை எழுதி, ஆயிரந் தீமையையழித்து, ஆயிரம்பதவி,தறஜாக்களையுயர்த்திவிடுவானென்று.

பன்னிரண்டாவது பசுல்.

சிர்மை மொச்சைக்கொட்டைக் கொடி.

இரவு, பகல் மத்தியில் முளைப்பித்து. பட்டமுன் மாடுமேய்ந்து, விளைவானால் துப்புரவாயுங்கெட்டியாயு மிருக்கும்.

பிரயோஜனங்கள்.

அது, ரோமத்தை மெதுவாக்கி, புள்ளி, பத்து, முகக்கறுப்பு, படர் தாமரை கெட்ட அடையாளங்களையுங் களைந்து, பல்வலியையும் போக்கும். மழைத்தண்ணீரில் குழைய வேகவைத்துக் கொள்ளவும். அதை அவித்து வீட்டில் தெளித்தால் ஈக்கள் வெருளும்.

பதிமூன்றுவது பசுல்

வெள்ளுள்ளி பூண்டு.

——:():——

அதற்கு, வெள்ளுள்ளி என்றும் பெயர். அதன் பலன்கள் ஒத்திருப்பதால்; வெள்ளுள்ளிக்கு வெங்காயமென்றும் வெங்காயத்துக்கு வெள்ளுள்ளி யென்று மழைக்கப்படும். சந்திரன் பூமியில் மறைந்து துறையா என்ற நட்சத்திரம் பாடுசாய்ந்த காலத்தில் முளைப்பித்தால் கெட்டவாடை நீங்குவதுடன் அதிக பலனுண்டாகும்.

பிரயோஜனங்கள்.

அதன் இலையை, மென்று, கண்வலிக்கு வைக்க பலனுண்டாம். தேனுடன் மென்று, முகத்தில் பூசினால் பரு. மறுவு, பிளப்பு, பத்து, இவைகள்போம் வெறும் வயிற்றிலுட்கொண்டால் நஞ்சுக்குந் தின்டிய விசங்கட்கும் பலனாகும். விகற்பமான தண்ணீருக்குப் பலனுண்டு. சமைத்துக் குடித்தால், குன்மவலிபோம் பேனையும், ஈரையுங் கொல்லும் அதன் சாம்பலைத் தேனுடன் பூசினால், தேமல் பத்து, வகைகளைப் போக்கும். சுட்டுத்தின்றால் பல் வலியை யடக்கும். குணத்தைத் தெளிவாக்கும் நேமமான இருமலுக்கும், புழுப்பூச்சி பாம்பு, கடி விஷங்கட்குங் குடிப்புடன் சேர்த்து குடித்தால் பிரயோஜனமாம். வெறி நாய், கடிக்குச் சோதிக்கப்பட்டது. சுமந்துக்கொண்டால். பிறுங்கித்தன்னும் உருப்பீயைத் தட்டும் இடிக்கப்பட்டதை; தேனுடன் கலந்து இரண்டு சாஅத்துநேரம் "யூனுடன்" சுமந்துக்கொண்டவள் வாயில் உள்ளி வீச்சத்தைமுகர்ந்துணர்ந்தாலவள் கன்னிஸ்திரி; ரண்டையைக்காணவிட்டால் கன்னி யழிந்தவளென்று அறிந்துக் கொள்ளலாம் ஒருவருட நிரம்பத் தொடர்ச்சியாய்த் தின்று வந்தால் அவிழ்தங்களால்தீரப்படாத கெட்ட வாய் நாறறந்தீரும்.

——(*)——

பதினான்காவது பசுல்.

ஜாவருசு

ஒருவகையான நெல், வித்து, மிக்ககெட்டியானது. அதைவிளைத்த இடத்தில், சிலகாலமட்டும் மறுபடி பயிர் விளையாது. அவ்வித்துகள்கெடாமலதிக நாள் தரிபாடயிருப்பதாலே மனிதர்கள், பஞ்சகாலத்தைக் கருதி, தங்கரீகப்படுத்தி வைத்திருப்பார்கள்.

பிரயோஜனங்கள்

அதைப்பொரிந்து கட்டுகிறதினாலே வலிகளை யடக்கமிக்க அனுகூலமானது.

——:(:):——

பதினைந்தாவது பசுல்.

ஊறுமல்.

வாடைமிக வீச்சமுள்ள வேர்பூண்டு.

பிரயோஜனங்கள்.

முளிகளின் வலிகட்கு மிகப்பலனுண்டு. கள்ளின் போதையைப்போலுள்ள தத்துவமுண்டு. வயிற்றுவலிக்குப் பூசுவதாலுங் குடிப்பதாலும் பலனுண்டு. விரையை, காடியிற் போட்டெடுத்துத் தெளித்தாலங்கு, ஈக்கள் புகுதாது, "ஜித்தாநகரத்து, திடல்களில்; கோடைகாலத்தில்; நமது தேசத்தில் வாடா ஆவரைச்செடிபோல, சிறிய அறளிஇலையைப்போல, இலையும்: மருதோன்றி விரையைப்போல், கறுப்பானவிரையும், உள்ள செடியாக நான் பார்த்தேன் (தீஆ)

——(:o:)——

பதினாறுவது பசுல்.

வெந்தயப்பூண்டு

——:():——

இதன்விரையை, மற்றைய வித்துக்களுடன்கலந்து,பயிர்செய்தால் புழுக்களுண்டாகா.

பிரயோஜனங்கள்.

அதன் எண்ணெய் ஆசுடன் ரோமத்துக்கும்: தைபம்பட்ட அடையாளங்கட்கும், புள்ளிகட்கு.முகம் அழகாகுவதற்கும், வாய் நாற்றம்பே

தகமாவதற்கும் பலனாகும். ஆனால், சிறுநீர் சரீரவாடை; வேர்வைஇவைகளை நாற்றமாக்கும்.

பதினேழாவது பசுல்

கோதம்பு

நமது பாவா ஆதமலைஹிஸ்ஸலா மவர்கட்கு; மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் கொடுவந்து கொடுத்த வித்து, இதுரீஸ் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலமட்டும் தீவிழுங்கிப்பட்சியின் முட்டைப்பருப்பத்திலிருந்து, மனிதர்கள் மாறுசெய்தபோது கோழிமுட்டைப்பருப்பத்திலும் பின்பு, புறுமுட்டைப்பருப்பத்திலும், பின்பு பிள்ளைகள் விளையாடும் (ரவை) ப்பருப்பத்திலுமாகி. அஜீஜானுடைய காலத்தில் இப்போதுள்ள கடலை, அதற்குச் சிறியதாயுமாய் விட்டது.

பிரயோஜனங்கள்.

அதன்வித்து, முகத்தை யழகாக்கும். மயக்கத்தைத் தெளிக்கும். அதன் மாவை; வெறிநாய்கடிவாயில்கட்டப்பலனாகும் பழுக்கக்காய்ச்சிய இரும்பிலதைவைத்து வெளியாகும்; தைலச்சத்தைப்புள்ளிகளிற் பூசிவருக நீங்கும். குழைத்தமாவை உப்புடன்கலந்து, கட்டி, சிலந்தி, இவைகளிற் பூசினால் பழுக்கச்செய்யும், ரொட்டியை நனைத்து உப்புடன் சேர்த்து, புள்ளி. பத்து, கட்டுக்கட்டினால் பலனாகும்.

பதினெட்டாவது பசுல்.

கொண்டைக்கடலைப் பூண்டு

பிரபல்யமாய்ப் பலருமறியப்பட்ட பூண்டு.

பிரயோஜனங்கள்

கடலை, இதைத்தின்றால், நிறமழகாகும். பூசினால் புள்ளிகள்போம். பச்சையாய்த்தின்றால் வாய் நாற்றத்தை வருத்தும். அதன் எண்ணெய், புள்ளிகளுக்குப்பலனாகும். அதில் துப்புரவானது எதிர்வலிக்குப்பலனும் சப்தமழகாகும், சமைக்கப்பட்டது, பிள்ளையை விழக்காட்டும், தாதை அதிகரிக்கச்செய்யும், ஜீரணிக்குப் பலனைக்கொடுக்கும்; ஆனால்; வெறும் வயிற்றிற் குடிக்கவேண்டும்.

பத்தொன்பதாவது பசுல்.

பேய்க்கும் மட்டிக் கொடி.

அதற்கு, மிருகங்கள் வெருளும். "மான்" எனும் மிருகமுகந்து தின்னும்.

பிரயோஜனங்கள்.

அதன் பச்சை இலை; இரத்தக்கசிவை நிறுத்தும் வலிப்புவகையுடன் கல்கட்டும் பலனாகும். அதன்காயைத் தண்ணீரில் சமிக்கவைத்து வீட்டில் தெளித்தால் செள்கள் சாகும். 'இப்னுஉகைல்' சொன்னார்கள்:— வியாதியால் கால்முடமான வோர் பெண்ணிருந்தாள் வயிற்றுக்குல்லத்தை இளகலாக்கிவைக்க எங்களின் வழக்கமான அவிழ்தமாவது பேய்க்கும்மட்டிக்காயின் தலைப்பில் சில்லறுத்துக் கொஞ்சம் சோறுகுடைந்தெடுத்து அதில் பாலையூற்றி அச்சில்லால் மூடி அதைச் சுடுசாம்பலில் புதைத்து கொதிவந்தவுடனெடுத்து உறிஞ்சியுட்கொள்வது வழக்கம். அவ்விதமே மூன்று பேருக்கு மூன்று காயைச் சுடுசாம்பலில் வைத்திருந்ததை அப்பெண் மூன்றையுமெடுத்து அருந்தி யுட்கொண்டதாலே, கடிசான பேதியாகி மவுதது முடுகும்வரையில் அவளுக்கு அபாயமுண்டாயிற்று. இரவானபோது அப்பேதி நின்று களைப்பு மாறி எழுந்திரித்து இரண்டுகால்களாலும் நடக்கின்றவளா யதிககாலஞ் ஜீவித்திருந்தாள். என்று அக்காயை குஷ்டம் யானைக்காலென்ற மறப்பு வியாதி, அறுக்குன்னிசா வென்ற நரம்புவியாதி, சூலைவலி யாதி[illegible]ங்க விலுந்தேய்க்க நற்பிரயோஜன விர்த்தியாம். அதன்வேர்; பாம்புகடி, தேள் கொட்டல் இவைகட்குரிய பலனும். குடித்தாலும் பூசினாலும் பலனாகும். நான்குபக்கத்தில் விசகடிப்பட்டவன் ஒருமுறை குடித்தாலுடனே பலன்கொடுக்கும்.

119788

இருபதாவது பசுல்.

கடுகுப்பூண்டு.

இது பலர்களாலுமறியப்பட்ட பூண்டு.

பிரயோஜனங்கள்.

கடுகை; பாம்பு, புடை, மூட்டத்திற்போட்டால் மரணமாம். அதன் புகை புழுப்பூச்சிகளைக் கொல்லும். முகத்தை அழகாக்கும் வாய் நாற்

றத்தை நீக்கும். செத்துப்போகின்ற இரத்தத்தை இளக்கமாக்கும். களையிலுள்ள கடுகு நாலாமுறைக் காச்சலைப்போக்கும். முடியுதிரும் வியாதிக்கும், புள்ளிகளுக்கும், மூளைகள் வலிக்கும் நரம்பு வியாதிக்கும் கட்ட பலனாகும். அதன்சாற்றை; காதிலொழுக்கினால் காதுவலி யடங்கும். வெறும் வயிற்றிற் குடித்தால் விளக்கமுண்டாகும். தாதுவிர்த்தியையுண்டாக்கி ஆசையை மிகுக்கச்செய்யும்.

இருபத்தொன்றாவது பசல்.

கீரை.

இதைப்பல்லோர்களு மனுபோகத்தலாலறிந்துள்ள வஸ்து.

பிரயோசனங்கள்.

நித்திரையைக்கொடுத்து, தாகத்தை யடக்கும். தாதுசக்தியைக் கெடுக்கும். இதற்காகவே, பெண்களின் பேரில் அதிக வெள்ளமுள்ள கோசாக்களும், புருடன் யாத்திரையிலிருக்கப்பட்ட பெண்களும் ஜிமாஃ ஆசையைப் போக்கிக்கொள்ளற்கு காடியுடனதைத் தின்பார்கள். மேமாங்த் தின்னுவது, கண்ணிருளை வருத்தும், ஆனால் பாலை; அதிகப்படுத்தும். மயக்கத்தை விலக்கும் காராக்கோட்டியான கனவு காண்பவன் அதின் விரையைத்தின்றால் விலக்கும்.

இருபத்திரண்டாவது பசல்.

கஸகஸா.

இது இத்தேசவாசிகளு மனுபோகசக்தியாலறியப்பட்ட வஸ்து.

பிரயோஜனங்கள்.

கள்ளென்று கூறிய கீரையைப்போல், சிற்றுறக்கத்தை வருத்தும். இது, வெள்ளை, கறுப்பு, சிகப்பு நிறங்களையுடையது. வெள்ளை; நெஞ்சினின்று முண்டாகின்ற இருமல்கட் கதிகபலனைக் கொடுக்கும். தேனுடன் உட்கொண்டால் தாதைப் பெலப்படுத்தும். கறுப்பு; அவசியம் தூக்கத்தை வருத்தும் முளிப்புடையவன் நெத்தியில் கட்டப்பலனாகும். மிஸ்றுதேயத்து; கஸ்கஸா, சாற்றுக்கு அபின் என்று சொல்லப்படும். அதில்நின்றுமோர் பருப்பளவு உட்கொண்டாலும் பூசினாலும் புத்தியை

மறைத்து வலியடங்கலையுமடக்கும். தலையில் பூசினால் தலைவலியடங்கும். ஆனால்; அறிவைக்கெடுக்கும். சூலையில் பூசினால் வலியடங்கும்.

இருபத்திமூன்றாவது பசல்.

கிஸ்யுத்தஃலபு.

தீன் மதூரமாகிய புல். அதன் காய்க்கு கிஸ்யுத்தஃலபு என்றுபெயர். அதாவது தான்றிக்காய்.

பிரயோஜனங்கள்.

அதைக் குடிப்புடன் பரிமாறுகில் தாது,வாதம், வகைகட்குப்பலன் செய்யும். 'லக்கன்கூர்' என்ற மீனைப்போல் பலன் கொடுக்கும்.

இருபத்திநான்காவது பசல்.

நாய்க்கொட்டைப் பூண்டு.

நாயுடைய கொட்டைபோலுள்ள பூண்டு, காய் ஒன்று அதுமேலொன்று, கீழொன்றுபோல் இரட்டையாகவிருக்கும். ஒன்று சோர்வாயும், ஒன்று நிறைவாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்.

சிலேர்ப்பன சுரப்புகளை மாற்றும், காயத்தையாற்றும். மூலரோகத்துக்குப் பலனாகும். பச்சையானது தாதை பதிகரிக்கச்செய்யும். உலர்ந்தகாய் தாதைக் கெடுக்கும். சிலவேளை மாற்றமாகும்.

இருபத்தைந்தாவது பசல்.

கித்மீ.

பிரத்தியேகமா யறியப்பட்ட பூவந்திக்கொட்டை பூ, வெண்மையாயும் சிகப்பாயுமிருக்கும். சிலரிது வாசமமைந்த ஓர் பூண்டென்றார்கள்.

பிரயோஜனங்கள்.

(சிறுக்கா) காடியுடன் படர்தாமரை, பத்து, கண்டமாலை இவைகளிற் பூசி வெயிலிலிருந்தால் நலவான பலனைக்கொடுக்கும். கெந்தகத்

துடன் சேர்க்கமிக வுபயோகமாகும். சமைத்து, குடித்தால் சிறுநீரடைப்புக்கும் பிள்ளைபெறும் வருத்தத்துக்கும் பலனாம், "கித்மீ" ரூமீயை கிராது கொழுப்புடனிடித்து, தேள் பாம்பு. கடிவாயில் வைக்க சுகமாம். அதில்; களஞ்சி இடை, யுட்கொள்ளக் குன்மநோயறும் அதைக் கொண்டு [illegible]ராமத்தைக் கழுவினால் நல்லபலனுஞ் சுகமாயுமிருக்கும். சிரங்குகளில் ஒட்டினால் சுகப்படுத்தும்.

——:():——

இருபத்தாறுவது பசுல்.

கெக்கரிக்காய்.

——:*:——

பலராலு மறியப்பட்டதுங் கொள்ளப்பட்டதுமான காய்.

பிரயோஜனங்கள்.

நெருப்புச் சுட்ட காயத்துக்குப் பலனாகும். சிறுநீரைப் பிரிக்கும். பித்தத்தளவில் திரும்புவதாலுடனே தாகத்தை நிறுத்தும். அதன் விரையைபிடித்து முகத்திற்பூச நிறத்தை அழகாக்கும்.

——:*:——

இருபத்தேழாவது பசுல்.

றைஹான்.

இதற்குத் துளசி என்றும் 'சப்ஜா' என்றும் பெயர்.

பிரயோஜனங்கள்.

மூளைகெட்டுப்போ யிருப்பதற்கும், தடுமல் பிடித்திருப்பதற்கும் பிரயோஜனமாம் மூலரோகத்துக்குப் பலனாகும். அதன் விதையை ஓட்டகை, இரத்தத்திற் போட்டு, கமுக்கட்டில் பூசினால், மருந்தினாலற்று போகாத கொடிய நாற்றத்தை மாற்றும். (சில்லி) சின்னி மூக்குக்குப் பலன் கொடுக்கும்.

——:(:):——

இருபத்தெட்டாவது பசுல்.

முத்துச்சோளம்.

——:(0):——

வாட்சியான குளிர்ச்சியும், மெதுவும், சமியப்படுவதி லதிவிரைவும் சரீர[illegible]வையுங் கொடுக்கக்கூடியது.

பிரயோஜனங்கள்.

அதை; சர்க்கரையுடனுட்கொள்ளில் பலவியாதிகட்கும் அமிழ்தம் போலாகும். வயிற்றிலுள்ள காந்தியைத் தணிக்கும். பால் சர்க்கரையுடன் உட்கொள்ளில் உறுப்புகளைப் பெலப்படுத்தும்.

——:():——

இருபத்தொன்பதாவது பசுல்.

ஜஃபரான்.

இது வொரு பூண்டு. இதன் பூவை, "குங்குமம்" என்பது வேர், வெங்காயத்துக் கொப்பாயிருக்கும். அதை இடித்து பிழிந்தால்; பாலைப் போல் சாறு கொடுக்கும், அதையுலர்த்தி மாவாக்கித் தின்னப்படும்.

பிரயோஜனங்கள்

அதன் விதை நித்திரையை வருத்தும், நிறத்தை யழகாக்கும், பார்வையைக் கூர்மையாக்கும், நீர்வடிதலைமாற்றும். வியாதியினால் வெளுத்த கண்ணில் தேய்த்தால் குணப்படும். தாதை யதிகரிக்கச்செய்யும். சிறுநீரைப் பிரிக்கும். பிரசவ விடுப்புவலியுள்ளவள் குடித்தால் பிரசவமாவாள். கல்லைக் கெட்டிப்படுத்தும். சந்தோஷம் சிறப்பாதியவைகளை வருத்தும். ஒரு திருஹத்திடைக் கதிகமானால் கொன்றுவிடுமாகிய நஞ்சாகும். அது இருக்குமிடத்தில்; பல்லி முடுகாது. பிள்ளைப்பேறு, அல்லது நஞ்சுக்கொடி விழுத்தாட்டலால் வருத்தமடைபவள்; பத்து, திருஹத்திடைக்குமேற் போகாமல் குங்குமப்பூவைக் கையில் வைத்துக்கொண்டவள் கலாசுபெறுவாள்.

——:(:):——

முப்பதாவது பசுல்.

சதாபு.

இது மிக்க பிரபல்யமாயறியப்பட்டதும், மிக்க பிரயோஜனகரத்தையுடையதுமாகிய பூண்டு.

பிரயோஜனங்கள்.

அதை; புறாக்கூட்டில் வைத்தால் வெருகுப்பூனை சமீபிக்காது வீட்டில் வைத்தால் பாம்பு முடுகாது. தின்றால்; தாது தத்துவமதிகமாம். கெற்பஸ்திரீ தனக்குத் தாழாலே மூட்டமிட்டுக்கொண்டால், வயிற்றுப்

பிள்ளையை விழக்காட்டும். அதன் வாடை வலிப்பு வகையடங்கலுக்கும், கடினப் பொட்டுவலிக்குமுடனே பலன் கொடுக்கும். பச்சை;மிகவுத்தமம். அதன்சாற்றை, முலைப்பாலுடன் கண்ணில்தேய்க்க இருணீங்கும். தண்ணீரில் சலிக்க வைத்து வீட்டிற் றெளித்தால், செள்ளுகள் சாகும். எண்ணெயுடனிடித்து வலியுள்ள பற்களின் கீழ்வைத்தால் வலியையடக்கும். பொரிகாரத்துடன் பத்து,படர்தாமரை, அரும்பாரை கண்ணிலுள்ள சதை வளர்ச்சி இவைகளிற் பூச மிக்க பலனைக் கொடுக்கும். வெங்காயவாடையை நீக்கும்.

முப்பத்தோன்றாவது பசுல்.

ஸல்க்கு ஒருவகைக்கீரை.

முந்திரிப் பாணியில்; ஒரு இரவு பகல் போட்டு வைத்திருந்தால் சிறுக்காவாய் ஆகி இன்பமுமுண்டாகிவிடுமாகிய கீரை.

பிரயோஜனங்கள்

அதன்சாறு; அரும்பாரையைக்களையும், பேனைக்கொல்லும், தலை, கழுவினால், சிக்கு, அழுக்கு, பாட்டை, இவைகளை நிவர்த்திசெய்யும். முகக்கறுப்பு, புள்ளி, யையும் போக்கும், அதெப்படியானால்;அவ்விடத்தில் முதலாக பொரிகாரத்தைக் கொண்டு கழுவியபின் சாற்றைப்பூசுதல் வேண்டும்.

முப்பத்திரண்டாவது பசுல்,

சிம்ஸம்

இது ஒருவகைச்செடி,

பிரயோஜனங்கள்.

இந்தச்செடியின் சாறுமிலையும் ரோமத்தை, நெருக்கமாக முளைக்கப்பண்ணும். அதன் விதை அடியின்மந்தம், தடிப்பு, உறைந்த, இரத்தத்தைப்போக்கும். குடித்தாலும் பூசினாலும் பித்தப் பிளப்புகட்குப் பலனாகும். கெட்டியான கொழுப்பை யுண்டாக்கும். அதைப்புளிக்க வைத்துக் குடித்தால் மாதவிடையைப்பிரிக்கும், சமைத்துட்கொள்ளில் தாதின் வலுவையும், அதன் கருவையுந்திறப்படுத்தும்.

முப்பத்திமூன்றாவது பசுல்.

சுன்புல்

அதன்வாடை; மணமானதும், பூண்டுசிறியதாயும், சிறுகதிரையுடையதாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்.

அக்கதிரை வாயில் வைத்துக்கொண்டால், நாவையுலர்த்தி, வாயில் வாசமுண்டாகச்செய்யும், அது மூளையைப் பெலப்படுத்தி, நீர்வடிதலை மாற்றி ரோமத்தை முளைக்கச்செய்யும். சுறுமாவில் ஆக்கப்பட்டால் இன்னும் நெஞ்சையழகாக்கி, கெற்பப்பையின் கசிவைத்தடுக்க நெஞ்சுத்துடிப்பை நீக்கும்.

முப்பத்திநான்காவது பசுல்.

தொலிக்கோதம்பு

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லந் திருவுளமானார்கள்,— இதை; மணிக்கோதம்பில் நின்றுமே இவ்வண்ணமாய் "அல்லாஹுத்தஆலா படைத்தான். அதற்குக்காரணமாவது.—ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள்; ஒரு சிறங்கையளவுமணிக்கோதம்பைக்கொடுவந்து" ஆதமலைஹிஸ்ஸலாமவர்களிடங்கொடுத்து இதுதான் அல்லாஹுத்தஆலாவின்சுவர்க்கத்தில் நீர் தெரிந்துக்கொண்டது; மேலும், உமக்குமுமதுபிச்சந்திற்குமிதுவே ரிஸ்காகவிருக்குமென்று சொன்னவுடனே, அக்கோதம்பை, ஆதமலைஹிஸ்ஸலாமொருபிடியும், ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் ஒருபிடியுமெடுத்துக் கொண்டபின்னர், ஆதமலைஹிஸ்ஸலாமவர்கள்; ஹவ்வா அலைஹிஸ்ஸலாமை இப்பொழுது முளைக்கப்போட வேண்டமென்று தடுத்தும் அவர்கள் முளைக்கப்போட்டதினாலே, ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் முளைப்பித்தது, தொலிக்கோதம்பாகிவிட்டதென்று.

பிரயோஜனங்கள்.

இது; வஸ்துக்களை மடித்துப் பேதகமாகாமற்காத்துக்கொள்ளும். கொடிமுந்திரிகைப்பழத்தின் குலையைத் தொலிக்கோதம்பிற் புதைத்தாலது பேதகமாகாமல் ஒவ்வொருநாளும் புதிதாய்ப்பறித்தபழத்துக்கொப்பாய் தின்ன உபயோகமாயிருக்கும். முகக்கறுப்பிற் பூசிவரில் அதுகூ

லத்தை மீட்டும், பழயகாடி சிறுக்காவுடன் வேகவைத்து புண், சிரங்கு, சூலையில் கட்டிவருகிலவைகட்கு நல்ல குணத்தையளிக்கும்.

முப்பத்தைந்தாவது பசுல்.

சுண்ணாம்புக்கீரை.

இதற்கு, கீரிப்பிள்ளைக்கீரையென்றுபெயர்(பிரயோஜனம்)முள்ளெலி கீரி, பாம்பு, மலைப்பாம்புடன் போர்செய்தால்; கரையிலுள்ள இக்கீரையைத்தின்றுமருந்து செய்துக்கொள்ளும். பாம்புவிஷமடங்களுக்கும் பலஹுவைதுடன்கிருமி கீரைப்பூச்சிபாதியவைகளைக்களையும்(கோல்லும்)மென்றால்; பல்லுவலியை அடக்கும்.

முப்பத்தாறுவது பசுல்.

பருப்பு

பிரபல்யமாயறியப்பட்டது, பிரயோஜனம், அதைத் தின்னுவதால் வாய்வு; காற்றை வருத்தும். மிகுதமாய்த்தின்பதினால் அதிகவாய்வு (காற்றையும்) கண்ணிருளையும் வருத்தும். மாவுடன் சேர்த்துக்கட்டினால்சூலை வலிக்குப்பலனாகும் தின்ன இன்பமாயிருக்கும்.

முப்பத்தேழாவதுபசுல்.

உணபுத்தஃலப்

பலநிறங்களுடையது மன்றி; பலவகைகளுமுண்டு.

பிரயோஜனங்கங்.

அதன் சாற்றைக்கண்ணில் தேய்த்து வருகில்; பார்வை பெலமாகும், பனிரெண்டு வித்தைத்தின்றால்; பைத்தியமுண்டாம் நான்கு திருஹத்திடை தின்றால் அபியூனைப்போல் மஸ்தைவருத்தும்.

முப்பத்தெட்டாவது பசுல்.

முள்ளங்கி

பிரத்தியட்சமாயறியப்பட்டது மனுபோகமானதும்.

பிரயோஜனங்கள்.

கெட்டநாற்றமுள்ளதுமன்றி வெங்காயவாடையைத்தறிக்கும். நேமமாய்த் தின்றுவந்தால் குடலைத் துப்புரவுப் படுத்தும். பேறுகாலமானவள் தின்றால் பால் மிகவுண்டாகும், ஆண்பிள்ளை தின்றாலதிகதாதுவிர்த்தியையுண்டாக்கும் ஆனால் சப்தத்தைக்கெடுக்கும்.

பருவமான காயைத் தேளின்பேரில் வைத்தால் சாவும். தேள் கொட்டப்பட்டவன் தின்றால் விஷத்தைப்போக்கும். முடியுதிர்ந்த விடத்தில் தேய்த்தால் முளைப்பிக்கும் மிகுதமாய்த்தின்றுவந்தால் பேனையதிகப்படுத்துமன்றியும், தலை; பல், கண்ணில், தங்கடத்தை வருத்தும், தேனுடன் பூசினால் முகத்திலுள்ள மறுவைத் தறிக்கும். குடிப்புகளில் பொட்டால் கெடுதியுண்டாக்கும். சாற்றை முகக்கறுப்பில் பூசினால் நீக்கும். மஞ்சள் காமலையுள்ளவர் ஐந்து நாள்மட்டுங் குடித்துவந்தால் அம்மஞ்சணிப்பை மாற்றும். கண்ணில் தேய்த்து வந்தால் பார்வையைக் கூர்மையாக்கும். கண் வெள்ளையைப்போக்கும். தோலை யுலர்த்திப் பொடித்து கண்ணில் தேய்த்தால் பார்வை கூர்மையாகும். அதற்குத் தேள், பாம்பு வெருளும் முகத்தில் பூசினால் புள்ளியைப் போக்கும். அதன்விரையைத்தின்றால்தாதைபெலப்படுத்தும்சிலநஞ்சுகட்குப் பலனாகும். இன்னுமது பார்வையைக் கூர்மையாக்கும். பாலை மிகுதமாக்கும்.

முப்பத்தோன்பதாவது பசுல்.

மிளகு.

பகிரங்கமாகப் பலராலு மறியப்பட்டது.(பிரயோஜனம்):—மிளகு. வாட்சியுள்ள குளிர்ச்சியும்,இலேசாகியஉறைப்புமுள்ளது. குவாளையைத் தறிக்கும் வாய்வு(காற்றை)நீக்கும். கெட்ட இரைச்சலையும் நெஞ்சடைப்பையும் போக்கும். லேகியங்களிலும் சூரணங்களிலும், புகுந்து அதன் பலனைப் பெலப்படுத்தும். தினிலதிகமாய்ச் சேர்த்தால், முகம் கண்ணிவைகளின் மஞ்சணிப்பை நீக்கும். வயிற்றினுள்ளுண்டாகும் ஊற்றம் யிரைச்சலை நீக்கும். ஈத்தங் காயுடன் மென்று தின்றால் குவாளையைப்போக்கும், அதைத் தேய்த்தால் பார்வை பெலவீனத்தைக் கண்டிக்கும். ஜிமாஃக்குப் பின் சுமந்துக்கொண்டவளுக்கு, கெற்ப, பலனைக் கொடுக்கும். சூரணித்து; பரிமாறினால், நெஞ்சுவலி, இருமல்களை நீக்கும் நுரையீரலைத் துப்புரவாக்கும். வஜீபணத்தைச் சமி[illegible]செய்யும், எண்ணெய்

பால் இவைகளிற் போட்டெடுத்துப் பூசினால், நரையைப் போக்கும் (சிறுக்கா) காடியிற் கலந்து கட்டினாலுங் குடித்தாலு மீரல் குலை வீக்கத்தை விலக்கும் வெள்ளை மிளகைப் பார்க்கிலும் கறுப்புமிளகு இரப்பக் காரமுள்ளது வெள்ளை; தத்துவத்தால் பெலவீனமுள்ளது வெள்ளையைச் சேர்க்காயிற் பறிக்கப்படும். கறுப்பை; குலையியில் நன்றாய்ப் பழுத்து கனிந்து விளைவானபின் பறிக்கப்படும்.

நாற்பதாவது பசுல்.

வெள்ளரிச் செடி.

உலோகோப விசயமாய் விளங்கப்பட்டது.(பிரயோஜனம்):—குகையுள்ளில் பிஞ்சைவிட்டு காற்று புழுதிகள் போகாமல் புகுதாமல் கெட்டியாய் வாயை மூடி, செடியுடன் விட்டுப் பெருத்தபின், எடுக்குந் தருணத்தில் அக்குகை எவ்விதமிருந்ததோ அவ்விதமே வெள்ளரிக்காயுமிருக்கும். தோட்டத்தில், விடக்குள்ளவன் நடந்தா லதுபேதலித்துக் கெட்டுப்போம். அதன் விரைக்கு எண்ணெய்வாடை பட்டால்காய்; கசப்பாய் விடும். விரையைத் தேன் பாலில் போட்டுவைத்திருந்து முளைப்பித்தால்; காய்; வாசமும் மதுரமுமாயிருக்கும். தின்றால் வெறி நாய் கடிக்குப் பலனும் காய்; தாகத்தையடக்கும். சிறு நீர்ப்பையைப் பெலப்படுத்தும் போதையி லகப்பட்டவன் சூட்டைத் தணிக்கும். விதை; சிறு நீரைப்பிரிக்கும் பூசினாற் நிறத்தை யழகாக்கி பித்தக்காங்கையை யடக்கும்.

நாற்பத்தோன்றாவது பசுல்.

குருந்துமு.

ஒரு தூண்டு. (பிரயோனங்கள்):—நெஞ்சை யழகாக்கி சப்தத்தைத் தெளிவாக்கி, குரியத்துக்குப் பலன்கொடுக்கும். அத்தி, அல்லது, தேனுடன் தின்றால் தாதுவிர்த்தியாகும். அதன் பூ, வக்கு உஸ்புறு என்று பெயர். முகத்தின் புள்ளி, பத்துகளைப்போக்கும், அதைச் சிறுக்காவுடன் பூசுதல் வேண்டும்.

நாற்பத்திரண்டாவது பசுல்.

பருத்திச்செடி.

பரிமாறப்பட்டு வருவதினால் பல்லோர்களு மறிந்திருக்கப்பட்டவோர்செடி.

பிரயோஜனங்கள்.

அதன் இலையை; அரைத்து சிறுபிள்ளைகட்குப் புகட்டினால் வயிற்றைப் புரட்டி, களிச்சல் அல்லது நருகிக்கொண்டிருப்பதைக் கெட்டிபடுத்தும், அதன் பஞ்சினாலான மெல்லிய நூல், புடவையை யுடுத்தினால் சரீரத்துக்குச்சுகத்தைக் கொடுக்கும் திண்மையும் சாசாப்புமுள்ள நூலிலுள்ளதை யணிந்தால் சரீர மெலிவுறும். குளிரைத்தடுக்கும் அதன்கொட்டையின் மேல் தோலியைக் கரித்து, எகிர்வாயிலுள்ள காயங்களில்வைத்தால் கெட்டியான பலனைக்கொடுக்கும்.

நாற்பத்திமூன்றாவது பசுல்.

பெருப் பருத்திச்செடி.

பெரும்பான்மையாய் சகலவர்களாலுங் கொண்டாடி வருமானவோர் செடி.

பிரயோஜனங்கள்.

புடவைகள் உற்பத்தியாகின்ற பறக்கத்துள்ளது அதன் புடவை; சரீரசுகமும், வெயிற்காலங்களிற் செழிப்பும், சூடுள்ளவர்கட்கு அதிக பலனுங்கொடுக்கும் அதன் புகை; நடுமலுக்குப் பலனாகும். அதன்விரையைக் கட்டுவதால் வலிகளையடக்கும் பொரிகாரம் அத்தி இதுகளுடன் முகத்திற் பூசிவரப் புள்ளியை மாற்றும், கொழுப்புடன் நகத்திலுள்ள ளெள்ளைக்குப் பலனாகும்.

நாற்பத்தி நான்காவதுபசுல்:

“கிராது,” ஒருவகை வெண்காயம்.

இதை“ மகிளி ’.என்றுங்“கூச்சாயி” என்[illegible]ழைக்கப்படும். இதில்; ஷாமீ, நப்த்தீ;” என இருவகை யுண்டும்.

பிரயோஜனங்கள்.

அதை; இடித்து, தேன், குளவி, கடிவாயில் வைக்கத் தீரும். நேமமாய்த் தின்று வருவதினால் கண்ணிருளை வருத்தும்.. ஷாமீ, என்பது அரும்பாரையைப் போக்கும். அதை: தின்றால் எகிரையும் பல்லையுங் கெடுத்துப் பார்வையைத் தங்கடப் படுத்தும் "நப்த்தி"யைப் பொடித்துப் பொதிந்தாலும், தின்றாலும், கட்டினாலும், மூலத்துக்குப் பலனைக் கொடுக்கும். தாதுவிர்த்தியையுண்டாக்கும். இரத்தமோடுகின்ற காயத்தில் வைத்தால் அதை நிறுத்தும். இராக தொனியுடையவர்கள் பரிமாறி வந்தால் சப்தமழகாகும். இராதை நான் பார்த்தேன். வெண்மையான வெண்காயம் போலிருந்தாலும், அதன் காரம் மத்திபமாயும், இலைகளும் தோகையும், சிறிதாயுமிருக்கின்றது. இதை யான் மலாயுதேசத்தில், கண்டுபிடித்தேன் ஆனால்; மலாயர்கள் "கூக்சாய் என்று பெயருடனழைப்பதுமன்றி மிகவும் பரிமாறி வருகின்றார்கள். (தி.ஆ.)

——(:0:)——

நாற்பைத்தைந்தாவது பசுல்.

மல்லிச்செடி.

பலவகை சாதியார்களனுபோகத்தி லறியப்பட்ட செடி.

பிரயோஜனங்கள்.

சேதமன்றி அதை வேருடன் களைந்து பிரசவமாகிறவள் தொடையிற் கட்டியவுடன் பிரசவமாவாள்- உலராத பச்சை; தூக்கத்தை வருத்தும். கண்ணிருளை யுண்டாக்கும். உலர்ந்தது; தாதுவுடைய தத்துவத்தை யுடைக்கும். மனி இந்திரியத்தை யுரைச்செய்யும் அதன் சாற்றைப்; பாலுடன் சேர்த்துக்கொள்ளக் கடுசாகிய தலைவலியையடக்கும். பச்சை அல்லது, உலர்ந்தது, எதுவானாலும், மிகுதமாயுட்கொண்டு வருகில்; புத்தியைக் கலக்கமாக்கும் அதன் விரையில் மூன்று தடவை யோர்மதிப் பாய்த் தின்றால் குளவி கொட்டிய விசத்துக்குப் பலன் கொடுக்கும் வலியை யடக்கும், வெங்காயப், பூண்டு வாடையைத்தறிக்கும். வீட்டில் புதைத்தால்; பாம்பு தேள் வெருளும்.

——(*)——

நாற்பத்தாறுவது பசுல்.

நற்சீரகம்.

பலராலு மறியப்பட்டது.(பிரயோஜனங்கள்):—அதை; புறாக்கூட்டில் வைத்தால் புறாக்கள் மிகப்பிரியமாய் மருகுதலாகும். அதன்வாடையால் எறும்பு வெருளும். அதன் தண்ணீரைக் கொண்டு முகத்தைக் கழுவினால் முகந் தெளிவாகும். மிகுதமாய்த் தின்றால் முகத்தில் மஞ்சணிப்பை வருத்தும், (சிறுக்கா) காடியிலரைத்து முகந்தால் சில்லி மூக்குடைதலை நிறுத்தும்.

——:(:):——

நாற்பத்தேழாவது பசுல்.

காளான்.

அதன் விரை நரம்பு அன்றி பூமியில் முளைக்கும் பூண்டு ஹதீது, ளங்கிருக்கின்றது:—இடனைக, "காளான் (மன்னு) அதாவது மூஸா நபி கௌமுகள் காலத்தில்; திவிலிறங்கியது.

பிரயோஜனங்கள்.

அதன் தண்ணீர், கண்ணுக்கு ஷிபாவாகவிருக்கும். அதிலொரு வகை "ஜெய்த்தூன் மரத்துக்குத் தாழாவுற்பத்தியாகும். அது கொல்லக்கூடிய நஞ்சுவகையிலுள்ளதாம். காளானில் சிலதில் வாதம் முதலிய கடினவியாதிகளைப் பயப்படப்படும். அதன் நீர், கண்ணைத் தெளிவாக்கும், சிலது, வயிற்று வலியையும்; நீர், கடுப்பையும் வருத்தும்.

——:(0):——

நாற்பத்தேட்டாவது பசுல்.

புல்லுருவி.

மரச்சிந்தி யென்றும், குடியிருப்பின் கயிறென்றும் பெயர். மாங்கனிலே முளைக்கும். அதினின்று மட்டமான கயிறும் மெதுவாகியநீண்ட இலையுமாய் விழுதுவிட்டுப்பிக் கொண்டிருக்கும்.

பிரயோஜனங்கள்.

நீளித்ததலை வலிக்குப் பலனாகும். அதன் இலை காடியுடன், குலை வியாதிக்குப் பலனாகும் அதன் பால் ரோமத்தைக்களையும்பேனை போக்கும்; (கொல்லும்.)

நாற்பத்தொன்பதாவது பசல்.

லிஸானுல் அஸாபீர்.

இது ஊர்க்குருவி நாவுக்கொப்பான பூண்டு.(பிரயோஜனங்கள்)— காயங்களையாற்றும். நெஞ்சு துடிப்புக்கும், தாதுவிர்த்திக்கும்பலனாகு

ஐம்பதாவது பசல்.

“லுஸ்பு”

இது; பார்ஸியில் “குப்று” என்று பெயருள்ள பூண்டு காய் வெ ளரிக்காய்க் கொப்பாயிருக்குகும்,

பிரயோஜனங்கள்.

(ஸால்ஞ) ஆணம், சாறு முதலியது பொங்காமலிருக்க அதை போடப்படும். அதன் வேர் நரம்பு வியாதிக்கும் முகவாதம், தே வுதல் இவைகட்கும் பலனாகும். பல்வலியுள்ளவன் தொலியைக் க தாலடக்கும். இலை மூலத்துக்கு பலனாகும். தாதை யதிகரிக்கச்செய்யு நஞ்சடங்களுக்கு மவிழ்தமாம். அதன் நீரை எறும்புள்ள காதில் ஊற் லதைக்கொல்லும். பூசினால், பத்துகளைப் போக்கும்.

ஐம்பத்தொன்றாவது பசல்.

உளுந்துப் பயிறு.

பிரபல்யமானவஸ்து. (பிரயோஜனங்கள்).—தாதைக் கெட்டி உறுப்புகளில் கட்டினால் வலியை யடக்கும். பல்லைப்பெலவீனப்படுத்

ஐம்பத்திரண்டாவது பசல்.

நஃநஃ என்ற புதினா.

பல்லோர்களுமறிந்த பரிமாறிவருகின்ற வோர்பூண்டு (பிரயோஜனங்கள்)—அதன் இலையைச் சமைத்துக்குடித்தால்; முதுகுநரம்பு வலி, வாய்வு, வயிற்று வலிகட்குப்பலனாம். வேரைச்சமைத்துக் குடித்தால் முதுகுவலி, நீர்க்கடுப்பு, கெர்ப்பவலிக்கும் பலனாகும் தாது; அதன்; ஆஸ்பத்தைப்பெலப்படுத்தும் விரை; பல்வலிக்கு நல்ல பலனாகும். மாதவிடையைப்பிரிக்கும், குடலைத்தங்கடப்படுத்தும்.

ஐம்பத்திமூன்றாவது பசல்:

ஹிந்தபா.

அலியப்பு றலியலலாஹு அன்ஹு அருட்செய்தார்கள். அதன் ஒவ்வொரு இலையிலும் சுவர்க்கத்தின் தண்ணீரில் நின்றுமொரு வித்திடையுண்டாயிருக்கின்றதென்று.

பிரயோஜனங்கள்.

அதன் இலையைக்கட்டினால், சூலைவலி, கரப்பான் கண்வலி இவைகளைப்போக்கும். அதன்பால்; கண் வெள்ளையைப்போக்கும், அதன்வேரை இலையுடன்சேர்த்துக் கட்டினால், தேள், பாம்பு, குளவி, வெள்ளைபல்லி விசங்கட்கும் நாலாமுறைக்காச்சலுக்கும்பலனாகும்.

ஐன்பத்திநான்காவது பசல்.

வருசு.

இது; சிம்ஸமுக்கொப்பான பூண்டு. விளைவுக்கு வந்ததை சூடு அடித்தால், வருசு " எனும் விதைவெளியாகும் அதன் பூண்டு இருபது வருடம் ஜீவிக்கும்.

பிரயோஜனங்கள்

பூசினால்; முகக்கறுப்பு, புள்ளி, பத்து, இவைகட்கும் குடித்தால் கல்லடைப்புக்கும் பலனாகும்.

ஐம்பத்தைந்தாவது பசுல்.

சுரைச்செடி.

அனுபோகத்தாலெல்ல வருமறிந்த செடி. (பிரயோஜனங்கள்).— அதன் விதையைத் தலைகீழாய்முளைக்கவைத்தால் காய்பெரிதாகக்காய்க்கும். அலிய்யு றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் திருவருட் புரிந்தார்கள். கறி "சமைத்தால் சுரைக்காயை மிகுதமாக்கிக்கொள்ளுங்கள். அது சலித்த" கல்பைத்தேற்றும்அதைவிட்டும்ஈக்கள்வெருளும்,மீன்வயிற்றை விட்டும், "யூனூஸ்நபி" அவர்கள் வெளியானவுடன் அவர்களின்பேரில், ஈக்கள் விசயமாய்நோவிக்காதிருப்பதற்காகஅவர்கட்கருகில்அல்லாஹு சுபுஹான ஹுவத்த ஆலா சுரைச்செடியை முளைப்பித்து வைத்ததாலே தீங்கன்றி சடலம்வலுத்து சுக்குறு செய்தார்கள். வல்லாஹுல் முவப்பிக்கு விஸ்ஸவாப் விருட்சம், பூண்டுகளின், பிரயோஜனகரவிசயம்

முற்றிற்று.

பதிமூன்றும் பாபு

நாணயங்களிற் பொதுவாகிய வெள்ளி, பொன், மஃதனியவைகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

துத்த நாகம்.

இதனின் உற்பத்தியானது; ஈயத்தைப்போலவேயாம் எனினும் இது தாழ்ந்த வகையாகும். இதன் அசலில்; அழுக்குமிகவுண்டு.

பிரயோஜனங்கள்.

இதன் தகட்டை; கண்டமாலை, கழலை, இவைகளிற் கட்டினாலவைகளையுருக்கும். இருபத்தெட்டிடை "திருஹத்தினளவுள்ள தகட்டை வயிற்றிற்கட்டிக்கொண்டவனுக்கு" ஷஹ்வத்து "பாத்தில்" அற்றுப் போம்.

இரண்டாவது பசுல்.

இரும்பு.

சூடுகடப்புள்ள தாகையால் கறுப்பு நிறத்தைப்பெற்றது.

பிரயோஜனங்கள்.

இரும்புக்கதிகபலனுண்டு, அல்லாஹுத்த ஆலா திருவுளமாயினான் நாமிரும்பை இறக்கிவைத்தோம்; அதில்; மிகுத்ததத்துவமும், மனிதர்கட்குப் பலனுமுண்டென்று. அதில் நின்றுங்கழிந்து விழுந்த கிட்டத்தை நித்திரையில் குறட்டையிடுகின்றவன் கட்டிக்கொண்டால் அது நிற்கும். இரும்புத் துண்டைவைத்துக்கொண்டவனுக்குக் "கல்பு" நெஞ்சு பெலனாகும். பயமுந்தாழ்ந்த யோசனையுநீங்கும்மிக்கக்களிப்புண்டாகும் தாழ்ந்த ஆராய்ச்சியுநீங்கும். மனிதர்கள் கண்ணுக்கு இவனைக்கண்டால் இடுக்கமதிகமாகும். அதன் துருவைக், கண்ணினில் தேய்த்தாலதன் கறைகளை தின்றுவிடும். கண்ணிலுள்ள, சொறிவலி, படர்ந்த இரத்தக்கட்டி, மாசு அடங்கலுக்கும்பலனாகும் நிமையின்மந்தத்தைக் கரைத்து இலேசாக்கும், கண்ணிற்றேய்த்தால் கண்ணுக்கும் சூலைக்கும் பலன் கொடுக்கும், துருவைச் சுமந்துகொண்டால் மூலரோகத்துக்குப் பலனாகும். இரும்பாணியைச் சிவக்கமட்டுங் காய்ச்சி, அதைக்கொண்டாயுதங்களைத் தேய்த்தால் துரு பிடியாது. காய்ச்சிய இரும்பில் கழியுங்கல், மூசாய் வென்று பெயருள்ள இரும்பின் பீயைக் காயங்கள் பவுந்திரம், மூலம் இவைகளிலிர்த்தலாலதை யுலரச்செய்யும்.வயிற்றோட்டக் காரனுக்குப் பலனாகும். மூலக்காயத்தையும்பேதலித்த நிறத்தையும் போக்கும்.

மூன்றாவது பசுல்.

எஃகு அல்லது உருக்கு.

இதன் உற்பத்தி, மேற் சுட்டிய சடலங்களுண்டாவதுபோலவேயாம். இது விளைவது சீன் தேசத்தில்.

பிரயோஜனங்கள்.

அதன் நிறம்; சிவப்பளவிற் சாடிய கருநிறமாயிருக்கும். இதனாற் செய்யப்பட்ட அம்பு கடிசாய்த்தைக்கும். இதில் [illegible]

செய்து மீன் வேட்டையாடப்படும். ஒரு வஸ்துவிலது கொளுவிக்கொண்டால் மிக்க கஷ்டத்துடன் கழற்றப்படும். அதில் கண்ணாடிசெய்து இருட்டு வீட்டிலிருந்துக் கொண்டு முகவாத முடையவன் பார்த்தால்; மருந்துகளிலிது மிகப்பலன் கொடுக்கும். இதனால் சிமுட்டாச்செய்து ரோமத்தைப் பிடுங்கி யவ்விடத்திற் பல விடுத்த மெண்ணெய் பூசிவந்தால் திட்டமாய் ரோமம் முளையாது.

நான்காவது பசுல்.

பொன்.

இது, தண்ணீரியத்தான "ஜுஸ்வு" மண்ணியத்தான ஜுஸ்வுடன் கலப்பது மிகவாயிருப்பதால், நெருப்பினால் கரிந்து விடாமலும், மண்ணினால் மடிக்காமலும் காலஞ்செல்வதால்; துருவில்லாமல், இலங்குதல் மஞ்சணிப்பு, மெதுவு, இன்பம், வாசம், நிறை, கனம், இவைகளுடன் அல்லாஹுத் தஆலா சிருட்டித்த நிஃமத்துகளிற் சிறப்பானதும் திட்பமான சூடு முடையது.

பிரயோசனங்கள்.

அதைச் சுமந்துக்கொண்டால்; கல்புபெலமும். வலிப்பு திடுக்கம் விலகுதலுண்டு. அதன் கோலால் நேமமாய் சுறுமாயிட்டு வந்தால், பார்வையைத் திலக்கமாக்கி பழகாக்கும். கெட்டிபடுத்தும். அதன் ஊசியினால் காதில் துவாரமிட்டால், புண்படாமல் விரைவிலாறிவிடும். வாயிலடக்கிக் கொண்டால் வாய் நாற்றம் போம். கண்ணில் தேய்த்தால் பெலமாகும். கல்பு துடிப்பு நெஞ்சு வலி, பெரு மூச்சுகட்குப் பலனாகும்.

ஐந்தாவது பசுல்.

ஈயம்.

இது வெள்ளியில் நின்று மொருவணையானாலும் இதில் மூன்று ஆபத்துகள் நுழைந்துவிட்டன. நாற்றவாடை, இளகல், இரைச்சல் இம்மூன்றும் பூமியில் விளையும் பொழுதே யுண்டாயின. தாயின் வயிற்றிலுள்ள பிள்ளைகளில் நுழைந்து கெடுப்பது போல் கெடுத்து விட்டது.

பிரயோஜனங்கள்.

அதில் சவடிபோல் செய்து; மரத்தின் தூர், வேர், அடி, இதுகளிற் போட்டால் அதன் காய், யாதொன்று முதிராது. மிருதமாய் காய்க்கும். அதினின்று மோர்தகட்டை, முதுகு அல்லது வயிற்றின் பேரில் கட்டிக்கொண்டால் மோக எழுச்சியை யடக்கும். அடுப்புலையிற் போட்டா லதிலுள்ள மாமிசங் கனியாது. ஈயத்துக்கு; உப்பும், எண்ணெயும் பூசியதன் கறுப்பை எடுத்து, அதைக்கொண்டும் ஆயுதங்களைப் பூசினால் அதில் துரு, ஏறாது.

ஆறுவது பசுல்.

வெள்ளி.

அது, உருகு முன் குளிர்ச்சி தொடாவிட்டால் பொன்னாய் விடக்கூடியதும், நேமமாகிய நெருப்பினால் கரிந்து விடுகின்றதும், மண்ணிலும் காலஞ்செல்வதிலும் மக்கி விடுகிறதும் துருவுள்ள ஈயம், இரசம் வாடையால் வெட்டையாகி விடுகிறதும் கெந்தகவாடையால் கரிந்து விடுகிறதும் உருகும்போது கெந்தகத்தை விட்டால் கரிந்து கறுத்துப், பளுங்கிக் கொப்பாக உடையப்படுவதும், அதிற் கொஞ்சம் பொரிகாரம் போட்டால் குறைத்தலுடன் முன்போலாகி விடுகிறதும் நாகமும் கலியும் பொன்னை ஐபாக்கி வைக்கிறது போல இதுவு மதனால் கொஞ்சம் ஐபாகி விடுகிறதுமானது.

பிரயோஜனங்கள்.

அதன் தூளை மருந்துடன் கலந்து குடித்தா லமைந்த ஈரப்பசக்கைத் தறிக்கும். அதை வாயிலடக்கினால் நாற்றம்போம். இன்னும் சிரங்கு, சொறி நீர்க்கடுப்புக்கும் பலனாகும் நெஞ்சு துடிப்புக் குள்ள மருந்திற் சேர்ப்பது நலம் இரசத்துடன் பூசினால் மூலத்துக்குப் பலனாகும். வல்லாஹு அஃலம்.

ஏழாவது பசுல்.

செப்பு.

இது வெள்ளிக்கு முடுகிவிட்டது. இவ்விரண்டுக்கிடையில் வேற்றுமை சிவந்த நிறமும் வரட்சியும், அழுக்குமிகுதமானதாம். இது சிவப்

பானது, சூடும், கெந்தகத்துக்குக் கடப்பாக விருப்பதினலாம். இதன் வரட்சியும், அழுக்கும். இதை வெண்மையாக்கி இளகப்படுத்த சக்தி பெற்றவன். தன் ஹாஜத்தைக் கொண்டு ஜெயம் பெற்றவன்,

பிரயோஜனங்கள்.

புளிப்புள்ள வஸ்துக்களைக் கொண்டுஅதைப் பூசினலதன் களிம்பு வெளியாகும். அதில் ஊசி செய்து அதற்கு இரத்தத்தைப் புகட்டி, அதைக் கொண்டு காதின் சோணையில் துவாரமிட்டால் மாமிசம் சேர்ந்துக்கொள்ளாது. அதில் நின்றுந் தீன் குடிப்புக்குப் பாத்திரங்கள் செய்துக் கொண்டால், அதற்கு மருந்தில்லையே அவ்விதமான வியாதிகள் உற்பத்தியாகும்.

பதிமூன்றும்பாபு முற்றிற்று.

* * *

பதிநான்காம் பாபு.

நவரத்தின வகைகளாகிய கற்களைக் கூறுதல்.

——:(*):——

ஒன்றாவது பசுல்.

இஸ்பீதாஜு.

——:(:):——

இதுகாரியம், வெள்ளீயத்தின் சாம்பல், எரிப்பு, கடுசானல் "சறபாக" ஆகிவிடும்.

பிரயோஜனங்கள்.

தேள்க் கடிவாயில் தேய்க்கப்பலனாகும். இதில் களிம்பு செய்து போட்டால் கெட்டமாமிசத்தைத்தின்று, புதியமாமிசத்தைவளரச்செய்யும். எந்த எண்ணெயுடனவது நெருப்புப்பட்டபுண்களிற் பூசினல்பலன் கொடுத்து, சூடுபட்டதானம் வெண்மையாகாமல்சரீரமுன்னிருந்தபாவனையாகும்.

——(:(0):)——

இரண்டாவது பசுல்.

இக்லிமத்தஹபு.

மற்றவஸ்துடன் கலந்திருக்கின்ற பொன்னை; கள்ளனைவிட்டும்பிரிக்கின்றதற்கு நெருப்பில் வைத்ததினல் கறுப்பு கலந்தசடலம் அல்லது பளிங்குபோல் வெளியாகுவதற்கு "இக்லீமத்தஹபு கல்" என்று சொல்லப்படும்,

பிரயோஜனங்கள்.

கண்வலிக்குப்பலனாகும். வெள்ளையைப்போக்கும் பிசுபிசுப்பை மாற்றும். நீர்வடிதல் துவர்க்கமானதற்கும் கெடுதியானகட்டு, காயம், சிலந்தி, புண்களைப்பழுக்கவைத்து ஆற்றி துப்புரவுசெய்யும்.

மூன்றாவது பசுல்.

இக்லீமல் பில்லத்து

முன்போல் வெள்ளியை அதன்கள்ளனைவிட்டும் நெருப்பில் வைத்துருக்கும்போது வெளியாகுஞ் சடலத்துக்கு "இக்லீமல் பில்லத்து" என்னப்படும்.

பிரயோஜனங்கள்.

எண்ணெயுடன் காயம் கட்டு; சிரங்கு. களிற்பூசினல் பலனாகும். கண்ணில் உதிர்த்தினல் வலிதீரும். களிம்புடன் சேர்த்து புண்களிற் போட்டால் மாமிசத்தை வளர்க்கும்,

நான்காவது பசுல்

பவளத்தின்வேர்

வெள்ளை சிவப்பு கருப்பு, பல நிறமுள்ளது.

பிரயோஜனங்கள்--கண்ணினுதிர்த்தினல்இரத்தக்கசிவைமாற்றும் தேய்த்தால்; கண் பலமாகும் ஈரம் பிழையைமாற்றும் கல்லைப் பலமாக்கும் சிறு நீர்க்கடுப்புக்குப் பலனாகும். வலியுள்ள பிடரியிற் கட்டினல் நல்லபலனைக் கொடுக்கும்.

ஐந்தாவது பசுல்.

கெட்டியான பளிங்கு

——(*)——

வைரத்துக்கொப்பாயிருக்கும். (பிரயோஜனங்கள்.) பாத்திரங்கள் செய்யப்படும் சாயங்காய்ச்சப்படும் பொழுதுக்கு நேரினுயர்த்தி, குரி

யசூடுதாக்கும்போது பஞ்சு அல்லது கறுப்புத் துணியைச் சமூகத்தில் வைத்தாலதில் நெருப்பு பிடிக்கும். புழுதி நிறமுள்ள பளிங்கியைப் பல் வலியுள்ளவனணிய உடனே தீரும்.

ஆருவது பசுல்.

பொரிகாரம்.

உப்பைப்போல் பூமியில் விளையு மதைக்காண்கப்பெலமாயிருக்கும், சிலது ஓடுகிறதண்ணீரில் நின்றும் சிலது கல்களினின்றும் வெண்மையாயும் சிவப்பாயும் புழுதிநிறமாயு மின்னும் பலவண்ணமாயு முற்பத்தியாகும்.

பிரயோஜனங்கள்.

உருக்கக்கூடிய சடலங்களடங்கலையுமது உருக்கும். உருகிறதற்கு இளக்கமாக்கும். வெந்நீர் புதையிலிருந்து அரும்பாரையிற் பூசினால் நீங்கும். சிரங்கு; வெள்ளையில் பூசப்பலனாகும். கட்டு சிலந்திகளைப் பழுக்கச்செய்யும், காதுமந்தத்துக்குப் பலன் செய்யும். நீளித்த கண்வெள்ளைக்குப் பலனும் முறைகாச்சல் வரும் ஒரு சாமத்துக்குமுன் பூசினால் பலன்தரும் அதை வைத்துக்கட்டினால் இரத்தத்தை சரீரத்தின் வழியா யிழுத்து நிறத்தை யழகாக்கும், "தின்கார்" என்றது இதற்கொப்பாகிய கல்.

ஏழாவது பசுல்.

செங்கால் நாரைக்கல்.

வெளவாக்கல், கோழிக்கல், கழுகுக்கல், நாய்க்கல், ஒட்டகைக்கல்; மனிதனின்கல், இரும்பின்கல் இதுகளை அதனதன்பாடத்திற்பார்க்கவும்.

உருக்குதல்.

இது காளவாய்களிற் காணப்படும் முருகிய கல்.

பிரயோஜனங்கள்.

உருக்குக்கல்லை சாயம் காய்ச்சுகிறதுகளிற் புளங்கினால் கறுப்பாக்கி வைக்கும். சாயக்காரர்களின் சிறுக்காவிலதை முக்கிவைத்து சாயம்பூட்டு

வார்கள். அக்கல்லை மிருகங்களின் விரியடிப்புண்ணில் உதிர்த்தினால் பலன்கொடுக்கும்

எட்டாவது பசுல்.

கடனுரை.

பலவகையுண்டு, (பிரயோஜனங்கள்:) ரோமத்தைக்களையும்,முளைப்பிக்கவுஞ்செய்யும் படர்தாமரை பத்து, புள்ளி, மறு, சூலை; கண்டமாலை, ஈரல் குலை வலி, சத்தி, நீர்க்கடுப்பு, இவைகட்குப்பலன் கொடுக்கும், பிரசவமாவாளின் தொடையிற் கட்ட இலேசாகும்.

ஒன்பதாவது பசுல்.

பளிங்கி.

பிரசங்கமானது. (பிரயோஜனங்கள்).—சப்பங்கி யெண்ணெயுடன் பூசினால் பல்லை வெண்மையாக்கும் முடியை முளைப்பிக்கும், கண்ணை, துலக்கமாக்கி வெள்ளையைப்போக்கும்.

பத்தாவது பசுல்.

பொன்னரி தாரம்.

எவர்கட்குமறைப்பதன்று, (பிரயோஜனங்கள்.) மிருத நிறமூன்றும்,சிவப்பு மஞ்சள் புழுதிநிறம், கலக்கம்பலவகை சிவப்பும், மஞ்சளும் பொன்னிறமாயிருக்கும் இவ்விரண்டுங் "கலசுடன்" சேர்ந்துவிட்டால் ரோமத்தை வழிக்கும், இன்னுங்கொல்லக்கூடிய நஞ்சாம். அதைக் கரித்து பல் விளக்கினால் பலன்கொடுக்கும். பசுமையைப் போக்கும், காயம், சொறி, சிரங்கு, நஞ்சு கொண்டிருக்கும் புண்களிலுஞ் செலுத்தினால் பலனாகும், எண்ணெயுடன் பேனைக்கொல்லும். பன்னீரெண்ணெயுடன் மூலத்தைக்களையும், சடலத்திற் பூசினால் ரோமத்தை நீக்கும். புள்ளி பத்து, உண்டாகும். அதற்குப்பின் "அரஜ்ஜ–" அஸ்பரைப்பூசினால் அதன்வேகத்தையமர்த்தும் மஞ்சணிற அரிதாரத்தை ஈக்களடைந்திருக்கின்ற மதுரமுள்ள பாத்திரத்தில் வைத்தாலடங்கலுஞ் சாவும்.

அதன் வாடை ஈயைக்கொல்லும், அதை உப்புடன் கள்ளில்போட்டாலதைக்கெடுக்கும்.

பதினொன்றாவது பசல்.

ஜன்ஜார்கல்லு-அதாவதுகளிப்பு.

இது சிறுக்காவினால் செம்பில்நின்றும் வெளியாகும் (பிரயோஜனங்கள்):—அதைக்குடித்தால் நஞ்சுடைய தத்துவமுண்டு. மூலத்தைக் சுத்தமாக்கும், காயங்களிற் செத்துப்போன இறைச்சியைத் தின்றுவிடும்.

பனிரெண்டாவது பசல்.

லிங்கம்.

இரசத்தைப்பாத்திரத்தி லூற்றி வாய் மூடிக்கெட்டியாய் சீலமண் செய்து நெருப்பிலெரித்தால் அதன் வெள்ளை சிவப்பாய்த்திரும்பி லிங்கமாகும்.

பிரயோஜனங்கள்

மேற்கூறிய சீலமண் செய்த பாத்திரம் எரிக்கையில் வெடித்துவிட்டாலும் அதன் புகை சரீரத்திற் பட்டாலும், கொடிய வியாதியுண்டாகும். சிலவேளை மரண ஹேதுவுமுண்டாகும். லிங்கம்; காயங்களையாற்றும் புண்களிற் சதைவளரச்செய்யும். நெருப்புசுட்டதை தவிழ்க்கும் பற்களைத்தின்றுவிடும் இது கொல்லக்கூடிய நஞ்சில் நின்றுமுள்ளது.

பதிமூன்றாவது பசல்.

சீனாக்காரம்.

இதில் மிகுத்தவகையுண்டும். அதில் பிரபல்யமானது; எமனிலுள்ளது. வெண்மையாயிருக்கும். மஞ்சணிறமுமுண்டு. இன்பம் புளிப்பாயிருக்கும். எமன்மலையினின்றுந்தண்ணீர்; பூமியிலிறங்கியவுடன் இவ்விதமாயுண்டுபடுகிறது சீனாக்காரம்.

பிரயோஜனங்கள்.

இரத்தக்கசிவுக்குப்பலனாகும். கள்ளுமண்டியுடனரைத்துப்பூசினால் அரிச்சுக்கொண்டு வருமான புண்ணையுலர்த்தும் அதைக்காய்ச்சி வாய்கொப்பளிக்க. பல்வலிக்குப் பலனாகும், ஈயப்பாத்திரத்திலுள்ளது, குன்மத்துக்குப் பலனாகும். சாயங்காய்ச்சுகிறவர்கள் புடவையைச்சீனாக்காரத்திலாக்கிப்பின்பு சாயத்தில் துவைப்பார்கள் அந்த சாயங்கெட்டியாய்த் தரிபட்டிருக்கும்.

பதினான்காவது பசல்.

சுப்பி.

அறியப்பட்ட வஸ்து. (பிரயோஜனம்). நல்லதண்ணீரிலும் உப்புதண்ணீரிலுமுற்பத்தியாகும் இடித்துகட்டினால் மூளிவலி சூலைவலியைப்போக்கும் எலும்பு சலாகையை இழுக்கும். சிறுக்காவிலரைத்தால் சில்லிமூக்கைத்தறிக்கும். மாமிசம்வெறி நாய்கடிக்குப் பலனாகும். கரித்து விளக்கினால் பல்வெண்மையாகும். கண்ணில் தேய்த்தாலதன் காயங்கட்குப்பலனாகும். நிமையில் வளர்ந்த ரோமத்தைப் பிடுங்கியபின் அவ்விடத்திற்பூசினால் மறுளிடுத்தமுளையாது. நெருப்புபட்டதுக்குப் பலனாகும். சீயுள்ள காயங்களையுலர்த்தும் தெளிவாகிய துண்டை சிறுமிகட்குக்கட்டினால் வலியன்றி பல்முளைக்கும். (சிறுமி) சிசுக்கள்.

பதினைந்தாவது பசல்.

மரகதம்.

மிக்கவகையுண்டு அதிலழகானது சிவப்பு அதிகமாயும் மஞ்சள் தெளிந்திருப்பதுதான்.

பிரயோஜனங்கள்.

அணிந்தவர்கட்கு சிறப்பு, சென்றவிடங்களிற் கனதிப்பாடுண்டும். தூளைவிளக்கினால் பல்வெள்ளையாகும் அதில் வெண்மையானது வாய்பல் நாற்றத்தைவிலக்கி அதன் சூழாலோடு மிரத்தத்தையுந் தறிக்கும். கரித்தது கண்ணை பெலமாக்கி நெஞ்சுத்துடிப்புக்குப் பலன்கொடுக்கும், நபிக

ணயகத் திருவுளம் பற்றினர்கள் "அக்கீக்கு" மோதிரத்தை யணிந்தவன் சந்தோஷம், பறக்கத்து, நீங்காமலிருப்பானென்று.

——·(.):——

பதினாறாவது பசுல்

பாஷாண வகைகள்.

——:*:——

அதன் தத்துவம்; அதன் உயிரின் பேரிற்பேணி நஞ்சின் துன்பத்தை வருத்தும். கல், குளிரும் சூடுமாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்.

சூடானது இரத்தத்தை யுருக்கி உயிருக்காஸ்பதமாகிய "பசக்கு," பசையை முற்றுப்கெடுத்துவிடும். குங்குமப்பூவு, தண்ணீரில் போட்டால் படர்ந்தூர்வதுபோல உடலமுழுவதினு மூர்ந்து நடக்கும். குளிர்ச்சியானது கறந்தபாலில் விழுந்த கோரோசனை அதிசீக்கிரத்திலக்கறையுறையச்செய்வது போல, சரீரத்தின் இரத்தத்தையும் நட்பமான, பசையையுமுறைய வைத்துவிடும். பாஷாணவகைகள் சரீரத்திற் செய்யுமாகிய கிரிகையாகிறது; புளிப்பானவஸ்துகள் குங்கும நிறத்தின்பேரில் விசபமாகியுடனே அந்நிறத்தைக்கெடுத்து விடுவதுபோல, வேலை செய்யும்படியாகிய அதிற் காணப்பட்டது கெட்டியான வேலையாகிவிடும். மிகுத்த மஞ்சணிறமாயும் புழுதி புரண்ட கலங்கல் நிறமாயும் பச்சையுடன் கலந்ததாயும் வெள்ளையுடன் கலந்ததாயுமிருககும் இதில் கெட்டியானது தெளிவாகிய மஞ்சணிறமும் புழுதி புரண்ட நிறமுமாயிருக்கும், அது விளையுந்தானம் சீன், ஹிந்து, குறசானியாகவிருக்கும். ஒருகிறுத்திடை உறகி அல்லது தேனுடனுட்கொண்டவன் வேர்த்து தள்ளி வடியுகிறதைக்கொண்டு நஞ்சை விட்டுங் கலாசுபெறுவான். அதை; தேள் விசமுள்ள புழுப்பூச்சி சகலவிசக்கடிவாயிலும் வைத்தால் கெட்டியான பலன் கொடுக்கும் (தி. ஆ.)அதைப் பொடித்துக் கொட்டுக்கடிவாயி லதிர்த்தினல் சுத்தமாகும். கொட்டுவாயிலில் கடித்தபின்தானினுலும் பலனுகும்.

——:*:——

பதினேழாவது பசுல்.

"பேரோஸ்கல்.

——:():——

பசுமையாயும் சிவப்பு, கலங்கல் நிறங்கலக்கப்பட்டதாயும், குறுஸான் தேயத்தில் விளைகிறதாயும், காற்றின் தெளிவால் தெளிவாகிறதாயும், கலக்கத்தினுல் கலங்குகிறதாயுமுள்ள கல்.

பிரயோஜனங்கள்.

சுறுமாவுடன் கண்ணிலிட்டால் பலனுகும். ஜஃபரிபுனு முகம்மதுறலியல்லாஹு அன்ஹு அருட்செய்தார்கள். பேரோஸ்கல்லைக்கொண்டு கையில் மோதிரமணிந்தவன், கைமிடிமை யாகாதென்று. ஆனல் திடுக்கம் அமளி, குறைந்து போவதாலது அரசர்களுக்குரிய தன்று.

——:(o):——

பதினெட்டாவது பசுல்.

கலிய்யு எனுங் கல்.

——:():——

உசுனானை சாம்பலாகும் வரையிற் கரித்து அதில் செய்யப்படும் கல். இது உப்பைப் பார்க்கினுங் கெட்டியாயும், தின்னுவதாயும் வெளியாகுவதாயு முள்ள கல்.

பிரயோஜனங்கள்.

வெள்ளைப் பூண்டுடனிடித்து வெண்மையான மண்ணெண்ணெயிற் குழைத்து, பத்து, படர்தாமரை, சிரங்கு, சொறி, சதை வளர்த்திகளிற் பூசப் பலனுகும். தேள் கடிவாயில் பூச வுடனே வலியடங்கும்.

பத்தொன்பதாவது பசுல்.

"கஹ்றாபா"

——:():——

வெண்மையிற் சாடிய மஞ்சள், சிலவேளை சிவப்பளவிற் சாடியிருக்கும். கஹ்றாபா' என்றதற்கு அருத்தம். துரும்பைஇழுப்பது. எனவாம் எனுனல்; துரும்பு, செத்தை. இதுகளைத் தன்னளவிலிழுக்கும். அது றூம்தேசத்து ஜாதிக்காய் மாதிரியாக விருக்கும்.

பிரயோஜனங்கள்.

நெஞ்சு துடிப்பு, வீக்கம், சுரப்பு, மறப்புள்ளவன் கட்டிக்கொண்டால் பலனுகும். சத்தியைப் போக்கும். இரத்த காசத்தை விலக்கும். மஞ்சள் காமாலையுள்ளவன் கட்டிக்கொண்டால் பலன் கொடுத்து மஞ்

சனிப்பை மாற்றும். இது சந்த ரூசுக்கு ஒப்பாயிருந்தாலும் நிறத்தால் இரம்பத்தெளிவு. வெண்மையில் கூடியது.

இருபதாவது பசுல்.

வைரம்.

இது தெளிவாகிய நிறம். கவசாநிரு, நிறத்துக்கு முடுகியிருக்கும். எந்த வொருகல்லுடன் சேர்ந்தாலு மிதுஅதை முறித்து ஒடித்துவிடும் நாகத்தைத் தவிர. நாகத்தைக் கொண்டு வைரத்தை யடித்தால் வைர மொடிந்துபோம்அதன் துண்டடங்களும் முற்கோணங்களாகவிருக்கும் துண்டு பெரிதாயிருக்கிறதுக் கேதுவா யதனதன் குணமும் பெலமா யிருக்கும். தொழிலாளிகள் அந்தத் துண்டை துறப்பணத்தி னருகில் வைத்து அதைக் கொண்டு கல்லுகளைத் துவாரமிடுவார்கள். அது விளை யுந் தானமாவது, ஹிந்தில், பார தூரமான தாட்பமும் பாம்புகளுள்ள தும் யாருஞ் செல்லத் தகாத வோடையிலேயாயிருக்கும். பாம்பு இல் லாத காலத்தில் மாமிசத்துண்டுகளை அவ்வோடையி லெறிந்து அம்மாமி சங்களைத் தூக்கிக்கொண்டு பறக்கின்ற பறவைகளைப் பின் றொடர்ந்து போகவு மதினின்று, முதிருங் கற்களைப் பொறுக்கி எடுக்கும்படிக்கு "இஸ்கந்தர்" ஏவினார்கள்.

பிரயோஜனங்கள்.

அதைக் கொல்லன்பட்டடையின்பேரில் வைத்துச் சம்மட்டியா லடிக்கப்பட்டால் "சம்துதாள்" அல்லது சம்மட்டியிற் புகுந்துக்கொள்ளும் நாகங் கொண்டடிக்கப்பட்டால் அப்பொழுதே முறிந்துவிடும். பள்ளையாட்டிரத்தத்திற் போட்டு நெருப்புக்கு முடுகுதலாக்கிவைத்தால் உருகிவிடும். வயிற்று வலிக்குங் குடல் கெடுதிக்கும் பலனும். வாயில் வைத்தால் பல்லை முறிக்கும். முக்கியமாய்க் கொல்லக்கூடிய நஞ்சிலுள்ளதாம்.

இருபத்தோன்றாவது பசுல்.

காந்தக்கல்.

பிரபல்ய வஸ்துக்களிலொன்றாகும்.

பிரயோஜனங்கள்.

அதில் இரும்பு, வேலை செய்யப்படாத்ததும், ஹிந்திதேயத்திலுள்ளதுமான கல். அது இருக்குமிடத்தில் "சிஹறு" செய்வது அழிந்து போம். ஷெய்தானதை விட்டும். வெருட்சியடைவான். "இஸ்கந்தர்" அவர்கள் ஜின்களின் சிஹறைத் தட்டுவதற்காகத் தன் படை கூட்டங் களில் காந்தத்தைச் செய்கிறவர்களாகிவிட்டார்கள்.

இருபத்திரண்டாவது பசுல்.

பவளம்.

இது ஒரு அழகிய வஸ்தென்று பலராலு மொப்புக்கொள்ளப் பட்டது.

கடலில்; மரத்தின் கோலத்திலுள்ள வடிவாயும், மேற்றோலிபுழுதி நிறமாக விருந்தாலும், உரித்தால் சிவப்பாயும், கடலாழத்திலிருந்து முளைக்கப்படுகிறதாயு முள்ளது.

பிரயோஜனங்கள்.

"பஸ்து" என்ற அதன் வேரில் பயான் செய்யப்பட்டிருப்பதா லிங்கு விரித்தெழுத மாட்டோம்.

இருபத்திமுன்றாவது பசுல்.

மிருதார சிங்கி.

இது, ஈயத்திலிருந்தும் ஆக்கப்பட்டது.

பிரயோஜனங்கள்.

காயங்கட் கதிகபலனுக்கும் அதினின்றுங் "தளிம்பு" செய்துபோட்டால் காயங்களை யுலர்த்தி மாமிசத்தை வளர்த்து கெட்டவாசத்தைப் போக்கும். சரீரம், கமுக்கட்டொடையை மணமாக்கி புள்ளி, பத்து, கறுப்பு, மச்சம், கெட்டஇரத்தம் அம்மையடையாள மிவைகளைப்போக்கும். மேலுமது கொல்லக்கூடிய நஞ்சின்வகையிற் சேர்ந்ததாம், சிறு நீரைத்தடுக்கும். கமுககட்டின் கழிவுகளைக் கல்பளவில் மீளச்செய்யும், எண்ணெயைப் பூசினால் அதன் வேகத்தைவிட்டும் அச்சந்தீரப்படும்,

* * *

இருபத்திநான்காவது பசல்

மர்க்கஷீஷாக்கல்.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, இவை கனிறமன்றியும் 'ரூச நாய்' அல்லது, ஒளிவுக்கல் என்று பெயருள்ளதுமாகிய பலவகைக்கல் கெந்தகங்கலந்திருக்கும். கெந்தகத்தைக்கரித்து மாவைப்போலாக்கும் வித்தையில் தேறினால் அம்மாவு மிகுத்தகைத்தொழில் கட்கு பயோகப்படும்.

பிபயோஜனங்கள்.

அதிற் கொஞ்சம்போல், உருகிவருகிற பொன்னில்போட்டாலதைக் கலப்பறுதலாக்கும், "சுத்தமாக்கும்," அதின் முகல்ல சானபொடியைச் செம்பு அல்லது ஈயத்திற் கலந்தால் வெள்ளிக்குச் சமானமான வெண்மையளவிற் கொடுவரும் உருகிஇருக்கும் செம்பிற் கலந்தால் அதைவருட்டி வெள்ளியைப்போலாக்கும் வண்ணம் வெண்மைபடுக்கும், கண்ணில் தேய்த்தால் சூடாகிய வியாதிபடங்களுக்கும் பலன் செய்யும், பத்து, புள்ளி, வெள்ளை, படர்தாமரை இவைகளிற் பூசினால் பலன்தரும் ரோமத்தை இணக்கமாக்கிவைக்கும்; பார்வை பைத்துலக்கிப் பெலமாக்கும், சிறுமி கட்குக்கட்டினால் திடுக்கமறும் சங்கையு நலவுமுண்டாம்.

இருபத்தைந்தாவது பசல்.

சாணைக்கல்,

எண்ணெயைத்தடவி, கத்தியைக் கூர்மையாக்குகின்ற பச்சை நிறமுள்ள கல்.

பிரயோஜனங்கள்.

அதில்; எண்ணெயிடுமுன் உரைத்து, கண்ணில் தேய்த்தால் வெள்ளையைப்போக்கும், உரைத்ததை ஸ்தனத்திலும் விதைக்கொட்டையிலும் பூசினாலவைகளைப் பருக்கவிடாது.

இருபத்தாறுவது பசல்.

ஊசிக்காந்தம்.

ஹிந்துதேயத்து, கடற்கரையருகில் விளையப்படுவதும் இரும்பை இழுக்குஞ் சக்தியையுடையதும், கடலில் அக்காந்த மிருக்கின்ற சமீபத்தில் ஓடி வருகின்ற கப்பல்களில் தறைந்திருக்கின்ற ஆணிகளைப் பறவைபோற் பறந்துபோய்பற்றி இழுத்துத் தன்னிருப்பிடமாகிய மலையிற் சேர்த்துக்கொள்கிற சக்தியுடையதும், அதற்கு வெங்காயம் வெள்வெங்காய, வாடைபட்டால் இரும்பை இழுக்குஞ் சக்திகெடுவதும், அதை (சிறுக்கா) காடி அல்லது பள்ளையாட்டு இரத்தத்தில், மூழ்கவிட்டெடுப்பதாலதன் சக்திமாறி யுண்டாகுவதும், "ஆஷிக்கானவன்; மஃஷூக்களவிற் செல்லுவதுபோல் இரும்பளவிற் சென்று அதை வழிபடச்செய்யுமாகிய குணமுடையது காந்தக்கல்.

பிரயோஜனங்கள்.

இரும்பு "எனும் அரைபொடியை யுட்கொண்டவன் காந்தத்தைப் பாலுடனரைத்துக் குடித்தால், ஒரு சிறிய பொடியையும் விடாமற்பற்றி இழுத்துச் சேர்த்து வெளிப்படுத்தும். நஞ்சூட்டிய இரும்பாயுதத்தினால் காயப்பட்டவன் குடித்தால் நஞ்சின் வேகத்தைமாற்றும், அக்காயத்தில் காந்தக்கல் தூளையுதிர்த்தினால் சுஸ்தப்படுத்தும், முளிவலியுள்ளவன் கட்டிக்கொண்டால் பலனாகும் பிரசவவாதனையுள்ளவள் காந்தத்தைப் பிடித்துக்கொண்டாலுடனே பிரசவமாவாள், கை, காலில் சூலைவலியுள்ளவனுக்கும் பலனாகும், ஜனிகொண்டவன் கையில் வைத்தால் பலன் கொடுக்கும் பிரசவதங்கடமடைபவளின் இடதுமார்பில் கட்டினால் விரைவில் சுகமடைவாள், கழுத்திற் கட்டிக்கொண்டால், மறதியற்று, புத்தியதிகமுண்டாகும்.

இருபத்தேழாவது பசல்:

உப்புக்கல்.

இது; பளிங்கியைப்போலும், கல்லுப்பு, பனியைப்போலு முற்பத்தியாகி, பின்பு, மற்றைய கற்களைப்போற் கெட்டியாகிவருவதும், உப்புபூமியில், கதிர்போல விளைவதும், இது பலவகைகளுண்டு.

பிரயோசனங்கள்.

அல்லாஹுத்தஆலா துனியாவை இணக்கமாக்குவதற்காக இதையாஸ்பதமாக்கி வைத்தான். ஆகையாலிதைக் கலக்கப்பட்ட வஸ்துகடங்களு மிணக்கமாகும் பொன்னுட்பட, உப்பு; பொன்னின் நிறத்தைக்

கவர்ந்து மஞ்சனிப்பை பதிகப்படுத்தும் நபிசல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யா அலிய்யே? யாதொருவஸ்துவை யுட்கொள்ளுமுன் உப்பைக்கொண்டு துவர்க்கஞ்செய்து, அதைக்கொண்டே முடியச்செய்யும். அதில் எழுபது வியாதிகட்குச் சுஸ்தமென்னு மவிழ்தமுண்டென்று. மேலு மதன் "காசியத்து" பிரயோஜனமாவது; கெட்டுபோகுஞ் சத்துகளைத்தடுத்து அதைக்கெடாமற்காக்கும் கரிக்கப்பட்டது; பல்லின் குழிகளை வெடிப்பாக்கும் பூசினால் மங்கலான நிறத்தைப்போக்கும் தேனுடன் பரிமாறி வந்தால் நிறத்தை யழகாக்கும், அதிகமாய் வளருந் தசையைத்தின்று விடும். புள்ளி பந்து, சிரங்கு சொறி, இவைகட்குப் பலனுண்டாம் பருத்திக்கொட்டையுடன் சேர்த்திடித்துக் கட்டினால் தேள்கடிக்குப் பலனாகும். தேன், காடியுடன், சேர்த்துக் கட்டினால் நாற்பது நாள் சென்ற வீச்சங்கட்கும், குளவி, விசத்துக்கும பலனாகும். சீதளத்தாலுள்ள, சிரங்கு, சொறி, இவைகளுக்கனு கூலமாம் ஜூலக்கும் பலனாகும், "உந்துராணி உப்பாகிறது பளிங்குக் கொப்பாயிருக்குமேயது வாயிருக்கும் அது புத்தியைக் கெட்டிப்படுத்தி சேர்ந்து எகிரைக் கெட்டிபடுத்தும்.

——:(:):——

இருபத்தெட்டாவது பசுல்.

அருமணியபொரிகாரம்,

உலகவாசிகளால் மிக்க அறியப்பட்டது

பிரயோஜனங்கள்.

சரீரம், உடைகள் புடவை. இதுகளிலுள்ள அழுக்கைப்போக்கும் முகத்தை அழகாக்கும். ஈரக்கசிவு மிகைப்பாயுள்ளகெற்பகுவளறையை யுலர்த்திப் பெலப்படுத்தும். கடினமான குன்மவலிக்குப் பலன்தரும். சேர்கின்ற வெள்ளையைக் களையும். குழைக்கும், மாவுடன் சேர்த்தால். ரொட்டிவாசமாயும் வெண்மையாயும் வாட்சியாயு மிருக்கும். மாமிசத்துடன் சேர்த்து வேகவைத்தா லதை மெதுவாக்கும் கனியச்செய்யும்.

——:():——

இருபத்தொன்பதாவது பசுல்.

சுண்ணாம்பு.

——(:-:)——

கற்களினின்றுங் கரிக்கப்பட்டதாயிருக்கும்.

பிரயோஜனங்கள்.

இரத்தக்கசிவுண்டாகு மிடத்தில் தைத்தாலதை நிறுத்தும். நெருப்புச்சுட்டதுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். ரோமத்தைக்களைகிறதானால் வெந்நீர் புகையிலிருந்து பூசினால், தோலிக்குக் கீழுள்ள அதன் முளைகளுடன் களையும் ஆனால் அதற்குப் பின், பன்பஃஜா எண்ணெயையும், பன்னீரையும் பூசவேண்டும். ரோமத்தைக் களையப் பண்ணற்கு, ஜின் படித்துக் கொடுத்ததாயிருக்கும். எமன் தேசத்தாசி; பல்கீஸ் அவர்களை சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாமவர்கள் விவாகஞ்செய்தபின்னர், கெண்டைக் காலில் அடர்த்தியான (முடி) ரோமமிருப்பதைக்கண்டு, நபியவர்கள். ஜின் இடத்தில் அம்முடியைப் போக்குதற்குத் தந்திரமுண்டாவென்று கேட்டதற்கு, சுண்ணாம்பைப் பரிமாறல் வேண்டுமென்பதையறிந்து அவ்வாறு செய்யும்படி நாயகியை வினவினார்கள். இவ்விடத்திலதை பரப்பிறலக்கு சொல்கள் முடியாது.

——()——

முப்பதாவது பசுல்.

ஹாதிக்கல்.

——):*:(——

இது பற்குத்தி நிறத்திலுள்ளது.(பிரயோஜனங்கள்):—கொழுவிக்கொண்டவனை நாய் குலையாது. அதைக் கலசாக்கி. அதில்; "ஜாதை" போட்டால் இரசத்தைக் கட்டும். நெருப்புக்குவெருளாது.

——()——

முப்பத்தொன்றாவது பசுல்.

நவ்பாக்கல்.

இது சிறப்பாகிய வோர் மெல்லிய "கல்" "நவ்பா" என்பதின் அர்த்தம்:—நஞ்சுக்குப் பலனுள்ள தென்பதாம்

பிரயோஜனங்கள்.

கல்பு, ஈரல், குலை, இவைகளையுருகச் செய்யும் நரம்பிற் சென்ற இரத்தத்தைக் கெடுத்து "றாஹு" உயிர்நடமாடும்வழியை யடைக்கும். போதையைக் கொடுக்கும் நஞ்சுசரீரத்திற் செல்லுவதற்குமுன், அதைக்

கொண்டு விரைவாய் மருந்து செய்தால் நல்ல பலனை யளிக்கும் தாமதித்தால், நஷ்டத்தை வருத்தும். மருந்தை மூன்றாவது பாகத்தில் காண்க.

—:(o):—

முப்பத்திரண்டாவது பசுல்.

நவ்ஷாதிர்கல், அதாவது பளிக்கட்டி.

—(:*:)—

இதன் விளைவு; உப்பைப்போலவே யிருக்கும். ஆனால் இதில் மண்ணின் குணத்தைப் பார்க்கினும். நெருப்பின் குணமதிகம். ஒருவேளை, சுடப்பட்ட வெள்ளைக் கல்லில் நின்றும் ஆக்கப்படுகிறதென்றும்; தண்ணீரின் ஜௌஸ்வும் நுட்பமான புகையின் ஜௌஸ்வுஞ்சேர்ந்துண்டாகின்றதென்றுஞ் சொல்லப்படுகிறது, அதிகசூடும் மிகுந்தவகைகளுமுள்ளது.

பிரயோஜனங்கள்.

கறுப்பு, வெள்ளை, பழுகி புரண்டவடிவு, தெளிந்த வெள்ளை இவ்வடிவுகளிற் பளிங்கிக்கொப்பாயிருக்கும்கண்ணோய்க்கும்,சீதளத்தொண்டைநோய்க்கும் மற்றைமருந்துகளுடன்சேர்பித்துக் காய்ச்சித்தொண்டையிலூற்றினால் பலன் கொடுக்கும். “நவ்ஷாதிர் தண்ணீரை வீட்டில் தெளித்தால் புழுப்பூச்சிகள் வெருளும்.

—:(··):—

முப்பத்திமூன்றாவது பசுல்.

மாணிக்கம்.

தெளிவானதும் கெட்டியானதும் வாட்சியானதுமாகியகல்.சிவப்பு, மஞ்சள், பச்சை, கலங்கல் ஆகிய பலவிகற்பமான நிறங்களை யுடையது. இவை யடங்கலுக்கும் அசல் தெளிந்த தண்ணீர் இது விளையுந் தானத்தில் கெட்டியான கல்லுக்கிடையில் மிகுந்த காலந் தரிபட்டிருந்து. திண்ணமுண்டாகி. பின் தெளிவாகிக் கனதியாகி, அதினின்றும் வருகிறது. அங்கு தரிபாடாயிருப்பதினால் விளையுந்தானத்தின் சூடு அதை இளகவைத்துக் கெட்டியாகி, கல்லாய்ச் சமையல் கொண்டது.

பிரயோஜனங்க.

அதில் எண்ணெய்ச் சத்துக்குறைவாயிருப்பதாலே நெருப்பிலிளகலாகாது சரப்பசக்ததிகமாயிருப்பதால்நொறுங்கமாட்டாது. அழகாகிய

நிறமும் கெட்டியாயிருப்பதால் ஆயுதங்களதிற் செல்லாது. உண்டாகுவது சுருக்கமானதால் மிகச்சிறப்புடையது. அதில்;சிவப்புநிறமுடையது மிக்க நலம். இதுகளிலொன்றை மோதிரத்தில் கட்டியணிந்துக் கொண்டவனை பேதி, பிளேக் ஆகிய கொடிய வியாதிகள் அவனிருக்கும் ஊருடையவர்களை வந்து கொன்றாலும் இவன் சரீரத்திற்றுவாது. மேலுங் கீர்த்திவானாயும் நிருபாகக் காரியங்கள் இலேசாகியுஞ் சுகித்திருப்பான். “வல்லாஹுல் முவப்பிக்கு லிஸ்ஸவாப்.

பதினான்காம் பாபு முற்றிற்று.

—(*)—

பதினைந்தாம் பாபு.

பூமியிலுண்டாகின்ற எண்ணெய், ரஸம், கீல், வகைகளைக்கூறல்.

—:():—

பூமியில் அமைந்திருக்கின்ற சரப்பசக்கு; மாரிகாலத்திற் சூடாய், கோடைகாலத்திற் குளிராய், அவை ஒன்றுக்கொன்று மாற்றமாய்;சேர்மானமின்றி ஒருதலத்திற் றரிபட்டிருந்து, மாரிகாலத்தின் வெளிகுளிரினால் அசலாகச்சூடுள்ள பூமியளவில் எழும்புகின்ற சூட்டை; முன்கூறியபசக்கு, இருகித்து அதில் காற்றின்வாடை என்னுஞ்சத்து; தாவித்திண்ணமாய், சிலசமையம்,கெந்தகம்,அல்லது,இரசம், அல்லதுகீல்;அல்லது மண்ணெண்ணெய், இன்னுமிவைபோலுற்றவைகளுண்டாகின்றன,

—:(··):—

ஒன்றாவது பசுல்.

இரசம்.

கெந்தகச்சத்தாகிய நுட்ப பூமிய்யா ஜௌஸ்வுடன் தண்ணீரிய்யத்தான ஜௌஸ்வும், ஒன்றைவிட்டொன்று பிரியாமல்,வலுவாய்ச் சேர்ந்து கலந்துற்பத்தியாகிறது. அதன்பேரிலுள்ள மண்ணின் அழுக்கென்னுந்திரை; அத்துடன் மற்றொன்றுசேர்ந்து அத்திரை திறந்து, அத்துண்டு இரண்டுமொன்றாகி மேற்படி திரை இரண்டையுஞ் சூழ்ந்துமூடிக்கொள்கிறது அதன் வெண்மையாகிய மண்ணின் தெளிவினாலாய், கெந்தக சத்துள்ள மண் இரசம் வெள்ளியாக இருந்தாலும் விளையுந்தானத்தில்.

அதில் தங்கடம் புகுந்துவிட்டது, நாம் சொல்லிவந்தது போலே ஈயத்தின் ஆபத்துதான் இரசத்துக்குமாயினது.

பிரயோஜனங்கள்.

சரீரத்திற் பூசிக்கொண்டால், பேன், ஈ, உன்னி இதுகள்சாவும், இரசமண்ணை; வஜீபுனமாதிபவைகளிற் சேர்த்துவைத்துஎலிதின்றால்மரணமாம். இரசத்தில்நெருப்புத் தொட்டிருக்கு நேரத்திலதற்குமுடுகிட்டவனுக்கு வாடைதாவி அப்புகையால் நடுக்கம் முகவாதம், பக்கவாதம், செவிடு, நிறம் பேதலித்தல், உறுப்புகள் நடுக்கும். வாய் நாற்றம் மூளைவாட்சி ஆகிய கொடிய வியாதிகளுண்டாகும். அப்புகையால், பாம்பு முதலிய சகல புழுப்பூச்சிகளும் வெருளும், அப்புகையிற் றிரிப்பட்டவனுடனே மரணமடைவான். ஒருட்டிசுகின்ற அடுப்பிற் போட்டாலடுங்கலுமடுப்பிலுதிர்ந்துபோம். வழிப்பிரயாணிகள் செத்தரசத்தை பஞ்சுமூடியிற் புரட்டியணிந்துக்கொள்ளுவார்கள் அவர்களுடுத்திய பிடவையிலறவே பேன்பற்றாது.

இரண்டாவது பசுல்.

கெந்தகம்.

மண், காற்று, தண்ணீர், ஜூல்வுக்கள், பலமான சூட்டினது காரணத்தினால் ஒன்றோடொன்று பலமாய்க்கலந்து எண்ணெய் போலாகும் வரையிற் பூரணமாயிளகியபின் அதில் வீசப்பட்ட காற்றின் குளிர்ச்சியினாலது உறைந்துற்பத்தியாகிறது. நிறங்கெட்டியான சிவப்பு, புழுதிகலந்தவெண்மை, மஞ்சள் பலவகையுண்டு.

பிரயோஜனங்கள்.

இதுகளில் சிவப்பு; வலிப்பு, பிளப்பு ஆகிய கெட்ட வியாதிகட்குப் பலனாம். பொன்வேலைகளிலும் புகுதும். வெள்ளை; வெளுத்த சரீரத்தைக்கறுப்பாக்கும். இது விளையுந்தானத்தின் நீரில் ஸ்நானமுதலியவைசெய்தால், வீக்கம், சிரங்கு, வாய்வு; கரும்பித்தந்தீரும், நெருப்புப்பட்டகெந்தகம், வெண்குட்டத்திற் கவிழ்கமாகும், "குர்த்துமு" பிசினுடன் கலந்தால் நகத்திலுள்ள அடையாளங்களைக்களையும், சிறுக்காவுடன் கலந்தால், பத்து, புள்ளியைக்களையும்; "அலகுடன், முக்கியம் பொரிகாரம், தண்ணீர் இவைகளுடன் கலந்தால் சூலை நோய்க்குப்பூச்சு

மருந்தாகும், புகை பிடித்தால் தடுமலைப்போக்கும். மஞ்சணிறமுடையதைப்பொடித்து விசக்கடிவாயில் வைக்கத்தீரும். புகைபிடித்தால் ரோமத்தை வெளுக்கச்செய்யும். அதன் வாடைக்குச்செள்ளும் பாம்பும் வெருளும் எண்ணெயுடன் அல்லது, கழுதைக்குளம்புடன்,உத்ருஜ்மாத்துக்குக் கீழ்ப்புகைத்தால்மூக்கியம்,உத்ருஜ அடங்கலுமுதிர்ந்துவிடும்.

மூன்றாவது பசுல்.

கீல்.

சிலமலைகளிலும் ஊறுகின்ற சில தண்ணீருடனும்,ஊறுகின்ற தண்ணீரிலிருக்கும் வரையில் இளகலாயும், பிரித்தால்; குளிர்ந்து உலர்ந்த திண்ணமாயும் அதையெடுத்து காய்ச்சுகிறதாயுமுள்ளது.

பிரயோஜனங்கள்.

கப்பலுக்கும் வெந்நீர் புதைக்கும் பூசப்படும். அதைக்குடித்தால் வயிற்றிலுலர்ந்த இரத்தத்தை பிளக்கமாக்கும். பூசினால் கண்டமாலையைக்கனியச்செய்யும். புள்ளிகளைக் கலைக்கும். சூலைக்குச்சேர்வையாகும். நரம்பு வியாதிக்கும் பூசப்படும். இருமல் தொண்டைவியாதிக்கும் பலன்கொடுக்கும்.

நான்காவது பசுல்.

மண்ணெண்ணெய்.

தண்ணீர்ஊறுமூற்றிலதற்குமேற்படர்ந்து கறுப்பும் வெண்மையாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்,

சுரையைக்கொண்டு சேர்த்தால் கறுப்பு வெளுத்து விடும். முளிகளின் வலி, வாதம், மூகவாதம், கண்வெள்ளை, நீர்வடிதலுக்கும் பலனாகும். அரைக்களஞ்சி இடை குடித்தால் வயிற்றுவலி, வாய்வு, இவைகட்கு பலனாகும். மரித்த பிள்ளையை நஞ்சுக்கொடியுடன் வெளியாக்கும். கிருமி. கீரைப் பூச்சியைக் கொல்லும். பூசினால் விசத்துக்குப் பலனாகும். சிலவேளை அதன்தற்குணமான கசம்பலினால்நெருப்புப்பற்றியெரியும்.

ஐந்தாவது பசல்.

அன்பர்.

கிலைப்போல், கடலில் நின்றும், அல்லது பனியைப்போல் தீவுமரங்களினின்றும், அல்லது தண்ணீர் ஹயவானின் மலம், அல்லது மீனில் நின்று முண்டாகின்றனவென்று "கிலாபு" கள் நடந்தாலும், கடலில் நின்று முண்டாகின்றதென்பது நிச்சயம்.

பிரயோஜனங்கள்.

மூளையையும் ஐபறிவையும், கல்பையும் ஆச்சரியமாம் வண்ணங் கெட்டிபடுத்தும், றூஹின் சுடரை அதிகப்படுத்தும். அதன் சூட்டைக் கெட்டியாய் நுட்பமாக்குகிறது கொண்டு மஷாயிகுமார்கட்குப் பலனுகும். தங்கடமன்றிக் குடிக்குங் "கதறு" ஒரு மஞ்சாடியாம்.

வல்லாஹுல் முவப்பிக்கு லிஸ்ஸவாப்.

பதினைந்தாம்பாபு முற்றிற்று.

—:(o):—

பதினாறும் பாப.

வருடங்கள், மாதங்கள், அதன் முதற்றிகதி, நஹ்ஸு, நாட்கள் இவைகளில்; ஒவ்வொன்றுக்கு முரிய பிரயோஜனகரங்களைங் கூறுதல் விபரம்.

வருடம், மாதம், நாள், நாழிகைகளாய்ப், பிரித்துக் கூறப்பட்ட பலக்கு என்பதின் உசும்புதலால் விசயமாகுந் தகுதி, நன்மை. தின்மைகளைத் தேடிக்கொள்ளும் வயதுக்கு; அசலாயிருக்கின்ற காலஞ் சிறிது சிறிதாய்ச் சென்றுக்கொண்டுவருவதில் காலமெனும்நின்னுடையவயது நினக்குத் தெரியாதிருந்தாலும், அது அல்லாஹுத்த ஆலாவினிடத்து அறியப்பட்ட காரியமாயிருக்கும், அவ்விதம் உன் வயது செல்வதில், சூரியோதய முதல் அஸ்தம வரையில், பகலென்றும், சூரியாஸ்தமுதல் உதயம்வரையில், இரவென்றுங்கூறுவதில்; அதன் நாழிகைகள் இருபத்திநான்குள்அது ஒன்றிற்குறைந்தால், ஒன்றிற்கூடும் சூரியன் ஜதா வின்க்கடைசியில் வந்துவிட்டால், பகல்; பதினைந்து சாஅத்துவரையில்

நீண்டு இரவு; ஒன்பது சாஅத்தாகும். பின்பு பகல் குறுகி, இரவு நீளத்தொடுத்து சூரியன் சுன்புலாவின் ஒடுக்கத்திலாகிவிட்டால் பகலுமிரவும் பனிரெண்டு சாஅத்திற் சமமொத்து, பின்பு, பகல் ஒன்பது சாஅத்துவரையிற் குறுகி, இரவு, பதினைந்து சாஅத்து வரையில் நீண்டு, பிறகு, இரவுகுறுகி, பகல் நீளத்தொடுத்து, சூரியன் "ஹூத்தின்" ஒடுக்கத்திலாகினுல் முன்போலவே பகலிரவு, சமமாகி, அதன்நிலைமை, மாறிமாறியே வரும்.

பிரயோஜனங்கள்.

இவ்வாறு, கல்குகள், தங்கடங்கள்நிருபாகங்களைத் தேடிக்கொள்ளுதற்குப் பகலையும், குறித்த உசும்புதலினுல், வியாகூலங்களை நிவர்த்திசெய்துக்கொள்ளுவதற்கு இரவையும், பகரமாய் சிருட்டித்து (வமின் றஹ்மத்திஹி, ஜஅல, லக்குமுல்லைல வந்நஹார, லி, தஸ்குநூ பீஹி வலித்தப்தகூ மின்பழ்லிஹி லஅல்லக்கும் தஷ்குறூன்) எஃனீ.—இரவிடங்கியும், பகலில், வரிசையைத்தேடியும், நன்றியறிவதற்காகவே இரவு பகலென்று கற்பித்தது அவனின், றகுமத்து, உட்கிருபையாயிருக்குமென்று அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கின்றுன். அவ்வாறு நன்றியறிந்து, இபாதத்துச்செய்யும் முதன்மையாகிய, காலமெனும் வயதுசென்றுக்கொண்டு வருகின்ற நாட்களில்; முக்கியமான வரிசையும் பலனுமுண்டாயிருப்பதில் இந்த ஒழுங்கின்படியே இருக்கும்.

—:(:):—

ஒன்றாவது பசல்.

வெள்ளிக்கிழமை.

—(:o:)—

இது "ஹக்கீகிய்யத்தாகிய கூட்டங்களுக்குத் திருநாளாகவும் நாட்களில் நாயகமானதாயுமிருக்கும்.

பிரயோஜனங்கள்.

அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைத் தொட்டும் றிவாயத்து "செய்தார்கள், சூரியோதயமாகுநாட்களில் நலவானது, வெள்ளிக்கிழமை, அன்றையத்தினம், ஆதமலைஹிஸ்ஸலாமவர்களைச் சிருட்டித்ததும்; சுவர்க்

கத்திலிருக்கச் செய்ததும், துனியாவி லிறக்கியதும், தௌபாவை ஒப்புக்கொண்டதும் கியாம நாளுண்டாவதும், முஸ்லிமானவன், நேர் பாடாய்க் கேட்கின்றதற்கு, ஜவாபாகிய நாளிகை இருப்பதும் வெள்ளிக் கிழமையா யிருக்குமென்று, அன்றை யத்தினம், நகங்களைவது சுன்னத் தாயும்,மிடுமையைப்போக்குகிறதாயும்,அல்லாஹுத்தஆலா அவனுக்கு வியாதியை நீக்கி ஷிபாவைப்புகுத்தி வைக்கின்ற நாளாயும்,ஜும்ஆவின் வக்தில் பிந்துகிறவர்களில் மலக்குகள் ஒருவரிடத்தி லொருவர் விசாரித்து, யாஇலாஹீ மிடுமையினாலவன் பிந்தினால் அவனை, சீமானாக்கிவை,வியாதியால்பிந்தினால் சுகமாக்கிவை,பாராக்கில்பிந்தினால் வணக்கத்தளவில் தரிபாடாக்கிவை, விளையாட்டினால் பிந்தினாலவன் கல்புடன் (தாஅத்தளவில்) முன்னேக்கிவை, என்று துஆகேட்கு நாளாயுமிருக்கும்.

இரண்டாவது பசுல்.

சனிக்கிழமை.

பலருமறிந்த நாளாயிருக்கும், (பிரபே ஜனங்கள்) "பனீ இஸ்ராயீல்களை, வாரத்திற்கொரு நாளைவணக்கத்துக்காகத் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்களென்று" மூஸாநபி அலைஹிஸ்ஸலாமவர்களை ஏவியபொழுது அவர்கள் தெரிந்துக்கொண்ட நாளாயும் சிருட்டிக்கப்பட்டவையாவு முடிவடைந்த நாளாயும் இதிலாபத்தமான கருமம்,மறுசனிவரையிற்றொடருமென்றெண்ணி "ஜாஹிலீன்கள்" தொடுக்கல் வாங்கல் செய்வதை விலக்கிக்கொண்டபொழுது, முஸ்லீம்கள் நபிகளாயகத்தின்,திருவாக்கின் படிக்கு பனீ இஸ்ராயீல் கட்கு மாற்றம் புரிந்து, பறக்கத்தைப் பெற்றுக் கொண்டநாளாயும் ஊன்றப்பட்ட விருட்சங்கள் மிகவாய் காய்க்காமற் போகும் நாளாயுமிருக்கும்.

மூன்றாவது பசுல்

ஞாயிற்றுக்கிழமை.

நசாறாக்களின், திருநாளாயும், துனியாவின் நாட்களில் முதல் நாளாயும், காரியங்களைத் தேவர்க்கஞ்செய்விக்க இணக்கமான தாயும், ஈஸா நபி அலைஹிஸ்ஸலாமவர்கள், தன், கவ்முகளுக்கு ஜும்ஆவைக் கொண்டேவியபொழுது. நமக்குப்பின்னால், எஹூதிகளுக்குத் திருநாளானாடோமென்று, ஞாயிற்றுக்கிழமையைத் தெரிந்துகொண்ட நாளாயுமிருக்கும்.

நான்காவது பசுல்.

திங்கட்கிழமை.

நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், இன்றையத்தினமும், வியாழக்கிழமையும், நேமமாய் நோன்புவைத்து வந்தார்கள், அதைப் பற்றிக்கேட்கப்பட்டதற்கு இவ்விரண்டு நாளும், அமல்களையுயர்த்தப்படு நாளாகையால், நோன்புடன், என் அமல்களை யுயர்த்தப்பட நாடுகிறேனென்று திருவுளமானார்கள். மேலும் நபிகளாயகம் பிறந்ததும், வஹீ வந்ததும், மக்கமா நகரைவிட்டு, ஹிஜ்றத்தாய் வெளிப்பட்டதும், மதீன மாநகரை முன்னேக்கியதும், ஹாஹறக்கைப்பற்றி "உபாத்தா"கியதும், பறக்கத்து செய்யப்பட்டதாயுமுள்ள நாளாயிருக்கும்.

ஐந்தாவது பசுல்.

செவ்வாய்க் கிழமை.

தீர்மானமுடிவும்; அக்து, நபியின், ஹால்களை இணக்கமாக்குவதும் முடிஇறக்குவதற்கு முஸ்தஹப்பாகியதும், காபீல், ஹாபீலைக்கொலை செய்ததுமுள்ள நாளாயிருக்கும்.

ஆறாவது பசுல்.

புதன்கிழமை

நலவுகள் சுருக்கமாயும், மாதங்களின்கடைசி புதன் நியமமாய் "நஹ்சு" கெடுதியாயும், குளிக்கிறதற்குப் புகழப்பட்டதாயுமுள்ள நாளாயிருக்கும்.

ஏழாவது பசுல்.

வியாழக்கிழமை

முக்கியமாய் ஹாஜத்துகளை நாடவும், தேடவும், வெளிப்பிரயாணத்தை ஆரம்பிக்கவும், பறக்கத்துசெய்யப்பட்ட நாளாயிருக்கும். கஃபுபுனுமாலிக்கு அவர்களின் தகப்பனாரவர்கள் அருட்செய்தார்கள். திடனாக: நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வியாழக்கிழமையில் "சபர்" பிரயாணத்தை நாடினார்கள். அதல்லாத்த நாட்களில் சபரைநாடாத்தவர்களாகி விட்டார்கள். என்று அதில், ஹஜாமத்தை, மக்ரூஹாக்கப்பட்டது. நபிகணாயகந் திருவுளமானார்கள். வியாழக்கிழமை, முடி இறக்கியவுடன் (காச்சல்) ஜுரவியாதியுண்டு பட்டாலவனதில் (மவுத்து) மரணமடைவானென்று.

எட்டாவது பசுல்.

ஏழுநாட்களின் பிரயோஜனங்களையுமதன் ஹதீதுகளையும் வட்டுறுக்கமாய் விபரித்தல்.

ஸப் இய்யாத்து "என்ற கிரந்தத்தில் வருகின்றன. அல்லாஹுத்தஆலா" ஏழுநாட்களைக்கொண்டு ஏழுநபிமார்களைச் சங்கைபடுத்திவைத்தான், நபி மூஸா அவர்கட்கு விசேஷநாள் சனிக்கிழமை, நபிஈஸா அவர்கட்கு; ஞாயிறு. நபிதாவூது அவர்கட்கு திங்கள். நபி சுலைமான் அவர்கட்கு செவ்வாய். நபி எஃகூப அவர்கட்கு புதன். நபி ஆதம் அவர்கட்கு வியாழம். நபிய்யுனா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கட்கு விசேட நாள் வெள்ளிக்கிழமை என்றும். இன்னும்முஸ்லிமிபுனுஅப்துல்லாஹி, ஸஈதிபுனு ஸுபைரி அவர்களால் அவர்கள், அனஸிபுனுமாலிக் றலியல்லாஹு அன்ஹும் அவர்கள் மூலமாயறிவித்த ஹதீது ஆவது நபிகணாயகந்திருவுளமானார்கள். குபாடமும் சதிமோசமுமுடையநாள் "சனி" பரிபாலிப்பு, உற்பத்தி ஊன்றுதலுக் குரியநாள் ஞாயிறு. வழிப்பிரயாணம், வியாபாரத்துக்குரியநாள்; திங்கள். ஹவ்வா உம்மா, ஹைலு. மாதவிடையானதும், காபீல், ஹாபீலைக் கொலை புரிந்ததுமான இரத்தத்துடையநாள் செவ்வாய். கெடுதிகள் நியமமானநாள் புதன். "ஹாஜத்து" நாட்ட நிறைவேற்றிக்கொள்ளும் நாள்

வியாழம். உறவாடித்திரிதல், சேர்ந்து நடக்குதலாதிய நிக்காஹு போன்ற மங்களவாழ்க்கைக்குமுரிய நாள் வெள்ளிக்கிழமை என்று.

இன்னும், நூஹு நபியின் கவுமுகளும், ஸாலிஹு நபியின் கவுமுகளும் யூசுபு நபியின் சோதரர்களும்; மூசாநபியின் பிற் அவனும் ஈஸா நபியின் எஹூதிகளும், முஹம்மது நபி அவர்களின் குறைஷித் தலைவர்களும் விலக்கலைக் கடப்பதில் பனீ இஸ்றாயீல்களும் குபாடஞ் செய்தநாள் சனிக்கிழமை.

சுற்றித்திரிகின்ற "பலக்கிய்யத்" தென்ற வானங்கள்; நட்சத்திரங்கள், நெருப்பு, பூமி, கடல், மானிட வுறுப்புகள், காலங்களை அறியக்கூடிய நாட்களும் உற்பத்தியானது ஞாயிற்றுக்கிழமை. வானத்தளவில் நபி இதுரீசை உயர்த்தியதும், தூரிசைனா மலையளவில் நபீ மூசா பிரயாணித்ததும் (வஹ்தானிய்யத்து) ஒன்றுபடுத்தும் (தலீல்)இறங்கியதும் நபிகணாயகம் பிறந்ததும் அவர்களளவில், துவர்க்கமாய் ஜிபுறயீல் வந்ததும், றூஹுல்லா அவர்களின் றாஹினிடத்து, உம்மத்துகளின்அமல்களை எடுத்துக் காட்டியதும் அந்நாயகம் வபாத்தாகியதும் திங்கட்கிழமை.

நபிஜர் ஜீஸ், நபி எஹ்யா, நபிஸகரிய்யா பிற் அவுனுடைய சூனியர்கள், பிற் அவுன் பெண்சாதி ஆஸியா, பனீ இஸ்றாயீல்களின் ஓர் மாடு, ஹாபீல் இவர்கள் கொலையுண்டநாள் செவ்வாய்க்கிழமை.

உவஜிபுனு உனக்குக், காரூன், தன் கூட்டத்துடன், பிற் அவன், நம்றூது. சாலிஹு நபியின் கவுமுகள், ஷக்காது, ஹூதுநபியின் கவுமுகள் இவர்களை ஹலாக்காக்கிய நாள்புதன்கிழமை.

நபி இபுறாஹீம் அவர்கள் "ஹாஜறாவை,மிஸ்ரில் பெற்றுக்கொண்டதும், நபியூசுபு அவர்களின், காலத்தில் சிறையிலுள்ளவன் நிவாரணையானதும், நபியூசுபு அவர்களின் சோதரர்கள் சுகமடைந்ததும், புன்யாமீன், யூசுபு நபியைப் பெற்றுக்கொண்டதும், நபி எஃக்கூபு அவர்கள் யூசுபு நபியைப் பெற்றுக்கொண்டதும், நபிமூஸா அவர்கள் மிஸ்றிற் புகுந்ததும் றசூலுல்லாஹ் மக்கம் புகுந்ததும் வியாழக்கிழமை.

நபி ஆதம் அவர்கள் ஹவ்வாவையும், நபி யூசுபு அவர்கள் ஸுலைகாவையும் நபி மூஸா அவர்கள் சபூறாவையும் நபி சுலைமான் அவர்கள் பல்க்கீசையும் நபிகணாயகமவர்கள் கதீஜாவையும், பின்பு; நபிகணாயகம் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹான்ன வஸ்ஸலாத்து அலைஹியவர்·

களையும், நாயகம் அலிய்யு அவர்கள் நாயகி “பாத்திமா றலியல்லாஹு அன்ஹுமா அவர்களையும் (நிக்காஹு) விவாகஞ் செய்துகொண்ட நாள் வெள்ளிக்கிழமையாயிருக்கும்.

வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப்.

பதினாறும்பாபு முற்றிற்று.

——:(:):——

பதினேழாம் பாபு.

அறபிய மாதங்களும் வருடங்களும் அதன் பலன்களும், “முதற்றிகதி” நஹ்ஸாதியவைகளையும் விபரித்தல்.

——:():——

மாதமென்பது; இரண்டு பிறை “வாலசந்திரனுக் கிடையிலுள்ள காலம். இவ்வண்ணம் பனிரண்டு மாதங்கூடியது வருடம். ஒருவருடத்திற்குக் கூடிய நாள் முன்னூற்றி ஐம்பத்திநான்கு (354) சொச்சமாகும் அதில் ஒருமாதத்துக்கு முப்பது நாள் (30) மறுமாதத்துக்கு இருபத்தொன்பது (29) நாளாயுங், கணித்து வந்தால் பன்னிரண்டு மாதங்களால் ஆக்கப்படும் நாட்கள் ஒருவருடத்து நாள் குறிப்புக்கொற்றுமையாகவரும். அதில் சொச்சமென்ற நாள், ஒரு நாளாயிருக்கில்; துல்ஹஜ்ஜுமாத வொடுக்கத்திற் சேர்த்துக்கொள்ளப்படும், இவ்வண்ணமே “அல்லாஹுத் தஆலா” திருவுளம்பற்றினன்; இன்ன, இத்ததுஷ்ஷுஹூரி இத்னா, அஷ்றஷஹ்றன், பீகித்தாபில்லாஹி எவும, கலகஸ்ஸமாவாத்தி வல்அறுலி, மின்ஹா, அறுப அத்துன் ஹுர்மு” என்று, எஃணீ)

சங்கையாக்கப்பட்ட. றஜபு, துல்கஅதா, துல்ஹஜ்ஜு, முஹர்றம், இந்த நான்கு மாதங்களிலும் நன்மையின் தாவபுமிகுதம். பாவத்தின் வாதனை வலுப்பம், ஜாஹிலிய்யத்தான காலத்திலுஞ் சங்கையாக்கப்பட்டு, பயமுடையவர்கள் அச்சந்திருவார்கள்.

——:——

ஒன்றாவது பசல்.

முஹர்றம்.

——(:o:)——

சண்டையை “ஹறாமாக்கப்பட்டதால் முஹர்றம் என்று பெயர் பெற்றதும், பாரிஸ்க்காரர்கள்” வருஷப்பிறப்பாக “நைறோஸ்” என்ற நாளை விசேஷமாய்க் கொண்டாடுதல் போல, அறபிய அரசர்கள் இம்மாதமுதற்றிகதியைவலுப்பப்படுத்திவிசேஷமாய்வருடப்பிறப்பு“கொண்டாடுவதும் ஏழாந்திகதியன்று” யூனுசுநபி” அவர்கள் மீன்வயிற்றைவிட்டு வெளியானதும், பத்தாந்திகதியில், சகலமில்லத்திலும்வலுப்பமாக்கப்பட்ட “ஆசூறு” என்று சொல்வதும், இதில் ஆதமலைஹிஸ்ஸலாமவர்களுடைய “தவ்பாவை, கபூல் செய்யப்பட்டதும், நூஹு நபி அவர்களின் கப்பல் “ஜூதி” மலையில் தரிப்பட்டதும், நபி இபுறாஹீம், நபி மூஸா, நபிஈஸா அலைஹிமிஸ்ஸலாம் பிறந்ததும், இபுறாகீம் நபி அவர்கள் பேரில் நெருப்பு குளிர்ந்ததும் யூனுசுநபி அவர்கள் “கவுமுகட்கு அதாபு நிவர்த்தியானதும், அய்யூபு நபி அவர்களுக்குத்துன்ப நீங்கினதும், யஃகூபு நபி அவர்களுக்குப்பார்வை மீண்டதும் யூசுபு நபி அவர்கள், கிணற்றைவிட்டு வெளிப்பட்டதும், சுலைமான் நபி அவர்களுக்கு இராஜாங்கம் வந்ததும், ஸகரிய்யா நபி அவர்களுக்கு “எஹ்யா நபி அவர்களைக்கொண்டு ஜவாபு சொன்னதும், சாஹிறீன்களை; மூசா நபி அவர்கள் மிகைப்படைந்ததும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் மதீனஞ் சென்றவுடன், யஹூதிகள் “ஆசூறு” நாளில் நோன்பு (விரதம்) வைத்திருப்பதைப் பற்றிக்கேட்க, நபிகணாயகம், அவர்கள்; பிற் அவனுமவன் கவுமுகளும் ஆற்றிற்றாழ்ந்து போகவும், மூசா நபியுமவர்கள் கவுமுகளு மீடேற்றமாகவும் சம்பவித்த நாளாகையாலே, நாம் மூசா நபி அலைஹிஸ்ஸலாமவர்கட்கதிகச் சொந்தமுடையவர்களென்றறிவித்து நோன்பு வைக்கும் படியேவியதும், முஸ்லீங்களியாவர்களும் வலுப்பமாக்கியதும், ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களையுமவர்களைச் சார்ந்தவர்களையும், ஷஹீதாக்கியதும் “உமையாக்” கூட்டத்தார் மிக்க அலங்காரமாகிய திருநாளா யொப்புக்கொண்டதும், “ஷீஆக்” கூட்டத்தார்கள்; ஊளையிடுதற்குச்சிறந்த நாளாகத்தெரிந்து அலங்காரத்தைத் தவிழ்ந்துக்கொண்டதும், “சுன்னத்து ஜமாஅத்துகள்” கண்ணேறையை விலக்கி வைக்குமென்று நிச்சயத்து “சுறுமா” விட்டுக் கொள்கிறதும் பதினாறுந்திகதியில் “பைத்துல் முகத்திசை கிபுலாவாகத் தெரியுதல் செய்ததும், பதினேழாந்திகதியில்; யானைக் கலகக்கூட்ட முன்னேக்கியபோது “அபாபீல்” என்ற பட்சியை “அல்லாஹுத்த ஆலா அனுப்பி வைத்துமாகிய மாசமாயிருக்கும்.

——:(*):——

இரண்டாவது பசல்.

சபற்.

சபறு ஹறுமாக்கப்பட்டமாதம் முடிந்து, யுத்தப்பிரயாணஞ் செய்பவர்களின் காலம் “மஞ்சணிப்பிலாகி விடுவதால்” சபற் என்று பெயரிடப்பட்டதும் இம்மாதத்தில் உசும்பு தலைக்காண்க: ஒடுங்குதல் நலமென்று சிலர் சொல்லியதும், சபர் வெளியானதை நல்மாராயங்கொண்டுவந்தவனுக்குச் சுவர்க்கத்தைக்கொண்டு நல்மாராயம் கூறுவேனென்று நபி நாயகந் திருவுளமானதும், முதற்றிகதியில்; ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சிறப்பாகிய தலையைப் புகுதவைத்த “உமையியாக் கிளையார்கள் திருநாளாக்கி கொண்டாடுவதும் இருபதாந்திகதியில் அச்சிறப்பாகிய சிரமும் (உடல்) ஸ்தூலமும், ஒன்று சேர்ந்ததும், மஃமூனு” இந்தனைமாதமாய், அணிந்திருந்த, பச்சை (உடை) வஸ்திரத்தை விட்டுங் கறுப்பளவில் மீண்டதும், இருபத்திமூன்றாந்திகதியில், அதிகாரத்தத்துவம், ஹாஷிம் “கிளையாரளவில் மீண்டதும், இருபத்திநான்காந்திகதியில்” அபீபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் நபிசல்லல்லாஹு. அலைஹிவஸல்லமவர்கள் மலைப்பொதும்பிற் புகுந்த மாதமாயுமிருக்கும்.

மூன்றாவது பசல்.

றபீவுல் அவ்வல்.

மனிதர்கள்? செழி செழிப்பாய்த் தரிப்பதற்காக “முதன்மையான” றபீஃ “என்றும், அடுத்தமாதத்துக்குப் பின்னிட்ட “றபீஃ” என்றும் பெயரிடப்பட்டன. ஆலத்தார்க்கெல்லாம் அதிபதியாகிய “சையிதுல் முர்ஸலீன் நமது நாயகத்தை” கெற்பத்திற் றரிபாடாக்கியது கொண்டு, ஆலத்தார்கட்குச் சீதேவித்தனம் நல்வாதியவைகளின் வாயல்களை; அல்லாஹுத்தஆலா, திறக்கும்படிக்குச்செய்து, பறக்கத்தை யதிகப்படுத்தியதும், எட்டாந் திகதியில் நமது நாயகம், அவர்கள் மதீனம் செல்ல முன்னோக்கியதும், பத்தாந்திகதியில், நமது நாயகம் லோகமாதாவாகிய பீபி கதீஜா நாயகி அவர்களை விவாகஞ்செய்ததும், பன்னிரண்டாந்திகதியில் நமது நாயகமவர்கள் பிறந்ததுமாகிய மாதமாயிருக்கும்.

நான்காவது பசல்.

றபீவுல்லாகர்.

மூன்றாந் திகதியில் “இபுனுஸுபைரின்முற்றிகையில்” ஹஜ்ஜாஜு நெருப்பைக் கொண்டெறிந்து. கஃபாவைக் கருக்கியதும், பதிநான்காந் திகதியில், தொழுகையுடைய கட்டளை விதித்ததும், இருபத்தொன்றாந் திகதியில் நமது நாயகம் பீஸ பீல் செய்ததுமாகிய மாதமாயிருக்கும்.

ஐந்தாவது பசல்.

ஜமாதில் ஊலா.

குளிரின் சரீரத்தினால்; தண்ணீருறைந்து மாரிகாலத்துக்குத் தொற்றுவைப் படுவதால் “முதன்மையான ஜமாது” என்றும், அடுத்த மாதத்துக்குப் பின்னிட்ட “ஜமாது” என்றும், பேரிடப்பட்டது. எட்டாந் திகதியில் அலிய்யு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்ததும் பதினைந்தாந் திகதியில் ஒட்டகை குழப்பமுண்டாயினதுமாகிய மாதமாயிருக்கும்.

ஆறாவது பசல்.

ஜமாதுல் ஆகர்.

ஆச்சரியமான அற்புதங்களை மிகுத்ததும், முதற்றிகதியில் நமது நாயகத்தினிடத்து “மலக்கு” இறங்கியதும்; ஆறாந்திகதியில் உமறுறலியல்லாஹு அன்ஹு அவர்கட்கு செங்கோலாட்சியும், ஒன்பதில் ஜஅபறுஸ்ஸாதிக்கு றலியல்லாஹு அன்ஹு பிறந்ததும். பதிநான்கில் “ஜஅபர்” அவர்களின் புதல்வர் “மூசா” பிறந்ததும், பதினைந்தில் “ஸுபைற்” அவர்களின் புதல்வர்; ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடங் கேட்டிருந்த “ஹதீதுக்காக” தன் கையால் “கஃபா”வை இடித்து, இபுறாஹீம் நபி அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்திலிருந்த கோலத்திற் கட்டிமுடித்ததும், இருபதில் பாத்திமா நாயகி றலியல்லாஹு அன்ஹா அவர்கள் பிறந்ததுமாகிய மாதமாயிருக்கும்.

ஏழாவது பசல்.

றஜபு.

அல்லாஹுத் தஆலா தன் அடிமையின் பேரில், பிழை பொறுக்குதலையும், றஹ்மத்தையும் ஒலித்து. மன்னிப்பு, இரட்சித்தல், அல்லது வாளுடைய சப்தம் காதுக்கு வாராமலிருக்கும் வரையில் வஜுப்பமாக்கப் பட்டிருப்பதாலே "றஜபு" என்றும், "அசம்மு" "[illegible]ன்தம்" என்றும், "அசப்பு" என்றும், பெயருள்ள ஹதீதின்படிக்கு, வஜுப்பமாகிய வணக்கங்களை ஒப்புக்கொள்வதும், "துஆ"க்கள் "முஸ்தஜாப்பா"குவதும், ஜாஹிலிய்யத்தான காலத்தில் அநீதஞ் செய்யப்பட்டவர்கள், வழிபார்த்திருந்து செய்தவன்பேரில் கேட்கும் "துஆ" கபூலாகுவதும், முதற்றிகதியன்று நூஹு அலைகிஸ்ஸலாம் கப்பலில் ஏறியதும், நான்கில், சிப்பீன் விஜயமும், பன்னிரண்டில் ஜஅபறுஸ்ஸாதிக்கு பிறந்ததும், பதினைந்தில் "தாவூது நபி" அவர்கள் தாயார்க்காகச் செய்திருந்த துஆவுக்கு ஜவாபுண்டானதும்; "இருபத்தேழில், மிஃறாஜு" இரவானதும், இருபத்தெட்டில், நமது நாயகமவர்கட்கு நபி பட்டம். பொருந்தியதுமாகிய மாதமாயிருக்கும்.

எட்டாவது பசல்.

ஷஃபான்.

கபீலாக் "கூட்டங்கள் பிரிகிறதற்காக" "ஷஃபான்" என்று பெயரிடப்பட்டது. மூன்றாந்திகதியில் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் நான்கில்; ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பிறந்ததும், பதினைந்தில் "சுக்கு" அதாவது பனிகல்பு ஆட்டுமுடியைக் காண அதிகமாய் "அல்லாஹுத் தஆலா" பிழை பொறுத்துக்கொள்கின்ற இரவும் பதினான்கில், "கிபுலா" வைக் கஃபா அளவிற் றிருப்பியதும், இருபதில், முஃத்தலி திய்பீயுடைய நைரோஸ் திருநாளுமுள்ள மாதமாயிருக்கும்.

ஒன்பதாவது பசல்.

றமலான்.

அவர்க்கத்தில்; சரீரம் வாட்டமடையுந் தன்மை நேர்படுவதாலே "றமலான்" என்று பெயரிடப்பட்டது. முதற்றிகதியில் சுவர்க்கத்தின் வாயல்களைத் திறக்கப்படுவதும் நரகத்தின்வாயல்களை யடைக்கப்படுவதும் ஷெய்த்தான்கட்கு விலங்கிடப்படுவதும். மூன்றில்; இபுறாஹீம் நபி அவர்களின் "சுஹுபு" இறங்கியதும், நான்கில், நமது நாயகத்தின் பேரில் "குர்ஆன் ஷரீபு" இறங்கியதும் ஏழில்; மூசாநபி அவர்களின் தவுறாத்து இறங்கியதும் எட்டில்; ஈசாநபி அவர்களின் இஞ்சீல் இறங்கியதும் ஒன்பதில்; மக்கமா நகரம் பிடிபட்டதும், இருபத்தொன்றில், ஒரு சொற்படிக்கு இருபத்தி மூன்றில் "லைலத்துல்கதறு" இறங்குவதும், இருபத்தைந்தில்; அபீமுஸ்லீம் அவர்கள் துஆவினால்; அப்பாசிய்யத்தான அதிகாரம். வாழ்வு குறாசானில் வெளியானதும் இருபத்தேழில்: பதுறும், நமது நாயகத்தின்பேரிலுதவிக்காக மலக்குகளிறங்கியதும், அழகாகிய சொற்படி லைலத்துல்கதறு "இறங்குவதும், மாதக்கடைசியில்; துவக்கமுதல் கடைசிவரையில் உரிமைவிட்ட ஆகத்தொகையின்படிக்கு அல்லாஹுத் தஆலா ஒவ்வொரு நோன்பு திறக்கும்பொழுது, இலட்ச அடிமைகளை நரகத்தைவிட்டும் உரிமைவிடுகிற மாதமாயிருக்கும்.

பத்தாவது பசல்.

ஷவ்வால்.

ஹஜ்ஜுடைய மாதங்களில் முதன்மையானதும், ஒட்டகை பொலிந்த விடத்தி லதன் வால்களைச் சேர்வாய் விடுதலால் "ஷவ்வால்" என்ற பெயரையும், எவ்முர் றஹ்மா வென்ற பெயரையுமுடையது. முதற்றிகதியில்; தேன்குழவி யளவில் தேனின்பாலனுகூலத்தைப்பற்றி "வஹீ" வந்ததும் தன்னடியார்கட்குக் கிருபைபுரிகின்ற பித்றென்ற திருநாளும், நான்கில்; நாயகம் அவர்கள். நஜரான் நஸாறுக்களுடன் சோதனையுடைய துஆ செய்ய நாடியதும்; பதினேழில்; உகுதுச்சண்டையும், ஹம்ஸா றலியல்லாஹு அன்ஹு வெட்டப்பட்டதும், இருபத்தைந்துமுதல் மாதக் கடைசிவரையில் "நஹ்சு" உடைய நாட்களும், அதை அல்லாஹுத்தஆலா ஹலாக்காக்கியதுமுள்ள மாதமாயிருக்கும்.

* * *

பதினொன்றாவது பசல்.

துல்கஃதா.

“ஹறா”மெனுஞ்சங்கையாக்கப்பட்டமாதங்களில்முதன்மையான தற்காகவும் சண்டையன்றித் தரிபட்டிருப்பதற்காகவும்“துல்கஃதா”வென்ற பெயரிடப்பட்டதும், முதற்றிகதியில், அல்லாஹுத்தஆலா நபிமூஸா அலைஹிஸ்ஸலாமவர்கட்கு, முப்பது இரவு வார்த்தைப்பாடு செய்ததும் ஐந்தில்; நபிஇபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கஃபாவின் அஸ்திவாரத்தை எழுப்பியதும், எழில்மூசா நபி அவர்கட்குக் கடல் பிளந்ததும், பதினொன்றில்; யூனுசு நபி அவர்கள் மீன்வயிற்றிலிருந்து வெளியானதும், பத்தொன்பதில், அவர்கள்பேரில் அல்லாஹுத்தஆலா சுரைச்செடியை முளைப்பித்ததும் நமது நாயகமவர்களிடம். ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் “வஹீ” கொண்டிறங்கியதுமாகிய மாதமாயிருக்கும்.

—:():—

பனிரண்டாவது பசல்.

துல்ஹஜ்ஜு

நிருபாகத்தையும் ஷுக்றையும் நாடுவதால் துல்ஹஜ்ஜு என்ற பெயரும், முதற்றிகதியில்; மஃலூமாத்தென்ற நாளும், அல்லாஹுத்தஆலா மிகவுகந்ததும், அலிய்யுகர் றமல்லாஹு அவர்கள், பாத்திமா றழியல்லாஹு அன்ஹுமாவை நிக்காகுசெய்ததும், எட்டில், மஸ்ஜிது ஹறுமின், ஹாஜிகள் தண்ணீர்புகட்டுவதும், ஒன்பதில்; அறபாவும், பத்தில்; குறுபான் இறங்கிய நஹர்றென்ற திருநாளாயும், அதற்குப்பின், தஷ்ரீக்கென்னும் மூன்றுநாளும், பனிரண்டில் நமது நாயகம் அவர்கள் அலிய்யு றழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சகோதராக்கிக்கொண்டதும், பதிநான்கில் அலிய்யு றழியல்லாஹு அன்ஹு அவர்கள், தங்கள் மோதிரத்தைச்“சதக்கா”கொடுத்ததும்; இருபத்தாறில் தாவூதுநபி அவர்கள் பேரில் “இஸ்திக்பாறு” இறங்கியதும், இருபத்தேழில்; ஹாறுத்து ஷீசயமாகியதும் இருபத்தெட்டில், அலிய்யு றழியல்லாஹு அன்ஹு அவர்கட்குப் பட்டந்தரித்ததுமாகிய மாதமாயிருக்கும்.

—:*:—

பதிமூன்றாவது பசல்.

இந்தமாதங்களின் துவர்க்கம், லெகுவாய் அறிந்துக் கொள்ளற்கியல்பான ஐதுவல், விபரமும், அம்மாதங்களிலுள்ள நஹ்றஸுகளையுங்கூறல்.

—:():—

ஹிஜ்ரிய்யத்தான முதல் [illegible]தல், நீ அறிந்துகொள்ளற்கு நாடிய, முதற்றிகதிக்குரிய மாதத்தின் வருடம்வரையிலுள்ள ஆகவருடத்தின் முழுத்தொகையை எட்டெட்டாய்கழித்து, அதில் ஒன்றுமிஞ்சினால், இந்த ஐதுவலில் நீ முதற்றிகதியை நாடிக்கணக்கிட்ட மாதத்தின் கீழ்நேரில் முதலாவதுவீட்டிலும், இரண்டுமிஞ்சினால் இரண்டாவதுவீட்டிலும், இந்த ஒழுங்குப்படியே கடைசிவரையில் எட்டுமிஞ்சினால், அதன் கீழ்க்கடைசியிலுள்ள எட்டாவது வீட்டிலும் பார்த்து நீ நாடியமாத முதற்றிகதியென்று அறிந்துகொள்ளவும். ஜஅபர் சாதிக்கு றழியல்லாஹு அன்ஹு அவர்களருட் செய்தார்கள். றமலான் மாதத்துமுதற்றிகதி அறியப்படாவிட்டால் அதற்குமுன் சென்ற றமலான் மாதத்தின் அஞ்சாவதுதிகதியில் இன்னகிழமை என்றறிந்தால் அதேகிழமைதான் இந்த றமலானின் முதற்றிகதி என்றறியவும், இதை அன்பது வருடம். சோதித்துப்பார்த்து சஹீஹானதாகத் தெரிந்தார்கள். என்று இவ்விதமே மற்றையமாதங்கட்கும் அதற்குமுன் சென்று போனமாதத்தின் ஐந்தாவது தெய்தியைக்கொண்டு முதற்றிகதியை அறியலாம். இஃது மேற்கூறிய ஐதுவல், ஒவ்வொரு மாதத்தின், நேர்கீழ் கடைசிவீடுகளிலுள்ள “இலக்கத்தினால் அந்தந்த மாதத்தின், சிறிய, பெரிய, கொடிய, நஹ்சுகளைத்தெரிந்துக் கொள்ளலாம்.

மறுபுரம் பார்க்கவும்.

முஹர்றம்	திங்கள்	வெள்ளி	செவ்வாய்	ஞாயிறு	வியாழம்	திங்கள்	சனி	[illegible]ன்	14-15	12
சபர்	புதன்	ஞாயிறு	வியாழம்	திங்கள்	சனி	செவ்வாய்	ஞாயிறு	வெள்ளி	1-20	கடைசி புதன்
றபீஉல் அவ்வல்	வியாழம்	திங்கள்	வெள்ளி	புதன்	ஞாயிறு	வியாழம்	செவ்வாய்	சனி	10-20	4
றபீஉல் ஆகிர்	சனி	புதன்	ஞாயிறு	வெள்ளி	செவ்வாய்	சனி	வியாழம்	திங்கள்	1-15	12
ஜமாதுலவ்வல்	ஞாயிறு	வியாழம்	திங்கள்	சனி	புதன்	ஞாயிறு	வெள்ளி	செவ்வாய்	10-15	28
ஜமாதுல் ஆகிர்	செவ்வாய்	சனி	புதன்	திங்கள்	வெள்ளி	செவ்வாய்	ஞாயிறு	வியாழம்	1-15	22
றஜபு	புதன்	ஞாயிறு	வியாழம்	செவ்வாய்	சனி	புதன்	திங்கள்	வெள்ளி	13-15	22
ஷஃபான்	வெள்ளி	செவ்வாய்	சனி	வியாழம்	திங்கள்	வெள்ளி	புதன்	ஞாயிறு	14-20	23
றமலான்	சனி	புதன்	ஞாயிறு	வெள்ளி	செவ்வாய்	சனி	வியாழம்	செவ்வாய்	3-20	4
ஷவ்வால்	திங்கள்	வெள்ளி	செவ்வாய்	ஞாயிறு	வியாழம்	திங்கள்	சனி	ஞாயிறு	8-20	7
துல்கஃதா	செவ்வாய்	சனி	புதன்	திங்கள்	வெள்ளி	செவ்வாய்	ஞாயிறு	வியாழம்	2-3	27
துல்ஹஜ்ஜா	வியாழம்	திங்கள்	வெள்ளி	புதன்	ஞாயிறு	வியாழம்	செவ்வாய்	சனி	6-20	7
௳	1-௳	1-௳	1-௳	1-௳	1-௳	1-௳	1-௳	1-௳	௳	௳
8-8-டய்க பிர்க்கதொகையில்	1, மிஞ்சி ஹல்	2, மிஞ்சி ஹல்	3, மிஞ்சி ஹல்	4, மிஞ்சி ஹல்	5, மிஞ்சி ஹல்	6, மிஞ்சி ஹல்	7, மிஞ்சி ஹல்	8, மிஞ்சி ஹல்	பெரிய நஹ்ஸு	கொடிய நஹ்ஸு

ஒவ்வொரு மாதங்கடோறும்;3-5-1[illegible]-16-21-24-25 கடைசிப்புத ஆக நாள் (8)ம் சிறிய நஹ்சாகும். ஆனால் இவையடங்கலும்; பத்வாவி படி நடப்பவர்களிடம். தக்வா உடையவர்களிடம் "அல்லாஹுத்தஆலா வுக்குச் செய்யும் (அமல்) இழந்துபோன நாள்தான் நஹ்ஸாகும்.

———:*:———

பதினொன்காவது பசுல்.

உலமாக்கள் மடங்கிப் பகரமாய்வரும் குறிப்பும், உலகமுடிவடையும் விபரித்தல்.

———:():———

நீ யறிந்துக்கொள் மேற்கூறியபடி; வருடங்கள் மடங்கி மடங்கி வருமாகிய ஆச்சரியத்தில் உலமாக்கள் சொன்னார்கள் ஏறக்குறைய ஒவ்வொரு ஆயிரவருடங்களிலும் அல்லாஹுத்தஆலா அவன் தீனையுயர்த்தியாக்கிவைத்து நிலைபடச் செய்தற்காக அற்புதங்களைக்கொண்டு ஒவ்வொரு நபியை அனுப்பி வைத்தான் முந்திய ஆயிரத்தில் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், இரண்டில், நபி இத்ரீஸ், நபி நூஹு அலைஹிமஸ்ஸலாமவர்களையும், மூன்றில்; நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களையும் நான்கில்; நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களையும் ஐந்தில்; நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களையும், ஆறில்; நபி ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களையும், ஏழில்; காத்திமுன்னபிய்யி நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஆண்டகை அவர்களையும் அனுப்பி, இவர்களில் பிந்திய ஆயிரத்தில் வரும் ஒவ்வொரு நூறு சிறப்பமான வருடங்களில், சில நூற்றின் திவர்க்கங்களில் உலமாக்களை யனுப்பி இந்தப் பிந்திய ஆயிரத்தைக்கொண்டு துன்யாவின் ஆயிரங்கள் முடிவுபடுமென்று உலமாக்கள் அருட் புரிந்திருக்கிறார்கள், ஏனனில்; இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும், ஸஃ இபுனு ஜுபைறு றலியல்லாஹு அன்ஹுமா அருட் செய்தார்கள். துனியாவாகிறது, ஆகிறத்தில் ஏழாயிர வருடம் கூடியவாம் என்ற "ஜும்" ஆக்களில், நின்றுந்திடுகை, துனியாவின் நாளடங்கலும், ஒரே ஜும்ஆவாக இருக்குமென்றும். இன்னு மிவ்விதம் அந்த வருடங்களடங்கலும் ஆச்சரியமாகிய அற்புத கோலங்களாய்ப் பரிபாலனம் பாழாகியும் மாற்றமாயும், கரை, கடலாயும், மாற்றமாயும், காடு மலையாயும், மாற்றமாயும், அல்லாஹுத்தஆலாவின் குதுறத்தினு லறியப்படும்.

———:():———

பதினைந்தாவது பசுல்.

உலகம் மாறி வருவதில் ஆச்சரியமாகிய ஹிக்காயத்து.

———(*)———

பனீ இஸ்றாயீல்களில் வணங்கிக்கொண்டிருந்த ஒரு ஆபிதாகிய வாலிபனிடம் நபிகிலுறு அலைஹிஸ்ஸலாம் வரப்போக இருந்ததைக் கேள்வியுற்ற ஓர் அரசன் அவ்வாலிபரிடம் வந்து உன்னிடம் நபிகிலுறு அவர்கள் வந்தாவுடனே அவர்களை என்னிடம் மன[illegible] வரவேண்டும் அப்படிச் செய்யாவிடில் நின்னை சிரசாக்கினை செய்யப்படுமென்று வற்

புறத்திப்போயினான். பிறகு நபி கிலுறு அவர்கள் வந்தவுடன் அவர்களிடம் அவ்வாலிபன் அரசனாலாகிய கட்டளையை மிகமன வாதனையுடனறிவித்தான். பிறகு அவ்விருவர்களும் அவ்வரசனிடஞ் சென்றதில், அரசன் கிலுறு நபி அவர்களைப்பார்த்து நீர்தானா கிலுறு "என்று சாவினான் அதற்கவர்கள், ஆமென் றொப்புக்கொண்ட பின்னர் அரசன், கிலுறே? தாங்கள் கண்ணுற்ற ஆச்சரியங்களிலதி புதுமையானதை யறிவிக்கவேண்டுமென்று கேட்டான். அதற்கவர்கள் அரசனே, நான் கண்ணுற்ற அற்புதங்கள் மிகவுள்ளன, ஆகிலும் தற்போது கண்டதாவது; பரிபாலன மிகுத்த வனப்பமாகிய ஓர் பட்டணத்தில், ஒருவனிடமிப் பட்டணம் உற்பத்தியான துவர்க்கமெது வென்று கேட்டதற்கு, நாங்களுமெங்கள் தகப்பன்மார்களு மறியோமென்று அவன் சொன்ன ஐந்நூறு, வருடத்துக்குப்பின் அந்தப் பட்டண மிருந்ததற்கு அருகிற் சென்று பட்டணம் அடையாளமின்றி இல்லாமலாகி விட்டதால் அவ்விடத்தில் புல்லறுத்துக் கொண்டிருந்த ஒருவனிடமிப் பட்டணம் பாழான துவர்க்கமெது வென்று கேட்டதற்குப் பூமி இவ்விதமே தரிபாடாயிருந்தது இவ்விடத்தில் பட்டணமுமுண்டோ, யாங்கள் பார்த்தும் கேள்வியானது மில்லையேயென்று ஆச்சரியமாய் சொன்ன ஐந்நூறு வருடத்துக்குப்பின் அவ்விடஞ் சென்றதிலது கடலாகிவிட்டது. அங்கு மீன் பிடிப்பவர்களிடமிது கடலாகியதின் துவர்க்க மறிவீர்களா வென்று கேட்டதற்கு அவர்கள் நின்போற் கொத்தவர்க ளிவ்விதங்கேட்பார்களோ இது இவ்விதமாகவே ஆகியிருக்கிறதென்று சொன்னதற்கு நான் இது; இதற்கு முன்வரண்ட பூமியாக இருக்கவில்லையா வென்று கேட்டதற்கு நாங்கள் பார்க்கவுமில்லைக் கேட்கவுமில்லை என்று சொல்லிய ஐந்நூறு வருடத்துக்குப்பின் அவ்விடஞ் சென்று, அது வரண்டபூமியாகி அதில், மலங்கழித்து எழும்பு மொருவனிடமிப்பூமி வரட்சி[illegible] துவர்க்கம் நீ அறிவாயா என்று வினவ அவனிவ்விதமே நீங்காமலிருக்கின்ற தென்றதால், இவ்விடத்தில் முன்கடலுண்டா யிருக்கவில்லையா வென்றுக் கேட்டதற்கு நான் பார்க்கவுமில்லை, கேட்கவுமில்லை, என்றனன், அதற்கு ஐந்நூறு வருடத்துக்குப்பின் அவ்விடஞ் சென்று அதிவிஸ்தீரணமும் அதற்கான பரிபாலனமும் சந்தோஷமுடைய கூட்டங்களுமுள்ள அருணிப்பாகிய பட்டணமாய்க்கண்டு அதனுடையவர்களிடம் இப்பூமியு[illegible] துவர்க்கமெது வென்று கேட்டதற்கு இவ்விதமே பூர்வீகப் பரிபாலனத்தில், பண்புற்று வருகிறது. இதன் துவர்க்கம் நாங்களுமெங்கள் முதாதைகளு மறியோமென்று சொன்னார்களென்பதாய்க் கிலுறு நபி அவர்கள் சொல்லி முடித்த உடன் அவ்வரசன் துனியாவை இழந்து, உகுறுவையுகந்து அரசையிழந்து, தங்களைத் துடர்ந்து பலன் பெறநாடுகிறேன் என்றதற்கு கிலுறு நபி அவர்கள், நீ என்னைத்துடர்ந்து செல்லத்தராவிபெறாய், எனினும் இந்த வாலிபனைத்துடர்ந்து இடேற்றம் பெறுவாயென்று சொன்னார்கள். இதில், ஐந்து காலத்துக்குப்பின் இவ்வாறு காலமாறி வருவதற்கு அல்லாஹுத்த ஆலாவின் ஆச்சரியமான குதுறத்தை அறிந்து உறுதிகொள்வதற்கு அத்தாட்சிகள் மிகவுமுண்டே.

—:():—

பதினாறாவது பகல்.

பூலோக முடிவடையுங் காலத்தைப்பற்றிய, "கணக்கில்" பலவிதத்தாத்பரியங்களையும் விபரித்தல்.

"அல்லாஹுத் தஆலா திருவுளமானான்" அல்லாஹு கலக்கஸ்ஸமாவாத்தி.; வல்அருல, பீஸித்தத்தி அய்யாமின்எஃனீ:—அல்லாஹுத் தஆலா வானம் பூமியை ஆறுநாளிற் சிருட்டித்தானென்று. ஆகையினாலே நாள் ஒன்றுக்கு வருடம் ஆயிரமாக பூலோகமுடிவுகாலம் ஆறாயிரம் வருடமாமெனச் சிலவரும்.

உலகத்தின் காலத்தை (7) எழுநாளிற் சிருட்டித்திருப்பதால் நாள் ஒன்றுக்கு ஆயிரவருடமென்று, கஃபுல் அஹ்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், உலகம்; ஆகிறத்துடைய (ஜும்ஆ) எனும் நாட்களில் ஒருவாரமென்று இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அதன் தகுதி ஐம்பதினாயிரம் (50000) வருடமாகிய ஒரு நாளென்று "அல்லாஹுத் தஆலா" திருவுளமாயிருக்கின்ற நாள் துன்யாவின் துவர்க்கமுதல், கடைசிவரையிலுள்ள தென்று இக்றிமா றலியல்லாஹு அன்ஹு அவர்களும், பாரிஸிய்யர்களிலுள்ள கல்விமான் மூபிதானை விடக் கல்வியிற் சிறந்த "ஹறுபதுல் மஜூஸிய்யு" என்பவர்: தங்கள் கிரந்தத்தில் வருகின்றதா யெனக்கறிவித்தார், அதாவது துன்யாவின் காலம்; நான்கு பங்காகியதில், முதற் பங்கில்; ஒரு வருடத்தின் நாட்களின் கணிப்புப் படி" மூன்றிலட்சத்தறுபதினாயிரம் வருடம்;

அஃது சென்றுவிட்டது. இரண்டாவது பங்கில்; ஒருமாதத்தின் கணிப்புப் படி மூவாயிரம் வருடம் அஃதுஞ்சென்று விட்டது. மூன்றாவது பங்கில்; ஒருவருடத்தின் மாதக்கணிப்புப்படி 'பன்னீராயிரம் வருடம் அஃதுஞ் சென்றுவிட்டது, நான்காவது பங்கில்; ஒரு வாரத்துக்குரிய நாட்களின் கணிப்புப்படி ஏழாயிரம்வருடம். இஃதுதான் நாமிருப்பதென்று பல்கிய்யு றஹிமஹுல்லாஹு அவர்களும் அருட்செய்திருக்கின்றார்கள் எனினு மிதில்; கிலாபுண்டு. இன்னுங் ஸஹபிகளுபகத்தினிடத்து "துன்யாவை" எதுவரையிருப்பதற்கு வகுக்கப்பட்டதென்று கேட்கப்பட்டபொழுது என்னுபன் எனக்கறிவிப்புச் செய்தான் ஏழுலெட்ச வருடத்தொடராய் மனிதாளவிலென்னை "றசூலாக" அனுப்பிய நாள் வரையிலென்று திருவுளம் பற்றினார்களென "அபீஹுறைறா றலியல்லாஹு அன்ஹு" ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள். இன்னும் ஆதம் நபியைப் படைக்குமுன் "அல்லாஹுத் தஆலாவை" இபுலீஸ்; எண்பத்தையாயிரம்வருடம் வணங்கினான், அதன் பின்னர் வானம், பூமியைப் படைத்தானென்று. வருகின்ற" ஹதீதும், மேற்கூறிய 'ஹதீதை" ஸ்திரப் படுத்துகின்றது. வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப்.

* * *

பதினேழாவது பசுல்.

ஆதமலைஹிஸ்ஸலா மவர்கள் முதலாய் பிரபல்ய நபிமார்கட் கிடையிற் சென்ற, காலக்குறிப்பை விபரிக்குதல்.

(மஆரிபு) எனுங் கிரந்தத்தில்; அப்துல்லாஹிபுனு அபீஹுதைபா "என்பவர்களின்" ரிவாயத்தாவது:—திடனாக, ஆதமலைஹிஸ்ஸலாம், ஜீவித்திருந்த காலம் (1000) வருடம். அவர்களின் மௌத்துக்கும் "தூபான்" பெரும் வெள்ளத்திற்கு மிடையிலுள்ள காலம் (2242) வருடம். அவ்வெள்ளத்திற்கும் நூஹு நபி மௌத்துக்கு மிடையிலுள்ள காலம் (350) வருடம் நபி. நூஹு, நபி இபுறாஹீம், இவ்விருவர்கட்கிடையில் (2040) வருடம். நபியிபுறாஹீம், நபி மூஸா இவ்விருவர்கட்கிடையில் (900) வருடம்நபி மூஸா, நபி தாவூது, இவ்விருவர்கட்கிடையில் (500) வருடம். நபி தாவூது, நபி ஈஸா இவ்விருகட்கிடையில் (1200) வருடம்- நபிஈஸா. நபியுனா முஹம்மதுன் ஸல்லாத்துல்லாஹி

அலைஹி வஅலைஹிம், இவ்விருவர்கட்கிடையில் (620) வருடம். ஆக மொத்தம்; ஆத நபி அவர்களின் காலமுதல் நபிகளுபகம் காலம்வரையில் (8852) வருடமென்று, கரீதத்துல் அஜாயிபி எனுங் கிரந்தத்தில் வருகின்றது.

பதினெட்டாவது பசுல.

சென்ற காலக்குறிப்பின் தீர்மானம்.

தாரீகு "அபுல் பிதாஉல் முஅய்யது" எனுங்கிரந்தத்தில் வருகின்றதாவன. "ஈஸாநபி" அவர்களின் அவதாரம்; இஸ்கந்தர் அவர்கள் "மஜூஸிகளை மிகைப்படைந்த அறுபத்தைந்தாவது வருடத்திலென்று." இபுனுல் அதீறென்பவர், முன்னூற்றிமூன்று வருடத்திலென்று. நஸாறாக்கள், இக்குளப்பத்திற்கிணங்கத் தூபான்பெரும் வெள்ளத்திற்கும் (ஹிஜ்றத்துக்கும்) இடையில் மூவாயிரத்தி எழுநூற்றி இருபத்தைந்து வருடமுண்டென்றும், நஜூமிகளும், தொள்ளாயிரத்து எழுபத்திநான்கு வருடமுண்டென்றும் தேர்ச்சியடைந்த திகதியுடையவர்களும், கணிப்பில் ஒருவருக்கொருவர் உன்னிதமான வேற்றுமையாய் விளங்கப்படுத்தியிருக்கும் விடையங்களை இங்ஙனம்விளங்க கூறுவாம்"

நபிஆதமலை ஹிஸ்ஸலாம், உலகத்திலிறங்கிய காலமுதல்; மூஸாநபி அலைஹிஸ்ஸலாமவர்கள் மௌத்து வரையிலுள்ள காலக்கணிப்பை (தவுறாத்து) வேதத்தில் அல்லாது அறிதற்கியலாமலிருப்பதினோடு "அவ்வேதம்ஸாமிரிய்யா, அப்றானிய்யா, யூநானியா" என்ற மூன்றுவிதப் பேதகத்திலாகிவிட்டதேயாம், அம் மூன்றில்; "யூநானிய்யா', ரிஸாலாவின் படி; சென்றகாலக்குறிப்பைத்தவிர, மற்றவை (இத்ஜஅலக்கும் குலபாஅ) எனும் ஆயத்தால் தள்ளப்பட்டு அய்யூநானிய்யாவைக் கணிப்பினர் மறுப்பதன்றித் தெரியுதல் செய்ததால் அதையே வாஸ்தவமாகக் காண்கப்படும்.

அந்த "ரிஸாலாவின்படி" மேற்சுட்டிய வெள்ளத்திற்கும், "ஆதம் நபி" மௌத்துக்கு மிடையிலுள்ள வருடம் 2242. "நூஹு நபி அவர்களின், 600, வது வருடத்திலுண்டாகிய அவ்வெள்ளத்திற்கும். இபுறாஹீம் நபி அவர்கள் அவதாரத்திற்கு மிடையிலுள்ள வருடம், 1081.

இபுறுஹீம்நபி" அவதாரத்துக்கும் மூஸாநபி அவர்கள் மௌத்துக்குமிடையிலுள்ள வருடம்(545.)"மூஸாநபி" மௌத்துக்கும் புக்தனசர் அரசாங்கவாரம்பத்திற்குமிடையில், 978 வருடமும் 248 நாளும். குறித்தஅரசாங்கத்திற்கும், ஹிஜ்றத்திற்கு மிடையில் 1369 வருடமும் 117 நாளும். ஹிஜ்றத்திற்கும் ஆதம்நபி இறங்கியதற்குமிடையில்,6216 வருடம். இவைகளனைத்திலும் "நஜூமிகளிடம்" இலாபுண்டு. அஃதாவன. ஹிஜ்றுவுக்கும் நபிஆதமலைஹிஸ்ஸலாமவர்கட்கு மிடையில்கணிதஸாஸ்திரிகளிடம் தவுறுத்து,யூநானியின்படிக்கு 6216. அப்றுனியின்படிக்கு 4741. ஸாமிரியாவின்படிக்கு 5137. வருடமாம். இவ்வகளொவ்வொன்றிலும் இதற்குப்பின் "புக்துனசர்" காலம்வரையிலுள்ள ஒவ்வொருதாரிக்கு தொகைகளினும் "நஜூமிகளிடம் 249 வருடங்குறைவாகும். அவையேதுபோலெனில்; ஹிஜ்றுவுக்கும் நபிஆதமுக்கு மிடையில் நஜூமிகளிடம் யூநானியின்படிக்கு 5967. வருடமாகவிருப்பதுபோல.

"ஆகையாலினிவரும், தாரீகுகளடங்கலிலும் தவுறுத்து, யூநானியின் படிக்குக், கணிதசாஸ்திரிகளின் சொற்களை மட்டிலும் விவரிக்கப்படும் ஹிஜ்றுவுக்கும், நூஹு நபியினது 600வது வயதிலுண்டபட்ட "தூபான்வெள்ளத்திற்கு மிடையில் கணிப்பினரிடம் 3974 வருடம் அவ்வெள்ளத்திற்குப் பின் "நபி நூஹு" அவர்கள் 350 வருடம்ஜீவித்திருந்தனர்கள். ஹிஜ்றுவுக்கும், தபுல்புலில் "அல்ஸாஹு" அரசனுக்கு மிடையில் 3304வருடம், ஹிஜ்றுவுக்கும் இபுறுஹீம் நபி அவதாரத்துக்குமிடையில் 2893வருடம், ஹிஜ்றுவுக்கும் நபி இபுறுஹீம் அவர்களது நூறும்வயதில் "நபீஇஸ்மாயீலும், அவர்கள் பிதாவும், பைத்துல்லாவைக்கட்டி வைத்ததற்கு மிடையில் 2793. வருடம் ஹிஜ்றுவுக்கும் மூஸாநபி" வபாத்துக்குமிடையில் 23[illegible]8 வருடம். ஹிஜ்றுவுக்கும், நபி மூஸா அவர்கள் உபாத்தினின்றும் 546 வதுவருடத்திற்குச் சரியான" சுலைமான்நபி அவர்கள் அரசாங்கத்தின் 11 வருடத்தில், "பைத்துல் முகத்திஸைப் புதுப்பித்து முடிவாகிய காலத்திற்கு மிடையில் 1802வருடம். ஹிஜ்றுவுக்கும், புக்த்துனசர் ஆட்சியின் ஆரம்பத்திற்குமிடையில் 1369 வருடம் ஹிஜ்றுவுக்கும் புக்த்துனஸரின் 19வது வருடத்தில்பைத்துல்முகத்திஸ் [illegible] வருடம் வரையிற் பழுதாயிருந்ததற்கு மிடையில் 1350வருடம். ஹிஜ்றுவிக்கும் "இஸ்கந்தர்" பாரிசைக்கைப்பற்றி ஏழு வருடம்வரையில் ஆட்சிபுரிந்த ஆரம்பத்திற்குமிடையில் 934 வருடம்.

ஹிஜ்றுவுக்கும் மேற்படி இஸ்கந்தரின் கோதரர்" பைலபஸாக்கு மிடையில் 927வருடம். ஹிஜ்றுவுக்கும், "அகஸ்தஸ் அரசர்" மிஸ்றில் மிகைப் படைந்ததற்கு மிடையில் 652-வருடம் ஹிஜ்றுவுக்கும்,ஈஸாநபி அவதாரத்திற்குமிடையில் 631வருடம். ஹிஜ்றுவுக்கும், பைத்துல் முகத்திஸ் மறுமுறை பழுதாகியதற்கு மிடையில் 558-வருடம். "இஃது ஈஸா நபியை அன்பாவைவிட்டு முயர்த்திய நாற்பதாம் வருடத்திலுண்டாகியதும், தற்போது எஹூதிகள் பிணக்கங்கொண்டிருக்குந் திகதியுமாகும்" ஹிஜ்றுவுக்கும் ஆதர்பானஸ். அரசாட்சித் துவக்கத்திற்குமிடையில் 507 வருடம். ஹிஜ்றுவுக்கும், தாயிபு அரசாட்சிக்கு கடைசியான "உருதஷிருக்குமிடையில் 422 வருடம் ஹிஜ்றுவுக்கும்; தவுகல்த்தியானஸ் இராஜாட்சியாரம்பத்திற்குமிடையில் 329.வருடம் ஹிஜ்றுவுக்கும் நபிகணாயகம் அவதாரத்திற்குமிடையில் 53-வருடம்.2, மாதம் 8,நாளும் ஹிஜ்றுவுக்கும் ஷை நபிபட்டத்திற்குமிடையில் 13வருடம்2 மாதம், 8 நாளும். ஹிஜ்றுவுக்கும், நபிகணாயகம் உபாத்திற்கு மிடையில் 9-வருடம். 11மாதம், 22 நாளுமாம்.

(:-:)

பத்தோன்பதாவது பசுல்.

ஹிஜ்றுவுக்கும், சென்றகாலங்கட்கு மிடையிலுள்ள காலக்குறிப்பை எளிதிலறிந்துக் கொள்ளுதற்கு "ஜத்வல"

(ஹி) என்பது; ஹிஜ்றத்து.

இந் "ஜத்வலில்' ஹிஜ்றத்துக்கும், நபி ஆதமலை ஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாம் அவர்கட்கு மிடையிற் சென்ற காலம் 6216 வருடமெனப் பொருட்படுத்தி மற்றைய காலக் குறிப்புகளையுங் காண்க.

ஹி 6216	நபி ஆதம்	ஹி 975	பைலபஸ்அரசர்அவர்சோதரர்
,, 3974	பெரும்வெள்ளம்	,, 622	அகஸ்தஸ்மிஸ்ரைமிகைத்தல்
,, 3304	தபுல்புலில் அல்சுன் அரசு	,, 631	ஈசாநபி அவதாரம்
,, 2893	நபி இபுறுஹீம் அவதாரம்	,, 558	பைத்துல்முகத்திஸ்மறுபடி பழுதடைந்தது
,, 2793	நபி இபுறுஹீம்கஃபாவைக் கட்டியது	,, 507	ஆதர்யானஸ்அரசாரம்பம்
,, 2348	மூசாநபி உபாத்தி	,, 422	உறுதஷீர்புனு பாபக்அரசு
,, 1802	பைத்துல்முகத்திஸ்புதுப் பித்தல்	,, 339	தபல்தியானுஸு அரசாரம்பம்
,, 1369	புக்துனஸ்ஸறின் அரசு	53-2-8	முஹம்மதுநபிஅவதாரம்
,, 1350	பைத்துல்முகத்திஸ்பழுதடைந்தது	13-2-8	ஷெ நபியவர்கள், நபிபட்டம்
,, 934	இஸ்கந்தர்பாரிசைமிகைத்தல்	9-11-22	ஷெ [illegible]யகம் உபாத்து.

இருபதாவது பகல்.

இஸ்லாமியர்களின் வருஷப்பிறப்பென்ற முதற்றிகதி "நபிகணாயகத்தின்" ஹிஜறத் "தென்பதின் தாரீகு கணக்கை விபரிக்குதல்.

அஹ்மது திஹ்லான் "இமாமவர்கட்குரிய சீறத்துன்னபவியாவில் வருகின்றது. அறபியர்கள், மக்கமாநகரில்; யானைக்கலகம் உண்டாகும் வரையில்; நபிகணாயகத்தின் நபிபட்டத்திற்கு (500) வருடத்திற்கு முன்னுள்ள (லுவையிபுனுகஃபு) எனும் பெயருடைய நமது நபிகணாயகத்தினது முதாதை மவுத்தாகிய காலத்தை வருடத்திற்கு முதற்றிகதியாகவும், பின்னர் அவ்யானை கலகத்தையும், அதன் பின்னர் அப்துல் முத்தலிபு மவுத்தாகிய காலத்தையும், பின்னர், நபிகணாயகத்தின் ஹிஜ்றத்தையும் வருஷப்பிறப்பாகவு மாட்சி செய்து வந்தனர்கள் என்று.

மைமூனிபுனு மிஹ்றான் என்பவரைத் தொட்டும் சுலைமானுடைய புதல்வர் அருளினதாவது றபீவுல்லவ்வல் மாதம், 9-ம் நாளில், கலீபத்துர் றசூல் உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற்கு (ஷஃபான்) மாதந்தவணை யேற்பட்ட ஓர் பாசுரம் வந்தது. அதைப்பற்றிச் சென்ற இந்த வருடத்தின் "ஷஃபான்" அல்லது இனி வரும் "ஷஃபானு" வெனச் சந்தேகமேற்பட்டதினாலே அங்ஙனம்

இருந்த அசுஹாபிகளைத் திரட்டி முன்னர் நாம் சேர்மானித்த பொருள்களைப் பிரிவினை செய்திருப்பவைகட்குக், காலக்குறிப்பில்லாதிருப்பதால் எவ்வண்ணமதைக் கட்டுப்படுத்துவதளவில் முன் செல்லுவோமென அமீறுல் மூமினீனவர்கள் அக்கூட்டத்தாருடன். ஆலோசனைசெய்ததில் முஹற்றமாதம்; "சங்கையாக்கப்பட்ட மாதங்களி லொன்றாகவும், பாரிஸியர்களைப்போல அறபிய அரசர்களும் வருடப் பிறப்பாகப் பாவித்து வந்திருப்பதாலும் அவ்வாறே பல்லவரின் ஒற்றுமையான சொல் பாரிஸியர்கள் தாரீக்கையே ஊர்ஜிதப்படுத்தினதாலே; அமீறவர்கள் பாரிஸியர்களின் கல்விக்களஞ்சியமாய்ப் பரிசேதற்றப்பட்ட "ஹுர்மஜான்" என்பவரை, வரழைப்பித்து வினவியதற்கு அவர்; எங்களில் திகதிகளையறிதற்குரிய கணக்குண்டெம் அதற்கு (மாஹ்றேஜ்) என்றழைக்கப்படும். எஃனீ:—நாள், மாதங்களை அறியுங்கணக்கு" என்றவருரைக்கவே அதற்கிவர்கள் (தாரீகு) என அறபியப் பெயர் சூட்டி "இஸ்லா" மென்னுங் கொலத்திற்கு வருடப்பிறப்பாகிய முதற்றிகதியைக் காட்டுமாறு ஆலோசித்ததில், நபிகணாயகம் அவர்கள் திருப்போங்கு மக்கமாநகரிலிருந்து அதிமாட்சிமையுலாவிய மதினமாநகர்க்கேகிய "ஹிஜ்ரி" வருடத்தையே துவர்க்கமாக்கிக்கொள்ளுதற்கு எல்லவருமோர்மித்ததாலே; அவ்வருடத்தில், முஹற்றம். சபர், என்ற இரண்டு மாதமும் றபீயுல்லவ்வலில் எட்டு நாளுஞ் சென்றிருப்பதால் அவ் வறுபத்தெட்டு நாளளவிற் பின்சென்று (ஹிஜ்றத்துக்கு) ஆதியாய் "அவ்வலுல் முகர்றம் (எஃனீ) அவ்வருடத்திற் சென்ற முஹற்றம்" முதனாளை வருடப்பிறப்பாகத் தீர்மானித்ததால் நபிகணாயகம் (வபாத்து) வரையில், குறித்த முதற்றிகதி முதல் 10 வருடமும் 2 மாதமுமாம். நாயகத்தின் ஹிஜ்றத்துப் படிக்கு "முதல் 9 வருடமும் 11 மாதமும் 22 நாளுமாகும். ஆகையால்" முஹற்றம் "முதற்றிகதியை, வருடத்துக்குத் துவர்க்கமாக ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது.

மேற்கூறிய "ஜத்வல்" காலக்குறிப்பு வீடுகளில் நீ நாடிய இருவரின் "தாரீக்கு" திகதிகட்கிடையிலுள்ள குறிப்பு இவ்வளவென்றறிந்துக்கொள்ளும் பாவனையாவது; நீ நாடிய இரண்டு தாரீக்குக்கும் (ஹிஜறத்தில்) நின்று மேற்பட்ட இரண்டு தொகையில்; சிறிய தொகையைப் பெரிய தொகையினின்றுங் கழித்தால், மிஞ்சிய தொகையானது அவ்விரண்டு தாரீகுக்கு மிடையிலுள்ள காலம். அது எவ்வண்ணமாமெனில்; (ஹிஜ்றத்து) 631 வது வருடத்திலுதயமான "நபி ஈசா, அவர்களின்

அவதாரத்திற்கும்; 53 வருடம் 2 மாதம், 8, நாளிலும் நபமான முஹம்மது நபி அவர்கள் அவதாரத்திற்கு மிடையிலறியும் ஸீங்காவது குறித்த 631-ல் 53. 2-8-யும்களித்தால் "577 வருடமும், 7மாதமும், 22 நாளும் எஞ்சும் அதுவே அவ்விரண்டு நபிகளினவ தாரத்திற்கு மிடையிலுள்ள காலம். இவ்வாறே நீ நாடியதாரீகு எதுவானாலும் பெரிதிற் சிறிதைக் கழித்து எஞ்சிய தொகையே மேற்படி. பெரிதுக்குஞ் சிறிதுக்கு மிடையிலுள்ள காலக் குறிப்பென்று கண்டுக்கொள்ளுந.

வல்லாஹு அஃலம்-பிஸ்ஸவாப் தாரீகு அபுல் பிதாவு
பதினேழாம் பாபு முற்றிற்று.

பதினெட்டாம் பாபு.

றூஹுக்குரிய ஆஸ்பதமும், உலவு[illegible]வும், தீங்குமாகிய நான்கு விதக்காற்றுகளையும் தண்ணீரின் குணாதியவைகளையுங் கூறல்.

ஒன்றாவது பசுல்.

நான்கு திசைக்காற்றுகளை விபரித்தல்.

"ஷிமால்" என்றதிசையி னின்றெழும்பி வீசுகின்ற தென்காற்று ஜனூபு கப்பல் என்ற நட்சத்திரஞ் சுற்றிவருகும் மத்தியத்திலிருக்கும் "குத்புல் ஜனூபி" என்ற நட்சத்திரத்தின், திசையினின்று "ஷிமா" லளவில் வீசுவது "வடகாற்று. தபூறு, சூரியன் அஸ்தமாகுந் திசையில் நின்றும் உதயதிசையளவில் நின்று வீசும் மேல்காற்று. சபா" சூரியோதயத்திசையில் நின்றும் அஸ்தமிக்குந் திசையளவில் வீசும் கீழ்க்காற்று, ஆகையால், ஷிமால், ஜனூபு, தபூறு, சபா, என்ற அஸலிய்யத்தாகிய நான்கு காற்றுண்டும்.

இஃலம்—நீ அறிந்துகொள்,—திடனுக, ஸ்தூல மென்னுங்குகை, காற்றுகளின் சந்திப்பைவிட்டு மொழியாது. எனென்றால்; திடனுக, றூஹு, மீசுர்வி, பார்வை இவைகட்கியாதொருவேலையுமில்லை. இதுகள் காற்றுடன் சேர்ந்தாலொழிய, முக்கியமாய் றூஹுக்குச் சடலத்துடன் நிலைபெறுவதில்லை. அல்லாஹுத்த ஆலா, காற்றைக்கொண்டு அந்த றூஹின் உயிரைக் கற்பித்திருக்கின்றானே, அந்தக் காற்றை, றூஹு, வேகத்துட னெழுப்பதினால், வஜீபனங்கள் ஸ்தூலத்துக் காதாரமாவதுபோல அதைக் காற்று அந்த றூஹுக்கு ஆஸ்பதமாயும் உணவாயுமிருக்கும். அக்காற்றுகளில் மிக்க இணக்கமானது சேகமாயிழுப்பதி லின்பமானதும் நன்னிலையுள்ளதும் "சபா" என்ற "ஷர்கிய்யத்தாகிய கிழ்க்காற்றாயிருக்கும். நல்லவாசமும், முக்கிய பலனுமதில் றூஹுக்குஞ் சரீரத்துக்கு முண்டு. மேலும், கெட்டியான பிரயோஜனமும், வலுப்பமான சுகமுங்கொடுக்கும். ஆகையாலிதுவே இணக்கமாகிய காற்று. ஜனூபு, ஷிமால், தபூர், இவைகள் முற்கூறிய "சபா" என்ற காற்றுக்குத் தாழ்வாயிருந்தாலும் காற்றின் சந்திப்பு ஆவசியகமானதால், அக்காற்றுகளில், காற்றுகளை ஆராச்சி செய்யும் பலன், சூடு, குளிர், தத்துவம் இவைகள் நீதமானதும் இணக்கமானதுமாம், மலட்டுக் காற்றிலும் சூறாவளிக்காற்றிலும் இருள்கொண்ட புகையிலும், துர்நாற்றமுள்ளகாற்றிலும், குளிர் சூடு, தத்துவம் இவ்வகள், அளவைவிட்டுங்கடந்து வீசுங்காற்றைப்போல நலமில்லை. இவைகள் "றாஹை" வலுப்பமாகிய தங்கடத்தில் வருத்தும். அக்காற்றுகளிற் சிறிது, சிலசமயம் ஸ்தூலத்தைவிட்டு, றாஹைவெளிப்படுத்திவிடவும் போதும். அத்துர்வாடையுள்ள வீச்சத்தை முகராமற், றுணியினால் காப்பாற்றிக்கொள்ளல் ஆவசியகமாம். அல்லாஹுத்தஆலா மிகஅறிந்தவன்.

இரண்டாவது பசுல்.

தண்ணீர்.

இது இளகலானவைகளில் நீர்ச்சையாகிய ஜௌஹறாயிருக்கும். இதன் வாடை, நிறம், இன்பமாதியவைகள் பல்லோர்களும் நன்குணர்ந்தவிசயமேயாம், றூஹுடைய தடங்கலுக்கும் இதுஹயாத்தாயிருக்கும் நபிகளையும் திருவுளமானார்கள். துன்யா, ஆகிறம், இவ்விரண்டிலுள்ள குடிப்புகளியாவற்றிற்கும் நாயகமானது தண்ணீராயிருக்கும். என்று. அதில்; குளிர்ச்சியும் ஓடுந்தண்ணீரும் நலவு. தெளிவுடையதும், வெண்மை, மணமான நல்ல வாடை, கனத்தாலதிக, லேசும் மிக்கவனுகூலம் சூடாகுவதிலும், குளிர்ச்சியாகி ஆறுவதிலும் விரைவானது மிகவரிசையாயிருக்கும்: மரம், சோலை, மிகுத்த தேசத்தின் தண்ணீரும் பாம்பு, புழு, மிகுத்த தண்ணீரும், அதிககனமும் கெடுதியாயிருக்கும், ஊற்றுத்

தண்ணீரும், பெரிய அருவிகளிலோடிந் தண்ணீரும் மழைத்தண்ணீரும் புகழப்பட்டதாயிருக்கும்.

பிரயோஜனங்கள்.

ஷஹ்வத்தையுங் குடலையும் பிலமாக்கி, நிறத்தையழகாக்கி, இரத்தக்குறைத்தலை விலக்கி, சூட்டையும் புகைச்சலையும் போக்கிச்சுகத்தைக் கொடுக்கும். நடுத்தரமான குளிருடையது, சடலத்தின் சீதளத்தைப் பேணி; தண்ணீர் வஜீபனமாவதன்றி வயிற்றுள் சேர்ந்த வஜீபனத்தை இளகலாக்கி நரம்புகளிற் செலுத்தும், மேனுங்குடிப்புகளில் அதிக பலனும் நேர்பாடுமுள்ளது. சிலேற்பனமுடையவர்கட்குத் தங்கடத்தை வருத்தும். புதிய பாத்திரம் சுட்டமண் பாத்திரத்திற் சுட வைத்த தண்ணீராயிருந்தால் அவ்வியாதியைப்போக்கும், வெறும்வயிற்றில்மழைதண்ணீரைக்குடித்தால் இருமல் கட்குப்பலஞ்கும் அதில் சூடானது மிக்கவனுகூலம் கட்டுக்கடையானது; இருமலை எழுப்பி, சப்ததீனைக் கனமாக்கும். வெறும் வயிற்றிற் குளிர்ந்த நீரைப்பருகினுல், ஈரல் குலையைக் குளிர்ச்சியாக்கி, சடலத்தை மெலிவாக்கி குடலிலுள்ள சூட்டை நாசச்செய்யும், வஜீபனித்தபின் குடித்தால் குடலை பெலமாக்கி, சடலத்தை சூடாக்கி சமியல் அதிகரிக்கப்பண்ணும், கடுசான குளிருடைய நீரை விலக்கப்பட்டதாயிருக்கும். கோடைகாலத்தில் குளிர்ச்சியானதையும் மாரிகாலத்தில். நடுத்தரமானதையுங் குடிப்பது அவசியமாகும் அதற்கு மாற்றம் புரிவது வியாதிகளை வருத்தும். பொழுதினுல் சூடாகிய நீரை அது குளிருமுன் குடித்தாலுங் குளித்தாலும் வெள்ளை, வெண்குஷ்டமிவைகளுண்டாகும். உப்புத்தண்ணீர், வரட்சியுள்ள சூடாயும், வயிற்றை இளகலாக்கி, சொறி, சிரங்கு, தாகம், முதல்வனவைகளை எழுப்புவதுமன்றிக்கெடுதியுள்ளமற்றக்குணத்தையும் வருத்தும். மண்டித்தண்ணீர்; கல்லடைப்பு, நீரடைப்பு, ஈரல், குலை அடைப்புகளை வருத்தும்; அதில் நெருப்புத் துண்டங்களைப்போட்டால் மண்டிதெளிவுண்டாகும். உவட்டுத்தண்ணீர்; அதிக தடிப்பாகவும், சூடாகவும்; கெடுதியாகவும், பித்தத்தை வருத்துவதாகவும். பற்குத்தி ஈரல், குலை; சிலேற்பனமாதியவைகளைத் தடிக்கப்படுத்துவதாகவுமிருக்கும். வெந்நீர் நடுத்தரமாயிருக்கும். இதன்விசயங்களின்னும் இரண்டாம் பாகத்தில் வரும் இன்ஷா அல்லாஹ்,

பதினெட்டாம் பாபு முற்றிற்று.

பத்தோன்பதாம் பாபு.

நபியூசுபு அலைஹிஸ்ஸலாமவர்கட்குரிய "மஞும்" தஃபீறென்ற கனவினது விளக்கத்தையும், அதனுலாகும் நலமிடறுகளின் பயன்களையும், பிறைக்கணக்குப் படிக்குக்காண்கின்ற "கனவின்" காரணம் பல ஹதியவைகளையும் கூறல்.

—(0:)—

முதலாவது பசுல்.

கனவுகாணப்படுவதின் காரணம்.

—(:)—

சூரியனின் சுடர் தாக்கிய தண்ணீரில் நின்றும் அதன் ஆவி; ஆகாயத்திற் பிரவேசிப்பதுபோலே; இந்த "ஸ்தூலத்தின் நெற்றியில்இரண்டு புருவத்துக்கிடையிலமைந்திருக்கின்ற றாஹானியின்சுடர், கல்பின் அறிவுடனே கலந்து தூக்கமானது, ஸ்தூலத்திற் றூக்கும் சமயத்தில் அந்த றாஹானியின் சுடர்" ஆலம், அசுவரியளவில் மேனேக்கி "மிதா"லளவிற் பிரவேசித்து கருமங்களைக் கிருகித்துக் கல்பால்அறிந்துக்கொள்வதுவே கனவு காண்பதின் காரணமாகும்.

—(:0:)—

இரண்டாவது பசுல்.

கனவுகாண்பதின் பிறைக்கணக்கு.

•—):*:(—

இபுனு அபீதாலி[illegible] அவர்கள் திருவுளமானூர்கள் பிறைபிறந்த முதலாம் நாளில் கண்டது [illegible]ல்ல. இரண்டிலும், மூன்றிலும், கண்டது; நலவுமிடறுமாயிருக்கும். நான்கு, ஐந்து, ஆறில்; கண்டது: ஒருவருடத்தில் கண்டபடிக்கு பலன் கொடுக்கும், ஏழு, எட்டில், கண்டதுமவ்வாறேயாகும். ஒன்பதில் கண்டது; உடனே பலன் தரும், பத்திற் கண்டது மெய்யானது, பதினொன்றில் கண்டது; மஞுமன்று. பனிரண்டில் கண்டபடிக்கு, பதிமூன்றில் பதினுங்கில் மஞுமன்று. பதினைந்தில் கண்டது, ஒருமாதம் அல்லது ஒருவருடத்தில் பலனளிக்கும். பதினாறில் கண்டபடி, பதினேழில். பதினெட்டில் மெய்யானதாகும். பத்தொன்ப[illegible] இருதுப, இருபத்தொன்றில் கண்டது மஞுமன்று இருபத்திரண்டு இரு

பத்திமூன்று, இருபத்திநாலில் கண்டது நலவுந் தீங்குமாயிருக்கும். இருபத்தைந்து இருபத்தாறில் கண்டது ஒருமாதம் அல்லது ஒரு வருடத்துக்குப் பிறகு கண்டபடி பலனளிக்குப்இருபத்தேழில் இருபத்தெட்டில் கண்டபடி நடக்கும் இருபத்தொன்பதில் மனாமன்று. முப்பதில் கண்டது நலம் அல்லாஹுத்தஆலா மிகஅறிந்தவன்.

மூன்றுவது பகல்.

மனாமின் தஃபீர்.

இதில் பத்து (பாடம்) விதமுண்டு, அதில் ஒன்றுவது; அல்லாஹுத்தஆலாவைக் காணக்கூடிய விதப்படி கண்டால் தீனுந்துன்யாவுமுண்டாகிப்பலாய்கள் நீங்கும் நபிமார்களைக்கண்டால்ஆலிமாவான். மலக்குகளைக்கண்டால், ஹஜ்ஜுசெய்வான். உலமாக்களைக்கண்டால், இல்மு படிப்பான்.கியாமநாளைக்கண்டால்; ஸிறாத்துல் முஸ்தக்கீமெனும்பாலங் கடப்பான். இராஜாக்கள், பொழுது நிலவு நட்சேத்திரங்களைக்கண்டால் முன்னோர் பின்னோர் யாவர்களுமுகந்து கொண்டாடத் தகுதியுடைய அறிவுமிருக்குமாகிய பிள்ளையுண்டாகும் நாடாத புறத்தினின்றும்இரண பறக்கத்துண்டாகும். அடிக்கும்படிக்குக்கண்டால், தீனுக்கு இளைப்புண்டாகும். பாங்கு, காமத்து. சொல்லவும், தொழவுங்கண்டால் மனிதர்கட்குமுன் இராஜனாகுவான். தலையிற் சீப்புக்கொண்டு வாரும்படி கண்டால், பாவம் பொறுக்கப்படும் மவுத்தானவன் ஹயாத்தாகவிருக்கக்கண்டால் ஒருவஸ்துண்டாகும், ஹயாத்தாயிருப்பவன்,மவுத்தாகக்கண்டால், சதக்காசெய்யவேண்டும் (ரொட்டி சுட்டு சதக்காகொடுப்பதாவசியகமாம்) சிரிக்கும்படி கண்டால் சலிப்புண்டாகும். அழும்படி கண்டால் சந்தோஷமுண்டாகும். சேமமாயிருப்பான். இரவு கடைசியான நேரத்தில் கண்டால், ஏழுநாளைக்கொரு விடுத்தம் நலவுண்டாகும், கிழக்குவெழுக்கும்படி கண்டால் எந்த நாளும் சுகமாயிருப்பான்.

இரண்டாவது.—பொன் வெள்ளி, வெள்ளைப்பொன், மரகதம், முத்து, சிவந்த பொன், இவைகளைக்கண்டால், தன் கை கீழாகி, (வறுமையடைந்து) சேட்டுவாங்கித் தின்பான். வெள்ளைப்பொன்னைக் கண்டால் கொஞ்சமேனு மிடிமைப்படுவான். வெள்ளியைக்கண்டால். சுத்தமான சரீரசுகமடைவான். மரகதம்முத்து இவைகளைக்கண்டால் வரிசையதிகமாகும் தலைமைத்தனமுண்டாகும்.

மூன்றுவது.—அடிக்க, வெட்ட. குத்த, கண்டால் அவன் துஸ்மன் கருபாவான், இரும்பு, செம்பு, இவ்வகைகளைக்கண்டால், இராஜாக்களிடம் விசாரிக்கப்படுவான். கோட்டைமேல் அமளி, கொத்தளத்தின் பேரிலிருக்கக்கண்டால்; துன்யாவாழ்க்கையுண்டாகும். கோட்டைச்சுவரைச் சுற்றிக்கொண்டிருக்கக்கண்டால், நிகுமத்தும் பறக்கத்துமுண்டாகி, மிடிமையைவிட்டும் அல்லாஹுத்தஆலா காத்துக் கொள்வான்.

நான்காவது:—உழுது பயிரிடக்கண்டாலும் கோதம்பு வாக்கண்டாலும் இரணபறக்கத்துண்டாகும். சிறுகோதம்பு, கண்டாலும் பறக்கத்துண்டாகும். நீளக் கயிறு, பட்டு இவைகளைக் கண்டால் நல்ல பிரயோஜனங்களுண்டாகும்.

ஐந்தாவது:—வெண்ணெய். எண்ணெய், றவுகன்எண்ணெய், நாற்றமுள்ளஎண்ணெய், இதுகளைக்கண்டால் மிடையுண்டாகும். வெண்ணெய் தயிரு இவைகளைக் கண்டால், இரணமும், சுவாத்தியமு முண்டாகும். தண்ணீர் நிலையில் நிற்கக்கண்டால் இரணம் விஸ்தீரணமாகும், தண்ணீர். வெண்ணெய் பால் இவைகளைக்கண்டால் நிகுமத்தும் பறக்கத்து முண்டாகும்.

ஆறுவது.—கனிவர்க்கங்கள் விதவிதமாய் கண்டால் மிருத்தவர்களில் நின்றும் பிரயோஜனமுண்டாகும். கசப்பான பழங்களைக் கண்டால் வறுமையுண்டாகும் மூளையைக் கண்டால் வாழ்வுண்டாகும். வாடாமல் உலராமலிருக்கும் பழங்களைக் கண்டால் இரணமுண்டாகும்.

ஏழாவது,—சீ[illegible]ரி, ஹல்வாவைக்கண்டால் ஆலத்தாரடங்களும். இபாதத்தில் மூழ்வான். மருந்து குடிக்கக்கண்டால், மிடிமைபலாய் கனீங்கி அச்சந் தீருவான். இரத்தத்தைக் கண்டால் சரீர சுத்தமாகி மிடைதீருவான். சரீர[illegible]தில் சதைதெறிக்க, மாமிசந்தின்ன மாமிசம் அறுக்கக்கண்டால் அறிவுடைய பிள்ளை மரணமாகும்.

எட்டாவது:—பொனனெழுத்துப் புடவையைக் கண்டால் வியாதியுண்டாகும். கறுத்தப்புடவையைக்கண்டால் அச்சந்தீர்ந்து இராஜாவைக் காணகவேண்டும் அழகான புடவையுடுத்தக்கண்டால் இஸ்ஸத்ததிகமாகி வரிசையுண்டாகும். வானத்திலிருந்தும்புடவை இறங்கக்

கண்டால் இரண விஸ்திரணமாகும். நீளமான ரோமத்தைக்கண்டால் மிடிமை யுண்டாகும். ரோமத்தைக்கண்டால் வெறுப்புண்டாகும். கையாலுங் காலாலுமிதிக்கக்கண்டால் பெண்பிரீதியைத் தலாகுச்சொல்வான்.

ஒன்பதாவது.—குதிரைக் கட்டிடங்களைக் கண்டால் யாவரும் வரிசையடைவார்கள். குதிரைமேல் அம்பாரி வைத்ததன் மேலிருக்கக்கண்டால், இராஜாக்கள் முஹப்பத்துண்டாகும். ஒட்டகையைக் கண்டால் தொழில்செய்வான். ஒட்டகை கூட்டங்களைக் கண்டால் ஹஜ்ஜு செய்வான்புலியைக் கண்டால் மனிதர்கட்கிடையில் அரசனாவான். மெலிந்த மாட்டைக்கண்டால் அவ்வருடத்தில் பயிரிட்டுண்பான். கொழுத்த மாட்டைக்கண்டால் அதிசயமான நவதானியப் பயிரிட்டுத் தின்பான். சிலம்பமடிக்கக்கண்டாலும் பலக்கிறங்கக்கண்டாலும் தண்டாயுதமெடுத்து சிலம்பஞ் செய்வான் யானையைக் கண்டால் நிகுமத்துடன், இராஜாக்கள் சந்திப்புண்டாகும் மானைக்கண்டால் ஆண்பிள்ளையுண்டாகும். முயலைக்கண்டால் வாழ்க்கையுடன் பெண்பிள்ளைப் பெறுவான்.

பத்தாவது.—குரங்கைக் கண்டால் யாதொரு வேலையில் பராக்காகுவான். புலிக்குட்டியைக் கண்டால் இராஜாக்களால் விசாரிக்கப்படுவான். முள்ளம் பன்றியைக் கண்டால் பகையனுறவுண்டாகும், இராஜாக்களைக் கண்டால் அரசனாக வேண்டும், நரியைக் கண்டால், பிள்ளையுண்டாகும் பூனையைக் கண்டால், ஒரு புதிய நேசமுண்டாகும்.

வல்லாஹுல் முவப்பிக்குலிஸ்ஸவாப்.

முதலாவது பாகம் முற்றுப்பெற்றது.

4 3619

بسم الله الرحمن الرحيم

الحمد لله الذي اخترع من العدم الموجودات، واظهر من الموجودات الكائنات، وابدع بحكمته في الطبائع الفاعلات والمنفعلات، واقام الاجسام التي ألفات على اربع طبائع مختلفات، وقدر المنافع والمضرات، والاسقام والصحات، والحيوة والممات، وصلى الله على سيدنا محمد عدد السكون والحركات، وعلى آله واصحابه الراشدين بالبينات، فاعلم قال الله تعالى

كلوا واشربوا ولا تسرفوا انه

لا يحب المسرفين

இரண்டாம் பாகம்.

அல்லாஹுத்தஆலா.

புகழ்.

——:(:):——

புகழ்பாவும், அதிந்திரியமாய் வியாபித்து, பரமார்த்தமாய் விளங்குகிற அல்லா சுபுஹானஹு வத்தஆலா ஒருவனுக்காயிருக்கும். அவனுகிறவன், சிருட்டிக்கப்பட்டவைகளியாவையுங் (கருணையால்) இல்லாமையினின்றுந் தெரிக்கெடுத்து, அவைகளில் உற்பத்தியாவை வற்றை வெளிப்படுத்தி, அதனதன், தன் சுபாவக்குணங்களிலே மேனுக்குரியனாகவும் அதற்கு இக்கியப்படுவதாகவேயும் தன் ஹிக்மத்தினாலைமைத்தாக் கோர்வையாகி. இருக்கின்ற உருவங்களை, ஒன்றுக்கொன்று விகற்பமான, வாதம் பித்தம், சிலேற்பனம், ஐயம்; ஆகிய இந்நான்கு குணங்களிற்றாப்பித்தி, நலம், இடறு, வியாதி, சுகம் ஹயாத்து, மௌத்து முதல்வன யாவையும், சிறப்பித்தியவன்.

இன்னம் நமது நாயகம், முஹம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் கண் மீதும், சுவனலோகத்தால் திட்டைபெற்ற அவர்களது கிளைஞர்கள் தோழர்கள் உம்மத்துகள் அனைவர் கண்மீதும் உசம்புதல், ஒடுங்குதலின் எண்ணைப்போல் அல்லாஹுத்தஆலா சலவாத்து சொல்லியருள் வாணுகவும் நீ அறிந்துகொள்.—அல்லாசுபுஹானஹு வத்தஆலா, தன்து திருவசனத்தில் திருவுளம் பற்றியிருக்கின்றான். (ஆய்த்து) எழாவது ஜுஸ்வு. பத்தாவது, ஸீன். அதன் தாத்பரியமாவது; "தின்னுங்கள், குடியுங்கள், அதனளவைக்கடக்காதீர்கள். திடனாக அல்லாஹுத்தஆலா சடப்புச்செய்தவர்களை உகக்கமாட்டானென்று."

இந்த தலீலால்; நின்றுப்பில், மட்டுத்திட்ட முண்டென்றும் அதைக் கடந்து "ஹறாம்" வியாதி, கெடுதியை வருத்துமென்றும், அந்தநேரத்தில்; தன்னாயுளைக் காப்பாற்றிக்கொள்வதற்கு, தின், குடிப்பு அவிழ்தமாகிய வைகளா லதைப்பேணிச் சீர்திருத்தஞ் செய்துக்கொள்வது ஆவசியகமென்றும், அல்லாஹுத்தஆலா, தன் அடியார்களுக்கு அறிவித்திருப்பது விளங்கப்படுவதால்; அவ்வகையான "இல்மு" அறிவுகளைச் சுருக்கி வெளிக்கிடப்படுவதில் அக்லென்னும் அப்பார்வை தெளிந்து ஆச்சரித்து அன்னோர்களதில் இலகுவாய்

சித்திபெறுவதற்கேதுவாய் இந்த இரண்டாம்பாகத்தில் வைத்திய இல்முகளில் முக்கியவைகளை மிக்கத்தெளிவாய், இன்ஸானின் உறுப்புகளைப் பிடித்து ஒழுங்காக இருபத்தாறு பாபில் வட்டுறுக்கமாய் விபரிக்கப்படுகின்ற "குலாசா" வாகவிருக்கும்.

முதலாம் பாபு.

ஒன்றாவது பசுல்.

தன் சுபாவகுணமென்னும் தபீஅத்தையும் அதிலமைத்திருக்கின்ற ஹிக்மத்தையும் விபரித்தல்.

அல்லாஹுத்தஆலா "சிருட்டித்தவைகளில் முந்தினது; தபீஅத்தில்" ஹறாறத்து என்ற சூட்டின் குணம் அதற்கு ஆதியாகிய உசும்புதலுள்ள வஸ்துக்களில் காரணங்கட்குக் காரணமானது அல்லாஹுத்தஆலாவின் குதுறத்தாகிய "கௌனிய்யத்தாகிய" உசும்புதல். பின்னர் அல்லாஹுத்தஆலா குளிர்ச்சியைப் படைத்தான், அதற்கு அசலான வொடுங்குதலிலுள்ள வஸ்துக்களின் காரணங்கட்குக் காரணமானது அல்லாஹுத்தஆலாவின் குதுறத்தாகிய "கௌனிய்யாவாகிய ஒடுங்குதல். இவை இரண்டு முதன்மையான ஜோடு. அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கின்றான்" வமின்குல்லி ஷெய்யின் கலகனா ஜவ்ஜைனி லஅல்லகும் தத்குறான் என்று. பின்பு அந்தச்சூட்டில் அல்லாஹுத் தஆலா அமைத்திருக்கின்ற உசும்புதலின் அந்தரங்கத்தால் அக்குளிரின்பேரில் சூடு உசும்பி, இரண்டுங்கலந்து, சூட்டில் வரட்சியும் குளிரில்சீதளிப்பும் பரந்து "றாஹானிய்யத்தாகிய, ஒருஸ்தாலத்தில், ஒன்றாகிய தனித்த நான்கு குணங்களுண்டாயிற்றுது. இதுதான் பசீத்து, உடைய குணத்தில் முந்தியது. பின்பு அச்சூடு, சீதளத்துடன்மேலேறைக்கிச்சென்றதில் ஹயாத்தின் குணத்தையும், "உல் விய்யத்தாகிய" அல்லாக் கெனும் மேலோகத்தையும் படைத்தான் இன்னும் அக்குளிர், வரட்சியுடன் கீழ் நோக்கிச்சென்றதில். மவுத்தின்குணத்தையும், "சுபுலிய்யத்தாகிய" அப்லாக்கென்னுங்கீழுலகத்தையும் படைத்தான். பின்பு; சடலங்கள் அச்சடலத்தைவிட்டும் பிரிந்து, ஏறியுயர்ந்து விட்டுதே அப்போற்கொற்ற அச்சடலத்தின் "நூறுகள்" அளவில் தேள்வையானதால் அல்லாஹுத்தஆலா "உல்விய்யத்தாகிய" பலக்கை "இரண்டாவதாகச் சுத்தி

வைத்தான் உடனே சூடுகுளிர்ச்சியுடனும், சீதளம் வரட்சியுடனுங் கலந்து, நான்கு "உன்சுறு" னும் பூதங்களாய்ப் பிரிந்தது. அதாவன.— வரட்சியுடனுள்ள சூட்டின்குணத்தில் நின்றும், உன்சுறுன்னாரி.—நெருப்பின் பூதமும். சீதளத்துடனுள்ள சூட்டின் குணத்தில் நின்றும் உன்சுறுல் ஹவா; காற்றின்பூதமும், சீதளத்துடனுள்ள குளிர்ச்சியின்குணத்தில் நின்றும் உன்சுறுல் மாவு. தண்ணீரின்பூதமும், குளிர்ச்சியுடனுள்ள வரட்சியின் குணத்தில் நின்றும், "உன் சுறுத்துறுபி, மண்ணின் பூதமும், உண்டாயின, இதுதான் மூன்று முறக்கபுகளில் முந்திய முறக்கபாகிய ஆலங்களின்" மிஜாஜு என்னுங்குணம்.

பின்பு "பலக்குல் அஃலாவை அஸ்பலளவில் மூன்றுமுறைதிருப்பினான் (சுற்றல்) புற்பூண்டும் பஹீமிய்யத்தாகிய உயிர்ப்பிராணிகளும் பிறந்தன பின்பு, பலக்குல் அஃலாவை, அஸ்பலளவில் நான்காவதுமுறை திருப்பினான் (சுற்றல்) இன்ஸானிய்யத்தாகிய, ஹபவாஉத்திக்கும் பிறந்தன; இதுவே முறக்கபுகளிற் கடைசியானதும் அழகானதும், நிரப்பமானதும். மேலுமிதுவே, தபயிய்யத்தாகிய இந்த இல்மில் நாம் தலைப்பட்டிருப்பதற்கு நம்முடைய நாட்டம். நபிசல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். அல்லாஹுத்தஆலா" தண்ணீர்மண் நெருப்பு, காற்று இந்த நான்கு வஸ்துக்களில் நின்றும் இன்ஸானைப் படைத்தான். அதில் தண்ணீர் மிகுத்தவன் ஹாபிஜு அல்லது ஆலிம். அல்லது பகீஹு, அல்லது கொடையாளியாயிருக்கும். மண் மிகுத்தவன், துன்யா ஆகிறத்தில் மிடிமையுள்ளவனாயும், இரத்தங்களை யோட்டிவைத்துக் கெடுதிகளையுடையவனாயு மிருக்கும். நெருப்பு மிகுத்தவன், மோசம் அல்லது அநீதமுடையவனாயு மிருக்கும். காற்று மிகுத்தவன் பொய்யையுடையவனாயு மிருக்குமென்று.

இரண்டாவது பசுல்.

நான்கு கூட்டுத் தாதுகளின் விபரம்.

முந்தியது பித்தம்- கருப்பைபோல், அது வரட்சி சூடாயிருக்கும். அதன் ஆதி, தபஇய்யத்தாகிய நெருப்பென்னும் பூதத்தில் நின்றும்பிறந்தது. அதனிருப்பிடம் பித்தா இரண்டாவது, வாதம், அது, காற்றைப்

போல்-சீதளச் சூடு. அதன் ஆதி, காற்று இருப்பிடம், ஈரல் குலே, மூன்றுவது. சிலேற்பனம் அது தண்ணீரைப்போல். சீதளக் குளிர்ச்சி, அதன் ஆதி, தண்ணீர். இருப்பிடம் நுரை ஈரல். நான்காவது, ஐயம் அது மண்ணைப்போல் வரட்சியுள்ள குளிர். அதன் ஆதி மண். இருப்பிடம் பல்குத்தி. இந்நான்கிலும் சரீர நிலையும் அதன்கெடுதியும், இணக்கமு முண்டாயிருக்கும்.

——:——

மூன்றுவது பசுல்.

நாதின் குணங்களையு மதனுடையாரங்களையுங் கூறல்.

——o——

நீ அறிந்துகொள்:—நப இய்யத்தாகிய "மிஜாஜ்" என்ற குணம் ஸ்தூலத்தில், ஒரேநிதானமாய்ச் சரிபொருந்து விசயமாகாமல் விகற்பமாய் விட்டதால் சிலது சூட்டைக் கொண்டும், சிலது சீதளத்துடன் இன்னும் வரட்சியுடன் குளிர்ச்சியைக் கொண்டும் அதிகரித்து ஐந்து குணத்தளவில் பங்காகிவிட்டது. அதில் முதலாவது குணம். சூடும் வரட்சியு மிகுத்தது; சீதளமும், குளிர்ச்சியுங் குறைந்த "மிஜாஜுல்ஸப்ரு" வியாகிய பித்தச்சேட்டையுடையவன். அதனறிகுறி- ஹாலடங்கலிலும் விரைந்தவுசும்புதல்முந்துதல்வீரத்தன்மை மிகைக்குதல். கெட்டியான விளக்கம்; மெலிந்த சரீரம். குறைந்த நித்திரை. வரட்சிக்கும் சூடுமிகுத்தலும் சிவந்த நிறமும்; வரட்சி மிகுத்தால் சிவப்புடன் கலந்த தோல் நிறமும் செம்பட்டை நிறமும். இரண்டும் சமமானுல் மஞ்சணிறமுள்ளவனுவான்; வல்லாஹு அஃலம்.

இரண்டாவது குணம். சீதளத்துடன்சூடுமிகுத்ததுகுளிர்ச்சியும்வரட்சியுங்குறைந்தமிஜாஜுத்தம வியபத்தாகிய ரத்தச்சேட்டையுடையவன் அதனறி குறி—சடலம் சளிந்து மாமிசமிகுத்து, இரத்தமதிகரித்து நபுஸ்வாடை, குணமழகு, வெட்கம்; நடுத்தரம் சீதளத்துக்குச் சூடுமிகுத்தால்; மஞ்சணிறமும், சீதள மிகுத்தால், சிவப்புடன் கலந்த வெள்ளை நிறமும் இரண்டும் சமமானுல்சிவப்பு வெண்மைக்கு மத்தியமான, சிவலை நிறமும், உள்ளவனுவான் வல்லாஹு அஃலம்.

மூன்றுவது குணம் குளிர்ச்சியும் சீதளமு மிகுத்து. சூடும் வரட்சியுங் குறைந்த "மிஜாஜுல்பல்கமிய்யி" சிலேற்பன முடையவன்; அறிகுறி- சரீரஞ் சளிந்து, கொழுப்பு மிகுத்து, சீதளமதிகரித்து, தேறுதலால், தூக்கமிகுத்து அசம்புதல் தாமதித்து, குறைந்த உ யாதொன்றையும் விளங்க முடியாமல் மறதிமிகுத்து, சீதளத்துக்குங் குளிர்ச்சி மிகுத்தால் படுக்கும் பாய்க்கு, ஒப்பான வெள்ளை நிறமும், குளிர்ச்சிக்குச் சீதளமிகுத்தால் வெண்குஷ்டத்துக்கு முடுகிய வெள்ளை நிறமும் இரண்டும் சமமானுல் ஈயபத்துக்கொப்பான நிறமும் உள்ளவனுவான் வல்லாஹு அஃலம்.

நான்காவது குணம்:—வரட்சியுடன் குளிர்ச்சி மிகுத்து சூடுஞ் சீதளமுங் குறைந்து மிஜாஜுஸ் ஸவ்தாவீ ஐயச்சேட்டையுடையவன்: அறிகுறி சடலமெலிந்து உறுப்புகளொடுங்கி, நிறங்குறைந்து; இளைத்து கலக்கமிகுத்து; தூக்கஞ்சிறந்து, "ஹிமாஇல்" சபூரிழந்து வணும்பமாகிய தங்கடங்களடைந்து நிறம் பேதலித்துமங்கியும் வரட்சியுங் குளிர்ச்சியும் மிகுத்தால், புழுதி பிரண்டநிறமும், சமமானுற் இய்யத்தளவில் சேர்ந்த நிறமும் உள்ளவனுவான் வல்லாஹு அஃலம்.

ஐந்தாவது குணம்:—தப இய்யத்தாகிய நீதி நிறையில் குணம், நீதமாய், சரியான "மிஜாஜுல் முஃததிலி" நீதிக்குணமுடையவன். அறிகுறி; கூர்மை, விளக்கம், படைகோலத்தில் நிதானமான உறுப்பு கருமமடங்களிலும் நடுத்தரமான செயலும், துலக்கமான பார்வையும், தாமதம், விரைவு; வீரத்தன்மை, கோழைத்தனம் அழகான குணம், சகலகாரியங்களிலும் கோலங்களிலும் நடுத்தரமானவன்.

வல்லாஹு அஃலம்.

——ஃ(:)ஃ——

நான்காவது பசுல்.

வியாதிகளை யறியும் விபரம்.

——:(:):——

தெளிவும் பிரகாசமுமுள்ள வெள்ளைப் பளிங்குப்போத்தலில். சிறுநீரைப் பிடித்து, அதன் குண அடையாளங்களைக் கூர்மையாய்ப் பார்த்துணர்ந்தபின். அந்நிறம் திண்ணமாய் சிவப்பளவில் சார்ந்தால் வாத மிகைப்பு. திண்ணமன்றி, மெதுவாயிருந்தால். வரட்சி, திண்ணமான வெண்மை சிலேற்பனம். இதில் தெளிந்த திண்ணமாயிருந்தால், ஐயம், இதில் தெளிந்த மெதுவ. பித்தமிகைப்பு. கலப்பற்ற சிவப்பு, சூடு. தெளிந்த மஞ்சணிறம், நோய்க்குக்காரணமாம், குங்குமம் நிறம், பித்தத்

தின் காரணம். சிறு நீர் நாற்றமாயிருந்தால் கஷ்டமான வியாதி, அதனிறம் புழுதியுடையதாயிருந்தால் ஜுரத்துக்குக் காரணம் பச்சைநிறங் குளிர்ச்சி, ஜனிக்குக்காரணம். சீதள வெண்மை நிறம், சுவாகம். அதனிறங்களைக்கட்டுப்படுத்தக்கூடாவிடில் மரணக்குறிப்பான (அடையாளமாகும்,)

ஐந்தாவது பசுல்.

தாதுநரம்பின் துடி, நடை அடையாளம் ஆறுவகையாகும்.

தடிப்பம் அல்லது விரைந்த உசும்புதல் வாதத்தின் காரணம், அதன் தானம் ஈரல் குலை, அதன் அசல் நெருப்பு. தடிப்புடன் தாமதித்த உசும்புதல் சிலேற்பனத்தின் காரணம் அதன்தானம், நுரை ஈரல், அதன் அசல், தண்ணீர், விரைந்தது உசும்புதலுடன் மெதுவானது, பித்தத்தின் காரணம் அதன்தானம்; ஈரல் குலையின் பித்து, அதன் அசல் காற்று. தாமதிப்புடன் மெதுவானது ஐயத்தின் காரணம், அதன் தானம் பல்குத்தி, அதன் அசல் மண்ணு நடுத்தரமானது சலாமத்துடைய நன்னிலைமையின் காரணம், தீர்க்கமான மெதுவுடன் விரைந்தது மரணத்தின் காரணம், தாமதமும் விரைவும், திண்ணமும், மெதுவுமன்றியே ஒரே விதமாய்க் கட்டுப்பட்ட நடுத்தரமானது சலாமத்தும் சிஹ்ஹத்தின் காரணமாகும்.

முதலாம் பாபு முற்றிற்று.

இரண்டாம் பாபு.

இன்ஸானில் செல்லும் வஜீபனங்களை அறிதல்.

ஒன்றாவது பசுல்

நீ அறிந்துக்கொள்—சரீர நிலைமையும், ஸ்தூலத்தின் உயிரின் [illegible]படும். வஜீபனத்தைக் கொண்டாயிருக்கும், அதில் நின்றுமே சரீர இணக்கமும் பிணக்குமுண்டு; பிரயோஜனத்தில் இந்த விடம் மிக்க முக்கியம், இதை விளங்கியறிவதில் புத்திமான்கள் பின்னடையார்கள். அதாவது; திடனாக வஜீபனம், சமியலாகி, சமியல் செய்யு

மியந்திரங்களாடங்களிலும், விசயமாய் விட்டதானால்; தபீஅத்தென்னும் அதன் "சுபாவகுணம்கூடாகித்தின்பதைத்தேடும், அதுவழக்கத்தினாலறிப்பட்ட பசித்தல், அப்பசித்தலுக்கு வஜீபனத்தின் ஆஸ்பதம் (மாதா) கிடைக்காவிட்டால் ஸ்தூலத்தின் அசலாகிய, ஈரப்பசக்கில் கொளுவித்தின்று முடிந்தபின் ஆதியில் ஆஸ்பதமாகவமைந்த" கரீஜிய்யத்தாகிய சூட்டி லப்பசிகொளுவி, மரணமாவதற்குக் காரணமாகும் ஆகையால் பசித்த நேரத்தில் வஜீபனத்தின் ஆஸ்பதங் கிடைத்துக்கொண்டால், தன் சுபாவ குணத்து தத்துவத்தால், கூர்மையான பற்கள் அதைத் தழித்து; வஜீபனங்களின் அகப்பையாயும், வார்த்தைகளை விளங்கப்படுத்த வுதவி பண்ணியும் அல்லாஹுத்தஆலா கற்பித்துவைத்த நாவு தறித்தந்த உதப்பி முரசளவில் வலமிடமாய்ப் பிரட்டித் திருப்பிக்கொடுக்க அதையது அரைத்து அந்த வஜீபனம் வரட்சியாக விருந்தால் அதற்குபகாரமாய் அல்லாஹுத் தஆலா அந்நாவுக்குத் தாழாலே படைத்திருக்கின்ற புதிதாய் இரண்டு ஆற்றளவிலாக்கி அதை யரைத்து மெதுவானபின், நாவு, தொண்டைக் குழியளவிலும் அக்குழி மேல் குடலின் வாயாகிய பதப்பளவிலும் செலுத்தவும் குடலாகிறது; வயிறும், கழுத்துமுள்ள சீசாவைப் போலிருப்பதால் அரைத்த வஜீபனத்தைத் தள்ளிவைத்து வயிற்றளவிற் கொஞ்சங் கொஞ்சமாயிறங்கியது நிரம்பி விட்டால், அதுவே அறியப்பட்ட பசிதீருதல், அவ்விதம் வயிறு நிரம்பியபின் அவைபடங்களுங் கெட்டியாகிய சேர்மானமாயொன்று சேர்ந்து கூடதிகரித்த வஜீபனங்களிந்து ஈரப்பசக்கினுதவியால் இளகிச் சமித்து, அல்லாஹுத் ஆலா, அக்குடலுக்குக் கீழ்படைத்திருக்கின்ற விஸ்தீரணமுள்ள பொத்தல் வழியாய்க் கொஞ்சங் கொஞ்சமாய் மணிக் குடலளவி லிறங்கும்; அப்பெருங் குடலில் ஈரப்பசக்குக் குறைவாயிருந்தால் அவ்வஜீபனம் அக்குடலில் சூடு மிகைத்து வரட்சியாகி அவ்வீரப் பசக்கு சூடாகித் தண்ணீரைத்தேடும், இதுவே அறியப்பட்டதாக வுணர்ச்சி, அத்தண்ணீரின் ஆஸ்பதமுண்டாகாவிடில் அச்சூடு அசலிய்யத்தாகிய அவ்வீரப் பசக்கையுணர்த்தி மரணத்துக்குக் காரணமாய் விடும், தண்ணீரின் ஆஸ்பதமுண்டாகிவிட்டால், அப்பசையினுதவியால் தபஇயத்தாகிய குணம் வேலை செய்து அவ்வஜீபன படங்களையுஞ் சமியல் செய்து, பெருங் குடலுக்குக்கீழ் இடது பாகத்திலுள்ள அம் மணிக் குடலளவில் முன்போலிறங்கியதைத்தன் சுபாவ குணம் இரண்டாமுறை சமியலாக அக்குடலில் சமியல் செய்து; வெண்மையானதும்

றட்பானதுமான நீராயானபின் அதை அதற்குள்ள வாய்வழியாய் ஈரல் குலையளவில், செலுத்தும், அது, கல்புக்குக்கீழ் வலது பாகத்திலுள்ள சிவந்த இறைச்சித்துண்டாம், அவ்விறைச்சித்துண்டு, தன் சுபாவகுணம் அதை மூன்று முறை சமியல் செய்து நான்கு வகையில், விகற்பமாகிய சிவந்த இரத்தமாகி விடும், அதில் முதலாவது; சப்றாவிய்யாகிய, பித்த நுரை, அதற்காக அல்லாஹுத்த ஆலா, குடலுக்கும் ஈரல் குலைக்கும் மத்தியில் குறுக்கிட்ட "பித்தென்ற ஓர்பையைப் படைத்திருக்கின்றான், அதற்கு ஈரல் குலையுடன் சேர்ந்தவாயொன்றும், அவ்வாயால் அந்நுரையைச் சுவைத்திழுத்து அந்த நுரையைத் தனக்குள்ளவாயால் தானறிந்த வேலையில் குடலளவிற் செலுத்தி, குடலெரித்து, தரித்து சமியலாகிற தின்பேரிற் குடலுக்குதவி செய்யும். இரண்டாவது; "பலுலத்து" சவ்தா விய்யாவாகிய கருநிற ஐயமென்ற கழிவு அத்துடன் உறைந்த இரத்த மிருக்கும், அதற்காக அல்லாஹுத்த ஆலா மூன்று வாயுள்ள பல்குத்தி என்ற கூடையைப் படைத்திருக்கின்றான். ஈரல் குலையளவிற்சேர்ந்த முந்தியவாயால் அக்கழிவைச் சுவைத்திழுத்துஒவ்வொரு நேரத்திலுங் கொஞ்சங் கொஞ்சமாய் குடலளவிற் செலுத்தும். இரண்டாவது வாய், புளிப்பெனும் பற்றுதலாலும், மூடிவதாகிய தட்டுதலாலும் சமியல் கெட்டிபடுகிறதற்கு அதற்குதவி செய்து பெலமாகும். மூன்றாவது வாய்,—"சுறுமு" என்ற தொலியுடன் சேர்ந்திருக்கும் அந்தக்கழிவில் மிஞ்சியதை அந்த வாயளவிற் செலுத்தி அது வழமையா யிறங்கப்பட்ட மலத்துடனிறங்கிவிடும், மூன்றாவதுவகை, வெண்மையாகிய நீளக்கூடிய தண்ணீர் சம்மந்தமாகிய கழிவு; இதற்கு; அல்லாஹுத்த ஆலா (இருதயம்) மாங்காயைப் படைத்திருக்கின்றான். ஈரல் குலையில் நின்றுமதைச் சுவைத்திழுத்து அதில் நின்றும், சிலது மாங்காயுடைய மாமிசம் கொழுப்புக்கு, ஆஸ்பதமாகி மிஞ்சிய சிலது, நீர்ப்பையளவி லிறங்கி அதிலதன் சுவாபக் குணமதை நீராகச் செலுத்தும், அதுவே நாம் வழமையில் தெரிந்த சிறு நீர்.

நான்காவது வகை:—அதுதான் கலப்பற்ற வஜீபனம் முன்செலுத்தப்பட்ட கழிவுகளெல்லா நீங்கி, கலப்பறுதலாய் துப்புரவு செய்துவைத்திருக்கின்ற அந்த வஜீபனத்திற்கு அல்லாஹுத் தஆலா ஈரல் குலையின் முதுகின்பேரில் சுரங்கமென்னும் பெரிய வோர் துவாரத்தைப் படைத்திருக்கின்றான். அது இந்த வஜீபனத்தின் கலப்பறுதலைக் கொஞ்சங் கொஞ்சமாய்ச்சுவைத்திழுத்து. ஒருசாஅத்து அதில்நடந்த பின்இரண்டு

நரம்பளவில் அது பங்காகும். ஒன்று சரீரத்தின் மேல் பாகத்தில் மிகுதமாகிய பெரிய சிறிய நரம்புகளளவிற் பரந்துபெரியநரம்பானாலும், சிறிய நரம்பானாலும் ஒவ்வொன்றிடங்களிலும் அதனதன் பாகத்தைக் குடித்து அதை மாமிசத்துக்கும் இரத்தத்துக்கும் ஆஸ்பதமாகவும் சரீரநிலைமையாகவும் தவணைவரையிலும் அதில் றாஹின் தரிபாடாகவுமாகும்.

மேற்படி வஜீபனம் சஹீஹாயும் நிதான நிலையாயுமிருந்தால் அதில் நின்றுஞ் சரீர சுகமுண்டாகி அதில் நின்றும் தன் சுபாவகுணம் சஹீஹாகிய புகையைக் கல்பளவில் செலுத்தி அப்புகை மூளையிலும் சடலங்களிலும் சரீ[illegible]கந்துடனேறி சஹீஹானவனாய் நீங்காமற் றரிப்பட்டிருப்பான். அவ்வஜீபனத்தின் கலவனில் சிறிது அதிகரித்துமிருந்தால் மிகைத்து விட்டால் அது தானதற்குமாற்றம். அந்தக்குணங்கள் அதிகரித்தால், தான் வியாதி; தங்கடங்களுண்டாகிடும். அதைத் தனிதனியாய் விபரிப்பாம். இன்ஷா அல்லாஹுத் தஆலா.

——:():——

இரண்டாவது பசுல்.

பித்தக் கலவன் அதிகரிப்பு.

——:(..):——

தேன், வெங்காயம், செம்மறியாட்டின்மாமிசம்இவைபோற்கொற்ற வரண்ட சூடாயும் பித்தச்சேட்டையாயுமுள்ள வஜீபனங்களின் தின்மிகுத்தவனுக்குத் தன் சுபாவகுணம் வயிற்றுள்ளில் நின்றும் மூளையளவில் நிதானமாய் நிலைபடாது. பித்த சம்மந்தமுள்ள புகை ஆவியைப் புகைத்து விடுவதால் அதில் நின்றும், தலையில் பொட்டுவலி கடின வியாதி நித்திரைக்குறைதல், நரம்புகள் தடிப்பாதியதுள்பட அக்கினி இவைகளுண்டாகும். அதற்குப் பொட்டில் சேர்வையைக் கட்டியுங் குளிர்ச்சியானதைத் தின்னும் வரண்ட சூடுள்ளதுகளைத் தவிழ்ந்தும், பக்குவஞ்செய்து வந்தால் உடனே மாறிவிடும். அது மிகுத்ததிகரிக்கும் வரையில் பக்குவஞ் செய்யாமல் பொடு போக்காயிருந்தால், கடினமான சங்கடங்கட் குட்படுத்தும். அதாவது, மூத்துக்குமுடுகிய சிவந்தநிறம் அக்கினி மஞ்சள், காமாலை கடினவிரைப்பு, சுரப்பு, வீக்கம் முறைகாச்சல், அக்கினி; காதின் உள் காற்று காந்தல், தலை மயக்கம், நெஞ்செரிவு, கல்பு பெலவீனம், வயிறு நிறம்பாதல், தலைவலி, சூடு தள்ளாட்ட மயக்கம் கண்ணில், நீர் பீழை, யுண்டாகுதல் முகக்கறுப்பு,

புள்ளி, சொறி. வயிறு ஊரல் குலை குடி தண்ணீர் மிகவுந்தாகிக்கல், வாய்க்கசப்பு, சிறு நீர் கட்டுப் படுதல், குன்மம். இவைகளிலொன்று வெளியாகி விட்டால் அந்தப்பித்தத்தைத் தணிக்கின்ற தளவில் தேள்வையாக வேண்டும். அதன் அதன் பரிகாரம் பின்னால் சொல்லப்படும். இன்ஷா அல்லாஹுத் தஆலா.

மூன்றாவது பசுல்.

வாதக் கலவன் அதிகரிப்பு.

நெய்ப்பசக்கமைந்த சமையலான "ஹல்வாபோல் வனசீதளச்சூடும் வாதச்சேட்டையுமிகுந்தவஜீபனங்களின் தீன் மிகுந்தவனுக்கு, இரத்த மிகுத்து, சரீரத்தில் தன்சுபாவகுணம் உசும்பி மூளையளவில் சீதளச்சூடாகிய, புகையைப் புகைத்து அந்த ஆவியால், தலைவலியும், நரம்பு கெட்டியும் அக்கினி கொதிப்பும் சடலம் வெந்து சோர்வதும், ஐயறிவுகள் பேதகப்படுவதும், விசயமாகும், பொட்டில் சேர்வையை கட்டியும், (சிறுக்கா) காடியைக் குடித்தும், புளிப்பு மாதளையைத் தின்னுவதும், மற்றப்புளிப்பு வஸ்துக்களைத் தின்னுவதுமாய் வந்தால் அதைப் போக்கி சரீரம் நல்ல நிலமையில் வந்து சரீர சிஹ்ஹத்து முண்டாகும். அதிகரிக்கும் வரையிலிருந்தால். கெடுதியான வியாதிக ளளவில் விசயமாக்கிவிடும். அதாவது இரத்தக்கொதிப்பு, கண் சிவக்குதல், கண்வலி, சோர்வு, ஜுத்ரி அம்மை, சிலந்தி, கட்டு வீக்கம், சுரப்பு, மறப்பு, முக சிவப்பு, வாயினிப்பு, கிறுகிறுப்பு, கண்மங்கல் கடைக்கண்ணின் புண், புள்ளி, கிருமி, பிளேக் இவைகளுண்டாகும். அந்நேரத்தில், "பஅது ஹஜாமத்து" தலையிலும் சரீரத்திலும் நரம்பைக் குத்தி இரத்தமெடுக்க வேண்டும் அதன் பரிகாரம் பின்னால்சொல்லப்படும். இன்ஷா அல்லாஹ்.

நான்காவது பசுல்.

குவாளை அதாவது, சிலேற்பனக் கலவன் அதிகரிப்பு.

பால் கனிவர்க்கமாகிய சீதளக் குளிர்ச்சி யுள்ளவஸ்துக்களை மிதுபோல் வனசிலேற்பனச் சேட்டையுள்ளவஜீபனங்களையு மிகவாய்

பொசிப்பவனுக்குத் தன் சுபாவகுணஞ் சரீரத்தினின்று மூளையளவிற் சீதளக்குளிர்ச்சியாகிய (புகை) ஆவியைச்செலுத்தும். அதனால் சரீரத்தில் அசதி, மொழி சோர்வு, அறிவு பார்வை மந்தம் விசயமாகி சிலேற்பன வியாதிகள் வெளியாகும். அதற்கு நேராகிய தேன், சுக்கு இஞ்சி மிளகு, இன்னு நுட்பமாகிய வரண்ட சூடுள்ளவஸ்துக்கள்போல்வனவற்றைக் கொண்டு முபயோகித்து வந்தால் சரீரசுகநிலமையுண்டாகும் அங்ஙன முபயோகிக்காவிடில் அவ் வியாதிக ளதிகரித்துப்போக்குதற்கு கஷ்டத்தைக் காட்டும். நீடித்துக் கொல்லப்படுகின்ற வியாதிக்காளாகுவான். அதாவது வெண்குஷ்டம், வழக்கமல்லாமி நரைக்குதல் மிகுந்ததும்மல், நாக்குமந்தம், குறைந்த ஜிமாஃ (தாமதித்தல்) சிறு நீர்மிகுத்தல், சீதள இருமல், எச்சில் மதுரமாகுதல், தடும்பல் பிடித்தல், நீர் தோஷம்போல் ஊது மந்தம், எகிரில் புழு உற்பத்தி பல்வலி, பெருமூச்சு பறியுதல், பக்கவாதமாகிய கடினவியாதி, ஒருவாரம் வரையில் கூடின்றி மூடி இருந்து, பின்பு வயிறுள்ளில் நின்றும் மூளையளவிலும் பின் சளி மடங்கலளவிலும் வனுப்பமான அக்கினி யெழும்பி சுரத்தை வருத்தும். அது, நிவாரணையாகும். எனினும் மிகுந்தவர்கள் மரணமடைவார்கள். இவ்வியாதிகளி லொன்றேற்படுகில் உடனே சிலேற்பனத்தைத் தணிப்பிக்குங் குடிப்புகளி லாயத்தமாகவேண்டும். அதன் விபரம் பின்னால் சொல்லப்படும். "இன்ஷா அல்லாஹ்"

ஐந்தாவது பசுல்.

கறுப்பு இரத்தமெனும் ஐயக்கலவன அதிகரிப்பு

பருப்பு உளுந்து பயறு மாட்டுமாமிசம், கத்திரிக்காய் இவை போன்ற "சவுதாவிய்யத்தாகிய" கறுத்த இரத்தமெனும் ஐயச்சேட்டையுள்ள வஜீபனங்களில் மிகப்பரிமாறு பவனுக்கு, அவனில் ஐயமுசும்பி சவுதாவிய்யத்தாகிய வியாதிகள் வெளியாகும். அதாவது திரேகஅசதி, தாகமதிகம் நித்திரை, குறைவுகளுண்டாகும் அத்தருணத்தில் தேன், சறுபத்து இவைகளைக் குடிக்கவேணும் அதாவது; நுரை நீக்கிய ஒரு இருத்தால் தேனில் சுக்கு, மிளகு, முஸ்தக்காய் வகைக்கு ஒரு திற்கத்திடை இடித்துப் போட்டுக் காய்ச்சிக்கொள்ளவும், அல்லது மடுவுக்குக்கீழ் கறந்த ஆவின்பாலைச் சருக்கரையுடன் சேர்த்துகுடித்தும், அல்

லது இலேசாகியசீதளச்சூடுள்ள வஸ்துக்களடங்கலையுந் தின்று பக்குவஞ் செய்து அவசியமாய் அவ்வியாதியைத்திருப்புவேண்டும். அல்லாஹுத் தஆலா நிவாரணைசெய்வான். பொடுபோக்காய் விட்டுவிட்டால், வியாதிகள் நீளித்துப் போக்க அரிதான விசயம் நேரிடும். இவ்வியாதிகள், குஷ்டம், சிரங்கு, சொறி, வங்கு, பக்கவாதம், ஆகிய கொடிய வியாதிகள், இரண்டுநாள் மறைந்திருந்து மூன்றாநாளாயத்தமாகி நிற்காமல் வந்துக்கொண்டேயிருக்கும், முறைக்காய்ச்சல் யானைக்கால் மொத்தி, ஈரல் குலைவலி, சிறுநீரடைப்பு, தலை, கை, காலில், புள்ளி, பத்துநரம்புள்ளி, அரும்பாரை, நரம்புவியாதி காதிரைச்சல், புண்கள், கண்ணில் கெருநீர் வடியுதல், சூலை, கைநடுங்கல், தலைவலி, ஓக்காளத்துடன் வாந்தி, சீரைப்பூச்சி, மஞ்சட்காமாலை, உறுப்புகள் வரட்சி, வரண்ட இருமல், இவைகளுண்டுபடும். அத்தருணத்தில் "சற்றா" என்னுங் கபத்தைத் தணிக்கும்படியான குடிப்புகளைப் பரிமாறுதல் ஆவசியகமாகும். அது பின்னால் வரும். இன்ஷா அல்லாஹ்.

ஆறாவது பசுல்.

நன் சுபாவகுணத்தினறிகுறி.

சரீரமும் ரோமமுங்கறுத்தால் சூடு, அல்லது குளிர்ச்சி சரீரங்கொழுத்து, சளிந்து மாமிசமிருத்தால், சீதளச்சூடு. கொழுப்பு மிகுத்தால் குளிர்ந்த சீதளம். தூக்கமிகுத்தால் சீதளம், அதுகுறைந்தால் வரட்சி. இருவகையு நடுத்தரமானாலும், உறுப்புகள் நிதானமான விஸ்தீரணமானாலும் சூடு. அவ்விதமில்லா விட்டால் மாற்றம், கனவில், மஞ்சள் சிவப்பு ஒளிவு, நிறங்களைக்கண்டால் சூடு. இல்லாவிடில் மாற்றம். நாம்புவலுத்து விரைவாய் நடந்தால் சூடு. இல்லாவிட்டால் மாற்றம். சிறுநீர் கூர்மையாயும் மங்கலாயும், நெருப்புச் சத்தாயுமிருந்தால் சூடு. இல்லாவிடில் மாற்றம் வாடையுண்டாயிருந்தால் சூடு. இல்லாவிடில் மாற்றமாகிய குளிர்ச்சியென்றறியவும்.

ஏழாவது பசுல்.

(சிக்கை) வியாதியை ஆராய்ந்து மருந்து செய்வதன்றிசுஸ்தப்படுத்தல் வைத்தியனுக்குள்ளதல்ல வென்பதைக் கூறல்.

நீ அறிந்துகொள்.—பூராயமும் தேர்ச்சியும் அடைந்த கூர்மையான வைத்தியன் பேரில் நோயாளியின் வியாதியை சுஸ்தப்படுத்தல் உரித்தன்று. வயதை அவ்வளவனதிகப்படுத்தல் கடந்த சொல்லாயிருக்க ஆனால் வியாதியும் வியாதியுடையவன் ஹாலையு நோட்டமிட்டு அவிழ்தப் பிரயோகஞ்செய்தற்குக் காரணங்காணப்பட்டால்மருந்துசெய்வான். சுஸ்தப்படுத்துதலின் தத்துவம் அல்லாஹுத்தஆலாவின் நாட்டத்தினுள்ளதாயிருக்கும். அவனன்றி வயதை அதிகப்படுத்தலும் சுகப்படுத்தலும் எவர்களுக்குமுரியதன்று, இன்னும், வைத்தியர்களும், மற்றவர்களும் அவரவர்கள் மவுக்கைக் கட்டிக் கொள்கிறதும், குல்வத்து, தன்னுவன்குறையாமலிருக்கக்கட்டுப்படுத்திக்கொள்வதுங் கூடுமென்பது சொல்லத்தகாத கடந்த சொல்லாக இருப்பதோடு ஒவ்வொருவருக்குமென்ற தவணையை ஏத்திக்கொள்வதும் பாலியப்பிராயத்தை அவ்விதமாகவே தரிப்படுத்திக்கொள்வதுங் கடமையல்ல. திடனாக, கீர்த்தியடைந்த பண்டிதர்களில் "ஜாலீநூஸ்" வயிற்றுப்போக்காலும் அருசத்தாலீஸ், குஷ்டரோகத்தாலும், புக்றாத்து" வாதரோகத்தாலும், அபுலாத்தூன், ஈரல் குலை வியாதியாலும், சக்றாத்து "கண்குருடாலும் மவுத்தானார்கள். அல்லாஹுத்தஆலா மேலாம்பரமானவன், தங்கடங்களைக் கொண்டு பிடித்தால் அவனன்றி நீக்குவாரில்லை, அதன் பாத்தியம் அதைப் படைத்தவனுக்கேயுரியது. பின்பு வைத்தியன் நோட்டமிட்டதில், நோயாளியை ஹலாக்களவில் இருப்பதாய்த் தெரிந்தால் மருந்து செய்யாமல் நிறுத்திக்கொள்ளுவான்.

எட்டாவது பசுல்.

(ஹலாக்கு) மரணத்தை வருத்தும் சபபு மூன்று.

ஒன்றாவது.—வெட்டுதல் இடிந்து விழுதல், தடுமாறி விழுதல் நெருப்புக்கரிக்குதல், தண்ணீரில் ஆழ்தல், இவைபோன்றவைகள் விஷயமாகியநேரத்தில், திடனாக அல்லாஹ் அடக்கலும் கல்பானிற் சிக்குண்டு பின்பு ஒரேவிடுத்தத்தில் வெளியாகிவிடும்.

இரண்டாவது.—அந்த நான்கு கலவனில் ஒன்றதிகமாகிறதாகவிருக்கும். அந்தக்கலவனுக்கு மாற்றம் வெளியாகி அல்லாஹுத்தஆலா அவன் ஹலாக்கை "தக்தீரி"ட்டவனாயாகிவிட்டால் அசலிய்யத்தாகிய சாப்பசகுபனாவாகி "கரீஜிய்யத்தாகிய சூடு கொஞ்சங் கொஞ்சமாய்

தூர்ந்து வியாதிகடிசாதி ஸ்தூலத்தைவிட்டும் றூஹு புறப்பட்டுவிடும். அல்லாஹுத்தஆலா மிக அறிந்தவன்.

மூன்றாவது.—தபஇய்யத் தாகிய "வழக்கமாகக் காணப்பட்ட மவுத்து, அதாவது, இன்ஸானுடைய மேற்படி நான்கு ஹால்களும் தீர்ந்து விடுகிறதாகவிருக்கும் இடுகை, பாலகனின் வயது சீதளச் சூடாயிருக்கும், அதன் குணம் அதில் ஹயாத்து "புலூகு" வரையிலதிகமாகிறதாயிருக்கும், "புலூகு" பதினைந்து வயது அதிற்கடைசி இருபது வயது வரையிலும், பின்பு வரட்சியுண்டாகும், வாலிபமான காலத்தில் மிகைப்பு வரண்ட சூடுண்டாகும், வாலிபம் நாற்பது வயது, பின்பு தண்ணீர்ச் சேட்டைவெளியாகிகுணத்தைக் குளிராக்கி, நரையுண்டாகித் தத்துவங் குறைந்து நடுத்தரமான வயதில் குணம் சீதள குளிர்ச்சியுண்டாகும், அது எழுபது வயது வரையில், அதன் கடைசி என்பது வரையில், பின்பு மறைந்திருந்த வரண்ட குளிர்ச்சி வெளியாகும் ஹயாத்துடைய குணமடங்குமது பெலவீனமா யிருப்பதால் இது கிழடு எனும் வயது வரையிலுமாயிருக்கும், அசலிய்யத்தாகிய ஈரப்பசக்கும், கரீஜிய்யத்[illegible] சூடும் நீங்காமற் பழுதுண்டாகும் வரையில் தூர்ந்துக் கொண்டேவரும், மிகைப்பில் நூற்றிருபது வயது வரையில்; சுருக்கத்தில் அது மிகுகமாவதற்கு மட்டுத்திட்ட மில்லை. அறியப்பட்ட தவணையில் அல்லாஹுத்தஆலா கட்டளை இடுவதன்றி, பின்பு ஹயாத்தின் குணம் "பளுவாகி" விடும், நாம் சொல்லி வந்ததுபோல் அதுதான் மனிதர்களுக்கு கற்பிக்கப்பட்ட தபஇய்யத் தாகிய மவுத்து, அல்லாஹுத்தஆலாவே "கைபு" களை மிக்க கெட்டியா யறிந்தவன் அல்லாஹு அஃலம்.

ஒன்பதாவது பசல்.

மவுத்து முடிகினவனுக்கும் முடிந்தவனுக்கு முரிய அறிகுறி.

மவுத்தின் அடையாளத்தை அல்லாஹுத்தஆலாவே தவிர மற்ற யாருமறியார்கள் "பிஅய்யி அர்லின்தமூத்து" என்ற ஆயத்துக்காக, ஆகிலும், தஜ்ரிபா, அனுபோகத்துடைய இமாம்கள் (ஷறஇல்) மார்க்கத்தின் படிக்குப் பெரும்பாலும் வெளியரங்கமாய்த் தோணப்படுகின்ற சில அறிகுறிகளைக் கூறியதின்படி, மவுத்து முடிகினவனுக்குரிய அடையாளமாவதில், ஒன்றாவது; இரண்டு பாதமும் சோர்ந்துவிடும் அதை ஊணிவைக்கத்திராணி பெறார்கள், இரண்டாவது; மூக்குவளைந்து கோணிப்போம், மூன்றாவது; இரண்டு பொட்டும் அழுந்தித் தாழ்ந்து காணும், நான்காவது; இரண்டு விதைக் கொட்டையுங் கட்டுவிட்டு பெலவீனமாவதற்கு இரண்டு கொட்டையின் பைதொலி நீண்டிருக்கும் ஐந்தாவது; முகத்தின் தொலி நீண்டும் சுருக்கமுண்டாகி மடிப்பைக் காணப்படும், "ஆலங்கிரிய்யா"

இன்னும் சனதுள்ள கித்தாபுகளிற் கூறப்படுகின்றனவாவது; இன்ஸான் மவுத்தாக நாற்பது நாளைக்குமுன்—மலக்குகளிடத்தில் அவனுடைய ரிஸ்குமுதலிய கணக்குகளை முடிவுதல் செய்யப்படும், அவனின் மவுத்துக்குரிய அடையாளங்கள் மலக்குகளுக்கு வெளியாகி அவனுயிருடனிருக்க மலக்குகளிடம் "மையத்தென்று பெயரிடப்பட்டு அலைந்து நடப்பான், அப்படிப் பெயரிடப்பட்டபின் அவனுக்குத்தன் ஷெய்கின் "தரீக்கா" அல்லது நுஜூமின் இல்முபடிக்குச் சில அடையாளங்கள் மவுத்துக்காக வெளியாவதும், உண்டென்று, இன்னும், மவுத்துக்கு நாற்பது நாளிருக்க "குத்புத்தாயிறு" என்ற நட்சத்திரம், மறைவாய்த் தோன்றுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

கப்பல் வெள்ளிகளின் நங்கூரமுளையாக விருக்கும் அதற்கு வெளியாகும் நடையில்லை, கப்பல் வெள்ளி அதையே சுற்றிக்கொண்டு வரும். அதற்கு நேரில் வலது புயத்தையாக்கி அதன் பார்வை இடது மார்பில் விழும்படி நின்றவனின் முகத்துக்கு நேரிட்டதிசைதான், நமது கீழ் தேசத்தார்கட்கு, "கிபுலா" என்றுசொல்லப்பட்டிருக்கின்றது, சனதில்லாத ஒரு "நுஸ்கா"வில் கூறப்பட்டதாவது, மவுத்தின் அடையாளம் "ஆறு" அதாவன, முஹர்றம்,ஸபுரில் சந்திரனும், றபீஉல்அவ்வல், றபீஉல் ஆகிறில் சூரியனும், ஜமாத்துல் அவ்வல், ஜமாத்துல், ஆகிறில் நெருப்பும், றஜபு, சஃபானில், தண்ணீரும், றமலான், சவ்வாலில் தன் நிழலும் துல்கஅதா, துல்ஹஜ்ஜில் வானமும் பேதகமாய்க் காணப்படுமாம், பேதகமாய்க் காணப்படுபவன், அப்பேதகமுண்டான மாதத்தில் மரணமாவான், இன்னும் பிந்திய இரண்டு மாதத்தில் சூரியனும் சந்திரனும், மங்கலாகும், ஆனால் இச்சொல்லுக்குச் சரியான சனதுகளிழந்திருப்பதுண்மை, எனினும் கைபுகளை யறியப்பட்டவன் அல்லாஹுத்தஆலாவாயிருக்கும், இவ்வடையாளங்களை சஹீஹாய் அறியப்பட்டவர்கள்,பாக்கியவான்களாகும்.

இன்னுங் "கிஷ்டானன்" என்ற கருமுழி, கண்ணின்மேல் நிமைபுள்ளிலேறிச் சொருகுதலும்மவுத்துக்குமுடுகுதலான அடையாளமாம்.

சல்மானுல் பாரிஸீ றலியல்லாஹு அன்ஹு அருட்செய்தார்கள், மவுத்து முடுகிய நேரத்தில், மூமினானவர்களின் நெற்றி வேர்த்து இரண்டு கண்ணில் நின்றும் தண்ணீர் வடிந்து இரண்டு மூக்கும் விரியும் அவன் அல்லாஹுத்த ஆலாவுடைய றகுமத்தளவிற் தரிபட்டவன், தண்ணீரில் மூழ்க்கப்பட்ட வனைப்போல் மூழ்கி அவ்வனின் நிறம் நூர்ந்து இரண்டு உதடும் சிவந்து விட்டதானால் அவன் அல்லாஹுத்த ஆலாவின் அதாபில் தரிபட்டவின் "துஹபத்துல் மர்லிய்யா."

மவுத்தாய் விட்டவனுக்குரிய திட்டமான அடையாளம் சடலத்தில், பேதகத்தையும், கெட்டவழிடையையும் காணப்படுமென்று, ஆலங்கிரீ முதலிய பிக்ஹு கித்தாபுகளிற் சொல்லப்பட்டிருக்கின்றன, இந்தக் கித்தாபு; இந்த இல்முசட்குப்பாத்திய மற்றவர்களிட மகப்பட்டு அவர்கள், இதைப்பார்த்துப் படித்துக்கொள்வதைப் பயந்ததற்கிது இந்த பாபில் என்பரி சோதனைக்குரிய அடையாளக்குறிப்பு (தி. ஆ,) இதைக் குறிப்பிடவில்லை, வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப் இதற்கு முந்திய; பசுலுகளிலும்சில அறிகுறிகளைக் கூறப்பட்டிருப்பது மறையாததன்று, இன்னும், இரண்டாம் பாகம பதினைந்தாவது பாபில், வயிற்றில் மரித்த பிள்ளையினடையாளமும், இருபத்தி நான்காவது பாபில், மவுத்தினடையாளமும், வயிற்றில்பிள்ளை மரித்ததினடையாளமும், பதினான்காவது பாபிலும் பின்வரும் "இன்ஷா அல்லாஹுத்த ஆலா."

இரண்டாம் பாபு முற்றிற்று.

மூன்றுவது பாபு.

ஹிஜா இய்யத்தான அறபிய அட்சர வெழுத்துகளின்
பிரயோஜனமும், விபரமும், அதனால் வியாதிகட்கு
அவிழ்தம்போல் பக்குவஞ்செய்தலும், மற்றைய
அவிழ்தங்கள் குறிப்பிடப்பட்ட பத்திய
மும் அட்சரம் அஸ்மாக்களைப் பிர
யோகிக்குஞ் (சறுத்து) ஒழுங்குகளையுங் கூறல்.

——(.):——

ஒன்றுவது பசுல்.

அறபிய அட்சரமுமதன் பிரயோஜனங்களும்.

——(:-:)——

அதில் "அபூஜஹில்" அல்லது "பிற்அவுன்" என்றபெயர்களை அறபியத்தான அட்சரத்தால், எந்த வொரு வஸ்துவிலெழுதப்பட்டாலும் [illegible]த சங்கையாக்கிக் கொள்வதன்றி, எறியப்படுவது "மக்றூஹு" ஏனென்றால்; அவ்வட்சரங்கட்கு, சங்கையுண்டாயிருக்கின்றதென்று "சிறுஜீ" முதல்வன கித்தாபுகளில் வருகின்றன.

ஹிஜா இய்யத்தான எழுத்துக ளடங்கலும் நான்குபங்காம். அலிபு, ஹே, தோ, மீம், பே, ஷீன், தால்; இந்த ஏழும் வரண்ட சூடு பே. வாவு, ய, நூன், சாது, தே, லாது, இந்த ஏழும் சீதளக்குளிர்ச்சி, ஜீம். ஸே, காபு, ஸீன், க்காபு, லாம், லோ, இந்த ஏழும் சீதளச்சூடு. தால், ஹே, தே, ஐன்றேகே, கைன், இந்த ஏழும் வரண்டகுளிர்ச்சி. ஆகப்பங்கு நான்காம். இந்த எழுத்து (அட்சரம்) களின் குணங்களை யறிந்துக்கொள்கின்ற பிரயோஜன மாகிறது அதற்கு இணக்கமான காரியங்களிற் பரிமாறுவதும் வியாதிகளைத்திற்கு மதைக்கொண்டவிழ்தங்கள் செய்வதுமாம். முகியித்தீனிபுனு அறபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அருட்செய்த "ஜதுவல்" இது புக்தூ ஹாத்துல் மக்கியா[illegible]னும் அறபிய கிரந்தத்தில் வருகின்றது.

றத்தப	தால்	ஹே	தே	ஐன்	தே	சே	கயின்	சீதளம்
யாபஸ்	ஜீம்	ஸே	காப்	ஸீன்	காப்	லாம்	லோ	வரட்சி
பாரித்	பே	வாவ	யே	நான்	ளாத்	த்தே	லாத	குளிர்ச்சி
ஹார்	அலிபு	ஹே	தோ	மீம்	பே	ஷீன்	தால்	சூடு

இன்னுங் "இஷ்டனான்" என்ற கருமுழி, கண்ணின்மேல் நிமையுள்ளிலேறிச் சொருகுதலும்மவுத்துக்குமுடுகுதலான அடையாளமாம்.

சல்மானுல் பாரிசீ றலியல்லாஹு அன்ஹு அருட்செய்தார்கள், மவுத்து முடுகிய நேரத்தில், மூமினானவர்களின் நெற்றி வேர்த்து இரண்டு கண்ணில் நின்றும் தண்ணீர் வடிந்து இரண்டு மூக்கும் விரியும் அவன் அல்லாஹுத்த ஆலாவுடைய றகுமத்தளவிற் தறிபட்டவன், தண்ணீரில் மூழ்க்கப்பட்ட வனைப்போல் மூழ்கி அவ்வனின் நிறம் நூர்ந்து இரண்டு உதடும் சிவந்து விட்டானல் அவன் அல்லாஹுத்த ஆலாவின் அதாபில் தரிபட்டவின் "துஹபத்துல் மர்லிய்யா."

மவுத்தாய் விட்டவனுக்குரிய திட்டமான அடையாளம் சடலத்தில், பேதகத்தையும், கெட்டவழிடையையும் காணப்படுமென்று, ஆலங்கிரி முதலிய பிக்ஹு கித்தாபுகளிற் சொல்லப்பட்டிருக்கின்றன, இந்தக் கித்தாபு; இந்த இல்முகட்குப்பாத்திய மற்றவர்களிட மகப்பட்டு அவர்கள், இதைப்பார்த்துப் படித்துக்கொள்வதைப் பயந்ததற்கிட்டு இந்த பாபில் என்பரி சோதனைக்குரிய அடையாளக்குறிப்பு (கி. ஆ,) இதைக் குறிப்பிடவில்லை, வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப் இதற்கு முந்திய; பசுலுகளிலும்சில அறிகுறிகளைக் கூறப்பட்டிருப்பது மறையாதது, இன்னும், இரண்டாம் பாகம பதினைந்தாவது பாபில், வயிற்றில் மரித்த பிள்ளையினடையாளமும், இருபத்தி நான்காவது பாபில், மவுத்தினடையாளமும், வயிற்றில்பிள்ளை மரித்ததினடையாளமும், பதினான்காவது பாபிலும் பின்வரும் "இன்ஷா அல்லாஹுத்த ஆலா."

இரண்டாம் பாபு முற்றிற்று.

மூன்றுவது பாபு.

ஹிஜா இய்யத்தான அறபிய அட்சர வெழுத்துகளின்
பிரயோஜனமும், விபரமும், அதனால் வியாதிகட்கு
அவிழ்தம்போல் ப[illegible]தவஞ்செய்தலும், மற்றைய
அவிழ்தங்கள் குறிப்பிடப்பட்ட பத்திய
மும் அட்சரம் அஸ்மாக்களைப் பிர
யோகிக்குஞ் (சறுத்து) ஒழுங்குகளையுங் கூறல்.

ஒன்றுவது பசுல்.

அறபிய அட்சரமுமதன் பிரயோஜனங்களும்.

அதில் "அபூஜஹில்" அல்லது "பிற்அவுன்" என்றபெயர்களை அறபியத்தான அட்சரத்தால், எந்த வொரு வஸ்துவிலெழுதப்பட்டாலும் [illegible]த சங்கையாக்கிக் கொள்வதன்றி, எறியப்படுவது "மக்ரூஹு" வென்னென்றால்; அவ்வட்சரங்கட்கு, சங்கையுண்டாயிருக்கின்றதென்று "சிறுஜீ" முதல்வன கித்தாபுகளில் வருகின்றன.

ஹிஜா இய்பத்தான எழுத்துகளடங்கலும் நான்குபங்காம். அலிபு, ஹே, தோ, மீம், பே, ஷீன், தால்; இந்த ஏழும் வரண்ட சூடு பே. வாவு, ய, நூன், சாது, தே, லாது, இந்த ஏழும் சீதளக்குளிர்ச்சி, ஜீம். ஸே, காபு, ஸீன், க்காபு, லாம், லோ, இந்த ஏழும் சீதளச்சூடு. தால், ஹே, தே, ஐன் றேகே, கைன், இந்த ஏழும் வரண்டகுளிர்ச்சி. ஆகப்பங்கு நான்காம். இந்த எழுத்து (அட்சரம்) களின் குணங்களை யறிந்துக்கொள்கின்ற பிரயோஜனமாகிறது அதற்கு இணக்கமான காரியங்களிற் பரிமாறுவதும் வியாதிகளைத்திற்கு மதைக்கொண்டவிழ்தங்கள் செய்வதுமாம். முகியித்தீனிபுனு அறபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அருட்செய்த "ஜதுவல்" இது புத்தூஹாத்துல் மக்கிய்யா[illegible]னும் அறபிய கிரந்தத்தில் வருகின்றது.

நத்தப	தால்	ஹே	தே	ஐன்	தே	கே	கயின்	சிதளம்
யாபஸ்	ஜீம்	ஸே	காப்	ஸீன்	காப்	லாம்	லோ	வரட்சி
பாரித்	பே	வாவ்	யே	நூன்	ஸாத்	த்தே	லா[illegible]	குளிர்ச்சி
ஹார்	அலிபு	ஹே	தோ	மீம்	பே	ஷீன்	தால்	சூடு

இவ்வட்சரங்களால் மருந்துசெய்யும் விதமாவது:—சூட்டைப் பற்றிய வியாதி அல்லது குளிர்ச்சியைப் பற்றிய வியாதி என்று அறிந்து அதற்கு மாற்றமான எழுத்துகளைக்கொண்டு வைத்தியஞ் செய்யவும். பண்டிதர்கள்குளிர்ச்சியான வியாதிகட்குச்சூடுள்ள மருந்தையும்சூடான வியாதிகட்கு, குளிர்ச்சியுள்ள மருந்தையுங்கொண்டு பண்டிதஞ்செய்வது போல குளிர்ச்சியுள்ள வியாதிக்கு சூடுள்ள அட்சரங்களைக் கொண்டு மண்ணில் அல்லது எண்ணெயில் அல்லது குடிப்பு, அல்லது காடியில் சிக்குகளுக்கு மாற்றமுள்ள அட்சரத்தைக்கொண்டு மருந்து செய்யவும், ஒரேவிதவியாதியா யிருந்தால் இவ்விதம் அவ்விதமன்றி, ஒன்று சூடாயும் மற்றொன்று குளிர்ச்சியாயும் ஒன்றுக்கொன்று விகற்பமான பலவித வியாதியாயிருந்தால் அதற்கு ஒன்று சூடாயும் மற்றொன்று குளிர்ச்சியாயும் இருந்தால் இருவிதமானதைச் சேர்க்கப்படும். இவ்விதமே ஹுக்மாக்களும் கூர்மையுள்ள பண்டிதர்களில் மிகுத்தவர்களும், சொன்னார்கள் இவ்விதஞ்செய்வதுகாண்கப்பட்ட "ஹிஸ்ஸிய்யத்தாகிய" அவிழ்தங்களிலாம், மேற்குறித்த ஏற்பாட்டுடன் மேற்படி அட்சரங்களைக்கொண்டு மருந்துசெய்தல் மறைந்ததல்ல, ஒவ்வொரு உறுப்படங்களிலும் அதற்கு இணக்கமானதை எழுதப்படும். இன்னும் ஹுக்மாக்கள் சொல்லியபடிக்கு ஒன்றுக்கொன்று இட்டோட்டமான அட்சரங்களைச் சேகரித்துச் செய்தல் ஆகும். அடங்கலும் பலன் கொடுக்கும் "இன்ஷா அல்லாஹுத்தஆலா"

—:():—

இரண்டாவது பசுல்.

ஹுக்மாக்களின் சொற்படி "சூடாகிய மருந்தைக்
குளிச்கியான மருந்துடன் சேர்ப்பித்தால்,
ஒவ்வொன்றும் மற்றொன்றின் குணத்தை
முறித்துவிடுமே அதனால் வியாதி சுஸ்தப்படமாட்டாதே
எனும் வினாவுக்கு விடையும் அதல்லாத
சில அழகான வினாவுக்கு விடையும்
சொல்லப்படல்.

அதாவன.—அல்லாஹுத் தஆலா அகமியமானதிட்ப நுட்பங்களை மிகவுமறிந்தவன் திடனாக குணாதிகாரங்களின்மீது சேர்மானமுள்ள இருவகைமருந்துகள் சேர்ந்துதானால் அதன் அமைப்பு, படைப்பில் குளிர்ச்சியைச் சூட்டைவிட்டும் பிரித்து, சூட்டைக்குளிர்ச்சியான வியாதிக்கும் குளிர்ச்சியைச்சூடாகிய வியாதிக்கும் பொருந்தி, யொப்புக்கொள்ளவைக்கும் சோதனை இதற்கு அத்தாட்சியாயிருக்கும். தபீஅத்தெனுங்குணம் சேர்ப்பித்த பலவகைமருந்துகளில் ஒன்றை மற்றொன்றைவிட்டு மெவ்விதம் பிரிப்பதற்கு ஏதுவாகும் என்ற வினாவுக்கு விடையாவது; திடனாக அது உறுப்பளவிற் சென்ற இரத்தத்தில் சிறுநீரைத்தெளித்து உரைத்து வடியச்செய்வதில் தபீஅத்தின் செயலை நீ பார்ப்பதுபோல், திடனாக, குறித்த பலவகை, மருந்துடைய செயலிலது இடம்பாடாகும், அந்த உறுப்புகளிற் செல்வதடங்கலும் இரத்தவடிவிற் சென்றாலும் அதன் செயல் அதில் தாக்கியவுடன் அந்த இரத்தத்தைக்கிருகித்த உறுப்பில் நின்று உறைந்து வடியுஞ்சிறுநீரைப் பிரித்துவிடுமாப்போல் சேர்ப்பித்த பலவகை மருந்திலும் அதன் வேலையைச் செய்வதைக்காணச் சிறுநீரில் செய்யும் வேலைமிகாச்சரியமே. திடனாக அது உறுப்புகளில்நின்றும் நரம்பின்வழியாய் ஈரல் குலையளவிற்சென்றவுடன் நரம்புகளின் வழியாய் உறுப்புகள் அளவில் ஓடுகிற இரத்தமாய் விடுகின்றது. ஈரல்குலையில்நின்றும்உறுப்புகள் அளவில்இரத்தமோடுகிறதும், நரம்பென்னும் ஒரேவழியில் ஒரேஹாலில் உறுப்புகளில் நின்றும் ஈரல் குலையளவில் நடந்த சிறுநீர் உறைந்து வடிவதும் எவ்விதமென்று நீ நோட்டமிட்டுப்பார் "பதபாறகல்லாஹு அஹ்சனுல் காலிக்கீன்."

சூடுங்குளிர்ச்சியுஞ்சேர்க்கப்பட்ட அவிழ்தம் ஒரு குணத்தளவிலாகிவிடும். அந்நிலமையைக்கொண்டு, சடலத்தில் நின்றும் பிரிந்தவையாவும் அவ்விதம் பிரிந்ததாகத்தளவிற்றிரும்பி "எதிர்" எதுவையாகுமே என்ற வினாவுக்குவிடை. ஒரு சடலத்தில் வேறு வியாதிகளன்றி "பசீத்தாகிய ஒருவித வியாதிமட்டிலுந் தனித்திருக்குமானால் அது சுஸ்தமாவது ஆவசியகமே, அவ்விதமே ஒரு சடலத்தில் ஒருவியாதி மட்டிலுந் தனித்திருக்குமானால்அதன்" ஷிபா "எனும் சுஸ்தம் பசீத்தாகிய ஒரே மருந்தைக் கொண்டு தான். இதன்' மிஜாஜு "குணம்; வியாதியின் மிஜாஜ்" குணத்திற்குஎதுகையாகும், ஆனதால் முந்திய விதம் தான், குறிப்பானதாக விருக்கும் அல்லாஹுத்தஆலா மிக அறிந்தவன்.

மூன்றாவது பசுல்.

பத்தியங்களைக்கூறல்.

அதீ; நோயை பதிகரிக்கச் செய்வதும் அல்லது நோயைப் போக்குவதுமாம், பத்தியமாயிருந்தால் வியாதி நின்று அது விலகுவதில் அதன் தத்துவம் ஆரம்பமாய் விடும் வைத்தியத்துக்கு ஆதியான மருந்தும் அசலும் பத்தியமென்றும்: "லஃபானு" ஹதீது வந்திருப்பதோடு, நாயகம், நோயாளியை நோவிக்கின்றதை விட்டும் விலக்கிப் பத்தியத்தைக்கொண்டு ஏவியு மிருக்கின்றார்கள். ஹுக்மாக்கள் சொன்னார்கள். சுகமான காலத்திலும் பத்தியம் அவசியமாம், அதைப் பேணுதல் செய்யாவிட்டால், வியாதி வந்தபொழுது பத்தியம் பலன் கொடாதென்று, இன்னம் நாக்கா அதாவது பத்தியம் முடிந்து நோய் தீர்ந்திருப்பவன் மெதுவான வஜீபனங்களைச் சுருக்கமாக்குதலும் ஒடுங்குதலும் நல்வொடையைத் தெரிந்துக்கொள்வதும் அவசியம்." உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு இவர்கள் பத்தியங் கடுமையாக இருப்பதற்கு ஈத்தங்கொட்டையை சுவைக்கிறவர்களாக இருந்தார்கள், ஆனால் நோயாளி, தனக்கிணக்க மில்லாத வஸ்தில் சிறிதளவில் இச்சையுண்டாகி விட்டால் அதில் இலேசானதைக் கொடுக்கப்படும், அலியுறலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்வலியுடன் நாயகத்தினிடம் போன பொழுது, தங்கள் முன்னிலையில் ஈத்தம் பழம் வைத்து பரிமாறுவதாலே, உமக்குத் தேள்வையோ என்று விசாரித்ததற்கு, ஆம் என்று சொன்னதாலே ஒன்றுக்குப்பின் ஒன்றாக ஏழுபழம் வரையிற்கொடுத்து இதுமட்டு முமக்குப்போதுமென்று நிறுத்திக்கொண்டார்கள், நோயாளி பலமாகுவதை நாடிதீன் குடிப்பு, வஜீபனத்தில் அவனை அலட்டிப்பொருத்தக் கேடாய் வருத்தப்படுத்தல் கூடாதென்றும் நிட்சுகை அல்லாஹுத்த ஆலா அவர்களுக்குத் தீன்குடிப்புகள் கொடுப்பானென்றும் நாயகந்திருவுளமானார்கள், அவ்விதமானால் நோயாளியை யாதொன்றும் பரிமாறுமல் கொடாமல் விடப்படுமாவென்று கேட்டால் நாம் சொல்லுவோம், விடப்படாது, ஆகிலும் அவனின் இச்சைக்கு முடிகிட்டதை அவனெடுத்துக்கொள்க, பலதையு மெடுத்துக் காண்பிப்போம். நாக்கா "அதாவது, வியாதி சுகமாகி, கலைக்குத் தண்ணீர் விட்டவன், தீன்குடிப்புகளைக் குறைத்தும், "ஜிமாஃ" இஸ்திரீபோகத்தை விலக்கியும் வயிறு நிரம்பவுண்பதைத் தவிழ்ந்தும் அதில் தவர்க்கத்தில் வஜீபனத்தில் சத்து குறைந்ததும் பின்பு கொஞ்சஞ் சத்துள்ளதுமாய் ஒழுங்காய் பேணிவராவிடில் வியாதிதிரும்பநேரிடும், பின்னும் பத்தியம் பிடிப்பதில் கடப்பு வைத்தானு நோவினையே செய்யும் "ஆபிஷ"

றலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள் நான் கடினமான வியாதிபட்டபொழுது, தண்ணீர் உள்படயாவையு மெனக்குப் பத்தியம் வைத்திருந்ததில் ஓரிரவு எனக்குத் தண்ணீர்த்தாகங் கடினமாயுண்டாகி என்கை, காலால் நகர்ந்தூர்ந்து போய், தண்ணீரைக் குடித்து எழுந்து நடந்து இருப்பிடம் வந்தேன் சுக[illegible] நானறியாமல் நீங்காமலேயிருந்தேன் ஆகையால்; உங்கள் நோயாளிகளைச் சகலவஸ்துவிலும் பேர்கெடுத்து விலக்காதீர்கள் என்று, பத்தியமுறிவாலும் வீரம் பூரம் போலுற்ற நஞ்சுள்ள பதார்த்தங்களாலும் உண்டாகுந் தங்கடங்களுக்கு மாற்றுமூன்றும் பாகத்தில்வரும், இன்ஷா அல்லாஹ்.

——(:o:)——

நான்காவது பசுல்.

அஸ்மாக்கள் பிரயோஜனமாவதற்குரிய சறுத்துகள்.

——:(:):——

ஜின்ஷெய்தான் பிசாசு முதல்வன வியாதிகளடங்கலுக்கும் முஸீபத்துகளுக்கும் "அஜீமத்து, மந்திரிப்பு, தஃவீது ஆதியவைகளுக்கும், அமல் செய்வது? தானம் துப்புரவு, அவ்விடத்தில் ஹைலுக்காரியின் ஹைலு இழந்திருப்பது, முசீபத்து பிடித்தவனுக்கு ஹைலுண்டாயிருந்தாலும் அமல் குணஞ் செய்யாது, இன்னும், மறைந்த இடம்; அவ்விடத்தி லதிகமான பேச்சுகளை இழந்திருப்பதும், பகலுடையவர்கட்குப் பகலிலும் இரவுடையவர்கட்கு இரவிலும் அமல் செய்வதும், அங்கு வந்தவர்கள் சலவாத்தைக்கொண்டு சப்தமுயர்த்தலும், ஓதிக்கொண்டிருப்பதும், நல்லமணமுள்ள புகை புகைக்கப்படுவதும், வேணும், முஸீபத்துடையவள் பேரில் முன்னிருந்த" தஃவீதைக் கழற்றிவிடுவதும், அமல் செய்வது கட்டிடத்தில் அல்லது, உனக்கும் வானத்துக்கு மிடையில் திரையுண்டான இடத்தில் செய்வதும், கட்டிடத்து வாயலில் அல்லது அதன் பேரிலிருந்து அமல் செய்யாமலிருப்பதும், முஸீபத்துடையவள் உட்கார்ந்திருப்பதும் இயலாவிட்டால் உட்கார்த்திப் பிடித்துக்கொள்ளச் செய்வதும்பெண்ணுக்குப்பெண்ணும், ஆணுக்கு ஆணும் பிடித்துக்கொள்வதோடு, பெண்ணுக்கு அமல் செய்யுமிடத்தில் ஆணும் ஆணுக்கு அமல் செய்யுமிடத்தில் பெண்ணுங் கூடாதிருப்பதும் சுபுஹு, அஸறு, மஃரிபுக்குப் பின்னும், சஹர் நேரத்திலும் அமல் செய்யவேண்டும், செய்யுங்காலத்தில், ஆண் பெண் எவராலும் ஜிமாஃ

வும், ஒரு விரிப்பிற் படுக்கையும் இருந்திருப்பதும், சூடுள்ளவள் அவடமில்லாதிருப்பதும், முஸீபத்துடையவள் திரையன்றிக் குளிக்காமலிருப்பதுடன் அமல் செய்யுமுன் திரேகத்தைத் துப்புரவாய்க் கழுவிக்கொள்வதும், திண்ணமான ஆடையணியாதிருப்பதும், தூங்குங்காலத்தில் திரையுடன், இனத்துடன் ஆதாவது தன் ஜனத்துடன் தூங்குவதும் அமல் செய்கிறவன் அறிந்தவனாயிருப்பதும், துப்புரவாயும் அக்காலத்தில் வெங்காயப் பூண்டைதின்னாமலிருப்பதும் அல்லாஹூத் தஆலா? இஸ்முகளில் சிர்றை அமைத்திருக்கின்றானென்று இஃதிகாதுகொள்வதும், பாவஞ் செய்யாமலிருந்து மரத்தின் கீழ்குளிக்காமலும் இரவில் வெளிப்படாமலும், பெண்கட்கு ஹைளுள்ள காலத்தில் புகாமலும், ஷெய்த்தானுதிய வகைகளை விட்டுங் கார்மானந்தேடியும், சூறு பக்கறு, சூறு, யாஸீன், காத்திமாவைத் தன்னிடம் வைத்துக்கொண்டவனாயும் கிபுலாவுக்கு முன்னோக்கியும் அமல் செய்யுங் காலங்களிலிருக்க வேண்டியது.

மூன்றும்பாபு முற்றிற்று.

——):*:(——

நான்காம் பாபு.

ரோமங்களில் ஏற்படுந் தீங்குகளு மதன் சிகிச்சைகளும் கூறல்.

——(:)——

ஒன்றுவது பசுல்.

உரோமங்கள் முளைப்பிக்கிறதைக்கூறல்.

——(0:)——

முடிவெட்டு, முதிர்வதுமான இந்த இரண்டு வியாதியுஞ்சரீரமடங்கலிலு முற்பத்தியாலும், மிகுதந்தலையிலுந் தாடியிலும் இரண்டுபுருவத்திலும் உண்டாகும் அதன் காரணம் ஐயக்கலவன் அதிகரிப்பு இவ்வியாதி இரண்டுக் கிடையில் வேற்றுமை தாவல் ஹையத்து முடிவெட்டுண்டு தொலிக்குமேல் ரசாப்புண்டாயிருக்கும். "தாவுத்தஃலபு" ஏற்றம், குறைத்தல் உட்பட ஒருதிருகத்துடைய கதறுக்குமுடியுதிர்ந்து உதிர்ந்த இடம் வழுவழுப்பாயிருக்கும். அதன் காரணம்—கரும்பித்த மதிகரிப்பாயிருக்கும். பிக்குமாவது; துவர்க்கமாய், பித்தம்நீங்கும்சுக் பேதிக்குவாங்கித்தலை முழுமையும் சிரைத்துத் தேனுடன் வெங்காயத்

தைத் தேய்க்கவும். இன்னும் எலிப்புழுக்கையை நோக அரைத்துப்பூசினால் முடியுதிர்வதைப் போக்கி முளைப்பிக்கும். இன்னும் சாசரப்பான துணியால், தலை சிவக்கும் வரையில் தேய்த்தாலும். அதன் பின் வெங்காயத்தை அரைத்துப் பூசினாலும் பலன்தரும். பள்ளையாட்டின் குளம்பைக் கரித்த சாம்பலைப் புளித்த காடியிற் குழைப்பிப் பூசினாலும் முள்ளங்கி விரையை அரைத்துப் பூசினாலும் நீங்கும். மேற்படி வேருமதன் இலையு மரைத்துக்குழைத் தவ்விதமாய்ச் செய்தாலும், மண்ணெண்ணெயைத் தளமிட்டாலு முளைப்பிக்கும், பெருங்காயத்தை சிறுக்கா அல்லது காடி, மிளகுடனுங் கலந்துபூசினாலும் பலனாகும். கருஞ்சீரகத்தைக்கரித்துத்தண்ணீரில் குழைத்து, ரோமம் முளைக்க நாடிய விடத்திற் பூசினால் முளைப்பிக்கும், வேய்க்கொம்மட்டியையெண்ணெயுடனும் சிறுக்காவுடனு மரைத்து முடியுதிரும் வியாதிக்குப் பூச அனுகூலமாகும். எலிப் புழுக்கையை இடித்து எண்ணெயுடன் பூச அவ்வியாதி போம். அதைக் கரித்து வெங்காய நீருடன் பூச அல்லது கட்ட முளைப்பிக்கும் சதாபு இலையைக் கட்ட அவ்வியாதி தீரும். குழிநரியின் இரத்தத்தைப் பிள்ளைகளின் மொட்டைத் தலையில்தளமிட்டால் தீரும் (முடிமுளைக்கும்) மனாவின் பித்தை கூடி தலையில் தளமிட்டால் பிரயோஜனமாம். கரடியின் பித்தை, தளமிட்டாலும் முளைப்பிக்கும். ஈயைக் கரித்துப் பொடித்துத் தேனுடன் கலந்து மேற்படி தலையில் தளமிட்டாலும் முளைப்பிக்கும், முடியுதிர்ந்த தலையில் ஓநாயின் கொழுப்பைத் தேய்த்தால் பிரயோஜனமாகும். பல்லி இரத்தமும் அனுகூலமாம். கருங்காகத்தைக் கரித்துப் பொடித்து, "ஜய்தூன்" எண்ணெயிற் குழைத்து முடியில்லாத இடத்தில் தேய்த்தால் முடிமுளைப்பிக்கும். யானையின் மலத்தைக் கரித்துப் பொடித்து தேனில் மத்தித்து முடியுதிர்ந்த நிலைமையிற் றளமிட்டால் முடியைமுளைப்பிக்கும். காடையின், எலும்பைக் கரித்து அச்சாம்பலை ஜெய்தூன் எண்ணெயிற் கொதிக்கவைத்து சூட்டுடன் மொட்டைத்தலையிலும் ரோமமுதிரும் வியாதியால் வழுக்கட்டையான தலையிலும் பூசினால் முடிமுளைப்பிக்கும் வசம்பை அரைத்துப் பூசினால் முடிவெட்டுப் போம் பச்சை வசம்பதிக நலம். செம்மறியாட்டின் மாங்காயை அதன் நரம்புடன் களைந் துலர்த்தி, சம்பங்கி எண்ணெயிலூறுக்கி எந்தத் தலத்திற் போட்டாலு முடிமுளைக்கும் ஆம்பையாட்டில் பெண்ணாட்டின் பித்தைக் கரித்து ஜெய்தூன் எண்ணெயிற் கலந்து உருவங்களில் தளமிட்டால் ரோமம் மிகுதமாகும் கறுப்பாகும் பாம்பின் சட்டையையும் அதன் தலையையுமரைத்து முடிமுளையாத வியாதிக்குத் தேய்த்தால் பலனாகும்

முடியுதிர்ந்து விடுகின்றதைலம் "இன்ஷா அல்லாஹ" நான்காவது பசுலிற் பின் வரும்.

இரண்டாவது பசுல்.

முடி இணக்கமாவதும் கெடுதியாவதும் பலமாகுவதும் பிளந்து முறிந்து சடைசேருவதும், சோர்வடைவதும் நெருக்கமாவதுங் கூறல்

உரோமமாவது; உள்ளில் நின்றும் முளைக்கும் தானத்தளவில் தன் சுபாவக்குணம் பிரத்திப்படுத்தி வைக்கும் ஆனதாலதில் வேர்வைவெளியாகின்ற ரோமக்காலில் நின்றும் புறப்படுகிறது. அதில் கலவன் நீதியாயிருந்தால் அதன் நிறமும் ஆஸ்பதமும் இணக்கமாயும் வரட்சி அதிகரிப்பதினால் கலவன் பேதகமாகி விட்டாலது உதிர்வதாயும், சீதளமதிகரிப்பதால் கலவன் பேதகமாகி அது வெளுமைபாயும் பெலவீனமாயுமிருக்கும். அதன் பக்குவம் வரட்சி அதிகரித்திருந்தால் பருத்திக்கொட்டை விதையை,எண்ணெயில் அல்லது பாலிற் ஓரிரவு ஊறவைத்துத் தேய்த்தால் நிறமழகாயும்முடிமெதுவாயும் கெட்டியாயுமிருக்கும்.

சீதள மதிகரித்திருந்தால் எண்ணெய் அல்லது பாலில் இளஞ்சூடாய்க் கொதிக்கவைத்து, அதில் முஸ்தக்காயைப் போட்டுக் குழைத்துத் தேய்க்கவும் ஈயத் தகட்டில் கொழுப்பை வைத்து நிறங் கறுப்பாகும் வரையிலரைத்து அதைப் புருவத்தில் பூசினால் ரோமத்தைப் பலமாக்கியும் மிருதுமாக்குவதுடன் உதிர்வதையும் விலக்கும். முள்ளங்கி விதையைத் தின்று வருவதாலு முடியுதிர்வதை நிறுத்தும் கொல்லன் உலைத் தண்ணீரில் தலை கழுவினாலும் முடியுதிர்வதை நிறுத்தும், முடியை முளைப்பிக்க பலன் கொடுக்கும் மருந்துடன் பேக் கொம்மட்டிக் காயின் சதையைச் சேர்த்தால் அதைப் பலமாக்கிவைக்கும். அவ்விதமே நற்சீரகமும், பருத்திக்கொட்டைப் பால் அல்லது கித்துமீ என்ற கற்பூர வள்ளியைக் கொண்டு தலை கழுவினால் முடி பிளந்து முறிவதை விலக்கிப் பலன் கொடுக்கும். இவ்விதமே ஈத்தமரத்தின் பாலை அல்லது குருத்தை, தண்ணீர் அல்லது பருத்திக் கொட்டைப்பாலில் அல்லது கொழிஞ்சிப்பழப்பால் போலொற்ற எந்தப் பாலுடனுஞ் சேர்த்து முடியில் பூசினால், பிளவு ஆகுவதை நிறுத்தும் சபருஜீ விதையின் பாலுமட்டும் பூசினாலும் பிளவு கண்டு முறிவதைப் போக்கும். பருத்திக்கொட்டை அல்லது சபருஜீ விதையின் பாலைக்கொண்டு நேமமாய் ரோமத்தில் பரிமாறி வந்தாலும் சவுக்காரத்தைக்கொண்டுதலைகழுவினாலும் சடை விழுவதற்கும் சோர்வுகாண்பதற்கும்பலன்கொடுக்கும். ஈத்தமரத்தின்பாளையை அல்லதுகுருத்தைத் தண்ணீர் அல்லதுகொட்டைகள் (விதை) உள்ளபாலொன்றுடன் தலையில் தளமிட்டாலும் முடி சோர்வுதலன்றி மெதுவாகி வளர்ந்துவரும். கழுதையின் மூளையை ஜைத்தூன் அல்லது நல்லெண்ணெயுடன் தலையில் தளமிட்டால் ரோமத்தை நீளமாய் முளைக்கச்செய்யும்.

மூன்றாவது பசுல்.

உரோமம் முளைப்பதைத் தடுத்து முளையாதிருக்கச் செய்வதைக் கூறல்.

மொச்சைக்கொட்டையின் தொலியை அரைத்து உரோமம் முளைக்குமிடத்திற் கட்டினாலது முளைக்கின்றதை பலவீனமாக்கும். மனோசிலையை அரைத்து, பஞ்சித்தண்ணீரில் குழைத்து. கமுக்கட்டில் முடி பிடுங்கியபின் பூசினால் முளையாது, மேலும், மனோசிலையைச் சிறுக்காவுடனுங் கள்ளுடனுந் திண்ணமாகும் வரையில் சமைத்து ரோமத்தில் பூசினால் அது முளைப்பதை கெடுதிபடுத்தும், பள்ளையாட்டின் பித்தை "நசாதிருடன்" கலந்துமுடிபிடுங்கிய எந்த விடத்திற் பூசினாலும் முடி முளையாது எந்தஇடத்திலுமுள்ள முடியையும் பிடுங்கிவிட்டு அவ்விடத்தில் பாம்பின் பித்தைத் தளமிட்டால் முடிமுளைப்பதை விலக்கும் முசலின் இரத்தத்தைக் கண்ணில் தீட்டினால் முடி முளைத்தலை விலக்கும். கமுக்கட்டு முடியைப்பிடுங்கிவிட்டு அவ்விடத்தில் சின்னவெளவாலின் இரத்தத்துடன் பாலைச்சமமாகச் சேர்ப்பித்து, தளமிட்டால் முளையாது அதைப்பாலிகு ஆகாத சிறுமிகளின் அடிவயிற்றிற் தேய்த்தால் முடி முளைக்காது. காடி இரத்தத்தைக் கண்ணில்மையிட்டால் நிமையில் முடி முளைப்பதைவிலக்கும்; பழய "முடி" ரோமத்தைப்பிடுங்கி விட்டுமையிட்டாலும் முளைக்காது. பெரிய, ஈயின் தலையைநீக்கி, முண்டத்தைமட்டும் நிமையில் முடிமுளைக்குமிடத்தில் கடிசார்த் தேய்த்தாலுமதைப் போக்கிவிடும். இது சோதிக்கப்பட்டது. சிப்பியைச் சதையுடன்கரித்துஅதன்

சாம்பலை, இமையிலும்புருவத்திலுமுள்ள வதிகமான உரோமத்தைப் பிடுங்கியபின் தளமிட்டால் முளைப்பதை விலக்கும். கண்ணிமையுள்ளிலுள்ள ரோமத்தைப் பிடுங்கிய பின் முள்ளம்பன்றி, கிளிப்பிள்ளை, பள்ளையாடு, புலி, இவைகளிலொன்றினது பித்தைக்கண்ணில்தீட்டினால் முளைப்பதைப்போக்கும் கிழுகிலு[illegible]த; தவளையைப்பொடித்துகித்துமீ எலும் பூண்டுடன், சுண்ணாம்பு, சிவந்த அரிதாரம் பூசியபின் மேற்படி மருந்தைப்பூசினாலதில் முடிமுளையாது. முடிபிடுங்கிய இடத்திற்றவளையின் இரத்தத்தைப்பூசினால் எப்பவு முளையாது. அட்டையை சாகும் வரையில் போத்தலிலடைத்து வைத்திருந்து, செத்தபின் எடுத்து, பொடித்து உரோமம் பிடுங்கிய இடத்தில் தேய்த்தால் எக்காலமும் முடிமுளையாது. குதிரையின் வேர்வையை சிறுமிகளின் அடிவயிற்றிலுங்க முக்கட்டிலும் பூசினால் முடிமுளையாது. முடிபிடுங்கிய இடத்தில் முள்ளம்பன்றி என்ற எலியின் பித்தைப்பூசினால் முளையாது. நாயின்பாலை முடியின் பேரில் தடவினாலதை சிரைக்கும். பள்ளைகடாவின் பித்தை, கண், இமை இவைகளுள் உள்ள ரோமத்தை பிடுங்கிவிட்டு தீட்டினால் முடிமுளைப்பதை விலக்கும். தன்மங்கல் கண் பிளை, கண்ணிற்படர்ந்த சதை இவைகளைக்களையும் கால்மொத்திக்குப்பூசினால் பலன்கொடுக்கும் எறும்பின் முட்டையைத் தண்ணீர்விட்டரைத்து, எந்தலத்தில் தளமிட்டாலதில் முடிமுளையாது.

—:—

நான்காவது பகல்.

தலையிலுள்ள அழுக்கு, ஈர், பேன், நீங்கவும், உரோமம் வெண்மையாகுதல் கறுக்குதலதன் காரணமுமவிழ்தமுங் கூறல்.

—:—

மருதோன்றியை அரைத்து, காடியுடன்குழைத்து, தலையிற்பூசினால் அழுக்கைப்போக்கும். அப்புருமஞ்சாளைத்தண்ணீருடன் அல்லது, உப்பைப்பொடித்து காடியுடன்சேர்த்து தலைகழுவினாலும் அல்லது வெங்காயத்தைத் தேனுடன் கலந்து தலைசிரைத்த பின் பூசினாலும் அதனழுக்கை நீக்கித்துப்புரவாக்கும். பன்னீரை அதிகமாய் பரிமாறினாலும் கெந்தகத்தைப் புகைத்தாலும், ரோமத்தைவெண்மையாக்கும், பூரத்தைப்பூசினாலதிக விரைவில் நரைகாணும்.

சாலினூஸ் அருளினார்;—வஜீபனங்களில் நின்றும் எழும்பும்புகையினால் ரோமம் உற்பத்தியாம். அப்புகை தின்னம் பலம் பசக்கு, சூடாயிருக்குங்காலமெல்லாம, முளைக்கும், உரோமம் கறுப்பாயும் அதுலர்ந்து குளிர்ச்சியாயிருக்குங்காலமெல்லாம் ரோமம்வெண்மையாயும், முளைக்கும் என்று. அவரல்லாதவர் சொன்னார்.—இரத்தம் பசக்காயிருக்குங்காலமெல்லாம், உரோமம் கறுப்பாயும் இரத்தந்தண்ணீர்சத்தாயிருக்குங்காலமெல்லாம், உரோமம் வெண்மையளவிற் சாடியதாயிருக்குமென்று. கர்ப்பூரத்தை அதிகமாய்ப் பரிமாறுவதும், ஜிமாகு வெந்நீர் புகையிற் புகுதுவதும், “[illegible]க்று” யோசனையதிகரித்தால்நரைவிரைவிலுண்டாகும். பேய்க்கொம்மட்டிக்காயைத் தலையில் சில்லறுத்து அதில் எண்ணெயை ஊற்றி, சில்மூடி, அதன்பேரில் குழைத்தமாவு அல்லது களிமண்ணால் கவசஞ்செய்து, அந்த எண்ணெயைக்கொதிக்கும் வரையில் சுடு நெருப்பில் வைத்து எடுத்து அதைக்கொண்டு ரோமத்தில் தேய்த்தாலதைக் கறுப்பாக்கி நரையைத் தாமதப்படுத்தும் மாசாக்காயைத்தண்ணீரிலும், காடியிலும், புளிக்கவைத்து, அல்லது இடித்து மருதோன்றியுடன் கலந்து ரோமத்தில் தேய்த்தாலும் கீழ்ரோமத்தில் பூசி நான்குநாழிகையிட்டுப் பொறுதி செய்து கழுவினாலும், அதிகமானகறுப்பாக்கிவைக்கும்.

நீயறிந்துகொள்.—சாயத்தின் வகை படங்களும் மூளையைக்குளிர்ச்சியாக்கி கெடுதியைவருத்தும் அதனாலே, கடினவியாதியுற்பத்தியாவதை வழிபார்க்கப்படும். சாயங்காய்ச்சுகிற பொழுது அல்லதுகாய்ச்சி முடிந்தபின், கொஞ்சங்கஸ்தூரி அல்லது, கராம்பு இவைகளிலொன்றைப் பரிமாறல் அவசியமாகும், இதுதலையின் சாயத்திலன்றி, தாடியின்சாயதிலன்று. இரண்டு “ஊக்கியா” ஆவின் பாலில் இரண்டு அரிசிடை முயலின் மூளையைச் சேர்த்துக் குடித்தால் முடி நரையாது. செங்கால் நாரையின் முட்டையில் ஆண்முட்டையை ரோமத்தில் தேய்த்தாலதைக்கறுப்பாக்கி வைக்கும். ஒரு வருசத்திற்கதன் கறுப்பிருக்கும், ஊசியில் நூலைக்கோர்த்து முட்டையில் குத்தி மறுபுறமிழுப்பதாலது கறுத்தால் ஆண்முட்டையென்று அறியவும். பழந்தின்னி வெளவாலின் பித்தைக் குடித்தால் வெள்ளையான முடியைக் கறுப்பாக்கும்; அதைக்குடித்தவுடன் வாயில் நிரம்ப ஆவின் பாலைக் கொஞ்சநேரம் வைத்திருந்தாற்பற் கறுக்[illegible]டாது. கருங்காகத்தை அதின் துயிலுடன் சிறுக்காகாடியில் மூழ்க வைத்து. அதைக்கொண்டு ரோமத்திற்குத் தளமிட்டால் அதைக்க[illegible]

பாக்கி வைக்கும். கருங்காகத்தை அறுத்து; கலயத்திலிட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து, குப்பைக்குழியில் நாற்பது நாள் மட்டும் புதைத்து வைத்தெடுத்துப் பார்த்தாலதில் வெள்ளை, கறுப்பு, நிறமான புழுக்களிருக்கும் அவைகளை சாகும் வரையி லொரு பாத்திரத்திலிட்டு பின்பு ஒவ்வொரு நிறத்தில் நின்று மூன்று புழுவெடுத்து நல்ல எண்ணெயி லரைத்து வெண்குஷ்ட காரனுக்கு நாசியில் நசியமிட்டுத் திரேகத்திலுந் தேய்த்தால் சுஸ்தமாவான். இந்த எண்ணெய் கறுத்தமுடியில் பட்டாலது ஒரு காலமும் வெளுக்காது. இன்னும் வெள்ளைப் புழுக்களில் ஒன்றையாவது குடித்தால் குடித்தவன் ரோமமெல்லாமுதிர்ந்துபோம் ஒருகாலுமுளையாது. மரங்கொத்தியின் "மிர்ருளை" யுலர்த்திப் பொடித்து நல்ல எண்ணெயி லரைத்து மூன்று நாள் மட்டும் தலையில் அல்லது தாடியில் தேய்த்து வந்தால் மேற்படி முடியை வளுப்பமாகிய சிறப்பாக்கி வைக்கும்.

நான்காம்பாபு முற்றிற்று.

ஐந்தாம் பாபு.

தலையின் ஆராய்ச்சிகளுங் கண்ணோய் களையுங் கூறல்.

ஒன்றுவது பசல்.

தலையிலுள்ள காயங்கள் புண்கள் பொட்டுவலி தலையிடி, ஒருதலையிடி யாதியவை யுற்பத்தியு மதன் சிகிச்சைகளும்.

பன்னீர் எண்ணெயைப் பூசினால் தலையில் கெலிப்புக்கொண்டிருக்கும் ஈரமான காயத்தைச் சுகப்படுத்தும், சீலை, தேனுடன் சேர்த்தரைத்து பலமுறையுந் தலையிலுள்ள காயத்தில் பூசிவந்தால் சுகப்படுத்தும் அத்துடன் "றைஹானை" சேர்த்துக்கொண்டால் மிக்க நலம், கற்றாழையைக் காடியுடன் கலந்து தலையிலுள்ள காயங்களிலும் சிறு பிள்ளைகளின் தலையின் புண்களிலும் பூசினால் பலன் கொடுக்கும், நற்சீரகத்தை, எண்ணெயுடன் கலந்து தலையில் தேய்த்தால் காயத்தைப் பேணிக்கொள்ளும் குந்துருக்கத்தைப் போட்டுப்புளிப்படைந்த நீரால் தலை கழுவினால் பலன் கொடுக்கும், விளக்கெண்ணெயைப் பூசினால் தலைப் புண்ணையாற்றும், சவுக்காரத்தைப் பன்னீருடன் கலந்து சிறுமிகளின் தலைப் புண்ணிற் பலமிடுத்தம் பூசினாலதை யுலரச்செய்யும், சந்தனத்தை "அன்சருத்துடன்" சமஇடை சேர்த்து கோழிமுட்டை வெள்ளைக்கருவில் குழைத்துப்பூசினாலும், பன்னீருடனும், கொஞ்சம் கற்பூரத்துடனும் குழைத்துப்பூசினாலும் தண்ணீரில் குழைத்துப்பூசினாலும் சூடாலாகிய பொட்டுவலிக்கும், கண்ணில் நீர் வடிதலுக்கும், முக்கியமான பலன் கொடுக்கும் பன்றி மலத்தை, காடியில் குழைத்து தலையிலுண்டான காயம், புண் இவைகளில் தளமிட்டால் பிரயோஜனகரமாம், அன்பறைப்புகைப் பிடித்தாலும் இரண்டு பொட்டில் பூசினாலும் குளிர்ச்சியாலுண்டான பொட்டு வலிக்குப்பலன் செய்யும், சிம்சமை அரைத்து பன்னீரெண்ணெய் அல்லது "சிறுக்கா" காடியிற்கலந்து பூசினால், சூரியகாந்தியாலுண்டான பொட்டு வலிக்குப்பலன் கொடுக்கும், சதாபை" பன்னீரெண்ணெயுடனும் சிறுக்காவுடனும் அரைத்துப்பூசினாலும், பருத்திக்கொட்டைப்பருப்புடன் பன்னீர், மருதோன்றிச்சாறு இவை சேர்த்துமைப்போலரைத்து, தலையில் தளமிட்டாலுடனே பொட்டு வலி, தலை இடியைப்போக்கும், ஜிமாஃ, பிக்று, அபையசந்தம், தூக்கம் பசி, இன்னும் ஆஸ்பதத்தைத் தாழாமல இழுப்பதில் சக்தியுள்ள வஸ்துக்களைத் தின்பதாலுண்டாகிய தலைவலி அதன் உற்பத்திக்குரிய பக்குவமுமானது, கை, காலிரண்டையும் சுடுதண்ணீரில் வைப்பதும் கொஞ்சநடைநடப்பதும், ஊசல், வீச்சமான வஜீபனங்களையும் வயிறு ஊறல் காண்க இடமான பதார்த்தங்களையும் தின்னுவதை விடுவதும் இரண்டு காலையும் தண்ணீரி லதிகநேரம் மூழ்க வைப்பதும், இரண்டு பொட்டிலும், ஹமக்காஉ என்ற இலைசாற்றைப் பூசுவது மதையடக்கும் இன்னும் "பனபஸஜ" அல்லது குங்குமப் பூவை, சிறுக்காவுடனரைத்து பொட்டில் பூசப் பலன்கொடுக்கும், கர்ப்பூரத்தைப் பன்னீருடனும் காடியுடனுங் கலந்து தலையில் பூசினால் பொட்டுவலியை அடக்கும். பன்னீரை முகர்ந்தாலும் தலையில் தெளித்தாலும் சூட்டாலுண்டான பொட்டுவலியை அடக்கும். கடல்தண்ணீரின் ஆவியில் கவிந்திருந்தாலும் சுகமாகும். கற்றாழைச் சோற்றைச் சிறுக்காவுடன் பன்னீரெண்ணெயுடனரைத்து பொட்டிலும் நெற்றியிலும் பூசப் பலன் கொடுக்கும் குந்துருக்கத்தை மிகுந்து தின்னுவதும் குடிப்பதும் ஹருமலும், கிராதும், வெள் வெங்காயம், வெங்காயம் பருப்புகள், குங்குமம் பால், மொச்சை, மீன், முள்ளங்கி, கத்திரி, இவைகளை நேமமாய்த் தின்றுவந்தால் பொட்டுவலி தலை இடியையுண்டாக்கும்

ஒரு தலை இடியாகிறது, பாதித்தலை முகத்தில் நின்றுந் தொடரும், அதன் காரணம்:—குடலில் நின்றும் எழுகின்ற ஆவியாயிருக்கும். அதனறி குறியாவது குடல் இலேசானால் அந்த இடியு மிலேசாகும், கனமானால்கனமாகவுஞ், சத்திக்குதலால் சுகத்தைக்காணப்படும். அதன் சிகிச்சை;—அரிசிமாவைப் பாலுடனும் சருக்கரையுடனும் பரிமாறினாலும், பஞ்சின் தண்ணீரை, அல்லது அதன் விதையை அரைத்து மேற்புருவத்திலும் இரண்டு பொட்டிலும் பூசிவந்தாலும், இன்ஸானின் காதமூக்கைத் தலையில் பூசினாலும்சாம்பலைச்சிர்க்காவுடன் தேய்த்துப்,பூசினாலும் மாசாக்காயும், குங்குமமும்,தண்ணீரிலரைத்துப் பூசினாலும்,குங்குமச்சாயத்தை நெற்றியிற் பூசினாலும் அன்பற்அல்லதுசீதூரிக்காரத்தைப் பூசினாலும். புகைப் பிடித்தாலும். இன்ஸானின் உரோமத்தைக் கொளுவிக் கொண்டாலும் ஒரு தலை இடிக்குப் பலனாகும். அன்றேல் குளிராலுண்டான இடிக்கு, அன்பறும், சூடாலுண்டான இடிக்கு, சீனிக்காரமும முக்கியமாம், அதனறிகுறியாவது:—பொட்டு இடியும், தொட்டால் சூடு காண்பதும்; குளிர்ச்சியான வஸ்துவால் சுகப்படும். சூட்டினாலுண்டானதின் அறிகுறி குளிர்ந்த தண்ணீரால் வலிமிகவானால் குளிர்ச்சியினுடையாளம். “வல்லாஹூ அஃலம்” குழி நரி கோசத்தை தலையிற்கட்டினால் ஒரு தலையிடி நீங்கும். பழந்தின்னி வௌவால்இரத்தத்தைச்சிரத்தில் தேய்த்தால், குணப் பேதகத்தாலுண்டான தலைவலிநீங்கும். தும்பையாட்டின் தாடியைக் கட்டினால் நாலாமுறைக் காய்ச்சலும் தலை இடியு நீங்கும். முசவின் கோரோசனையை பொச்சைக்கொட்டை இடையுட்கொண்டாலும், மலைப்பாம்பின் தாமரைக் காயை அல்லது மனிதன் என்பைக் கட்டிக் கொண்டாலும், பசுவின் கொம்பை நுனுக்கி, அல்லது காட்டுமாட்டின் கொம்பைக் கரித்துப் பொடித்து வஜீபனத்துடன் தின்றாலும், தும்பையாட்டின் தாடி மயிரைக் கட்டிக்கொண்டாலும் தலை இடி நீங்கும். எலியின் தலையைத் திண்ணமான புடவைத்துண்டில் சேர்த்து, கடிசாகிய பொட்டுவலி யுடையவன் தலையிற் கட்டிக்கொண்டால் பொட்டுவலி நீங்கும். வலியுந் தீரும். தேனை நெற்றியிற் பூசினால் ஒருதலை மண்டை இடியைக் கேட்கும்.

* * *

இரண்டாவது பகல்.

கண்பார்வை கூர்மையாகவும், அதற்குத் தீங்கானதும் நலமானதும் கூறல்.

பொன் வெள்ளி, முத்து, கற்றாழைச்சோறு, வெள்ளைச் சர்க்கரை, கஸ்தூரி, கற்பூரம் இவைகளை வகைக்கு திருஹத்திடை எடுத்து, சகலமும் கண்ட நிறைக்கு சுறுமாக்கல்லை சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு கண்ணிலிட்டு வந்தால் கண்ணோயுள்ளவர்கட்கும் அதல்லாதவர்கட்கும் பார்வையைக் கூர்மையாக்குவதுடன், ஒளியைத் துலக்கப்படுத்தும்.

கண்ணுக்கு தீங்கானவைகளாவது:—புழுதி, புகை சூடு, குளிர், நீதி நிலையற்ற காற்று, நச்சுக்காற்று, குளிர்ந்தகாற்று, ஒற்றைவஸ்தளவில் கடைக்கண்ணால் பார்ப்பது, கூர்ந்தபார்வை, பிடரியின் பேரில் சயனித்தல், வஜீபனம் வயிறு நிறைய வுண்ணல், இரவில் வஜீபனிக்காதல் சமியலுக்கு முன் சயனித்தல், கனமான தீன் குடிப்புகளை யுட்கொள்ளல், தலையில் ஆவியை யுண்டாக்குதல், உப்பு கசப்பு, தயிரத்தையுலர்த்துவதுகள், உலர்ந்த வஸ்துக்கள், இவைகளையுபயோகப்படுத்தலாலும் பருப்பு, மீனைப்போல், ஆவி, புகையுண்டாவன யாவையும் தின்னுதலாலும், தொடாய் வெந்நீர்ப் புதையிற் புகுதல், இரத்தங் குத்திவாங்கல், ஜிமாகு, மஸ்து இவைகளைக் கடப்பாக்குதல், துக்கம் முழிப்பு முஸீபத்துகளளவிற் பார்க்குதல், வெங்காயம், உள்ளி, உப்பு கசப்பானவைகளைத் தின்னுதல், நெய் நெய்ச்சத்துள்ளவைகளை இரவில் தின்னுதல், குடிக்குதல் ஒரேதானத்தைப் பார்க்குதல், சூரியனுள்படப் பிரகாசிக்கும் வஸ்துவைப்பார்க்குதல், கீரைக்கொழுந்தும், குருத்தன்றி இலை, காம்பைத் தின்னுதல் இவைகளி யாவுங் கண்ணுக்குத் தீங்கை வருத்தும் குளிர்ந்த தண்ணீரில் முங்குவதும அதனுள் கண்ணைத் திறப்பதும், மேற்கூறிய தீங்குடையவைகளைப் பேணுவதும், தெளிந்தநீரைக் குடிப்பதும் வாசனை வஸ்தை முகருவதும்,பசுமை, அழகிய முகம், தண்ணீர் இவைகளைப் பார்ப்பதும், நல்ல பேச்சுகளைக் கேட்பதும், தினஞ் சுறுமா விடுவதும் கண்பார்வையைக் கூர்மையாக்குவதுடன் துலக்கமாக்கும். புலியின் பித்தைக் கண்ணில் தீட்டிவந்தாலும், பாம்பின்கண்ணீரை யிட்டு வந்தாலும் பார்வையைக் கூர்மையாக்கி நீர் வடிதலை மாற்றும். காராம்பசுவின் பித்தைக் கண்ணில் மையிட்டால்பார்வையைக் கூர்மையாக்கும், பீவண்டு வயிற்றிலுள்ள ஈரப்பசத்தைக் கண்ணில் தீட்டி வந்தால் பார்வை கூர்மை யாகும். இருள்;—மங்கல் வெள்ளை நீர்வடிதல் இவையும் போகும், (தி-ஆ) முள்ளம் பன்றியின் பித்தைக்கண்ணில் தீட்டினால் இருள் நீர்வடிதல் நீங்கிப்பார்வை கூர்[illegible]

யாகிப் பலமாகும், அப்பித்தைத்தேனுடன் தீட்டினால் பார்வை அழகாயுங் கூர்மையுமாம் பாம்பு, தசையின் சால்ன பார்வையைப் பலமாக்கும்.

மூன்றாவது பசல்.

கண்ணோய் வலியாதியவைகளைக்கூறல்.

நபிநாயகந் திருவுளமானார்கள்.—மார்க்கத்தின் துக்கத்தைத்தவிரத் துக்கமும், கண்ணின் வலியைத்தவிர வலியும், இல்லையென்று, இன்னும் தங்களின் நம்பிராட்டி மார்களிலொருவர் கண்ணோயாகிவிட்டால் அந்நோய் தீருமளவும், புளக்கம் வைத்துக்கொள்ளார்கள்.

பக்ருத்து சொன்னார்.—[illegible]ன் குபலாய், நான்குநோயை வெளிப்படுத்துவதால், அல்லாஹுத்தஆலா விலக்கிவைக்கின்றான் குருடாக்கு நரம்பு உசும்பி, கண்வலியை வெளியாக்கியும் குஷ்டமாக்கு நரம் புசும்பி தடிமல் பிடிப்பதையும், இரணங்களுண்டாகும் நரம் புசும்பி, சிலந்திக்கட்டுகளையும், பக்கவாதம் உசும்பி விட்டால் இருமலையும் வெளியாக்கி விலக்குகிறானென்று.

நீயறிந்துக்கொள்:—இந்நோய் ஐந்து பங்காயிருக்கும், முதலாவது, கண்வலி. இரண்டாவது கண்சிவக்குதல், மூன்றாவது கண்வெள்ளை நான்காவது மாலைக்கண், ஐந்தாவது, பார்வை பெலவீனம், இதில் முதலாவதினறிகுறி இரண்டு கண்ணுஞ் சிவந்து, நரம்புகள்தடித்து ஈரப்பசக்கு மிகுந்து கல், மண், விழுந்ததுபோற் கண்ணையுருத்தும்.

அதன் காரணம்வாத கலவனாகும், சிகிச்சையாவது. கண்ணோயை முறைப்பாடு செய்தவருக்கு "முஸ்ஹபு" குறு ஆனைப்பார்க்கும்படிக்கும், ஆசூறாநாளில் கண்ணில் சுறுமா இடும்படிக்கும் நபிநாயகந் திருவுளம் பற்றினார்கள்,

இன்னுங் கோழிமுட்டை வெள்ளைக்கருவை நிமையில் பூசினாலும், பருத்திக்கொட்டைப்பாலை (சிறக்கா) காடியுடன் அல்லது கற்றாழை போற்கொ[illegible]ப் பஞ்சில் சேர்த்துச் சேர்வையாகக் கட்டினாலுஞ் சுகமாகும், கண்ணோயுள்ளவன் பேணிக்கொள்ள ஆவசியகமானவைகள் இருட்டான விடத்திலிருப்பதும், கையைக்கொண்டு கண்ணில், வீண்வேலை செய்யாதிருப்பதுமாம், ஆனால் கண்ணிலவ்வாறு செய்தால் மிகத்

தங்கடஞ் செய்யும், வஜீபனத்தைக் குறைப்பதும் கை முதலிய உறுப்புகளைக்கொண்டுயாதையும் உசுப்பாதிருப்பதும், தலையில் எண்ணெய் பூசாதிருப்பதும் அவனுக்குத்தாழவும் குழவும் தலையின் பேரினும், கறுப்பு, பசுமையானவஸ்துகளிருப்பதும், வெண்மை அல்லது சுடருகளைப்பாராதிருப்பதும் நித்திரை செய்வதும்அவன் தலை உரோமத்தை நிகளவிடாமலிருப்பதும் நீவண்[illegible]ம் உரோமம் நீளமாகும் படிக்குவிட்டால் கண்ணோயதிகமாகும், கண்ணோய் அடங்கலுக்கும், தலையணியை உயர்த்தி வைப்பதும் க[illegible]ாத்த வஜீபனத்தையும் ஜிமாகையும் பசித்திருப்பதையும், அதிகமாய் வயிறு நிரம்பத்தின்பதையும், மிகுதமாய் தண்ணீர் குடிப்பதையும், சத்தமிடுவதையும் குப்புறப்படுப்பதையும், சத்தியெடுப்பதையும், விலக்கப்படும், மல்லார்ந்துப் படுப்பதையும் தலையிற் கறுப்புத்துணி போடுவதையும் பால்வகைகயடங்கலையும் நீக்குவதும் ஆவசியகமாய்க் கொள்ளப்படும், சிரசு உரோமத்தைப்போக்குவதும், புளிப்பான வஸ்துக்களையுண்பதும், மாதளைச் சுளையைத்தின்பதும் சிறுக்கா குடிப்பதும் முட்டை வெள்ளைக்கருவைக் கண்ணில்விடுவதும் மேல்பட்டையிற் பூசுவதும் பன்னீரைக் கண்ணில்விடுவதும் கண்ணோய்க்கதிக பலனாகும்,* கண்ணோய் ; சுகமாகுந்தருண முடுகிவிட்டால் இரண்டு நிமையும் பிசுப்பிசுப் புண்டாய்ச் சேர்ந்துக்கொள்ளும், நோயதிகமாகுவதானால் நிமைதடித்துத் திண்ணமாகும், கண்ணில் பீளைமெதுவாய் வழிந்தால் கண்வலி ஆரம்பம், பீளை திண்ணமானால் சுகத்தின் துவர்க்கம், நிமை சேர்ந்துக்கொண்டால், சுகம் சீப்பமாவதற்கு அறிகுறியாம், கண்வலி ; சூடு, குளிர் இவ்விருவகையாலுண்டாகும், சூட்டினாலுண்டாகிய கண்வலிக்கு அறிகுறியானது இருவிழியுஞ் சிவந்து சூடாகவும், சூடான வஸ்துக்களால் தங்கடமும், குளிரான வஸ்துக்களால் சுகமும் உண்டாகும், இதற்கு சிகிச்சையாவது ; கண்வலிவந்த [illegible]வர்க்கமானால் இரத்தம் வாங்கவும் கண்வலி அதிகமானால் அபியூனைப் பூசினாலடங்கும் ஐபாதைக் கண்பட்டையிற் பூசினால் பலன் கொடுக்கும், முலைப்பால்அல்லது பன்னீரைக்கொண்டு அறபுவெள்ளைக்கோமஞ் சனைக்கண்ணிற் பிழிந்தாலும் வலியடங்கும் முதலைகண்ணை ; வலியுள்ளவனில் வலது கண்ணுக்கு வலதுகண்ணும் இடதுகண்ணுக்கு இ[illegible]ணும் கட்டினாலுடனே சுகப்படும் சுயை ; கித்தான்புடவை[illegible] வைத்து கயிற்றில் கட்டி, கழுத்தில் அல்லது கொடுங்கையில் கட்டிக்கொண்டால் கண்வலியடங்கும், முள்ளம்பன்றியின் பித்தில் அரைதிருகத்திடையுமா

தேனுஞ் சேர்த்துக்குடித்தால், தலையிலுள்ள வியாதியும் கண்ணிலுள்ள வியாதியும், முற்றுப் பிரயோஜனஞ் செய்யும், கண்ணில் நீர்வடிதலையு மாற்றும்.

* * *

நான்காவது பசுல்.

இருவிழியுஞ் சிவக்குதல் கலங்குதல் ஆதி யவைகளைக் கூறல்.

(*)

கண்ணிலும் முகத்திலும், மூளையிலும் வரட்சியுண்டாகினதால் கண்ணில் சிவப்பு வெளியாகும். அதன்காரணம் பித்தக்கலவ னதிகரிப்பு அதற்குச் சிகிச்சையாவது; புளியங்காயைச்சிறுக்காத்தண்ணீர்விட்டுப்புளிக்கவைத்து, கண்ணில் பிழிந்து நிமையிலும், முகத்திலுந் தளமிட்டு இரவில்தூங்கி முழித்தால் சுஸ்தானவனுய் வெளியாகுன் வியாதிபெலமாகிவிட்டால் கண்ணில் மஞ்சள் நீரிறங்கும். அதனடையாளமாவது; காரணமன்றிக்கண்ணீரும், ஈரச்சத்தும், கண்ணில் மிருந்து மனிதனை கொசு, ஈ, போல் சிறிதாகக்காணப்படும். அது குருடபடக்காரணமாகும். அதன் சிகிச்சையாவது; பித்தத்தைத் தணிக்குங் குடிப்புகள் குடித்து, உறப்பு கசப்பு, புளிப்புள்ளதுகள் அதாவது; மிளகு. சுக்கு, வெங்காயம், பூண்டு, இவைபோலான வஸ்துக்களைத் தவிழ்ந்து மற்றையவஜீபனங்களைப் பரிமாறிவருவான், இன்னும் கற்றாழைச்சோறு அல்லது உப்பு, அல்லது; கடுகை, தேனுடன் கலந்து அரைத்து, கண்ணில் கட்டினால் அதன் இரத்தத்தைப்போக்கும். கடுகை நுணுக்கி வெங்காய நீருடன் குழைத்து இரத்தமுறைந்த (விடத்திற்) கண்ணில்பூசினலதைப் போக்கும் நற்சீரகத்தை நுணுக்கி, கீரை சாற்றில்குழைத்து கண்ணிற் பூசினால் பலனுண்டாகும். இதில் கோழி முட்டை வெள்ளைக்கருவைச் சேர்ப்பது மிக்க நலம். அந்நோய் நீளித்து விட்டால் கற்றாழை யருகில் மறுபுறங்காணமல் துவாரமிட்டு, குந்துருக்கத்தின் தூளை அதிலிட்டு சுறுமாக்கோலையதில் புகுத்தி மத்தித்து, புரட்டிக் கண்ணிலிடக் சுகத்தைவருத்தும் அடிக்குதல் அல்லது குத்துதல் அல்லது இரத்தக்கொதிப்புண்டாய் வழிந்து வொலித்தோடுவதால் கண் கலங்கியும் சிலவேளை; கண்ணில் செப்புளிருதமண்டாகும், அதற்கு சிகிச்சையாவது; கண்ணில்; முலைப்பாலைச்சொட்டுவதுநலம். இரத்தம் உறைந்து, கொழுப்புபோற்சதை வளர்ந்திருந்தால் முட்டை வெள்ளைக்கருவைப்பன்னீரெண்ணெயுடன் கலந்து பஞ்சிலூட்டிக் கண்ணில் கட்டினால் தீரும். நற்சீரகத்தை.

மென்று, அதன் நீரைப்பிழிந்து கண்ணில் ஒழுக்கினால் பலன்கொடுக்கும் வழிந்த இரத்தத்தையுந் தடுக்கும். முலைப்பாலை; சூட்டுடன் கண்ணில் பீச்சினாலும், குந்துருக்கத்துடன் கலந்து கண்ணில் பிழிந்தாலும், மஞ்சள் கருவை; பன்னீரெண்ணெயிற் கலந்துகட்டினாலும், குந்துருக்கம் அல்லது காட்டுவிராட்டியைப்புகைந்தாலும்அக்கலங்கல்தீரும். கறுத்தப் பெண்ணின் பாலை "ஜன்பக்கு" எண்ணெயுடன் கலந்துகண்ணில் ஒழுக்கினால் சிவப்பைமாற்றும், "புனூகு" ஆகாத சிறுமிகளின் சிறு நீரைக் கொதிக்கவைத்து ஆட்டு அஞ்சு முடியை யதில் முங்கவிட்டு, சுரப்பு, சிவப்புள்ள கண்ணில் தளமிட்டொத்தினலது நீங்கும். மாதவிடை இரத்தத்தைச்சூட்டுடன், சுரப்பு சிவப்புள்ள கண்ணிற் பூசவேதீரும். ஈக்களைத்தட்டி சுரப்பு வலிப்புள்ள கண்ணில்வைத்தாலது நீங்கும்.

* * *

ஐந்தாவது பசுல்

கண்வெள்ளை, மாலைக்கண், பார்வைபெலவீனம் கண்ணிருளிவைகளைக்கூறல.

* * *

மூளையில் நின்றுங்கண்ணாளவிலிறங்குகின்ற வெள்ளை நீர் பதினொருவகையாயிருக்கும். அதன் சிகிச்சையாவது; உயர்ந்த சுறுமா இடுவதும், சுடுதண்ணீரில் கவிழ்வதும், தேனைக்கண்ணில் தேய்ப்பதும், காகத்தின்பித்தைக்கண்ணில் தேய்ப்பதும் முசல்பித்தைத் தேய்ப்பதும், கடல்நுரையைத் தேனிலரைத்துத் தேய்ப்பதும், சுடுதண்ணீர் ஆவிபிடிப்பதும், கஸ்தூரியைத்தேய்ப்பதும், முசலின்பித்தை நெய்யில் குழைத்து முசல்பாலில்மத்தித்துத்தேய்ப்பதும்மனிதன்பித்தைத்தேய்ப்பதும்கீரைப்பூச்சியை யுலர்த்திப்பொடித்து தேய்ப்பதும் மாதவிடை இரத்தத்தை பழைய கள்ளுடன் சேர்த்துதேய்ப்பதும். முதலைப் பித்தைத்தேய்ப்பதும் அதன் மலத்தைத் தேய்ப்பதும் சாவலின் இரத்தத்தைத் தேய்ப்பதும் உடும்பு, புனுக்கையைப் பொடித்துத் தேய்ப்பதும் ஊக்குருவியின் எச்சத்தைத் தேய்ப்பதும் குதிரை லெத்தியை யுலர்த்திப் பொடித்துதேய்ப்பதும் முள்ளெலிப்பித்தைதேய்ப்பதும் மாங்கொத்தி இரத்தத்தைச் சூட்டுடன் தேய்ப்பதும், பலரிசை. சிறுநீரை; செப்புப் பாத்திரத்திற் சேகரித்து, உறையும் வரையிற் காய்ச்சியெடுத்துலர்த்தி, கறியுப்பைக் கலந்து பொடித்துக் குங்குமப்பூத் தண்ணீரினல்

ந்து (குழைத்து) குகையில் வைத்துருக்கி பெ ரிகாரமிட்டுருகிய பின் எடுத்து ஆறியகட்டியை நாவிதன் கத்தி தீட்டுகல்லில் கஸ்தூரிதண்ணீர் விட்டு உரைத்து வழித்து வெள்ளையிருந்த கண்ணில் தேய்ப்பதும் கண் வெள்ளையைப் போக்கும். மானின் கஸ்தூரி, பார்வையையுங் கல்லையும் மூளையையும் பலமாக்கி வெள்ளையைப்போக்கும்.

மாலைக்கண்.—அதாவது; கண்ணில் ஈரப்பசக்கிறங்குவதால்இரவில் யாதொன்றையும் பாரான். அதன் காரணம்.—ஐயக்கலவனதிகரிப்பதினால் அதன் பரிகாரம்.—பள்ளாட்டு ஈரலைக்கத்தியாற் பிளந்துநெருப்புக் கங்கியில்வைத்து அதில் வெளியாகின்ற நுரையை, சுறுமாக்கோலரு காலெடுத்து மிளகுத்தூளையதிலுநிர்த்தி இரவில் நித்திரையாகும்வேளையில்அக்கோலால்கண்ணில்தீட்டித்தூங்கவும் சிரசில்மாட்டுவெண்ணெயைப்பூசவும் நெய்சத்துள்ள பதார்த்தங்களையுண்ணவும். இவ்வாறு மூன்று நாள் செய்யக்குணமாகும். இன்னும் பள்ளாட்டு ஈரலைத் தண்ணீரில் சமைத்துஅதனாவியைத்தலையிற் பிடித்தாலும், மனிதனின் காதழுக்கை மூன்றுஇரவு கண்ணில் தேய்த்தாலும் சூரியோதயத்தில் தேனைக்கண்ணில் தேய்த்தாலும்.மாலைகண்ணுக்குப்பலனாகும் இன்னும் நாலாவது பாபு மூன்றாவது பசுலில் காண்க.

ஆறுவது பசல்

கண்பார்வைப் பெலவீனம், மங்கல், இருளிவைகளைக் கூறல்

——:():——

பார்வை பெலவீனமாகுதல்—அதாவது வயதுமிகுத்தலால் நேமமாய் கித்தாபுகள் (புத்தகம்) பார்ப்பதால் நெசவுபோலான மெல்லினமான வேலைகள் செய்வதால் கடிசானவெள்ளைகளைப் பார்ப்பதாலும் அனுஉரோமம், கயிறு, ஊசித்துவாரம்போலுள்ள சிறிய வஸ்துக்கள் பார்வைக்குத் தெரியாமலிருக்கும். அதன் பரிகாரசிகிச்சைகள், கண்ணுக்குரிய முதலாவது பசல் முந்திவிட்டன.

இன்னு [illegible]ற்றைக்கண்ணில் தேய்த்தால் இருள் நீங்கும். எண்ணெய்வருட்சியால் பார்வை பெலவீனமானதற்கு சிகிச்சை. பெருங்காயத்தைத் தேனுடன் தீட்டினால் பார்வை கூர்மையாகும். இன்னும் [illegible]ள்ள நெய்யில் புளிமாதுளை நீருற்றியுறைந்தபின் தீட்டினாலும் பல

னாகும். நற்சீரகம், சர்க்கரை கருவாப்பட்டை சுக்கு கிராம்பு குங்குமப்பூ, இவைகளை ஒவ்வொன்றாய்க் கண்ணில்தீட்டினா லிருளைப் போக்கும். இன்னும் சதாபை [illegible]லைப்பா லுடன் தலையில் பூசினாலிருள் போகும். பாம்பின் ச[illegible]ட்டையை மண்ணுடன் சேர்த்து மைபோலரைத்துக் கண்ணிலிட்டா[illegible] கண்ணிருளை மாற்றும். பிறந்தபிள்ளையின் காட்டுப்பீயையுலர்த்திப் [illegible]பொடித்து கண்ணிலிட்டால் மங்கலை நீக்கும் வல்லவக்கானின் பித்தைக் கண்ணிலிட்டா லிருளைநீக்கும் இளி[illegible]ச்சத்தை, தண்ணீரிற்கலந்து கண்ணிலிட்டால் கண்ணிருளுக்கும் வலிக்கும் (பிரயோஜனமாம்) பசுமாட்டின் பித்தை தேனுடன் கலந்து கண்ணிலிட்டா லிருளைப்போக்கும் ஆந்தைப்பித்தைகண்ணிலிட லிருளை மாற்றும் [illegible]புறாவின் இரத்தத்தை சூட்டுடன் கண்ணிலிட்டால் இருளையும் அதன்காயத்தையுமாற்றும். ஓநாய்ப்பித்தை கண்ணிலிட்டால் இருளையும் பெலவீனத்தையும் போக்கும் முள்ளம் பன்றிபித்து, இருளையு நீர்வடிதலையும் நீக்கிப்பார்வையைக் கூர்மையாக்கி, பெலமாக்கும் அப்பித்தைத்தேனுடன் கலந்தால் மிகநலம். செம்பருந்தின் பித்து; இருளையும் நீர்வடிதலையுமாற்றும். கீரிப்பிள்ளை மூளையைக்கண்ணிலிட இருளை நீக்கும். காகத்தின் ஈரலைக் கண்ணில் தீட்டினால் மங்கலைபோக்கும் அதன் பித்து; சாவலின்பித்து, சமம் கூட்டித்தேனுடன் மத்தித்து கண்ணில் தீட்டினால் இருளையும் புகைச்சலையும் போக்கும். தண்ணீர் நாயின் மூளையைக்கண்ணில் தீட்டினால் இருளை நீக்கும் இன்னும் நான்காவது பாபு, மூன்றாவது பசலில் பார்க்கவும்.

ஏழாவது பசல்.

கடைக்கண்ணில் நீர்கசிவுதல் கொடிபடருதல் உரோம முளைக்குதல் களைக்கூறல்.

——:*:——

மாசாக்காயைத் தண்ணீரிலரைத்துப் புருவத்துக்குமேற்பூசினாலும் அதைச்சுட்டுப்பொடித்துக்கண்ணில்தீட்டினாலும், கடுக்காயைக்குழைத்தமாவால் கவசஞ்செய்து, கவசம் சிவக்கும் வரையில் சுட்டெடுத்து ஆறியபின் அக்கவச நீக்கி, கடுக்காய் மூன்று கிரு[illegible] கு[illegible]ங்குமப்பூவுடனரைத்துக் கண்ணிலிட்டாலும், கசிவுபசக்கு,பீளை இவைகளை நீக்கும். இன்னும் வெங்காயநீர் அல்லது குங்குமப்பூஅல்லது சுறுமா. அல்லதுமுத்து, அல்லதுமஞ்சள் கடுக்காய்த் தூளைத்தண்ணீரில் ஊறவைத்து கண்ணிலிட்

டாலும் கசிவுள்ள நீரைப்போக்கும் நற்சீரகமும் அல்லது பழமையான எண்ணெய் அல்லது உப்புடன் கிராம்பு அல்லது கோழிமுட்டை இட்டவுடன் அம்முட்டைத் தொலியை எடுத்து சிறுக்காவுடன் நெருப்பில் கொதிக்கவைத்து பத்து நாள் சென்றபின் எடுத்தரைத்து இவைகளிலொன்றைக்கண்ணில் தீட்டினால் பலன் கொடுக்கும்.

கண்ணில் உரோமம் முளைப்பதற்குப்பரிகாரமாவது, சத்தியெடுத்தால் சடலத்தையும் சிரசையும் வெடிப்பாக்கும், சுகபேதியும் சுறுமாவிடுவதும் ஒட்டகை முடியைக்கரித்து கண்ணிலிடுவதும் இரவுபகல் அந்த உரோமத்தைப்பிடுங்கிவருவதும்பிடுங்கிய இடத்தில்பள்ளாட்டுப்பித்தைப்பூசுவதும்,மான்இரத்தத்தைப்பூசுவதும்நாயுண்ணியைப்பூசுவதும்,மாதளைச் சாற்றைத்தீட்டுவதும், முடிபிடுங்கிய இடத்தில் நற்சோகத்தால் சுடுவதும் இருப்புத்துருவை எச்சிலுடன் முடிபிடுங்கிய இடத்தில் பூசுவதும் ரோமத்தைப் போக்கும், மாதளைச்சாற்றை அதன்குடலுடன் பாத்திரத்திற் பிழிந்து கண்ணிலிட்டாலதிலுள்ள சிரங்கு வங்கு ரோமம் நீர்வடிதல்களை நீக்கிப்பார்வையைப் பெலமாக்கும் எறும்பை அரைத்து நிமையிற் பூசினால் முடிமுளையாது வெண்குட்டத்தில் பூசினலதைநீக்கும் பாம்பின் பித்தைக் கண்ணில் பூசினால்,கண்பூவை நீக்கும். பிறந்தசிசுவின் காட்டு மலத்தையுலர்த்திப்பொடித்து கண்ணில் தீட்டினால், கண்ணின் பூவை நீக்கும். கறுத்த "பெண்ணின் பாலை, குங்குபூவும்" ஸபர் ஜல் என்ற கொளிஞ்சிப் பழச்சதைத்தண்ணீரும் குழைத்து,வலி,இடி,பூவுள்ள கண்ணில் பிழிந்தால் நீங்கிவிடும். இராஜாளிபித்தைக் கண்ணில் பூசினால் நீர்வடிதலைமாற்றும் காட்டுக்கழுதை அதாவது மளாவின் கண்ணை நேமமாய்ப் பார்த்தால் கண்ணோய்கட்குப் பலன் கொடுக்கும். நீர்வடிவதைநிறுத்தும். அதன் பித்தைக்கண்ணில் பூசினால்பார்வையைக் கூர்மையாக்கி இருளையும் போக்கி, துவர்க்கமாய் வடியு நீரையு நிறுத்தும் முத்துச்சிப்பியை அதன்மாமிசத்தோடு கரித்தசாம்பலைக் கண்ணிற் பூசினால் கண்ணிலுள்ள காயம் நீர்வடிதலிவைகட்குப் பலன் கொடுக்கும். செம்மறிக்கிடாயின் பித்தைத் தேனுடன் கண்ணிற் பூசி வந்தால் நீர்வடிதலை மாற்றும் கண்ணீர்,நெருப்புப் புகைபடாத தேனைக்கஸ்தூரியுடன்கலந்து கண்ணிற்பூசினால் நீர்வடிதலை மாற்றும் கழுகின் பித்தைகுளிர்ந்த தண்ணீருடன் ஏழுநாள் கண்ணிலும் அதன் சுற்றிலும் பூசிவந்தால் நீர் வடிதலை மாற்றும் எறும்பு முட்டையைத் தண்ணீர்விட்டரைத்து எந்தஸ்தலத்திற் பூசினாலுமதில் முடிமுளையாது,

எட்டாவது பசுல்.

கண்ணில் பூவிழுதல் நிமையறைப்பு கண்மஞ்சணித்தலிவைகளைக்கூறல்.

——:():——

(நுனி) கடைக்கண், தண்ணீர் சம்பந்தத்தினால் பொதிந்துக் கொள்ளுந்தோல் சிலவேளை கண்ணை மூடிவிடும் அதுகருமுழியை யெற்றிக்கொண்டால் அதுகடுமையாகிவிடும். அதன்பக்குவம். கடல்நுரை என்ற "ஸிஸானுல் பஹறை" உப்புடன் அரைத்து அல்லது கடலுரையை அல்லது புளி[illegible]தனை நீரை அல்லது நோன்பாளியின் எச்சில் உமிழ்நீரை அல்லது அதிமதுரம் கரும்புச் சருக்கரையுடன் சமனிடைசேர்த்து,இடித்து வடித்துக் கண்ணிலிடமாறும், கீலப்பூவில் மட்டுந்தேய்த்தாலும் குந்துருக்கத்தை ஒரு நாளிகைநேரஞ்சுடு நீரில் மூழ்கவைத்துத் தெளிவிறுத்துத் தீட்டினாலும், குந்துருக்கத்தை முலைப்பாலில் உரைத்து பூசினாலுந் தீரும் உப்பு,மீன்,தள்ளவும் கண் குந்தந்தள்ளிவிட்டால்: காலையினும்மாலையினும் அதன்பேரில் கற்பூரத்தைவைக்கவும் அதன் விபரம் கற்பூரத்தைக் குங்குமப்பூவுடன் சேர்த்துநீருடனரைத்துப்பஞ்சிலூட்டிகண்ணில்வைக்கவும் நிமையை மூடித்திறந்து உசும்புதலுக்கிடங்கொடாத ஈரப்பசையன்றி, கண்ணிமைசிவந்து திரட்சியான பீளையும் வங்குமுண்டாய் வலியேற்படுதற்குப்பக்குவம். ஈரப்பசக்குள்ள நெய்யையுண்பதும், கோழிமுட்டைவெள்ளைக்கருவு அல்லது பன்னீரெண்ணெய் அல்லது பருத்திக்கொட்டைபாலை ஆவினெய்யுடனும் கொழுப்புடனுங் கண்ணில் மேற்கூறியவைகளிலொன்றை வைக்கத்தீரும் (பிடரியில்) மல்லார்ந்து நேமமாய்படுத்தாலும் உணவுமிகுத்தவஜீபனத்தைச் சுருக்கமாய் பெற்றுக்கொள்வதாலும் துலங்கிய காரணமன்றியுட்கண் சிவக்கும். வஜீபனத்தில்வரட்சியானதும் குளிர்ச்சியானதும் முட்கொள்ளத் தீரும்.

——:(:):——

ஒன்பதாவது பசுல்.

கண்ணில் நீர்வடிதல் கருநீர்வடிதல்கண், சூலம்; வங்கு இவைகளைக் கூறல்.

——:(:):——

இந்நோய்களுண்டாவதற்குக் காரணமாவன:—கடினமான வாந்தியாலும் அடியாலும் தலை, கண் வியாதியாலும் கடினமான குளிராலும் கரீஜிய்யத்தாகிய ஆதி சூடு பெலவீனமாவதாலும், கொடியவியாதிக

ளாலும், திரட்டியான கனிவர்க்கங்களை நேரமாய் தின்னுவதாலும் நீளித்த தலைவலியாலும் உற்பத்தியாம். அதனடையாளமாவது; கண்ணுக் கெதிரே மூட்டை, கொசு, ஈ, பறந்துபோவதுபோலும், உரோமத்துக் கொப்பாகியும் மின்னல் சுடரைப்போலும். காணப்படும். அதற்குப் பக்குவமாவது; கண்ணுக்குத் தங்கடமானவைகளைத் தவிழ்ந்துக் கொள்வதும், சுறுமா இடுவதும், வெங்காய நீரைத்தேனுடனுந் தனிமையினுங்கண்ணில் தேய்ப்பதும், பெருங்காயத்தைத் தேனில் தின்னுவதும் கண்ணிலிடுவதும், எண்ணெயை கண்ணிலிடுவதும், எலியின் மலத்தைக் கரித்துத் தேனில் குழைத்து கண்ணில் தேய்ப்பதும், மாசாக்காயைக் கரித்து கண்ணில் தீட்டுவதும் "சூறத்துமு அவ்வதத்தைனிமை தினமு மோதிவருவதும் கண்ணில் நீர்வடிதலை மாற்றும்,

கண்ணில் கறுப்பு முழியைப் போல், கரு நீர் வடிந்தால் இரவில் தீன் குடிப்பையும் நெய்ச் சத்துள்ள வைகளையும் தவிழ்ந்து மாலை நேரம் ரொட்டியைத் தண்ணீரில் நனைத்துத் தின்றும் இரவில் தண்ணீர் குடியாமலிருந்து வருவதில் வியாதி குணமாயிருந்தால் இரண்டு மாதந்தொடராய்ச் செய்வான், வெங்காய நீரைத் தேனுடன் கண்ணில் தீட்டினால் தீரும். மூக்கிலும் எகிரிலும் அடியாலும் மூலம் உற்பத்தியாகுதல்போல் நுனிக்கண்ணில் உற்பத்தியாகின்ற மூலத்துக்குப் பக்குவமாவது அதைச் சுடுவதாலும் அதன் ஊனற்றை நீக்கிய பின் குந்துருக்கத்தைத் தண்ணீரிலரைத்துக்காய்ச்சிஒழுக்குவதாலும்அல்லது மூலைப்பாலுடனுரைத் தூற்றுவதாலும் கற்றாழைச் சாற்றைப் பிழிவதாலும் தீரும்.

கண் சொறியாகிறது, கண் நிமையு மதனுள்ளும் சிவப்பாயுஞ் சரசரப்பாயு மிருக்கும். அதற்குப் பக்குவம் கௌலீனைத் தீட்டினாலும், மனிதன் ரோமத்தைக்கரித்து இரும்புக்கிட்டத்துடன் பொடித்துக்கண்ணில் பூசினாலும் வெங்காய நீரைத் தூத்தியாவுடன் அல்லது கடலுரையைத் தீட்டினாலுந் தீரும்.

பத்தாவது பசுல்.

கண் ஊலிகளில் மிகுத்த தற்குப் பக்குவம்.

வெயிலில் நடந்தினாலுண்டாகும் கண்வலிக்கு அபியூனை முகர்ந்தாலும் கண்ணின்மேற் பூசினாலும்தீரும் பொழுதுபோலுள்ள பிரகாசத்தைப் பார்த்தால் கண்ணுக்குத் தங்கடமுண்டாகி வஸ்துக்களை மஞ்சணிறமாய்க் காணப்படுபவான் இருளான இடத்தில் ஓரிரவு பகலிருந்து பின்பு சன்னஞ் சன்னமாய் பிரகாசத்தைப் பார்ப்பான். இன்னும் கற்றாழையை இளஞ் சூடாய்ச் சுட்டு அதன் சோற்றை நிமை யுள்ளில் வைத்தால், கண் இடி, வலி, சொறி இவைகளுக்குப் பலன்றரும்.

பதினொன்றாவது பசுல்.

நிமை மறைத்து பொட்டையானதற்கு சிகிச்சை.

நிமை தடித்து, திண்ணமாகி, காந்தலுடன் தன்ரோமங்களுதிர்ந்து பொட்டையாய் விடுமானால்; எலிப் புழுக்கையை யரைத்துத்தேனில் மத்தித்துக்கண்ணில் தேய்த்தும் நிமையிற் பூசவுந் தீரும். இன்னும், பாலைப் பன்னீரெண்ணெயுடனும் முட்டை வெள்ளைக் கருவுடனும் கலந்து நிமையிற் பூசினாலும், மொச்சைக்கொட்டையு மதிற்பாதி இடை வெந்தயமு மிடித்துத் தேனில் மத்தித்து நித்திரைக்கு போகுஞ் சமயத்தில் கண்ணில் கட்டி, காலையிற் சுடு நீரிட்டுக் கழுவினாலுந்தீரும்.

பனிரெண்டாவது பசுல்.

மாறுகண்ணுக்குச் சிகிச்சை பரிகாரம்.

மாறு கண்ணுள்ள குழந்தைகட்கு அதன் படுக்கையைச்சரிப்படுத்திமுகத்துக்குநேரில் விளக்கேற்றிவைத்து அதற்குநேரில் சிவப்புக்கயிற்றைக் கட்டிவைப்பதாலும் சிவப்பான வஸ்துக்களை நேரில்வைப்பதாலும் தன் பார்வை அவைகளளவில் மீளும், இன்னும் பால்கொடுப்பவள் நூதனமான கோலமணிந்து அக்குழந்தையைப் பார்க்கச் செய்வதால் பார்வையதில் மீளும் வயது மிகுத்த பிள்ளைக்கு மூளையைத் துப்புரவாக்கும். அவ்வகை வஸ்துக்களைப் பரிமாறுதலால் பார்வை மீளும்.

பதிமூன்றாவது பசுல்.

கண்வெளுத்து நிமை சோர்ந்திருத்தலுக்குப் பக்குவ

கண்முழி வெளுக்குதலுக்கு, குங்குமப் பூவைக் கண்ணில் தீட்டினாலும், பேய்க்கொம்மட்டி காயினுள் சுறுமாக்கோலை மூழ்கச்செலுத்தி அக்கோலால் கண்ணில் தீட்டினாலும், முழிகருப்பாகும், கண்ணில் மண் புழுதி, கல், புகைபோலுள்ளதுகள் விழுந்து வெளியாகாமல் இமையுள்ளிலிருந்துருத்தினால் முலைப்பால் அல்லது தண்ணீரைப் பலமுறை கண்ணிலூற்றினாலும், சுறுமாக்கோலால் கண்ணிமைக் குள்ளிட்டு சுற்றி எடுத்தாலும், அது வெளியாகி யுருத்தலடங்கும்.

பதினாலாவது பசுல்

தூக்கம் வருவதற்கும் வராததற்கும் விபரம்.

நித்திரையாவது அறிவுகளுஞ்சும்புதலைவிட்டும் நபுசு ஒடுங்குகிறதை விட்டுமீண்டு மூளையின் ஆஸ்பதமாகியசூட்டுடனுள்ளிலமைந்துவயிற்றில் நின்றும்மூளையளவிலுயரும் ஆவி, இந்த ஆவி; கல்பென்னுந் தாமரைக் காயளவிற் சேர்ந்தால் நித்திரைவரும் மனிதனுக்கு இரண்டு நபசுண்டும் அதாவது, நப்சும் றூஹும், நபுசாகிறது ‘‘அக்லும்’’ அறிவு முள்ளது றூஹாகிறது; நபுசெனும் உயிராம், மவுத்தினிடம் இரண்டு மிறந்துவிடும், தூக்கத்தினிடம் நப்சு மட்டிலு மிறந்து அதன் சுடர்சடலத்திலிருக்கும், அதனால் கனவுகாண்கப்படும் முழித்தால் விரைவில் றூஹு மீளும், மவுத்தாகியவர்களின் உயிரும், ஹயாத்துள்ளவர்களின் உயிருஞ் சந்தித்துக்கொள்ளும், ஹயாத்துள்ளவர்களின் உயிர் தன்னிருப்பிடத்தை நாடினால் அல்லாஹுத் தஆலா அனுப்பிவிடுவான், இறந்தவர்களி னுயிரைப்பிடித்துக் கொள்வானென்று சொல்லப்பட்டிருக்கின்றது நித்திரையின் பலன் இரண்டு, முழிப்பில் வருத்தமடைந்த உறுப்பும், துக்கமடைந்த உயிரும் சுகம் பெறுவதும் ஆஸ்பதமாகும் சூடுள்ளில் நுழைந்து வஜீபனம் சமியலாக வுதவியாவதுமாயிருக்கும் ஆகையால் இரவில் நித்திரைக்கிணக்கமாகிய நாழிகை ஆறு, பகலில் ‘‘கைலூலா’’ என்ற நாழிகை ஒன்று, நித்திரைக்குரிய விதம் வலது பாகத்தில் ஒரு நாழிகையும் இடது பாகத்தில் மிகுதநேரமும் திக்றுடன் தூங்குவான், அதில் நான்குவகையுண்டு, நபிமார்கள் (மல்லாந்து) பிடரியின்பேரிலும், உலமாக்கள் வலது பாகத்திலும், சுல்தான்கள் இடது பாகத்திலும், (இது வஜீபனஞ் சமியலாக முக்கியமாம்) ஷெய்த்தான் குப்புறமுகங்கவிழவும் தூங்குவதாயிருக்கும், இன்னும் நாற்பது சித்தீக்கீன்களின் யோசனை ஓர் மித்ததாவது; தண்ணீரை யதிகமாய்க் குடிப்பதும் மிகமுழிப்பதும் சரீரத்தை இலேசாக்கி மூளையைத் தங்கடமாக்கும் (வயிறு நிரப்பத்தில்) சமியலாகுமுன் தூங்குவதும் கொடிய வியாதிகளை வருத்தும் என்று, அசறுக்குப்பின் தூங்குகிறவனுக்கு அறிவு நீங்குவதில் அவன் நபுசையே பொழிய பழிக்கான்பகலின் துவர்க்கத்தில்தூங்குவது மடமைத்தனம், மத்தியத்தில்; நற்குணம், ஒடுக்கத்தில் (ஹலாக்கு) மரணம், சுபுஹூக்குப்பின் ரிஸ்க்கை விலக்கும் இரவின் மத்தியத்தில் மூன்று நாளிகை தூங்குவது மிகநலவாயிருக்கும், நிலவில் நித்திரை செய்பான் நிறத்தை மஞ்சணிப்பாக்கும், தலைக் கனமுண்டாகும், நிழலுக்கும் வெயிலுக்குமிடையில் தூங்கான் அது ஷெய்த்தானின் தலம் அல்லாஹுத்த ஆலா மிக அறிந்தவன்.

நித்திரை குறைந்தவன்—இரண்டு காலையும்சுடு நீரில் வைத்தாலும் கீரையைத் தலைக்குக் கீழ்வைத்தாலும் கசப்பானதை முகர்ந்தாலும், தின்றாலும், மொச்சைக்கொட்டையைத் தின்றாலும், குங்குமப்பூ, தப்பாலை முகர்ந்தாலும், குங்குமப்பூ இட்டு காய்ச்சப்பட்ட சுடு நீரைத் தலையிலொலிப்பதாலும், கர்ப்பூரம் அபியூனை முகர்ந்தாலும், பால் குடித்தாலும், போசனை ஜிமாஃ, வர்த்தமிவைகளில்லாதிருப்பதாலும் நித்திரையை வருத்தும்.

நித்திரை மிகுந்தவன்— தின்குடிப்பதைக் குறைப்பதும் உட்டணமான எண்ணெயைத் தேய்ப்பதும், கெரண்டைக்கால் இரத்தங்குத்தி வாங்குவதும், நித்திரையின் போது பலமுறை குந்துருக்கப் புகைபிடிப்பதும் கனிவர்க்கங்களைத் தின்பதை விலக்குவதும்புளித்தபால்மோரைக் குடிப்பதுங் கற்பூரத்தை தினம் முகருவதும், மத்தியானம் திக்று, ஹதீது, கிறாஅத்து ஆகமம், பிக்று இவைகளைக் கொண்டு (மஅனா) அர்த்தத்துடன் பாக்காயிருப்பதும், யாதொரு வஸ்து சூறத்துல்இக்லாசை, நூறுவிடுத்தமோதி, ஒருதுணித்துண்டில் முடிந்து கொடுங்கையிற் கட்டிக் கொள்வதும் நித்திரையை விரட்டும். உறங்குகிறவன் முகத்திற்புதைக் குழி மண்ணைத் தூவினாலது இருக்குமளவு முழிப்பான் ஆந்தையை அறுத்தாலதன் கண்ணு இரண்டில் ஒன்று திறந்தும் ஒன்று மூடியுமிருக்கும். அதில் திறந்திருந்தகண்ணை மோதிரத்து கின்னிக் குக்கீழ் வைத்துக்கட்டி யணிந்துக்கொண்டவன் அதுஇருக்குமளவும் உறங்கான்

மூடியிருந்தகண் அதற்கு மாற்றமாயிருக்கும் (அதாவது உறங்குவான்) இரண்டும் பிசகிப்போனால், இரண்டு கண்ணையுந்தண்ணீரில் போட்டால் திறந்திருந்தகண் மிதக்கும், மற்றது தாழும், எருமைமாட்டின் பலன் பசுமாட்டின் பலனைப் போலானதால், அதன்மூளையில் ஒருபுழுவுண்டும் அதை எடுத்துக் கட்டிக்கொண்டவன் அதிருக்கு மளவுந் தூங்கான். செங்கால் நாரையின் தாமரைக் காயை மிகவுந்தூங்குகிறவன் கட்டிக் கொண்டால் நித்திரை சுருக்கமாகும். கழுதைக் காதிலுள்ள அழுக்கை குடிப்பு மற்றதிற் சேர்த்து புகட்டப்பட்டவன் உணர் வற்றுறங்குவான் பழந்தின்னி வௌவாலின் கண்ணைத்துணியில் வைத்து நாற்காலி, மற்றதின் காலிற்கட்டி, அதின்மேலிருந்தவனுக்குத்தூக்கம் வாராது மேற்படி தசையைத் தின்றால் முழிப்புண்டாகும் சிறிய வௌவாலின் தலையைத் தலையணிக்குள்வைத்துபடுத்தவன் தூங்கான் நண்டின் தலையைவளர் பிறையிற் கட்டிக்கொண்டால் தூங்குவான் முத்துச்சிப்பியிலுள் அப்பிக் கொண்டிருக்கும் பூச்சித்தலையின் பேரில் கல்லுக் கொப்பாகியதலை மூடியைநுணுக்கி உறங்குகிறவன் பேரிற்றூவினால் மிகுந்தநேர முசும்பாதிருப்பான் மதனகரீ பூவிலுமிதுமிகு முக்கியம் யானைக்காதழுக்கைக் குடிப்பில் சேர்த்துக்குடித்தவன் ஏழுநாள் மட்டுந்தூங்குவான் குரங்குப் பல்லை ஒருவன்பேரிற் கட்டினால் தூக்கமிகையாது இரவில்திடுக்கமடையான் முள்ளம்பன்றியென்றமுள்ளெலியின் இடதுகண்ணைஜைத்தூனெண்ணெயில் கொதிக்கவைத்து சீசாவிலடைத்து, அத்தைலத்தைஒருகுச்சில் துவைத்து ஒருவன் மூக்கின் சமீபத்திற் பிடித்தாலுடனே தூங்கிவிடுவான் நாயின்பாலைக்கண்ணில் தீட்டினால் அன்றிரவு முழுதுந்தூங்கான், "லக்குலக்கு" என்றவான் பறவையின் வலதுகண்வித்தைச் சுமந்துக் கொண்டவன் உணர்வற்றுத் தூங்குவான் வெண்மையான பள்ளாட்டின் கொம்பைப் பொடித்துத் துண்டிற் பொதிந்து, தூங்குகிறவன் தலைக்குக் கீழ்வைத்து விட்டாலது இருக்குமளவு முணர்வுபெறான். தேன் மெழுகை வைத்துக்கொண்டால் தூக்கம்வரும் தின்றால் காராக்கோட்டியாகாது என்றும் சொல்லப்படுகின்றன.

பதினைந்தாவது பசுல்.

இரவில், இருட்டில் வாசிக்கவும் பகலைப்போற் பார்க்கவும் றூஹானிகளைக்காணவும், ஜின்கள் பணிவிடை வேலை செய்யுமான விசயங்களைக்கூறல்.

பசுமாட்டின் கண்ணைக்களைந்து அதன் நீரால் கடுதாசில் எழுதினால் பகலில் பார்க்க எழுத்து வெளியாகாது இரவில் பார்க்க ஏதுவாயிருக்கும். ஆந்தைக்கொழுப்பையுருக்கிக்கண்ணில்தேய்த்துக்கொண்டால் இரவில் எந்தவிடத்திற் புகுந்தாலும் வெளிச்சமாயிருக்கும் காளைமாட்டின் சிறுநீரால் இரும்பிலெழுதினால் நன்றாய் வாசிக்கலாம். மீன்பித்தும், கடல் ஆமையின் பித்தும் கலந்து இரும்புஎழுது கோலால் கடுதாசியில் எழுதினால் இரவில் தங்கத்தைப்போற் காண்பான். பள்ளாடு வெள்ளாடு இவைகள் பாலால் கடுதாசிலெழுதினால் எழுத்து வெளியாகாது, அதில் சாம்பலையுதிர்த்தினால் எழுத்து வெளியாகும் முள்ளெலியின் வலது கண்ணைநல்லெண்ணெயிற் கொதிக்கவைத்துச் செம்புப்பாத்திரத்தில் வைத்துக்கண்ணில் தீட்டினால்இரவிலியாதொன்றும் மறையாமற்பகலைப்போல் காண்பான். செம்மறியாடென்ற தும்பையாட்டின் பாலாலெழுதி, தண்ணீரில் போட்டால் எழுத்துதுலங்கும். கரும் பூனைப்பித்தைக் கண்ணில் தீட்டினால் இரவைப்பகலைப்போல் பார்ப்பான். கடுசான கறுப்புள்ள கோழியின் இரண்டுகண்ணையுமுலர்த்திப்பொடித்துக்கண்ணிலிட்டாலும் அவ்விரண்டின்பித்தையுலர்த்திப்பொடித்து சுறுமாவுடன் கலந்து கண்ணிலிட்டுக்கொண்டாலும். றூஹானிஜின்களைப்பார்ப்பான், இவனுக்கு விடையளித்துப் பணிவிடைகள் செய்வார்கள்.

——(0)——

பதினாறாவது பசுல்.

கண்திஷ்டி, ஷிஹ்று, சிறுமிகளினழுகை, நடுக்கம், நெஞ்சுத் துடிப்பு கோளைத்தனமாதியவைகளைக்கூறல்

நபிகளுங்கந்திருவுளமானார்கள்.—கண்ணேறால் மனிதன் புதைகுழியிலும், ஒட்டகைசமையல் பாத்திரத்திலும் நுழைந்துவிடுவார்கள், மாதவிடைகாரியின்வாடையால் பூண்டுகள்தோட்டங்கள்கெடுவதுபோலும் சிலபாம்புகளின் வாடையாலும் மூச்சாலும் பார்வையாலும்தீங்குகளுண்டாவது போலுங்கண்ணேறுமுண்மையாயிருக்குமென்றும். கண்திஷ்டி, தாக்கினவனின்சுயப்பேரைச் சொல்லி திஷ்டிபட்[illegible]நேரிலழைத்தாலுடனே திஷ்டியழிந்துபோம். முசலின் கொண்டைக்காலைக் கட்டிக்கொண்டால் ஜின் பிசாசுகள் வெருளும். பாம்பின் தாமரைக்காயையுலர்த்திக்கட்டிக்கொண்டாலும் அண்டாது. நாயின்வலது கண்ணைக் கட்

டிக்கொண்டால் கண்ணேறு அணுகாது. பன்றியின்பித்தை, செய்வினையால் கட்டப்பட்டவனின் நாசியின் இரண்டுதுவாரத்திலும் ஒவ்வொரு துவாரத்தில் மும்மூன்று தரம்பிழிந்தால் கட்டவிழ்ந்து சுஸ்தமாவான். கோழியின் இரைப்பெட்டியிலுள்ள கல்லைக்கட்டிக்கொண்டால் திங்குடையகண்ணைத்தட்டும். கரும்பூனைச்சினையைத் தின்றவனில் செய்வினை குணஞ்செய்யாது. அப்பூனையின் வீரப்பல்லைக்கட்டிகொண்டவன் இரவில் திடுக்கமடையான். முள்ளம்பன்றி வலதுகண்ணைச் சிறுக்காவில் ஏழுநாள்மட்டும் ஊறவைத்து எடுத்து மோதிரவட்டத்தின் கீழ்வைத்தணிந்துக்கொண்டால் செய்வினை கண் திஷ்டியாதியவைகளி லகப்படான், ஷிஃறில் அகப்பட்டவனுக்கு, அம்மோதிரத்தைத் தண்ணீரிற் கழுவிகுடிப்பித்தா லவனைவிட்டுஞ் செய்வினைபோய்விடும் மேலுஞ்செய்வினையடங்கலுக்கும்பிரயோஜனஞ்செய்யும் காகத்தின்சொண்டைக் கட்டிக்கொண்டால் கண்திஷ்டியண்டாது. அதன்பித்தைசூனியஞ் செய்யப்பட்டவனுடைய சரீரத்தில் பூசினால் சூனியமுறிந்துபோம் பெண்ணைவிட்டுஞ் செய்வினையால் கட்டப்பட்டவன், முள்ளெலி கொழுப்பு, இரத்தம், நரையீரல் இவைகளால் தேய்த்தால் கட்டவிழ்ந்துபோம். மரங்கொத்தி கால் நகங்களினின்றும், ஒன்றை சிறுமிகளில் கட்டிவைத்தால் திஷ்டியணுகாது, அதிருக்கும் வரையில் சுகமாய்ச் சுகிப்பார்கள். அறுபட்ட அப்பறவையை சமூலமாய் ஒரு வீட்டில் கட்டித்தூக்கிவைத்தால் அவ்வீட்டிலுடையவர்களுக்கு சூனியஞ்செய்வினை யண்டாது, ஜிமாஃ புணர்ச்சியைவிட்டுக்கட்டப்பட்டவனும் அதன்தசையைப் புகைபிடிக்கப்பட்டாலதை நீக்கும், மனிதன் இரத்தத்தை ஜெய்தூனெண்ணெயுடன் கலந்து இரும்பு விளக்கிலெரித்த வீட்டிலுள்ளவர்களை யெல்லாம் முள்ளம்பன்றிபோல்காணப்படும். ஓநாய்த்தொலியில்கொட்டுச்செய்து, மற்றக்கொட்டுகளுக்கிடையிலடித்தால் அக்கொட்டுகளெல்லாங் கிழிந்துபோம். தும்பையாட்டின்புழுக்கையை அதிகமாயழும்பிள்ளையின் தலைக்குக்கீழாலேவைத்தாலழுகைமாறும், குழிநரியின் வீரப்பல்லை பாலகனில் கட்டினால் உறக்கத்தில் திடுக்கமிடார்கள். அதன் கோசத்தை இரவில் திடுக்கிட்டழுகிறபிள்ளைகளில் கட்டினாலதை விலக்கும். கழுதையின்நெற்றித்தொலியைப் பிள்ளைகளுக்குக்கட்டினால் திடுக்கத்தைவிலக்கும் காடியின் வலதுகண்ணையுலர்த்திக்குழந்தைகட்குக்கட்டினால் உறக்கத்திற் றிடுக்கிடாது. அதன்தொலியைப் (கோஞ்சத்தை) கெட்டகுணமுடைய குழந்தைகளில் கட்டினலது நீங்கும் கோழி இரைப்பெட்டிக்கல்லைக் குழந்தைக்குத்தாழாலேவைத்தால் உறக்கத்தில் திடுக்கமிடாது மீன்சாற்றைக் குடித்தாலும் சருக்கரையுடன் கலந்து தொண்டையிலூற்றினாலும்நெஞ்சுத்துடிப்பும்கோழைத்தனமுநீங்கும். சிப்பிமுத்து நெஞ்சுத் துடிப்பைப் போக்கும். பித்தத்தை நீக்கும் கல்பூசால் குலைஇரத்தத்தைத்தெளித்துப் பார்வையைத் துலக்கும் சுறுமாவுடன் கண்ணில் தீட்டினால் பலனுகும் உடும்பின் தாமரைக் காயைத் தின்றால் சலிப்பு, துடிப்புமாறும் கண்திஷ்டிக்கு மந்திரிக்கும் இஸ்மு ஸூறத்துல்பாத்திஹா ஏழுவிடுத்தமும். ஆயத்துல் குறுஸிய்யி ஒரு விடுத்தமும், இன்னா அன்ஸல்னாஹு, குல்ஹுவல்லாஹு, மு அவ்வதத்தைனி ஒவ்வொரு விடுத்தமு மோதி மந்திரித்தாலெவ்விதக் கண்திஷ்டியுந் தீரும். இன்னும் பின்வரும். இன்ஷா அல்லாஹுத் தஆலா.

பதினேழாவது பசுல்,

காராக்கோட்டியாகாதிருக்கவுங், கெறட்டை நீங்கவும் விபரித்தல்.

செங்கால் நாரை இரைப்பெட்டியிலொரு கல்லுண்டும் அதைக் கட்டிக்கொண்டா லதிருக்கும் வரையில் கனவின் காராக்கோட்டி யுண்டாகாது. தூக்கத்தில் கெறட்டை இடுபவன், தலைக்குக் கீழ் குதிரையின் பல்லை வைத்தால் கெறட்டை நீங்கும் தூங்குகிறவன் தலைக்குக்கீழ் குரங்கின் முடியை வைத்தால் அமளியுள்ள கனவு காண்பான். தூக்கத்தில் பேசுகிறவன் பேரில் நாய் வீரப்பல்லைக் கொளுவினால் புலம்பலடங்கும். தேன் மெழுகை வைத்துக்கொண்டால் தூக்கம் வரும். தின்றால் காராக்கோட்டியாகாது. நித்திரையில்காராக்கோட்டி யாகாதிருக்க நாடியவன் நித்திரையில் வஸ்ஸமாஇ வத்தாரிக்கு எனும் சூறத்தை (ஹாபிலு)வரையில் ஓதுவதுடன் “சதக்கல்லாஹு வஃதஹு வனசர அப்தஹு, வக திபஷைத்தானு வஹ்தஹு” என்று ஓதினாலும் வலதுதொண்டையில் ஆதமென்றும்- இடது தொடையில் ஹவ்வாவென்றும் அறபியஅட்சரத்தால் எழுதி நித்திரை செய்தாலும் காராக்கோட்டி, ஷெய்தான் ஹறக்கத்துண்டாகாது இன்னும் பின் வரும்.

ஐந்தாம்பாபு முற்றிற்று,

ஆறாம்பாபு.

காதின் ஆராய்ச்சிகளை விபரித்தல்.

ஒன்றாவது பசுல்.

காதிலுண்டாகும் வலிகளைக் கூறல்.

காதை அதின் ஊற்றைகளை விட்டுத் துப்புரவாக்குவதும் சூடு. குளிர், தண்ணீர் இவைகளை விட்டுக்காத்துக் கொள்வதும் ஒவ்வொரு வாரங்களிலும், பன்பசஜா எண்ணெயை யொழுக்குவதும் அவசியம். வயிறு நிறம்பி இருக்கையில் நித்திரை செய்வதும், அபய சத்தத்தைக் கேட்பதும், கடினமான காற்று வீசுவதும் காதின் கேள்வியை ரொம் பலமாக்கும்.

காதின் வலியாகிறது; குளிர்ந்த காற்று உள்ளில் நுழைந்ததால் அடைப்புண்டாகி வலி அல்லது கேள்விக்குறைவு, மந்தம் செவிடு அல்லது ஊளை, வடிதல் உற்பத்தியாகும். அதற்கு சிகிச்சையாவது; பாலில் வெள்ளைப்பூண்டு, மிளகு. முஸ்தகா, கிராம்பு. இவைகளை யிட்டு இள நெருப்பில் அது வெளுத்து எண்ணெயாகும் வரையிற் கொதிக்கவைத்து இறக்கி, இளஞ் சூட்டுடன் காதில் ஒழுக்கி, சுபுஹா வரையில் பஞ்சாலடைத்து வைத்திருந்து பொழுதுதயத்தில் எடுத்து விட்டு மறு இரவும் இவ்விதஞ்செய்ய வலிநீங்கும். இன்னும் பஞ்ஜா இலைத் தண்ணீரைக் காதில் ஒழுக்கினாலும், அபியூன், அல்லது அன் சறாத்து, இவைகளிலொன்றை முலைப்பாலில் உருக்கிக்காதில் ஒழுக்கினாலும் வலியடங்கும்.

இரண்டாவது பசுல்.

காதிரைச்சலைக் கூறல்.

சூடு அல்லது குளிருடன் காதிரைச்சலாய் இரைகிறது. அதற்கு பக்குவம். பன்னீரெண்ணெயும் சிறுக்காவுஞ்சுடவைத்து காதில் ஒழுக்கினால் மேற்கூறிய இருவகை இரைச்சலுந் தீரும். முட்டை வெள்ளைக்கருவை யொழுக்கினால் சூடானவலியும், பூண்டுபோட்டு கொதித்தஎண்ணெயை யொழுக்கினால் குளிரான வலியும் தீரும். வலிகடுசாயும் தொடுதல் சூடாயுமிருந்தால் சூடென்றும், மாற்றமானால் குளிரென்று மறியப்படும் வெங்காயநீரையொழுக்கினால் மந்தம் இரைச்சல் ஊளைவடிதல்வகைகட்குப் பலனாகும். பாதாங்கொட்டையைச் சிறுமிகளின் சிறுநீரால் மைபோலரைத்து ஒழுக்கினாலும் அல்லது அந்த நீர்மட்டும் அல்லது காளைமாட்டு சிறு நீரை யொழுக்கினாலும் பலனாகும்.

மூன்றாவது பசுல்.

காதின் வலியும் வீக்கமும் கூறல்.

——(:-:)——

காதின் வலியும் வீக்கமும், கோழிமுட்டை வெள்ளைக்கருவு, விளக்கெண்ணெய், சுரையெண்ணெய், பன்பசஜாயெண்ணெய், பன்னீரெண்ணெய், சிறுக்காவில் காய்ச்சிய "கௌலான்" குந்துர் உருகிக் காய்ச்சிய முலைப்பால், உப்புடன் காய்ச்சிய சிறுக்கா; நாலாம்பாடை தடித்து வெண்மையாகும் வரையில்காய்ச்சிய பன்னீரெண்ணெய், சூடான முலைப்பால், சுடவைத்த எண்ணெய்; பாலில் ஊறிக்காய்ச்சித்தெளிவிறுத்த ஸதாபு இலைத்தண்ணீர்; இவைகளிலொன்றைக்காதிலொழுக்கிப் பஞ்சுவைத்தாலும் இடித்த எள்ளைச் சேர்வையாகக் காதில் கட்டினாலும், சூறத்து பாத்திஹாவைப் பாத்திரத்திலெழுதிப், பன்னீரெண்ணெயிற் கரைத்துக் காதிலொழுக்கினாலும் அதன் வீக்கம் வலி தீரும் முதலைக் கொழுப்பை வலியுள்ள காதில் விட்டாலும் நீங்கும். ஆம்பையாட்டின் யீரலைப்பிழிந்த நீரைஅல்லது குழிநரியின்கொழுப்பையுருக்கி அல்லது பீவன்டை எள்செடியின் சாற்றினால்சமைத்தசாற்றை அல்லது மான் பித்தை அல்லது உருகியகாடைக் கொழுப்பு அல்லதுபள்ளைகடாவின் பித்தும்மாட்டு பித்துங் கலந்துத் திரியில் புரட்டியதிலிவைகளிலொன்றை வலியும் இரைச்சலும் நீர் வடிதலுமுள்ள காதில்வைக்கத் தீரும்.

நான்காவது பசுல்.

காதில் வடியும் சீ ஊளையைக் கூறல்.

——(:o:)——

காதில் வடியு மிரத்தம்,ஊளைக்கும் சிறு பிள்ளைசிறுநீர் தேனுடன் வெங்காய நீர் கொடிமுந்திரிநீர், இரும்புநூர்ந்தநீர்,சிறுக்காவுங்கலந்து வெயிலில் வைத்துநாட்சென்ற தண்ணீர் மாசாக்காய்த் தூள் அதைக் கரித்து பொடித்ததூள் இவைகளிலொன்றைக் காதில்ஒழுக்கினால் இரத்தம், சீ ஊளை, வடிகின்றதை நீக்கும் இருகாதில் ஒன்றில் வலித்தால் மறுகாதில் பஞ்சுவைத்தடைக்க வலித்தகாதில் அடைப்பாக இருந்ததைக் காற்றுவெளிப்படுத்தும்.

ஐந்தாவது பசுல்

காதிலுள்ளபுழு. நுழைந்தபூச்சி. நீர் வகைகளைப்பற்றிய சிகிச்சை.

வெங்காயத்தை இடித்துப் பிழிந்து நெருப்பில் காய்ச்சி அல்லது அந்த நீரை உப்புநீருடன் காய்ச்சி அல்லது சுடவைத்த சிறுக்காவை இவைகளிலொன்றைக் காதில் ஒழுக்கினால் புழுவைக் கொன்று, புண் இரைச்சல், ஊருதலிவைகளை யடக்கும் சுட்டசிறுக்காப் புகை;மந்தம் இரைச்சலுக்குப் பலனாகும் கிரைச்சாற்றை ஒழுக்கினாலும் எண்ணெயை விட்டு வெயிலிலிருந்தாலும் கற்றாழையை நீரில்குழைத்து ஒழுக்கினாலும் புழுவையும் நுழைந்த பூச்சியை யுங்கொன்றுடனே வெளிப்படுத்தும் உப்பை, நீரிற்கரைத்து காது நிரம்பவிட்டு, ஒருநாழிகைக்குப் பின் சாய்த்தாலதிலுள்ளவைகள் வெளிப்படும்குச்சிவதைகளில்பஞ்சுபோலே தட்டியதைக் காதினுள் வைத்தாலும், காதை, தாழாலே சாய்த்து உள்ளங்கையால் உசுப்பினாலும் தலையணையில், நீர்நுழைந்தகாது பக்கமாய் படுத்து சுடப்பாகத் தலையை உசுப்பினாலும் காதில்நுழைந்தநீர் வெளிப்படும், பின்பு பஞ்சாலதைத் துவட்டி, பன்னீரெண்ணெயை விடுவதால் நுழைந்தவை கொஞ்சமான நீரானால் எண்ணெய் விடுவதே போதும் நோன்பாளியின் குவளையைக் காதில் விட்டாலும் முதலைக் கொழுப்பை நேமமாய்க்காதில்விட்டு வந்தாலும் குழிநரியின்,விதைக்கொட்டையைப் பொடித்துக் காதில் தேய்த்தாலும் ஒநாய் இரத்தத்தைச்சாதிக்காயெண்ணெயுடன் குழப்பிக்காதிலொழுக்கினாலும் முள்ளெலிப் பித்தை பன்னீரெண்ணெயுடன் கலந்து பிறவிச்செவிடு மந்தமுள்ளகாதில் ஒழுக்கினாலும்சுஸ்தப்படுத்தும் செள், எறும்பு நுழைந்தகாதுக்குநேராயுள்ள கையால்” அதாவது, வலதுகாதில் நுழைந்தால் வலது கையால் இடது விரைக் கொட்டையையும், இடது காதானால் இடது கையால் வலது விரைக் கொட்டையையும் பொறுக்கக்கூடிய நிலைமையாய் அழுத்திப்பிடித்துக்கொண்டாலுடனே வெளிப்படும் (தி,ஆ)இன்னும்நோன்பாளியின் குவளையும் புழுவை வெளிப்படுத்தும்.

ஆறாவதுபசுல்

காது செவிடு மந்தம், குருத்துவலி இவைகளின் பக்குவம்

காதுசெவிடுக்கும் மந்தந்துக்கும் வித்தியாசமாவாது,செவிடுகுருத்துள்ளிலுண்டான கெடுதி,மந்தம் அறிவுநீங்குகிற ஆபத்து எண்ணெயை அல்லதுசிறுக்காவைக்காதிலொழுக்கினாலும் அல்லது கெந்தகப் புகைபிடித்தாலும் பள்ளாட்டுப் பித்து அல்லது சிறுநீரு அல்லது கற்றாழையுடன் காய்ச்சப்பட்ட எண்ணெய் அல்லது பன்னீரெண்ணெயுடன் கலந்த பள்ளாட்டு பித்துஅல்லது உப்புடன் இடித்துப்பிழிந்தமுள்ளங்கிநீர் அல்லது,திரியிலூட்டிய கழுகுக்கொழுப்புஅல்லது தேனுடன்கலந்து பஞ்சிலூட்டிய முள்ளங்கிநீர், அல்லது திண்ணமான புடவைத் துண்டிற் பொதிந்த பெருங்காயம் அலலது தேனுடன் மிளகுத் தூளையுதையும் வரையிற்காய்ச்சி பஞ்சிலூட்டியது அல்லதுபாலில் மத்தித்த புறாஎச்சம் இவைகளிலொன்றைக் காதினுள் செலுத்திவைத்தால், கனம் மந்தம் தீரும் நெய், கீல், மோச்சை, அல்லது வெந்தையமாவு- இவைகளிலொன்றைத் தேனிற் கலந்தும் பருத்திக் கொட்டைப் பருப்பை,பன்னீரெண்ணெயுடன் கலந்தும் சிறுக்காவில் வேகவைத்த பள்ளாட்டுப்புளுக்கையு மிவைகளிலொன்றை யுட்காதிற் செலுத்திவைக்ககுருத்தின் வலி நீக்கந்தீரும் இன்னுஞ் சில முறைகளை முந்தியபசுல்களிற் பார்க்கவும்.

ஆறாம்பாபு முற்றிற்று.

ஏழாம் பாபு.

ஒன்றாவது. பசுல்.

நாசியின் ஆராய்ச்சி, தடிமல், நீர்பிணைப்பு வகைகளைக் கூறல்

தடிமலாகின்றது, மூக்குத்துவாரந்துடையாகிறதாயிருக்கும். அதன் காரணமாவது;— குளிர்ந்த வாடை மூளையிலிறங்கி, சூடு, வெயில்இவைகள்போலுள்ளது அதிகரிப்பதால், உஷ்ணமாகும் வரையில் தலையின் (வழி) துவாரங்களிலடைப்புண்டாகியதால் மூக்கில் நின்றும்பேதலித்து இளகலான நீர் வெளியாகும். அதற்குப்பக்குவம்— நேமமாய்வாயைமூடுவதும் இருகாதையும் பஞ்சாலடைப்பதும், ஆவிபிடிப்பதும் வெங்காயத்தையறுத்து பாலிலூறவைத்து ரொட்டி, இறைச்சியுடன் தின்பதும், பொறுக்கும்வரையில் உச்சிலதிகச்சூடான நீர்விடுவதும்; அச்சூடு மூளையிற்சேர்ந்துவிட்டதை யறிந்தால் வேதனையடங்கும், இன்னும் கராம்பு; கருஞ்சீரகம், அன்பற், இதுகளிலொன்றை, தடித்தபுடவைத் துண்டிற் கட்டிமுகருவதும் அன்பறைமூக்கில் புகைபிடிப்பதும் பலன் கொடுக்கும் கீரை, எண்ணெய். ஜிமாஃ, சிறுக்கா, தேன், வாழைப்பழம், இறைச்சி, யாதியவைகளைத் தடிமலுடையான் பேணிக்கொள்ளுவான்.

தொண்டையால் சளிவருதற்குப் பிணைப்பு நீர்வடிதலென்றும், நாசியால் வடிதலுக்குத் தடிமலென்னும் பெயர். அதன்காரணம்தன்சுபாவக்குணத்தின் சூட்டாலும் சூரியகாந்தியாலும் நஞ்சாலும், கஸ்தூரி,குங்குமம், வெங்காயம்போலொற்றதை, முகருவதாலும் அல்லது தன் குணத்தின் குளிரால் அல்லது காற்றுஉற்பத்தி யுள்ள சூட்டாகிய நீர்வடிதலுக்கு அடையாளமாவது; அது நீர்பிணைப்பாயிருந்தால், இரண்டு கண்ணுஞ்சிவந்து காந்தல், இளகல், தொடுவதில் சூடுள்ளதாய் வடியும் குளிர்ச்சியான வடிதலுக்கு அடையாளமுந்திவிட்டது. பக்குவம் தலை திறந்திருப்பதைப் பயப்படுவதும், துணியை நெருப்பிற் சூடாக்கி அத்துணியைத் தலையில் சூடுண்டாகும் வரையில் நேமமாய் கட்டிக்கொள்வதும் பசித்துந்தாகித்தும், பகலிற்றூங்காமலும், தூங்கினால் ஒருபுறமாய் சாய்ந்து அல்லது மல்லார்ந்து படுக்காமலும், தலையணியைப்பேணியும் நேமமாய்த் தலைகனிழ்ந்தும், தீன் குடிப்பு சிறுத்தும் இருக்கவேண்டும் தனித்ததடிமலுக்கு அனீசூனைப்புகை பிடிப்பதும், சிறுக்காவில் புளிக்கவைத்தகோதம்பை நெருப்பில்வைத்து அதன் ஆவியைவாங்குவதும், "குருக்குமை" புகைப்பதும் கருஞ்சீரகத்தை முகருவதும், குந்துருக்கப்புகைப் பிடிப்பதும், ஜவாதை முகருவதும்,தலையிலெண்ணெயைத் தடவ[illegible]தில் கராம்புத்தூளைத்தூவுவதும் சுஸ்தப்படுத்தும்.உளுந்து,பயிறு பன்னீர், தடிமலையுண்டாக்கும்.

தனிய நீர்வடிதலுக்கு உடும்பு நகத்தை அல்லது அனீசூனைப் புகைப்பதாலும் முட்டைவெள்ளைக்கருவைக் குந்துருக்கத்துடன்நெற்றியிற் பூசுவதாலும் சுகப்படும். இதுதலைவலிக்கும் பலன்தரும். கராய்பைப் பொடித்து உச்சியிற்றூவினாலும் அவ்விதமே கருஞ்சீரகத்தைத் தூவினாலும்தீரும்,

இரண்டாவது பசுல்.

நாசிநாற்றம் மூலம் காயமாதியவைகளைக் கூறல்.

நாற்றமுள்ள நாசிக்குள் சுறுமாக்கோலை எண்ணெயில் மூழ்கவிட்டு அக்கோலால் செல்லுகிற மட்டுஞ்செலுத்தித் தடவுதலாலும், குங்குமப் பூவைப்பொடித்து நெய்யில்மத்தித்து மூக்கிலொழுக்கினாலும் தீரும் மூக்கிலுள்ள மூலம் காயம் வகைகளுக்கு, சூடுள்ளசிறுக்காவில் உப்பிட்டுத்துணியிலூட்டி மூக்கில் வைத்துக்கொண்டாலும் சுஸ்தமாம் ஆனால் பலமுறைநேமமாய்ச் செய்தலன்றுதீன் குடிப்பு, குறைவதும் பொன்னரிதாரம்பூசினாலும், கற்றாழையை தேனில் கலந்து துணியிலூட்டிமூக்கில். வைத்துக்கொண்டாலுந்தீரும்.

மூன்றாவது பசுல்

மூக்குவாசமிழக்குதல் அடைப்பு தும்மலாதியவைகளைக்கூறல்

மூக்குவாசமிழந்து விட்டதற்குச் சிறுக்காப்புகையை நேமமாய்ப் பிடிப்பதால்தீரும்நாசிஅடைப்புக்குக்கருஞ்சீரகத்தைப்பொடித்து;புளித்தசிறுக்காவிலரைத்து எண்ணெயுடன்கலந்து மூக்கிலொழுக்கினாலடைப்புத்தீரும். தும்மலாகிறது—தீங்குகளைத் தட்டிவைக்க மூளையினின்றுமுண்டாகின்றவோர் உசும்பல் தும்புகிறவனுக்காவசியகமாவது" தும்மல் வந்திட்டநேரத்தில், திரும்பிபாராதிருப்பதும், தலையை அசைக்காதிருப்

பதுமாம்இன்னும்; தும்மலானது, தலையை இலேசு படுத்தும் தலைமூளையின் பெலத்தின்பேரிலறிவிக்கும் பேறுகாலத்தை இலெகுவாக்கும்; தும்பலுண்டாக்கும் வஸ்துக்கள், மிளகு,சுக்கு,கருஞ்சீரகம்,கற்றாழை,கடுகு. ஹருமல் விதை, காயம், இதுகளிலொன்றைமூக்கிலூதினால், தும்பலுண்டாகும்.

நான்காவது பசுல்.

தும்பலைத்தடுக்கும் பக்குவம்.

மூக்கை பலமாய்ப்பிடித்துக் கொண்டாலும் தும்பல்வரும்போது வாயைத்திறந்தாலும் சித்திரங்களைப் பார்த்தாலும், போசனை, பராக்கு நித்திரையிலிருப்பதாலும், புழுதி, புகையைக் கார்த்துக் கொள்வதாலும். பன்னீர் பூசுவதாலும் துப்பாஹை முகர்வதாலும், சுடுநீரால்தலை கழுவுவதாலும் கடல்நீர் குடிப்பதாலும்; காம்புத்தூள்உச்சியில் வைப்பதாலும், ஹமக்காகீரையை வாயிலடைக்கிக் கொள்வதாலும் தும்பலைத் தட்டும், (பலன்கொடுக்கும்)

ஐந்தாவது பசுல்.

சின்னிமூக்குடைதல், மீசை, நகம், தறிக்குதல்களைக் கூறல்.

சின்னி மூக்குடைதலுக்குக் காரணமாவது:—வாதக்கல வனதிகரிப்பு. இரத்தமதிகமாய் வெளிப்பட்டால் ஜுதூரி அம்மையுடையவனுக்குப்பலன் கொடுக்கும். மூக்கில்சிறுக்காவையும் பன்னீரையுமொழுக்கினாலுடனே நிற்கும். அவ்விரத்த மிகுத்து விட்டால் பஞ்சில் சிறுக்காவையும் பன்னீரையு மூட்டி மூக்கினுள் செலுத்தி வைத்தால்நிற்கும்மீளாது இன்னும் தணியினால் இருகொடுங் கரத்தையுங் கட்டி. பஞ்சினால் இருகாதையு மடைத்தாலும், ஒருகிறுத்திடை கற்பூரத்தைத் தண்ணீரிற் கரைத்துறுஞ்சினாலும் சின்னி விரலையு மதற்கடுத்த விரலையுங் கட்டினாலும், மாசாக்காயைப் பொடித்து மூக்கிலூதினாலும் கழுதை விட்டை போட்டவுடனதில் சிறுக்காவைத் தெளித்து முகருவதாலும் சுகப்படுத்தும் ஆனாலிந்தப் பக்குவ மெந்த விடத்திலின்று இரத்தம் வெளிப்பட்டாலு மதடங்கலுக்கும் பலன்கொடுக்கும் இன்னும் சிவந்த மாணிக்கத்தையணிந்துக் கொண்டாலும் பலன்தரும்.

சின்னி மூக்கிரத்தம் கொதிப்பாகி மூளையில் நின்றும் வடிந்தால் குளிர்ந்த நீரை நாசியிற் செலுத்தினாலும் குடித்தாலும் அதிலிருந்தாலும், சிறுக்காகாடியுடன்உறுஞ்சினாலும். திண்ணமான புடவைத்துண்டில் பன்னீரைநனைத்து உச்சியிற் போட்டுனைரும் வரையிலிருந்தாலும் அத்துண்டை மூக்கினுள் செலுத்திவைத்தாலும் கற்றாழைச் சோற்றைக் குந்துருக்கத்துடன் நோகஅரைத்துத் துண்டிலூட்டி மூக்கிற்புகுத்திவைத்தாலும், சிறுக்காவில் புடவை துண்டை நனைத்து மூக்கிற் செலுத்தி வைத்து இரத்தத்தைக் கொம்புவைத்திழுத்தாலும் நற்சீரகத்தைச் சிறுக்காவி லரைத்துத் திரியிலூட்டி மூக்கில் வைத்தாலும், புறு எச்சத்திற் சிறுக்காவைத் தெளித்து முகர்ந்தாலும் அதன் ஈரப்பசக்கைப் பிழிந்து மூக்கிலொழுக்கினாலும், ஒட்டகை விட்டையை யுலர்த்திப் பொடித்து மூக்கிலொழுக்கினாலும் தணித்துவிடும்.

இரண்டு தட்டருகும் துலக்கமாய் வெளியாகும் வரையில் மீசையைத் தறிப்பது நற்கருமம் அதனிரண்டு கடைசியருகை விடுவது ஆகும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் தறிப்பது சுன்னத்து. நாற்பது நாளைக்குப் பிற்படுத்துவது சுன்னத்து. பொருத்தக் கெடுதல். வலது புறந் தூங்குவான். மீசை, தாடி, தலையிலுள்ள நரையைப் பிடுங்குவது பொருத்தக் கெடுதல். மீசையைக் கத்திரிப்பது அதன் சுகத்தைப் பேணிக்கொள்ளும். நகத்தைத் தறிபதால் அந்நகம் பிளவுகாணலில் அச்சந் தீர்ந்திருக்கும். அழுக்குச்சேர்வதை விலக்கும். நபிகணாயகம், நகத்தைத் தறித்தாலதைப் புதைப்பார்கள். கீழ்க்காணும் விபரப்படி நகந்தறித்தால் கண்ணோய் வராதென்றார்கள். அதாவது; துவர்க்கம் நடுவிரல் பிறகு சின்னிவிரல், பிறகு பெரும் விரல், பிறகு சின்னிவிரலுக்கடுத்த விரல், கடைசி கலிமாவிரல் இவ்வித மெடுப்பது. உலக வாழ்க்கையை வருத்தும். (உண்டாகும்) மாட்டு எரு, சாம்பலைப் பொடித்து மூக்கிலூதினாலும். காட்டுமாட்டுக் கொம்பு கரித்த சாம்பலை யுறுஞ்சினாலும் கழுதை விட்டையிற் சிறுக்காவைத் தெளித்து முகர்ந்தாலும், புறு இரத்தத்தை சிரசிற் பூசினாலும் சிப்பியைச் சிறுக்காவுடனரைத் துறுஞ்சினாலும் சின்னி மூக்குடைந்த இரத்த வோட்டத்தை நிறுத்தும். மூச்சினது தீங்கு "இன்ஷா அல்லாஹ்" பின்வரும்.

ஏழாம்பாபு முற்றிற்று.

* * *

எட்டாம் பாபு.

வாயின் ஆராய்ச்சிகளைக்கூறல்.

ஒன்றாவது பசுல்

கொட்டாவி, கடைவாய்பல் வலியைக்கூறல்.

கொட்டாவியானது.—ஷெய்தானில் நின்று முள்ளது நபிமார்களடங்கலுங் கொட்டாவியை விட்டுந் தவிழ்க்கப்பட்டவர்கள். ஆகையால் நபிமார்களடங்கலுங் கொட்டாவி அறவே விடவில்லை. இதை ஒருவன் கல்பில் ஊசாட்டஞ்செய்வது கொட்டாவியைத் தட்டுவதற்கு வழியென்று "ஜாஹிதி" சொன்னார்கள். பலமுறையு மதைச் சோதித்ததில் அவ்விதமே காணப்பட்டேனென்று "குதூரி" சொன்னார்கள்.

கடைவாய் பல்லின் வலிக்குக்காரணம்.—குறுக்கிட்ட குளிர்ச்சி அதிகமானதாலும் பல்லிடுக்கிற் சேருங்கழிவுகளாலும், பல்லுள்ளிலிருந்து புழுஉசும்புவதாலுமுண்டாகும், அதன்சிகிச்சை பக்குவமாவது. வெள்வெங்காயத்தை யரைத்து, கோதம்பு, புளிக்கவைத்து காய்ச்சிய பாலால் குழைத்து, கடைவாய்ப்பல்லிலும் அதன் சூழாலும் சேர்வையாய்க்கட்ட வருத்தமடங்கும். இன்னும் மிளகுத்தூளும்பெருங்காயமும் தேனில் மத்தித்து வலியுள்ள கடைவாய்ப்பல்லில் வைத்தாலும் ஊசித்தலையை நெருப்பில் காய்ச்சி வலியுள்ள பல்லின் துவாரத்தினுள் வைத்தாலும் அல்லது துவாரமில்லாவிடில் வலியுள்ள இடத்தில் வைத்தாலும் புழுஇருந்து உசுப்பி வருத்த நேரிடும் வலியடங்கும். கடைவாய்ப் பல் வலியுள்ள பக்கத்து, காதில், வெங்காயநீரைத் தனியாய் அல்லது பன்னீரெண்ணெயுடன் பிழிந்தாலும் வெங்காயத்தை நெய்யில் குழைத்து மசியவேகவைத்து சூட்டுடன் அந்நெய்யைவாயில்வைத்தாலும் வெங்காயத்தை வாயிலடைக்கிக் கொண்டாலும்இருகீறாத்து "அபீயூனை பன்னீரெண்ணெயுடன் சேர்த்துபஞ்சிலூட்டி அப்பல்லில் வைத்தாலும், நெய்யைச்சூட்டுடன் பஞ்சிலூட்டி பொத்தலில் செலுத்தினாலும் ஒவ்வொரு மாதங்களிலும் பிறந்தமுதநாள் பிறையைப் பார்த்தவுடன் இந்தச் சந்திரனின்நாயனைக்கொண்டுசத்தியமாக இம்மாதத்தில்குதிரைமாமிசம்நான் தின்கமாட்டானென்றுசத்தியஞ் செய்தாலும் அப்பல்வலிவீக்கம், புழு, யாலுந்தீரும் இதில் வெங்காயம் வெள்வெங்காயமொன்றுதான், அரிச்சுத்

தின்றுக்கொண்டுவருகின்றபல்லில்கிலையொழுக்கினாலும், கருஞ்சீகரத்தை எண்ணெயிலரைத்து பல்லில்பூசி ஒருநாழிகை மட்டும் வாய்மூடியிருந்து பிறகு திறந்து வாணி வடிந்தாலும் சீனிக்காரப் பஸ்பத்தைத் தேய்த்தாலும் பல்வலி தீரப்பலன் செய்யும்.

இரண்டாவது பசுல்.

பல்அரித்துத் துவாரமும் நொம்பலமுமாகி இரத்தம் வழிவதைக்கூறல்.

பல்நொம்பலமாகி அல்லது அரித்து அல்லது பொத்தலாகி அல்லது காரணமன்றி எப்போதும் இரத்தமோடிக் கொண்டிருந்தால், அதற்குப் பரிகாரம் மாசாக்காய்ப் பன்னீர்க்காய், தரபாக்காய், அதாவதுகுருக்கம், இதுகளை அரைத்து புளித்த சிருக்காவில் மத்தித்துபல்லின்அஸ்திவாரத்தில் சேர்பித்தாலும் மிளகும் சீரகமும் சமமும் பன்சின் விரை மூன்று பங்கும் அபியூனில் ஆறிலொன்று மெடுத்திடித்து நுரை நீக்கியதேனில் குழைத்துப்பல்லில் வைத்தாலும் வலியுள்ள அலகின் மேபோற்பூசினாலும் தீரும். பல்லும் பிலக்கும் புலியின் பல்லை யணிந்துக்கொண்டாலும் முசலின் சட்டிப்பல்லை, சட்டிப்பல் வலியுள்ளவன் கட்டிக்கொண்டாலும், பாம்பின் இடதுபல்லை அல்லது வீரப்பல்லைக் கட்டிக்கொண்டாலும், பாம்பின் சட்டையைச் சிறுக்காவில் கொதிக்கவைத்து, வாய் கொப்பளித்தாலும், சட்டிபல்லை வலியுள்ளவன் இறந்துபோனவன் சட்டிப்பல்லைக் கட்டிக்கொண்டாலும், பசுமாட்டு முடிகளைக் கரித்துக் குடித்தாலும், காட்டு மாட்டுக்கொம்பு கரித்தசாம்பலை, வலியுஞ் சொத்தையுமுள்ள பல்லில் வைத்தாலும், பாம்புச் சட்டையைக் கரித்து நல்லெண்ணெயிற் குழைத்து, வலியுஞ் சொத்தையுமுள்ள பல்லிற் பொதிந்தாலும், ஈயை உயிருடன் கட்டினாலும், பல்லியின் ஈரலை வைத்தாலும், ஆம்பாட்டு ஈரலைச் சுட்டுக்கரித்து பல் விளக்கினாலும், கொட்டைப் பாக்கைச் சுட்டு அதன் சாம்பலைக்கொண்டு பல்விளக்கினாலும், முள்ளம்பன்றியின் பல்லைக் கொடுங்கையிற் கட்டினாலும், காட்டு மாட்டுக் கொம்புச் சாம்பலைப் பூச்சியரித்த பல்லிற் றாவினாலும், பாம்புச்சட்டையைக் கரித்து ஜெய்தூனெண்ணெயிற் குழைத்து வலியுள்ளது முடைந்ததுமான பல்லிற் பொதிந்தாலும் வியாதிகள் தீரும். சுஸ்தமாகும்.

மூன்றாவது பசல்.

பல் மஞ்சணிப்பு வெண்மை கருமைகளைக் கூறல்.

பல் மஞ்சணிப்பாயிருந்தால், உப்பு, சர்க்கரை, கரி, மூன்றும் தேனிலரைத்து பல் விளக்கத் தீரும். வாயை வாசமாக்கும். இன்னுங் கடல்நுரையும், உப்பும், பொடித்து பல்விளக்கினாலுந் தீரும். கறுத்தப் பல்லை வெண்மையாக்கும். முத்தைப் பொடித்து விளக்கினாலும் வெண்மையாகும். உஹா, தேன், கடனுரை சாம்பல் ஒவ்வொன்றையுந் தேய்க்க பல் வெண்மையாகும். மாசாக்காயைப் புளித்த சிறுக்காவில் நோக அரைத்து, உப்புச்சேர்த்துவிளக்கினாலும் பள்ளாட்டுக்கொம்பைக் கரித்து விளக்கினாலும் பல்லை வெண்மையாக்கும்.

நான்காவது பசல்.

எகிர், பல், இவைகட்குக் கெடுதியானதும், இரத்தம் வழிதலுங் கூறல்.

எகிருக்கும் பல்லுக்குங் கெடுதியானது, பால், மீன், வெந்தயம், எள், உளுந்து, புளித்தவஸ்துக்கள் இவைகளை மிகவாகத் தின்பதும் குடிப்பதுங், குளிர்ந்த ஜலத்தைக் குடிப்பதும், மதுரமான வஸ்துக்களும், ஈத்தம், முந்திரிப்பழம், கரும்பு, கத்திரிக்காய் ஆதியவைகளைப் பரிமாறுவதும், பசித்திருப்பதும், பெலமான வஸ்தைக் கஷ்டமாய் மெல்லுவதும் குந்துருக்கத்தை மிகவாகத் தின்னுவதும், எகிரையும் பல்லையும் பெலவீனமாக்கும். பல் விளக்கியபின், எண்ணெயைக் கொண்டும், சிறுக்காவைக்கொண்டும் வாய் கொப்பளித்துச் சுடுதண்ணீராலும் வாய் கொப்பளித்து வாய் சூடாறி ஒரு நாழிகைக்குப் பின். பன்னீர், அல்லது பாலால் ஒரு நாழிகை நேரம் வாய் கொப்பளித்து வந்தால் பல்லைக் கெட்டியாக்கும். எகிரில்நின்றும் இரத்தம் வருவதற்கு, பல் விளக்கியபின் மாணிக்கக்கல் தூளைப் பல்லிற் றேய்க்கத் தீரும். "மூற்று" சிறுக்கா யெண்ணெயால் வாய் கொப்பளித்தால் அசைந்த பல் இறுகும். அல்லது முதற்றி கதியில் பிறையை முன்னோக்கின்று சூறத்து "தபாறக்கை" இடையில் எச்சில் விழுங்காமலோதி முடிந்தவுடன் நாக்கைப் பல்லின்பேரில் விரித்து சுழட்ட; பல் பெலக்கும். கெட்டியாக்கும். மருந்துகள், சிறுக்காவை எண்ணெயுடன் பல் அசைவுக்கும் இரத்தம் வருதலுக்கும் வாய் கொப்பளித்தாலும் குந்துருக்கத்தை மென்றாலும், கசிக்காய்ச் சதையை வாயிலடைக்கிக்கொண்டாலும் பல்லை பெலமாக்கும். இன்னும் கறுவாப் பட்டையால் பல் விளக்கினாலும். மென்றாலும், அதன் நீரைப் பல்லிற் பிழிந்தாலும் வீக்கமன்றி தினம் கடுக்கும் பல்லில் கடுகை பொடித்து வைத்தாலும் சிறுக்காவி லுப்பைக் கரைத்து வாய் கொப்பளித்தாலும் அல்லது பஞ்சிலூட்டிக் கனைந்த பல்லில் வைத்தாலும், குளிர்ந்தநீரால் கொடுகிய பல்லைக் கோழிமுட்டை மஞ்சட்கருவை அல்லது நொம்பலமுள்ள பல்லில் வெங்காயத்தைத் தேய்த்தாலும் வெங்காயம் போட்டு வேக வைத்த எண்ணெயை ஒரு நாழிகைமட்டும் வாயில் வைத்திருந்தாலும், மனிதன் உரோமத்தைக் கரித்து பன்னீரில் கலந்து, பல்வலியுண்டாயிருக்கின்றதற்கு மாற்றமான பக்கத்திலுள்ள காதிலொழுக்கினாலும் முசலின் சட்டிப்பல்லைக் கொளுவிக்கொண்டாலும் பல்வலி ஒடுங்கும். இன்னும் பாதாம், தேங்காய், கொழுப்பு இவைகளிலொன்றை மென்றாலும் பல்வலி தீரும்.

ஐந்தாவது பசல்.

எகிர் வீக்கம், வலி, காயம், அரித்துக் குழிபறியுதல் வாய் வீக்கம், நாற்றம் இவைகளைக் கூறல்.

எகிரை யரித்து வாய் வீங்கி நாற்றமாகிவிடுவதற்கு.—சிறுக்கா, மூற்று, தேனைக்கொண்டு பல் விளக்கியபின் வாய் கொப்பளித்து வந்தாலும் சீனிக்காரத்தண்ணீரை ஒரு நாழிகையளவு வாயில் வைத்து சுவைத்துக் கொப்பளித்தாலும், மற்றயதுவருள்ள வஸ்துக்களால் வாய் கொப்பளித்தாலும் பலன் கொடுக்கும். எகிரில்; வலி, காயமுண்டாயிருந்தால் வெண்ணெய் அல்லது நெய், தேனுடன் கற்றாழைச் சோறு, சீனிக்காரத்துள் மாசாக்காய், கடுக்காய், முஸ்தக்காய் இவைகளிலொன்றை எகிரில் தேய்த்தால் பலன் செய்து பல் வலி தீரும். இன்னும் பாதாமை தின்றாலும் மெல்லிய ரோமத்தைச் சீடு எண்ணெயில் முக்கி எகிரில் வைத்தாலும் சுடுபாலால் வாய் கொப்பளித்தாலும் அரிப்புள்ள எகிருக்குமதில் இரத்தமோடுகிறதற்கும் புண்ணுண்டா

யிருப்பதற்கும், சுடுதண்ணீரை வைத்துக் கொப்பளித்தாலும் வலி வீக்கமிவைகள் தீரும்.

ஆறுவது பசுல்.

பல் களைந்துவிடப் பக்குவம்.

வலியுடன் அசையாத பல்லைக் களைவது தகாது. களைந்தால் கண் வலி சுரமுண்டாகும்.

கீலைப் பல்லின் துவாரத்தில் வைத்தால் வலியடங்கி இலேசாகக் களையும். கீலை வைக்குஞ் சமையத்தில் நல்ல பல்லில் மெழுகை வைத்துக்கொள்ளவேண்டும். அல்லாவிடில் தங்கடப்படுத்தும் தண்ணீர்த் தவளைக்கொழுப்பை அல்லது இரத்தத்தை அல்லது நத்தைச்சிப்பிச்சாம்பலை, கீறிப்பிள்ளைக் கொழுப்பைப் பல்லில் தேய்த்தால் வலியன்றி விழும்.

ஏழாவது பசுல்.

விரைவில் பல் முளைக்க பக்குவம்.

சிறுமிகளுக்கு; எகிரில், தும்பாட்டு மூளையைப் பூசினாலும் அதன் கொழுப்புடன் தேனைக் கலந்து வலியுள்ள எகிரிற் பூசினாலும் நெய், கொழுப்பு வகையடங்கலையுந் தேய்த்தாலும், நாயின் வீரப்பல் அல்லது குழி நரியின் பல்லைக் கொளுவினாலும் குழி நரியின் விரைக்கொட்டையைக் கட்டினாலும், காடியின் வீரப்பல்லை முலைப்பாலிலிட்டுப் புகட்டினாலும் முத்துச்சிப்பியின் தசையைக் கட்டினாலும் பாலகனுக்கு வலியன்றி விரைவிற், பல் முளைக்கும்.

எட்டாவது பசுல்

நாக்குச்சோர்வு, தடிப்பு, மறப்பு, சரசரப்பு, வாய் நாற்ற மிவைகளைக் கூறல்.

குந்துருக்க மிட்டுப்புளித்த நீரைக்குடித்தாலும், சுண்ணாம்புக்கீரையைமென்றாலும் அதைக்காய்ச்சி வாய் கொப்பளித்தாலும், வாணிவடியும் வரையில் தேனையும் உப்பையும் நாக்கில் தேய்த்தாலும். சுடுநீரிற் குளித்து வாய் கொப்பளித்துப் பின்பு, சிறுக்கா, பன்னீர்கொண்டு வாய் கொப்பளித்து மஞ்சட் கடுக்காயை நாக்கில் தேய்த்தாலும், நாவுசும்புவதற்கும் நாஉசும்பி பேசவருத்தமானதற்கும் பலன் செய்யும். நாவு வலுவாய் வீங்கி ஊதி வெளியிற் புறப்பட்டதற்கு, சிறுக்காவை நாக்கில் தேய்த்தாலும் வாணிவடியும் வரையிற்புளிப்பு மாதளையைத்தேய்த்தாலும், சுக்கு மிளகு, உப்பு, ஒன்றாய்ப்பொடித்து, நாக்கில் தேய்த்தாலும் பலன் கொடுக்கும்.

நாக்கு வீக்கத்துக்கு, பருத்திவிரையைப் பொடித்து வாயிலடைக்கிக்கொண்டால் வீக்கந்தீரும் நாக்கின் தவளை.—அதாவது; அதற்குத் தாழால் உண்டாயிருக்கின்ற நோவினை செய்கின்ற கழலை.—அதற்குப் பக்குவம் நசாதிரையும் மாசாக்காயுந் தேய்த்தாலும், பச்சைபளிங்கிக்குச் சீலை மண்செய்து அடுப்பில் புகுத்தி வெந்தபின் கவசை நீக்கி நாக்குக்குத்தாழாலே வைத்தாலும் பலன்கொடுக்கும். நாக்குச் சரசரப்புக்கு.—தொண்டை நோய்பாகத்தில் பின்வரும் இன்ஷா அல்லாஹ்.

சூடுள்ள வஜீபனந்தின்ற பின் குளிர்ந்த நீரைக்குடித்தாலும் குளிர்ந்தவாடையாலும் வாய் ஊதும், ஒரு நாழிகை புளித்த சிறுக்காவால் வாய்கொப்பளிக்கத் தீரும், மொச்சைக்கொட்டையைக் கெட்டியாய்மென்று உதட்டு வீக்கத்தில் வைக்கத்தீரும். முஸ்தகாவை எண்ணெயிலுருக்கியுதட்டு பிளப்பிற் பூசத்தீரும்.

ஒன்பதாவது பசுல்.

வாய்தட்டம், நாக்கு, மேல்முரசு, எகிர் இவைகளில் வித்துபோல், புத்து, புண்இவைகளைக்கூறல்.

வாய்வகையறு. புத்துக்குத் தேனையும் சிறுக்காவையும் வாயில் வைத்து மூன்றுவிடுத்தஞ் சுவைத்திழுத்துத் கொப்பளித்தாலும், பன்னீர்க்காயைத் தட்டி வாயிலடக்கி, உள்ள எச்சிலைத் துப்பினாலும், மாசாக்காயை, சிறுக்காவில் உப்புடன் சமைத்ததைக் கொப்பளித்தாலும், அப்புத்தைக் கத்தியால், தறித்துக்குளிர்ந்த நீரினால் வாய்கொப்பளித்தாலும் எலுமிச்சை நீரால் வாய் கொப்பளித்தாலும், மாசாக்காய், சீனிக்காரமும் பொடித்து தேய்த்தாலும், மனிதன் ரோமத்தைக்

கரித்துத்தேனிலரைத்து சிறுமிகளின் வாயிற் பூசினாலும் பாலினா[illegible] வாய்கொர்ப்பளித்தாலும் மருதோன்றி இலையைமென்றாலும் அவ்வியாதிகள் தீரும்.

——(:)——

பத்தாவது பசுல்.

வாய் நாற்றத்துக்கு பக்குவம்.

——ஃ(:)ஃ——

பேசும்பொழுது வாயினின்றும் வீசுகின்ற நாற்றத்துக்கு சேமமய் பல்லைத் துப்புரவாக்கி, சிறுக்காத்தண்ணீரைக்கொண்டு கழுவி முஸ்தக்காய், கராம்பு,கற்பூரவல்லியை மென்றாலும்,வெள்வெங்காயம், கராம்பைநோக அரைத்துத்தேனிற் குழைத்து அந்திசந்தி நேமமாய்த் தின்று வந்தாலும் சுக்கைத்தின்றாலும் அவ்வீக்கந்தீரும்.

இன்னும், பாக்கு, சிற்றரத்தை, சுக்கு. முந்திரிப்பாணி.கராம்பு, முஸ்தக்காய், பஸ்பாஸா வாயை வாசமாக்கும் வெங்காயத்தைத் தின்றபின் சதாபை மென்றாலும் வாடையைக்களையும். சீரகத்தைப் பொடித்து பல்விளக்கினாலும், வெள்ளியை வாயிலடைக்கிக்கொண்டாலும் வாய்நாற்றந்தீரும், மான் கஸ்தூரியை வஜீபனத்துடன் பரிமாறி வந்தாலும், கஸ்தூரி, இரசத்தின்புகை வெந்தயம் இவைகள் வாய் நாற்றத்தையுண்டாக்கும்.

——(:)——

பதினொன்றாவது பசுல்.

வாணிவடிதலைக்கூறல்.

——ஃ(ஃ)ஃ——

சூடு அல்லது குளிர்மிகைப்பதால் நித்திரையில் மிகுதமாய் ” வாணிநீர் ” எச்சில் வடிதலுக்குப் பக்குவமாவது.—குளிராலுண்டானதானால் வாரமடங்கலிலும் இரண்டு மூன்றுவிடுத்தம் [சத்திக்குரிய அவிழ்தம் புளுங்கி, பின் வெங்காயத்தைத்தின்று சுடு நீர்குடித்து, நித்திரைக்கு முன்பல்விளக்கவும். இன்னும் 'நேமமாய்,' குந்துருக்கம், முஸ்தக்காயை மெல்லுவதுமாம்.

சூட்டாலுண்டானதானால்.—கொம்பு வைத்து இரத்தம் வாங்கினால் குளிருண்டாகும் வஸ்துக்களைப் புளங்கவேண்டும். இன்னும் எச்சில் வெளிப்படுதற்கு முக்கியமானமருந்தாவது ; தலையையும் குடலை

[illegible] துப்புரவாக்குவதும் பல்விளக்குவதும் கஞ்சி குடிப்பதும். பால், மீன், புளிப்பானதுகளைத் தவிழ்வதும், கீரையை யுப்புடன் தின்பதும், முந்திரிப்பழத்தை மிளகுடன் தின்பதும் நல்ல பலன் கொடுக்கும்.

——(:)——

பனிரெண்டாவது பசுல்.

உதட்டின் பிளப்பைக்கூறல்.

——ஃ(:)ஃ——

இரு வுதடும் பிளந்துவிட்டால், மாசாக்காயைத் தேனுடனரைத்து உதட்டிற் பூசினாலும் அல்லது பொடித்து, புளித்த சிறுக்காவிற் சூடுள்ள ஒஜீபனம் தின்றபின் குளிர்ந்த நீரைக்குடிப்பதாலும் குளிர்ந்த வாடையாலும் வாய்சுரந்து ஊதிவிடும் அதற்கு ஒரு நாழிகை நேரம் ; புளித்த சிறுக்காவால் வாய்கொப்பளிக்கத் தீரும். மொச்சக்கொட்டையை நல்லாகமென்று உதட்டு வீக்ககதில் வைக்கதீரும். முஸ்தக்கா யெண்ணெயிலுருக்கி ; உதட்டு பிளப்பிற் பூசத்தீரும். கலந்து விளும்பிற் பூசினாலும் பொத்தலில்லாத மாசாக்காயை நோக அரைத்து நெருப்பால் இளகச்செய்த பிசினில் அத்தூளையிட்டு உதட்டிற் பூசினாலும், முஸ்தக்காயை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி யுதட்டுப் பிளப்பிற் பூசினாலும், காதழுக்கை அப்பிளப்பிற் பூசினாலும், பருத்திக்கொட்டைப்பாலைப் பூசினாலும், கடனுரை, உப்பு, பன்னீர் எண்ணெய், முட்டை வெள்ளக்கரு; இவைகள் ஒவ்வொன்றிலும், மேற்கூறிய வஸ்துக்களிலும் உதட்டு பிளப்புக்கு அனுகூலமுண்டும் இன்னும் கை, காலாதிய உறுப்பு பிளப்புகளுக்கு, இன்ஷா அல்லாஹ்” பின்சொல்லப்படும்.

எட்டாம் பாபு முற்றிற்று.

ஒன்பதாம் பாபு.

முகம், தொண்டை, கழுத்து இவைகளைக்கூறல்.

ஒன்றாவது பசல்.

முகவாதம்.

முகவாதமாகிறது; முகங்கோணி இரண்டு கண்ணிலொன்று மூடத்திராணியற்று ஒன்று மூடியிருக்கும் அதன்காரணம்.—வாட்சியும் சீதளமுமாம். வாட்சியாலுண்டானதின் அடையாளமாவது; பேசுவது வருத்தமாவதும் இருகண்ணையும் தாடியையும் உசுப்புதல்வருத்தமாவதும், அது பெலமானால் வாய்திறந்து மூடுவதற்குத் திராணியற்று எச்சில் குறைந்து, கண்ணீரிழுந்திருப்பதுமாம். சீதளத்தாலுண்டானதின் அடையாளமாவது கண்ணுந்தாடியுஞ் சோர்ந்து, பேசும்போது அவ்விரு உறுப்புஞ் சுற்றுவதும் தொட்டால் குளிராகவும், எச்சில் மிகுதமாகவும், கண்ணீர் ஓட்டமும், இவ்வியாதியுள்ளவனுக்கு நாலுநாள் கடந்தால் ஈடேற்றமாவான். அவ்விதமாகாவிடில் கடினமாகும். இன்னுமவ்வியாதிக்கு மருந்து செய்வது, அவ்வியாதி ஆரம்பமானதில் நின்றும் ஒரு நாள் சென்றபின் செய்யவேண்டும். இவ்வியாதியுடையவனுக்கு அவசியமானதுகள் இருளான தலத்திலிருப்பதும் நித்திரை சிறுப்பதும் வியாதி இல்லாதபுறம் வாயைக் கட்டுவதும், மணிக்கோதம்பு, ரொட்டி, தேன், உள்ளி, இவைகள்போன்ற வரண்ட சூடுடைய தடங்கலைக்கொண்டு மருந்துசெய்வதும், வாட்சியாலுள்ளதற்கு ஹல்வா, வட்டிலப்பம், வெண்ணெய் தொலிக்கோதம்புரொட்டியும் ஆவின் பால் கறந்தவுடன் குடிப்பதும், சீதளச் சூடான தடங்கலைக்கொண்டு மருந்துசெய்வதும், அவசியம். இன்னும், வெள்ளைச் சாவல் கண்ணை வியாதியுள்ள பக்கற்திற் கொளுவிவைத்தாலும் முகத்தின்வெளியிலும் வாயுள்ளிலும் சவ்வைப் பூசுவதும்; நெற்றி, புருவத்தில் எண்ணெயைப் பூசுவதும் சிறுக்காவில் கடுகுத்தூளிட்டு முகங்கழுவுவதும், புருவம்நெற்றியில் முட்டைத்தைலம் பூசுவதும் பலன்கொடுக்கும்.

* * *

இரண்டாவதுபசல்.

முகப்பருவு, மறுவு, வகைகளைக்கூறுதல்.

முகப்பருவு:—எண்ணெய் எடுக்கும் எள்ளின் சாறின் துண்டு போல், கலந்துக்கொண்ட சினப்பால் முகத்தின் பேதகமாம்.

வரண்டதாயும், சீயுடையதாயுமிருக்கும்:—அதன்காரணமாவது:- ஐயக்கலவன். முறை காய்ச்சலுண்டானவர்களுக்கும் மாதவிடை கட்டுண்ட கெற்பஸ்திரீகளுக்கும், மிகுதமுண்டாகும். வரண்டதற்கு, மருதோன்றி, இலையைச் சுடுசாம்பலிற் புகுத்தி, சுட்ட வெள்வெங்காயத்துடன் நோக அரைத்து, தேனிற் குழைத்து, பருவுள்ள இடங்களிலும், சேர்வையாய்ச்சேர்த்து ஒரு பகலிரவு விட்டிருந்து காலையில், தவிடும், உப்பும் போட்டுக்காய்ச்சி, சுடு நீரினால் கழுவியு மிவ்விதம் பலவிடுத்தஞ்செய்ய நீங்கும். வஜீபனம்:—கறந்த ஆவின்பாலைச் சூட்டுடன், வெண்ணெய் சருக்கரை சேர்த்து குடிக்கவும். இன்னும், முள்ளங்கி விரை, கறுவாப்பட்டை பிசின் இவைகளி லொன்றைக் கட்டினாலுந் தீரும் இன்னும் பின்னாலும் "இன்ஷா அல்லாஹ்" வரும்.

மூன்றாவதுபசல்.

முகம், மூக்கு, புத்து, மறுவு, பத்து, கரும்புள்ளி, வெண்புள்ளி இவைகளைக்கூறல்.

முகம் மூக்கின் மறுவாகிறது:—வெண்மையாயும் கருப்பாயுமுள்ள சிறிய புள்ளிகளாயிருக்கும்.

அதற்கு பக்குவம்:—முள்ளங்கி விரை மொச்சைக்கொட்டை குந்துருக்கம், பால் தொலிக் கோதம்பு ரொட்டி, இது ஒவ்வொன்று மிடித்துப் பூசினாலும், கறுவாப்பட்டையைத் தேனுடனரைத்து அல்லது, எண்ணெய், கொழுப்புடனரைத்துப் பூசினாலும், குங்குமப்பூ, சுக்கு, சுண்ணாம்புக்கீரை இவைகளிலொன்றைத் தின்று வந்தாலும், மறுவுகணீங்கும் மூக்கிலும் முகத்திலும், பால் புள்ளிபோல் வெண்மையாய் மெல்லியதாகப் புத்துவெளியாகும் அதைப் பிதுக்கினால் உறைந்த நெய் போற் கொஞ்சம் வெளிவரும். அதற்குப் பரிகாரமாவது:—வெள்வெங்காயத்தை யுப்புடனும், எண்ணெயுடனுங் கலந்து அல்லது பன்னீ

ரெண்ணெயுடன் கலந்து, அல்லது வரசை அல்லதுகறுவாபபட்டையை இடித்துத் தேனில் மத்தித்துப் பூசினாலும், மாதளைச் சாற்றைச் சிறுக்காவிற் கலந்து தேய்த்தாலும், புத்து மறுவைக்களையும். முசலின் இரத்தத்தைப் பூசினாலுமாறும் அதன் புளுக்கையைப் புள்ளிகளிற் பூசினாலும் போம். மனிதன் வாய் நீரை, யாதொன்றையு முண்ணுமுன் சகல விஷக்கடி வாயிலும் புள்ளிகளிலும் பூசினாலுந் தீரும். விட்டிலின் வயிற்றைக் கொண்டும், முட்டையைக் கொண்டும் முகத்தின் கறுப்பு, புள்ளிகளிற் பூசினாலும், மளாவின் கொழுப்பைப், பத்துகளிற் பூசினாலும். மயில் என்பைக்கரித்துப் பொடித்து முகக்கறுப்பு, பத்துகளிற் பூசினாலும், பசுமாட்டின் பித்தை, திரேகத்திலுள்ள கரும் புள்ளிகளிற் பூசினாலும், சிறிய வெளவால் எச்சத்தை வெண்புள்ளி, கரும்புள்ளிகளிற் தேய்த்தாலும். இராஜாளி வல்லத்தான் மூளையைக் கரும்புள்ளி, பத்திகளிற் பூசினாலும், உடும்பு; புழுக்கையை வெண்குஷ்டம், பத்துகளிற் பூசினாலும் நாயின் முடியை வென்புள்ளி, கரும்புள்ளி, வெள்ளைகளிற் புகைப்பிடித்தாலும். வாலின்மலத்தை,பத்து, முகக்கறுப்பு,புள்ளிகளிற் பூசினாலும் தீரும்.

——:():——

நான்காவதுபசுல்.

மூளை அதிகரிப்பு, பெலமாகுதல், புத்திக்கெடுதல், மறதிவருத்தல் ஞாபகவிருத்தி யாதியவைகளைக் கூறல்.

செம்மறியாட்டின் பாலைக் குடித்தாலும், பன்னீரெண்ணெயைத் தலையிற் பூசினாலும், கடுக்காயைப் பூசினாலும் செம்மறியாட்டின் மாமிசம் அல்லது தேனைத் தின்றாலும், தலை கழுவினாலும், இஞ்சி முறபா தின்றாலும், ஒரு களஞ்சிக் குந்துருக்கத்தைப் புளிக்கவைத்து ஒவ்வொரு நாளுந் தண்ணீரை இறுத்துக் குடித்தாலும், மூளை அதிகரித்துப் புத்திகூர்மையாகி மறதி நீங்கும், மானின் விட்டையுந் தொலியுங் கரித்துப் பொடித்து வஜீபனத்திலிட்டுக் குழந்தைகட்குக் கொடுத்தாலும், சாவலின் பித்தை; செம்மறிக்கிடாய்க் குழம்புடன் கலந்து வெறும் வயிற்றிலுட்கொண்டாலும், முள்ளம்பன்றிப் பல்லைக் கொடுங்கையிற் கட்டிக்கொண்டாலும், யானைத் தந்த மிளைத்த தூளை எந்தநாளும் திருஹத்

திடை தண்ணீருடனும் தேனுடனுங் குடித்துவந்தாலும், மதுரமான வஸ்துக்களைத் தின்று தேனைக்குடிப்பதும். ஆறியரொட்டியைத் தின்னுகிறதும், மரங்கொத்தியின் (இருதயம்) தாமரைக்காயைச்சுட்டு சதாபுடன் தின்னுவதும், அதன் கண்ணைக் கட்டிக்கொள்வதும், ஞாபகக்கூர்மையை வருத்தும், யாதொன்றையுமறந்தவன். அன்பறை அல்லது அகிர்கட்டையைக் குடித்தாலும், புகைத்தாலும் கஸ்தூரியை முகர்ந்தாலும், கராம்பில் கொஞ்ச முட்கொண்டாலும், பன்னீரெண்ணெயைத் தலையிற் பூசினாலும் மூளை பெலமாகும். ஜனி குளிரை விலக்கிச் சடலத்திற் சூட்டையுண்டாக்கும். இன்னும் சுக்கை முஸ்தக்காயுடன் மென்றாலும், கடுக்காய் முறபா தின்றாலும் சீரகத்தைப் பொடித்துத் துண்டில் முடிந்து முகர்ந்தாலும், கற்றாழைச் சாற்றைக் குடித்தாலும், சிலேற்பன நீரை விலக்கி மூளையைக் கெட்டியாக்கும், பச்சை மல்லிகை துப்பாஹ், அல்லது புளிப்பான வஸ்துகளை அல்லது வெங்காயம். சதாபு அல்லது வாண்டரொட்டி இதுகளிலொன்றை மிகுதமாய் தின்னுவதும், அபியூனை தின்னுவதும், புத்தியைக் கெடுத்து, மறதி, மடமை, கல்பு குருடு இவைகளை வருத்தும்.

மறதி:—மூளை நோயினின்று முள்ளது. அது குளிரினாலுற்பத்தி, வெங்காயம் மிகுதமாய் தின்னுவதாலும், கடப்பாய் வயிறு நிரம்பவுண்பதினாலும், கனிவர்க்க மிகுதமாய்த் தின்பதினாலும், கெட்டவாடைகளை முகர்வதாலும், இள்கலான இடத்தில் இரத்தங் குத்திவாங்குவதாலும், இன்னும் பச்சை மல்லியைத் தின்னுவதும். புளிப்புகளைத் தின்னுவதும், மிகுத்த துக்கமும்(மீஜான்)அதாவது புதைக்குழியிலுள்ள கல் எழுத்தை வாசிப்பதும், கட்டுக்கிடை நீரைப் பார்ப்பதும், அதில் மோளுவதும் கழுகிற் றாக்கப்பட்டவனைப் பார்ப்பதும், இரு கூட்டத்துக்கிடையில், பெண்களுக்கிடையில், வெயிலில் நடப்பதும் பேனை யுயிருடனெறிவதும், எலி தின்றதைத் தின்னுவதும், மறதியை வருத்தும். அலக்கென்னும் பிசினை மெல்லுகிறதும், கறுத்தச்செருப்பணிவதும் மறதியை வருத்தும்.

——(*)——

ஐந்தாவதுபசுல்,

உண்ணாக்கு விஷயங்கள்.

——:○:——

கற்றாழை அல்லது, சுடுநீர், அல்லது தேனை,தொண்டைக்குழியில் சீறி இழுத்தால். உண்ணாக்கு மேல் முரசு தொண்டை, நெஞ்சு,தொண்டைக்குழிப்பதப்பு இவைகளிலுள்ள வீக்கந்தீரும் குளிர்ந்த நீர் நுரையீரல் புண்ணாக்குத் தங்கடங்கொடுக்கும். தேனுடன் கலந்தஉப்பு அல்லது தேனுடன் கலந்த பெருங்காயத்தைமேல்முரசு உண்ணாக்கு இவைகளிற் பூசினால் வீக்கம் வலிக ளடங்கும். உண்ணாக்கு வளர்ந்து தொண்டை வலிப்பதாவது- தொண்டையில் ஓர் வஸ்து அடைந்திருப்பதுபோல் தோன்றும் நாக்கைநீட்டினால் உண்ணாக்கு சோர்ந்துநீண்டு தெரியும்..அதன் காரணமாவது:-சூடு அல்லது குளிர்ரானவைஅதன் பக்குவம்:—சிறியவர்களுக்கு, மாசாக்காயை, சிறுக்காவி லரைத்து, உச்சிப்பதப்பில் பூசத்தீரும், இன்னும் உண்ணாக்கு சூட்டால் சேர்ந்ததாயிருந்தால், செவப்பாயும், காந்தலாயும் வெளுத்துமிருக்கும். அதற்குப் பக்குவம்:—சிறுக்கா, உப்பு, தேன், இவைகளை " கருகரா " சீறி இழுத்துக் கொப்பளிக்கத்தீரும்.

ஆறுவதுபசல்.

தொண்டைநோய், வலி, படுவன், யாதுங் கொளுவுதல் இவைகளைக்கூறல்.

தொண்டை படுவனாகிறது:—ஒரு வஸ்துவை விழுங்கி மூச்சுவிடுந்தானங் கிட்டுமையாகின்றதாம் அதன் பக்குவம்:—உப்பை முரசில் தேய்த்தாலும், தேன் அல்லது பாலை அதில் தேய்த்தாலும், கீலை வெளித்தொண்டைமேற் பூசினாலும், அல்லது சூடுள்ள சிறுக்காவை கருகரா. சீறி இழுத்தாலும் வெங்காயநீரைத் தேனுடன் மேல் முரசிற் பூசினாலும். பள்ளாட்டுப்பாலை, கருகராசீறி இழுத்தாலும் தொண்டைபடுவன் தீரும், இன்னும் தொண்டைவியாதிகளி யாவுக்கும் பேச்சைக் குறைப்பதும் முள்ளங்கிகருஞ்சீரகமிவைகளைத் தவிழ்வதும் அவசியம். தொண்டையில் முள், என்புகள் கொளுவிக்கொண்டால், வஜீபனத்தில், பெரும் பிடியாகப் பிடித்து பலதடவையும், மடக்கிமடக்கி மெல்லாமல் விழுங்கவும். கொளுவப்பட்டது வஜீபனம் அல்லது கெட்டியானதாவும் அல்லது, கொட்டை விதையாக விருந்து இறங்காவிடில், பின்கழுத்துப் பிடரியிற் பலதடவை குத்தி, தண்ணீரில் ஓர் மிடறு கடக்கென்று விழுங்கவும் இறங்காவிட்டால் சத்தியெடுக்குதல் அவசியமாகும். தொண்டைவலி வகைகள் முந்திவிட்டது.

ஏழாவதுபசல்.

தொண்டைக்கட்டு, சப்தம்தெளியுதல் இராகமிவைகளைக் கூறல்.

தொண்டை கட்டுங்காரணம்:—குரவளையில் சிலேற்பனக் கலவன் அதிகரிப்பாம். அதற்குப் பக்குவம்:—தேனுடன் இஞ்சிமுறபா அல்லது பானீதைத் தின்னுவதும் புளிப்பையும் பாலையுந் தவிழ்ந்துக்கொள்வதும். சப்தத்தைத் தெளிவாக்கும். இன்னுங்கடுமையான சூடுகுளிராலும் புளிப்பாலும் சரசரப்பான வஜீபனத்தாலும், பெரிய சத்தமிடுவதாலும் தொண்டைக் கட்டுண்டாகும். அத்தொண்டைக் கட்டுவிடநாடியவன், புளிப்பு, கசப்பு, உறைப்பு உள்ள வஸ்தடங்கலையுந் தவிழ்ந்துக்கொள்ளுவதவசியமாம்,இன்னும் ஜிமாஃ செய்தாலுந் தொண்டைக் கட்டுண்டாகும்.

சப்தந் தெளிவாய் இராகமா யிருப்பதற்கு, வெள் வெங்காயத்தைப் பச்சையாய் அல்லது சுட்டுத் தின்றாலும், பெருங்காயத்தை நீரிற் குழைத்துக் குடித்தாலும் அதிமதுரத்தை அல்லது அறபுக் கொமஞ்சானை அல்லது சபர் ஜல்பாலை. நாக்கின் தாழாலே வைத்துக்கொண்டு, ஊறுகிற எச்சிலை விழுங்கினாலும் வெண்ணெயைச் சீனியுடன் தின்றாலும், எள்ளை; சீனி, கற்கண்டுடன் தின்றாலும், பசியாறும்போது மிளகைத் தின்றாலும், இன்னுங் கறந்தபாலை அல்லது காய்ச்சிய பாலைச் சீனியுடன் குடித்தாலும் சுடுநீரை "பன்ஜஸா" எண்ணெயுடன் குடித்தாலும் சப்தத்தைத் தெளித்துத் தொண்டைச் சரசரப்பு விறைப்பை இளகலாக்கும்.

எட்டாவதுபசல்.

தொண்டை விக்கலைக் கூறல்.

வஜீபனத்தை இளக்குந் தத்துவம் பெலவீனப்படுவதாலும் மூக்கின் தண்டின் அஸ்திவாரம் விஸ்திரணமாய் வஜீபனஞ்செல்லும் வழி

கோணலாவதாலும் தின்னும்போது பேசுவதாலும் பெரும் பிடியான வஸ்தை மெல்லாமல் விழுங்குவதாலும் சிறுக்காபோலுள்ள நுட்பமான வஸ்தினாலும் விக்கிக்கொள்ளுதலுண்டாகும் இடைவிடாத விக்கலுக்கு பாதாமைச் சீனியுடன் தின்றாலும் கோதம்புக் கூழை சருக்கரையுடன் நக்கினாலும் தீரும். சிலவேளை தூக்கத்தில் விக்கலுண்டாகும். அதுடையவன் மல்லார்ந்து படுப்பதன்றி இரண்டு பாகத்திலொன்றில் ஒருச் சாய்ந்து படுப்பான். அறவே முதுகின்பேரில் தூங்கான். முதுகின் பேரிற் படுத்தால் விக்கலதிகமாம். அல்லாஹுத் தஆலா மிக அறிந்தவன்.

ஒன்பதாவதுபசுல்.

மூச்சின்கிட்டுமை திணறுதலைக் கூறல்.

——()——

மூச்சின் கிட்டுமையுள்ளவன் தவிழ்ந்துக் கொள்ளற்கு அவசியமானவைகள். புளிப்பு, கசப்பு வருத்தமான வேலைகள். உப்பு,குளிர்ந்த நீர், ஜிமாஃ, உசும்புதல் மிகுந்த நித்திரை, முக்கியமாய் பகல்காலத்தில் நித்திரையுந் தவிழ்வதுமாம். அதற்குப் பக்குவம்:—மூச்சு திணற்மூட்டுதலுண்டாகுமான வேளை நித்திரையிலுண்டுபட்டு வருந்தமடைந்தால் நித்திரையில் அந்த விக்குதல் எச்சிலைக்கொண்டும் அல்லது மிகுந்த எச்சில் வெளிப்படுவதைக் கொண்டும், அவற்றுடன் நுரையீரலில் மூச்சைக் கிட்டுமையாக்கும். அதில் சீதளமுண்டும். அதற்கு அந்த எச்சிலை யுலர்த்தி விலக்கும் வஸ்துகளைப் பரிமாறி பாலைத் தவிழ்ந்து, தண்ணீர்க் குடியைக் குறைத்து, சமியலாகாதவைகளைத் தவிழ்ந்துக் கொள்ளுவான். எச்சிலைக் கொண்டு இல்லாவிட்டால், சூட்டினாலது உற்பத்தி:—அதனறிகுறியாவது:— முகமதிசமாயிலங்கும். அதற்குச் சூட்டைத் தணிக்கும் வஸ்துக்களைப் புளங்கவும், சுமை சுமப்பது வருத்தமான வேலைகளாதியவைகளால்; மூச்சின் கிட்டுமைக்கும் நெஞ்சு விரிந்துபொறுத்துக்கொண்டதற்கும் பக்குவம்.

நெஞ்சில், வெண்ணெய், எண்ணெயைப் பூசி அதன்பேரில் ஒரு துண்டை சேர்வையாகப் போட்டு மூன்றுநாள் வரையில், திறக்காமலிருந்து வருவதாம்: இன்னும் நெஞ்சு விரிந்ததற்கு. அதைக் கட்டிக்கொண்டு மஞ்சட் கடுக்காயை முட்டைக்கருவிற் சேர்த்து நெஞ்சில் சேர்வைபோடலாம். மூச்சுவிடுவதற்கு வருத்தமாய்விட்டால், லவங்கப்பட்டையைச் சோற்றுடனதிகமாய் தின்றாலும் கருஞ்சீரகத்தை அரைத்துப் பச்சை தண்ணீரிற் குடித்தாலும் “ஸிம்ஸம்” எள்ளைத்தின்றாலும் பலன் கொடுக்கும். இன்னும் மூச்சின் விபரம். மூச்சினுடைய பாபில்வரும்.

பத்தாவது பசுல்.

இருமல் வரட்சி, குளிர்ச்சி நீர்ப்பிணைப்பாலுண்டாகும் இருமல்களைக் கூறல்.

——(*)——

இருமலின் காரணம்:—நுரையீரலிலும்நெஞ்சிலுமிறங்கியசிலேர்ப்பனக்கலவன் அதிகரிப்பாம். அதன் பக்குவம்:—ஒருஇருத்தல் தேனை இளநெருப்பில் வைத்து அதில் ஒரு திருகத்திடை குந்துருக்கமும், மூஸ்தக்காயுமிட்டு இரண்டு மிளகிவருகையிற் கிண்டி இறக்கி. உறையுமுன் கருஞ்சீரகம், வெந்தயம், சுக்கு, மிளகு, வகைக்கு விராகனிடை பொடித்துக் கலந்து போட்டுக் கிண்டி லேகியமானபின் வெறும்வயிற்றிலும் நித்திரைக்குப் போகும்போதும் இருமல் வந்தபோதும் தின்ன அரிசி, மிளகு, தேன் அல்லாத்ததை தவிழ்ந்துக்கொள்ளுவான். இன்னும் வெறும்வயற்றிலும் நித்திரையிலும் குந்துருக்கந் தின்று. மோர், தயிரு, புளிப்புகளையுந் தேனையும் விலக்கினாலும், சீதள இருமலினால் சயனித்தபோது இருமல்வரும். அப்போது ஐந்து மிளகைத் தின்று தேனைத் தவிழ்ந்து வரட்சியான சூடுள்ள வைகளைத் தின்று சுடுநீர் குடித்து வந்தாலும், பல் விளக்குவதும் நோன்பு வைப்பதும் இரவில் குறு ஆன் ஓதுவதும், மூஸ்தக்காய் மிளகு தின்னுவதும் இருமல்கட்குப்பலன்கொடுக்கும். இன்னும், குணங்கெடுவதாலும்இருமலுண்டாகி இரத்தங் கக்குதலளவில் வருத்தும். அது குளிராலுண்டான அறிகுறி குளிரதிகமாயும், தாகமும்சூடுமில்லாமலும் குளிர்ச்சியானவஸ்தினின்பமில்லாமலும். சீதளத்தாலுண்டான இருமலின் அறிகுறி:—மேற்கூறியதற்குமாற்றமாய் காங்கையாயும் தாகமாயும் காறல் பளபளப்பாயும், வரண்ட இருமலின் அறிகுறி:—இருமும் போது, காறலில்லாமலும் பசியும் உசும்புதலுமதிகமாயும், சீதள இருமலின் அறிகுறி இருமும் போது, காறல் சளி வருவதாயிருக்கும் வரண்ட இருமலின் காரணம்:—

நுரையீரலிலும் நெஞ்சிலு மிறங்கிய சௌதாவியாகிய வரண்ட குளிர்க் கலைன் அதிகரிப்பாம். அதன்பக்குவம்:—வெந்தயத்தை நீர்விட்டுக் கொதித்தவுடன் இறுத்துவிட்டு மறுதரமும் அவ்வாறே ஐந்துவிசித்தம் புதிய நீரிற் கொதிக்கவைத்திறுத் துலர்த்திப் பொடித்து, அதனிடை கோதம்பு மாவைச்சேர்த்து ஆவின் பால் சருக்கரை நெய்யால் களி போற் கிண்டி, காலை மாலை, தின்று, மற்றைய வஜீபனத்தைத் தவிர்த்துக் கொண்டால் பலன் கொடுக்கும்.

இன்னும் நித்திரையினிடமும் வெறும் வயிற்றிலும் பாதாமைப்பசுவின் வெண்ணெயுடன் தின்னுவதும் கரும்புத்தின்னுவதும் அறபுக் கொமஞ்சாலை வாயில் அடைக்கிக்கொள்வதும், பால் குடிப்பதும், வாழைப்பழந் தின்பதும், ஜைபித்தூனெண்ணெயில் ரொட்டி தின்பதும், வெறும் வயிற்றில் நெய் தின்பதும் முந்திரிப்பழம், வெள்ளாட்டுப்பால், அல்லது கழுதைப்பால் உட்கொள்ளுவதும், நீண்டநாள் இருமலானால் அப்பாலில் வெள்வெங்காயத்தைச் சமைத்து தின்பதும் வெங்காயலேகியந் தின்பதும் பலன்கொடுக்கும்-

ஜிமாஃக்குப் பின்னால் அக்கினிவேட்கையால் அல்லது கனத்த வஸ்தைச் சுமந்ததால் உண்டான இருமலுக்குரிய அடையாளமாவது: இருமும்போது, தன் நெஞ்சு திறந்திருப்பதுபோல தோணும் அதற்குப் பரிகாரம்:—முர்ரு, குந்துரு, முஸ்தக்காய், வகையொன்றுக் குத்திருஹத்திடை எடுத்து மூன்று உவாக்கு எண்ணெயிற்போட்டு இளநெருப்பில் வேகவைத்துருகியபின். இறக்கிச்சூட்டுடன் குடித்துத் துப்பட்டிக்கொண்டு போர்த்தி இரவில் நித்திரைசெய்து காலையில் முர்ரும், சீனியும் பொடித்து வெறும் வயிற்றிலும் இருமல்வந்த நேரத்திலும் குடித்தாலுடனே நிற்கும்.

இன்னும் நெஞ்சில் திணறல், திட்டுமுட்டு, மூச்சடைப்புகளுக்கு இஸ்லைதப்போட்டுக் காய்ச்சிய எண்ணெயைப் பூசி, காற்றில்லாத இடத்தில் படுத்திருக்கத் தீரும்.

‘கனமான வஸ்தைச் சுமந்ததில் நெஞ்சிற் பொறுத்து வலித்தால் சபர் ஜல்பாலை, பன்னீரில் ஒரு சாஆத்து வைத்திருந்து எடுத்துபயோகித்தாலும் ஒவ்வொருநாளும் மூன்றுமுட்டையைச் சுடுசாம்பலில் வெதுப்பி மூன்று நாளுபயோகித்தாலும், மஞ்சட் கடுக்காயை சிறுக்காவிற் குழைத்து நெஞ்சிற் பூசினாலும், முஸ்தக்காயுந் தேனும் சம

மிடை யெடுத்து எண்ணெயிலிட்டுக் கொதிக்கவைத்துச் சூட்டுடன் தின்று எண்ணெயை நக்கினாலும் இரவில்கருவாப்பட்டையும், முந்திரிப் பாணியும் தின்றாலுந் தீரும், இன்னு மிரண்டு காலையிலும் புலிக்கொழுப்பை பூசினால் குளிர்நீர்ப்பிணைப்புந் தீரும் கோவேறுகழுதை விட்டையைச் சளிப்பிடித்தவன் முகர்ந்து அதிற்றுப்பிப் பாதையிலெறிந்து விட்டால் அதை மிதித்தவனுக்குச் சளிதிரும்பிவிடும். துப்பியவன் சொஸ்தமடைவான். பழய இரும்பாணியை பழுக்கக்காய்ச்சி, கறந்த ஆவின்பாலிற் றுவைத்து வெறும்வயிற்றிற் குடித்தால் இருமல் தீரும் குழிநரிக்கொழுப்பை இரு கை கால் அருகுகளிற்பூசினால் குளிர்ச்சியின் தங்கடத்தை விட்டு மச்சந்திருவான். நாயின் மூளையை சதாபு நீருடனும் எண்ணெயுடனுங் குழைப்பித் திரேகத்திற் பூசினால் அவன் வெளியரங்கமான குளிரடங்கலுக்கும் பலனும் குளிர்ந்தகாலத்தில் ஒரிடத்தில் ஆடையை மல்லார்த்திப் போட்டால் குளிர்நீங்கும்.

“ஏஹாகி’ என்ற காகத்தின் மலத்தைப் புடவைத் துண்டிற் பொதிந்து “புனுகு” எத்தாதகுழந்தைகளுக்குக் கட்டினால் அதன் நொம்பலமாகிய இருமல்கட்குப் பலன்செய்யும். தின்றுபோம். கருங் காகத்தின் பித்தை, பாதாம் எண்ணெயில் மத்தித்துக் குடித்தால் ஜலதோசந்தீரும், மான்குட்டிப் பித்தைக் கீலுடனும் உப்புடனும் கலந்து இரத்தத்தையும், ஊனத்தையுங் கக்குகின்ற இருமலுடையவன், குடித்தாலதுநீங்கும் நாயின் பாலைத் தண்ணீருடன் குடித்தால் உடனே இருமல் நிற்கும்.

ஒன்பதாம்பாபு முற்றிற்று.

பத்தாம் பாபு.

கல்பு நெஞ்சு, கழுத்து, தோள், கமுக்கட்டு கை வகை உறுப்புகளின் ஆராய்ச்சி.

ஒன்றாவது பசுல்.

தொண்டை, நெஞ்சினின்றும் இரத்தக் கசிவு, ஓட்டம், இரத்தகாசம், ஈரல்முட்டி என்ற வியாதி, கல்புவலி நெஞ்சுத் துடிப்பு, இவைகளைக்கூறல்.

கல்பு ஈரல் சூலை சூட்டால், காறல் சளியுடன் இரத்தக்கசிவாகின்ற இருமலுக்குப் பரிகாரமாவது; கொத்த மல்லியைப் புளித்த சிறுக்காவில் ஒரு இரவுபகலூறவைத்துத் தெளிவிறுத்துச் சருக்கரையுடன்குடிக்கத்தீரும்,

குதித்தல் சஹ்றபத்து, ஜிமாஃ அதிகப்பேச்சு, எள்ளைப்போல் இரத்தமுண்டாகின்ற வஸ்துக்களைத் தவிர்த்துக்கொள்வதும், மாதளை போலுள்ள இரத்தத்தைக் குளிராக்கும் வஸ்துக்களைத் தின்பதும் அவசியம். கோதம்பு மாவைத் தண்ணீரிற் கிண்டித் தின்றாலும் அரை திருஹத்திடை குந்துருக்கம் குடித்தாலும் மரகதத்தைக் கழுத்திற் கட்டிக்கொண்டாலும், தாரசினியைச் சுடுநீரிலரைத்து திருஹத்திடை குடித்தாலும், முட்டையைச் சூட்டுடன் தின்றாலும் பன்னீரைக் குடித்தாலும் ஹம்காஃ கீரையை அரைத்து சிறுக்காவிற் குழைத்து நெஞ்சிற் பூசினாலும், முஸ்தக்காயைப் பொடித்து, பள்ளாடு, அல்லது வெள்ளாட்டு பாலிற் குடித்தாலும், கழுதை, ஒட்டகை, குதிரை இவற்றின் பாலைக் குடித்தாலும், நெஞ்சினின்றும் இரத்தம், சீழ் வடியுகின்ற இருமல் தீரும். ஆனால் வியாதியுண்டான துவர்க்கத்திலும் கொடிய காச்சலிலு முடனே பாலைக் குடிக்கப்படாது.

இன்னும் முலைப்பாலை நெஞ்சில் வைத்தால் நுரையீரற் புண்ணுக்குப் பலன் கொடுக்கும். ஒருவனுக்கு இரத்தமே ஓடினால் அது ஈரல் முட்டி வியாதி. அதாவது:—நுரையீரலில் தொட்ட வியாதி, தேகமெலிந்து மந்தசணித்துவிடும். அதற்குப் பக்குவம்:—கழுதைப்பால், முலைப்பால், பள்ளாட்டுப்பால் இவைகளைக் குடித்தாலும்பச்சைரொட்டி

தின்றாலும், ஸபர்ஜல், தண்ணீரைச் சுடவைத்துக் குடித்தாலும், காய்ந்த மொச்சைக்கொட்டையிற் களிக்கிண்டித்தின்றாலும், ஈரல் முட்டி வியாதி தீரும்.

தொண்டை நெஞ்சு, இன்னம் இதுபோற்கொற்றதில் நின்றும் இரத்தமோடுகிறதற்குப் பலனாவது; குந்துருக்கத்தைப் பொடித்து உறுஞ்சி நக்கினாலும், ஒவ்வொரு நாளும் முஸ்தக்காயைத் தண்ணீரிற் காய்ச்சிக் குடித்தாலும், அல்லது சுன்னாம்புக் கீரையை யரைத்து தண்ணீரிற் சேர்த்துக் குடித்தாலுந் தீரும். கல்பு வலிக்கு: கற்கண்டைப் பொடித்து கொஞ்சம், மிளகுத் தூள் சேர்த்து ஆட்டுப்பாலில் காலை மாலை குடித்து வந்தாலும், கோழிமுட்டை மஞ்சட் கருவைச்சமைத்துத் தின்றாலும் குங்குமப்பூ, குடித்தாலும் குந்துருக்கத்தைக் குடித்தாலும் இன்னம், மல்லி, முத்து, கஸ்தூரி, புளியங்காய் இவைகளிலொன்றைக் குடித்தாலும் பொன்னை வாயிலடைக்கிக் கொண்டாலும், இரும்பு, பொன், வெள்ளி, பழுக்க காய்ச்சி முக்கிய தண்ணீரைக்,-குடித்தாலும், கடனுரையைத் தின்றாலும், வாழைப்பழந் தின்றாலும், கராம்பு தின்றாலும், சபர்ஜலை முகர்ந்தாலும் வெள்ளரிக்காயை முகர்ந்தாலும் மான் மாமிசத்தைத் தின்றாலும், பன்னீர் குடித்தாலும் ஆவின் பாலில் கராம்பைக் குடித்தாலும், கல்பைபெலமாக்கி நெஞ்சுத் துடிப்புத்திடுக்கத்தை விலக்கி, கல்பு வலியைத் தணிக்கும். இது கல்பு வலிக்கு மிக நலம்.

இரண்டாவது பசுல்.

பால் சுரப்பினாலுண்டான முலை வீக்கம், பால்வற்ற, சுரக்க, முலை பருக்க, பருக்காதிருக்க.

பால் சுரப்பினாலுண்டான முலை வீக்கத்துக்கு பாதாமெண்ணெயைப் பூசினாலும், பருப்பைக் கடனீரில் சமைத்தரைத்து பால் கட்டிய முலையிற் பூசினாலும் மொச்சைக்கொட்டையைப் பொடித்து, மாவுகளுடன் கூழ்க்காய்ச்சிப் பூசினாலும் ஹம்காஃ கீரையைக் கட்டினாலுந் தீரும்.

பால்சுரக்க:—கருஞ்சீரகத்தைக் குடித்து வந்தாலும், சீரகத்தைத் தின்றாலும் ஹஜருல் மாஸ் அதாவது பில்லூர் என்ற பளிங்கியை முலைமேற் றடவினாலும் ஆவின் பாலைக் குடித்தாலும், எள்ளைத் தின்றாலும்,

சீரகத்தை, தேன் நெய்யுடன் தின்றாலும், பள்ளாட்டு பால் குடித்தாலும், கடல்மீன் தின்றாலும், கருஞ்சீரகத்தை யரைத்து முலைமேற் பூசினாலும் எலிப்புழுக்கையுடன் தொலிக்கோதம்பைச் சேர்த்துப் பூசினாலும் பால் அதிகஞ் சுரப்புண்டாகும்.

இன்னும் நற்சீரகமும், கஸகஸாவுஞ் சமமாய்க் கலந்து "யாமதீன்" என்று பதினொரு தாள் துண்டிலெழுதி மேற்படி மருந்திற் போட்டு (லீஈலா பிகுறைஷின்) முற்றிலும் பதினொரு விடுத்தமும் (பதஹனா அப்வாபஸ்ஸமாயி) எனும் ஆயத்தின் கடைசிவரையில் எழு விடுத்தமும் (பிஸ்மில்லாஹில்லதீ) கடைசிவரையில் எழு விடுத்தமும், ஓதி மந்திரித்த ஷை மருந்தை நாலு நாள் பதினொரு வேளைக்குப் பங்கிட்டுத் தின்று, ஒவ்வொரு வேளையிலும் அரிசி களைந்த நீர் மண்டியில் ஷை இஸ்மு, எழுதிய ஒரு துண்டைக் கரைத்துக் குடித்தால் போதுமென்கிறவரையில் பால் சுரக்கும்.

பால் வற்றலுக்கு:—மொச்சைக்கொட்டைக் கூழைப் பூசினாலும், அதன் மாவைப் பன்னீருடன் பூசினாலும், சதாபு, மல்லி, உப்பு, இவைகளைச் சோற்றுடன் தின்றாலும், தும்பாட்டு பித்து, அரைத்த வெங்காயம், அல்லது குந்துருக்கம் அல்லது கிட்டம் அல்லது பன்னீர் இவைகளிலொன்றைப் பூசினாலும் பால் வற்றிப்போம்.

முலை பருக்காதிருக்க "தவளை" இரத்தம் அல்லது அரைத்த சீரகம் பூசினாலும். இய்யம், பன்னிரெண்ணெய், முஸ்தக்காய், சீனிக்காரம், அபியூன், சிறுக்கா, கொட்டைப்பாலுகள் ஒவ்வொன்றும் முலை பருப்பதை நிறுத்தும்.

மாதவிடை இரத்தத்தில் முந்திய இரத்தத்தை இரு முலைக்காம்பின் தலையில் தளமிட்டால் முலை வழியாமல் நிலையில் நிற்கும். அரைத்த வெந்தயத்தை தண்ணீரிற் குழைத்து முலையிற் பூசினால் அறவே பால் வற்றிவிடும். பேய்க் கொம்மட்டிக் காயை இடித்து, ஜய்தூனெண்ணெயிற் குழைத்து, ஆட்டுப்பஞ்சு முடியைக் குச்சியில் சுற்றி அந்த எண்ணெயில் துவைத்து ஸ்தனத்தின் தலப்பில் தளமிட்டால் பால் சுரக்கும். கன்னியழிகின்ற இரத்தத்தைக் கன்னியழிக்கு நேரத்தில் எடுத்து ஸ்தனத்தில் தளமிட்டால் பருக்காது. செம்மறி தும்பை ஆட்டின் பித்தை இரு ஸ்தனத்திலும் தளமிட்டால் பால் வற்றிப் போம்.

447

மூன்றாவது பசுல்.

ஈரல் குலைவலி, பல்குத்திவலி அதன் அடைப்புகளைக்கூறல்.

ஈரல் குலைவலியாகிறது:— வீக்கத்தின் கடுசால் ஈரல்குலை வலுப்பமாகித் தாகமிகுத்து வஜீபன வபேட்சையுடன் மெலிந்து, கொஞ்சம் புசித்தால், அதிகமாய்த் தின்று வயிறு நிரம்பியதுபோற் றோனும். அதன் வலியின் காரணம்:—அதன் சோர்வுதலும் வியாதியுமாயிருக்கும். அதன் பக்குவம்.—பள்ளாட்டுப் புழுக்கையைச் சிறுக்காவுடன் சேர்வையாய்க் கட்டினாலும், தும்பையாட்டுக் குடல் துண்டுகளை வெறும்வயிற்றில் மென்று எச்சிலை இளக்கிப் பின்னர் புளித்த சிறுக்காவில் ஒரு ஊக்கியா குடித்தாலும், அல்லது சுன்னாம்புக் கீரையைச் சீனியுடன் சூரணித்து எழுநாள் தின்று சிறுக்காவையுங் குடித்து புளித்த கூழை, அல்லது மாதளை அல்லது புளியைத் தின்று வந்தாலும், வால் மிளகைப் பொடித்து மூன்றுநாள், அரை, அரை ஊக்கியா குடித்தாலும், வலியுள்ள பக்கத்தின் தொடைக்குக் கீழ் மோண்டு வந்தாலும், சதாபு இலையைக் கொடி முந்திரிப்பழத்துடன் தின்றாலும், தீட்டிய எள்ளைப் பத்து நாள் அல்லது அரைமாதமட்டும் வெறும்வயிற்றில் தின்று வந்தாலும் பள்ளாட்டுப் பற்குத்தியை, அது உலர்ந்து காயும்வரையில் தன்னிருப்பிடத்திற் கட்டித் தூக்கிவைத்து எப்பொழுதும் வெளியில் போகாமல் இரவு பகலாய்த் தன் கண்ணால் பார்த்து வந்து காலை, மாலை, ஒரு ஊக்கியா சிறுக்கா குடித்துவந்தாலும், மூன்று நாள் மட்டும் ஒவ்வொரு ஊக்கியா முஸ்தக் காய்த்தூளைத் தண்ணீரிற் சேர்த்துக் குடித்து வந்தாலும், குங்குமப்பூவைக் குடித்துவந்தாலும், கட்டினாலும் முள்ளங்கி விதையைத் தேனில் குழைத்துத் தின்றாலும் கட்டினாலும் சதாபைத் தின்றாலும் குடித்தாலும், மிளகைச் சிறுக்காவுடன் கட்டினாலுங் குடித்தாலும், இரும்பு ஞார்ந்த நீரைக்குடித்தாலும் ஆட்டுப்புழுக்கையை யரைத்துப் பூசினாலும், கடுக்காய் வகைகளைக் குடித்தாலும், கருஞ்சீரகம், பறவை மாமிசவகை யனைத்தும். வெங்காயம், வெள்வெங்காயம் கிருதுவெங்காயம், கீரை, பாதாம், இவையனைத்தும், ஈரல்குலை, பல்குத்தி வியாதிகளைக்கேட்கும், இன்னும் அபீகூன், குங்குமப்பூ, முஸ்தக்காய், லவங்கப்பட்டை. இவைகளில் ஒவ்வொன்றைப்பொடித்துக் குடித்தாலும் கத்திரிக்காயைச் சிறுக்காவுடன்

சமைத்துத் தின்றாலும், கிறுதா, குந்துருக்கம் எலுமிச்சம்பழம், ஒட்டகைப்பால் மிளகு, சுக்கு அத்திப்பழம், இவைகளில் ஒன்றைத் தின்றாலும், ஈரல்குலை, பல்குத்தி; அடைப்பு இவைகளைப் போக்கும், வாழைப்பழம் பருப்பு நீர் இவைகளை அதிகமாய்ப்பரிமாறினால்அடைப்பைவருத்தும். இன்னும் அம்பாட்டு ஈரலைத்தன் கையாலறுத்துத்தன் னிருப்பிடத்தில் வைத்துக்கொண்டாலும், குழிநரி, பல்குத்தியைக் கட்டிக்கொண்டாலும், அந்த ஈரலைப்பொடித்துக் களஞ்சி இடை குடிப்புடன் குடித்தாலும் முள்ளெலியின் பல்குத்தியைச் சுட்டுத்தின்றாலும், தேன், சருபத்துடன் குடித்தாலும் ஈரல்குலைவலி நீங்கும்.

——(:)——

நான்காவது பசுல்.

தோளிலுண்டாதும், சிவப்பு கமக்கூடு, நாற்றம் கொடுங்கை, மூளி, வகைகளைக் கூறுதல்.

——:(:):——

கோடைகாலத்தி லதிகமாய் நீர்குடிப்பதாலும் சூடானவஜீபனங்களைத்தின்பதாலும் இரத்தத்தையு சுப்பி சிவப்பாக்குவிக்கும். இன்னும் பாதக்குறடில்லாமல் நடந்தால்; ஜிமாஃ, சிற்றஹத்து, பார்வைஇம் மூன்றுங்குறைவடையும் அதன் பக்குவம்.—அரிசி, எள், சலீபு, குடிக்கத் தீரும். இன்னும்; அதிக சுமை சுமப்பதால் வேலைசெய்வதாலே இரத்தமுசும்பித்தோள் சிவக்கும். கல்லடைப்பு, இடுப்புவலி, முதுகுவலி, நரம்புவியாதி யாதியவைகளுண்டாகும். அதற்குப்பக்குவம்.—கராம்பு, சீரகம் சலீபு, வெங்காயம், இடித்துத் தேனிற்குழைத்து தின்று வந்தாலும், ஹறுமலை இடித்து வடித்துச் சிறுக்காவிற் குழைத்துப்பூசினாலும், பழயக்கொம்பைக் கரித்துப்பொடித்து; கிறுதுநீரில் குழைத்துப்பூசினாலும், நாய்த் தலையைக்கரித்துச் சிறுக்காவில், குழைத்துப்பூசினாலுந்தீரும். கிட்டம் முஸ்தக்காயைப்பொடித்துருக்கி நீரிலுரைத்துக் கமுக்கட்டிற் பூசினாலும், சவுக்காரத்தைப் பலதடவைகளிற் பூசினாலும், கிட்டத்தைப்பன்னீ ரெண்ணெயிலரைத்துப் பூசினாலும் கெட்டவாடைநாற்ற மிகுதிகளைப்போக்கும்.

இரு கொடுங்கையிலுண்டான வரண்ட குளிர்ச்சியான வாயுவால் சரீரத்தில் சொறியுண்டாகி, கடுசான, அரிப்புண்டுபட்டுப் பொன்னிறமான நீருண்டாகிவரும். அதன் பக்குவம்.—சலீபு என்றும், றிஜலுத்

தைரு என்றும், அலுறிபான் என்றும் பெயருள்ள "ஹம்க்காஉ" கீரையை எண்ணெயிலரைத்து வெறும் வயிற்றில் ஏழு நாள் மட்டுங் குடிக்கத்தீரும். கருஞ்சீரகம் ஒரு "ஊக்கியா" பின் தஸ், நான்கு திருஹத்திடை, பேய்க்கொம்மட்டிக்காய், ஒன்று, அடங்கலையுஞ்சேர்த்திடித்துப் புதுக்கலயத்திலிட்டு, வேப்பெண்ணெய் மூழ்கவிட்டுச்சூரியப் புடத்தில் பதினைந்து நாள் வைத்து உண்டாகிய, வாய்வுவலி அடங்கலுக்கும் பூசத்தீரும். வெங்காயத்தைச் சிறுக்கா விலூறவைத்து அரைத்துத் துணியிலூட்டி மூளிவலிகட்குச் சேர்வையிட்டாலும் பேய்க்கொம்மட்டிக்காயை, ஜெய்தூனெண்ணெயிற் சிவக்கும் வரையில் வேகவைத்து அவ் வெண்ணெயைப் பூசினாலும் அவ்வலிகள் தீரும்.

——(*)——

ஐந்தாவது பசுல்.

கைகழுதவுல். வாய்கொப்பளித்தல், பல்குத்தலாதியவைகளைக் கூறல்.

* * *

வஜீபனந்தின்ற பின் கைகழுவுவதும், வாய்கொப்பளிப்பதும், பல்குத்துவதும். முஸ்தஹப்பு. கையில் மாமிசம், புலால்வாடைகளிருக்க நித்திரைசெய்தவனுக்கு, ஒரு நோய் தொட்டுவிட்டால் தன்னைத்தவிரப் பழிக்கவேண்டாமென்று நபிகணாயகந் திருவுளமா யிருக்கின்றார்கள். வஜீபனிக்க முன்னே கழுகிறது; மிடிமையையும் பின்னேகழுவுகிறது. முஸீபத்தையும் போக்கும்.

இன்னும் உடையைக் கழுவுவதும் துப்புரவாகிய உடையணிவதும் நல்லவாடையைக்கொடுத்துத், துக்கத்தைவிலக்கும் இன்னும், காது, அதன் கழுத்து, மூக்கு நகம், மற்றச் சரீரமடங்கலையுந் துசிகாஞ்செய்வதும், தலை, தாடி மீசை இவைகளைச் சீவிவகிர்வதும் ஒவ்வொரு "ஜும்ஆ" அடங்கலிலும் குளிப்பதும். உதடுவெளியாகும் வரையில் மீசைசறிப்பதும், அதன்ரூகை நிகளத்தில் விடுவதும், ஆகுமானதுடன்; இவைகளடங்கலிலும் வலது புறமிருந்தாரம்பிப்பதும், ஆண்பிள்ளைகள் தலை உரோமத்தைக் கத்தரிப்பதும். சிரைப்பதும் ஆமானதாயிருக்கும். நகங்கத்தரிப்பதும் "சுபுஹுக்குப்" பின் சூறத்து பாத்திஹா ஒருவிடுத்தமும் (அலம்நஷ்ரஹ்) மூன்றுவிடுத்தமோதுவது முஸ்தஹப்புடன், மிடிமை முஸீபத்துகளையும் போக்கும்.

ஆறாவது பசுல்.

இருமல், புகைச்சல், இவைகட்குப்புகைபிடித்தல்.

——:():——

ஒரு நிருகத்திடை, பொன்னரிதாரத்தைநோகஇடித்துஅதிலொரு முட்டைக்கருவைச் சேர்த்துக் கலக்கி அதை பஞ்சுள்ள புடவைத் துண்டினால், துவட்டி எடுத்து அப்பஞ்சை ரவைபோலுருட்டி வெயிலில் நன்றாயுலர்த்தி ஈரமற்றுக்காய்ந்த பின்னர் மூன்று நாள்காலை மாலை அல்லது சுபுஹு, அசறு, மறுசுபுஹு மூன்றுவேளை, மூன்று திரி உண்டையாகச்செய்து அதைப் புகைக்குடிக்கவும். அதன்விபரம்.—ஒரு குழியில் அதிகமான கங்கு நெருப்பைப்போட்டு, அதில் அந்தத் திரியுருண்டையில் ஒன்றைப்போட்டு, சிறியதுவாரமுள்ள கலயத்தினாலே, புகை போகாமல் மூடி அத்துவாரத்திலோர் குழா வைத்து அதில் வரும் புகையை வாயாலுறிஞ்சி குடிக்கவும், இவ்வாறு அம்மருந்து முடியும் வரையில், அக்கலயத்தின் துவாரத்தை யடைத்துக்கொஞ்சங்கொஞ்சமாய்க்குடிக்கவும், இதற்குக் காற்றில்லாத இடமிகவுநலம். பீஸா, பைகாறு, தீன், குடிப்பு ஆதியவைகளை பத்து நாள் வரையிலும் வெளியேறாமல் தன் இருப்பிடத்திலிருந்து செய்துக் கொள்ளவேண்டும். பத்தியம் கடுமை. அதாவது;—சுடுசாதம், சுடுதண்ணீர், பரிமாறவும் சுடுநீரிற் குளிக்கவும். கஷ்டமானவேலைகளைச் செயயான். இருமல் வியாதிக்குரிய பத்தியபதார்த்தங்களைத்தின்பான்.

——()——

ஏழாவதுபசுல்.

கண்டமாலையைக் கூறல்.

——:(:):——

புலியின்பித்தை, தேனுடன் மத்தித்து கண்டமாலையிற் பூசினாலும் குழிநரி, காதைக் கண்டமாலையின்பேரில் கட்டினாலும் மான் கோரோசனையும், ஊக்குருவியின் இரத்தமும் சிவந்த கெந்தகமுங்கூட்டி? பைத்தியமுள்ளவனுக்கும், கண்டமாலையுடையவனுக்குந் தொடராய் மூன்று நாள் நசியம் பிழிந்தாலும், சிறிப்பிள்ளை இரத்தத்தைக் கண்டமாலை மேற்றளிட்டாலும், ஏகாதி என்றபோர்க்கர்கத்தின் மலத்தைக்கண்டமாலையிற் பூசினாலும் குதிரைக் குழம்புச் சாம்பலை, ஜய்துனெண்ணெயிற் குழைத்து. கண்டமாலையிற் பூசினாலும் அதில் பள்ளாட்டின் புழுக்கையைப் பூசினாலும் கண்டமாலையை நோக்கிச் சுஸ்தப்படுத்தும்.

பத்தாம்பாபு முற்றிற்று.

பதினொன்றாவது பாபு.

வயிறு, விலா, இடுப்பு, முதுகு, முளி, இவைகளின் ஆராய்ச்சிகளைக் கூறல்.

——:(*):——

ஒன்றாவது பசுல்.

வாந்தி செய்யவும், நிறுத்தவுமாதியவைகளைக் கூறல்.

வாந்தியினால்; சரீரமதன் நீதி நிலை நிரப்பமானால் சரீரங்கொழுத்து தலையுலர்ந்து அறிவுண்டாய்க், பார்வை துலங்கும். நீதி நிலையன்றிக் கடப்பானால் சரீரம் மெலிந்து ஈரல் குலை, நெஞ்சு, நுரையீரல், கண், இவைகளில் வியாதியுண்டாகி, சிலவேளையில் நரம்பு பிளந்து கிழிந்து இரத்தமொலிக்கும். ஆனதால், சுகத்தைநாடி, சத்திஎடுக்க நாடியவன் குடலிற் சிலேற்பனம் குவளைமிகுத்தவனாயிருக்கும். அவன் மாதம் ஒரு விடுத்தம் அல்லது இரண்டு விடுத்தம் வயிறு நிரம்பி இருக்கையில் வாந்திசெய்வது நலம். குடல் ஒழிந்திருக்கையிற் சத்தி எடுத்தால் வருத்தங்களேரிடும். சத்தியைநாடியவன், புளிப்பு, மீன் இறைச்சி, நெய், வகைகளால், வயிற்றைநிரப்பிக் குடலிற்செல்லும் வரையிற் கொஞ்சந் தாமதித்து பின் அதன்பேரில் சுடுநீரில் கொஞ்சந் தேனிட்டு குடித்துப் பின்னால் சத்திஎடுப்பான். சத்தியை மிருதமாக்கான், இன்னுஞ் சத்திக்குள்ள பக்குவமாவது:—தேங்காயை வெறும் வயிற்றில் தின்றாலும், சுடுநீர் குடித்தாலும் சிற்றரத்தை அல்லது

அதன் எண்ணெயைக்குடித்தாலும், கீரை அல்லது பச்சைவெங்காயம் அல்லது தேன் அல்லது வெந்தயம் இதுகளை மிகுதமாய்த் தின்றாலும் நாற்றமுள்ள நீரைக் குடித்தாலும் ஓங்கரித்து. சத்திக்கும்.

இன்னும்; மொச்சைக்கொட்டை வேரையரைத்து சாறுபிழிந்து குடித்தாலும் குவளையைச் சத்தியில் வெளியாக்கும் வாந்தியதிகமாய் விட்டால் ஒரு திருஹத்திடை முஸ்தக்காயைப் பொடித்துக் குடித்தாலும் குங்குமப்பூவில் ஒரு குபுலா இடை அரைத்துக்குடித்தாலும் முஸ்தக்காயும் கிராம்பும் பொடித்துத் தண்ணீருடன் குடித்தாலும், முஸ்தக்காயும் ஏலரிசியும் பொடித்து நீரிற் கலந்து குடித்தாலும், முஸ்தக்காயை நீரிலிட்டு அதை மூன்றிலொன்றாய்க் காய்ச்சியநீரைத் தெளிவிறுத்துக் குடித்தாலும் கற்றாழை போட்ட நீரைத் தெளிவிறுத்துக் குடித்தாலும், வயிற்றின்பேரில் எண்ணெயைப்பூசி அதன்பேரில் முஸ்தக்காய்த் தூளைத் தூவினாலும் ஒரு களஞ்சி, கிராம்பைப் பொடித்து நீருடன் குடித்தாலும், புதுமண் சுட்ட பாத்திரத்தின் நீரைத் தெளிவிறுத்துக் குடித்தாலும் மொச்சையைச் சிறுக்காவில் வேகவைத்துத் தின்றாலும், “ஸம்க்காவு” கீரையைத் தின்றாலும் பித்தத்தைத்தணித்து ஓங்கரிப்பு சத்தி இவைகளைப் போக்கிவிடும், தேன், சத்தியை இலேசாக்கும்.

——:(:):——

இரண்டாவது பசல்.

விலா-இடுப்புவலிகட்குப் பரிகாரம்.

——:(*):——

முஸ்தக்காய், குதைறுவு, குந்துருக்கம், வெள்ளைப்பிசின் இவைகளைச் சமமாயெடுத்து இடித்துச் சூரணித்து, தின்று, தண்ணீர்குடித்தும், பால், மோர், தயிரைத் தவிர்த்துக் கொண்டாலும், முள்ளங்கி இலையைத் தின்றாலும், மருதோன்றி இலையை நல்ல மெழுகுடனும் பன்னீருடனுங் கலந்து வலியுள்ளவிடத்திற் பூசினாலும். சுடுநீர்விட்டுப் பிடித்தாலும், தீவிழுங்கி முட்டைத் தொலியை யரைத்துத் தேனுடன் நக்கினாலும், ஒத்தனம்போட்டாலும் வெந்நீர் விட்டாலும் விலாவலி இடுப்புவலிகள் தீரும்.

——(:)——

மூன்றாவது பசல்.

முதுகு மூளி வகையறு வலிகட்குப் பரிகாரம்.

முதுகுவலி மூளிவலிகட்கு, பெருங்காயம்: கருஞ்சீரகம்,, சமமாயெடுத்திடித்து, நுரை நீக்கிய தேனிற்கலந்து (குழைத்து) வெறும் வயிற்றிலும், நித்திரைக்குப்போகும்போதும்தின்றாலும், ஐய்துனெண்ணெயைக் குடித்தும், பூசினாலும், பன்னாட்டுக்குட்டி மாமிசந் தின்றாலும், ஹரீசா, தின்றாலும், நரம்பு குத்தி இரத்தமெடுத்தாலும் வெந்தயத்தைத்தண்ணீர் விட்டுக் குழையவேகவைத்து எடுத்து அதைப் பொடித்துத் தண்ணீரில் குழைத்து, உப்பு. வலியுள்ள தானங்களிற் கட்டினாலும். வெள் வெங்காயத்தைத்தின்றாலும் அவ்வலிகள் தீரும். விளக்கெண்ணெயைப் பூசினால், முதுகின்குத்து, வலிதீரும்.

நண்டு மாமிசந்தின்னல் , முதுகுவலிக்குப் பிரயோஜனமாம் ஆமை இரத்தத்தைக் கைகால் களிற்பூசினாலும் அதன்மாமிசந் தின்றாலும் மூளிவலி நீங்கும், மனிதனுக்குவலியுள்ள உறுப்புகளில் அதற்குரிகரான ஆமைஉறுப்பைக்கட்டினாலும் வலியடங்கும் முத்துச் சிப்பியையிடித்துக்கட்டினால் சூலைவலி மூளிவலிகள் தீரும். பிறை பிறக்க மூன்று நாளைக்குமுன் நட்டுவக் காலியைப்பிடித்து, ஒருபாத்திரத்திலிட்டு அதில் ஒரு இருத்தல் ஐய் துனெண்ணெயையூற்றி வாய்மூடி வைத்து, அந்த எண்ணெய் நட்டுவக்காலியின் மாமிசம், சத்துகளைக் கிருகித்தெடுத்துக்கொண்ட பின்னர் திறந்து குறித்த எண்ணெயை, முதுகுவலி தொடைவலி கட்குப்பூசினால் பிரயோஜனஞ் செய்வதில் சகிர்தமாயிருக்கும் சேப்பிள்ளை மாமிசத்தைக்கொண்டு ஒத்தனமிட்டு வைத்துக்கட்டினால் மூளிவலிகள் தீரும்.

பதினொன்றாவது பாபு முற்றிற்று,

பனிரண்டாம் பாபு.

குடலின் ஆராச்சிகளைக் கூறல்.

——:(*):——

ஒன்றாவது பசுல்

குடல்வலிகள் ஓங்கரிப்பு, சமியாக்குணம், குடல்மற்றைய சரீரக் குளிர்ச்சி, காந்தல், தாகம், தண்ணீர் குடித்தல் சிறுநீர் மிகுதமாதலாதியவைகளைக் கூறுதல்.

——:(:):——

இஸ்தூலத்திற்கு ஹெல்னா என்ற குளமாகிய குடல் இணக்கமாவதாலும், பிணக்கமாவதாலும்; அதன் இணக்கமும், பிணக்கமும் ஆனதாலே சகல வியாதிகட்கும் காரணமாகின்றது; குடல்தான். குடலின் வியாதிகள் ஷஹ்றவத்தால் கல்பியா, காதிபா, கதையான், ஷபவுல் காதிபா, என்று நான்கு வகையில், முதலாவதின் அடையாளம், வஜீபனத்தை இச்சித்தவனாய் வயிறு நிரம்பும் வரையில் தின்று, வளக்கத்திற்கு மாற்றமாய், விரைவிற் சமியலாகிக் கடினமாய் பசியுண்டாகி வஜீபனங் கிடைக்கும் வரையிற் பொறுதிபெறாமல் மறுபடியுந் தின்பான். அதன் காரணமாவது; குடலில் பித்த மதிகரித்தல், அதற்குப் பரிகாரமாவது.—எலுமிச்சம்பழத்தின் நீரைச் சருக்கரையுடன் குடித்தும், கோதம்புரொட்டியைத் தின்றும், மற்றைய குளிர்ச்சியான பதார்த்தங்களைத் தின்னுவதும், மற்றதுகளைத் தவிழ்வதும் குர்துரு, லவங்கம், முஸ்தக்காய், ஜப்தூனெண்ணெய் நான்கா இதுகளை ஒவ்வொன்றாய்க் குடித்தாலும் தீரும். சுரைக்காய், ஈத்தம்பழம், வகைகள்; குடல்வலியையுண்டாக்கும்.

இரண்டாவதின் அடையாளம்.—அதிக பசியன்றி, ஒருபிடி இருபிடி, வஜீபனத்தால் போதுமாகுவதும், கொடிய வேக்காளத்தால் சத்தியெடுக்க நாடுவதுமாம்.

அதன் காரணம்.—வாதக்கலவன். அதற்குப் பரிகாரமாவது.—சிறுக்காவாலும், சுடுநீராலும், அல்லது வாந்திசெய்து, பின்பு, புளிமாதளையைத்தொலி, சுளையுடனிடித்து வஜீபனமாய்த் தின்று, மற்றதை விலக்கிக் கொள்ளல் வேண்டும்.

மூன்றாவதின் அடையாளம்.—மந்திப்பும் எப்பொழுதும் ஓங்கரிப்பும்,வஜீபனத்தில் அறவேபிரியமின்றியும்,அல்லதுவஜீபனித்தால்வாந்தி

எடுக்க நாடுவதுமாம். அதன்காரணம்.—சிலேர்ப்பனக்கலவன். அதற்குப் பரிகாரமாவது.—சிறுக்காவாலும் தேனாலும், வாந்திசெய்து முன்போல் மாதளையைத்தின்றும், முஸ்தக்காய் மிளகு, காம்பு, சுக்கு, சமமாக்குஇதுகளில்லாவிட்டால்; நான்கா சீரகம், உப்பு, இவைகளை ஒன்றுசேர்த்திடித்துச்சூரணித்து, வெறும்வயிற்றிலும் சோறுதின்ன முன்னரும் பின்னால் நித்திரைக்குப் போகுநேரமுந் தின்றும், கோதம்பு ரொட்டியும், உறைப்புள்ள குழம்புந் தவிர மற்றதைத் தவிழ்தல்வேண்டும். இன்னும், சிலேர்ப்பனத்தாலும் சமியாக்குணத்தாலும் ஓங்கரிப்புண்டாகும். அது அதுகட்குத்தகுதியாக அதைத் தணிக்குமான அவிழ்தங்களைக் கொண்டு பரிகாரஞ் செய்தல் வேண்டும். ஓங்கரிப்பு மருந்தாவது.—"ஷம்மரைக் குளிர்ந்த நீரிற் குடித்தாலும், [illegible]யைச் சிறுக்காவுடன் தின்றாலும் நான்கை; அல்லது காம்பைத் தின்றாலும் பிரயோஜமாகும். மேலும் காம்புக் குடலைப்பலமாக்கி, ஓங்கரிப்பு, கடப்பானவாந்தி, சமியாக்குணமாதியவைகட்குப் பலன் கொடுக்கும். அவைகளுண்டாவதற்குக் காரணமாவது; மிகைப்பான சூட்டினாலேயாயிருக்கும். அவைகட்குப் புளிப்பு ஆவசியகமாம். சிறுக்கா, எலுமிச்சைநீர் இவைகளை வெறும் வயிற்றிற்குடிப்பதால் இணக்கமாகும்.

குளிரினால் சமியா குணமுண்டுபட்டால் நான்கா சுண்ணாம்புக் கீரைச் சூரணம், இன்னுந் தேன்போலுள்ள வரட்சியுள்ள சூடான பதார்த்தங்களைப் பரிமாறல் வேண்டும், இன்னும், சமியனுண்டாவதற்கு, மிளகு, வால்மிளகு, ஏலம் சமமாய்ச் சேர்த்து, அவையடங்கலின் இடைக்குச் சீனிசேர்த்துச் சூரணித்து ; சூட்டை யுடையவன் கொஞ்சமாயும், குளிர்ச்சி யுடையவன் ஒரு "குபுலாவும் "வெறும் வயிற்றிலும், உண்பதற்கு முன்னும், காலை, மாலையுந் தின்று வரவும்." இன்னும், உப்பைப் பொடித்து எலுமிச்சை நீரில்; நனைத்துத் தின்றாலும் சமியல் குணமுண்டாகும். இறைச்சி; செமியற்படாத இயல்புடையவனுக்குக் கெட்டியான பக்குவமாவது வெங்காயத்தை, இலேசாகத் தனிமையில் வேகவைத்து, இறைச்சியையுந் தனிமையில் வேகவைத்து இரண்டையுஞ் சேர்த்துத் தின்றால் இறைச்சி சமியலாகுந். தத்துவமுண்டாகும். இன்னும், சரீரம், குடல், குளிர்ந்ததற்கும், சமியனுக்குதவியாகி, வளக்கத்திற்கு அதிகமாய்த் தின்பதற்குபகரணமானதுமான ; இஞ்சிமுறபா செய்வதுபோல், மிளகுமுறபா செய்து; அதை; வெறும்வயிற்றிலும், சாப்பிட்டதின் பின்னும், சயனிக்கப்போகுமுன்னும், அதில் வெறும்

வயிற்றிலதிகமாயுந் தின்றுவருவதாம். பருத்திவிரையை இளநெருப்பில்வைத்து அதன்மேரில் சீனியைப் போட்டுறைசிப்பின்அதிகநீர்விட்டுக் காய்ச்சிக் குடித்தால் தீரும். கொடிமாதளை அல்லது புளிப்புமாதளையின் சுளை தின்றாலும், சந்தனத்தைப் பூசினாலும், சிம்சமைத் தின்றாலும், பருத்தி அல்லது கோவைச்சாறு அல்லது புளித்தமோர் குடித்தாலும், குடற்காந்தலை அடக்கும். பழயதையிர், பால், வெங்காயம், பூண்டு, தாகத்தையுண்டாக்கும். உடும்பு மாமிசந்தின்றால் மிகுந்தகாலம் தாகமற்றிருப்பான். தேன்; சக்திக்குங் குமட்டலை இலேசாக்கித் தாகத்தைத் தணிக்கும்.

[illegible]இன் அடையாளம்.—வஜீபனத்தில் ஆசையுண்டாகி, உண்டால்; கொஞ்சந்தின்று வயிறு நிரம்புமுன், நிரம்பிய பாவனையைக் காட்டும். அதற்குப் பக்குவமாவது.—சுடுநீர், உப்பு, சிறுக்காவால் வாந்திசெய்து, தேன் சருபத்தைப் பரிமாறல் வேண்டும். அதாவது; நுரைநீக்கிய ஒரு இருத்தல் தேனில்; முஸ்தக்காய், மிளகு, சுக்கு, வகைக்கொரு கிருஹத்திடை யெடுத்துச் சேர்த்துக் காய்ச்சிக் குடித்து வருவதுமன்றி, பறவை மாமிசம் ரொட்டி இவைகளைத் தின்று வருகத் தீரும்.

இரண்டாவது பசல்.

தண்ணீர் குடிப்பையும் அதன் வேளையையும் விதத்தையும்உண்பதையுங்கூறல்.

வஜீபனம்மேல், குடலில் விட்டிறங்கும் வரையில் தண்ணீர் குடிப்பது, தகாது. அதற்குப்பின்பாதிதாகந் தீருவதளவு. அதிகங்குடித்தால் குளிர்ச்சி சோர்வுதலுண்டாகி, ஆஸ்பதச்சூடுஅழுந்தி மறதியுடன் தாகத்தை வருத்தி, சடலமிலேசாகிப்பார்வை மங்கும், வஜீபனத்தினிடையிலும், பிறகு கடையிலுங் குடிப்பதும் சமியலை விலக்கி மேற்குடலினுயர்திதி சமியல் செய்யுந்தத்துவத்தைத் தறித்துவிடும் கனிகள், சூடுள்ள வஜீபனங்கள், கசப்பானதுகள், மற்றதாகத்தை வருத்தும் வஸ்துகளைத்தின்ற பின்னும் ஜிமாஃ முதல்வனகிரிகை கட்டுப்பின்னும் குளிர்ந்த நீரைக்குடித்தால், ஹலாக் கைவருத்தும் கிணற்று நீரையும் ஆற்றின் நீரையுங்கலந்து குடிப்பதுதகாது.

தண்ணீர்குடிக்கும்விதம்:—நீரைக் கொஞ்சமாய் சுவைத்திழுத்து நிறுத்தி பின்பு கொஞ்சம் பின்பு கொஞ்சமாய் மூன்று முறையில் இவ்வாறாய் குடிப்பதில் ஒவ்வொரு முறையின் துவர்க்கத்தில் பிஸ்மில்லாஹ்“என்றுங்கடைசியில் அல்ஹம்ந்துலில்லாஹ்” என்றுஞ் சொல்லிக் குடிப்பதினால், சுகமும் ஈரல் குலைவலி அணுகாதென்றும் நபிகணாயகந் திருவுளமாயிருக்கின்றார்கள்.

சுகமான காலத்தில் தீன் உண்பனையைப் பேணிச் சரீரத்தைக் காத்துக்கொள்வதும்; வியாதியுள்ள காலத்தில் மருந்து குடிப்பதிலும். நல்ல புத்திமான், தன் நபுசுக்கு வயித்தியனாகும்.

சரீரத்துக்குபத்துக்காரியம் ஆவசியகமாகும்அதாவதுதீன்குடிப்பு உச்சம்பல் ஒடுங்கல் நித்திரை முழிப்பு ஜிமாஃ, காற்று நபுஸானிய்யத்தாகிய அவாரிது உறுப்புகளின் ஆராச்சி இவைகளில் முதலாவது.—தீன் அதில் அறவே வயிற்றை நிரம்பாமல் குறைக்கின்றது. விபரம்.—வயிற்றில் மூன்றிலொருபாகம் வஜீபனமும் ஒருபாகங் குடிப்பும் மற்றொருபாகம் மூச்சுக்காகவிட மிட்டிருப்பதுமாம். இவ்வாறு செய்துவருவது சரீரத்துக்குத்தகுதியான கதறுவாம் வழக்கம் போல் காலைமாலை தீன்தின்று வருவதுகுற்றமன்று நல்லாகமென்று, உட்கார்ந்து“பிஸ்மில்கொண்டு துடங்கி அல்ஹம்ந்துலில்லாஹி” கொண்டு முடிப்பதும் வஜீபனஞ் சமியலாகு முன்னர் அதற்குமேல் வஜீபனத்தைத் தவிழ்வதும் வேண்டுமாயிருக்கும்.

ஹக்கமாக்கள் ஹிக்மத்துடைய வார்த்தைகளில் நாலாயிரம்வார்த்தைகளைத்தெரிந்தெடுத்து அதைநானூறாய்ப்பொறுக்கிப்பின்னதைநாற்பதில் தெளிந்தெடுத்து அவையடங்கலையும் நான்குவார்த்தையாய்த் தெரிந்து வடிவிறுத்துக்கொண்டதாவது;பெண்பிள்ளைகளை நம்பாதே வயிற்றின் சக்திமேற் சுமத்தாதே மிகுந்தபொருளால் மருளாதே பலன்கொடுக்கும் இல்முகளைவிட மொழியாதே, இந்நான்கு முனக்குப்போதும்.

ஒரேகுணத்திலொற்றுமையான இரண்டு வஜீபனமாவது.—முட்டையும் மாமிசமும் கூட்டிலும், மீனும் இலந்தப்பழமும் குளிர்ச்சியிலும் கனிகளும் பாலும் சீதளத்திலும் பயறும் பருப்பும் வாட்சியிலும்; ஒற்றுமையாயிருக்கின்ற அவைகள் ஜோடியாயும் பற்களால் மெல்லிபலமான வஸ்துவையும் புளிப்பானதுகளையும்,மீனைப்பாலுடனும்சுட்டதைச் சுமைத்ததுடனும் பரிமாறுவதைத் தவிழ்ந்துக் கொள்ளல் வேண்டும்.

வஜீபனத்தின் ஒழுங்கு களிகள் கிளைபலகாரம் மாமிசமாக விருக்கும்.

சிலேர்ப்பன முடையவர்க்ட்குக் கசப்பானதும் பித்த முடையவர்கட்குப் புளிப்பானதும் ஐயமுடையவர்கட்கு நெய்ச்சத்துடையதும் அதுகளிற் கடைசி ஹல்வாவுமாயிருக்கும் இரவையில் தின்பதும் பார்வையுடையவனைப் பெலவீனமாயும் இல்லாதவனைத் தங்கடமாயுமாக்குவிக்கும் மூன்றுகாரிய மிருப்பவர்களைத்தவிர—அதாவது பசியின்பேரில்தின்பதும் தின்பதைக் குறைப்பதும்தின்றபின் கொஞ்சநடப்பதும் அதிகமாகத் தின்றதினாலே தங்கட மேற்பட்டால் திபரமாய்ச் சுடுநீரருந்துவான். இன்னும் சுடுநீராலும் விரல்போற் கொற்றதாலும் வாந்தி எடுத்துக் குடல் துப்புரவாகுவதைப் பிற்படுத்தான் அன்றைபத்தினம் வஜீபனத்தை விட்டுப் பொறுதி செய்வான் வாந்தி யெடுப்பது கஷ்டமானால் கொஞ்சமுலாவி(உலாத்தி) நித்திரைசெய்து வஜீபனஞ் சமித்து, சிறுநீர்நிறமாய் இறங்கும்வரையிற் காலை வஜீபனந் தின்கான்.

மூன்றுவது பசல்.

குடலைப் பெலவீனமாக்குவதுகள், பெலவீன நீக்குவதுகள்—குடலில்சமியலாகிறது அதன் கெடுதிபசியுண்டாகிறது அதை அடக்குகிறது அதில்மண்ணாசை நீங்க மற்றவைகளைக் கூறல்

கத்திரிக்காய், ஹம்க்காவுக் கீரை, லவங்கப்பட்டை, குந்துருக்கம், கராவியா, குளிர்ந்த நீர், இரும்பு நூர்ந்தநீர், கராம்பு, மாதளை வகைகள் குடலைப் பெலமாக்கும் கொடி முந்திரியில் தலைப்பழமும், சுடு தண்ணீரும், மிருதமாய், உட்கொண்டு வந்தால் குடலைப் பெலவீனமாக்கும்.

குந்துருக்கம், சுன்னம்புக்கீரை, மற்றக் கீரை வகை, மிளகு, சிற்றரத்தை, கடுக்காய் வகைபிருக்கள், சமியலாக்கும் மருந்துகள்.

முள்ளங்கி, அபீயூன், கனத்த வஜீபனங்கள் குடலிற் சமியலாவதைக் கெடுத்துத் தாமதப்படுத்தும். கொடிமுந்திரி கிராது, மிளகு முஸ்தக்காய், சிற்றரத்தை, லவங்கம், வெங்காயம், பருசக், பசியை யுண்டாக்கும். குங்குமப்பூ, எள் வகைகள் பசியை விழக்காட்டும் வழக்கத்துக்கு விரோதமான, தாழ்ந்த கலவன் குடலிற், சேர்ந்தாலும் கெர்ப்பத்தில் ஹைறு சேர்ந்துவிட்டாலும் சிலர், களிமண், மண், காரை, கரி, புளிப்பு, உறைப்பு உலர்ந்தவண்க வஸ்துக்களை இச்சிப்பார்கள். அதற்குப் பக்குவம்.—அந்தக் கெட்டக் கலவனை நீக்கும் சருபத்துகளைக் குடிக்கவேண்டும்.

இன்னும்; நற்சீரகம், நான்காவை, வெறும் வயிற்றில் மெல்லுவதும், அதைச் சூரணித்து, வெறும் வயிற்றிலும், வஜீபனித்தபின் தின்பதும் அந்தக் கெடுதியான ஆசையை விலக்கும். ஆதமலைஹிஸ்ஸலா மவர்களை மண்ணிற் படைக்கப்பட்டதால், அவர்கள் பிச்சளம், மண் தின்பதை ஹறுமாக்கப்பட்டது. அதைத் தின்றவன் தன்னைக் கொலை செய்யுதற் குபகாரஞ் செய்தவன் போலாம். தின்ற மண்; கடுகளவு கல்பிலிருக்க மவுத்தானவனை நரகத்திற் குப்புறப் போடப்படும். மேலுங் கள் குடித்தவனைப்போல் வாதனை செய்யப்படும். ஆனதால் மண் தின்னாதீர்களென்று நபிகணாயகந் திருவுளமாயிருக்கின்றார்கள். நற்சீரகத்தை, சிறுக்காவில் புளிக்கவைத்து நிழலுலர்த்தி இடித்துச் சூரணித்து, தின்றுவந்தால் மண் வகைகளைத் தின்னுதற்கு எழும்பும் ஆசையைத் தறிக்கும். இன்னமும், ஹம்காவுக் கீரையைத்தின்றாலும் கல்லெண்ணெயைக் குடித்தாலும், மண்ணாசையைத் தறிக்கும்.

நான்காவது பசல்.

வாய்வு, குடலூறல், இரைச்சல், வலி, ஏப்பம் குன்ம மாதியவைகளைக் கூறல்.

மாதளைத் தொலியைத் தண்ணீரில் வற்றக் காய்ச்சி வெறும் வயிற்றிற் குடித்தால் வயிற்றூறல் தீரும். குதிரை மாமிசம் வாய்வைத் துரத்தும்.

குடலூற லுண்டாவதின் காரணம்:—வஜீபனமாயும், அதைச் சமியலாக்குஞ் சூடு பெலவீனமா யிருக்கின்றததாயும். இன்னும் ஐயக் கலவனும்:— ஈரல் குலைவியாதிகளாயும், சரீரத்தின் வெளிக் குளிரா

யும் மிகுத்த தண்ணீராயுமிருக்கும். வயிற்றிரச்சலுக்கு தாழிணைவே காரணம். இதற்குப் பக்குவம் ஊற்றமுடைய வஜீபனத்தாலுண்டானால், அதைவிட்டு விலகி, பஞ்சு பொதிந்த மெத்தையின்பேரில் வயிற்றைப் படச்செய் துறங்குவான். குளிர் வாயுவாலுண்டானால், வாய்வை போக்கும் வஸ்துக்களால் மருந்து செய்வான். இன்னும், இஞ்சி முறபா, நான்கா, மிளகு கருஞ்சீரகம், ஒவ்வொன்றையும் வஜீபனத்துடன் புளங்கத் தீரும். இன்னும் சீரகம், ஒரு குபுலா, முஸ்தக்காய், அரைக் குபுலா, இதை வெறும் வயிற்றில் மூன்றுநாள் தின்றால் இரைச்சல் தீரும். சுன்னாம்புக் கீரையைத் தண்ணீரில் வேகவைத்து, தெளிவிறுத்து, வெறும் வயிற்றிற் குடித்தால் வயிற்று ஊறல், வாய்வு இரைச்சல் வயிற்றிலுள்ள பூச்சிகள் தீரும். அனீசூன், ஷர்பத்து, லபான் ஷஹ்றிய்யு, கராவியா, சர்க்கரை, அரிசித்திப்பிலி, வெள் வெங்காயம், இவைகள் ஒவ்வொன்றும் பலன் செய்யும். இன்னும், கீரை, பருப்பு, மாதளை, மொச்சை, வெங்காயம், குந்துருக்கம், உதுருஜாசுளை ஒவ்வொன்றும், மிகுதமாக்கினால், வாய்வு, ஊறல், பித்தமிவைகளை வருத்தும். செம்மறியாட்டின் பால், இரைச்சலை யுசுப்பும். கட்டு, சில்ந்தியின் வலியைப்போல், வயிற்றிலுண்டானால்; மூன்று நாள் தேனும் பாலும், மூன்று நாள் தயிருங் குடிக்கவும். இன்னும் "ஜலாபு" குடித்தாலுந் தீரும்.

இன்னும், சுடுதண்ணீர், உப்பு, அரிசித்திப்பிலி சிற்றரத்தை, சர்க்கரை, கறுப்புக் கடுக்காய், சுக்கு, லவங்கம், கராவியா, ஷாம்ரு, இதுகள் ஒவ்வொன்றுஞ் சிலேர்ப்பனத்தைத் தறித்துக் குடலைத் துப்புரவுப் படுத்தும். தேங்காய், ஷர்பத்து, பெருங்காயம், கிராது, அத்திப் பழம், இதுகள் ஒவ்வொன்றுங் குடலுக்குத் தங்கடமாயும், சமியல் கெடுதியாயுமிருக்கும்.

குடலில் வாயுவுண்டானால் ஏப்பமிடுவது ஆவசியகம். விடாவிட்டாலும், மிகுதமாய் விட்டாலும், வஜீபனஞ் சமியலாகாது. புளிச்சேப்பம்.—குடலிற், குளிர், சிலேர்ப்பனமும், மிகுத்தவஜீபனம், குளிர்ச்சியான வஜீபனம், இந்நான்கு கருமம், உண்டானால், ஏப்பம், புளிச்சேப்பமுண்டாகும். பச்சைக்கொத்து மல்லி, சிற்றரத்தை, கிராது தின்றால் ஒவ்வொன்றும் அந்த ஏப்பத்தை யடக்கும். நான்கா, காரம்பு, முஸ்தக்காய், குந்துருக்கம், சுன்னாம்புக் கீரை, சதாபு, ஒவ்வொன்றும் ஏப்பத்தை யுசுப்பும். ஒரு உளுந்து, பயறளவு, அபியூன் தின்றாலுங் குடித்தாலும் வெளியிற் பூசினாலும். வயிற்றுவலிக ளடங்கலுக்கும் பலனாகும்.

பெருங்காயத்தைத் தின்றாலும். சீரகத்தைத் தின்றுவந்தாலும் சுக்குத்தின்றாலும், சுடுதண்ணீர் குடித்தாலும், நான்கா, அனீசூன், தின்றாலும், வயிற்றுவலியை அடக்கும். குன்மம், அதாவது குடலில் நடக்குகின்ற ஆவியை அடக்குகிற உறைந்து கட்டுண்ட வாண்டவாய்வு. இது உசும்பினவுடன் அடித்துமோதி விழுந்து, ரூஹா வெளியாக முடுகும் வரையில் கஷ்டமடைவான். அது சூடாயும் குளிர்ச்சியாயுமிருக்கும். சூட்டினடையாளமாவது.—நித்திரையை விட்டு முழித்தவுடனும், சூடானது, நஞ்சானதைச் சந்தித்தவுடனும்; உண்டானால், சூட்டினாலுற்பத்தி. இதுடையவன்; சூடானதுகளைத் தவிழ்ந்து வெறும் வயிற்றில் பச்சைக்கற்றாழையைத் தின்று வரத்தீரும். குளிர் மேகம், மழை, குளிர்காற்று, சந்தித்தவுடன் உண்டானால் குளிரினாலுற்பத்தியாகியதினடையாளம். இதுடையவன்; குளிர்ச்சியானதுகளைத் தவிழ்ந்துக்கொண்டு, "சக்தரி". கற்றாழை, சாளியல், மிளகு, சுக்கு சமமாயெடுத் திடித்துச் சீனியுடன் சூரணித்து வெறும் வயிற்றிலும் தங்கடம் வந்தபோதும் தின்றுவரத்தீரும்.

இன்னும் விரைநீக்கிய முந்திரியப்பழத்தில் மூன்றுபிடியை ஆவின்நெய்யிற்குழைத்துத்தின்றாலும், றைஹான் இலையில் ஏழுஇலையைத்தின்றாலும், ஒருகளஞ்சி சிற்றரத்தைத்தூளை வென்னீரிற் குடித்தாலும் முத்தின "கிழட்டு" சாவல் சால்னாவைக்குடித்தாலும் ஹருமலைக் குடித்தாலும் அல்லது தேனிற்குழைத்துதின்றாலும், சுக்கை மிளகு தண்ணீரிற் குடித்தாலும், பசுமாட்டுச்சாணியைச் செம்புப்பாத்திரத்தில்போதுமான எண்ணெய் விட்டுச்சமைத்து ஆறியபின் தொப்புளின்கீழ் அடிவயிற்றில் இடுப்பு வரையிற் சேர்வையாகக்கட்டினாலும் மேற்படி எண்ணெயைப் பூசினாலும், நான்காவைப்பொடித்து நுரை நீக்கியதேனிற் குழைத்துக் குடித்தாலும், ஆட்டுப்புழுக்கையைச் சிறுபிள்ளையின் சிறுநீரிற்சமைத்து வயிற்றில் வைத்தாலும் சவுக்காரத்தைப்பின் துவாரத்தில் அமைத்துக்கொண்டாலும், பிறந்தபிள்ளையின் தொப்புள் அறுபட்டதை மோதிரக்கின்னியில் வைத்தணிந்துக்கொண்டாலும், கோழிச்சால்னாகுடித்தாலும், இன்னும் சீரகம், கராவியா. மிளகு சுக்கு, லவங்கம், சிற்றரத்தை, குங்குமம், பெருங்காயம் சுன்னாம்புக் கீரை இவைகளிலொவ்வொன்றை வஜீபனத்துக்கிடையில் தின்றாலும், கொண்

டைக்குருவியை சமைத்துத் தின்றாலும், குன்மவலி. கொடியவாய்வு, களைப்போக்கி வயிற்றை இளகலாக்கும் மனிதனின் காய்ந்த மலத்தைப் பொடித்துக்கடலைப் பிரமாணம் சிறுக்காவில் அல்லது கண்ணீரிற்கலக்கி குடிப்பாட்டினால் குன்மந்தீரும். மேற்படி மலத்தைக் கடலைப் பிரமாணம் கள்ளின் சிறுக்காவுடன் குழைப்பி குடிப்பாட்டினால், குன்மம் நீர்க்கடுப்புக்கும் பிரயோசனமாகும். தலைச்சன் ஆண்பிள்ளையின் பல்லை, தங்கம், வெள்ளி, மோதிரத்தின் முக்காலிக்கித்தாழால் வைத்துகையிலிட்டுக் கொண்டால் குன்மமுண்டாகாது. பன்றி ஈரலையுலர்த்திப் பொடித்து, குன்மம் பக்கவாதமுள்ளவனுக்குக் குடிப்பாட்டினாலுடனே நீங்கும். ஓநாய்த் தொலியிலுட்கார்ந்து வந்தால் குன்மந்தொடாது. மான்குட்டி மாமிசந்தின்றால் குன்மத்துக்குப் பலனாம். பன்றி நரம்புகளைக் கரித்துப் பொடித்துத் தேனிற்குழைத்து வயிற்று வலி ஊறறம் குடலூற்றம், உள்ளவர்களுக்கு களஞ்சி இடைகுடிப்பாட்டினால் வலுப்பமான பலன் கொடுக்கும். கழுத்தில் தாரை விழுந்தகாகத்திறைச்சியைச்சுட்டு தின்றால் குன்மத்துக்குப்பலன் கொடுக்கும். சமியாக்குணம் வயிறு நிரம்புதலாலுண்டான குடல் வலி, வயிற்று வலியால் மவுத்து முடுகினவன்பேரில் கடல்குதிரை பல்லைக்கொளுவிவைத்தால் பலன் கொடுக்கும். கடினமான குன்மவலியுடையவன் தூங்குகிற நாயை எழுப்பிவிட்டு அந்த இடத்தில மோளவுமுடனே நீங்கும். அந்த நாய் செத்துப்போம். செய்துபார். காட்டு மாட்டின் மூளையைத்தின்றால், குன்மமுடையவனுக்குத் துலக்கமான பலன்கொடுக்கும். மரங்கொத்திக் குருவியின் தசையைச்சமைத்துத்தின்றால் குன்மத்துக்குப்பலன் கொடுக்கும். குழிநரியின் நுரையீரலை யுலர்த்திப்பொடித்துக் குடித்தால் வாய்வுபறிதலை விலக்கும். ஓநாய்ப் பித்தைக் குடித்தால் வயிற்றுச் சோர்வுதலைக்கேட்கும், ஆமை இரத்தத்தை யுலர்த்திப் பொடித்து, ஒருவாகனத்தின் ஜீனிற் பொதிந்து அதன்பேரி லேறினவனுக்குக்காற்றுப்பறியும். முசல் புழுக்கையை வெந்நீர்ப்புதையில் புகைத்தால் புகையை வாசித்தவிடத்தி லுள்ளவனுக்கெல்லாம் காற்றுப்பறியும். காற்றுள்ள இரவில், மனிதன் கொழுப்பை விளக்கெரித்தால் அக்காற்று அடங்கும். மாதவிடைத் துண்டைக்கப்பற், (புறதலை பின்னால் கட்டினால் காற்று புகுதாது. ஒரு திருஹத்திடை எறும் முட்டையைக்குடித்தா லடக்கமுடியாத காற்று (குசு) பறியும்.

ஐந்தாவது பசுல்.

எது களிப்பு.

(*)

எதுகளிப்பென்பது.—கடினமான உசும்புதல், அல்லது திமரென்றுண்டாகுஞ் சத்தியால், அல்லது, மந்தித்ததின் பிறகடியில் குடலிலுண்டான கடின வாய்வினால் அல்லது குளிரால் உற்பத்தியாகும். இன்னும். பாலர்கட்கு; பால் குடித்த பிறகடியா லதிகவேளைகளிலுண்டாகும்.

அதற்குப் பக்குவம்:—சத்தியெடுப்பது, அல்லது. ஒரு நாழிகை வரையில் மூச்சடக்கி இருப்பது. இதுக்குச்சமதியான அவிழ்தமேயில்லை இன்னும் அப்படி எதுகளிப்பையடக்குவதாலும். கடினதூக்கத்தினாலும், குளிர்ந்த நீரை முகத்திற் றெளிப்பதாலும். நடப்பதாலும், மூச்சைப் பிடிப்பதாலும், நீள நித்திரையினாலும் அடங்கும். இன்னுங் குளிர்ந்த நீர் குடிப்பதாலும் கறுவாப்பட்டையை முஸ்தக்காயுடன் காய்ச்சிய நீரைக் குடிப்பதாலும், குந்துருக்கம், ஏலம், சமமிடைசேர்த்திடித்துக் கொஞ்சஞ் சருக்கரை கலந்து தின்பதினாலும் அடங்கும். சுத்தத் தண்ணீரையுங் குளிர்ச்சியானதுகளையுந் தவிழ்ந்துக் கொள்ளல் வேண்டும். வல்லாஹு அஃலம்.

ஆறாவது பசுல்.

தொப்புள் வலி.

தொப்புள்வலிஇரண்டு வகைப்படும்:—அதாவன, அதன்நரம்பு வலியும், அதன் சோர்வுதலுமாயிருக்கும். அதன்பேரில் கையைவைத்தால், நரம்பு மிக ஆக்காமாய் துடிப்பது தெரியும். விரலை நடத்தினால் சப்தமும் இரைச்சலுங் கேட்கும். அதனின்காரணம்:—உசும்புதலும் வயிறு நிரம்பிய பின் புரளுவதுமாம்.

அதற்கு பக்குவம்:—சூடுள்ள ரொட்டியைத் தொப்புள் மேல் வைத்து அதன் பேரில் உடையைக் கட்டிக்கொள்கிறதா யிருக்கும்.

இவ்வாறு காலை மாலை செய்தாலும், புளிப்பு மாதளையைச் சமூலமுபிடித்துத் தின்று கோதம்புக் கஞ்சியைத் தேனுடன் தின்றாலும் தொப்புள்வலியடங்கும். தொப்புள் அதன் அடையாளமாவது.—இரைச்சலும் கனதியும், வலம் வாட்சியும் சிலவேளை அது மஞ்சணிப்பாய் வெளியாவதும், முதுகு வலியுமாயிருக்கும். அதன் பரிகாரம்:—காலையில் பள்ளாட்டுப்பாலுடன் சோளக்கூழையும் வெங்காயத்தையும், அவ்விதமாக இரவாகுமுன் மாலை வஜீபனமும் தின்று ஒரு வாரம் கீரையைத் தேனில் சேர்த்து ஒவ்வொரு நாளும் எழு பிடி தின்று வரல்வேண்டும். இன்னும் ஆவின்பால் ஆட்டுப்பா லிவைகளைக் கறந்த சூட்டுடன் குடித்தாலும் நான்கு மஞ்சட் கடுக்காயை யரைத்து தயிரில் குழைப்பிக் குடித்தாலும், பறனீ அல்லது யமானியப்பி; சத்தம் பழந் தின்றாலும் தொப்புள் வலியும் முதுகு வலியுந் தீரும். இன்னும் மாதவிடைத் துண்டைக்கரித்து அச்சாம்பலும் கொத்து மல்லியுஞ்சரி இடையாய்த் தண்ணீரிலரைத்து தொப்புளின் சூழாலே பூசினால் கெர்ப ஸ்திரி தொப்புள்வலி நீங்கும். இதைப்பிள்ளைப்பெற்றவுடன் உண்டான வலியுள்ளவளுக்குச் செய்தாலும் பலன்கொடுக்கும். பழந்தின்னிவௌவால் கண்ணையுலர்த்திப்பொடித்துச் சம்பங்கியெண்ணெயிற் குழைத்து, நிபாஸானையுடையவன் தொப்புளில் தேய்த்தால் பலன்கொடுக்கும்.

ஏழாவது பசுல்.

விஷபாண்டு ஊது காமாலை.

விசபாண்டு ஆகின்றது:—வயிறும், மற்றைய உறுப்புகளும், ஊதி வீங்கி, எப்பொழுதும் தண்ணீர் தாகமுண்டாய்க் கொண்டிருப்பது. அதில் லஹ்மீ தபலி, ஜாக்கீ, என்று மூன்றுவகையுண்டும். வீக்கத்தில் விரல் கொண்டழுத்தவு மவ்விடம் முங்கி, ஒருநாழிகைக்குப் பின்னுலேயே யொழிய அமுங்கிய தொலியுயராதது; லஹ்மீயினறி குறி இது இலேசானது. வயிற்றில், கைகொண்டு தட்டினால் சப்தங்கொடுப்பது; தபலியி னறிகுறி இது முதலாவதிலுங் கடினமானது. வீக்கமதிகமாய் வயிறு குண்டாளச் சட்டி போல் விக்கமாயிருப்பது, ஜாக்கியி னறிகுறி இது மிகக்கெட்டது.

இதுகளுண்டாகுங் காரணம்:—வாதத்தின் பக்கத்தில் சிலேப்பனந் திரும்புவதாம். இதுக்குப் பக்குவம்:—ஓரிரவு பகல், கொத்து மல்லியை ஊறவைத்து, தெளிவிறுத்து வெறும் வயிற்றில் குடித்து, கொத்து மல்லியைச் சிறுக்காவுடன் சரீரமுழுதும் பூசி; வித்துவகையில்லா வஜீபனந்தின்னல் வேண்டும். மூன்று நாள் சிலேர்ப்பனங்கட்டுவதுமாம். இன்னும் வெள் வெங்காயமும் தேனும் வெறும் வயிற்றில் புளங்கி, கோதம்புக்கூழும், பறவைமாமிசமுந் தின்று வரத்தீரும். இன்னும், சபுஹா, துற்று, அஸ்று, இந்த மூன்றுவத்தும் ஒவ்வொரு நாளிலும் நாற்பதுநாள் மட்டும் தொடராக, ஒட்டகை பாலையும் சிறுநீரையும் வஜீபனக் குடிப்பாயும் புளங்கிமற்றதுகளை விட்டுவிட்டாலும் இரும்பு தூர்ந்த நீரைக்குடித்து வந்தாலுந்தீரும். இந்த வியாதியுடையவன் விரைக் கொட்டையைப் பார்த்து தமர்வாய்வு அதிகப் பீத்தலுடையனாயிருந்தால் மருந்து பலன் கொடுப்பது. கஷ்டம். இல்லாவிடில் நலம். இன்னும், அனிசூனைப்பொடித்து குடித்தாலும், பழைய தயிர்க்கட்டியைப் பொடித்துத் தண்ணீரிற்குழைத்து வீக்கத்தில் கட்டினாலும், உப்பும், சீனுங்கலந்து அரைத்து வீக்கத்திற் பூசினாலும், புரு எச்சத்தைச் சிறுக்காவிற் கலந்து சரீரத்திற் பூசினாலும் விசபாண்டு தீரும். தண்ணீரில் பெருங்காயத்தை யரைத்து வெறும் வயிற்றிற் குடித்து நசியம் பிழிந்தாலும். சீரகமும், கராவியாவும், சமமாய் வெறும் வயிற்றிற் குடித்தாலும் சரீரவூறல், சரப்பு இவைகள் தீரும்.

பனிரெண்டாம் பாபு

முற்றிற்று.

பதிமூன்றுவது பாபு.

பிற்றினது ஆராச்சிகளைக்கூறல்.

ஒன்றுவதுபசல்

மலக் கட்டு.

மலங்கட்டிப்படுமானால், தலைவலி, கல்புவலி, பிடரிநரம்புவலி,மற்ற நரம்புகளின்வலி இவைகளை வருத்தும் ஆனதால்; ஆறுநாழிகைக்கு முன், வஜீபனம் வெளிப்பட்டாலும் இருபத்துநான்கு நாழிகைக்கதிகமாய் வயிற்றிற்றரிபட்டிருந்தாலும், பிரயோசனமல்ல, தங்கடத்தை வருத்தும் அதற்குப் பக்குவம்.—குந்துருக்கத்தைப்பொடித்துநீருடன் குடித்தாலும் விரை நீக்கிய முந்திரிப்பழத்தை அரைத்துதேனில் மத்தித்துத் தின்றாலும், எலிப்புழுக்கை உப்பு, வெங்காயம், சவுக்காரம், இவைகளி லொன்றைப் பொதிந்துக்கொண்டாலும்பளிங்கியை அரைத்துக் கெட்டியாகும் வரையிற் காய்ச்சி தொப்புளிற் சேர்த்தாலும்மலக்கட்டு நீங்கி வயிறிளகலுண்டாகும் வல்லாஹு அஃலம்

இரண்டாவது பசல்

வயிற்றை இளகலாக்கி வைத்தல்

முள்ளங்கியை வஜீபனத்துக்குப் பின் தின்றாலும், செம்மறி, பள்ளை, யாடு, பசுமாடு இவைகளின் பாலைக் குடித்தாலும், உப்பு, கரும்பு, சர்க்கரை, கற்கண்டு, நுரை நீக்கிய தேன், பருத்திக்கொட்டைப் பால், இதுகளை யுட்கொண்டாலும், வெங்காயம் வெள் வெங்காயம், அத்திப்பழம், பச்சை முந்திரிப்பழம் தின்றாலும், வெந்தயத்தைத் தேனுடன் அல்லது, பாதாம்ம தேனுடன் சமைத்துத்தின்றாலும்,குடித்தாலும், கொழுத்த மாமிசங்களைத் தின்றாலும், பாக்கைப் பொடித்து சர்க்கரையுடன் தண்ணீரிற் குடித்தாலும் வயிற்றை இளகலாக்கும். இன்னும், தொலி, கொட்டை நீக்கிய மூன்று உவாக்குப் புளியை, மூன்று உவாக்கு சர்க்கரை ஐந்து திருஹத்திடை சுண்ணமக்கி, ஐந்து திருஹத்திடை மஞ்சள் கடுக்காய், இதில் பித்தம் சிலேர்ப்பனம் நீங்க

நாடினால் கடுக்காயும், ஐயம்நீங்க நாடினால் கருங்கடுக்காயும்,கொட்டை நீக்கி இடித்தும், நோயுள்ளவன் சரீரம் இளைத்திருந்தால் சுண்ணமக்கியும் கடுக்காயும், மும்மூன்று திருஹத்திடையும் சேர்த்தடங்கலையுமோர் பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் மிதக்கச்சேர்த்து இள நெருப்பில் வேகவைத்துக் கொதித்து நீர் சுண்டி வற்றிய பின் இறக்கித் துணியால் தெளிவிறுத்து ஆறவைத்து வெறும் வயிற்றிற் குடிக்க நல்லாக வயிறிளகும். வயிறிளகியபின் பிரயோஜன முண்டானதற்கு அடையாளம்:—அதிக தாக முண்டாகிறதாயிருக்கும். அப்பொழுது ஒரு இரவு பகல், சென்ற புளித்த மோரைக் குடித்து வயிற்றின்கலை நீக்கினால் தாகமடங்கும். பின்பு, பறவைக்கறி, மாமிசம்,ரொட்டி இதுகளை யுட்கொள்ள முக்கிய பலன் கொடுக்கும்.

பித்தத்தைத் தணிக்க; கெட்டுப்போன திரைந்த பாலினுள்ள தெளிந்த நீரும், புளியும் சர்க்கரையுடன் இரவில் சளிக்கவைத்து ஏழு நாள் காலையில் வெறும் வயிற்றிற் குடிக்கவும். எலுமிச்சைப் பழமும் தேனுங் குடித்தாலும் பலனும் தீராவிடில், கொட்டை நீக்கி இடித்த மஞ்சள் கடுக்காய்த்தூள் ஐந்து திருஹத்திடையும் சுண்ணமக்கித்தூள் இரண்டு திருஹத்திடையும் தேனுடன் வெறும்வயிற்றில் தின்றால் கெட்டியாய் வயிறிளகலாகும். அதை நிறுத்துவதற்குமேற் கூறிய படிக்குச் செய்யவும்.

வாதத்தைத் தணிக்க; ஏழுநாள் வரையில், வெறும் வயிற்றில் ; புளித்த சிறுக்காவைக் குடித்து, புளிமாதளை போலுள்ளதைத் தின்று, மற்றதை விலக்கிக்கொள்ளத் தீரும். தீராவிடில் ; இரத்தங் குத்தி வாங்கி, முற் கூறியபடி பரிமாறிவரத் தீரும்.

சிலேர்ப்பனத்தைத் தணிக்க ; உரித்த பூண்டை நோக அரைத்துத் தேனுடன் ஏழுநாள் மட்டும் வெறும் வயிற்றிற் றின்று, கோதம்பு ரொட்டி, ஆன்பாட்டு மாமிச மிவைகளைச் சூட்டுடனும் உறைப்புடனுந் தின்று மற்றவைகளை நீக்கிவரத் தீரும். தீராவிடில் ; கொட்டை நீக்கி இடித்த கடுக்காய்த்தூள் ஐந்து திருஹத்திடையும் சுண்ணமக்கித்தூள் இரண்டு திருஹத்திடையும், தேனுடன் வெறும் வயிற்றில் தின்றால் லேசாய் வயிறிளகும். பின்பு முற் கூறியவண்ணம் பரிமாறி வரவும். யத்தைத் தணிக்க; நுரை நீக்கிய தேனும், நெய்யும் நெருப்பில் காய்ச்சி, அதில் ஆவின்பாலைக் கறந்து வெறும் வயிற்றில் ஏழுநாள்வரை

யிற் குடித்து, மற்றதைத் தவிழ்ந்துவரத் தீரும். தீராவிடில்; கொட்டை நீக்கி இடித்த கருங் கடுக்காய்த் தூள் ஐந்து திருஹத்திடையும், சுண்ணுடக்கித் தூள் இரண்டு திருஹத்திடையும் தேனுடன் வெறும் வயிற்றில் தின்றால் வயிறிளகும். பின்னர் முன்கூறியபாவனையாய்ச் செய்து வரவும்.

மூன்றாவது பசுல்.

வயிற்றோட்டம்.

வயிற்றோட்டத்திற்குக் காரணமானது; வயிற்றிலதிகச் சூடுண்டாவதாயிருக்கும். அதில்; சூட்டுடன் சீதளமுண்டாயிருந்தால், வெளியாகும். மலம் வெண்மையாயிருக்கும். அதற்குப் பக்குவம் சோளக் கூழைச் சிறுக்காவிலும் மோரிலும் இளகலாய்க் கரைத்து நெருப்பிற் சூடாக்கிக் கிண்டிச் சூட்டுடன் குடித்தாலுடனே நீங்கும். இவ்வண்ணம் மூன்று நாள் பரிமாறல் வேண்டும். சூட்டுடன் வரட்சியுண்டாயிருந்தால்;—வெளிப்படும். மலம்; சிவப்பாயிருக்கும். அதற்குப் பக்குவம்:—கோதம்புக் கூழையும், சோளக் கூழையும், பாலிற் புளிக்க வைத்து, வெண்ணெய்நீக்கி, நெருப்பில் சூடாக்கிக்குடிக்கத் தீரும். இன்னும், சபர்ஜலைத் தின்றாலும் வாத்து வயிற்றிலுள்ள கற்களைப்பொடித்து நீருடன் சேர்த்து, குடித்தாலும், செங்கால்நாரையின் இரைப்பெட்டியிலுள்ள கல்லைக் கட்டிக்கொண்டாலும், மயிலின் பித்தை சிக்கன்ஜபீன் அல்லது சுடுநீருடன் குடித்தாலும், தண்ணீருந் தேனுங் கலந்து குடித்தாலும், பேதி, வயிற்றோட்டம் போகும்.

நான்காவது பசுல்.

வயிற்று நழுக்கல்.

வயிற்றுக் கடுப்பு வுளைத்தலன்றி, வயிறு நழுகிக்கொண்டிருந்தால்; வெண்ணெயைப் போக்காமல் புளிக்கவைத்த ஆவின்பாலைக் குடித்தாலும், சரீரவலுவுள்ளவன் இரண்டு மாசாக்கயைப் பொடித்துத் தைரிற் சேர்த்துக் குடித்தாலும், முந்திரி விதையைப் பொடித்து மூன்று திருஹத்திடை சுடுநீர் அல்லது பச்சைத்தண்ணீரிற் குடித்தாலும் முட்டை

யைச் சிறுக்காவில், கனிய வேகவைத்து ஆறியபின்னர் உரித்து மஞ்சட்கருவைமட்டுந் தின்றாலும், ஓரிரவுபகல், சீரகத்தைச் சிறுக்காவிலூறவைத் துலர்த்திப் பொடித்துச் சுடுநீரிற் குடித்தாலும்; கட்டுப்படும். ஈரல்குலையினின்றும் வெளியாகும் இரத்தம் நழுகிக்கொண்டிருந்தால், ஒரு களஞ்சி அறபீபிசினைக் குளிர்ந்த நீரிற் குடித்தாலும் குந்துருவைப் பொடித்துத்தின்றாலும், சூடுள்ள நெய்யைக் குடித்தாலும், ஒவ்வொரு நாளும் வெறும் வயிற்றில் ஒரு குபுலா முஸ்தக்காவைப்பொடித்துத்தின்றுவந்தாலும், இரத்தந் தறிபடும்.

இன்னும் அனீசூனைப் பொடித்து குடித்தாலும், அரிசியைத் தின்றாலும், கடுக்காய் வகையில் ஒவ்வொன்றையும் பொடித்து நீருடன் குடித்தாலும், மிஸ்றுச்சீரகத்தைச்சிறுக்காவிலூறவைத்துத்தின்றாலும், அலைக்கைப் பரியாறி வந்தாலும், பறவை மாமிசங்கள் தின்றாலும், உத்துருஜாச்சுளை அல்லது மொச்சை தின்றாலும் வயிறு நழுக்கலைப் பிடிக்கும்.

நீண்ட நாளாக வயிறு நழுகிக்கொண்டிருப்பதற்கு, அருஜ்ஜைத் தின்றாலும், மொச்சைக்கொட்டையைச் சிறுக்காவிலும் தண்ணீரிலும் சமைத்துக் குடித்தாலும், பழுக்கக்காய்ச்சிய இரும்பு—தூர்ந்தநீர், அல்லது பாலைக் குடித்தாலும், முந்திரிப்பழத்தைக் கொட்டையுடன் தின்றாலும், மூன்று கிராத்து மரகதத்தை உரைத்துக் குடித்தாலும், ஆவின் பால், செம்மறியாட்டுப்பால் இதுகளைக் காய்ச்சி குடித்தாலும் இலந்தைப் பழத்தைத் தின்றாலும், பிசினைத்தின்றாலும் கனிந்த சபர்ஜலை வெறும் வயிற்றில் தின்றாலும் வயிறு நழுகலை நிறுத்திப் பலன் கொடுக்கும்.

ஐந்தாவது பசுல்.

வயிற்றுளைச்சல், கிருமி, கீரைப்பூச்சி.

வயிற்றுளைச்சலாகிறது.—ஒவ்வொரு நாழிகையும் “கலா ஹாஜத்துக்கு” மிக்க அனைத்தல் கடுப்புடன் வருவது, பருத்தி விரையின் பாலுக்கொப்பாய் சளிபோற் கொஞ்சங்கொஞ்சமா யிடைக்கிடை வெளியாகும்.

அதன்காரணம்.—குளிர்ச்சியும் வரட்சியுமாயிருக்கும். அதற்குப்பக்குவம் கோதம்பையும் வெந்தயத்தையும் ஆவின் பால் நெய்யில் கூழ்சமைத்துச்சூட்டுடன் குடித்துவேர்வைகாணுமட்டுங் துப்பட்டியால் போர்த்தி. இவ்விதங்காலை மாலை செய்து வருகத்தீரும். சூடுள்ள சோளக்கூழைக் கறந்த ஆவின்பாலுடன் தின்றாலும் ஒன்று, அல்லது, இரண்டு, [illegible]புலா, நல்ல ஈத்தம்பாணியைக் குளிர்ந்த நீருடன் குடித்தாலும் உப்பைப்பொடித்து பொட்டணங்கட்டித் தாழால் நெருப்புள்ள வோட்டுக்குமேல் வைத்துப் பொறுக்கக்கூடிய சூட்டுடனெடுத்து, பின்று வாரத்துச்சூழால் ஒத்தனமிட்டு ஆறும்வரையில் பின்றுவாரத்தில்வைத்துக்கொண்டாலும் சூடுள்ள மாமிசம் நெய்யுடன் தின்றாலும் தீரும்.

வயிற்றிலிருந்துகோளினைசெய்யுஞ் சிறியகீரைப்பூச்சிகள் அதிகத்தங்கடம் வயிற்றுவலியை வருத்தும். அதில் நீண்ட பூச்சிகளுமுண்டு. அதனறி குறி.—வாணிவடியும், இருவுதடும் இரவில் ஈரமாயும், பகலில் வரண்டுமிருக்கும் வயிற்றுவலியுஞ்சொறி சிரங்கு மரிப்புமுண்டாகும். அது உண்டாகுங்காரணம்.—கனியாதபச்சை வஸ்துக்களைத் தின்னுவதாலும், மொச்சை, கனிவஸ்து, கீரை இவைகளைத் தின்னுவதாலும், அதிகமாய் பால்குடிப்பதாலும், வஜீபனித்தபின் சுடுநீர்குடிப்பதாலும், வயிறு நிரம்பி இருக்கையில் ஜிமாஃ செய்வதாலுமாம்.

அதற்குப்பக்குவம்:—மஞ்சள் உத்ருஜாப்பழத்தின் தொலியில் பத்து திருஹத்திடையுலர்த்திப் பொடித்துப் பகலிற்குடித்தாலும், பத்து வெள் வெங்காயத்தை யரைத்துத் தேனிற் குழைத்து, வெறும் வயிற்றில் தின்றாலும், கருங்கடலையைச் சிறுக்காவிற் போட்டு வைத்து வெறும்வயிற்றில் தின்று ; அசறு வரையில் பொறுத்திருந்தாலும், நித்திரைசெய்யும் போதெல்லாம், அரை ஊக்கியா சிறுக்காவை, இரண்டு ஊக்கியா, கருஞ்சீரகத்துடன் தின்றுவந்தாலும், சிறுக்காவை எண்ணெயுடன் குடித்தாலும், கருஞ்சீரகத்தைச் சிறுக்காவி லரைத்து வயிற்றிற்பூசினாலும், மாதளைத்தொலியைத் தண்ணீரிற் காய்ச்சித் தெளிவிறுத்து அதிற்கொஞ்ச மெண்ணெய்விட்டு குடித்தாலும், குந்துருவை நீருடன்குடித்தாலும், சிற்றரத்தை தின்றாலும், மாதளைத் தொலித்தூளில் பத்துதிருஹத்திடை தின்று சுடுநீர் குடித்தாலும் வயிற்றிலுள்ள பூச்சியைகொன்று வெளிப்படுத்தும் இன்னும் வயிற்

403-140 [illegible] 3471

ஒன்பதாவது பசுல்

கெற்பத்தில் ஆணாகவும் பெண்ணாகவுஞ் சமையுதலைக்கூறல்.

ஆண்முயலின்கோரோசனையைக்குடித்தவள் ஆணும் பெண்முயலின் கோரோசனையைக்குடித்தவள்பெண்ணும்பெறுவாள் இன்னுங்கெர்ப்பம் ஆண், பெண்ணாவதின் காரணம் ஆணின்மனியுமதன் சூடும், இன்னுந் துப்புரவான மூன்று நாட்குள்ளே (வரையில்) ஜிமாஃ ஒற்றுமையாவதும்' மனி வலதுபாகத்தில் தெளிந்து இறங்குவதும், பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர்றஹீம் அல்லாஹும்ம உசம்மீமா பீ பதனிஹா முஹம்மதன் பஜ் அல்ஹாலீ ; தகறன்" என்று அல்லது அல்லாஹும்ம, இன்குன்த, கலக்த்த, கல்கன், பீபதனி, ஹாதிஹில், மற்அதி, பகவுனுஹு, தக்றன், வஉசம்மீஹீ, அஹ்மதன், வமுஹம்மதன் பிஹக்கி, முஹம்மதின், ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் றப்பீலாத்த தர்னீபறுதன்வஅன்தகைறுல் வாரிதீன் என்றுவதுகத்தரித்தமூன்று மாதத்துக்குள் அவளின்கொப்பூழ் அல்லதுவயிற்றில்தன்கையால்தடவினவனுப்போதுவதுமாயிருக்கும்இந்தத்துஆவைஇவ்வண்ணமோதினால் ஆண்குழந்தை யுண்டாகுமென்று நபிகணாயகந் திருவுளம்பற்றினார்கள் இதைப்பலராலும் பரீட்சிக்கப்பட்டதில், முஜர்றப், முஜர்றப் முஜர்றப் மேலும் நானும் பரீட்சித்து அதன் பிரயோசனத்தை யடைந்தேன். அல்ஹம்து, லில்லாஹி, அலாசிஹ்ஹத்தி தாலிக் இன்னுமிப்பசுலின் சில விபரங்கள் முதலாம் பாகம் முதலாவது பசுலில் முந்தி விட்டன. பார்த்துணர்ந்துக் கொள்ளவும் வடகலையில் (சூரியகலை) ஆணும் இடகலையில் (சந்திரகலை) பெண்ணுமுண்டாகும்.

பத்தாவது பசுல்

கெற்பத்தில் சிசு ஆண் பெண்ணென்றறிதலுக் குரிய பரீட்சையைக் கூறல்

கெற்பஸ்திரி நடப்பதில் வலது காலையே முன்னெடுத்துவைத்தால் ஆண்பிள்ளை இடது காலையே முன்னெடுத்து வைத்தால் பெண்பிள்ளைப் பெறுவாள். இன்னும் பேனை, உள்ளங்கையில் வைத்து அதில் கெற்பஸ்

திரியின் பாலைபீச்சி பார்க்கி அப்பேன் அப்பாலை விட்டும் வெளிப்பட்டுவிட்டால் கெற்பம்பெண் என்றும் வெளிப்படாவிட்டால் ஆண் என்றுமறிந்துக் கொள்ளவும். இன்னும் மனிஇறங்குவதாலும் மிகுதத்தாலும் ஆசையாலும் இருவரிலும் முடுகிட்டவர்கட்குப் பிள்ளை ஒப்பாகும் சோதனையுடையவர்கள் சொன்னார்கள்; கெற்பம் ஆணாகயிருந்தால் அவணிறம் அழகாயும், உசும்பித்திரியுதல் சுருக்கமாயும்பிள்ளையின் உசும்புதல் வலது பக்கத்திலும் வலதுமுலைபருத்தும் வலதுகைநரம்புவலுப்பமாயும், நடையில் வலதுகால்முந்தியுமிருக்கும் கெற்பம் பெண்ணாகவிருந்தால் மேற்கூறியவைகளை மாற்றமாயுமிருக்கும் அவளிரண்டு பாண்ணையுந்தெளிந்தமலு மொட்டையாகவிருந்தால் ஆண் பசுமையாகவிருந்தால்பெண் வலது விலா கனத்திருந்தால் ஆண். இடதுவிலாகனத்திருந்தால் பெண் வல்லாஹூ அஃலம்.

பதினொன்றாவதுபசுல்

சிசு, தாய்தகப்பனுக் கொப்பாகுவதும் அதன் சுரூபமுங்கூறல்

இஸ்திரீப்புருடர்க ளிருவரில் யாருடையமனி கெட்டியாக விருந்ததோ அவருக்குப்பிள்ளை ஒப்பாகும். அன்றியும், மனிமுந்திவிடுவதிலு மொப்பாகும். சிலவேளை சிசுமாமனுக் கொப்பாகவுமாகும். ஆணுக்கு முதுகின் தண்டாலும் பெண்ணுக்கு நெஞ்சுக்கொழுந்துப் பதப்பாலும், மனிஇறங்கும். அதில் முந்தித்தலுக் கொப்பாகும். இன்னுமதின் படைகோலத்தின் சுரூபம் முந்திய பாகத்திற் கூறப்பட்டிருக்கின்றது. பார்த்தறியவும்.

அல்லாஹூத்தஆலா படைகோலத்தை நாடிய “நுத்பா” அவள் சரீரத்தில், நகம். உரோமம், அடங்கலுக்குந் தாமரலேயாகியபின் நாற்பதுநாள் மனியாயும், நாற்பதுநாள் மண்டி இரத்தமாயும், நாற்பதுநாள் சதைக்கட்டியாயும், ஆகிய இந்நான்கு மாதத்தில் “அமல், அஜல், ரிஸ்க்கு, “ஷகீதவி, சகீவி, ஆண், பெண், வகையாதி யவைகளைக் குறித்து,ரூஹூ ஊதியபின் இம்மாதங்களில்; தடை உண்டவிரத்தம்,மூன்றுபங்காய்ப்பிரிந்து, ஒருபங்கு பிள்ளைக்கு உணவாயும், மற்றொன்று பாலாயும், மற்றொன்று நிபாசுடைய இரத்தமாயுமாகி வெளிப்படும்

வேளை நேரிட்டவுடன் அதன்தலையைத்தாழ்த்தல்; பீலக்குகள் தாழ்த்துவதால் கட்டவிழ்ந்து உசும்புவதால் இடுப்புவலியுண்டாகிப்பிள்ளை வெளியாகும். ஓர் பெண்பிள்ளை, தான்வீடுகூடும் வேளையில் அழகுவடிவாகிய வோர்சிறிய பிள்ளையைத் தனக்குமுன்னால் வைத்துப்பாற்பதிற் கோலப்படுத்திக் கொண்டாளானால் மிகுந்த உறுப்புகள் அப்பிள்ளைக் கொப்பான பிள்ளையாகப் பிறக்கும்.

* * *

பனிரண்டாவது பசுல்.

கெற்பத்தின்வலி, அது வளர்ந்து பிதிங்கியதற்கு மருந்து.

கருஞ்சீரகத்தைப் பொடித்து, தேன் நெய்யிற் குழைத்துக் குடித்தாலும், லவங்கப்பட்டையைப் பொடித்துக்குடித்தாலும் சதாபை அரைத்துத் தேனில் குழைத்துக்கெற்பப்பையி லுண்டான காயத்துக்கு வயிறுவிலாவிலுங் காயமுள்ள அண்டியிலும் பூசினாலும்வெண்ணெயைத் தின்றாலும், ஹூக்னாசெய்து பூசினாலும், மனிதனின் சிறுநீரைச் சீரகத்துடன் காய்ச்சி நாளொன்றுக்கு ஒருவிடுத்தம் ஐந்துநாள்மட்டு மதிலுட்கார்ந்து வந்தாலும், கெற்பப்பையின் வலிதீரும். மனிதன்முடியைப் புகைபோட்டுக் கொண்டாளானால் கெற்பவலி யடங்கலுக்கும் பலன் கொடுக்கும். பிள்ளையினின்றும் அறுக்கப்பட்ட கொப்பூழைக் கையில் வைத்துக்கொண்டவளுக்கு பேறுகாலத்தின் நொம்பலமடங்கும்.

இன்னுங்கெற்பப்பையாகிறது, சிறுநீர்ப்பையுக்கும், “அல்மஈ’ என்ற நீண்ட பைக்குடலுக்கும் இடையிலிருந்தாலும், நீர்ப்பையைப் பார்க்கினுமது கெற்பப்பையளவில் அதன்பேரில் நீண்டு சளிந்திருக்கும். கருப்பையின், நீளமேறக்குறைய ஆறு விரல், முதல் பதினொரு விரல்வரையும் “ஜிமாஃ” சையோகத்தை நடத்தினால் நீளுவதும் விட்டால் சுருங்குவதும் ஜிமாஃ செய்யும்போது மனியை இழுத்துக்கொள்கிற இச்சையால், அபத்தின்வாயளவில் அந்தப்பை, தாழ்ந்துவிடும். வல்லாஹூ அஃலம் மாசாக்காயைச் சமைத்த தண்ணீரி லுட்கார்ந்துவந்தாலும் சிறுக்காவைச் சுடவைத்துக் கெற்பப்பையைச் சூடு சாண்பித்தாலும் பசுமாட்டின் சாணியைக்கொண்டு கெற்பப் பையிற்,

புகைப் பிடித்தாலும், தானம் நீங்கி வெளியான கெற்பப்பையை அதன் தானத்தளவில் மீளவைக்கும்.

——(:)——

பதிமூன்றுவது பசுல்.

அண்டபிண்டந் துறக்குதல், கெற்பப்பையின் சிரங்கு, புண், இரத்தக் கசிவு இவைகளைக் கூறல்.

——:(:):——

ஒரு கோழிமுட்டையி லிரண்டு மாசாக்காயைப் பொடித்துப் போட்டுக் குழைத்துப் பலமுறைகளில் தின்றுவந்தால், இரண்டு துவாரமு மொன்றாகியவளுக்குப் பலன் கொடுக்கும். கன்னியழிந்தவள் கன்னியதாரி யாகுவதற்கு, ஆட்டுப் புழுக்கையைப் பொருந்திக்கொண்டால் முன்போ லாகிவிடுவாள். மூன்று கிருத்து, குங்குமப்பூவும் மூன்று கிருத்து கற்பூரமும் ஆறுகிருத்து உருக்குக்கல்லும் பொடித்து ஜெய்தூனெண்ணெயில் போட்டு முன் துவாரத்திற் பொருந்திக்கொண்டாலும், மாசாக்காயை அவித்த நீரிலிருந்தாலும் சிறுநீரால் "ஹுக்குனை" செய்தாலும், குங்குமப்பூ, ஆவின்பால், நெய், இவைகளிலொன்றால், "ஹுக்குனை" செய்தாலும், கெற்பப்பையின் சிரங்கு, புண், அதில் வழியும் ஊனமாதியவைகட்குப் பலன் கொடுக்கும். மரகதத்தைக் கட்டிக்கொண்டாலும், ஹம்க்காவுக் கீரையைச் சமைத்துத் தின்றாலும் பள்ளாட்டு புழுக்கையைக் குந்துருக்கத்துடன் பொடித்து பஞ்சிலூட்டிப் பொருந்திக்கொண்டாலும், கிறுதைப் பொருந்திக்கொண்டாலும் மாதளைத் தோலியைக் காச்சிய நீரிலுட்கார்ந்து வந்தாலும் அறபிபிசினில் ஒரு குபுலா, ஆவின் நெய்யில் இரண்டு குபுலா, குடித்து வந்தாலும் கெற்ப வகையறுவில் கசிவாகுமிரத்தத்தைத் தறிக்கும்.

——(:)——

பதினான்காவது பசுல்.

மாதவிடை இரத்தமும், அது வருங்குறிப்பும், அது நின்றுவிடுங் காலமாதிய விபரமுங் கூறல்.

——:(*):——

பெண்களில் ஹைறு காண்கிறதாவது; ஆண்கள் காராக்கோட்டி காணுவதைப்போலாயிருக்கும். அதன் காரணம்.—பெண்டுகளின் சரீரம் சீதளக் குளிர்ச்சியாக இருப்பதால் அந்தச் சரீரங்களில் மிகுத்த

ஈரப்பசக்குகள் தடை உண்டு, தாழாலிறங்கி; மரத்திற் பிசின் வடிவதுபோல நடுத்தரமாய் ஹைறு வெளியாகும். அது மிகுத்தாலும், சுருக்கத்தாலும் பேதகமாகிவிட்டால் மிகுத்த சிக்குகளுண்டாகும். ஹைறு வெளியாகுங் காலம், வைத்தியர்களிடத்தில் குறைந்தது பத்து வயது. முதல் பதினான்கு வய தளவிலேயாயிருக்கும். அதினின்றும் ஹைறு, நிற்குங்காலம் முப்பத்தைந்து முதல் அறுபது வயதாயிருக்கும். அது உண்டாயிருப்பதில் குறைந்த நாள் மூன்று மிகுந்தநாள் பத்தாயிருக்கும். அதன் நிறத்தில் சிவப்புங் கறுப்பும், ஹைறு என்பதுதிட்டம். பெலமான மஞ்சளும் அவ்விதந்தான். பச்சையும் இலேசான மஞ்சளுங் கலங்கலும், மண்ணிறமும் நம்மிடத்தில் ஹைறு. இன்னிறங்கள் அல்லாத்தும் குறித்த காலத்துக்கு முந்தியதும் பிந்தியதும் வியாதியாயிருக்கும். மாதவிடை பற்றறுதலான வயதுபோலொத்த காரணத்தால் மாதவிடை இரத்தந் தறிந்துவிட்டால், அது அறியப்பட்டதுவேயாம், அவ்வாறில்லாவிட்டால் இரத்த மொலிப்பதற்குரிய அவிழ்தம் உபயோகப்படுத்த லாவசியகமாம்.

பதினைந்தாவது பசுல்.

மாதவிடை இரத்தம் ஒலிக்கவும் மிகுத்தால் தறிக்கும் பரிகாரங்களைக் கூறல்.

——(*)——

பெருங்காயத்தை மிளகுடன் முர்றுடன் குடித்தாலும், வாழைப்பீழத்தைப் பொருந்திக்கொண்டாலும், குதிரைப்பால் அல்லது, கடுநீரைக் குடித்தாலும் தொலி நீக்கிய எள்ளைத் தின்றாலும், வெந்தயமாவு, பால், நெய், இவைகள் சேர்த்துக் குடித்தாலும், மாமிசம், தேன்போலொத்த சூடான பதார்த்தங்களைப் பரிமாறினாலும், எண்ணெயும், முட்டையும், துணியிற் பொதிந்து பொருந்திக்கொண்டாலும், ஒன்றரைக் குபுலா, குங்குமமும், அரைக்குபுலா உருக்குக் கல்லும் அரைத்துப் பஞ்சிலூட்டி மூன்றுநாள் பொருந்திக்கொண்டாலும், ஜபாதைப் பஞ்சிலூட்டிப் பொருந்திக்கொண்டாலும், கால்படி எள்ளை இரவில் சுபுகுவரையில் தண்ணீரில் ஊறவைத்துக் காலையில் தெளிவிறுத்துக் குடித்து "ஜவால் வரையிற் பொறுத்திருந்து இவ்விதம் மூன்று நாள் தொடராய்ச்செய்தாலும், கிறுதை" அரை ஊக்கியாத் தேனுடனும்

புளித்தசிறுக்காவுடனும் பொரித்தாலும் தடையுண்ட "ஹைறு" இரத்தத்தை ஒழிக்கச்செய்யும்.

மாதவிடை இரத்த மிருத்ததற்குப் பரிகாரம்; கிராதை பழமையான ஜெய்துனெண்ணெயுடன் பொருந்திக்கொண்டாலும் அல்லது சிவந்த மாணிக்கம் பதித்த மோதிரம், அல்லது 'தாலி' அணிந்துக் கொண்டாலும், மானுடைய விரைக்கொட்டையை யுலர்த்தி யெண்ணெயில் அரைத்து, பஞ்சிற் புரட்டிப் பொருந்திக் கொண்டாலும், சாயக்காரரின் நீலக்கட்டி, அல்லது இரும்புக்கிட்டத்தைப் பொடித்துக் கொண்டாலும் பருப்பு, மாசாக்காய், மாதளைத்தோலி போலுள்ள துவருள்ள வஸ்துக்களைக் காய்ச்சிய நீரில் புட்கார்ந்தும் அத்தண்ணீரினுலே (ஸ்தின்ஜா) துப்புரவுசெய்தாலும், தவளையை நெய்யத்தட்டி, அல்லது பருத்தி யிலையை அரைத்து, அல்லது இரும்புத்துருவை அரைத்து மூன்றுவாரத்தில் பொருந்திக்கொண்டாலு மிரத்தந்தறிபடும். கரும்பூனை ஈரலை, பெரும் பாட்டுடையவள் பேரிற்கட்டி வைத்தாலும் பள்ளையாட்டு புழுக்கையைப் பஞ்சிற் பொதிந்து முன் துவாரத்திற் பொருந்திக்கொண்டாலும் இரத்தவோட்டத்தை நிறுத்தி ஈரத்தையுந் துவட்டும்.

—(:)—

பதினாறுவது பசுல்.

பேறுகாலம் இலேசாகவும், பிள்ளையும் நஞ்சுக்கொடியும்வீழ்கவுமாகிய பரிகாரங்களைக் கூறல்.

—:(*):—

பிள்ளைப்பேறுகாலவருத்தம் ஆண்பிள்ளைப்பிள்ளைப்பெறுவதைப் பார்க்கினும் பெண்பிள்ளைக்கு அதிகமாம், அதற்கு "ஜஃஷூம்" என்ற கல்லைப்பிரசவ வலியுள்ளவள் ரோமத்திற் கட்டினலும் அல்லது அவளிடது தொடையிற் கயற்றால் நற்பவளத்தைக் கட்டினலும், கடனுரையைச் சதிமுட்டாக அவள் பார்த்தாலும், விளக்குப்புகையைமுகர்ந்தாலும், சிரகப்புகைப்பிடித்தாலும். மூன்று திருகத்திடை கறுவாப்பட்டையைத் தண்ணீரிற் கலந்துகுடித்தாலும், காந்தக்கல்லைக் கையில் வைத்துக்கொண்டாலும், கழுதைக்குளம்பு அல்லது குதிரைக்குளம்பைச்சுமந்துக்கொண்டாலும் ஒன்றரைக்குபுலா, குங்குமப்பூவையுட்கொண்டாலும், புருப்பீயை அல்லது அவளில்கழிந்த ரோமத்தைப்

477

புகைப்பிடித்தாலும், பறவை, கோழி, இவைகளிரசத்தை யருந்தினலும், கோழி இரசத்தில் ஒரு குபுலா "ஜபாதா" ஒருகுபுலா, குங்குமம் சேர்த்தருந்தினலும், கடனுரையை வலது தொடையிற் கட்டினலும் விரைவிற் பிள்ளைபிறக்கும், வலியுமிலேசாகும்.

இன்னும், முசல் கோரோசனை ஒரு திருஹத்திடை குடித்தாலும் பிள்ளையு விழத்துட்டுவதுடன் வலியு மிலேசாகும். மனிதன் ரோமத்தைக்கரித்து பன்னீரிற் கலந்து கருமாரியான நேரத்தில் அவளின் சிரசில் வைத்தால் வலியிலேசாகும்.

—(:)—

பதினேழாவது பசுல்.

பேறுகாலம் இலேசாகுவதுடன்; நஞ்சுக்கொடி வெளியாகப் பக்துவம்.

—:(:):—

பசுமாட்டின் சாணியை மூட்டம் போட்டால் பேறுகால வலி இலேசாகுவதுடன் நஞ்சுக்கொடியும் வெளியாகும்" நஞ்சுக்கொடிப் பிள்ளையின் கொப்பூழுட னிகண்டிருக்கும். அந்தக் கொப்பூழ் வழியாகப்பிள்ளைக்கு வஜீபனஞ்செல்லும்" புறவின் எச்சத்தைக் கருமாரியான வளுக்குப் புகைப்பிடிக்கப்பட்டு காறுடனே பிள்ளைபிறப்பதுடன் நஞ்சுக்கொடியும் வெளியாகும் பேறுகால வருத்தமான வட்குச்சிறிய "வௌவால்" பித்தை அவள் அபத்தில் தேய்த்தால் அட்சணமே சிசுவெளியாகும். கரும்பூனை மலத்தைப் புகைப்பிடித்தால் நஞ்சுக்கொடி விழும். செம்மறிப்பெண்ணாட்டின் முதுகிலுள்ள மெல்லிய ரோமத்தைச் சுமந்தால் கெர்ப்பத்தைத் தறிக்கும் பெண்மானின் பித்தைக்குடிப்பித்தா லட்சணமே குழந்தையும் நஞ்சுக்கொடியும் வெளியாகும். குதிரைமலத்தைப் புகைப்பிடித்தால், சிசுவை வெளிப்படுத்தும், அதன் குளம்பைப் புகைப்பிடித்தால், சிசுவையும் தடைப்புண்டான நஞ்சுக்கொடியையும் வெளிப்படுத்தும் "முள்ளெலி" பித்தும், பழமையான நெய்யுஞ்சேர்த்து அவள் முன் துவாரத்துள் ஏற்றித் தடவ (செலுத்த) வயற்றிலுள்ள பிண்டத்தை வெளிப்படுத்தி வைக்கும். இன்னும், தும்பை, செம்மறியாடு, மாடு, இவைகள் கொழுப்புடன் கிராது வெங்காயச்சாறு ஒன்று கலந்து அணிந்துக்கொண்டால் பேறுகால் இலேசுண்டாகும். நாயின்பாலைக் குடிப்பது கொடிய நஞ்சு

விஷத்துக்குப் பலன் கொடுக்கும் எனினும் பிள்ளை, நஞ்சுக்கொடியையும் வெளிப்படுத்தும். பிரசவவருத்த மதிகமானவளுக்குத் தாழாலே கழுகின் தூவலை வைத்தால் பேறுகால வருத்த மிலேசாகும்.

பதினெட்டாவது பசுல்.

பிள்ளைபிறந்தபின், நஞ்சுக்கொடியும், உதிரமும் சிக்குண்டதற்கும்; உதிரமதிகரித்த தற்கும் பரிகாரம்.

• பிள்ளை பிறந்த பின்னர் நஞ்சுக்கொடி வெளியாகா திருந்தால் அவளளவில் அச்சம்வைக்கப்படும். ஆனதாலதற்குடனே பரிகாரஞ் செய்தலாவசியகமெனப்படும் "பரிகாரம்" அவளில் "தும்மல்" வெளியாகக்கூடிய வஸ்துக்களைக்கொண்டாவது "தும்ம" லுண்டாகச் செய்தலும், உப்புக்கருவாடு, பூனைமலம், கடுகு, காளைமாட்டின்கொம்பு இவைகளிலொன்றால் புகைப்பிடித்தாலும், குங்குமப்பூவை அரைத்துக் குழைத்து வில்லைதட்டி, பிள்ளைபிறந்த பின்னர் அவள் பேரிற் கொளுவிவைத்தாலும், நஞ்சுக்கொடியை வெளிப்படுத்தும். வெள் வெங்காயத் தாளால் நெருப்பெரித்துப் புகைத்து வேகவைத்த நீரில் உட்கார்ந்தாலும் வயிற்றிலுள்ள கசடுகளை வெளியாக்குவிக்கும் கறுவாப்பட்டையரைத்துக் கலந்த நீரினால்" ஹுக்னை "செய்தால்" கெர்ப்பப் பையினுள்ளுள்ள கசடுகளை துப்புரவாக்கி, ஹைறலையும், சிசுவையும் வெளியாக்கி வைப்பதுடன் வாடையையு மழகாக்கும். பிள்ளை பிறந்தபின் ஒரு ஊக்கியா "சீனியை" இரண்டு ஊக்கியா நெய்யிற் கலந்து அப்பொழுதே தின்னக் கொடுத்தால், வயிறு, கொப்பூழ் வலிகளைப் போக்கி, கல்லையுந் துப்புரவாக்கும். பிள்ளை பிறந்த பின்னர் "ஹைறது" இரத்த மதிகரித்தால் அவளிரண்டு கையையுந் தனி-தனியாக இறுக்கிக் கட்டியபின் சிறுக்காவில் நனைத்த ஓர் துண்டுச்சீலையை அபத்தின் உள்ளில்செலுத்தி வைக்கவும். "ஹைறது" இரத்தங் கொஞ்சமாயிருந்தால் கழுதை அல்லது குதிரை குளம்பின் புகைப்பிடித்தால் இரத்தத்தை ஒலிக்கச்செய்யும். கருஞ்சீரகத்தை அரைத்து, நெய். தேனிற், குழைத்துக் குடித்தால். இரத்தமும் நஞ்சுக்கொடியும் வெளிப்படாமல், வாதிக்கும் அந்நோயை மாற்றி நல்லபலன் கொடுக்கும். அல்லாஹுத்தஆலா மிகஅறிந்தவன்.

பத்தொன்பதாவது பசுல்.

"காய்விழுதல்" அதை விலக்கவும், மரித்தசிசுவின் அடையாளமுங் கூறல்.

மரத்தின் கிளைகளில் "கனிகள்" கொளுவி இருக்குமாப்போல் சிசுக் கெர்ப்பப் பையைக்கொண்டு கொளுவியிருப்பதால்; காய் விழுதல்; என்றது அங்ஙனம் விழுவதில் மிக்க கவனிப்பு மதிகஅச்சமுமுண்டாகும். ஆனாலவ்வாறு விழுதல், கருத்தரித்த தொவர்க்கத்தில் அல்லது, கடப்பான உசும்புதல், கடப்பாகப் பாய்தல், செமியாக்குணம் அதிக ஜிமாஃ இவைகளாலாகும்.

ஒரு பெண்பிள்ளை; பிரசவமாகு முன்னர் வயிறு அடிவயிறுதனில் வலியுண்டாவதை அறிந்தாளாகில் அவளுக்குப் பேறுகாலம் லெகுவாயிருக்கும். அவ்வலி, முதுகின் தண்டில் நின்று முண்டாவதை அறிந்தாளாகில் பேறுகாலம் கஷ்டமாயிருக்கும். சிசு விழுவதானால் பிரசவவாதனையைவிட மிக்க அதிகமாயிருக்கும். வயிற்றிற்சிசு இறந்துபோனதற்குரிய அறிகுறியாவது, வயிற்றில் "கல்" புரள்போல் புரளலும் இடம்விட்டு இடம்மாறலும், ஒருபக்கபாய்விலாப்பொறுக்கசயனித்தால் சிசு தொங்கலும், சூடாயிருந்த கொப்பூழ், மார்பு, குளிர்ச்சியாகவிருப்பதும் சிலபொழுது, நாற்றமுள்ள ஈரப்பசக்கு வழிவதும் அவளிரு கண்ணுங் குழிபடுவதும், கண் வெண்முளியின் வெண்மை தூர்ந்து உதடு சிவந்து, காது மூக்கின், அருகு, வெளுப்படைவதும், "சிசு" மரித்ததற்குரிய அடையாளமாம். அதற்கு; "பசு" சாணியை புகைப்பிடித்தாலும்மிளகை அல்லதுகிலைப்பொதிந்துக்கொண்டாலும்! தாரைப் புகை பிடித்தாலும், குதிரையின் பற்குத்தியை யுலர்த்தி புகைப்பிடித்தாலும், காலைமாட்டின் கொம்பைப்புகைப்பிடித்தாலும், கழுகின்வலத்து இறக்கை இறகை அவளிருகாலுக்குமிடையில் வைத்தாலும். "பில்லூ'ரென்ற பளிங்கியைத் தொடையிற்கட்டினாலும் வயிற்றிலுள்ள சிசு உயிறு'டன் அல்லது இறந்துபோயிருந்தாலும் வெளிப்படுத்திவைக்கும்செத்த "நட்டுவக்காலி" என்ற பூச்சியைத் துணியிற் கட்டிக்காய் விழக்கூடியவளுக்குக் கட்டினாலும் நற்பவளத்தைக்கட்டினாலும் முள்ளம்பன்றியின் தோலிற்கொஞ்சத்தைக்கட்டினாலும்(காய்விழுதல்)வழக்கமுள்ளவளாயிருந்தாலும் அதை விலக்கி நல்ல பலனைக்கொடுக்கும்.

பதினான்காவதுபாபு முற்றிற்று.

பதினைந்தாம் பாபு.

பிள்ளை சிசுக்களின் ஆராச்சிகள்.

ஒன்றாவது பசல்.

சிசுக்களின் சீர் திருத்த மாதியவைகளைக் கூறல்.

பிள்ளை பிறந்த பின்னர் அப்பிள்ளையின் முரசில் தேனைத்தொட்டு வைத்து, இடம்பாடுண்டாயிருந்தால்ஒவ்வொருதினமும்அப்பிள்ளையின் மாதா இரண்டு மூன்று முறை "பால்" கொடுத்து அச்சிசுவின் நெற்றி போலான உறுப்புகளைச் சரிபடுத்தி வைப்பாள் இடம்பாடில்லாவிடில் பால்த்தாச்சிகளில் கெட்டியான சரீரமும் இருபத்தைந்துமுதல் முப்பத்தைந்து வயதுடையவளும், பார்வை, குணமழகியவளும், கோபம் துக்கம் தாமதித்தவளும், உள்ளும் புறமும் நோயின்றி, ஐயறிவு, நீதி நிலை, சஹீஹாகியவளும் இருமார்பும்சதைபற்றுள்ளவளாயுந் தெரிந் தெடுக்கப்படும் மேற் சொல்லிய குணாதிஜயங்களுக்கு மாறுடையவளாகில் அவளின் கெடுதிகளனைத்தும் அச்சிசுவை அடையும் இன்னும், நெய், ஹல்வா, மீன், ஆகிய நல்ல வஜீபனங்களிற் பரிமாறச் செய்தலும் கெட்டுப்போன பழய பதார்தங்கள், தாழ்ந்தபதார்த்தங்கள், பாலைக் கெடுக்கும் கீரை, வெண்காயம், பூண்டு இவைகளைத் தமிழ்ந்து நடக்கச் செய்தலும் அங்ஙனம் நடக்ககூடியவளா யிருப்பதும்பிள்ளைகட்குவியாதிகளுண்டுபட்டால் அவர்கியல்பான பத்தியங்காக்கக் கூடியவளுமாயிருக்கவேண்டும்.

இரண்டாவது பசல்.

சிசுக்களுக்குச் செய்துவைக்க? கடமையான; கத்தனா தொலியறுத்தலா தியவைகளைக் கூறல்.

பிள்ளை சிறுபிராயமாயிருக்கையால், கத்தனாவிருத்தசேவை,செய்வது வாஜிபு சுன்னத்து, மூஸ்தஹப்பு, என்று உலமாக்களில் கிலாபுண்டும் இரண்டு வயதை எத்திவிட்டால் பால்குடியை மறக்கச் செய்தல் வாஜிபு பால்குடி மறந்து பல்வெளியானால் எகுரில் பள்ளையாட்டுக்

கொழுப்பைத் தேய்த்தால் வருத்தமின்றிப் பற்கள் முளைக்கும் ஐந்து வயதுவரையில் நற்குணத்திற் பழக்கப் பொருத்தமாக்கிவைத்து ஆறாவது வயதில் அதபு வருத்துபவரிட மொப்படைத்து நற்குணத்தின் பேரிற் செயற்கைக்கொளுவுதலாய், பனிரண்டாம் வயதில் சறுபு, பிக்ஹூ இல்முகளில் துடர்ச்சியாகப்பழகிவரச் செய்தலாவசியகமாம் இதனடுவே சுகபேதி இரத்தங்குத்தி வாங்குதலாகிய பரிகாரஞ் செய்தற் கூடாது எழுவயதில் பல்விழும் முப்பதுமுதல் நாற்பது வயதுள்ள வாலிபப்பருவமாய்விட்டால் பொழுதின் சக்திப்பையும் வெங்காயப் பூண்டாதிய பித்தகுணத்துடைய வஸ்துக்களைத்தவிழ்ந்துக் கொண்டும் நோயை விலக்குதற்கு இரத்தங் குத்திவாங்குதலும் பசியடக்கமெனும், பசியின்றி உண்ணமனு மிருப்பதன்றி அறுபது வயதென்ற முதிய வயதுண்டாகிவிட்டால் கத்திரிக்காய், பயறு, பருப்பு, மாட்டுமாமிசம் போற்கொத்த சவுதாவிய்யாகிய ஐயத்தை யுற்பத்தி செய்யும் வரண்ட குளிர்ச்சி யுள்ள வஜீபனங்களைத் தவிழ்ந்தும் ஜிமா. ஐயும், மதுரமான வஸ்துக்களையும் சிறுகப் பரிமாறியும் அறுபதுவயதுக்கு மேல் மௌத்துவரையில் முதுமை, கிழடுபட்டால் அவசியம் நித்திரையை அதிகமாக்குவதுபோல் சீதளத்தைச் சூடாக்கிவைப்பதும் சிலேர்ப்பனம், ஐயம், உற்பத்தியாகு மாகிய வஜீபனங்களையும் உறைப்புள்ள வஸ்துக்களையுந் தவிழ்வதும் இஞ்சி முறபா பரிமாறலும் இரத்தங்குத்தி வாங்கலைப்பார்க்கிலும் சுகபேதிவாங்கலும், சரீர இழப்புண்டாகும் கிரிகைகளை விடுவதும் ஆராய்ச்சியின் னின்று முள்ளதாயிருக்கும்.

பெண்பிள்ளைகட்கு நாற்பது முதல் அறுபது வயது வரையில் ஜிமாஃபுணர்ச்சியின் ஆசை அதிகமுண்டாகும் அதைச்சுருக்காவிடில் வியாதிகட்பல வாய்ப்புண்டாம், கரடியின் கொழுப்பைச் சிறு பிள்ளைகளின்மேனியில்தேய்த்து வந்தால், எவ்வித நோய் வாயும் படாமற்காத்துக்கொள்ளும் முள்ளம்பன்றிப் பிடரிரோமத்தை வியாதியுள்ள குழந்தைகட்கு எழுபொழுது புகைப்பிடிக்கப் பட்டதானால் அவ்வியாதிகள் சுஸ்தமாகும். மனிதன் மலத்தைச் சூட்டுடன் பழயகள்ளிற் கலந்து நோயுள்ள உயிர்ப்பிராணிகட்குக் குடிப்பாட்டிவித்தா லுடனே நீங்கும் நட்டுவக்காலிக் கொடுக்கு முள்ளை மனிதனுடுக்குந் துகிலிற் குத்திவைத்துவிட்டா லதை யெடுக்குமளவு மவன் வியாதியி லிருப்பான் முள்ளெலியின் சிறுநீரைச் சருபத்துடன் கலந்து வியாதியினால் சரீரப் பேதலித்தும் பெலக்குறைவடைந்தவன்மூன்றுநாள் அருந்தினால் நல்ல

சுகமடைவான் வியாதியினால் மெலிவுற்றவன் தேனைத் தண்ணீரிற் கலர்ந்து, பருகிவரத் திரேக வலுவுண்டாகும்.

வல்லாஹு அஃலம்.

பதினைந்தாவது பாபு முற்றிற்று.

பதிறாவது பாபு.

தகப்பன் தன் பிள்ளைகளுக்கு செய்துவைக்க கடமைகளான விஷயங்களைக்கூறல்.

(ஒன்றாவது பசல்)

அப்துல்லாஹிபுனு'ஷம்றத்துறலியல்லாஹு அன்ஹுவைதொட்டும் றிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது அவர்கள்சொல்லுகிறார்கள்நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமிடத்தில் ஒரு மனிதன் வந்து கேட்டார் 'யாறசூல்லல்லா அல்லாஉடைய றசூலே தன்னுடையபிள்ளைகளுக்கு 'குர்ஆன் ஷரீபைகத்து கொடுக்கிறதில் நின்றும்யென்னகூலி உண்டாயிருக்கிறதென்றுகேட்டதற்கு நாயகம் வர்கள்சொன்னார்களாம் 'குர்ஆன் அல்லா உடைய 'கலாம்' அதின் தவாபுக்குதீர்சைகிடையாதுயென்று சொன்ன உடன் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்தார்களாம். அவர்களிடத்தில் நாயகமவர்கள் தன்னுடைய பிள்ளைகளுக்கு குர்ஆனை கற்றுக்கொடுப்பதில் என்னகூலி உண்டாயிருக்கிறதென்று கேட்டதற்கு, அவர்களும் அவ்விதமாகவே குர்ஆன் அல்லாவுடைய கலாம் அதின் தவாபுக்கு தீர்ச்சிகிடையாதென்று சொல்லிவிட்டு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பாணதின்பேரிலேறி இஸ்ராபியீல் அலைஹிஸ்ஸலாமை கேட்டதற்கும் அவர்களும் அவ்விதமாகவே குருஆன் அல்லாவின் கலாம் அதின் தவாபுக்கு தீர்ச்சைகிடையாதென்று சொல்லியபின்னர் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாவினது உத்திரவைக் கொண்டு நமதுநாயகமவர்களிடத்திற் வந்து சொன்னார்களாம். நாயகமே தங்களுடைய நாயன் தங்களுக்கு சலாமெத்தி வைக்கும்படி சொன்னான். இன்னம் எந்த ஒர்மனிதன் தன்னுடைய பிள்ளைகளுக்கு குர்ஆன் ஷரீபைக்கற்றுக்கொடுப்பானாகில் அவன் ஆகிவிடுவான் பதினாயிரம் ஹஜ்ஜு செய்தவனைப்போலும் பதினாயிரம் உம்றா செய்தவனைப்போலும் பதினாயிரம் அடிமைகளை உருமைவிட்டவனைப் போலும்

இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமுடைய பிள்ளைகளில் நின்றும் இன்னம்பதினாயிரம் உடையில்லாதவர்களுக்குஉடையளித்ததவாபும்பதினாயிரம்பசித்தவர்களுக்குணவளித்த தவாபும் இன்னம் பதினாயிரம் திருஹத்தை அல்லாவுடைய பீசபீலில் சிலவழித்தவாபும் கொடுக்கப்படும். அதுவாகிறது அவனுடன் கபுறில் துணையாக ஆயிருக்கும் அவனை அனுப்புகிறவரை மஹ்ஷர் மைதானத்தளவில் அதுவாகிறது ஆகிவிடும் நன்மைத்தராசு தட்டை கனதிப்படுத்துவதாயும் இன்னமவனை சிராத்துல் முல்தகீம் என்னும் பாலத்தில் மின்னல் வெட்டிமறையுமாப்போல் கடத்தாட்டிவைப்பதாயிருக்கும் யின்னம் நமது நாயகம் திருவாய் மலர்ந்தருளினார்கள் யெந்த ஒரு மனிதன் தன்னுடைய பிள்ளைக்கு 'குர்ஆனுடைய ஆயத்துகளில் நின்றும் ஒரு ஆயத்தைகத்து கொடுப்பதாகிறது ஆயிரம்வருடம் இபாதத்து செய்வதைகாண யேற்றமாயிருக்கும். அது யெவ்விதமான இபாதத்தானால் பகல்காலமெல்லாம் நோன்புபிடிப்பதாயும் றாவுகாலங்களில் நின்றுவணங்குவதாயுமுள்ள இபாதத்து யின்னம் முஸ்லீமானபகீர்களுக்கு ஆயிரம் தினாரைசதக்கா கொடுப்பதை காணவும் யேற்றமாயிருக்குமென்று ஹதீதுஷரீபில் வருகிறது அனஸிபுனுமாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவை தொட்டும் றிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது அவர்கள் சொல்கிறார்கள் நமது நாயகமவர்கள் திருவருட்செய்திருக்கிறார்கள் யெந்த ஒரு மனிதன் தன்னுடைய பிள்ளைகளுக்கு குர்ஆன் ஷரீபை கத்து கொடுப்பார்களானால் ஹக்சுபுஹானஹுவத்தஆலா அம்மனிதனுக்கு கியாமநாளில் ஒளிவினால் காரை போடுவான் அதின்பிற்காசதைப்பார்த்து முன்னுல்லவர்களும்பின்னுல்லவர்களும் புதுமைபடுவார்கள் யின்னம்நமது நாயகம் திருவாய்மலர்ந்தருளினார்கள் யெந்த ஒருவன் குர்ஆன் ஷரீபைஓதி அதின்படி அமல் செய்வானாகில் அவனுடைய தாய் தகப்பனுக்கு கியாமநாளில் கிரீடம் அணியப்படும் அதின் பிறகாசமாகுறது, பொழுதின் பிறகாசத்தைக் காண பிறகாசமானதாயிருக்கும்.

இதற்காகதான் ஹுகமாக்கல் சொல்கிறார்கள் 'பிள்ளையினுடைய ஹக்காகிறது தாய்தகப்பன்பேரில் முறையிருக்கும் ஒன்றாவது பிள்ளை பிறந்தயிடத்தில் அழகாகியபேராய் பேர்வைக்கிறதாயிருக்கும் இரண்டாவது குர்ஆன்ஷரீபை கத்து கொடுப்பதும் அதபுஇல்மைகத்து கொடுப்பது மாயிருக்கும் 'மூன்றாவது சுதனசெய்து வைப்பதாயிருக்கும்யெந்தஒருவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு குர்ஆன்ஷரீபைக்கத்து

கொடுக்கயில்லயானால் அம்மனிதன் அல்லாவின் அதாபுக்கு பாத்திமுடையவனாவான் யின்னம் நமது நாயகம் திருவருட்செதிருக்கிறார்கள் கேடாகிறது ஒரு தகப்பனுக்கா யிருக்கும் குர்ஆனையும் பருலயும் அதபயும் கத்துவைக்க இல்லையே அந்த ஒரு தகப்பனுக்கா யிருக்கும் கேடாகிறது ஹீதைபத்துல் எமானிய்யிறலியல்லாஹுவை தொட்டும் ரிவாயத்து செய்யப்பட்டிரிக்கிறது ஒரு சிரு பிள்ளை மதறசாலில் போய் (அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்) யென்று ஓதினால் அப்பிள்ளையின் தாய் தகப்பனுடைய அதாபை ஹக்சுபுஹான குவத்தஆலா உயர்த்திவிடுகிறானும் நார்ப்பது வருடம்வரை அப்பிள்ளை ஓதின சபபால் யிவ்விதம் தப்சீரில் வருகிறது.

அபீஹுறப்சு றஹிமஹுல்லாஹு யிடம் ஒரு மனிதன்வந்து என்னை என் மகன் அடிக்கிறான் யென்று சொன்னான் அவர்கள் சுபுஹானல்லா மகன் தகப்பனை அடிப்பானா என்றார்கள் அவன் அடிக்கிறான் வருத்தப்படுத்துறான் என்று சொன்னான் அவனிடம் நீ அவனுக்கு இல்மையும் அதபயும் படித்து கொடுத்தாயாவென்று கேட்டார்கள் இல்லையென்று சொன்னான் குர்ஆனைப் படித்து கொடுத்தாயாவென்று கேட்டார்கள் இல்லை என்றான் அப்ப அவன் என்னவேலை செய்கிறான் என்று கேட்டார்கள் பயிர்வேலை செய்கிறான் என்று சொன்னான் அப்ப அவன் யேன் உன்னை அடித்தான் தெரியுமா அவன் கழுதைவரிக் காலயில் வயலுக்கு போம்பொழுது அவனுக்கு முன்னும் பின்னும் காளைமாடுகளும் நாய்களும் வரவே, குர்ஆன் ஓத தெரியாமல் யிருகம் பாடினான் நீ அவனுக்கு எதிர்த்தாய் உன்னை அவன் மாடென்று எண்ணிகொண்டான் அவன் உன்தலையை உடைக்காமல் போனதின்பேரில் நீ நாயனை புகழ்ந்துகொள்ளென்று சொன்னார்கள்.

ஒன்றாவது பசுல் முற்றிற்று.

இரண்டாவது பசுல்.

மவ்த்துக்குப்பின் கியாமபரியந்தம் நன்மையைத் தந்துகொண்டிருக்கும் விஷயத்தில் றத்துல் முஹ்த்தாரில் வரும் சில அழிவில்லாத விடயங்களைக் கூறல்.

அஃதாவது.

(1) வது மதறசாக்களை யிஸ்தாபித்து தீனிய்யதாகிய மார்க்க இல்முகலை பறவசெய்யுதல்.

(2) வது மூமினானவர்களில் நின்றும் வெழியாகும் துஆ

(3) வது வழிகளில் யாவருக்கும் பிரயோஜமான விருக்ஷங்களை உற்பத்திசெய்யுதல்.

(4) சேமமான ஷதக்காவென்னும் கொடையழித்தல்.

(5) வது ஓதும் பிள்ளைகளாகிய தாலிபுல் இல்முகளுக்கு குர்ஆன கிதாபுவாங்கி கொடையழித்தல்.

(6) வது யிஸ்லாமிகள் பேரில் அடங்கேருப்பகையர்களை தடைசெய்யுதல்.

(7) வது யாவருக்கும் பிரயோஜனமான ஆரோடைசெய்யுதல்.

(8) வது யாவருக்கும் பிரயோஜனமான கிணர்தோண்டல்.

(9) வது யாவருக்கும் பிரயோஜனமான தங்குமடம் கட்டிவைத்தல்.

(10) வது திக்று நடந்துவரும்படியான மஹ்லறுயென்ற கட்டிடம் கட்டிவித்தல்.

(11) வது குர்ஆன் ஷரீபை ஓதவித்தல்.

(12) வது மார்க்கவிதிப்படி யேவப்பட்ட பீசபீலில் ஷஹீதாகுதல்

இரண்டாவது பசுல் முற்றிற்று.

—(*)—

மூன்றாவது பசுல்.

தாய்தகப்பருக்கு நன்றிசெய்யும் வருசயில் பேசும் பாடம்.

—(*)—

அல்லாஹுத்தஆலா திருவுளமானான் நாம் இன்சானுக்கு அவனுடைய தாய் தகப்பனைக்கொண்டு வசிய்யத்து செய்தோம் அவனை அவனுடைய தாய் வருத்தத்தின்பேரில் வருத்தமாய் சுமந்தால் ரிவாயத்து வருகிறது றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லமிடத்தில் அமல்களில் எந்த அமல் எத்தமென்று கேட்டதற்கு சொன்னார்கள் மூந்தியவக்தில்

தொழுகிறதும் பிறகு தாய்தகப்பருக்கு நன்றிசெயகிறதும் பீசபீலுக்கு போகிறதும் மென்றுசொன்னார்கள் றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவாய் மலர்ந்தருளினார்கள் யாராகிலுமொருவன் தாயுடைய இரண்டு புறுவத்துக்கிடையில் முத்தினால் அது அவனுக்கு நறகத்தை விட்டும் திறயாகிவிடுமென்று திருவுளமானார்கள் இன்னம் நமது நாயகம் திருவுளமானார்கள் தாய்தகப்பருக்கு நன்றி செய்வது தொழுகையிலும் சதகாவிலும் நோன்பு பிடிப்பதிலும் கஜ்ஜு உம்று பீசபீல் செய்வதிலும் மேத்தமாயிருக்கு மென்று திருவுள மானார்கள் யின்னம் நமது நாயகம் திருவுளமானார்கள் என்னை நபியாக அனுப்பினானே அந்நாயகன் பேரில் சத்தியமாக யெந்த அடியானாவது அவனுக்கு ஆண்டவன் பணத்தை கொடுத்து அவன் தகப்பனுக்கு நன்றி செய்கிறதில்லை அவன் சொற்கத்தில் பென்னுடனா யிருந்ததொழிய வென்று திருவுளமானார்கள் யின்னும் நமதுநாயகம் திருவுளமானார்கள் அல்லாவினது பொருத்தம் தாய்தகப்பருடைய பொருத்தத்தில்யிருக்குதென்றும் அல்லாவினது கோபம் தாய்தகப்பருடைய கோபத்தில்யிருக்குதென்றும் திருவுளமானார்கள் இன்னும் திருவுளமானார்கள் ஹக்சுபுஹானஹுவதஆலாவுக்கு வழிப்பட்டவனும் தாய்தகப்பனுக்கு வழிப்பட்டவனும் நாளை கியாமநாளில் இல்லியீன் யென்னும் சொர்க்கத்துக்குமேல் மாளிகையில் ஆயிருப்பார்கள் றிவாயத்து வருகுது அல்லாஹுத்தஆலா மூசா அலைஹிஸ்சலாமுக்கு சொன்னான் யாருகிலும் ஒருவன் தாய்தகப்பனுக்கு நன்றிசெய்து என்னை நோவினைசெய்தால் அவனை நன்றிசெய்தவனு யென்று யெழுதுவேன் யாருகிலுமொருவன் எனக்கு நன்றிசெய்து தாய்தகப்பறில் நோவினை செய்தால் அவன் என்னை நோவினை செய்தவனென்று யெழுதுவேன் யென்று சொன்னார்கள்.

அபுல்லெய்து றஹிமஹுல்லாஹு சொன்னார்கள் அல்லாஹுத்தஆலா தவ்றாதிலும் இன்ஜிலினும் சபூரிலும் புருகானிலும் அவனுடைய சஹ்பு அடங்களிலும் சொல்லி அவனுடைய றசூல்மார்களடங்களையும் யேவுகிறான் அவனுடைய பொருத்தம் தாய்தகப்பருடைய பொருத்தைகொண்டும் அவனுடைய கோபத்தய் தாய்தகப்பருடைய கோபத்தை கொண்டுமாக்கிக் கொள்ளும்படிக்கும் யேவியிருக்கிறுபென்று சொல்லுகிறார்கள் நாயகம் திருவாய்மலர்ந்தருளினார்கள் ஒரு மனிதன் தாய்தகப்பனை நோவினை செய்தவனாயிருக்கிற ஹாலில் அவர்

கள் இரண்டுபெயரும் மவுத்தாவார்கள் அவர்களுடைய மவுத்துக்குப் பின் இரண்டுபேருக்கும் அவன் 'துஆ' கேழ்ப்பான் அவனை, நன்றி செய்தவர்களில் நின்றும் எழுதப்படும் இன்னும் திருவுளமானார்கள் யாருகிலும் ஒருவன் தாய்தகப்பறில் அல்லது யிருவரிலொருவருடைய கபுரைவெள்ளிக் கிழமைதோரும் ஷியாறத்து செய்தால் அவனுக்கு பிழைபொருக்கப்படுவதோடு நறகதய் விட்டும் உருமைபட்டோலை யெழுதப்படுமென்று திருவுளமானார்கள் றிவாயத்து வருகுது அல்லாஹுத்தஆலா மூசா அலைஹிஸ்ஸலாமுடன் வஷநீக்குப்போது மூவா யிறத்தி அய்னூருவஷம் அல்லா உடன்பேசி கொண்டார்கள் கடைசி வஷனத்தில் ஆண்டவனேஎனக்கு வசியத்துசெய் என்றார்கள் ஆண்டவன் உமக்கு வும்முடைய தாய்க்கு நன்றி செய்வதைகொண்டு வசியத்துசெய்தேன் வசியத்துசெய்தேன் என்றுஎழுவிடுத்தம்சொன்னான் மூசா அலைஹிஸ்ஸலாம் ஆண்டவனே எனக்குபோதுமென்றுசொன்னார்கள் பின்பு சொன்னான் தாயுடைய பொருந்தம் என்பொருத்தம் தாயுடைய கோபம் என் கோபமென்று சொன்னான் நமது நாயகம் திருவருள்செய்துயிருக்கிறார்கள் பெத்தவர்கள் பிள்ளைகளுக்கு கேள்க்கும் துஆ, அவரது நபி உம்மத்துக்கு கேள்க்கும் துஆவை போலாயிருக்கும் தாய் தகப்பனுக்கு பிள்ளை செய்யவேண்டிய ஹக்காவது அவர்கள் இருவருக்கும் சாப்பாடு கொடுப்பதும் உடயணிந்து வைப்பதும் அவர்கள் இருவருக்கும் கிதுமத்து என்னும் பணிவிடை செய்வதும் அவர்கள் கூப்பிடும் நேரத்தில் ஜவாபு கொடுப்பதும் பாவமில்லாத்த வேலைகளை கொண்டு யேவினார்களானால் அவ்வேலையை செய்து முடிப்பதும் யின்னமவர்களுடன் கோபமில்லாமல் பிரியமாய் பேசுவதும் அவர்களில் நாமங்களை கொண்டு கூப்பிடாமலிருப்பதும் யின்னம் அவர்களிருவருக்கும் பிழை பொருக்க தேடுவதுமாம் [illegible] யேது போலானால் தனக்கு பிழைபொருக்க தேடுவதுபோல் தாய்தகப்பற்களுக்கு பிழைபொருக்க தேடினால் கியாமனாலில் அல்லாஹு சுபுஹானஹுவத்த ஆலா அவனின் பிழைகளை பொருத்து விடுவான் என்று வருகின்றது.

—(:)—

நான்வது பசுல்.

ஆசையுண்டாகுவதையும், அதை நீக்குவதையுங்கூறல்.

—(*)—

மதனூற் சாஸ்திரங்கள், கதைகள், புராணங்க ளிவைகளை வாசித்து அதன் அருத்தாபத்திகளை ஆராய்ந்துணர்வதினால் ஆசையும் அறிவும் ஒழுக்கமாதியவைகளு முண்டாகும் சித்திரங்களைப் பார்ப்பதினால் ஆசையுடன் மனவெழுச்சியு முண்டாகும். இராகங்களைக் கேட்பதாலதிக ஆசையுண்டாம் வயிறு நிரம்பிருக்குதலும், செமியலாகு முன்னர் மற்றைய பதார்த்தங்களை யுட்கொள்ளலும், பகலில் சயனிக்குதலும். அதிகாலையில்ஸ் நானஞ் செய்தலும், கஞ்சா, அபீயூன்போன்ற வஸ்துக்களை யுட்கொள்ளலும் நோன்பு பிடித்தலும் வஜீபனித்தவுடன் குளிப்பதும், நீண்டதூரம் நடந்து வந்தவுடன் குளிர் நீரில் ஸ்நானஞ் செய்தலும் குடித்தலும், பள்ளாட்டு மாமிசந்தின்னலும் சையோக ஆசையைக் கெடுத்து இரத்தத்தைத் துற்பலப்படுத்தும்.

—[*]—

ஐந்வது பசுல்.

“ஸினா” செய்பவர் கட்கிடையில் அல்லது நேசர் கட்கிடையின் பிரிதல் செய்தலைக்கூறல்.

—[*]—

கெட்டகிரி கையையுடையவர் கட்கிடையில்; தலீல் ஹதீது ரிவாயத்து, முதல்வன ஆகமங்களால், சக்தியுள்ளமட்டும் அமர்த்தியாகயுபன்னியாசித்து அக்கிரிகைகளைவிட்டும் விலக்கல் செய்வது கடமை ஒரு தினத்தில் நபிநாயகமவர்களை அஸ்ஹாபுகள் புடை சூழ்ந்திருக்குந் தருணத்தில் ஒருவர் விசயமாய் அல்லாஃஉடைய றசூலே தங்களினது அரியகட்டளை கட்கெல்லாம் வழிப்பட்டேன். என்றவர் செல்[illegible]றுவோர் விடயத்திற்குமட்டுந் தங்களுடைய உத்திரவை வழிபார்க்கின்றேன் என்று சொல்லியபோது நமது நாயகம் அவ்விடயமியாதென்று வினவியபொழுது. அவர், ஜினாசெய்ய உத்திரவாக வேணுமென்று சொல்லவும். உடனே தங்கள் வாளையுறையை விட்டுருவினவர்களாக செய்யிதுனா உமறிபுனு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு எழுந்திருக்கவும், அமர்க்கையையுடைய நமது நாயகம் அவர்களை இருக்கும்படிக்குச் செய்து, அம்மனிதனிடம் நின்சோதரி, மகள், தாய், பெண்சாதி, இவர்களி லொருவரை ஒருவன் ஜினாசெய்ய நின்சல்பு பொருத்தமாகுமா வென்று கேட்க அவர் பொருந்தாதென்றதால் நீ நாடியவள் ஒருவனின் பெண்சாதி, தாய், மகள், சோதரியை விட்டொ

ழியாதிருப்பதால் அவன் பொருந்தானே என்று சொன்னவுடன் அவர் அவ்வாறான செய்கை எனக்கும் பிரியமில்லை யெனச்சொல்லி தௌபா விலாகி விட்டார்.

—[*]—

ஆறாவது பசுல்.

“ஸினா” லூத்து, இவைகளானேரிடும் ஆபத்துகள் கெடுதிகளைக்கூறல்

இருஷாதுல்இபாது போன்ற கித்தாபுகளில் வருகின்றன ஸினாவானது, அபத்தினாலும் ஐயறிவுக்குரிய உறுப்புகளினாலு மேயுண்டாகின்றது. அதைவிலக்கும் படிக்குவந்த, தலீல் (வலாதக்றபுஸ்ஸினா) ஸினாவுக்கு முடுகாதீர்கள் எஃனீ:—அணுகாதீர்கள் சத்தியமாய் அதுகெட்டதாயும் வழியால் அது தீங்கானதாயும் அதையுடையான் நறகவாதனைக்குட்படுபவனையும் துன்யாவில் தண்டனை (ஹத்து) செய்யும் வண்ணம் அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றியதாயு மிருக்கும் (ஹதீது) ஸினாசெய்கிறவனுக்கு ஈமான்போய் விடுமென்றும் பெரும்பாவத்தில் ஸினா அதிகவலுப்பானதென்றும் அவர்களின் துர்நாற்றம் நரகவாதிகளை வாதனைபடுத்துமென்றும் ஸினா விற்றரிப்பட்டவன், காபர் இபுலீஸின் பட்டஞ் சூட்டப்பட்டவனென்றும் அவனுறுப்புகளில் விலங்கிட்டு தட்டைக் கத்திரிக்கப்பட்டு அவர்கள்பேரில் அவ்வுறுப்புகட்கேடாகச் சாட்சிசொல்லு மென்றும், றஹ்மானின் கோபத்தாலவனின் மாமிசக்களுதிர்ந்து விடுமென்றும், ஸினாவை விரும்பித்தேடியவன் காபரென்றும் அவன் செய்கையை அல்லாஹுத்தஆலா பார்த்துக் கொண்டிருக்கின்றானென்றும். அவன் பார்க்கவில்லை யென்று எ[illegible]னாலும். நாணமும் விலக்கலுமன்றி இலேசாகக்கண்டு செய்தாலும் காபரென்றுங் கூறப்படுகின்றன. இன்னும் கூட்டிக் கொடுத்தவனுக்குச் சுவர்க்கம் ஹறாமாகும் ஸஹாபாக்களிலொருவர் சொன்னார்கள் நீங்கள் ஸினாவுக்கு முடுகுவதை அச்சம்பூட்டுகின்றேன், அதனால் சத்தியமாக துனியாவில் மூன்றும் ஆகிறத்தில் மூன்றும் ஆக ஆறுகாரியமுண்[illegible]கும் அஃதாவன— துனியாவில் பறக்கத்துள்ள [illegible]ற்கு கு[illegible]து, நன்மைகளிழந்து, யாவரும் நகைத்து முனியிதலும்கடினமான கேள்வியும், நரகம் புகுதலுமுண்டாகுமென்று.

பின், துவாரத்திற்புகுத்தும் ஊத்தும்,பெனைகள் அபமும்அபமும் ஒத்துதலும்விளைவைப்போலேயேயிருக்கும் நஊதுபில்லாஹி மின் ஹா

ஏழாவது பசல்.

பெண்பாதி பிறரைநாடாதிருக்கவும் புருடன் இணக்கமாயிருக்கவுமான விஷயங்களை.

ஆகுமானவுடையால் அலங்கரித்துவாசமணிவதும்பெண்கள்நகை ஆபரணாதிகளணிந்துக் கொள்வதும், ஆண்பிள்ளைகள்- 357 381-வது பக்கங்களிற்கூறியபடி ஒவ்வொருஜீம் ஆக்களிலும் தலைரோமஞ் சிரைத்து அல்லது கத்திரித்து, தாடி, மீசை, நகங்களை அளவுப்படிக்களைந்து மூக்கு, கழுக்கூடு, கீழ்ரோமஞ்சிரைந்து சுத்திசெய்வதும், பெண்கள் தலை ரோமம் வகிர்ந்து மிணுக்கிக்கீழ்ரோமம் பிடுங்கி அலங்கரித்துக் கொள்வதும் ஒவ்வொருவரும், கெட்டகுணங்களுக்கு இதற்குப் பின்வருமாகிய அத்தாட்சிகளை யூகித்தும்பொருதிசெய்துக்கொள்வதும் ஒவ்வொருவரும் உகந்துப்பிறரை நாடாதிருக்கவே காரணமாகும்.

எட்டாவது பசல்.

புருடன் மறைந்த நேரத்தில், தன் ஸ்திரிகள் செய்த செய்கைகளைப் பற்றியது--

புருடன், தான் மறைந்தநேரத்தில் தங்கள் இஸ்திரிகள் மனநோவச் செய்த செயற்கைகளைத் தன்னிற்றானே நோட்டமிட்டு, அல்லாஹுத்த ஆலாவின் கார்மானந் தன்னிலிருந்தால், தன்னிஸ்திரிகளிலுமுண்டு அகமிய முடையவன் அல்லாஹுத்த ஆலாவா யிருப்பதாலும், இஸ்திரகளை நலவாய் நடத்திவாருங்கள் இஸ்திரிகளை அதிகக் கோணலாகிய பழுவென்பால் சிருட்டிக்கப் பட்டிருப்பதாலே, அவ்வெண்மை நேராய் திருத்த நாடினால் ஒடியும் திருத்தாமல் விடுகிலதன் கோணல் நீங்காதிருக்கு மாகையால் அவர்களை நேராகக்கொண்டு நடத்தி "சித்தாறு"ன்னும் வசுபைப் பூண்டும் பொருதி செய்யுங்களென்று நபிநாயகந் திருவருட் செய்திருப்பதாலும் சபூர் செய்வது கடமை.

ஏனெனில்; அடியார்கள்செய்யும்நன்மைகளில் ஒன்றுக்குப்பத்து முதல் எழுபது வரையிலும் அதிற்கதிகமாயு மிரட்டிப்பாய் கொடுக்கப் படும் சபூர் செய்வதைத்தவிர அக்கூலியை யாராலு மறியப்படமாட்டாது. (தலீல்) பொறுதியுடையவர், தாங்கள் கூலியை நிறைவேற்றப் படுவதெல்லாம், கணக்கன்றியே யிருக்கும். பொறுதியுடையவரை அல்லாஹுத்த ஆலா, உகந்திருக்கிறான். மேன்:மாளிகை உயர்ந்த கூடகோபுரங்களைக் கொடுக்கப்படுவார்கள். பொறுதியுடையவருக்கு நன்மாராயஞ் சொல்லும்பொறுதியுடையவர்மீது அவர்களின்நாயகனி[illegible]னின்றும் சலவாத்தும் ஸலாமும் றகுமத்து முண்டாவனவாக அவர்கள் தாமீடேற்றம் பெற்றவர்கள் அல்லாஹுத்த ஆலா பொறுதியுடைய வருடனிருக்கின்றான்.

இவ்விதமாக நமது குறுஆன் வேதத்தில்; பொறுதியுடையவர்கட்கு எட்டுப் பதவிகளைத் திருவுளம்பற்றி யிருப்பதாலே அவர்களின் மகுத்துவத்தை அவனல்லாமல் யாருமறியார்கள் மறைந்த நேரத்தில் மனநோவச் செய்த நிமுத்தம் பொறுதிசெய்ததற் கிவ்வாறானல் நேரில் நடத்தும் மனவாதனைக்கு நல்லறிவு புகட்டிச் சபூர்செய்பவர் கட்குக் கிடைக்கு மகிமையையள விடுதற்கரிதேயாம்.

ஒன்பதாவது பசல்.

வசியம்.

“ஆகிறு அபுவாபில்” புத்துஹாத்தில் மக்கிய்யா எனுங் கிரந்தத்தில் வருகின்றனவாவது, அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றியிருக்கின்றான் “கலக்கல் மௌத்த வல்ஹயாத்த” எஃனீ உங்களில் அ[illegible] செய்வதால் அழகானவரியாரெனவறிவதற்காக, மவுத்தையும்,ஹயாத்தையும் படைத்தானென்று, ஆகவே, சோதனை, பலால், வித்னா ஒரு பொருள்வாக்கியமேயாம், பித்னாக்களில் மிகவும்வலுப்பமுள்ளவைகள் பெண், தலைமைத்தனம், பொருள், பிள்ளை இவை நான்காயிருக்கும். இந்நான்கு, அல்லது இவைகளிலொன்றைக்கொண்டு ஒருவனை அல்லாஹுத் தஆலா சோதித்தபொழுது, அது அதுக்கு[illegible] பா[illegible]யதநிற் றரிபடுத்தி அதிலவனுடந்தையா வதன்றி, அதை “இலாஹிய்யத்தான நிஃமத்தாக வொப்புக்கொண்டு அவனளவில் திரும்பவுமீட்டினால்அதன்

பாத்தியத்தைப் பேணினவனும் அந்நிஃமத்தில் தன்னெஜமானின் நன்றியறிந்தவனுமாவான்.

அத்தாட்சி, என்னிஃமத்துக்கு நன்றியறியும் பாத்தியப்படி நன்றியை நீர் அறிவீரென்று நபிமூஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர் கண்மீது "வஹீ" வந்தபொழுது யாராலவ்வாறறியக் கூடுமென்று "நபி" அவர்கள் கூறியபோது, ஓர் நிஃமத்தை என்னின்றுமுள்ளதாய் நீர் காணப்படுவதுதாம் என்னிஃமத்துக்கு நன்றியறியும் பாத்தியமென" அல்லாஹுத்தஆலா அறிவித்தான்.

நீ, அறிந்துக்கொள் பெண்களையுகப்பதில் அல்லாஹுத்தஆலா அளவிற் சேர்த்துவைக்குங் கோலமாவது; நிரப்பமுள்ளவொன்று தன்னினின்றுஞ் சிறிதையுகந்து அதனளவிற் சாவதாக நியானித்தல், தன் நபுசைத்தவிரத் தானுகப்பாகவில்லை ஏனெனில்; ஆண்களின் இடது பழுவென்பினின்றும் பெண்களைச் சிருட்டித்து "இன்ஸான்" காமிலைப் படைத்த சுரூபத்தின் பதவியில் ஆண்களின் ஸ்தூலத்தினின்றுமே பெண்களை யிறக்கி யிருப்பதாலே அது தாம் "ஹக்கு" டைய சூரத்து அங்ஙனம் ஹக்குவெளியாகுந் தலமாயினது.

ஒருபெண்ணைப் பார்த்தவனுக்குஇவ்வாறுதயமாகில்அதிலவனையே யொழிய பார்க்கவில்லை அந்த ஸ்திரியில், தான்கொண்டிருககும் கடினமான மையலின் காரணத்தால் அவளில் தன்னபுசைப் பார்ப்பானாகில் தன் சுரூபத்தையே கண்டுக்கொள்ளுவான். அந்த சுரூபமாகின்றது; அவனை யுற்பத்தியாக்கு வித்தஹக்கின் சுரூபமே அங்ஙனம் அவன் "ஹக்கல்லாத்ததைக்காணவில்லை ஆயினும், உகப்பாகிய மோகம் இன்பம் என்ற சேர்மானத்தாலேயே யிருக்கும் ஆதலாலதில்உண்மையான உகப்பைக்கொண்டு ஹக்குடையபனுவாகவே பனுவாகி, தன் ஸ்தூலத்தாலவளுடன் ஒப்புள்ளதின் சந்திப்பைப்போற் சந்தித்து அவளிற்பனுவாகின்றான்.

பத்தாவது பசுல்.

தலைமைத்தனமென்ற இராஜவசியம்.

நீ, அறிந்துக்கொள்; அதிகாரமென்னுந் தலைமை, தனத்தை "அல்லாஹுத்தஆலா" அளவிற்சேற்பி குங்கோலமாவது; திடனைக் "இன்

ஸானில் அல்லாஹுத்தஆலாமிகுத்த விஷயங்களை யமைத்திருக்கின்றான். உங்களில் உங்களினின்றும் யாருமறியாத இரகசியம், பராகசியங்களை யவனறிவான், ஒருவன், தன்னபுசிலுண்டா யிருக்கின்றதாயறியாதவைகளை 'அவன் வெளியாக்குவிப்பான் அதினின்றுமொன்றுதாம் தான் பெற்றுக்கொண்டதலைமைத்தனமென்றறிவாய், அத்தாட்சிதன்னை யறிந்தவன் தன் "றப்பை" அறிவானென்று நபிகளுபகந் திருவுளம் பற்றியிருப்பதுபோலே ஒவ்வொருவனுந்தன் நபுசைப் பார்க்குகிறதில்லை, அன்னபுசு அவனுகவே யல்லாமல், என்று.

ஆகையால் நோய்வாய்ப்பட்டவன் தன்னபுசிலுண்டா யிருக்கின்றன வற்றிறொன்றை யறிந்திரா திருக்கையில் அந்நோயுடையவனில் வைத்தியனதை யறிப்படுவது போலே, தன்னில் வெளிவருகிறதற்கு முன் தானறியாமல் அல்லாஹுத்தஆலா அமைத்துவைத்திருக்கின்றவொன்றை அந்த இன்ஸானில் வெளிப்படுத்திய பொழுதுத் தன்னபுசிலதைத்தெரிந்துக் கொள்கின்றான். சித்தீக்கீன்களின் கல்புகளினின்று வெளியாகும் முடிவு ஆனது "றியாசத்" தென்னுமதிகாரத்தை யுகப்பதாகவிருக்கும் அன்னோர்களிலது வெளியானபொழுது அதை அவர்கள் மூடர்களினுகப்புக்கு மாற்றமாயுகப்பார்கள் மேலும் அவன்அவர்களின் பார்வையாயும் கேள்வியாயும் அவர்களின் சகல உறுப்புகளின் "திக்று"யும் ஆயிருக்கின்றானென்று, சித்தீக்கீன்களின் ஹக்கில் அல்லாஹுத்தஆலா அருளியப்படி அதை அவர்களுக்கப்பார்கள் அங்ஙனம் அல்லாஹுத்தஆலா வைத்தவிர அவர்களுகப்பாகவில்லை ஏனெனில் அந்த அதிகாரத்திற்கு முந்துதலுண்டாயிருக்கின்றதுஅதைஆலத்தின் தலைவனல்லாது உகப்பாகமாட்டான் கற்பனையாலும் உள்ளமையாலும், தலைமையாக்கப்பட்டவ னல்லாமல் மற்றவன் தலைவனுகான் அவ்வாறாக்கப்பட்டதற்கு. உகப்பது அது உகப்பின் கடிது அதைத் தரிபடுத்தியவன் அல்லாஹுத்தஆலாவாகவே யிருப்பதால் அங்ஙனம் அது இராஜரீகத்திற்குரிய, உகப்பாகமாட்டாது இதுவே சித்திக்கீன்களின் ஹக்கில் முற்கூறப்பட்ட உகப்பாகும் இவ்வண்ணமவர்களுகக்காவிட்டால்" ஆதநபியை "தன் சுரூபத்திற் படைத்தான் என்ற" [illegible]தின்படி அன்னோர்களின் சுரூபத்தை எதின் [illegible]ரிற் படைத்தானோ அதனின்பத்தை அந்த அதிகார வரம்பாலறிவதுண்டா[illegible]க மாட்டாது. தலைமைதனத்தில் வலுப்பமானது அல்லாஹுத்தஆ[illegible] லுண்டான

தாகவிருக்கும் அவ்வாறுண்டானவன் தன் குறிப்புடன் தன்னை ஒப்பற்றவுவமையாயும் “றப்பாயு மடிமையாயு மறிவான்.

பதினொன்றாவது பசுல்.

பொருளைப்பற்றிய வசியம்.

நீ, அறிந்துக்கொள்; பொருளுடைய சீமான்தனத்தை அல்லாஹு தஆலா அளவிற்சேர்ப்பிக்குங் கோலமாவது. பொருளளவிற் கல்புகள் சாடுவதினாலே அதற்கு “மால்” என்று பெயருண்டாயினது. அதனால், சிற்சில விடயங்களை இலெகுவாக்கிக் கொள்ளும்விதத்தாலும், பொருளுடையவன், ஒத்தனை விருக்கினும், அவனளவில் கல்புகளின் கல்புகொளுக்குகின்ற விதத்தாலே, தன்னடிமைகளைச்சோதிக்குகின்றான் அப்பொருளால், தனக்குப்பயனில்லை யென்பதுசந்தேகமா யிருப்பதால் அதுடையவனை மற்றையோர் வலுப்பப்படுத்துகின்றார்கள். அப்பொருளுடையவன் இவர்களில்மிக்க மிடிமையுடையவனா யிருக்கின்றான். இவ்வாறுகல்புகளனைத்தும் பொருளள விற்சாடுவதாலே ஆரிபீன்கள்அதில் இலாஹிய்யததான விதமாக உகப்புவைக்கத் தேடினார்கள். அஃதாவது (தலீல்) வஅக்றிலுல்லா ஹகருளன் ஹஸனன், எஃனீ அழகாகிய கடனாய் அல்லாஹுத்தஆலாவுக்கு கடன் கொடுங்கள் என்ற திருவசனத்தின் ஏவலில், தாங்களுமாகித் தன்எஜமான் கேட்கப்பட்டதைக் கொடுத்து, இன்பமடைய பொருளையுகந்து அதனால் கொடுக்குங் கொடை றகுமானின் கைவசமாய்த் தரிபடுமெனக் காண்பார்கள் பொருளில்லாவிடில் “இலாஹிய்யத்தான” ஏவலுக் குரித்தில்லாதவராய் அவ்வேவலைக்கேளாதவராயும் றப்பானிய்யத்தான இக்கடனை யுண்டாக்கிக்கொள்ளாதவராயுமாகி விடுவதினாலே அப்பொருளை யுகப்பார்கள்.

பனிரண்டாவது பசுல்.

பிள்ளையைப்பற்றி யவசியம்.

நீ அறிந்துக்கொள் பிள்ளை யுண்டாகுதலை அல்லாஹ் அளவிற்றிருப்புங் கோலமாவது பிள்ளை, தகப்பனின் இரகசியமாயும். ஈரல்

கொலையின், துண்டாயு மிருப்பதால், சிற்சில விஷயத்தை அதிற் சேர்ப்பித்தான் தகப்பன் பிள்ளையை உகப்பது ஒரு வஸ்துவு அது தன்னையேதானு கந்தாகும் தன்நபுசைப் பார்க்கிலும் எவ்வஸ்துவுந் தனக்கு கந்தாகமாட்டாது. ஆதலால் அவனினின்றும்வெளியான சுருபத்தில் அவனுக்குத் தகப்பனென்னும் பட்டஞ்சூட்டி அவன்புசைக் கொண்டு அல்லாஹுத்தஆலா சோதிக்கின்றான் பாவிகளி னிரட்சகர் நமது நாயகத்தின் மகளார், செய்துனா “பாத்திமா” அவர்களின் பதவி நாயகத்தின் கல்பில் அளவிடுதற்கியல்பில்லா மனிறைந்திருக்க முஹம்மதுடைய மகள் “பாத்திமா” களவு செய்தாலுங் கையைத் தறிக்கப்படும் “என்ற” ஹதீதாலும். செய்யிதுனா உமறு அவர்கள், தங்கள் மகனார் வினைசெய்த விஷயத்தில் “ஹத்தை” நிறைவேற்றியதில் மகனார் மவுத்தானதால் சந்தோஷமடைந்தாலும், ஒவ்வொருவரும் பிள்ளைகளின் மீது “ஹக்கை” தரிபடுத்துவதில்; ஹக்கைவிட்டும் பிள்ளையளவிற் பட்சம் வைத்து பார்ப்பதினால், ஹக்குத்தஆலாவின் கட்டளைகளை நிறைவேற்றுகின்றார்களா இல்லையாவென்று சோதிப்பதற்காகவே பிள்ளைகளை வெளிப்படுத்தி வைக்குகின்றான்.

பதினாறும் பாபு முற்றிற்று.

பதினேழாம் பாபு.

ஆண்குறியின் ஆராச்சிகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

ஹுக்கமாக்கள் ஒன்று சேர்ந்து சொன்னார்கள். நுரை நீக்கிய தேனில்; முள்ளங்கி விரையை இடித்துச் சேர்த்து இள நெருப்பில் வைத்துறைந்தவுடன் விரைவிலிறக்கி, ஒவ்வொருநாளும் வெறும்வயிற்றிலும் நித்திரையிலுந் தின்றுவந்தால், கோசமுசும்புதலிழந்தவனாயிருக்கினும் பெலப்படுத்தும் என்று அதிக ஜிமாகினால் தங்கடங்க னுண்டானால் இரண்டு ஊக்கியா தேனில், இரண்டு ஊக்கியா வெண்ணெய் சேர்த்துட்கொண்டாலும், அல்லதுபன்னீரையும், தேனையும்; [illegible]து, நுரை நீக்கிய தேன் ஒருஅளவும், தண்ணீர் இரு அளவும் ஒன்று சேர்த்துத் தண்ணீர்வற்றமட்டும் நெருப்பிற் காய்ச்சி ஜிமாஇல் நின்று இறங்கிய

வுடனருந்தினாலும் வெளிப்பட்ட இந்திரியத்துக்குப் பகரமாயிந்திரீய விளைவுண்டாகிச் சரீரத்தைப் பெலப்படுத்தும்.

இன்னும், சுக்கு, மிளகு, காம்பு முஸ்தக்காய், முள்ளங்கி விரை இவைகளில் வகைக்கு ஒரு ஊக்கியா அளவெடுத்திடித்து, தேனில் மிதக்கும்படிக்குக் குழைத்து நெருப்பில் வற்றக்காய்ச்சி ஒவ்வொரு நாளும் நித்திரையின் பொழுது, ஒரு குபுலா; அல்லது இரண்டு குபுலா தின்றுவரலாம் சூடதிகமானால், தயிரைக் குடிப்பதாலும் அல்லது ஒரு ஊக்கியா, காம்பு மொட்டை இடித்து தேனிற் குழைத்து வெறும் வயிற்றி லருந்திவந்தாலும், அல்லது ஒரு ஊக்கியா, உளுந்தை ஓரிரவு பகல் நெய்யிற் புளிக்கவைத்து, பின்பு, நெருப்பிற் கொதிக்க வைத்துத் தொலி நீக்கி இரண்டு குபுலா சிற்றரத்தை, இரண்டு குபுலா ஏலம் இரண்டு குபுலா குங்குமப்பூ சேர்த்திடித்துத் தேனிற் குழைத்து, சயனிக்கும்பொழுது இரண்டு குபுலா இடை தின்றுவந்தாலும் அல்லது இரண்டு கோழிமுட்டை கருவுடன் ஒன்றரை குபுலா பெருங்காயத்தை நன்றாகப் பொடித்ததுடன் சேர்ப்பித்து மேவசெய்து அருகுகள் தீயாமற் கிண்டியிறக்கி ஆறியபின் தின்றுவந்தாலும், அல்லது, அனீசூனைப் பொடித்து, தண்ணீரில் அல்லது நெருப்பு நூர்ந்த தண்ணீரிலிட்டும், அல்லது சுக்கை இடித்து ஆவின்பாலிற் சேர்த்தும், அல்லது குங்குமப்பூத் தண்ணீர் அரை திருகமும், காம்பு அல்லது, சிற்றரத்தையைப் பொடித்து, கறந்த பாலிற் சேர்த்தும் அல்லது பால்வகை யாவற்றுடன் வெறும் வயிற்றிற் குடித்து வந்தாலும் இஞ்சிமுறபா, பாதம், வாழைப்பழம் தேங்காய் கொடிமுந்திரிப் பழம் சுடப்பட்டவெங்காயம் அல்லது சமைத்த வெங்காயம் பச்சை மீன், முட்டை வகைகள் இவைகளைத் தனித்தனியாகப் பரிமாறிவந்தாலுந் தாதைப் பெலப்படுத்தும். ஆவின்பாலிற் பூண்டைச் சமைத்து தேனுடனருந்தினாலுந் தாதைப் பலப்படுத்தும் ஓநாயின் பித்து, கழுதைப்பால், கருங்காகத்தின் பித்து, இவைகளி லொன்றை வெண்ணெயிற் கலந்துக் கோசத்திற் பூசிவருகில் வலுவுண்டாகி தாதை நயப்படுத்தும். ஓநாயின் கோசத்தை யுலர்த்தி அதில் ஒரு மொச்சைக்கொட்டை பிரமாணம் இலேசாக சுட்டு ஜிமாஐ நாடிய நேரத்திலுட்கொண்டா லதிகவீரியவிர்த்தியுண்டாகும் வெங்காய நீர்பங்கொன்றும் நுரைநீக்கியதேன் இரண்டுபங்குமொன்றுசேர்த்துநீர் சுண்டமட்டும்காய்ச்சி வைத்துக்கொண்டுத் தேவையாகும்பொழுது அதிலொரு ஊக்கியா அளவை ஓரிரவுப் பகலூறிய மூன்று ஊக்கியா கொண்டைக்கடலை நீருடன்சேர்த்துக் குடித்தால் தாதையதிகப்படுத்தும் நேமமாயருந்தி வந்தால் கோசவலுவும் தாதுவிர்த்தியுமதிகரிக்கும். ஆனாலிதைக் கோடைகாலத்திலுட்கொள்ளல் கூடாது. பெலமாக்கும்முட்டையின் மஞ்சட்கருவை தனியாகஅல்லதுஇடித்தவெங்காயத்துடன் சேர்த்தாவது வெறும்வயிற்றில் மூன்றுதினம் விடாமல் தின்றுவருகஜிமாஐ அதிகப்படுத்தும் ஒட்டகைப்பாலை, தேனுடன்கலந்துதின்றுவந்தால்தாதைப்பெலப்படுத்தும்கறுத்தஇறகுள்ள எறும்பை சப்பங்கியெண்ணெயுடன் சீசாவிலடைத்து ஐந்து நாள்மட்டுஞ்சூரியப்புடத்தி விட்டுத் தெளிவிருத்துப் பூசிவருகக், கோசத் தளர்ச்சிகணீங்கும்.

இரண்டாவது பசல்.

தாதுவிர்த்திக்குரிய யதார்த்த வகைகள்.

ஜிமாஉ முடிந்தவுடன் தேனுடன் தண்ணீர் கலந்துகுடித்தால் குறுக்கென்பை வலுப்படுத்தும், வாலிபமான கோழிமாமிசம், புத்தியையும், மணியையும் விர்த்திசெய்துச் சப்தத்தையும் தெளிவாக்கும் இவ்விதமே செம்மறிக்கடாவின் மாமிசமும் அதில் விரையடித்தது மிக்க நலம்.

கோழி முட்டையுடன் நெய் அல்லது தேனைவிட்டுக் கொதிக்க வைத்து அத்துடன் அவை முங்கும்படிக்குத் தேனைவிட்டு கலந்து ரொட்டியுடன் வயிறுநிறம்பும் வரையிலிருந்தினாலும் வெங்காயவிரையைப் பொடித்துத் தேனுடன் கலந்தருந்தினாலும் தாதைப் பெலமாக்கும் காளைக்கன்றின் கோசத்தையுலர்த்திப் பொடித்தொருதிருகத்திடையுட் கொண்டாலதிக் தாது விர்தியை யடைவான் ஒட்டகை மாமிசம் தின்றாலும் பசுமாட்டின் கொம்பை நறுக்கி அல்லது காட்டுமாட்டுக்கொம்பைக் கரித்து அல்லது குழிநரி விரை கொட்டையை யுலர்த்தி அதிலொரு திருகத்திடை அல்லது துஞ்சீப யாட்டின் கிரண்டைக் காலைப் பொடித்து அல்லது பழந்தின்னி வவ்வாலின் தாமரைக்காயை யுலர்த்தி பொடித்துக் குடிப்புடன் சேர்த்து குடித்தாலும் அல்லது கோழிமுட்டையைப் பச்சையாகக்குடித்தாலும்

அதன் மாமிசத்தை, பத்து ஈருள்ளி, ஒருபிடி, எள்ளுடன் சேர்த்துச் சதையழியுமட்டும் வேகவைத்துட்கொண்டாலும், கருங்கோழி யெண்ணெய் காட்டுமாட்டின் கொம்பின் சாம்பல் கழுகின் ஈரலைக் கரித்த சாம்பலிவைகளை யுட்கொண்டாலும், மேற்படி எண்ணெயில் நான்கு இருகத்திடை பொருந்திக்கொண்டாலும், பச்சைமீனை வெங்காயயதுடன் சேர்த்துச் சமைத்து தின்றாலும் சிற்றரத்தை பருத்திவிரை இவைகளை அரைத்துத் தேனில் கலந்துட்கொண்டாலும், பசுக்கன்றின் விரைகொட்டையை யுலர்த்திக் கரித்துப்பொடித்துட்கொண்டாலும், ஊர்க்குருவி மாமிசந் தின்றாலும், அதன், இரத்தத்திற் பருப்புமாவைக் குழைத்துருண்டை செய்துலர்த்தித் தேள்வையுள்ள நேரமருந்தினாலும் தாதுவிர்த்தியாகி கோசநரம்பு, சவ்வுகளைப் பெலமாக்குவதில் ஆச்சரியத்தைக் காண்கலாம்.

மூன்றாவது பசுல்.

தாதுவிர்த்திக்குரிய பூச்சுமுறைகள்.

அவ்வுருண்டையை ஜெபித்துனெண்ணெயிற்கலந்து, அல்லது, குதிரைவிட்டையும் பன்னீர்ப்பூ வெண்ணெயிற்கலந்து, அல்லதுகழுதைப்பால் அல்லது பன்றிக்குட்டிப்பித்தைத் தேனுடன் கலந்துஅல்லது சாவலினிரத்தத்தைத்தேனுடன்கலந்து காய்ச்சி அல்லது கழுகின் பித்தும் சப்பங்கி யெண்ணெயுங்கலந்து அல்லது, இராஜாளி (வல்வத்தான்) மூளையை அல்லது உடும்பின் கொழுப்பையுருக்கிக் கோசத்திற் பூசிவருக, கோசத்தின் தளர்ச்சி நீங்கிஅதன் சவ்வு நரம்பு இவைகளை வலுபடுத்தும் வௌவாலினிரத்தத்தைப் பாதத்திற் பூசிஜிமாஉ செய்தால் தாதையதிகப் படுத்தும்.

நான்காவது பசுல்.

தாதுவிர்த்திக்குச் சுமந்துக் கொள்ளுமினங்கள்.

கரடிப்பித்தை வலது தொடையிற் கூட்டிக்கொண்டாலும் முதலையின் வலபாகத்துப் பல்லிலொன்றைக் கட்டிக்கொண்டாலும், கோழியின்இரைப்பெட்டியிலுள்ள கற்களைச் சுமந்துகொண்டாலும் சாவலின் விரைக்கொட்டையைத்தாளில் மடித்து இடது கெரண்டைக்காலிற் கட்டிக்கொண்டாலும், ஊர்க்குருவியின் இரண்டு விரைக்கொட்டையை

புலர்த்தித் துணியிற்பொதிந்துத் தலையிற் கட்டிக்கொண்டாலுந் தாதையதிகரிக்கச்செய்யும்.

ஐந்தாவது பசுல்.

இந்திரியவரட்சியு நீங்கப்பரிகாரங்கள்

மொச்சைக்கொட்டையை யுரைத்து அடிவயிற்றிற் றடவுதலாலும், கற்பூரத்தைப்பரிமாறுவதாலும், முள்ளங்கி இலையிற்சயனிப்பதாலும் குளிர்ந்த ஜலத்தை வெறும்வயிற்றிற்குடிப்பதாலும், பருப்பைத் தேனுடன் சமைத்துட்கொண்டாலும் ஹம்க்காவு கிரைத்தண்ணீர்குடித்தாலும் ஈயத்துண்டை அடிவயிறு முதுகு இவைகளில்வைத்தாலும் மணியைவரட்சியாக்கிப் பெலஹீனத்தையுண்டாக்கும்.

புளிப்புள்ள வஸ்துக்கள், குளிர்ச்சியுள்ளவை உலர்ந்த வஸ்துக்கள் அதாவது தவிடு கோதும்புரொட்டி குழைத்தமாவு, சோளம், பயிறு பருப்பு, முசல், வெள்ளாடு, ஒட்டகை மாமிசம் சுட்டமாமிசங்கள், கருவாடு, பழயரொட்டி, கற்றாழை சிறுக்காய், ஜெபித்துனெண்ணெய் உப்பு சதாபு மல்லி கொடிமுந்திரி தலைக்காய். சீரகம், மிளகு, சபர்ஜல் இலந்தைப்பழமிவைகள் போலுள்ளவைகளும் மணியை வரட்சியாக்கி இந்திரியவிளைவை நாசப்படுத்தும்

ஆறாவது பசுல்.

மிகைப்பாகிய மோகத்தை நீக்கும் வகைகள்.

பிடரியின் பேரிற் சயனிடுப்பதும் வரகு" என்றஉயிர்நரம்பையும், கோசத்தையும், குளிர்ச்சியான வஸ்துக்களாலிளகலாக்கிவைப்பதும், குளிர்ச்சியான விரிப்பில்உறங்குவதும் கோசம் விரைக்கொட்டையிற் கற்பூரம் பன்னீர் இவைகளைப் பூசுவதும் காராக்கோட்டியை யதிகரிக்கச் செய்து மோகத்தை விலக்கும்.

ஏழாவது பசுல்.

கோசதளர்ச்சி நீங்கிக் கெட்டிபடுதற் குரியவைகளைக் கூறல்.

கருஞ்சீரகத்தை யரைத்துத் தேனில் மத்தித்து மூன்று நாள்மட்டும் நெய்யில் மிதக்கவைத்து, சயனிக்கும்பொழுது விரலால் மூன்று தடவை யெடுத்தருந்தி வந்தாலும், நுரை நீக்கியதேனில், குங்குமப்பூவைமத்தித்துக் குடிப்பிற் குடித்தாலும், முள்ளங்கி விரையை யரைத்து எண்ணெயில் மத்தித்து அல்லது வெள்வெங்காயத்தை யிடித்து எண்ணெயிற் கொதிக்க வைத்து பூசினாலுங் களர்ச்சி நீங்கும்.

எட்டாவது பசுல்

கோசவலுவுக்கான முறைகள்.

கரையானைச் சிறுக்காவிட்டரைத்து நல்லெண்ணெயில் மத்தித்து அல்லது நீருள்ள தேங்காயினுள் அட்டையை விட்டடைத்து வற்றி நீரைப் பூசிவந்தாலும் தீரும்.

ஒன்பதாவது பசுல்.

கோசம் சூம்பிவிட்டதற்குப் பரிகாரம்.

கடனுரையைப் பொடித்துத் தண்ணீரிலிட்டு அல்லது, மிளகு, அரிசி திப்பிலி, சிற்றரத்தை, கஸ்தூரி இவைகளைச் சமநிறை யெடுத்திடித்து இஞ்சிமுறபா தேனில் மத்தித்து அல்லது அட்டை தைலம் இவைகளி லொன்றைக்கொண்டுச் சுடுநீர் விட்டுக் கழுகியபின் பூசி, பிறகு, கொடி முந்திரி நீரினாற் கழுகிவரமுன் போலாகும்

பத்தாவது பசுல்.

கோசம் வழுமைக்கு விரோதமாய் அதிக சிறுசாகின் தற்கும் சிகிச்சை.

கெந்தகம், மிளகு, சமமாயெடுத்திடித்து வடித்துத் தேனில் மத்தித்து அல்லது பருத்திக்கொட்டைப் பருப்பை ஆவின்பாலிலரைத்து அல்லது அட்டையின் மேலுள்ள பசண்டவழுவழுப்பு இவைகளி லொன்றைப் பூசத்தீரும்.

பதினொன்றாவது பசுல்.

நாட்டமின்றி இந்திரியம் வெளியாகும் நோயுக்குப் பரிகாரம்.

இந்திரியத்தை யுலரச்செய்யும் அவிட்தங்களைப் பரிமாறி வருதலும். இரண்டு விரைக்கொட்டையையுங் குளிர்ந்த ஜலத்தில் நன்றாய்க் கனிய நீர் செரும்பும்வரையில் வைத்திருப்பதும், நாட்டமன்றி மணி, வதி, மதி, என்றவைகளை வெளிப்படுத்தும் நோய்கடீரும்.

பன்னிரண்டாவது பசுல்.

கோசவீக்கம் வலிபோன்ற நோய்கட்குச் சிகிச்சைகள்.

காளைமாட்டின் பித்தைத் தேனில் மத்தித்து ஆண்பெண்களின் வெட்கஸ்தலத்தி லுண்டாயின கெடுதியானபுண், நோவு வலிபோன்றவைகட்கும் பூசினாலும், சுரைக்காயின் தொலியைக்கரித்துத் தேனில் மத்தித்து அல்லது கற்றாழை சோற்றை ஜலத்தில் மத்தித்து அல்லது பன்னீரெண்ணெயை மூலைப்பாலிற் சேர்ப்பித்து அல்லது பழையவெண்பு அல்லது சிருமாவைப்பொடித்துத் தேனில் மத்தித்து அல்லதுகோழிமுட்டையின் வெள்ளைக்கரு, பன்னீரெண்ணெய், குங்குமப்பூ சமமாய் சேர்த்துக்குழைத்து அல்லது எண்ணெய் கொழுப்புவகைகள், மெழுகுபோலுள்ளவை இவைகளிலொன்றை ஆண்பெண்களின் வெட்கஸ்தலத்தி லுண்டாயின கெடுதியான புண், நோவ் வலி, வீக்கங்களிலும் மற்றைய வீக்கம் வலியுள்ள விடங்களிலும் பூசி, சையோகத்தை விலக்கிவருக அந்நோய்கள் தீரும்.

வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப்.

பதினேழாம்பாபு. முற்றிற்று.

பதினெட்டாம் பாபு.

தாதினது கருமங்களைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

தாதுவின் குறைகியக்கூறுமதன் பரிகாரமுங் கூறல்.

நீ, அறிந்துக்கொள்; தாதாகிறது குளிர்ச்சி அதிகரித்தாலும் சீதளமேற்படுதலாலும் சூடு அதிகரித்தாலும் சீதள நிலைமையிற் சூடான வஸ்துக்களைப் புசிப்பதனாலும் தாதுபெலவீனமாகும், அதில் சூட்டினாற்பெலவீனமானால்; முந்திரிப்பாணி அன்றேல் நுரைநீக்கிய தேன் இவைகளி லொன்றை அருந்தி சோளக்கூழைப் புசிப்பதினாலும் குளிர்ச்சியினாற் பெலவீனமானால்; தேனை இளநெருப்பில் வைத்து நுரைநீக்கித் துப்புரவான குந்துருவைப்போட்டது உருகும் வரையிற்

கிண்டி இறக்கிவெறும் வயிற்றிலும் சயனிக்கும்போதுங் குடித்து, தும்பையாட்டு மாமிசமும் ரொட்டியுந் தின்பதாலுமப்பெலஹீனத்தை மாற்றும் சிலவேளை வெட்கத்தாலும் அல்லது பொருத்தக் கேட்டினாலும் கோசத்தின் சக்தி உசும்புத லிழளந்துபோம் அதற்கு.

இன்னும் கருஞ்சீரகத்தைச் சுத்திசெய்து தேனிற்சமைத்து நாளொன்றுக்கு ஒருலுக்மா அதாவது ஒரு பிடிசாதமளவு மூன்றுநாள் தின்றுவந்தாலும் ஆவின்பாலை நேமமாய் அருந்திவந்தாலும் சிற்றரத்தைக் கொம்பைவாயிலடக்கி வந்தாலும், இஞ்சிமுறபா தின்று வந்தாலும் வரட்சியான சூட்டினால் பெலஹீனமானதாக விருந்தால்; தயிருகுடித்துப் பச்சை மீனைப்பரிமாறுவதாலும் அதுபோல்வன குளிர்ச்சியான வஸ்துக்களைப் பரிமாறுவதாலும், பன்பசஜா. சுரை, பன்னீர்எள், இவைகளைத் தின்று, குளிர்ச்சியான எண்ணெய்களைக் கோசத்திற் பூசுவதாலு நிவர்த்தியாம்.

* * *

இரண்டாவது பசுல்.

தத்துவக்குறைவு நேரிடுவதையு மதுவுண்டாகுவதையுங் கூறல்.

* * *

சிலவேளையிற் குளிர்ச்சி அன்றேல்; உஷ்டண மிகைப்பாகி சரீரங் குளிர்வதால், அன்றேல்; குடல் நரம்பு, தாமரைக்காய் இவைகளில் வின்னப்பேதக நேரிடுவதால், தத்துவக்குறைவு நேரிடும் அதில்; குளிராலுண்டானதற்கு "வயிற்றிரைச்சல் ஊற்றமிவைகட்குக் கூறப்பட்ட பரிகாரத்தைச் செய்வதும், உட்டணத்தாலுண்டானதற்கு" மேற்கூறிய பரிகாரத்தைத் தவிழ்ந்து அதற்கு மாற்றமானவைகளைப் பரிமாறலும், கோபம், நபுசை திடுக்கமாக்குவிக்கும் விஷயங்களைத் தவிழ்வதும் சந்தோஷம், மகிழ்ச்சியைக்கொண்டு பராக்காகுவதும், ரொட்டியைத் தும்பையாட்டு "சால்னா" ஆணத்திற் புசிப்பதும், குளிருண்டானதற்கு, கஸ்தூரி அம்பரையும், சூடுண்டானதற்கு, பன்னீர் சந்தனம், கற்பூரமிவைகளைப் பரிமாறுவதும் வாலான்தண்டுக் கொழுப்புவகையறாவைத் தின்னுவதை விலக்குவதும், பசி, தாகம், அடிக்கடி வயிறுநிரப்பல் இவைகளைப் பேணுவதும் ஆவசியகமே.

* * *

மூன்றாவது பசுல்.

தத்துவமுண்டாவதற்கு நிகரற்ற பேய்க்கு மட்டிலேகியம் கூறல்.

சரீரமும், தாதும் பெலமாகவும் தீன்குடிப்பு சமரசமாய்ச் செல்வதற்கும், பேய்க்கும் மட்டிக்காய் அவிழ்தம் மிக அருமையானது அதற்கு நிகருள்ளது இல்லையென்பது சவிஸ்தாரம். அதாவது; ஒரு காய் அன்றிப் பலகாய்களைக் காய்த்திருக்கும் பேய்க்கும் மட்டிச்செடியில், பசுமையன்றி மஞ்சணிப்பாய் பழுத்திருக்கின்ற அப்பழத்திய இருபது பழத்தைப் பறித்து, தொலி, விரைகணீக்கிச் சதையை "சுபுஹா" முதல் மறுநாள் சுபுஹா வரையில் தண்ணீரில் மிதக்கவிட்டுப் புளிப்படைந்த பின்னர், அத்தண்ணீரை யிறுத்துவிட்டுப் புதிய தண்ணீர் மாற்றி இவ்வாறு மூன்றுநாள் செய்குவதிலதன் கசப்பு நீங்காவிடில் பலமுறையு மவ்வாறாகச்செய்து, பின்னர் அதனிலுள்ள நீரடங்கலையு நன்றாகப் பிழிந்தெடுத்து; சுக்காவாக வுலர்த்தி மூன்றுநாளைக்குப் போதுமான கோதம்புமாவுடன் கலந்திடித்து, வழக்கம்போல் ரொட்டிவகையறாக்கள் சமைத்துக் காலை மாலை மூன்றுதினம் நெய் தேனுடன் தின்றால், வயோதிகனாயினும், தன் வாலிபத்திற்பெற்றுக்கொள்ளாத தத்துவசக்தியை அடைவான், என்றும் மிகுத்த உலமாக்களால் பரீட்சிக்கப்பட்ட "கைவல்லியம்" என்றும் உறுதி கூறப்படுகின்றது. அச்செடியில் ஒரேகாயைக் காய்த்திருக்கக் காணப்பட்டால் "அக்காய்" கொல்லுகிற நஞ்சாம். "வல்லாஹுஷ்ஷாபி."

* * *

நான்காவது பசுல்.

நோயினால் மெலிந்தவனின் சரீரவெழுச்சிக் கவிழ்தங் கூறல்.

நோய்வாய்ப்பட்டதால்சரீரமெலிவுற்றுத்தத்துவக்குறைவேற்பட்டுபெலஹீனமானவன்" இரும்புக்கிட்டத்தை நீரிற்கழுவியுலர்த்தி மைபோலி த்துச் சமனிடை சருக்கரை சேர்த்துச் சூரணமாக்கி நாளொன்றுக்கு ஒருகுபுலா அளவு ஏழுநாள் தின்று வந்தால் சரீரவெழுச்சியும் தீர்க்கமான தத்துவமும் அதிகமான சுகத்தையுமடைவான்.

ஐந்தாவது பசுல்

தாதுவிர்த்திக் குரிய லேகியமுறைகளைக் கூறல்.

சரீர பெலஹீனத்துக்கும், பக்கா வாதத்துக்கும் உள்ளி லேகியம். நல்லாய்விளைந்த "உள்ளியை ஒருபானையிலிட்டு அதாமிதக்குமளவும் நெய் சேர்த்து, வாய்மூடி அடுப்பிலேற்றிக்கொஞ்சநேரமட்டுமெரித்திறக்கி அதின்எண்ணெய இறுத்தெடுத்துவிட்டு, குழவித்தேனை அது இறுகமட்டும் நன்றாய்க்காய்ச்சி, கராம்பு, சுக்கு, சீரகம், நான்கா, முஸ்தக்காய், குங்குமம், வகைக்கு ஒருகுபுலா எடுத்திடித்து, அத்தேனினுடனிதுவும் ஷ உள்ளியுடஞ்சேர்த்து சமூலத்தையு நன்றாக கிண்டி லேகிய மாகுமட்டு மெரித்திறக்கி, பளிங்கு அல்லது மண் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு தின்று வரவும். அதில் குங்குமம், முஸ்தகா யிவைகளை இடிக்கவேண்டுவதில்லை. மற்றைய சரக்குகள் ஆறும் குபுலா. 6. உள்ளி 10 உவாக்கு. தேன் 20 உவாக்கு. அடங்கலுமொன்று சேர்த்துக் கிண்டயில் சிறியதீ, எரிக்கவேண்டும்.

இன்னும் "உரித்தல்" தோல் போக்கிய உள்ளியை அது அமுங்கும் வரையிற் ஆவின்பாலை மிதக்க வூற்றி, உறைந்த தேனைப் போலாகுமட்டில் இள நெருப்பிற் சமைத்துக் கெட்டியாய்க்கிண்டி இறக்கி வழித்தெடுத்து மூன்று குபுலாச்சுக்கு, ஒன்றரைக் குபுலா குங்குமம், அரிசிதிப்பிலி, வால்மிளகு லவங்கப்பட்டை, கராம்பு, சமூலத்தையு மரைத்துத் தேனிற் கலந்து மேற்படி சமைத்த உள்ளி யுடன் சேர்த்து நன்றாய்ப் பக்குவமாய் கிண்டி யெடுத்து வைத்துகொண்டு, வெறும் வயிற்றிலும் நித்திரையின்போதும் ஒரு ஜாதிக்காயளவு தின்று வந்தால் ஜனிசீதளம், நிவிர்த்தியாகி, நாதுஅதிகரித்து தாமரைக்காயிற்சூடுண்டாகி, சிறுநீர் ஒழுக்குக்குப் பலனுண்டாகி அதை நீக்கிச் சொறிவங்குபோலொற்றவைகளை நீக்கி, நிறத்தை யழகாக்கி, புத்திக் கூர்மையை யுண்டாக்கி கண்ணின்தெளிவை அதிகப்படுத்தி, சிலேற்பனக்குவாளையைத் துப்புரவாக்கி, நீளித்த இருமல் புகைச்சல் மறதி இவைகளைத் தூரத்தியும் கூர்மையை யதிகமாக்குவிக்கும்.

சுக்கு, மிளகு, இவைகளைச் சமமாயெடுத் திடித்து வடித்து அந்நிறைக் குச்சீனி சேர்த்துப் பிசைந்து மூன்று திருகத்திடை வெறும் வயிற்றிலும் நித்திரையின்போதும் சூரணமாகத் தின்று வந்தால், சிலேற்பனத்தைத் தறித்துக் குடலை பெலமாக்கி, கெட்ட ஊனப்பசக்கை போக்கி, கட்டுண்ட வாய்வுகளைத் தூரத்தி, வாய்வாடையை மணமாக்கி சப்தத்தை அழகாக்கி, மறதியைப் போக்கி ஞாபக விர்த்தியை அதிகமாக்குவிக்கும்.

இன்னும் குந்துரு, கராம்பு, ஹறுமல், அல்லது கருஞ் ஜீரகம், சீனி இவைகளைச் சரி நிறையிலெடுத்திடித்து, நாடோடங்களிலும் வெறும் வயிற்றில் இரண்டு குபுலா இடை தின்றுவந்தால்; சிலேற்பனத்தைத் தறித்து, நித்திரையைச் சிறுக்கச் செய்து ஞாபகவிர்த்தி, தாது விர்த்தியை அதிகமாக்குவிக்கும்.

ஆறுவது பசல்.

சரீரச் செழிப்புக்கு "வெந்தைய" லேகியம்.

தேன்மையுள்ள வெந்தையத்திற் றண்ணீர்மிதக்க வூற்றிக்கொதிக்கவைத்து, வெந்தபின், நீரை வடித்து மறுநீர் விட்டுக் கொதித்தபின் இறுத்து இவ்வாறு ஐந்து முறைசெய்வித்து, வெந்தையத்தை நோக அரைத்துக் கோதம்பு மாசேர்த்து ஆவின்பால் விட்டுக் கூழாகும் வரையில் வேகவைத்து அதில் தேன் சர்க்கரை, நெய் இவைகள் வேண்டுமட்டும்விட்டு இலேசாக நெருப்பெரித்துக்கிண்டிக்கிளறி லேகியபாகத்தில் எடுத்துத் தின்றுவந்தால், சரீரங்கொழுத்து, நிறந்தெளிந்து தாது விர்த்தி அதிகமாகி இரத்தத்தை ஊறச்செய்யும்.

இன்னும் வெண்ணெயைச் சரீரத்திற் பூசிவந்தாலும், தயிரைத் தேய்த்துவந்தாலும், உஷ்டண தேகிகட்குச் சீக்கிரம் சரீரச்செழிப்புண்டாகும். வல்லாஹு அஃலம்.

பதினெட்டாவது பாபு முற்றிற்று.

பத்தொன்பதாம் பாபு.

சிறுநீர் வகையறவின் ஆராய்ச்சிகளைக் கூறல்.

ஒன்றாவது பசல்.

சிறுநீர் விபரம், அதன் கடுப்பு அடைப்பு நீர்ப்பை கடுப்பாகியவைகளைக் கூறல்.

நீ அறிந்துக்கொள்:—சிறுநீர் ஆபத்தாகிறது; அதன் சூடு அது அடைபடுவதின் கஷ்டமும், அதன் ஒழுக் கதிகமாகிறது யிருக்கும். அதில்; நீரடைப்பாகிறது நீர் வெளிவரும்போது, நீர் யை வலியுடன் காந்தல் கடுசான கடுப்புமாயிருக்கும். அதன் வாட் சிக் குளிர்ச்சியுடன் உண்டானதானால் இரத்தமிறங்கிய பின்னர் ஒழுக் குண்டாகும் துள்ளி நீர் வெண்மையாயிருக்கும் அதற்குப் பரிகாரம்:- கோதம்பு மா, வெந்தையம், இவையை நெய்யிற் சேர்த்து செய்த குழம்பைத் தின்றுவந்தாலும், வெந்தையத்தை ஐந்துவிடுத்தம், காய்ச்சி இறுத்து அரைத்து நெய்யில் நல்லாய்க் குளித்து, தேன் சர்க்கரையுஞ் சேர்த்து இளநெருப்பில் வைத்துக் கிண்டி இறக்கிய லேகியத்தைப் பரிமாறிவந்தாலும், நீரின்வரட்சி சூட்டுடனுண்டானதானால்; ‘துள்ளி நீரொழுக்கல், சிவந்த இரத்தம்போலிருக்கும். அதற்குப் பரிகாரம்:- சுரைக்காய் சால்றவை சர்க்கரையுடன் காலைமாலை யுட்கொள்ளவும்.

இன்னும்; நீரடைத்துக் கடுப்பதற்கு:—புறாவின் எச்சத்திற் கொஞ்சங் குடிப்புடன் சேர்த்துக் குடிப்பித்தாலும் அன்றேல் அந்த மச்சத்திற் கொஞ்சமும், கலப்பற்ற பசுநெய்யு மொன்றாய்ச் சேர்த்து ஒன்றோடொன்று நல்லாய் மேவும்படிக்கு அடித்து இரண்டு குபுலா இடை வெறும்வயிற்றி லுட்கொண்டாலும், இன்னும் வெள்ளைக்குந்துரு இரண்டு குபுலா இடை இரவில்தின்றும் ‘சுபுஹு’ வரையில் நீரிற் புளிக்க வைத்து வெறும் வயிற்றிற் குடித்தாலும் நீரொழுக்கு இரத்த மன்றி இருக்குமானால் மேற்கூறியதில்; சீனி சேர்த்துக் குடித்தாலும் இன்னும் ஆணுடம்பின்தலையிற் சாம்பலை வைத்தாலும், ஒருவனுக்கியா நெய்யும் அரை ஊக்கியாச் சீனியுங் கலந்து தின்றுவந்தாலும் பலன் கொடுக்கும்.

இன்னும்; நீர் வலம் அடைப்புக்கு, உப்பைப் பொதிந்துகொண்டால் பலன் கொடுக்கும்.

இன்னும்; குங்குமப்பூ, நான்கா, கருங்கடலை நீரைப் பிரிக்கும் இன்னுங் கொஞ்சம் உப்பைப் பின் துவாரத்திலாக்கினாலும் நீரை பிரிக்கும். முன் துவாரத்தில் பேன் என்னும் சென்னைச் செலுத்தி னுடனே நீரடைப்பு நிவர்த்தியாம். பாலகனின் நீரடைப்புக்குப் பா தாச்சிக்கு நீர் பிரிக்கும் பரிகாரஞ் செய்தல் வேண்டும். இன்னு ‘இரும்பு’ துருவை நோக வரைத்துத் தண்ணீரிற் போட்டு வடித்

கொடுத்தாலும், ‘நான்காவை’ அரைத்துத் தேனிற் குழைத்தருந்தினாலும், இன்னும் பால்வகை அடங்கலும், கருவாப் பட்டையை அரைத்துக் குடித்தாலும் நீரைப் பிரிக்கும். முலைப்பாலைத் தேனிற் கலந்து குடித்தா லுடனே நீரைப் பிரிக்கும். கல்லடைப்பையும் போக்கும். இவ்வியாதிக்காரன், புளிப்பு, கசப்பு, உறைப்பு, இவைகளைத் தவிழ்ந்துக்கொள்ள லாவசியகமாம்.

இரண்டாவது பகுல்.

நீரடைப்பைக்கூறல்.

நீர்ப்பை “ என்பது; சிறுநீர் சேகரமாகும் இடம். அதில் நீர் கடுப்புண்டானால்; சப்ஜாவிதை, பால் அல்லது, அதைக் குளிர்ந்த தண்ணீரால் பிழிந்து பருத்திக்கொட்டைப் பாலுடன் குடித்து அதன் பேரிற் கொஞ்சம் பாதமெண்ணெயை ஒழுக்கிக் குடித்தாலும் கருப்பைத் தின்றாலும், சிறுநீர்ப்பைக் காந்தலுக்கு வெட்க தானத்தின் பேரில் பன்னீரெண்ணெயைப் பூசினாலும் பலன்கொடுக்கும்.

மூன்றாவது பகுல்.

சிறுநீர், இரத்தமாய் வெளிப்படுதற்குப் பரிகாரம்.

அரிசியைப் பாலுடன் தின்றாலும், சுன்னம்புக் கீரையைச் சூளித்து வெறும் வயிற்றில் தின்றாலும்; சந்தனம், ரம்காவுக் கீரை போலொற்றதால் சேர்வை செய்துக்கட்டினாலும் பாதாமை, வெண்ணெயுடன் ரொட்டியும், கருப்பு இலந்தைப்பழந் தின்றாலும் பலன் கொடுக்கும்.

நான்காவது பகுல்.

கல்லடைப்புக்குரிய பரிகாரங்களைக் கூறல்.

கல்லடைப்பாகிறது; சிறுநீர், அறவே வெளிப்படாமல் கோசத்தில் வலுப்பமாகிய அடைப்புண்டாகுவதினு லிருக்கும். சிலவேளை மரணஞ் சம்பவிக்கையுண்டாக்கும். அதற்குப் பரிகாரம்.—சிலவே

ஊக்கோசத்தைப் பிளந்து நீரை வெளியாக்கப்படும். இன்னும் ; நெய்யிற் சமைத்த சுரைக்காயைத் தின்றாலும் பச்சை வத்தகைக்காய் தண்ணீரைக் கரும்புச்சாறுடன் குடித்தாலும், கருங்கடலை நீரைக்குடித்தாலும் லவங்கப்பட்டை நீரைக்குடித்தாலும் முள்ளங்கியை இலை நீக்கி இடித்து வெறும்வயிற்றிற் குடித்து வந்தாலும் கோசத்தின் தாழாலே முள்ளெலியை அதன் முள்ளுடன் புதைத்தாலும், அனீ சூனைத்தின்றாலும் நான் காவைத்தண்ணீரிற் குடித்தாலும், பொன்னின் தட்டானின் மாமிசந்தின்றாலும் பன்றியின் மலத்தைக்குடிப்பிற் குடிப்பித்தாலும், முலைப்பாலைத் தேனுடன் கலந்து குடித்தாலும் நட்டுவக்காலியைக் கலயத்திற்போட்டு வாய்மூடி அடுப்பில் வைத்தெரித்த சாம்பலைக் குடிப்பிற் குடிப்பித்தாலுங் கல்லடைப்பை யுடைக்கும்.

ஐந்தாவது பசுல்.

சிறு நீரொழுக்குக்குப் பரிகாரம்.

நீர்க்கடுத்துத்துள்ளி, துள்ளியாய், இறங்குவதற்கு, ஒன்றரைக்குபுலா, குந்துருவைக் குளிர்ந்தநீரில் மூன்று அல்லது ஏழு நாள் குடித்தாலும். சீரகத்தைத்தின்று வந்தாலும் அல்லது பூண்டு தின்று வந்தாலும், வெறும்வயிற்றில் தேனையுட்கொண்டாலும், கறுவாப்பட்டைத் தண்ணீர்; கடுக்காய்த் தண்ணீர் குடித்தாலும், மனிதனின் மலத்தைக் கடலைபிரமாணம் கன் சிறுக்காலி லருந்தினாலும். "வாத்து" நாக்கைத்தின்றாலும் விட்டிலைப்புகைப்பிடித்தாலும் பமொம்.

தங்கு நீருள்ளவன், சிறிய "வெளவாலைக் குழையவேகவைத்துத் தண்டிற் பூசினாலும், மான் ரோமத்தைக் கரித்து நீரடைப்புள்ளவன் குடித்தும் அதையே புகைப்பிடித்தாலும், முள்ளம்பன்றி என்ற முள்ளெலியின் மாங்காய் ஒரு திருகத்திடை புலர்த்திப்பொடித்துக் கருங்கடலை நீருடன் குடித்தாலும் தண்ணீர் நாயிரக்கத்தை "கிருமானி" நற்சீரகத்துடன் சேர்த்து வெந்நீர்ப் புகையிற் குடித்தாலும், கொடிப்புலியின் கோசத்தை வேகவைத்த "சால்ணை" வைக்குடித்தாலும், சிறுநீர்க்கடுத்துத் துள்ளி விழுதலைப்போக்கும். அதன் பையின் வலியையுங் கண்டிக்கும்.

ஆறுவது பசுல்.

சிறுநீர் கட்டுப்படுதலுக்குப் பரிகாரம்.

நீர்க்கட்டுப் பட்டுவிட்டால், சரீரத்திலுள்ள பேனை, கோசத்தின் துவாரத்திற் செல்லவிட்டாலுடனே நீரை வெளிப்படுத்தும், தேன் ; சிறுநீரைப் பெருக்கச் செய்யும் நீரடைப்பு, கல்லடைப்பு வருத்தத்தை நீக்கி, நீர்த் தாரைப்புண்ணையு மாற்றி, தாதை எழுப்பும்.

(*)

ஏழாவது பசுல்.

சிறுநீர் செருமல் சிக்கலிவைகட்குப் பரிகாரம்.

புறாவின் எச்சத்தை நீரிற்கொதிக்க வைத்ததிலிருந்தாலும், பழந்தின்னி வெளவால், கூட்டிற் பூசி இருக்கின்ற களிமண்ணை நீரிற் கலக்கிக்குடித்தாலும், அக்கூட்டிலுள்ள சிவப்புக்கல்லைக் கட்டிக்கொண்டாலும் தீரும்.

(*)

எட்டாவது பசுல்.

நீரிழிவுக்குப் பரிகாாம்.

சிறு நீரிழிவாகிறது ; நீர்ப்பை, சோர்வால், அல்லது குளிர்ச்சிக்கிடம்பாடாகுவதால் நீர்ப்பையில் நீர்சேர்ந்து, நாட்டம் தெரியுதலன்றி மிகவாய் நீர் வெளிப்படுவதாயிருக்கும். அதற்குப்பக்குவம்.—கடலையைச் சிறுக்காவில் மூன்றுநாள் புளிக்கவைத்துத் தின்று சிறுக்காவைக் குடித்தாலும், சிற்றரத்தை தின்றாலும், கோழி, முட்டையைத் தின்றாலும் ஈத்தம்பழம் குந்துரு இவைகளைத் தின்றாலும், ஆவின் பால் ஆட்டுப்பால் குடித்தாலும், சாம்பலிற் புதைத்திருந்தமுட்டை தின்றாலும் நண்டின்மாமிசம் சிறுநீர் ஓட்டக்காரனுக்குமுக்கியானுகூலமாகும், வெள்ளாடு, பள்ளாடு இவைகளின் பெண்ணாட்டின் காலைக்கழுவிக் குடித்தால் ; சிறுநீர் நில்லாமல் ஓடுகிற ஓட்டத்தை நிறுத்தும்.

ஒன்பதாவது பசுல்.

விரிப்பில் "மோளுகிற" தற்குப் பரிகாரம்.

நீர்ப்பையின் சோர்வுதலால், மோளுதல் 'விரிப்பில்' சிறு நீர்ப் பெய்வதாயிருக்கும். அதற்கு—முசல் மாமிசம் புசித்து, புதிய சிற்றரத்தையை இடித்து வடித்து, களஞ்இடை, குளிர்ந்த நீரில் மூன்று நாள் காலை மாலையிற் குடித்தாலும், கொத்துமல்லி, அலக்கு, இவைகள் வகைக்கு ஒரு குபுலா இடித்து எண்ணெயிற் கலக்கி அல்லது தேனிற் குழைத்து வெறும்வயிற்றில் இரண்டு குபுலா "அளவு காலை மாலை அருந்திஞலும், காளைமாட்டின் ஊத்தாம்பெட்டியை புலர்த்திப் பொடித்துச் சிறுக்காவும், குளிர்ந்த நீருங்கூட்டிக் குடித்தாலும், மளாவின் பித்தையருந்திஞலும், சாவல் பூவைக்கரித்துப் பொடித்துக் குடிப்புடன் குடித்தாலும் உப்பிவிட்ட முள்ளெலி மாமிசந் தின்றுலும், செம்மறி தும்பை ஆட்டுவிரைக்கொட்டையைச்சுட்டுதின்றுலும், விரிப்பில் நித்திரையில் மோளுவதை நிறுத்தும்" மலக்கட்டின் விபரமாதியவைகள் முந்திவிட்டன.

பத்தொன்பதாம் பாபு முற்றுபெற்றது.

இருபதாம் பாபு.

விரை, மூலம், பவுந்திரம், அண்டி, நரம்பு வியாதிகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

விரைவாய்வு கமரகவாய்வு, விரையின்காயம்புண் இவைகட்குப் பரிகாரம்.

—(*)—

வயிறு நிரம்பி இருக்கையில் கனத்த சுமைகள் சுமப்பதால், கடுசாகிய இருமல் தும்மல் இமாஆல், அல்லது அபயசத்தத்தால், இவைபோல் வலுப்பமான தும்முதலாலும், "காற்று" வாய்விஞலும் விரைவாயுண்டாகும், அதாவது இரண்டுவிரையின் தொலிலுப்பமாய்க் கனத்து வலியுண்டாகும், அதில் அடிவயிற்றில்; துவாரமுண்டாய் மல்லார்ந்து படுத்தால் விரையுள்ளி லடங்கி விடுவதைத் தமரகவாய் வென்னப்படும்:

இவைகட்குப் பக்குவம்:—விரைவாய்வு, வலி அதிகமாய்விட்டால் இரண்டு குபுலாக்குந் துருவை இடித்துத் தேனில் மத்தித் துட்கொண்டால் வலியையடக்கும் வாய்வு நீங்காது, பள்ளாட்டு புழுக்கையைக் கரித்த சாம்பலை விரை வீக்கத்துக்குக் கட்டக்கூடிய அவிழ்ந்தத்துடன் சேர்த்து விரை வீக்கத்திற் கட்டிஞலும், கற்றாழையைத் தேனுடன் கலந்து வீக்கத்திற் பூசிஞலும் தீரும். சதாபைகொஞ்சமிடித்து முலைப் பாலுடன் சேர்த்து சிறுபிள்ளைகளி லுண்டான விரை வீக்கத்துக்கு நாடோறும் புகட்டிவரத்தீரும். பாலை, சிறுநீரை, விரையில் அதன்சூழால் அல்லது தொலியிலுண்டாயின, காயம், புண்களிலூற்றி நனைத்தாலும், ஈயத்தின் சாம்பல் அல்லது, வெள்ளியிற்கழிந்த கழிவை, எண்ணெயுடனரைத்து, புண்ணிற்பூசிஞலும்மாசாக்காயும் சீனிக்காரமுமரைத்து அதிலுதிர்த்திஞலுந் தீரும்.

"அல்லாஹு அஃலம் ஷாபீ"

—∞∞—

இரண்டாவது பசுல்.

பவுந்திரத்தின் விதிபாகங்களைக் கூறல்.

—

பவுந்திரமென்பது; அண்டியிலுண்டாகிய தமருள்ளபுண், அதில் ஊனம்வடியும். அதன் துவாரம் மறுபுறங் கண்டதிற் கடையாளமாவது; நாட்டமன்றிக் காற்றும் வலமும் வெளியாகும் அதிலொரு குச்சியும், அண்டியில் விரலையும் புகுத்திஞல் இரண்டு மொன்றாய்ச் சந்திக்கும்- துவாரம் மறுபுறங் காண்கப்படாத்தது இதற்கு மாற்றமாயிருக்கும். அது உற்பத்தியாகுந் துவர்க்கத்தில்மூலைத்தின், தானத்தில்நீண்ட அரும்பாரைபோல் மெல்லிசாய் வளர்ந்து முளைக்குமோர் நரம்பாயிருக்கும். அதற்குப் பரிகாரம்:—அந்நரம்பினடியிற் கெட்டியான சயிறுபோற் கொற்றதால் கட்டிக்கொண்டு, நெருப்பிற் காய்ச்சப்பட்ட சிறிய ஊசியால், "பலவிடுத்தம்" நீங்கும்வரையிற் சுடவும். வித்துவஸ்துக்களையும், புளிப்புள்ள வஸ்துக்களையும், பூண்டு, தேன். இவைகளைத் தின்னவும், இன்னும், கற்றாழையைப் பௌந்திரத்திற் பூசிஞலும், மானின் பறண்டைக்காலைக் கரித்துப் பொடித்து அதிற்பொதிந்தாலும் பன்றியின் எலும்புச் சாம்பலைப் பொதிந்தாலும் கொடி முந்திரிக்காயில் தண்

ணீர் கொள்ளாத தலைக்காயைச் சிறுக்காவிற் சேர்த்து அதிற் பொதிந்தாலும், அன்ஜாரூத்து, அல்லது கிராது விதையை அண்டியிற்புகைப் பிடித்தாலுந் தீரும். அதைப் பழுக்கவைக்கும், மருந்துகள்:—சுறுமா, சீரகம், குந்தூரு, வகைகளாயிருக்கும். இன்னும், "சுபுஹின்" முதலாவது, றக்அத்தில், "சூறத்து" அலம் நஷ்றஹாம், இரண்டாவது, றக்அத்தில், சூறத்து; அலம் தறக்கைபவை முடிய வோதித் தொழுது வந்தாலும் மூலமும் பௌத்திரமுந் தீரும்.

மூன்றாவது பசுல்.

மூலத்தின் விதிபாகங்களைக் கூறல்.

மூலமாவது; உந்தியின் அண்டிக்குச் சூழால் அதிக மாமிசத்துடனுண்டான நரம்பு. அது நெருப்பினது காந்திக்கிணைக்கமாய்க் காந்தும். மேலும் அரிப்புமுண்டும். நஞ்சின் பசக்கால், சீரத்திலூர்ந்து தத்துவழ் தைரியமிழந்து; கல்புவொடிந்து, நிறம்மஞ்சனித்து, சீரஞ்சோர்ந்துமுகத்திலும் விழியிலுந்தாவும். அந்த நரம்பினின்றும் இரத்தம் வெளிப்படும். இன்னும், கல்பு, மூளை முதுகு, முழந்தாள்வலியுடன் நீரடைப் புண்டாகி வயிறுகனத்து, ஆண்குறி உசும்பலற்று ஜிமாஉ செய்யத் தாணியற்று நரைவிரைவாயுண்டாகி, குடல் ஊதி, சமிபலிழந்து, உடலம் மெலிந்து, ஈரல் குலையினின்றுங் கடுப்புடன் இரத்தமாக வெளிப்படும். அதற்கு முதலாவது, பரிகாரமும், பத்தியமுமாவன.—மாடு, ஆட்டுக்குட்டி, நீர்ப்பறவை மீன்போல்வன குளிர்ச்சியான மாமிசங்களும். வெங்காயம், பூண்டுபோல்வன, உறைப்புள்ள வஸ்துக்களும், புளிப்புவரண்டு சூடான வஸ்துக்களும், உண்பதைவிலக்கி, மாதங்கடோறும் இரத்தங்குத்தி வாங்குவதும். தும்பைக்கசிக்கிடாய், பறவை மாமிசங்கள், கிருது, ஆவின்நெய் ரொட்டி இவைகளைத் தின்னுவதும், சேர்ளம்பாலை விடுவதும் அவசியம், இரத்தமூலமானால், வெள் வெங்காயம், உப்பு இது இரண்டையுமிடித்துத் தேனிற்குழைத்து மூலத்திற் பொதிவதும், வெறும் வயிற்றில், பூண்டு தேனிவைகளைத் தின்னுவதும், கட்டிமுளை மூலமானால்; நசாதிறு, அரிதாரம், பூண்டு, இவைகளைச் சமமாயிடித்து, மூலத்தின் தலையில் வித்துவகைகளிலொன்றால் கொஞ்சங் காயப்படுத்திப் பின்னர், அதில், ஷெ மருந்தைப் பொதிந்தால் உள்ளிலழுந்தி வலியையடக்கும்.

வலி அதிகமானால்; அதில் சூடுள்ளநெய்யைத் துள்ளிவிட்டு அந்நெய்யைப் பஞ்சிற் பொதிந்து சூட்டுடன் ஒத்தினமிட்டால், வலியையடக்கும், மறுமுறையுமவ்வாறு காயப்படுத்தி மருந்துவைக்கவேண்டியது; மூலம் அடங்கலுந்தறி பட்டபின். பூண்டும் உப்பும், சுகமாகும்வரையிற் கட்டவேண்டியது இன்னும் பூண்டும், மிளகும். சுக்கும், தேனுடன் குழைத்துப் பூசினாலும், தின்றாலும் இரண்டு மூலமுந்தறிபடும் இன்னும் உட்கார்ந்திருக்கக் கஷ்டமாயும் யாதொருவஸ்துவுநுழைகிறது வருத்தமாயுமிருக்கின்ற புறங்கொண்டு வீங்கியிருக்கின்ற அண்டிக்கும் மூலத்துக்கும் பலமுறைகளிற் சோதிக்கப்பட்ட நுட்பமான அவிழ்தமாவது.—

மூன்று முட்டையையுரித்து அதன் மஞ்சட் கருவுடன் பன்னீரெண்ணெயும், கொஞ்சங் குங்குமப் பூவுஞ் சேர்த்தரைத்து அண்டியிற் பூசத்தீரும். பின்துவாரத்தில் இரத்தம் வடிந்தால் கறுவாப்பட்டையை நன்றாக இடித்து ஒருகுபுலா இடை கொஞ்சம் நீரிற் கலந்து வெறும் வயிற்றில் மூன்று நாட்குடித்து வருகத்தீரும்.

இன்னும், மறுகாய்ப்புக்கு புனல்கட்டிக் கெற்பமாயிருக்கின்ற பேய்க்கும் மட்டிச்செடியில் மஞ்சணித்துள்ள ஒரு பழத்தைப் பறித்து எண்ணெயிற் போட்டு நன்றாய்ச் சமைத்து,அந்த எண்ணெய்க்கடுகை, உள்மூலமானால், விரலில், அல்லது சுறுமாக்கோலில், அல்லது பஞ்சில் அந்த எண்ணெயைத்தவைத்து உள்ளிலமுக்கி அக்கடுகைப் பொதியவும். வெளி மூலமானால், அவ்வெண்ணெயைப் பூசிக் கொடிமுந்திரி வேர்க்குச்சியைக் கரித்தசாம்ப லிருந்தால் மூலத்தின்பேரி லுதிர்த்தவும் இல்லையானால் அவ் வெண்ணெயை மட்டும் பூசவும் இன்னும், மாதளைத்தொலியை எண்ணெயிற் சமைத்து மூலத்திற் பூசி அதன்பேரில் வெங்காயத்தைப் பொதிந்தாலும் மூன்று தினம் கழுதை நுத்பாவைப் பூசினாலும் பூண்டையரைத்துச் சிறுக்காவுடன் காய்ச்சி அல்லது காய்ச்சாமல் வெறும்வயிற்றிலிரண்டு மிடறுகுடித்து மூலத்தின் பேரிலதைப் பூசினாலும் கிராதின் விதையைப் பொடித்துத் தேனில் அல்லதுசுடு நீரிற்கலஞ்சி இடைமூன்று தினம்வெறும் வயிற்றிற் குடித்தாலும் தீரும்இன்னும் சு[illegible]ரிக்காய்க்குமுளை புலர்த்தியிடித்து மூலத்திற் பழயநெய்யை பூசி மேற்[illegible]டி தூளைப்பொதிந்தாலும், ஹம்காவுக்கீரையைப் பொதிந்தாலும் பஞ்சைத்தின்றாலும் புலித்தொலியிலிருந்து வந்தாலும் கற்றாழையைக் கருத்துடன் தண்ணீரி

லரைத்துப் பூசினாலும்யானைத்தந்தத்தைஇரும்புக்கிட்டத்துடன்கலந்தரைத்து மூலத்தினுதிர்த்தினாலும் கருஞ்சீரகத்தின் சாம்பலை மூலத்தினுதிர்த்திப் பஞ்சைத்தேனில் நனைத்துப் பொதிந்தாலும், கருஞ்சீரகத்தைப் பொடித்து திர்த்தினாலும் ஈத்தங்கொட்டையைக் கரித்துப் பொடித்து எண்ணெயிற்குழைத்துப் பூசினாலும், குளிர்ந்த ஜலத்தால் துப்புரவு செய்துவந்தாலும்தீரும் கரடிப்பித்தில்இரண்டுமஞ்சாடியிடைதேனும் வெந்நீருஞ்சேர்த்துச் குடித்தாலும் பன்றி என்பைக் கரித்துப் பொடித்துக்குடிப்பிற் சேர்த்துக் குடித்தாலும் ஊர்க்குருவிமூளை. சதாபு இலைச்சார் தேன் இவைகளைச் சேர்த்து வெறும்வயிற்றிலருந்தினாலும் பாம்பின் கொழுப்பைமூலத்திற்பூசினாலும்,பசுமாட்டின்பித்தை கிருதென்னும் வெங்காய நீருடன் மூலமுளையில் தளமிட்டாலும், மனிதனின் என்பைக்கரித்து அரைத்துக் கற்றாழையுடன் கலந்து மூலநோயுள்ளவன் மூக்கில் வைத்தூதினாலும், பன்றிப்பித்தை யுலர்த்திப் பொடித்து மூலமுளையில் வைத்தாலும், கரடிக்கொழுப்பை பௌந்திரம் மூலமிவைகளிற் பொதிந்தாலும், நண்டைக்கரித்து எவ்விதமான மூலவியாதியிற் பொதிந்து நிரப்பினாலும், ஆறு, குளம், மற்றைய சேறுள்ள இடங்களிலுள்ள பெரிய அட்டையைப் பிடித்து, சுயமான, ஜெய்தூனெண்ணெயிற் போட்டுச் சவிக்கவைத்து எடுத்து, சிறுக்காவிட்டுக் களிம்புபோலரைத்து எடுத்து ஆட்டுப்பஞ்சுமுடியில் வைத்து மூலமுளையில் வைத்துக் கட்டினாலும், காகத்தின் இரத்தத்தை யுலர்த்திப் பொடித்துமூலத்திற்பொதிந்து வந்தாலும், யானையின் தொலியை மூலமுளையிற் புகைத்தாலுந் தீரும்.

நான்காவது பசல்.

மூலரோகத்துக்குப் புகைப்பிடிக்குதல்.

பொன்னரிதாரம், கெந்தகம், கிராதுவிரை, அன்ஜரூத்து, குருக்கம்,கடுகு, ஒட்டகைப்புழுக்கை,பஞ்ஜ[illegible]விரை,பேய்க்கும்மட்டிக்காயின் சதை இவைகளிலொன்றை மூலத்திற் புகைத்தால்மூலரோகந்தீரும். புகையிடும் விபரம்—:ஒருகுழியில் நெருப்புக்கங்கியை நிரப்பி, மேற்கூறிய வஸ்துக்களி லொன்றை அந்நெருப்பிலிட்டு அடியிற்றுவாரமிட்டவோர் பெரியபாண்டம் அல்லது நாற்காலி மேலிருந்துக்கொண்டு புகை வெளிபோகாமற்சுற்றிலும்;ஈரமண் அல்லது புடைவைபோலுற்றதால் செவ்வையாகசுற்றிலும் மறைத்துப்புகைமூலத்திற்றூவும்படிக்குச் செய்யவும் மறுபடியும் புகையிடவேண்டுமானால் மேற்படிபொத்தல் வழியாகமருந்தைப்போட்டுப்புகைப் பிடிக்கவும். ஆனால் தொடராகச் செய்யாமல் மூன்றுதினத்துக்கோர் முறைசெய்யவேண்டும்.

915

ஐந்தாவது பசல்.

அண்டி, உறுப்புத் தள்ளியதற்குப்பரிகாரம்.

ஒருசிறங்கைமாசாக்காயை நீரிலிட்டு அதன்சாரமிறங்கும்வரையிற் கொதிக்கவைத்திறக்கிஅதில், ஜாஜைப்போட்டு அதன் மத்தியிலுட்கார்ந்தாலும், வெள்ளாட்டுத் தாடிமயிர். கரித்தசாம்பல், மாசாக்காய் அண்டியிற் பொதிந்தும் சிறுக்காவுடன் அதைக்குழைத்துப் பொதிந்துக்கொண்டாலும், வெளியிற் பிதுங்கிய அண்டிக்குப் பலன்கொடுக்கும். பசுமாட்டின் பித்து. பொரிகாரம், தேன், பேய்க்கும் மட்டிச்சதை இவைகளையொன்று சேர்த்து மத்தித்து அண்டியிற் றேய்த்தாலுங்குணமாகும்.

ஆறாவது பசல்.

நரம்பு வியாதி, கடினவாய்வு பிடிப்புகட்குப் பரிகாரம்.

“ அருக்குன்னிசாவு ” என்ற நரம்புவியாதி, சூடு, அல்லதுகுளிர் இவைகள் அடிவயிற்றுக்குக் கீழுள்ள மேற்றொடை வரகு, என்ற நரம்பினின்றுந் தொடை வரையில் அல்லது முழந்தாள் அல்லது கால்விரல் வரையிலதிகரித்ததாலுண்டான வாதப்பிடிப்பு. அதனால் தொடையுங்காலும் மெலிவுற்று நரம்புகள் வெளியாகும் அது “ வரகு ” என்ற தானத்தைக் கடவாமலிருந்தால் கொடிய வாய்வுப் பிடிப்பு என்று கருதப்படும். இவ்விரண்டு ரோகமும், உஷ்ணத்தாலுண்டானால் உறுப்பில் வலியுங்காந்தலுங் குளிர்ச்சியானதால் . இன்பம், [illegible]ண்டாம், குளிர்ச்சியாலுண்டானால், காந்தலின்றி வலியும், குட்டினலி[illegible]மு முண்டாம். அதற்குப்பரிகாரம்.—இரத்தங்குத்திவாங்குவதும்,நடுத்தரமான அறபித்திம்பைக்கிடாய்வாலான் தண்டையுருக்கிமூன்றுநாள் குடிப்பதும் அல்

லது அத்துடன் தேன், நெய் சேர்த்துக்குடிப்பதும் சிவந்த பெருங்காயந்தின்பதும், கற்றாழை குடிப்பதும், வருடஞ்சென்ற பள்ளாட்டுப்புழுக்கையை இடித்துச் சிறுக்காவிற் குழைத்து மூன்றிரவுபகல் பூசினாலும் அப்புழுக்கையைச் சமைத்தரைத்துப் பூசினாலும், பசுவின் சாணியைச் சிறுக்காவிற் குழைத்து அதிற்கட்டி வந்தாலும் உப்பை நீரிற் கழுவி, எடுத்து நீரின்றி நோக அரைத்து நெருப்பில் சூடேறவைத் தெடுத்து அந்நரம்பில், கனதியாக பத்துபோல் பொதிந்து அதன்பேரிற்புடவைத் துண்டைக்கொண்டு கட்டிக்கொண்டாலும் தீரும்.

——;( ):——

ஏழாவது பசுல்.

சிலேர்ப்பனத்தா லுண்டான நரம்பு வியாதி, வாதப்பிடிப்பு கட்குப்பரிகாரம்.

குளிர், சிலேர்ப்பனத்தாலுண்டான வாய்வுபிடிப்பு, நரம்புவியாதி முளி, விரல் வலிகட்கு, உப்பைக் கழுவி அரைத்து, இளஞ்சூடுகாட்டி, வலியுள்ள இடத்தில் மூன்று நாழிகைமட்டும் பூசிவைத்து எடுத்துவிட்டால் ஒரேவிடுத்தத்தில் நோயைக்கண்டிக்கும். கண்டிக்காவிடில் இவ்வாறு மூன்றுமுறை செய்யத்தீரும். இன்னுங்காச்சாத உப்பு நீரால் கழுவிவந்தாலும் அதினுட்கார்ந் திருந்தாலும், பசுமாடு, சாணி போட்டவுடன் சூடாறு முன்னெடுத்துக்கட்டினாலும் பெருங்காயத்தைத் தேனுடனருந்தினாலும், முஸ்தகாய் உப்பு, மஞ்சள், இவைகளைச் சமமாயெடுத்திடித்து எண்ணெயிற் கலக்கி இளநெருப்பிற் கொதிக்க வைத்து வலியுள்ள இடங்கள், முதுகு, முளி, ஆதியவிடங்களிற் பூசினாலும் " உக்கு சிமுபில்லாஹில், அஃலா, லயின்லம் நன்தஹீ லைக்குலியன்னக்கி, பின்னாரி, வஇல்லா, ஹலக்துக்கி " என்று சொல்லி, வலியுள்ள விடத்தில் கையால் தடவினாலும் தீரும்.

——፡(:)፡——

எட்டாவது பசுல்

[illegible]ய்வுப்பிடிப்புக்குப் பரிகாரம்.

குதிரை மாமிசமருந்தினால்வாய்வைப்போக்கும். பொலித்தலுள்ள தும்பைக்கிடாய்க் கொழுப்பை யுருக்கிக்காலையிற் குடித்து மாலையில்

வஜீபனமாய் ஐந்துநாள் வரையிற் பரிமாறி வந்தாலும், சிசுவைப்போல் வயிற்றில் ஆட்டுகிற ஒடுவாய்வுக்கு முத்தின கடுக்காயைத்தேனுடன் அருந்தினாலும் சுகபேதிக்கு வாங்கினாலும், பெருங்காயம், சும்ரு, ஜீரகம் நான்கா, இவைகளைச் சர்க்கரையுடன் தின்றாலும், சுக்கு, மிளகு, இது இரண்டையுஞ் சமமாயெடுத்திடித்து நுரைநீக்கிய தேனிற் குழைத்து, கோலிக்காய்ப் பிரமாணம் நாடோறு மருந்திவந்தாலும் பலகாரத்துடன் பெருங்காயஞ் சேர்த்துத் தின்றுவந்தாலும் தீரும். மூளந்தாள்ப்பிடிப்புக்கு; ஹர்மலைப்பொடித்துப் பழய நெய்யிற் காய்ச்சிப் பூசி அனல் காட்டினாலுந்தீரும். மூளந்தாள் வியாதிக்குப் பின்வரும்.

ஒன்பதாவதுபசுல்.

பக்கவாதம் முகவாதத்துக்குப் பரிகாரம்.

ஜெய்தூனெண்ணெயில், வெங்காயம், உப்பு, முஸ்தக்காயிவைகளைச்சேர்த்து இளநெருப்பிற் கொதிக்க வைத்திறக்கிக் கெட்டியாய்த் தேய்த்துப் பூசிவந்தாலும், " நக்பா " இந்திரியமும் இரசமுங் கலந்து மூன்றுநாள் தொடராய் நசியம் பிழிந்தாலும், கறுத்தப்பெண்பிள்ளையின் முலைப்பாலுடன் சப்பங்கியெண்ணெய் சேர்த்துச் சிறிய வயதுடையவர்கட்கு அரிசி இடையும், மற்றையவர்கட்கு, ஒரு கிராத்திடையும் நசியம் பிழிந்தாலும் காட்டு மாட்டின் மூளையைத் தின்றாலும் குழிநரி மாமிசந் தின்றாலும், புருக்களுக்கு முடிக அல்லது இருக்குமிடத்தருகே வீற்றிருந்து வந்தாலும், சிறிய வெளவால் தசையை மடிய வேகவைத்து நீரில் உட்கார்ந்து வந்தாலும், கரும்பூனைப் பித்தில் அரைத்திருகத்திடை சம்பங்கி யெண்ணெயிற் சேர்த்து நசியம் பிழிந்தாலும் மான் கன்று மாமிசம் தின்றாலும் தீரும் இன்னும் பக்கவாதம் முகவாதம் பழய ஜ்வரநோயுள்ளவனைத் தேள், நட்டுவக்காலி கொட்டினால் அந்தநோய்கள் தீரும்.

இருபதாம்பாபு முற்றிற்று.

இருபத்தோராம் பாபு.

தொடை மற்றைய உறுப்புகளின் வீக்கம் ரண முதலியவைகளின் ஆராச்சிகளைக் கூறல்.

ஒன்ருவது பசுல்

தொடை வாளைக்குப் பரிகாரம்.

தொடைவாளையானது, வாட்சி சூடான தேயங்களில் விளைந்த வஸ்துக்களைத் தின்பதாலும், அதிக வாய்வுள்ள வஸ்துகளைத் தின்றதாலும் இருகொடுங்கை என்பில், இரண்டு தொடையில் இரண்டு கரண்டைக்காலில், உயர்ந்து தடித்து, உள்ளில் தன்வைத்து சிவப்பு நிறத்தில் வெளியாகி, பிறகு கருநிறமாகும் வரையில் சன்னஞ், சன்னமாய் நீண்டு அதன் தொலிக்குக் கீழ், புழு ஊர்வது போலூர்ந்து காட்டும். இந்த விதமாய் அந்நோய் ஆரம்பமானல் உடனே குளிர்ச்சியான வஜீபனத்தால் சரீரத்தைக் குளிரச்செய்து, நோயுள்ள தானத்தி லதிகமாய்ச் சுடுநீர் பரிமாறி வரலும். உறைப்பு. கிரை, மீன் ஆகிய காரமான வஸ்துகளை விலக்கி ஒவ்வொருநாளும் கற்ருழைதின்று வருவதும், (அதாவது ஒரு திருகத்திடை) அல்லது, கற்ருழை, சந்தனம் கற்பூரம், பருத்தி விரை, கறந்தபால் இதுகளிலொன்றைப் பூசி வருவதும் சூரியனஸ்தமிக்க சற்றுமுன் ஒரு சிறங்கையளவு உரித்தபூண்டையும் பாலையும் சேர்த்து கனியும்வரையில் வேகவைத்து இறக்கிக் கண்ணுள்ள உலைமூடியால் மூடி, “சபுஹ-ஈ” வரையிலுந் தடைவாளையி லாக்கிப் பின்பு பாலைத் தெளிவிறுத்து வெறும் வயிற்றிற் குடிப்பதும் ஒரு சிறங்கை அளவு குந்துருவைப் பாலில் கொதிக்கவைத்து ஆறிய பின் பாலை மட்டிலுங் குடிப்பதும், அரிசி திப்பிலியும், கற்பூரவள்ளியுஞ் சமமாயிடித்துப் பழுக்கக் கனிய அதிற்கட்டுவதும் முர் முசற்ருழை, அபியூன், வங்கக்குதிருகத்திடை, எண்ணெயிலரைத்து பழுத்தமுகத்தை நசுக்கி அதில் வைத்துக்கட்டி மூன்றுநாட்சென் றவிழ்ப்பதும் அந்த நாட்களில் கற்ருழையைக் குடிப்பதும் அவ்வியாதியைசுஸ்தமாக்கும் அது சுகப்பட்டு வருவதையறிந்தாலதில் நீரை யூற்றிவருவதும் நெய் அல்லது சுரைத்தைலம், பன்னீரெண்ணெய் பூசுவதும், அதன் சூழால் அரைத்த வெந்தயத்தைப் பூசுவதும் பலன் கொடுக்கும். வலியை அடக்கும். அதில் “சத்துரம்” வைப்பதைப் பயந்துக்கொள்ளவும். மேலும் ஒவ்வொரு தினமும் ஊனங்களைக் கழுவி சுத்தஞ்செய்து பரிகாரம் பண்ணுவான்.

—(:)—

இரண்டாவது பசுல்.

வீக்கங்களைக் கூறல்.

—:(*):—

பன்றிக்குட்டியின் பித்தை வாட்சியான வீக்கம் வலியுள்ள உறுப்புகளில் அல்லது பசுமாட்டின் சாணியைப் பெலமான சுரப்புகளில் அல்லது கடல் குதிரையின் தொலியைக் கரித்து வீக்கம் சுரப்பு இதுகளில், நாய் விட்டையைப் பொடித்துக் கொத்தமல்லி நீரைக் கொண்டு குழைத்து, கடுசாகிய வீக்கம் சுரப்பு இவைகளில், பள்ளைக்கிடாயின் பித்தை வீக்கம், “தாஉல்பீல்” என்ற மொத்தி இதுகளிற் பூசினல் பலனைக் கொடுக்கும் நட்டுவக்காலி விழுந்த நீரைக்குடித்தால் சரீரமடங்கலும் பொக்களமுண்டாகும்.

இதைப்பற்றி இதன்கீழ்ச் லொல்லப்படும். முழந்தாள் வீக்கத்திற்கு 22-1-ல்வரும் இன்ஷா அல்லாஹ்.

—:(:):—

மூன்ருவது பசுல்.

கட்டுகளைப் பற்றிய விடயங்களைக் கூறல்.

கட்டி, சிலந்தி இவைகளுக்கு, உப்பு சுண்ணம்பு, காடி, இவைகளில் தேனைச் சேர்த்து மதித்து பூசினலவைகளை யுடைக்கும், காளைமாட்டின் சாணியை, ஈத்தம் பழச்சாறினது காடியுடன் கலந்து பெலமானகட்டுச் சிலந்திகளிற் பூசினலுமதில்வைத்துக்கட்டினலும் உடைக்கும் பன்றிக்கொழுப்பை, புருஎச்சத்துடனும் (குத்தாபு) விரையுடனுங் கலந்து கண்டமாலைபோலுள்ள பெலமான வீக்[illegible]கள், கட்டுச் சிலந்திகளிற் கட்டினலதைப் பழுக்கவைத்துடைத்து அதி[illegible]ள்ள சீசலமாதியவைகளைவெளிப்படுத்தும், பழந்தின்னிவௌவால்எச்சத்தைக்கட்டுச் சிலந்திகளிற் பூசினலதைப்பழுக்கச்செய்யும். அத்திப்பாலைப்பூசினலும்

கோதம்புமாவை உப்புடன்சேர்த்துக் கட்டினாலும் பழுக்கவைக்கும். அபீயூனும் பலன்கொடுக்கும் இன்னும்சில முறைகள் (1)வது பசுலிலும், முதற்பாகம் 14வதுபாபு 2-6வது பசுலிலுங்கூறப்பட்டிருக்கிறன

நான்காவது பசுல்.

ஓடுகிற இரத்தந் தரிபடக் கூறல்.

ஒட்டகைநகம் அல்லது அதன் ரோமத்தைக் கரித்துத் தூவினால் இரத்த மறிபடும். ரணமாறுகிறதற்கு அதில் சிறு நீர் செய்தாலும் (இது சோதிக்கப்பட்டது) கொடி முந்திரிக் கொடிச்சாம்பலைச் சிறு நீரிற்கலந்து கட்டினாலும், பசுமாட்டின் இரத்தத்தை தளமிட்டாலும் கழுதையின், பச்சை விட்டையும், குதிரைவிட்டையும் கரித்து அல்லது கரிக்காமல், சிறுக்காவில் மத்தித்துப் பூசினாலும், நூலாம்படை நூலை வைத்தாலும், கீரிப்பிள்ளை மலத்தைவைத்தாலும், குதிரைமலத்தைப் பொடித்துத் தூவினாலும் காயங்களிலோடு மிரத்தத்தை நிறுத்தும். அட்டை இரத்தத்தைக் குடித்துக் காயங்களைச் சுத்திபண்ணும்.

ஐந்தாவது பசுல்.

காயங்களை ஆறச்செய்யும் பரிகாரங்களைக் கூறல்.

கொடிப்புலிக்கொழுப்பை உருக்கிப் பழய புண்காயங்களிற் பூசினாலும், பீவண்டு கரித்த சாம்பலைப் பொதிந்தாலும்: கரும் பூனைப்பித்தை உப்புஞ்சீரகத்துடன் சேர்த்துப் பூசினாலும், ஒநாய். இரத்தத்தைப் பூசினாலும், நூலாம்பூச்சி நூலைப்புதியகாயத்தில் வைத்தாலும் தீரும் மூக்கிலுள்ள காயத்திற்கு கீர்க்காகத்தின் மலத்தை, தண்ணீரிற் குழைத்துப் பூசினாலும் புண்களை ஆறச்செய்யும். இன்னும், இரும்பு, கல், இவைகளாலுண்டுபட்ட புண்கள் மாமிசத்திற்குவி அல்லது என்பு ஒடிந்து போனதாயிருந்தாலும், துவர்க்கமாய் ஜாதிக்காயிலையை இடித்துக் கட்டினவுடனே இரத்தமோடுவதை நிறுத்தும் இவ்வாறே சீனிக்காரம், மாசாக்காம். குறுக்கம் ஒவ்வொன்று மிரத்தமோட்டத்தை நிறுத்தும். பிறகு சுடுநெய்யால் ஒத்தனமிட்டுப் பச்சைக்கற்றாழையை நெய் தடவி நெருப்பில் வாட்டி ஆறியபின் காலைமாலை காயத்திற் கட்டி வந்

தால் புதியமாமிசம்வளர்ச்சியுண்டாகும், மேலும் களிம்பு போட்டு வரவேண்டும்.

ஆறுவது பசுல்.

புரைவைத்த பலமான ரணங்கட்குப் பரிகாரம்.

ரணங்கள் புரையோடி உறுப்பை அரித்துத் தின்றுக்கொண்டு வருமாயின் ஒவ்வொருநாளும் அருதுவைகளை நன்றாய் நீரினால் கழுவித் துப்புரவுசெய்து கற்றாழையில் நெய்தடவி வாட்டிக்கனிந்து ஆறிய பின், புடவைத் துண்டில் வைத்துப் பிழிந்து புரையிலிட்டுப் பஞ்சாலடைத்துக் கட்டாமல் விடவும் இவ்வாறு செய்கில் விரைவில் சுகத்தை வருத்தும் நெய்யைக் கொதிக்கவைத்து அழுக்கை போக்கி, குளிர்ந்த நீரில்வைத்தாலும் தண்ணீரை அதில் ஊற்றினாலும் உறைந்து போகும் நெய்யை நீரைஇறுத்துவிட்டு ஷை நெய்யைக் காயத்திலிட்டு பஞ்சாலடைத்து வைத்தாலும் தேனைக் கொதிக்கவைத்து அழுக்கைப் போக்கி குச்சு நுனியிற் பஞ்சைச் சுத்திக்கொண்டு அச்சூடுள்ள தேனிற் றுவைத்து காயத்தில் தள்ளி விட்டுப்பஞ்சாலடைத்து துணியாற் கட்டி, மறுநாள் திறந்து நீரால் கழுவி, துடைத்து மேற் கூறியநெய்அல்லதுகளிம்பு, அல்லது கற்றாழை வகைகளைப் போடுவதாலும் கடுக்காயைப் பொடித்து அதிற் பொதிந்து ஆறுநாளைக்குப்பின் அவிழ்த்து எண்ணெய்பூசி, சீரகத்தூளைத் தூவிவந்தாலும் சுஸ்தப்படுத்தும் மாமிசத்தை விட்டுத் தோலி கழன்றுள்ள பச்சையான காயத்தைச்சேர்த்து முன்னிருந்த படிபாகச் சேர்த்த பின்பு நீர் எண்ணெய் வகைகள் படாமல் பேணிக் கொள்ளலவசியமாகும். சாட்டையாலடிபட்ட திரேகத்தில் ஆட்டுத் தோலினை உரித்தவுடன் உடுத்தாட்டினால் நொம்பலத்தை அடக்கி சுகத்தைக்கொடுக்கும் அம்புமுள்ளுள்ள சரீரத்திற் பசுமாட்டின் சாணியைப்பூசி உணர்ந்தபின் அச்சாணியை நீக்கிஅம்முள்ளைஎடுத்தால் சுளுவாகவெளிவரும் நண்டைத்தட்டிக் காயங்களிற் கட்டினால்அதன் ஆணி வேரை வெளிப்படுத்தும் சரீரத்துள் முள் அம்பு இவைகள் ஆழத்தில் முறிந்திருந்தா லதில் செம்புகத்தின் மூளையைப் பஞ்சிலூட்டி அவ்விடத்திற்கட்டினால் லெகுவில்வெளிப்படும்.

ஏழாவது பசுல்.

புண், ரணங்கட்குக் களிம்புமுதலிய பரிகாரம்.

இரும்புக் கிட்டத்தை இடித்து வடித்துக் கரியபோளத்தூளுடன் ஆவின் நெய்யிற் குழைத்து அரைத்து இளகலாக்கி நாடோறும், ரணங்களிற் பூசிவந்தாலும் அதில் ஊனமிகவாய் வடிந்தால் சிறுக்காவையுஞ் சேர்த்துக்கொள்ளலாம். கிட்டத்தைப் பொடித்து ஜெய்தூனெண்ணெய் குடிக்கமட்டும் விட்டரைத்துப் பின்னர் அதில் சிறுக்காவிட்டு வெண்மைக்கு வருமளவும் அரைத்து புண்களிற் றீட்டிவந்தாலும், பன்ஜல், அன்ஜறாத்து, இவைகளைச் சமபாயெடுத் திடித்து அதனிடைக்கு மிளகுத்தூளிட்டு ஆட்டுக்கொழுப்பிற் காய்ச்சி போட்டாலும், வெள்ளை மெழுகு, ஈயம் கழிவான சாம்பல் வகைக்கு இரண்டு திருகத்திடை, பன்னீர் ஒருதிருகத்திடை எண்ணெய் நாலுதிருகத்திடை எடுத்து மெழுகையும் எண்ணெயும் கொதிக்கவைத்து அதில் மேற்படி சாம்பலை விட்டுக்கிண்டி இறக்கி, நெருப்புவகையாலான புண்களிற் போட்டால் நல்ல பலனைக் கொடுக்கும்.

எட்டாவது பசுல்.

நெருப்புப்பட்ட புண்கட்கும் அது தணறு செய்யாதிருக்கவும் பரிகாரம்.

பரு இரத்தத்தை ஜெய்தூனெண்ணெயிற் கலந்து நெருப்புபட்ட புண்களிற் பூசினாலும் முத்துச்சுப்பியை மாமிசத்துடன் கரித்த சாம்பலைத் தூவினாலும் நத்தைச்சுப்பி கரித்த சாம்பலைத் தூவினாலும், நெருப்பாலதிகமாய் வெந்து, அல்லது. சுடுகஞ்சிபோலுள்ளதால் வெந்துபோனஇடத்திலுடனே தேனைப் பூசினாலும் வின்னமன்றிச் சுகப்படுத்தும்.

ஆமை முதுகோட்டில் மூடிசெய்து உலையை மூடினாலும், மண்தவளை என்பைச்[illegible]டோரவாயில் வைத்தாலும் அதன்கொழுப்பை, பானை வெளியிற்பூசி, தாழாலே நெருப்பெரித்தாலும் அறவே பொங்காது. மேற்படி கொழுப்பைக் கையிற் பூசிக்கொண்டு நெருப்பை தொட்டால்

கூடேறமாட்டாது. இன்னும் இருபத்தைந்தாம்பாபு, பத்தாவது பசுலில்வரும். இன்ஷா அல்லாஹ்.

இருபத்தோன்றாம்பாபு முற்றுப்பெற்றது.

இருபத்திரண்டாம் பாபு.

முழந்தாள் கை, கால், நகமாதியவைகளின் பரிபாக விடயங்களைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

முழந்தாள் முழங்கை வீக்கத்திற்குப் பரிகாரம்.

வரண்ட குளிரினாலுண்டான முழந்தாள் முழங்கை வீக்கமதிகரித்துக் கோணியும் அல்லது நொண்டிக்கொண்டிருப்பதற்கும்; வெள்ளரிவிரை, வெந்தையம், சிறுக்கா இவைகளைச் சமமாய்ச் சேர்த்திடித்து எண்ணெயிற் குழைத்து நெருப்பில் வைத்து அதில் உரித்த பூண்டு உப்புங்கூட்டி காய்ச்சிய எண்ணெயை வலியுள்ள இடத்திற் பூசியும், கீருடன் வெள்ளரிஇலை சேர்த்திடித்துத் துணியில் வைத்துப்பொதிந்து வலியுள்ள விடத்தி லிரவிற் கட்டிவைத்துக் காலையில் அவிழ்த்து மேற்படி எண்ணெயைப்பூசி அனல் காட்டிவந்தால் சிறிது சிறிதாய் அக்கோணல் நிமிர்ந்து உறுப்புநீண்டு நேராகும். நுரைநீக்கி; பூண்டு போட்டுக் காய்ச்சிய தேனுடன் நெய்யுஞ்சேர்த்துக் குடித்துவரவும் முழங்கால் வாதப்பிடிப்புக்கு ஹருமலைப் பொடித்துப் பழமையான நெய்யிற்காய்ச்சி பூசி அனல்காட்டி வருகத்தீரும்.

ஆட்டுப்புழுக்கை சிறுக்கா பள்ளையாட்டு இரத்தமிவைகளைக் குழைத்துப் பூசினாலும் பள்ளையாட்டுப் புழுக்கைஇரண்டு பங்கும், கோதம்புமா ஒருபங்குஞ் சேர்த்து, சிறுக்கா, எண்ணெய்இதுகளினால்

காய்ச்சிக்கொண்டு கொழுப்பு சேர்த்துப் பூசிவந்தாலும், ஒருசிறங்கை யளவுமுத்துக் கொட்டையை ஆவின்நெய், தேன்சிறுக்கா, இம்மூ ஆம் ஒவ்வொன்றுளத்கியா அளவுடன்சேர்த்து, அணியில்வைத்துமுள கால் கெண்டைக்கால், பாதமிவைகளிற் கண்டவீக்கத்தில் சேர் போட்டாலும் நாடோறும் மூன்றுதிருகத் திடைபாதமெண்ணெ குடித்துவந்தாலும், வீக்கமுள்ள இடத்தில்இரத்தங்குத்திவாங்கி அதி கிட்டம் சிறுக்கா இதுகளைப்பூசி, தேன், சிறுக்காவைக் குடித்து வ தாலும், தீரும். பச்சைக் கொத்தமல்லி நீரை எந்தவீக்கத்திற் பூசி லுந்தீரும். மூளந்தாள் அதன்பாகத்திலும் சிலேர்ப்பனக்கலவன் சே ரமாகி அதிகப்பட்டு வெளுப்பமான வீக்கங்கொண்டு மொத்தி கட் இருப்பதற்குப் பக்குவம்.—இரத்தங்குத்தி வடித்து பின்கிட்டத்தை சிறுக்காவுடனரைத்துப்பூசி இலேசான வஜீபனங்களைப்பமிமாறிவரு தம்இரண்டுமுழங்கால், பாதத்திற்கண்டவீக்கங்களுக்கு“உசார்”, என்றவ கை இலையை இடித்து, குளிர்ந்த நீரிற்கலந்து பூசிவருகத்தீரும்இதி சிலது 21—2.—டில் மூந்திளிட்டன.

இரண்டாவது பசுல்.

யானைக்காலின் பரிகாரம்.

யானைக்காலென்பது; சிலேர்ப்பனக் கலவைனதி கரித்ததால்ப னையின் கெண்டைக்காலுக்கு வொப்பாய்க்கால்கள்வீக்கங்கொள்வதாகு ருக்கும் இந்நோய் ஆரம்பித்தவுடன் பரிகாரஞ் செய்யாவிடில் என்று பரிகாரத்தால் பிரயோசனப்படமாட்டாது.—பரிகாரம் இரண்டு கெண் டைக்கால் பாகமடங்கலிலும் இரத்தங்குத்திவாங்கி, கிட்டம் சிறுக்கா இவைகளைப்பூசி, தேனுடன் சிறுக்காவைக்குடித்து இலேசான வஜீ னங்களைத் தின்னுவதால் நீங்கும் இன்னும் இலைப்பூசினாலும் அதை ந கினாலும் முர்று க்கற்றமைபைப்பூசினாலும் கட்டினாலும் வெந்தயமாவை சிறுபிள்ளைமூத்திரம் அல்லது பள்ளாட்டுப்பாலிற்குழைத்துப்பூசினாலும் உப்பை ஜெய்தூனெண்ணெயிற் கலந்து பூசினாலும், பள்ளைப் புரு யின் இரத்தத்தைப் பூசிவந்தாலும் தீரும்.

மூன்றாவது பசுல்.

சூலைரோகப் பரிகாரம்.

சூலையானது இருபாதத்தின்மூளிகளதன்கெண்டைக்கால், பரண்டைக்கால், விரல்களில்விசயமாம், அதாவது வயிறுநிரம்பி இருக்கையில்ஜிமாஉ செய்தாலும் சபுராவிய்யத்தான இரத்தத்தினாலும் சிலேர்ப்பனத்தாலு முற்பத்தியாகின்ற வீக்கம். ஆனால்,, ஜிமாஉ” செய்வதில் பெண்பிள்ளைகளுக்கு ஆண்பிள்ளைகளைப்போலதிகக் கஷ்டமில்லாததினாலும்மாதங்கடோறும் பெண்பிள்ளைகளுக்கு மாதவிடையாவதினாலும் பெண்களில் இவ்வியாதி மிகவுஞ்சுருக்கம் அவ்வீக்கம் துவர்க்கத்தில் கறுப்பாயும் வெண்மையாயுமுண்டாகும், அதற்குப் பரிகாரம்.—செஞ்சந்தனத்தை இடித்து, ஹம்காவுக்கீரை நீரில் அல்லது சிறுக்காவிற்குழைத்துச் சூலையிற் பூசினாலும், பள்ளாட்டுப்புழுக்கையைத் தேனிலரைத்துப்பூசினாலும் பருத்திக் கொட்டையை, சிறுக்காவாலும் பன்னீராலும் மிடித்துக் கட்டினாலும், புலித் தொலியிலிருந்து வந்தாலும், சுரைக்காய் அல்லது எள்ளையரைத்துப் பூசினாலும், அல்லது மனிதன் சிறுநீரைக் கொதிக்க வைத்து, குழிநரிக்கொழுப்பையுருக்கி, அல்லதுசிறிய வெளவாலின் தலையை இரும்பு, அன்றேல்செம்பும் பாத்திரத்திலிட்டு, பலதடவையும் சய்பங்கிளன்னெய்விட்டு, தசைகழலும் படிக்குவேக வைத்து வடித்துச் சூலை, பழுப்பக்கவாதாம். திடுக்கம் சுரப்புவலி இவைகட்குப்பூசினாலும் சுகமாகும்“ சோதிக்கப்பட்ட அவிழ்தமிது” துவளையின் காலைக் கட்டிக் கொண்டாலும் கழுகின் கெண்டைக்காலின் பின்னடியைச் சூலைவலிவீக்கமுள்ளவைகளுக்கு வலதுக்கு வலதும் இடதுக்கு இடதுமாய்க் கட்டிக் கொண்டாலும் பசுமாட்டின் சாணியைச் சூலையில் வைத்தாலும் மளாவின் மாமிசத்தைச் சூலைவலி மூளிவலியுள்ளவன் தின்றாலும் தீரும். கண்டமாலை பத்தாம்பாபு ஆறுவது பசுலில் காண்க.

நான்காவது பசுல்.

வழிப்பிரயாணிகட்கு நடையாலுண்டான வருத்தங் கட்குப் பரிகாரம்.

வழிபிரயாணித் தலால் நேர்ந்த வருத்தத்திற்கு, பரிகாரம்:—கறந்தபாலைக் குடித்தாலும், உப்பை, ஜெய்தூனெண்ணெயிற் கலந்து பூசினாலும், சுடுநீரில் ஸ்நானஞ்செய்தாலும் தீரும். மலை வெள்ளாடென்ற காண்டாமிருகத்தின் கொம்பும் அதன் குளம்பும் பொடித்து எண்ணெயிற் போட்டுவைத்து அதிக நடையாலே நேர்ந்த வருத்தத்துக்கு, சரீரம்கெண்டைக்கா லிவைகளிற் பூசிவரத்தீரும். எலிக்கண்ணை (குல்லா) தொப்பியிற் கட்டிக்கொண்டு நடந்தவனுக்கு நடை இலேசாக விருக்கும். சரீரத்தில் தைத்த அம்பு, முள் ஆணி இதுகளை சுலுவாய் வெளிப்படுத்தற்கு-21-6-ல் பார்க்கவும்.

* * *

ஐந்தாவது பசல்.

கை, கால், பிளப்பு, பித்த விரிவுக்குப் பரிகாரம்.

* * *

தொலியில் வரட்சி, அல்லது குளிர்ச்சி அல்லது அவைகளின் கலவனதிகரித்ததாலே: கை, காலிலுண்டுபட்ட, பிளப்புக்குப்பரிகாரம்:—மெழுகும், மாட்டு மூளை அல்லது பள்ளாட்டு மூளையும் எண்ணெயிற் சேர்த்துருக்கிக் கலந்தபின் பூசினாலும் நல்லெண்ணெயைக் குடித்துப் பூசினாலும் பிளப்புள்ள காலைச் சுடுநீரில் நேரம்பட முங்கவைத்திருந்து எண்ணெய், அல்லது மாடு, ஆடுகளின் கொழுப்பைப் பூசினாலும், பிளப்புள்ள இடத்தில் தாரைப் பூசிவந்தாலும் நாடோறும் இரண்டு ஊக்கியா எண்ணெய்குடித்தாலும் மருதோன்றி இலையைவெந்தயத்துடனிடித்தும் அரைத்தும் காலில் பூசினாலும், எள்ளை இடித்துத் தடவினாலும், குந்துருவை எண்ணெய், அல்லது கொழுப்புடனிடித்துப் பூசினாலும், பாதாம் எண்ணெயைப் பூசினாலும் கடனீரைச் சூடுகாட்டி ஊற்றினாலும், இடித்தகிட்டத்தின் தூள் ஒருபங்கும்; ஜெய்தூனெண்ணெய் நான்குபங்குஞ் சேர்த்து கீலைப்போல் வருகமட்டுங் காய்ச்சிச் சூட்டுடன் பூசினாலும், கழுதைக் குளம்பைக் கரித்துப் பொடித்து, பிளப்பு, உள்ளங்காலில் நீர்வடிகிற பொருந்தல், ஆவாரங்களிற் பொதிந்தாலும், அதில் மருதோன்றி இலையைச் சிறுக்காவுடனரைத்துக் கட்டினாலும், மனிதன் சிறுநீரைக் கொதிக்கவைத்து கால் விரலிலுண்டான புண், மற்றைய புழுவுள்ள புண்களிற் பூசினாலும் சுள்

தமாகும். இதற்குப் பழய நீர்; மிக்ககலம். கடல் ஆமை முதுகோட்டைக்கரித்த சாம்பலை முட்டை வெள்ளைக் கருவுடன் குழைத்துக் கெண்டைக்கால், விரல்களிலுள்ள பிளப்பு பித்த விரிவுகட்குப் பூசினாலும் சுக்கைப் பொடித்து சுடுநீரிற் கலந்து குடித்தாலும், பூண்டை எண்ணெயிலிட்டு காய்ச்சி, மறுபடியும் அதில் எண்ணெயைப் பலவிடுத்தமூற்றி, கை காலருகு பிளப்புகளிற் பலதடவை பூசிக்குடித்தாலும், தாரைப் பூசினாலும், கால், கை, அதனருகுகளிலுள்ள சகல பிளப்பும் வலிகளும் போம். பெண்பிள்ளை வேர்வையல்லது அம்பையாட்டு சிறுநீரை வற்றக்காய்ச்சி அதுபோல் சருக்கரைகலந்து சொறி சிரங்குகளிற் பூசி வெந்நீரால் குளிக்கத் தீரும்.

——(:)——

ஆறுவது பசல்.

நகம் இணக்கமாகுவதற்குரிய பரிகாரம்.

* * *

நகத்திற் காணகப்படும் வெள்ளையை அதன் வெண்குஷ்டமென்னப்படும். அதற்கு:—கோதம்புமாவை ஜெய்தூனெண்ணெயிற் கலந்து கட்டிவரத் தீரும். நோய்வாய்பட்ட; நகங்கெட்டு விழுவதற்கு, ஜெய்தூனெண்ணெயை, முர்று, கெந்தகத்துடனிடித்துக் கட்டினால் விழும். நகவெள்ளைக்கு, கெந்தகமும் தாளமும் இடித்துச் சிறுக்காவிலரைத்துப் பூசினாலும் எண்ணெய் குடித்து வந்தாலும் பூசிவந்தாலும், மிஞ்சளைப் பூசினாலும நீற்றாத சுண்ணாம்புடன் பள்ளாட்டுக் கொழுப்பைச் சேர்த்தரைத்துப் பூசினாலும் போம். நகம் பிளப்புண்டாயிருந்தால்; நியமமாய்மருதோன்றியை அரைத்துவைத்துக் கட்டிவந்தாலும். நகம், வேருடன் களைவதானால் பத்து திருகக்கிடை மருதோன்றியை நீரில் மூழ்கவிட்டுப் புளிப்புண்டானபின் குடித்தாலும் நகத்தில் மருதோன்றியை வைத்து வந்தாலும் கழுதைக்குளம்பை இடித்தரைத்து வைத்துக்கொண்டு மாரிகாலத்தில். நகம், கால், கையிலுண்டான புண் பிளப்புகளி லுதிர்த்தினாலும், வெந்தயத்தை இடித்தரைத்து ஜெய்தூனெண்ணெயிற் குழைத்து நகத்திற் பூசிவந்தாலுந் தீரும்.

——(*)——

ஏழாவது பசுல்.

நகச்சுற்று, விரல் பிளவைகட்குப் பரிகாரம்

நகச்சுற்று அல்லது பிளவை என்பது விரலினடியினின்றும் நகம் வரையிலும் உஷ்டண மதிக்ரிப்பின் காரணத்தால் வீக்கங்கொண்டு, வலி, குத்தல் உண்டாகுவதாம். பக்குவம்.—விரலிலுண்டானால் ஓரிரவு பகல் எலுமிச்சம்பழத்துள் விரலைச்செலுத்தி வைத்திருந்து, பின்பு மாசாக்காய் மாவை, சிறுக்காவுடன் குழைத்து அதிற்கட்டிக் குளிர்ந்த நீரில் வைத்தாலும் இரும்புக்கிட்டத்தைப் பொடித்துச் சிறுக்காவிற் குழைத்துப் பலமுறையாய்த்தளமிட்டுவந்தாலும், பூண்டையுங்கிராதையுமரைத்துப்பூசினாலும் குந்துருவை அரைத்துப்பூசினாலும் மாசக்காய் மாதளைத் தொலியுமிடித்துக் கட்டினாலும், அதிகக்காந்தி யுண்டாயிருந்தால், பருத்திக்கொட்டையை நீருடன் அல்லது சிறுக்காவுடனரைத்துப் பூசினாலும், பஞ்சு, அபியூன் சிறுக்கா. இவைகளைப் பூசி அதன்பேரில் பருத்திப்பால் நனைத்ததுண்டைக்கட்டினாலும் கற்றாழை அல்லது குந்துருவைத் தேனுடன் அல்லது பச்சை மாசக்காயையிடித்துக்கட்டி பின்னர் குளிர்ந்த நீரில் வைத்தாலும், காதழுக்கைப்பூசினாலும் அபியூனை சிறுக்காவுடன்பூசினாலும் அதிமதுரத்தை அரைத்துப் பூசினாலும் யானைத் தந்தத்தை யுரைத்துப் பூசினாலும் தீரும்.

இருபத்திரண்டாம் பாபு முற்றுபெற்றது.

இருபத்திமூன்றாம் பாபு.

குஷ்டம், வெண்குஷ்டம், தேமல், படர்தாமரை வெண்புள்ளி, கரும்புள்ளி, அரும்பாரை, இரத்தத்திரட்சி, பருவு, சிவப்பு வகைகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

குஷ்டவகைகளுமதன் சிகிச்சைகளும்.

குஷ்டத்தின் வகைகள் மூன்று கட்டுச்சிலந்தி போல் கிழம்பிப் புண்ணாய், தேமல் வடிவாய்த் தொலி யுரியும் அதற்கு " தாவுல் அஸது " என்று பெயர். இன்னம் காசுபோல் வட்டமாய் சரீரத்தில் ஒரு துண்டாகும் வரையில் காசுபோல் வட்டத்தில் பெருப்பமும், மழுவலாயுஞ்சிறிது வெள்ளை அல்லது கருநிறமாய் சரீரத்தின் குணவியல்புக்கேற்கவும் அதன் துர்நாற்றம் முந்திய நோயுக் கதிகமாயுமிருக்கும். மூன்றாவது; சொறியுடைய கோலத்துடன் முந்தியகுணப்பாடுகளும் முகக்குறிப் பேதகமு மதிகரித்திருக்கும். அதன் பரிகாரம்.—காராம்பசு, அன்றேல் வெள்ளை மான் கொம்பைக் கரித்து,சிறுக்காவில் குழைத்து ஏழு நாள் வரையிலும் பூசி மணிக்கோதம்பு ரொட்டி, யைத் தேனன்றிமற்றையவஸ்துக்களுடன் தின்னாமல் மருதோன்றி இலையைப் புளிப்பேறிச்சளிப்புக்காணும் வரையில்ஊறவைத்துக் குடித்தும்; புண்ணுள்ளது அல்லது புண்ணில்லாத; குட்டத்தில் இரத்தம் வரும் வரையில் பேய்க்கொம்மட்டி இலையாற் றேய்த்தும்அது போலிரண்டுபாதத்தினளுந் தேய்த்தும் இன்னும் உப்பை நெய்யிற் போட்டு வைத்துக் குட்ட நோயுள்ள இடத்திற் பூசி, நெருப்பனலிற் காட்டத்தீரும்.

இரண்டாவது பசுல்.

குஷ்டரோகத்தின் காரணமும் அதை நிந்திப்பதையும் அதன் சிகிச்சைகளையுங் கூறல்.

குஷ்டத்தின் காரணம்.—கரும்பித்தம் படர்தலும் ரோமக்காலடைபட்டு இரத்தங் குளிரடைவதாலுமாம், குஷ்டமுடையவனிடம்,

சரீர சுவாத்தியம் "ஆபியத்தான" வொருவன் அம்பு எறியுந் தூரத்தளவுக்கப்பாற் றிருந்துபேசுதல் வேண்டுமென்று நபிகணாயகமவர்கள் திருவுளம் பற்றினார்கள். ஆனதால் குஷ்டம், சிரங்கு அம்மை, கண்ணோய், ஈரல்முட்டியான ரோகிகளைத் தவிர்ந்துக்கொள்ள லவசியமாகும்.

இன்னும் மனிதனின் உலர்ந்த மலத்தைக் குடித்து சிறுக்காவுந் தேனும் விட்டுக் குழைத்து குட்டத்திற் பூசினாலும் குரங்கு மாமிசம் அல்லது உப்புள் வைத்த முள்ளெலித் தசையைத்தின்று, மேற்படி எலிக்கொழுப்பு அன்றேல்வான் கோழி இரத்தமிவைகளைப் பூசினாலுந் தீரும்.

கருங்குஷ்டத்திற்கு, "கத்னா" செய்த தொலியை யுலர்த்திப் பொடித்துக்கஸ்தூரியும் பன்னீருங் கலந்து அல்லது முள்ளெலிப்பித்து அல்லது குழிநரிமாமிசந் தின்றாலும், கரும்பூனை இரத்தங்குடித்தாலுந் தீரும்.

மூன்றாவது பசுல்

வெண்குஷ்டவகையு மதன்சிகிச்சைகளும்.

(*)

வெண்குஷ்டமாவது.— சரீரமடங்கலிலும் படர்கின்ற தழுமையான கொடியவெள்ளை ஆனாலது இருவகையாகும் ஒன்று— அதில் ஊசியால் குத்தினால் வெள்ளை நீர்வரும் அதற்கு அவிழ்தம் பிரயோசனப்படாது மற்றதொன்றுஊசியால்குத்திஇரத்தம்வரும்கஷ்டத்துடன் தீரும் பரிகாரம் குவாளையை நீக்குவதாலும் வயிறிளகச்செய்வதாலும், பெரியவெங்காயத்தை சுடுசாம்பலில் வேகவைத்து அதன் நீரைப்பிழிந்தெடுத்து அதில் முள்ளங்கி விரை மாவைக் குழைத்து வெண்குட்டமடங்கலிலும் கெட்டியாய்க்கனமாய்ப்பூசிவைத்துஓரிரவு பகல்விட்டு காலையில் சுடுநீரினால் கழுவிஅல்லது குளித்து மறுபடியு மிவ்வாறே ஒருவாரமுழுதுந் தவறாமல்செய்து பின்னர் வாரத்திற்கொருமுறைஅல்லது இரண்டுமாதத்திற் கொருமுறை தராணியுள்ளபடிக்கு சுகபேதிக்கு வாங்கியபின் கோதம்பப் புளித்த ரொட்டி, ஒருவருடத்திய ஆம்பாட்டின் கிடாயின் மாமிசம், பூண்டு தேன், பரிமாறி, யானைத்தவிர நாலுகாலுள்ள விலங்கினங்களின் மாமிசம் கனத்தவஜீபனங்களை நீங்கிவருவதாலும், திறமுள்ளதுங் கனதியுமான சிலேத்துணியால் நன்றாகத்

தேய்த்து அதிலிலே ப்பூசி கழுவாமல் விட்டுவிட்டாலும் பசுமாட்டுக் கொம்பைக்கரித்துச் சிறுக்காவுடன் சேர்த்துத் தீவர்க்கமாயுண்டுபட்ட வெண்குட்டத்திற்பூசி வேர்வைகாணும் வரையில் வெயிலிலுட்கார்ந்திருந்தாலும் வருடஞ்சென்ற கடாக்கொம்பைக் கரித்துப் பொடித்துச் சிறுக்காவுடன் குழைத்துச் சரீரஞ் சிவப்பேறும்வரையில் சரசரப்பான வஸ்துவால் தேய்த்து, அதிற் பூசினாலும் முள்ளங்கி விரையைக் கீரைச் சாற்றிலரைத்துப் பூசினாலும், பசக்கிடாரியின் சிறுநீரை நாற்பது நாள் மட்டும் பூசிவந்து கோதம்பு ரொட்டி, நெய் தின்றுவந்தாலும், கெட்டியான சிலேத்துணியால் சிவப்பேறும்வரையிற்றேய்த்துச்சுடுநீரினாற்கழுவி நீர்போக்கி மருதாணியிலையும் கடுகுஞ்சமமாயெடுத்தரைத்துப் பூசினாலுந்தீரும்.

நான்காவது பசுல்.

வெண்குட்டம் சொறிசிரங்கு, பத்து வகைகட்குப் பரிகாரம்.

(*)

இந்திரியம் நாதத்தை சூட்டுடன் வெண்குட்டம். புள்ளி. படர்தாமரை, களிற்றட வினாலும், இருபதுவயதை எற்றாத பிள்ளைகளின் சிறுநீரைக்குடித்தாலும், கருந்தேள் சுட்ட சாம்பலை. சிறுக்காவுடன் குழைத்து அல்லது யானைப்பித்து அல்லது மாதவிடை இரத்தம் அல்லது காட்டுமாட்டின் இருகொம்பையுங் கரித்துப் பொடித்து சிறுக்காவுடன் குழைத்து, ஏறும் வெயிலிலிருந்து அல்லது எருமை மாட்டுக் கொழுப்பை, உந்துராணி உப்புடன் குழைத்துவெண்குஷ்டம்சொறிசிரங்கு, பத்துகளிற்பூசினாலும், மனாவின் மூளையை ஜம்பக்கு எண்ணெயுடன் சுடவைத்து அல்லது பாம்புமுட்டையைப் பொரிகாரம் சிறுக்கா இவைகளுடன் மத்தித்து, அல்லது காடிக்கொழுப்பு அல்லது, சிப்பிமுத்தை நீரில் உரைத்து, அல்லது செம்மறியாட்டை அறுத்தவுடன் அதன் இரத்தத்தைச்சூட்டுடன், இவைகளிலொன்றை வெண்குட்டம் வெள்ளைகளிற்றளமிட்டாலு மதன் நிறத்தைப் பேதகமாக்கியும் பெலக்கேடாக்கியும் வைக்கும். இவ்விதமே; கத்னா" தொலியைக் கரித்துப் பொடித்து நீரிற்சேர்த்துக் குடித்தாலும் அவ்வியாதியைப் போக்கும்.

(*)

ஐந்தாவது பசுல்.

தேமல், படர்தாமரைக் கானபரிகாரம்

தேமல்; குட்டரோகத்தைப்போல் சரீரத்திற் படர்கின்றவோர் நோய் இது குஷ்டரோகத்தில் இலேசான வோர்வகை இதுநாள்பட்டுவிட்டால் குட்டமாய்விடும். அதன்காரணம்.—ஐயக்கலவனதிகரிப்பதாலுண்டாகும் அதுகளியவையும் "அசறு போகும் வரையில் உப்புக்கல்லாற் றேய்த்து பள்ளையாட்டுப் புழுக்கையின் சாம்பலைக் கீலில் குழைத்துப்பூசி, கறந்தபால் நெய்நுரை நீக்கியதேன் இவைகளைப் பரிமாறிவந்தாலும், கடுக்காய்ச்சூரணத்தைநாடோறும் ஒன்றரைக் குபுலா சரிஇடை சீனியுடன்சேர்த்து, ஒன்றரைமாதம் வரையிலுட்கொண்டு ரொட்டிமாமிசங்கள் உட்கொண்டு வந்தாலும் அதன்மேல் சுண்ணாம்பைப் பூசிவந்தாலும் அல்லது ஹம்க்காக் கீரைநீர் அல்லதுசிறுக்காவிற் புளித்தபிசின் அல்லது சிறுக்காவிற் புளித்தகெந்தகம், அல்லதுமஞ்சள் அதாவது குருக்கம், அல்லது, நோன்பாளி உமிழ்நீர், அல்லது பருத்திவிரைப்பால், அல்லது பன்னீர், அல்லது தாருங்கொழுப்புஞ்சேர்த்துருக்கப்பட்டது. அல்லது பெருங்காயத்தைப் புளித்த சிறுக்காவிலூறவைத்து அல்லது சதாபை அரைத்து வெண்ணெயுடன் குழைத்து அல்லது ஒன்றரை ஊக்கியாக் கிட்டத்தைப் பொடித்து, அதை அரை ஊக்கியா" ஜெய்துனெண்ணெய் இவைகளைச் சேர்த்து; களிம்புசெய்து அல்லது கடுகை, சிறுக்காவிலரைத்து அல்லது ஓர்', ஊர்க்குருவிச்சிட்டு எச்சம் அல்லது சவுக்காரம், இவைகளிலொன்றைத்தேமல் படர்தாமரையை நன்றாகச் சொறிந்து அதிற்பூசிவரத்தீரும்இன்னும்முள்ளம்பன்றி என்ற முள்ளெலிப் பித்தைக் கொஞ்சங்கெந்தகத்துடன்சேர்த்துத்தேமல் படர்தாமரைகளிற் பூசிவருகத் தீரும்.

ஆறாவது பசுல்.

வெண்புள்ளி, பத்து, களின் பரிகாரம்.

வெள்ளைப்பத்தாகிறது, மேற்றோலியில் விழுந்தமெல்லியவெள்ளை வெண்குட்ட முண்டாவதுபோ லிதுவுமுண்டாகும் அதனறிகுறி— அதிக வெண்மையன்றி, தோலியின் வடிவுபோல் வெண்மையுள்ளழுந்தாமல், வழவழப்பன்றி அதில் முளைக்கும், ரோமம், [illegible] அல்லது செம்படையாயுமிருக்கும் அதில்ஊசியால் குத்தினால் இரத்தம் வரும். அதிகரோமானால் சரீர[illegible]வெண்மையாய்விடும். அதற்குப்பரிகாரம் சுகபேதிக்கு வாங்குவதாலும், சத்திக்கு தலாலுமே தீரும்.

ஏழாவது பசுல்.

கரும்புள்ளி பத்துகளின் பரிபாகம்.

கரும்புள்ளி, பத்து, உறுப்பினது நிறத்தைக் கருநிறத்தளவிற் பேதமாக்கும். அத்தோலியைத் தேய்த்தால், நொய், தவிடு போலதினின்று முதிர்ந்து அவ்விடத்தைச் சிவப்பேறச்செய்யும். பித்தங்கரிந்து ஐயத்தளவிற் சாருவதாலே வாலிபர்களுக்கு அதிகமுண்டாகும். பரிகாரம்.—ஐயத்தைத் தணிக்கச்செய்யும் பரிகாரத்தால் வயிற்றை இளக்கி வருதலாலும் சத்துள்ள வஸ்துக்களைப் பரிமாறி வருதலாலுந் தீரும்.

மேற்சுட்டிய இரண்டுவகைப் பத்துகட்கும் பரிகாரம்.—பொன்னரிதாரம், கெந்தகம் "ஜாஜ்" பளிங்கி, இவைகளைச் சமமாயெடுத்திடித்துச் சிறுக்காவிற் குழைத்துப் பூசினாலும் சிலேர்ப்பனத்தைத் துப்புரவாக்கும் வஸ்துக்களாலே சுகபேதிக்குவாங்கி, மீன், பால், போலுள்ள சிலேர்ப்பனத்தை யுண்டாக்குகின்ற வஸ்துகளை நீக்கி, வேட்டையாடும் விலங்கினங்களின் மாமிசத்திற் சுடப்பட்டது, அல்லது சமைத்ததுகள், சூடும் வரட்சியுமுள்ள வஸ்துக்களைத் தின்று, "கஸறத்து" குஸ்தி, என்ற, கடினதொழில், வெயில் இவைகளிற் பரிமாறிவந்தாலும், முன்றமுட்டையை மூன்றுநாள்மட்டும் சிறுக்காவிலூறவைத்து எடுத்து வெயிலிலுலர்த்திப் பூசினாலும், வெங்காயத்தைத் தேனிலரைத்துப் பூசினாலும், பசுமாட்டுச் சாணத்தைச் சிறுக்காவிலரைத்துப் பூசினாலும் பூண்டைப் பூசுவதாலும். கடுகை, சிறுக்காவிலரைத்துப் பூசினாலும், ஹம்க்காவுக் கீரையைச் சிறுக்காவுடன் பூசினாலும், "வர்சை" ப்பூசினாலும், குடித்தாலும். கல்லங்காசென்ற பெரியமணலை, சிறுக்காவிலரைத்துப் பூசினாலும், குதிரை வேர்வையை சூட்டுடன் பூசினாலும், பள்ளையாட்டு புழுக்கையைச் சுட்டரைத்து அதிலுதிர்த்தி அதன்பேரிற் கெந்

தகத்தூளை யிட்டுக்களியும் வரையில் நன்றாகச் செறிந்துவிட்டாலுந் தீரும்.

எட்டாவது பசுல்.

அரும் பாரைக்குரிய பரிகாரம்.

அரும்பாரை என்பது, ஐயம் அல்லது சிலேர்ப்பனம், அதிகரித்ததாலே ஆணிபோல்சரீரத்திலுண்டாகும் மாமிசம். அதற்குப்பக்குவம்:— துவர்க்கமாய் ஐயத்தைத்தணித்து அதிற்பெரிய அரும்பாரையினடியிற்பெலமான கயிறுபோலுள்ள தாலேகட்டி அதனுணியிற்காயப்படுத்தி, பொன்னரிதாரம். சுன்னம், நசாதிரு, இவைகளைச்சமமாயெடுத்திடித்ததூளையுதிர்த்தினாலடியோடு எடுபடும். அதில் வலியுங்கரந்தலுமிகவானால், சுடுநெய் ஒத்தனமிட்டு அந்நெய்யை. காயத்திற்கொஞ்சமிட்டு ஒருநாழிகைவரையிலிருந்து மேற்படி வலிஅடங்கியபின்மறுபடியும் அவ்வாறே காயப்படுத்தலும் அம்மருந்தையுதிர்த்தலும் ஒத்தனம் மாறிமாறிச்செய்தலுமாயிருந்தால் ஒரேபகலில்அது தறிபட்டுக்கழன்றுவிடும். அப்பெரிய அரும்பாரை தறிபட்டுவிட்டவுடன் மற்றதடங்களுந்தறிபட்டுப்போம்,இன்னும் கருஞ்சீரகத்தைக்கரித்துச் சிறுக்காவிலரைத்து, அல்லது. சுண்ணாம்பு கற்பூரவள்ளியும் சமமாயெடுத்திடித்து, தண்ணீரிற்குழைத்து பலமுறையாக அரும்பாரையிற் பூசினாலும் ஹம்க் காவுக் கீரையைத்தேய்த்தாலும், உப்பைவெங்காயநீருடன் கட்டினாலும், பள்ளையாடு, செம்மறியாடு,புழுக்கையைத்தேனிற்குழைத்துப் பூசினாலும் உப்பைச் சிறுக்காவுடன் அல்லது பொரிகாரத்தைப் பலவிடுத்தம்,பூசினாலும், "வமதனு, கலிமத்தின் கபீதத்தின்" என்ற ஆயத்தை அந்தம்வரையிலோதி அதிற் றடவினாலுங்களைந்துவிடும். மயிலின் மலத்தைப் பூசினாலும், ஊக்குருவி, எச்சத்தை மனிதனின் குவளெச்சிலுடன் கலந்துபூசினாலும் தீரும் (இதுசோதிக்கப்பட்டது) நாயினது சிறுநீரைப் பூசினாலுங்களைந்துவிடும், பாம்பினது சட்டையை மூன்றுபேரித்தம் பழத்துடனரைத்துக் குழைத்து, பரும்அரும்பாரையுள்ள வனுட்கொண்டுவந்தாலுந்தீரும்அந்நோயில்லாதவனுட் கொண்டுவந்தால் எப்பொழுதும் வராது.

ஒன்பதாவது பசுல்

இரத்தத்திரட்சிக் குரிய பரிகாரம்

இரத்தத்திரட்சியாவது;சரீரத்தில் ஒரு தானத்தில் இரத்தந்தரிபட்டுத் தடித்திருப்பதாக இருக்கும். அதற்குப் பரிகாரம்.—பாக்கைப் பன்னீரில் வற்றக்காய்ச்சிபலமுறையாய்ப்பூசிவருவதாலும் உப்பை எண்ணெயுடன் கலந்துஅல்லதுஉப்பைமட்டிலுந் தனியாகப்பூசிவந்தாலும்பலன்கொடுக்கும் இன்னும் 25-9-தில்வரும்.

பத்தாவது பசுல்.

பருவுக்குரிய பரிகாரம்.

பருவென்பது, தீன் குடிப்பு பேதகத்தாலும் உப்புவர்ப்புள்ள பூமியில் வாசம் பண்ணுவதாலும், அலக்கைப்போல் பெரிய கொப்புளமாகவும் அத்துடன் பல பேதகமான கொப்புளங்களுமுண்டாகும். பரிகாரம்:—பருங் கொப்புளத்தை அதன் சுற்றிலும் . மத்தியிலும் நெருப்பாற் சுட்டு, ஓரிரவுபகல், சிறுக்கா, மூர்த்தக்காவால் கட்டி வைத்து, பின்னர், பூண்டும் உப்பும் தேனிற் குழைத்து கட்டினாலும் ஞாயிற்றுக் கிழமையன்று, உகா மரத்தின்பேரில் ஏழுவேரை எடுத்து அதன் தொலியுரித் துலர்த்தி நீரிலரைத்துப் பூசுவதாலும் மருதோன்றி இலையை இடித்து வடித்து ஆவின்பாலில் குழைத்துப் பூசுவதாலும், பருவு; கரும்புள்ளிஇவைகட்கு நாற்பதுநாள்மட்டும்நெய்யுடன் அரிசிச் சீதமுண்பதாலும் இயலாவிட்டால், வாழைப்பழமும் நெய்யும் தின்று மற்றவைகளை நீக்குவதாலும் சுகமாகும். இந்தப் பாபின் சில பாகங்கள், ஒன்பதாவது பாபில் முந்திவிட்டன.

பதினொன்றாவது பசுல்.

செம்புள்ளிக்குரிய பக்குவம்.

செம்புள்ளி; சரீரத்தில் சிவந்த புள்ளியாகச்சூடு, கடுத்தல், வீக்கம், மிகவாக வுண்டாகும். அதனறிகுறியாவது, அதை அழுத்தினால் பள்ளமுண்டாய்ப்பின்பு முன்போல மீளுதல் கொள்ளும்.அதற்குப் பரிகாரம்:-

ஹம்க்ராவுக் கிரை[illegible]த்திவிரை, நீர் இவ்வ்போன்ற குளிர்ந்த வஸ்துக்களைப்பூசினாலும்அதிற் பலதரமாய்ச்சிலேத், துணியிற்சேர்வைபோடுவதாலு நீங்கும்.

இருபத்திமூன்றும் பாபு முற்றிற்று,

* * *

இருபத்திநான்காம் பாபு.

சரீராதிக்கமா யுற்பத்தியாம் நோய்கள்.

அதாவன:—நபுசுகளின் ஆராய்ச்சிகள் வேர்வை, ஜ்வரநோய், பைத்தியம், பித்தமயக்கம், வலிப்பு, போதைக்கேடு, "உம்முசிபியான்" என்ற, கடின வியாதி, கொடிய ஆசையாதியவைகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

நபுசுகளின் ஆராய்ச்சிகளைக் கூறல்.

அறிந்துகொள்:—கல்புக்கு, ஆபத்து: துக்கம். அதற்குச் சுகம், சந்தோஷம்: நபுசுக்குக் கெடுதி, கோபம். அதனுற்பத்தி ஷெய்தானினின்றுமாயிருக்கும். ஷெய்தான் நெருப்பினின்றுமா யிருப்பதால், நெருப்பை, தண்ணீரால் நூர்ந்து போகச்செய்த லாவசியகமாம். ஹதீதின்படிக்கு, குளித்து, உலுவெடுத்து இரண்டு "றக்அத்துத்தொழுது, துஆ கேட்பது கடமையாம். இன்னும் தவறிய விடயத்திற் சலிப்பதும், திராணியற்றதில் ஆலோசிப்பதிற் பராக்காகுவதும், நபுசினது கெடுதியாகவும் வியாதியை வருத்துவதாகவு மிருக்கும். ஒவ்வொரு வாரமடங்கலிலும் சரீரத்திலுள்ள அசூசியத்தான கெடுதிகளைத் துப்புரவுசெய்த லாவசியகம். அதில் சுன்னத்து, வெள்ளிக்கிழமைப் பகலாம் இரவில், தலை, சரீரமடங்கலுக்கும் எண்ணெய், பால், தேய்த்து, இலந்தை, உஷ்னான் இலையாலும் கழுவி, தலைமயிரைச் சீவி வருந்திடுவது சுன்னத்தாயும், மேற்படி சலிப்பு வகைகள் நோய்களைப் போக்குவதாயு மிருக்குமென்று ஹதீதில் வருகிறது. "வேர்வை" நோயுள்ளவன் சரீரம் வேர்க்க நாடினால் கனிந்த அத்திப்பழந் தின்றாலும், வெந்நீர் குடித்தாலும் மேற்படி ஆவி பிடித்தாலும், சீரகத்தூளை [illegible]ட்கொண்டாலும், அத்தி வற்றல். [illegible]கம், கருஞ்சீரகம், காயம் இவைகளிலொன்றைக்கொட்டைப்பாக்களவு வெந்நீரிற் குடித்தாலும், முள்ளங்கி விரைப்புகைப் பிடித்தாலும் வேர்வையுண்டாகும். கெந்தகம், முற்று, சுன்புல், மாசாக்காய், இவைகளிலொன்றின் தூளை வேர்வை கண்டுக்கொண்டிருக்கின்ற சரீரத்திற் றாவினாலும், பன்னீரெண்ணெய் பூசினாலும், வேர்வை நின்றுவிடும்.

இரண்டாவது பசுல்.

"காய்ச்சல்," ஜ்வரமும் அதன் சிகிச்சைகளும்.

பித்தக்கலவன் அதிகரிப்பதால் ஒருநாள்விட்டு மறுநாள் தொடர்ச்சியாக வரும் சுரத்துக்கு மூன்றுநாள் வெறும் வயிற்றில் சர்க்கரையும் எலுமிச்சம்பழச்சாறுஞ் சேர்த்துக் குடித்து, "சத்தி" வாந்தி பண்ணிப் பின்னர், கஞ்சி, சோளக்கூழ், கோதம்பு, தவிட்டு ரொட்டி, பறவைச் சால்னா தின்று வந்தால் தீரும். தீராவிட்டால் பித்தத்தைக் கழிக்கும் சுகபேதி வாங்குவதால் தீரும்.

வாதக்கலவன் அதிகரிப்பதால் நாடோறும் வரும் சுரத்துக்கு மூன்று நாள் தொடர்ச்சியாகச் சிறுக்காவைக் குடித்து வித்து வஸ்துக்களைத் தின்று மற்றயவைகளை விலக்கிவரத் தீரும். தீராவிட்டால் இ[illegible]தங்குத்தி வாங்கத் தீரும். சிலேர்ப்பனக் கலவன் அதிகரிப்பதால் ஏழுநாள் வரையில் சரீரத்தின் வெளியில் வெதுவெதுப்பும், கசகசப்பாய் வேர்வை கண்டும், உள்சுரம் கடினமாகவும் சரீரமெல்லாம் நெருப்பைப்போல் சுரம் வீசி, புத்தி பேதலித்து சொற்கள் பேதகமாய், தன்னையறியாமல் உளறுதலுண்டு பட்டு, வேர்வை யதிகரிப்புமாயுள்ள சுரத்துக்கு, துவர்க்கமாய் நாடோறும், சிறுக்கா, தேன் இவைகளால் வாந்திக்கச் செய்து, பின்னர் சருக்கரையுடன் கஞ்சி, அல்லது கோதம்பு ரொட்டி, பறவைச் சால்னா இவைகளைப் பரிமாறிவரத் தீரும்.

ஐயக்கலவ னதிகரிப்பதால் இரண்டுநாள் விட்டு, இரண்டு நாள் முறையாக வருவதில், துவர்க்கத்தில் சூடு இலேசாய் நாளுக்கு நாள் வலுத்துக் கடினமான சுரமாக வீசும். பின்னர் சரீரத்தில் ஊசி

கொண்டு குத்துவதுபோல் உணர்ச்சி யுண்டுபட்டு வேர்வை காணும் இதை நாலாமுறைக் காய்ச்சலென்றுஞ் சொல்லப்படும். பரிகாரம்:—நுரை நீக்கிய தேன், வற்றிய நெய் இதுகளில் ஆவின்பாலைக் கறந்தவுடன் விட்டுக் கலந்து குடித்து, மற்றவைகளை நீக்கி, காய்ச்சல் "துவர்க்கம்" ஆரம்பித்தவுடன் சுடுநீரைக் குடித்துவரத் தீரும். வாதத்தாலுண்டான சுரத்துக் குறிகுறியாவது:—முகமும், விழியுஞ் சிவந்திருக்கும். பரிகாரம்:—நாம்பில் இரத்தங் குத்தி வாங்குவதாகும். பித்தத்தாலுண்டான சுரத்துக் குறிகுறியாவது:—முக மஞ்சணிப்பும் விழிப்பும் பித்தவாந்தி, வாய் கசப்புமுண்டாகும். பரிகாரம்:—கியாழ வகையும் புளிப்புள்ள வஸ்துக்களும் பரிமாறல் வேண்டும். சிலேர்ப்பனத்தாலுண்டான சுரத்துக் குறிகுறியாவது:—தாகஞ் சிறுத்தும், நிறம் இய்ய நிறமாயும், நடுக்கமு முண்டாயிருக்கும். பரிகாரம்.—வாந்தி எடுத்து "சிக்கன்ஜபீன்" குடிக்கவும். ஐயத்தாலுண்டான சுரத்துக் குறிகுரியாவது.—முகம், சிறு நீர் நார்ந்து நித்திரை மிகைப்பாக விருக்கும். பரிகாரம்.—தொலிக் கோதம்பு நீரைச் சருக்கரையுடனருந்தவும்.

மூன்றாவது பசுல்.

ஜுரத்துக்கு இஸ்முக்களும் அவிழ்தங்களும்.

காய்ச்சலுள்ளவன் முதுகில் "அதான்" பாங்கும் இக்காமத்தையு மெழுதுவித்தாலுடனே தீரும். ஜுரத்துக்கெழுதிக்கட்டும் இஸ்மாவது.—"பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம், பிஸ்மில்லாஹி, வபில்லாஹி, வ, முஹம்மதின் றசூலில்லாஹி, ஸல்லல்லாஹு, அலைஹிவஸல்லம் குல்னா, யாநாரு. கூனீ, பறுதன், வஸலாமன், அலாஇபுறாஹீம் வஅறாதூபிஹி. கைதன், பஜ அல்லாஹு முல், அக்ஸரீன். அல்லாஹும்ம, றப்ப, ஜிப்றீல, வமீக்காயீல, வ இஸ்றாபீல, வஇஷ்பி, சாஹிப ஹாதல் கித்தாபி, பிஹவ் லிக்க, வகூவ்வத்திக்க, வஜபறூத்திக்க, இலாஹல் ஹக்கி ஆமீன். இவ்வண்ணம் அறபிய அட்சரத்தால் பிழையறவெழுதி கட்டத்தீரும். இன்னும் முசல் கோரோசனையில் மொச்சைக்கொட்டை பிரமாணமருந்தினாலும், பசுமாட்டுகொம்பு, அல்லது காட்டுமாட்டு கொம்பைக்கரித்துப் பொடித்து வஜீபனத்தோடு சேர்த்துட்கொண்டாலும் மலைப்பாம்பு, தாமரைக்காய், மனிதன் என்[illegible] அம்பையாட்டின் தாடிமயிர், கழுத்துகிகண்ட விட்டில், உயிருள்[illegible]ம்பின் வீரப்பல், அதன் தாமரைக்காய், பன்றி என்பு, இவைகளி[illegible]லொன்றைக் கட்டிக்கொண்டாலும் நாலாமுறைகாய்ச்சல் போம். யூக்கிறு என்பவர் சொன்னார். மூன்றுள்ள ஹாக்கமாக்களாய் பரீட்சித்ததா யிருக்கும். பன்றியென்பைச்சீலையில் வைத்து நாலாமுறைக்காச்சலுள்ளவன் பேரில் கட்டினால் மிக்க துரிதத்தில் நீங்கி விடுமென்று. இன்னும் கரடி வலதுகண்ணைச் சீலையில் வைத்துக்கெண்டைக் காலில் கட்டிக்கொண்டால் தீராத காச்சல் தீரும். சாவலின் இரண்டருகிலு மிருக்கும் இரண்டென்பையும், அதில் விடாத சுரத்துக்கு வலது எலும்பும் நான்காம்முறை சுரத்துக்கு இடது எலும்புங்கட்டக் குணமாகும். கறட்டோந்தி" வலது கையுமிடது காலும் கறுத்தத்துணியில் வைத்துக் கட்டினால், காலாகாலமாயிருக்கு நாலாமுறை காச்சல்தீரும். கட்டிடங்களிலுள்ள, நூலாம் பூச்சியைக் காச்சலுடையவன் பேரில் கட்டினால் தீரும், அன்றியும் அதைச்சீலையில் வைத்து நாலாமுறை காச்சலுக்குக்கட்ட நிவர்த்தியாம், எலிக்கண்ணை கட்டினாலும், யானைத்தொலியிற் சிலதைக் கொடிய காச்சலுக்குக் கட்டினாலுந் தீரும். குளிர்காச்சலுடையவனுக்கு, உயிருள்ளமுள்ளெலியின்வலதுகாலருகைத்தறித்து மட்டித்துண்டில்வைத்துக்காச்சலுடையவனறியாமலிருக்கக்கட்டினால் தீரும்; காச்சலுடையவனுக்கு முள்ளம் பன்றிவலதுகை நகங்களைப் புகைப்பிடித்தால் தீரும். அதன் தாமரைக்காயை நாலாமுறைக் காச்[illegible]லுக்குக் கட்டத்தீரும் "பிரசவம்" இடுப்பு வலியுள்ளவள் அணிந்[illegible]ருந்த சட்டையை அணைந்தால் நாலாமுறைகாச்சல் தீரும். நாலாமுறைக்காச்சலின் முறைவந்தவுடன் பிசினை மூன்றுருண்டை செய்து அதனுள் மூன்று, கொசுவை, வைத்து விழுங்கிப் பாதம் பூமியிற்படாமலிருந்தால் "அல்லாஹுத்த ஆலாவி னுத்தாவினாலது நீங்கும் பக்கவாதம், பழைய சுரம் உள்ளவனை நட்டுவக்காலி, தேள் இவைகள்கொட்டினவுடனே அவ்வியாதி நீங்கும். அல்லாஹு அஃலம்.

நாலாவது பசுல்.

வைத்திய வகைகள், அதனறிகுறிகள், அதன் சிகிச்சைகளைக் கூறல்.

பித்தமதிகரித்ததாலும், அய்யமதிகரித்ததாலும் கெட்டயோசனைகளுண்டாகி, பயம், சலிப்பு, மிகவாகி, வலிப்பும்,மயக்கமுமுண்டாம் பித்தத்தாலுண்டானதற்கு அடையாளம் தன்னையறியாம லுளறுதல், பேச்சுமிகுக்குதல், தீங்கைக்கொண்டு மனிதரில் முக்நோக்குதல், சில வேளை துஷ்டகிரிகைகளைச்செய்தல்அதாவது ; “அடித்தல்,கல்லாலெறியுதல் போலாம்.” அதற்குப்பரிகாரம்—அவனைக்காற்றில்லாத வோரிடத்தில் வைத்து, உலாவித்திரியாமல் ஒடுங்குதலாய் பலமனவாராய்ச்சிகளின்றிச் சுகமாயிருக்க, சிரசின் ரோமத்தைக் களைந்து, பசுவெண்ணெயைச் செவ்வையாக மூளையிற் சேரும்வண்ணந்தேய்த்து, சரீரமுற்றிலும் எண்ணெயைத்தேய்த்து, ஹல்வாகோழிமுட்டை, மஞ்சள் கருவை, நெய், சர்க்கரையுடன் தின்னக்கொடுத்துக் கோதம்புபுளித்த றொட்டியால், சீனி இவைகளையுட்கொண்டு, பின்னர் துப்பட்டியாற் போர்த்தித்தனிமையிற் றூங்கி விழிக்கச்செய்யவும்.

ஐயத்தாலுண்டானதின் அடையாளம் துன்பத்தால் அல்லதுபெலவீனத்தால் பயந்தவனைப்போல் வாய் மூடுதலதிகமாயும் யோசனை வஸ்வாஸமும் ஒழிந்தவிடம் இடுகாடுகளைத்தேடுதல், ஓரிடத்தில் ஒரு நாழிகைநேரமாவது தரிபட்டிராமல் இன்னவிடம் செல்கின்றோமென்றறியாதல், சிலவேளை அழுது, அடித்து மோதிவிழுதல், தட்டழியுதலான குணப்பாடுகளுண்டாகும் அதற்குப் பரிகாரம்.—காற்று வீசுதலும் வெளிச்சமிகுதலுமுள்ள மேல்வீடு போலுயர்ந்த விடத்திலிருத்தாட்டிக்கோதம்பு றொட்டி, வெந்தயம், நெய், கொழுத்த மாமிசங்கள் ஹல்வா, போலான சத்துள்ளவஸ்துக்களைத் தின்னக்கொடுத்து, சந்தோஷம், சமாளம் மிருதுவான பேச்சுகளைக் கொடுத்து, மூளை’ தலை, சரீரத்தில் எண்ணெய் தேய்த்துத்துப்பட்டிபோர்த்திவ்ரவும். சூடுமிகைத்தலால் சொல்; செயல், மிகவாகுகின்ற, பைத்தியம் குளிர்ச்சியைக்கொண்டு தீரும். பன்னீர், பன்பசஜா. சுரை, சதாபு, கிசுத்து, கருஞ்சீரகம்; முத்துக்கொட்டை எண்ணெய்களைத் தலையிற்பூசவும் குதிரை மூளையில், றொட்டி, துவைத்துத்தின்றாலும், சாவல், பூவைத்தறித்து நெய்யிற் [illegible]த்தபுகையை மூக்கில் சுவாசிக்கச்செய்தாலும் பூண்டினதி நீரைக்காதிலொழுக்கினாலும் பைத்தியந்திரும்.

* * *

ஐந்தாவது பசுல்.

புத்திமாருட்டம் போன்ற பைத்தியம்.

பேதகமானபுத்தி இணக்கமாவதற்கு, பாதாங் கொட்டையை இடித்துப் பிழிந்த எண்ணெயைத் தலையிற் சளிக்கத்தேய்த்து அதன் சக்கையைத்தலையில் வைத்துத் துணியாற் கட்டி மூன்று நாள்சென்று அவிழ்த்து மறுபடிசெய்து வந்தாலும் பன்னீரெண்ணெய் நசியம்பிழிந்தாலும்,கோழிமுட்டையெண்ணெய்பூசினாலும் தீரும். வெள்ளைச்சாவல் செஞ்சாவல் கொண்டைப்பூவைப் புகைப்பிடித்தாலும், மான் கோரோசனை, ஊக்குருவி இரத்தம், சிவந்த கெந்தகம்; மூன்றுஞ் சேர்த்து மூன்று நாள், தொடராய் நசியம் பிழிந்தாலும் பைத்தியம் நீங்கும். மனிதன்பேரில் வெட்டப்படாத வாள் “கத்தி” கொண்டு முள்ளெலி தலையை அறுத்து, துண்டுபடுத்தி பைத்தியம் முயல்வலிப்பு, புத்திமாருட்டமுள்ளவன் பேரிற் கட்டினாலது நீங்கும். நரிமாமிசம்; மாதக்கடைசியில் குறுக்கிட்ட முசல்வலி, பைத்தியத்துக்குப் பலனாகும், மரங்கொத்தியின் பூவைப் புகைப்பிடித்தாலும் பைத்தியம் போம். மாதவிடையுள்ளவளைக் கிரீடித்தவன், மடையனாயும். மயில் பித்தை அருந்தினவன் பைத்தியனுமாவான். சுப்பிமுத்தைச் ‘‘சுறுமா” கண்ணில் தீட்டிவந்தால் பித்தத்தைப் போக்கும். செம்மறியாட்டு மாமிசம், பித்தத்தைப் போக்கும் பள்ளையாட்டு மாமிசமும் அதன் மூளையுந் தின்றால், துக்கம், மறதி கரும்பித்தம், சிலேர்ப்பனம் இவைகளையுண்டு ப[illegible]த்தும்.

லாகிரியுடையவன் பச்சை மீனை முகர்ந்தாலது நிவர்த்தியாய்த் தெளிவடைவான். ஒட்டகைச் சிறுநீரைத் குடித்தாலுடனே லாகிரி நீங்கும். குரங்கு இரத்தத்தைச் சூட்டுடன் குடித்தா லங்ஙனமே ஊமையாய்விடுவான். கிழியின் பித்தை யருந்தினால் நாவுதடுமாறும் அதன் நாகரீகமாய் பேசுவான்.

ஆறாவது பசுல்.

வலிப்பு பேதைமயக்கங்களுக்குப் பரிகாரம்.

ச[illegible]ணை முகர்ந்தாலும் காதில் வைத்துக்கொண்டாலும் ஒவ்வொருவாரங்கடோறும் வயிறுநிரம்பியிருக்கையில்வாந்திபண்ணினாலுந் தீரும். புளிப்பானவஸ்துக்கள், குளிர்ந்த நீர், பால், மீன், வகைகள், கனிந்த கனிகள், ஈத்தம்பழம், ஜாதிக்காய், கொடிமுந்திரி, சபர்ஜல் வகைகளை நீக்கி; அத்திப்பழம் வற்றல்கள், பறவை மாமிசம் அதன் சால்னா, மணிக்கோதம்பு ரொட்டி; தேன், மாதளைச்சுளை இவைகள் பரிமாறவும். இன்னும் பிராயமெற்று முன்னுண்டான முயல் வலிப்புக்கு; புலித்தோலிற் சிலதை கொஞ்சத்தைக் கட்டினால் தீரும். நரி மாமிசம், மாதக்கடைசியில் வந்த முயல் வலிப்புக்கும் பைத்தியத்துக்கும் பலன் கொடுக்கும். முதலையின் ஈரலைப் புகைபிடித்தாலும் குழிநரிப்பித்தை நாசியிலூதினாலும்; அதன் வீரப்பல்லைக் கட்டிக்கொண்டாலும் கழுதையின் கால் குளம்பில் மோதிரஞ்செய்தணிந்துகொண்டாலும், அதன் ஈரலைச் சுட்டு சிறுக்காவி லூறவைத்துத் தின்றாலும், கோழியினிரைப் பெட்டியிலுள்ள கற்களைக் கட்டிக் கொண்டாலும், நத்தைச் சிப்பியைப் புகைபிடித்தாலும், கீரிப்பிள்ளை மூளையை புலர்த்திச் சிறுக்காவுடனருந்தினாலும், யானை என்பை வலிப்புள்ள பிள்ளை கழுத்திற் கட்டினாலும். நாய் மயிரைக் கட்டினாலு நல்ல பலனைக் கொடுக்கும்.

ஏழாவது பசல்.

உம்முச்சி புயர்னென்ற ஓர்வித வலிப்பு.

——:(*):——

இது “வலிப்” பென்ற நோய்களி லொருவகையாகும். இஃது, புலூக் ஆகுமுன் அதாவது பிராயமெற்று முன்னர் உண்டானால் தீரும் பின்னர் உண்டானது தீருவது பஃகாகஷ்டம் அதில் இருபத்தைந்து வயதைக்கடந்து வலிப்பதிகமாய்விட்டதால்தீராது. இரும்புபோலுள்ள ஆயுதபாணிகளின் காயத்தாலே இவ்வலிப்புண்டானவன் ஒரு வருடத்தில் மரணமடைவான் கெற்பஸ்திரிகள், காய்ச்சலுள்ள பாலகளிலுண்டான வலிப்புத்தீரும்., இவ்வலிப்புடன் கை; கால்; நாவுபோலுள்ள உறுப்புகளிற் சோர்வுண்டானால், அது பக்கவாதமாம். இவ்வாறு சிறுபிள்ளைகளிலுண்டானால் பரிகாரத்தால் இலேசாகும். இவ்வலிப்பினால் பிடரியிலிருந்து முதுகுமட்டுஞ் சோர்வடைந்தால் அவ்வுறுப்புகளில்

விளக்கெண்ணை பூசிவரல்வேண்டும், கொடியகாச்சலாலுண்டான வலிப்புக்கு, பருத்திவிரைப்பாலுடன் பன்னீரெண்ணெயைக் காய்ச்சிக் காற்றிற் குளிர்ந்தபின் பூசவும் அவ்வலிப்புடன் சுரநோயுமிருந்தால் ஒரு மாதம் வரையிற் பன்னீ ரெண்ணெய் பூசிவரவும். கோதம்பு ரொட்டி மாதளைச் சுளை, கோழிமாமிசம்தின்கவும். மீன், பாலை நீக்கவும். வலிப்புள்ளவன். தன் ஊரைவிட்டுப் பிறதேசஞ்சென்றாலும், கழுதைக் குளம்பால் மோதிரஞ் செய் தணிந்தாலும் தீரும். இன்னும் வலிப்பு; அல்லது கொடியவியாதியுண்டாகுந் துவர்க்கத்தில் கனத்த ஊசாட்டத்துடன் திகில்பிடி யுண்டாகிச்சுவாசத் தொனியும் சரீர வசும்புதலுநின்று ரோமக்கால்களடைபட்டு, “மூக்குச்சாவுக்கு” முடுகி அது தீர்ந்தால் திடீரென் றுணர்வுபெறுவான் அப்பொழுது செய்யவேண்டிய பரிகாரமாவது:—இரத்தங் குத்திவாங்குவதும் சுகபேதிக்குக் குடிப்பதும் சூடான எண்ணெய்களைப் பூசுவதும்; கனத்த வஜீபனங்க ளருந்துவதை நீக்குவது மாவசியகமாம்.

——(:)——

எட்டாவது பசல்.

கொடிய வியாதியின் பரிகாரம்.

கொடிய வியாதி,இதாகிறது உசும்புதலடங்கலையு மழித்து மூச்சு, சுவாசத்தை மட்டிலும் வெளியாயு மடக்கமாயு மாக்கிக்கொள்ளும், இவ்வியாதியைக் கண்டறியாமல் மிகுத்தவர்கள் உயிருடன் புதைக்கப்படுகிறார்கள். அதற்குப் பரிகாரம் சுவாச மடக்கமாயிருந்தால் தெளிந்த பஞ்சை மூக்குத் தண்டின் துவாரத்து னேரே செலுத்திவைத்து அப் பஞ்சுவசும்பாமலிருந்தால், ஊசியைக்கொண்டு அவன் நகக்கண்களிற் குத்தவும் அதினு முசும்புதலில்லாவிட்டாலும் இரத்தத்தின் அடையாளத்தை ஸ்தூலவெளியிற் காணாவிட்டாலும் தண்ணீரை வயிற்றில் விட்டுசும்பாவிட்டாலுந் தலையைத் தாழ்த்தி வைத்துக்கொண்டு தலைத் தொலியைக் கிழிப்புளித்த “சிறுக்காகாடியை அல்லது காடியுடன்சுக்கு, அல்லது இஞ்சித் தண்ணீரைக் கிறிய [illegible] விட்டு [illegible]சும்பாவிட்டாலும் மூன்று நாழிகை வரையில் விட்டிருந்து மறுபடியும் மேற்சுட்டிய முறைகளிற் செய்யுதற்கியல்புள்ளதைச் செய்து முசும்பாவிட்டாலே மரணமடைந்தானென்றறிக. உசும்பினால்மிகவிரைவில் சிகிச்சைகடைக்

சதாப்பை முகர்ந்தாலும் காதில் வைத்துக்கொண்டாலும் ஒவ்வொருவாரங்கடோறும் வயிறுநிரம்பியிருக்கையில்வாந்திபண்ணினாலுந் தீரும். புளிப்பானவஸ்துக்கள், குளிர்ந்த நீர், பால், மீன், வகைகள், கனிந்த கனிகள், ஈத்தம்பழம், ஜாதிக்காய், கொடிமுந்திரி, சப்ர்ஜல் வகைகளை நீக்கி; அத்திப்பழம் வற்றல்கள், பறவை மாமிசம் அதன் சால்னு, மண்ணிக்கோதம்பு ரொட்டி; தேன், மாதளைச்சுளை இவைகள் பரிமாறவும். இன்னும் பிராயமெற்று முன்னுண்டான முயல் வலிப்புக்கு, புலித்தோலிற் சிலதை கொஞ்சத்தைக் கட்டினால் தீரும். நரி மாமிசம், மாதக்கடைசியில் வந்த முயல் வலிப்புக்கும் பைத்தியத்துக்கும் பலன் கொடுக்கும். முதலையின் ஈரலைப் புகைப்பிடித்தாலும் குழிநரிப்பித்தை நாசியிலூதினாலும், அதன் வீரப்பல்லைக் கட்டிக்கொண்டாலும் கழுதையின் கால் குளம்பில் மோதிரஞ்செய்தணிந்துக்கொண்டாலும், அதன் ஈரலைச் சுட்டு சிறுக்காவிலூறவைத்துத் தின்றாலும், கோழியினிரைப பெட்டியிலுள்ள கற்களைக் கட்டிக் கொண்டாலும், நத்தைச் சிப்பியைப் புகைப்பிடித்தாலும், கீரிப்பிள்ளை மூளையை யுலர்த்திச் சிறுககாவுடனருந்தினாலும், யானை என்பை வலிப்புள்ள பிள்ளை கழுத்திற் கட்டினாலும். நாய் மயிரைக் கட்டினாலு நல்ல பலனைக் கொடுக்கும்.

ஏழாவது பசுல்.

உம்முச்சி புயர்னென்ற ஓர்வித வலிப்பு.

——:(*):——

இது "வலிப்" பென்ற நோய்களி லொருவகையாகும். இஃது, புலூக் ஆகுமுன் அதாவது பிராயமெற்று முன்னர் உண்டானால் தீரும் பின்னர் உண்டானது தீருவது மகாகஷ்டம் அதில் இருபத்தைந்து வயதைக்கடந்து வலிப்பதிகமாய்விட்டதால்தீராது. இரும்புபோலுள்ள ஆயுதபாணிகளின் காயத்தாலே இவ்வலிப்புண்டானவன் ஒரு வருடத்தில் மரணமடைவான் கெற்பஸ்திரிகள், காய்ச்சலுள்ள பாலகளிலுண்டான வலிப்புத்தீரும். இவ்வலிப்புடன் கை; கால்; நாவுபோலுள்ள உறுப்புகளிற் சோர்வுண்டா[illegible] அது பக்கவாதமாம். இவ்வாறு சிறுபிள்ளைகளிலுண்டானால் பரிகாரத்தால் இலேசாகும். இவ்வலிப்பினால் பிடரியிலிருந்து முதுகுமட்டுஞ் சோர்வடைந்தால் அவ்வுறுப்புகளில்

விளக்கெண்ணை பூசிவரவேண்டும், கொடியகாச்சலாலுண்டான வலிப்புக்கு, பருத்திவிரைப்பாலுடன் பன்னீரெண்ணெயைக் காய்ச்சிக் காற்றிற் குளிர்ந்தபின் பூசவும் அவ்வலிப்புடன் சுரநோயுமிருந்தால் ஒரு மாதம் வரையிற் பன்னீ ரெண்ணெய் பூசிவரவும். கோதம்பு ரொட்டி மாதளைச் சுளை, கோழிமாமிசம்தின்கவும். மீன், பாலை நீக்கவும். வலிப்புள்ளவன். தன் ஊரைவிட்டுப் பிறதேசஞ் சென்றாலும். கழுதைக் குளம்பால் மோதிரஞ் செய் தணிந்தாலும் தீரும். இன்னும் வலிப்பு; அல்லது கொடியவியாதியுண்டாகுந் துவர்க்கத்தில் கனத்த ஊசாட்டத்துடன் திகில்பிடி யுண்டாகிச்சுவாசத் தொனியும் சரீர வுசும்புதலு நின்று ரோமக்கால்களடைபட்டு, "மூக்குச்சாவுக்கு"முடுகி அது தீர்ந்தால் திடீரென் றுணர்வுபெறுவான் அப்பொழுது செய்யவேண்டிய பரிகாரமாவது:—இரத்தங் குத்திவாங்குவதும் சுகபேதிக்குக் குடிப்பதும் சூடான எண்ணெய்களைப் பூசுவதும்; கனத்த வஜீபனங்க ளருந்துவதை நீக்குவது மாவசியகமாம்.

——(:)——

எட்டாவது பசுல்.

கொடிய வியாதியின் பரிகாரம்.

கொடிய வியாதி,இதாகிறது உசும்புதலடங்கலையு மழித்து மூச்சு, சுவாசத்தை மட்டிலும் வெளியாயு மடக்கமாயு மாக்கிக்கொள்ளும், இவ்வியாதியைக் கண்டறியாமல் மிகுத்தவர்கள் உயிருடன் புதைக்கப்படுகிறார்கள். அதற்குப் பரிகாரம் சுவாச மடக்கமாயிருந்தால் தெளிந்த பஞ்சை மூக்குத் தண்டின் துவாரத்து னேரே செலுத்திவைத்து அப்பஞ்சுவுசும்பாமலிருந்தால், ஊசியைக்கொண்டு அவன் நகக்கண்களிற் குத்தவும் அதிலு முசும்புதலில்லாவிட்டாலும் இரத்தத்தின் அடையாளத்தை ஸ்தூலவெளியிற் காண்காவிட்டாலும் தண்ணீரை வயிற்றில் விட்டுசும்பாவிட்டாலுந் தலையைத் தாழ்த்தி வைத்துக்கொண்டு தலைத்தொலியைக் கிறிப்புளித்த "சிறுக்காகாடியை அல்லது காடியுடன்சுக்கு, அல்லது இஞ்சித் தண்ணீரைக் கீறிய க[illegible]த்தி[illegible]ட்டு முசும்பாவிட்டாலும் மூன்று நாழிகை வரையில் விட்டிருந்து மறுபடியும் மேற்கூடிய முறைகளிற் செய்புதற்கியல்புள்ளதைச் செய்து முசும்பாவிட்டாலே மரணமடைந்தானென்றறிக. உசும்பினால்மிகவிரைவில் சிகிச்சைகளைத்

தல்[illegible]ண்டும். அதாவது, கை, கால், அருகுகளில் உயர்ந்த கஸ்தூரியைப்ப[illegible]வைக்குஞ்சு இரத்தத்துடன் கெட்டியாகத்தேய்த்துத் தலையிற் சுடுநீர்விட்[illegible]ராலும், பூண்டு முஸ்தக்காபோட்டுக் கொதிக்கவைத்து ஜெய்தூனெண்ணெயைச் சடலமுழுதுங் கடுசாக அதாவது சூடேறத் தேய்த்து வயிறு நெஞ்சு இருபாதத்தையும் சுடு நீராற் கழுவி அவ்வனுசம்பின வுடன் அவர்க்கமாய் உப்பிட்டுக்காய்ச்சப்பட்ட சுடு நீரைக் குடிப்பாட்டியபின் பால் பறவை மாமிசம் நெய் தேன், உடன் காய்ச்சப்பட்ட அரிசிக்கஞ்சியைக் கொடுத்து மற்றையவஸ்துக்களை நீக்கல் செய்ய வியாதிதீரும் இந்நோயுண்டையவன் நாடோறும் வெந்நீர் கொண்டொந்தி எடுக்கவும்.

ஒன்பதாவது பசல்.

கொடிய ஆசை,

கொடிய ஆசையாலே அறிவுநீங்கிச் சிந்தை கலங்கி, வளறினால், அதற்கு ஹலாலான விதத்தால் அவ்வாசையைச் செய்துமுடித்தாலும் நஹ்வு பஜுயிலு, உகூலு. உலமாக்கள் மஜ்லீஸ் மார்கக்கோட்பாடு அஃலிய்யத்தான இல்முஇவைகள் போலொற்றதைக் கொண்டு பராக்காலும் தலையில் வெந்நீரை அதிகமாய்ப் பரிமாறினாலும் ஜிமாஉ மிகுத்தாலும். வற்றல்காய் வெள்ளரிக்காய். ஹம்க்காவுக்கீரை, புளித்த மோர், தயிர் இவைகளையுபயோகித்தாலும்,குளிர்ந்த இடத்திற் சயனிப்பதும், பூரணச்சந்திரனைப் பார்ப்பதும் குளிர்ந்த ஜலத்திற் குளிப்பதும் வழக்குசெய்தல், வழி நடக்கல், வேட்டையாடுதல் விளையாடுதல்; உபதேசங்கேட்டல். வற்புறுத்தல் இவைபோலொற்றதாலும் அக்கொடிய ஆசைநிவர்த்தியாம்.

இருபத்திநான்காம் பாபு முற்றுப்பெற்றது.

இருபத்தைந்தாம் பாபு.

அம்மை, கொப்பாடை, சிச்சிலுப்பை, நீர்க்கொளுப்பான், மஞ்சட் சோகை, நிறம்பேதகமாதல், மஞ்சட்காமாலை. ரணங்களின் தழும்பு, நெருப்புச் சுட்டபுண், சொறி சிரங்காதியவைகளைக் கூறல்.

ஒன்றாவது பசல்,

அம்மை நோயு மதனடையாளமும்.

அம்மை நோயாகிறது யாவர்கட்குமுண்டாகின்ற வோர்நோய். அதனடையாளம்,— முதுகுவலி, முகக்கறுப்பு. நித்திரையிற் றிடுக்கம் உறுப்புகளிற்கடுசாகிய குத்தல் கனதி, முகமும் இருவிழியுஞ் சிவப்பாயிருத்தல். கண்ணீர் பீளைவடியுதல் மூக்குக்கிட்டுமையுடன் கொட்டாவிவிடுதல் சப்தங்குறைதல் மேனிவருத்தம் விடாதகாச்சல் வரட்சியான இருமல், தும்மலுடன் நெஞ்சு தொண்டை, பொட்டுவலிக ளுண்டாகுதல் அம்மைக்கொப்பளம் வெளியாகுமுன் தோலிப்பிற்குத்தல் காணல், சதையையுந் தோலி யையுங் கிழித்துக்கொண்டு வெளியாகும் பரிகாரம்.—அவர்க்கமாய் நரம்பு குத்தி இரத்தம் எடுத்துப் பின்பு மூக்குநரம்பைக்குத்தி இரத்தமெடுத்து. பின்னர்மதுரமான வஸ்துக்களையுங் கந்தவஸ்துக்களையும் நீக்கிக்கொள்ளலவசியம் காலில்மருதோன்றி இலையைப்பூசினால் கண்ணில் அம்மை பிறப்படுவதை அச்சந்திருவான் தயிர்மோர்,புளித்தரொட்டியுந்தின்று. சரீரத்தில் ஹம்க்காவுக் கீரைச் சாற்றையுந் தேனையும் பூசுவான்.

அம்மையினிறங்களிற்கெட்டது கறுப்பு பின்புபச்சை. அதில் நலவானது வெண்மை. அம்மையுடையவன் அதிகமாயுண்பவனையும் ஸ்தூலம் சதைப்பற்றுள்ளவனுமாயிருந்தால் வெளியாவது இலேசாகவும் வருத்தங்குறைந்து காச்சல் பெலவீனமாகி மூன்றாவது நாளில் அம்மைவெளியாகும் இன்னும காச்சல்,அம்மை நீங்கித் தோலியுரிந்து விழும்வரையில் பறவைமாமிசம் மதுரமானவஸ்துக்கள் சூடான வஸ்துக்களையும்,தன் சுபாவக்குணத்தை மெதுவுபடுத்தும் வஸ்துக்களையும், புளித்தவஸ்துக்களைத்தின்று வயிற்றோட்டமுண்டாகுவதையுந் தவக்க

முதல்நாட்சிவரையில், எண்ணெய்பூசுவதையுந் தண்ணீரிற்குளிப்பதையும் பரிமாறுவதையுந் தவிழ்ந்துக்கொளொடு சூடான சாம்பல்போலொற்றதால் ஒத்தனமிடவும் கண்ணில் அம்மைவிசயமானால் சுறுமாவிடுவான் எண்ணெய்ப்பூசினால் சீ ஊனமிவைகள் உள்ளில்மூங்கிவிடும்.

——:(*):——

இரண்டாவது பசுல்.

அம்மை யுடையவனுக்காவசியகமானவைகளும் அம்மையின்கெடுதிகள் மரணக்குறிப்புகளும்.

——:(:):——

உப்பைத் தண்ணீரிற் கரைத்துக் கோதம்புத் தவிடுபோட்டுத் தேனைப் போலாகும் வரையிற் காய்ச்சிப்பூசினால் விரைவிற் கனியவைத்துத்தொலியுரியும் அத்திப்பழத்தைத்தின்றால் விரைவாய் வெளிப்படும். மாசக்காயுமதற் குதவியாகும் பூனைக்கண்ணை யோதிரத்திலணிந்தால் அம்மை வெளியாவதைவிட்டும் அச்சந்தீருவான் சிற்றரத்தையும்பலன் கொடுக்கும். சதாபை, ஜெய்து னெண்ணெயிலரைத்து வெளியான அம்மைத் தொலிமேற் பூசினாலும், காலில் வெளிப்பட்டதற்கு கால் தொலி திண்ணமாயிருப்பதாலே இறங்குவது கஷ்டமாகுமானால், சிற்றரத்தையைப் பொடித்துத் தண்ணீரிற் குழைத்துப் பாதத்திற்பூசி, அதிகாலை நேரம்வரையில் விட்டிருந்தும் இறங்காவிட்டால் மறுபடிபூசினாலிறங்கும் தாகமதிகமாய் வருத்தத்தால் அலட்டித்து சரீரங்குளிர்ந்துக் கொப்பழம் பசுமையாகிட்டாலும் இரத்தமாய்ச்சிறுநீர்விட்டுப்பின்புகருநிறமாய் மாறினாலும் ஹலாக்காகுவதினடையாளம். வரசைஅரைத்துப் பூசினால் அம்மையின் அரிப்பு நீங்கும் இன்னும்உக்கி மடித்துப்போன என்பும் குங்குமப்பூவுங்கடுணரையும் முட்டைவெண்கருவும், சவுக்காரமும் பாதாம் பருப்பும், சீனியும், இவைகளிலொவ்வொன்றும் அம்மை நோய்த்தழும்பைப்போக்கும்.

மூன்றாவது பசுல்.

கொப்பாடை.

“நாறுல் பாரிஸிய்யா, பஃறுல் ஹெலறாரு” என்ற நாமமுடைய கொப்பாடை அது சரீரங் காந்தலெடுத்து அரிப்புண்டாகிப்பின்மெல்

லிதாய், நீர் நிரம்பிப் பருத்து விரைவிற் கொப்பளமாகும். அதன் பரிகாரம்: அம்மைநோயுக்குரிய பாகமேயாம். ஆனால் கொப்பளத்தை ஊசியால் பொத்து வடித்து அடுப்புக்கரியை இடித்து நாள்தோறுமதிலுதிர்த்தி வந்தாலும் அவ்விதமே, உருக்குக்கசல்லும், பச்சைமல்லியும். தேனிலரைத்துப் பூசினாலும் முந்திரிப்பாணி அல்லது பருத்திக்கொட்டைப் பாலை மாசாக்காய், சிறுக்காவுட னரைத்துப்பூசினாலும் பலன் கொடுக்கும். வல்லாஹு அஃலம்.

நான்காவது பசுல்.

சிச்சிலுப்பை.

அடிசிவப்பாயும் நுனிவெண்மையாயும், முத்துப்போல சிறிதாய் வெளிப்படுகின்ற “புதூர்” என்ற சிச்சிலுப்பை அது வீக்கமாயுங் காந்தலதிகமாயும் அது சளிந்துவருவதாயு முள்ள கொப்பளம் பக்குவம். பித்தத்தை வெளியாக்குதல்கொண்டு வயிற்றை இளக்குவதும் மாசாக்காய், மாதளைத்தொலி. சந்தனம், களிமண், பன்னீர், சுரைக்காய், இவைகளி லொன்றினால் பூசிவரத்தீரும்.

ஐந்தாவது பசுல்.

நீர்க்கொளுவான்.

நெருப்புச்சுட்ட கொப்பளத்துக்கொப்பாய் மிருதுவான நீருடன் சரீரத்தில் வெளியாகுங்கொப்பளம். சிலவேளை இரத்தங்கொதிப்புண்டாகி இளகல்காணுவதாலே அக்கொப்பளத்தில் இரத்தமுண்டாயிருக்கும். பரிகாரம்: இரத்தத்தை நூர்த்து குளிர்ச்சியாக்கும் ஒஜீபனங்களை யுபயோகிப்பதும், அக்கொப்பளத்தைப் பொத்துவடித்து, ஈயத்திற் கழிந்தசாம்பல், கிட்டம்போற் கொற்றதைப் பன்னீரிற் குழைத்துப் பூசுவதுமாம்.

ஆறாவது பசுல்.

மஞ்சட் சோகை.

மஞ்சட் சோகை யாகிறது, முகம் கைநகம், மஞ்சணிப்பாகிவிடுவதாம், அதன்பக்குவம். இரும்புக்கிட்டத்தை இடித்து வடித்து சக்கரைகலந்து தின்றுவந்தாலும், வஜீபனத்தில்மிளகை அதிகமாக்கிவந்தா

னும் ஆவின் பாலை வெறும்வயிற்றிற்குடித்து வந்தாலும், இரண்டு "ஊக்கியா"கிட்டத்தை, நீரிற்கழுவிப்பொடித்து வடித்து,மூன்று ஊக்கியாத்தேனும் ஒருவூக்கியா மிளகுஞ்சேர்த்துக்காலைமாலைமூன்று நாள் தின்று ரொட்டி ஆட்டுப், பால், உபயோகித்து வந்தாலுந் தீரும். பிந்திய முறையை மிகுத்தவர்கள் பரீட்சித்திருக்கின்றார்கள். என்சினேகருக்குமேற்சுட்டிய வியாதியும், தத்துவம், பசி, ஆசை, பெலவீனமும் வலுப்பமான, சுரப்பு, வீக்கமு முண்டாய், ஊண்சிறுத்து நடக்கத்திராணியற்றிருந்ததின் காரணத்தால் இம் மருந்தையுபயோகித்து வந்ததில் மருந்து முடியுமுன் சுகமாயிருக்கவும் பரீட்சிக்கப்பட்டது

ஏழாவது பசுல்.

நிறம் பேதக மாதல்.

——(:)——

பொழுதினதுருட்டாலும் உடம்பிலிட்டவஸ்துக்களையுண்ணலாலும் வாதம், தூக்கம், ஊண்குறைத்தல், ஜிமாஃ, இவைகளினாலும், காற்று வெயிற் சூடு இவைகளாலே கட்டுண்ட நீரைக்குடிப்பதாலும், தவிடு, சிறுக்கா, சீரகமிவைகளைத்தின்று வரலாலும், வாதமானது? ஐயம், பித்த மிவைகளைப்பார்க்கத் திரும்புவதாலும், மனிதனின் நிறங்கறுப்பாகும்,"நான்கா" அன்றேல்; குங்குமம், தின்றாலும்பூசினாலும்நிறமஞ்சணிப்பாகும். மிருதார்சிங்கு, கறுப்பு நிறத்தைவருத்தும் மிகுதமாகப் பாலைக்குடித்துவருவதாலே நிறத்தைவெண்மை யாக்கும். சீரகமருந்தலாலும் பூசலாலும், முகத்தைப் பேதகப்படுத்தும்; மாட்டு மாமிசம், வெண்மை நிறத்தையுற்பத்திசெய்யும். கத்திரிக்காயைசேமமாகத் தின்று வருவதால் முகங்கறுக்கும். சரீரத்தை மஞ்சணிப்பாக்கி பித்தத்தை யுண்டாக்கும், குக்குருவை யதிகம் பரிமாறலால் முகத்தில் வெள்ளையை யுண்டாக்கும். அதன் புகை நிறத்தை மஞ்சணிப்பாக்கும்.

எட்டாவது பசுல்.

மஞ்சட் காமாலை.

——:(:):——

மஞ்சட் காமாலையாவது; பித்தம்; இரத்தத்துடன் கலந்து அபி பித்த மதிகரிப்புண்டானல்,கண் மஞ்சணிறத்தையடையும். ஆனலைவ

சப்ராவி, சவ்தாவி, என இருவகைப்படும். அதின் முதலாவதுக் குரிய அடையாளமாவது, சரீர நிறம் சிறு நீர், இருவிழியின் வெள்ளை இவைகள் மஞ்சணிக்கும். அன்றியும் தத்துவத்தைக் குறைக்கும். அதற்கு:- சருக்கரையுடன் மோரையும், புளியுடன் சருக்கரையு முட்கொண்டு, புளிப்பான, வஜீபனம், புளித்த; தயிர், கறந்த ஆவின்பால், சருக்கரையுடன் பரிமாறி: சூடு, உறைப்புள்ள வஸ்துக்களைத் தவிழ்ந்தவரத் தீரும். "சவ்தாவி" என்றதினறிகுறியாவது, புழுதி நிறமாய், சிறுநீர் பேதகமாய், கறுத்து, தத்துவங் குறைந்து, குணம் வரட்சியாய் இருவிழியின் வெள்ளையுங் கறுத்து பார்வை இருளடைந்து, நித்திரை குறைந்துபோம். மேலும், முன்றுவாரம், பின்றுவாரம், முன்னெற்றி, கல்பு, தலை, இருகை, கால் பெருவிரல் தலைப்பு இவைகளை சிறிய குச்சியினது அருகை, இலேசாக நெருப்பில் காய்ச்சிச் சூடுவதும், கறந்த ஆவின்பாலை, நுரை நீக்கிய தேனுடனும் நெய்யுடனு மருந்தி மற்றவைகளை நீக்கிக் கொள்ளத் தீரும். ஒரு வருடத்திய ஆட்டின் பொலு பொலுப்பில்லாத சாணியை நீரினாற் கழுகி விரைவில் வடித்து அந்நீருடன் நான்கு பங்களவு நீர் கலந்து, அப்புரவான "கூஜா"போலொற்ற பாத்திரத்திலடைத்து வாய்மூடி "இஷா"வுக்குப்பின்சமைத்த சோற்றடுப்பில் "சுபுஹு" வரையில் வைத்து அதை மூன்று முறையாகத் தெளிவிறுத்துக் குடிக்கத் தீரும். (இது சோதிக்கப்பட்டது) இன்னும். முள்ளங்கி அல்லது வெங்காயத்தாள் சாற்றில் இரண்டு ஊக்கியா குடித்தால் மஞ்சட் காமாலை நெஞ்சடைப்புத் தீரும். பள்ளையாட்டு புழுக்கையை நீருடன் குடித்தாலும், அரிசித் திப்பிலியைப் பன்னீருடனருந்தினாலுந் தீரும்.

இருவிழியிலுள்ள மஞ்சட்காமாலைக்குச்சுரைப்பிஞ்சில்களிமண்ணைப் பூசி அனலிலிட்டு வெங்கவைத்துப் பிழிந்த நீரை கண்ணின்மேல் பூசினாலும் கடலுரையில் முலைப்பாலிட்டரைத்து நசியம் பிழிந்தாலும், [illegible] கருஞ்சீரகத்தை, முலைப்பாலில் ஒரு சாமத்து ஊற வைத்து மூக்கில் நசியம் பிழிந்தாலும், பன்னீர், சிறுக்கா, மாதளைத் தண்ணீர், முலைப்பால், பன்னீரெண்ணெய் இவைகளைச் சேர்த்து அல்லது தனியாய்க் கண்ணிலூற்றினாலுந் தீரும். பசுமாட்டுச் சாணியைக் கெந்தகத்துடன் துணியில் தளமிட்டு வயிற்றடங்கலிலும் விரித்துவைத்தால் மஞ்சணிப்புள்ள நீரை யுறஞ்சும்.

——:(*):——

ஒன்பதாவது பசுல்.

தழும்புகள் மா[illegible]ச்செய்யல்.

அம்மைப்போலொற்ற தழும்புகட்கு; மாதளைத் தோலியை அரைத்துத் தேனிற்கலந்து, தொடர்ச்சியாகப் பூசிவந்தாலும் சரீரத்திலுள்ள பேதகமான அடையாளங்கட்கு; விளக்கெண்ணெய் பூசிவந்தாலும், சாட்டை அடியாலான தழும்புகளுக்கு, பொன்னரிதாரம் பூசிவந்தாலும், அடி, குத்து, இவைகளாற்குழி பறிந்த தழும்புகட்கும் இரத்தக்கட்டு, தடிப்பு பிள்ப்பு இவைகட்கும் எள்ளை இடித்துக் கட்டினாலும் முள்ளங்கியைச் சகலவலிகட்கும் தழும்புகட்கும் கட்டினால் தீரும்.

* * *

பத்தாவது பசுல்,

நெருப்புச் சுட்டவைகட்கு.

நெருப்புச் சுட்டவுடன், நீபரமாய், சிறுக்காவையும் உறைந்த நெய்யையும் பூசினால் வலியடங்கி வீக்க மில்லாகும். ஈயக்கழிவின் சாம்பலைப் பன்னீ ரெண்ணெயுடன் கலந்து பூசினாலும் குழைத்த மாவால் பூசினாலும், மருதோன்றி இலையை அவித்து நொசுவரைத்து ஜெய்தூனெண்ணெயிற் கலந்து கட்டினாலும், மருதோன்றி இலைவேக வைத்தநீரை நெருப்புப்பட்டதிலூற்றினாலும் மருதோன்றி இலையைப் பச்சைமல்லிநீருடன் குழைத்துப்பூசி, பின்பு பன்னீர், சிறுக்காவுடன் கலந்து பூசினாலும், புறாமலத்தை, மட்டியான திண்ணமானபுடவைத்துண்டிற் சேர்த்துச்சாம்பலாகும் வரையில் நெருப்பிலிட்டெடுத்து ஜெய்தூனெண்ணெயிற் கலந்து பூசினாலும். இவ்விதமே கோழிமலத்தைச் செய்து பூசினாலும், எள்ளை யிடித்துக்கட்டினாலும், முட்டை மஞ்சட் கருவைப் பன்னீரெண்ணெய் விட்டுக்குழைத்து அதிற்செவ்வையாகப் பஞ்சைப்புரட்டிக் கட்டினாலும் மேற்படி வெள்ளைக்கருவை நெருப்புப் பட்டவுடன் பூசினாலும், மாசாக்காய்த் தூளை நீரிற்குழைத்துப்பூசினாலும், முட்டை வெள்ளைக் கரு, மஞ்சட் கரு, இரண்டையும் நன்றாகச் சேருமட்டு மடித்துப் பூசினாலும் தீரும். நெருப்புச் சுட்ட இடம் புண் பட்டிருந்தாலும், முட்டை பத்து, புண்ணிலொட்டிக்கொண்டு தங்கடஞ் செய்தாலும் பன்னீரெண்ணெய் பூசினால்; முட்டைப்பத்தை இளகலாக்குவதுடன், புண்ணுக்கு [illegible]தாரமாயிருக்கும். இன்னும், எண்ணெயுந் தண்ணீருஞ் சேர்த்துக் [illegible]ச்சிப் பூசினாலும், சந்தனம், பன்னீர் கற்பூரத்துடன் சேர்த்துப் பூசினாலும், சிறுக்காவும் உப்பும்பூசி அதில் கோதம்பு மாவை யுதிர்த்தினால் காந்தலுண்டுபட்டடங்கும். உப்பைப் பொடித்து, மாவு, தேன், எண்ணெயுடன் கலந்து பூசினாலும், காளை மாட்டின் பித்தை அரைத்துப் பூசினாலும் வெந்நீர் விட்டாலும், பொன்னில் ஒத்தனமிட்டுச் சுட்டாலும், அறபி பிசினை, முட்டை வெள்ளைக் கருவுடனரைத்துப் பூசினாலும் அது கொப்பளமாய்ப் பொத்து வடிவைக் காத்துப் பலன் கொடுத்துச் சுகப்படுத்தும். இன்னும் சிறுக்காரத்தைப் பழய நீரிற் கரைத்துப் பூசினாலும், சிறுக்கா, பன்னீர் இவைகளைப் பூசி வெள்ளரிக் காயால் தேய்த்தாலும் [illegible] பருப்பு, கோதம்பு மா, முட்டை இவைகளைக் [illegible] கட்டினாலும் நெருப்புச்சுட்டதற்குப் பலன் கொடுக்கும். இன்னும், [illegible]யகாந்திக்கு முட்டை வெள்ளைக் கருவைப் பன்னீரெண்ணெயிற் கலந்து முகத்திற் பூசினாலும் வெறும் வயிற்றில் மாதளைச் சருபத்து குடித்து தலையிற் பன்னீரெண்ணெய் பூசிப் பன்னீர் தெளியத் தின்றாலுந் தீரும். இன்னும் 21-8-ல் முந்திவிட்டன.

——(:)——

பதினொன்றாவது பசுல்.

சொறி சிரங்கும், சில பத்தியங்களுங் கூறல்.

சொறி சிரங்குண்டானால்:—[illegible]ன் முட்டையும் அரை ஊக்கியாக் கெந்தகம், ஒரு ஊக்கியா நெய், அல்லது எண்ணெயிற் கொதிக்க வைத்து "வெந்து" கனிந்தபின் இறக்கி ஆறியபின் தின்று அ[illegible] எண்ணெயைக் குடித்தாலும், கெந்தகமும் பளிங்கியுமரைத்துப் பூசினாலும், நாள்பட்ட நெய்யில் மருதோன்றி இலையைக் குழைத்து நாட்பட்ட புண்கள், சிரங்குகளிற் பூசினாலும், சொறி சிரங்குக்கு, காலை, மாலை ஆவின்பால் குடித்து நெய் ரொட்டி இவைகளை தின்று வந்தாலும், நெய் குடித்துப் புளிப்பு, உறைப்பு, கசப்புள்ள பதார்த்தங்களை விலக்கி வந்தாலுந் தீரும். இதுவே எல்லா முறை மருந்துகட்கும் பத்தியமாகும். இன்னும், நாளொன்றுக்கு மூன்று ஊக்கியா எண்ணெய்குடித்து

வந்தாலும், மருதோன்றி இலையை நீரிற் குழைத்து அதில்,கீல்,பன்னீர் விட்டொன்றாக்கிச் சரீரத்திற் றேய்த்து நன்றாகக் கழுவிவிட்டு, மறுபடியும் அம்மருதோன்றியைப் பூசி, அலைமுதல் அந்திநேரமட்டும் விட்டிருந்து பிறகு ஸ்நானஞ் செய்தல், இவ்வாறு இரண்டு மூன்றுநாள் செய்கில் தீரும்.

இருபத்தைந்தாம் பாபு முற்றிற்று.

இருபத்தாறும் பாபு.

கள், சாராயம், அபியூன் பேரிலுள்ள ஆசைகணீங்கவும், துட்ட மிருகங்கள், விஷஜெந்துக்கள் வெருளவும், விசம், நஞ்சு மருந்திடு நீங்கவும், இன்னும் பல திரட்டுப் பரிகாரங்களையுள்ள சில இஸ்முகளையுங் கூறல்.

ஒன்றாவது பசுல்.

கள், சாராயத்தை முனிந்துவிடுதல்.

ஊக்குருவி மூளையை நல்லெண்ணெயிலுருக்கி, கள், சாராயங் குடிப்பவனுக்குக் குடிப்பித்தாலதை முனிவான் "விடுவான்." காகத்தின் இரத்தத்தை சாராயத்துடன் சேர்த்துக் குடிப்பித்தாலதை முனிவான். நாய் உன்னியை முந்திரி சாராயத்தில் மூழ்கவிட்டு வைத்தெடுத்து, அச்சாராயத்தைக் குடிப்பித்தாலுடனே மயக்கங்கொள்வான்: அதை விடுவான்.

இரண்டாவது பசுல்.

அபியூன் தின்பதை விலக்கல்.

வழமையாக அபியூன் தின்று வந்தவன் விடுவது கஷ்டமாகும். அங்ஙனம் விட்டவனுக்கு, தீன், குடிப்பு முதலியவைகள் செய்துவந்தாலும் மருந்தில்லாத சில பல நோய்களுண்டாகும். அதில் வயிற்றுவலி, மலங்கழிதல், மிகுத்த ஊனம், சளி வடியுதலுண்டாய்ச் சக்தி குறைந்து பெலவீனமான தங்கடங்களுண்டாம். ஆனதால் குறித்த தங்கடங்கள் ஏற்படாமல் அபியூன் தின்பதை விடுவதற்குப் பரிகாரம்:— அபியூன் தின்று வந்தவன் சிறிது சிறிதாய்க் குறைத்து வருவதில் நாளொன்றுக்கு மூன்று வேளை தின்றவன் இரண்டு வேளையாக்கிப் பின்னர் ஒருவேளையாக்கிப் பின்னர் வேளைக்கு மூன்று கீராத்து தின்பதை, இரண்டு, ஒன்றாய் நாளுக்குநாள் குறைத்துவந்து சரிவர விட்டுவிட்டவுடன், பின்னர் அபியூனிருந்த கடுதாசு, பட்டையைச் சுவைத்துப் பிறகு முகர்ந்துப்பிறகு அதையும் விட்டுவிட்டு, கோதம்புரொட்டி, நெய், மாமிசம், பால் போலொற்ற வஸ்துக்களை யருந்தி வருவதும், கறந்த பாலை வழக்கமாய்க் குடிப்பதும், அபியூன் தின்னுகின்ற மனிதருறவை விலக்கியும், வரிசையுள்ள உலமாக்கள், சாலிஹீன்களின் "தவையை" அல்லது அவர்களின் "சபை" மஜ்லிஸைப் பற்றிப் பிடித்து வருவதாலும், அபியூன் தின்பதுயாதொரு தங்கடமின்றி விலகி, மூதேவித்தன நீங்கி, கலப்பறுதலான "தௌபா" வில் மீளுவான்.

மூன்றாவது பசுல்.

எலி, பாம்பு, விட்டில், விஷஜெந்து, துட்டமிருகங்கள், வெருளவும் வருகவும், நாய், கழுதை, தவளை, சேவல் இவைகள் தொனிக்காதிருக்கவும்.

புலித்தோல் துண்டை கொஞ்சத்தைப் புடவையுடன் வைத்தாலும் பாம்புச்சட்டையைப் புடவைவகைகளில் வைத்தாலும், அந்துகறையான் அண்டாது. சுரைச்செடி இலையை வீட்டிற் புகைத்தாலும், அதைவேக வைத்த நீரைவிட்டுச் சுவர்களிற் றெளித்தாலும் ஈக்கள் வெருண்டோடும். குங்குமப் பூவாடை வீசு மிடத்திற் பல்லிபுகுதாது. சப்ஜாவென்ற "ஆசை" வீட்டிற் புகைத்தால் நாலாம்பாதைப் பூச்சி வெருளும். யானை என்பையாவது, கழுகின் அல்லது மாங்கொத்தியின், தவலையாவது புகைத்தவிடத்திலுள்ள புழுப்பூச்சிகள் வெருட்சியடையும், கறுத்தக்கோவேறுகழுதைக்குளம்பை அல்லது அதனிருத்தத்தை வாசலுக்குத் தாழாலே புதைத்து வைத்தாலும் ஆண் கோவேறு கழுதைக்குளம்பை வீட்டிற் புகைத்தாலும், பசுமாட்டின் கொம்பை,

சிவந்த அரிதாரத்துடன் வீட்டிற் புகைத்தாலும், காட்டுமாட்டு, ரோமத்தைப் புகைத்தாலும் ஓநாய் விட்டையை அல்லது நாய் விட்டையைப் புகைத்தாலும், எலிவாலைத் தறித்து அல்லது கொடிப்புலிக் கையைத் தறித்துவீட்டின் மத்தியத்திற் புகைத்தாலும் எலிகளெல்லாம் வெருளும், செம்பருந்தை உயிருடன் கட்டி வைத்த வீட்டிற் பாம்பு தேள் நுழையா. சிறிய வெளவாலைப்பூராது அதன் தாமரைக்காயைக்கரித்தவன் வீட்டில் பாம்பு, நட்டுவக்காலிபுகுதா. அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டவன் நட்டுவக்காலியை அச்சந்தீருவான். மான்தோலியால் சரீரத்தை மூடிக்கொண்டால், பாம்பு தேள் கெடுதியுறுதா. வீட்டிலைக்குச்சிற் குத்தி நட்டுவக்காலியுள்ள பொந்தில் விட்டால், நட்டுவக்காலி அதைக்கொளுவிக்கொள்ளும் வெளிப்படுத்தி யடிக்கலாம். இவ்வண்ணம் "கிராதே" என்ற வெங்காயத்தாலும் வேட்டையாடலாம். நட்டுவக்காலி ப[illegible]யைக் கண்டால் மரணமடையும், நட்டுவக்காலியை வீட்டிற் புகைத்தாலும் மாதளைக் கொப்பை புகைத்தாலும், மஞ்சைலையு மாட்டுக்கொழுப்பும் புகைத்தாலும், பள்ளையாட்டுக்கொழுப்பு, ஆலின் நெய், மஞ்சைலைகழுதைக் குளம்பு, கெந்தகம், பெருங்காயமிவைகளூறவைத்த நீரைத்தெளித்தாலும் முள்ளங்கித் தோலியை வைக்கிறலும், வீட்டிலுள்ள தேள் நட்டுவக்காலி வகைகளைப் போக்கும். காட்டுமாட்டுக் கொம்பு அல்லது தோலியைப் புகைத்தாலும், கொடிப்புலி ரோமத்தைப் புகைத்தாலும், பாம்பு தேள் வெருளும் முள்ளம்பன்றித்தோலியில் உரல் செய்து அதில் பயிரிமெலித்துக் களைக்குத்தித்திட்டிப்பயிர். செய்தால் வீட்டில் அதைக்கெடுக்க அணுகாது. அதன் தோலியால் செய்த "நாழி" அளவையால் அளந்து பயிரிட்டால் கெடுதிகளேரிடா. குரங்குத் தோலியிற் செய்த பட்டையால் வான்பயிருக்குத்தண்ணீரிறைத்தால் அப்பயிருக்கு, புழுபூச்சிகளின் கெடுதிநேரா. யானை என்பைக்கொடி முந்திரியாம் வான்பயிர், மற்றைய மரங்களினடிவேரடியிற் புதைக்கப்பட்டா லதற்குப் புழுப்பூச்சிகளணுகா. செம்மறிக்கிடாயின் கொம்பை மரத்தடியிற் புதைத்தாலது மிகவுங்கெற்புமாய்க் காய்கனிகளதிகமாம். கனியுள்ள மரத்தில் கண்டுக்காலைக் கட்டினாலதிலுள்ள கனிகள் காரணமின்றியுதிரும். பன்றியின் மலம், அல்லது அதன் குட்டியின் கொழுப்பை யுரித்தி, புளிப்புமாதளை மரவேரில் பூசினால் மதுரமாகும் யானைத்தந்தத்தைக் கட்டிவைத்த மரங்காய்க்காது, குரங்குத்தோலி கட்டி வைத்த மரத்துக்கு,

துளிர்ச்சியான கெடுதிநேரிடாது, மரங்கொத்திவாலையு மதன் இரத்தத்தையுங் கட்டியமரங்காய் காய்க்கமாட்டாது. மாதவிடையுள்ளவள் புகுந்த தோட்டம் பேதலித்து விடும். அட்டை அல்லது யானைத்தந்தம் அல்லது நற்சீரகம், "ஆசு" என்ற சப்ஜா, திருமசு என்ற மொச்சைக்கொட்டை, இவைகளிலொன்[illegible] வீட்டிற் புகைத்தாலும், அன்றேல்; 2-1-2-1-1-1 இவ்விதமாகதான் [illegible] துண்டுப் [illegible]த்திலெழுதி வீட்டினது நான்கு மூலையில் வைத்தாலும் கு[illegible]லால், மயிலை, வீட்டு வாசலிற் றெங்கு வண்ணாஞ்சொருகி வைத்தாலும் அல்லது நிலத்தில் வைத்தாலும் மூட்டை, கொசு வகைகளிங்கும். சதாபு இலை நீரை அல்லது சம்மாக்கு நீரைவீட்டில் தெளித்தாலும் செள்கள் வெருளும்.

புலிக்கொழுப்பைச் சரீரத்திற் பூசினாலும் பேன் பிடியாது. எருமைமாட்டு மாமிசந்தின்றால் பேன்பிடிக்கும். குஷ்டரோகமுள்ளவனைப்பேன் பிடியாது. தன் ரோமத்தின் அடியை "சலக்கு" என்ற கீரை நீரிற் கழுவினாற் பேன் பிடிப்பதை நீக்கும் குருத்துமும் எண்ணெயைத் தேய்த்தாலும், சிறுக்காவுங் கடனீருஞ் சேர்த்து கழுவினாலும் பேனைக்கொல்லும், சிம்சம் என்ற எள்ளெண்ணெயா லரைத்த இரசத்தைத்தலையிலுஞ் சரீரத்திலுந் தேய்த்தால் பேனைவிலக்கும்.

பசுமாட்டுச்சாணியை எறும்புக் கூட்டிலது வெளியாகு முன் அடைத்தாலும் அதிற் புகைத்தாலும் எறும்புகள் வெளிவரா. கொழுத்த செம்மறியாட்டின் மெல்லிதானபஞ்சு ரோமத்தால் தேனுள்ள பாத்திரத்தின் வாயை மூடினாலதற்கு எறும்புகள் முடுகா. எறும்புப் புத்தை, மாட்டுச்சாணி அல்லது பூனைமலத்தைக் கொண்டு மடைத்தாலதைக்கடந்து வெளிவரா. மேலு மவ்விடத்தைவிட்டு வெருளும். அன்றியுமப்புத்தில், காந்தக்கல் வைத்தடைத்தாலும், கிலை ஊற்றினாலும், கெந்தகத்தைப் பொடித்துத் தூவினாலும், சீரகத்தூள் போட்டாலும் சதாபு நீரை யூற்றினாலும் எறும்புகள் சாகும். ஒரு வஸ்துவைச் சூழ்க, ஹைறுலத்துண்டு, புடவையை வைத்தால் எறும்புகளதைமுடுகா தண்ணீர் குடிக்கும் போது அதினின்றும் "அட்டை" தொண்டையுள்ளிற்கொளுவிக் கொண்டால், குழிநரியின் மெல்லிய ரோமத்தைப் புகைப்பிடித்தாலுடனே விடும் ஒட்டகைக் குளம்பைப் புகைபிடித்தால் அட்டைசாகும். மொச்சைக்கொட்டையிலுள்ளவண்டில் ஒரு திருஹத்திடையும் கள் "சிறுக்கா" கட்காடியுஞ்சேர்த்து வாய் கொப்ப

ழித்துக் காறினால் விழுந்து விடும். சரீரத்திற் கொளுவி இரத்தமுறுஞ்சும் அட்டையின்மேல் உப்பு நீரைத் தெளித்தாலுடனே விடும். முதலைக்கொழுப்பைமெழுகுடனுருக்கித்திரிசெய்துவிளக்கெரிக்கின்றதால் ஆற்றிலுள்ள தவளைகள் சத்தமிடா "நாம்பளம்" தாலத்தில் விளக்கேற்றித்தண்ணீரில் விட்டாலும், ஒரு பாத்திரத்தைத் தண்ணீரிற் கவிழ்த்திவிட்டாலுந் தவளைகள் சத்தமிடா.

புலிச்சத்தங்கேட்ட முதலைகள் சாகும். சாவல் நெற்றியிலும் பூவிலும் எண்ணெய் தேய்த்தால் அச்சாவல் சத்தமிடாது. கழுதைவாலிற் கல்லைகட்டிவிட்டாலது ஊளையிடாது. அதன் பிற்றட்டில், எண்ணெயைப்பூசினால் ஊளையிடாது. அதன் சத்தம் நாயைச் சாகவிடாமல் நோவினை செய்யும் குழிநரியின் கரு "இரத்தாசயம்" மாங்காயைத் கையிற்வைத்துக்கொண்டால் நாய் குரைக்காது. மேலு மதனளவி லச்சந்தீருவான். முள்ளம்பன்றிக் கொழுப்பை. திரேகத்திற் பூசிக்கொண்டால் நாயின் தீங்களவில் அச்சந்ததீருவான். அதன்தோலி அல்லது நாவை வலதுகையில் வைத்துக்கொண்டால் நாய் குரைக்காது, கருநாயின் நாவைக்கையில் வைத்துக்கொண்டால், அல்லது நாய்க்காதிலுள்ள உன்னியைக் கையில் வைத்துக்கொண்டால் அதன் வீரப்பல்லைச் சுமந்துக்கொண்டால் நாய்கள் சரணமடைந்து குரைக்காது.

உ, நடக்க வலுவற்ற, காளைமாட்டின் இருவிரைக்கொட்டையைக் கட்டியமாடு. ஒழியா நடைநடக்கும். பசுமாட்டுச் சாணி, பன்னீர்ப்பூ, எண்ணெயுடன் மாட்டின் மூக்கினிற் பூசினாலது திடுக்கிட்டு மூரியாட்டங் கொள்ளும். காளைமாட்டின் செவியில் இரசத்தை யூற்றினாலுடனே மரணமடையும். அதன் மூக்கில் பன்னீரெண்ணெய் பூசினால் முசல் வலிப்புண்டாகும். சாவலினிரு இறகு அருகிலுள்ள என்புகளை காளைமாடு மற்றைய மிருகங்களுக்குக் கட்டினால் அம்மிருகங்களுக்கு மிக்கபலனுண்டாகும். புலிக்கொழுப்பைத் தனித்து அல்லது வெங்காயத்துடனிடித்துக் சரீரத்திற் பூசினாலும், ஓரிடத்திற் புலிரோமத்தைக் கரித்தாலுந் துட்ட மிருகங்கள் வெருளும். நரியின் தாமரைக்காயைக் கட்டிக்கொண்டவன். துஷ்டமிருகத்தை அச்சந்தீருவான், காட்டுமாட்டுக் கொம்பை வைத்துக்கொண்டாலும் கரடியின் வலதுவிழியைத் துணியில் வைத்துக்கெண்டைக் காலிற்கட்டிக்கொண்டாலும் துட்டமிருகத்தின் அச்சந்தீருவான். ஓநாய் வலது விழியைக் கட்டிக்கொண்டவன், மிருகத்தை யுங்கள்ளனையு மச்சந்தீருவான். அதன்வாலை மாட்டுக் கொட்டத்தில் வைத்தாலதற்கு மாடுகள் முடுகா. பசியுண்டானாலுஞ் சரியே. அதன் விட்டையைச் செம்புச் சிலையு[illegible]வைத்தூன்றிய விடத்தில் ஓநாய்கள் வெருட்சியடையும். பேய்க்கும்மட்டிக் காயைக் கரத்தில் வைத்துக்கொண்டா[illegible] முள்ளம்பன்றி வெருளும். கழுகுமேமுரசைத் துணியில் வைத்துக் கழுத்திற் கட்டிக்கொண்டவனுக்கு விஷசெந்துக்கள் முடுகா. முள்ளம்பன்றி மனிதனின் மண்டையோட்டுக்கு வெருளும். முள்ளம்பன்றிக் கொழுப்பைத் திரேகத்திற் பூசிக்கொண்டால் கொடிப்புலிகள் வெருளும் மாதவிடையுள்ளவள் மேய்க்கும் ஆட்டண்டை ஓநாய்முடுகாது. முடுகினதற்கு வயிற்றுவலியுண்டாகும். குழி நரிப்பித்தைத் திரேகத்திற் பூசினால் முள்ளம்பன்றி வெருளும்.

மேற்படி பன்றித் தலையைப் புறுகூட்டில் வைத்தாலும், மனிதனின் பழைய மண்டையோட்டை யங்குவைத்தாலும் புறுக்கள் வந்து சேரும். குழிநரித்தலையைப் புறு கூட்டில் வைத்தால் புறுக்கள் வெருண்டோடிப்போம். பீவண்டுத்தலையைப் புறுக்கூட்டில் வைத்தா லதிகமாய் பலுகும். ஓநாய்த் தலையை அக்கூட்டில் வைத்தாலதை நோவிக்குங் கொடிய செந்துக்கள் பூனைகள் முடுகா.

நான்காவது பசுல்.

நாய் விஷயங்களியாவுக்கும்.

வெறிநாய் கடித்தவுடன், நெருப்பினாலே கடிபட்ட இடத்தைச் சுற்றிச் சுட்டு, பூண்டு மிளகு, உப்பு இவைகளைப் பொடித்துத் தேனிற் குழைத்துக் கட்டி, நுரைநீக்கிய தேன் நெய் இரண்டையும் அடுப்பேற்றி, அதில் தேவையான பூண்டையுரித்தரைத்துச் சேர்த்து, நன்றாக எல்லாமொன்று சேர்ந்து மேவிக்கொதித்துப் பாகாகும் வரையிற் காய்ச்சியிறக்கி இளஞ்சூட்டுடன் நாடோறும் வெறும்வயிற்றில் குடித்து வந்தால் விசஞ் சரீரத்திற் செல்லுவதை விலக்கி நல்லபலனைக் கொடுக்கும்

இன்னும் ஆவின்பால், நெய், தேனில் காய்ச்சிய கோதம்புப் பாகை வஜீபனமாக்கிக் கொள்ளல் வேண்டும். இன்னும் நாடோறும். வாய் நிரம்ப மூன்று மிடறுதேனைக்குடித்துக் கோதம்பு வஜீபனந்

தின்று, புளிப்பு நீக்கிக் கடிவாயைச்சுட்டு, காற்றுப்படாமல் நாற்பது நாள்மட்டும் பத்தியமாயிருந்து குளி ஸ்திரி போகநீக்கிவந்தாலும். கீலும் நெய்யுங் குடித்துப் பூண்டு தின்றுவந்தாலும், மனிதன் ரோமத்தைப் பழய சிறுக்காவில் "மூழ்கவிட்டு நனைத்துக்கடிவாயில் கட்டினாலுந் தீரும். தவிட்டை குழைத்துக் கடிவாயில் கட்டினாலதைப் பழுக்க வைத்துநஞ்சைவெளிப்படுத்திவலியையடக்கும், வெறிநாய்கடிக்கப்பட்டவன் கண்ணாடியில் தன் பிரதி பிம்பத்தைக் கண்டால் சுகமடைவான். நாய் சுரூபத்தைக் கண்டால் மரணமடைவான். இரத்தமாக மோண்டாலுஞ் சுகமடைவான். அவ்விஷமுள்ளவனின் வாயிலுள்சென்ற வஜீபன்த்தைக் கக்கி நாய்க்கு போட்டாலதையுண்ணாது, அவனருகில் தண்ணீரைவைத்தால், இன்காறுசெய்வான். இவ்விதக் குணங்களுண்டாகு முன்னர் அவிழ்தப்பிரயோகஞ்செய்தால் பலனைக் கொடுக்கும் இன்னும், மனிதன் மூத்திரத்தை வெறிநாய்கடிவாயல் தள்ளிட்டாலும் அவ்விஷமுள்ளவன் மனிதனிரத்தத்தைக் குடித்தாலும், மாதவிடையிரத்தத்தைக் கடிவாயிற் பூசினாலும், அவன் முகத்தில் ஈக்கள் விஷயமாகாமல் மறைத்துக்கொண்டாலும், மூத்துச்சுப்பித் தசையைக்கடிவாயில்வைத்தாலும், முள்ளெலி இரத்தத்தைக்கடிவாயிற்பூசினாலும், அவன்பேரில் நாயின் வீரப்பல்லைக் கட்டிவைத்தாலும்- புசைபடாத தேனைச் சாப்பிட்டுவந்தாலும் அவ்விசந்திரும்.

——(*)——

ஐந்தாவது பகல்.

பாம்பு, தேள், குளவி, வண்டு, பல்லி, விஷங்களியாவுக்கும்.

நாகத்தின் விஷங்கடப்பான சூடாயிருக்கும். அதன் கடிவாய்க்குக் கீழுள்ள சதைக்கடிக்க, கயிற்றால்கட்டி, பூண்டு, உப்பு, இவைகளை இடித்துக் கட்டி வருவதினால் சரீரத்திலேறும் விஷத்தையும் விலக்கும் பின்னர் எலுமிச்சம்பழச் சாறும், புளித்த சிறுக்காவும் தேள்வையுள்ள மட்டுங் குடிக்கத்தீரும். தேள், நட்டுவக்காலி, இவைகள் நஞ்சு; பாம்பின் விசத்திலுங்குளிர்ச்சி அதன் கொட்டுவாயில் இலந்தை இலையைப் பச்சையாக இடித்து, சிறுக்காவிற் குழைத்து அல்லது பருத்தி விரைப்பாலைச் சிறுக்காவிற் குழைத்து வைத்துக் கட்டினால் வலியடங்கி விக்க மிலேசாகும்.

பாம்பு, தேள். குளவி, வண்டு, பல்லி வகைகளின் விசங்கட்குப் பூண்டைக் கரித்துத் தேனிற் குழைத்து, கடிவாயில் வைத்தாலும், இலைவைத்தாலும், தனது சிறு நீரைக் குடித்தாலும், பூண்டை யரைத்துச் சிறுக்காவிற் கலக்கித் தேள் கொட்டப்பட்டவன் குடித்தாலும், கீரைச்சாறும், களிமண்ணும் சிறுக்காவுஞ் சேர்த்து. வண்டு, குளவியின் கடிவாயில் பூசினாலும், உத்துருஜூ மொட்டைப் பூவைத் தின்றாலும், அதன் பருப்பில் இரண்டு "குபுலா" இடித்து, வெங்காயம் உப்பு, பள்ளையாட்டுப் புழுக்கை, பூண்டு, கீல் இவைகளிலொன்றைக் கடிவாயில் கட்டினாலும் கோழிமாமிசத்தை அறுத்த சூட்டுடன் கடிவாயில் மாறி மாறி வைத்துக்கட்டினாலும், நெய் அல்லது ஆவின் நெய்யைக் குடித்து மற்றையதின் குடிப்பை அரைப்பகலாகும் வரையிற் பிற்படுத்தினாலும், கடிவாயைக்கீறி, நஞ்சுள்ள இரத்தத்தை வெளிப்படுத்தினாலும். பூண்டை அரைத்துக்கடிவாயிலும், கண்ணின் சுற்றிற்றடவினாலும் கொட்டியவுறுப்பைத் தறித்துவிட்டாலும், தேட்கடி வாயைப் பலமுறையாய்ச் சுவைத்திழுத்து அதில் உமிழ்ந்து, பெருங்காயத்தை நீரிலரைத்துப்பூசினாலும், கடிவாயில் ஈயத்துண்டைக் கட்டினாலும், பெண்பிள்ளைமுன் துவாரம் கடிதடத்திலுள்ள ஈரப்பசையைப்பூசினாலும்; பள்ளையாட்டுப் புழுக்கையை நீரிற்குழைத்துப்பூசினாலும்தண்ணீரால்கழுவினாலுந் தீரும்.

ஆறுவது பகல்.

விசங்களின் அறிகுறி.

——(*)——

உஷ்டண முள்ளவிசத்துக்கு குளிர்ச்சியானபரிகாரமும், குளிர்ச்சியான விடத்துக்கு உஷ்டணமான பரிகாரமும் செய்தல்வேண்டும் உஷ்டணமான நஞ்சின் அடையாளம், அதிகமான காந்தலும் கொடியதான வரட்சியும் வயிற்றில் உஷ்டணத்தின் ஆவி எழுச்சியுமுண்டாயிருக்கும். இதற்குப் பரிகாரம்.—எலுமிச்சச்சாறு, புளித்தஜலம் குடித்து வயிற்றில் கனதியுள்ள சீலைத்துணியை குளிர்ந்த ஜலத்தில் நனைத்துச் சேர்வைபோடவும். இவ்வாறு அத்துணியுலரவுலரநீரில் நனைத்துச்சேர்வைபோடவும். குளிர்ச்சியான நஞ்சின் அடையாளம். இருகாமுங்குளிர்ந்து காந்தல் குறைந்து, சரீரக் கனதியுண்டா[illegible]ருக்கும். இதற்குப்பரிகாரம் பூண்டுசேர்த்துகாச்சிய தேன் நெய்யைச் குடிக்கத் தீரும் இதுவெறிநாயில் கூறியமுறை.

ஏழாவது பசல்.

விஷங்களுக்குரிய பலமுறைகள்.

—(:)—

மனிதனின் சிறுநீரைக் கொதிக்கவைத்து; மனிதன், குரங்கு முதல்வன நஞ்சுள்ள விஷஜெந்துக்களின் கடிவாயில் பூசினாலும், மனிதன் மலத்திற் கடலைக்காயளவு சிறக்காவிற் குழைத்து மனிதன் கடிவாயிலிடப்பட்டாலும் பிரயோசனப்படுத்தும்.

முசல் கோரோசனையைச் சிறக்காவுடன் குடித்தாலும், அதன் விரையை அல்லது பாம்புக்கொழுப்பை விசந்தீண்டியவிடத்திற் றேய்த்தாலும், மனிதன் சிறுநீரைக்குடித்தாலும், செம்பருந்துப்பித்தை நிழலுலர்த்தி, பளிங்கிப்புட்டியி லூறவைத்துக், கெட்டிப்படுத்திக்கொண்டு சகலவிசஜெந்துக்கடிவாயிலொழுக்கியும் வலதுபாகத்திற்கடித்திருந்தால் இடதுவிழியிலும், இடதுபாகத்திற் கடித்திருந்தால் வலதுவிழியிலும் மூன்றுவிடுத்தம் சொட்டுவிட்டாலும், பன்றிஈரலைத் தின்றாலும் அல்லது குடிக்கும்வஸ்துவுடன் சேர்த்துக்குடித்தாலும், சாவல்இரத்தம் அல்லது மூளையைப் புழுப்பூச்சிமுதல்வன சகல விசங்களுக்கு மதனதன் கடிவாயில் பூசினாலும், கறட்டோந்தியைப் பசுநெய்யில்தசைபுள்ள வேக வைத்து விசந்தீண்டப்பட்டவனுக்குத் தடவினாலும் ஈயை, "பிச்சு" நசித்து வண்டு, குளவி, கடிவாயில் தேய்த்தாலும், மனிதனின் உமிழ்நீரை எதுவுந்தின்கமுன் விசக்கடிவாயிற் பூசினாலும், தவளைமாமிசத்தை விசக்கடிவாயிற் கட்டினாலும், மயில்பித்தைச் சிறக்காவுடன்குடித்தாலும், உத்துருஜா என்ற கொழிஞ்சிப்பழத்தின் விரையை இருகளஞ்சியளவு நன்றாயிடித்து, குடிககும்வஸ்துவுடன் சேர்த்துக் குடித்தாலும் சகல விஷங்களுக்கும் பலன் கொடுக்கும்.

கோழி மூளையைப் பாம்புக்கடிவாயில் வைத்தாலும், பன்றி ஈரலைத் தின்றாலும், கடல்நாய்விரையைத்தின்றாலும், கொடிப்புலி மாமிசத்தில் ஐந்து திருகத்திடை தின்றாலும், பாம்புவிசத்தைக் கண்டிக்கும்.

தேள், நட்டுவக்காலி கொட்டப்பட்டவன் தன்முகத்தைக் கழுதை வால்பக்கத்தளவில் திருப்பினவனாக அதன் முதுகின்பேரி லேறியிருந்தாலும், கழுதைக்காதில், என்னை இன்ன தலத்தில் தேட்கொட்டிவிட்டதென்று சொன்னாலும்; புறாஇரத்தத்தைச்சூட்டுடன் தேட்கடிவாயில் வைத்தாலும், பீவண்டை நசித்து அக்கடிவாயிற் கட்டினாலும், பல்லிச்சதையை அக்கடிவாயில் வைத்தாலும், நண்டைத்தட்டி அக்கடிவாயிற் கட்டினாலும், நட்டுவக்காலியை ஜெய்தூனெண்ணெயில் வேகவைத்து அக்கடிவாயிற் பூசினாலும், அதை நெய்யில் வேகவைத்துக் கட்டினாலும், நட்டுவக்காலியை இடித்து அககடிவாயில் வைத்து கட்டினால் ஜெய்தூன், மரவேரைத்தேள் கொட்டியவனுக்கு கட்டினாலும், கோதம்பு நொய்யை வேகவைத்து அல்லது முள்ளங்கிவிரையை இடித்து. அல்லது ஜெய்தூனிலையை இடித்து, தேள் நட்டுவக்காலி, பாம்பு வகைகள் கடித்தவாயில் வைத்துக்கட்ட விசங்கள் தீரும்.

எட்டாவது பசல்.

நஞ்சு, மருந்தீடு.

—(*)—

நஷாதிர், அரைதிருஹத்திடையும், சாவல் எச்சம் அரைதிருகத்திடையு மிடித்து நீரிற்கலக்கிச் சுடவைத்துக்குடித்தால், நஞ்சு, விசத்தையுடனே போக்கும். ஒருவருடஞ்சென்ற பழயநெய்யில் பூண்டை சமைத்துத் தெளிவிறுத்து வெறும் வயிற்றிற் குடித்தும் வஜீபனத்தோடு பரிமாறிவந்தாலும் "பூர்வீகம் நீண்டகாலமாய் சரீரத்திற்றரிபட்டுள்ள நஞ்சைக்கொல்லும். அறுத்துரித்த ஆட்டுக்குட்டித்தொலியை சூட்டுடன் விஷக்கடிவாயில் வைக்கத்தீரும். பல்லிமாமிசம் கொல்லக்கூடிய நஞ்சாம். சிலவேளை, குடிக்கும்பதார்த்தத்தில் பல்லிவிழுந்து செத்துச்சதைகள் கழன்றுபோன அக்குடிப்படங்கலும் நஞ்சாகும். ஈயக்கழிவுச் சாம்பலை யுட்கொண்டால் நாவெளுத்து, உறுப்புகள் சோர்வடைந்து, இருமல் எப்பமதிகரித்து, புத்திபேதலித்து, சரீரமும், மூளையுங் குளிர்ந்து போவதுமன்றி அவனளவிற் பயப்படப்படும். சிலவேளை கருநிறமாயும், இரத்தமாயுஞ் சிறுநீர் செய்வான். எள்ளை தின்றலதற்குப் பலன்கொடுக்கும். இரும்புக்கிட்டத்தை தின்றுவிட்டால், வயிறு பொட்டுவலிகளுண்டாகும். அதற்கு வயிற்றை இளகச்செய்வதுடன் பாலையுங் குடித்துவரல்வேண்டும். பிறகு நெய், வெண்ணெய், புளங்கிவருவதுடன் தலையில், பன்னீரெண்ணெய், [illegible]ன்பாஜா என்ணெய், இவைகளை நன்றாகத்தேய்த்து வருகத்தீரும். "மஞ்சட்சோகையுடையவனை, தேன், மிளகுடனும், வியாதியால் சரீரசக்தி குறைந்தவனையும், சிறுநீரடைப்புள்ளவனையும், சர்க்கரைஇட்ட சூரணமாயும், கிட்டத்தைப் பரிமாறும்படிக்கு ஹாக்கமாக்கள் ஏதவுல் செய்திருக்க,

கிட்டத்தைத் தின்றவனுக்கு வியாதிகளுண்டாகுவதின் காரணமாவது. அக்கிட்டத்தை அளவுக்குமிஞ்சித் தின்றநிலையேயாம் சுண்ணாம்பு பொன்னரி தாரத்தை யுட்கொண்டால், வயிறு, குடல்வலியும், புண்ணும் இரத்தமாய் வயிற்றோட்டமுமுண்டாகும் சவுக்காரத்திற்கு மிக்குணமுண்டு. ஜாஜாலம். சீனிக்காரமும் தின்றவனுக்கு ஈரல்முட்டி வியாதிக்குரிய இருமலுண்டாகும் இவைகட்குப் பரிகாரமாவன கழுதைப்பால், வெண்ணெய், சர்க்கரை எண்ணெய், நெய். கறந்த பால், நெய்சத்துள்ள சால்ஞ ஆவின் தயிரு குடிப்பதாம். விசந்தீண்டியவன் சயனிப்பதாலே விசம் சரீரத்திலேறும் மாதவிடாய் இரத்தம் விழுந்த வஜீபனத்தை தின்றவனுக்கு சரீரம் விம்மலுண்டாய். நிறம் பஞ்சணித்து சக்தி பெலவீனமாகி; ஜிமாஇன் ஆசையற்று, முன்றுவாரம், பின்றுவாரத்தில்இரத்தம் வெளியாகிமெலிவடைதலுண்டாகும் பரிகாரம் செந்நிறமான பத்துப் பள்ளையாட்டின் பாலைப் பகலில் கறந்து அதில், கல்போட்டு பொங்கும் வரையிலிருந்து,பின்னர் அதேயே நாற்பது நாள்வரையில் வஜீபனமாக காலை மாலைகுடித்து, மாலையில் சோளக்ககூழ், கஞ்சி; நெய்குடித்து, பாயுமதன் கீழ் துணியும் விரித்த படுக்கையிற் படுத்து சயனித்து அத்தவணைக்குப் பின்னால் வெண்ணெயில் ஆவின்பால் கறந்து குடித்து; "அசறில்" அந்தியில் ரொட்டி நெய் இதுவிரண்டும் ஏழுநாள்வரையில் தின்று பின்பு கோதம் புபுளித்தரொட்டி, தும்பைபாட்டுக்கிடாய்க் கைமா தின்று பின்பு மாமிசமன்றி "சால்ஞ" சூப்பு குடிக்கத்தீரும் வல்லாஹு அஃலம்.

கறட்டோந்தியைப் பளிங்கிப் புட்டியிலிட்டுஜெய்தூனெண்ணெய் அல்லது நல்லெண்ணெயை, அப்புட்டியில் நிரப்பித்தசை கழலும் வரையிற் சூரியபுடத்தில் வைத்த எண்ணெயை யருந்தினாலும் சீரிப்பிள்ளைப் பித்தைச் சூட்டுடன் அருந்தினாலும், புருமலத்துடன் குழைத்த மாவை. எலிமுதலிய உயிர்ப் பிராணிகள் தின்றாலும் ஒட்டகைக் கெண்டைக்கால் என்பை மைப்போலரைத்து தண்ணீரிற்கலக்கி, எலிப்பொந்தில் விட்டாலும், தண்ணீர் நாய்ப் பித்தில் கடலைப்பிரமாணம் அல்லது கொடிப்புலிப்பித்து அல்லது அதன் மூளையில் நாற்றமுள்ளது, இவைகளிலொன்றை முகர்ந்தாலும் தீவிழுங்கிப் பட்சியின்பித்தும் உடனே கொல்லக்கூடிய நஞ்சாகும் குதிரையின் வேர்வை, நட்டமிருகம் பாம்புக்கும் நஞ்சாம் கொடிப்புலிபாய்ந்தவன் பேரில் எலிமோண்டாலும்சீரகம் பாதாம் கொட்டை பேரிகாரம் இவைகளை எலிப்பொந்தில் புகைத்தாலும் மரணம் நஞ்சூட்டப் பட்ட ஓஜீபனத்தை மயில்கண்டாலும் அதன் வாடையை முகர்ந்தாலும் இறகை விரித்து ஆசையுடன் கூவி ஆடும் குரங்கு அந்த வஜீபனத்தைக் கண்டால் பயந்து சத்தமிடும் தேனைக் காச்சிக் குடித்தாலும் நாயின் பாலைக்குடித்தாலும்செம்மறியாட்டுமாமிசந்தின்றாலும் மான்கஸ்தூரி தின்றாலும்கொல்லக்கூடியநஞ்சுக்கு அவிழ்தமாகும் தவளையைஅதன் குடலை நீக்கியுலர்த்திப்பொடித்து நஞ்சுண்டவனுக்கு நீருடன் குடிப்பாட்டினாலும் ஒருவிதமான நஞ்சு அல்லது பலவிதமான நஞ்சு சேர்ந்த வஸ்தையுண்டவனுக்கு மான்பித்தில் இரண்டு திருகத்திடைவீதம் மூன்றுநாள்வரையில் நாடோறுந் தடாகக் குடித்து வருக, அதைவிட்டுஞ்சலாமத்தடைவான் மூன்றும்பாகத்தில் இன்னும் வரும் இன்ஷா அல்லாஹுத் தஆலா.

543

ஒன்பதாவது பசுல்

பலதிரட்டிவ்ஸ் முகள்.

தேட் கடிவாயில் உப்பும் தண்ணீருந் தேய்த்து "சூறத்து" இக்லாசும், முஅவ்வதத்தைனியும் ஓதியூதத்தீரும்.

"ஷஜ்னியா, ஷஜ்னியா கர்னிய்யாகர் னிய்யா முல்ஹா, பஹ்று, குப்த்தா மலைத்து, கப்த்தாஸலாமுன் அலாநூஹின் பில் ஆலமீன் வஅலா முஹம்மதின் பில்முறுஸலீன் என்று மந்திரிக்க, சகல விசங்களுந் தீரும்.

இன்னும்சூறத்து அல்ஹம்துக்குப் பின் சுபுஹானமன் அல்ஜம் குல்லஜப்பாரின் முத்தகப் பிரின் பில்ஜாமி குதுறத்திஹி, வஅன்பத சிர்றஹு, பீ பாரிஹி வபஹ்ரிஹி அஹ்தாபசறிபிகைறித்தான், பூன் இல்த்தஜிம் அய்யுஹஸ்ஸம்மு, கஸமுல்லாஹி, அலாறஃசில் ஹைறுயத்தி, வல் அக்றபி வலகல் பின்னப்பாஹிக்ஜீ சிய்யில் ஆவீபிஸ் இல்லாஹி. வபில்லாஹில், காபிஷ்ஷாபில் மஆபீ, பிஸ்மில்லாஹி வபில்லாஹி வஅலாபறக் கத்தில்லாஹி, வபிமுஹம்மதிப்னி அப்தில்லாஹி காதீ, கஜீதி, மதீஷ்ஹிந்து, பவீர், ஹீன,இத்ரீஸ்,இத்ரீஸ்,சரூம்,சரூம், எஹ்ற, எஹ்ற, தூனீ பூனீ, அஜ்பர்த்து, கஜீதஸ், இஹ்பிலிஸ்ஸும், யாபைத்தூஷ், வஅக்றிஜ்ஹு மினல் முக்கி இலல் அஉமி, வமினல், அஉமி, இலத்தமி வமினத்தமி, இலல் லஹ்மி, வமினல்லஹ்மி, இலல்

ஜில்தி, வமினல்,ஜில்தி,இலஷ்ஷஃரி,வமினஷ்ஷஃரி,இலல்அறுலி வமினல் அறுலி,இலல்கமாமி-3-பிருதுறதகில்லாஹில்ஹய்யில்கய்யூமில்லதீ,லாஎழுமு,என்று மூன்று தரம் இந்த இஸ்மை தேள்,பாம்பு, நாய்வகை யருவிசத்திற்குத் தண்ணீரில் கையைவிட்டுச் சுற்றி விரலை ஆட்டினவனாய் ஓதியூதி விஷந் தீண்டப்பட்டவனுக்கு, அல்லது வந்த தாதனுக்கு அத்தண்ணீரைக் குடிப்பித்தாலுந் தீரும். ஆனால் நீ இப்பூமியிலிருந்தால் விசந் தீண்டப்பட்டவன் இப்பூமியிலும் நீ கடலில் இருந்தா லவனுங் கடலிலுமிருக்கவேண்டும்.

இன்னும் நசல் மினவுகிறவன் ஏழு விடுத்தம் "அஸ்அலுல்லாஹல் அலீம், றப்பல் அர்ஷில் கரீமி, அன்எஷ்பியக்க" என்று சொன்னால் அல்லாஹுத் தஆலா அந்நோயைச் சுகப்படுத்துவானென்று, நமது நாயகம் திருவுளமானார்கள்.

காய்ச்சலுக்கு "பிஸ்மில்லாஹில் கபீரி, அவூது பில்லாஹில் அலீமி, மின்சர்றி, அறக்கின், நப்பாரின் வமின்ஷர்றி ஹர்றின்னாரி" என்றும், விசமாதியவைகளுக்கு "ஸூறத்து, பாத்திஹா" வைக்கொண்டும், கண் திஷ்டி உடையவனுக்கு "வஇன்யக்காதுல்லீதன" என்னும் ஆயத்தை "ஆலமீன்" வரையிலும், இன்னும் நாடிய கருமங்க ணிறைவேறுதற்கு "பிஸ்மிலோதியபின், அல்லதீன, காலலஹு முன்னாசு," என்ற ஆயத்தை தாபலுலின் அலீம் வரையில் நாற்பத்தொரு விடுத்தம் நாற்பத்தொருநாள் தொடர்ச்சியாக, தொழுகை அடங்கலுக்குப் பின் ஓதிவந்து அந்நாள் முடிவடைந்த பின்னர் நாடிய கருமங்களுக்கு ஓதிவருக ஜெயமாம். ஹறாமான காரியங்கள் தவிர மற்றைய தடங்கலுக்கும் பிரயோகிக்கவும்.

இன்னும் ஓரிரவில் ஆயிரவிடுத்தம் "பிஸ்மில்லாஹியை, நிரப்பமாகவோதி இரண்டு றக்கஅத்து நபில் தொழுது பின்னர் நாடியது கிட்டவேண்டுமென்ற நிய்யத்துடன் "துஆ" வோதி, மறுதரமும் ஆயிரவிடுத்தம் பிஸ்மிலை யோதி, தொழுது, "துஆ" கேட்டு இவ்வாறு பன்னீராயிரம் விடுத்த மோதி, இருபத்தி நான்கு றக்அத்துந் தொழுது முடித்துக்கொண்டால் நாடியபொழுது அவ்வாறு செய்க நாடியவை நிறைவேறப்படும். அல்லது எழுதி, உபயோகிக்கவும் சலாமத்துண்டாகும். இன்னும் "லகத்ஜாஅக்கும் என்ற ஆயத்தை" அலீமி வரையில் நாடியவையடங்கலுக்கு ஓதிவருவதாலும் எழுதி குடிக்கின்றதாலும் தஃவீதாலு முபயோகமுண்டாகும்.

இன்னும் வசியத்துக்கு "இன்னல்லதீபரல" என்ற ஆயத்தை "மஆது" வரையும், பிள்ளைப் பேறு இலேசாக, வஅதினத்து, விறப்பிஹாவ ஹுக்கத்து, வஅல்கத்து மாபீஹா என்னும் வஸ்ஸமாயி, வத்தாரிக்கை, "சருபிறு" வரையிலோதி யுபயோகிக்கவும். ஸூறத்து "இன்னா அன்ஸல்னாஹு" வைமுகிய ஆயிரவிடுத்தம் வெள்ளிக்கிழமை தோறு மோதிவந்தால் நபிகளாபகத்தைக் கண்ணால் காண்காமல் மவுத்தாகமாட்டான். அச்சூறத்தை குங்குமப்பூத் தண்ணீர் கொண்டு நீ, நாடியவனுடுத்தும் புடவைத் துண்டிலெழுதி அத்துடன் அவன்பேரும் அவன் தாய்பேரு மெழுதி, அவன் நித்திரையில் மூங்கி இருக்கும் போது அதை அவன் நெஞ்சின்மேல் அல்லது கீழில் வைத்தால் அவன் வயதில் செய்த கருமங்களைச் சொல்லுவான். பெண்ணாக இருந்தாலுஞ் சரியே.

வயிற்று வலிக்கு "லமக்கு, பன்ஜல்" என்று காத்திலெழுதி நக்கினாலும் புடவைத் துண்டிலெழுதி வீக்கமுள்ள இடத்திற் கட்டினாலும், பால் சுரக்குதற்கு மாரிலெழுதி கட்டினாலும் பலன் கொடுக்கும்.

இருபத்தாறும் பாபு முற்றுப்பெற்றது.

இருபத்தேழாம் பாபு.

காத்திமாவைக் கூறல்.

ஒன்றாவது பகல்.

பலவிதமான முறைகள்.

நூலாம்பாடை பூச்சியின் நூலைக்கொண்டு, கறைபிடித்த வெள்ளியைத் தேய்த்தால் துலக்கமாகும்.

இறைச்சி, கனிவர்க்கம் ஆதியவைகளைத் தேனிலிட்டு வைத்தால் கெட்டுபோகாமல் நீண்ட நாளைக்கிருக்கும். தவளை நாக்கை ; [illegible]வால், சந்தேகிக்கப்பட்டவனுக்கு, ரொட்டியுடன் தின்னக்கொடுத்தாலுண்மையை வெளிப்படுத்துவான் எலி மூத்திரம், கடிதத்திலெழுதப்

பட்டுள்ள அட்சரத்தை மாற்றும் "களையும்" வான் பறவையின் கண்ணைச்சுமந்துக்கொண்டவன் தண்ணீரில் தாழ்மாட்டான். மரங்கொத்திப் பறவைக்கூட்டுமண்ணைப் சிறைச்சாலையில்வைக்கப்பட்டாலதிலுள்ளவர்கள் வெளிப்படப்படுவார்கள். நரியின் நாக்கை ஒரு வீட்டில் வைத்தாலும் கருங்கோழி எச்சங்களைச் சேகரித்துக்கூட்டமா யிருப்பவர்கள் வாசலில் வைத்தாலும்; கீரிப்பிள்ளை இரத்தமும் எலி இரத்தமுஞ் சேர்த்துத் தண்ணீரிற் கலந்து வீட்டிற் புதைத்தாலும் வழக்குகளுண்டாகும். 'பத்து" மரங்கொத்திப்பறவையின் தூவலை வீடு, கடைகளில் வைத்தாலவ்விடம் பாழாகிப்போம் ஓநாயின், பல், தொலி, கண் இவைகளைச்சுமந்துக் கொண்டாலும், கரும்பூனையின் தாமரைக்காயை அதன் தொலியிற் பொதிந்து கட்டிக் கொண்டாலும் காட்டுமாட்டுக் கொம்புச் சர்ம்பலில் களஞ்சி இடை அருந்திவந்தாலும், மரங்கொத்தியின் தூவலைச் சுமந்துக்கொண்டாலும் எதிரியை மிகைத்துத் தன் வழக்கில் ஜயமடைவான். உடும்புத்தொலியில், வாளுக்கு உறை செய்துபோட்டாலும், தீ விழுங்கும்பட்சி தின்று அல்லது விழுங்கி வெளியான இரும்பில், கத்தி, வாள், செய்துக்கொண்டாலும் சமரில் சுத்தவீரத் தன்மையுண்டாகும். முதலையின் தொலித் துண்டைப் பந்தயக்கிடாய், நெற்றியில் கட்டினாலும், சாவல் விரையைப் போர் செய்யும் சாவலுக்குக் கட்டினாலும், உடும்பின் கெண்டையைக் குதிரை முகத்திற் கட்டி வைத்தாலும் பந்தயத்தில்மிகைப்புண்டாகும், புலி வாலை அணிந்துக்கொண்டாலும்; குழி நரி இரத்தத்தை வைத்துக் கொண்டாலும் எவர்களுடைய "ஹீலா" உபாயம், தந்திரமியாதும் பலியாது.

இரண்டாவது பசுல்

"இஸ்திக்காரு"வெனும் ஆலோசிக்கப்பட்டவிடயங்களின் முடிவைத்தன் கனவிலறியுதல்.

——(*)——

"ஷிருஆ" உடைய ஷறஹில் வருகின்றது.—துப்புரவுடன் கிப்லாவை முன்னோக்கி "இஸ்திகாரு" உடைய துஆவையோதிப் பின்னர் துப்புரவுடனே கிபுலாவின் திசையில் சயனிக்கும் போது அவன் வெண்மை, அல்லது, பசுமையைக் கனவிற்கண்டால், அவன் நாட்டம் நலமாகமுடியும். கறுப்பு அல்லது சிவப்பைக்கண்டால் அவன் நாட்டந்தீங்காகிமுடியும் தீங்கைத்தவிழ்ந்துக் கொள்ளல் ஆவசியகமாகும். மேற்படி துஆவை ஓதுமுன்னர். தன் நாட்டத்தை நிய்யத்துச் செய்தவனாக அதாவது, இந்தக்காரியம் நலவாகுமா அல்லது, கெடுதியாகுமா "என்றது போல, கல்பில் நிய்யத்துச் செய்துக்கொண்டு இரண்டுறக்கஅத்து" நபில் "தொழுதுக்கொள்ளவும் அதில் முந்திய" றக்கஅத்தில் சூறத்து, பாத்திஹாவுக்குப் பின் சூறத்து, காபிறூனவையும், இரண்டாம் றக்அத்தில் பாத்திஹாவுக்குப் பின் சூறத்து; இக்லாஸும், ஓதித் தொழுதபின் எவருடனுமொரு பேச்சும்பேசாமல் ஒருச்சாய்ந்துபடுத்தவனாக இதன் கீழ்வரும் துஆவை ஓதி முடித்தவனாக நித்திரைசெய்யவும்.

"துஆ"

அல்லாஹும்ம, யாஹபீபி, குல்லிஹபீபின், யாமுகீதி, குல்லி முகீதின், யாகாபியாமுக்பீ, யாவன்ஹாவ, லிஜமீஹில் கல்க்கி, காபின் இக்ஷிப்லீ, மாபீனப்ஸீ, மக்பிய்யுன், பிஹக்கில்க்கலமி, வல்லவுஹி, வல் அறுஷி, வல்குர்ஸிய்யி வபிஹக்கி முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமல்குறைஷிய்யி, அல்லாஹும்ம, இன்குன்த, தஃலமு, இன்ன ஹாதல் அம்ற கைறுன்லீ, பிதீனீ, வமஆஷீ, வஆக்கிபதி அம்ரீ, வஆஜிலிஹி, வஆஜிலிஹி, பஅரினீ. பயாலன் அவ்குலுறத்தன். அவ்மா அன். ஜாரியன், வ இன்குன்த தஃலமு, அன்னஹாதல் அம்றஷர்றுன்லீ, பீதீனீ, வமஆஷீ, பஅரினீ, ஸவாதன், அவ்தாகானன், இன்னக்க அலாகுல்லி ஷையின் கதீறுன் வஸல்லல்லாஹு அலா ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹீ அஜ்மஈன் ஆமீன்.

வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாபு

இரண்டாம் பாகம் சிறப்பும் வல்லமையுமுள்ள "றஹ்மானின்"
கிருபா கடாட்சத்தினுல் முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

மூன்றாம் பாகம்.

—(:)—

நூன்முகம்.

“அல்லாஹுத் தஆலா” தனக்குச் சொந்தமுள்ள ஸிபத்துகளாகிய, இல்மு நாட்டம் சத்துவம் பார்வை கேள்வி மொழிச்சல் இவைகளை இன்ஸானுக்குக் கொடுத்து அச்ஸிபத்துகள் பரிமாற்றஞ் செய்யுதற்கு வானங்களின் இராசிகள் நட்சத்திரங்களின் குணுகுணங்களை, மண், தண்ணீர் காற்று நெருப்பு என்ற அணாஸிர் பூதங்களாய்க் கற்பித்து, அவைகள் விகற்பமன்றியே ஒன்றோடொன்று” கலக்கவும் அவ்விராசிகளும் நட்சத்திரங்களுஞ் சுற்றிவருகவும், ஆக்ஞாபித்து அதனால்; பூமியில், கல் கறடு, புல், பூண்டு, மரம் ஆதியவைகளையுண்டுபடுத்தி அவைகளை, ஹயவான்கள் அருந்தவும் அவ்ஹைவான்களின் மாமிசம் பால் தயிர் மோர், நெய், ஆவனவற்றை இன்ஸான் வஜீபனமாகக் கொள்ளவும், வஜீபனமான வஸ்துக்களின் சத்துக்களைச் சுக்கிலசுரோணிதமாகப் பிரித்து அதனில் நின்றும் சரீரமென்னுங் கூட்டைமிக்க அதிநூதனமாய்ச் சிருட்டித்து ஆட்சி புரியும் அதிவல்ல நாயகனுக்கே, புகழுடங்களுமுரியனவாகும் “ஸலவாத்தும், ஸலாமும்” ஹக்குசுபு ஹானஹு வத்தஆலா” சிருட்டித்த பொருளடங்களுக்கும் மூலக்காரணப் பொருளாகவும், தீன் குடிப்புகுதல் வனப்பேதகத்தினாலும். கிரகராசிகளின் பரிமாற்றத்தினாலு மிச்சரீர மென்னுங் கூட்டுக் குண்டாகும் நோய்களுக்கும், அவ்வேழுஸிபத்துகளின் மேல்விஷயமாகும் “கெடுதி” என்ற நோய்களுக்கும் ஹக்கீமாகவும் ஹாக்கிமாகவும், உலகத்தில் வெளியான நாயகம் ஸபீஉல் முதுனபீன், முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பேரிலும் அவர்களின் அவுலாதுகள், அசுஹாபுகள் மூமீன் முஸ்லீம்கள் பேரிலு முண்டாகுவனவாகவும். ஆமீன்.

உலகத்திற்றோற்றமாகின்றவைகளியாவும் இந்திரவஸ்துக்களாகவும் அதிந்திரவஸ்துக்களாகவும் பிரிக்கப்படும், இந்திரவஸ்துக்களிலே பிராணிகளும் தாவரங்களு மடங்கும், அதிந்திரவஸ்துக்களிலே மண், கல்,

பொன், இரும்பு, முதல்வன வகைகளடங்கும். சகல இந்திரவஸ்துக்களின் சீவிய காலங்களுக்கு எல்லையுள்ளன. இந்தக் காலஎல்லை ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறுபட்டு நிகழ்கின்றன. எங்ஙனமெனில் சில பூண்டுகள் ஒரேமாரிகால பளவுக்குச் சீவிக்கின்றன. ஆல், புளி, முதல்வன சில விருட்சங்கள் நூறுவருடக் கணக்காகவும் நிற்கின்றன, சில மிருகங்கள் சொற்பக்காலத்துக்கும் வேறு சில மிருகங்கள் ஐம்பது அறுபது வருடங்களுக்கு, மேலாகவுஞ் சீவிக்கின்றன. மனிதனுடைய வாணாள்மட்டும் நோயினாலே குறுகுகின்றது; ஆனால் அந்நோயுண்டுபடாதவண்ணமதை விலக்கக்கூடிய சிலபல பிரமாணங்களுண்டாயிருக்கின்றன வென்பது வுமுண்மை. நாம் அவைகளை அறியவும்:—அவைகளுக்கு ஏற்கநடக்கவுந் தக்கதாக அப்பிரமாணங்களடங்கியுள்ள அகரண வாதத்தையும் உற்பாலனத்தையுங் கற்றறியவேண்டிய தெவ்வளவாவசியகமாம். நாம் அவ்வாறு கற்றறியாதிருப்பின் எங்ஙன மவைகளுக்கேற்க நடத்தி நமது சீவியகாலத்தை யொழுங்குபடுத்தி வரக்கூடும். அன்றியும் சிறிதுஞ் சந்தேகமின்றி மனமே மனிதனில் விஷேசமானதென்பது பிரத்தியட்சம்பிரமாணம். அது தேகமென்னுங் கூட்டில் அடைபட்டிருக்கின்ற படியினாலே அக்கூடு வேளைக்குவேளை மாறுபடும் பல நிலைமைகட்குத் தக்கவண்ணம் மனதின் செயல்களும் விகற்பமாகும். ஆதலால் நமது சரீர அனுபவங்களைப்பற்றி மாத்திரமன்று. நமது மனோ விர்த்திக்காகவும் நமது சரீரத்தையுண்டாக்கிய "றஹ்மா"னானவன் இன்ன பிரமாணங்கட்கு அதை அமைத்திருக்கின்றானென்று அறிந்து அவைகளின்படி நடப்பது மிக்க ஆவசியகமேயாம். நிற்க! நமதுடம்பு சுட்டிய சில இயல்புப்பிரமாணங்களுக்கிசைய, படைக்கப்பட்டிருக்கின்றதாலே, சீவனிருக்கின்ற வரையில் ஒவ்வொருவனுந்தான் சுகசரீரியாகவும் முயற்சியுள்ளவனாகவுந் தனக்கும் பிறர்க்கு முபயோகமுள்ளவனாகவு மிருக்கும்படிக்குத் தன் நடைகளையுஞ் செயல்களையுங் கடமைகளையும் ஒழுங்குபண்ணும்பொருட்டும் அச்சாஸ்திரானுபவங்களைக் கற்றறியுதல் சாதனமென்ப துலகறிந்த விஷயமேயாம். ஆனதுபற்றியே நாமும்இக்கிரந்தத்தின் கண் முதற்பாகம் இரண்டாம் பாகத்தில் மனிதாங்காதிபாதம் விலங்கங்காதிபாதம் பிராணியங்காதிபாதம், தாவராங்காதிபாதம் அதனதன் அகாரணவாதம் உற்பாலனமாதியவைகளை ஒருவாறு தொடுத்து விளக்கியும், தாதும் தாதறியும்வகை, அதனதன்காரணம் சங்களாதிய வைத்திய வியூகூனத்தைப் பற்றியும், ஞானம், சமாதி முதல்வன, பேறறிவுகளைப் பற்றியும் இன்னும் பலமுக்கிய ஆதீர விநோத சாதுரிய மாதுரிய விஷயாதிக்கங்களைப் பற்றியும் ஒருவாறு விளக்கியிருக்கின்றோம் அவைகளியாவும் புத்திமான்களுக்குச் சந்தோசமும் இலாபமுமாக முடியும்படிக்கு மிக்கவிசேஷசமாக இச்சரீரமென்னுங் கூட்டிடப்போதிய அவயவங்களோடு ஆச்சரியவிதமாய்ச் சிருட்டித்து, காத்துஇரட்சித்துவருகின்ற மெய்யான இரட்சகனுக்கு நாம் வணக்கமும் நன்றியறிதலுமுள்ளவர்களாக வரும்படிக்கு அவனேகருணை புரிவானாக ஆமீன்

இத்தகை யகாரணானுபவங்கள் முற்றும் அவ்விருபாகத்திலுங் கூறப்பட்டிருக்கின்றதாலே இம்மூன்றும் பாகத்தில் கண்ணினாலே கண்ட அல்லது பழக்கத்தினாலே அறிந்த அவிழ்தங்களை மட்டும் விபரித்திருக்கின்றன அதாவன.—சூரணம். ரசாயனம், லேகியம் கிரதம் எண்ணெய், நெய், கட்டுவகை மெழுகுவகை, செந்தூரம், பற்பம் திராவகம், ஜெயநீர், மாத்திரையாவன பலவகை அவிழ்தங்களேயாம். அன்றியும் அதனதன் செய்பாகம் கைபாகம், புடமிடும் வகை எரிப்பு வகைகளையுந் தெளிவாய் விளக்கிக் காட்டி இருக்கின்றன.

ஆகையா லிதிலுள்ள ஒவ்வொரு அவிழ்தங்களையுஞ்செய்து அதனதன் முக்கியானுகூலத்தைப் பெற்றுக் கொள்ளும் புத்தி மான்கள் தவறாமல் எனக்கும் என்பிள்ளை பிள்ளைகளுக்கும் என் குடும்பத்தாருக்கும், என் ஆசிரியர் நேசர்களுக்கும் இக்கிரந்தத்தைத் அச்சிடுதற்குதவிபுரிந்த சிலர்களுக்கும் மற்றைய முஸ்லிம்சோதர்களுக்கும் "சருவவஸ்துக்களையுஞ் சிருட்டித்து, தன்னுடைய" தாத்தினது "சிர்று" என்னும் ஒப்பற்ற ஆணிமுத்தை, சிறப்பாகிய மகலூக்காத்தென்ற "இன்ஸானென்னும் சிப்பிக்குள் அமானிதம்வைத்த அல்லாஹுத்தஆலாவினிடத்து இருகரமேந்தி, துஆசெய்வார்களாக. ஆமீன். வஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் பிறஹ்மத்திக்கயா அர்ஹமர்றாஹிமீன்.

"அல்லாஹுஷ் ஷாபீ

——:(*):——

முதலாவது பாபு.

தாதுகளின் வகைபாடுகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

தாது; நான்கென்பதும், அதனதன் சுபாவக் குணங்களையும் விபரித்தல்.

பித்தம், வாதம், ஐயம், சிலேற்பனம், என்று நான்கு வகைப்படும்.

பித்தத்தின் குணம்.—நெருப்பைப்போல் வரண்டசூடு. வாதத்தின் குணம்.—காற்றைப்போல் சீதளச்சூடு. ஐயத்தின் குணம்.—மண்ணைப்போல் வரண்ட குளிர். சிலேற்பனத்தின் குணம்.—தண்ணீரைப்போல் சீதளக்குளிர். இந்நான்குகுணமும் சமம்பெற்றிருந்தால் சுகமும், இவைகளிலொன்று மீறினால் வியாதியுமுண்டாம்.

இரண்டாவது பசுல்.

பித்தமிகைப்பைக் கூறுதல்.

பித்தமிகைப்படைந்ததற்கு அடையாளக் குறிப்புகள்.—தலைமயக்கம், நெஞ்சுகாந்தல், கல்பு பெலவீனமாதல், வயிறு நிரம்பி இருப்பதாகக்காணல், தலைவலி, சரீரஞ் சூடாகஇருத்தல், தள்ளாடும் மயக்கம், கண்ணில், நீரும்பூளையுமுண்டாகுதல், காதினுள் காந்தல், முகக்கறுப்பு, பத்து, கரும்புள்ளி, சொறி, வயிறு, ஈரல் குலையிற் சூடுண்டாகுதல், தண்ணீர்த்தாக மதிகப்படல், அக்கினிபோல் ஜுரம் வீசல், நிறம்மஞ்சணித்தல், வாய்க்கசப்பு, சிறுநீர் கட்டுப்படுதல், குன்மம், சுரம்,வசுவாசு, கலக்கம் உண்டாகுவனவாம்.

மூன்றாவது பசுல்.

வாதமிகைப்பைக் கூறல்.

வாதமிகுத்ததற்கு அடையாளக் குறிப்புகள். பிளேக்என்ற நோய், அம்மை, தலைகிறுகிறுப்பு, கண்வலி, கண்செவப்பு, கடைக்கண் புண், கண்மங்கல், (கண்இயவம்) கண்கறுப்பு, வட்டத்தில் சோர்வு,புள்ளிகளுண்டாதல், வயிற்றில் கிருமியுண்டாதல், சரீரக் காந்தல், மரப்பு நரம்புகளின்சோர்வு. புடைப்பு சிலந்திகட்டுகளுண்டாதல் முகச்சிவப்பு, வாய் மதுரமாயிருப்பதாம்.

நான்காவது பசுல்.

ஐயமிகைப்பைக் கூறல்.

ஐயமிகைப் படைந்ததற்கு அடையாளக் குறிப்புகள்: குஷ்டம் போலுள்ள கொடிய வியாதிகளுண்டாதல்.யானைக்கால்,மொத்தி,ஈரல் குலைவலி, சிறுநீரடைப்பு, தலை,கால், கை களில்,புள்ளி,பத்துண்டாதல், காதிரைச்சல், புழுக்கம் கண்ணில் கருநீர் வடியுதல், சூலை, இருகரமும் நடுக்கங் கொள்ளல். தலைவலி, ஒக்காளம் வாந்தி, சரீரமுறுக்கல் முறைக்காச்சல்,கரும்புள்ளி,அருப் பாரைக்கீரைப்பூச்சிமஞ்சட்காமாலை நரம்புவியாதி உறுப்புகள் வாட்சியுறல் வரண்ட இருமல் உண்டாகுவதாம்,

ஐந்தாவது பசுல்.

சிலேர் பனமிகைப்பைக் கூறல்.

சிலேற்பனமிகைப் படைந்த அடையாளக் குறிப்புகள்.—பருவமன்றி நரைகாணல் அதிக தும்மலுண்டாகுதல் பக்கவாதம்நாவுமந்தம் வெண்குட்டம், படர்தாமரை யுண்டாதல் ஜிமாஉ குறையுதல் அமதித்தல். சிறுநீர் மிகுதல், சீதளஇருமல் உமிழ்நீர் மதுரமாதல் தடுமல்பிடிக்குதல், எகுரில் பூச்சியுண்டாகுதல் பல்வலி பெருமூச்சு முண்டாகுதல் புளிப்பு மிகுக்குதல். பாதத்தின் நரம்புகள் பெருத்து புடைக்குதல் வயிற்றில்வலி அதிகமாதல், சிறியபூச்சிகளுற்பத்தியாதல். மீபன்பற்றுதல் இவைகளாம்.

இரண்டாம்பாபு.

நஞ்சாதிய வஸ்துக்களுக்கு மாற்றுமதன் சுத்திகளையுங் கூறல்.

ஒன்றாவது பசுல்.

நஞ்சுண்டவர்களுக்கு மாற்றுக்கொடுக்கும் பாக விபரம்

பச்சை நாவிதின்றவனுக்கு, முத்துக்கொட்டை எண்ணெயில் அமுக்குரா வேரை அரைத்துக்கொடுக்கத் தீரும். இன்னும், அரளிக்குக் கடுக்காய்த்தோடும் இரசகர்ப்பூரத்துக்கு, கையான் தகரையும், இரசத்துக்கு நீர்முள்ளி இலையும் அபியூனுக்கு, சுக்கும் தேங்காய்க்கு, புளுங்கல் அரிசியும், சுண்ணாம்பு நீறுக்கு, சிந்தில்கொடியும், பாசிப்பயறுக்கு. மோரும், வெல்லத்துக்கு, சுக்கும், உண்டவஸ்து அஜீரணமாவதற்கு, கடுகும், எட்டிக்கொட்டைக்கு, நசாவிலிப்பட்டையும், அல்லது தாழம்பூவும் அல்லது அதன் வேர் சேங்கொட்டைக்கு, பொரசன்பூ அதாவது பலாசப்பூ: அல்லது கோவைச்சார். அல்லது ஈனாத எருமைக்கிடேரிச் சாணிப்பால், கள்ளிப்பாலுக்கு ஆவாரந்தழையும், ஊமத்தங்காய்க்குத்தாமரைமுத்து, அல்லது வெண்காயம். பேய்க்கரும்புக்கு வெள்ளரிவிரையும், கசப்புள்ள பீக்கங்காய்க்கு, கோரைக்கிழங்கும் அக்கோரைக்கிழங்குக்கு ஆவின்பாலும், மாங்காய்க்கு தென்னமட்டையும் யானைக்கற்றாழைக்கிழங்குக்கு நெல்லிக்காயும், தயிருக்கு, சுடுநீரும், குளிர்ந்தஜலத்துக்கு, தேத்தாங் கொட்டையும், வாழைப்பழத்துக்கு மிளகும், சங்குபாசாணத்துக்கு, பருத்திப்பிஞ்சு அல்லது இலையும், இறைச்சிக்கு, பூனை எலும்பும் அல்லதுசுரைக்காய்வேர், கசாயம். சகலவிசத்துக்கும், கருஞ்சிக்கொட்டி அதாவது மணத்தக்காளி, கள்ளிக்கு காடியும், சகல நஞ்சுக்கு, இலாமிச்சைவேர்க்க சாயமும், சுகபேதியாவுக்கும் வசம்புக்கியாழமும், நொ[illegible]க்குக்கருப்பு கட்டிக்கியாழமும்; சுண்ணாம்புக்கு, மஞ்சளும், எரிக்கலைப்பதல் போலுள்ள நஞ்சுள்ள பால்களுக்கு, மாடுவகைகளானால் மொச்சைக்கொட்டையில் கால்படியும் மனிதனானால் ஏழுமொச்சைக்கொட்டையுமரைத்துக்கொடுக்கவும் அல்லது ஆவரக்கொழுந்தை அரைத்துங் கொடுக்கலாம் பாசாணவகைகள் போலொற்ற வெவ்வகை நஞ்சுகளுக்கு அவுரிவேர், சிறுகீரை வேர் ஒவ்வொரு பிடியளவும்,

மிளகு, பலம் அரைக்காலுஞ்சேர்த்திடித்து அரைப்படிநீரிட்டு அரைக்கால் படி நீரளவாக, காச்சி இறுத்து, காலை மாலை கொடுக்கத்தீரும். மருந்துகள் முறிவுகண்டவனுக்கு மேற்படிக் கியாழங்கொடுப்பதாலும் அல்லது ஈனா எருமைக்கிடேரிச் சாணிப்பாலில், காலைஆறுமணிமுதல் எட்டுமணிவரையிற் கழுத்தளவு வரையிலுட்காரச்செய்து, மேற்படி பால் தெளிந்து காக்காய்க் கால்விறுவு ஒடுஞ்சமையத்தில் அவனை வெளிப்படுத்திக்கோவைத் தண்டுக்கியாழத்தால் குளிப்பாட்டினாலுந் தீரும். இன்னும் எட்டிக்கொட்டைக்கு நாவல், எருதோனி தானிக்காய், வட்டமிட்ட ஊமத்தைக்குத்தாமரை, அரளிக்கு, கடுக்காய் வேந்தோண்டிக்கிழங்குக்கு வெந்தகரி, இவைகள் முற்றும் ஈடாகும். இலாமிச்சைவேர் இன்னும் சிலமுறைகள் இரண்டாம்பாகம்—26—6—[illegible]ல் முந்திவிட்டன.

இரண்டாவது பசுல்

நஞ்சுள்ள வஸ்துக்களைச் சுத்திசெய்யும் விபரம்.

நேர்வாளத்தைச் சாணிப்பாலில் அவித்துப்பருப்பெடுத்து முளை நீக்கியதை, மோர், எலுமிச்சம்பழம், நல்லாய்க்கழுவிய கற்றாழைச்சோறு, இம்மூன்றுஞ் சமமாகச்சேர்த்து அதில் எட்டுச்சாமம் ஊறவைத்துப் பிறகு கொதிக்க வைத்து, ரவியில் காயவைத்துப் பிறகு எலுமிச்சம்பழச் சாற்றிலூறவைத்து அச்சாறுவற்றக் கொதுப்பாட்டி எண்ணெய்கக்குவதற்கு வெயிலிற் காயவைக்கச் சுத்தியாம். அல்லது சாணிப்பாலிற் சுத்தியான பருப்பை, புளுங்கல் அரிசி, கற்றாழைமடலுடன் தண்ணீர்விட்டு வேகவைத்துக் கழுவியெடுத்து வெயிலிலுலர்த்தச் சுத்தியாம்,

நாவியை; மிளகு, அவுரிவேர் இவைகளைத்தட்டிப் பே[illegible]டுச்செய்த கியாழத்தில் (துலாந்திரம்) கிழிகட்டி எரிக்கச் சுத்தியாம். வெள்ளாட்டு மூத்திரத்தில் கிழிகட்டி எரித்துப்பின்னர் காற்படி ஆவின்பாலில் காற்படி தண்ணீர் கலந்துக்கிழி கட்டி எரித்தாலும் நாவிச்சுத்தியாம்.

கடுகுரோகணி; தண்ணீரிற் கழுவிமேல் தொலிசீவி, ரவியிற் காயவைக்கச் சுத்தியாம்.

நாவிக்கிழங்கு ? மேல் தொலி சீவி எடுக்கச்சுத்தியாம்.

அரிசித்திப்பிலி ஊறவைத்துக் கடைந்து அருசி யெடுத்துக் காயவைக்கச் சுத்தியாம். அரிதாரம்; சுண்ணாம்பு நீறில் பத்துத்தடவை நீற்றுக்கொள்ளலாற் சுத்தியாம். மனோசிலை;சுண்ணாம்பில் ஒருதரஞ் சுத்தி செய்து, பின்னர் வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒருதரங் கிழிகட்டி யெரித்து, மறுதரம் பாலும் தண்ணீருங்கலந்து, “ கிழி ” கட்டி எரிக்கச் சுத்தியாம்.

பொரிகாரம் ; கழுவிக்காயவைப்பதாலும் பொரிப்பதாலுஞ் சுத்தியாம்.

கெந்தகம் ; ஆவின்பாலில் ஏழுதரமுருக்கிச் சாய்க்கச் சுத்தியாம்.

இரசம் : நூலாம்பாடை, அல்லது மஞ்சள், அல்லது செங்கல்மா, இதிலொன்றுடன் கல்வத்திலிட்டரைக்கச் சுத்தியாம்.

லிங்கம் ; முலைப்பாலில் காய்ச்சச் சுத்தியாம்.

பூரம் ; வில்வக்காய்ச் சாற்றிற் காய்ச்சச் சுத்தியாம்.

வீரம் ; இளனி நீரிற் காய்ச்சச் சுத்தியாம்.

மூன்றுவது பசல்.

புகையுஞ் சரக்குகளின் சுத்தியைக் கூறல்.

வீரம்; பூரம் இரண்டையும் சீனக்காரத்திலும், கோழிமுட்டை வெள்ளைக்கருவிலும் வாட்டினாற் சுத்தியாம். குந்துருக்கம், சூடம், கெந்தகம்' சாம்பிராணி இவைகளைச் சமமாய்க் கல்வத்திலிட்டு மெழுகாக்கி, லிங்கத்திற்கு அங்கிபூட்டிப்புடமிடவும். இவ்வாறு பத்துவிடுத்தம்புடமிடச் சுத்தியாம். “ அதாவது ” அம்மெழுகைப் பத்துருண்டைசெய்து முதற்றடவை ஒருருண்டையை லிங்கத்தில் அங்கிபூட்டி, அவ் வங்கியில் நெருப்பைக்கொளுத்தி யெரித்து ஆறியபின் எடுக்கவும் இவ்வாறே பத்துமுறை செய்யச் சுத்தியாம்” நாயுருவிச் சாம்பலும் இலூசமுங் கல்வத்திலிட்டரைக்க மேற்படி இரசஞ்சுத்தியாம்.

“ எச்சரிப்பு ”

இனிவருஞ்சில அவிழ்தபாகங்களியாவற்றினுஞ் சரக்குச் சுத்திகூறுமற் சொல்லப்பட்டிருப்பதால் மேற்கூறியவண்ணம் ஒவ்வொரு சரக்குகளையுஞ்சுத்தி செய்து” பாக வொழுங்குப்படிக்குச் சரக்குகளைச் சேர்த்துபயோகிப்பதைப்பற்றிப் பூண்டுக்கொள்ளல் ஆவசியகமாம். ஆனது பற்றியேஆங்காங்கு விபரிப்பதானால் விஷயம்விரிவாகுமெனக் கருதியேசொல் லப்படவில்லையென்று அறியவும்.

நான்சாவது பசல்.

அவிழ்தங்களுக் காவசியகமான அனுபான விபரங்களும், பத்தியங்கள், வாய்வேக்காடாதிய விஷயங்களைக் கூறல்.

செந்தூரம், மெழுகு, வகைகட்டு, திரிகடுகுச் சூரணம், லேகியம், தேன், கருப்புக்கட்டி சருக்கரை, ஆவின் வெண்ணெய், நெய், ரசாளங்கள், இஞ்சிச்சாறு போன்ற அனுபானங்களும்—பற்பம்; மாத்திரை குளிகை, வகைகட்டு, ஆவின் வெண்ணெய், நெய், பால், முலைப்பால், தேன் கியாழம் இஞ்சிச்சாறு. லேகியம், போன்ற அனுபானங்களுங் குளிகை, குழம்பு, வகைகட்டு, கருப்புக்கட்டி வாழைப்பழம் கியாழம் போன்றவைகளும், தைலம், சூரணம் வகைகட்டு ஜலம், பால், சருக்கரையும், இன்னும் நோய்களி னியல்புக்கேற்க அனுபான விபரங்கள், மூன்றும் பாகம், ஏழாவது பாபு, எட்டாவது பசலிலும், எட்டாம் பாபு, பன்னிரண்டாவது பசலிலும், வருகின்றன. பேணிக்கொள்கின்ற பத்திய விபரம்:—மேற்படி பாபு ஆறுவது பசலிலும் அவிழ்த வேகத்தாலான வாய்க்கட்டுக்கு மேற்படி பாபு, எட்டாவது பசலிலும், மற்றைய அத்தியாயங்களிலும் வருவதை யூகித்தும் அவைகளினு லனுபான வகைகளைக் கூறுத முறைகளில், உபயோகித்துக் கொள்ள லவசியமாம்.

மூன்றாவது பாபு.

சுகபேதிக்கான பலவகை விஷயங்களைக் கூறல்.

——(*)——

ஒன்றாவது பசுல்.

சுகபேதிக் குழம்பு.

பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி, வெங்காரம், கருஞ்சீரகம், அரிசித் திப்பிலி, சுத்திசெய்த இரசம், நாவிக்கிழங்கு, மனோசிலை, அரிதாரம் வகைக்கு விராகனிடை ஒன்றும் சுத்தியான வாளப்பருப்பு விராகனிடை பத்து. ஆமணக்கு முத்துப்பருப்பு விராகனிடை அஞ்சு. இச்சரக்குகளியாவையுஞ் சுத்தி செய்து, அளவுபடிக்குச் சமூலத்தையுங் கல்வத்திலிட்டு மூன்றுநாள் அரைக்கவே, மெழுகாகும். அதை மிளகுப்பிரமாணம் உருண்டை செய்து, கருப்புக் கட்டியிற் கொடுக்கப் பேதியாகும். போதாமானால்; மோருங் கஞ்சியுங் குடிக்க நிற்கும். நிற்காவிட்டால் வசம்புக் கியாழங் குடிக்கவே சகல சுகபேதிகளும் நிற்கும்.

இரண்டாவது பசுல்.

இதுவுமது.

நேர்வாளம் விராகனிடை (6) ரசம், கெந்தகம், சுக்கு, வெங்காரம் வகைக்கு விராகனிடை (1) இவைகளியாவுங் கல்வத்திலிட்டு அரைத்து மிளகளவு உருண்டை செய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு, கருப்புக் கட்டியிற் கொடுத்துப்பச்சைதண்ணீர்குடிக்கப் பேதியாகும். வெந்நீர் குடிக்க பேதி நிற்கும்.

மூன்றாவது பசுல்.

வயிற்றுப் பொருமலுக்கு.

நேர்வாளக் கொட்டை 6. ஆறை உடைத்து நஞ்சு நீக்கிய பருப்புடன் உப்பும் புளியுஞ் சேர்த்தரைத் துருட்டிக்கொடுத்து வெந்நீர் குடிக்கச்செய்யப் பேதியாகும். புளித்த மோர், காடி, குடிக்க நிற்கும். இம்முறை நீர் வலமடைப்புக்குங் கொடுக்கலாம்.

நான்காவது பசுல்.

சௌகரியமான பேதி.

——:():——

தேள்வையான நேர்வாளப் பருப்பை யோர் கலயத்திலிட்டு, தூர் உள்ளிலழுந்திருக்கின்ற போத்தலடி நடுவில் ஓர் சிறிய துவாரமிட்டு அப்போத்தலை அக்கலயத்தின் வாயினருகிற்பொருந்தியிருக்கும்படிக்கு வைத்து அக்கலயத்துக்குப் போத்தலடிக்குஞ் சீலை மண் செய்து அன்றியும் அப்போத்தல் வாய்க்குஞ் சீலை மண் செய்து, அக்கலயத்தை அடுப்பேற்றிச் சிறிய தீயாக எரிக்க, [illegible]ல் தையிலஞ் சேரும். அத் தயிலத்தில், ஏலம் கராம்பு இவைகளை யூறவைத் துலர்த்தி வெற்றிலைப் பாக்குடன் தின்கப் பேதியாகும். வாந்தி அணத்தலறவே இராது. சுகமாகப் பேதியாகும்.

ஐந்தாவது பசுல்.

மற்றொரு வகை.

சுத்தியான நேர்வாளம் (15) மிளகு பதினைந்து, புழுங்கல் அரிசி (100), கடுக்காய் (8) சுக்கு (2) இவைகளை வெவ்வேறாக அரைத்து, ஒன்றுசேர்த்து மந்தித்து சிறிய சுண்டைக்காயளவு, உருட்டிக் கருப்புக்கட்டியிற் கொடுத்துத் தண்ணீர் குடிக்கப் பேதியாகும்

மிளகு பொடித்து நெய்யில் குழைத்துக் கொடுக்க பேதிநிற்கும்.

ஆறாவது பசுல்.

மற்றொரு குளிகை.

வீரம், பூரம், இரசம், கெந்தகம், தாளகம், வெங்காரம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய்த் தோடு, தானிக்காய், நெல்லி வற்றல் வகைக்கு பலம் அரைக்கால், சுத்தியான நேர்வாளம் பலம் ஒன்றரை

சகலத்தையும் வளர்க்கரப்பான் சாற்றில் அரைத்துக் குருண்டை செய்து, ஆள், வயது இவைகட்குத் தக்கபடி கொடுக்கப் பேதியாகும். உப்புடன் கஞ்சி குடிக்கப் பேதி நிற்கும்.

ஏழாவது பகல்.

மற்றொரு லிங்கக்குழம்பு.

ஜாதிலிங்கம், வெங்காரம், வசாக்கு, பலம் இரண்டு. முருக்குக் கொட்டைப் பருப்புப் பலம் நான்கு. சுத்தியான நேர்வாளம் பலம் எட்டு இவைகளை அரைத்துக் குன்றிமணியளவுக் குருண்டை செய்து கொடுத்துத் தண்ணீர் குடிக்கப் பேதியாகும். வெந்நீர் குடிக்கப் பேதி நிற்கும்.

எட்டாவது பகல்.

இதுவுமது.

சண்பகம், லவங்கம், ஏலம், கோஷ்டம், கடுகுரோகணி வகைக்கு விராகனிடை ஒன்று சுத்திசெய்த வாளம் விராகனிடை மூன்று இவைகளை வெந்நீரால் அரைத்து, சிறு கடலையளவுக் குருண்டை செய்து கொடுக்கப் பேதியாகும். சுக்கு / வோமம் அல்லது தேனிலும் கொடுக்கலாம்.

ஒன்பதாவது பகல்.

சுகபேதிச் சூரணம்.

நிலவாரை விராகனிடை ஐந்து. குருவில்லாக் கடுக்காய் விராகனிடை மூன்று. பெருஞ்சீரகம் விராகனிடை (2) சுக்கு விராகனிடை (2) சீனி விராகனிடை (1) சகலத்தையுமிடித்து வடித்து இருகடி அளவு சருக்கரையிற் கொடுக்கப் பேதியாம்.

பத்தாவது பகல்.

இதுவுமது.

இந்துப்பு, காயம், மிளகு, சுக்கு, சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி, சிங்கம் காந்தம் வகைக்கு விராகனிடை (2) சுத்திசெய்த வாளம் விராகனிடை (1) ஒன்று சேர்த்து நன்றாகச் சூரணித்து ஒருவராகனிடை இடையளவு சுடுநீர் மற்றைய அநுபானத்திற் கொடுக்க வியாதிகள் திரேக அரிப்புகள் தீரும்.

பதினொன்றாவது பகல்

சுகபேதித் தயிலம்.

சுத்தி செய்த வாளம் பலம் ஒன்றைப் பொடித்து, நான்கு தேங்காயின் தனிப்பாலிற் சேர்த்துக் காய்ச்சித் தயிலம் வடித்துச் சீசாவிலடைத்துக்கொண்டு பச்சைத் தண்ணீரில் ஆட்களுக்குத் தக்க வண்ணம் ஐந்து முதல் பத்துத் துளி வரைக்குங்கொடுத்துச் சுடுநீர் குடிக்கப் பேதியாம். மாற்று வசம்பு.

பனிரண்டாவது பகல்.

சுகபேதிக்கு; பத்தியமுறையும் மாற்றும்.

மேற்கூறிய முறைகள் அடங்கலிலும் நேர்வாளம்போன்ற நஞ்சுள்ள சரக்குகளை இரண்டாம் பாகம் இரண்டாவது பாபிற் சுட்டிய வண்ணஞ் சுத்தி செய்துகொள்வதும், திரேகக் குணம் பெலம் காலம் அறிந்து சுகபேதி வாங்குவதும் சுகபேதிக்கு வாங்கிய தினத்தில் சிரசிலிருந்து தண்ணீர் விட்டுக் குளிப்பது அன்றியே தோளிலிருந்து தண்ணீர் விட்டுக் கழுவுவதும் அன்றையத்தினம் பகலும், அதிக சத்தாம் விதமுள்ள வஸ்துக்களைப் புசிக்காமலும் அதில் அசீரணப்படும் வஸ்துக்களைத் தவிர்வதும் அவசியமாம். சுகபேதி அளவுக்கு மிஞ்சிப் போகுமானால் அதற்கு முக்கியமான மாற்று; வசம்புக் கியாழமே. அதாவது, அரைப்பலம் வசம்பைத் தட்டி அரைப்படி ஜலத்தில் எட்டிலொன்றாக வற்ற வைத்து வடித்துத் தனியாவது அல்லது போதுமாகிய, சீனி சேர்த்தாவது குடிப்பதுவேயாம். "இன்னும் பாலர்களின் ஜுரமாதியவைகட்கு (7-வது) பாபில் பின்னர் வரும்." இன்ஷா அல்லாஹுத்தஆலா.

நான்காம் பாபு.

பலவித நோய்கட்குச் செந்தூரங்கள்.

ஒன்றுவது பசுல்.

பித்தபாண்டுக்கு அயச்செந்தூரம்.

இரும்புத் துருவைக் கல்வத்திலிட்டு, கார் அரிசி வடி கஞ்சியாலரைத்து வில்லை செய்துலர்த்தி, ஓட்டில் வைத்து ஓடு மூடிச் சீலைமண் செய்து எட்டு வராட்டியில் ஐந்து விடுத்தம் புடம்போட்டெடுத்துப் பின்னர் அதை எலுமிச்சம்பழ ரசத்திலரைத்துப் புடமிடச் செந்தூரமாம். அந்தத் திரிகடுகுச் சூரணத்தில் மூன்று விரல் கொண்டெடுத்த அச்சூரணத்தில் ஒரு பணவிடை செந்தூரஞ் சேர்த்துக் காலை மாலை 10-நாள் கொள்ள அவ்வியாதி தீரும்.

இரண்டாவது பசுல்.

குன்மத்திற்கு வெடியுப்புச்செந்தூரம்.

தண்ணீரில் ஐந்து தடவை காய்ச்சப்பட்ட வெடியுப்பு நான்கு பங்குக்கு ஒரு பங்குச் சிறுநீர் உப்பு ஒரு பங்கு சேர்த்து, எருக்கம் பழுப்பிலைச் சாற்றில் அல்லது, இரத்த மண்டலிச்சாறிலரைத்து, ஐந்து தரங் கோழிப்புடமிட்டெடுத்து; "சீசா" புட்டியி லடைத்து வைத்துக்கொண்டு, குன்ம முற்றுக்கும் அரிசி இடை தேனில் ஆறு வேளை கொடுக்கத்தீரும்; சூதகத்தையும் பிரிக்கும். செம்பிற் கொடுத்தால் மாற்று நாலுகாணும்.

மூன்றுவது பசுல்.

சீஹல் வாயுவுக்குத்தாளகச் செந்தூரம்.

தாளகம் பலம் ஒன்று, நல்லதும்பையையிடித்து இரண்டுபங்காக்கி, ஒருபங்கை ஓட்டில்வைத்து அதன்மேல் தாளகத்தைவைத்து அத்தாளகத்தின்மேல் மற்றொருபங்கையும் வைத்துமூடி, அவைகளை மற்றொரு

ஓட்டினால் மூடிச் சீலை மண்செய்து அடுப்பில்வைத்து ஒருசாமமெரித்து ஆறியபின் எடுக்கச் செந்தூரமாம். அதை, தேன் நெய், கருப்புக்கட்டி போன்ற அனுப்பானத்தில் அரிசி இடைகொடுக்கத் தீரும்.

நான்காவது பகல்.

குன்மம் வயிற்றுப் பொருமல்கட்கு உப்புச் செந்தூரம்.

கறியுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, பூநீறு, சவட்டுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, மண்ணுப்பு, வகைக்குப்பலம் ஒன்று, வெடியுப்பு மட்டும் பலம் இரண்டு. இவைகளை ஆட்டு முண்டை எலும்புகளுடன் ஓர் கலயத்திலிட்டு, அல்லது மேற்படி உப்புகளைப் பேய்க்கொம்மட்டிக் காய்ச் சதையுடன் கலந்து, ஓர் கலயத்திலிட்டுச் சீலைமண்செய்து, முளப்புடமிடச் செந்தூரமாகும். கருப்புக்கட்டியிற் கொடுக்க, குன்மம் வயிற்றுப் பொருமலாதியவைகள் தீரும்.

ஐந்தாவது பசுல்.

வயிற்றுவலிக்கு வெடியுப்புச் செந்தூரம்.

வெள்ளையுள்ள வெடியுப்பை மேனிச்சாறு தடவிய வோர்வோட்டில் வைத்து மேற்படி உப்புக்குக் கீழும்மேலும், ஆட்டு அலகுப்பல்லைச் சுட்டுக்கரித்துப் பொடித்ததனை, வைத்து, மற்றொரு வோட்டில் மேற்படி மேனிச்சாறுதடவி, மருந்தைமூடிச் சீலைமண் செய்து கோழிப் புடமிடக்கட்டும். குன்மத்துக் கொடுக்கத் தீரும்.

ஆறாவது பசுல்.

பல நோய்களுக்குச் செந்தூரம்

தாளகம், மனோசிலை, லிங்கம், நாகம் ரசம், கெந்தகம், அரப்பொடி, வகைக்கு விராகனிடை (2) கல்வத்திலிட்டு கருவேம்பன், சாறு விட்டரைத்து வில்லைசெய்து கீழு, மேலும் ஓடுவைத்து மூடிச், சீலை

மண்செய்து ஐந்தெருவிற் புடமிடச் செந்தூரமாம். வெண்ணெயில் குண்டுமணிஇடை கொடுக்க, குன்மம், சனி, ஜுரமாதிய கொடிய வியாதிகள் தீரும். சிறுபிள்ளை வியாதி யடங்கலுக்குங் கொடுக்கத் தீரும். "கருவேம்பன் சாறு" என்பது பால்குடிப் பிள்ளைகளின், சிறு நீர் மலம், ஒருநாளுள் வெளிப்படுவதை ஒருபாத்திரத்தில் வாங்கி இரண்டுமொன்றாகக் கலக்கி, அப்பாத்திரத்தின் வாய்மூடி, சீலைமண் செய்து குப்பைக்குழியிற் புதைத்து, மூன்றுவதுநாள் வெளிப்படுத்தி, மேற்றெளிவிறுத்துப் புட்டியிலடைத்துக் கொள்வதுவேயாம்.

ஏழாவது பசல்.

பல வியாதிகட்கு "மஹ்ரூதிய்யா" செந்தூரம்.

பனிநீர், எலுமிச்சம்பழச்சாறு வகைக்குப் படிகால். புட்டியிலடைத்து அதில் பூநீறுபலம் ஒன்றும் நவச்சாரம் பலம் அரை பொடித்துப்போட்டு, மூடிவைத்துக்கொண்டு, ரசம், ரசச்செந்தூரம், பூரம், வீரம், லிங்கம் பகளக்கால்,மனோசிலை தாளகம், ஆகச்சரக்கு ஏழும் வகைக்குப்பலம் அரை. இதில் தாளகத்தைக் கல்வத்திலிட்டு, புட்டியிலடைத்துவைத்திருக்கின்ற ஜெயநீர்விட்டரைத்துப்பிறகுமற்றுமருந்துகளையுமந்த ஜெயநீர்விட்டே யரைத்து வழித்து, மண்பாத்திரத்துள் வைத்துஒருசாதிவிறகால் சிறுகளித்து இருப்புக் கரண்டியாற் கிண்டி எடுத்து கல்வத்திற்பொடிசெய்துவிட்டு குறித்தஜெயநீர்சேர்த்தரைத்து வேப்பங்காய்போலுருண்டைசெய்து,ரவியில்மூன்றுநாளுலர்த்தி,"மண்பாத்திரத்தில்" ஆளமான குண்டாளச் சட்டியிற் பாதியளவு மணல் நிரப்பி அதன்மேல் மேற்படி மருந்தைவைத்து, அம்மருந்தின்மேல், பரத்திநிறைய மணல் நிரப்பி அடுப்பில் வைத்துச்சிறு நெருப்பெரித்து மேல்மணலிற் குடுண்டானவுடன் இறக்கி, ஆறவைத்து எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துவைத்துக்கொண்டு, அனுப்பான மறிந்து கொடுக்க குன்மம், மேகம், வாதம், போன்ற வியாதிகள் தீரும்.

* * *

எட்டாவது பசல்.

பற்பல வியார்திகட்குங் குப்பிச்செந்தூரம்.

பூரம், வீரம், ரசம், ரசச்செந்தூரம், லிங்கம் வகைக்கு, பலம் ஒன்று. கெந்தகம்பலம், ஒன்றேஅரைக்கால், அரிதாரம்பலம் கால், கெந்தகத்தை முதலாகப் பொடித்துக்கொண்டு, பிறகு மற்றைய மருந்துகளையும் பொடித்து, ஒரு புது வோட்டைக் காயவைத்து அதில் கெந்தகப்பொடியைத்தூவ இளகும். அப்போது இரசத்தைவிட்டுக் கிண்டிப்பிறகு மற்றப்பொடிகளையு மிட்டுக்கிண்டி எடுத்து, கல்வத்திலிட்டுப் பொடித்து, காசிக்குப்பிக்குள் செலுத்தி வாயை அடைத்து ஏழுசீலை மண்செய்து, ஒருசட்டியை மணலைக்கொண்டு நிரப்பி அதனடுவே அந்தக்குப்பியைப் புதைத்து,மறுசட்டி கொண்டு அச்சட்டியை மூடி, சுற்றிச்சீலைமண் செய்து நான்குசாமம் எரித்து,ஆறியபின் எடுக்கச் செந்தூரமாம். அனுப்பானமறிந்து பணவிடையளவு கொடுக்கச் சகல ரோகங்களும், வாய்வுரோகங்களுந் தீரும். அனுப்பானம்,—கருப்புக்கட்டி, தேன் நெய், திரிகடுகுலேகியம். பத்தியம்,—புளி தள்ளி, பால் மோர் சேர்க்கலாகும்.

ஒன்பதாவது பசல்.

பலவகை நோய்களுக்கு, பஞ்சபாணச் செந்தூரம்.

லிங்கம்,மனோசிலை, காந்தம்,அரிதாரம் நெல்லிக்காய்க்கெந்தகம், வெள்ளைப்பாஷாணம், ரசம், வகைக்கு, பலம் ஒன்று இவைகளைச்சுத்திசெய்து, கல்வத்தில் மேனிச்சார்விட்டு நாலுசாமம் அரைத்து பின் நாகவல்லிச் சாறுவிட்டு நாலுசாமம் அரைத்து,பொடுவலைச்சாறுவிட்டு நாலுசாமமரைத்து வில்லைதட்டி நிழலில் நன்றாக வுலர்த்தி, பின், மண் சட்டியில் நாகவல்லி இலையைப்பரத்தி அதன்மேல் மேற்படிவில்லையை வைத்து மேல் ஓடு மூடி, பலமாக ஏழு சீலை மண் செய்து அடுப்பேற்றி ஒருமாதிரி விறகால் நாலு சாமஞ் சிறு தீயிட்டு எரிக்க செந்தூரமாம். சீசாவிலடைத்து வைத்துக்கொண்டு, தேன், இஞ்சிச்சாறு, கியாழங்களில் வியாதிக்கு ஏதுவாகச் செந்தூரஞ் சேர்த்துக்கொ[illegible]; சன்னி, ஜுரம், கிராந்தி, குஷ்டம், சூலை, வாய்வுகள், வாதநோய்கள், மேகரோகங்கள், குன்மங்கள் கிறுணிவகைகள், கை, கால் முடக்கு ஊளை, ஆறாத வெடிசூலை, பிளவை, புத்து கழலை, கண்டமாலை, [illegible]ரிகரப்பான், சொறிகரப்பான், சிரங்கு, வண்டுகடி, தேமல், எலிகடி., அண்டவாதம்,

கபால குஷ்டம், பவுந்திரம், மூலவியாதிகள், உந்திகடுப்பு, ஈரல் குலை வலி, குடைச்சல் முதல்வன சகல ரோகங்களுந் தீரும்.

பத்தாவது பசுல்.

பலவிதக் கொடிய நோய்கட்குச் செந்தூரம்.

—(*)—

இரசம், லிங்கம், வீரம், பூரம், தாளகம், மனோசிலை இரசச்செந்தூரம், வகைக்குப் பலம் ஒன்று. இவைகளைக் கல்வத்திலிட்டு மூன்று நாழிகை அரைத்து, ஓர் அகலமான மண் பாத்திரத்திலிட்டுப் புகைய விடாமல் இரும்புக் கரண்டியால் துளாவி வறுத்து, எடுத்து, மறுபடிக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றினா லாட்டி, எலிப்புழுக்கைபோல், கயிறாகத் திரித்து மூன்றுநாள் வெயிலிலுலர்த்தி ஆறுபடி மணல் கொள்ளும்படியான குண்டானச்சட்டியில் மணலிட்டு அதன்பேரில், மண் சுவற்றிலிருக்கும் உப்பளர் மண், மூன்று விரல் கனம் பரப்பி அதன்பேரில் மேற்படி மருந்தைப் பரத்தி அதன்மேல் மேற்படி உப்பளர் மண்ணைப் பரப்பி அதன்பேரில் முன்போல் பொடி மணல் நிரப்பி அடுப்பேற்றி ஒருவிதமான விறகால் எரித்து, மேல்; மணலின்மேல் கை பொறுக்காத சூடு வந்தவுடன், எரிப்பை நிறுத்தி ஆறியபின் எடுத்து கல்வத்திலிட்டு ஒரு சாமம் அரைத்து மேற்படிப் பாத்திரத்திற்றானே புகைய விடாமல் வறுத்து, சிவந்த செந்தூரமான பின்னர், சீசாவி லடைத்து வைத்துக்கொண்டு, ஒரு குன்றி இடை மூன்றரைநாள் அதாவது ஏழு பொழுது, தேனில் கொள்ளத் தீரும். வியாதிகள்; குன்மம், மேகம், வாதம், ஈளை, காசம், சூலை, ஜன்னி, கிறாணி, பெரும்பாடு, முதல்வன வியாதிகள் தீரும். உப்பை வறுத்துச் சேர்த்துக்கொள்ளவும்.

பதினொன்றாவது பசுல்.

பலவித நோய்களுக்கு இரசச் செந்தூரம்.

—(:)—

வீரம் விராகனிடை ஒன்று. இரசச் செந்தூரம் விராகனிடை நாலு. இது இரண்டையும் உமிழ்நீர் விட்டரைத்து, அரிசி இடை தேனில் மூன்றரை நாள், ஏழுபொழுது கொடுக்கப்பலவித நோய்கள் தீரும். ஸ்திரிபோகத்தை நிறுத்தவும்.

பனிரெண்டாவது பசுல்.

மற்றொருவிதச் செந்தூரம்.

—()—

வீரம், கால் ரூபாயிடை. இரசச் செந்தூரம், அரை ரூபாயிடை. லிங்கம், முக்கால் ரூபாயிடை. இவைகளை முறைப்படிக் கல்வத்திலிட்டு ஒருநாள் அரைத்து வைத்துக்கொண்டு, பணவிடை அனுப்பானத்திற் கொடுக்க, வாய்வு, வாந்திபேதி, சூலை, கட்டு இவைகள் தீரும்.

பதிமூன்றாவது பசுல்.

மூலரோகங்களுக்கு கிஷ்டண அபரக்குச் செந்தூரம்.

—:*:—

அபரக்கு, பலம் ஒன்றைக் கறுப்புக் காணத்திலவித்து, கல்வத்தில் கருஞ் சிற்றகத்திச் சாறு விட்டு ஒருசாமம் அரைத்து வில்லை தட்டி யுலர்த்தி, கீழும் மேலும் ஓடுவைத்து நான்கு சீலைமண் செய்து, எழுபத்தைந்து விராட்டியில் மூன்று புடமிடச் செந்தூரமாகும். கருப்புக் கட்டி, வெண்ணெய், நெய், தேன் இவைகளொன்றில், ஒரு அரிசி இடை முதல் மூன்று அரிசி இடைவரையிற் கொடுக்க மூலரோகமியாவும் பவுந்திரங்களியாவுந் தீரும்.

பதினான்காவது பசுல்.

சகல நீரிழிவுக்கு அபரக்குச் செந்தூரம்.

—(*)—

கிஷ்டண அபரக்கு, தேள்வையானதைக் கொடிவேலிவேர், பெருந் துத்திவேர், வாழைக் கிழங்கு ஆலம் வேர் கற்றாழை இவைகளொன்றில் ஷை வாழைக்கிழங்கு, கற்றாழை இரண்டிலும் சாறெடுத்துக் கலந்து, கல்வத்திலிட்டு அச்சாறுவிட் டரைத்துக் கவசஞ்செய்து புடமிடச் செந்தூரமாகும். பணவிடை அளவு, ஆவாரைத் தயிலத்திற் சேர்த்துக் கொடுக்க, நீரிழிவுகள் சகல பிறமேகங்கள் தீரும். இவ்வண்ணம் எத்தனை புடமிட்டாலும் நலம். கசப்பு, புளிப்பு நீக்கவும்.

பதினைந்தாவது பசுல்.

நீரிழிவுக்கு அன்னபேதிச் செந்தூரம்.

அன்னபேதி பலம் ஒன்றை, ஓர் கலயத்திலிட்டு மேனிச் சாறு மிதக்க வூற்றி, மூன்றுநாள் ஊறவைத்து, எடுத்துலர்த்தி, அக்கலயத்திலிட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து ஐந்தெருவிற் புடமிடச் செந்தூரமாகும். கருப்புக்கட்டி, வெண்ணெயில் இரண்டு அரிசியிடை கொடுக்க நீரிழிவு, விஷபாண்டு வீக்கமிவைகள் தீரும். ஒன்றரிசி இடை வெண்ணெயிற் கொடுக்க, புகைச்சல் தீரும். கரப்பனுள்ள வஸ்துகளை நீக்கவும்.

பதினாறாவது பசுல்.

பல ரோகங்களுக்கு இரசச் செந்தூரம்.

(:)

பிரண்டைச் சாற்றில் கட்டிய இரசக்கட்டிக்கு, யானை நெருஞ்சி, கண்டங்கத்திரி வேர், நீர் முள்ளி, மனிதன் மண்டை ஓடு இவைகளைச் சமனிறையாகப் பொடித்தரைத்துக்குகை செய்து, அதன்மேல் மூன்று சீலைமண் செய்துக் கொக்குப் புடமிடச் செந்தூரமாகும். அனுப்பானத்தில் அரிசி இடை கொடுக்கப் பலரோகங்கள் தீரும்.

பதினேழாவது பசுல்.

மற்றொரு இரசச் செந்தூரம்.

):(

பனிதாங்கி என்ற காட்டு மருக்கொழுந்திலையை யுலர்த்திக் கரித்துத் தண்ணீரிற் கலக்கி காய்ச்சி, உப்பெடுத்து, தெள்ளையான மேற்படி இலையில் மேற்படிஉப்பைச்சேர்த்து, சாறெடுத்து, தெள்ளையுள்ள இரசத்தைக் கல்வத்திலிட்டு அச்சாற்றினாலே இரசந் திரண்டு வருமளவும் நன்றாக அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உருட்டி, யுலர்த்தித் தோலி நீக்கிய வாழைப்பழத்தினுள் பழமொன்றுக்கு நாலைந்தாக வைத்து, ஒரு பெரும் பூசணிக்காயின் நடுவில் வட்டமாக அறுத்துக் குடல், எடுத்து மேற்படிப் பழங்களை அதனுள் நட்டிவைத்து, இடைக்கிடை அந்தக் குடலை வைத்து, அறுத்த வில்லையா லதன் வாயை மூடி,

காய்முழுதிலுஞ் சீலைமண் செய்து, காய்க்குத் தக்கபடி கெஜபுடமிடச் செந்தூரமாகும். சீசாவில் வைத்துக்கொண்டு ஒரு அரிசி இடை கருப்புக்கட்டி;வெண்ணெய், நெய்,தேனிற் கொடுக்க, கிரந்தி,பரங்கி, சூலை, விஷபாண்டு வீக்கம் வகையறுக்கள் தீரும்.

பதினெட்டாவது பசுல்.

சகல வியாதிகளுக்கு மற்றொரு செந்தூரம்.

இரண்டு விராகனிடை இரசத்தைக் காட்டாமணக்கின் பால்விட்டரைத்து வில்லைதட்டி யுலர்த்தி, அந்த வில்லைக்குமேல் திருகுகள்ளிப் பாலை யூட்டி யுலர்த்தி, ஓட்டில் வைத்துச் செங்கல்மா, உப்பும் சமனிறை பொடித்து மேற்படி வில்லைக்கு மேற்றாவி அதன்மேல் மேற்படி பாலைவிட்டுலர்த்தி மேல் ஓடு மூடிச் சீலைமண் செய்து முக்கால் முழம் புடமிடச் செந்தூரமாம். கல்வத்திலிட்டுப் பொடித்து தேன், நெய்யிற் கொடுக்கத் தீராத வியாதிகளியாவுந் தீரும்.

பத்தொன்பதாவது பசுல்.

சுரம், காசமாதிய வியாதிகளுக்குத் தாளகச் செந்தூரம்.

(*)

தெள்ளையான தாளகத்தை, ஒருபுது உலை மூடியுள் வைத்துத் தும்பை இலையை அரைத்து மேற்படி தாளகத்தில் இரண்டல்லது மூன்று சொட்டுச் சாறுபிழிந்து மேற்படி அரைத்த இலையை மேற்படி உலை மூடியின் வாய் விளிம்பினுள்ளில் அரைவிரல் கனத்திற் சுற்றிலுங் கோட்டைபோல் வைத்து அதன் மேல் செடி சாறுபூசிய மற்றொரு உலை மூடியால் மூடி ஐந்து சீலை மண் செய்துலர்த்தி அடுப்பேற்றி ஒரு மாதிரிவிறகால் எரித்து, மேல்மூடியிற்கைபொறுக்காத சூடுவந்தவுடன் இறக்கி ஆறியபின்னர் எடுக்கமேற் சட்டியிற் பதங்கமுங் கீழ்ச்சட்டியில். தாளகமு முருகி இரத்தம் போலுறைந்திருக்கும். அதை உடைத்தெடுக்க நேரிடும், அவ்வாறு எடுத்துக் கல்வத்திலிட்டு அரைக்கச் செந்தூரமாகும். சத்திக்காது. சுக்கைப்பொடித்து, தேனிற் குழப்பி ஒரு பணவிடை செந்தூரம் காலைமாலை எழுபொழுதுட்கொள்ள சுரங்களும், மற்றையவியாதிகளும் போம் அவபத்தியம்.

இருபதாவது பசுல்.

வெட்டை, மேகமுதலிய வியாதிகளுக்கு கரும் வங்கச்செந்தூரம்.

கழுதைக்கால் குளம்பை நறுக்கிச்சட்டியிலிட்டுத் தேய்த்து வறுக்கக்குளம்புச் செந்தூரமாகும். பின்பு, கருவங்கம் பலம் ஒன்றை அச்சட்டியிலிட்டுருக்க, உருகும். அப்பொழுது வெடியுப்பு பலம் ஒன்று, கொடிவேலிவேர் பலம் ஒன்று இவைகளைச்சேர்த்துப்பொடித்துவைத்துக்கொண்டு உருகிய வங்கத்திற் சிறுகச்சிறுகப்போட்டு அக்கழுதைக்காலால் வறுக்கவே செந்தூரமாகும். ஒருபணவிடை, காலை, மாலை, ஏழுநாள் கருப்புக்கட்டியிற் கொடுக்கவெட்டை, நீர்கடுப்பு, மேகம், வகைகளியாவுந்தீரும. தேனிற் கொடுக்கவிஷபேதியைப் பிடிக்கும். “அவபத்தியம்”

இருபத்தோன்றாவது பசுல்.

நீரிழிவுக்கு மற்றொரு செந்தூரம்.

வங்கம் பலம், மூன்றை ஈசல் இறகு போற்றகடாகத்தட்டி, நாயுருவி அல்லது ஆவரையை இடித்து, தூள்செய்து அத்தூளைத்தூவி, தூவி வங்கத்தை அறுபது நாழிகைவறுக்கவே செந்தூரமாகும். அதிலொரு பணவிடை தேனிற் கொடுக்கச்சகல நீரிழிவுகளுந்தீரும். பத்தியம் வெள்ளாட்டுப்புக் கண்டம், முருங்கைக்காய் அதன் இலை தவிர மற்றவைகளை நீக்கவேண்டும்.

இருபத்திரண்டாவது பசுல்.

பாண்டுக்கும் தாதுவிர்த்திக்கும் அயச் செந்தூரம்.

இரும்பு, பன்னிரண்டுதரம் நெருப்பிற் காய்ச்சி, கஞ்சாவின் பச்சை இலைச்சாற்றில் பன்னிரண்டுதரம் துவைக்கச் சுத்தியாம். அப்படிச் சுத்தியான இரும்பை மேற்படி சாறுவிட்டுக் கல்வத்திலரைத்துலர்த்தி, ஓட்டில் வைத்து, ஓடு மூடி, சந்துவாய்க்கு மூன்று சீலைமண் செய்து கோழிப்புட மிட்டெடுத்து, மறுபடியுங் கல்வத்தில் மேற்படி

இலைச்சாறுவிட்டரைத்து வில்லைதட்டி யுலர்த்தி முன்போற்புட மிடவும் இவ்வாறு பதினொருமுறை புடமிட்ட பின்னர் கல்வத்திற் பன்னீர்விட்டரைத்து வில்லைதட்டி யுலர்த்திமுன்போற் புடமிடச் செந்தூரமாம். கருப்புக்கட்டி, வெண்ணெய் தேனில் அரிசிஇடை கொடுக்க, தாதுபுஷ்டிக்கும், பாண்டு ரோகங்கட்கும் பலன் கொடுக்கும். பெலவீனமுள்ளவனுக்கு இரத்தவிர்த்தியைக் கொடுத்து, கெட்ட இரத்தத்தைக்கழிக்கும். உடல்வலுவையுண்டாக்கும்

இருபத்திமூன்றாவது பசுல்.

மேகவியாதிகளுக்கு மற்றொரு செந்தூரம்.

இரும்பு, இரசம், வீரம். காந்தம், நமச்சாரம் இவைகளை மூன்று நாள் கற்றாழைச்சாற்றிலரைத்துப்,புதுச்சட்டியில் வறுக்கச் செந்தூரமாகும். பணவிடையுட்கொள்ள மேகவெட்டை கடுப்பு, அஷ்டகுன்மம். சூலை, ஜன்னி சுரமிவைகள் தீரும்.

இருபத்திநான்காம் பசுல்.

மற்றொரு செந்தூரம்.

அரப்பொடி பலம் இரண்டு. நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் ஒன்று. யானை அடியன் சாற்றிலரைத்து மூன்றுபுட மிடச்செந்தூரமாகும். பணவிடையளவு, சருக்கரையிற் கொடுக்க மேகம்,நீர்வீக்கம் லை, பித்தம் அசதி உறக்கமாதியவைகள் தீரும். அவபத்தியம்.

இருபத்தைந்தாவது பசுல்.

நாகச்செந்தூரம்.

சிறுகண்ணுகம் பலம் ஐந்தும், இலுப்பையெண்ணெய் ஆவின் பண்ணெயுஞ் சமனளவு சேர்த்துக்கொண்டு மேற்படி எண்ணெயை நம்புக்கரண்டியிற் பூசி அதில் மேற்படி நாகத்தை வைத்துருக்கி, நக்கி இருபதுதடவைமேற்படி எண்ணெயிற்சாய்க்கவும். ஒவ்வொரு

முறையும் மேற்படி கரண்டியில் எண்ணெயைப்பூசியே உருக்கவேண்டும் இவ்வாறு செய்கில் நாகஞ்சுத்தியாகும். பிறகு சுத்தியானநாகத்தைச்சட்டியிலிட்டு, வெடிஉப்பு, படி அரை; ஓமம்படி கால் சுக்கு பலம் அரை மஞ்சள் பலம். அரை. இவைகளைத்தனித் தனியாகப் பொடித்து, ஒவ்வொன்றையுஞ்சிறுகச் சிறுகப்போட்டு வறுக்கச் சிவக்கும். பிறகு நாயுருவியைக் கண்டங்கண்டமாய் நறுக்கிக் கொஞ்சங் கொஞ்சமாய் போட்டு வறுக்க, மாதுளப்பூ போல் செந்தூரமாம்அடக்கஞ்செய்துக்கொண்டு; திப்பிலிப் பொடி செய்து இருகடிப் பிரமாணத்தில்,தேன் விட்டுக் குழைத்து அதிற் பணவிடை செந்தூரஞ்சேர்த்துக் கொடுக்க, மந்தார காசம் சுவைகாசம், ஈளை, இருமல், எலிகடிவிஷம், குரல், நெஞ்சின் சிலேட்டுமம் கோபம், பித்தம், சதையடைப்பு, சுக்கில பிரமியம், இந்திரிகம் கல்லடைப்பு குன்மம், பவுந்திரம், மூகம், கை, கால் எரிவு,.முதலியவைகள் தீரும்.

இருபத்தாறுவது பசுல்.

பெரும்பாட்டுக்குச் செந்தூரம்.

முந்தினபாகத்திற் சொல்லிய எண்ணெயில் ஏழுதரம் உருக்கிச் சாய்த்த நாகத்தைக் கல்வத்திலிட்டு ஆடாதொடை இலைச்சாறுவிட்டரைத்து, வில்லைதட்டி அல்லது பேய்க்கும்மட்டிக்காய் கவசத்துள்வைத்துலர்த்தி ஓட்டில் வைத்து ஓடுமூடிச்சீலைமண்செய்துலர்த்தி, எழுபது எருவிற்புடமிடவும் இவ்வண்ணம் மூன்று புடமிடச்செந்தூரமாகும்.

இருபத்தேழாவது பசுல்.

வெட்டைபெரும்பாட்டுக்குச் செந்தூரம்.

சுத்தி செய்த நாகத்தை யுருக்கிஅதில் மேனியிலையைப் போட்டுவறுக்க பற்பமாகும். தேன்கருப்புக்கட்டியில் அரிசி இடைகொடுக்கப் பெரும்பாடு இரத்தவோட்டம், வெள்ளை, வெட்டை யாதியவைகள் தீரும்.

இருபத்தெட்டாவது பசுல்.

வாதரோகங்கட்கு லிங்கச் செந்தூரம்.

கூடம் சாம்பிராணியைச் சரிநிறையாகவெடுத்து எச்சில்விட்டரைத்து; தெள்ளையுள்ள லிங்கத்துக்கு அங்கிபூட்டி. முளப்புடமிடக்கட்டும்.

இன்னும் சங்கம் பழச்சாறு கால்படி ஒருபலம் லிங்கக்கட்டிக்குச் சுருக்கு கொடுக்கக்கட்டும். அதன் இலைச்சாற்றில் சுருக்குக்கொடுத்தாலுங் கட்டும் இவ்விதங் கட்டிய லிங்கக்கட்டிக்கு மேனி இலையை அரைத்து அங்கி பூட்டி முளப்புடமிட வுயர்த்தியான செந்தூரமாகும்.

இருபத்தொன்பதாவது பசுல்.

மற்றொரு லிங்கச்செந்தூரம்.

லிங்கம் பலம் ஒன்றிற்கு நான்கு தேசிப்பழச்சாறு சுருக்குகொடுத்து அப்பழத்தினுள்வைத்து, சீலைமண் செய்து முளப்புடமிடச் செந்தூரமாகும்.

திப்பிலி, கண்டந் திப்பிலிக்கியாழத்தில் இரு அரிசிஇடைகொடுக்க" வாதம் வயிற்றுப் பொருமல்யாவுந்தீரும்,

முப்பதாவது பசுல்.

கொடிய வியாதிகளுக்கு அயகாந்தச்செந்தூரம்.

அரப்பொடி விராகனிடை13. காந்தம் விராகனிடை 9. கெந்தகம் விராகனிடை 7. இந்துப்பு விராகனிடை 2, வெங்காரம் விராகனிடை 4 இவைகளைக் கற்றாழைச்சாறுவிட்டரைத்து, காசுபோல் வில்லை தட்டி நிழலுலர்த்தி, அடிகனதியான சட்டியில் வைத்து, சீலைமண்செய்து, கடாக்கினியாய் 63 நாழிகை எரித்து எடுத்து இஞ்சிச்சாறு,தேன், திரிகடுகுப் பொடி இவைகளில் ஒருபணவிடைகாலைமாலை 11 பொழுது கொடுக்க,குன்மம். வாய்வு,சளிப்பு,வாதம் வலி முதலியவைகள் தீரும் புளி, புகையிலை,கரப்பான் பதார்த்தங்களை நீக்கவும்.

முப்பத்தோன்றுவது பசுல்.

பித்தச்சோகைக்குக் காந்தச்செந்தூரம்.

காந்தம் அயம், கெந்தகம்,வகைக்கு பலம்(4) தற்றுமைச்சாற்றிலரைத்து, கெஜபுடமிடச்செந்தூரமாகும் கைச்சநாரத்தங்காய் லேகியத்தில் அல்லது திரிகடுகுச் சூரணத்திற்கொடுக்க பித்தம் பாண்டுயாதியவைகணீங்கும்.

முப்பத்திரண்டாவது பசுல்.

பலவித நோய்களுக்குச் செந்தூரம்.

இரசம், லிங்கம், வீரம், இரசகற்பூரம், இரசச்செந்தூரம் இவைகள் வகைக்குபலம் ஒன்று வெற்றிலைச்சாறு விட்டு ஒருச்சாமம் அரைத்து, சிறுசிறு வில்லை தட்டி ஓட்டில்வைத்துணர்த்தி மேல் மூடி இரண்டு சீலைமண்செய்து, ஒருசாணளவு, குழிதோண்டி அதில் இரண்டங்குல மணல்பரப்பி அதில்மேற்படி ஓட்டை வைத்து அதன்மேலும், மணல்பரப்பி நான்கு எருவைப்பொடித்துப்போட்டு நெருப்பிலிட்டெரித்து ஆறியபின் எடுத்து இவ்வாறு ஆறுதடவை வெற்றிலைச்சாற்றில் அரைத்து ஆறுபுடமிடச்செந்தூரமாகும். அரிசி இடை மூன்று நாள் அல்லது ஆறுநாள் தேனில் கொடுத்தால் வாயழற்றும். நெய்யில் கொடுத்தால் வாயழற்றாது ஜன்னி குதகக்கட்டு குதகவாய்வு அண்டவாய்வு சூலை, கைகால்கொடைச்சல், வெட்டை, பரங்கி கிரந்தி, இவைகள்தீரும், அவபத்தியம்,

முப்பத்தி மூன்றுவது பசுல்.

சகல நோய்கட்குப் பஞ்சலோகச் செந்தூரம்.

செம்புவிராகனிடை(8) கெந்தகம் விராகனிடை (12) இரசம் விராகனிடை(9) லிங்கம் விராகனிடை (7) வீரம் விராகனிடை(4) இவைகளைக் கல்வத்தில் ஜெயநீர்விட்டாட்டி வில்லைதட்டி யுலர்த்தி ஓட்டில்வைத்து ஓடுமூடிச் சீலைமண்செய்துலர்த்தி. முளப்புட மிடவும்.பின்னும் அவ்வாறரைத்து மறுபுட மிட்டெடுத்துப் பொற்றலை, கருப்பன்

சாற்றிலரைத்து மறுபுடமிடச் செந்தூரமாகும். சகல வியாதிகளுக்கும், ஒரு அரிசி இடை முதல் மூன்று அரிசி வரையில், ஒவ்வொரு வேளைக்கும் வியாதிக்கேதுவாகக் கொடுக்கத் தீரும். பத்தியம்:—புளி, புகையிலை, மீன் இவைகளை நீக்கி நெய், பால், மாமிசம் சேர்க்கவும். ஜெயநீர் என்றது, கிளிஞ்சி என்ற சிப்பிக்கு தமர்போட்டு அதனுள், வெங்காரத்தைப் பொரித்துச்செலுத்தி வைக்க நீர் வடியும். அதுவே ஜெயநீர். அந்நீர்கொண்டே அரைக்க வேண்டியது.

முப்பத்தி நான்காவது பசுல்.

பலவித நோய்களுக்கு லிங்கச்செந்தூரம்.

லிங்கம் பலம் ஒன்றை சிறிய துண்டுகளாக நறுக்கி, எலுமிச்சங்காயளவுள்ள உளுந்து மாவைத் தண்ணீர் கொண்டு நன்றாக நோக அரைத்து, தாதுவளங் காயளவு உருட்டி அதுக்குள் மேற்படி லிங்கத்தை ஒன்றுக்கொன்று அடக்கி ஒரு வருடத்துக்கு மேற்பட்ட சாவல் வாயைத் திறந்து மேற்படி மருந்தைச் செலுத்தி, அச்சாவலுக்கு மற்றைய தீன் நீர் முதலியவைகள் கொடாமற் கட்டிவைத்து மறுநாளில் அம்மருந்து கொடுத்தவேளை வந்தவுடனறுத்து, அதன் கல்மாங்காயை அறுத்து அதனுள் உள்ள, கல், லிங்கமாதியவைகளை எடுத்துலர்த்திப் பொடித்து வைத்துக்கொண்டு தேன் நெய் அனுபானத்திற் கொடுக்க சகல நோய்களும் பறக்கும் சோதிக்கப்பட்டது.

முப்பத்தைந்தாவது பசுல்.

கல்லடைப்புக்குச் சிறுநீர் உப்புச் செந்தூரம்.

சிறுநீரைக் காய்ச்சி உப்பெடுத்து எருக்கம் பழுப்புச் சாற்றாலாட்டி வில்லை தட்டி, சட்டியில் வைத்து மறுசட்டி மூடிச் சீலைமண் செய்து எரிக்கவே, செந்தூரமாகும். அதை அனுபான மறிந்து கொடுக்க ஒரு நாழிகையிற் கல்லடைப்பைப் பிரித்து நீர் பிரியச் செய்யும்.

ஐந்தாம் பாபு.

பற்பல ரோகங்களுக்குரிய பஸ்பங்கள் சுன்னம், பதங்கங்களைக் கூறுதல்.

ஒன்றாவது பசுல்.

வயிற்றுளைவு நீரிழிவுக்கு அபியூன் பற்பம்.

தேவையான அபியூனை, சிறுகீரைச் சாற்றாலாட்டி வில்லை தட்டி யுலர்த்தி, ஓட்டில் வைத்து ஓடு மூடிச் சீலமண் செய்து ஏழெருவிற் புடமிட நீறும். அரிசி இடை 3-7-9. வேளை, கருப்புக் கட்டி, வெண்ணெய், தேன், சுக்கு கிசாள மிவைகளிலொன்றிற் கொடுக்க, நீரிழிவு, வயிற்றுளைவு, மூலக்கிறுணி முதலியவைகள் தீரும்.

இரண்டாவது பசுல்.

வங்கப் பஸ்பம்.

பெரிய கோழி, குருமானை அரைத்து, அறைச் சட்டியில் வைத்து அதன்மேல் வங்கத்தை வைத்து அதன்மேல் மேற்படி அரைத்த குருமானை வைத்து மூடிச் சந்துக்குச் சீலமண் செய்து அடுப்பிலேற் நான்கு சாமம் எரிக்கப் பற்பமாகும். இவ்விதம் வங்கமிரண்டு நீறும்

மூன்றாவது பசுல்.

மேக வியாதிகட்கு, வெள்ளீயப் பற்பம்.

தேவையான, வெள்ளீயத்தை ஏழுதடவை யுருக்கி, இலுப் எண்ணெயில் ஏழுதடவை சாய்த்துச் சுத்தியான பின்னர் நாயுரு சமூலமும் நிழலுலர்த்திக் கரித்த சாம்பலை நீரில் கலக்கித் தெளிவிறு துக் காய்ச்சி யுப்பெடுத்து, பூவரசன் கட்டையில் தொடை பிரமாண கனதியும், மூன்றுமுழநீளமுமுள்ள துண்டின்மத்தியில் மேற்படி மரு துக் கேதுவாகத் துவாரமிட்டு அதில் மேற்படி உப்பைப்பரத்தி அத மேல் அந்த ஈயத்தை வைத்து அதன்மேலும் மேற்படி உப்பை பொதிந்து அத்துவாரத்தைக் கெட்டியாக மூடியக்கட்டை முழுதி

கும் ஏழு சீலமண் செய்து வெயிலில் நன்றாய்க் காய்ந்தபின்னர், கெஜக் குழி தோண்டி அதில் ஐம்பதெருவைப் பொடித்தடுக்கி அதன்பேரில் அரைச்சாக்கு புளியம்பராளியைப் பரத்தி அதன்மேல் மேற்படி கட்டையின் துளைத்த வாய் மேற்புற மிருக்கவைத்து அதன்மேல் அரைச்சாக்கு, புளியம் பராணியைப் பரப்பி அதன்மேல் ஐம்பதெருவைப் பரப்பிப் புடமிட்டெடுக்க, உருகிக் கட்டியாயிருக்கும். பின்பு, மேற்படிக் கட்டையைப்போல் மறு கட்டை துளைத்து, அத்துளையில், வேம்படம் பட்டைத் தூளைத் தூவி அதன்மேல் மேற்படி யுப்பைப் பரத்தி அதன்மேல் வேம்படம்பட்டைத் தூளைத்தூவி முன்போல், துவாரத்தை அடைத்துச் சீலமண் செய்து கெஜபுட மிட்டெடுக்கப் பாதி நீற்றும் பாதி நீறாமலுமிருக்கும். நீற்றுபோனதை வைத்துக்கொண்டு, நீறாத்ததை முன்போல் மூன்றாவது புடமிட்டெடுத்தால் முழுதும் நீறிப் பஸ்பமாயிருக்கும். பசு வெண்ணெயில் இரண்டரிசி இடை, காலை, மாலை கொடுக்கத் தீரும் வியாதிகள்:—மேகப் பிடிப்பு, மேகப் பத்து மேகத்தடிப்புக ளியாவும் பறந்து, இரத்த புஷ்டியுண்டாகித் தாதைக் கட்டும். ஆவின் நெய், பால் மோர் தயிர், அதிகமாய் பரிமாறல்வேண்டும். புளி, புகையிலை, கரப்பன் பதார்த்தங்களை நீக்கி அவபத்தியமாயிருக்கவேண்டும்.

நான்காவது பசுல்.

மற்றொரு வெள்ளீயப் பஸ்பம்.

வெள்ளீயத்தையுருக்கி அதில் ஐந்தாறு அரிசித்திப்பிலி போட்டு வறுக்கச் சாம்பலாகும். அந்தச் சாம்பலிடைக்கு நற்பகளஞ் சேர்த்து அரைத்து வில்லை செய்துலர்த்தி, ஓட்டில் வைத்து ஓடு மூடிச் சீலமண் செய்து கெஜபுடமிடப் பற்பமாகும்.

ஐந்தாவது பசுல்.

மேகத்திற்கு மற்றொருவித லிங்கப் பற்பம்.

சுத்தி செய்தவங்கம் பலம் ஒன்று இலேசாகத் தகடாக்கிச் சுருட்டி, அறளி வேர் அரைத்துக் குகைசெய்து அதனுள் மேற்படி வங்கத்தை வைத்து மூடிக் கெஜபுடமிடப் பற்பமாகும்.

மேகரோகத்துக்கு வெண்ணெயிற் கொடுக்கத் தீரும். வெள்வங்கம்.—வெள்ளைப் பூவுள்ள அறனிவேரில் இதுபோற் பற்பமாகும்.

ஆறாவது பசுல்.

காரீயப் பற்பம்.

தேள்கையுள்ள காரீயத்தை இலுப்பை எண்ணெயில் ஏழுதரஞ் சுத்தி செய்த பின், ஈசல் இறகுபோல் தட்டி நறுக்கிப் பொடித்து, அதனிடைக்கு, உயர்த்தியான கோடப்பச்சைக் கல்வத்திற் கொடிவேலிச் சாற்றினால் ஒரு சாமமாட்டி வில்லை தட்டி புலர்த்தி, ஓட்டில் வைத்து ஓடு மூடி, ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஏழுபத்து எருவில் முக்கால் முழம் புடமிட்டு எடுக்கவும். இவ்வாறு, மேற்படி கல்லுச் சேராமல், அதன் சாற்றிலரைத்து முன்போல் இரண்டு புடமிடவும். ஆக இந்த மூன்று புடமுமுடிந்தால் பஸ்பமாகும். அதன் பக்குவமும் குணமும் வெள்வங்கத்தைப் போலாம். இலேசான குஷ்டரோகத்தைப் போக்கும்.

ஏழாவது பசுல்.

மற்றொரு வங்கப் பற்பம்.

வங்கம் விராகனிடை (8) இரசம் விராகனிடை (6) அண்ட சுன்னம் விராகனிடை (14) வங்கத்தைச் சுத்தி செய்து உருக்கி அதில் இரசத்தைச் சேர்த்துத் தொந்தித்து, அத்துடன் அண்ட சுன்னத்தையுங் கல்வத்திலிட்டு அரைத்து வில்லை தட்டி புலர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடிச் சீலைமண் செய்து கெஜபுடமிடப் பற்பமாகும். வெண்ணெய், நெய், இவைகளில் இரண்டரிசி இடை கொடுக்கவும். அண்ட சுன்னம் என்றதின் விபரம்:—குஞ்சு வெளியான முட்டைத்தோட்டை மேனிச் சாற்றில் மூன்றுநா ளூறவைத்து, அதன் சவ்வு நீக்கி, எலுமிச்சம்பழச் சாற்றிலாட்டி வில்லை தட்டிபுலர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடிச் சீலைமண் செய்து வன்னிப் புடமிடச் சுன்னமாகும். இந்தச் சுன்னத்துக்குப் பகரமாகத் தேசிப்பழச் சாறிட்டரைக்கலாம்.

எட்டாவது பசுல்.

தாம்பூரப் பற்பம்.

நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனிடை, 2. செவ்வீரம் விராகனிடை, 1 இவைகளைக் கல்வத்திற் பழச்சாற்றினாலாட்டியதனால், "துட்டுக்குக் கவசஞ்செய்துலர்த்தி, அயில் சிட்டியில் வைத்துமேல் மூடிச்சந்துக்கு ஏழுசீலைமண் செய்துலர்த்தி மூன்றுக்கடகம் எருவில் குழிப்புடமிடப்பற்பமாகும்." அனுப்பானமும், வியாதியு மறிந்துகொடுத்தல் வேண்டும்.

ஒன்பதாவது பசுல்.

மற்றொருமுறை.

குருக்குச்செடிப் பாலில் " துட்டை " ஏழுதரங் "காய்ச் சித்" துவைத்தெடுக்கச் சுத்தியாம். அப்படிச்சுத்தி செய்த " துட்டை ", செங்கற்றுழைக்குள் வைத்துக் கெஜபுடமிடவும். இன்னும், துத்தியிலையை அரைத்து, துட்டுக்குக் கவசஞ்செய்து சீலைமண்செய்து ஏழுதடவைக்காடைப்புடமிட்டெடுக்கச்சுத்தியாகும், பின்னர் ஒருபங்குக்கெந்தகம் நான்குபங்கு பூவரசிலையைச் சேர்த்தரைத்து, மேற்படி துட்டுக்குக்கவசஞ்செய்து சீலைமண்செய்துலர்த்தித் தட்டான் ஊதுகிற உலைச்சட்டியிற் புளியம்பராணியைப் பரத்தி அதன்மேல், எரு அடுக்கி துட்டைவைத்து அதன்மேல் எரு அடுக்கி அதன்மேல் மேற்படி பராணியைப்போட்டு ஊதி, வீரப்பற்பமாகும்.

பத்தாவது பசுல்.

மற்றொருமுறை.

ஏழுதடவை பழுக்கக்காய்ச்சித் திருகுகள்ளிப்பாலில் துவைத்தெடுக்கச்சுத்தியான " துட்டில் " தாளகத்தை, உமிழ் நீரினரைத்து எள்ளின் கனத்துக்குப்பூசி, வேளை இலையை அரைத்துக் கவசஞ்செய்துசீலைமண் செய்துலர்த்திக் கெஜபுடமிடப் பற்பமாம். இவ்விதம், வெள்ளி, செம்பு இரண்டும் மேற்படிபாலிற் சுத்திசெய்யாமல் நீறும்.

மேற்சுட்டிய தாளகப்பூச்சு; தாம்பூரம் நீற்கும் முறையடங்கலிலும் பாவிப்பதால் வெகுலெகுவில் நீறும்.

பதினொன்றாவது பசுல்.

மற்றொருமுறை.

பழய செம்புக்காசை "துட்டை" பழுக்கக்காய்ச்சி; வெள்ளை எருக்கலைப்பால், கையாந்தகரைச்சாறு. ஒரு ரூபாயிடைச் சங்குப் பாஷாணத்தை அரைத்துக் கலக்கிய நீர் இவைகளில் ஒவ்வொன்றிலும் ஏழுதரந்துவைத்துச் சுத்தியாகியபின், புதுவோட்டில் வெள்ளை எருக்கலைப்பாலைத் தடவிமேற்படி "துட்டிக்கும்பூசி அவ்வோட்டில்வைத்து ஓடு மூடிச்சீலை மண் நான்குசெய்து கெஜபுடமிடபற்பமாகும். அரிசி இடை எவ்வகை நோய்க்குங் கொடுக்கலாம்.

பனிரெண்டாம் பசுல்.

"மற்றொருமுறை"

"காசு" துட்டை, இல்லம்பால் நன்னாரிச்சாறு, எருக்கலைப் பால் கரிப்பான் சாறு, கடுக்காய் தூள்போட்ட, கற்றாழைச்சாறுஇவை களிலொவ்வொன்றிலும் இரவு பகல் ஒவ்வொரு நாள் ஊறவைத்துப் பின் தாம்பளப்பூச்சியை உமிழ் நீராலரைத்துக் கவசஞ்செய்து கெஜ புடமிட்டெடுத்து மறுபடியும் அப்பூச்சியை அரைத்துக் கவசஞ்செய்து முன்போல் மூன்றுபுடமிட்டப் பற்பமாகும்.

பதிமூன்றாவது பசுல்.

இதுவுமது.

ஒரு ரூபாயிடை செம்பைச்சிறிய தகடாக அடித்து, கடுக்காய்த் தூள், நெல்லிவற்றல் தூள் வகைக்குப்படி, ஹு. எடுத்து ஒருபடி தண்ணீரிற் கலக்கி அதில் தகட்டை மூன்றுநாளூற வைத்தெடுத்து (60)தடவைகாய்ச்சி மேற்படி நீரில் துவைத்து, பின், மஞ்சள் விருகஞ்செடி சமூலமுமெடுத்து வேரைக்களைந்து அரைத்து அரைச்சேர் 12 ரூபாயிடை அத்தகட்டுக்குக் கீழ் மேலும் வைத்து, ஒருசட்டியிற் புளியம் சாம்பலிட்டு அரைத்த இலையிற் பாக்கியைக் கவசஞ்செய்து நடுவில் வைத்துமேல் மூடிச்சீலைமண் செய்து கெஜபுடமிடப் பற்பமாகும்.

அரிசி இடை நெய்யில் 7. அல்லது 11 நாள் கொள்ள குஷ்டம், மேகம், தீரும். பத்தியம் முக்கியம் மேற்படி தழையை அரைத்துக் கவசஞ்செய்து மூடிச்சீலைமண் செய்து பாக்கிச்செடி சமூலமுஞ் சட்டிக்குக் கீழ்; மேலும் வைத்துப்புடமிடல் நலம்.

பதினான்காவது பசுல்.

மேகவாய்வுக்கு வெள்ளிப்பற்பம்.

வெள்ளியை, அரைரூபா யகலத்திற் றகடடித்து, தாளகம் விராகனிடை ஒன்றை உமிழ் நீர் விட்டுக்குழைத்துஅதிற் பூசி "காக்காஉடை’ என்ற பொத்தஉடைமரத்தின் இலை, அல்லது வேளை இலையை அரைத்துக் கவசஞ்செய்து மூன்றுசீலைமண் செய்துலர்த்திக்கொக்குப்புடமிடவும் இவ்வகையாய் மருந்து கவசங்கள் செய்து மற்றொருமுறை கவுதாரிப்புடமிட்டு,மறுத்துமவ்வாறேகாடைப்புடமிடவும். ஆகமூன்று புடத்திற் பற்பமாம் பால், வெண்ணெய், நெய் இவைகளிலொன்றில் அரிசி இடைகொடுக்க மேக நோய்களியாவுந் தீரும்.

பதினைந்தாவது பசுல்.

மூலக்கிருணிக்குத் தங்கப்பற்பம்.

தங்கத்தைத் தகடடித்து வெள்ளை மிளகாயிலையை அரைத்து அதில்அங்கிபூட்டிச்சீலைமண் செய்துலர்த்திக்கோழிப்புடமிடப்பற்பமாகும். பால், வெண்ணெய் நெய், இதிலொன்றில் அரிசி இடைகொடுக்க வயிற்றுளைவு மூலக்கிருணிகள் தீரும்.

பதினாறாவது பசுல்.

மற்றொருமுறை.

அராவிய வெள்ளித்தாளை குன்றிமுத்துஇலைச்சாற்றிலாட்டி வில்லை தட்டிபுலர்த்தி அதன் சக்கையிலாவது ஓட்டிலாவது மேற்படி வில்லைக்குக் கவசஞ்செய்து சீலைமண் செய்துகோழிப் புடமிடப் பற்பமாகும். கருப்புக்கட்டியிற் அரிசிஇடை கொடுக்க அந்நோய்கள் தீரும்.

* * *

பதினேழாம் பசுல்.

மேகம்வாதம் இவைகளுக்கு கற்பூரசலாசத்துப் பற்பம்.

(*)

இரண்டு பலம் சலாசத்தை, வழுக்கைபிடியாத இளநீரில் நாலுசாமம் ஊறவைத்து எடுத்துப்பட்டுத் துணியிற் பொதிந்து ஆவாரைக்கொழுந்து. வேப்பங்கொழுந்து இவைகளைச் சமமாயரைத்து அங்கி பூட்டியுலர்த்தி, சீலைமண்செய்யாமல் எழுபது எருவிற்புடமிடவும். பற்பமாம்.

தேசிக்காய் (20) இஞ்சி பலம் ($1\frac{1}{2}$) சீரகம் பலம் (1) சருக்கரை பலம் ($\frac{1}{2}$) இவைகளில் மேற்படி 20 பழச்சாறுடன் மேற்படி இஞ்சிச்சாற்றைச்சேர்த்து அதில் மேற்படி சீரகத்தையிட்டு வெயிலில் வைத்துலர்த்திப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்ததூளில் மேற்படிசருக்கரை, தேன் சேர்த்துக்குழைத்துச் சுண்டைக்காயளவுஉண்டைசெய்துஅதில் மேற்படி பற்பத்தில் அரிசி இடை வைத்து அந்தி, சந்தி, கொள்ள, மேகம், கண்ணெரிவு, கபால விடி, உச்சி காந்தல், கெண்டை வாதம், குதிவாதம், குறுக்கு கைகால் உளைத்தலியாவுந் தீரும். பத்தியமாவசியகம்.

* * *

பதினெட்டாவது பசுல்.

மேற்சுட்டிய ரோகிகளுக்கு மற்றொரு பற்பம்.

மேற்படி கட்டியைக் கற்றாழைக்குள்வைத்து அல்லது கீழ் காய்நெல்லிச்சாற்றைச் சன்னிக்கப்பூசி முளப்புடமிடப் பற்பமாகும்.

* * *

பத்தொன்பதாவது பசுல்.

மூலக்கிருணிக்கு ஆமையோட்டுப் பற்பம்.

(:)

கரையில் வசிக்கும் ஆமையோட்டைப் பொடித்துத் தூட்செய்து மேனி இலையை அரைத்ததற்குள் வைத்துக்கெஜபுடமிடப் பற்பமாம்.

கருப்புக்கட்டியில் அரிசிஇடை கொடுக்க, குன்மம் மூலக்கிருணிகள் போம்.

* * *

இருபதாவது பசுல்,

உட்டண ரோகிகளுக்கு, பகளப்பற்பம்.

(:)

பகளத்தை; பழச்சாற்றில் இரண்டு சாமம் ஊறவைத்துக் கற்றாழைக்குள் வைத்து ஏழுசீலைமண் செய்து கெஜபுடமிடப் பற்பமாம் வெண்ணெய், பாலில்; சுண்டைக்காயளவு காலை மாலை கொள்ள உட்டணம் நீர்க்கடுப்பு இவைகள் பறக்கும்.

* * *

இருபத்தொன்றுவது பசுல்.

இளைப்பு மேகமாதியவைகட்கு மற்றொரு பற்பம்.

கற்கண்டு பலம் இரண்டைப்பொடித்து அதிற்பாதியை ஒருமண்சிட்டியில்வைத்துஅதன்மேல்தேள்வையுள்ள பகளத்தைவைத்துஅதன்மேல் பாதிக்கற்கண்டுப்பொடியைத் தாவிமூடிக்சீலை மண்செய்துமுளப்புடமிடப் பற்பமாகும். மேகம் இளைப்பு இவைகட்குக் கொடுக்க பறக்கும்.

(:)

இருபத்திரண்டாவது பசுல்.

பலவிதநோய்களுக்கு மற்றொரு முறை.

பகளத்தைப் பழச்சாற்றில் மூன்று நாள் மொசுமுசுக்கைச் சாற்றில்மூன்றுநாள்ஊறவைத்தெடுத்து ஓட்டில்வைத்துஅதன்கீழு மேலும் அம் மொசுமுசுக்கை இலையை அரைத்துவைத்து ஓடு மூடிச்சீலைமண் செய்து கெஜபுட மிடப்பற்பமாகும். வாய்வு, மேகம், மூத்திரக் கிரிசனம் நெஞ்செரிவு, கண்ணெரிவு யாவுமோடும்.

இருபத்திமூன்றாவது பசுல்.

பல வியாதிகட்கு “மான் கொம்புப் பற்பம்.

மானின் கொம்பில்; சுண்ணாம்புச் சீலை மூன்று செய்துலர்த்திக் கெஜபுட மிடப் பற்பமாம் தருக்கிருந்தால் ஆவின் பாலிலரைத்து வில்லைதட்டியுலர்த்தி ஓட்டில்வைத்து ஓடு மூடிச் சீலைமண்செய்து கெஜபுட மிடப்பற்பமாகும், பகளப் பற்பத்தை யுபயோகிப்பதுபோல வேயுபயோகித்தல் வேண்டும். நோய்களு மதற்குப்போலவே அடங்கும்.

இருபத்திநான்காவது பசுல்.

குறித்த நோய்களுக்கு மற்றொருமுறை.

மான் கொம்பைச் சீவி அகத்திச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்தெடுத்து, அதற்கு மேற்படி இலையை அரைத்துக் கவசஞ்செய்து சீலைமண்செய்து முளப்புட மிடப்பற்பமாகும். மேற்கட்டிய முறைப்படி யுபயோகித்தல் வேண்டும்.

இருபத்தைந்தாவது பசுல்.

பன்னோய்களுக்கும் லிங்கப்பற்பம்.

உலாந்தாலிங்கம் பலம் ஒன்றுக்கு அரைப்படிநத்தைச்சூரிச்சாறு சுருக்குக் கொடுத்துப் பின்னர் மேற்படி சக்கையி லொரு பிடி மிளகா யொரு பிடி யிவை யிரண்டையும் அச்சாறு விட்டரைத்து மேற்படி கட்டிக்குக் கவசஞ் செய்து ஏழுசீலை மண் செய்து முளப்புடமிடப்பற்பமாகும். பாலில் பணவிடை கொடுக்க வாதம் வாய்வு, சன்னி, ஜுரம், விஷபேதி, கிரந்தி பரங்கியாவுந் தீரும். அவபத்தியம்.

இருபத்தாறாவது பசுல்.

மேற்படி நோய்கட்கு மற்றொரு முறை.

லிங்கம் பலம் ஒன்றைக்கற்பூரவல்லி, அதாவது;உப்புவள்ளி, உப்புலிவள்ளி; என்று பெயருள்ள இலைச்சாற்றி லொரு சாமமரைத்து வில்லைதட்டி, நாலுபடியரிசி, வேகக் கூடிய இரண்டு சட்டியில் நான்கு தரம் மேற்படி இலைச்சாற்றைத் தடவியுலர்த்திய பின்னர் மேற்படி வில்லையை வைத்து மூடிக்கெட்டியாகச் சீலைமண்செய்து மிட்டாய்கள்செய்யும், பெரிய அடுப்பில்வைத்துநான்குசாமம் பூருவாகவெரித்து ஆறியெடுக்க மேலுங் கீழும்பற்பமாயிருக்கும். அதை வெவ்வேறாக எடுத்து, மேற்சட்டியிலிருந்த பற்பத்தில் அரிசி இடை, குஷ்டம் இருமல். மேகம்யாவுக்குங் கொடுக்கலாம். கீழ்ச்சட்டியிலிருந்த பற்பத்தில் அரிசியிடை, காய்ச்சல் பிறமேகம். சூலைக்கட்டு, வாய்வு மூத்திரக்கட்டு யாவுக்குங் கொடுக்கத் தீரும்.

பத்தியமாவசியகமாம்.

இருபத்தேழாவது பசுல்.

துருசுப்பற்பம்.

துருசுபல மொன்றுக்கு பருப்பமான நாக்களம் பூச்சி பலம் ஒன்றைக் கவசஞ்செய்து சுட்ட மண்குகையுள் வைத்துச் சில் மூடிப் பெலமாகச் சீலைமண்செய்துலர்த்தி ஒரு முளக்குழிபறித்து அதுநிரம்ப எரு அடுக்கி அதன்மேல் மேற்படிக் குகையைவைத்து அதன்மேல் ஒரு முளவுயரம் எரு அடுக்கிப் புடமிடப்பற்பமாகும். இன்னும் அண்டச்சுண்ணம் வெடியுப்புச் சுண்ணம், துருசுச்சுண்ணம் வகைக்கு விராகனிடை ஒன்றெடுத்து உமிழ் நீராலாட்டி வில்லை செய்துலர்த்தி, ஒரு சட்டியில் அரைப்படி, கற்சுண்ணாம்பையிட்டு அதன்மேல் மேற்படி வில்லையைவைத்து ஒருசாமம் எரிக்க குருவாகும். இந்தக் குருவில் விராகனிடைஒன்றை, பத்துவிராகனிடை வெள்ளைப்பாஷாணத்துடன் சேர்த்து வாய் நீராலரைத்துக் குகையிலுருக்க அது உருகிக் கண்விட்டாடும் இவ்விதம் சரக்கடங்கலையு முருக்க உருகிக் கட்டிப்போம்.

இருபத்தெட்டாவது பசுல்.

மற்றொருமுறை.

அன்னபேதியைப் பழச்சாற்றி லரைத்து அருசக் கவசஞ்செய்து சீலைமண் செய்து கோழிப் புடமிடப் பஸ்பமாகும். வாந்தியெடுக்க நாடியவனுக்குத் தண்ணீரில் பணவிடை கொடுக்க வாந்தியாம்.

இருபத்தொன்பதாவது பசுல்.

சூதகத்துக்குப் பஸ்பம்.

வெடியுப்பு, பூரம், சூடம்வகைக்கு விராகனிடைநான்கு. வெள்ளை யெருக்கலைப் பால் அல்லது கள்ளிப்பால் விட்டாட்டி வில்லைசெய்துலர்த்தி சீலைமண் செய்துலர்த்தி ஒரு சாணளவு புடமிடப் பற்பமாகும். பணவிடை, கருப்புக் கட்டியில் காலை மாலை மூன்றுநாள் கொடுக்கச் சூதகவாய்வு- சூதகத்திரட்டு யாவும் பறக்கும்.

முப்பதாவது பசுல்.

மூலம், கிருணி, வகைகட்டு, கிஷ்டண அபரக்குப் பற்பம்.

நெல்லில் வைத்து அவித்துச் சுத்தியான அபரக்கில் தேள்வையானைக் கொடிக்கால் சிகப்புக் கத்திரிக்காயைப் பிளந்துள்ளில் வைத்துக் கெட்டியாகச் சீலைமண் செய்துலர்த்தி, ஒன்றரை முளப்புடமிடவும், எடுத்து முன்போல் மறுபுடமிட்டெடுத்து, பின்பு வெள்ளைக் கத்திரிக்காயில் முன்போல் மூன்றுவது புடமிடப்பற்பமாகும்.

தேன், நெய், வெண்ணெயில் அரிசி இடைகொடுக்க நீரிழிவுமூலம் யாவுந் தீர்ந்து, தாதுபுஷ்டி யுண்டாகும்.

முப்பத்தொன்றுவது பசுல்.

தந்த நோய்க்கு, கன்னுர், நீற்கு முறை.

கல்நார், பலம்பத்தைப், பத்து தேசிக்காய்ச் சாற்றில் மூழ்கவிட்டு வைத்து, எடுத்து முயல் இரத்தம் பல நான்கு விட்டரைக்க வில்லை

தட்டி நிழலுலர்த்தி. இருமுறை முளப்புடமிட நீறும். பல்நோய்களைக் கண்டித்து, பல்லை இறுகச்செய்து புழுக்களைக் கொன்று அரிப்பை யடக்கும்,

முப்பத்திரண்டாவது பசுல்.

பல்நோய்கட்கு மற்றொருமுறை.

கல்நார், இந்துப்பு இரண்டு மொன்றாகச்சேர்த்து முள்ளுள்ள இலவமரத்தின் பட்டையை அரைத்துக் கவசஞ்செய்து சீலைமண்செய் துலர்த்தி கெஜபுடமிடப்பற்பமாகும், ஆனால் எருக்கலைவேர்ப்பட்டைக் கவசத்திலு நீறும்,

முப்பத்திமூன்றுவது பசுல்.

கெந்தகப் பற்பம்.

கால்வீசை, மருதம்பட்டைச் சாம்பலை அகன்ற வோர்சட்டியி லிட்டு அதன்மேற்கெந்தகம்பலம் ஒன்றைப்பரப்பி அதன்மேல் மேற்படி சாம்பலையிட்டு மேல்மூடிச் சந்துக்கு ஏழுசீலைமண்செய்து அடுப்பேற்றி ஒருமாதிரி விறகினாலே எரித்து மேற்சட்டியின்மேற், கைபொறுக்காத சூடுண்டானவுடன் எரிப்பை நிறுத்தி ஆறி எடுக்கவே உருகிக்கட்டிப் போயிருக்கும் அக்கட்டிக்கு மேனி இலையை அரைத்து அங்கிபூட்டி ஏழுசீலைமண்செய் துலர்த்திமுளப்புடமிடுகப்பற்பமாகும். தேன்வெண்ணெய் நெய். லேகியவகைகளில் அரிசி இடை வியாதியறிந்து கொடுக்கவே காசம்: இளைப்பு, சூடு. வெட்டை, நீர்க்கடுப்பு ஆதிய ரோகங்கள் தீரும் பத்தியம்:—புகையிலை; புளி, காரப்பன் பதார்த்தங்களுடன் அவபத்தியம்.

முப்பத்திநான்காவது பசுல்.

தாளகப்பற்பம்.

மேற்கூறிய முறையில் தாளகமும்கட்டுப்படும். அதனிலையாலே பற்பமுமாகும். மேற்சொல்லிய சாம்பலால் கட்டப்பட்ட தாளகக்கட்

டியைமொசு முசுக்கை கவசத்தில் முன்போற் புடமிடப்பற்பமாகும். மேற்கூறிய அனுப்பானத்திலும் மொசுமுசுக்கைலேகியத்திலுங்கொடுக்கவே காசமியாவுந்தீரும்.

முப்பத்தைந்தாவது பசுல்.

மற்றொரு தாளகப்பற்பம்.

ஒருமண்பாத்திரத்தில் சுண்ணாம்பு நீறையிட்டு அதில்தாளகம்பலம் ஒன்றைவைத்து அப்பாத்திரநிறையப்பனைக்கள் கழுதைச் சிறுநீர் மனிதன் சிறுநீர் இவைகளில் ஒன்றை யூற்றி எரித்துக் கொதித்தபின்னர் எடுத்து இவ்வாறு ஏழுதரம் செய்து சுத்தியான, தாளகக்கட்டியை வாழைப்பழத்தொலியிற் பொதிந்து, நூலாற் சுற்றிக்கட்டிப் புளியம்பட்டைச் சாம்பலைத் தேசிக்காயிரசத்திலரைத்து வழித்து மேற்படி தொலிக்குமேல் கவசஞ்செய்து, விரைநீக்கிய காரக்கத்திரிக்காயை மேற்படி கவசத்துக்கு மேற்பொதிந்து நூலால் சுற்றியபின், ஒருபெரும்பூசினிக்காயை நடுவில் துளைத்து அதன் குடலை யுள்ளிலேயே இருக்கும்படிக்கு அழுத்தி அதனுள் மேற்படி மருந்தைவைத்து அறுத்தவாயை மூடிக்கெட்டியான துணியாலே அக்காய்முழுதுஞ் சீலைமண் செய்துலர்த்தி கெஜபுடமிடக்கட்டியாக நீற்றிருக்கும். அதை அனுப்பான மறிந்து கொடுத்தா லவ்வியாதிகள் காற்றைபோற்பறக்கும்.

முப்பத்தாறாவது பசுல்.

காசம் போன்ற வியாதிகட்கு மற்றொருமுறை தாளகப்பற்பம்.

சுண்ணாம்பு நீறுக்குள் ஒருபலம் தாளகக்கட்டியை வைத்துக் கழுதை மூத்திரத்தை அதில்விடுகிறது இவ்வாறு ஏழுதடவை செய்தபின்னர் மறுபடியும் சுண்ணாம்பு நீறுள்வைத்துக்கள்ளின்மண்டியை அதில் ஊற்றி யெரிக்கவும். இவ்வாறு ஏழுதடவை செய்க மேற்படி தாளகம் சுத்தியாகும். அதன்பின் அக்கட்டிக்குத் தைவேளையிலையை அரைத்துக்கவசஞ்செய்து புளியம்பட்டைச்சாம்பலிற் சிறுநீர்விட்டுப் பிசைந்து மேற்படிகவசத்துக்குமேல் தேங்காய் பிரமாணங்கவசஞ்செய்து கறையான்புத்துமண்ணும் சாணியுஞ் சேர்த்தரைத்து ஏழுசீலைமண்செய்து கெஜபுடமிடப்பற்பமாகும்.

முப்பத்தேழாவது பசுல்.

காசத்திற்கு இன்னுமொருமுறை.

சுண்ணாம்பு நீறைக் கள்ளின்மண்டியூற்றிநன்றாகக் குழைத்துத் தேங்காயளவு உருண்டைசெய்து அதனுள் ஒரு பலம் தாளகக்கட்டியை வைத்து முளப்புடமிட்டெடுத்து, அக்கட்டியை மொசுமுசுக்கைச்சாற்றால் நிரப்பி யிருக்கின்ற கலயத்திற் கிளிக்கட்டிக்கொதிக்கவைத்தெடுத்துப்பின், நாயுருவிச்செடியையுலர்த்திப்பொடிசெய்து கள்மண்டியிட்டுக் குழைத்து அல்லது நீர்விட்டுக் குழைத்துச் சிறிய வோர் தேங்காப் பிரமாணம் அக்கட்டிக்கு மேல்கவசஞ்செய்து முளப்பிடமிட்டு ஆறிய பின்னெடுக்கப் பற்பமாகும். அனுப்பான மறிந்துகொடுக்க காசமுதலிய வியாதிகடீரும்.

முப்பத்தெட்டாவது பசுல்.

இருமலுக்கு இன்னுமொரு முறை.

தேள்வையுள்ள தாளகத்தை. ஒற்றைக்கட்டியாகக்கொண்டு அரைப்படி கள்ளைச் சிறுகச்சிறுகச் சுருக்குக்கொடுத்து எடுத்து மனிதன் மண்டையோட்டிற் பழயதைப் பொடித்து அதற்குச் சுண்ணாம்பு நீறுகொண்டு சுருக்குக்கொடுத்து, அத்தாளகமும் அம்மண்டையோடுஞ் சரிநிறையாக வெடுத்துக் குப்பைமேனிச்சாற்றா லாட்டி வில்லை செய்து வெயிலிலுலர்த்திக் கீழும்மேலும் ஓடிட்டுச் சீலைமண்பெலமாகச்செய்து கெஜபுடமிடக்கட்டியாக நீறும் அதைப்பொடித்து அனுப்பானமறிந்துகொடுக்க இருமல் சகலதுந்தீரும்,

முப்பத்தொன்பதாவது பசுல்.

இன்னுமொரு முறை.

தாளகம் பலம் ஒன்று, சுண்ணாம்பு விராகனிடைகால். இரண்டையும் உத்தாமணி யென்ற வேலிப்பருத்திச் சாற்றிலொருஜாமம் அரைத்து, வில்லை வில்லையாகத் தட்டிக்கொக்குப்புடமிடத்தாய் ஐமயுள்ள வெள்ளையாகும். அப்படி இல்லாவிட்டால் மறுதரமுமேற்படி சாற்றிலாட்டிப் புடமிட வெண்மையாகும் வியாதியை அறிந்து அனுப்பானத்திற் கொடுக்கவேவியாதிகடீரும்.

நாற்பதாவது பசுல்.

ஜுரம் வாதமிவைகட்கு இன்னுமொரு முறை.

———()———

பொன்னரிதாரம்பலமொன்றைச் சுத்திசெய்து நல்ல தண்ணீரிற் கழுவி வல்லாரை இலைச்சாற்றிலரைத்துவில்லைதட்டி மேற்படி இலையை அரைத்துக் கவசஞ்செய்து ஒருமண்பாத்திரத்திலிட்டு அதன்கீழும், மேலும்புளியம்பட்டைச்சாம்பலிட்டு அடுப்பேற்றிநான்குசாமமெரித்து ஆறியபின்னெடுத்துஅரிசி இடைகொடுக்க வாய்வுவாதரோகங்கள் தீரும் புளி வாய்வுபதார்த்தங்கணீக்கி நெய்பால் சேர்க்கவும்.

நாற்பத்தொன்றுவது பசுல்.

காசமியாவுக்கும் “செவ்வீரப் பற்பம்.

———)(———

செவ்வீரம்பலம் அரை. அரப்பொடிபலம் ஒன்று. இதுஇரண்டையுங் கருஞ்சிற்றகத்திஇலையால் அரைத்துக் குகைசெய்து அதற்குள் அரைப்பலம் அரப்பொடியை வைத்து அதன்மேல் செவ்வீரத்தை வைத்து அதன்மேல் அரைப்பலம் அரப்பொடியைவைத்து மேற்படி இலையை அரைத்து மேற்படிக்குகைவாயை மூடி மூன்று சீலைமண் செய்து, ஒன்றரைமுளப் புடமிட்டு, ஆறியபின்னெடுக்க மேற்படி மருந்திரண்டும் பஸ்பமாயிருக்கும். வெண்ணெய் நெய்யில் அரிசிஇடை கொடுக்க நவகாசமுந் தீரும். மேலும்; புகைச்சல், பாண்டு, வீக்கம், இரத்தகாசமாதியவைகள் முக்கியந் தீரும்.

———(*)———

நாற்பத்திரண்டாவது பசுல்.

காசம் முற்றுக்கும் வீரப்பற்பம்.

வீரம் பலமொன்றை; இரும்புக்கரண்டியை உலையில்வைத்துப் பழுக்கவூதி, நன்றாய்ப் பழுத்தபின், வெள்ளைக்கடுதாசியைத் தரையில் விரித்து அதன்மேல் மூன்று சிறுகல்லை வைத்து அக்கல்லின்பேரிற் குறடினால் அக்கரண்டியை எடுத்துவைத்து அக்கரண்டியில் மேற்படி வீரத்தைக் குறட்டால் வைத்து, தன்பேரிற் புகைபடாமல் அதிசீக்கிரத்தில், வாயகலமானவோர் மண்பாத்திரத்தினால் மூடி, அம்மண்பாத்திரத்தின் வாய்விளிம்புக்கும் மேற்படிதாளுக்குமிடையிற் புகைவெளி வராமல் சுற்றிலும் மணலைத்தூவைத்து ஆறியபின் திறந்து பார்க்க நீறியபற்பம் தாளிலும் நீறுதவீரம் கரண்டியிலுமிருக்கும். கடுதாசியிலுள்ளதை எடுத்துக்கொண்டு அரைஅரிசியிடை அதற்கனுப்பானமாக லேகியத்திற் கொடுக்க, நவகாசமுந் தீரும். லேகியம்.—மொசுமுசுக்கைச்சாறு படி, $\frac{1}{8}$ மிளகாய்வற்றல் பலம் (1) கருப்புக்கட்டி பலம் (1.) மேற்படி வற்றலை யுலர்த்திப் பொடித்துவடித்து இரும்புக்கரண்டியில் மேற்படி சாறுவிட்டுக் கருப்புக்கட்டியைக் கரைத்துக் காய்ச்சிக் குறுகிய பதத்தில் மேற்படிதூளைப்போட்டுக்கிண்டி மெழுகுபதத்தில் நல்லெண்ணெய் விட்டுக்கிண்டி யிறக்கிச் சுண்டைக்காயளவு தின்னவும். அதற்குப்பத்தியம்; கரப்பன் பதார்த்தம், புளி, புகையிலை அவபத்தியமாம்.

நாற்பத்திமூன்றுவது பசுல்.

காசமுதலிய நோய்களுக்கு “மற்றொருமுறை.”

———(*)———

ஒருசாண் ஆளம் அகலமுள்ள குழிபறித்து அதிற் பூமிமட்டும் எரு அடுக்கி, அதன்மேல் ஒருமுழ வராட்டியை வைத்து அதன்மேல் செவ்வீரம் பலமொன்றைவைத்து அவ்வீரந் தெரியாமல், காசு துட்டை அடுக்கி மறைத்து அதன்மேல் ஒருசாணுயரம் எரு அடுக்கிப் புடமெரித்து ஆறியெடுக்கப் பற்பமாம்,

கடுக்காய், கண்டங்கத்திரி, தூதுவளை இண்டு, வகைகளை அவித்து இறுத்தகியாழத்தில் அரிசியிடை கொடுக்க, காசம், ஈளை, இளைப்பு, பாண்டுகள் தீரும். கருப்புக்கட்டி, ஆவின்வெண்ணெய், தேனில், கொடுக்க, புண்பொடி, கண்டமாலை, விப்புருதிகட்டுகடீரும். கடும் **பத்தியம். “வாய் வேகாது.”**

நாற்பத்திநாலாவது பசுல்.

சீனிக்காரப் பற்பம்.

தேள்வையுள்ள சீனிக்காரத்துக்கு மேலுங்கீழும் போதுமான கடனுரையை வைத்து மருந்துக்குத்தக்க புடமிடக்கட்டும். அதை ஜலத்திற் கரைத்து, ஒரு சட்டியை அடுப்பேற்றி அதிற் சிறுகச் சிறுக அஜ்ஜலத்தையூற்றி எரிக்க, பற்பவுப்பாகும். ஆவின்பால், வெண்ணையிற் பணவிடைகொடுக்க வெட்டை, நீங்கும். முலைப்பாலில் அரிசி இடை சேர்த்து, கண்ணிலிடக் கண்படலம் சதைவளர்த்தி நீங்கும்.

நாற்பத்தைந்தாவது பசுல்.

மற்றொரு சீனிக்காரப் பற்பம்.

ஒருபங்கு சீனிக்காரம் நாலுபங்குவெண்ணெய் சேர்த்தரைத்து வில்லைதட்டி யோட்டில்வைத்து ஓடு மூடி மூன்று சீலைமண்செய்துலர்த்தி முளப்புடமிடப் பற்பமாகும். அரிசி இடை ஆவின்பாலிற் குடிக்கவெட்டைகடீரும் முலைப்பாலில் கண்ணிலிட, கண்படலம் சதைவளர்த்தி மங்கல் நீங்கும்.

இன்னும் ஆடுதின்னாப் பாளையை அரைத்து, சீனிக்காரத்துக்குக் கவசஞ்செய்து சீலைமண்செய்துலர்த்தி எழுவராட்டியிற் புடமிடப்பற்பமாம்.

இன்னும் முட்டையின் வெள்ளைக்கருவை அக்கூட்டிலிட்டு அதில் சீனிக்காரத்தை யிட்டு அதன் தோட்டாலேயே மூடிச் சீலைமண்செய்துலர்த்தி ஐந்தெருவிற் புடமிடப்பற்பமாம். இவ்விருமுறைக்கும் அனுப்பானமும் தீரும் நோய்களும் மேற்கூறியதன்றி, வெள்ளை, வாய்வேக்காடு, நாப்புண் குடல் வயிறு வேக்காடு போன்றவைகட்கு ஆவின்பாலிற் கொடுக்கத்தீரும்.

நாற்பத்தாறுவது பசுல்.

அயப்பற்பம்.

இரும்பை மிகவும் இலேசான தகடாக்கி அதில் வீளிவேர்ப் பட்டையை அரைத்துக் கனமாகப்பூசிக் கெஜபுடமிடப் பற்பமாம் அனுப்பானமும் வியாதியு மறிந்துகொடுக்கத் தீரும்.

நாற்பத்தேழாவது பசுல்.

தாளகப் பற்பம்.

தாளகம், பகளம் வகைக்கு பலமொன்று. இரசம் நாலுகாசிடை இவைகளைப் பொடித்து, ஆட்டுப்பித்து பையினுள் மேற்படி தாளகத்தைப் பொடித்துப் போட்டு அத்துடன் பகளம் இரசமிவைகளைப் போட்டுவைத்து மறுநாளில் அதிலுள்ள நீராலேயே, அரைத்து ஆறு வில்லை செய்துகாயவைத்துச் சீலைமண்செய்து பன்னிருவராட்டியிற் புடமிட்டு, இருமல்களுக்குத் தேனிற் கொடுக்க, அவ்வியாதி தீரும்.

நாற்பத்தெட்டாவது பசுல்.

உரோமப் பற்பம்.

நரை இல்லாச்சிறிய ஆண்பிள்ளைகளின் உரோமத்தைச் சிறுகீரைச் சாற்றில் மைபோலரைத்து வில்லைதட்டி ஓட்டில் வைத்து ஓடு மூடிச் சீலைமண் செய்துலர்த்தி எழுபத்தைந்து எரு அல்லது முளப்புடமிடப் பற்பமாகும். வெண்ணெயில் பணவிடை கொடுக்க, தாது உடைச்சலைக் கேட்கும்.

நாற்பத்தோன்பதாவது பசுல்.

இரசப் பதங்கம்.

வீரம், பூரம், லிங்கம் வகைக்கு விராகனிடை ஒன்றரை சூடம் விராகனிடை முக்கால். வெடியுப்பு, துருசு வகைக்கு விராகனிடை நான்கு. பாற்சங்கு நவச்சாரம் வகைக்கு விராகனிடை அரை சீனிக்காரம் விராகனிடை பத்து. வெங்காரம் விராகனிடை நான்கு. இரசம் விராகனிடை ஆறு. கறியுப்பு விராகனிடை ஒன்று. இவைகளில் சீனி[illegible]

காரம், வெங்காரம், கறியுப்பு, நமச்சாரம் இவைகளைச் சட்டியினுள் வைத்து அதன்மேல் மேற்படி சங்கைப் பொடித்துப் போட்டு அதன் மேற் குழிபறித்து அதனுள் மேற்படி இரசத்தை வைத்து அதன்மேல் மற்றைய சரக்குகளை வைத்து மேற்சட்டி மூடிச் சந்துக்குச் சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி இரண்டு சாமமெரித்தால் மேற்சட்டியிற் பதங்கமாயிருக்கும். எடுத்துச் சிமுளில் வைத்துக்கொண்டு கருப்புக் கட்டியிற் காலை மாலை அரிசி இடை கொடுக்க, கிரந்தி, பறங்கி; சூலை வகைகள் தீரும்.

ஐம்பதாவது பசுல்.

மேகச்சூலை யாவுக்கும் இரசச் சுன்னம்.

—(*)—

பெரும பூசணிக்காய் நடுவிற் சிறு வில்லையாக அறுத்து அதன் குடலையுள்ளில் அழுத்தி மூன்று பலம் இரசத்தைவிட்டு; மேற்படி அறுத்த வில்லையால் மூடி, அவ்வில்லைக்கு மட்டும் முந்திச் சீலை மண் செய்து அதன்பின் காய் முழுதுக்கும் ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கெஜபுடமிடச் சுன்னமாகும். ஆனல் மேற்படி காயை அகலமான வோட்டில் வைத்துப் புடமிடல் வேண்டும். அதில் அரிசி இடை கருப்புக் கட்டியிற் கொடுக்கக் குறித்த வியாதிகள் புண் பொடிகள் தீரும்.

—[*]—

ஐம்பத்தோன்றுவது பசுல்.

இரசப் பற்பம்.

—*—

தேள்வையுள்ள இரசத்தைக் கல்வத்திலிட்டு அதற்குப் போது மாகிய குப்பை முள்ளிக்கீரைச் சாறுவிட்டுத் திரண்டு வெண்ணெயாகு மட்டு மூன்று ஜாமமரைத்து வில்லை தட்டி யுலர்த்திக் கீழும், மேலும் ஓடுவைத்துச் சீலைமண் செய்து முளப்புடமிடப் பற்பமாகும். பொடித்துக் கருப்புக்கட்டி, தேன் வெண்ணெயிற் கொடுக்க கிரந்தி, பறங்கிச் சூலை, ஆருத வெடி சூலைகடீரும். "இன்ஷா அல்லாஹுத் தஆலா"

ஐம்பத்திரண்டாவது பசுல்.

சகல சுரநோய்களுக்கும் பாசனச் சுன்னம்.

—:(*):—

வெள்ளைப் பாசனம், வெள்ளுள்ளி, அண்டத்தோடு வகைக்கு விராகனிடை ஐந்து. இம்மூன்றையும் நன்றாயரைத்து வில்லை தட்டி யுலர்த்திக் கீழும் மேலும் ஓடுவிட்டு மூன்று சீலைமண் செய்து முளப் புடமிடச் சுன்னமாகும். இதை வெற்றிலையிற் கொடுக்க சுரங்கடீரும்.

ஐம்பத்தி மூன்றுவது பசுல்.

சகல வாய்வுக்கும் லிங்கப் பற்பம்.

லிங்கம், இரசகற்பூரம் வகைக்குப் பலம் அரை எடுத்து முலைப் பாலில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்து, யானை நெருஞ்சி சமூலமு மரைத்து அதனுடன் மூன்றுமொந்தை வாழைப்பழச்சுளையைச் சேர்த்துப் பிசைந்து வில்லைதட்டி பீங்கான் பாத்திரத்தில் அப்பிச் சாய்த்து வைக்க அதினின்றுந் தெளிவாக நீரிறங்கும் அந்நீரில் அவ்விரு சரக்கையு மொன்றாய் விட்டரைத்து வில்லை செய்து ஐந்து விராட்டியிற் புடமிடப் பற்பமாகும். அனுபான மறிந்து பணவிடைகொடுக்கச் சகல வாய்வுந் தீரும்.

ஐம்பத்திநான்காவது பசுல்.

வெண் குட்டத்திற்குப் பற்பம்.

—(*)—

தேள்வையுள்ள அபரக்கைக் கல்வத்திலிட்டுப் பால் நண்டை இடித்துப் பிழிந்த சாற்றாலாட்டி வில்லை தட்டி யுலர்த்தி, ஓட்டில் வைத்து ஓடு மூடிச் சீலைமண் செய்து பத்து எருவிற் புடமிடவும். இவ் வாறு மூன்று புடமிடப் பற்பமாகும். அனுப்பான மறிந்துகொடுக்க அவ்வியாதிக டீரும்.

ஐம்பத்தைந்தாவது பசுல்.

நீர்க்கடுப்பாதியவைகட்குப் பொரிகாரப்பற்பம்.

—(*)—

புளியம் பிராணியைக் கீழும்மேலும் வைத்து மத்தியில் தேள்வையான சங்கை வைத்து முளப்புடமிட நீறும். நீற்ற சங்கைத் தண்ணீராற் குழைத்துக் குகை செய்துலர்த்தி அதற்குள்ளே தேள்வையுள்ள பொரிகாரத்தை வைத்துச் சில் மூடிச்சீலை மண் செய்து முளப்புடமிடப் பற்புமாகும். பணவிடை, தேனிற் கொடுக்க நீர்க்கடுப்பு, குத்தல், வலிக டீரும்.

ஐம்பத்தாறாவது டசுல்.

கொடிய வியாதிகட்குப் பதங்கம்.

மிருதார் சிங்கி, கெவுரிபாஷாணம் வீரம், பூரம் லிங்கம்ரசம், வெள்ளைப் பாசாணம், சிறு கண்ணுகம், கொடிவேலி வேர்ப்பட்டை, வகைக்குப் பணம் ஒன்று. செங்கல்மாவை நன்றாகப் பொடி செய்து, ஒருமண் பானையிலிட்டு அதன்பேரில் அரைப்படி உப்பை வைத்து அதன்பேரில் மற்றைய சரக்குகளை வைத்து அதன்பேரில் மறுபடியும் உப்பை வைத்து அதன்பேரில் முன்போல் செங்கல்மாவை, வைத்து மற்றொரு பானையுள்ளில் அரைபாகத்துக்கு நன்றாக வெற்றிலைச்சாற்றைத் தடவித் தேய்த்து அதனால் மேற்படி பானையை மூடிச் சீலைமண் செய்து ஒரு ஜாதி விறகால் அடுப்பேற்றி நான்கு சாமமெரித் திறக்கி ஆறியபின் னெடுக்க மேற்பானையிற் பதங்க மேறியிருக்கும். அதனால் பவுந்திரம், கண்டமாலை, இரத்தகாசம், மூலம், முதல்வன அனேக நோய்கடீரும். ஏழு நாளைக்கு அரிசி இடை கொடுக்கவும், அனுபானம், வெல்லம், பிரண்டைத் துவையல், தூதுவளை இலை இதுகளில் மூன்றரை நாள் கொடுக்கவும். வீக்கம், பாண்டு, கால் கைமுடக்கு. உதிரக்கட்டு, வெட்டைச்சூடு, ஜன்னி புண்பொடி., கிரந்தி; பறங்கி, காய்ச்சல் கட்டி சுரம், கிருணிகளியாவுந் தீரும். அவபத்தியம். இம்முறைகைகண்டது.

ஐம்பத்தேழாவது பசுல்.

வங்கச்சுன்னம்.

பெரிய கோழிக் குருமானை அரைத்து ஒருசட்டியிற் பாதியளவு நிரப்பி அதன் மேல் வங்கக்கட்டியை வைத்து அதன் மேலும் மேற்

படி இலையை அரைத்து அச்சட்டி நிரம்பவிட்டு மேற்சட்டி மூடிச்சந்துக்குச் சீலைமண்செய்து அடுப்பேற்றி நான்கு சாமமெரிக்கப் பற்பமாகும். இவ்விதமிரண்டு வங்கமும் நீறும். அனுப்பானமும் வியாதியுபறிந்துகொடுக்கத் தீரும்.

ஐம்பத்தெட்டாவது பசுல்.

வெடியுப்புச்சுன்னம்.

வெடியுப்பைப்பொடுதலைச் சாற்றால் பிசின்போலரைத் துலர்த்தி அதன் சக்கையை அதற்குக்கீழும் மேலும் வைத்து, ஓட்டில் வைத்து ஓடு மூடிச்சந்துக்கு இரண்டு சீலைமண் செய்து ஒன்றரை முளம் அகல முயரமுள்ள குழிப்புடமிடச் சுன்னமாகும்.

ஐம்பத்தொன்பதாவது பசுல்.

பவுந்திரத்துக்கு மற்றொரு பற்பம்.

ஜாதி லிங்கம் விராகனிடை ஐந்து. பசுவின்பால் அல்லது நவ்வல் பட்டைச்சாற்றில் சுத்திசெய்து, அத்துடன், கெவுரி பாசாணம் விராகனிடை ஐந்து, வெள்ளாட்டுக்கோமியத்திற் சுத்திசெய்து பின்னால், கொள்ளுச் சாற்றிற் சுத்திசெய்து இம்மருந்திரண்டையும் பருத்தியிலைச்சாற்றாலரைத்து வெள்ளைச் சீலையிற்பூசியுலர்த்தி, யோர் சட்டியிலிரண்டுபடி, உப்பிட்டு அதில் மருந்தை வைத்துச் சீலைமண்செய்துஅடுப்பேற்றி இளநெருப்பாய் அறுபது நாழிகை யெரித்துஆறியெடுக்கமேற் சட்டியில் ஒட்டியிருக்கும் பற்பத்தை பணவிடை தேனிற் கொடுத்து மருநாளிரண்டு பணவிடை கொடுக்கவும். இவ்வாறு ஒன்பதுநாள் கொடுத்து அப்பால், நாடோறுமாக வோர்மண்டலங் கொடுக்கவும்.— பத்தியம் கடுமை- பசுவின்பால், நெய் வறுத்தவுப்பு, துவரைப்பருப்பு இவைகளாகும். கண்டமாலைகள், உள்ளுருக்கி என்புருக்கி மேகங்களியாவுந் தீரும்.

அறுபதாவது பசுல்.

குன்மத்துக்குக் கறியுப்புப் பற்பம்.

சந்தங்காய் ஏழிலுள்ளவிரையைப் போக்கியதனுள், உப்பை வைத்து, அதையோர் மண்சிட்டியில், வைத்து அதன் நிரம்ப, எருக்கலைப்பால் ஊற்றி, மேல் மூடிச்சீலைமண் செய்துலர்த்திமுளைப்புடமிடப் பற்பமாகும். கருப்புக்கட்டி, வெண்ணெயிற் கொடுக்கவே. குன்மங்கடரும்.

அறுபத்தோன்றுவது பசுல்.

வயிற்றுவலிக்கு வெடியுப்புச் சுன்னம்.

வெடியுப்பு பலம் ஒன்று. பூவரசன் பழுப்பு பலமிரண்டு. நவச்சாரம் விராகனிடை ஒன்று. இவைகளியாவு மரைத்து வில்லைதட்டி, முளப்புடமிட்டு சுன்னமாகும். இச்சுன்னத்தை வியாதிகட்குக்கொடுப்பதன்றியும், இச்சுன்னத்தைவாழைப்பட்டையிற்பூசி, பீங்கான்பாத்திரத்தில் வைத்து, அப்பாத்திரத்தைப் பனியிற் கொஞ்சம் சாய்மானமாகவைத்தால் ஜெயநீரிறங்கும். தண்ணீரிற்கழுவி வெயிலுலர்த்திச் சுத்திசெய்த வெங்காரத்தை மேற்படி ஜெயநீரில் நன்றாக ஊறவைத்து எடுத்து வெயிலுலர்த்தி. அஜ்ஜெய நீராலேயே அரைத்துக் குகையும தன் மூடியுஞ்செய்து அதிற் பிற்புறத்தால் இரசத்தைவிட்டுச் சீலைமண் செய்துலர்த்திப் புடமிடச்சித்தியாகும். அதில் வெட்டையாகிய இரசத்தை மறுமுறை அவ்வாறு செய்து புடமிட்டால் சித்தியாகும்.

அறுபத்திரண்டாவது பசுல்.

“மூவ்வுப்பு” எனும், வெடியுப்புச்சுன்னம்.

வெடியுப்புச்சேர் ஒன்று, சீனக்காரம், பூநீறுகற்சுண்ணம்பு நீறு, வகைக்குச்சேர் அரை. இவைகளியாவையும், இரண்டுசேர்,சிறுபிள்ளைச் சிறுநீரினால் கரைத்துக்கலக்கித் தெளிவிறுத்துக் காய்ச்சி,உப்பெடுத்து. அவ்வுப்பை, உத்தாமணி அல்லது வெற்றிலை அல்லது கற்பூரவள்ளி இவைகளிலொன்றின் சாற்றில் நான்கு நாளூறவைத்தெடுத்துஇலங்கையிலையை அரைத்து வில்லை செய்து அவ்வில்லையின் மத்திபத்திலடக்கஞ் செய்து “ கவசமாக்கி ” மேலுங்கீழுமோடுவைத்துச் சீலைமண்செய்துலர்த்திக்கெஜபுடமிடச் சுன்னமாகும் இந்தச்சுன்னத்தை,ஆடுஞ்சரக்கு

அறுபத்திநாலுக்கும் வாய் நீராற்குழைத்துக் கவசஞ்செய்து வெந்த குகை யுள்ளடக்கிச் சில் மூடிச் சீலை மண்செய்துலர்த்தி சரக்கினது தகுதிக்கேதுவாக, கெஜம், கொக்கு முளம் கோழி. கவுதாரி, காடை போன்றபுடமிடப்பற்பமாகும்.சுக்கு,மிளகு, சீரகம்,ஆதியகிசாளத்தில், வியாதியினிலமையும் பஸ்பத்தின் குணமுமறிந்து கொடுக்கத்தீரும்.

அறுபத்திமூன்றுவது பசுல்.

வாய்நோய். கயநோயாதியவைகளுக்கு, கற்பூரச் சுன்னம்.

தேள்வையுள்ள கற்பூரத்தை, கற்பூரவள்ளிச்சாற்றால் நாலுநாழிகை அரைத்து, காசுபோல் வில்லைதட்டிக் கொக்குபுடமிடப்பற்பமாகும் வெண்ணெய் தேன், வகைகளான அனுப்பானத்தில் அரிசி இடை கொடுக்க மேற்கூறிய ரோகங்கடரும்.

அறுபத்திநான்காவது பசுல்.

சாம்புருணிப் பதங்கம்.

தேள்வையான பாற்சம்புருணியைப் பொடித்து ஓர் சட்டியிலிட்டு, அதை மூடுதற் களவான மற்றொரு சட்டியினுள் அளவுக்குப் போதுமான வோர் கடுதாசியை வட்டமாய் வெட்டி அதனடுவி லரை ரூபா யகலத்தில் ஓர் துவாரமிட்டு அதை அச்சட்டி யுள்ளில் தொப்பி போல் வளைத்து அதனருகைச் சட்டியுள் விளிம்பிற் பசையினாலொட்டியபின் அச்சட்டிகொண்டு அச்சாம்புராணிச் சட்டியை மூடிமூன்று சீலைமண் செய்துலர்த்தி, மூன்று காலுள்ள அடுப்பேற்றி. அவ்வடுப்புக்குக் கீழே வேப்பெண்ணெய், அல்லது நெய். விளக்கு மூன்றேற்றியெரித்து, மேற்சட்டியிற் கைபொறுக்கக்கூடிய சூடு வந்தவுடன். எரிப்பை நிறுத்திஆறியபின்னர்,திறக்க, மேற்சட்டியின் கடுதாசியிலும் அதனுள்ளிலும் பதங்கமிருக்கும். அதையெடுத்து, முலைப்பால், தேன் வெண்ணெய் வெற்றிலை பாக்குப்போன்ற, அனுப்பானத்தில் வியாதிக்கிணங்கவும் மதிப்பாகவுங் கொடுக்கச் சகல வியாதிகளுந் தீரும். தாதுவிர்த்திக்கும். சிறு குழந்தைகள் மாந்தம் வகைகளுக்கும், மிக்கானுகூலமாயிருக்கும்.

ஆறும்பாபு.

சகலரோகங்களுக்கும், "மாத்திரை"கட்டு, வகைகளைக் கூறல்.

ஒன்றாவது பசுல்.

சாதிலிங்கக்கட்டு.

——[ ]——

சூடம் சாம்புராணி இரண்டு மோரிடையாக வெடுத்துச் சேர்த்துக் கல்வத்தில் வாய் நீர்விட்டுப்பெலமாய் விடாமலரைக்க, மெழுகாகும். அம்மெழுகை எழுருண்டை செய்து ஒன்றுள் தேள்வையான லிங்கத்தை, ஒரேகட்டியாகவைத்து மூடி, அதில் நெருப்பிட்டெரிக்கவும். இவ்வாறு அக்கட்டியை மற்றைய ஆறுருண்டை யுள்ளும்வைத் தெரிக்கக்கட்டும். சகல வியாதிகளுக்கும், தேன், முலைப்பால், கியாழமாதிய வைகளிலுரைத்துக் கொடுக்கத் தீரும்.

இரண்டாவது பசுல்.

மற்றொரு கட்டு.

——( )——

சங்கம் பழச்சாறு படி கால். இதை லிங்கக்கட்டியிற் சுருக்குக் கொடுத்தாலும் அல்லது, மேற்படி இலைச்சாற்றிற் சுருக்குகொடுத்தாலுங் கட்டும்.

மூன்றாவது பசுல்.

மற்றொருவகை.

——[*]——

மேற்கூறிய மூன்றிலொருபாகத்திற் கட்டுப்பட்ட "லிங்கத்திற்கு மேனி இலையை" அரைத்து அங்கிபூட்டி முளப்புடமிட வுயர்ந்த செந்தூரமாகும். இஃது செந்தூரபாகத்தில் முந்திவிட்டது.

நான்காவது பசுல்,

மற்றொருவகை உயர்ந்தகட்டு.

——(*)——

கெந்தகம் பலம் ஒன்று. கரண்டியாலுருகினவுடன் அதில் ஒரு பலம் லிங்கக்கட்டியை விட்டுப் புரட்டிப்புரட்டிக்கொடுத்து, பின், காற்படி கழுதைப்பாலை அக்கட்டிக்குச்சுருக்குக் கொடுக்கக்கட்டும்ஜன்னி வகையாவுக்கும்,கழுதைப்பால் அல்லதுமுலைப்பாலிற்கொடுக்கத்தீரும், இன்னும் "உத்தாமணிச்சாற்றிற்" சுருக்கு கொடுத்தாலுங் கட்டும்.

——(*)——

ஐந்தாவது பசுல்.

சகல வியாதிகட்கும், மற்றொருவகை லிங்கக்கட்டு.

அரைப்படி விருகங்கிழங்குத் தூள், பூவரசங் காய்த்தூள் வாகை விரைத் தூள் வகைக்குப் படி ஒன்று. வெவ்வேறு யிடித்து வைத்துக்கொண்டு பொன்னரி தாரம் வெங்காரம் சீனாக்காரம், நெல்லிக்காய்க் கெந்தகம் வகைக்குப் பலம் ஒன்று. இந்நான்கு வகையு மொன்றாய்ப்பொடித்து வைத்துக்கொண்டு,பின்னர் தூரில் சிறிய துவாரமுள்ள மண்தோண்டியில் மேற்படி பூவரசன் தூள் படி (வ) பரத்தி அதன்மேல்வாகைப் பொடிபடி (வ) பரத்தி அதன் மேல்பூவரசன் பொடிபடி (வ) பரத்தி அதன்மேல் வாகைப்பொடிபடி (வ) பரத்தி முடிந்த பின்னர் மேற்படி விருகங் கிழங்குத்-தூள்படி (இ) யும் வைத்து அதற்குமேல், குறித்த நான்கு மருந்தின் தூட்களையும் பரத்தி மேல்மூடிச் சீலைமண்செய்துக் குழித்தைலமிறக்கி அதை ஒரு ரூபாயிடை "லிங்கக்கட்டிக்கு" பன்னிரண்டு சாமம் சுருக்குக்கொடுக்கக் கட்டும். தேன் முலைப்பால், கியாளம்போன்றவைகளில், ஒன்று, "இரண்டு" அரிசிஇடையளவு உரைத்துக் கொடுக்கவே, ஜன்னி, ஜுரம் கபரோகம், முகவாதம். பக்கவாதம் போன்ற வியாதிகடீரும், வெற்றிலைச் சாற்றிலுட்கொள்ளில் தாதுவிர்த்தியாகும்.

——[-]——

ஆறாவது பசுல்.

ஜன்னி, ஜுரம், முதல்வனவைகட்கு லிங்கக் கட்டு.

சூரத்திக்கற்பூரம் நெல்லிக்காய்க் கெந்தகம், வெள்ளைக் குங்குலியம் பால்சாம்புறாணி தேன் வகைக்கு "துலா" ஒன்று. இவைகளியாவையுங் கல்வத்திலிட்டு மெழுகு பதத்திலரைத்து, ஒரு ரூபா இடை நிறையுள்ள லிங்கக் கட்டிக்கு அங்கிசெய்து மண்சாணக்கில்வைத்து, உலையடுப்பிலேற்றித் துருத்தியாலூதவும். மேற்படி அங்கியில் நெருப்புப் பற்றி அவ்வங்கியெரிந்தமர்ந்த பின்னர், அனைவநீக்கி, வைத்துக்கொண்டு அனுப்பானமறிந்து கொடுக்கச்சன்னி சுரம் கபம், குளிர், போன்ற ரோகங்கடீரும். இவ்வண்ணம் இரச கற்பூரத்தையுங் கட்டலாம். அதை வயிற்றுநோய். பொருமல்,உப்புசம்போன்றவைகளுக்குக் கொடுக்கலாம்.

ஏழாவது பசுல்.

கபம், காசம், வகையான வியாதிகளுக்குக் கைவல்லியமான" தாளகக்கட்டு.

இது ஐந்தாவது பாபு கெந்தகப்பற்பத்தின் பசுலிற்காண்கவும்.

எட்டாவது பசுல்.

வயிற்றுக்கட்டை இளக்கமாக்கவும், மற்றைய வியாதிகளுக்கும் பூரக்கட்டு,

——[]——

மேற்கூறிய பாகப்படியும் பூரங்கட்டும், இன்னும்; வில்வப்பழம்; ஏழில் ஒன்றை இரண்டாகப்பிளந்து அதன்மத்தியில், வைக்கக்கூடிய பூரக்கட்டிக்குப் போதுமான பள்ளம் பதித்து அதில்வைத்தழுத்தி மற்றொருபாதியால் நன்றாகமூடி, விழாமலிருக்கச் சுற்றிலும் முட்கொண்டு குத்திக்காடைப்புடமிடவும் பிறகு பறித்து எடுத்து அப்பூரக்கட்டியை மேற்கூறியவண்ணம் மற்ற ஆறுகாயிலும் ஒன்றின்பின்னொன்றாகப்புடமிடக்கட்டும். அனுப்பானமறிந்து கொடுக்க மேற்கூறிய நோய்கள் பறக்கும்.

ஒன்பதாவது பசுல்.

வெடியுப்புக்கட்டு.

——(*)——

செம்மறி ஆட்டின் அலகுப்பல்லைச்சுட்டுக் கரித்துப்பொடியாக்கி, இரண்டு வோட்டினுள் மேனிச்சாற்றை நன்றாகப்பூசி அவ்வோட்டின் நடுவிற்றோள்ளையுள்ள வெடியுப்பைவைத்து அவ்வுப்புக்குக் கீழுமேலும் மேற்படிபற்பொடியை வைத்து மூடிச் சீலைமண்செய்துலர்த்திக் கோழிப்புடமிடக்கட்டும். வயிற்றுவலி கட்கு நன்று.

பத்தாவது பசுல்.

வயிற்று வலிக்குக்கறியுப்புக்கட்டு.

——(:)——

அரைத்த மணலாற் செய்தகுகையைநெருப்பிற் சுட்டெரித்து அதனுள் மேனிச்சாற்றை விட்டு அதன்மேற் கறியுப்பையிட்டு அதன்மேல் உத்தாமணிச்சாறுவிட்டுச் சில்மூடிக் கரிநெருப்பில் வைத்தூதினால் இவ்வுப்புருகும். பின்னரதையெடுத்து மறுவோட்டிற்சாய்த்தால் கட்டியாகும். வயிற்று வலி குன்மம், வாய்வு. போன்ற நோய் கட்குத்தண்ணீரினுரைத்துக் கொடுக்கவேதீரும்.

——(*)——

பதினொன்றாவது பசுல்.

கறியுப்புக் கட்டு.

——(·)——

தெள்ளையான கறியுப்பைமனிதன்சிறுநீரிற் கரைத்துத் தெளிவிறுத்துவற்ற காய்ச்சியுப்பெடுத்துக் கரிப்பான் சாற்றிலரைத்து ஐந்துதடவை கோழிப்புடமிட்டெடுத்துப் பின்னர், கொட்டான்கொரந்தைச்சாற்றிலரைத்துஇருதரங்கோழிப்புடமிட்டெடுத்த மேற்படி உப்பைக் குகையில்வைத்து வெங்காரம் போட்டூலையிலுருக்க வச்சிரமணிபோலுருகிக் கட்டும்.

——:(*):——

பன்னிரண்டாவது பசுல்.

இந்திரியக்கட்டுக்கு இரசக்கட்டு.

——(··)——

வெள்ளைக் குன்றிவித்து பலம்(1) அரிதாரம் விராகனிடை(2)இவ்விருசரக்கையும்உமிழ்நீராலரைத்தெடுத்துக்குழித்தயிலமிறக்கி வைத்துக்கொண்டு செங்கல்மாவிலும் பின், கொடிவேலிவேரினுஞ்சுத்தி செய்த

இரசத்தில் தேவையான நைக்கல்வத்திலிட்டு மேற்படிதைலத்தைச் சிறுகச்சிறுக விட்டரைக்க அவ்விரசம்வெண்ணெய்போற்றிரளும்.அதை யெடுத்து நாடிய வண்ணம் மணி போன்றவைகள் செய்து தயாரமிட்டுக் கருவூமத்தங்காய்க்குள் வைத்துமூடி மெல்லியதாக, ஒருசீலைமண் செய்துகவுதாரிப்புடமிட, மணியா யிறுகிக்கட்டும், அவைகளைக்கொண்டால் இந்திரியங்கட்டுப்படும்.

பதிமூன்றாவது பகல்.

மற்றொரு இரசக்கட்டு.

விடத்தலை மரத்தின் கல்லிலேவரும்தேவையான,இரசமுங்கல்வத்திலிட்டு இருசாமம் அரைக்க அவ்விரசம்வெண்ணெய்போற்றிரளும்.அதைத் திரட்டிமணியாக்கி ஆரை இலையை அரைத்துக்கவசஞ்செய்து மேலில் உமி போட்டு அதன்மேல்அக்கவசத்தைவைத்து அக்கவசம் மறையும் படி வரட்டியடுக்கி அதன்மேல் உமிபோட்டு நெருப்பு மூட்டி யெரித்தாறியபிறகெடுக்கமணியாகும்.

பதினான்காவது பகல்.

மற்றொரு முறை.

துருவின்றிய இருப்புக்கரண்டியிற் றேவையுள்ள இரசத்தை வைத்து அதில் தண்ணீர்விட்டு நெருப்பில்வைத்துஅத்தண்ணீர் சுண்ட மட்டும் கருவூமத்தை வேரால் கிண்டியதில் நீரிருந்தாலதைப் போக்கி விட்டு மறுபடியும் தண்ணீர்விட்டு அத்துடன் மேற்படி வேரின் தூள் துருசு பொடியுங் கொஞ்ச மிட்டு முன்போற்கிண்டி வறுக்கத்திரளும். திரண்டரசத்தைத் தண்ணீரிற்போட மணியாகும்,

பதினைந்தாவது பகல்.

இது நான் பரீட்சித்தமுறை.

பிரண்டைச்சாறுபடி.ஒன்று.வெற்றிலைச்சாறுமாகாணிஒன்று.இரசம் விராகனிடை இரண்டு. துருசுப்பற்பம் விராகனிடை ஆறு இரசக்

கற்பூரம் விராகனிடை நான்கு. மேற்படி இரு சாற்றையுஞ் சட்டியி லிட்டு அதிற்மேற்படி இரசத்தையிட்டுத் துருசுப்பொடியைச் சிறுகச்சிறுகக் கொடுத்துக் கிண்டி வருகையிற் சாறு, பாதி வற்றியும் இரசமுக் கூ சட்டியிலொட்டா நேரமுமாகும். அத்தருணம் மேற்படி இரசக் கற்பூரப் பொடியையிட்டுக் கிண்டினால், இரசந் திரண்டு ஒட்டும். அத்தகையில் தண்ணீரை மிதக்கும்படிக்கு ஊற்றிக் கையாற் கலக்கித் தெளிவிறுத்து மறுபடியும் ஊற்றி மேற்படி சாறுவகைகளில்லாமல் நீக்கிய பின்னர் வெண்ணெய் போற் சட்டியி லொட்டி யிருப்பதை வழித்துத் திரட்டித் துணியிலிட்டு நிழலில் வைக்க இறுகி மணியாகும். அம்மணியினிறம் பசுமை மிகைத்திருந்தால் கொஞ்சமிரசத்தை யூட்டி விரலாலே தேய்க்க வெண்மையாகும்.

பதினாறாவது பகல்.

இரசத்திற்கு குருமுடிக்கும் விபரம்.

சிறுகண்ணூகம் விராகனிடை (1) இரசம், விரம் வகைக்கு விராகனிடை (½) மேற்படி காரத்தையுருக்கி அதில் ரசத்தைச் சேர்த்து, விரத்தைப் பொடித்துத் தூவிக் கிளரி மூடி பின்னர் இறக்கி ஆறிய பின் எடுத்து வைத்துக்கொண்டு:—பத்து விராகனிடை இரசத்திற்கு மேற்படி மருந்தென்ற "குருவில்" ஒரு விராகனிடை கொடுத்துக் கல்வத்திலரைக்க வெண்ணெயாகும். உருட்டித் தண்ணீரிற் போடவே இறுகும்.

* * *

ஏழாவது பாடு.

சகல வியாதிகளுக்கும் குளிகைகளைக் கூறல்.

ஒன்றாவது பகல்.

மூலவாதம். ஜன்னி, போன்ற நோய்கட்குக் கற்பூரக் குளிகை.

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, அக்கிரகாரம், லவங் கோஷ்டம், ஏலம், வால்மிளகு வகைக்கு விராகனிடை நான்கு. கிராம்பு விராகனிடை மூன்று. கஸ்தூரி, குங்குமப்பூ பச்சைக் கற்பூரம் வகைக்கு விராகனிடை அரை. இவைகளைக் கல்வத்திலிட்டு இஞ்சி விட்டு மைபோலரைத்துக் குன்றிமணிபோல் மாத்திரைசெய்து, நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, தேன், இஞ்சிச்சாறு போன்ற அனுபானத்தில், ஒரு குன்றி விதம், காலை மாலை, மூன்று நாள் கொடுக்கத் தீரும் வியாதிகள்:- மூலவாதம் சன்னி, மற்றைய வாதரோகங்கள் திரேகக் காங்கல், கைகாலெரிவு, பல்ரோகங்கள் அஜீரணம், அக்கினிமந்தம் மேகம் போன்ற வியாதிகளெல்லாம் தீரும். அனுபவசித்தம்.

இரண்டாவது பகல்

சிறு பிள்ளைகட்கு ஜுரமாயினவுக்கும் பச்சைக் கற்பூரக் குளிகை.

பச்சைக் கற்பூரம் லவங்கப்பட்டை, ஜாதிக்காய் வகைக்குக் கழஞ்சி இரண்டு. சுத்திசெய்த வாளம் கழஞ்சி ஆறு. இவைகளைத் தும்பைச் சாற்றிலரைத்து, உளுந்துபோல உருட்டிவைத்துக்கொண்டு, சிறுக்களுக்கு ஒரு உருண்டை கொடுக்க வயிறு பேதியாகிச் சுரத்தைப் போக்கும். இன்னும் சிறிய [illegible] பரித்துக் கையின் [illegible] மேல் வைக்கும் கட்ட சுகமாவுந் தீரும்.

மூன்றாவது பகல்.

சுரக்கோடாரிக் குளிகை.

62-7

வெள்ளைப் பாஷாணக் கட்டி விராகனிடை ஒன்று. ஓர் கலயத்திற் கல்லுப்பு போட்டு அதிற் சவிட்டி மேற்படி கலத்திற் படாமல் மேற்படி கட்டியைத் தொங்கல் போட்டு மேற்படி கல்லுப்பு [illegible] நால் மேற்படி கட்டியைச் சுத்திசெய்து கோழிமுட்டைத் தோலி விராகனிடை இரண்டு. காசிக்கட்டி விராகனிடை மூன்று, மேற்படிப் பாஷாணக்கட்டி. யாவையும் கல்வத்திலிட்டுக் கொடிவேலிச் சாறுவிட்டரைத்து மெழுகு பதத்திலெடுத்து மிளகுபோலுருட்டி, உலர்த்தி, சுரமியாவுக்கும், சுரம் விடும்போது பச்சைத் தண்ணீரில் ஒரு உருண்டை அரைத்துக் கொடுக்கவும், மறுநாளும் மூன்றாவது நாளும் உருண்டை கொடுத்துக் காய்ச்சல் நின்ற காலையில் மங்கிம் ஒவ்வொரு உருண்டை கொடுத்துக் காய்ச்சல் நின்ற பின் ஏழாவது நாள் வெந்நீரிற் குளிக்கக் கோழிச் சாறு சேர்த்து நல்லபதமாவது நாளில் பால் சேர்த்து முழுகவும். பத்தியம், நாலாவது [illegible] பதினைந்தாம் நாளிற் புளி சேர்த்துக் கொள்ளவும்.

நான்காவது பகல்.

சிறு பிள்ளைகளுக்கு மாந்தக் குளிகை.

சுக்கு, மிளகு, வசம்பு, வெங்காரம், சுத்தி செய்த வாளம் பருப்பு இவைகளை யோர் நிறையாக எடுத்து. எலுமிச்சம்பழச் சாறுவிட்டுக் கல்வத்தில் இரண்டு சாமமரைத்து, முக்கால் மிளகுப்பிரமாணம் உருண்டை செய்து வெயிலுலர்த்திச் சிறு பிள்ளைகளின் மாந்தத்திற்கு, [illegible] முலைப்பால், வெந்நீர், கருப்புக்கட்டி, சுக்குக் கஷாயம் போன்ற அனுபானங்களில் ஒரு உருண்டை முதல் மூன்று உருண்டை வரையிற் கொடுக்க மேற்கூறிய வியாதியும், மற்றைய ரோகங்களும் போம்.

ஐந்தாவது பகல்

சிறுபிள்ளைகள் சேட்டும ரோகமியாவுக்கும் கோரோசனைக் குளிகை.

கோரோசனை குங்குமப்பூ, கஸ்தூரி, இரசச் செந்தூரம், பச்சைக் கற்பூரம், ஏலம், அப்பிரகம், காம்பு, [illegible], ஜாதிக்காய், அக்காரம் வகைக்குக் களஞ்சி மூன்று. இவைகளைக் கல்வத்திற் பொடித்துச் சந்தனக்கட்டைத் தூள் விராகனிடை இருபத்தைந்து. தண்ணீரி லிட்டுக் காய்ச்சிப் பாதியாக வற்றக்காய்ச்சிய [illegible] சாமமரைத்துப் பின்னர், பத்து விராகனிடை கஸ்தூரியை அரைப்பது. தண்ணீரி லிட்டுக் காய்ச்சிப் பாதியாக வற்றக்காய்ச்சிய சொரசத்தில் இரு சாமமரைத்த பின், பத்து விராகனிடை பொரிப்பூவை அவ்விதம் சேர்த்துச்செய்து அதில் [illegible] பதத்தில் குன்றிமணி யளவு, மருந்தைச்செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு பிள்ளைகட்கு முலைப்பால் போன்ற அனுபானத்திற் கொடுக்க, சேட்டுமசம்பந்தியான வியாதியடங்கலுந் தீரும்.

—[:]—

ஆறாவது பசல்.
ஸ்திரீகளின் வாதபித்த சிலேற்பன சுரங்கட்குக் கோரோசனைக் குளிகை.

கோரோசனை விராகனிடை இரண்டு. கஸ்தூரி, கோகணி, வாளம், வகைக்கு விராகனிடை நான்கு, இவைகளை முலைப்பாலினால் அரைத்துக் குண்டைசெய் துலர்த்தி அனுபானத்திற் கொடுக்கத் தீரும்.

ஏழாவது பசல்.
சன்னிகளடங்குதற் குளிகை.

சேர்வாளக் கொட்டை தோலைச் சுத்திசெய்துகொண்டு, கஸ்துரோசனை, இரசம், மிளகு வகைக்குக் களஞ்சி அரை. அபினிரசம் களஞ்சி ஒன்று. ஆகவெல்லாவற்றையும், எருமைத் தயிர், அல்லது வெற்றிலை [illegible] சேர்த்துக்குள் வைத்து, பின்னர் கல்வத்தி லரைத்து, [illegible] மருந்தைச் செய்து, உலர்த்திக்கொண்டு இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால் போன்ற அனுபானத்திற் கொடுக்கச் சன்னிகளியாவுந் தீரும். [illegible]

629

எட்டாவது பசல்.
வாதரோகங்களொழிக்கும் வாதராக்ஷசன் குளிகை.

இரசம், கெந்தகம், துத்தம், சுக்கு, பச்சைநாபி அபினி, வெள்ளைப் பாஷாணம் வகைக்கு விராகனிடை நான்கு, சுத்திசெய்த வாளப்பருப்பும் பலம் அரை. நீலச் சுருளி வேர் பலம் ஒன்று. கொடிவேலி வேர் காய்ந்தபடி பலம் அரை. ஆடு தின்னாப்பாளை காம்புநீக்கிப் பலம் ஒன்று. எருக்கம்பூ வெள்ளாட்டுப்பாலில் வேகவைத்து கல்வத்தில் காட்டாமணக்கின் சாறுவிட்டு ஒரு சாமமரைத்து இவ்விதம் (12) சாமமரைத்துப் பின் குன்றியளவு மருந்தைச் செய்து, உலர்த்திய பின்னரதை; ஒருபாண்டத்தில், ஒருபடி ஆவின்பால்விட்டு, அரைப்படி சக்கரவில்லை அதிலிட்டு அப்பாண்டவாய்க்குத் துணி கொண்டு மூடி மேல் போடவும் மருந்துருண்டைகளை வைத்து மேற்சட்டி மூடி அடுப்பேற்றி, சேர்ப்பது. பாலும் இவ்வுருண்டைகளும் வெந்து பொரித்த பின்னர் அப்பாத்திரத்தினைக் கீழிறக்கி ஆறவிட்டு எடுத்து வைத்துக்கொண்டு வாதவாய்வுக்கு இஞ்சிச்சாற்றிலும் சனி வாதத்திற்கு ஆடாதொடைச் சாற்றிலும், இசிவு வாதம் முடக்குவாதம் இவைகட்கு சுக்குக்கஷாயத்திலும் உள்ளுக்கருந்தவும். வெப்பெண்ணெயிலும் மேலும் பூசவும் கைக்காற்பிடிப்பிற்கும் பக்கவாதத்திற்கு, பருத்தி இலைச் சாற்றிலும் வாதசூலைக்கு, கிலிகிலிச் சாற்றிலும், அதிசார வாதத்திற்கு துவர்ப்புச் சாற்றிலும் சந்நிவாதத்திற்குத் தேங்காய்ப் பாலிலும் மற்றுமுள்ள சகலரோகங்களுக்கும் யோசித்துக் கொடுத்து முறைப்படி காலை மாலை இரண்டு நாள் முதல் எழு நாள் வரையிற் கொடுத்துக் கடினமான பத்தியமிருக்க, குணமாகும். வாதங்கள் யாவுந் தீருவது நிச்சயம்.

ஒன்பதாவது பசல்.
ஸ்திரீகட்குக் கபமாத்திரை.

—:():—

சுக்கு, கோரோசனை, வகைக்கு தோலா ஒன்று கல்வத்திலிட்டுச் சிறுபிள்ளைகளின் மூத்திரத்தினிட்டு, தாய்ப்பாலைச் சேர்த்தரைத்து, பயறளவு மாத்திரைகளைச் செய்து உலர்த்திவைத்துக்கொண்டு அனுபானத்திற் காலைமாலை கொடுக்க அவ்வியாதிகளகலும். வாய்வுப்பதார்த்தங்களை நீக்கவும்.

பத்தாவது பசுல்.

ஜன்னி, பிசாசுகளியாவுக்கும் மூக்கிற் புகைப்பிடிக்குந்திரி.

முதிர்ந்த வயதுடைய பச்சோந்தியை அறுத்து அதன் இரத்தத்தையும் அதன் ஈரலையுமொன்று சேர்த்துத் துணியிலூட்டி யுலர்த்திச் சிமிழில் வைத்துக்கொண்டு வேண்டும்போது கொஞ்சங்கிழித்துத் திரித்துக்கொழுத்தி மூக்கிற்புகைப்பிடிக்கச் சன்னிபிசாசு பைத்தியங்கடீரும்.

எட்டாம் பாபு.

சகலவியாதிகளுக்கு மநுபோகப்பரீட்சையான மெழுகுகளைக்கூறல்.

ஒன்றாவது பசுல்.

பிரசவஸ்திரீகட்கு, திரிகடுகுமெழுகு.

சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை வகைக்கு விராகனிடை இரண்டு சமூலமும் தேன்விட்டரைத்து மெழுகாக்கிச் சிமிழில் வைத்துக்கொண்டு, பிரசவமான வயிற்றுச் சிக்கல், சன்னி, சுரம், இசுவுகள், மற்ற சூலை. வயிற்றுவலி யாதியவைகட்கு, ஒரு குன்றிமணி இடை, கருப்புக்கட்டியிற்கொடுக்க, பண்டிதர்கள் கைவிட்ட வியாதியைவெல்லும் கைகண்டது.

இரண்டாவது பசுல்.

வாய்வுகளியாவுக்கும் சாம்புறுணிலிங்கமெழுகு.

சுத்தமான பாற்சாம்புறுணி, ஜாதிலிங்கம், சூடம்வகைக்குப்பலம் நாலு கோரோசனைபலம் ஒன்று. இவைகளைக் கல்வத்திலிட்டு அரைக்க மெழுகுபோற்றிரண்டுவரும்பொழுது சிறுகச்சிறுகத்தேன்விட்டுநான்கு

சாமம் பலமாயிடைவிடாமலரைத்து வழித்து” டப்பியில் வைத்துக் கொண்டு, முதிர்ந்தவர்கட்கு சுண்டைக்காயளவும், இளையவர்கட்குச் சிறுபயறளவு,முலைப்பாலிற்கொடுக்கச்சகலவாய்வுகள்,வயிற்றுப்பொருமல் வயிற்றோட்டம், நீர்த்தோசம், சுரம், கழிச்சல் யாவுந்தீரும்.

மூன்றாவது பசுல்.

வாய்வுகள் வெட்டைகளியாவுக்கும் வீரமெழுகு.

ஒருபலம் வீரத்தை அகண்டசட்டியில் வைத்து முலைப்பால்,செப்புநெருஞ்சிச்சாறு, சீந்தில் சாறு. ஜெயனீர்வகைக்குப்படி அரைக்கால் இவைகளை ஒன்றுக்குப்பின்னொன்றாகச்சிறுகச்சிறுக அவ்வீரத்தில் ஊற்றி நெருப்பெரித்துப் புரட்டிப்புரட்டிக்கிண்டிக்கொண்டுவருக இளகின கருப்புக்கட்டிபோல் வரும்பதத்தில் வழித்தெடுத்துக் கொம்புச் சிமிழில் வைத்துக்கொண்டு சுண்டைக்காயளவுமெழுகு,கருப்புக்கட்டியிற்கொடுக்கச் சகலவாய்வும் கபவாய்வு, நீர்க்கடுப்பு, நீர்ச் சுரப்பு, வெட்டை நீரடைப்பு, யாவுந்தீரும்.

மேற்கூறிய ஜெயனீரெடுக்கும் விபரம். பச்சை மூங்கில் மேல் தொலியை மெல்லிசாயிழைத்து மைபோலரைத்து, தோல் நீக்கியஇருபத்தைந்து, ரஸ்தாளிவாழைப்பழத்துடன் சேர்த்துப் பிசின்போற் பிசைந்து, தட்டைப்பீங்கான் பாத்திரத்திலப்பிக் கொஞ்சம் போற் சாய்த்து வைத்து அதன் கீழ்நீர் வடிந்திறங்குவதற்கோர் பீங்கான் வைத்துப்பனியில் வைக்க ஜெயனீரிறங்கும்; அம்மருந்தைப் பலதரமும் அவ்வாறு பனியில் வைத்தாலதினின்றும் ஜெயநீரதிகமாய் வடியும். மருந்துக்குத் தக்கபடி பீங்கானையதிகப்படுத்திக்கொள்ளல்நலம் அதாவது ஏழுதட்டை வரையிலுமாம்.

நான்காவது பசுல்.

மற்றொருவகை வீரமெழுகு.

லிங்கம், இரசம், பூரம், வீரம், இவைகளைச்சரி நிறையாயெடுத்து, மேற்படி வீரம், பூரமிரண்டையுஞ் சீனிக்காரத்தில் வாட்டி, பின்பு கோழிமுட்டை வெள்ளைக்கருவில் வாட்டிப் பின்னர்,சூடம்,கெந்தகம்,

சாம்புருணி, குந்துருக்கும் இவைகளை யோரளவாயெடுத்து மெழுகு போலரைத்து மேற்படி லிங்கத்திற்கு,பத்துத்தடவை அங்கிபூட்டிப்புடமிட்ட பின்னர் மேற்படி இரசத்தை, நாயுருவிச்சாம்பலிலரைத்து, சுத்திசெய்து, மேற்படி சரக்குகள் நான்கையும் வகைக்கு விராகனிடை ஒன்று. எடுத்துப் பொன்னாவரைவேரில் நின்றுங் குழித்தயிலமிறக்கி மேற்படி சரக்குகட்குச் சுருக்குக்கொடுக்க மெழுகாகும். தூதுவளங்காயுளவு கொடுக்க எவ்வித ரோகத்தையும் பிடிக்கும்.

ஐந்தாவது பசல்.

மற்றொருமெழுகு.

சீனக்கீரம் வெங்காரம், கெந்தகம், லிங்கம், சாரம், இவைகளைச் சுத்திசெய்து தேன்விட்டரைத்து மெழுகாக்கிக்கொடுக்க, கொடுத்த வியாதிகளைப்போக்கும்.

ஆறாவது பசல்.

சகலரோகங்கட்கும், கைகண்டவீரமெழுகு.

வீரம், ரசம், பூரம், வகைக்கு விராகனிடை ஒன்று ஏலம்,கராம்பு விராகனிடை ஒன்று. தண்ணீரிலூறவைத்த பச்சை வரகரிசிமா சிறங்கையளவு அதாவது சுமார்பலம் ஒன்று. மேற்படி ரசத்தைக் கல்வத்திலிட்டு வாட்டிப் பிழிந்த வெற்றிலைச்சாறுபலம். அரைக்கால் விட்டரைத்து ரசம், மடிந்தபின் மற்றைய மருந்துகளையும், வரகரசிமாவையும் கல்வத்திலிட்டரைத்த பின்னர், அவித்தமுத்துக்கொட்டையெண்ணெயை அம்மருந்துகளுக்குச் செல்லுமானம் வரையில்விட்டு நன்றாக அரைத்து மெழுகுபதத்தில் வழித்தெடுத்து " டப்பியிலடக்கஞ்செய்யவும். இம்மெழுகிற் சுண்டைக்காயளவு,கருப்புக்கட்டிவெல்லம்போன்ற அனுப்பானத்தில் மூன்றுநாள் ஆறுவேளைகொடுத்து, பத்தியம் ஏழாவது நாளில் ஓமந்தேய்த்து வெந்நீரிற் குளிக்கவும், அதன்பின்னர் இடைவிட்டு மூன்றுமுழுக்கு வரையில், ஆவின்பாலில் மிளகையரைத்துச்சேர்த்துக்காய்ச்சித் தலையிற் றேய்த்து முழுகி அப்பால் வழக்கப்படி முழுகி வரவேண்டியது. பத்தியம்.—மூன்று நாள் உப்புத் தள்ளி, சுடுகஞ்சியும் மல்லித்துளாகாரமும். நாலாவதுநாள் முருங்கை இலை சேர்த்து உப்பை வறுத்துச்சேர்த்துக்கொள்ளலும், ஏழாவது நாள் மரக்கறியாதிய பிஞ்சுகளிற் கறிசமைத்து, புளியைச்சுட்டுச் சேர்த்துச் சாதங்கொள்ளலும், பதினைந்து நாளைக்குப்பின் வெள்ளாடும் அதன்பின் கோழி மாமிசம், வெங்காயம் பூண்டு, நெய், பால், சேர்த்துக் கொள்ளலும், நாற்பது நாள்வரையில் அவபத்தியமாயிருப்பதும் அதற்குப்பின் கரப்பன் பதார்த்தங்களும் முன் தள்ளிவைத்த வஸ்துக்களுமாகும். இதற்குத் தீரும். வியாதிகள்— அரையாப்பு பவுந்திரம். கண்டமாலை, சூலைபோன்ற கொடிய வியாதிகளும், கால் கைபோன்ற உறுப்புகளின் சோர்வுகளும்,முடக்குவகைகளுந் தீரும். புண்களிற் பூசினால் தீரும். இம்மருந்திற் சேர்க்கும் இரசத்துக்குப் பகரமாக வாலரசமெடுத்துச் சேர்ப்பதும், அம்மருந்தை அரைக்குகையில் பொற்றலைக் கரிப்பான் சாறுவிட்டரைப்பதும் மிக்க நலம். இதற் கேவாலரசமெழுகென்று பெயர்சொல்லப்படும்.

ஏழாவது பசல்.

மருந்தினாலான வாய்கட்டுக்குப் பரிகாரம்.

மேற்கூறிய இருவகை மெழுகாலும், மற்றைய வகையாலும் வாய்வேக்காடுண்டு பட்டால்சீனக்காரம்,கருவேலம்பட்டை, ஆவரைப்பட்டை. கடுக்காய்த்தொலி. களிப்பாக்குப்போன்ற துவர்ப்புள்ள வஸ்துக்களைக் காய்ச்சிய கியாளத்தில் வாய் கொப்பளிப்பதால் தீரும். ஆவின்பாலில் மிளகையிட்டுக் காய்ச்சிக்குடித்தாலும், வெங்காயமதிகமாய்த் தின்றாலும் மருந்தின் குணத்தைக்கெடுத்துக்கெடுதியன்றியே; அவரி மிளகுக் கியாளத்தைப்போல். முறிவுண்டாகும். வயிற்றுளைவேற்பட்டால் குடித்து வருகத்தீரும்.

எட்டாவது பசல்.

வாலரச மெடுக்கும் விபரம்.

லிங்கம், கொடிவேலி வேர்வகைக்குப் பலமொன்றைப் பொடித்துக் கலந்து, ஒரு புதியமண்பாண்டியிற்போட்டு, மற்றொரு புதுப்பானை யுள்ளில், வாழைப்பழுப்பிலையாலும் முள்முருக்கையிலையாலும் நன்றாக மும்முறை தேய்த்துலர்த்தபின்னர் அதிலேறியும் மருந்துள்ளபானையை மூடிப் பலமாய் மண்சீலைபண்ணிசெய்து அடுப்பேற்றி ஒரு சாமமெரிக்கவும். மேற்பானை சூடாறி மருந்துகருகிறவாசந்தோன்றினவுடனிறக்கி அன்றிரவுப்பனியில் வைத்துக் காலையிற் றிறந்து ஒரு சாமம் வெயிலில் வைத்து, மேற்பானை யுள்ளேயொட்டியிருக்கின்ற சாம்பலைப் "புருசல்" வழித்து விரலால் தேய்த்தால் ரசமாகும். இது; வாதரச மெடுக்கும் முறைகளில் மிகமுக்கியமானது.

ஒன்பதாவது பகல்.

வாய்வுகள், நீர்க்குத்து ரோகங்கட்குப் பூரமெழுகு.

—(:)—

சேர்க்கை: வீராகனிடை இரண்டு. பூரம்வீராகனிடை நான்கு சீனக் கற்கண்டு பலம் ஒன்றரை. அரிசிப்பொடி, மாகாணி. இவைகளியாவையு மொழுங்குப்படி கல்வத்திலிட்டு மேற்படி செய்விட்டரைத்து மெழுகு பதத்திலெடுத்துக்கொண்டு, கண்டைக்காரளவு அனுப்பானத்திற் கொடுக்க. வெட்டை வாய்வு, மற்றவாய்வுகள் வாதநீர், நீர்க்குத்துமுதல்வன ரோகங்க ளறும். பத்தியம்:—வீரமெழுகுக் கொத்ததேயாம்.

பத்தாவது பகல்.

பறங்கிபோன்ற நோய்களுக்கு மிருதாரசிங்கி மெழுகு.

மிருதார்சிங்கி, கஸ்தூரிமஞ்சள் இவ்விரு சரக்குஞ் சரிநிறையாக வெடுத்துக் கல்வத்திலிட்டு முலைப்பாலாலரைந்து சமமரைத்து மெழுகு போற்றிரண்ட வுடனெடுத்து, கண்டங்காரளவுநன்மைசெய்து, சவி புலர்த்தி ஒருநாளொன்றுக் கொருவேளையாக பீர்க்குசாறோடுக் கொடுக்க, பறங்கி, சிரங்கு, புண்வகைகளாதிய வியாதிக ளறும். உப்பு, புளி, புகை அலபத்தியந்தள்ளவும்.

பதினொன்றாவது பகல்.

கால், கை, குத்துவாத, நோய்கட்குக் கெந்தக மெழுகு.

—[*]—

கெந்தகம் நவச்சாரம், சீனிக்காரம், வகைக்குப் பலம் கால், வீரம் லிங்கம், பூரம், ரசம். தாளகம் வகைக்கு வீராகனிடை நான்கு. இவையாவையும் பொடித்து அரிசிலைப் விட்டரைத்துச் சீலையிலூட்டி. வெரித்துச்சுடர்தீபிலெடுத்து அதிற் கருட்பச்சட்டி பலம் ஆறு வைத்தரைத்து வைத்துக்கொண்டு கண்டைக் காரளவு அல்லது திராசமரைப் கொடுக்க, கை, கால், குத்துவாதப்பிடிப்பு முடக்கு, இக்கமோதிய வைகளறும். பத்தியம்:—புளி, புகை, அலபத்தியம்.

—(*)—

பன்னிரண்டாவது பகல்.

கெந்தக மெழுகு.

—()—

ஒருபலம் செல்லிக்காய் கெந்தகத்தை இரும்புச் சட்டியிலிட்டு அதில் நூக்கபலம் கருமரிச் சாற்றைச் சுருக்குக்கொடுத்து, பின்னர் அவ்வளவான முசுமுசுக்கைச் சாற்றைச் சுருக்குக்கொடுத்து, பின்னர் விசப்பு ஆசிலெய் விட்டுலிருந்தக்கடைக்கவே மெழுகுபதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு வியாதிகளுக் கெணக்கவே எல்லாரோகங்களுக்கும் கொடுக்கவும்.

வாதத்துக்கு; வில்வம் வேர். சுக்கு, சீரகம், இலக்கடிதலை, மிளகு பேப்புடல், கோஷ்டம் மல்லி. சித்தாமுட்டி, வேர்வகை கியாழத்திலும், குளிர் சுரத்துக்கு; ஆடாதோடை வேர், சுக்கு, திப்பிலி, வகைக்கி சாளத்திலும் கண்ணிக்கு, முருங்கைப்பட்டைச்சாறு, ஆவாரம் பட்டைச் சாறு கொடிக்கள்ளி, புல்லுருவிக்கள்ளிச்சாறு சிற்றரத்தைக்கிழங்கு, பேராத்தைச் சாறு வெள்ளுள்ளிச் சாறு, முட்டைக்கருக்கலம், வாதைப்பட்டைச்சாறு, முருக்கைவேர்ப் பட்டைச்சாறு, ஆடாதொடைச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு இவைகளிலொன்றில் வியாதியின் விதப் படிப்பார்த்து மெழுகு கொடுக்கவும். இன்னும் இம்மெழுகை பலவியாதிகளுக்குக் கொடுக்கும் அனுப்பானமாவது,—சுக்கு, திப்பிலி தாளிசபத்திரி, கோஷ்டம், அக்கிரகாரம் கஸ்தூரி மஞ்சள், இவைக

னைச் சமமாயெடுத்திடித்துச் சலிவாடிசெய்த சூரணத்தில் இருபடிப் பிரமாணம் பணவிடை யுட்கொள்ளச் சகல ரோகமுந்தீரும்.

——):(——

பதிமூன்றாவது பகல்.

குஷ்டரோக வகைகட்கு கெந்தக மெழுகு.

——(:)——

வாழைப்பழம் (25) மேற்படி பழுக்காத்தகாய் 75 வெட்டிக்கலக்கி இரண்டையு மொன்றாய்ச் சேர்த்திடித்து, ஒருபாத்திரத்தில் வைத்தால் அதினின்று நீர் பிரியும். அந்நீரைவடித்து ஒரு இரும்புச் சட்டியிலிட்டு அதில் ஒருபலம் நெல்லிக்காய் கெந்தகத்தைப் போட்டு இரும்புலக்கையாற் பொடித்து அடுப்பேற்றி மேற்கூறிய சேவனீரைச் சுருக்குக்கொடுத்துக் கூடை அக்கினியாக எரித்து இரும்புக் கோலுக்கடைத்த மெழுகுபதத்தி லிறக்கி மண்பாத்திரத்தில் மாற்றிவைத்துக்கொண்டு அந்தி சந்தி கழற்சியிடை ஒருமண்டலங் கொள்ள மேற்கூறித்த வியாதிகளீர்க்கும் பத்தியம்:—நெய், பாலிசம், புளப்பு, குப்பா இவைகள் அன்றி மற்றவைகள் ஆகா.

பதினான்காவது பகல்,

சகலநோய்கட்கும் பஞ்சாச மெழுகு.

லிங்கம், நவச்சாரம் அரிதாரம், வகைக்கு விராகனிடை ஒன்று. ரசச்செந்தூரம், வீரம் வகைக்கு விராகனிடை அரை. சிற்றாமணக்கின் பருப்பு விராகனிடை எழு. தேன்படிகாசம். சாறுன்னி ஒன்று. இவைகளை யடங்கலும் ஒன்று சேர்த்துக்கல்வத்திலரைத்து மெழுகாக்கி வைத்துக்கொண்டு சகல வியாதிகட்கும் கொடுக்கலாம்.

பதினைந்தாவது பகல்,

மற்றொருவகை மெழுகு.

——(*)——

வீரம் விராகனிடை கால். பூரம் விராகனிடை அரை. லிங்கம், வெங்காரம் சீனக்காரம் வகைக்கு விராகனிடை இரண்டு. சிற்றாமணக்கின் பருப்பு விராகனிடை மூன்று; வெங்காரம் ஒன்று. இவைகளை கல்ருப்பொடித்து அனைபாகாளித்தேனைச் சேர்த்துச் சேர்த்துக்கொடுத்துக் கல்வத்தில் விட்டு அரைத்து மெழுகுபோலாக்கி டப்பியில் வைத்துக்கொண்டு பதினைந்துநாள் ஆறவைத்தபின்னர் அனுபானத்திற் கொடுக்க வாய்வுகள், வலி, குத்தல் வாதம், கை. கால் சோர்வு. மை கால் விளங்கப்படாத ரோகம், முடக்குப் போன்ற கொடிய வியாதிய வகைகளைப்போக்கும். ஒவ்வொருமுறைக்கும் அனுபானங் களாவன.—இஃதுருப் வருமியாதிகளியாவுக்கும் முன் னவேளையான பத்தியமற்ற பச்சைத்தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கிறது. மற்ற அனுபானத்திற் கொடுத்தாலுத்தியம் ஆயுஷியமாகும். அதன் விபரம்.— விசபெருவில் முக்கியிட்டது அனுபானப்பொருள் இஞ்சு, தேகம், அல்லது கொடுவேலி வேர் பழங்கிப்பட்டை மிளகு, மாவிலிங்கப்பட்டை, ஆவாரம்பட்டை போன்றவைகளால் கோக்குத்தக வன்னைபிறக்கிய கஷாயத்தில் ஒருகுன்றி மெழுகு கலக்கிக் கொடுக்க மேற்கூறிய வியாதிகளும் மலைகளைல்லாத்தும் போம். இன்னும் தாதுவிளைக் கண்டங்கத்திரி, இஞ்சி, செம்முள்ளி போன்றவைகளின் சாற்றைமுறித்துத் தேனி சேர்த்து அதில் மெழுகைக்கரைத்துக்கொடுத்தால், நெஞ்சடைப்பு, சளிக்கட்டு, இருமல் போன்ற வியாதிகளகலும்.

இன்னும் வீரம் விராகனிடை அரை, லிங்கம். பூரம், சீனக்காரம், வெங்காரம் வகைக்கு விராகனிடை ஒன்று மற்றவைமேற் கூறியபடி செய்யலாம்.

பதினாறாவது பகல்.

குன்மம் போன்ற வயிற்றுவலி மாதியவைகட்கு லிங்கமெழுகு.

——(*)——

சாதி லிங்கம். வீரம், பூரம், வகைக்குக்களஞ்சி. இரஸ்டுயாலசாம் அரிதாரம். துருசு, கெந்தகம், இந்துப்பு, மாதிக்காய், கார்போக அரிசி, திரிகடுகு கோஷ்டம், நல்ல அரத்தை, தேசாவரம் அக்கராம் சவ்வி சாரகம், ஓமம் வகைக்குவிராகனிடை ஒன்று இவைகளில், லிங்கம் வீரம். பூரம், ரசம் அரிதாரம் துருசு கெந்தகம் இவ்வேழு சரக்குகளும் தனித்தனியாகப் பொடித்து விடங்கிப்பின்னர், மற்றச்சரக்குகளிய

வையுஞ் சூரிய புடத்திலுலர்த்திப் பொடிசெய்த சூரணத்துடன் அவ்வெழுமருந்துகளையும் கலந்து கல்வத்திலிட்டுத் தேன் விட்டு ஒருசாமமரைத்து மெழுகாக்கித் தேத்தாங்கொட்டையளவு உருண்டைசெய்து வைத்துக்கொண்டு கருப்புக்கட்டியிற் கொடுக்கத்தீரும் வியாதிகள்; [illegible] மந்தாரம், சூதகவாய்வு வயிற்றுவலி பிரமேகமாமிசச்சேர்க்கையப்பு, கடுப்பு, போன்றவைகளே புளிபுகையிலை புகை, காப்பன் பதார்த்தங்கள் அபத்தியம்.

பதினேழாவது பகல்.

வாய்வு ரோகங்கட்கு லிங்கமெழுகு.

——(*)——

லிங்கம் பலம் ஒன்று இதைப்பொடித்துப் போட்டு புளிப்புமாதுளைச்சாறு படிகால் எலுமிச்சம்பழச் சாறுபடிகால் இவ்விரண்டையும் மேற்படிலிங்கத்துக்குச் சுருக்காயூட்டிச் சுருக்குக் கொடுக்கக் கொண்டுவருக மெழுகுபோற்றிரளும்; அதிலெடுத்து வைத்துக்கொண்டு குன்றி இடைக் கருப்பு கட்டியிற்கொடுக்க, வாய்வுகள் கீரதசா பாதியவைகள் மற்றரோகங்களுந் தீரும்.

பதினெட்டாவது பகல்.

குஷ்டரோகங்கட்கு தாம்பூரமெழுகு.

——(*)——

கருங்காலிப்பருப்பு வகைக்குப் பலம் (2) தாளகம் அரிசித் திப்பிலிவகைக்குப் பலம் (1). தாம்பூரம் அரைப்பலம (½) இவைகளைக்கல்வத்திலிட்டுச் சிக்காய்ப் பழச்சாற்றால் (10) நாள் வரையிலரைத்தால் நல்ல மெழுகாகும். ஆனால் 15 நாள்வரையிலரைத்தாலும் வியாதிகட்குக் கொடுக்கலாம். அம்மெழுகிற்கண்டிக்காயளவு வியாதிநிலைமைக்குஞ் சரீரநிலைமைக்குந் தக்கவாறு மூன்று முதல் நாற்பதுநாள்வரையிற் கொடுக்கலாம். கிராகுஷ்டமாகிய 18 வியாதிகட்குங் கொடுக்கத்தீரும்.

பத்தொன்பதாவது பகல்.

பிரவாத இசிவுமுதலான வியாதிகட்குச் சண்ட மாருதமெழுகு.

இரசகற்பூரம், லிங்கம், ரசச்செந்தூரம் வீரம், சமச்சாரம், வகைக் குவிராகனிடை ஒன்று கல்வத்திலிட்டு முலைப்பாலாலரைத்து மெழுகுபதத்திலெடுத்து மிளகுப்பிரமாணம் கருப்புக்கட்டி, தேன், பழம்பட்டை கொடிவேலிவேர்க்கிராம்பிவைகள் போன்ற அநுபானத்திற்கொடுக்கத்தீரும் வியாதிகள், உட்குத்து, பிரவாதசன்னிகளென்ன [illegible] வியாபித்தீரும். பத்தியம்.

இருபதாவது பகல்.

மேகநீராலாகிய, புண், ரணங்களியாவுந்தீரும். முக்கியமான ஓர் மெழுகு.

சுத்திசெய்த வீரம், ரசம், பூரம் லிங்கம், வகைக்குவிராகனிடை ஒன்று. குறுவை நெல்லரிசி விராகனிடை எட்டு இவைகளியாவுங் கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாற்றாலொரு சாமமாட்டி மெழுகாக்கிச் சுண்டைக்காயளவு உருண்டைசெய்து வைத்துக்கொண்டு மேகத்தாலான சகலரணம், புண், சூலை, கைகால் முடக்குகிரந்தி, பறங்கிபோன்ற பெரிய ரோகங்கட்கு, வாழைப்பழத்திலாவது தாம்பூலத்திலாவது காலைமாலை மூன்று அல்லது ஏழு நாள்கொடுக்க மேற்குறித்த வியாதிகள் தீரும். பத்தியம்; பெண்சாரிடை சல்லாபம், அகத்திக்கீரை, புள்ளுறுக்கு, என் இவைகளை நீக்கி, கடும்பத்தியமாக (40) நாள்வரையிற் பெறுதல் வேண்டும் பத்தியமுறிவுண்டானால் கஷ்டங்கள் நேரிடும்.

இருபத்தோன்றாவது பகல்.

மேக ஒழுக்கட்குக் கெந்தக ரசாயனம்.

——)(——

சிறியவாயுள்ள கலயத்திற் றெள்ளையுள்ள கெந்தகத்தைப் பொடித்துப்போட்டு மேல் மூடிச் சீலைமண்செய்து, போதுமென்ற அளவுக்கு ஆவின்பால் நிரப்பியுள்ள வேறொருகலயத்தைப் பூமியிற்புதைத்து அதன் வாய்மேல் மேற்படி மருந்துள்ள கலயத்தைக் கவிழ்த்துச் சீலைமண்செய்து அம்மருந்துக்குத் தக்கவாறு எருவடுக்கிப் புடமிட்டெடுத்தால் மருந்து கீழ்க்கலயத்துள் வடிந்திருக்கும். அதை யெடுத்துக் கல்வத்

நில் நீர் முள்ளி சாற்றால் நான்கு சாமமரைத்தெடுத்து வைத்துக்கொண்டு சிறிய கண்டங்காயளவு கருப்புக்கட்டியளப்பானத்திற் கொடுக்க! மேகவூறல் புண்பத்து வகையாதியரோகங்களகலும்.

ஒன்பதாம் பாபு.

பற்பல ரோகங்கட்கு யோகமுறைகளைக் கூறல்.

ஒன்றாவது பகல்.

பித்தச்சோகைவகைகளுக்கு நிவாரணம்.

கையான் தகரை நீர்முள்ளி, சாரநுனி, இவைகள் இலைவேர் சமூலமும், சுக்கு, மிளகு, சீரகம், வகைக்குப்பலமொன்று பொடிசெய்து காலை மாலை உட்கொள்ள பித்தசோகை தீரும்.

இரண்டாவது பகல்.

வாதபித்தசிலேட்டும சுரமாதியவைகட்குக் யோகம்.

ஆடாதொடை வேர், நிலவேம்பு, பேய்புடல் கண்டங்கத்திரி, தூதுவளை, சுக்கு கோஷ்டம், திப்பிலி, பல்லி தும்பைவேர் வில்வவேர் சீந்தில்கொடி, வகைக்கு விராகனிடையிரண்டு இவைகளை சதைத்து இடித்து எட்டாகப்பிரித்துக்கொண்டு ஒருபங்கை இருபடி தண்ணீரிலிட்டு ஒருபடியாக வற்றக்காய்ச்சிப் பிசைந்து சக்கை நீக்கிவடித்து அதை முக்காற்படியாக வற்றக்காய்ச்சி அதில் திப்பிலி, தாளிசபத்திரி சிற்றரத்தை, ஏலம், கராம்பு, வால்மிளகு, வகைக்கு விராகனிடை ஒன்று. பொடித்து வடித்து அதிற் பதினான்கிலொன்றை மேற்படிக்கஷாயத்தில் மேல்பொடியாகப் போட்டுக் காலை மாலை கொள்ளவும். இதுபோலவே ஏழுநாள் பதினான்கு வேளையுட்கொள்ளத் தீரும் வியாதிகள்:—வாதபித்தசிலேட்டும சுரம் இருபத்திரண்டோடு தலைவலியுள்ள நாலுசுரமாம். பத்தியம்:—கசப்பு, புளிப்பு, இனிப்பு, நீக்கவும்.

மூன்றாவது பகல்.

பித்தக்காங்கை யெரிவுக்குச் சருபத்து.

பத்து எலுமிச்சம்பழத்தைச் சட்டியிலிட்டு வெதுப்பி வதக்கிப் பிழிந்து அதில் அரைப்பலம் சருக்கரையும், மூன்று காசிடை மிளகுத் தூளுமிட்டுச் சாப்பிடத் தீரும். வியாதிகள்:—பித்தக்காங்கை, கை காலெரிவுகளே யாம்.

நாலாவது பகல்.

சளிக்கட்டுக்கு.

தூதுவளை, கண்டங்கத்திரி, இரண்டு செம்முள்ளி இவைகளின் சாற்றை முறித்துச் சீனிபோட்டுக் குடித்தால் நெஞ்சின் சளிக்கட்டு இருமலகலும்.

ஐந்தாவது பகல்.

நாவரட்சிக்கு யோகம்.

வெள்ளிப்பருத்தி, இலையைக் குழைவாகவேகவைத்து அதைப் பிசைந்து பிழிந்து அதன் சக்கையைப் போக்கிச் சாற்றை வடித்து அதிற் பூண்டு, மிளகு,புளிசேர்த்து" மிளகுத் தண்ணீர் வைக்கும்பாவனை போற் காய்ச்சிக் குடிக்க, பித்தமயக்கம், வாய்வுபோன்றவைக ளகலும். இதற்கான சிலபாகம் பதினெட்டாம் பாபிற் பின்வரும். இன்னும் அல்லறுத் தருவ.

ஆறாவது பகல்.

ஊதுகாமாலைக்கு யோகம்.

கீழ்காய் நெல்லி, கரிப்பான் முள்ளிக்கீரை சிறுகீரை, நீர்முள்ளி நெருஞ்சி இவைகளின் வேர்சமூலமும்; மிளகு, மல்லிவகைக்குப்பலம்

அரைக்கால், சமூலமுஞ் சட்டியிலிட்டு இருபடி ஜலமிட்டு எண்பேலொன்றாய் வற்ற காய்ச்சிய கியாழத்திலெரித்த, பெரிகாய்ப்பொடி தேவளாய் போட்டு, காலைமாலை மூன்றுநாள் கொடுக்கவும். அல்லது மேற்படி பொடித்திற் பஞ்சாரமெழுகில் ஓர் மிளகுப் பிரமாணஞ் சேர்த்து கொடுத்தாலும், அல்லது. மிளகு தக்களிக்கிப்பொழுங்குடித்தாலும், மேற்படி விக்கம், சாதுவாயாலே போன்ற வியாதிகளகலும்.

* * *

பத்தாம் பாடு.

சகலவியாதிகளுக்குஞ் சூரணங்களின் கூறல்.

ஒன்றாவது பகல்.

மேகம், வாய்வு, புண்ரோகமிவைகளுக்குக் கோழிச் சூரணம்.

——(:o:)——

கருங்கோழி, ஒன்றை அறுத்து மயிர் குடல் வாங்கி, அதன் வயிற்றில்: வெந்தயம், வெள்ளுள்ளி, மஞ்சள், கருஞ்சீரகம் ஜாதிலிங்கம், செல்லிக்காய் கொக்கம். சாதம், வெங்காயம், உருக்கு அப்பொடி இந்துப்பு, வகைக்குப்பலம் ஒன்றாக பொடித்து எல்லா வஸ்துக்களையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி இந்தச்சரக்குகளைத்து உருண்டையாய் வைத்துத்தைத்து; மருக்கொழுந்து, இருகு, வல்லிவேர், கொடிவேலிவேர் வகைக்குப்பலம் ஒன்றாக பொடித்துச் சமைத்து ஒருபடி தண்ணீர் விட்டு சாலி கொன்றும் வற்றக் காய்ச்சிய கியாழத்தில், மேற்படி கோழியை வைத்து மேல்மூடி மேலாகச் செய்து அப்பெயர்த்திறக்கி மேற்படிக் கொடுத்துலர்த்தி, எண்புகிடைப் பொடித்துச் சூரணமாக்கி வைத்துக் கொண்டு காலைமாலை தேனிற் கொடுக்கத் தீரும் வியாதிகள்.— மேகப்படைப்பு, குஷ்டமடிப்பு, மேகத்தடிப்பு, மேகவெள்ளை, மேகவூறல் மேகப்பத்து, புண்பொடி, கிரந்திவாய்வு, சட்டமெல்லாவகைகளும். அபத்தியம், புளி, புகை, மீன் கருப்பம் பதார்த்தங்களைக்கி, நெய், பாற்சோறுத்து வாரமொருமுறை எண்ணெய் தேய்த்து வெந்நீரிற் குளிக்கவும், அன்னபட்சம், பருப்பை கிரத்திக் கொள்ளவும்,

இரண்டாவது பகல்.

சகல ரோகங்களுக்குந் தாளிசபத்திரிச் சூரணம்.

——:(o):——

ஏலம், சன்னலவங்கம், குங்குமப்பூ, சடாமாஞ்சில், மஞ்சிட்டி, கடுரோகணி, திப்பிலி, மூலம், ஜாதிக்காய், லவங்கப்பட்டை, வசுவாசி, சிற்றரத்தை, சித்திரமூலம், அதிமதுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், கல்லுப்பு, குரோசானியோமம், வால்மிளகு, வாய்விளங்கம், நிலவாகை வேர், வகைக்குப் பலம் அரைக்கால். சமூலமுஞ் சூரியபுடமிட்டுக் கல்வத்திற் பொடித்து வடிக்கட்டிச் சூரணித்து அதற்குச் சரியிடை சீனி சேர்த்துக் காலைமாலை, இருகடிப் பிரமாணந் தின்னக்கொடுத்தால், தொடுத்த வியாதியைப் பிடிக்கும்.

மூன்றாவது பகல்.

எல்லாவித நோய்கட்கும் "ஐக்மாயுல் ஹக்கிமவர்கள் டிஷர்கள் முப்பத்திமூவரும் ஒன்றுகூடி முடித்த சூரணம்.

——:(o):——

நற்சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய், இந்துப்பு அதிமதுரம், மல்லி, சடாமாஞ்சி, வகைக்குக் கழஞ்சி ஆக. சமூலமும், சிறுக்காவி வெருகா ஞாயிறுவின் வெயிலுலர்த்திக் கல்வத்திற் பொடித்து வடித்து, சீனிபருப்பு, நன்றாய்க்கலந்து, காற்றுப்படாமல் மண்பாத்திரத்தில்வைத்துக் கொண்டு காலைமாலை, இருகடிப்பிரமாணந் தின்றுவர வியாதிகடீரும். அஜீரணமாய நெஞ்செரிவு, ஏட்டுமம், நீர்க்கடுப்பு, அதிதாகம், அதிக வயிற்றுப் பூச்சி கல்லடைப்பு, சதையடைப்பு, சொறி, தொண்டைப்புண், வாய்நாற்றம், காப்பன்வகை படங்கு நீக்கி, உடல் வலித்து, சரீரமுண்டாய், தலைமூளை பலமாய், கண்ணொளியுண்டாய், பசிபசி முடமிற்சோர்ந்து பெரியவர்களே, கப்பு வழுவாமையாகி, ஞானமுண்டாகி, ஆயுமுண்டாகும். பத்தியம்.—காரப்பு, புளிப்பு, அவபத்தியம்.

——:(o):——

நாலாவது பகல்.

வாதாவைரட்பிக்குச் சூரணம்.

——(:)——

இன்னும், சூலை, சமியாகுணத்தால் வயிறுவலித்து வாந்தி செய்தல் போன்ற வியாதிகட்குச் சூரணம் பதினேழாவது பாபிற் பிந்திவரும். இன்ஷா அல்லாஹுத்த ஆலா.

பத்தாவது பசுல்.

பற்பலவியாதிகட்குசேங்கொட்டைக்குப்தா

சேங்கொட்டைபறங்கிப்பட்டை, செம்மறிக்கடாவினிடுப்பிறைச்சி ஆவினெய் வகைக்குப்பலம் எட்டு. நாற்றியறுபத்தெட்டுப் பலம் அதாவது எழுசேர். ஜலத்தில் மேற்படிச்சேங்கொட்டை, பறங்கிப்பட்டை இரண்டையுமிரவிலூற வைத்து, காலையிலடுப்பேற்றி ஜலமுற்றுஞ்சுண்டும் வரையிற் காய்ச்சி, பின்னிறக்கி மேற்படி கொட்டையை நன்றாய்க் கழுவிப்பறங்கிப்பட்டை மேற்படி இறைச்சி முழுவதுஞ்சேர்த்திடித்து, குப்தாபோற்செய்து மேற்படி நெய்யிற் பொரித்து (40) நாள், காலை மாலை ஒன்று அல்லது இரண்டு தொலா, உப்பில்லாப் பத்தியத்துடன் தின்று வரத்தீரும் வியாதிகள் ; பிறமேகம் அரையாப்பு, பவுத்திரம்' பறங்கிரணம், வாய்வு போன்ற வியாதிகளேயாம்.

பதினொன்றாம் பாபு.

வயிற்றுவலி, பொருமல், போக்கு, கிராணி கழிச்சல் சகலவாய்வு வயிற்றுளைதல் மருந்தீடு, காச்சல் கட்டியாவுக்கும் பலவகை முறைகள்.

ஒன்றாவது பசுல்.

வயிற்றுவலி, குன்மமியாவுக் குங்கைகண்ட சருபத்து.

நவச்சாரம் பலம் இரண்டைப்பொடித்து, ஓர் போத்தலிலிட்டு அத்துடன் ஐம்பது எலுமிச்சம்பழச்சாற்றைப் பிழிந்தூற்றி நன்றாய்க் கலக்கி, போத்தல்வாயைக் காரக்கினாலடைத்து அதைக் குப்பைமேட்டிற் புதைத்து வைத்து நாற்பது நாட் சென்றெடுத்து வைத்துக்கொண்டு வயிற்றுவலி, குன்மமியாவுக்கும், மேற்படி ரசத்திற்கொஞ்சமும் அதனளவு தண்ணீருடன் சீனி சேர்த்து குடிக்க உடனே தீரும்.

இரண்டாவது பசுல்.

குன்மத்துக்கு முக்கியமுறை.

ஒரு, ரூபாயிடை அபியூனும். அரை ரூபாயிடை சூடமும், கறுவாத் தயிலத்திலரைத்து வியாதிக்குத் தக்கவண்ணமதிப்பாகக் கொடுக்கத்தீரும் வியாதிகள்.—சத்தி குன்மமியாவும் வாய்வு, வயிற்றோட்டம் வயிற்றுக்கடுப்புகளேயாம்.

மூன்றாவது பசுல்.

வாய்வினாலான, கைகால்முடக்குக்கு வோர் முக்கியமுறை.

ஓமம்படி காலை யோர்கலயத்திலிட்டு அக்கலயநிறையமணத்தக்காளிச் சாறுவிட்டூறியபின் எடுத்துலர்த்தி இவ்வகையாக மூன்றுதடவையுமச்சாறு விட்டுலர்த்தியபின் தூரிற்சிறிய துவாரமிட்டவோர்கலயத்திற் கால் சேர் சேங்கொட்டையை யிட்டு, அக்கலயத்தை ஓமமுள்ள கலயத்தின் வாய்மேல்வைத்தும், மற்றொரு தூரிற்றுவாரமிட்ட கலயத்தில் கால், சேர், ஒருதலை வெள்ளுள்ளியை நிரப்பி அதன்மேல்வைத்து மூன்றுக்குஞ்சீலை மண்செய்துக்குழிப்புடமிட்டெடுத்து வைத்துக்கொண்டு அவ்வோமத்தில் ஒருமாசா அளவு அந்தி சந்தி எழுநாள் அல்லது பதிநான்கு நாள் தின்று வரத் தீரும்வியாதிகள் வாய்வாலான, கை, கால் முடக்கு, நரம்புகளின் புடைப்பு தடிப்பு போன்ற வியாதிகளேயாகும்.

நான்காவது பசுல்.

ஆந்திரவாய்வு போன்ற வியாதிகட்கு முக்கியமுறை.

வாதமடக்கி, நொச்சி, கற்றாழைச்சோறு, கிழச்சிக்கொடி, வெள்ளுள்ளி, வகைக்குப்பலமொன்று எலுமிச்சம்பழச்சாறு படியொன்று.

ஜாதிலிங்கம், அயமோதகம்: சத்குப்பை, வெங்காரம் வகைக்குக் களஞ்சி யொன்று. நல்ல ஆமணக்கெண்ணெய் படியொன்று சமூலமுங் கலந்துகாய்ச்சி, மெழுகுபதத்திலிறக்கிக் காலைமாலை, காலணு நிறைசாப்பிட்டு வருகத்தீரும் வியாதிகள்: ஆந்திரவாய்வு, அண்டவாய்வு, ஆந்திர கடச்சலாதிய வாத நோய்கள், கழலைக்கட்டாதிய வைகளே.

ஐந்தாவது பசுல்.

வயிற்றுப் பொருமலுக்கு லேகியம்.

ஆவின்பால் படி அரை, காயம் பலம் அரை வெள்ளுள்ளி பலம் ஐந்து சீனி பலம் இரண்டரை உரித்த பூண்டும், காயமும், தட்டி மேற்படிபாலிற்சேர்த்து அடுப்பேற்றிக் கிண்டிச்சீனிசேர்த்து லேகியமாய்க் கிண்டியெடுத்துக் காலைமாலை கொட்டைப்பாக்களவு தின்றுவருகத்தீரும் வியாதிகள் வயிற்றுவலி பொருமல், போன்ற வைகளே வயிற்றுப் பொருமலுக்கு, பேதிக்குவாங்குமுறைகள் சுகபேதிக்குரிய பாடத்திற் கூறபட்டன,

ஆறுவது பசுல்.

சகல குன்மங்கள் வயிற்றுவலிகளியாவுக்கும் அட்டலேகியம்.

தைவேளைச்சாறு படிகால் கடுகு,சீரகம்,மிளகு,சுக்கு,கண்டந்திப்பிலி ஓமம்,திப்பிலி,கருஞ்சீரகம்,வெடியுப்பு,காயம்வகைக்கு,பலம்கால். கருப்புக்கட்டி, பலம் கால். மேற்படி சரக்குகளை,வறுத்து,பொடித்து சீலைவடிகொண்டு, மேற்படி சாற்றிற் கருப்புக்கட்டியைக் கரைத்துப் பாகு காய்ச்சி அதில் மேற்படி,காயமாதிய சரக்குப்பொடிகளைத்தூவித் தூவிலேகிய பதத்திற் கிண்டியெடுத்து வைத்துக்கொண்டு, ஐந்து நாள் பத்துவேளை, கொட்டைபாக்களவு தின்றுவரச் சகல குன்மங்களுந் தீரும்.

ஏழாவது பசுல்.

இன்னுமோர் முறை.

வயிற்றுவலி வந்தவுடன் ஒரு பணவிடை அபியூனை வெங்காயத்தினுள் வைத்து நெருப்பில் வாட்டித்தின்றாலும் கருஞ்சீரகத்தை, கருப்புக்கட்டியுடன் சேர்த்தரைத்துக் கொட்டைப் பாக்களவு தின்று வந்தாலும் தீரும்.

எட்டாவது பசுல்.

மூலக்கிருணி மூலக்கடுப்பு வயிற்றளைவு போன்ற நோய்கட்கு லேகியம்.

வால்மிளகு, ஜாதிக்காய்ஜாதிப்பத்திரி,மாசக்காய்,அரிசித்திப்பிலி, சுக்கு, கராம்பு. நற்சீரகம், கருஞ்சீரகம், மிளகு, வேட்படம் பட்டை வகைக்கு, பலம் கால். தேன்படி அரைக்கால், சரக்குகளை வெதுப்பி இடித்துச் சீலைவடிகொண்டு, தேனில், லேகியமாய்க் குழைத்துக் கொட்டைபாக்களவு, காலை, மாலை. தின்றுவருக அவ்வியாதிக டீரும்.

ஒன்பதாவது பசுல்.

கிருணி, கழிச்சலுக்கு லேகியம்.

சுக்கு, வால்மிளகு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி,கடுக்காய்,மாசாக்காய், ஏலம், சீரகம், கருஞ்சீரகம்; அரிசித்திப்பிலி, கராம்பு. கண்டந்திப்பிலி, வகைக்கு விராகனிடை ஒன்று. மிளகு வேம்படம்பட்டை வகைக்குப் பலம் கால், தேன்படி அரைக்கால். சரக்குகளியாவையுமிடித்துச் சீலைவடிகொண்டு; ஒரு சட்டியை அடுப்பேற்றி யெரித்துச் சட்டியிற் சூடுண்டாகவு மிறக்கி அதிற்றேனைவிட்டு அத்துடன்அத்தூட்களைச் சிறுக, சிறுகத்தூவிக்கிண்டி மறுபடியு மடுப்பேற்றிச் சிறு தீயெரித்து லேகியபதத்திற் கிண்டி யிறக்கி சுண்டைக்காயளவு காலை மாலை அனுப்பானத்துடன் பத்தியமின்றித் தின்றுவருக அந்நோய்க டீரும்.

பத்தாவது பசுல்.

அவ்வியாதிகட்கு மற்றொருமுறை.

கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, வகைக்கு, காசு ஒன்று பெருங்காயம், வெள்ளுள்ளி, மஞ்சள். கருப்புக்கட்டி வகைக்கு, காசு இரண்டு, இவைகளுடன் ஆவரங் கொழுந்து, கீழ்காய் நெல்லி: கரிப்பான் இம்மூலிகைகள் ஒவ்வொன்றிலுங் கொஞ்சம்போற் சேர்த்தரைத்து லேகியம் போலுருட்டி மதிப்பாகத் தின்று வருகத் தீரும் வியாதிகள் மூலக்கிறாணி மூலவாய்வு, வயிற்றுப்பொருமல், வயிற்றோட்டம் பிரசவமான ஸ்திரிகளின் அதி சாரக்கழிச்சல் போன்றவைகளே.

பதினொன்றாவது பசல்.

மூல வாய்வுக்கு மருந்து.

மாளக்கிழங்கு மூன்றுடன் போதுமுள்ள புழுங்கலரிசியைச் சேர்த்து மைபோலரைத்துத் தண்ணீரில் விட்டுக் களிபோற் கிண்டி வருகையிலதிற் கோழிமுட்டை வெள்ளக்கருவைச் சேர்த்துக் கிண்டியிறக்கி நல்லெண்ணெய் கருப்புக் கட்டிசேர்த்துத் தின்றுவருக மூலரோகங்களோடும்.

பனிரெண்டாவது பசல்.

மூலக்கழிச்சல் போன்றவைகட்குக் கைகண்ட முறை.

அபியூன் விராகனிடை ஒன்று மிளகும் புழுங்கலரிசியுஞ் சரிநிறையாயெடுத்துச் சமூலமுந் தண்ணீர்விட்டு மைபோலரைத்து மிளகளவு உருண்டைசெய்துலர்த்திக் கொண்டு, எருமை மாட்டுமோர், அல்லது தண்ணீரிலிழைத்துக் கொடுக்க, மூலக்கிறாணி வயிற்றுப்போக்கு, வயிற்றளைச் சலியாவுந் தீரும்.

பதிமூன்றாவது பசல்.

மேற்கூறிய நோய்கட்கு மறுமுறை.

தேசிப் பழச்சாற்றிற் கசுகசாவை யூறவைத் தரைத்துக் குடித்தாலும், ஆவினெய்யைக் கொதிக்கவைத்து, சீனி போட்டுக்கிண்டித்தின்றாலும் ஆவின்பாலில். அம்மம்பச்சரிசி என்ற மூலிகையை அல்லது மாதளைத் தொலி அல்லது மாங்கீஸ்த்தொலியை அரைத்துக் குடித்தாலும் வயிற்றுளைச்சல் தீரும். நத்தச் சூரிவேரை ஆவின் பால் படி அரைக்காலிலரைத்துக் கலக்கிக் காலைமாலை மூன்றுநாட் குடித்தால், கிறாணி மூலக்கிறாணி மூலவாய்வுசமனும்.

பதினாலாவது பசல்.

வயிற்றளைச்சலுக்குக் கைகண்ட முறை.

ஆவரம்பட்டை, புளிக்கொட்டை மேற்றொலி தேத்தாங்கொட்டை இவைகளைச் சமமாயெடுத்து, தேத்தா விரையை நீரில் நன்றாக ஆறவைத்துச் சமூல முங்கல்வத்திலிட்டு வெண்ணெய் சேர்த்தரைத்துக் கொட்டைபாக்களவு, உருட்டி, ஒன்று இரண்டு வேளை தின்று வருக இரத்தமும், மாமிசமுமாகக் கொட்டுகிற வயிற்றளைச்சலானாலுமுடனே தீரும்.

பதினைந்தாவது பசல்.

வயிற்றுத்தொக்கம், மருந்திடுபோன்றவைகட்கு மருந்து.

நெத்து முதிர்ந்த தேங்காய்ப் பால் படிகாலில் அரைப்பலம், மிளகை அரைத்துக் கலக்கி, அல்லது மேற்படி பாலில், மாகாணி எள்ளெண்ணெய் சேர்த்து. அல்லது மேற்படி பாலில், சாளியா, காசு ஒன்று. சதகுப்பை, காசு ஒன்றரை. இவ்விரண்டையும் அவுரி இலைச் சாற்றாலரைத்துப்பின் அச்சாற்றாற் குழைத்துச்சேர்த்துக்குடித்தாலும் வாந்திப் பிராந்தியாகிய சகல, மருந்தீடு, வயிற்றின் றெங்கல், தொக்கமியாவுந் தீரும். ஆனாலிம்முறையைச் சரீரத்திறமைக்கும் தைரியத்திற்குந் தக்கவாறு மிக்க சாக்கிறதையாக ஆலோசித்துக் கொடுப்பதுத்தமம்.

பதினாறாவது பசல்.

வயிற்றுப் பொருமலுக்கு மருந்து.

உப்பு, சுக்கு, வசம்பு, இவைகளைச் சமமாயெடுத்துப்பொடித்துக் கரித்துக் கருப்புக்கட்டியிற் கொடுக்க வாய்வு வயிற்றுவலி பெருமலி யாவுந் தீரும்.

பதினேழாவது பசல்.

வாய்வு, கைகால் குத்தல், எரிவாதியவைகட்கு மருந்து.

—:(*):—

கோழிமுட்டை மூன்றிற் சிறிய துவாரமிட்டு அதனுள் ஒரு ரூபாயிடை இரசத்தைவிட்டு, அத்துவாரத்தை உளுந்து மாவாலடைத்துக் கிச்சடிச் சாதத்துள் வைத்த விந்து ஆறியெடுத்து, இரசநீக்கி,முட்டையைத் தின்னவும். இவ்வாறு மூன்று நாள் காலை மாலை முட்டையும் அச்சாதமுங் கடினபத்தியத்துடன் தின்றுவருகப் போகும்வியாதிகள்; வாய்வு, வாய்வுப் பிடிப்பாதியவைக டீரும்.

பதினெட்டாவது பசல்.

வாய்வுகட்கு இன்னுமொரு முறை.

—(*)—

உரித்தெடுத்த ஒருதலை வெள்ளுள்ளி, சுத்தமான பெருங்காயம் வகைக்கு ஒரு ரூபாயிடையெடுத்து வெதுப்பி அரைத்துத் தின்றால் தீரும்.

—(:)—

பத்தொன்பதாவது பசல்.

மற்றொரு வகை.

வெள்ளுள்ளி பலம் (3)கருப்புக்கட்டி,பொடுதலை இலை,சுக்குவகைக்கு பலம் ½ நற்சீரகம் மிளகு, வகைக்குபலம் (1) திப்பிலி பலம் (¼) சமூலமுஞ் சேர்த்திடித்துப் புதியமண் கலயத்தில் வைத்துக்கொண்டு, விற்கடி பிரமாணம், காலை மாலை, உப்பு, புளி தள்ளி தின்று வருகச் சகல வாய்வு ரோகங்களுந் தீரும்.

இருபதாவது பசல்.

இன்னமொரு முறை.

—(:*:)—

சீரகம், சாளியல் அரிசி வகைக்கு, பலம் (1) புத்திரி சுண்டல் வேர் பலம்(¼)சீனிபலம் (2)சகலதையும் பொடித்து, மட்சட்டியிலிட்டுச் சீனிகலந்து. நெய்விட்டுக்குழைத்துப் பிசின்போற் பிசைந்துவைத்துக் கொண்டு சுண்டக்காயளவு காலைமாலை தின்றுவருக வாய்வாதியவைக டீர்ந்து, தாதுவிர்த்தியுண்டாகும்.

இருபத்தொன்றாவது பசல்;

இன்னுமொரு லேகியம்.

வெள்ளைச்சாரணை வேர் பலம் (10) சுக்கு ஓமம் பூண்டு, வகைக்கு பலம்(5) மிளகு பலம் (10¾) சீரகம், கொளுஞ்சிவேர், முருங்கைப்பட்டைவகைக்கு பலம் (1¼) அதிமதுரம் பலம் அரைவீசம். கறுவாப்பட்டைகளுஞ்சி(¾) சருக்கரைபலம் (20) நெய்படி(¾) சமூலமும்பொடித்துச் சீலைவடிகொண்டு, சருக்கரையை; ஒருபடி ஆவின்பாலிற்கலக்கிப் பாகு செய்து அதனில்ச் சூரணங்களைச் சிறுகச்சிறுகத் தூவி நெய்விட்டுக் கிண்டிச் சிறு தீயெரித்து மெழுகுபதத்தி லிறக்கி, காலைமாலை சுண்டக்காயளவு தின்றுவர வாய்வுகடீரும்.

* * *

இருபத்திரண்டாவது பசல்.

வாய்வு, குத்தலிவைகட்கு மருந்து.

சுக்கு, பூண்டு. கொடிவேலிவேர், இவைகளை எருக்கலைப்பால்விட்டரைத்துப்பூசினாலும், குக்கில், திருகுகள்ளி,மிளகாய் வற்றல்இவைகளை மேற்படி பால்விட்டரைத்துப் பூசினாலும், சரீரத்திற் கண்ட வாய்வுகுத்தல்கடீரும்.

இருபத்திமூன்றாவது பசல்.

சகல வாய்வுக்கு மின்னு மொரு முறை.

—(:)—

சுக்கு பலம் (3) தாளிசப்பத்திரி பலம் (2½) செவியம், மிளகு வகைக்கு பலம்(½) திப்பிலி, பலம் (2) இவைகளைப் பொடிசெய்து ஆவின்பாலிற் கிளரி, சருக்கரை பலம் (3) சேர்த்துப்பிசைந்து கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவருகச் சகலவாய்வு களுந்தீரும்.

இருபத்திநாலாவது பசுல்.

குடல், வாய்வு பொருமல்கட்கு.

பனைவெல்லம் வெடியுப்புவகைக்கு விராகனிடை இரண்டு. சமூல மும்மைபோலரைத்துச் சுண்டைக்காயளவு மூன்றுநாள் ஆறுவேளை, புளி தள்ளி ஆவின்பால்நெய் சேர்த்துச் சாப்பிடவும் நிரும்வியாதிகள் குடல் வாய்வு குடல் பொருமல், அடிவயிற்று வலி. கிருமியாதியவைகடீரும் ஆறுநாள்குளிக்கவும்.

இருபத்தைந்தாவது பசுல்,

வயிற்றி லுள்ள கட்டி விழுக.

பேய்க் கொம்மட்டிக்காயை அறுத்து உப்பில் மடியவைத்தரைத்துக் கொடுத்தால் வயிற்றிலுள்ள கட்டி விழும்.

இருபத்தாறுவது பசுல்.

வயிற்றளைத்தலுக்கு.

ஊறிப்பொதும்பிய, வெந்தயத்தை அரைத்து அதற்குத்தக்க சருக்கரையைச் சட்டியி லிளகவைத்து அதிலரைத்த வெந்தயத்தை யிட்டும் போதுமானவெண்ணெயுஞ் சேர்த்துக்கிண்டிப்பதமா யிறக்கிவைத்துத் தின்றுவந்தால் வயிற்றளைத்தல் இரத்த மூலம் தீரும்.

பனிரண்டாம் பாபு.

பித்தத்தாலான கைகாலெரிவு சூடு வெட்டை யாதியவைகட்கு அவிழ்தம்.

ஒன்றுவது பசுல்.

விரைவாய்வு, பாரீசவாய்வுகட்குப்பரிகாரம்.

வேலிப்பருத்திர்சாறு, படி (¼) கறியுப்பு மாகாணி புளி, பலம் (¼) இவ்விரண்டு சரக்கையும்அரைக்கால்படி, பச்சைத்தண்ணீரிற் கரைத்து வடிவிறுத்து, மேற்படிசாற்றுடன் கலந்துகுடித்து ஒருநாழிகைக்குப்பின் புளித்தகாடி நீர்குடிக்கவும், அடிக்கடி அப்புளித்த நீர்குடித்துவந்தால் சுகபேதியாகும்; பேதிநின்றவுடன், புளி, மிளகாய் ஆகாரத்துடன் சுடுகஞ்சி குடிக்கவும் இவ்வாறு மூன்றுநாள்மட்டும், மருந்து குடித்து, நாலாவதுநாள் தலைமுழுகி, பதினைந்து நாள் மட்டும் நல்லெண்ணெய், கடுகு, இவைகளைத்தள்ளி. மிளகரைத்து காய்ச்சிய ஆவின்பாலால் மூன்று முழுக்கு முழுகிப் பின்னர் பத்தியம் விடவும், மேற் கூறியவாய்வுகடீரும்.

இரண்டாவது பசுல்.

பாரீச வாய்வுபோன்றவை கட்கு.

கருஞ்சீரகம் வெள்ளுள்ளி சுக்கு வகைக்கு. காசு அரை பெருங்காயம், காசு ஒன்று குப்பைமேனிஇலை, கொஞ்சம் எருக்கலைமொட்டுப்பூ, ஏழு சகலதையு மரைத்து ருட்டித்தவிடு அல்லது மாவிற்புரட்டி மூன்று நாள் ஆறுவேளை கொடுக்க மேற்படி வியாதி தீரும் பத்தியமில்லை.

மூன்றுவது பசுல்.

குறித்த வியாதிக்கு மற்றொரு முறை.

பெருங்காயம். களச்சிப்பருப்பு வகைக்கு, பலம்¼ பூண்டு கருப்புக்கட்டி, வகைக்கு பலம் (2) எருக்கலைப்பூ பலம் (1) இச்சரக்குகளை நெத்

தாகிய தேங்காய்ப் பாலில் வேகவைத்துக் கிண்டி லேகியம்போலான பிறகு மூன்றுநாள் ஆறுவேளை கொட்டைப்பாக் களவும், திரேகபெலத்துக்கேது வாயுஞ்சாப்பிட்டு வருகத்தீரும்.

நாலாவது பசுல்.

விரை வீக்கத்திற்குப் பரிகாரம்.

மயிலிறகு சுட்ட சாம்பலைத் தேனிற்குழைத்துக்கொடுத்தாலும்துத்திவேரைச் சதைத்து, தேனில் நனைத்தத்துணியை அவ்வேருக்குமேற் சுத்தியோர் சட்டியில் வைத்தெரித் தெடுத்த சாம்பலை முலைப்பாலிற் குழைத்துக்கொடுத்தாலும் தீரும்.

ஐந்தாவது பசுல்.

விரை வாய்வுக் கோர்லேகியம்.

முத்தின தேங்காய் (1) கழச்சிப்பருப்பு (20)பெருங்காயம், எருக்கலைப்பூவகைக்கு பலம் ($\frac{1}{3}$)பூண்டு சீனி, இஞ்சிவ்வகைக்கு,பலம்(2)இச்சரக்குகளை யிடித்து இஞ்சிச்சாறுடன் மேற்படி தேங்காய்ப் பாலுஞ் சேர்த்து அடுப்பேற்றி லேகியப்போற் கிண்டியெடுத்துத் தின்றுவரத் தீரும் - பத்தியமில்லை.

ஆறுவது பசுல்.

அண்ட வாய்வுக்கு நல்ல வொருபரிகாரம்.

காட்டு முருக்கம்பூவைச் சிறுநீர் விட்டவித்து, பூவரசனிலையிலதைப் பிரத்திவைத்து இரண்டுவிரைக்கொட்டை, மேலுங் கீழும் பொருந்தும்படிக்குச் சேர்த்து, கோமணங் கட்டிக் கொள்ளவும். இவ்வாறு மூன்றுநாடொடர்ச்சியாகக் கட்டிவருக, ஆயுளுள்ள பரியந்தம் அவ்வியாதிவாராது.

ஏழாவது பசுல்.

பாரிசவாய்வுக்கோர்பரிகாரம்

மூக்கரணன் சாரணத்தி, குப்பைமேனிதைவேளை. சிறுகீரை, அறைக்கீரை, இவைகளின் வேர் எருக்கலைமொட்டுப்பூ, களிப்பாக்கு இவைகளியாவுஞ் சரிநிறையாகவெடுத்து தண்ணீர்விட்டரைத்து, தவிடு அல்லதுமாவிற் புரட்டி வேளை வொன்றுக்குக் கொட்டைப்பாக்களவு காலை மாலை ஆறுவேளைகொடுக்கத்தீரும்.

எட்டாவது பசுல்.

திரேகக்காந்தலுக்குக்கைகண்டபரிகாரம்.

ஒரு இளநீரின் முகத்தைப்பொத்து அதில் ஒருகாசிடை சீனக்காரம் பொடித்துப் போட்டு பனியில்வைத்து, காலையிலெடுத்து அந்நீரை யருந்தி வழுக்கையைத் தின்று வரவும் இவ்வாறு மூன்று தினஞ் சாப்பிட்டு வருகத்தீரும்.

ஒன்பதாவதுபசுல்

புளவை, கட்டுச்சிலந்தி போன்ற வைகளின்காந்தலுக்குப் பரிகாரம்.

கோவை இலைச்சாற்றில் ஆவின் வெண்ணெய் சேர்த்து மத்தித்து, வீக்கமுதலிய மேற்படி வியாதிகளிற் பூசவே அக்காந்தலடங்கும்.

பத்தாவது பசுல்.

பித்தத்தாலுண்டான, கை, கால் காந்தல்களுக்கு லேகியம்.

நிழலுலர்த்திப் பொடித்த வில்வம்பழத் தூள், சீனி, சருக்கரை, தேன் வகைக்குப் பலம் (5) கொட்டைநீக்கிய முந்திரிப்பழம் பலம் (3) சருக்கரையைப் பாகுசெய்து அதில் முந்திரிப்பழத்தை யரைத்துப் போட்டு அத்துடன் அச்சூரணத்தைச் சேர்த்துக் கிண்டிவருகையில், நெய்யும் தேனுமிட்டுக் கிண்டி நல்லபதத்தி லடுப்பைவிட்டிறக்கி, காலை

மாலை அரைரூபாயிடை சாப்பிடவும். காந்தலதிகமா யிருந்தால், பச்சைநெல்லிக்காய் அல்லது மேற்படி வற்றலிற் கிஷாயஞ்செய்து நெய்யுடன் காய்ச்சி, நீர் சுண்டியபின்னர் எடுத்து, கொஞ்சம்போல் நெய் தின்றுவருவதுடன் திரேகத்திலும் பூசிவரவும். இவ்வாறு மூன்று நாள் செய்யவே அக்காந்தல்க ளடங்கும். அவபத்தியம்.

——(*)——

பதினொன்றாவது பசுல்.

பாரிசவாய்வு, வாதமிவைகட்குப் பூச்சுமருந்து.

தேள்வையுள்ள, எட்டிக்கொட்டையை மெல்லிசா யிழைத்து, தல்வத்தில் அறக்கு, சாராயமிட்டு மைபோலரைத்து, பத்து போட்டால், குத்தல்வலி, திமிர், பச்சைவாதமியாவுந் தீரும். இவ்விதம், முதனாள்பூசி, மறுநாள் துத்தியிலையிட்டுக் காய்ச்சிய வெந்நீரா லதைக்கழுவவும் இவ்வாறு மூன்றுதடவை செய்யத்தீரும். பரீட்சிக்கப்பட்டது.

பனிரண்டாவதுபசுல்.

திரேக எரிவுக ளடங்க.

——(*)——

தேள்வையான வெந்தயத்தைக் கற்றாழைமடலுள் வைத்தூற வைத்து,காலையிலதையரைத்து ஆவின்பால்சேர்த்துக்குடிக்க,எவ்விதத் திரேகக் காந்தல்களுந் தீரும்.

பதிமூன்றும் பாபு.

சூடு, வெட்டை, வெள்ளை, பெரும்பாடுகளுக்குப் பரிகாரம்.

ஒன்றாவது பசுல்,

வெடத்தலைச் சாறும் ஆவின்பாலுஞ் சமமாய்ச் சேர்த்துக் காலைமாலை ஆறுவேளை கொள்ளத் தீரும்.

இரண்டாவது பசுல்.

புளிக்கொட்டைத்தொலியிற் றேள்வையானதை ஒருபடி ஜலத்திலூறவைத்தரைத்து நல்லெண்ணெயிற் கலக்கிக் குடித்தாலுந் தீரும்.

மூன்றாவது பசுல்.

——(:)——

முடக்கத்தானிலைச்சாறு, படி அரைக்காலை ஆவின்பாலிற் சேர்த்துக் குடித்தாலுந்தீரும்.

——):(——

நான்காவது பசுல்.

——()——

வரகுவைக்கோலில் வாட்டிப்பிழிந்த கற்றாழைக்கிழங்கின் சாறு படி, காலில், சீனிசேர்த்துக் குடித்தாலுந் தீரும்.

——(*)——

ஐந்தாவது பசுல்.

——[*]——

உலகஇலையும், சருள்ளியு மிடித்துப் பிழிந்தசாற்றில் நற்சீரகம் பலம் அரைக்காலரைத்துக் கலக்கிப் பின்னர் நல்லெண்ணெய் மாகாணிவிட்டுச் சேர்த்துக் குடித்தாலுந் தீரும்.

ஆறாவது பசுல்.

தாழைஇலை ஆலம்விழுது, உலகஇலை, வல்லாரைஇலை, இவைகளைப் புதியபானையிலிட்டு மூன்றுபடி தண்ணீர்விட்டு அரைப்படியாக வற்றக் காய்ச்சி, காலைமாலை ஆறுவேளையும் வடிகட்டிக் குடித்தாலுந் தீரும்.

——(:)——

ஏழாவது பசுல்.

காசுக்கட்டி, பலம் அரைக்காலை, கழனிநீரிலூறவைத்துக் காலையிற்றெளிவிறுத்து அதில், மாகாணிகடு, மாகாணிநல்லெண்ணெய்விட்டு, இவ்வாறு மூன்றுநாள் குடித்தாலுந் தீரும்.

எட்டாவது பசுல்.

எலுமிச்சரசத்துடன் ஆவின்பால், சீனிக்கார பற்பஞ்சேர்த்துக் குடித்தாலுந் தீரும்.

—(*)—

ஒன்பதாவது பசுல்.

கற்றாழைமடலைப் பிளந்து அதற்குள் நற்சீரகம் பலம் ஒன்றை வைத்து மூடிப்பனியில்வைத்து எடுத்து, மேற்படி சீரகத்தைக் காலைமாலை அரைத்து ஆவின்பாலிற் கலந்து குடித்தாலுந்தீரும்.

பத்தாவது பசுல்.

எலுமிச்சரசம் அல்லது ஆவின்பாலில் மான்கொம்புப் பற்பத்தை அல்லது பகளப்பற்பத்தைச் சேர்த்துக்குடித்தாலுந் தீரும்.

—(*)—

பதினொன்றாவது பசுல்.

தயிரில், எருக்கலைப்பாலில் நான்கு சொட்டுவிட்டுக் கலந்து, சூடாறுமுன் குடித்தாலுந் தீரும்.

பனிரண்டாவது பசுல்.

—(*)—

மண்மாணிக்கஇலை, அல்லது, அதன்வேரை அரைத்து ஆவின்பாலிற் கலந்து குடித்தாலுந் தீரும்.

பதிமூன்றாவது பசுல்.

—(*)—

(6)

யானைநெருஞ்சி யிலையை அரைத்து நீராதாரத்திற் கலக்கிக்குடித்தாலுந் தீரும்.

—(:*:)—

பதினான்காவது பசுல்

—(:*:)—

பொடுவலை, கையாந்தகரைச் சாற்றை உப்பில்லாத பத்தியத்துடன் மூன்றுநாள் குடித்தாலுந் தீரும். இம்முறைகளி லொவ்வொன்றும், குறித்த வ்யாதிகளைப் போக்கும்.

பதினைந்தாவது பசுல்.

பெரும்பாடு, வெள்ளை, வெட்டைக்குப் பற்பம்.

சுத்தமான, சிவந்த பட்டுநூலை யோர் சட்டியி லிட்டு மேல்மூடி அடுப்பேற்றி யெரிக்கப் பற்பமாய் நீற்றுப் போனபின்னர் எடுத்து டப்பியில் வைத்துக்கொண்டு, வெண்ணெய், தேனில் ஒருபணவிடையளவு மூன்றுநாள் கொடுக்கத்திரும். அவபத்தியம்.

பதினாறாவது பசுல்.

வெட்டை, வெள்ளை, பெரும்பாடு, நீங்கி, ஸ்தூலவலுவுண்டாகப் பக்குவம்.

—(:*:)—

தேவையான ஆவின்பாலை, பருமமுள்ள, துத்திவேரினுற்றுளாவிவற்றக்காய்ச்சி, சுண்டி நீருலரும்வரையி லிடைவிடாமற் கிண்டிவந்தால் சருக்கரையாகும். அதைத்தின்றுவர மேற்கூறிய பலனைக்கொடுக்கும். மேற்படி இலையும், குறுவைநெல் லரிசியும் இடித்துத் தெள்ளித் தின்றுவந்தால், வெட்டை, பெரும்பாடு, தீரும். இன்னும் வெள்ளைங் காக்கரட்டை வேரை, எலுமிச்சங்காயளவு அரைத்து, வெள்ளாட்டின் பாலிற்கலக்கி மூன்றுநாள் கொடுக்கவே பெரும்பாடு தீரும்.

பதிநான்காம் பாபு.

தாது விர்த்திக்குரிய முறைகளைக் கூறல்.

—(:*:)—

ஒன்றுவதுபசுல்.

தாது விர்த்திக்காவசியக, கோதம்பு "ஹல்வா."

—(:*:)—

ஒருபடிக் கோதம்பு "ரவையை" மூன்றுநாள்வரையிற் றண்ணீரிலூறவைத்தெடுத்து நன்றாய் பிசைந்து அதன் சக்கைநீக்கித் தெளிந்த மேற்றெளிவை யிறுத்துவிட்டு பண்டிபெடுத்து ; நான்குபடி சீனியைத் தண்ணீரிற் கலக்கி அடுப்பேற்றி யெரிக்கும்போது அச்சீனியில் ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கருவை யிட்டுக் கிண்டினா லதனிலுள்ள கழிவுநுரையாக வெளிப்படும். அவைகளைப் போக்கிப் பாகுபதத்திலானவுடன் அதில் மேற்படிக் கோதம்புப்பாலை விட்டுக்கிண்டு கையில், ஆவின்பால்படி அரையும், நெய்படிகாலும் ஒன்றன்பின் ஒன்றாக விட்டுக்கிண்டி, லேகியபதத்தில் இறக்கி அதிற் பாதம்பருப்பு, முந்திரிப்பழமிவைகளைச் சேர்ப்பித்து வைத்துக்கொண்டு காலைமாலை கொட்டைப் பாக்குப் பிரமாணஞ் சாப்பிட்டுவருகத் தாது விர்த்திக்கும்.

—(:*:)—

இரண்டாவது பசுல்.

தாது விர்த்திக்கு, கைவல்லிய லேகியம்.

—()—

குறுவைநெல்லரிசிமா, அல்லது உளுந்துமா அல்லது கோதம்புமா, படி (1) ஆவின்பாற்படி (அரை-) அம்மாவை, இப்பாலிற்கலக்கி அடுப்பேற்றி நெருப்பெரித்துப் பாகுபதத்தில், கற்கண்டுப்பொடி படி(அரை) சேர்த்துக்கிண்டி, பின் தேன்படி (அரை) விட்டுப்பிறகு நெய், படி (அரை) விட்டு லேகியபதத்திற் கிண்டியிறக்கி, பாதாம்பருப்பு, முந்திரிப்பழம், கசகசா இவைகளை அதிற் சேர்ப்பித்து, காலை மாலை, கொட்டைப்பாக்களவு தின்றுவர, தாதுவிர்த்தி யுண்டாகி, ஸ்தூலம் பூரிக்கும்.

—(:*:)—

மூன்றுவது பசுல்.

தாது விர்த்திக்குப் பரீட்சித்த வோர் லேகியம்.

—:(*):—

கோழிமுட்டை 100. அதன் வெள்ளைக்கருவும் தேன்படி ஒன்று ஆவின்பால் படிஇரண்டு. வெங்காயச்சாறுபடி இரண்டு. உளுந்துமாப்படி அரை, நெய்படி அரை. மேற்படிபால், தேன், சாறு இம்மூன்றையு மொன்று கலந்து அடுப்பேற்றிக் கொஞ்சம் போல்வற்றியபின் மேற்படி, மா, முட்டை இவைகளை விட்டுக்கிண்டிவருகையில் நெய்சேர்த்துப்பாகமாயிறக்கி வைத்துக்கொண்டு, காலை மாலை, கொட்டைப்பாக்குப் பிரமாணம், தின்று வரத் தாதுவிர்த்திக்கும்.

நான்காவது பசுல்.

வீரியவிர்த்திக்கு முக்கியானுகூல லேகியம்.

—(*)—

சுக்கு, மிளகு, கராம்பு, லவங்கப்பட்டை, வால்மிளகு, திப்பிலி, குழல் கறுவா, அக்ரூஸ்தகா, வகைக்குப்பலம் அரை. சமூலமிடித்துச் சீலைவடிகொண்டு தேங்காய்த்தனிப்பாலிற்சேர்த்து அடுப்பேற்றிக்கிண்டி தேன்படிகால்விட்டு, லேகியபதத்திலிறக்கி, காலை மாலை, இருகளஞ்சிநிறையளவுதின்று வரவீரியவிர்த்தியுண்டாகும்.

—:(*):—

ஐந்தாவது பசுல்.

தாது விர்த்திக்கு இன்னுமொருலேகியம்.

—[-]—

நற்சீரகம், எலரிசி, தாணிக்காய், தாளிசபத்திரி, ஜாதிப்பத்திரி அதிமதூரம், கருஞ்சீரகம், லவங்கப்பட்டை, சதகுப்பை, சுக்குதிப்பிலி வகைக்குவிராகனிடை(10)ஜாதிக்காய்விராகனிடை(8)சிறுநாகப் பூவிராகனிடை (7) சீனிபலம் (2) தேத்தாம்விரைபடி (அரை) ஆவின்வெண்ணெய்பலம் (41) மேற்படிசரக்குகளையிடித்துச்சீலைவடிகொண்டுமேற்படிதேத்தாம்விரையை மேற்படிபாலில் நன்றாகவூறவைத்தரைத்து மேற்படிவெண்ணெயுடன்அடுப்பேற்றிக்கிண்டி, அத்தூட்களைத்தூவித் தூவியுளாவிநெய்விட்டுக் கிண்டிமெழுகுபதத்திலிறக்கி, காலைமாலை, கொட்டைப் பாக்களவு தின்றுவரவியாதிகணீங்கி, தாதுவிர்த்திக்கு அவபத்தியம்.

ஆறாவது பசல்.

காமரூபி லேகியம்.

நூறு அடைக்கலாங்குருவியை அறுத்து அதன் குடல், தூவலாதியவைகளை நீக்கிச்சுத்தி செய்து, இரு, நாழிநீரில், பதினாறிலொன்றாகவற்றக்காய்ச்சி, விளாம்பிசின், ஆவரைப்பிசின்முருங்கப்பிசின், ஆலம்பிசின் கருவேலம்பிசின் வகைக்குபலமொன்று. இப்பிசின்களை நீரிலூறவைத்துப்பிசைந்துவடித்து, தேங்காய்ப்பால், ஆவின்பால், தென்னம்பாளையின்பால், மேதிப்பால் முருங்கை இலைச்சாறு, கசகசாப்பால், ஆலம்விழுதுப்பால், வகைக்குப்படி இரண்டு. செவ்விளநீர், நெல்லிச்சாறு, வல்லாரைச்சாறு, கீழ்காய்நெல்லிச்சாறு, புளியாரைச்சாறு. பொற்றலையான்சாறு, பிரமந்திவிரைப்பால் தூதுளைச்சாறு, வகைக்குப்படி ஒன்று. சகலமையுமொன்றாய்சேர்த்து, சருக்கரை வீசைஒன்றாகரைத்துவடித்து அடுப்பேற்றிப் பாகுபதத்தில், அதிவிடயம், கடுக்காய் ஜாதிக்காய், கோஷ்டம் ஏலம், ஜாதிப்பத்திரி வால்மிளகு, திரிகடுகு, முந்திரிகை, சாரப்பருப்பு மாம்பருப்பு வாதுமைவித்து, நத்தைச்சூரிவித்து முருங்கைவித்து மாதுளம்வித்து அரசன்வித்து ஆவரைவித்து, மாசிக்காய், தான்றிக்காய். காம்பு, தாளிசப்பத்திரி, குரோசாணி யோமம் மதுரம், மகாத்துமல்லி, ஓமம்பேரிச்சம் அத்திப்பிஞ்சி, நிலவாகை ஆலம்வித்து, நீர்முள்ளிவித்து நெருஞ்சிவித்து நாயுருவிவித்து, ஆவரைவித்து வகைக்குப்பலம் ஒன்று. இவைகளைச்சூரணித்து அத்துடன் முருங்கைப்பூச்சூரணம் பலமொன்று. சேர்த்து ஆவின்பாலிற்பிட்டவித்துலர்த்திப்பொடித்து, மேற்சுட்டியபறவைமாமிசத்தைக்கல்வத்தில் மைபோலாட்டிச்சிறியசிறியவில்லைகளாய்ச்செய்து, ரவியுலர்த்திப்பொடித்து அச்சூரணங்களுடன் கலந்து மேற்படிபாகில் தூவிடுஅடுப்பேற்றிஆவின், நெய்படிஇரண்டு விட்டுக்கிண்டிக் குங்குமம், கோரோசனை வகைக்குப் பலயொன்று, நுரைநீக்கியதேன்படி யொன்றுசேர்த்து லேகியபதத்திலிறக்கி, வைத்துக் கொண்டு புன்னைக்காயளவுலேகியத்தில் இரண்டரிசியிடைவெள்ளிப்பற்பம் வைத்து ஒருமண்டலம் காலை மாலை, தின்று வரக்குன்மம் பவுந்திரம், கிருணி எலும்புருக்கி யோனிவியாதிகளியாவு நீங்கித்தாதுவிர்த்தியாகும்.

ஏழாவது பசல்.

தாதுவிர்த்திக் கிலேகியம்.

உளுந்துமாப்படி ஒன்று கொட்டைநீக்கிப்பேரீத்தங்காய் தேன், நெய், வகைக்குப்பலம்ஐந்து கிஸ்மிஸ், பனங்கற்கண்டு வகைக்குப்பலமொன்று அதிமதுரம்பலம், நாலு, கடுகுரோகணிவால்மிளகு குரோசாணியோமம், ஓமம், மராட்டிப்பொக்கு, சுக்கு, மிளகு, வகைக்குப்பலம் அரை. பள்ளாட்டுத்தலை யொன்று, இத்தலையைத்தசைகளறவேகவைத்துப்பிசைந்துவடித்த சூப்பு, படி, ஒன்று. மேற்படிமாவை அதிற்கரைத்து அடுப்பேற்றி அச்சரக்குகளைச்சூரணித்து அதிற்றூவித்தேன். நெய்விட்டுக் கிண்டி, லேகியபதத்திலிறக்கிவைத்துக் கொண்டு, காலைமாலை, கொட்டைப்பாக்களவு தின்று வரத்தாதுவிர்த்தியாகும்.

எட்டாவது பசல்.

தாதுவிர்த்திக் கிலேகியம்.

ஜாதிக்காய், காம்பு, அதிமதுரம், கசகசா, மதனகாம்புப்பூ வகைக்குக்களஞ்சி யொன்று. இவைகளை இளம் வறுப்பாக வறுத்துப்பொடித்து அபியூன்களஞ்சி, இரண்டு. முருங்கைப்பிஞ்சுச்சாறுவிட்டரைத்துமூன்று நாளுலர்த்திப் பொடித்து அப்பொடியுடன் சேர்த்து வெள்ளாட்டம்பால்படி அரையிற்கருப்புக்கட்டிபலமிரண்டு கலக்கிஅடுப்பேற்றிக் குறுகினபதத்தில் மேற்படித்தூட்களைப்போட்டுக்கிண்டிமெழுகுபதத்தில் ஆவின்பால் நெய், தேன் இம்மூன்றும் சமமாகவிட்டுக்கிண்டிலேகியபதத்திலிறக்கி, மாலையில் சுண்டக்காயளவுதின்று, இரவானபோது, தன்னிட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவும். அதிகபலனுண்டாகும். அன்றிரவு புளித்தள்ளிச்சாப்பிடவும்.

ஒன்பதாவது பசல்.

தாதுவிர்த்திக்கு மற்றொருமுறை.

அதிமதுரத் தூளையோர்மதிப்பாயெடுத்துத் தேனிற் குழைத்து, அதில்எட்டுக்கோழிமுட்டையும்,ஒருகதலி வாழைப்பழத்தையுஞ்சேர்த்துப்பிசின்போற் பிசைந்துமாலையிற் தின்றுவந்தால் தாதுவிர்த்தியுண்டாம்.

——:(*):——

பத்தாவது டசுல்.

தாதுவிர்த்திக்கு இன்னமொருமுறை.

ஜாதிக்காய் ஜாதிபத்திரி, கராம்பு,சுக்கு, அபியூன் மிளகு,கோஷ்டம், அதிமதுரம்,இவைகளியாவுஞ்சமநிறையாக வெடுத்துலர்த்தியிடித்துத் தேனிட்டுப் பிசின்போற்பிசைந்து தின்றால்“ ஜிமாஉ” பெலமாகும் புளிதள்ளவும்.

——:(*):——

பதினொன்றாவது பசுல்.

தாதுவிர்த்திக்குச் சிட்டுக்குருவிலேகியம்

சிட்டுக் குருவிஐந்து, சுக்குபலம் ஒன்று. ஜாதிக்காய்ஐந்து. ஜாதிபத்ரி, களஞ்சி, இரண்டரை கராப்பு,ஏலம்,வகைக்கு, களஞ்சி ஒன்றேகால். மாசாக்காய், சீரகம் வகைக்கு, களஞ்சி இரண்டு. வால்மிளகு, கடுக்காய் அதிமதுரம் வகைக்கு களஞ்சி ஒன்று, சாரணைவேர்களஞ்சி எட்டு. சருக்கரை ,பலம் நாலு, நெய் படி, கால், சுத்தூரிகோரோசனை வகைக்கு, களஞ்சி அரை. சரக்கு களியாவையும், மைபோலரைத்து ஒருபடி. தண்ணீரில் அச்சருக்கரையைக் கரைத்துப்பாகு காய்ச்சி அதில் மேற்படிமருந்துகளைக் கரைத்துச்சேர்த்துக் கிண்டிக்கீல்போன்றபதத்தில் வந்தவுடன், அக்கஸ்தூரி, கோரோசனைகளைப்பொடி செய்துசேர்த்து, நெய்விட்டுக் கிண்டி, லேகியபதத்தில் எடுத்துக்கொண்டு, காலை மாலை, சுண்டைக்காயளவு, தின்றுவரச் சகல வாய்வுகளையும் போக்கி, தாதுவிர்த்தியை யுண்டாக்கும்.

——[*]——

பனிரண்டாவது பசுல்.

தாதுவிர்த்திக்கு மற்றொரு வகைமுறை.

——(*)——

ஆலம்பால்படி, கால்: ஆவின்பால் படி, காலரைக்கால் கத்தூரி. விராகனிடை மூன்று. கோரோசனை விராகனிடை ஐந்து. பெரிய ஜாதிக்காயொன்று. ஏலரிசி விராகனிடை நான்கு. கருவாப்பட்டை, கராம்பு, வகைக்கு விராகனிடை இரண்டு. முருங்கைப்பிஞ்சு பிடியொன்று. அடைக்கலாங்குருவி மூன்று. சருக்கரை பலமிரண்டு. நெய் மாகாணி ஒன்று. உளுந்துப்பருப்பு, கொஞ்சம், மேற்படி குருவியை மறுநெய்விட்டுப் பொரித்துலர்த்திப் பொடி செய்து, மேற்படி ஆலம்பால் ஆவின்பால் இரண்டிலும் அம்முருங்கைப்பிஞ்சை அழிய வேகவைத்துப் பிசைந்து அதன் சக்கை நீக்கிய, ரசத்தில் மேற்படி மருந்துகளைத்தூட் செய்து சேர்த்து அத்துடன் அக்குருவி மாமிசப் பொடியுஞ்சேர்த்து அடுப்பேற்றிக்கிண்டி, சருக்கரையும் நெய்யுமிட்டுக்கீல் போன்ற பதத்தில் வந்தவுடன், அக்கோரோசனை, கஸ்தூரியும் பொடித்துச் சேர்த்து லேகியபதத்தில் இறக்கிச் சுண்டைக்காயளவு தின்றுவர, இரத்தவிர்த்தி யுண்டாகித் தாததிகரித்துக் கெட்டியாகும்.

பதிமூன்றாவது பசுல்.

தாதுவிர்த்திக் கிலேகியம்.

——(*)——

ஜாதிக்காய் ஜாதிபத்திரி, கராம்பு. வால்மிளகு, ஏலரிசி, பச்சிலை, நாகப்பூ,தற்கோலம், சடாமாஞ்சில் தான்றிக்காய் வகைக்கு, களஞ்சி ஆறு, கடுக்காய், வாட்டு மஞ்சள் வகைக்கு, களஞ்சி நாலு நெல்லிக்காய், திப்பிலி, முளைகி அரிசி கோதம்பு பச்சைப்பயறு. வகைக்கு களஞ்சி எட்டு. சகலத்தையு நன்றாயிடித்துச் சீலைவடிகொண்டு. ஒரு ரூபாயிடை, கஞ்சாவை, முக்கால் படி நீரில் ஒரு நாளும், இளநீரில் ஒருநாளும் ஊறவைத்தெடுத்துச் சுத்தி செய்தபின்னர் மதன காம்புப் பூ, ஒரு ரூபாயிடை யதிற் சேர்த்து விரை நீக்கிய முந்திரிப்பழம், கற்கண்டு, விரை நீக்கிய பேரீத்தங்காய் வகைக்கு, பலம் இரண்டு. சருக்கரை பலம் ஒன்று எல்லாவஸ்துக்களையும், அரைக்கால் படி, தேனிற் சேர்த்து, பிசின்போல் வருமளவு நன்றாய்ப் பிசைந்து, லேகியமாக்கிக் கொண்டு, நெல்லிக்காயளவு, காலை அல்லது மாலையில் மட்டுந்தின்று வந்தால், தாதுவிர்த்தியாகி இரத்தவிளைவதிகரித்து ஜிமாஉ வலுவுண்டாகிச் சுகத்தைக்கொடுக்கும். வியாதிகளை நாசப்படுத்தும்.

பதிநான்காவது பசுல்.

மற்றொரு முறை.

சுக்குப்பலம் ஒன்று. ஜாதிக்காய், சருக்கரை வகைக்குப்பலம் ஒன்றேகால். கடுக்காய், கராம்பு, ஏலம், அதிமதூரம் மல்லி, வகைக்குப் பலம் கால். வால்மிளகு, ஓமம், மாசாக்காய் வகைக்குப்பலம் அரை. சீரகம், சாரணைவேர் வகைக்குப்பலம், முக்கால். சகலதையு மிடித்துச் சீலைவடிகொண்டு, மேற்படி சருக்கரையைப் பாகுகாச்சி அதில் சரக்குகளையிட்டுக் கிண்டி. நெய் அல்லது எண்ணெய்விட்டு லேகிய பதத்திலிறக்கிக் காலை மாலை சுண்டக்காயளவு, தின்றுவரத்தாதுவிர்த்திக்கும்.

பதினைந்தாவது பசுல்.

"மற்றொருமுறை"

ஆவின்பால்படி ஒன்று. கோதம்புமா, பலம் நான்கு சீனி பலம் இருபது. சகலதையு மடுப்பேற்றிக் கிண்டி, பாகுபதத்தில்; நீர்முள்ளிவிரை, நிலப்பனைக்கிழங்கு, லவங்கப்பட்டை பனைவேர் வகைக்குப்பலம் நான்கு, கருவம்பிசின் சுத்திசெய்த கஞ்சா. வகைக்குப் பலம் இரண்டு சந்தனம் ஜாதிக்காய், கராம்பு பெருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை இரண்டு திப்பிலி பலம். அரை. இவைகளைச்சூரணித்துச் சேர்த்துக்கிண்டி நெய்படி அரைவிட்டு மெழுகுபதத்திலிறக்கி ஆறிய பின்னர், அதில் பேரீத்தம்பழம் பலம் நான்கு, தேன்பலம் பத்துச் சேர்த்துப் பிசைந்து வேளையொன்றுக்குக் கொட்டைப் பாக்களவு தின்று வரவிந்தூறும் போகமிகும்.

பதினாறாவது பசுல்.

மற்றொருமுறை.

செம்மறிக்கிடாயின் முதுகென்பின் இருபக்கத்திலுள்ளமாமிசத்தை யெடுத்து "கைமா" செய்து காட்டு வாழை விரைபலம் ஒன்றை நன்றாயிடித்துச் சூரணித்து அம்மாமிசத்துடன் சேர்த்து மத்தித்து வில்லைசெய்து, வைத்துக்கொண்டு காலை மாலை ஒவ்வொருவில்லையாக

நெய்யிற் சேர்த்து சாப்பிட்டுவருக அதிக சக்தியையுண்டாக்கும்." பத்துபேருடன் மல்லுகட்டுஞ் சக்தி ஸ்தூலம்வலுவாகும். தின்று முடியுமளவும் அவபத்தியமாயிருந்து, நெய், இறைச்சி றொட்டி இவைகள் சாப்பிடல் வேண்டும்.

பதினேழாவது பசுல்.

இன்னமொருமுறை.

கருங்குறுவைப் பச்சை அரிசிமா, படி மூன்று. இதை வறுத்து வரவரப்புண்டானவுடன் அதில், ஆறுமுத்தின தேங்காய்த்தனிப்பாலைச் சிறுகச்சிறுகத் தெளித்துக்கிண்டி அது போலவே, நல்லெண்ணெய் படி ஒன்றைவிட்டுக்கிண்டி யிறக்கி யோர் புதிய பாத்திரத்தில் வைத்துக் கொண்டு, காலை மாலை கொஞ்சமெடுத்து அதிற் சருக்கரை கலந்து தின்றுவர அதிக தத்துவசக்தியுண்டாகும் அபத்தியம்.

பதினெட்டாவது பசுல்.

இதுவுமது.

கொட்டை நீக்கிய பேரீத்தம்பழஞ் சேர் ஒன்று இதையோர்கலயத்திலிட்டு அப்பழ மூழ்க ஆலம்பால்விட்டுப் பின்னர் அதன்மேல், சுயம்பிரம்ப நெய்விட்டு, வாய் மூடிச் சீலைமண் செய்து, அதன் கழுத்தளவு பூமிக்குள் புதைத்து, அதன்மேல் ஐந்தாறுவராட்டியிட்டுப்புடமிட்டெடுத்து ஜாதிக்காயிரண்டு ஜாதிபத்திரி, கசுகசா, அரிசித்திப்பிலி, ஏலம் கராம்பு வால்மிளகு, வகைக்குப்பலம் ஒன்று. வெள்ளை சீனிபலம்இரண்டு ஆவின்பால் படி ஒன்று. இவைகளை யொன்று சேர்த்து அடுப்பேற்றி லேகித்தபின்னரிறக்கித் தின்றுவர மிக்க புகழத்தக்க புஷ்டியை யுண்டாக்கும்.

பத்தொன்பதாவது பசுல்.

தாது கட்டுப்பட லேகியம்.

இரண்டு ஜாதிக்காயினுள் ஒரு விராகனிடை அபியூனை நிரப்பி, நூற்கொண்டு கட்டி முருங்கை மரத்தைத்துளைத்து அதனுட்செலுத்தி வைத்துப் பத்துநாட் சென்றெடுத்து, ஆணைக் கலாங்குருவி வயிற்றுள் வைத்துத்தைத்து நெய்யிற் பொரித்து, முள் நீக்கி, கல்வத்தில் தேன்விட்டரைத்து அரைப்படி ஆவின்பாலிற் கலக்கி அத்துடன் தேங்காய்ப்பால், முருங்கையிலைச் சாறு, அதன் பூவின்சாறு. தைபாந்த கரைச்சாறு. வகைக்குப் படி அரை. நெய் படி, கால் சாம்புறணிப் பதங்கம் விராகனிடை ஒன்று. கற்கண்டு பலம் நான்கு. தேன்படிகால், இவைகளைச் சேர்த்து அடுப்பேற்றி லேகியமாயெரித்து வைத்துக்கொண்டு, சுண்டக்காயளவு. சாப்பிட்டு, படுக்கைக்குப்போகுஞ் சமயந் தின்று வருகவும்.

இருபதாவது பசல்.

சகல வாய்வுகளைப் போக்கி வீரியவிர்த்தி யுண்டாக மற்றொருமுறை.

வெந்தயம், ஆவின்நெய், தேன். வகைக்கு, படி ஒன்று. நத்தைச்சூரி விரை, நிலப்பனைக்கிழங்குத் தூள், கோதம்பு நொய், கற்கண்டுத்தூள் வெள்ளைச் சீனி, வகைக்குப்படி, கால். ஆவின் பால் படி இரண்டு மேற்படி வஸ்துகளைச் சூரணித்துக் கொண்டு. வெந்தயத்தைக் சிறிய செம்புச் சட்டியிலிட்டு அதில் இரண்டரைப்படி ஜலமிட்டவித்து, அச்சலம், மஞ்சணிறமாறினவுடன் இறுத்து, மறுஜலமிட்டவித்து, மூன்று முறையான பின்னர் அவ்வெந்தயத்தைப் பாலிற் கலக்கி அடுப்பேற்றியடிக்கடி யுளாவி அடிப்பிடிக்காமல்,பால்முழுதும் வற்றினவுடன்,மேற்படி சூரணங்களைச் சீனியோடுவிட்டுக் கிண்டி, தேன், நெய், இவைகளைச் சிறுகச்சிறுகக் கொடுத்துக் கிண்டி, சிறுசிறுப்படங்கிய பின்னிறக்கி வைத்துக்கொண்டு புளி, மீன், தள்ளி அவபத்தியத்துடன், காலையிலோர் எலுமிச்சங்காயளவு தின்றுவருக, சகலவாய்வுகளைச் சங்காரஞ்செய்து, தாதின் சக்தியை மிக்க வலுப்படுத்தும்.

இருபத்தோன்றுவது பசல்.

மற்றொரு முறை.

நீர்முள்ளி விரை. தூத்திவிரை, கருவேலம் பிசின், சாலாமிசுரி. அமுஸ்தக்காய், பெருநெருஞ்சி விரை, வகைக்கு ரூபாயிடை ஒன்று தனித்தனியாகச் சூரணித்து ஒன்றுகலந்து கூடியஇடைக்குச் சரியிடை சீனிகற்கண்டு தூட்கலந்து, வேளை ஒன்றுக்கு, ஒருரூபாயிடைசூரணத்தைஇரண்டு, பூவன்வாழைப்பழத்தைப் பிளந்து அதனுள்ளமைத்துப் பனியில்வைத்து, காலையிலெடுத்து, ஆவி னெய், மேற்படி, பால்தேன், வகைக்கு, தொலா இரண்டு சேர்த்துப் பிசைந்து, காலையிற் சாப்பிட்டு வரவும். இவ்வாறு ஏழுநாளருந்திவர வீரியவிர்த்தி யுண்டாம் அவ பத்தியம்.

இருப்த்திரண்டாவது பசல்.

மற்றொருமுறை.

சுத்தியான பச்சைநாவி. வெப்பாலையரிசி, ஜாதிப்பத்திரி, ஜாதிக்காய், கறுவாப்பட்டை, சாலாமிஸ்றி, அமுஸ்தக்காய், அபியூன் வகைக்குமாசா இடை ஒன்று. தனி, தனியாகச் சூரணித்து, அதிலிரண்டு சிட்டுக்குருவி இரத்த மிட்டரைத்து, ஒவ்வொரு மாஷாவாக வுருட்டி, சுத்திசெய்த மேற்படி சிட்டுக்குருவியின் வயிற்றுள்வைத்துத் தைத்து, ஆவி னெய்யிட்டுச் சிவந்தநிறத்தில் பொரித்தெடுத்துக் கொஞ்சந் தேன்விட்டு மைபோலரைத்துக் கடலைப்பிரமாணங் குளிகைசெய்துலர்த்தி, தன், இந்திரியஸ்தம்பனமாக நாடியவர், ஒருகுளிகையருந்தி அதன்பேரில் ஆவின்பால் குடிக்கவும். தத்துவமில்லாதவன் ஏழுநாள் பத்தியத்துடன் தின்றுவருகில், இன்ஷா அல்லாஹ் போதிய தத்துவமும் சக்தியு முண்டாம்.

இருபத்திமூன்றுவது பசல்.

இதுவுமது.

ஒருபலம் இரசத்தை. ஒருசேர், துவரைப் பருப்புடன் சேர்ப்பித்து அதற்குப் போதிய ஜலமிட்டு வேகவைத்து, நீர் சுண்டிய பின் இறக்கி இரச நீக்கி, பருப்பை யுலர்த்தி, தான் தின்னக்கூடிய அரிசியுடன் ஒருபலம் அல்லது இருபலம் பருப்பையிட்டு நெய்விட்டு, கிச்

சடிச் சாதஞ் சமைத்து, அதற்கு ஆகாரமான, கறிவகையில் ஆலமரத்தின் கொழுந்தும் நெய்யுமிட்டுவேகவைத்து அச்சாதத்துடன்காலைமாலை தின்று வரவும். இவ்வாறு ஏழுநாள் இச்சாபத்தியத்துடன் தின்னவும்.

இருபத்திநான்காவது பசுல்.

இந்திரிய ஸ்தம்பனக், குளிகை;

அக்ர காரம் தொலாவொன்று. சப்ஜாவிரை தொலா எட்டு. சீனிக்கற்கண்டு தொலா ஒன்பது. இவைகளைத் தனி, தனியாகப் பொடிசெய்து, சீலை வடி கொண்டு நிறுத்து, கலந்து, ஜலமிட்டுக் குழைத்து ஒருதோலாமாத்திரை செய்துலர்த்திவைத்துக்கொண்டு, நாடியபோது ஒருகுளிகை அருந்த ஸ்தம்பனமாகும்.

இருபத்தைந்தாவது பசுல்.

மற்றொரு பாகம்.

அவித்த மொச்சக்கொட்டையைத் தின்று வந்தாலும் பனை நொங்கையருந்திவந்தாலும நாதஸ்தம்பனமுண்டாகும்.

இருபத்தாறுவது பசுல்.

நாதஸ்தம்பன லேகியம்.

சாலாமிசுறிதொலாஎட்டுசாரப்பருப்பு தொலாஇரண்டு. திராச்சிப்பழம் தொலாஎட்டு கசுகசா தொலா நாலு பாதாம்பிசின் தொலாஇரண்டு முருங்கைவிரை தொலா இரண்டு கஞ்சாதொலா ஐந்து குங்குமம் தொலா ஒன்று இளகிய சருக்கரை தொலா ஆறு தேன்தொலா ஐந்து நெய்தொலாப்பத்து பால்படி. இரண்டு சகல சரக்கையும், மைபோலரைத்துப்பாலிற்கலக்கிக் காய்ச்சி, சருக்கரை சேர்த்து லேகியபதத்தில், நெய்யும், அதன் பின் தேனுமிட்டு கிண்டிப்பதமாக இறக்கி, கொட்டைப்பாக்களவு, காலையில் ஏழுநாள் தின்று வருகவும்.

இருபத்தேழாவது பசுல்.

நாதஸ்தம்பன்ன லேகியம்.

நீர் முள்ளிவிரை இஸ்கோல்விரை, கசுகசா, நிலப்பனைக் கிழங்கு, சாலாமிஸ்றி, பாதாங்கொட்டை, ஜாதிக்காய், கராம்பு, வால்மிளகு கறுவாப்பட்டை, இவைகளை யோர்நிறையாக வெடுத்திடித்துச் சீலைவடிகொண்டு ஆவின்பால், நெய்யிற்குழைத்து அடுப்பேற்றிக் கிண்டிக்கீலின் பதத்தி லிறக்கி வைத்துக் கொண்டு, நாடியபோது மாலைநேரமட்டும், புளிக்கொட்டை பிரமாணந்தின்ன ஸ்தம்பனமுண்டாகும்.

இருபத்தெட்டாவது பசுல்.

ஆண்மை எழுச்சிக் குரியபாகம்.

வெள்ளைக் குன்றிமணி இலைச்சாறு. ஆட்டுப்பால்வகைக்குப் படிவீசம் இது இரண்டையுஞ் சேர்த்து, தொடர்ச்சியாக மூன்று நாள், காலையிற் சாப்பிட்டுவருக, அறவே சக்தியற்றவனுக்குப் போதிய சக்தியுண்டாகும். அடக்க முடியாத எழுச்சியுமுண்டாகும். உப்பில்லாபத்தியமாயிருக்கவும்.

இருபத்தொன்பதாவது பசுல்.

பற்பல பிரயோஜன சேங்கொட்டை லேகியம்.

ஒன்றரைச்சேர்சேங்கொட்டையைமூக்கு வெட்டித்துண்டாடி அதை இரும் புக்கிடாரத்திற்போட்டு ஐந்துசேர் ஆவின்பால்விட்டு அடுப்பேற்றிச்சிறிய தீயெரித்துக் குழம்புக்கத்தகமாய் வெந்த பின்னர் எடுத்து மைபோலரைத்து, பின்னர் ஆவினெய், சதாபிலைச்சாறு சருக்கரைவகைக்குச் சேர் அரை அதிற்சேர்த்து. இறுகிப் போகாமற்பாகுதபமாய்க்காய்ச்சி, ஓமத்தின்மேற்றொலி சேர் அரை திப்பிலி மூலம், காம்பு லாகூர் உப்பு; ஜாதிப்பத்திரி, மிளகு குரோசாணி யோமம், வகைக்கு ஒருரூபாயிடை யெடுத்துச் சூரணித்து மேற்படி பாகிற்சேர்த்து லேகியபதத்திற் கிண்டி யெடுத்து, வேளை ஒன்றுக்கு அரை விராகனிடை தின்றுநெய், பால், புலாவு இவைகள்சேர்த்துவருகத். தாது புஷ்டிக்கும்.

பலன் கெற்பமுண்டாகும் வாய்வுகளைபோக்கும் காங்கை நீரொழுக்கு நீர்ப்போக்கு வாதநோய்கள் வலிப்பு இசுவு சகலகுஷ்டங்கள், அசதி மூளையைப் பற்றிய நோய்கள், சுரம், நடுக்கம், பற்பல வயிற்றுக்கட்டிகள் மேற்படி வலிகள், காசம், கொடிய பலவியாதிகள் பற்பல வீக்கம் எலும்பு, நரம்பைப்பற்றிய பன்னோய்கள் விஷங்கள் போன்றவைகள் போம். நித்திரையில் அமுக்கு செய்தானென்ற தோற்றங்கள் போம் முறிந்த என்பை யிணக்கமாக்கும் கண்ணொளியைத் தெளிவாக்கும். இஃது மருந்துகளின் மிக்கானுகூலமானது.

முப்பதாவது பசுல்.

தாது விர்த்திக்கு மற்றொரு முறை.

முருங்கை நெத்தின் பருப்பு, பலம் ஒன்று. அபியூன் விராகனிடை ஒன்று. இதைத் தேன்விட்டரைத்து மெழுகுபதத்தி லெடுத்து அந்திசந்தி அரிசியிடைதின்றுவரப் புஷ்டியுண்டாகும் ஜாதிக்காயுள்ளிற் பணவிடை அபியூன்வைத்து மூன்றுநாள் நல்லெண்ணெயிற் போட்டு, பின்பு ஊமத்தங்காயுள் வைத்துச் சீலைமண் செய்து ஒருசாண் புடமிட்டெடுத்தரைத்து ஏழுருண்டைசெய்து மாலையிலொருவுண்டை தின்று இரவி லாவின்பால் குடித்து, கிரீடிக்கப் புஷ்டிக்கும். இன்னும் பச்சைக்கற்பூரம் களஞ்சிஅரை கடுக்காய்த்தோலி, ஜாதிக்காய் வகைக்கு, களஞ்சி ஒன்று. வெள்ளைப்பூண்டு, அபியூன் வகைக்கு களஞ்சி, கால். இவைகளை நல்லெண்ணெயிற் கொதிக்கவைத்து முறுகாமல் பொரித்தெடுத்து, வெள்ளைத்துணியிற் றுவட்டிக்கல்வத்திலரைத்துச்சுண்டைக்காயளவு உருண்டைசெய்து நிழலுலர்த்தி மாலையி லொருவுண்டை தின்று ஆவின்பால்விட்டுச் சாப்பிட்டு புணர ஸ்தம்பனமாகும்.

முப்பத்தியோன்றுவதுபசுல்.

ஷை பலமுறைகள்.

ஊமத்தங்காயுள்ளில் தாதுளங்காயளவு, அபியூனை நிரப்பி ஒரு நாள் வைத்தெடுத்து நல்லெண்ணெயில் பத்தித்து இரண்டு உள்ளங்காலிலும் பூசி அனல் காட்டிப் புணர ஒருசாமம் நிற்கும். வெள்ளெருக்

கம் பாலில், மொசுமுசுக்கைப் பழம், கருவூமத்தை விரை, சமமாயரைத்துப் பஞ்சிலூட்டித் தண்டிலேத்திப்புணரவேஆண்குறி மிக்க வலுவடையுமெனச் சொல்லப்படுகின்றது.

பதினைந்தாம் பாபு.

கெற்பம், பிரசவம், சூதகம், உதிரச்சிக்கல், மாதவிடையாதி யவைகட்குரிய பரிகாரங்கள்.

ஒன்றுவதுபசுல்.

கெற்ப்பையின் புழுவைக்கொன்று, கருத்தரித்தல்.

நல்ல பீக்கிவிரைப் பருப்பு படி (1) வென்னீரி லரைத்து, சூதகமான ஏழுநாளு மருந்த கெற்பமாவாள்.

இரண்டாவது பசுல்

இதுவுமது.

கெற்பபாசல் விரையை அரைத்துச் சூதகமானபின் மூன்றுநாள் ஆவின்பாலிற் கொடுக்க கெற்பமாவாள்.

மூன்றுவது பசுல்.

தைலம்.

சங்கங்குப்பியிலை, கழச்சியிலை, பூவரசன்பட்டை, முடக்கத்தான், ருள்ளி, வகைக்குச் சாறு படி கால். முத்துக்கொட்டையை அவித்து எடுத்த எண்ணெய்; படிகால். கிருது, சிற்றரத்தை, அமுக்கிரு, சிவனார்வேம்பு, சீரகம், வெள்ளறுகு, பூதகரிப்பான், செங்கத்தாரிப்பட்டை, பறங்கிப்பட்டை, வசம்பு, கடுக்காய், கப்புளிப்பிசின், வகைக்குக் களஞ்சி ஒன்று. சகலதையு மிடித்து, எண்ணெயிற் கலக்கி, சாறு

வகைகளையுஞ் சேர்த்துக் காய்ச்சி, மெழுகுபதத்தி லிறக்கி, ஒருதுட்டிடை இருவேளையுஞ் சாப்பிட்டுவருகத் தீருநோய்கள்: கெற்பசூலை, கெர்ப்பவாய்வு: சூதகமியாவும் கர்ப்ப கிரந்தி, மேற்படி யூனம், அரையாப்புக்கட்டி, பவுந்திரம், வயிற்றுவலி, சுணைவாதம் பாரிசவாய்வு, வெட்டை, பறங்கி, கிரந்திபோன்ற வியாதிகடீரும். இன்னுங் கருப்பவியாதிக்கு 10 மாதம் வரையிலுங் கொடுக்கலாம். அதில் கருப்பந்தரித்த முதலிரவிற் குடிப்பது நலம்.

நான்காவது பசுல்.

பிரசவமாக வவிழ்தம்.

கருப்புக்கொடி வேலி, சமூலத்தையு முலர்த்தி யிடித்து வடித்து, விளக்கெண்ணெயிற் குழைத்துக் கருமாரி யுள்ளவள் முதுகின் தாரையிற் றடவினால் நோவிலை யன்றிப் பிரசவமாவாள். சிசு வெளியான அதிசீக்கிரத்திற் போட்ட மருந்தை வழித்தெடுத்து விடல் வேண்டும்.

ஐந்தாவது பசுல்.

சூதகத்துக்கு லேகியம்.

முற்றிய தேங்காயின் கண்ணைத் திறந்து சூடம் விராகனிடை இரண்டு. கடுகுபலம், கால். இந்துப்பு, வெடியுப்பு, இரசகற்பூரம் வகைக்கு விராகனிடை ஒன்று. எல்லாச்சரக்கையும் அத்தேங்காய்க்குட்செலுத்தி, வேப்புமரக்கொம்பால், கண்ணையடைத்து, சாணிக்கவசஞ்செய்து, முளப்புடமிட்டுத் தேங்காய் வெடித்த வுடனெடுத்துச் சிரட்டைநீக்கிச் சகலதையுங் கல்வத்திலிட்டு அத்துடன்கருப்புக்கட்டி பலம் ஒன்றரை சேர்த்து நன்றாயரைத்து, புன்னைக்காயளவு, ஆறுவேளை கொடுக்க, சூதகவலி, சூதகத்திரட்சி போன்ற நோய்கடீரும். பழயச்சாதந்நீக்கவும். வயிற்றளைவு கண்டால், வெங்காயம், மோரதிகம் பரிமாறவும்.

ஆறாவது பசுல்.

சூதகக்கட்டுக்கு.

சங்கம்வேர் மூன்று. மிளகு வெள்ளைப்பூண்டு வகைக்கு பலம் அரை. சமூலமுங்கல்வத்திலரைத்து ஆட்டுப்பாலிற் கலக்கி, உப்பில்லாத பத்தியத்துடன் மூன்றுநாள் காலையிற் குடிக்க, சூதகக்கட்டையுடைக்கும்.

ஏழாவது பசுல்.

உதிரச் சிக்கலுக்கு.

வயனண்டு அல்லது ஆற்றுநண்டுடன் சோம்பு, காட்டோமம், இவைகளைச் சேர்த்துப் போதுமான ஜலமிட்டவித்து, இறுத்த நீரைக் குடித்தா லுதிரசிக்கல், கல்லடைப்புத் தீரும்.

எட்டாவது பசுல்.

வழக்கம்போல் மாதவிடைவருக "காண்க"

சிற்றுமணக்கினிலை இரண்டரை. மிளகு ஒன்பது பூண்டிதழ்பதினொன்று. இவைகளை நன்றாயரைத்து மூன்று குளிகைசெய்து, முதனில் ஒரு குளிகையைத்தலை சுற்றியெறிந்துவிட்டு, மற்ற விரண்டைக் காலை மாலை சாப்பிடவும். மறுநாளும் மூன்றுநாளுமிரு குளிகையாக, அருந்தவும். இதற்குப்பில்லாப்பத்தியம். நாலாநாள் உப்பைவறுத்துச் சேர்த்துக்கொள்ளவும். சிற்றுமணக்கினிலை யகப்படாவிட்டால் ; நுணுஇலையுபோகிக்கலாம். பிறமேகமுள்ளவளானால் : அம்மருந்துகளுடன் ஒரு பிடிகளச்சியிலை சேர்த்துக்கொள்ளவும் இம்மருந்தாலேர்டு நோய்கள், வயிற்றிற்கட்டுப் பட்ட சூதகக்கட்டையும் சரீரவுப் பிசமாயிருந்தாலும் வயிற்றில் வரட்சியுண்டாயிருந்தாலும், கட்டியுண்டாயிருந்தாலும் சுகமாகும். காமாலையும்போம்.

ஒன்பதாவது பசுல்,

மாதவிடை; காலந்தவறி வருவதுக்கு.

அரை ரூபாயிடை மாதளைத்தொலி, முக்கால் ரூபாயிடை புளியம்பருப்பு. இது இரண்டையுமரைத்து இருவுருண்டைசெய்து, காலை

மாலை சாப்பிட்டு, இவ்வாறு ஏழுநாளும் புதிதாகவே செய்து சாப்பிடவும். பத்தியம் சேர்வாமட்டுங் கொடுக்கவும்.

பத்தாவதுபசல்.

பிள்ளைப்பேறு இலேசாக.

சிற்றாமணக்குச்செடி, வடபுறமோடும் வேரை யெடுத்து மோதிரம் போல் வளைத்து பிரசவமாகும் ஸ்திரீகளின் இடதுகாற் பெரும்விரலிற் போட விலேசாகும்.

பதினொன்றாவது பசல்

பாலிரு பக்குவமடையாதபெண்கட்கு.

செம்பருத்திப்பூ, இலை, தேங்காய், இம்மூன்றையுஞ் சரிநிறையாக வெடுத்தரைத்து மாங்காயளவு, காலை, மாலை, கொடுக்கப்பக்குவமடைவார்கள்.

பதினாறாம் பாபு.

முன், துவாரம்பின், துவாரங்களிலுண்டாகு நோய்களுக்கான பரிகாரம்.

ஒன்றாவது பசல்.

முன்றுவாரத்திலுண்டான புண்கட்குக்களிம்பு.

ஒருகாண்டியில் இரண்டு களஞ்சிக் காரீயத்தைவிட்டு விளக்கெண்ணெய் தெளித்துருக்கி, அதிலிரண்டு களஞ்சி இரசத்தை விட்டுக்கிண்டி வெட்டையாக்கியிறக்கி, அதில் நீரில்லாத ஆவின்வெண்ணெ யொரு ரூபாயிடைசேர்த்துக் கல்வத்திற் களிம்பாகும் வரையிலரைத்து ஆண் பெண் முன்றுவாரப்புண்களிற் பூசிவரத்தீரும்.

இரண்டாவது பசல்.

முன்; றுவாரம் விலாசமானதற்கு மருந்து.

வெள்ளைக் குன்றிமணி தோல (2) கறுவாப்பட்டை தோலா (4) இவைகளைத் தூள்செய்து (11) கருங்குறவை மீன். குடல் முதலியவைகளெடுத்து சுத்திசெய்து அதன் வயிற்றில் அத்தூட்களை நிரப்பித் தைத்து (12) பலம் ஆவி னெய்யிற், சிவக்குமாகப் பொரித்து ஆறிய பின்னர் அம்மருந்துகளை நீக்கி. மீனை மட்டு நாளொன்றுக் கொன்று வீதந் தின்று வரும்போது, சிறுநீரை கோட்டுமிட்டு வருவதில், துவாரஞ் சிறுத்திருப்பதை யறிந்தால், மீன் தின்பதை நிறுத்தி விடவும் அவபத்தியம்.

மூன்றாவது பசல்,

இனிப்பு நீருக்கு மருந்து.

புளியிலையின் தனிச்சாறு. சுயமான நல்லெண்ணெய் வகைக்குப் படி. வீசம். ஒன்று கலந்து மூன்றுவேளை குடிக்கத் திரும். அல்லது அதிகமானால், "சிறு நீருப்பை" எருக்கலையின் பழுப்பிலைச்சாற்றா லரைத்து வில்லைதட்டிப் புடமிடச் செந்தூரமாகும். அதை மூன்று நாள் ஆறுவேளை கொள்ளத் தீரும். இரத்த மூலமுந் தீரும்.

நான்காவது பசல்.

நீர்வலம், அடைப்புக்குப் பரிகாரம்.

கழச்சிவேர் ஐந்து ரூபாயிடை. கருஞ்சீரகம் ஒரு ரூபாயிடை. இவைகளைப் பொடித்து எட்டுப்படி தண்ணீரிலிட்டு, ஒருபடி நீராக வற்றும்படிக்குக் காச்சியிறக்கிப் பிசைந்து வடித்து, கால்படிக்கியாளத்திற் கருகச்சுட்ட பருப்புத் தூள். இருகளஞ்சியிடை சேர்த்துக் கொடுக்க, கெட்ட சுரம், கொடி வாய்வு, நீரடைப்பு, வலமடைப்புகளி யாவுந் தீரும். மீறினால், மேற்படி தூளைத் தேங்காய்ப்பாலிற்சேர்த்து மூன்று நாட்குடிக்கத் தீரும்.

ஐந்தாவது பசுல்.

மூலம், முளைக்கவிழ்தம்.

ஊசிப்பாலையிலையை மசியவேகவைத்து அதிற் கொஞ்சம் விளக்கெண்ணெய் சேர்த்துக் கடைந்து, எலுமிச்சங் காயளவு ஆறுவேளை காலை மாலை கொடுக்கவே எவ்விதமான மூலமுளையானாலும் விழும். அபத்தியம்.

ஆறாவது பசுல்.

பவுந்திரமறப் பரிகாரம்.

கஞ்சாவிலையும் சுருள்ளியுஞ் சதைத்து வதக்கிக் கட்டினாலும். துளசியிலையை வேப்பெண்ணெய் விட்டு வதக்கிக்கட்டினாலுந் தீரும்.

ஏழாவது பசுல்.

மற்றொரு, நல்லமுறை.

வேப்பெண்ணெய், எலுமிச்சம்பழச் சாறு, கற்றாழைச்சோறு. வெங்காயச்சாறு, நீராகார நீர், இவைகளைச் சரி நிறையாகக் கலந்து காலை மாலை ஆறுவேளை கொள்ளத் தீரும். தந்தி பவுந்திரமியாவுந் தீரும். இன்னும், மிளகு பலம் அரை. நல்லெண்ணெய் பலம் ஒன்று. கல்வத்தில் நன்றாயரைத்துச் சீசாவில் வைத்துக்கொண்டு மூன்று நாள் காலை மாலை கொடுத்து மிளகு ரசம் சாதம் சாப்பிட்டுவரத் தீரும், எரிவுதாங்கும். தந்தரமாக ஆறுவேளை கொடுக்கவும்.

எட்டாவது பசுல்.

பவுந்திரமாதிய புண்களுக்குக் களிம்பு.

துத்தம், துருசு, மனோசிலை, கோஷ்டம். அதிமதுரம் எட்டிக்கொட்டை, கடுக்காய், தாணிக்காய், காசுக்கட்டி, கருங்குங்குலியம், நற்சீரகம், கருஞ்சீரகம், சேங்கொட்டை வகைக்குக்களஞ்சிஒன்று. இவைகளைப் பழச்சாறுவிட்டு இரண்டு சாமமரைத்து, ஆவின் வெண்ணெயிற் குழைத்துத் துணியிலூட்டி புண்களில்விட ஆறும்.

ஒன்பதாவது பசுல்.

மற்றொருவகை.

மிருதார்சிங்கி, கஸ்தூரிமஞ்சள்வகைக்குப்பலம்ஒன்று. கல்வத்தில் முலைப்பால்சிறுகச்சிறுகவிட்டாட்டி மெழுகுபோலானவுடன் சுண்டக்காயளவாகஉருண்டைசெய்துலர்த்திக் கொண்டுச் சருக்கரையில் காலை பட்டும் ஏழுநாள் கொடுக்க ரணங்கள் பறங்கிப்புண்சிரங்கு முதலியவைகடீரும். கடும்பத்தியம்.

பத்தாவது பசுல்.

மற்றொரு வகை.

துருசுபலம் ஒன்று தேன்மெழுகு பலம் அரை அத்துருசைமட்டுங் கல்வத்தில் நன்றாயரைத்து அம்மெழுகை யுருக்கி யதிற் சேர்த்து இரண்டையு நன்றாகக் கிளரித்துணியிலூட்டி மெழுகு சீலைபோற் செய்து காயவைத்து, வழுவழுப்புண்டாக அம்மிக்குழவியாலுருட்டி வைத்துக்கொண்டு சகல புண்கட்கும் பிளாஸ்திரியாகப் போடலாம்.

பதினொன்றாவது பசுல்

நீரிழிவுக் கவிழ்தம்.

எள்,புண்ணாக்குப்பலம்,ஒன்றையிடித்துப் பனியில் வைத்துக்காலையிலெடுத்துக் கருப்புக்கட்டியோடு தின்னவும். இவ்வாறு மூன்றுநாள் தின்ன நீரிழிவு நிற்கும்.

பதினேழாம் பாபு.

இராஜபுளவை, கண்டமாலை, சூலை கட்டுச்சிலந்தி மேகம் புண்பத்து, பித்த வெடிப்புப்போன்ற வியாதி கட்டுப் பரிகாரம்.

ஒன்றுவது பசுல்.

இராஜ புளவைககுத் தைலம்.

அத்தி இத்தி அருயால், பேர்ரால் இவைகளின்வேரில் தேள்வைக்குத் தக்கபடிக்குத் தொலிபெடுத்து அதை நன்று யிடித்துப் பிசைந்து பிழிந்தெடுத்த ரசம் படி ஒன்று துத்தம் துருசு சாம்பிராணி குங்கிலியம் வெங்காரம் வகைக்குக்களஞ்சி ஒன்று மிறுதார்சிங்கி களஞ்சிகால் இவைகளியாவையும் பொடித்து மேற்படி இரசத்திற்சேர்த்து அத்துடன் தேள்வையுள்ள எண்ணெயு மூற்றிப்பதமாய் காய்ச்சிவடித்து வைத்துக்கொண்டு, ரணங்கள் இராஜபுளவைபோன்ற ஆறாதபுண்களிற் போட ஆறும்

இரண்டாவது பசுல்.

புளவைகட்கு மேற்பத்து போடுமுறைகள்.

தேள்வைபோல், ஈயைப்பிடித்தரைத்துத் துணியிற்றடவி, புளவைபோன்றபுண்களைக் கழுவித்துடைத்துஅதன்மேல்மேற்படி துண்டைப் போடவும். இவ்வண்ணம்மூன்றுநாள் மூன்றுதடவை பத்துபோட்டுக் கீழ்க்காட்டும் புகையைக்குடிக்கத் தீரும்.

மூன்றுவது பசுல்.

கண்டமாலை கன்னப்பத்து, இராஜ புளவைபோன்ற நோய்கட்குப் புகைப்பிடித்தல்.

மண்ணில்லாமற் சுத்திபண்ணிய வெள்ளெருக்கம்வேரின்தொலி லிங்கம் வகைக்கு விராகனிடை ஒன்றரை ஒன்றாகலந்து கல்வத்திலிட்டு அத்தொலியி னீரநப்பாலேயே அரைத்து ஆறுவில்லை செய்துலர்த்தி டப்பியில் வைத்துக்கொண்டு அரசம்பட்டையை யுலர்த்தி பஞ்சுபோற் பறக்கும் பதத்திற்றட்டி பஞ்செடுத்துலர்த்தி சுங்கான்போலுள்ள ஏனத்திற் கீழுமேலும் மேற்படி பஞ்சைவைத்து நடுவில் மேற்படி வில்லையி லொன்றைவைத்து நெருப்புவைத்துப் புகை குடிக்கவும். இவ்வாறு மூன்றுநாள் ஆறுவேளை உப்பில்லாதபத்தியத்துடன் புகைக் குடிக்கத் திரும். கைகண்டது.

நான்காவது பசுல்.

சூலைவலி, அஜீரணத்தா லேற்படும் வலிகட்கு.

தொலி நீக்கிய நல்ல, மாச்சுக்கு, பலம் (5) பாத்திரத்திலிட்டு, அதன் மேல், கையாந் தகரைச்சாற்றை, ஓரங்குலமிருக்கும்படிவிட்டு, மூன்று நாளூறவைத்து, நாலாநாள், பொதினா இலைச்சாற்றையு மவ்வாறேவிட்டு, ஐந்தா நாள் துளசி இலைச்சாற்று லவ்வாறே யூறவைத்து, ஆறாநாளில், கறியுப்புசேர் அரையும், மேற்படி சுக்கையும் அரைச்சேர் ஜலத்தில் வேகவைத்து ஜலமறவே சுண்டிய பின்னரெடுத் துலர்த்திச் சூரணித்து வைத்துக்கொண்டு, காலைமாலை, தண்ணீரில் இரண்டுமூன்று "மாசா" இடைகலக்கிக்குடித்துவரச்சூலைவலி, செமியாக்குணத்தாலேற்படும் வலி, அதனுனேரிடும் வாந்தியாவுந் தீரும்.

ஐந்தாவது பசுல்.

சூலைக்கட்டுக்கு அண்டப்பற்பம்.

கோழிமுட்டைத்தோட்டைப்பொடித்து வெள்ளெருக்கம்பாலில் மூன்று நாளூறவைத்து, மைபோலாட்டிக் கொக்குப்புடமிடப் பஸ்பமாம். தேனிற் பணவிடைகொடுக்க அவ்வியாதி முதலியவைக டரும். "தைல முறை பின்னால் வரும்" பளாஸ்திரி வகைகளை முந்தியபாபில் பார்க்கவும்.

ஆறுவதுபசுல்.

கட்டுகள், சிலந்திகளுக்கு.

கட்டுகளில்; வெள்ளிகாடிகாரத்தை வாய் நீரா லரைத்துப்போட்டாலும், அதன்மேல் புளவைக் கொல்லிப்பிலையை, விளக்கெண்ணெயில் வாட்டிக்கட்டி, கெந்தகத்தைலத்தை யுள்ளுக்கு கொடுத்தாலுந்தீரும். லிங்கத்தை முலைப்பாலி லரைத்து, துணியிலூட்டி யுலர்த்தி, ஒருமுழ வளவு குழியிற் கொளுத்திப்போட்டு அக்குழிவாயில், “புழுவைத்த புண்” ஆறுதபுண், புத்து இவைகளுள்ள, உறுப்பை மிக்க சமீபமாக வைத்து அப்புண்களிற் புகைபடும்படிக்குச் சுற்றிலுஞ் சந்துவாய் மூடியிருக்கவேண்டும், அப்புகையடங்கியபின்னர், உறுப்பை வெளிப்படுத்த புண்களிலுள்ள புழுக்களுதிர்ந்து அதிசீக்கிரத்திற் புண்ணாறும் பின்னும் புழுவிருந்தா லக்குழியிற் றெள்வையான கூட்டத்தைக்கொளுத்திப்போட்டு முன்போற்புகைப்பிடிக்கலாம். இன்னும், சேங்கொட்டையிற் குழித்தைல மிறக்கிப் பூசினாலும், புழுக்கள் மாண்டு விரைவிற் புண்களாறும். இச்சேங்கொட்டைத்தைலத்தை ஆடுமாடு மிருகங்களிலுள்ள புழுவைத்த புண்களிலுந் தடவச்சுகமாகும்.

ஏழாவது பசுல்.

சகலரணங்கள், புண்களாதியவைகட்குக் களிம்பு.

இரசம் விராகனிடை ஒன்று. இரசகற்பூரம், லிங்கம், தாளகம், மனோசிலை. கெந்தகம். வெள்ளைக் குங்கிலியம், வகைக்குக் காசு ஒன்று. துருசு, துத்தம், மிருதார்சிங்கி வகைக்குக் காசரை. யாவையுங் கல்வத்திலிட்டு “பத்துப் பலம் எருமை வெண்ணெய் விட்டுமைபோ லாட்டித் தண்ணீரில் அலசிக்கழுவிச் சுத்திசெய்து வைத்துக்கொண்டு, சகல புண் ரணங்கள், கண்டமாலை, விப்புருதிக் கட்டு, கன்னேறை, சிரங்கு பித்தவிரிவு, பிளப்பு, மேகநீர் முதலிய ரணங்கட்கும் பூசத்தீரும்.

எட்டாவது பசுல்.

ஆறுதபுண், உடையாத கட்டுகளுக்குச் சேர்வை.

சூடம் சாம்புராணி சரி நிறையாக வெடுத்துக் கல்வத்திலரைத்துக் களிம்பாகுஞ் சமயம் இதனிறைக்கு, பொடிசெய்து சீலைவடிகொண்ட பாற் சாம்புராணித் தூள்போட்டு, பலமாயரைத்து வழித்து, டப்பியில்

வைத்துக்கொண்டு, துணியிலூட்டி ரணங்களிற் போட்டு வந்தால் விரைவிலாறச்செய்யும். கட்டு, சிலந்தி, புளவைக்குமேற் போட்டால் குத்தல், வலியை நிறுத்தி, யுடைக்கும் அல்லது அறுக்கும்.

ஒன்பதாவது பசுல்.

கால், கை, விரிவு, பிளப்புகட்கு.

வயல்வேளை வேரும் வெண்ணெயு மரைத்து, கை, காலிற் கண்ட வெடிப்பு, பிளப்புகளிற் பூசத்தீரும்.

பத்தாவது பசுல்.

சகல மேகரணங்கட்குக் களிம்பு.

துத்தம், துருசு, காசுக்கட்டி, வேம்பாலம்பட்டை, கருஞ்சீரகம், பித்தளையரப்பொடி, செம்பு அரப்பொடி வகைக்குப் பலம் கால். களிப்பாக்கு பலம் அரை. இவைகளைக் கல்வத்தில் முள்முருங்கையிலைச் சாற்றாலாட்டிக் களிம்பானவுடன் இரண்டாய் வகுத்து, ஒரு பாகத்தில் ஆண்பிள்ளை மண்டையென்பையும் ஒருபாகத்தில் பெண்மண்டையென்பையுஞ் சேர்த்தரைத்து, தனி, தனியாக வைத்துக்கொண்டு எருமை வெண்ணெயிற் குழப்பி, ஆணுக்கு பெண்ணங்கஞ் சேர்ந்ததும், பெண்ணுக்கு ஆண் அங்கஞ் சேர்ந்ததும் போட, மேகத்தாலுள்ள புண்களியாவும், மற்றைய ரணங்களுந் தீரும்.

பதினொன்றாவது பசுல்:

தேம்பல், புண், போன்றவைகட்கு மருந்து.

ஒரு பிடித்த கரையிலையை மையோலரைத்து, யதில், கரும்புச்சாறு போதுமட்டும் விட்டு அத்துடன் இரு எலுமிச்சம்பழச்சாறுமிட்டு ஒரு காசு சீனக்காரமும் பொடித்துப்போட்டு, மைபோலரைத்துக் கொண்டு, எவ்விதமான பத்துகளானாலும்பூசத்தீரும். அல்லது, சமுத்திரப் பழத்தை முலைப்பாலிலாவது, ஜலத்திலாவது வுரைத்துப் பூசினு

லும் வெங்காயச் சாற்றில் வசம்பை, களிம்பைப்போ லரைத்துப்பூசினாலும் பச்சைவசம்பு அல்லது அரத்தையை, அரைத்துப் பூசினாலும், மேற்கூறிய நோய்களுடன் எச்சித்தளும்பு போன்றவைகளுந்தீரும்.

பதினெட்டாம் பாபு.

குதிரைவலி, காக்கைவலி, வாதம். தீராத இடுப்புவலி. காந்தல் வரட்சிபோன்ற நோய்களுக்குப் பரிகாரம்.

ஒன்றாவதுபசுல்.

குதிரைவலிப்பு, காக்கைவலிப்புகட்குப் பரிகாரம்

நாவிதன் கத்தியால், ரோமங்களைப் போக்கிய புளித்தொலியைத் துண்டாடி, தூரிற் சிறிய துவாரமிட்ட வோர் மண்பாத்திரத்திலிட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து, மற்றொருபாத் திரத்தைப் பூமியிற் பதித்து, மேற்படி பானையின் துவாரத்திற் குச்சிவைத்து, பதித்திருக்கின்ற பானையின் மேல் வைத்து இரண்டுக்குஞ் சீலைமண்செய்து வராட்டியடுக்கிப் புடமிட மேற்படி பாத்திரத்திற் றைல மிறங்கியிருக்கும். சீசாவிலடக்கம் பண்ணிக்கொண்டு, வலிப்புள்ளவர்களுக்கு, ஒருகாசிடை தயிலம் ஜலத்திற் சேர்த்து கொடுக்க, என்றும் வராது.

இரண்டாவது பசுல்.

காக்கை, குதிரை, முயல்வலிப் பாதியவைகளுக்குக்.

மஞ்சணிறமுள்ள செவ்விளனியை, மேலுங் கீழுங் கொஞ்சம் போற் சீவிப் பிற்புறம் ஓர் விரலளவு துவாரமிட்டு அதில் ஒணான் இரத்தத்தில் மூன்று நான்கு சொட்டிட்டு, மேற்சக்கைமூடி சட்டியில் வைத்து அடுப்பேற்றி யெடுத்து அரைப்பாகஞ் சுண்டியபின் னிறக்கி யெடுத்து, ஒரு ஏனத்தி லூற்றிக்கொடுக்க, அவ்வியாதிக டீரும்,

மூன்றாவது பசல்.

காக்கை வலிக்கு நல்ல அவிழ்தம்.

வயததிகமான கீரியை அறுத்து, தொலிகுடல் முதலியவை நீக்கி மாமிசத்தைத் துண்டாடி அதில் ஐந்து மிளகாய்க் கொஞ்சமல்லி, உப்பு வெள்ளுள்ளி சேர்த்தரைத்துப் பூசி நன்றாகக்காயவைத்து, ஒருதோலா நிறை அம்மாமிசத்தைப் பொடிசெய்து, ஞாயிற்றுக்கிழமை காலை மட்டும். உப்பில்லாப் பத்தியத்துடன் கொடுத்து. அன்றுமட்டும், கோதம்பு ரொட்டி, பச்சை தண்ணீரன்றி மற்றவைகளை நீக்கி இவ்வாறு ஏழு ஞாயிற்றுக்கிழமையிற் கொடுக்கத் தீரும்.

நான்காவது பசல்.

கை, கால் வழங்காத பச்சைபிள்ளை வாதத்துக்கு.

ஒரு விராகனிடை கருநாவியை, மிளகுக் கியாழத்தில் நான்கு சாமம் சுருக்குகொடுத்து அத்துடன் சுத்திசெய்த வீரம் விராகனிடை ஒன்றும், கொஞ்ச மிளகுஞ் சேர்த்தரைத்து மூன்று நாள் ஆறுவேளை கடுப்பத்தியத்துடனருந்தத் தீரும்.

ஐந்தாவது பசல்.

தீராத இடுப்புவலிக்கு.

தேள்வையுள்ள வெள்ளீயத்தைத் தகடுசெய்து நறுக்கி அதனிடை வெடியுப்புச்சேர்த்து வெள்ளெருக்கங் கட்டைக்குள்வைத்து வாய்க்கு மூளையறைந்து சீலைமண்செய்து கஜபுடமிடப் பஸ்பமாம். அரிசியிடை அனுப்பானத்திற் கொடுக்க இடுப்புவலிக டீரும்.

ஆருவது பசுல்.

நாவரட்சி யடங்க அவிழ்தம்.

துத்திவேர் சிற்றரத்தை அதிமதுரம் சமநிறையாக விடித் தருட்டித்துணியிலும் பந்துபோலவேகவைத்து அதன்மேற் றுணி சுத்தி அதன் மேற்றேனைக் குளிரவிட்டுப் பூசிச் சட்டியில்வைத்தெரித்துக் கரிந்து வருந்தருணம், அப்பந்தைச் சுற்றிலும் வெந்நீரால் சுத்திசெய்த நாக்களம் பூச்சியைச் சுமாராகத் தூவி அதுவுங் கருகும் போது, அதன்மேல்முலைப்பால் அல்லது, காடியை யூற்றிக்கிண்டிக் கடைந்து, பாதிநீர் சுண்டியபின் வடித்துக்குடிக்கத்தீரும் இன்னும் நாகவல்லியிலையை நரம்பு நீக்கி யதிற் சுண்ணும்பு, பூசிவெதுப்பிப்பருவத்தில்அதிற் சலத்தையூற்றி மூடிக் காய்ச்சிப் பாதிநீர் சுண்டியவுடன் வடித்துக் கொடுக்க நாவரட்சி தீரும்,

ஏழாவது பசுல்.

வாதப்பிடிப்புக்குப் பூச்சுமருந்து.

ஓர் நெற்றுத்தேங்காயைப் பொத்து நீரை வடித்து அது நிறைய திருகுகள்ளிப்பாலை விட்டு காஞ்சா முளையால் மேற்படி துவாரத்தையடைத்து சாணிக்கவசஞ்செய்து கோழிப்புடமிட்டு வெடித்தவுடன் எடுத்து அதன் சிரட்டை நீக்கி மைபோலரைத்து முழந்தாளிற் பூசிவர? வாதசூரப்பு பிடிப்பு, வீக்கமியாவுந் தீரும்.

பத்தொன்பதாம் பாபு.

புகைச்சல், வாந்தி, காசம் இரத்தங்கக்குதல் இரத்த பிறமேக மாதியவைகட்குப் பரிகாரம்.

ஒன்ருவது பசுல்.

சுரம் ஓங்கரிப்பு போன்றவைகளுக்கு.

உப்பிற் போடாத சுண்டவற்றலைப் பொரித்து அல்லது நாட்பட்ட செருப்புத்தோலைக் கரித்துப்பொடித்துத் தேனிற்குழைத்துத் தின்றாலும், மயிலிறகு அரிசித் திப்பிலி ஏலரிசி சுக்கு சிற்றரத்தைமிளகு, நெல்பொரி, வகைக்கு காசு ஒன்று இவைகளைத் தனி தனியாகக் கரித்துப்பொடித்து, சீனி பலம் அரை தேன்படி மாகாணி இவைகளையொன்றாய்க் குழைத்துத் தின்றாலும், ஏலரிசி நால்பலத்தைச் சட்டியிலிட்டு வறுத்துப்பொரியும் போது, கடைந்து, நீராகாரத் தண்ணீர்படி அரைவிட்டுக்கடைந்து காற்படியாகச்சுண்டினபின் வடித்து, கால்பலஞ்சீனியிட்டுக் குடித்தாலும் வாந்தி சுரம் வெள்ளோக்காளம் மனக்குமட்டுகாவுரும்.

இரண்டாவது பசுல்.

புகைச்சல் ஒழியாவாந்தி, வெள்ளோக்காளம் மனக்குமட்டல் களுக்கு.

எலுமிச்சம்பழம் மூன்று இரண்டுவிரலகலம்ஒருவிரல் நிகளத்திலுள்ள துணிகளைத் தேனிற்றுவைத்து ஒவ்வொரு பழத்துக்கு மூன்று துணிகளைச்சுற்றிச் சட்டியில் வைத்து அத்துணிகருகுமட்டு மெரித்தஇறக்கி அதில் அரைப்படி நீராகாரஜலத்தை விட்டுப் பிசைந்து வடித்த நீரில் மூன்றிலொரு பாகத்திற் கால்பலஞ்சீனிபோட்டுக் குடிக்கவும் இவ்வாறு மூன்றுநாள் மூன்றுவேளை குடிக்கத்தீரும் நற்சீரகம் அல்லது, ஓமம் துணியிற் பரப்பி திரிபோற் றிரித்துக் கொளுத்திப் புகைபிடித்தால் மனக்குமட்டல் திரும்.

மூன்றாவது பசுல்.

தீராத இருமலுடனே நிற்க.

சீரகம், மிளகு, ஆவாரைவிரை, இவைகளைச் சமமாய்ப் பொடித்து அதற்குப்போதுமான ஆவின்பாலில் போதிய சருக்கரை கரைத்துக் காச்சிக் கிஸ்பதத்தில் அத்தூள்களை யிட்டுக்கிண்டி இரண்டுபலம் நெய் விட்டு லேகியபதத்திலிறக்கிக் காலைமாலை பதினொருவேளை பத்தியமில்லாமல் தின்றுவர மூச்சு இடைவிடாமலிரும்பு மிருமலுந்தீரும்.

நான்காவது பசுல்.

காசதிற்குத்தாளக பற்பம்:

ஒருகலயத்தில், தாளகக்கட்டியைவைத்து அதன்மேலுங் கீழும் சிறு நீரும் மலமுமிட்டு நிரப்பி மூடிச் சீலைமண்செய்து (15) நாள் நிலத்திற்புதைத்தெடுத்து 26- வராட்டியிற் புடமிட்டு, எடுத்துவாழைத்தண்டில் சொருகிச்சீலைமண்செய்து முன்போற் புடமிடப்பஸ்பமாகும் அனுப்பானத்திற் பணவிடை கொடுக்கக்காசம்போம்.

ஐந்தாவது பசுல்.

இரத்தங் கக்குவதற்கு.

கோவைவேரை ஆவின்பாலிலரைத்துச்சருக்கரைஎலுமிச்சம் பழச்சாற்றிற்கலக்கி மூன்று நாள் கொடுக்கத்தீரும்.

ஆறாவது பசுல்.

இரத்த பிறமேகத்துக்கு.

சந்தன அத்தர் வெள்ளைக்காசுக்கட்டி மாசாக்காய் வகைக்கு தோலா ஒன்று இவைகளைப்பொடித்து அத்தரிற்குழைத்து மூன்றாய் பாகித்து மூன்றுநாள் தின்னவும் அவபத்தியம்.

ஏழாவது பசுல்.

இருமல் புகைச்சலுக்குப் பத்துப்போடல்.

சவுறியிலை பலம் ஒன்று சுக்கு, மிளகு, பூண்டு, சதகுப்பை. மிளகாய்வற்றல், கடுகு வகைக்குப்பலம் அரைக்கால் சலத்திலரைத்துக் கொதிக்கவைத்துச் சிரசில் மூன்றுநாள்பூசி, நாலாவது நாள் ஸ்நானஞ் செய்யத்தீரும்.

எட்டாவது பசுல்.

புகைச்சலுக்கு மருந்து.

கோழிமுட்டை வெள்ளைக்கருவை மட்டுஞ் சட்டியிலூற்றி, அதற்குப்போதுமான ஆவின்னெய்விட்டு வெந்துவரும்போது மிளகு பலம் காலைப்பொடித்து அதிற்றூவிக் கிண்டி வெந்தபின் இறக்கி, பனியில் வைத்து. காலையிலெடுத்துத்தின்றுவரத்தீரும்பத்தியமில்லை ஒன்றிரண்டு வேளை ஒன்றுக்குத்தின்னவும்.

இருபதாம் பாபு.

கண்ணோய்களுக்கு முக்கியமான முறைகள்.

ஒன்றாவது பசுல்.

கண்ணோய்க்குப் பரீட்சித்தகுளிகை.

கஸ்தூரி, குங்குமப்பூ! கராம்பு. பீதரோகணிமிளகு வெள்ளாட்டுப் பித்து இவைகள் வகைக்கு விராகனிடை ஐந்து மேற்படிமிளகை அவ்வாட்டுப் பித்தின்பையினுள் ளிட்டுப் புகைப்பிடித்து ஈரம்போக அடுப்புக்கு நேரிற்றூக்கிக் கட்டித் தொங்கவிட்டுவைத்துப் பதினைந்துநாளெடுத்து மற்றைய சரக்குகளோடு சேர்த்துப் பொடித்து துளசியிலைச்

சாறிட்டொரு சாமமரைத்துக் குளிகைசெய் துலர்த்தி, பிறகு அதைப் பழச்சாறிட்டு இரண்டு சாமமரைத்துச் குளிகை செய்துலர்த்தி, பிறகுபன்னீர்விட்டு இரண்டு சாமமரைத்து, சற்றுநிழலுலர்த்திமுக்கால் ரூபாயிடை, நிறைக்கு, திரிபோல் நிகளக் குளிகையாகச் செய்துநிழலுலர்த்திச் சிமுளிலடைத்து வைத்துக்கொண்டு "கண்கிஷ்டண முளியில்," விரலாடுஞ்சைகை தெரிந்த கண்கட்கு, தேன் அல்லது துளசிச்சாற்றிலுரைத்து, கண்ணிலிடச் சுகப்படுத்தும் மேலும், அதிற்படர்ந்துள்ள வெள்ளை, சவ்வுகளைப் போக்கும்.

இரண்டாவது பசல்.

மற்றொரு முறை.

——(:*:)——

மிளகு, சுக்கு, திப்பிலி, சங்கு, அரிதாரம், புங்கவிரை, அதிமதுரம், பீதரோகணி, மனோசிலை, பன்றியின் சிங்கப்பல், ஆமையோடு, புலி நகம், வெள்ளி, சாவல் நெஞ்சென்பு, இந்துப்பு, இவைகளையொரு நிறையாய்க் கல்வத்திலிட்டு, நந்திவட்டானிலைச் சாற்றில் ஒருநாளும் அதன் பூவின்சாற்றினால் மறுநாளு மரைத்துக் குளிகைசெய்து நிழலுலர்த்தி, சகல கண்ணோய்களுக்குந் தேனிலுரைத்துப் போடத் தீரும்.

——(*)——

மூன்றாவது பசல்.

கண்ணோய்க்கு பலவித முறைகள்.

——()——

கரிப்பானிலையு நற்சீரகமுந் தட்டிக் கண்ணிற் பிழிந்தாலும், முருங்கைப்பூ, தும்பைப்பூ, நெருஞ்சிப்பூ, இவைகளியாவையு நசித்து, முலைப்பாலிற் றுவைத்துக் கண்ணிற்பிழிந்தாலும், நாய்க்கடுகிலையைக் கசக்கி முலைப்பாலிற் பிசைந்து மூக்கில் நசியமிட்டாலுந் தலைநீர் வடிந்துக் கண்மங்கனீங்கும் கண்ணோய்கட்குத் தைலம் இருபத்திரண்டாம் பாபிற் பின்வரும். இன்னும் பீதரோகணி விராகனிடை ஒன்று. வெள்ளிக்காடிக்காரம் விராகனிடை அரை. இவைகளைப் பொடித்து, கற்றாழைச் சோற்றுடன் துணியில்வைத்து நாளொன்றுக்கு ஐந்துதடவை கண்ணிற் பிழிந்தாலும், அகத்திக்கீரைச் சாற்றைத் தனியாக, அல்லது, காண்டியிலுருக்கிய சீனகாரத்துடன் சேர்த்து, சாவலீரத்தமிட்டு எரித்துக்

கிண்டி மைப்தமா யிறக்கிக் கண்ணிலிட்டாலும், மேற்படி மங்கல், மூடல், மாசிகணீங்கி மேகநீரைப் போக்கும்.

——:(*):——

நான்காவது பசல்

கண்ணோய்களுக்கு அநுபோகமருந்து

——[]——

ஜாதிக்காய்ப்பருப்பைதுளைத்துஅதிற்செல்லக்கூடிய துருசுப்பொடியை நிரப்பி, அதன்மேல் எலுமிச்சங் காயளவு, பந்துபோல் நூல்சுத்தி ஆவினெய்யில் மூன்றுநாளூறவைத்து எடுத்து அதிகமான களிம்புள்ள வெங்கல வட்டியின் தூரில்வைத்து நெருப்புக் கொளுத்தி அதில் முன் ஊறவைத்த நெய்யடங்கலையுஞ் சிறுக, சிறுகவிட்டு, நூற்கள் கருகி, "காயில்" தாவுந்தருணம் நெருப்பை யமர்த்தி மற்றொரு வட்டியின் தூரினால் அம்மருந்தை நன்றாக மூன்று நாள் மட்டுமரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு, கண்ணில் மையிடவும். கண்பூச்சி, கண்ணிழிவு, செகப்பு, கூச்சம், சுருங்குதல் போன்ற கண்ணோய்கடீரும். பரீட்சிக்கப் பட்டது.

ஐந்தாவது பசல்.

இதுவுமது.

சீனக்காரம், துருசு, சரியிடை யெடுத்துக், களிம்புள்ள, இரண்டு "வட்டித்தூரில், நாலுசாமம் ஆவின்வெண்ணெய் விட்டரைத்து அதன் வேகமடங்கியபின் வழித் தெடுத்துக்கொண்டு, மேகம், மாசு, சவ்வு அரிப்புள்ள கண்களில் மிளகுப் பிரமாணமிடத் தீரும்.

——[-]——

ஆறாவது பசல்.

இதுவுமது.

* * *

கடுகு, சுக்கு, திப்பிலி, வெங்காரம், வசம்பு, கொத்தள விரை, சாரணைக் கிழங்கு, வேப்பங் கொட்டை, இலுப்பைப் புண்ணாக்கு, சமமாயெடுத்துப்பொடிசெய்து, தேசிப்பழச்சாற்றில் மூன்றுநாளூறவைத்து, பிறகு மச்சாற்றாலேயே அரைத்து, மிளகளவுருண்டைசெய் துலர்த்திக்

கொண்டு, பதினெட்டுவித ஜன்னி மற்றைய ஜனியாலுள்ள வியாதிகள் பேய், பிசாசு, குதிரை, காக்கை, முயல் வலிகள், முயற்கண்டவலிப்பு, தோசம், நெஞ்சடைப்பு, பற்கட்டு, சுரம், கண்மங்கல்க ளியாவுக்கும், உமிழ்நீர், ஜலம், பழச்சாறு போன்றவைகளி லரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

ஏழாவது பசுல்.

மற்றொரு கலிங்கத்தூள்.

——(*)——

கல்வத்தில் [illegible]த்திப்பிலியை யிட்டு கருவங்கக்குளவியால் மருந்தொன்றுக்கு இருபாகங்குளவி தேயும்படிக் கரைத்து வைத்துக் கொண்டு, மிளகளவு கண்ணிலிடவே, நீர்வடியுதல், தலைபிடிபோன்றவைகணீங்கும்.

எட்டாவது பசுல்.

கண் சிகப்புக்குப் பத்து.

——:(:):——

கோஷ்டம் பூலாங்கிழங்கு, இலாமிச்சவேர், சந்தனக்கட்டை, சீரகம், மிளகு, தைவேளை வகைக்குக் களஞ்சி நான்கு, ஆவின்பால் அல்லது அமுர்தப்பாலிலரைத்து வேளைச்சாற்றிற் குழைப்பித் தலையிற் பூசக் கண்சிவப்பு மாறும்.

ஒன்பதாவது பசுல்.

கண்ணோய்கட்கு நல்ல மை.

——(*)——

இந்துப்பு, திப்பிலி, பீதரோகணீ, செம்பரப்பொடி வகைக்குப் பலம் அரை. நந்திப்பூச் சாற்றி லிரண்டுநா ளரைத்து, பிறகு, பொன்னுணிச் சாற்றிலரைத்து, மைபோலானபின் னெடுத்துச் செம்புச்சிமிழுள் வைத்துக்கொண்டுக் கண்தெரியாதவர்களுக் குள்ளங்காலில் நன்றாகத் தேய்த்து, பொன்னுணியிலையை நீரில் வேகவைத்து காலிற் சேர்த்து அதன்மேல் முத்துக்கொட்டை யிலையைவைத்துக் கட்டவும். இவ்வாறு மூன்று கட்டுக்கட்டினால் கண் வெளிச்சமாம். மேற்படி மைச்சி

மிழை நெல்ல விக்கும்போது கூடவைத் தவித்துக்கொள்வது மிக வுத்தமம்.

ப[illegible]வது பா[illegible].

கண்ணோய்க்கு மற்றொரு [illegible]மை.

——(*)——

[illegible]யாமிலை[illegible] [illegible]மாய் எடுத்து [illegible]ஞ் சேர்[illegible]கில் [illegible]யைச் செ[illegible] [illegible]கொட்டையளவுக்[illegible]ன்னைப்பண்[illegible]கொட்டை[illegible] [illegible]ப்படி சேர்க்[illegible], [illegible]யுத்த[illegible]ண்ணிலிடவும். ப[illegible] [illegible]த்திய "பூ[illegible]" [illegible]ம். புளிப்பு [illegible]க நீக்கவும்.

——[*]——

பதினொன்றாவது பசுல்.

கண் மங்கலுக்குப் பத்து.

சுற்றுழைச் சோறு, அதிமதுரம் சந்தனம், இவைகளையோர்நிறையாகச் சேர்த்து அரைத்து துலாந்திரங் கட்டிவைத்து நீர் வடிந்தபின் எடுத்து முலைப்பாலில் விட்டரைத்து, தலையிற் பத்துப்போட, கண்மங்கல், எரிச்சலிவைகள் போம்.

——:(*):——

பன்னிரண்டாவது பசுல்.

மற்றொரு வகை.

பருத்தியிலைச் சாறு, சங்கமிலைச் சாறுசமமாகவெடுத்துக் களிம்புப் பாத்திரத்திலுரைத்து மைபோலானபின் கண்ணிலிட மாலைக்கண் மாறும்.

இருபத்தோன்றும் பாபு.

விஷங்களை முறிக்கும் பற்பல அவிழ்தங்களைக் கூறல்.

——:(*):——

ஒன்றுவது பசுல்.

சகல விஷங்கட்குப் பிரதானக் குழம்பு.

பச்சை நாவி, கருநாவி, செந்நாவி, வெண்ணாவி, நெரிபீசம், புகையூறல், கெவுரி பாசாணம், குதிரைப் பாஷாணம், மிருதார்சிங்கி, எலிப்பாஷாணம் தொட்டி பாஷாணம், துத்தம், துருசு, சாதிலிங்கம், நவச்சாரம், வெங்காரம், மனோசிலை வகைக்கு விராகனிடை ஒன்று. அரிதாரம், கெந்தகம், இரசம், வகைக்கு விராகனிடை இரண்டு. நேர்வாளப்பருப்பு, நீர்வெட்டிப் பருப்பு, அளிஞ்சிவிரைப் பருப்பு வகைக்கு விராகனிடை ஐந்து. இந்திரகோலம், விராகனிடை மூன்று இவைகளைக் கல்வத்தில் எருக்கம்பால் விட்டு ஒரு சாமமரைத்து, பின் வேப்பெண்ணெய் சுடுதிவிட்டு ஒருசாம மரைத்து, மாட்டுக்கொம்புச் சிமிழில் வைத்துக்கொண்டு, ஒரு பணவிடை யளவு, புகை குடிக்குமாதிரி சுருட்டு போன்றவைகளிற் பூசிக் குடிக்கச் செய்யவும், அல்லது வெந்நீரிற் கலக்கிக் குடிக்க விஷங்க டீரும்.

இரண்டாவது பசுல்.

தேள் பாம்பு போன்றவைகளின் விஷத்துக்கு பரீட்சித்த குழம்பு.

——(:)——

வெள்ளைப் பாஷாணம், இரசம், கெந்தகம், மனோசிலை பெருங்காயம், துருசு, நின்பவிரை, வகைக்கு பலம் ஒன்று, சுத்திசெய்த வாளம் பலம். இரண்டு இவைகளைக் கல்வத்தில் எருக்கம்பால்விட்டொருசாமமரைத்து, பின், வேப்பெண்ணெய் விட்டு ஒரு சாமமரைத்து, கொம்புச்சிமிழில் வைத்துக்கொண்டு, விஷக் கடிவாயில், ஊசியாற் கொஞ்சங் கீறிக் கோரைப்படுத்தி அதில் மிளகுப்பிரமாணந்தேய்த்து நெருப்பனலிற் காட்ட விஷமிறங்கும். இது தேள் விஷத்துக்குப் பரீட்சிக்கப்பட்டது. பாம்பு விஷத்துக்கு, உள்ளில் கொடுக்கவும்.

மூன்றுவது பசுல்.

மற்றொரு விஷ, மை.

——[*]——

ஞாயிற்றுக் கிழமையில் ஓர் மூஞ்சிட்டெலியைக் காயப்படுத்தாமற் பிடித்து அதனுள் பதினைந்து விராகனிடை இரசம் விட்டு, வெளியாகாமற் றைத்து வேப்பெண்ணெயிருந்த கலயத்தில் வைத்து மேல் மூடிச் சீலைமண் செய்து, எருமை மாடு கட்டுங் கொட்டடிற் புதைத்து (43)ம் நாள் ஞாயிற்றுக்கிழமையி லெடுத்து. வீரம், பூரம், அரிதாரம் வகைக்கு களஞ்சி ஐந்து. வெள்ளாட்டுப் பித்திற் காணுமென்ற அளவுக்கு மிளகு போட்டு வைத்து அது ஊறி யுலர்ந்தபின் அத்துடன் சகல சரக்குகளையும், சிறியாநங்கை, சிமுட்டி, பேய்குமட்டி, ஆடு தின்னாப்பாளை இவைகளில் வகைக்குச் சாறு படி கால், விட்டு நான்கு சாமமரைத்து, சாறெல்லா முடிந்தபின், வேப்பெண்ணெய் கடவு படி கால், விட்டு இரண்டு சாமமரைத்து மெழுகு பதத்திலெடுத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு சிறிய சுண்டக்காயளவு வெந்நீரிற் கலக்கி கொடுக்க விஷங்க டீரும். அவுரிவேர், மிளகு கிசாழத்திற் குடிக்கச் சகல சில்விஷங்கள் தீரும்.

நான்காவது பசுல்.

விஷத்திற்குக் கண்ணிலிடு மை.

——(·)——

சுக்கு வால் மிளகு, கராம்பு, ஏலரிசி, வெள்ளை மிளகு, துவரைப் பருப்பு, யாவுஞ் சரியிடை வெற்றிலைச் சாற்றாலாட்டி, பிறகு கொம்புத் தேனிலரைத்து, கொஞ்சம் வெள்ளியும் பொன்னும் விட்டு மைபோலரைத்துச் சிமிழில் வைத்துக்கொண்டு கண்ணிற்றீட்ட விஷங்க ளிறங்கும்.

ஐந்தாவது பசுல்.

சகல விஷங்கட்கு முதற்றரமான குழம்பு.

——()——

தொலி, விரை நீக்கிய பதினைந்து எட்டிப்பழத்தின் சதையும், அதனிறைக்குப் பேய்க்குமட்டிச் சதையும், பேய்க்குமட்டி, பேய்த்

திமிட்டி, பேப்பீக்கி, பேய்ச்சுரை, வகைக்குத் தனிச்சாறு படி அரை, பனவெல்லம், நல்லெண்ணெய் வகைக்கு, பலம் இரண்டு. செய்யிற்றுவைத்து நெருப்பில்வாட்டிய பெருங்காயத்தூள் பலம் அரை. யாவையும் ஒன்றாய்ப் பிசைந்து, சட்டியிலிட்டு அடுப்பேற்றி லேகியம்போற் கிண்டி, பேய்ச்சுரை குடுக்கையில் வைத்துக்கொண்டு, பாம்பு விசத்திற்கு, துவரைப் பயறளவு, வெற்றிலை போன்ற அனுப்பானத்திற் கொடுக்க விஷமிறங்கும். விஷத்தின் குறிக்கிணங்க அவிழ்தத்தைக் கூட்டிக் குறைத்து கொடுக்கவும். பத்தியம்:—முருங்கையிலைபோட்டு காய்ச்சி வடித்த நீரில் பச்சரிசி படி கால், விட்டுக் காச்சிய கஞ்சியுந் துவரம் பருப்பு துவையலுங் கொடுக்கவும்.

ஆறாவது பகல்.

எலிகீடி விஷமியாவுக்குங் கைகண்ட மருந்து.

பயத்தங்காய்க் கள்ளியினது, வலதுபுறமோடிய வேரைக்களைந்து வாகின் வைக்கோலில் வாட்டி மேற்றோலியுரித்து எருக்கம் பாலிட்டரைத்து, தூதுளங்காயளவு வருட்டி மூன்று நாள் ஆறுவேளைகொடுத்தாலும், நங்கை வேரை ஆவின் பாலிலரைத்துக் கொடுத்தாலுந் தீரும். உப்பில்லாப் பத்தியம்

ஏழாவது பகல்.

நாய்கடி விஷத்திற்கு மருந்து.

பிறண்டையும் வெங்காயமுமரைத்து, மூன்று தடவை கடிவாயிற் கட்டினாலும், அல்லது நாயுருவிச்சாறு, அல்லது மேனிச்சாற்றிற் சுண்ணாம்பைக் குழைத்துக் கடிவாயிற் பூசினாலும் விசம் போகும்.

எட்டாவது பகல்.

எலிகடி பெருச்சாளிக்கடி விஷங்கட்கு.

நல்ல பாம்புத் தோலிச்சட்டை பணவிடை இரண்டு. கல்வத்திற் பொடித்து, வெல்லத்திற் குழைத்து நாலுவேளை கொடுக்கத் தீரும்.

ஒன்பதாவது பகல்.

அரணை கடிக்கு மருந்து.

கற்பவளத்தைப் பொடித்து நல்லெண்ணெயிற் குடிக்க விஷமிறங்கும். மூக்கரணைச் சாரணத்தினை நசியம்பிழிந்தாலுந் தீரும்.

பத்தாவது பகல்.

சடைமண்டலம் அரணை கடிக்கு மருந்து.

தேங்காயை எதுமட்டுந் தின்றாலுந் தீரும். சலவை யதிகரித்து மயக்கமுண்டாகித் தேங்காய் தின்ன சக்தியில்லாவிட்டால், தேங்காய்த் தனிப்பாலைச் சரீரமெங்குஞ் சூடுபறக்க தேய்த்தாற் றெளிவுண்டாகும். பிறகு தேங்காயைத் தின்னக் கொடுக்கவும்.

பதினொன்றாவது பகல்.

மற்றொருமுறை.

சிறியாநங்கை வேரை மூன்றுநாள் ஆவின் பாலிலரைத்துக் கலக்கிக்கொடுத்தால், பாம்பு எலி, கடி விஷங்களகலும். விஷம் மண்டையிற் சென்றதினால் மயக்கமாகிவிட்டால்; விஷமையைக் கண்ணில் தீட்டத் தெளிவடைவான்.

பன்னீராவது பகல்.

விஷம், போதை, மயக்கம், சன்னி, பிசாசு போன்றவைகட்கு நசியம்.

கேப்பிள்ளை இலைச்சாறு, அல்லது, வெற்றிலை வெங்காயம், மிளகு உப்பு, சீரகம், யாவையுங் கட்டிப்பிழிந்தாலும், அன்றேல், அச்சாக்கு

களை வெற்றிலைச்சாற்றிலுரைத்து வசம்புசேர்த்து மெழுகாக்கி, கண்ணில் காங்கிய பிட்டாலுந்தீரும்.

இருபத்திரண்டாவது பாபு.

பலநோய்களுக்குங் கைவல்லிய, பற்பல தயிலமாதிய வகைகளைக்கூறல்.

ஒன்றாவது பசுல்.

வாதம், வலிப்பு இசுவு, சன்னி, வகையடங்கலுக்கும் வேப்பெண்ணெய் நெய்

வேப்பெண்ணெய் படி ஒன்று. மதுரப்பட்டை பலம் ஆறு மயிலிறகு, பலம் ஒன்று. இரசச்செந்தூரம், வீரம், பூரம், வகைக்கு விராகனிடை இரண்டு இம்மூன்றையும் பொடித்துக்கொண்டு, மேற்படி பட்டையும் இறகையும், நுணுக்கி மேற்படி எண்ணெயுடன் பெரியபானையிலிட்டு, மத்தியிற் சிறிய துவாரமிடப்பட்ட சட்டியால் மேல்மூடி இரண்டுவாயுஞ்சேர்த்து, நூற்சுத்தி, பலமாய் ஏழுசீலைமண்செய் துலர்த்தி, மேற்படி துவாரத்தைத் திரியாலடைத்து அடுப்பேற்றி, சிறு நேரமெரித்து மேற்படி பானையிலாவி யதிகரித்த சமையங்கொஞ்சம் போற்றிரியைத்திறந்து, மறுபடியுமடைத்தெரித்து, பிறகு அத்திரியைத் திறந்து குச்சிவிட்டுப் பார்க்க கசப்புமாறியிருந்தா லடைத்துச் சற்றுநேரமெரித்து இறக்கி மறுநாள்ப்பானையைத் திறந்து தைலத்தைவடித்தி அதில் மேற்படி பொடியைத் தூவிக், கலக்கி வைத்துக்கொண்டு ஏழு நாள்வரையில் காலைமாலை கரண்டி வீதம் “ கடும்பத்தியத்துடன் கொடுக்க, வாதம், எண்பதும் இசுவு, வலிப்பு, சன்னியாவுந்தீரும். கைகால், சோர்வு, வலி, கடுப்பு போன்றவைகளுந்தீரும் மேலையும்பூசலாம்.

இரண்டாவது பசுல்.

மேகவிராஜ கேசரியெண்ணெய்.

விளக்கெண்ணெய்ப்படி, கால், குறுக்குச் சாறுப்படி அரை. காரபோக அரிசி, ஏலரிசி நெல்லிக்காய்க், கெந்தகம், லிங்கம், தாளகம் இரசம், வகைக்குப்பலம், கால். யாவையுங்கல்வத்தில் மேற்படிசாறுவிட்டரைத்து மேற்படி யெண்ணெயும், மிஞ்சிய சாற்றையுமரைத்த மருந்துகளையு மொன்றாய்சேர்த்து அடுப்பேற்றிக்காய்ச்சி, தைலபதத்திலிறக்கிவடித்து, கரண்டி வீதம் நாளொன்றுக்கு ஒருதடவையாக ஏழுநாள் கொடுக்கத்தீரும் வியாதிகள் மேகம், பத்து, சொறி, புண், ரணங்கள் நீர்க்கட்டு போன்ற வியாதிகளேயாம்.

மூன்றாவது பசுல்.

சூடு, வெட்டையாதியவைகட்குத் தைலம்.

ஒரு இளநீரில், தேள்வைப்புள்ள, கொட்டைமுத்தை மூன்றுநாள் மட்டு ஊறவைத்து, பிறகு, இளநீரிலேயே அவித்தரைத்துலர்த்தி அதற்குச் செல்லுமான இளநீருடன், பொன்னானிச்சாறு, ஆவின்பால், நெல்லிக்காய்ச்சாறுவகைக்குப்படி அரை. இவைகளைச்சட்டியிலிட்டு அடுப்பேற்றியெரித்து எண்ணெய்வடித்து தலைமுழுகிவரவும். ஆறைப்பல்லாமல் நெல்லிக்காய் சக்கைபாலெண்ணெயைப் போக்கவும் இம்முறையிற் சொல்லப்படும் ஆவின்பாலளவுக்கு நல்லெண்ணெய் சேர்த்துங்காய்ச்சலாம். நல்லபலனைத்தராது.

நான்காவது பசுல்.

பற்பல வியாதிகட்கு, கெந்தகத் தயிலம்.

நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனிடை பத்து. அவித்தெடுத்த விளக்கெண்ணெய்ப்படி, கால். செங்கொட்டை விராகனிடை முப்பது. இதை எருமைமாட்டுச்சாணியைக்கரைத்து அதில் அவித்துசுத்தியான பின்னெடுத்து. மூக்குவெட்டி யோர் சட்டியிலிட்டு அத்துடன் அந்த எண்ணெயும் கெந்தகத்தைப் பொடித்துஞ்சேர்த்து அடுப்பேற்றியெரித்து, செங்கொட்டை வெடிக்கும் பருவத்திலிறக்கி, தைலத்தை மட்டும் வடித்துக்கொண்டு, இதில் ஒரு துட்டிடையும், மடித்த இரசம் விராகனிடை இரண்டும், ஒரு துட்டிடை ஆவினெய்யு மொன்று கலந்து

மூன்றுநாட் கொடுக்கத்தீரும் வியாதிகள்:—கண்டமாலை மாருணி தொடைவாளை, அரையாப்பு, விப்புருதிக்கட்டு. லிங்கப்புத்து, கணைணல் புத்து கண்ணோசையாவுமேயாம்.

ஐந்தாவது பசுல்.

வாதம், வலிப்பு, முடக்குமுதலியவை கட்டுத்தைலம்

சுக்கல் விராகனிடை முக்கால். பாற்சாம்புராணி விராகனிடை ஒன்றரை கொடிவேலிவேர் விராகனிடை இரண்டேகால். குங்கிலியம் விராகனிடைஒன்றுயாவையுந்தூளிற்பொடித்துத்தமரிட்டகலையத்துள்ளடக்கிமேல் மூடிச் சீலைமண்செய்து அதை மற்றொரு கலயத்தின் பேரில் வைத்துச் சந்துக்குச்சீலை மண் செய்து அடுப்பேற்றி, நிதானமாகஎரித்தெடுக்க, கீழ்க்கலயத்திற்றைலம் வடிந்திருக்கும். அல்லது மேற்படி மருந்தைத்தூளிற்றமரிடாத கலயத்திலடக்கி மேல் மூடிச்சீலை மண் செய்து அதன் விலாப்புறந்தமரிட்டு அத்தமருள் சிறிய குழாவைத்து அடுப்பேற்றி, குழாவுக்கு நேரில் மற்றொரு பாத்திரம்வைத்தெரித்தாலுந் தைலம்வடியும். முடக்கு மடக்கு; சுளுக்கு, வலிப்பு, புடைப்பு வாதம் போன்ற நோய்களுக்குப் பூசத்தீரும்.

ஆறாவது பசுல்.

வெண்குட்டத்திற்குத் தையிலம்,

நெல்லிக்காய்க் கெந்தகம், மனோசிலை அரிதாரம், வகைக்கு விராகனிடை மூன்று. துத்தம் விராகனிடை இரண்டு. யாவையும் பொடித்து வெள்ளைப்புடவையிற் பாத்தித்திரிபோற்றிரித்து விளக்கெண்ணெயிற்று வைத்துத் தீபங்கொளுத்தி எரியும்பொழுது வடியுமெண்ணெயைத் திரியிற்கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு அத்திரியினின்றும் வடியுஞ்சுடர்த்தயிலத்தை யெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு அத்துடன் இரசம் விராகனிடை யொன்றுவிட்டு மத்தித்துவெண்குட்டம் போன்ற வெள்ளைகளிற் பூசிவரத்தீரும். உப்பு. புளி தள்ளவும்.

ஏழாவது பசுல்.

சிறுபிள்ளைகளின் தோசநோய்களுக்கு வேப்பெண்ணெய்த் தயிலம்.

வேப்பெண்ணெய்ப்படி ஒன்று. மயிலிறகு பலம் ஒன்று கறுக்கிச் சேர்த்து, அத்துடன் வெற்றிலைச்சாறு. பொடுவலைச்சாறு. வகைக்குப்படி, கால் சேர்த்து அடுப்பேற்றிக்காச்சி, தைலபதத்தில்வடித்துக் கொண்டு. கரண்டி வீதங்கொடுக்க சிசுக்களின்தோசங்களாதிய வியாதிகள் தீரும்.

எட்டாவது பசுல்.

"முடி" உரோமம் வளர்ச்சித்தைலம்.

வளர்க்கரிப்பான் சாறு. முடிவளர்ச்சிக் கொடிச்சாறு. நல்லெண்ணெய் வகைக்குப்படி "கால்" சமூலத்தையுங்காச்சி, தயிலபதத்திலிறக்கி வடித்து முழுகிவரமுடிவளரும்.

ஒன்பதாவது பசுல்,

மற்றொரு வகை சம்பங்கி யெண்ணெய்.

நல்லெண்ணெய் படி கால். தேன்மெழுகு. பூலாங்கிளங்கு, வெட்டிவேர், பலமணம், வகைக்கு பலம் ஒன்று பொடித்து பதமாய்க்காச்சி முழுகிவர நல்லமணங்களுடன் சுகத்தைக்கொடுக்கும்.

பத்தாவது பசுல்.

காதில் ஊனம் சீழ்வடிதலுக் கெண்ணெய்.

சோக்கி என்ற சிறியசங்கைக் கரித்து அச்சாம்பலை சீழ்வடிகிற செவியிலிட்டுவேப்பெண்ணெய் வெதுப்பி அச்செவியி லொழுக்கித்துணியாலடைத்தாலும், அல்லது, பதினைந்து காஞ்சிரங் கொட்டையைக்கம்பியிற்

குத்தி வேப்பெண்ணெயிற்று வைத்து, தீபங்கொளுத்திக் கொட்டை யெரியும்போது மேற்படி யெண்ணெயை யூற்றிச் சுடரெண்ணெய் வடித்து அவ்வெண்ணெயை மறுபடியுங் கொடுத்து தளுக்கில்லாமற் சுடர்த் தைலமாயிறக்கி வடிந்ததைக் காதில்விட்டடைத்தாலும் சீழ் ஊளை வருவதைப் போக்கும்.

——(*)——

பதினொன்றாவது பசுல்.

பலநோய்கட்கு கொடிவேலித் தைலம்.

——):(——

பச்சைக்கொடிவேலிவேர்முதலியசமூலத்தையும் மைபோலரைத்து. முத்தின பெரிய தேங்கா யிரண்டில் பால் பிழிந்து. அதிற்கலக்கி அடுப்பேற்றிக் கொதிக்கும்பொழுது அதில் முன்னம் முத்திய இரண்டுதேங்காயின் பாலைக்காச்சி யெடுத்திருக்கின்ற, தேங்காய் நெய்யைவிட்டுக் காச்சித் தைலபதத்தி லிறக்கி வடித்துக்கொண்டு. மூன்று நாள் ஆறுவேளை, கரண்டி வீதங்கொடுத்து உப்பில்லாப் பத்தியங்காத்து மேற்பூச்சும் பூசி ஏழாவது நாள் தலைமுழுகி உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்ளத்தீரும் வியாதிகள் : அரையாப்பு பவுந்திரம் போன்றவைகளேயாம்.

——(*)——

பன்னீராவது பசுல்.

சிறு பிள்ளைகளின் இருமல் இளைப்புகளுக்குப் புளியமடல் தைலம்.

——:(*):——

தேள்வையான புளியமடல் கிழங்குச் சாற்றில்வெள்ளருகு,கருஞ்சீரகம், கடுகுரோகணி, கத்தூரிமஞ்சள், வகைக்கு விராகனிடை இரண்டு பொடி செய்து சேர்த்து அத்துடன் சுமாராக வேப்பெண்ணெய் விட்டு அதற்குப்போதுமான ஈருள்ளியை நறுக்கிச் சேர்த்துக் காச்சிப் பதமாய்வடித்துக் கொண்டு சிறுபிள்ளைகளுக்குக் கொடுக்கும்போது கரண்டியிலிட்டு காச்சி முறித்துக்கொடுத்துஉப்பில்லாப் பத்தியங்காக்க மேற்கூறிய நோய்கள்போம் மறுநாள் உப்புசேர்க்கலாம்.

——(*)——

பதிமூன்றாவது பசுல்.

முகவாதத்துக்கு ஒத்தனம்.

——(:)——

நாய்மண்டை முள்ளை யிடித்துத் துணியிற் பொதிந்து பொட்டணஞ்செய்து சிறுசெங்கிளை நீர்ச்சாறு வேப்பெண்ணெயிவைகளைச் சரியளவெடுத்துக்காய்ச்சி அதில் மேற்படி மருந்துப் பொட்டணத்தைத் துவைத்து ஒத்தனமிடத் தீரும்.

—(:*:)—

பதினான்காவது பசுல்.

கிரந்தி அரையாப்பு, கரப்பான்கட்டு இவைகட்கு மிருதார்சிங்கித் தைலம்.

—(:*:)—

கொடிவேலிவேர், கருஞ்சூரைவேர், சங்கம்வேர், மருதம்பட்டை வகைக்குப் பலம் அரை. குன்றிமுத்துஒன்பது. காஞ்சிரவிரை இரண்டு கழச்சிப் பருப்பு நாலு. சகலத்தையும் பொடித்து, கால்படி நல்லெண்ணெய்விட்டு மிருதார்சிங்கி, லிங்கம், இரசகற்பூரம் வகைக்கு விராகனிடை ஒன்று அதிற்சேர்த்து. பதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு மூன்றுநாள் ஆறுவேளைகரண்டிவீதங் கொடுத்து உப்பில்லாப் பத்தியங்காக்கவும். மேற்பூச்சும்பூசி நாலாவது நாள்; முருங்கையிலையுடன் வறுத்தஉப்புச் சேர்த்துஏழாவதுநாளிற் றலைமுழுகிப்புளிகூட்டிக் கொள்ளவும். நாற்பதுநாள் வரையில் கரப்பன் பதார்த்தங்கள் தள்ளிவரத் தீரும் நோய்கள், மேறகூறிய நோயோடு பறங்கிபோன்றவைகளுமேயாம்.

——(:)——

பதினைந்தாவது பசுல.

நீரடைப்பு, கடுப்பு, கல்லடைப்பாதியவைகட்குப் பரீட்சித் தைலம்.

————

அவித்து ஊற்றிய விளக்கெண்ணெய் வெங்காயச்சாறு. கீழ்காய்நெல்லிச்சாறு, பொன்னுனிச்சாறு. வகைக்குப்படிகால், பொரிகாரம, பலம் கால், வெள்ளரிவிரை படிகால். நிலவேரென்ன நாக்களம் பூச்சி

பலம் ஒன்று. மேற்படி எண்ணெயுஞ் சாறுஞ் சட்டியிலிட்டு அவ்வெள்ளரி விரையை மைபோலரைத்துச்சேர்த்து, நிலவேளை வெந்நீரிற்சுத்திசெய்து சேர்த்து அடுப்பேற்றி வற்றக்காய்ச்சி வருகையில்அந்நிலவேர் மிதந்து, மொறுமொறுப்பான பதத்திலிறக்கி அதில்மேற்படி பொரிகாரத்தைப் பொடிசெய்து சேர்த்துக் கலக்கி மூடி ஆறியபின் வடித்துப் புட்டியில் வைத்துக்கொண்டு, கரண்டிவீதங் கொடுத்து, உடனேயே, கால் பலம், முந்திரிப்பழத்தை வெந்நீரிலிட்டுப் பிசைந்து வடித்துகொடுக்க இந்நோய்கடரும்.

—(:*:)—

பதினாறாவது பசுல்.

வலிப்பு இசிவுபோன்ற நோய்களுக்குத் தைலம்.

———(*)———

மனோசிலை அரிதாரம் பாசாணம் வகைக்கு விராகனிடைஒன்று. திப்பிலி காசு ஒன்றிரை அரைப்பு விராகனிடைஇரண்டு. சமூலமுமிடித்துத் துணியிற் பரத்தி திரிசெய்து வேப்பெண்ணெயிற் றுவைத்துக் கம்பியிற்கொளுகி ஒருபுறந் தீயேற்றி, மேற்படி எண்ணெய் படி அரையைச் சிறுகச் சிறுகக்கொடுத்தெரித்துச் சுடர்த்தைல மிறக்கிவைத்துக்கொண்டு. சூடம், கரிய போளம் வகைக்குப் பலம் அரை, பாசாணம் விராகனிடை ஒன்று. இவைகளைப் பொடிசெய்து அத்தைலத்திற் சேர்த்துச் சூரிய புடமிட்டு வைத்துக்கொண்டு மேற்படி வியாதிகள் வந்தபொழுது, காத்திற்பூசி அனல்காட்டி வியாதிகளிற்றடவத் திரும்.

பதினேழாவது பசுல்.

இரணங்கட்குப் பூசுந்தைலம்.

——(:··:)——

இரசம் விராகனிடை ஒன்று, நீர் வெட்டி முத்து துருசு, கெந்தகம், வகைக்கு விராகனிடை இரண்டு, யாவையுங் கல்வத்தில் வெற்றிலைச் சாற்றாலரைத்து, நல்லெண்ணெய் படி அரைக்காலிற் கலக்கிக் காய்ச்சிப் பூச ஆறும்.

——()——

பதினெட்டாவது பசுல்.

வியாதி முற்றுக்கும் விஷமுட்டித் தைலம்.

——[*]——

மருதம்பட்டை, பூவரசன்பட்டை, வேப்பம்பட்டை, நொச்சிப்பட்டை, அறளிப்பட்டை, மாவலிங்கப்பட்டை, வெள்வாகைப்பட்டை முருங்கைப்பட்டை, வாகைப்பட்டை, நாவற்பட்டை, மாம்பட்டை, கொன்னைப்பட்டை, இத்திப்பட்டை, புங்கப்பட்டை, சங்கவேர், கருஞ்சூரை, எருக்கலை, ஆடுதின்னாப்பாளை, குத்தாக்கை சிமுட்டி, சிவனார்வேம்பு அவுரி, கொழுஞ்சி முக்கொறண்டி, நாய்க்கொட்டான், சிறுகீரை, நெருஞ்சி, நீர்முள்ளி, குப்பைமேனி, கண்டங்கத்திரி, தைவேளை, நாய்க்கடுகு, குப்பைமுள்ளி, கரிப்பான், கீழ்காய்நெல்லி, கொடுப்பைகுமட்டி, சிமுட்டி, கற்றாழை, செம்முள்ளி, தூதுவளை, கொடிவேலி இவைகளின் வேர், அருகங்கிழங்கு, பிரப்பங்கிழங்கு, வெள்ளருகு, பறங்கிப்பட்டை, இவைகளியாவும் சகல மருந்துகளும் வகைக்குப் பலம் இரண்டு. சகலதையுமிடித்து, பன்னிரண்டு படி, தண்ணீரிலிட்டு ஒருபடியாக வற்றக்காய்ச்சி வடித்த கியாழத்தில் நல்லெண்ணெய் படி ஒன்றுவிட்டுக் காய்ச்சி, அதில் மிருதார்சிங்கி, சாதிலிங்கம், பூரம் வகைக்கு விராகனிடை இரண்டு பொடித்துச்சேர்த்துக்கலக்கிவைத்துக்கொண்டு முழுகிவரத் தீருநோய்களாவன: அரையாப்பு, புண், பொடிரணங்கள் பவுந்திரியம், கண்டமாலை விப்பிருதிக்கட்டு, கண்ணோசைபோன்றவைகள், குஷ்டநீர், கண், புகைச்சல், மற்றைய வாய்வுகள் வெட்டை பிடிப்பு கைகால் உளைச்சல் குறுக்குவலி வெட்டை முதலிய வியாதிகளியாவுமாம்.

பத்தொன்பதாவது பசுல்.

பித்தவெட்டை, மயக்கம் மஞ்சட்காமாலையான நோய்கட்குக் கீழ்காய் நெல்லித்தைலம்.

——(*)——

ஆறுபடி ஜலத்தில் வேகக்கூடிய, கீழ்காய் நெல்லி சமூலத்தையுமிடித்துவிட்டு, எட்டிலொன்றாய் வற்றக்காச்சி வடித்த கியாழத்தில், எள்ளெண்ணெய்ப் படி இரண்டுவிட்டு, சீரகம் பலம் இரண்டு ஆவின் பாலிலரைத்து அதிற் கலக்கி காய்ச்சித் தைல பதத்தில் வடித்து

தலைமுழுகிவரத் தீரு நோய்கள். மேற்கூறிய நோய்களுடன் வாந்தி, தலைமயக்கம், வாய்நீரூறல் ஜுரங்கள் நடுக்கம் போன்றவைகளேயாம்.

இருபதாவது பசுல்.

பித்தவகைகளியாவுக்கும் நெல்லிக்காய்த் தைலம்.

(*)

நெல்லிக்காய் மொசுமுசுக்கை, சீந்தி, பொன்னாங்கனி வகைக்குச் சாறு படி ஒன்று. எள்ளெண்ணெய் படி ஒன்று. கோரைக் கிழங்கு அதிமதுரம், ஏலம், சந்தனம், சடாமாஞ்சில் செம்புகம்பூ, லவங்கப்பூ லவங்கம், திரிகடுகு, வகைக்குப் பலம் கால். சமூலமும் பாலிலரைத்துச் சேர்த்துக் காய்ச்சிப் பதமாய் வடித்து தலை முழுகிவர மேற்படி வியாதிகள் தீரும். காங்கை தணிந்து, குளிர்ச்சியாகிச் சுகமுண்டாகும்.

இருபத்தோன்றாவது பசுல்.

மண்டை, காதிரைச்சல், ஊளைக்குத் தைலம்.

வேப்பெண்ணெய் படி அரைக்கால், முசுரு முட்டை, நண்டுக் கொழுப்பு, நிலவேர், கோழி முட்டை வெள்ளைக்கருவு, சகலத்தையு மிட்டுக் காச்சும்போது, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள் வசம்பு, தை வேளை வேர், குப்பைமேனி வேர், காத்தொட்டியிலைச் சாறு, அச்சரக் குகளை யிடித்து யாவையும் மேற்படி யெண்ணெயிற் சேர்த்துக் காச்சி, தைலபதத்திலிறக்கி, காதிலூற்றி யடைத்துவைக்க செவி நோய்கள் தீரும்.

இருபத்திரண்டாவது பசுல்.

காச்சல் கட்டிக்கு, சீராசெங்கிளநீர்த் தைலம்.

(*)

அதிமதுரம், சன்னலவங்கம், அக்ரகாரம், மஞ்சிட்டி, மிளகு ஏலம், நற்சீரகம், வகைக்குக்காசு ஒன்று. சரக்குகளைவடித்து இடித் ஆவினெய், சீராசெங்கிளநீர்ச்சாறு வகைக்குப் படி காலில் அவைகளை சேர்த்துக் காய்ச்சிப் பதமாய் வடித்து, காலை மாலை கரண்டி வீதங் குடிக்க அந்நோய்கள் தீரும்.

இருபத்திமூன்றாவது பசுல்.

மண்டை நோய்களுக்குச் சாம்பிருணித்தைலம்.

அகண்ட வோர் சட்டியினுள் நடுவே சிறிய வோர் மண்பாத்திரத்தைவைத்து அதன் சுற்றிலும் வெளியே வாயருகுவரையிற் பாற் சாம்பிருணிப் பொடியையிட்டு, மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி, சிறுதீ யெரித்து, மேற்சட்டியிற் சூடு வந்து வாசிக்குந் தருணத்தில் தீயை நிறுத்தி ஆறி யெடுக்க, அந்த வுட்பாத்திரத்தில் தைலமிருக்கும் அதைச் சிரசில் அல்லது நெற்றியிற் பூசத்தீரும், வியாதிகள் நீர்ப்பிணைப்பு, தலையிடி போன்ற வியாதிக ளியாவுமாம்

இருபத்திநான்காவது பசுல்.

இரத்த பீனிசத்துக்குத் தயிலம்.

(:*:)

மிளகு பலம் ஒன்று. அதை யிடித்து, மூன்று நிறமான சீலையிற் பொட்டணங் கட்டி அம்மூன்று பொட்டணத்தையுமோர் சிறியகலயத்தில், கால்படி நல்லெண்ணெய் விட்டு, அதிலிட்டு சில் மூடிச் சீலைமண் செய்து, மூன்றுபடி நெல்லைத் தண்ணீரிற் போட்டு நீரில்லாமலெடுத்து வோர் பானையில் அந்நெல்லை வைத்து அதன் மத்தியில் மேற்படி மருந்துள்ள கலயத்தைவைத்து மேலிலும் அவ்வாறே செய்தெடுத்த மூன்று படி நெல்லை யதன்மேலிட்டுத் தண்ணீர் விடாமல் மேல் மூடிப் பலமாய்ச் சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றிச் சிறுதீ யெரித்து, மேற்சட்டியிற் சூடுவந்தவுடன் இறக்கி ஆறியபின், அதனுள்ள தைலத்தை யெடுத்துக்கொண்டு, ஒரு பொட்டணத்திலிருக்குந் தைலத்தைப் பிழிந்து தலைமுழுகி, அப்பொட்டணத்தை மாறியும் அத்தைலத்திற் போட்டுவிட்டு நாலு நாளைக்குப்பின் மறு பொட்டணம் இவ்வாறு மாறிமாறி முழுகிவரத் தீரும்; வியாதிகள்: மண்டையிடி குத்து, மூக்கு, வாயில், நின்று மிரத்தம் வருகிற பீனிசம், வாதம் போன்ற நோய்களேயாம். மேற்படி த்தைலத்தை பதினைந்து நாள்வரையில் நெல்லுக்குட் புதைத்து

வைத்து அப்பாலெடுத்து முழுகவும். வாதநோயானால் நல்லெண்ணெய்க்குப் பகரமாய் வேப்பெண்ணெய் விடவும் தலை முழுகும் நாளிற் புளி தள்ளவும்.

இருபத்தைந்தாவது பசுல்.

சிரசிநோய்க ளியாவுக்கு முக்கூட்டெண்ணெய்.

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய், வகைக்குப் படி. கால். நற்சீரகம், மிளகு வகைக்கு ஏழு ரூபாயிடை முப்பது கோழிமுட்டைவெள்ளைக் கருவைச் செலுத்திச் செலுத்தி யரைத்து வில்லைகள்செய்துலர்த்தி, மேற்படி எண்ணெய் மூன்றுங் கலந்து இரும்புச் சட்டியிலிட்டு அதிலவ்வில்லைகளையிட்டு அடுப்பேற்றிக் கொதித்தவுடனிறக்கி மறுநாளடுப்பேற்றி யெரித்துப் பதமாக இறக்கி அதாவது, சரியான பதமென்பது, கைவிட்டுக் கிண்டினாற் சூடிராது. அத்தருணம் வடித்துக்கொண்டு தலை முழுகிவரத் தீரும் வியாதிகள் சிரநோய் தொண்ணூற்றாறுமாம்.

இருபத்தாறுவது பசுல்

பலநோய்களுக்குங் கெந்தக நெய்.

கெந்தகம் பலமைந்து. வீரம் பலம் முக்கால். பூரம் பலம் அரை. தாளகம் பலம் ஒன்றேகால். மனோசிலை பலம் ஒன்றரை. வெடியுப்பு பலமிரண்டேகால். இவைகளைச் சுத்திசெய்து முப்பத்திரண்டு ரூபாயிடை ஆவிநெய்யால் கல்வத்தில் மூன்று சாமமாட்டித் துணியாற் பொட்டணம்போற் கட்டி வைத்துக்கொண்டு "கோழிக்கூடுபோல்," ஒன்றரை முழச் சதுரமாய் மதிற் கீழ்ப்புறம் வாய் விரிவாயுமுள்ள அடுப்பின்மேல், தூரினடுவில் ஒருசாண் வட்டத்திற் றமர் விட்ட ஓர் சட்டியை அரைச்சட்டியுள்ளிலும் அரைச்சட்டி வெளியிலு மிருக்கும்படிக்குப் புதைத்து, உட்சட்டி மத்தியிலோர் குச்சியை வைத்து அதிலப் பொட்டணத்தைத் துலாந்திரங் கட்டித்தண்ணீருள்ள வோரகண்ட சட்டியை மேற்படி சட்டிக்குமேல் வைத்துச் சந்துக்குச் சீலைமண் செய்து, மேற்படி துலாந்திரங் கட்டிவிட்டிருக்கின்ற சட்டியைச் சுற்றிலும் மேற்படி யடுப்புக்குமேல் வராட்டியடுக்கி நெருப்பு மூட்டி, மேற்படி அடுப்பின்கீழ், மேற்படி மருந்துக்கு நேரில் ஓர் பீங்கான் வைத்தாலதிற் றைலமிறங்கும். கடைசியிற் கறுப்பா யிறங்கும் அதைவேறாயெடுத்துக்கொண்டு மேற்படி தைலத்தைப் பல நோய்கட்கும் அதில் வாதம் போன்றவைகட்கும், வியாதிக் கேதுவாக, உள்ளுக்குக் கொடுத்து மேற் பூச்சும் பூச, சகல நோய்களுந் தீரும். கடின பத்தியம். கடைசியாக இறங்கிய கறுப்பு நிறத் தைலத்தை ஆறாத புண் ரணங்களிற்பூசச் சுத்தமாக்கும். இத்தைலம் யூகமா யெடுக்கவேண்டும். இது முக்கியமான முறை. அடுப்பின் குறிப்பிது.

இருபத்தேழாவது பசுல்.

விடாத சுரத்துக்கு விருகங்கிழங்குத் தைலம்.

நல்லெண்ணெய் படி காலில் அவலரக்கு, கருஞ்சீரகம், கஸ்தூரி, மஞ்சள், காருபோக அரிசிவகைக்குப் பலம் அரை. இடித்துச்சேர்த்து அத்துடன் சுத்திசெய்த விருகங்கிழங்கு பலம் ஒன்று அரைத்துக் கலக்கி, அடுப்பேற்றிக் காச்சித் தைலபதத்திலிறக்கி வடித்துக்கொண்டு முழுகிவரச் சுரங்களியாவுந் தீரும்.

இருபத்தெட்டாவது பசுல்.

தவளை நெய்.

கால், கையில், மேகத்தாலுண்டான புண், ரணம், பிளப்பு, பித்த வெடிப்பு போன்றவைகளிற் றளமிட்டா லவைக ணீங்கும்.

இருபத்தொன்பதாவது பசுல்.

பன்னோய்களுக்குங் கெந்தக நெய்.

கெந்தகம், வெடியுப்பு, மனோசிலை, பூரம், வகைக்குத் தோலா ஒன்று. அரிதாரம் வீரம் நமச்சாரம் வகைக்கு, தோலா கால். சகலதையுங் கல்வத்தினன்றாக, பசுவெண்ணெய் சேர் இரண்டு. கொஞ்சங் கொஞ்சமாய்க் கொடுத்து மைபோலரைத்தெடுத்து, ஓரகண்ட குண்

டாளச்சட்டியிற் சலமிட்டதனடுவிலோர் பீங்கான் கோப்பையை நடுவி விட்டு, அச்சட்டி வாயிற் றெப்வாகச் சீலைவேடுகட்டி அதன்மேற் சிறுகச்சிறுக அம்மருந்தைத்தடவி அக்குண்டாளச்சட்டிக்குவெளியில்சுற்றிலும் நெருப்பிட்டு விசிறிகொண்டு விசியெரித்து அம்மருந்துகள் முடிந்தபின் இறக்கிப்பெடுக்க அப்பீங்கான் கோப்பையில் நெய் வடிந்திருக்கும். அதிலிரண்டு பணவிடை வீதம் சருக்கரையிற் கொடுக்க, குன்மம், ஜயம், சூலை; குட்டம், முடக்கு, புண்; ரணம், அரையாப்பு, அரிப்பு, வெள்ளை, பவுத்திரம் மேகமியாவும் போம். அன்றியும், கெர்ப்ப புழுவும் விழும். கடும் த்தியம் பாசிப்பயறு ஆகாரம். அன்றியும் கெந்தகம், மருதோன்றிச் ம, பால்இவைகளையரைத்து,இராசாயனம் காய்ச்சிக்கொள்ளவும்.

முப்பதாவது பசுல்.

மேகரோக முதலியவைகட்கு மேகாதித் தைலம்.

ஊளலாத்திப்பட்டை, வேம்படம்பட்டை, பூவரசம்பட்டை, ஆவாரம்பட்டை, கொடிவேலிவேர், சங்கம் வேர், பறங்கிப்பட்டை, செங்கதாரிப்பட்டைவகைக்குச்சேர் ஒன்று. யாவையு நறுக்கி யுரலிலிடித்துப் புதிய பானையிலிட்டு (16) படி தண்ணீர் விட்டு, எட்டொன்றாய் வற்றக் காய்ச்சியதில் முத்துக்கொட்டை யெண்ணெய் படி ஒன்றுவிட்டு பின்னர் ஊளலாத்தி இலை, சின்னியிலை கழற்சியிலை உப்பிலிக் கொடி, வெற்றிலை, உத்தாமணி, மிளகு சாரணை, பீச்சுவாட்டிபிலை, வகைக்குச் சாறு படி அரை. சுத்தி செய்த வாளம் பலம் கால். சேங்கொட்டை காசு ஒன்று. சமூலமும் மேற்படி எண்ணெயுடன்ஒன்றுசேர்த்து காச்சித் தைலபதத்தில் வடித்துப் புட்டியிலடைத்துக்கொண்டு நாளொன்றுக்கு இரண்டு பலமாக நோயினியல்புக் கிணங்கக் கூட்டிக் குறைத்துக் கொடுத்து உப்பில்லாப்பத்தியத்துடன் கொடுக்கத்தீரும் வியாதிகள். சூலை, மேகமியாவும் பித்தவாய்வு முதல்வனவைகளே. பிள்ளை பில்லாதவளுக்கு, மூன்றுநாள் பத்தியத்துடன் கொடுக்க பிள்ளையுண்டாகும்.

முப்பத்தோன்றாவது பசுல்.

மேகநீர்க்குத் தைலம்.

—:(*)—

கண்கூறுத்துமுத்திய நெத்துதேங்காயை யுடைத்துத் திருவிய ப்பூ வை அந்தந்த மூடியிற் றிருவிய பூவை ஆகதில் வைத்து அரைக்கால்படி எருக்கம்பாலை நிதானமாய் விட்டுப் பூவையோர் சொம்பாற் கிளரி இரு மூடிப்பூவிலும் பாற்சேர்ந்தபின், கால் இராத்தல் பூண்டைத்தொலி நீக்கி இருபடி சலங்கொள்ளும்படியான வோர்பானையிலரைப்பானையளவுக்கு ஜலமிட்டுத்துணி வேடுகட்டி அதிலப்பூவைப் பரத்தி, அதன் மேலப்பூண்டைப் பரத்தி அதன்மேல் பூவைப்பரத்தி அதன் மேல் பூண்டைப்பரத்தி அதன்மேல் மத்தியில் ஒரு பூண்டை வைத்து மேல் மூடிச்சீலைமண்செய்து அடுப்பேற்றி யெரித்து மேலில் வைத்த அந்தப்பூண்டொன்றும் வெந்து பதமாயிருப்பதையறிந்தால் இறக்கி ஆறிய பின், பால் பிழிந்து: எண்ணெய்காச்சி வைத்துக் கொண்டு பூசிவருக, உடலிலுள்ள மேகநீரை வெளிப்படுத்தி, பத்துவங்குபோன்ற மேகங்களியாவையும் போக்கும் இவ்வாறே திருகுகள்ளிப்பால் அல்லது சதுரக்கள்ளிப்பாலால் செய்தாலுமிக நன்று.

முப்பத்திரண்டாவது பசுல்.

சிறுபிள்ளைகளின் கணைஎட்டுக்குந் தயிலம்.

—(:)—

ஆவிநெய்படிகாலில், ஆவரைவிரை பலம் அரை. ஆவின்பால் விட்டரைத்துக்கலக்கி அடுப்பேற்றிப் பதமாகக்காச்சி வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு, கால் கரண்டிவீதம் பத்தியத்துடன்கொடுத்துவந்தால் சகலகணைச் சூடுந்தீரும். பழயசாதம் பாகல் அகத்திக் கீரை, மீன், பறங்கிக்காயானவைகணிக்கவும்.

—:(:):—

முப்பத்திமூன்றாவது பசுல்.

கூந்தல் வளர்ச்சித்தைலம்.

கழுதைவிட்டையைக்கரித்துச் சாம்பலாக்கி,ஆவினெய்யிற் கலந்து தலையிற்தேய்த்துவருக, மிக்கவதிகமாகக் கூந்தல் வளரும்.

—[]—

முப்பத்திநான்காவது பசுல்.

சகலநேத்திரநோய், சிரநோய்கட்குத் தைலம்

[*]

சந்தன நங்கையை வேரோடு பிடுங்கி வேரைக்களைந்து கியாழம் வடித்து, அதிலொருபடி வெண்ணெயும் அந்தயிலையிலெடுத்த கால்படி சாற்றையுஞ் சேர்த்து அத்துடன் அபியூன் விராகனிடை ஒன்று சேர்த்து. தைலபதத்திற் காய்ச்சி மறுபாத்திரத்தில் மாற்றி ஆறியபின் மறுபடியும் முன்போல. கியாழமும் சாறும் அபியூனுமிட்டுக் காய்ச்சினால் மிகநலம் இவ்வாறு நான்குமுறை அவ்வெண்ணெயைக் காய்ச்சியெடுத்துக்கொண்டால், ஒரே முழுக்கில் நீருநோய்கள், சகல நேத்திர நோய்கள் சிரநோய்கள் சகலவிதபீனிசம், செவிநோய்களில் குத்தல், வெழுச்சிபோன்றவைகளே. கைவல்லிய சிரோருக்கிமெனச்சொல்லலாம்

முப்பந்தியைந்தாவது பசுல்,

குஷ்டகுடோரித் தைலம்.

வேம்புமரத்தின்பட்டை, பூவரசன்பட்டை, சங்கம்வேர், பொன்னாங்காரைவேர், ஆவரம்பட்டை வகைக்குச்சேர் ஒன்று. பறங்கிப்பட்டை செங்கதாரிப்பட்டை கொடிவேலிவேர் வகைக்குச்சேர் அரை. கார்போக அரிசி, கருஞ்சீரகம், வாலுளுவை அரிசி. வெள்ளைப்பூண்டு, வகைக்குச்சேர் கால். ஏலரிசி, கெந்தகம, சேங்கொட்டைவகைக்குச் சேர் அரைக்கால். சிவனார் வேம்புசேர்எட்டு. சகலதையுங்குழித்தைல மிறக்கிப்பூசிவர், சகல்வித ஜன்னிரோகம், மேகம்; பொத்திகடி, போலான நோய்களதறியோடும்.

முப்பத்தாறாவது பசுல்.

இரத்தவெட்டை மூலம், வெள்ளை, யாதியவைக்குத்தைலம்,

கொடிவேலி வேர்ப்பட்டை மிளகு அரிசித்திப்பிலிவகைக்கு பலம் ஒன்று. இவைகளைச்சல்லடத்துணியிற் பொட்டணங்கட்டி ஆவின்பால் படி, காலை சுத்தசலம் படிகால், கலந்து அதிலப்பொட்டணத்தையிட்டு மேல் மூடிக்காய்ச்சி, கால்படியாக வற்றியபின் இறக்கி மேற்படிபொட்டணத்திலுள்ள மருந்தையரைத்துப்பனிரண்டுவில்லைதட்டி, கால்படிசுத்தமான நல்லெண்ணெயில மேற்படிவில்லைகளையிட்டுப் பொரித்துச்சிவந்தபதத்திலிறக்கி மறுவேனத்தில்வைத்துக் கொண்டு, காக்கைவியாதி, பெரும்பாடு முதலிய மேற்கூறிய நோய்களுக்கும், மூன்று நாளைக்கு ஒருவில்லையைத் தின்னக்கொடுத்து ஒருகரண்டித் தைலமுங்கொடுக்கவே பறந்தொழிந்து மாளும். அவபத்தியம்.

முப்பத்தேழாவது பசுல்.

மூலத்திற்குக் கோழிமுட்டைத் தயிலம்.

(*)

பத்துக்கோழி முட்டையை அவித்து, மஞ்சட் கருவை எடுத்து வழக்கம்போற் றைலமிறக்கிக் கோரோசனை விராகனிடை ஒன்றுபொடித்ததிற்சேர்த்து அரைத்து, காலைமாலைவிராகனிடை கொடுத்துவர மூலம் விளும். மூலத்திற் வலிகண்டால் நிறுத்திவிடவும். அது மூலம் விழுவதற்கடையாளமாம்.

முப்பத்தெட்டாவது பசுல்.

முட்டைத்தைலமிறக்கும் விபரம்.

முட்டையை அவித்து, மஞ்சட்கருவை மட்டுமெடுத்து இரும்புச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி இளநெருப்பாக வெரித்து, அகப்பையாலதை மத்தித்துக்கொண்டிருக்கத் தைலமிறங்கும் வடித்தெடுத்துக் கொள்ளவும். நெருப்பையு சாராகவெரிதது வரவேண்டும்.

முப்பத்தொன்பதாவது பசுல்.

வெள்ளைக்குஷ்டத்துக்குத் தைலம்.

:(*):

தேள்வையான சிவனார் வேப்பு சமூலத்தையு நறுக்கியிடித்துக் குழித்தைல மிறக்கினால் கீழ்ப்பாத்திரத்தில், தண்ணீரும், தைலமுமிருக்கும் அவ்வெள்ளத்தை நீக்கி அதன்கீழ் வெண்ணெய்போலுறைந்திருக்கின்ற தைலத்தையெடுத்து நாளொன்றுக்கு, ஒரு புளிக்கொட்டை

